ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்

கர்ண பர்வம்

திரிசிரபுரம்
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ் ரிடயர்ட் ஸம்ஸ்க்ருத
தலைமைப் பண்டிதர்,
மஹாவித்வான், ஸாரஸ்வதஸாரஜ்ஞர், கவிசிகாமணி,
மஹாமஹோபாத்யாய
ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யர்
அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்த் தலைமைப் பண்டிதர்
மணலூர் — வீரவல்லி,
இராமாநுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ்
கும்பகோணம்

All Rights Reserved] [விலை ரூ. [illegible]—8—0

ஸ்ரீ:

முதற் பதிப்பின்

முகவுரை

ஸ்ரீ மஹாபாரதத்தில், யுத்தபர்வங்களுள் மிகச் சிறந்ததான கர்ண பர்வம் இப்போது பூர்த்தியானதைப் பெருமகிழ்ச்சியுடன் அன்பர்களுக்குத் தெரிவிக்கலானேன். சில மாதங்களுக்கு முன்னமேயே வெளிவந்திருக்கவேண்டிய இந்தப் பர்வம், போதுமான ஸௌகர்யங்களில்லாமையால் வெளிவராமல், இப்போதாவது வெளிவந்தது ஸ்ரீகண்ணபிரானுடைய பூர்ணகிருபையினாலேயே.

கர்ணனுக்கு முன்னும் பின்னும் படைத்தலைமை வஹித்தவர்கள், க்ஷத்ரிய தர்மத்தில் சிறிதுந் தவறாமல் போர்செய்திருந்தாலும், பாண்டவர்கள்பக்கம் நியாயமிருந்ததால் அவர்களிடத்து அன்புடையவர்களாகி, அவர்களோடு நட்புக்கொள்ளும்படி துரியோதனனுக்குப் பலமுறை நற்புத்தி கூறினவர்கள். கர்ணனோ, பாண்டவர்களிடத்து ஆழ்ந்த பகைமை கொண்டவனும் அவர்களிடத்துத் துரியோதனனுக்குப் பகைமை மேன்மேலும் வளர்ச்சி அடைவதற்கு முக்ய காரணமாயிருந்தவனுமாவான். ஆதலின், அவன் படைத்தலைமை வகித்து நடத்திய யுத்தம் எவ்வளவு கடுமையாக இருந்திருக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.

[1] அனுக்ரமணிகாத்தியாயத்தில், ஸ்ரீ மஹாபாரதத்தை ஒரு விருக்ஷமாக உருவகப்படுத்தியவிடத்து இந்தக் கர்ண பர்வம் அதன் புஷ்பமாகக் கூறப்பட்டிருத்தலே இதன் பெருமையை நன்கு விளக்கும்.

பர்வஸங்கிரகாத்யாயத்தில், இதில் புத்திசாலியான சல்யனை ஸாரதியாக நியமித்ததும், புராதன சரித்திரமாயுள்ள திரிபுரஸம்ஹாரமும், யுத்தப் பிரயாணத்தில் கர்ணனுக்கும் சல்யனுக்கும் நடந்த குரூரமான ஸம்வாதமும், தூஷணமடங்கிய ஹம்ஸகாகீயமென்னும் கதையும், பாண்டியன் மஹாத்மாவான அஸ்வத்தாமாவினால் கொல்லப்பட்டதும், [3] தண்டஸேனன் தண்டன் இவர்களுடைய வதமும், தர்மராஜாவாகிய யுதிஷ்டிரரும்

---

[1] ஆதி பர்வம் 11 ம் பக்கம். [2] ஆதி பர்வம் 49-ம் பக்கம்.

[3] இவனுடைய பெயர் தண்டதாரனென்றே மற்ற இடங்களில் காணப்படுகிறது.

கர்ணனும் இரண்டு தேராளிகளாகச் சண்டைசெய்தபோது வில்லாளிகள் யாவரும் பார்த்திருக்கையில் கர்ணனால் யுதிஷ்டிரருக்கு பிராணஸந்தேகம் உண்டாக்கப்பட்டதும், யுதிஷ்டிரருக்கும் அர்ஜுனனுக்கும் பரஸ்பரம் கோபமுண்டானதும், அந்தச் சமயத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனைச் சமாதானப்படுத்தியதும், பீமஸேனன் பிரதிஜ்ஞை செய்து யுத்தத்தில் துச்சாஸனன் மார்பைப் பிளந்து ரத்தத்தைக் குடித்ததும், கர்ணனும் அர்ஜுனனும் இரண்டு தேராளிகளாகச் செய்த சண்டையில் மகாரதனாகிய கர்ணனை அர்ஜுனன் கொன்றதும் சொல்லப் பட்டன' என்று இதன் கதைச் சுருக்கம் கூறப்பட்டுள்ளது. நன்னடத்தையின் லக்ஷணங்களையும் பலவகையான தர்மங்களையும் நீதிகளையும் இந்தப் பர்வத்தில் நன்றாக அறிந்துகொள்ளலாம்.

இந்தப் பர்வத்தை நான் பரிசோதித்து வருகையில், 84-வது அத்தியாயத்தின் இறுதியில் [1] அர்ஜுனன் திருதராஷ்டிர குமாரர்களில் பதின்மரைக் கொன்றதாக இருந்தது. அங்ஙனம் பொருள் கொள்வது, திருதராஷ்டிர குமாரர்கள் நூற்றுவரையும் தானே கொல்லுவதாகப் பீமஸேனன் செய்த பிரதிஜ்ஞைக்கு விரோதமாவதுபற்றி, என் மனத்தில் பெருங் கவலையை உண்டாக்கிற்று. இந்தச் சந்தேகத்தைக் குறித்துப் பல பண்டிதர்களிடம் விசாரித்து வருகையில், சென்னை பிரெஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்கிருத போதகாசிரியராகிய **Mahamahopadyaya, Vidyavacaspathi** பிரம்ம ஸ்ரீ **Prof. S.** குப்புஸ்வாமி சாஸ்திரிகள், **M. A., I. E. S.** அவர்களிடம் தெரிவித்தபோது, அவர்கள், 'புனாவில் **Bhandarkar Oriental Research Institute** என்று டாக்டர் பந்தர்க்கார் பெயரால் அமைக்கப்பட்டுள்ள கீழ்நாட்டுப் பாஷா ஆராய்ச்சிக் கழகத்தார் ஸ்ரீ மஹாபாரதத்தை ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். இதுவிஷயமாக அவர்கள் ஒரு நிச்சயம் செய்திருப்பார்கள். அவர்களுக்கு எழுதினால் உண்மை விளங்கும்' என்று சொன்னார்கள். அங்ஙனமே அவர்களுக்கு எழுதலாமென்றெண்ணி, என்னிடமுள்ள வடமொழி மஹாபாரதப் பிரதிகளையெல்லாம் வைத்து ஒப்புநோக்கினேன். என் மொழிபெயர்ப்பிற்கு மூலமாயுள்ள கும்பகோணம் பதிப்பில் 'அந்யே மூடா:' (ಅನ್ಯೇ ಮೂಢಾಃ) என்ற பாடம் காணப்பட்டது. அப்போது,

[1] இதன் விவரத்தைக் கர்ண பர்வம் 377-ம் பக்கத்தில் காண்க.

இதற்கு வேறு பொருள் செய்யலாமே' என்ற ஆலோசனை, தற்செயலாக என் மனத்தில் தோன்றிற்று. பிறகு, முன் பின் சுலோகங்களைப் பலமுறை படித்துப்பார்த்ததில் எனக்குத்தோற றிய அர்த்தமே சரியானதென்று எனக்கு ஓர் உறுதியுண்டா யிற்று. இதனை ஸ்ரீமான் Prof. குப்புஸ்வாமி சாஸ்திரிகளவர்களி டம் திரும்பவும் தெரிவித்தபோது, அவர்கள், இந்தப் பொருளே சரியானதென்றும் பொருத்தமானதென்றும் சந்தோஷித்துக் கூறி, அப்படியே பதிப்பித்துவிடலாமென்று மிகவும் வற்புறுத் திச் சொன்னார்கள். அவ்விதமே பதிப்பித்திருக்கிறேன். புனவி லுள்ள ஷை கழகத்தாருக்கு இதைப்பற்றி எழுதியதில், அவர் கள், 'இந்த இடம் இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை' என்றும், 'இப்பொழுது அவகாசமில்லாமையால் இதைப்பற்றிப் பின்பு தெரிவிப்போம்' என்றும் பதிலெழுதிவிட்டார்கள். நீலகண்டீய வ்யாக்யான பாடத்திற்கும் பிரதாபசந்திர ராய், C.I.E., மன்மதநாத தத்தர் இவர்களுடைய ஆங்கில மொழி பெயர்ப்புக்கும், நான் கொண்ட பொருள் மாறுயிருத்தலால், உண்மை எதுவாயிருக்குமோவென்று மனம் அஞ்சுகிறது.

யுத்த பர்வங்கள் ஐந்தினையும் மொழிபெயர்த்துக் கொடுத்து எனக்குப் பேருதவிசெய்த திரிசிரபுரம், ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், ஸம்ஸ்கிருத தலைமைப் பண்டிதர், மஹாவித்வான், மஹாமஹோபாத்யாய, கவிசிகாமணி, ஸாரஸ்வத ஸாரஜ்ஞர், ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிகளவர்கள் இவ் விஷயமாக எடுத்துக்கொண்ட பரிச்ரமத்திற்கு நான் என்றும் நன்றிபாராட்டக் கடமையுற்றிருக்கிறேன்.

ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்பை மிகவும் ஆதரித்து எனக்கு ஊக்கமளித்துவந்த திருப்பனந்தாள் ஆதீனகர்த்தரவர்க ளாகிய மகாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாஸி சோமசுந்தரத் தம்பிரானவர்கள் காலஞ்சென்ற பிறகு, அந்த ஸ்தானத்திற்கு வந்த மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாஸி சொக்கலிங்கத் தம்பிரானவர்களோடு ஒரு ஸமயம் நான் ஸல்லாபம் செய்து கொண்டிருந்தபோது, அவர்கள், 'கர்ண பர்வத்திற்கு வேண்டிய செலவை நாமே பொறுத்துக்கொள்வோம்' என்று பரமதிருப்தி யோடு கூறி, வேண்டிய பொருளுதவியும் உடனே செய்தார்கள். அல்லாமலும், எனக்கு முட்டுப்பாடு உண்டாகுங்காலத்திலெல் லாம் குறிப்பறிந்து, வேண்டிய உதவிகளைச் செய்து அவர்கள்

என்னை ஆதரித்துவந்தார்கள். அங்ஙனம் உதவிபுரிந்த அந்தப் பெருந்தகையாளர்களை நான் கர்ணனென்றே நினைத்தேன். அவர்களுக்குப்பின், இப்போது அந்த ஸ்தானத்தில் வீற்றிருக்கும் மகாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாஸி சொக்கலிங்கத் தம்பிரானவர்களும், அவர்களுடைய இளவரசான மகாகனம் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாஸி சாமிநாதத் தம்பிரானவர்களும் இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயத்தில் எனக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து ஆதரித்துவருகிறார்கள். இவர்களுடைய பெருமைகளை முன்பு துரோணபர்வ முகவுரையில் தெரிவித்திருக்கிறேன். இந்த ஆதீனத்திலிருந்து நான் அடைகிற உதவிகள் மிகப் பல. இந்த ஆதீனம் நீடூழி தழைத்தோங்கவேண்டுமென்று நெஞ்சார நினைத்தலும் வாயார வாழ்த்தலுமன்றி யான் செய்யக்கூடிய கைம்மாறு யாதுளது!

இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயத்தில் நான் அடைந்துள்ள பலவகையான சிரமங்களைச் சுருக்கமாகவாவது இங்கே கூறுமலிருக்க முடியவில்லை. நான் மஹாபாரத கைங்கர்யத்தைத் தொடங்கியபோது, பதிப்புவேலை நடந்தமாதிரி நடந்துவந்தால் பல வருஷங்களுக்கு முன்னமே இந்த மஹாபாரதம் பூர்த்தியாகியிருக்கும். இந்தப் பதிப்பு வேலையை நான் தொடங்கியபொழுது, இதற்கு வேண்டிய ஸகாயங்களெல்லாம் செய்வதாக வாக்களித்து எனக்கு ஊக்கமுண்டாக்கிப் பிறகு ஏனென்று கேளாமையோடு தாம் மற்ற சந்தாதாரர்கள்போல ஸஞ்சிகைகள் வாங்கிவந்ததையும் நிறுத்திவிட்ட கனவான்கள் சிலர். சொல்லளவில் மிகத் தாராளமாகக் கூறி எனக்கு நம்பிக்கையை உண்டாக்கிப் பலமுறை என்னை அலையச்செய்து என் காலத்தை வீணாக்கி என் மனத்தைப் புண்ணாக்கியவர் சிலர். இந்த வேலையை நிறுத்திவிடலாம் என்று நற்புத்தி கூறின பெருஞ்செல்வர் சிலர். பல வருஷங்கள் புத்தகத்தை விரும்பி வாங்கி வந்து பணம் கேட்டபொழுது ராமாயண பாரதங்களை இழித்துக் கூறி, என் மனத்திற்கு மிக்க வருத்தத்தை உண்டுபண்ணின கனவான்கள் சிலர். இவர்களுடைய பழக்கங்களால் என் மனத்திலுண்டான புண் ஆறுவதற்கு, இளமை தொடங்கி என்னிடத்தில் மிக்க அன்புடையவர்களும் இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயமாக அடிக்கடி என்னைத் தூண்டியும் பலமுறை லிகிதங்கள் எழுதியும் பொருள் உதவி

செய்தும் என் மனத்திற்கு மிக்க ஊக்கத்தை அளித்துவருபவர்களும் ஸதாசாரஸம்பன்னர்களும் ஸத்தர்மபரிபாலகர்களுமான கும்பகோணம் பிரம்மஸ்ரீ *Prof. K.* சுந்தரராமையர், *M. A.* அவர்களும், வித்வஜ்ஜன போஷகர்களும் பரோபகார சீலர்களுமாகிய சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் *V. V.* ஸ்ரீநிவாஸ ஐயங்கார், *B A., B.L.* அவர்களும் போன்ற சில உத்தம புருஷர்களுடைய இன்சொல்லும் நன்றூற்றலும் ஸல்லாபமுமே நன்மருந்தாக உள்ளன.

'கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித் — தம்மாலியலுதவி தாம்செய்வர்' என்றபடி, சில நண்பர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்தல் முதலிய பல உதவிகளை இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயமாகச் செய்துவருகின்றனர். ஸ்ரீ கண்ணபிரான் திருவருளால் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகுக !

இந்த நற்காரியம், தக்க உதவியில்லாமையால், நான் எண்ணியபடி விரைவில் நடைபெறுமலிருப்பதைப்பற்றிப் பலமுறை தெரிவித்துக்கொண்டிருக்கிறேன். ஆதிதொடங்கி இந்த மஹாபாரதத்தைச் சிரத்தையுடன் வாங்கிப் படித்துவரும் சந்தாதாரர்களான ஆப்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கையொப்பமாவது சேர்த்துக்கொடுத்து இந்த மஹாபாரத கைங்கரியத்தைப் பூர்த்திசெய்வித்து, அதனால் வரும் புகழ்புண்ணியங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களை மீண்டும் பிரார்த்திக்கிறேன்.

இனி வெளிவரவேண்டிய பர்வங்களை விரைவில் வெளிவரச் செய்யவும், ஸ்ரீமஹாபாரத சம்பந்தமாக நான் வெளியிடஎண்ணியிருக்கிற ஆராய்ச்சிக்குறிப்பு அபிதான விளக்கம்முதலியவற்றை இனிது நிறைவேற்றவும் வேண்டிய எல்லாவித ஆற்றல்களையும் எனக்கு அளித்தருளும்படி பாண்டவ ஸஹாயனான ஸ்ரீபார்த்தஸாரதிப் பெருமானுடைய திருவடித் தாமரைகளை எப்பொழுதும் வணங்குகிறேன்.

மயிலாப்பூர்,
5—1—1923.

இங்ஙனம்,
ம. வீ. இராமானுஜாசார்யன்.

ஸ்ரீ :

ஸ்ரீ மஹாபாரதம்

கர்ண பர்வம்

*விஷய ஸூசிகை

அத்தியாயம்		பக்கம்
1	கடவுள் வாழ்த்து	1
	ஸஞ்சயன், கர்ணன் முதலியவர்களின் வதத்தைத் திருதராஷ்டிரனுக்குச் சுருக்கமாகச் சொல்லியது ...	2 - 4
	காந்தாரி முதலியோர் அழுததும், ஸஞ்சயன் தேற்றியதும்	4
	திருதராஷ்டிரன் மூர்ச்சையடைந்ததும், விதுரர் முதலியோர் தெளிவித்ததும்	4 - 5
2	திருதராஷ்டிரன் போரிலிறந்தவர்களின் பெயர்களைக் கேட்க விரும்பியது	6
	ஸஞ்சயன் போரிலிறந்தவர்களின் பெயர்களைச் சொல்லியது	7 - 13
3	ஸஞ்சயன் போரில் கொல்லப்பட்ட பகைவர்களின் பெயர்களைச் சொல்லியது	13 - 18
4	ஸஞ்சயன் போரில் மிகுந்தவர்களின் பெயர்களைச் சொல்லியது	19 - 21
5	திருதராஷ்டிரன் கர்ணனுடைய குணங்களை வர்ணித்துத் துயரமுற்றது	22 - 24
6	திருதராஷ்டிரன் கர்ணனைப் புகழ்ந்து போரை விரிவாகக் கூறும்படி ஸஞ்சயனை வேண்டியது	25 - 32
7	துரியோதனன் யாரை ஸேனாபதியாக்கலாமென்று அச்வத்தாமா முதலியோருடன் ஆலோசித்தது ...	33
	அச்வத்தாமா கர்ணனை ஸேனாபதியாக்கச் சொல்லியதும், துரியோதனன் கர்ணனை ஸேனாபதியாக்கியதும்	33 - 36
8	கர்ணன் மகரவியூகம் வகுத்துப் போருக்குப் புறப்பட்டது	37 - 40
	அர்ஜுனன் அர்த்தசந்திரவியூகம் வகுத்துப் போருக்குப் புறப்பட்டது	40 - 41
9	ஸங்குல யுத்தம்	42 - 44
	க்ஷேமதூர்த்தியின் யுத்தமும் வதமும்	44 - 46
10	த்வந்த்வ யுத்தம்	46
	அனுவிந்தன் (=கேகயன்) வதம்	47
	விந்தன் வதம்	48
11	சித்ரஸேனன் வதம் (= அபிஸார ராஜன்) ...	50
	சித்ரன் வதம்	51
12	அச்வத்தாமாவுக்கும் பீமனுக்கும் யுத்தம் ...	51 - 55
13	சல்யனால் சுருதகீர்த்தி தோல்வியடைந்தது ...	55 - 56
14	ஸஹதேவனால் துச்சாஸனன் தோல்வியடைந்தது ...	57 - 58
15	கர்ணனுக்கும் நகுலனுக்கும் யுத்தம் ...	59 - 62
	கர்ணன் நகுலனைப் பரிஹஸித்தது ...	62

* அதிக பாடங்களுக்கு விஷய ஸூசிகை எழுதப்படவில்லை.

அத்தியாயம்		பக்கம்
16	யுயுத்ஸுவுக்கும் உலூகனுக்கும் யுத்தம்	65
	ஸுதஸோமனுக்கும் சகுனிக்கும் யுத்தம்	66 - 68
17	கிருபரால் திருஷ்டத்யும்னன் தோல்வியடைந்தது ...	69 - 70
	கிருதவர்மாவால் சிகண்டி தோல்வியடைந்தது ...	70 - 71
18	ச்ருதஞ்சயன், ஸௌச்ருதி, சந்திரதேவன் (= திரிகர்த்தர்கள்) இவர்களின் வதம்	72
	ஸத்யதேவன், மித்ரவர்மா, மித்ரதேவன் இவர்களின் வதம்	73
19	ஸங்குல யுத்த வர்ணனை	75 - 78
20	யுதிஷ்டிரரால் துரியோதனன் தோல்வியடைந்தது ...	79 - 81
21	ஸங்குல யுத்தமும், கர்ணனுக்கும் ஸாத்யகிக்கும் யுத்தமும்	81 - 85
	பாசறைகளில் மந்திராலோசனை	86 - 88
22	கர்ணன் தனக்குச் சல்யன் ஸாரதியாகவேண்டுமென்று துரியோதனனிடம் சொல்லியது	89 - 92
	கர்ணனது வில்லின் வரலாறு	90
	கர்ணன் தனக்கும் அர்ஜுனனுக்குமுள்ள ஸௌகர்யா ஸௌகர்யங்களைத் துரியோதனனிடம் தெரிவித்தது	91 - 92
23	துரியோதனன் சல்யனைக் கர்ணனுக்குத் தேரோட்ட வேண்டினது	93 - 95
	சல்யன் கர்ணனுக்குத் தேரோட்ட மறுத்தது ...	96 - 98
	துரியோதனன் மறுபடியும் சல்யனைத் துதித்து வேண்டினதும், சல்யன் தேரோட்டச் சம்மதித்ததும் ...	98 - 99
24-27	திரிபுராஸுரர் கதை	99 - 117
	திரிபுராஸுரர்கள் வரம்பெற்றது	100 - 101
	மயன் திரிபுரங்களை இயற்றியதும், அவற்றின் சிறப்பும்	101
	ஹரி என்னும் அஸுரன் வரம்பெற்றது	102
	மிருதஸஞ்சீவினிக் குளம் உண்டானது	102
	தேவர்கள் சங்கரரைக்குறித்துத் தவம்செய்து அவரைத் தரிசித்து வணங்கியது	104 - 106
	தேவர்கள் தத்தம் பலத்திற் பாதிபாதியைச் சங்கரருக்குக் கொடுத்தது	107 - 109
	பசுத்துவம் நீங்கும் வழி	108
	விச்வகர்மா திரிபுர வதத்துக்குத் தேர் முதலியன அமைத்தது	109 - 112
	தேவர்கள் பிரம்மதேவரை ஸாரதியாக வேண்டினது ...	113 - 115
	தேர்வீரனிலும் பாகன் சிறந்தவனுயிருக்கவேண்டும் என்பது	114
	பிரம்மதேவர் தேரோட்டியது	115
	சங்கரர் திரிபுரங்களை அழித்தது	116
	சங்கரருடைய கோபாக்னி உலகை எரிக்கத் தொடங்கியதும், அவர் தடுத்ததும்	117
	துரியோதனன் மறுபடியும் சல்யனை வேண்டினது ...	117
28	பரசுராமர் அஸுரர்களைக் கொன்று ஈச்வரரிடம் வரங்கள் பெற்றது	119 - 120
	துரியோதனன், கர்ணன் க்ஷத்திரியனே என்று காரணத்தோடு கூறியது	120

அத்தியாயம்		பக்கம்
29	கர்ணனுக்குத் தேர் ஓட்டும் விஷயத்தில் சல்யன் செய்து கொண்ட உடன்படிக்கை	121 - 124
30	சல்யன் ஸாரதியாக வீற்றிருந்த தேரின்மேல் கர்ணன் ஏறிப் போருக்குப் புறப்பட்டது	126 - 128
31	துர்நிமித்தங்களுண்டானது	128 - 129
	கர்ணன் தன்னைப் புகழ்ந்தது	129 - 131
	சல்யன் அர்ஜுனனைப் புகழ்ந்து கர்ணனை இகழ்ந்தது ...	131 - 132
32	கர்ணன் தனக்கு அர்ஜுனனைக் காட்டுபவனுக்கு அவன் விரும்பும் பரிசளிப்பதாகச் சொல்லியது ...	133 - 135
33	சல்யனும் கர்ணனும் ஒருவரை ஒருவர் இகழ்ந்தது ...	136 - 139
	கர்ணனுக்கும் அர்ஜுனனுக்குமுள்ள தாரதம்யங்களைச் சல்யன் கூறியது	137 - 138
34	கர்ணன் மர்மங்களை வெளியிட்டுச் சல்யனை நிந்தித்தது	139 - 144
	மத்திரகர்களின் இழிவு முதலியன	141 - 143
	தேளுக்குப் பரிகாரம்	144
35	சல்யன் அன்னத்தையும் காக்கையையும்பற்றிய கதையைச் சொல்லிக் கர்ணனை இகழ்ந்தது	145 - 151
	பறவைகளின் கதி வகைகள்	146
36	கர்ணன் தனக்குச் சாபங்கள் நேர்ந்ததைச் சல்யனுக்குச் சொல்லியது	151 - 158
	மித்ர லக்ஷணம்	155
	சத்ரு லக்ஷணம்	155
	பொய்யினுல்வரும் தீமைகள்	157
37	கர்ணன் சல்யனைப் பரிகாசத்துடன் இகழ்ந்தது ...	158 - 163
	பாஹ்லீகர் முதலியோரின் தீய ஒழுக்கங்கள் ...	159 - 163
38	கர்ணன் மறுபடியும் பாஹ்லீக முதலிய தேசங்களை இகழ்ந்தது	163 - 166
	பாஹ்லீகர்களுக்குச் சாபம் வந்தது	164
	யார் யாருக்கு எது எது பாவமென்பது	165
	யாரினும் யார் மிக்க பாபிகளென்பது	165
	ரக்ஷஸ் முதலியவற்றுக்குப் பரிகாரம்	165
	துரியோதனன் கர்ணனையும் சல்யனையும் ஸமாதானம் செய்தது	167
39	சல்யனுக்கும் கர்ணனுக்கும் ஸம்வாதமும், இரண்டு சேனைகளும் யுத்தத்துக்கு எதிர்த்ததும் ...	168 - 170
40	துரியோதனன் சேனைகளை உற்சாகப்படுத்தியது ...	171
	பீமன் துரியோதனனை வென்று யானைப்படையைக் கொன்றது	172 - 173
41	இரண்டு சேனைகளும் அணிவகுத்தது	175 - 177
	கர்ணன் பார்ஹஸ்பத்ய வியூகம் வகுத்தது	175 - 176
42-43	ஸங்குல யுத்தம்	178 - 187
	பானுதேவன், சித்ரஸேனன், ஸேனுபிந்து, தபனன், சூரஸேனன் இவர்களின் வதம்	182
	ஸத்யஸேனன் வதம்	183
	ஸாத்யகிக்கும் விருஷஸேனனுக்கும் யுத்தம் ...	184

அத்தியாயம் **பக்கம்**

44 கர்ணன் மயங்கி விழுந்ததும், யுதிஷ்டிரர் கொல்லாமல் விட்டதும் 188
சந்திரதேவன் தண்டதாரன் (= பாஞ்சாலர்) இவர்களின் வதம் 189
கர்ணன் பாஞ்சாலர் இருபத்தொருவரையும், சேதிவீரர் பதின்மரையும் கொன்றது 190
கர்ணன் யுதிஷ்டிரரை வென்று, பரிஹஸித்துக் கொல்லாமல் விட்டது ... ... 192 - 193
ஸங்குல யுத்தம் ... ... 193 - 196
45 பீமன் கர்ணனை வென்று கொல்லக் கருதியதும், சல்யன் காரணங் கூறித் தடுத்ததும் ... ... 200 - 201
46-47 பீமனுக்கும் கர்ணனுக்கும் யுத்தமும், ஸங்குல யுத்தமும் 201 - 211
விவித்ஸுவின் வதம் 202
விகடன், ஸஹன் இவர்களின் வதம் 202
கிராதன் வதம் 202
நந்தன், உபநந்தன் இவர்களின் வதம் 202
48 அர்ஜுனனுக்கும் ஸுசர்மாவுக்கும் யுத்தம் ... 211 - 215
49 ஸங்குல யுத்தம் ... ... 215 - 219
ஸுகேதுவின் வதம் 217
50 ஸங்குல யுத்தமும். அச்வத்தாமா யுதிஷ்டிரரை வென்றதும் ... ... 219 - 222
51 ஸங்குல யுத்தம் ... ... 222 - 232
துரியோதனன் திருஷ்டத்யும்னனுக்குத் தோற்றது ... 225
கர்ணனுடைய பராக்கிரமம்... ... ... 225 - 228
கர்ணனால் வியாக்ரகேது, ஸுசர்மா, சுக்ரன், சித்ராயுதன், க்ரது, துர்ஜயன், ரோசமானன், ஸிம்மஸேனன் ஆகிய பாஞ்சாலர்களின் வதம் 226
விஷ்ணு, விஷ்ணுவர்மா, தேவாபி, பத்ரன், தண்டதாரன், சித்ரன், சித்ராயுதன், ஹரி, ஸிம்மகேது, ரோசமானன், சலபன் ஆகிய சைத்யர்களின் வதம் ... 226
ஸுதக்ஷிணனது இளைய ஸகோதரன் வதம் ... 231
52-53 அர்ஜுனன் ஸம்சப்தகர்களோடு போர் புரிந்ததும், அச்வத்தாமா அர்ஜுனனைப் போருக்கழைத்ததும் ... 232 - 234
அச்வத்தாமாவுக்கும் அர்ஜுனனுக்கும யுத்தம் ... 235 - 241
அச்வத்தாமா அர்ஜுனனுக்குத் தோற்றது ... 241
54 அர்ஜுனனால் தண்டதாரன் (= மாகதன்) வதம் ... 243
தண்டன் வதம் 243
55 அர்ஜுனன் ஸம்சப்தகர்களைக் கொன்றது ... 244 - 249
உக்ராயுதன் வதம் 245
மாதவர் போர்க்களத்தை அர்ஜுனனுக்குக் காட்டியது ... 247 - 250
56 பாண்டியனது பராக்கிரமம்... ... ... 250 - 251
அச்வத்தாமாவுக்கும் பாண்டியனுக்கும் யுத்தம் ... 252 - 254
பாண்டியன் வதம் 254
57-58 ஸங்குல யுத்தம் ... ... 256 - 258

அத்தியாயம் **பக்கம்**

அஶ்வத்தாமாவுக்கும் திருஷ்டத்யும்னனுக்கும் யுத்தம் ... 258 - 260
அர்ஜுனன் திருஷ்டத்யும்னனைக் காத்தது ... 261
அர்ஜுனன் அஶ்வத்தாமாவை வென்றது ... 261
59 ஸங்குல யுத்தம் ... ... 262 - 265
60 யானைப் போரும் ஸங்குல யுத்தமும் ... ... 265 - 267
அங்கன் வதம் 266
61-62 கௌரவர்கள் யுதிஷ்டிரரைப் பிடிக்க முயல்வதையும், அவருக்கு நேர்ந்த அவமானத்தையும் மாதவர் அர்ஜுனனுக்குக் கூறியது ... ... 267 - 270
கர்ணனது போரும் பீமனது போரும் ... ... 270 - 275
63 த்வந்த்வ யுத்தத்துக்காக அரசர்கள் எதிர்த்தது ... 276 - 277
கர்ணன் சிகண்டியை வென்றது 277
திருஷ்டத்யும்னனுக்கும் துச்சாஸனனுக்கும் யுத்தம் ... 277 - 278
64 ஸங்குல யுத்தம் ... ... 278 - 281
65 துரியோதனன் முதலியோர் யுதிஷ்டிரரைப் பிடிக்க எண்ணங்கொண்டு அவரைச் சூழ்ந்தது 282
யுதிஷ்டிரரது பராக்கிரமம் 283
66 கர்ணன் யுதிஷ்டிரரைப் பீடித்துத் துரியோதனன் ஸமீபம் சென்றது ... ... 284 - 287
சல்யன் யுதிஷ்டிரரையும் இரட்டையரையும் தயையினால் விட்டு, அர்ஜுனனை எதிர்க்கும்படி கர்ணனுக்குச் சொல்லியது ... ... 285 - 286
கர்ணனுடைய பாணங்களால் பீடிக்கப்பட்ட யுதிஷ்டிரர் இளைப்பாறப் போனது 287
67 அர்ஜுனன் அஶ்வத்தாமாவை வென்றது ... 287 - 290
கர்ணன் பாண்டவ சேனையைத் துன்புறுத்தியது ... 291 - 292
68 அர்ஜுனன் யுதிஷ்டிரரைப் பார்த்துவரும்படி பீமஸேனனை ஏவியது 294
கண்ணபிரான் பீமனைப் பகைவர் படையை எதிர்க்க ஏவித் தாம் அர்ஜுனனுடன் யுதிஷ்டிரரிடம் வந்தது ... 295
69 அர்ஜுனன் கர்ணனைக் கொன்றுவிட்டானென்கிற பிரமத்தினால் யுதிஷ்டிரர் அர்ஜுனனைப் புகழ்ந்தது ... 296 - 300
70 அர்ஜுனன் தனது போர் வரலாற்றைக் கூறி, கர்ண வதத்தைப் பிரதிஜ்ஞை செய்தது ... ... 301 - 303
71 கர்ணன் மாளவில்லையென்றறிந்த யுதிஷ்டிரர் அர்ஜுனனை நிந்தித்துக் காண்டீவத்தைக் கிருஷ்ணனிடம் கொடுக்க ஏவியது ... ... 303 - 307
72 அர்ஜுனன் யுதிஷ்டிரரைக் கொல்ல முயன்றதும், மாதவர் தடுத்து அவரை நிந்திக்கமட்டும் சொல்லியதும் 307 - 315
பொய்யினும் கொலை கொடிதென்பது 309
யார் யாரைக் கொல்லலாகாதென்பது 309
எந்த எந்த ஸமயத்தில் பொய்சொல்லலாமென்பது ... 310
பலாகன் கதை ... ... 310 - 311
கௌசிகன் கதை ... ... 311 - 312
தர்மமென்பதன் பொருள் 312

அத்தியாயம்		பக்கம்
	எந்த எந்த ஸமயத்தில் பொய் சொல்லலாமென்பது ...	312
	பெரியோர்களை 'நீ' என்பதே வதமாகுமென்பது ...	315
73	அர்ஜுனன் யுதிஷ்டிரரை நிந்தித்தது	315 - 319
	அர்ஜுனன் தற்கொலை செய்துகொள்ள முயன்றதும், மாதவர் தடுத்துத் தற்புகழ்ச்சி செய்துகொள்ளச் சொல்லியதும்	319 - 320
	தற்புகழ்ச்சி மரணத்துக்கொப்பென்பது	320
	அர்ஜுனன் யுதிஷ்டிரரை க்ஷமிக்கும்படி வேண்டினது	321
74	யுதிஷ்டிரர் கானகம் செல்லக் கருதியதும், மாதவர் ஸமாதானஞ் செய்ததும்	321 - 323
75	அர்ஜுனன் யுதிஷ்டிரரை ஸமாதானஞ் செய்து கர்ண வதத்தைப் பிரதிஜ்ஞை செய்தது	324 - 326
76	'கர்ணனை ஜயித்து வருக' என்று யுதிஷ்டிரர் அர்ஜுனனை ஆசீர்வாதம் செய்தது	327
	அர்ஜுனன் தேரேறியதும், சுப நிமித்தங்களும் ...	327 - 328
	மாதவர் அர்ஜுனனுக்கு மிக்க ஊக்கத்தை உண்டாக்கியது	328 - 330
77	வாஸுதேவர், பீஷ்மர் முதலியோரின் மரணத்துக்கும் துரியோதனனுடைய அநீதிகளுக்கும் கர்ணனே காரணமென்பதைக் கூறி, அவனைக் கொல்லும்படி அர்ஜுனனை வற்புறுத்தியது	330 - 341
78	அர்ஜுனன் கர்ண வதத்துக்குப்பின் நேரக்கூடியவற்றைக் கூறி, அவனுடைய வதத்தைப் பிரதிஜ்ஞை செய்தது ...	341 - 345
79	த்வந்துவ யுத்தம்	346 - 347
	ஸுஷேணன் வதம்	347
80	பீமனுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம்	348 - 349
	பீமனுக்கும் விசோகனுக்கும் ஆயுத இருப்பு முதலியவற்றைப்பற்றிய ஸம்வாதம்	349 - 352
81	அர்ஜுனனது பராக்கிரமம்	353 - 354
	பீமனது பராக்கிரமம்	355 - 356
	துரியோதனன் சகுனியைப் போருக்கு ஏவியதும், பீமன் சகுனியை வென்றதும்	357 - 358
82	கர்ணனது பராக்கிரமம்	360 - 364
83-85	அர்ஜுனன் வேண்டிக்கொள்ளக் கண்ணபிரான் தேரைக் கர்ணனருகிற் செலுத்தியது ...	365
	சல்யன் கர்ணனை உற்சாகப்படுத்தி, அர்ஜுனனைக் கொல்லத் தூண்டியது	366 - 368
	கர்ணன் அர்ஜுனனையும் கிருஷ்ணனையும் புகழ்ந்து இருவரையும் கொல்வதாகச் சபதங் கூறியது ...	369 - 371
86	ஸங்குல யுத்தம்	371 - 386
	கேகய ராஜ குமாரனை விசோகன் வதம் ...	383
	மித்ரவர்மாவின் வதம்	383
	பிரஸேனன் வதம்	383
	திருஷ்டத்யும்ன புத்திரன் வதம்	384
	கர்ணன், திருஷ்டத்யும்னன் முதலிய ஐவரை வென்றது	385

அத்தியாயம்		பக்கம்
	பீமனுக்கும் துச்சாஸனனுக்கும் எதிர்ப்பும், ஸம்வாதமும்	386 - 388
87	பீமஸேனன் துச்சாஸனனைக் கீழே தள்ளியதும், இருவரின் வீரவாதங்களும்	389 - 391
	துச்சாஸனன் வதம்	391
	பீமன் துச்சாஸனனது ரத்தத்தைக் குடித்தது ...	391
88-89	பீமன் தார்த்தராஷ்டிரரில் ஒன்பதின்மரைக்கொன்றது	394
	கர்ணன் அஞ்ச சல்யன் தேற்றியது	394 - 395
	ஸங்குல யுத்தம்	395 - 399
	நகுலன் விருஷஸேனனால் தோற்றது	396 - 397
	குணிந்த ராஜகுமாரர்களின் வதம்	398
	கிராதன் வதம்	398
	பப்ருகுமாரன் வதம்	398 - 399
	விந்தகுமாரன் வதம்	399
90	அர்ஜுனன் வீரவாதம்	400 - 401
	அர்ஜுனன் கர்ணபுத்திரனை விருஷஸேனனைக் கொன்றது	401
91	கர்ணார்ஜுனர்கள் எதிர்த்ததும், ஆகாயத்தில் போர் காணவந்த தேவர் முதலியோர் இரண்டு கக்ஷிகளிலும் சார்ந்ததும்	402 - 408
92	பிரஜாபதி, இருவருக்கும் ஸமமான வெற்றியை விரும்பியது	409
	இந்திரன் அர்ஜுனனுக்கே வெற்றியை விரும்பினது ...	409 - 410
	பிரம்ம மஹேச்வரர்கள் அர்ஜுனனுக்கு வெற்றியையும், கர்ணனுக்கு ஸ்வர்க்கத்தையும் கூறியதும், தேவர்கள் பூமாரி பெய்ததும்	411
93	கர்ண சல்ய ஸம்பாஷணை	413
	கிருஷ்ணார்ஜுன ஸம்பாஷணை	413
	அர்ஜுனன் தன் வல்லமையைக் கூறியது ...	413 - 414
94	கர்ணனும் அர்ஜுனனும் போர் தொடங்கியது ...	416
	அச்வத்தாமா துரியோதனனுக்கு நன்மையைச் சொல்லியது	417 - 419
	ஆத்மரக்ஷணம் அவசியமென்பதும் உயிர் வாழ்பவனுக்கே எல்லா நன்மையும் உண்டென்பதும் ...	418
	ஸ்நேகம் நான்குவிதமென்பது	418 - 419
	துரியோதனன் அச்வத்தாமாவின் சொல்லைக் கேளாமல் போருக்கு ஏவியது	419
95	கர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தம்	420 - 423
	பீமன் அர்ஜுனனை உற்சாகப்படுத்தியது ...	423
96	வாஸுதேவர் அர்ஜுனனை உற்சாகப்படுத்தியது ...	423 - 424
	அர்ஜுனன் போரில் தன் திறமையைக் காட்டியது ...	424 - 428
	ஸேனாபதி வதம்	425
97	அச்வஸேனன் கர்ணனது தூணியில் பாண வடிவமாகப் பிரவேசித்தது	429 - 430
	இந்திரன் பயந்ததும், பிரம்மா தேற்றியதும் ...	431

அத்தியாயம்		பக்கம்
	சல்யன், நாகாஸ்திரத்தைக் குறிதவருமல் பூட்டும்படி சொல்லியதும், கர்ணன் மறுத்ததும் ...	... 431
	கர்ணன் நாகாஸ்திரம் எய்ததும், வாஸுதேவர் தமது தேர் உருளையைப் பூமியி லழுத்தியதும்	... 431 - 432
	நாகாஸ்திரம் அர்ஜுனன் கிரீடத்தைக் கவர்ந்தது	... 432
	அச்வஸேன நாகத்தின் வதம் ...	... 434 - 435
	மாதவர் தேருருளைகளை மேலே தூக்கியது	... 435
	கர்ணன் மூர்ச்சித்ததும், அர்ஜுனன் அடிக்காமல் இருந்ததும்	... 437
	மாதவர் கர்ணனைக் கொல்லும்படி அர்ஜுனனை ஏவியது	... 437
	கர்ணனுக்கு அஸ்திரங்கள் தோன்றாமற் போனதும், தேர் உருளையைப் பூமி விழுங்கியதும்	... 438 - 439
	கர்ணன் தர்மத்தை நிந்தித்தது ...	... 439
	கர்ணன் அர்ஜுனனைப் பரிஹஸித்தது ...	... 440
	கர்ணன் ஒரு முகூர்த்தம் போரை நிறுத்த வேண்டினது	441
	யார் யாரை அடிக்கலாகாதென்பது ...	... 441
98-99	மாதவர் கர்ணனது தீச்செயல்களை அவனுக்குக் கூறியதும், அவன் சும்மா இருந்ததும் ...	... 442 - 443
	அர்ஜுனன் சிறிது களைத்ததும், கர்ணன் தேருருளையைத் தூக்கியும் இயலாமற் போனதும்	... 444 - 445
	அர்ஜுனன் உறுதியுரைகளோடு அம்பெய்தது	... 446 - 447
	கர்ணன் வதம்	... 447
	கர்ணனது தேஜஸ் சூரியனை அடைந்தது	... 447
	கர்ணன் சாய்ந்தபின் போர்க்களத்தின் நிலைமை	... 447 - 450
	துரியோதனன் துக்கிக்க, சல்யன் தேற்றியது	... 450 - 451
	போர்க்கள வர்ணனை	... 452 - 456
	இருதிறத்துச் சேனைகளும், தேவர் முதலியோரும் தத்தம் இருப்பிடம் சென்றது ...	... 456 - 458
100	கர்ணன் பெருமை முதலியன ...	... 460 - 461
	கிருஷ்ணார்ஜுனர்கள் யுதிஷ்டிரரிடம் சென்றது	... 462
101	துரியோதனன் போரை நிறுத்தியதும், கௌரவ சேனைகள் பாசறை சென்றதும் ...	... 463 - 464
	அர்ஜுனன் யுதிஷ்டிரரை வணங்கியது ...	... 464
	யுதிஷ்டிரர் கிருஷ்ணனைப் புகழ்ந்தது	... 465
	யுதிஷ்டிரரும் மாதவரும் போர்க்களம் சென்றதும், யுதிஷ்டிரர் கிருஷ்ணார்ஜுனர்களைப் புகழ்ந்ததும்	... 465 - 466
	திருதராஷ்டிரனும் காந்தாரியும் மூர்ச்சையடைந்ததும், விதுரர் முதலியோர் தெளிவித்ததும்	... 466
	கர்ணபர்வ படன பலன்	... 467

விஷய ஸூசிகை முற்றிற்று

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீ மஹா பாரதம்

கர்ண பர்வம்

முதலாவது அத்யாயம்

1 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌨𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑌤𑍋 𑌜𑌯𑌮𑍁𑌦𑍀𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

(ஸஞ்சயன் பாசறையினின்று ஹஸ்தினபுரம் சென்று, திருதராஷ்டிரனுக்குக் கர்ணன் முதலானவர்களுடைய வதத்தைக் கூறியதும், அதனைக் கேட்டு மூர்ச்சையடைந்த திருதராஷ்டிரனை ஸஞ்சயன் முதலானவர்கள் தேற்றியதும்)

வைசம்பாயனர் சொல்லுகிறார்: "பாரதரே! மிக்க புஜபலமுள்ளவனான ஸஞ்சயன் பாசறையினின்று ஹஸ்தினபுரத்தை அடைந்து திருதராஷ்டிரனுடைய அரண்மனையில் பிரவேசித்தான். ஸூதபுத்ரனான அவன் பாண்டவர்களாலே செய்யப்பட்ட கோர

முதலாவது அத்தியாயம் முதல் 20-சுலோகங்களின் ஸ்தானத்தில் மூன்று அத்யாயங்கள் அதிக பாடம். நீலகண்ட வியாக்யானத்துடன் கூடிய பம்பாய்ப் பதிப்பிலும் கல்கத்தாப் பதிப்பிலுமுள்ள பாடம் இதுவே.

அதிக பாடத்தின் முதலாவது அத்யாயம்

(துரியோதனாதிகள் கர்ணனுக்குச் சேனாதிபதி ஸ்தானத்தில் அபிஷேகம் செய்வித்து அவனுடனே யுத்தத்திற்குப் புறப்பட்டதும், ஜனமேஜயர் கர்ணனுடைய மரணத்தைக் கேட்ட திருதராஷ்டிரன் என்ன செய்தானென்று வைசம்பாயனரைக் கேட்டதும்)

வைசம்பாயனர், "அரசரே! துரோணர் கொல்லப்பட்டபிறகு, துரியோதனனைத் தலைமையாகக் கொண்ட அரசர்கள், மிக்க மனவருத்தமுற்ற

---

1 இதன் உரை விசேஷங்களை ஆதிபர்வம் முதற் பக்கத்திற் காண்க.

மான கர்ணனுடைய வதத்தை நினைத்துச் சோகத்தால் பீடிக்கப்பட்டு மிக்க துயரமுற்று அழுதுகொண்டு அந்தப்புரத்தில் பிரவேசித்தவுடன், கண்களில் நீர் ததும்பியவனாகி அரசர்களுள் சிறந்தவனான அரசனை அணுகினான். அரசரே! அவன் அரசனருகில் சென்று பெருமூச்சு விட்டுக்கொண்டு அதிக ஸந்தோஷமில்லாத மனத்தையுடையவனாகிப் பின்வருமாறு வசனிக்கலானான் :

"மஹாராஜரே! நான் ஸஞ்சயன். பரதச்ரேஷ்டரே! உமக்கு வந்தனம். சூரியகுமாரனான கர்ணன் (ஒருவராலும்) செய்ய முடியாத காரியத்தைச் செய்தும் கொல்லப்பட்டான். அந்தக் கர்ணன் ஸோமகர்களுக்கும், சேதிதேச வீரர்களுக்கும், காசிதேச வீரர்களுக்கும், கரூசதேச வீரர்களுக்கும், மச்சநாட்டு வீரர்களுக்கும் துன்பத்தைச் செய்து காற்றினால் தள்ளப்பட்ட மரம்போலப் படுத்திருக்கிறான். பசுக்கொட்டிலின் நடுவில் பசுக்கூட்டங்களால் நாற்புறமும் சூழப்பட்ட ஒரு விருஷபமானது கொடிய மிருகத்தால் கொல்லப்படுவதுபோல இந்தக் கர்ணன் பகைவர்களால் கொல்லப்பட்டான். அரசரே! சூரியகுமாரனான கர்ணன், ஸாத்யகியுடன் கூடினவர்களான பாண்டவர்களை (ஜயத்தில்) நம்பிக்கையற்றவர்களாகச் செய்தும், பாஞ்சாலர்களுடைய ஆயிரக்கணக்கான தேர்களை நாசஞ்செய்தும், மஹாவில்லாளிகளான சூரர்களை ஜயித்துப் பத்துத் திக்குக்களிலும் ஓடும்படி செய்தும், (முடிவில்) பாண்டுபுத்திரனான கிரீடியினால் கொல்லப்பட்டான். மஹாராஜரே! பாண்டு புத்ரனான அர்ஜுனன் கர்ணனைக் கொன்று, துராத்மாக்களாலே அடைய முடியாததான பகை முடித்தலென்னும் கடனிலிருந்து விடுபட்டு, மனக்கவலை நீங்கினவனானான். கர்ணன் மரித்ததானது, கடல்கள் வற்றியதுபோலவும், சூரியன் பூமியில் விழுந்ததுபோலவும், மேரு சிதறியதுபோலவுமிருக்கிறது. மன்னரே! அந்த யுத்தத்தில் ஜயத்தை விரும்பிய யுத்தவீரர்களும் சூரர்களும் பரிகாயுதம் போன்ற கைகளையுடையவர்களுமான அரசர்களும்

வர்களாகி அச்வத்தாமாவை அடைந்தார்கள். அவ்வரசர்கள் த்ரோணரைக் குறித்துத் துக்கிப்பவர்களும் மனக்கலக்கத்தினால் வல்லமை யழிந்தவர்களும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களுமாகி அச்வத்தாமாவைச் சூழ்ந்தார்கள். அவ்வரசர்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள காரணங்களால் ஒரு முகூர்த்த காலம் (அச்வத்தாமாவைத்) தேற்றி இரவு வந்தவுடனே, தங்கள் வாஸஸ்தானங்களை அடைந்தார்கள். கௌரவரே! அந்த அரசர்கள் துக்கத்தோடும் சோகத்தோடுங் கூடியவர்களாகக் கோரமான அழிவை நினைத்துத் தங்கள் வீட்டிலும் ஸுகத்தை அடையவில்லை. விசேஷித்து ஸூதபுத்திரனும், ராஜாவான துரியோதனனும்,

ராஜபுத்திரர்களும் கொல்லப்பட்டார்கள். வேந்தரே! அந்த மஹா யுத்தத்தில் ரதிகர்களுடைய கூட்டங்களும் காலாட்படைகளும் ஆயிரம் ஆயிரமாகக் கொல்லப்பட்டன. அந்த மஹாயுத்தத்தில் யானைகளும் குதிரைகளும் கொல்லப்பட்டன மஹாராஜரே! இருதிறத்துச் சேனைகளிலும் ஒருவருக்கொருவர் தீங்கிழைத்தவர்களான க்ஷத்திரியர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொல்லப்பட்டார்கள். மேன்மை தங்கியவனும் ஸூர்யனுடைய குமாரனுமான கர்ணன் பகைவர்களைப் பெரும்பாலும் அழித்துப் பாண்டவ சேனையாகிய நதியைக் கடந்து பார்த்தனுகிற கரையை அணுகி (ச்சத்துருவினால்) கொல்லப்பட்டான். அரசரே! உம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஜயத்திலுள்ள ஆசையும் வைரத்துக்கு முகமுமாயிருந்ததான (கர்ண ஸகாயமாகிற) அது தாண்டப்பட்டது. மஹாராஜரே! நன்மையில் நோக்கமுள்ள பந்துக்களால் முன்பு உரைக்கப்பட்டதும் நீர் தெரிந்துகொள்ளாததுமான அப்படிப்பட்ட மஹா பயங்கரமான இந்தத் துன்பம் உம்மை அடைந்திருக்கிறது. புத்திரர்களுக்காக ராஜ்யத்தை விரும்புகிறவரும் நன்மையை விரும்புகிறவருமான உம்மால் தீமையான கார்யங்களே செய்யப்பட்டன. அவற்றின் பயன் உமக்கு வந்துவிட்டது அரசரே! பாண்டவனுகிய பீமஸேனனுல், அவன் சொற்படியே, துச்சாஸனனும் கொல்லப்பட்டமையால், அவனது பிரதிஜ்ஞையும் படைமுகத்திலே நிறைவேற்றப்பட்டது. மஹாராஜரே! ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்து பாண்டவனுகிய

துச்சாஸனனும், ஸுபலனுடைய குமாரனும் மகாபலசாலியுமான சகுனியும் மகாத்மாக்களான பாண்டவர்களுக்கு (த் தங்களாலுண்டான) கிலேசங்களை நினைத்துக்கொண்டே துரியோதனனுடைய பாசறையில் அன்றிரவு வாஸஞ்செய்தார்கள். பாண்டவர்கள் சூதாட்டத்தில் தங்களால் வருத்தப்பட்டதையும் த்ரௌபதி ஸபைக்குக் கொண்டுவரப்பட்டதையும் நினைத்துத் துக்கித்தவர்களும் மிக்க மனக்கலக்கம் அடைந்தவர்களுமானார்கள். மன்னரே! அவ்வாறு சூதாட்டத்தால் உண்டுபண்ணப்பட்ட (பாண்டவர்களுடைய) அவ்விதமான கிலேசங்களை எண்ணுகிறவர்களான அவர்களுக்குத் துக்கத்தினுல் அந்த இரவானது நூறு வருஷங்களுக்குச் சமமாகச் சென்றது. பிறகு, வெள்ளென விடிந்தவுடன், அவர்களனைவரும் தெய்வத்தினுடைய ஆஜ்ஞையினுல் நிலைபெற்றவர்களாகிச் சாஸ்திரத்தினுல் காணப்பட்ட முறைப்படி அவசியமான நித்திய கருமத்தைச் செய்தனர். பாரதரே! அவர்கள் அவசியம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து மனத்தில் ஆறுதலை அடைந்து (சேனைகளுக்கு) யுத்தத்திற்கு ஆயத்தமாகும்படி உத்தரவிட்டு (த்தாங்களும்) புறப்பட்டார்கள். அரசர்கள் கர்ணனை ஸேனபதியாகச் செய்து மங்கலத்தை அளிக்கத்தக்க

மான கர்ணனுடைய வதத்தை நினைத்துச் சோகத்தால் பீடிக்கப்பட்டு மிக்க துயரமுற்று அழுதுகொண்டு அந்தப்புரத்தில் பிரவேசித்தவுடன், கண்களில் நீர் ததும்பியவனாகி அரசர்களுள் சிறந்தவனான அரசனை அணுகினான். அரசரே! அவன் அரசனருகில் சென்று பெருமூச்சு விட்டுக்கொண்டு அதிக ஸந்தோஷமில்லாத மனத்தையுடையவனாகிப் பின்வருமாறு வசனிக்கலானான்:

"மஹாராஜரே! நான் ஸஞ்சயன். பரதஶ்ரேஷ்டரே! உமக்கு வந்தனம். ஸூரியகுமாரனான கர்ணன் (ஒருவராலும்) செய்ய முடியாத காரியத்தைச் செய்தும் கொல்லப்பட்டான். அந்தக் கர்ணன் ஸோமகர்களுக்கும், சேதிதேச வீரர்களுக்கும், காசிதேச வீரர்களுக்கும், கரூசதேச வீரர்களுக்கும், மச்சநாட்டு வீரர்களுக்கும் துன்பத்தைச் செய்து காற்றினால் தள்ளப்பட்ட மரம்போலப் படுத்திருக்கிறான். பசுக்கொட்டிலின் நடுவில் பசுக்கூட்டங்களால் நாற்புறமும் சூழப்பட்ட ஒரு விருஷபமானது கொடிய மிருகத்தால் கொல்லப்படுவதுபோல இந்தக் கர்ணன் பகைவர்களால் கொல்லப்பட்டான். அரசரே! ஸூரியகுமாரனான கர்ணன், ஸாத்யகியுடன் கூடினவர்களான பாண்டவர்களை (ஜயத்தில்) நம்பிக்கையற்றவர்களாகச் செய்தும் பாஞ்சாலர்களுடைய ஆயிரக்கணக்கான தேர்களை நாசஞ்செய்தும், மஹாவில்லாளிகளான ஶூரர்களை ஜயித்துப் பத்துத் திக்குக்களிலும் ஓடும்படி செய்தும், (முடிவில்) பாண்டுபுத்திரனான கிரீடியினால் கொல்லப்பட்டான். மஹாராஜரே! பாண்டு புத்ரனான அர்ஜுனன் கர்ணனைக் கொன்று, துராத்மாக்களாலே அடைய முடியாததான பகை முடித்தலென்னும் கடனிலிருந்து விடுபட்டு, மனக்கவலை நீங்கினவனானான். கர்ணன் மரித்ததானது, கடல்கள் வற்றியதுபோலவும், ஸூரியன் பூமியில் விழுந்ததுபோலவும், மேரு சிதறியதுபோலவுமிருக்கிறது. மன்னரே! அந்த யுத்தத்தில் ஜயத்தை விரும்பிய யுத்தவீரர்களும் ஶூரர்களும் பரிகாயுதம் போன்ற கைகளையுடையவர்களுமான அரசர்களும்

வர்களாகி அஶ்வத்தாமாவை அடைந்தார்கள். அவ்வரசர்கள் த்ரோணரைக் குறித்துத் துக்கிப்பவர்களும் மனக்கலக்கத்தினால் வல்லமை யழிந்தவர்களும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களுமாகி அஶ்வத்தாமாவைச் சூழ்ந்தார்கள். அவ்வரசர்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள காரணங்களால் ஒரு முகூர்த்த காலம் (அஶ்வத்தாமாவைத்) தேற்றி இரவு வந்தவுடனே, தங்கள் வாஸஸ்தானங்களை அடைந்தார்கள். கௌரவரே! அந்த அரசர்கள் துக்கத்தோடும் சோகத்தோடுங் கூடியவர்களாகக் கோரமான அழிவை நினைத்துத் தங்கள் வீட்டிலும் ஸுகத்தை அடையவில்லை. விசேஷித்து ஸூதபுத்திரனும், ராஜாவான துரியோதனனும்,

ராஜபுத்திரர்களும் கொல்லப்பட்டார்கள். வேந்தரே! அந்த மஹா யுத்தத்தில் ரதிகர்களுடைய கூட்டங்களும் காலாட்படைகளும் ஆயிரம் ஆயிரமாகக் கொல்லப்பட்டன. அந்த மஹாயுத்தத்தில் யானைகளும் குதிரைகளும் கொல்லப்பட்டன. மஹாராஜரே! இருதிறத்துச் சேனைகளிலும் ஒருவருக்கொருவர் தீங்கிழைத்தவர்களான க்ஷத்திரியர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொல்லப்பட்டார்கள். மேன்மை தங்கியவனும் ஸூர்யனுடைய குமாரனுமான கர்ணன் பகைவர்களைப் பெரும்பாலும் அழித்துப் பாண்டவ சேனையாகிய நதியைக் கடந்து பார்த்தனாகிற கரையை அணுகி (ச்சத்துருவினால்) கொல்லப்பட்டான். அரசரே! உம்மைச் சேர்ந்தவர்களுக்கு ஜயத்திலுள்ள ஆசையும் வைரத்துக்கு முகமுமாயிருந்ததான (கர்ண ஸகாயமாகிற) அது தாண்டப்பட்டது. மஹாராஜரே! நன்மையில் நோக்கமுள்ள பந்துக்களால் முன்பு உரைக்கப்பட்டதும் நீர் தெரிந்துகொள்ளாததுமான அப்படிப்பட்ட மஹா பயங்கரமான இந்தத் துன்பம் உம்மை அடைந்திருக்கிறது. புத்திரர்களுக்காக ராஜ்யத்தை விரும்புகிறவரும் நன்மையை விரும்புகிறவருமான உம்மால் தீமையான கார்யங்களே செய்யப்பட்டன. அவற்றின் பயன் உமக்கு வந்துவிட்டது. அரசரே! பாண்டவனாகிய பீமஸேனனால், அவன் சொற்படியே, துச்சாஸனனும் கொல்லப்பட்டமையால், அவனது பிரதிஜ்ஞையும் படைமுகத்திலே நிறைவேற்றப்பட்டது. மஹாராஜரே! ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்து பாண்டவனாகிய

துச்சாஸனனும், ஸுபலனுடைய குமாரனும் மகாபலசாலியுமான சகுனியும் மகாத்மாக்களான பாண்டவர்களுக்கு (த் தங்களாலுண்டான) கிலேசங்களை நினைத்துக்கொண்டே துரியோதனனுடைய பாசறையில் அன்றிரவு வாஸஞ்செய்தார்கள். பாண்டவர்கள் சூதாட்டத்தில் தங்களால் வருத்தப்பட்டதையும் த்ரௌபதி ஸபைக்குக் கொண்டுவரப்பட்டதையும் நினைத்துத் துக்கித்தவர்களும் மிக்க மனநடுக்கம் அடைந்தவர்களுமானார்கள். மன்னரே! அவ்வாறு சூதாட்டத்தால் உண்டுபண்ணப்பட்ட (பாண்டவர்களுடைய) அவ்விதமான கிலேசங்களை எண்ணுகிறவர்களான அவர்களுக்குத் துக்கத்தினால் அந்த இரவானது நூறு வருஷங்களுக்குச் சமமாகச் சென்றது. பிறகு, வெள்ளென விடிந்தவுடன், அவர்களனைவரும் தெய்வத்தினுடைய ஆஜ்ஞையினால் நிலைபெற்றவர்களாகிச் சாஸ்திரத்தினால் காணப்பட்ட முறைப்படி அவசியமான நித்திய கருமத்தைச் செய்தனர். பாரதரே! அவர்கள் அவசியம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து மனத்தில் ஆறுதலை அடைந்து (சேனைகளுக்கு) யுத்தத்திற்கு ஆயத்தமாகும்படி உத்தரவிட்டு (த்தாங்களும்) புறப்பட்டார்கள். அரசர்கள் கர்ணனை ஸேனாபதியாகச் செய்து ஊக்கத்தை அளிக்கத்தக்க

பீமனால் உமது குமாரனாகிய துச்சாஸனனுடைய இரத்தமானது ரணகளத்தில் பானம் செய்யப்பட்டது" என்றான்.

மஹாராஜரே! அம்பிகாபுத்திரனான திருதராஷ்டிரன் இந்த வார்த்தையைக் கேட்டுச் சோகத்தின் முடிவைக் காணமல் துர்யோதனனையும் மாண்டவனாக எண்ணி மனத்தளர்ச்சியடைந்து புத்தியை இழந்த யானைபோலப் பூமியில் விழுந்தான். பாரதர்களுட் சிறந்தவரே! அந்த ராஜஸ்ரேஷ்டனான திருதராஷ்டிரன் மனத்தளர்ச்சியடைந்து பூமியில் விழுந்தவுடனே (காந்தாரி முதலிய) ஸ்திரீகளுடைய அழுகுரல் மிகுதியாகத் தோன்றியது. அந்தச் சப்தமானது நான்கு பக்கங்களிலும் பூமியை முழுதும் நிரப்பியது. மஹாகோரமான துயரக்கடலில் முழுகியவர்களான பரதகுல ஸ்திரீகள் துக்கத்தாலும் சோகத்தாலும் பீடிக்கப்பட்டு, மனம் மிக நடுங்கி அழுதார்கள். பாரதரிற் சிறந்தவரே! காந்தாரியானவள் அரசனிடம் வந்து அறிவிழந்து பூமியில் விழுந்தாள். அந்தப்புர ஸ்திரீகள் அனைவரும் விழுந்தார்கள். வேந்தரே! பிறகு, ஸஞ்சயன், மனவருத்தமுற்று மோகமடைந்து கண்ணீரை மிகுதியாகச் சொரிகின்ற அந்த ஸ்திரீகளை மனத்தில் தேறுதலடையும்படி செய்தான். காற்றினால் நாற்புறங்களிலும் அசைக்கப்படுகின்ற வாழைமரங்கள்போல அடிக்கடி நடுங்குகின்றவர்களான அந்தப் பெண்டிர்களோ, மனத்தேறுதலை அடைந்தார்கள். அப்பொழுது விதுரரும், அறிவே கண்ணாகவுள்ளவனும் அரசனும் தலைவனும் குருகுலத்திற் பிறந்தவனுமான திருதராஷ்டிரனை முகத்திலும் அங்கத்திலும் தண்ணீரைத் தெளித்து மூர்ச்சையைத் தெளிவித்தார். ராஜேந்திரரே! அந்தத் திருதராஷ்டிர ராஜன் மெதுவாகப் பிரஜ்ஞையை அடைந்து அந்த ஸ்திரீகளையும் கண்டு

மங்கள கார்யங்களைச் செய்துகொண்டு பிராம்மணஸ்ரேஷ்டர்களைத் தயிர்ப் பாத்திரங்களாலும் நெய்களாலும் அக்ஷதங்களாலும் பசுக்களாலும் குதிரைகளாலும் பொன்னாபரணங்களாலும் விலையுயர்ந்த வஸ்திரங்களாலும் பூஜித்து, [1] ஸூதர்களாலும் மாகதர்களாலும் வந்திகளாலும் 'ஜய விஜயீ பவ' என்ற ஆசீர்வாதங்களால் துதிக்கப்பெற்று யுத்தத்திற்குப் புறப்பட்டார்கள். வேந்தரே! அவ்வாறே, பாண்டவர்களும் காலையில் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து யுத்தஞ் செய்ய நிச்சயித்துக்கொண்டு (தங்கள்) பாசறையினின்றும் விரைவாகப் புறப்பட்டார்கள். பிறகு, பரஸ்பரம் ஜயத்தில் விருப்பமுற்றவர்களான கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் திடுக்கிடக்கூடியதும் மயிர்பொடிக்கச்செய்வதுமான யுத்தம் ஆரம்பித்தது. அரசரே! கர்ணன்

---

[1] ஆதி பர்வம், 354-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

பைத்தியம் பிடித்தவன்போலப் பேசாமலிருந்தான். பிறகு, நெடு நேரம் சிந்தையுற்று அடிக்கடி பெருமூச்சுவிட்டுக்கொண்டு தன் புத்திரர்களை நிந்தித்தான்; பாண்டவர்களை நன்கு மதித்தலையும் செய்தான். ராஜாவான திருதராஷ்டிரன் தன்னுடைய புத்தியையும் ஸுபல புத்திரனான சகுனியின் புத்தியையும் நிந்தித்துக் கொண்டு நெடுநேரம் ஆலோசித்து அடிக்கடி நடுக்கமுற்று மீண்டும் தைரியத்துடன் மனத்தை நிலைநிறுத்திக்கொண்டு கவல்கணகுமாரனும் ஸூதனுமான ஸஞ்சயனைப் பார்த்து மறுபடியும் வினவலானான்.

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! உன்னால் சொல்லப்பட்ட அந்த வாக்கியத்தை நான் கேட்கவில்லை. ஸூத! எப்பொழுதும் ஜயத்தில் ஆசையுடையவனும் என்னுடைய புத்திரனுமான துரியோதனன் ஜயத்தில் ஆசையை இழந்து யமனுடைய வாஸஸ்தானத்தை அடையாமலிருக்கிறானா? ஸஞ்சய! உன்னாற் சொல்லப்பட்ட வார்த்தையை மறுபடியும் எனக்கு உள்ளபடி சொல்வாயாக" என்றான். ஜனமேஜயரே! இவ்வாறு வினவியதைக் கேட்ட ஸஞ்சயன் திருதராஷ்டிரராஜனைப் பார்த்துக் கூறலானான்.

ஸேனாபதியானபின், இந்தக் கௌரவ பாண்டவ சேனைகளிரண்டிற்கும் ஆச்சரியகரமான காட்சியுள்ள யுத்தமானது இரண்டு நாட்கள் நடந்தது. பிறகு, கர்ணன் யுத்தத்தில் மிக்க பெரிதான சத்துருநாசத்தைச் செய்து கௌரவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது அர்ஜுனனால் தள்ளப் பட்டான். பிறகு, ஸஞ்சயன் விரைவாக ஹஸ்தினபுரத்திற்குச் சென்று குருக்ஷேத்திரத்தில் நடந்த எல்லாவற்றையும் திருதராஷ்டிரனுக்கு உரைத்தான்" என்றார். ஜனமேஜயர், "பிராம்மணோத்தமரே! பிராய முதிர்ந்தவனும் அம்பிகா புத்திரனுமான திருதராஷ்டிர ராஜன், மஹாரதர்களான கங்கா புத்திரரான பீஷ்மரும் துரோணரும் கொல்லப்பட்டார்களென்பதைக் கேட்டு அதிகத் துன்பத்தை அடைந்திருந்தான். துக்கம் அடைந்துள்ள அவன், துரியோதனனுக்கு நன்மை செய்வதிலேயே விருப்பமுள்ள கர்ணன் கொல்லப்பட்டானென்பதைக் கேட்டு எவ்வாறு உயிர்தரித்திருந்தான்? குருவம்சத்திலுதித்த திருதராஷ்டிர ராஜன், எந்தக் கர்ணனிடத்தில் தன் புத்திரர்களுக்கு ஜயம் உண்டாகுமென்று ஆசை வைத்திருந்தானோ அவன் கொல்லப்பட்டவுடன், எவ்வாறு உயிரை வைத்திருந்தான்? கர்ணன் கொல்லப்பட்டானென்பதைக் கேட்டும் அரசன் உயிரை விடாமலிருக்கிற காரணத்தினால், கஷ்டமான நிலைமையிலிருந்தாலும் மனிதர்களால் மரிக்க முடியாதென்றே எண்ணுகிறேன். பிராம்மணோத்தமரே! அவ்வாறு பிராயமுதிர்ந்தவரான பீஷ்மரும் பாஹ்லீகனும் துரோணரும் ஸோம

"அரசரே! மஹாரதனான கர்ணன் புத்திரர்களோடும் மஹா வில்லாளிகளும் சரீரத்தை இழக்கத் துணிந்தவர்களும் ஸூதபுத்திரர்களுமான பிராதாக்களோடும் கொல்லப்பட்டான். புகழ் பெற்றவனான பாண்டவனால் துச்சாஸனனும் கொல்லப்பட்டான். யுத்தத்தில் பீமஸேனனால் கோபத்தால் (துச்சாஸனனுடைய) இரத்தமும் குடிக்கப்பட்டது" என்று கூறினான். மஹாராஜரே! அம்பிகாபுத்திரனான திருதராஷ்டிரன், இவ்வார்த்தையைக் கேட்டு எரிக்கப்படுகின்றவனாகி ஸூதனைப் பார்த்து, "ஸஞ்சய! ஒரு முகூர்த்த காலம் இரு. அப்பா! என் மனம் கலக்கமடைந்திருக்கின்றது. ஒன்றையும் உரைக்கவேண்டாம்" என்றான். அரசனும் யாதொன்றும் சொல்லவில்லை. அவ்வாறே, ஸஞ்சயனும் விதுரரும் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு, பூபதியான அந்தத் திருதராஷ்டிரனும் அப்பொழுது பேசாமலிருந்துவிட்டான்" என்று கூறினார்.

இரண்டாவது அத்யாயம்

(திருதராஷ்டிரன் தன் சேனையில் கொல்லப்பட்ட வீரர்களுடைய பெயர்களைக் கேட்க விரும்பியதும், ஸஞ்சயன் சொல்லியதும்)

ஜனமேஜயர், பிராம்மணோத்தமரே! கர்ணன் இறந்ததையும் தன் புத்ரர்கள் ஓடினதையும்கேட்டுத் திருதராஷ்டிரராஜன் என்ன சொன்னான்? புத்திரர்களுடைய துயரத்தினாலுண்டானதும் பெரியதும் கோரமுமான துயரத்தை அடைந்த திருதராஷ்டிரன் அச்சமயத்தில் என்ன சொன்னான்? அதனை உண்மையாக எனக்குக் கூற

தத்தனும் பூரிஸ்ரவஸும் மற்ற நண்பர்களும் புத்திரர்களும் பௌத்திரர்களும் வீழ்த்தப்பட்டார்களென்று கேட்டும் அரசன் உயிரை விடாமையால், உயிரை விடுவது முடியாததென்றே நான் எண்ணுகிறேன். மஹரிஷியே! இவையெல்லாவற்றையும் ஸவிஸ்தாரமாக எனக்குச் சொல்வீராக. பூர்வ புருஷர்களுடைய பெரிய சரித்திரத்தைக் கேட்டும் நான் திருப்தியை அடையவில்லை" என்று கூறினார்.

அதிக பாடத்தின் இரண்டாவது அத்யாயம்

(திருதராஷ்டிரன் பீஷ்ம துரோணர்களைப்பற்றித் துக்கித்துத் துரியோதனனீயருடைய வரலாறு கூறும்படி கேட்டது)

வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்: "மஹாராஜரே! கர்ணன் கொல்லப்பட்டவுடனே, அப்பொழுது கவல்கண குமாரனான ஸஞ்சயன்

வேண்டும்" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

"மஹாராஜரே! அம்பிகா புத்திரனான திருதராஷ்டிரன், இவ்வார்த்தையைக் கேட்டுத் துக்கத்தால் வருந்திய மனத்துடன், ஸூதனான ஸஞ்சயனை நோக்கி, "அப்பா! அற்ப ஆயுளையுடையவனான என் புத்திரனுடைய அநீதியினாலே கர்ணன் கொல்லப்பட்டானென்பதைக் கேட்டுத் துக்கமானது என் மர்மஸ்தானங்களை அறுக்கிறது. துக்கத்தினுடைய கரையைக் கடக்க எண்ணங்கொண்ட என்னுடைய ஸம்சயத்தைத் தீர்க்கக்கடவாய். கௌரவர்களுள்ளும் ஸ்ருஞ்சயர்களுள்ளும் எவர்கள் மரணமடைந்தார்கள்? எவர்கள் உயிரோடிருக்கிறார்கள்" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான். "அரசரே! ஜயிக்கமுடியாதவரும் பிரதாபமுள்ளவருமான பீஷ்மர், பத்துத் தினங்களிலே [1] ஓர் அர்ப்புதமென்னும் எண்ணுள்ள பாண்டவர் படையிலுள்ள வீரர்களைக் கொன்று தாமும் கொல்லப்பட்டார். அவ்வாறே, மஹா வில்லாளியும் அவமதிக்கமுடியாதவரும் ஸ்வர்ணத் தேராளியுமான துரோணர் யுத்தத்தில் பாஞ்சாலர்களுடைய தேர்க்கூட்டங்களை அழித்துப் பின்பு கொல்லப்பட்டார். பீஷ்மராலும் மஹாபலசாலியான துரோணராலும் கொல்லப்பட்டதுபோக மிகுந்துள்ள சேனையில் பாதியைக் கொன்று விகர்த்தன குமாரனான கர்ணன் மாண்டான். மஹாராஜரே! ராஜகுமாரனும் அதிக பலசாலியுமான விவிம்சதி ஆனர்த்தவீரர்களை நூறு நூறாகக் கொன்று யுத்தத்தில் மாண்டான். அவ்வாறே, உம்முடைய புத்ரனும் சூரனுமான விகர்ணன் (தூணியில்) பாணங்கள் குறைந்துபோயும் க்ஷத்திரிய விரதத்தை நினைத்துக்கொண்டு எதிர்த்து நின்று பகைவர்களால் கொல்லப்பட்டான். அவன், மிகக் கொடியவையும் துரியோதனனால் செய்யப்பட்டவையுமான பல கிலேசங்களையும் தன் பிரதிஜ்ஞை

தளர்ச்சியுற்று வேகத்தில் காற்றிற்கு ஒப்பான குதிரைகளால் இரவிலேயே ஹஸ்தின பட்டணம் சென்றான். அவன் ஹஸ்தின பட்டணத்தை அடைந்து மிக்க மனவருத்தத்துடன் பந்துக்கள் பெரும்பான்மையாக அழிந்துபோன திருதராஷ்டிரனுடைய வாஸஸ்தானத்தை அடைந்தான். அவன், மோகத்தினால் ஒளியிழந்தவனும் அரசனுமான அந்தத் திருதராஷ்டிரனைக் கண்டு இரண்டு கைகளையும் குவித்துக்கொண்டு முடியினாலே அவனுடைய இரண்டு கால்களிலும் வணங்கினான். அவன், ராஜாவான திருதராஷ்டிரனை நியாயப்படி பூஜித்து, 'ஆ! கஷ்டம்!' என்றுஞ் சொல்லிப் பிறகு வசனிக்கலானான். "அரசரே! யான் ஸஞ்சயன். நீர்

[1] பத்துக் கோடி.

யையும் நினைக்கின்ற அப்படிப்பட்ட பீமஸேனனால் கொல்லப்பட்டான். ராஜபுத்திரர்களும் மஹாரதர்களும் அவந்திதேசாதிபர்களுமான விந்தானுவிந்தர்கள் ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச்செய்து யமனுடைய வீட்டை அடைந்தார்கள். மன்னரே! ஸிந்து தேசம் முதலான பத்துத் தேசங்களைத் தன்னுடைய ஆளுகையிலுடையவனும், உம்முடைய ஆஜ்ஞையில் கட்டுப்பட்டவனும், மஹாவீர்யமுடையவனுமான அந்த ஜயத்ரதனைக் கூர்மையான அம்புகளால் பதினொரு அக்ஷௌஹிணிகளை ஜயித்து அர்ஜுனன் கொன்றான். அவ்வாறே, வேகமுள்ளவனும் யுத்தத்தில் அடங்காத மதங்கொண்டவனும் பிதாவின் கட்டளையில் நிலை பெற்றவனும் துரியோதனனுடைய புத்திரனுமான லக்ஷ்மணன் ஸுபத்ரா புத்ரனான அபிமன்யுவினால் வீழ்த்தப்பட்டான். அவ்வாறே, சூரனும் பாகுபலமுள்ளவனும் யுத்தத்தில் அடங்காத மதங்கொண்டவனுமான துச்சாஸனனுடைய புத்திரன் திரௌபதீ புத்திரனோடு போர்புரிந்து, யமலோகத்தை அடைவிக்கப்பட்டான். ஸமுத்திரத்தின் அருகிலுள்ள பிரதேசங்களில் வாசஞ் செய்கின்ற கிராதர்களுக்கு அதிபதியும் தர்மாத்மாவும் தேவராஜனுக்கு நன்கு மதிக்கப்பட்ட அன்புள்ள நண்பனும் எப்பொழுதும் க்ஷத்திரிய தர்மத்தில் பற்றுள்ளவனும் ராஜாவுமான பகதத்தன் தனஞ்சயனால் பராக்கிரமித்து யமலோகத்தை அடைவிக்கப்பட்டான். வேந்தரே! அவ்வாறே, கௌரவர்களுக்குத் தாயாதனும் அஸ்திரங்களை எறிந்துவிட்டவனும் மஹாகீர்த்தி பொருந்தியவனும் சூரனுமான பூரிச்ரவஸ் ஸாத்யகியினால் யுத்தத்தில் கொல்லப்பட்டான், க்ஷத்திரியர்களுள் கார்யநிர்வாகியும் அம்பஷ்ட தேசாதிபதியுமான ச்ருதாயுவும் யுத்தத்தில் பயமற்று ஸஞ்சரித்துக் கொண்டு ஸவ்யஸாசியினால் கொல்லப்பட்டான். மஹாராஜரே! எப்பொழுதும் கோபங்கொண்டவனும் அஸ்திரத்தில் தேர்ச்சிபெற்றவனும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவனும் உம்முடைய குமாரனுமான துச்சாஸனன் பீமஸேனனால் வீழ்த்தப்பட்டான்.

னாகராக இருக்கிறீரா? உம்முடைய தோஷங்களாலே ஆபத்தை அடைந்து இப்பொழுது புத்திமயக்கம் அடையாமலிருக்கிறீரா? விதுரராலும் துரோணராலும் பீஷ்மராலும் கேசவராலும் சொல்லப்பட்டவையும் உம்மால் ஏற்றுக்கொள்ளப்படாமலிருந்தவையுமான நல்ல உபதேசங்களை நினைத்து மனவருத்தமடையாமலிருக்கிறீரா? பரசுராமர், நாரதர், கண்வர் முதலானவர்களாலே சபையின்கண் சொல்லப்பட்டதும் உம்மால் ஏற்றுக்கொள்ளப்படாததுமான நல்வார்த்தையை நினைத்து மனவருத்தமடையாமலிருக்கிறீரா? உம்முடைய நன்மையில் முயற்சியுடையவர்

அரசரே! அனேக ஆயிரம் அற்புதமான யானைப்படையுள்ள ஸுதக்ஷிணன் ஸவ்யஸாசியினால் யுத்தத்தில் கொல்லப்பட்டான். கோஸலதேசாதிபதியானவன் சௌர்யத்தினால் மதிக்கப்பெற்றவர்களான பகைவர்களைக் கொன்று பராக்கிரமத்தை வெளியிட்டு ஸுபத்திரா புத்திரனால் யமலோகத்தை அடைவிக்கப்பட்டான். உமது குமாரனான சித்திரஸேனன் மஹாரதனான பீமஸேனனை எதிர்த்துப் பலவாறு போர்புரிந்தும் பீமஸேனனால் வீழ்த்தப்பட்டான். சூரனும் பகைவர்களுக்குப் பயத்தை விருத்திபண்ணுகிறவனும் ஸௌந்தர்யமுடையவனும் கத்தியையும் கேடகத்தையும் தாங்கியவனுமான மத்ரராஜனுடைய குமாரன், ஸுபத்ராபுத்திரனால் கொல்லப்பட்டான். யுத்தத்தில் கர்ணனை ஒத்தவனும் மிக்க தேஜஸுள்ளவனும் விரைவாக அஸ்திரங்களைப் பிரயோகிக்கின்றவனும் திடமான விக்ரமமுள்ளவனுமான அந்த விருஷஸேனன் தனஞ்சயனாலே அபிமன்யுவினுடைய வதத்தையும் தன்னுடைய பிரதிஜ்ஞையையும் நினைத்துக் கர்ணன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, பராக்கிரமத்தினால் யமனுடைய வாஸஸ்தானத்தை அடைவிக்கப்பட்டான். எப்பொழுதுமே பாண்டவர்களோடு வைரம் பூண்டிருப்பவனான ச்ருதாயு என்னும் அரசன் பார்த்தனால் வைரத்தைக் கேட்கச் செய்து வீழ்த்தப்பட்டான். பெரியவரே! அரசரே! பராக்கிரமசாலியும் மைத்துனனும் அம்மான் சேயும் சல்யபுத்திரனுமான ருக்மரதனென்பவன் [1] ஸஹதேவனால் யுத்தத்தில் கொல்லப்பட்டான். பராக்கிரமசாலிகளும் பகைவர்களைத் தாக்குகின்றவர்களும் மிகுந்த வீர்யமுடையவர்களுமான பாஹ்லீக ராஜனும் பிராயம் முதிர்ந்தவனும் கேகய தேசத்தரசனுமான பிருஹத்க்ஷத்திரனும் கொல்லப்பட்டார்கள். அரசரே! கற்றறிந்தவனும் மகா பலசாலியுமான பகதத்த குமாரனும் யுத்தத்தில்

களும் ஸுஹ்ருத்துக்களுமான பீஷ்மர் துரோணர் முதலானவர்கள் யுத்தத்தில் பகைவர்களால் கொல்லப்பட்டார்களென்பதை நினைத்து மனவருத்தம் அடையாமலிருக்கிறீரா?" என்றான். இவ்வாறு, அஞ்சலி செய்துகொண்டு வினவுகின்ற ஸஞ்சயனைக் குறித்து ராஜாவான திருதராஷ்டிரன் அதிதீர்க்கமாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு துயரத்தால் பீடிக்கப்பட்டு இதனைக் கூறலானான்.

"ஸஞ்சய! சூரரும் திவ்யாஸ்திரங்களையுடையவருமான கங்காபுத்திரரும் மகாவில்லாளியான துரோணரும் கொல்லப்பட்டவுடனே என்

---

[1] அபிமன்யுவினால் கொல்லப்பட்டதாகத் துரோணபர்வம் 45-வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. துரோணபர்வம், 164-ம் பக்கம் பார்க்க.

பருந்துபோல் ஸஞ்சரிக்கின்றவனுன நகுலனுலே வீழ்த்தப்பட்டான். அவ்வாறே, உமக்குப் பாட்டனும் மிக்க பலமும் பராக்கிரமமு முடையவனுமான பாஹ்லீகன் பாஹ்லீகர்களுடன் பீமஸேன ஞல் கொல்லப்பட்டான். அரசரே! அவ்வாறே, மகா பலசாலி யும் மகத நாட்டிறைவனும் ஜராஸந்தனுடைய குமாரனுமான ஜயத்ஸேனன், யுத்தத்தில் மகா பலசாலியான அபிமன்யுவினுல் கொல்லப்பட்டான். மன்னரே! மகாரதர்களும் சூரர்களென்று கர்வங்கொண்டவர்களும் உம்முடைய புத்திரர்களுமான துர்முக னும் துஸ்ஸஹனும் பீமஸேனனுல் கதையினுல் கொல்லப்பட் டார்கள். துர்மர்ஷணனும் துர்விஷஹனும் மகாரதனுன துர்ஜய னும் எளிதிற் செய்யமுடியாத செய்கையைச் செய்தும் யமனுடைய வாஸஸ்தானத்தை அடைந்தார்கள். பிராதாக்களும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களுமான சுளிங்கன் விருஷகன் இருவ ரும் செயற்கரிய செய்கையைச் செய்து சூரியன் மகனுன யமனது வீட்டை அடைந்தனர். சூரனும் அஸாத்யமான வீர்யமுடையவ னும் உமக்கு மந்திரியுமான விருஷபர்வா பீமஸேனனுல் பராக் கிரமத்தை வெளியிட்டு யமனுடைய வாஸஸ்தானத்தை அடை விக்கப்பட்டான். அவ்வாறே, பதினுயிரம் யானையின் பல முடையவனும் மகானுமான பௌரவனென்னும் அரசன் பாண்டு புத்திரனுன ஸவ்யஸாசியினுல் யுத்தத்தில் கொல்லப்பட்டான். மகாராஜரே! அடிக்குந் திறமையுடையவர்களான இரண்டா யிரம் வஸாதிகளும் விக்கிரமமுள்ளவர்களான எல்லாச் சூர ஸேனர்களும் யுத்தத்தில் வீழ்த்தப்பட்டார்கள். கவசமணிந் தவர்களும் அடிக்கின்றவர்களும் யுத்தத்தில் மிக்க ஸாமர்த்திய முடையவர்களுமான அபீஷாகர்களும் ரதிகச்ரேஷ்டர்களான சிபிகளும் காளிங்கர்களும் கொல்லப்பட்டார்கள். கோகுலத்தில்

மனம் மிக்க வருத்தத்தை அடைந்துவிட்டது. வஸுவினிடம் தோன் றியவரும் தேஜஸ்வியுமான எந்தப் பீஷ்மர் நாள்தோறும் கவசம் அணிந்த வர்களான பதினுயிரம் ரதிகர்களைக் கொன்முரோ அவர், பாண்டு புத்திரனுன அர்ஜுனனுல் நன்முகக் காக்கப்பட்ட யாகஸேனனுடைய குமாரனுன சிகண்டியினுல் கொல்லப்பட்டாரென்பதைக் கேட்டு இப்பொழுது என் மனம் வருத்தமுற்றிருக்கிறது. எவருக்கு மஹாயுத் தத்தில் உத்தமமான அஸ்திரத்தைப் பரசுராமர் அளித்தாரோ, எவர் பால்யத்தில் ஸாக்ஷாத் பரசுராமராலே தனுர்வேதத்தில் சிஷ்யராக ஏற்றுக்கொள்ளப்பட்டாரோ, எவருடைய அனுக்ரகத்தினுலே மஹா ரதர்களும் ராஜகுமாரர்களுமான பாண்டவர்களும் அவ்வாறே மற்ற அர சர்களும் மஹாரதர்களாயிருக்கும் நிலைமையைப் பெற்றுர்களோ, ஸத்திய

எப்பொழுதும் வளர்ந்தவர்களும் யுத்தத்தில் மிக்க கோபங்கொண்டவர்களும் மிக்க வீர்யமுடையவர்களுமான அந்தக் கோபாலர்கள் ஸவ்யஸாசியினால் கொல்லப்பட்டார்கள். அனேக ஆயிரக்கணக்கான ஸ்ரேணிகளும் ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களும் முழுமையும் பார்த்தனை எதிர்த்து யமனுடைய வீட்டை அடைந்தனர். மகாராஜரே ! உமக்கு மைத்துனர்களும் அரசர்களுமான விருஷகனும் அசலனும் உமது நிமித்தமாக அதிக பராக்ரமத்தை வெளியிட்டு ஸவ்யஸாசியினால் கொல்லப்பட்டார்கள். அவ்வாறே, பெயரினாலும் செய்கையினாலும் உக்ரகர்மாவென்றும் மகா வில்லாளியென்றும் பிரஸித்திபெற்றவனும் நீண்ட கைகளையுடையவனுமான ஸால்வராஜன் பீமஸேனனால் வீழ்த்தப்பட்டான். மகாராஜரே! யுத்தத்தில் சேர்ந்து மித்ரன்நிமித்தமாகப் பராக்ரமத்தை வெளியிட்டவர்களான ஓகவானும் பிருகந்தனும் வைவஸ்வதனுடைய வீட்டை அடைந்தார்கள். வேந்தரே! அவ்வாறே, ரதிகர்களுள் சிறந்தவனான க்ஷேமதூர்த்தி யுத்தத்தில் பீமஸேனனால் கதையினால் கொல்லப்பட்டான். அரசரே ! அவ்வாறே, மகா வில்லாளியும் மகாபலசாலியுமான ஜலஸந்தன் யுத்தத்தில் மிகப்பெரிய துன்பத்தைச் செய்து ஸாத்யகியினால் கொல்லப்பட்டான். கோவேறு கழுதைகள் பூட்டிய ரதத்தோடு கூடியவனும் ராக்ஷஸ ஸ்ரேஷ்டனுமான அலம்புஸன் கடோத்கசனால் பராக்ரமத்தை வெளியிட்டு யமனுடைய வீட்டை அடைவிக்கப்பட்டான். ஸூத புத்திரனான ராதேயனும், மகாரதர்களும் ஸஹோதரர்களுமான கேகயர்களனைவரும் ஸவ்யஸாசியினால் கொல்லப்பட்டார்கள். ஐயா ! மாலவர்களும் மத்ரகர்களும் உக்கிரமான செய்கையுள்ள

ஸந்தரும் மஹாவில்லாளியுமான அந்தத் துரோணர் யுத்தத்தில் திருஷ்டத்யும்னனால் கொல்லப்பட்டாரென்பதைக் கேட்டு என் மனம் மிக்க வருத்தமடைந்திருக்கிறது. எந்த இருவருக்கும் உலகத்தில் 1 நான்கு விதமான அஸ்திரவித்தைகளில் ஸமனான மனிதன் இல்லையோ அந்தத் துரோணரும் பீஷ்மரும் கொல்லப்பட்டார்களென்பதைக் கேட்டு என் மனம் வருத்தமடைகிறது. மூவுலகங்களிலும் எவருக்கு அஸ்திரங்களில் சமமான மனிதன் இல்லையோ அந்தத் துரோணர் கொல்லப்பட்டதைக் கேட்டு என்னைச் சேர்ந்தவர்கள் யாது செய்தனர் ? மஹா பலசாலியும் பாண்டு புத்திரனுமான தனஞ்சயனால் ஸம்சப்தகர்களுடைய படையானது பராக்கிரமத்தினால் யமனுடைய வீட்டை அடைவிக்கப்படவும், புத்திமானான துரோண புத்திரருடைய நாராயணாஸ்திரமும் வீணாக்கப்படவும் ஸைனியங்களும் ஓடியபொழுது, என்னைச் சேர்ந்தவர்கள் யாது செய்தனர் ?

---

[1] ஆதி பர்வம், 520-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

திராவிடர்களும் யௌதேயர்களும் லலித்தர்களும் க்ஷுத்ரகர்க ளும் உசீனரர்களும் மாவேல்லகர்களும் துண்டிகேரர்களும் ஸாவித்ரீ புத்திரர்களும் கீழ் நாட்டு வீரர்களும் வடநாட்டு வீரர்களும் மேனாட்டு வீரர்களும் தென்னாட்டு வீரர்களும் அனேக ஆயிரக் கணக்கான காலாட்களின் கூட்டங்களும் லக்ஷக்கணக்கான குதிரை களும் தேர்க்கூட்டங்களும் உத்தமமான யானைகளும் கொல்லப் பட்டனர். அரசரே! எவர்கள் த்வஜங்களையும் ஆயுதங்களையு முடையவர்களும் சூரர்களும் கவசங்களையும் வஸ்திரங்களையும் பூஷணங்களையும் அணிந்தவர்களும் வெகுகாலமாக யுத்தத்தில் பழகினவர்களும் ஸமர்த்தர்களால் வளர்க்கப்பட்டவர்களுமா யிருந்தார்களோ அவர்கள் யுத்தத்தில் தளர்ச்சி அடையாத செய் கையையுடைய பார்த்தனால் கொல்லப்பட்டார்கள். அவ்வாறே, அளவு கடந்த பலத்தையுடையவர்களும் பரஸ்பரம் வதத்தில் விருப்பமுள்ளவர்களுமான மற்றவர்களும் கொல்லப்பட்டார்கள். மன்னரே! நீர் என்னைக் கேட்கிறதனால் யான் சொல்லுகிறேன். யுத்தத்தில் இவ்வரசர்களும் பரிவாரங்களுடன் கூடின மற்ற அனேக அரசர்களும் ஆயிரக்கணக்காகக் கொல்லப்பட்டார்கள். கர்ணனும் அர்ஜுனனும் எதிர்த்துப் போர்புரியுங்கால் இவ் வாறாக வீரர்களுக்கு நாசம் உண்டாகியது. எவ்வாறு மகேந்திர னால் விருத்திரன் கொல்லப்பட்டானோ, எவ்வாறு இராமபிரானால் ராவணன் கொல்லப்பட்டானோ, எவ்வாறு கண்ணபிரானால் நரகா ஸுரனும் முருவென்கிற அஸுரனும் யுத்தத்தில் கொல்லப் பட்டார்களோ, எவ்வாறு யுத்தத்தில் கெட்ட மதங்கொண்ட வனும் சூரனுமான கார்த்தவீர்யார்ஜுனன் பிருகு குலத்தில் பிறந்த பரசுராமரோடு மூவுலகங்களுக்கும் மயக்கத்தை உண்டு

துரோணர் கொல்லப்பட்டவுடனே ஓடுகின்றவர்களை, கப்பலுடைந்து கடலில் மிதக்கின்ற ஜனங்களைப்போல, துக்கசமுத்திரத்தில் ஆழ்ந்தவர்க ளென்றே நான் நினைக்கிறேன். ஸஞ்சய! சேனைகள் ஓடுங்கால் துரியோ தனன், கர்ணன், போஜனான கிருதவர்மா, மத்ரராஜனான சல்யன், துரோணபுத்திரரான அசுவத்தாமா, கிருபர், மிகுந்துள்ள என் புத்திரர்கள், மற்றவர்கள் ஆகிய இவர்களுக்கு முகத்தின் நிறம் எவ்விதமாயிருந்தது? கவல்கண குமார! இவை எல்லாவற்றையும் பாண்டவர்களும் நம்மைச் சேர்ந்தவர்களும் காட்டிய வீரச் செய்கையையும் உள்ளபடி எனக்குச் சொல்வாயாக" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான்.

"ஐயா! உம்முடைய குற்றத்தினாலே கௌரவ வீரர்களுக்கு நேர்ந் ததைக் கேட்டு நீர் மனவருத்தமடைதல் கூடாது. தெய்வச்செயலால் நேரும் காரியத்தில் கற்றறிந்தவன் மனவருத்தமடையான். ஏனெனில், மனிதன்

பண்ணக்கூடிய கோரமான பெரிய யுத்தத்தைச் செய்து ஞாதிகளு டனும் உறவினர்களுடனும் கொல்லப்பட்டாரோ, எவ்வாறு ஸுப்ரம்மண்யரால் மகிஷாஸுரனும், ருத்ரரால் அந்தகாஸுர னும் கொல்லப்பட்டார்களோ, அவ்வாறே அர்ஜுனனால் திருத ராஷ்டிர குமாரர்களுக்கு வெற்றியில் ஆசைவைப்பதற்குக் காரண மாயிருந்தவனும் பகைக்கு முகமாயிருந்தவனும் அடிக்கிறவர் களுள் சிறந்தவனும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவனும் அர சனுமான கர்ணன் மந்திரிகளோடும் பந்துக்களோடும் துவந்துவ யுத்தத்தில் கொல்லப்பட்டான். ராஜரே! ஹிதத்தை விரும்புகின்ற வர்களான பந்துக்களாலே முன்பு சொல்லப்பட்டதை நீர் அறிந்து கொள்ளவில்லை. பாண்டவர்களாலே அவ்விதக் கஷ்டம் தாண்டப் பட்டது. இது உம்மால் செய்யப்பட்டதன்று; முன்பே தெய்வ பலத்தால் ஏற்பட்டது. ஆதலால், மிகப் பெரிய கெடுதியைச் செய் கிற இந்த வ்யஸனம் நேர்ந்தது. ராஜரே! ராஜ்யத்தில் விருப்ப முள்ள (உம்முடைய) புத்திரர்களுடைய நன்மையில் விருப்ப முள்ள உம்மாலே தீங்குகளே செய்யப்பட்டன. அவைகளுடைய பலன் உமக்கு வந்தது" என்று கூறினான்.

மூன்றாவது அத்யாயம்

(ஸஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு யுத்தத்தில் கொல்லப்பட்ட பகைவர்களுடைய பெயர்களைக் கூறியது)

திருதராஷ்டிரன், "ஐயா! யுத்தத்தில் பாண்டவர்களாலே கொல்லப்பட்ட என்னைச் சேர்ந்தவர்களைச் சொன்னாய். ஸஞ்சய! என்னைச் சேர்ந்தவர்களாலே கொல்லப்பட்ட பாண்டவ சேனா வீரர்களை எனக்குச் சொல்" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லத் தொடங்கினான்.

"யுத்தத்தில் ஸமர்த்தர்களும் பராக்ரமமுடையவர்களும் மிக்க தைர்யமுள்ளவர்களும் மகா பலசாலிகளுமான (பாண்டவ ஸேனாவீரர்கள்) கங்கா புத்திரரான பீஷ்மரால் பந்துக்களோடும்

விரும்பிய பலன் கிடைத்தாலும் கிடைக்கலாம்; கிடைக்காமலும் போகலாம். ஆதலால், விவேகியானவன் தான் விரும்பிய பொருள் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வருத்தம் அடையான்" என்று கூறினான். திருதராஷ்டிரன், "ஸஞ்சய! எனக்கு அதிகமான ஒருவித மனவருத்தமும் இல்லை. இது முன்னமே தெய்வத்தினால் ஏற்படுத்தப் பட்டுவிட்டதென்று நினைக்கிறேன். இஷ்டப்படி உரைக்கலாம்" என்று கூறினான்.

மந்திரிகளோடும் வீழ்த்தப்பட்டார்கள். (யுத்தத்தில்) ப்ரீதியுள்ளவர்களான [1] நாராயணர்களும் [2] ராமர்களும் வல்லவர்களும் நூற்றுக்கணக்கான மற்றவர்களும் வீரரான பீஷ்மரால் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். வீர்யத்தாலும் பலத்தாலும் யுத்தத்தில் கிரீடிக்குச் சமானனான ஸத்யஜித் என்பவன் ஸத்யஸந்தரான துரோணரால் யுத்தத்தில் கொல்லப்பட்டான். சிறந்த வில்லாளிகளும் யுத்தத்தில் ஸமர்த்தர்களுமான எல்லாப் பாஞ்சாலர்களும் துரோணரோடு எதிர்த்துப் போர்புரிந்து வைவஸ்வதனுடைய வீட்டை அடைந்தார்கள். அவ்வாறே, மித்திரன் நிமித்தமாகப் பராக்ரமத்தை வெளியிட்டவர்களும் வயது சென்றவர்களும் மன்னர்களுமான விராடனும் துருபதனும் புத்திரர்களோடு கூடவே துரோணரால் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். எவன் பாலனாக இருக்கும்பொழுதே யுத்தத்தில் ஸவ்யஸாசியோடும் கேசவரோடும் பலராமரோடும் ஒப்பிடப்பட்டவனாகவும் ஜயிக்கமுடியாதவனாகவும் (பகைவர்களை) அவமதிக்கின்றவனாகவும் யுத்தத்தில் ஸமர்த்தனாகவும் இருந்தானோ அந்த அபிமன்யு பகைவர்களுக்கு மிக்க நாசத்தைச்செய்து, பீபத்ஸுவை எதிர்க்கச் சக்தியற்றவர்களும் பிரதானர்களுமான (ஆறு மகாரதர்களால்) சூழப்பட்டு வீழ்த்தப்பட்டான். மகாராஜரே! இரதத்தை இழந்தவனாகச் செய்யப்பட்டும் க்ஷத்திரிய தர்மத்தில் நிலைபெற்றவனும் வீரனுமான அபிமன்யுவைத் துச்சாஸனனுடைய புத்திரன் யுத்தத்தில் கொன்றான். செல்வ மிக்கவனும் மித்திரன் நிமித்தமாகப் பராக்கிரமத்தை வெளியிடுகின்றவனும் படச்சரர்களைக் கொல்லுகிறவனுமான அம்பஷ்டனுடைய

அதிக பாடத்தின் மூன்றுவது அத்யாயம்

(துரியோதனன் துரோணருடைய மரணத்தைக் கேட்டு யுத்தத்தில் ஒழிவடைந்த போர்வீரர்களுக்குக் கர்ணனுடைய குணங்களைக் கூறி ஊக்கமுண்டாக்கியதும், ஸஞ்சயன் திருதராஷ்டிரனுக்குக் கர்ணனுடைய பராக்ரமத்தையும் மரணத்தையும் கூறியதும்)

ஸஞ்சயன், "மகாவில்லாளியான துரோணர் கொல்லப்பட்டவுடனே, மகாரதர்களான உம்முடைய புத்திரர்கள் வியஸனமுற்றவர்களும் பிரஜ்ஞையை இழந்தவர்களும் முகம் வாடினவர்களுமானார்கள். அரசரே! சஸ்திரங்களைத் தரித்தவர்களனைவரும் தலைகுனிந்தவர்களும் சோகத்தால் பீடிக்கப்பட்டவர்களும் பார்க்கின்றவர்களுமாகி ஒருவரோடொருவர் பேச

---

[1] கிருஷ்ணன் குமாரர்கள். [2] பலராமன் குமாரர்கள்.

குமாரன் பெரும்படையினால் சூழப்பட்டவனாகத் துர்யோதனனுடைய புத்திரனும் சூரனுமான லக்ஷ்மணனை எதிர்த்து யுத்தத்தில் மிக்க அதிகமான துன்பத்தைச் செய்து யமனுடைய வீட்டை நாடினான். அழகிய பெரிய வில்லையுடையவனும் அஸ்திரத்தில் பயிற்சியுள்ளவனும் யுத்தத்தில் கெட்ட மதம் கொண்டவனுமான பிருஹந்தன் துச்சாஸனனால் பராக்ரமத்தை வெளியிட்டு யமனுடைய வீட்டை அடைவிக்கப்பட்டான். அரசர்களும், யுத்தத்தில் அடங்காத மதங்கொண்டவர்களுமான மணிமான், தண்டதாரன் (இவ்விருவர்களும்) மித்திரன்நிமித்தமாகப் பராக்கிரமத்தை வெளியிட்டுத் துரோணரால் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். போஜதேசத்தரசனும் மகாரதனுமான அம்சுமான் பாரத்வாஜரால் விக்கிரமத்தை வெளியிட்டுச் சேனைகளோடுகூட யமனுடைய வீட்டை அடைவிக்கப்பட்டான். பாரதரே! புத்திரனோடு கூடினவனும் கடற்கரை நாட்டுக்குத் தலைவனுமான சித்ரஸேனன் ஸமுத்திரஸேனனாலே பலத்தால் யமனுடைய வீட்டை அடைவிக்கப்பட்டான். அநூபதேசவாஸியான நீலனும் வீர்யசாலியான வியாக்ரதத்தனும் அசுவத்தாமாவினாலும் விகர்ணனாலும் யமனுடைய வீட்டை அடைவிக்கப்பட்டார்கள். விசித்திரமாக யுத்தம் செய்கிற சித்திராயுதன் கடும்போர் புரிந்து விசித்ரமான கதியோடு வல்லமையை வெளியிட்டு யுத்தத்தில் விகர்ணனால் கொல்லப்பட்டான். யுத்தத்தில் விருகோதரனுக்குச் சமானனாக எண்ணப்பட்டவனும் பிராதாவுமான கேகயராஜகுமாரன் பிராதாவான கேகயனால் விக்கிரமத்தை வெளிப்படுத்தி யுத்தத்தில் கொல்லப்பட்டான். மகாராஜரே! கதாயுத்தம் செய்பவனும் மலைநாட்டுக்குத் தலைவனும் பிரதாபசாலியுமான [1] ஜனமேஜயன் உமது புத்திரனான துர்முகனால் கொல்லப்பட்டான். அரசரே! நர

வில்லை. பாரதரே! துன்பமுற்ற தோற்றமுள்ள அவர்களைக் கண்டு உம்முடைய படைகள் அனைத்தும் துயரத்தால் நடுக்கமுற்று [2] ஆகாயத்தையே நோக்கின. ராஜேந்திரரே! யுத்தரங்கத்தில் துரோணர் கொல்லப்பட்டதைக் கண்ட இவர்களின் கைநுனிகளினின்று நான்கு பக்கத்திலும் ரக்தத்தால் நனைக்கப்பட்ட சஸ்திரங்கள் நழுவிக் கீழே விழுந்தன. பாரதரே! பிடிக்கப்பட்டவைகளும் நழுவுகின்றவைகளுமான அந்த ஆயுதங்கள், ஆகாயத்திலிருந்து விழுகின்றவையும் அமங்களத்தைத் தெரிவிக்கின்றவையுமான நக்ஷத்திரங்களைப்போலக் காணப்பட்டன.

---

[1] இவன் வேறு. [2] 'மேலுலகம் செல்வதையே கருதின; பூமியில் இருக்க விரும்பவில்லை' என்பது பழைய உரை.

ஸ்ரேஷ்டர்களும் இரண்டு கிருகங்கள்போல ஜ்வலிக்கின்றவர்களுமான ரோசமானர்களிருவர்களும் துரோணரால் அம்புகளால் ஒரேஸமயத்தில் ஸ்வர்க்கத்தை அடையும்படி செய்யப்பட்டார்கள். பராக்ரமசாலிகளான அரசர்கள் எதிர்த்துப் போர்புரிந்து செய்யமுடியாத காரியத்தைச் செய்து யமனுடைய வீட்டை அடைந்தார்கள். ஸவ்யஸாசிக்கு அம்மான்களான புருஜித்தும் குந்திபோஜனும் போரில் ஜயிக்கப்பட்ட உலகங்களைத் துரோணருடைய அம்புகளால் அடையும்படி செய்யப்பட்டார்கள். காசிதேசத்து வீரர்கள் பலரால் சூழப்பட்டவனும் காசிராஜனுமான அபிபூவானவன் யுத்தத்தில் வஸுதானனுடைய புத்திரனாலே தேகத்தை இழக்கும்படி செய்யப்பட்டான். அமிதௌஜஸும் யுதாமன்யுவும் வீர்யமுடையவனான உத்தமௌஜஸும் நூற்றுக்கணக்காகச் சூரர்களைக் கொன்று நம்மைச் சேர்ந்தவர்களால் வீழ்த்தப்பட்டார்கள். பாரதரே! மகா வில்லாளிகளும் பாஞ்சாலராஜ குமாரர்களுமான மித்திரவர்மாவும் க்ஷத்ரதர்மாவும் துரோணரால் யமனுடைய வீட்டை அடைவிக்கப்பட்டார்கள். பாரதரே! யுத்தம் செய்கின்றவர்களுக்குத் தலைவனும் சிகண்டியின் புத்திரனுமான க்ஷத்திரதேவன் யுத்தத்தில் உம்முடைய பேரனான லக்ஷ்மணனால் கொல்லப்பட்டான். மகாரதர்களும் மகாவீரர்களும் நன்றாக ஸஞ்சரிக்கின்றவர்களும் தகப்பன் பிள்ளைகளுமான ஸுசித்ரனும் சித்ரவர்மாவும் துரோணரால் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள், மகாராஜரே! பர்வகாலத்

மஹாராஜரே! அவ்வாறு பலத்தை யிழந்து அசைவற்று நிற்கின்ற உம்முடைய சேனையைக் கண்டு ராஜாவான துரியோதனன், "ஸைனிகர்களே! உங்களுடைய பாகுபலத்தை ஆதாரமாகக் கொண்டே என்னால் யுத்தத்திற்காகப் பாண்டவர்கள் அழைக்கப்பட்டார்கள். இந்த யுத்தமும் தொடங்கப்பட்டுவிட்டது. இவ்வாறிருக்க, இந்தச் சேனையானது, துரோணர் கொல்லப்பட்டவுடனே, வியஸனமுற்றதுபோல் காணப்படுகிறது. போர்புரிகின்ற யுத்தவீரர்களும் யுத்தத்தில் நான்கு பக்கங்களிலும் கொல்லப்படுகிறார்கள். யுத்தகளத்தில் போர்புரிகின்றவனுக்கு ஜயமோ அல்லது வதமோ நேரக்கூடும். இதில் என்ன ஆச்சரியம்? நாற்புறமும் நின்றுகொண்டு யுத்தம் செய்யுங்கள். மஹாபலசாலியும் சிறந்த வில்லாளியும் திவ்யாஸ்திரங்களுடன் ஸஞ்சரிக்கின்றவனும் மிக்க தைர்யமுடையவனும் சூரியகுமாரனுமான கர்ணனை யுத்தத்தில் பாருங்கள். யுத்தத்தில் எவனிடத்திலுண்டான பயத்தினால் புத்திஹீனனும் குந்திபுத்திரனுமான தனஞ்சயன் சிங்கத்தினிடத்தினின்று அல்ப மிருகம் திரும்புவதுபோல எப்பொழுதும் திரும்புகிறானோ பதினொ

தில் கொந்தளிக்கின்ற கடல்போன்றவனுன வார்த்தக்ஷேமி ஆயுதங்கள் அற்றவனுகி மரணமடைந்தான். மஹாராஜரே! ஸ்ரேஷ்டனும் பகைவர்களை யுத்தத்தில் அடிக்கின்றவனுமான ஸேனுபிந்துவினுடைய புத்திரன் கௌரவஸ்ரேஷ்டனுன பாஹ்லீகனுல் கொல்லப்பட்டான். மகாராஜரே! சேதிதேசத்து வீரர்களுள் உத்தமரதிகனுன திருஷ்டகேது (ஒருவராலும்) செய்யமுடியாத காரியத்தைச் செய்து யமனுடைய வீட்டை அடைந்தான். பாண்டவன் நிமித்தமாகப் பராக்ரமத்தை வெளியிடுகின்ற வீரனுன ஸத்யத்ருதி யுத்தகளத்தில் பகைவர்களுக்குத் துன்பத்தைச் செய்து யமனுடைய வீட்டை அடைவிக்கப்பட்டான். சிசுபாலனுடைய புத்திரனும் அரசனுமான ஸுகேது பகைவர்களைக் கொன்று துரோணரால் யுத்தத்தில் கொல்லப்பட்டான். அவ்வாறே, வீரனுன ஸத்யத்ருதியும் வீர்யவானுன மதிராஸ்வனும் விக்ரமசாலியான ஸூர்யதத்தனும் துரோணருடைய அம்புகளால் கொல்லப்பட்டார்கள். மத்ஸ்யராஜனுடைய இளைய ஸஹோதரனும் ஐஸ்வர்யமுள்ளவனுமான சதானீகனும் வீழ்த்தப்பட்டான். மகாராஜரே! போர்புரிகின்றவனும் பராக்ரமசாலியுமான ஸ்ரேணிமானும் (ஒருவராலும்) செய்யமுடியாத காரியத்தைச் செய்தும் வைவஸ்வதனுடைய வீட்டை அடைந்தான். அரசரே! சத்ருவீரர்களைக் கொல்லுகின்றவனும் யுத்தத்தில் விக்கிரமத்தை வெளிப்படுத்துகின்றவனும் உத்தமமான அஸ்திரங்களை அறிந்தவனுமான மாகதன் அவ்வாறே

யிரம் யானை பலமுள்ளவனும் மகா பலசாலியுமான பீமஸேனன் எவனுலே மனித யுத்தத்திலுலேயே அவ்விதமான நிலைமையை அடைவிக்கப்பட்டானே திவ்யாஸ்திரங்களை அறிந்தவனும் சூரனும் மாயாவியும் பயங்கரமாகக் கர்ஜிக்கின்றவனுமான கடோத்கசன் எவனுலே அழிவற்றதான சக்தியாயுதத்தினுல் கொல்லப்பட்டானே அப்படிப்பட்ட மகிமை பொருந்தியவனும் தடுக்கமுடியாத வீர்யமுடையவனும் ஸத்தியஸந்தனும் புத்தியையுடையவனுமான அந்தக் கர்ணனுடைய குறைவற்ற இரு கைகளின் பலத்தையும் இப்பொழுது யுத்தத்தில் பார்க்கப்போகிறீர்கள். விஷ்ணுவும் இந்திரனும்போன்ற துரோண புத்திரர் ராதா புத்திரனுன கர்ணன் இவ்விருவருடைய வல்லமையையும் அந்தப் பாண்டு புத்திரர்கள் பார்க்கட்டும். நீங்களனைவரும் தனித்தனியாகவே ஸைன்யங்களுடன் கூடின பாண்டு புத்திரர்களை யுத்தத்தில் கொல்வதற்குத் திறமையுடையவர்கள்; ஒன்றுசேர்ந்தால் கேட்கவேண்டுமோ? வீர்யமுடையவர்களும் அஸ்திரத்தில் விசேஷமான பயிற்சியுடையவர்களுமான நீங்கள் இப்பொழுது பரஸ்பரம் பார்க்கப்போகிறீர்கள்" என்று கூறினுன். மாசற்றவரே! அப்பொழுது மகாவீர்யமுள்ள உம்முடைய குமாரனுன துரியோதனன், இவ்

பீஷ்மரால் அடிக்கப்பட்டு இப்பொழுது படுத்திருக்கிறான். விராட புத்திரர்களும் மகாரதர்களுமான சங்கனும் உத்தரனும் மிகப்பெரிதான காரியத்தைச் செய்தும் யமனுடைய வீட்டை அடைந்தார்கள். யுத்தத்தில் அதிகமான ஹிம்ஸையைச் செய்கின்ற வஸுதானன் விக்கிரமத்தை வெளியிட்டுத் துரோணரால் யமனுடைய வீட்டை யடையும்படி செய்யப்பட்டான். பாண்டவர்களுக்குள் மகாரதர்களான இவர்களும் இன்னும் மற்ற அநேக வீரர்களும் பராக்ரமத்தை வெளியிட்டுத் துரோணரால் கொல்லப்பட்டார்கள். நீர் என்னைக் கேட்டதை உரைக்கலானேன்" என்று கூறினான்.

நான்காவது அத்தியாயம்

(ஸஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு மாண்டவர்கள் போக மிருந்தவர்களுடைய பெயர்களைக் கூறுதல்)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! பிரதான புருஷர்களுடைய கூட்டமானது நாசம் செய்யப்பட்ட பிறகு, கர்வத்தை இழந்த என்னுடைய இந்தப் படையில் ஏதேனும் மிகுந்திருக்குமென்று நான் நினைக்கவில்லை. வீரர்களும் மகா வில்லாளிகளும் குருஶ்ரேஷ்டர்களுமான அந்தப் பீஷ்மரும் துரோணரும் என் நிமித்தமாகக் கொல்லப்பட்டார்கள் என்பதைக் கேட்டபிறகும் நான் ஜீவித்திருப்பதினால் யாது பயன்? எவனுடைய கைகளினுடைய பலமானது பதினாயிரம் யானைகளுடைய பலத்திற்குச் சமானமோ யுத்தத்தில் பிரகாசிக்கின்ற அந்த ராதேயன் கொல்லப்பட்டானென்பதை நான் பொறுக்கவில்லை. ஸஞ்சய! ஸைனியத்தில் உத்தம வீரர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதைச் சொல்லியதுபோலக் கொல்லப்படாமல் இந்தச் சேனையில்

வாறு கூறி, பிறகு பிராதாக்களுடன் சேர்ந்து கர்ணனை ஸேனாபதியாகச் செய்தான். அரசரே! மகாரதனும் மிக்க யுத்த மதமுள்ளவனுமான கர்ணன் சேனைத் தலைமையைப் பெற்று உரக்க ஸிம்மநாதம் செய்து கடும் போர் புரிந்தான். ஐயா! கர்ணன் எல்லா ஸ்ருஞ்சயர்களுக்கும் பாஞ்சாலர்களுக்கும் கேகயர்களுக்கும் விதேஹர்களுக்கும் பெரிய துன்பத்தைச் செய்தான். அவனுடைய வில்லினின்று பாணக்கூட்டங்கள் முந்தி (விடப்பட்ட பாணங்களின்) புங்கங்களைத் தொடர்ந்து வண்டினங்கள் போல நூற்றுக்கணக்காகத் தோன்றின. அவன் பலசாலிகளான பாஞ்சாலர்களையும் பாண்டவர்களையும் பீடித்து, ஆயிரக்கணக்கான யுத்தவீரர்களையுங் கொன்று அர்ஜுனனால் தள்ளப்பட்டான்" என்று கூறினான்.

உயிரோடிருப்பவர்களையும் எனக்குச் சொல். எவர்கள் உன்னால் இப்பொழுது சொல்லப்பட்டார்களோ, அவர்கள் மாண்ட பிறகு எவர்கள் ஜீவித்திருக்கிறார்களோ அவர்களனைவரும் மாண்டதற்குச் சமானரென்பதே என்னுடைய எண்ணம்'' என்றான்.

ஸஞ்சயன் சொல்லலானான்: ''வேந்தரே! எந்த வீரருக்குப் பிராம்மணோத்தமரான துரோணராலே ஆச்சரியகரமானவையும் ஒளியுள்ளவையும் [1] நான்குவிதமானவையும் திவ்யமானவையும் (தனுர்வேதத்தில்)சொல்லப்பட்டவையுமான மகாஸ்திரங்கள் உபதேசிக்கப்பட்டிருக்கின்றனவோ மஹாரதரும் பயன் தரும் முயற்சியுள்ளவரும் சுறுசுறுப்புள்ள கைகளையுடையவரும் உறுதியான ஆயுதங்களையுடையவரும் திடமான முஷ்டியையுடையவரும் திடமான அம்புகளையுடையவரும் வீர்யமுடையவரும் வேகமுடையவருமான அந்தத் துரோண புத்திரர் உமது நிமித்தமாக யுத்தம் செய்யும் விருப்பத்துடன் ஸன்னத்தராயிருக்கிறார். ஆநர்த்த தேசத்தில் வஸிக்கின்றவனும் ஹ்ருதிகனுடைய புத்திரனும் மகாரதனும் ஸாத்வர்களுள் ச்ரேஷ்டனும் அஸ்திர வித்தையில் ஸாமர்த்தியமுள்ளவனும் போஜனுமான கிருதவர்மா உமது நிமித்தமாக யுத்தஞ்செய்வதற்கு விருப்பத்துடன் ஸன்னத்தனாக இருக்கிறான். யுத்தத்தில் அசைக்கமுடியாதவனும், உம்மைச் சேர்ந்தவர்களுள் சிறந்த படைத்தலைவனும் பலசாலியும் தன் வார்த்தையை ஸத்யமாகச் செய்ய எண்ணங்கொண்டு தங்கையின் பிள்ளைகளான பாண்டவர்களை விட்டுவிட்டு யுத்தத்தில் ஸூதபுத்திரனுடைய தேஜோவதத்தை அஜாதசத்துருவின் முன்னிலையில் பிரதிஜ்ஞை செய்தவனும், எவ்விதத்திலும் ஜயிக்கமுடியாதவனும், இந்திரனுக்குச் சமமான வீர்யமுடையவனுமான சல்யன் உமது நிமித்தமாக யுத்தஞ்செய்வதில் விருப்பமுற்றவனாக இருக்கிறான். அரசரே! மகா பாகுபலமுள்ளவரும் பலவிதமான விசித்திர அஸ்திர யுத்தம் செய்கின்றவரும் சரத்வானுடைய புத்திரருமான கௌதமரும், மிகப் பெரிதும் ஆச்சரியமானதும் பாரத்தை ஸகிக்கக்கூடியதுமான தனுஸைக் கையில் தாங்கி யுத்தம்செய்ய விருப்பமுள்ளவராக ஸன்னத்தராயிருக்கின்றார். அரசரே! கெட்ட சூதாட்டத்தைச் செய்பவனும் கலகத்தில் பிரியமுள்ளவனுமான காந்தார ராஜன் தன் புத்திரர்களுடன் காந்தார முக்கியர்களோடும் யவனர்

---

[1] த்ருஷ்டம் = உறுதியாக அடிப்பது; தூரம் = தூரத்திலுள்ளதை அடிப்பது; ஸூக்ஷ்மம் = நுட்பமானதை அடிப்பது; சப்தவேதி = சப்தத்தின் வழியே சென்று அடிப்பது. 'சித்ரம், சுப்ரம், திவ்யம், விகிதம்' என்றும் கொள்ளலாம். ஆதி பர்வம் 520-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

களோடும், உமது நிமித்தமாக யுத்தம்செய்யும் விருப்பத்துடன் ஸன்னத்தனாக இருக்கின்றான். குருச்ரேஷ்டரே! மகாரதனான கேகய ராஜபுத்திரன் நல்ல குதிரைகளோடும் கொடியோடும் கூடிய ரதத்தின்மீதேறி உமது நிமித்தமாக யுத்தம் செய்யும் விருப்பத்துடன் இருக்கின்றான். அரசரே! அவ்வாறே, கௌரவ ச்ரேஷ்டனும் உம்முடைய குமாரனுமான புருமித்திரன் அக்னி போலவும் சூரியன்போலவும் நிறமுள்ள ரதத்தின்மீதேறி மேக மில்லாத ஆகாயத்தில் சூரியன் பிரகாசிப்பதுபோலப் பிரகாசித் துக்கொண்டு ஸன்னத்தனாக இருக்கின்றான். துரியோதனனும் ஸ்வர்ணாலங்காரத்துடன்கூடின ரதத்தோடு யுத்தத்தில் போர்புரி யப்போகின்றவனாக யானைக்கூட்டத்தின் நடுவில் நிற்கும் ஸிம்மம் போல விளங்குகிறான். புருஷச்ரேஷ்டனும் ஸ்வர்ணத்தினால் விசித் திரமான கவசம்பூண்டவனும் தாமரைமலர்போன்ற காந்தியுடைய வனுமான அந்தத் துரியோதனன், மன்னர்களின் நடுவில் சிறிது புகையுடைய நெருப்புப்போலவும் மேகங்களினிடையி லுள்ள சூரியன்போலவும் பிரகாசித்துக்கொண்டு விளங்குகிறான். அவ்வாறே, கத்தியையுங் கேடகத்தையுங் கையில் கொண்டவர் களும் வீரர்களும் உம்முடைய புதல்வர்களுமான ஸுஷேணனும் ஸத்யஸேனனும் சித்ரஸேனனோடு மனக்களிப்புடன் போர்புரிய விருப்பங்கொண்டு யுத்தத்தில் நிற்கின்றார்கள். பரதகுலத்திற் பிறந்தவரே! நரச்ரேஷ்டர்களான [1] ஹ்ரீநிஷேவன், உக்ராயுதன், ச்ருதவர்மா, ஜயன், சலன், ஸத்யவ்ரதன், துச்சலன் ஆகிய இவர் கள் சேனையுடன் நிற்கின்றார்கள். தன்னைச் சூரனென்று நினைப்பவ னும், ஒவ்வொரு யுத்தத்திலும் சத்துருக்களைக் கொல்லுகிறவன னும் சிறந்த தேராளியும் குதிரையுள்ளவனும் யானைகளோடும் காலாட்களோடும் (பகைவர்களை எதிர்த்துச்) செல்லுகின்றவனு மான கைதவ்யராஜகுமாரன் உமது நிமித்தமாக யுத்தம் செய்யும் விருப்பத்துடன் நிற்கிறான். புருஷச்ரேஷ்டர்களும் அடிக்கின்ற வர்களும் மானிகளும் ஸத்யஸந்தர்களுமான ச்ருதாயுவும் திருதா யுதனும் சித்ராங்கதனும் வீரனான சித்ரஸேனனும் யுத்தம் செய் யும் விருப்பத்துடன் நிற்கின்றார்கள். ஸத்யஸந்தனும் மகாத்மாவு மான கர்ண புத்திரனும் யுத்தம் செய்யும் விருப்பமுள்ளவனாக யுத்தத்தில் ஸன்னத்தனாக நிற்கிறான். அரசரே! உத்தமமான அஸ் திரங்களையுடையவர்களும் கைச்சுறுசுறுப்புள்ளவர்களும் பெரும் படையில் அதிகமான மனோதைரியத்தையும் வீரியத்தையும்

---

[1] இதனை விசேஷணமாகக் கொள்ளலாம். 'லஜ்ஜையுள்ளவன்' என்பது பொருள்.

உடையவர்களுமான மற்ற கர்ண புத்திரர்களிருவரும் உமது நிமித்தமாக யுத்தம் செய்யும் விருப்பத்துடன் நிற்கின்றூர்கள். மகாராஜரே! குருராஜனான துரியோதனன், முக்கியர்களும் யுத்த வீரர்களுள் தலைவர்களும் அளவற்ற பிரபாவமுள்ளவர்களுமான இவர்களோடும் மற்றவர்களோடும் சேர்ந்து யானைக்கூட்டத்தினிடையில் மஹேந்திரன்போல ஜயத்தின்பொருட்டு ஸன்னத்தனாக இருக்கிறான்" என்று சொன்னான்.

திருதராஷ்டிரன், "(இரண்டு கட்சியிலும்) எந்த ஸைனிகர்கள் பிழைத்திருக்கின்றார்களோ அவர்கள் உள்ளபடி உரைக்கப்பட்டார்கள். இதுவரையில் அடைந்திருக்கிற நன்மைகளால் இனி வரும் ஜயாபஜயங்களை நன்றாக அறிகிறேன்" என்று சொன்னான். அப்பொழுது அம்பிகா புத்ரனான திருதராஷ்டிரன், இவ்விதம் சொல்லிக்கொண்டே, தன் சேனையைப் பெரும்பான்மையாகச் சிறந்த வீரர்கள் கொல்லப்பட்டதும் சிறிதே மிகுந்திருப்பதுமாகக் கேட்டுச் சோகத்தினாலே பொறி கலங்கி மூர்ச்சையடைந்தான். மூர்ச்சையடைந்த திருதராஷ்டிரன், "ஸஞ்சய! ஒரு முகூர்த்த நேரம் பேசாமலிரு. ஐயா! மிகப் பெரிதான அப்பிரியத்தைக் கேட்டு என் மனம் வியாகுலமுற்றிருக்கிறது; மனம் மயங்குகிறது; அவயவங்களும் சோர்வடைகின்றன; நடப்பதற்கும் சக்தியற்றவனாக இருக்கிறேன்" என்று கூறினான். அம்பிகா புத்திரனும் அரசனுமான அந்தத் திருதராஷ்டிரன், இவ்விதமான வார்த்தையைச் சொல்லிவிட்டுப் பின்பு மனமயக்கமடைந்தான்" என்று கூறினார்.

ஐந்தாவது அத்தியாயம்

(திருதராஷ்டிரன் கர்ணனுடைய குணங்களை வர்ணித்துத் துன்பமுற்றது)

ஜனமேஜயர், "பிராம்மணோத்தமரே! யுத்தத்தில் கர்ணன் கொல்லப்பட்டதையும் தன் புத்ரர்கள் ஓடியதையுங் கேட்டு (வருந்திப் பிறகு) சிறிது மனம் ஆறுதலுற்ற அரசன் என்ன சொன்னான்? புத்ரர்களுடைய வியஸனத்தினால் உண்டாயிருக்கிறதும் மிகப் பெரிதுமான துயரத்தை அடைந்திருக்கிற அரசன் அக்காலத்தில் சொல்லியதை, கேட்கின்ற எனக்கு உரைக்கவேண்டும்" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

"மஹாராஜரே! அம்பிகா புத்திரனும் ஜனங்களுக்கு ஈசுவரனுமான திருதராஷ்டிரன், நம்பத்தகாததும் ஆச்சரியகரமான

தும், பிராணிகளுக்கு மோகத்தை உண்டுபண்ணுகிறதும், மேரு நகர்ந்ததுபோன்றதும், பயங்கரமானதும், மகாபுத்திமானான [1] சுக்கிரனுக்கு (நேர்ந்த) தகாததான புத்தி மயக்கம் போன்றதும், பயங்கரமான செய்கையுள்ள இந்திரனுக்குச் சத்துருக்களிடங்களினின்று உண்டான தோல்வி போன்றதும், மகா காந்தியையுடைய ஸூர்யன் ஆகாயத்தினின்று பூமியில் விழுவதுபோன்றதும், நீர் நிரம்பிய கடலினுடைய மனத்தினாலும் நினைக்கத்தகாத வறட்சி போன்றதும், பூமி, ஆகாயம், திக்குக்கள், ஜலங்கள் (இவைகளுடைய) ஆச்சரியகரமான ஸர்வநாசம் போன்றதும், புண்ணியம் பாபம் என்கிற இரு வினைகளுடைய பயனின்மைபோன்றதுமான கர்ணனுடைய விநாசத்தைக் கேட்டுப் புத்தியினால் நன்றாக ஆலோசித்து, கர்ணனுக்கு யுத்தத்தில் வதம் நேர்ந்திராது என்று எண்ணி, 'பிராணிகளுக்கு இவ்வாறு நேருதல் ஸஹஜமாதலால் ஸம்பவித்துமிருக்கலாம்' என்று கருதிச் சோகாக்னியினால் எரிக்கப்படுகின்றவனும் ஹ்ருதயத்தில் அக்னியைச் சேர்த்து ஊதப்படுகின்றவன் போன்றவனும் மிக்க தளர்ச்சியடைந்த அங்கங்களோடு கூடியவனும் பெருமூச்சு விடுகின்றவனும் தைன்யமுற்றவனும் 'ஹா ஹா' என்று சொல்லி மிகுந்த துயரத்தை அடைந்தவனுமாகிப் புலம்பலானான். "ஸஞ்சய! காளையானது (வேறு) காளையோடு சண்டை செய்வதில் பின்வாங்காததுபோலச் சத்துருவான மஹேந்திரனோடும் போர்புரிவதில் பின்வாங்காதவனும், வஜ்ரம்போன்ற சரீரமுடையவனும், யௌவனமுள்ளவனும், தன்னுடைய நாணொலியினாலும் தலத்வனியினாலும் சரமாரியின் சப்தத்தாலும் ரதங்களும் குதிரைகளும் மனிதர்களும் யானைகளும் யுத்தத்தில் நிலைபெறுமற் செய்பவனும், மகா பாகு பலமுள்ளவனும், சத்துருக் கூட்டங்களை அழிப்பவனும், (சத்துரு ஸம்ஹார விரதத்தினின்று) தவறாதவனும், தன்னை அடுத்துத் துரியோதனன் மகாரதர்களான பாண்டுபுத்திரர்களோடு வைரத்தைச் செய்தற்குக் காரணமானவனும், தேர்ப்பாகனுடைய புத்திரனும், வீரனும், ஸிம்மத்தையும் யானையையும் போன்ற பராக்ரமத்தையுடையவனும், எருதினுடைய திமில்போன்ற தோளையுடையவனும், விருஷபத்தினுடைய கண், நடை, ஸ்வரம்போன்ற கண்களையும் நடையையும் ஸ்வரத்தையுமுடையவனும், ரதிகர்களுள் ச்ரேஷ்டனும், புருஷர்களுள் உத்தமனும், ஸஹிக்கமுடியாத வல்

---

[1] 'பார்க்கவஸ்ய' என்பது மூலம்; 'பரசுராமருக்கு' என்றும் கொள்ளலாம்.

லமையுடையவனுமான கர்ணன் பார்த்தனால் எவ்வாறு யுத்தத்தில் கொல்லப்பட்டான்? தன் பாகுபலத்தால் கொழுப்புள்ளவனை எவன் எப்பொழுதும் அச்சுதனையும் தனஞ்சயனையும் ஒன்றுகூடின மற்ற விருஷ்ணிகளையும் லக்ஷியஞ் செய்யவில்லையோ எவன் 'யான் ஒருவனாகவே இருந்துகொண்டு சார்ங்கத்தையும் காண்டீவத்தையும் வில்லாகவுடையவர்களும் பகைவர்களால் ஜயிக்கமுடியாதவர்களும் ஒன்றுசேர்ந்திருப்பவர்களுமான கிருஷ்ணார்ஜுனர்களை யுத்தத்தில் திவ்ய ரதத்தினின்று தள்ளுவேன்' என்று, எப்பொழுதுமே மந்தனும் பேராசையினால் புத்திமயக்கமுள்ளவனும் சிந்தையினால் தலைகுனிந்திருப்பவனும் ராஜ்யத்தில் ஆவலுள்ளவனும் மனக்கவலையுற்றவனுமான துர்யோதனனைப் பார்த்துச் சொல்லிக்கொண்டிருந்தானோ, திவ்யாஸ்திரங்களை அறிந்தவனும் மகாதேஜஸை உடையவனும் கவசத்தையும் குண்டலங்களையும் அறுத்துக் கொடுத்தவனும் ஸூர்யனுடைய குமாரனும் ரதிகர்களுள் சிறப்புற்றவனும் புருஷச்ரேஷ்டனுமான எந்த ராதேயன் கழுகுஇறகுகள் பூண்டவையும் ஜ்வலிக்கின்றவையுமான அம்புகளாலே எல்லாக் காம்போஜர்களையும் கேகயர்களையும் அவந்தி தேசத்து வீரர்களையும் காந்தாரர்களையும் மத்ரகர்களையும் மாஸ்த்யர்களையும் திரிகர்த்தர்களையும் தங்கணர்களையும் சகர்களையும் பாஞ்சாலர்களையும் விதேஹர்களையும் குளிந்தர்களையும் காசிதேசத்து வீரர்களையும் கோஸலர்களையும் ஸும்மர்களையும் அங்கர்களையும் வங்கர்களையும் நிஷாதர்களையும் புண்டரர்களையும் கீகடர்களையும் வத்ஸர்களையும் களிங்கர்களையும் தரதர்களையும் அச்மகர்களையும் ரிஷிகர்களையும் சபரர்களையும் ஹாரர்களையும் ஹூணர்களையும் ப்ரஹூணர்களையும் ஸரளர்களையும் மிலேச்ச தேசத்துத் தலைவர்களையும் துர்க்கவாஸிகளையும் ஆடவிகர்களையும் அவ்வாறே எல்லாச் சத்துருக்களையும் யுத்தத்தில் ஜயித்துத் துர்யோதனனுடைய அபிவிருத்தியின் பொருட்டுக் கப்பங் கொடுக்கும்படி செய்வித்தானோ, உத்தமமான அஸ்திரங்களை அறிந்தவனும் ஸேனாரக்ஷகனுமான அந்தக் கர்ணன் யுத்தத்தில் வீர்யசாலிகளும் சூரர்களும் பகைவர்களுமான பாண்டவர்களால் எவ்வாறு கொல்லப்பட்டான்? தேவர்களில் மகேந்திரன் [1] சிறந்தவன். மனிதர்களில் கர்ணன் சிறந்தவன். உலகங்களில் சிறந்தவனான மூன்றாமவனை

---

[1] 'வ்ருஷ:' என்பது மூலம்; 'இந்திரன் மழையைப் பொழிபவன். கர்ணன் தனத்தைப் பொழிபவன்' என்றும் கொள்ளலாம்.

நாம் கேட்டதேயில்லை. குதிரைகளுள் உச்சைஸ்ரவம் சிறந்தது. அரசர்களுள் குபேரன் சிறந்தவன். தேவர்களுள் மகேந்திரன் சிறந்தவன். (சத்துருக்களை) அடிக்கும் வீரர்களுள் கர்ணன் சிறந்தவன். சூரர்களும் ஸமர்த்தர்களும் வீர்யசாலிகளுமான அரசர்களால் ஜயிக்கப்படாதவனும் துர்யோதனனுடைய அபிவிருத்திக்காகப் பூமி யனைத்தையும் ஜயித்தவனும் மகத தேசாதிபதியான ஜராஸந்தன் தன்னை யடுத்து ஸமாதான வசனத்தைச் சொல்லிக் கொண்டு சினேகிதர்களோடு யாதவர்களையும் கௌரவர்களையும் தவிரப் பூமியிலுள்ள எல்லா க்ஷத்திரியர்களையும் ஜயிக்கக் காரணமாயிருந்தவனுமான அப்படிப்பட்ட கர்ணன் த்வந்துவ யுத்தத்தில் ஸவ்யஸாசியினால் சொல்லப்பட்டானென்பதைக் கேட்டு ஸமுத்திரத்தில் உடைந்த மரக்கலம்போல நான் துக்க ஸமுத்திரத்தில் மூழ்கிவிட்டேன். ரதிகஸ்ரேஷ்டனான அந்தக் கர்ணன், த்வந்துவ யுத்தத்தில் கொல்லப்பட்டதைக் கேட்டு ஸமுத்திரத்தில் தெப்பமில்லாதவன்போல நான் துக்க ஸமுத்திரத்தில் மூழ்கிவிட்டேன். ஸஞ்சய! இவ்விதத் துக்கங்களாலும்யான் அழியாமலிருக்கிற காரணத்தினால் என் மனம் வஜ்ரத்தைக்காட்டிலும் மிக்க திடமானதென்றும் உடைக்கமுடியாதென்றும் எண்ணுகிறேன். ஸூத! ஞாதிகளுக்கும் ஸம்பந்திகளுக்கும் மித்திரர்களுக்கும் நேர்ந்த இவ்விதமான அபஜயத்தைக் கேட்டு என்னைத் தவிர வேறு எந்த மனிதன் உலகத்தில் உயிரை இழவாமலிருப்பான்? ஸஞ்சய! விஷத்தை யுண்டாவது தீயில் விழுந்தாவது மலைமீதிருந்து கீழே குதித்தாவது [1] மகாப்ரஸ்தானம் செய்தாவது ஜலத்தில் விழுந்தாவது [2] ப்ராயோபவேசஞ்செய்தாவது உயிரைவிட விரும்புகிறேன். பொறுக்கமுடியாத துயரங்களைப் பொறுப்பதற்குச் சக்தியற்றவனாயிருக்கிறேன்" என்று கூறினான்.

ஆறாவது அத்தியாயம்

(கர்ணனுடைய வதத்தைக் கேட்டுத் திருதராஷ்டிரன் கர்ண துர்யோதனனுடைய ஸ்துதி நிந்தைகளைக் கூறிக் கர்ணார்ஜுனர்களுடைய யுத்தத்தைச் சொல்லும்படி ஏவியது)

ஸஞ்சயன், "அரசே! ஐஸ்வர்யத்தினாலும் குலத்தினாலும் கீர்த்தியினாலும் தவத்தினாலும் வேதாத்யயனத்தினாலும் உன்மை இப்

---

[1] வடதிசை நோக்கித் திரும்பாமல் செல்வது [2] ஆகாரமின்றிப் படுத்து உயிர்துறப்பது.

பொழுது நல்லோர்கள் நகுஷகுமாரனை யயாதியைப்போல எண்ணுகின்றார்கள். நீர் வேதாத்யயனத்தில் மகரிஷிக்கு ஒப்பானவர். எண்ணிய காரியத்தைச் செய்துமுடித்தவர். மனத்தை நிலைநிறுத்திக்கொள்ளும்; துக்கத்தில் மனதைச் செலுத்தாதீர்'' என்று கூறினான். திருதராஷ்டிரன், ''ஸஞ்சய! யுத்தத்தில் ஸாலவிருக்ஷத்துக்கு ஒப்பான கர்ணன் கொல்லப்பட்டமையால், ஆண்மை பயனற்றது; அதனை நிந்திக்கவேண்டும். தெய்வமே சிறந்ததென நான் எண்ணுகிறேன். யுதிஷ்டிரனுடைய சேனையையும் பாஞ்சாலர்களுடைய தேர்க்கூட்டங்களையும் நாசஞ்செய்து சரமாரியினாலே எல்லாத் திக்குக்களையுந் தவிக்கச்செய்துவிட்டு வஜ்ரபாணியான இந்திரன் அஸுரர்களை மோகிக்கச்செய்வதுபோல யுத்தத்தில் பார்த்தர்களை மோகிக்கச் செய்த மகாரதனான அந்தக் கர்ணன் காற்றினால் முறிக்கப்பட்ட மரம்போல எவ்வாறு கொல்லப்பட்டுப் படுத்தான்? கடலுக்கு அக்கரையைக் காணமுடியாததுபோலத் துக்கத்தின் முடிவை யான் காணவில்லை. கர்ணனுடைய நாசத்தையும் பல்குனனுடைய ஜயத்தையுங் கேட்டு எனக்குக் கவலை மிக விருத்தியடைகிறது; மரிக்கவேண்டுமென்ற விருப்பமுண்டாகிறது. ஸஞ்சய! கர்ணனுடைய வதத்தை நம்பத்தகாததென்று நான் எண்ணுகிறேன். 'புருஷப் புலியான கர்ணன் கொல்லப்பட்டான்' என்பதைக் கேட்டும் வெடிக்காமலிருப்பதால் என் மனம் வஜ்ரம்போல உறுதியானது. 'கர்ணன் மாண்டான்' என்பதைக் கேட்டும மிகுந்த துன்பத்தை யடைந்து இவ்வுலகில் ஜீவித்திருக்கிறதினால் என் ஆயுள் முன்பே தேவதைகளாலே மிக நீண்டதாக ஏற்படுத்தப்பட்டதென்பது நிச்சயம். ஸஞ்சய! நண்பனை யிழந்தவனான என்னுடைய இந்த உயிர்வாழ்க்கையானது நிந்திக்கத்தக்கது. ஸஞ்சய! இப்பொழுது நான் நிந்திக்கப்பட்ட இவ்வித நிலைமையை அடைந்துவிட்டேன். மந்த புத்தியுடையவனான நான் எல்லோராலும் துக்கிக்கப்படத்தக்கவனாக எளிமையுற்றிருக்கப்போகிறேன். ஸூத! நானே முற்காலத்தில் எல்லா ஜனங்களாலும் மரியாதை செய்யப்பட்டிருந்து இப்பொழுது பகைவர்களால் அவமதிக்கப்பட்டு உயிருடனிருக்க எவ்வாறு சக்தியுள்ளவனாவேன்? ஸஞ்சய! பீஷ்ம துரோணர்களுடைய வதத்தினாலும் மகாத்மாவான கர்ணனுடைய நாசத்தினாலும் மிக்க பெருந்துயரத்தை அடைந்துவிட்டேனென்று எண்ணுகிறேன். ஸஞ்சய! யுத்தத்தில் ஸூதபுத்திரனான கர்ணன் கொல்லப்பட்டபிறகு நமது சேனை மிகுந்திருப்பதை யான் காண்கின்றேனில்லை. மகானான அந்தக் கர்ணனே என் குமாரர்களுக்கு ஒரு கரையாயிருந்தான். சூரனான அவன் அநேக

அம்புகளைப் பிரயோகித்தும் யுத்தத்தில் கொல்லப்பட்டானல்லனோ? புருஷ ச்ரேஷ்டனான அவனை விட்டு நான் பிழைத்திருத்தலில் யாது பயன்? வஜ்ராயுதத்தினுடைய விழுதலால் பிளக்கப்பட்ட மலையின் சிகரம்போலக் கர்ணன் நிச்சயமாகப் பாணங்களால் பீடிக்கப்பட்டுத் தேரினின்றும் கீழே விழுந்தான். மதங்கொண்ட யானையினால் தள்ளப்பட்ட மதங்கொண்ட யானைபோல அந்தக் கர்ணன் தள்ளப்பட்டும் ரத்தத்தால் நனைக்கப்பட்டும் நிச்சயமாக யுத்தபூமியை விளங்கும்படி செய்துகொண்டு படுத்திருக்கிறான். எவன் என் குமாரர்களுக்குப் பலமோ, எவனிடத்தினின்று பாண்டவர்களுக்குப் பயமோ, எல்லா வில்லாளிகளுக்கும் பிரதிநிதியான அந்தக் கர்ணன் அர்ஜுனனால் கொல்லப்பட்டான். வீரனும் சிறந்த வில்லாளியும் மித்திரர்களுக்கு அபயத்தைக் கொடுக்கின்றவனுமான அந்தக் கர்ணன் முற்காலத்தில் இந்திரனால் வீரனான பலாஸுரன் அடிக்கப்பட்டதுபோல அடிக்கப்பட்டுப் படுத்திருக்கிறான். ஸஞ்சய! முடவனுடைய வழிநடையும் தரித்திரனுடைய விருப்பமும் துரியோதனனுடைய பேராசையும் ஸமமானவைகள். ஒருவிதமாக நினைக்கப்பட்ட காரியம் வேறுவிதமாகிறது. ஆச்சரியம்! தெய்வம் பலமுள்ளது; காலமும் தாண்டத்தகாதது. ஸூத! ஓடுகின்றவனும் கிருபணனும் எளிமையுள்ளவனும் பராக்ரமத்தை இழந்தவனும் என் புத்திரனுமான துச்சாஸனன் கொல்லப்படாமலிருந்தானா? ஐயனே! யுத்தத்தில் துச்சாஸனன் அற்பர்கள் செய்யத்தக்க காரியங்களைச் செய்யாமலிருந்தானா? சூரர்களும் சிறப்புற்றவர்களுமான மற்ற க்ஷத்திரியர்கள்போலக் கொல்லப்படவில்லையா? எப்பொழுதும் 'யுத்தம் வேண்டாம்' என்கிற யுதிஷ்டிரனுடைய வசனத்தை, மூடன் பத்தியமான ஔஷதத்தை ஏற்றுக்கொள்ளாததுபோல, துரியோதனன் ஏற்றுக்கொள்ளவில்லை. சரதல்பத்தில் படுத்திருக்கின்ற மகாத்மாவான பீஷ்மரால் தண்ணீரை வேண்டப்பட்ட அர்ஜுனன் பூமியைப் பிளந்தான். அவனால் உண்டுபண்ணப்பட்ட நீர்த்தாரையைக்கண்டு மிக்கபுஜபலமுள்ள பீஷ்மர், 'ஐயா! பாண்டவர்களோடு ஸமாதானம் செய்துகொள். நீ தணிந்துகொள்வதினால் பகைமை தணியும். உங்களுடைய யுத்தம் என்னையே முடிவாகக்கொண்டு நிற்கட்டும். பாண்டு புத்திரர்களுடன் சேர்ந்து ஸகோதரபாவத்தோடு பூமியை அனுபவி' என்றார். அவருடைய வார்த்தையைக் கேளாமல் நிச்சயமாக என் புத்திரன் சோகத்தை அடைகிறான். தீர்க்கதரிசியான அவருடைய அந்த வார்த்தை இப்பொழுது பலித்துவிட்டது. ஸஞ்சய! மந்திரிகளை இழந்தும், புத்திரர்களை இழந்தும், சிறகு முறிந்த பக்ஷி

போலச் சூதாட்டத்தினாலே கஷ்டத்தை அடைந்துவிட்டேன். ஸஞ்சய! பறவையைப் பிடித்து இரண்டு சிறகுகளையும் முறித்து விளையாடுகின்ற குழந்தைகள் களிப்புடன் பறக்கவிடுகிறார்கள். சிறகு முறிந்தமையால் அந்தப் பக்ஷிக்குப் பறந்து செல்வது எவ்வாறு இயலாதோ அவ்வாறே நானும் சிறகு முறிந்த பக்ஷிபோலாகி க்ஷயத்தை அடைந்தவனும் எல்லாப் புருஷார்த்தங்களையும் இழந்தவனும் ஞாதிகளற்றவனும் பந்துக்களால் விடுபட்டவனுமாயிருக்கிறேன். எளியவனும் பகைவர்களுடைய வசத்தை அடைந்தவனுமாயிருக்கின்ற யான் எந்தத் திக்கை அடைவேன்?" என்று கூறினான்.

இவ்வாறு, திருதராஷ்டிரன் அதிக மனவருத்தத்தை அடைந்து புலம்பி மறுபடியும் சோகத்தால் மனக்கலக்கமுற்று ஸஞ்சயனைப்பார்த்துப் பின்வருமாறு கூறலானான். "பிரபுவும் யுத்தத்தில் [1] ஒரு காரியத்தின்பொருட்டு எல்லாக் காம்போஜர்களையும் அம்பஷ்டர்களையும் கேகயர்களையும் காந்தாரர்களையும் விதேஹர்களையும் ஜயித்தவனும் துரியோதனனுடைய பெருக்கத்தின் பொருட்டுப் பூமியை ஜயித்தவனுமான அந்தக் கர்ணன், பாகுபலமுள்ளவர்களும் சூரர்களுமான பாண்டவர்களால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டான். மகா வில்லாளியான அவன் கிரீடியினாலே யுத்தத்தில் கொல்லப்பட்ட பிறகு, எந்த வீரர்கள் நின்றார்கள்? ஸஞ்சய! அதனை எனக்கு நீ சொல்லவேண்டும். யுத்தத்தில் பாண்டவர்களால் கொல்லப்படாமல் ஒருவனாவது விடப்படவில்லையா? ஐயனே! எவ்வாறு வீரன் தள்ளப்பட்டானென்பது முன்பே உன்னால் சொல்லப்பட்டது. சிகண்டி சஸ்திரதாரிகளான எல்லா வீரர்களுள்ளும் உத்தமரும் தன்னோடு எதிர்த்துப் போர்புரிவதை அங்கீகரியாதவருமான பீஷ்மரைச் சிறந்த பாணங்களால் யுத்தத்தில் தள்ளினான். ஸஞ்சய! அவ்வாறே, 'அச்வத்தாமா கொல்லப்பட்டான்' என்கிற தர்மராஜனுடைய வார்த்தையைக் கேட்டு யுத்தத்தில் எல்லா ஆயுதங்களையும் கீழே வைத்தவரும் யோகநிஷ்டையிலிருந்தவரும் சிறந்த வில்லாளியும் அனேக அம்புகளால் நான்கு பக்கங்களிலும் நிறைக்கப்பட்டவருமான துரோணர் துருபத புத்திரனான திருஷ்டத்யும்னனாலே வாளினை யெடுத்துக் கொல்லப்பட்டார். பீஷ்மரும் துரோணரும் விசேஷித்துத் துன்பம் விளைவிக்கக்கூடிய ஸமயத்தில் கபடத்தினாலே கொல்லப்பட்டார்களென்பதைக் கேட்டேன். யுத்த முறைப்படி யுத்தஞ் செய்கின்ற வஜ்ரபாணியான இந்திரனும் யுத்தத்தில் பீஷ்மர்

---

[1] வன பர்வம் 254-255-ம் அத்தியாயங்களிற் காண்க.

துரோணர் இருவரையும் கொல்வதற்குத் திறமையுள்ளவனுகான். அது ஸத்தியமென்றே நான் உனக்குச் சொல்லுகிறேன். உத்தமமான அனேக அஸ்திரங்களைப் பிரயோகிக்கின்றவனும் இந்திரனுக்கொப்பானவனும் வீரனுமான கர்ணனை யுத்தத்தில் மிருத்யு எவ்வாறு தொட்டான்? இந்திரன் எவனுடைய குண்டலங்களைப் பெற்றுக்கொண்டு மின்னலைப் போலப் பிரகாசிக்கின்றதும் தெய்வத்தன்மையுள்ளதும் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டதும் பகைவர்களைக் கொல்லுகின்றதுமான சக்தியாயுதத்தைக் கொடுத்தானே, ஸ்வர்ணமயமான பூஷணத்துடன் கூடியதும் ஸர்ப்பத்தினுடைய முகம்போன்ற முகமுள்ளதும் தேவ ஸம்பந்தம் பெற்றதும் யுத்தங்களில் பகைவர்களை அழிக்கின்றதும் இறகுகள் பூண்டதும் கூருள்ளதுமான அம்பானது எவனுடைய தூணியில் படுத்துக்கொண்டிருந்ததோ, பீஷ்மர் துரோணர் முதலான மகாரதர்களான வீரர்களை எவன் அலக்ஷியஞ்செய்து ஜமதக்னி குமாரராகிய பரசுராமரிடத்தினின்று மகா கோரமான பிரம்மாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டானோ, மகா பாகுபலமுள்ளவனுன எவன் துரோணர் முதலானவர்கள் பாணங்களால் பீடிக்கப்பட்டுப் புறங்காட்டி ஓடுவதைக் கண்டு ஸௌபத்திரா புத்திரனுன அபிமன்யுவினுடைய வில்லைக் கூர்மையான அம்புகளால் அறுத்தானோ, எவன் பதினுயிரம் யானைபலமுள்ளவனும் வஜ்ராயுதத்தின் வேகம்போன்ற வேகத்தையுடையவனும் (ஸம்ஹார விரதத்தினின்று) தவருதவனுமான பீமஸேனனை விரைவாக ரதத்தை யிழந்தவனுகச்செய்து பரிஹஸித்தானோ, எவன் வணங்கின கணுக்களுள்ள அம்புகளாலே ஸஹதேவனை ஜயித்து அவனை ரதத்தை இழந்தவனுகச் செய்து கருணையினுலும் தர்ம சிந்தையினுலும் அவனைக் கொல்லாமல் விட்டானோ, எவன் ஆயிரக்கணக்கான மாயைகளை வெளியிடுகின்றவனும் ஜயத்தில் விருப்பமுற்றவனும் ராக்ஷஸ ச்ரேஷ்டனுமான கடோத்கசனை இந்திரனுல் கொடுக்கப்பட்ட சக்தியினுல் கொன்ருனோ, எவனுடைய யுத்தத்தில் இத்தனை நாள் வரையில் வீரனுன தனஞ்சயன் பயந்தவனுக த்வந்துவ யுத்தம் செய்ய அணுகாமலிருந்தானோ, அவன் எவ்வாறு யுத்தத்தில் கொல்லப்பட்டான்? எப்பொழுதும் 'வேறு பக்கத்தில் யுத்தத்திற்கு அழைக்கிற ஸம்சப்தகர்களைக் கொன்றுவிட்டுப் பிறகு யுத்தத்தில் விகர்த்தன குமாரனுன கர்ணனை யான் கொல்வேன்' என்று சொல்லிக்கொண்டு பார்த்தன் யுத்தத்தில் எந்த ஸூதபுத்திரனைவிட்டு விலகினுனோ அப்படிப்பட்ட பகைவீரர்களைக் கொல்லுகின்ற வீரனுன கர்ணன் பார்த்தனுல் எவ்வாறு கொல்லப்பட்டான்? ரதமானது ஒடியாமலும் வில்

சிதறாமலும் அஸ்திரங்கள் நாசமடையாமலும் இருந்தால், அந்தக் கர்ணன் எவ்வாறு பகைவர்களால் கொல்லப்படுவான்? யுத்தத்தில் பெரிதான வில்லைச் சுழற்றிக்கொண்டு கோரமான அம்புகளையும் திவ்யாஸ்திரங்களையும் பிரயோகிக்கின்றவனும் புருஷஸ்ரேஷ்டனும் புலிபோல வேகமுள்ளவனுமான கர்ணனை யுத்தத்தில் ஜயிப்பதற்கு எவன் வல்லமையுள்ளவன்? 'கர்ணன் கொல்லப்பட்டான்' என்று என்னிடம் சொல்லுவதால் நிச்சயமாகவே அவன் வில்லாவது ஒடிக்கப்பட்டிருக்கவேண்டும்; அல்லது ரதமாவது பூமியில் அழுந்தியிருத்தல்வேண்டும்; அல்லது அஸ்திரங்களாவது நாசமடைந்திருக்கவேண்டும். அந்தக் கர்ணனுடைய நாசத்தில் வேறு காரணத்தை யான் காணவில்லை. 'யான் எவ்வளவு காலம் பல்குனனைக் கொல்லவில்லையோ அவ்வளவு காலம்வரையில் யான் கால்களை அலம்புகிறதில்லை' என்கிற மகா கோரமான வ்ரதமானது மகாத்மாவான எந்தக் கர்ணனுக்கு இருந்ததோ, புருஷஸ்ரேஷ்டனும் தர்மராஜனுமான யுதிஷ்டிரன் யுத்தத்தில் எவனிடத்தினின்று பயந்து பதின்மூன்று வருஷ காலம் எப்பொழுதுமே தூக்கமற்றிருந்தானோ, மகாத்மாவும் வீர்யமுடையவனுமான எவனுடைய பலத்தை ஆதாரமாகக்கொண்டு என் புத்திரன் பாண்டவர்களுடைய மனைவியான திரௌபதியைப் பலாத்காரமாகச் சபையின்கண் இழுத்துவந்தானோ, (அதிலும்) அந்தச் சபையின் மத்தியில் கௌரவர்களுடைய எதிரில் பாண்டவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பாஞ்சால ராஜகுமாரியான திரௌபதியை, 'தாஸ பாரியை' என்று சொன்னானோ, (மேலும்) ஸூத புத்திரனான எவன் பாஞ்சாலியை நோக்கி, 'கிருஷ்ணையே! உனக்குப் பர்த்தாக்களில்லை; எல்லோரும் எள்ளுப் பதருக்குச் சமானர்கள். உத்தமமான தேக காந்தியுடையவளே! வேறு கணவனை அடைவாயாக' என்று இவ்வாறு முற்காலத்தில் குரூரமான வார்த்தைகளைச் சபையில் ரோஷத்தினால் (திரௌபதியைக்) கேட்கும்படி செய்வித்தானோ அப்படிப்பட்ட கர்ணன் பகைவர்களால் எவ்வாறு கொல்லப்பட்டான்? 'துரியோதன! யுத்தத்தைப் புகழ்கின்ற பீஷ்மராவது அல்லது யுத்தத்தில் கெட்ட மதங்கொண்ட துரோணராவது பக்ஷபாதத்தால் குந்தி புத்திரர்களைக் கொல்லாமற்போவார்களானால் பார்த்தர்களனைவரையும் யான் கொல்வேன்; உனக்கு மனக்கவலை வேண்டாம். அழகிய சந்தனத்தால் பூசப்பட்டதும் எதிர்த்துச் செல்லுகின்றதுமான என்னுடைய பாணத்திற்குக் காண்டீவமாவது அழிவற்ற பெரிய தூணிகளாவது என்ன செய்யும்?' (என்று எவன் வீரவாதம் செய்து

கொண்டிருந்தானே) நிச்சயமாக விருஷபத்தினுடைய திமில் போன்ற தோள்களையுடைய அந்தக் கர்ணன் அர்ஜுனனால் எவ்வாறு கொல்லப்பட்டான்? ஸஞ்சய! எவன் காண்டீவத்தினின்று விடுபட்ட அம்புகளுடைய கொடிய ஸ்பரிசத்தை ஆலோசியாமல், 'திரௌபதீ! நீ பர்த்தாக்களை இழந்துவிட்டாய்' என்று சொல்லிக்கொண்டு பார்த்தர்களைப் பார்த்தானோ, எவனுக்குத் தன் பாகுபலத்தைப்பற்றிப் புத்திரர்களுடனும் ஜனார்த்தனனுடனுங் கூடின பார்த்தனிடத்தினின்று க்ஷணகாலங்கூடப் பயமுண்டாக வில்லையோ அந்தக் கர்ணனை, யுத்தத்தில் விரைவாக எதிர்த்துவருகின்ற இந்திரனுடன் கூடின தேவர்களாலும் கொல்லமுடியாதென்று எண்ணுகிறேன். அவ்வாறிருக்க, பாண்டவர்களால் கொல்லமுடியாதென்பதில் யாது ஸந்தேகமிருக்கின்றது? நாண்கயிற்றை உருவுகின்றவனும் இரண்டு கையுறைகளையுந் தரிக்கின்றவனும் அதிரத புத்திரனுமான கர்ணனுக்கெதிரில் ஒருவனாலும் நிற்க இயலாது. பூமியானது சூரிய சந்திர அக்னிகளுடைய ஒளிகளால் விடுபட்டதானாலும் ஆகும்; புருஷச்ரேஷ்டனும் யுத்தங்களில் புறங்கொடாதவனுமான கர்ணனுடைய வதம் நேராது. கெட்ட புத்தியுடையவனும் மந்தனுமான துரியோதனன், துணைவனான கர்ணனாலும் பிராதாவான துச்சாஸனனாலும் வாஸுதேவனை அவமதிப்பதை உசிதமென்று எண்ணினான். எருதின் திமில்போன்ற தோள்களையுடையவனான கர்ணன் கொல்லப்பட்டதையும் துச்சாஸனன் கொல்லப்பட்டதையும் பார்த்து நிச்சயமாக அந்த என் புத்திரன் மன வருத்தமடைந்திருப்பானென்று எண்ணுகிறேன். துவந்துவ யுத்தத்தில் ஸவ்யஸாசியினால் கொல்லப்பட்ட சூரிய குமாரனான கர்ணனையும் வெற்றிபெற்றிருக்கின்றவர்களான பாண்டவர்களையுங் கண்டு துரியோதனன் யாது மொழிந்தனன்? மகாரதர்களால் யுத்தரங்கத்தில் கொல்லப்பட்ட துர்மர்ஷணனையும் விருஷஸேனனையும் மகாரதர்களால் துகைக்கப்பட்டு வதஞ்செய்யப்படுகின்ற சேனையையும் புறங்காட்டி ஓடுவதில் நோக்கமுள்ளவர்களான மன்னர்களையும் ஓடுகின்ற ரதிகர்களையுங் கண்டு என் புத்திரன் துன்பமடைந்திருப்பானென்று எண்ணுகிறேன். சிக்ஷிக்கத்தகாதவனும் அகங்காரமுள்ளவனும் கெட்ட புத்தியுள்ளவனும் இந்திரியங்களை அடக்காதவனுமான துரியோதனன் ஊக்கமிழந்திருக்கின்ற சேனையைக் கண்டு என்ன சொன்னான்? தானாகவே பெரும்பகையை உண்டு பண்ணிக்கொண்டு யுத்தத்தில் பெரும்பான்மையாக அழிந்து போயிருக்கின்ற சேனைகளையுடைய மித்திரவர்க்கங்களாலே பல

வாறு தடுக்கப்பட்டும் கேளாத துரியோதனன் அப்பொழுது யாது கூறினான்? யுத்தத்தில் பீமஸேனனால் பிராதாவான துச்சாஸனன் கொல்லப்பட்டு அவனது இரத்தமானது குடிக்கப்பட்டதைப் பார்த்த துரியோதனன் என்ன சொன்னான்? காந்தார ராஜனான சகுனியுடன் சேர்ந்து துரியோதனன், 'யுத்தத்தில் கர்ணன் அர்ஜுனனைக் கொல்வான்' என்று சபையின்கண் கூறினானல்லனோ? அத்தகைய கர்ணன் கொல்லப்பட்ட பிறகு துரியோதனன் யாது கூறினான்? ஐயா! ஸுபலனுடைய குமாரனான சகுனி முற்காலத்தில் சூதாடிப் பாண்டவர்களை வஞ்சித்து ஸந்தோஷமடைந்தானல்லனோ; அந்தச் சகுனி கர்ணன் மாண்டபிறகு யாது மொழிந்தான்? பெரிய வில்லைக் கையில் தாங்கியவனும் ஸாத்வதர்களுள் மகாரதனும் ஹ்ருதிகனுடைய குமாரனுமான கிருதவர்மா கர்ணன் கொல்லப்பட்டதைக் கண்டு யாது கூறினான்? ஸஞ்சய! தனுர் வேதத்தைக்கற்க விரும்புகின்ற ப்ராம்மண க்ஷத்ரிய வைஸ்யர்கள் எவருடைய சிக்ஷையை விரும்புகிறார்களோ, புத்திமானும் யௌவனமுள்ளவரும் நல்ல வடிவத்தையுடையவரும் பார்ப்பதற்கு இனியதோற்றமுள்ளவரும் மிக்க கீர்த்தி பொருந்தியவருமான அந்த அஸ்வத்தாமா கர்ணன் கொல்லப்பட்டபிறகு யாது மொழிந்தார்? ஐயா! தனுர்வேதத்தில் ஆசாரியரும் ரதிகஸ்ரேஷ்டரும் கௌதம குலத்தவரும் சரத்வானுடைய குமாரருமான அந்தக் கிருபாசாரியர் கர்ணன் மாண்டபிறகு யாது மொழிந்தனர்? மத்ரதேசத்துக்கு அரசனும் சிறந்த வில்லாளியும் யுத்தத்தில் ஸமர்த்தனும் ஸாரத்யம் செய்வதில் ரதிகர்களுள் சிறந்தவனும் பலசாலியும் [1] ஸௌவீர தேசாதிபதியுமான சல்யன் கர்ணன் கொல்லப்பட்டதைக் கண்டு என்ன சொன்னான்? யானைகளைப்போன்ற ஜயிக்கமுடியாதவர்களான எல்லா யுத்தவீரர்களும் கர்ணன் கொல்லப்பட்டதைக் கண்டு யாது சொன்னார்கள்? ஸஞ்சய! பூமண்டலத்திலுள்ள எந்த அரசர்கள் யுத்தஞ்செய்வதற்காக வந்துசேர்ந்தார்களோ அவர்கள் வைகர்த்தனன் கொல்லப்பட்டதைக் கண்டு யாது உரைத்தனர்? ஸஞ்சய! வீரரும் ரதிகர்களுள் சிறந்தவரும் புருஷஸ்ரேஷ்டருமான துரோணர் கொல்லப்பட்டபிறகு, பிரிக்கப்பட்டிருக்கிற ஸைனியங்களுக்கு எவர்கள் தலைவர்களானார்கள்? ஸஞ்சய! ரதிகர்களுள் ஸ்ரேஷ்டனும் மத்ர தேசத்தரசனுமான சல்யன் கர்ணனுக்கு ஸாரத்தியம்செய்யும் விஷயத்தில் எவ்வாறு ஏற்படுத்தப்பட்டான்? அதனை எனக்குச்சொல்வாயாக. யுத்தஞ்செய்கின்றவீரனான ஸூத

1 'சிறந்த வீரனும்' என்றும் கொள்ளலாம்.

புத்திரனுடைய வலப் பக்கத்திலுள்ள படையை எவர்கள் காப் பாற்றினார்கள்? கர்ணனுடைய இடப்பக்கத்திலும் பின்புறத்திலு முள்ள படையை எவர்கள் பாதுகாத்தார்கள்? எந்தச் சூரர்கள் கர்ணனை விட்டுவிலகாமல் இருந்தார்கள்? எந்த அற்பர்கள் அவனை விட்டு ஓடினார்கள்? நீங்கள் ஒன்றுசேர்ந்திருக்கும்பொழுது மகா ரதனான கர்ணன் எவ்வாறு கொல்லப்பட்டான்? மகாரதர்களும் வீரர்களுமான பாண்டவர்கள் தாங்களாகவே மேகங்கள் மழை யைப் பொழிவதுபோலச் சரமாரிகளைப் பொழிந்துகொண்டு எவ் வாறு பகைவர்களை எதிர்த்தார்கள்? ஸஞ்சய! ஸர்ப்ப முகமுள்ள தும் தேவஸம்பந்தம்பெற்றதும் மகிமைதாங்கியபர்ணங்களுள் சிறந் ததுமான அந்தக் கர்ணனுடைய நாகாஸ்திரமானது அப்பொழுது எவ்வாறு பயனற்றதாயிற்று? அதனை எனக்குச் சொல்வாயாக. ஸஞ்சய! உத்தமனான கர்ணன் கொல்லப்பட்டபிறகு, மேன்மை யையிழந்த என்னுடைய சேனையானது மிச்சமிருக்குமென்று நான் எண்ணவில்லை. வீரர்களும் சிறந்த வில்லாளிகளும் என் நிமித்தம் உயிரைவிடத் துணிந்தவர்களுமான அந்தப் பீஷ்மரும் துரோண ரும் கொல்லப்பட்டார்களென்பதைக் கேட்டு யான் ஜீவித்திருப்ப தினால் யாது பயன்? எவனுடைய இரு கைகளுடைய பலமும் பதினாயிரம் யானைகளுடைய பலத்திற்குச் சமமானதோ அப்படிப் பட்ட கர்ணன் பாண்டவர்களால் கொல்லப்பட்டானென்பதை நினைத்து நினைத்து நான் ஸஹிக்கவில்லை. ஸஞ்சய! துரோணர் கொல்லப்பட்டவுடனே, புருஷச்ரேஷ்டர்களான கௌரவர்களுக் குப் பகைவர்களோடு யுத்தத்தில் எது நடந்ததோ அதனை எனக் குச் சொல்லவேண்டும். எவ்வாறு கர்ணன் குந்தி புத்திரர்களுடன் யுத்தத்திற்காக எதிர்த்தான்? எவ்வாறு பகைவர்களைக் கொன்று தானும் உயிரை இழந்தான்? அந்த விஷயத்தை எனக்குக் கூறக் கடவாய்'' என்று சொன்னான்.

ஏழாவது அத்தியாயம்

(அச்வத்தாமாவினுடைய சொற்படி துரியோதனன் கர்ணனை ஸேனாபதி ஸ்தானத்தில் அபிஷேகம் செய்ததும் கர்ணன் யுத்தத்தின் பொருட்டுச் சேனையை வகுத்ததும்)

ஸஞ்சயன், "பாரதரே! மஹாராஜரே! அந்தத் தினத்தில் சிறந்த வில்லாளியான துரோணர் கொல்லப்படவும், மகாரதரான துரோணபுத்திரருடையஸங்கல்பம்பயனற்றதாகச்செய்யப்படவும்,

கௌரவர்களுடைய ஸேனாஸமுத்திரமும் ஓடவும், பார்த்தன் தன்னுடைய சேனையை அணிவகுத்து ஸகோதரர்களால் சூழப்பெற்று நின்றான். பாரதரிற் சிறந்தவரே! உமது புத்திரனான துரியோதனன், அர்ஜுனன் அவ்வாறு யுத்தத்திற்கு ஸன்னத்தனாக நிற்பதை அறிந்தும், ஓடுகின்ற தன் படையையுங் கண்டும், பௌருஷத்தினாலே தன் சேனைகளைத் தடுத்தான். பாரதரே! அப்பொழுது, துரியோதனன், தன் புஜபலத்தை ஆதாரமாகக்கொண்டு தன்னுடைய சேனையை நிலைநிறுத்தி ஜயத்தை அடைந்தவர்களும் முயற்சியுடையவர்களும் ஸந்தோஷமுடையவர்களும் பகைவர்களுமான பாண்டவர்களுடன் நெடுங்காலம் போர்புரிந்து ஸந்தியா காலம் வந்தவுடனே யுத்தத்தை நிறுத்தினான். சிறந்த பலமுள்ளதும் கோரரூபமுள்ளதும் அதிகமான பசி தாகங்களுள்ளதும் துரோணருடைய வதத்தினால் அதிக ச்ரமத்தையடைந்ததுமான அந்தக் கௌரவசேனையை (யுத்தத்தினின்று விலக்கி)ப் பாசறையை அடையச் செய்தான். யுத்தத்தில் கோரமான காரியத்தைச் செய்து தீனஸ்வரூபத்தை யடைந்த அந்தச் சேனை இருப்பிடத்தை அடைந்து அன்றிரவு முழுவதும் இளைப்பாறி ஸந்தோஷமடைந்ததாகியது. கௌரவர்கள் ஒன்றுகூடிச் சேனைகளை (யுத்தத்தை விட்டு ஒழியும்படி செய்து) தமது பாசறையை அடைந்து ஒருவரோடொருவர் மந்திராலோசனை செய்தார்கள். அவர்கள் ஸுகமான சயனங்களில் தேவர்கள் வீற்றிருப்பதுபோல உத்தமமான விரிப்புக்களுள்ள சிறந்த கட்டில்களிலும் உத்தமமான ஆஸனங்களிலும் வீற்றிருந்தார்கள்.

பிறகு, துரியோதனராஜன், அந்த மகா வில்லாளிகளை அழைத்து மிக்க இன்பமான நல்வார்த்தையினாலே அச் சமயத்திற்கேற்பச் சொல்லலானான். 'புத்திமான்களுள் சிறந்தவர்களே! இவ்வாறு இக்காரியம் நடந்துபோனபிறகு எது முக்கியமாக இனிச் செய்யத்தக்கதோ அதனை நீங்களனைவரும் விளம்பமின்றிச் சொல்லுங்கள்' என்று சொன்னான். ராஜாவான துரியோதனனால் இவ்வாறு சொல்லப்பட்டவுடனே, அப்பொழுது ஸிம்மாஸனத்தை அடைந்திருக்கின்ற புருஷச்ரேஷ்டர்கள் யுத்தம் செய்வதில் நோக்கமுள்ளவர்களாகப் பற்பலவிதமான சேஷ்டைகளைச் செய்தார்கள். மேதாவியும் வாக்கியங்களை அறிந்தவரும் ஆசாரிய புத்திரருமான அச்வத்தாமா, யுத்தத்தில் பிராணன்களை ஹோமம்செய்ய எண்ணங்கொண்டவர்களான அந்த அரசர்களுடைய இங்கிதங்களைக் கண்டு, பாலஸூர்யனுக்கு ஸமமான காந்தியுள்ள துரியோதன ராஜனுடைய முகத்தை நன்றாக ஏறிட்டுப்பார்த்துப் பின்வரும் வாக்கியத்தை உரைக்கலானார்.

'ஸ்வாமி பக்தி, தேசகால முதலானவைகளுடைய ஆனுகூல்யம், அவ்வாறே பலம், நீதி ஆகிய (இவைகள்) அர்த்தஸாதகங்களான உபாயங்களென்று பண்டிதர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளோ தெய்வபலத்தைச் சார்ந்திருக்கின்றன. நம்முடைய (கக்ஷியில்) உலகத்தில் ஒப்பற்ற வீரர்களும் தேவர்களுக்கு ஒப்பானவர்களும் மகாரதர்களும் நீதியுள்ளவர்களும் முயற்சியுள்ளவர்களும் ஸமர்த்தர்களும் ப்ரீதியுள்ளவர்களுமாயிருந்தவர்களனைவரும் கொல்லப்பட்டார்கள். வெற்றியைப்பற்றி நாம் ஒருபோதும் வெறுப்படையத்தகாது. எல்லாக் காரியங்களும் நன்றாகப் ப்ரயோகிக்கப்பட்டால் தெய்வமும் அனுகூலமாக்கப்படுகிறது. பாரத! அப்படிப்பட்ட நாம் மனிதர்களுள் உத்தமனும் யுத்தவீரர்களுக்குரிய எல்லாக் குணங்களுமுள்ளவனுமான கர்ணனையே ஸேனாதிபதியினுடைய ஸ்தானத்தில் அபிஷேகஞ் செய்விப்போம். அவனைச் சேனாதிபதியாக்கிக்கொண்டு பகைவர்களைக் கொல்லுவோம். இந்தக் கர்ணனே அதிக பலசாலீ; சூரன்; அஸ்திரத்தில் தேர்ச்சியுள்ளவன்; யுத்தத்தில் கொடிய மதங்கொண்டவன்; யமனைப்போலத் தாங்கமுடியாதவன்; யுத்தத்தில் பகைவர்களை வெல்வதற்குச் சக்தியுள்ளவன்' என்றார். மகாராஜரே! ஆசார்ய புத்திரரிடத்தினின்று இந்த வார்த்தையைக் கேட்டு, உமது குமாரனான துரியோதனன் அப்பொழுது மனத்தில் மிக்க ப்ரீதியை அடைந்தான். அப்பொழுது அவன் பீஷ்மரும் துரோணரும் கொல்லப்பட்டபிறகு, கர்ணன் பாண்டவர்களை ஜயிக்கப்போகிறானென்று கர்ணனிடத்தில் அதிக ஆசை வைத்தான். பாரதரே! பிறகு, அவன் அந்த ஆசையை மனத்தில் வைத்துக்கொண்டு சமாதானமடைந்து. இனிமையோடும் மரியாதையோடும் கூடியதும் யதார்த்தமானதும் தனக்கு நன்மையானதும் மங்களகரமானதும் ப்ரியமானதுமான அஸ்வத்தாமாவினுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, மனமகிழ்ச்சி அடைந்தான். மஹாராஜரே! துரியோதனன், ப்ரியமானதும் மரியாதையோடு கூடியதும் உண்மையானதும் தனக்கு நன்மை பயக்கக்கூடியதுமான அஸ்வத்தாமாவினுடைய வார்த்தையைக் கேட்டுத் தன் மனத்தை நிலைநிறுத்திக்கொண்டும் புஜபலத்தை ஆதாரமாகக்கொண்டும் ராதேயனை நோக்கி, 'கர்ண! உன்னுடைய வீர்யத்தையும் என்னிடத்திலுள்ள உத்தமமான நேசத்தையும் அறிவேன். மிக்க தோள்வலியமைந்தவனே! அவ்வாறிருந்தும், உன்னை நோக்கி ஹிதமான வார்த்தையைச் சொல்லப்போகிறேன். வீரனே! கேட்டுவிட்டு உன் மனத்துக்கு

ஏது ருசிக்கிறதோ அதனை இஷ்டப்படி செய். நீயோ மிகவுங் கற்றறிந்தவன்; எனக்கு எப்பொழுதும் உத்தமமான கதி. என்னுடைய ஸேனாதிபதிகளும் அதிரதர்களுமாயிருந்த பீஷ்மரும் துரோணரும் மாண்டனர். அவ்விருவரைக்காட்டிலும் அதிக பலமுள்ளவனான நீ ஸேனாபதியாகவேண்டும். சிறந்த வில்லாளிகளான அவ்விருவரும் முதியவர்கள்; தனஞ்சயனிடத்தில் பற்றுதலுள்ளவர்கள். ராதேய! உன் வார்த்தையினால் வீரர்களான அவ்விருவர்களும் என்னால் நன்கு மதிக்கப்பட்டார்கள். பீஷ்மர் பாட்டனாராயிருந்தமைபற்றி அவரால் பாண்டவர்கள் மகாயுத்தத்தில் பத்து நாள் முழுமையும் ரக்ஷிக்கப்பட்டார்கள். ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டபோது, பிதாமகரான பீஷ்மர் மகாயுத்தத்தில் சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு பல்குனனால் கொல்லப்பட்டார். ஆண்மையிற் சிறந்தவனே! மகாவில்லாளியான அந்தப் பீஷ்மர் கொல்லப்பட்டு அவ்விதமான [1] சரதல்பத்திற் படுத்திருக்கையில், உன்னுடையசொற்படி துரோணர் தலைவரானார். அந்தத் துரோணராலும் பார்த்தர்கள் சிஷ்யர்களாயிருக்கின்ற காரணத்தால் ரக்ஷிக்கப்பட்டார்களென்பது என்னுடைய எண்ணம். பிராயமுதிர்ந்தவரான அந்தத் துரோணரும் திருஷ்டத்யும்னனால் சீக்கிரமாகக் கொல்லப்பட்டார். ஒப்பற்றவலிமையுள்ளவனே! பிரதானர்களான அவ்விருவரும் கொல்லப்பட்டபிறகு, நான் என்ன ஆலோசித்தபோதிலும் யுத்தத்தில் உனக்குச் சமமாக வேறொரு போர்வீரனைக் காணவில்லை. நீ ஒருவனே நமக்கு வெற்றியைக் கொடுப்பதில் திறமையுள்ளவன்; ஸந்தேகமில்லை. முந்தியும் இடையிலும் பிந்தியும் உன்னால் நன்மையே செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நீ பாரத்தைத் தாங்கும் காளைபோல யுத்தத்தில் பாரத்தைத் தாங்குவதற்குத் தகுந்தவனாயிருக்கிறாய். நீ உன்னை நீயாகவே ஸேனாபதி ஸ்தானத்தில் பட்டாபிஷேகஞ் செய்வித்துக்கொள். அழிவற்றவரும் பிரபுவுமான ஸுப்ரமண்யர் தேவதைகளுக்கு ஸேனாபதியாயிருப்பதுபோல இந்தக் கௌரவ சேனைக்கு நீ பதியாயிருந்து வகிக்கவேண்டும். மஹேந்திரன் அஸுரர்களைக் கொல்லுவதுபோலப் பகைவர்களுடைய கூட்டங்களையெல்லாம் நாசஞ்செய். யுத்தத்தில் முயற்சியுடன் நிற்கின்ற உன்னைக் கண்டு மகாரதர்களான பாண்டவர்களும் பாஞ்சாலர்களும் திருமாலைக் கண்ட அஸுரர்போல ஓடப்போகிறார்கள். ஆண்மையிற் சிறந்தவனே! ஆதலால், இந்தப் பெருஞ்சேனையை நடத்து. நீ முயற்சியுடையவனாக நிலைபெற்றிருக்கையில், மந்தபுத்தியுள்ள

---

[1] பாணத்தாலாகிய படுக்கை.

பாண்டவர்களும் பாஞ்சாலர்களும் ஸ்ருஞ்சயர்களும் மந்திரிகளுடன் ஓடப்போகிருர்கள். உதிக்கின்ற சூரியன் தன் தேஜஸினுலே நன்ருகத் தபிக்கச் செய்துகொண்டு மிக்க இருளை நீக்குவதுபோலப் பகைவர்களை நீ தபிக்கச் செய்' என்று கூறினுன்.

அரசனுன துரியோதனன் அரசர்களுடைய மத்தியில் இவ்வாறு சொல்ல, மிக்க புஜபலமுள்ளவனும் மனத்தில் அன்புள்ளவனும் மிக்க வலிமையுள்ளவனும் ராதாபுத்திரனுமான கர்ணன், துர்யோதனனை ஸந்தோஷமடையும்படி செய்துகொண்டு பின்வரும் வார்த்தையைச் சொல்லலானுன். 'காந்தாரியின் புத்திரனுகிய துரியோதனு! மைந்தர்களோடும் ஜனுர்த்தனனேடும் கூடின எல்லாப் பாண்டவர்களையும் உன் முன்னிலையில் யான் ஜயிப்பேன். உனக்கு யான் ஸேனுபதியாக ஆகப்போகிறேன். இவ் விஷயத்தில் ஐயமில்லை. மஹாராஜனே! 'உறுதியுடனே இரு. பாண்டவர்களை ஜயிக்கப்பட்டவர்களாகவே எண்ணு' என்கிற இந்த விஷயம் உன்னுடைய ஸன்னிதானத்தில் முன்னமே என்னுல் சொல்லப்பட்டிருக்கிறது' என்ருன். மஹாராஜரே! பிறகு, இவ்வாறு சொல்லியதைக்கேட்ட துரியோதனராஜன், தேவர்கள் ஸ்கந்தரை ஸேனுபதியாகச் செய்ததுபோலக் கர்ணனை ஸேனுபதி ஸ்தானத்தில் வைத்து வெகுமானிப்பதற்காகத் தேவர்களோடு சேர்ந்து இந்திரன் எழுந்திருப்பதுபோல் அரசர்களுடன் எழுந்திருந்தான். அரசரே! பிறகு, ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான துரியோதனன் முதலான மன்னர்கள் சாஸ்திரத்தில் சொல்லிய முறைப்படி கர்ணனுக்கு அபிஷேகம் செய்வித்தார்கள். வெண்பட்டினுல் மூடப்பட்டதும் அத்திப்பலகையினுற் செய்யப்பட்டதுமான பீடத்தில் இனிது வீற்றிருக்கிற கர்ணனை, சாஸ்திரத்தில் சொல்லிய முறைப்படி, அபிஷேகத்திற்கு வேண்டியவைகளால் நன்ருக நிரப்பப்பட்ட ஸ்வர்ணமயமான தீர்த்த கடங்களாலும் மந்திரங்களால் அபிமந்திரணம் செய்யப்பட்ட மண்மயமான தீர்த்தகடங்களாலும் ஜலத்தால் நிரப்பப்பட்ட யானைகளுடைய தந்தங்களால் செய்யப்பட்ட பாத்திரங்களாலும் (தீர்த்தத்தால் நிறைக்கப்பட்ட) கட்க மிருகங்களினுடைய கொம்புகளாலும் மகாவிருஷபங்களுடைய கொம்புகளாலும் அவ்வாறே இரத்தினங்களோடும் முத்துக்களோடும் கூடியவைகளும் பரிசுத்தமான கந்தத்துடன் கூடியவைகளுமான மற்ற ஔஷதங்களாலும், சாஸ்திரத்தில் காணப்பட்டிருக்கிற முறைப்படி அபிஷேகஞ் செய்தார்கள். சிறந்த பீடத்தில்வைத்து அபிஷேகம் செய்விக்கப்பட்ட அந்த மகாத்மாவான கர்ணனைப் பிராம்

மணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், [1] ஒப்புக்கொள்ளப்பட்ட சூத்திரர்களும் ஸ்தோத்திரம் செய்தார்கள். ராஜேந்திரரே! அபிஷேகம் செய்விக்கப்பட்டவுடன், பகைவர்களைக் கொல்லுகின்றவனான ராதேயன் ஸுவர்ணங்களாலும் பசுக்களாலும் தனத்தினாலும் உத்தம பிராம்மணர்களை (த்ருப்தி செய்வித்து) அவர்களால் தனக்கு (ஸ்வஸ்தியயனங்களை)ச் சொல்லும்படி செய்வித்தான். ராதாபுத்திரனான அவன் உதயகாலத்தில் சூரியன் பிரம்மவாதிகளால் ஸ்தோத்திரம் பண்ணப்படுவதுபோல [2] ஸூதர்களாலும் [3] மாகதர்களாலும் [4] வந்திகளாலும் ஸ்தோத்திரம் செய்யப்பெற்று மிகவும் பிரகாசித்தான். பிறகு, புண்ணியாஹ மந்திர கோஷங்களும் வாத்ய கோஷமும் சூரர்களுடைய ஜயசப்தமும் நிரம்பின. அவ்விடத்தில் ஒன்றுசேர்ந்திருக்கிற அரசர்களனைவரும் ராதேயனைப் பார்த்து, 'ஜயிப்பாயாக' என்று கூறினார்கள். வந்திகளும் பிராமணர்களும், புருஷஸ்ரேஷ்டனான அவனைப் பார்த்து 'கோவிந்தனோடும் துணைவீரர்களோடுங்கூடின அந்தப் பார்த்தர்களை மகாயுத்தத்தில் ஜயிப்பாயாக. ராதேய! உதிக்கின்ற சூர்யன் உக்கிரமான கிரணங்களாலே இருளை எப்பொழுதும் நாசஞ்செய்வதுபோல நமக்கு ஜயமுண்டாகும்பொருட்டுப் பாஞ்சாலர்களுடன் கூடின பார்த்தர்களைக் கொல்வாயாக. ஜ்வலிக்கின்ற ஸூர்யகிரணங்களைக் கோட்டான்கள் பார்க்கமுடியாததுபோல, உன்னால் விடப்பட்ட பாணங்களைக் கேசவனுடன் கூடின பாண்டவர்கள் பார்க்கவும் சக்தர்களல்லர். யுத்தத்தில் வஜ்ராயுதத்தைக் கையில்கொண்ட மஹேந்திரனுடைய முன்னிலையில் அஸுரர்கள் நிற்பதற்குச் சக்தியுள்ளவர்களாகாததுபோல உனக்கு முன்னிலையில் பாஞ்சாலர்களுடன் கூடின பார்த்தர்கள் நிற்பதற்குச் சக்தியுள்ளவர்களாகார்கள்' என்று கூறினார்கள். உபசரிக்கப்பட்டவனும் ஸ்தோத்திரம் பண்ணப்படுகின்றவனும் நண்பர்களுடைய ஸமூகங்களாலே சூழப்பட்டவனுமான அந்தக் கர்ணன், ரோஷத்தினால் சிரித்துக்கொண்டு, துரியோதனனைப் பார்த்துப் பிரியமான வாக்கியத்தை உரைக்கலானான். 'ஓ! துரியோதன! இப்பொழுது சேனையுடனும் பாண்டவ வீரர்களுள் சிறந்தவர்களுடனும் பந்துக்களுடனும் கூடிய பல்குனனை உனது பிரியத்திற்காக நாசஞ்செய்யப்போகிறேன். மலை

---

[1] 'ஸம்மதா:' என்பது மூலம், 'நன்குமதிக்கப்பட்ட' என்றும் கொள்ளலாம். [2] பௌராணிகர்கள். [3] வம்சாவளியை வர்ணிக்கிறவர்கள். [4] ஸ்தோத்திரம் செய்பவர்கள். ஆதிபர்வம் 354-ம் பக்கம் குறிப்பிலும்; கர்ணபர்வம் 4-ம் பக்கத்திலும் காண்க.

களையும் கடல்களையும் தீவுகளையுமுடைய்தும் பாண்டவர்களை இழந்ததுமான பூமியை நீ ஆளுவாயாக. பிள்ளைகளிடத்திலும் பேரன்களிடத்திலும், பேரன்களின் பிள்ளைகளிடத்திலும், (அரசச் செல்வத்தை) நிலைநாட்டப்போகிறாய். பகைவர்களை அழிப்பவனே! உனக்குப் பிரியத்தைச் செய்கிற விஷயத்தில் எனக்கு ஸஹிக்கக்கூடாதது ஒன்றுமில்லை. ஆத்மஞானமுள்ளவனுக்கு ஸித்தியுண்டாவதுபோல ஸத்யத்திலும் தர்மத்திலும் பற்றுதலுள்ள எனக்குக் கார்யஸித்தி உண்டாகும்' என்றான். அபிஷேகம் செய்விக்கப்பட்ட அந்த ராதேயன் அளவுகடந்த ஒளியுள்ளவனாக வேறொரு ஸூர்யன்போல ரூபத்தினாலும் ஒளியினாலும் மிக விளங்கினான். உம்முடைய குமாரன், காலத்தினால் தூண்டப்பட்டு, ஸேனாபதி ஸ்தானத்தில் ராதேயனை அபிஷேகம் செய்வித்ததனால் அப்பொழுது தன்னைக் கிருதார்த்தனாக எண்ணிக்கொண்டான். பகைவர்களை அழிப்பவனான கர்ணனும், அரசனிடத்தினின்று படைத்தலைமையைப் பெற்று, சூரியன் உதயமானவுடன், யுத்த ஸன்னாகத்துக்குக் கட்டளையிட்டான். பாரதரே! கர்ணன் அந்த இடத்தில் உம்முடைய புத்திரர்களால் சூழப்பெற்றுத் தாரகாஸுர யுத்தத்தில் தேவர்களால் சூழப்பட்ட சுப்ரமண்யர் விளங்கியதுபோல விளங்கினான்" என்று கூறினான்.

எட்டாவது அத்தியாயம்

(கர்ணனும் அர்ஜுனனும் வ்யூகங்கள் வகுத்து யுத்தத்திற்காகப் புறப்பட்டது)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! அப்பொழுது சூரிய குமாரனான கர்ணன், ஸேனாபதி ஸ்தானத்தைப் பெற்று, ராஜாவான துரியோதனன் பிராதாவைப்போல நேசத்துடன் கூடிய வசனத்தை உரைக்கக் கேட்டானே; என் புத்திரனுக்கு எப்பொழுதும் இனியவனும் பிரியத்தைச் செய்வதில் விருப்பமுள்ளவனும் பேரறிவாளனுமான கர்ணன் என்ன செய்தான்? அதனை எனக்குச் சொல்" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான்.

'பாரதரிற் சிறந்தவரே! உம்முடைய புத்திரர்கள் கர்ணனுடைய அபிப்பிராயத்தை யறிந்து ஆனந்தவாத்தியகோஷத்தை முன்னிட்டு யுத்தத்திற்கு ஆயத்தமாகும்படி கட்டளையிட்டார்கள். பெரிதான பின்னிரவில், உம்முடைய படையில், 'யுத்த ஸன்னாகம், யுத்த ஸன்னாகம்' என்கிற பேரொலி விரைவாகத் தோன்றியது அரசரே! பிறகு, ஸாமர்த்தியமுள்ள சிறந்த

யானைகளுடைய முழக்கமும் மூக்கணைகளோடு கூடிய தேர்களி னெலியும் ஸன்னைகத்துடன் கூடிய மனிதர்களின் ஆரவாரமும் குதிரைகளின் கனைப்பும் பரஸ்பரம் சண்டைக்காக விரைந்து அழைக்கின்ற யுத்தவீரர்களின் விளித்தலும் ஆகிய இவற்ரு லுண்டாகிய நெருங்கிய சப்தமானது மிகப் பெருகி ஆகாயத்தை அளாவியதாகத் தோன்றியது. பிறகு, வெண்ணிறமுள்ள கொடித் துணியுள்ளதும், கொக்கின் நிறம்போன்ற நிறமுடைய குதிரைகளையுடையதும், ஸுவர்ணமயமான பின்புறமுள்ள வில் லோடு கூடியதும், யானைச்சங்கிலியாகிற கொடியோடு கூடியதும், நூறு அம்புக்கூடுகளால் நிறைக்கப்பட்டதும், கதாயுதங்களையும் ரதகுப்திகளையுமுடையதும், சதக்னிகளையும் கிங்கிணிகளையும் சக்தி களையும் சூலங்களையும் தோமரங்களையும் தரித்ததும், விற்களோடு கூடியதும், நிர்மலமான சூரியன்போன்ற காந்தியுள்ளதும், (காற் றை) எதிர்த்த பதாகையுடன்கூடினதுமான ரதத்தோடு கர்ணன் காணப்பட்டான். அரசரே! ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட பெரிய வில்லை அசையும்படி செய்துகொண்டு, ஸுவர்ண ஸமூகங் களாலே அலங்கரிக்கப்பட்ட சங்கத்தை ஊதினன். புருஷஶ்ரேஷ்ட ரே! பெரிதான வில்லைக் கையில்கொண்டவனும், ரதத்தில்வீற்றிருக் கின்றவனும், ரதிகர்களுள் உத்தமனும், இருளை நாசம்செய்து கொண்டு உதிக்கின்ற சூரியன்போல நெருங்க முடியாதவனுமான கர்ணனைக் கண்டு, அங்குள்ள சில கௌரவர்கள், பீஷ்மரும் துரோணரும் மற்றவர்களுமாகிய வீரர்களின் (நாசத்தினுலுண் டான) வருத்தத்தை நினைக்கவில்லை. ஐயா! பிறகு, கர்ணன் யுத்த வீரர்களைச் சங்கத்தின் ஒலியினுலே விரைவுபடுத்திக்கொண்டு கௌரவர்களுடைய பெரும்படையை யுத்தத்திற்கு இழுத்தான். பகைவர்களை வாட்டுகின்றவனும் பெரிய வில்லைக்கையில் கொண்ட வனுமான கர்ணன், மகரவ்யூகம் வகுத்துக்கொண்டு, வெற்றிபெற வேண்டுமென்கிற விருப்பத்தாலே, பாண்டவர்களை அவ்வாறு எதிர்த்துச் சென்முன். வேந்தரே! மகரத்தினுடைய வாயில் கர் ணன் நின்முன். சூரனை சகுனியும் மகாரதனை உலூகனும் அந்த வ்யூகமகரத்தினுடைய இரண்டு கண்களிலும் நின்முர்கள். துரோ ணபுத்திரரோ (அந்த மகரத்தின்) தலையில் நின்முர். ஸகோதரர்க ளனைவரும் கழுத்தில் நின்முர்கள். ராஜாவான துரியோதனன் பெருத்த சேனையினுல் சூழப்பட்டு மத்தியில் நின்முன். ராஜேந் திரரே! நாராயணனுடைய சேனைகளாகிய யுத்தத்தில் கெட்ட மத முள்ள கோபாலர்களோடு கிருதவர்மா இடக்காலில் நின்முன். வேந்தரே! சிறந்த வில்லாளிகளான திரிகர்த்தவீரர்களாலும் தென்

ளுட்டு வீரர்களாலும் சூழப்பட்டு உண்மையான பராக்ரமமுள்ள கிருபர் வலக்காலில் நின்றார். மத்ர தேசத்தினின்று வந்திருக்கிற பெரிய சேனையுடன் சல்யன் இடக்காலிற்குப் பின்புறத்தில் நின்றான். மஹாராஜரே! ஸத்தியபிரதிஜ்ஞையுள்ள ஸுஷேணன் ஆயிரம் ரதிகர்களாலும் முந்நூறு யானைகளாலும் சூழப்பட்டு வலக்காலின் பின்புறத்தில் நின்றான்; மகாவீர்யமுள்ளவர்களும் ஸகோதரர்களும் அரசர்களுமான சித்திரனும், சித்திரஸேனனும் அப்பொழுது பெரும்படையினால் சூழப்பட்டு வாலில் நின்றார்கள்.

ராஜேந்திரரே! புருஷஸ்ரேஷ்டர்களுள் உத்தமனான கர்ணன் அவ்வித ஸன்னாகத்தோடு யுத்தத்திற்குப் புறப்படுகையில், தர்மராஜர் தனஞ்சயனை (மலர்ந்த கண்ணால்) பார்த்து, 'பார்த்த! வீரனே! மகாரதர்களான வீரர்களாலே காக்கப்பட்டதும் கர்ணனால் அணிவகுக்கப்பட்டதுமான கௌரவ சேனையானது இந்த யுத்தரங்கத்தில் எவ்விதமிருக்கிறதென்பதைப் பார். மிக்க புஜபலமுள்ளவனே! உத்தம வீரர்கள் கொல்லப்பட்டும் மிச்சமுள்ளவர்கள் வலிமை குன்றியுமிருக்கிற இந்தக் கௌரவசேனையை நான் துரும்புக்குச் சமமாக நினைக்கிறேன். ஸூதபுத்ரனான கர்ணன் ஒருவனே இந்தச் சேனையில் மகாவில்லாளியாக விளங்குகிறான். மஹாபாகுபலமுள்ள பல்குன! மகாரதனும் தேவர்களும் அஸுரர்களும் கந்தர்வர்களும் கின்னரர்களும் சிறந்த உரகர்களும் சேர்ந்த சராசர வடிவமான மூவுலகங்களாலும் ஜயிக்கத்தகாதவனுமான அவனை இப்பொழுது கொன்று நீ வெற்றிபெறுவாயாக. (அப்படிச் செய்தால்,) பன்னிரண்டு வருஷமாக என் மனத்தில் தைத்திருக்கிற முள்ளானது எடுக்கப்பட்டதாகும். மிக்க புஜபலமுள்ளவனே! இவ்வாறு அறிந்து விருப்பப்படி அணிவகு' என்று கூறினார். வெண்ணிறமுள்ள குதிரைகளையுடைய அர்ஜுனன், பிராதாவினுடைய இந்த வார்த்தையைக் கேட்டு, அந்தச் சேனையை அர்த்த சந்திர வ்யூகத்தால் எதிர் அணிவகுத்தான். அந்த வ்யூகத்தின் இடப்புறத்தில் பீமஸேனன் நின்றான். வலப்புறத்தில் சிறந்த வில்லாளியான திருஷ்டத்யும்னன் நின்றான். ராஜாவான தர்மபுத்திரரும் பாண்டவனான தனஞ்சயனும் நடுவில் நின்றார்கள். நகுலனும் ஸஹதேவனும் தர்மராஜருக்குப் பின்புறத்தில் நின்றார்கள். பாஞ்சால ராஜகுமாரர்களான யுதாமன்யுவும் உத்தமௌஜஸும் சக்ரரக்ஷகர்களாயிருந்து கிரீடியினால் காக்கப்பட்டு யுத்தத்தில் அவனை விட்டு விலகாமலிருந்தார்கள். பாரதரே! வீரர்களான மற்ற அரசர்கள் கவசம் பூண்டு உத்ஸாகத்துடனும்

முயற்சியுடனும் வ்யூகத்தில் இடம் தவறாமல் நின்றார்கள். பாண்டவர்களும் மகா வில்லாளிகளாகிய உம்மைச் சேர்ந்தவர்களும் இவ் விதம் இந்தப் பெரிய அணியை வகுத்து யுத்தத்தில் மனத்தைச் செலுத்தினார்கள். யுத்தத்தில் ஸூதபுத்திரனாலே அணிவகுக்கப்பட்ட உம்முடைய சேனையைக் கண்டு பந்துக்களுடன் கூடின துரியோதனன் பாண்டவர்களைக் கொல்லப்பட்டவர்களாகவே எண்ணினான். அவ்வாறே, ராஜாவான யுதிஷ்டிரரும், அணிவகுக்கப்பட்ட பாண்டவ சேனையைக்கண்டு, கர்ணனுடன்கூடின கௌரவர்களைக் கொல்லப்பட்டவர்களாகவே எண்ணினார். அரசரே! பிறகு, இரண்டு சேனைகளிலும் பெருத்த சப்தத்தையுடைய சங்கங்கள் ஊதப்பட்டன. பேரிகைகளும் பணவங்களும் ஆனகங்களும் கோமுகங்களும் டிண்டிமவாத்யங்களும் ஜர்ஜரங்களும் எல்லாப் பக்கங்களிலும் அடிக்கப்பட்டன. ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான சூரர்களுடைய ஸிம்மநாதமும் வெளிப்பட்டது. வேந்தரே! குதிரைகளுடைய கனைத்தலாலுண்டான சப்தங்களும், யானைகளுடைய கர்ஜனைகளும், ரதசக்கரங்களின் ஓரத்தினாலுண்டுபண்ணப்பட்ட கொடிய முழக்கங்களும் தோன்றின. பாரதரே! அந்த மகரவ்யூகத்தின் முகத்தில் கவசமணிந்து பெரிய வில்லைக் கையில் பிடித்து நிற்கின்ற கர்ணனைக்கண்டு ஒருவனாவது அந்தச்சேனையில் துரோணருடைய நாசத்தினால் உண்டான துயரத்தைப் பாராட்டவில்லை. வேந்தரே! மனங்களித்த மனிதர்களால் (நிறைந்த) இருதிறத்துச் சேனைகளும் பராக்கிரமத்தினால் ஒன்றையொன்று வதம் செய்வதற்காக யுத்தம் செய்வதில் நோக்கமுற்றிருந்தன. ராஜேந்திரரே! பரஸ்பரம் வெற்றியடைவதில் அதிகப் பரபரப்புடன் நிற்கின்ற இரண்டு சேனைகளையுங்கண்டு கர்ணனும் அர்ஜுனனும் சேனையின் மத்தியில் ஸஞ்சாரம் செய்தார்கள். அந்த இருதிறத்துச் சேனைகளும் நர்த்தனம் செய்கின்றவைபோல ஒன்றையொன்று எதிர்த்தன. அந்த இரண்டு கக்ஷி ப்ரதிகக்ஷிகளினிடங்களினின்றும் யுத்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் வெளிப்பட்டார்கள். மஹாராஜரே! பிறகு, அன்யோன்யம் எதிர்த்து அடிக்கின்ற மனிதர்களுக்கும் யானைகளுக்கும் குதிரைகளுக்கும் தேர்களுக்கும் யுத்தம் நடக்க ஆரம்பித்தது.

ஒன்பதாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தமும், பீமனால் க்ஷேமதூர்த்தியின் வதமும்)

உள்ளத்தில் களிப்புமிக்க குதிரைகளும் மனிதர்களும் யானைகளும் நிரம்பியவைகளும் தேவாஸுர சேனைகளுக்கு ஒப்பானவைகளுமான பெரிய அவ்விரு சேனைகளும் ஒன்றையொன்று நெருங்கி மோதிக்கொண்டன. பிறகு, பற்பல ரதிகர்களும் குதிரைவீரர்களும் யானைவீரர்களும் உக்கிரமான பராக்கிரமமுள்ள காலாட்களும் தேகத்தையும் பாவங்களையும் நாசம் செய்யும் தன்மையுள்ள யுத்தங்களை அதிகமாகச் செய்தனர். புருஷச்ரேஷ்டர்கள், காந்தியினாலும் தேஜஸினாலும் வாசனையினாலும் (முறையே) பூர்ண சந்திரனுக்கும் சூரியனுக்கும் தாமரைப் புஷ்பத்திற்கும் ஸமானமான புருஷச்ரேஷ்டர்களுடைய (தலைகளால்) பூமியை மூடினார்கள். யுத்தஞ்செய்கின்ற வீரர்களுடைய தலைகள் அர்த்த சந்திர பாணங்களாலும் பல்லங்களாலும் க்ஷுரப்ரங்களாலும் கத்திகளாலும் பட்டஸங்களாலும் கோடாலிகளாலும் அறுக்கப்பட்டன. புஷ்டியுள்ளவைகளும் நீண்டவைகளுமான வீரர்களுடைய கைகள், ஆயுதங்களையும் தோள்வளைகளையுமுடையவர்களும் புஷ்டியுள்ளவைகளும் நீண்டவைகளுமான கைகளையுடையவர்களுமான வீரர்களாலே (அறுத்துப்) பூமியில் தள்ளப்பட்டு விளங்கின. துடிக்கின்றவைகளும் விரல்களோடும் உள்ளங்கையோடும் கூடியவைகளுமான கைகளாலே அந்த யுத்த பூமி, கருடனால் சின்னபின்னம் செய்யப்பட்டவைகளும் கொடியவைகளும் ஐந்து தலைகளுடன் கூடியவைகளுமான ஸர்ப்பங்களால் சூழப்பட்டதுபோல் விளங்கியது. பகைவர்களால் கொல்லப்பட்ட வீரர்கள், புண்ணியமானது அனுபவித்து முடிந்தவுடன் ஸ்வர்க்கவாஸிகள் விமானங்களினின்று விழுவதுபோல யானைகளினின்றும் தேர்களினின்றும் குதிரைகளினின்றும் கீழே விழுந்தார்கள். யுத்தத்தில் அதிக வீரியமுடைய சூரர்களாலே மற்ற வீரர்கள் பெரிய கதாயுதங்களாலும் பரிகங்களாலும் உலக்கைகளாலும் அடிக்கப்பட்டு நூற்றுக்கணக்காக விழுந்தார்கள். மிக்க நெருக்கமான அந்த யுத்தத்தில் ரதங்கள் ரதங்களால் நாசம் செய்யப்பட்டன. மதங்கொண்ட யானைகள் மதங்கொண்ட யானைகளால் நாசம் செய்யப்பட்டன. குதிரை வீரர்கள் குதிரை வீரர்களால் நாசம் செய்யப்பட்டார்கள். ரதங்களாலே மனிதர்களும், யானைகளாலே ரதங்களும், காலாட்களால் குதிரைமீதுள்ளவர்களும், குதிரைக்காரர்களாலே காலாட்களும் யுத்தத்தில் கொல்லப்பட்டுப் படுத்தார்கள். யானைகளாலே ரதங்

களும் குதிரைகளும் காலாட்களும், காலாட்களாலே ரதங்களும் குதிரைகளும் யானைகளும், குதிரைகளாலே ரதங்களும் காலாட்களும் யானைகளும், ரதங்களாலே மனிதர்களும் யானைகளும் நாசஞ் செய்யப்பட்டன. தேர்களுக்கும் குதிரைகளுக்கும் யானைகளுக்கும் மனிதர்களுக்கும், மனிதர்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் தேர்களாலும், கைகளையும் கால்களையும் சஸ்திரங்களையும் ரதங்களையும் கொண்டு மிக்க துன்பம் செய்யப்பட்டது. அவ்வாறு அந்தப் படையானது சூரர்களாலே வதம் பண்ணப்பட்டு நாசம் அடையும்போது, பீமஸேனனை முதன்மையாகக்கொண்ட பாண்டவர்கள் நம்மை எதிர்த்துவந்தனர். திருஷ்டத்யும்னனும் சிகண்டியும் த்ரௌபதீபுத்திரர்களும் ப்ரபத்ரகர்களும் ஸாத்யகியும் சேகிதானனும் திராவிட தேசத்திலுண்டான ஸைனிகர்களோடு எதிர்த்தார்கள். அகன்ற மார்பையுடையவர்களும் நீண்ட கைகளையுடையவர்களும் உயர்ந்தவர்களும் அகன்ற கண்களையுடையவர்களுமான பாண்டியர்களும் சோழர்களும் கேரளர்களும் பெரிய வ்யூகத்தால் சூழப்பட்டார்கள். பூஷணங்களை அணிந்தவர்களும் சிவந்த பற்களையுடையவர்களும் மதங்கொண்ட யானைபோல வல்லமை பொருந்தியவர்களும் பற்பல விதமான சாயவஸ்திரங்களைத் தரித்தவர்களும் வாசனைப்பொடிகளால் பூசப்பட்டவர்களும் கத்திகளைக் கட்டிக் கொண்டவர்களும் பாசத்தைக் கையில் கொண்டவர்களும் யானைகளை எதிர்க்கின்றவர்களுமான வீரர்களனைவரும் [1] சமானமான ம்ருத்யுவையுடையவர்களாயிருந்துகொண்டு ஒருவரைவிட்டு ஒருவர் விலகினார்களில்லை. பூஷணத்தை அணிந்தவர்களும் விற்களைக் கையில் பிடித்தவர்களும், நீண்ட மயிர்களையுடையவர்களும், பிரியமான வார்த்தையைச் சொல்லுகின்றவர்களும், கோரமான ரூபத்தையும் பராக்ரமத்தையுமுடையவர்களுமான காலாட்கள் பாணங்களால் அடிக்கப்பட்டார்கள். பிறகு, சேதிதேசத்தவர்களும், பாஞ்சாலர்களும், கேகயர்களும், காரூசர்களும், கோஸலர்களும், காஞ்சி தேசத்து வீரர்களும், மாகதர்களுமான மற்ற சூரர்கள் ஓடினார்கள். அவர்களுடைய ரதங்களும், குதிரைகளும், யானைகளும், உத்தமர்களும் பயங்கரர்களுமான காலாட்களும், பலவிதமான பாணங்களின் ஒலிகளால் களிப்படைந்து நர்த்தனம் செய்தார்கள்; சிரிக்கவும் சிரித்தார்கள். விருகோதரன் யானையின் கழுத்தின்மீதேறி உத்தமர்களான [2] மகாமாத்திரர்களால்

---

1 'வெற்றியையே கருதினவர்களாகையால் மரணத்தையும் உயிர் வாழ்வையும் ஸமமாக நினைத்தவர்கள்' என்றாவது 'மாண்டால் எல்லாரும் மாளுவோமென்று ஒரே தீர்மானமுள்ளவர்கள்' என்றாவது கருத்து.

2 யானை வீரர்கள்.

சூழப்பட்டுப் பெரிதான அந்தச் சேனையின் நடுவில் உம்மைச் சேர்ந்தவர்களை எதிர்த்துவந்தான். மிக்க உக்கிரமானதும் முறைப் படி பழக்கப்பட்டதுமான அந்த உத்தமமான யானையானது, உதிக்கின்ற சூரியனுடன் கூடின உதய பர்வதத்தின் நுனியிலுள்ள ஒரு வீடுபோல் விளங்கியது. இரும்பு மயமானதும் உத்தமமான இரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்டதுமான அந்தப் பீமஸேன னுடைய சிறந்த கவசமானது காந்தியினால் நக்ஷத்திரங்களால் வியாபிக்கப்பட்ட சரத்காலத்திலுள்ள ஆகாயத்தைப்போல விளங்கியது. தோமராயுதத்தைப் பிரயோகிப்பதில் விரைவுள்ள கையையுடையவனும் அழகிய கிரீடத்தையுடையவனும் நன்றாக அலங்கரிக்கப்பட்டவனும் சரத்காலத்தில் பகல் நடுவிலுள்ள சூரியனுடைய காந்திபோன்ற காந்தியையுடையவனுமான அந்தப் பீமன் தேஜஸினால் சத்துருக்களை அதிகமாகக் கொளுத்தினான். அந்த யானையை யானைமீதுள்ள க்ஷேமதூர்த்தி தூரத்தில் கண்டு அட்டஹாஸம் செய்து ஸேனாமுகத்தில் யுத்தத்திற்கு அழைத்துக்கொண்டே எதிர்த்தோடினான். பயங்கரமான தோற்ற முள்ளவர்களும் பகைவர்களுமான அவ்விருவருக்கும் தம்மிஷ்டப் படி ஓடிவருகின்ற இரண்டு பெரிய பர்வதங்களுக்குச் சண்டை நேரிடுவதுபோலச் சண்டை நேரிட்டது. ஒன்றோடொன்று நெருங்கின யானைகளையுடையவர்களும் வீரர்களுமான அவ்விருவ ரும் சூரியகிரணங்கள்போலப் பிரகாசிக்கின்ற தோமரங்களாலே ஒருவரையொருவர் பலமாகப் பிளந்து ஸிம்மநாதஞ் செய்தார்கள். அவ்விருவரும் விலகி யானையிலிருந்து மண்டலாகாரமாக ஸஞ்சரித்தார்கள். இருவரும் விற்களைக் கையில் கொண்டு பரஸ்பரம் அடித்தார்கள். இருவரும் ஸிம்மநாதங்களாலும் தோளைத் தட்டும் ஒலிகளாலும் பாணசப்தங்களாலும் நாற்புறங் களிலும் ஜனங்களைச் சந்தோஷிக்கும்படி செய்துகொண்டு ஸிம்ம நாதம் செய்தார்கள். மகாபலசாலிகளும் ஸமர்த்தர்களுமான அவ் விருவரும் உயரத் தூக்கிய கைகளையுடையவைகளும் காற்றினால் அலைக்கப்பட்ட கொடித் துணிகளையுடையவைகளுமான இரண்டு யானைகளிலிருந்து போர்புரிந்தார்கள். மாரிக்காலத்தில் இரண்டு மேகங்கள் நீரைப் பொழிவதுபோல அவ்விருவரும் சக்திகளையும் தோமரங்களையும் பொழிந்தும் ஒருவர் வில்லை மற்றொருவர் துணித் தும் ஸிம்மநாதஞ் செய்தார்கள். அப்பொழுது, க்ஷேமதூர்த்தி பீமனைத் தோமரத்தினால் நடுமார்பிலடித்துக் கர்ஜித்துக்கொண்டு அதிவேகத்துடன் வேறு ஆறு தோமரங்களாலும் பிளந்தான். கோபத்தாலே ஜ்வலிக்கின்ற சரீரத்தையுடைய அந்தப்பீமஸேனன்

தேகத்தில் பட்ட தோமரங்களாலே மேகங்களோடு கூடின கிரணங்களுள்ள சூரியன்போல விளங்கினான். பிறகு, முயற்சியுள்ளவனை அவன் சூரியன்போன்ற வர்ணமுள்ளதும் நேராகச் செல்லுகின்றதும் இரும்புமயமுமான ஒரு தோமராயுதத்தைச் சத்துருவின்மீது பிரயோகித்தான். பிறகு, கரூச தேசாதிபதியானவன் வில்லை வளைத்துப் பத்துப் பாணங்களாலே தோமரத்தை அறுத்து, அறுபது பாணங்களாலே பாண்டவனை அடித்தான். பிறகு, பாண்டு புத்திரனான பீமன், மேகத்தின் இடிமுழக்கம்போன்ற சப்தத்துடன் கூடின வில்லை எடுத்து உரக்கச் சப்தித்துக்கொண்டு அம்புகளாலே பகைவனுடைய யானையை அடித்தான். பீமஸேனனால் யுத்தத்தில் பாணஸமூகங்களால் அடிக்கப்பட்ட அந்த யானை இழுத்துப் பிடிக்கப்பட்டும் காற்றினால் அலைக்கப்பட்ட மேகம்போல நிலைபெறவில்லை. பெருங்காற்றினால் அலைக்கப்பட்ட மேகமானது பெருங்காற்றினால் தள்ளப்பட்ட மேகத்தை எதிர்த்தது போலப் பீமஸேனனுடைய பயங்கரமான சிறந்த யானையானது அந்த யானையை எதிர்த்தது. பிரதாபசாலியான க்ஷேமதூர்த்தி தன்னுடைய யானையை அடக்கிக்கொண்டு தன்னை நோக்கிவந்த பீமஸேனனுடைய யானையை அடித்தான். பிறகு, நன்கு பிரயோகிக்கப்பட்டதும் வணங்கின கணுக்களுள்ளதுமான [1] பாணத்தினால் பீமன் பகைவனுடைய வில்லையும் வெட்டி யானையையும் அடித்தான். பிறகு, யுத்தத்தில் கோபங்கொண்ட க்ஷேமதூர்த்தி பீமனை மனங்கலங்கச்செய்து அவனுடைய யானையையும் நாராச பாணங்களாலே எல்லா மர்மஸ்தானங்களிலும் அடித்தான். பாரதரே! பீமஸேனனுடைய அந்த மஹாகஜம் கீழே விழுந்துவிட்டது. பீமஸேனன் யானை விழுவதற்கு முன்பே துள்ளிக் குதித்துப் பூமியில் நின்று கதையினாலே அந்த க்ஷேமதூர்த்தியினுடைய யானையை நன்றாக நொறுக்கினான். க்ஷேமதூர்த்தி, த்வம்ஸம் செய்யப்பட்ட அந்த யானையினிடத்தினின்று துள்ளிக் குதித்துக் கூர்மையுள்ள சக்தியை எடுத்துப் பாண்டவனை எதிர்த்தோடினான். ஆயுதத்தை எடுத்து எதிர்த்துவருகின்ற க்ஷேமதூர்த்தியை விருகோதரன் கதையினாலே கொன்றான். அவ்வாறு அடிக்கப்பட்ட க்ஷேமதூர்த்தி வஜ்ரத்தினால் அடிக்கப்பட்ட ஒரு ஸிம்மமானது வஜ்ரத்தினால் மிக அடிக்கப்பட்ட மலையினின்று கீழே விழுவதுபோல, உயிர்துறந்து கையில் பிடித்த கத்தியுடன் யானையின் அருகில் விழுந்தான். பரதரிற் சிறந்தவரே! கரூசர்களுக்குக் கீர்த்தியை உண்டு

---

[1] 'க்ஷுரேண' என்பது மூலம்; வாள்போன்ற முனையுள்ள ஒரு வகை அம்பு.

பண்ணுகின்ற அரசனை அந்த க்ஷேமதூர்த்தி கொல்லப்பட்டதைக் கண்டு உம்முடைய சேனை மனவருத்தமுற்று நான்கு பக்கங்களிலும் ஓடியது.

பத்தாவது அத்தியாயம்

(த்வந்துவ யுத்தமும், ஸாத்யகியினால் விந்தாநுவிந்தர்கள் கொல்லப்பட்டதும்)

சிறந்த வில்லாளியும் சூரனுமான கர்ணன் யுத்தத்தில் பாண்டவர்களுடைய சேனையை வணங்கின கணுக்களுள்ள அம்புகளாலே அடித்தான். அரசரே! அவ்வாறே, மகாரதர்களான அந்தப் பாண்டவர்களும் கோபங்கொண்டு உம்முடைய புத்திரனது சேனையைக் கர்ணனுக்கெதிரில் அடித்தார்கள். கர்ணனும் யுத்தத்தில் சூரியனுடைய கிரணங்கள்போல விளங்குகின்றவைகளும் கருமானால் நன்றாகச் சாணைபிடிக்கப்பட்டவைகளுமான நாராசங்களாலே பாண்டவ சேனையைக் கொன்றான். பாரதரே! அந்த யுத்தத்தில் கர்ணனாலே நாராசங்களால் அடிக்கப்பட்ட யானைகள் வீரிட்டுச் சோர்ந்து வாடின; பத்துத் திக்குகளிலும் சுற்றின. ஸூதபுத்திரனாலே அந்தப் பாண்டவ சேனை கொல்லப்படும்போது, நகுலன் மகாயுத்தத்தில் ஸூதபுத்திரனை நோக்கி விரைவாக எதிர்த்துவந்தான். அவ்வாறே, பீமஸேனன், செயற்கரிய காரியத்தைச் செய்கின்ற துரோண புத்திரரை எதிர்த்தான். ஸாத்யகி கேகய ராஜகுமாரர்களான விந்தாநுவிந்தர்களை எதிர்த்தான். எதிர்த்துவருகின்ற ஶ்ருதகர்மாவை அரசனை சித்ரஸேனன் எதிர்த்தான். அவ்வாறே, பிரதிவிந்தியன் விசித்திரமான கொடியையும் வில்லையுமுடைய சித்ரனை எதிர்த்தான். துரியோதனனே தர்மநந்தனரான யுதிஷ்டிரராஜரைஎதிர்த்தான்.ஸம்சப்தகர்களுடைய கூட்டங்கள் உத்ஸாகத்தோடு தனஞ்சயனை எதிர்த்தன. உத்தமர்களான வீரர்களுக்கு நாசத்தை யுண்டுபண்ணுகிற அந்த யுத்தத்தில், திருஷ்டத்யும்னன் கிருபரையும், சிகண்டி தவருதவனை கிருதவர்மாவையும், ஶ்ருதகீர்த்தி சல்யனையும், மாத்ரீ புத்திரனும் பிரதாபசாலியுமான ஸஹதேவன் உமது புத்திரனை துச்சாஸனனையும் எதிர்த்தனர். பாரதரே! விந்தாநுவிந்தர்களிருவரும் யுத்தத்தில் பிரகாசிக்கின்ற சரமாரியினால் ஸாத்யகியை எதிர்த்தனர். ஸாத்யகியும் கேகய தேசத்து வேந்தர்களான விந்தாநுவிந்தர்களைச் சரமாரியினால் மூடினான். பெரிய காட்டில் இரண்டு யானைகள் எதிர்க்கின்ற ஒரு யானையை இரண்டு கொம்புகளால் அடிப்பதுபோல வீரர்களும்

பிராதாக்களுமான அவ்விருவரும் அந்த ஸாத்யகியை ஹிருதயத்தில் மிகவும் அடித்தார்கள். அரசரே! யுத்தத்தில் அம்புகளாலே கவசமுடைக்கப்பட்டவர்களும் பிராதாக்களுமான அவ்விருவரும் பழுதற்ற செய்கையையுடைய ஸாத்யகியை அம்புகளாலே அடித்தார்கள். பாரதரே! ஸாத்யகி அட்டகாசஞ்செய்துகொண்டு அந்த விந்தானுவிந்தர்களை எல்லாத் திசைகளிலும் சரமாரியினால் மறைத்துத் தடுத்தான். பிறகு, ஸாத்யகியினுடைய சரமாரிகளாலே தடுக்கப்பட்ட அவ்விருவரும் ஸாத்யகியினுடைய ரதத்தை விரைவாக அம்புகளால் மூடினார்கள். பிறகு, மிக்க புகழுள்ளவனும் சூரகுலத்தில் பிறந்தவனுமான ஸாத்யகி ஆச்சரியகரமான அவ்விருவருடைய விற்களையும் அறுத்துக் கூர்மையான அம்புகளால் அவர்களையும் தடுத்தான். பிறகு, அவ்விருவரும் விசித்திரமான வேறு இரண்டு விற்களையும் பெரிய பாணங்களையும் எடுத்து ஸாத்யகியை மூடிக்கொண்டு விரைவாகவும் அழகாகவும் ஸஞ்சரித்தார்கள். அவ்விருவராலும் விடப்பட்டவைகளும் கழுகிறகுகளும் மயிலிறகுகளும் பூண்டவைகளும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான பெரிய பாணங்கள், எல்லாத் திக்குக்களையும் பிரகாசிக்கச்செய்துகொண்டு (ஸாத்யகியின்மீது) விழுந்தன. மகாயுத்தத்தில் அவ்விருவருடைய பாணங்களாலும் இருள் உண்டாயிற்று. அந்த மகாரதர்கள் பரஸ்பரம் வில்லைத் துணித்தார்கள். மஹாராஜரே! பிறகு, யுத்தத்தில் கெட்டமதங்கொண்டவனை ஸாத்யகி கோபங்கொண்டு வேறு வில்லை எடுத்து யுத்தத்தில் நாணேற்றி மிகக் கூர்மையுள்ள க்ஷுரப்ரமென்னும் பாணத்தினாலே அனுவிந்தனுடைய தலையை அறுத்தான். அரசரே! குண்டலங்களாலே அலங்கரிக்கப்பட்ட அந்த அனுவிந்தனுடைய பெரிய தலை கீழே விழுந்தது. மகாயுத்தத்தில் கொல்லப்பட்ட சம்பரனுடைய தலைபோல அது கேகயர்களெல்லோரையும் துக்கமடையும்படி செய்துகொண்டு விரைவாகப் பூமியை அடைந்தது. சூரனான அனுவிந்தன் கொல்லப்பட்டதைக் கண்டு அவனுக்குப் பிராதாவும் மகாரதனுமான விந்தன் வேறு வில்லை நாணேற்றிச் சைனேயனை எதிர்த்தான். அந்த விந்தன் பொன்னாலாகிய பிடிகளையுடையவைகளும் சாணையில் தீட்டப்பட்டவைகளுமான அறுபது பாணங்களாலே ஸாத்யகியை அடித்து உரக்க ஸிம்மநாதஞ்செய்தான்; 'நில், நில்' என்றும் சொன்னான். பிறகு, கேகயர்களுள் மகாரதனான விந்தன் விரைவாக அனேக ஆயிரம் அம்புகளாலே ஸாத்யகியை இரண்டு கைகளிலும் மார்பிலும் அடித்தான். எல்லா அங்கங்களும் அம்புகளாலே காயப்படுத்தப்பட்டவனும்,

உண்மையான பராக்ரமமுடையவனுமான ஸாத்யகி யுத்தரங்கத்தில் பூத்துள்ள பலாச மரம்போல விளங்கினான். மகாத்மாவான கேகயவீரனாலே யுத்தத்தில் அடிக்கப்பட்ட ஸாத்யகி அட்டஹாஸம் செய்துகொண்டு இருபத்தைந்து பாணங்களாலே கேகய வீரனை அடித்தான். தேராளிகளுள் சிறந்தவர்களான அவ்விருவரும் யுத்தத்தில் அன்யோன்யம் அழகிய விற்களை யறுத்து ஸாரதிகளையும் குதிரைகளையும் விரைவாகக் கொன்று தேரையிழந்து கத்திச் சண்டையின்பொருட்டு யுத்தத்தில் ஒன்றுகூடினார்கள். (வாட்போரில்) நல்ல கைப்பழக்கமுள்ளவர்களான அவ்விருவரும் சிறந்த வாள்களையும் நூறு சந்திரப்பிரதிமைகளால் அலங்கரிக்கப்பட்ட கேடகங்களையும் பிடித்துத் தேவாஸுர யுத்தத்தில் மகாபலசாலிகளான ஜம்பனும் இந்திரனும்போல மகாயுத்தத்தில் விளங்கினார்கள். பிறகு, பெரும் போரில் வட்டமாக ஸஞ்சரிக்கின்ற அவ்விருவரும் ஒருவரையொருவர் எல்லாப் பக்கங்களிலும் விரைவாகத் தாக்கினார்கள். ஒருவரையொருவர் கொல்லும் விஷயத்தில் இருவரும் அதிகமான முயற்சியைச் செய்தார்கள். பிறகு, ஸாத்வதன் கேகய வீரனுடைய கேடகத்தை இரண்டாக வெட்டி எறிந்தான். அவ்வாறே, ராஜாவான விந்தனும் ஸாத்யகியினுடைய கேடகத்தை வெட்டி எறிந்தான். விந்தனோ அனேக நக்ஷத்திரக்கூட்டங்களால் நிறைக்கப்பட்ட ஸாத்யகியினுடைய கேடகத்தை அறுத்து மண்டலாகாரமான கதிகளையும் போக்குவரவுகளையும் செய்துகொண்டு ஸஞ்சரித்தான். சிறந்த கத்தியைத் தாங்கி மகாயுத்தத்தில் ஸஞ்சரிக்கின்ற அந்த விந்தனைச் சைனேயன் விரைந்து குறுக்காக நீட்டப்பட்ட கையிலுள்ள கத்தியினால் வெட்டினான். அரசரே! சிறந்த வில்லாளியான கேகய ராஜன் மகாயுத்தத்தில் ஸாத்யகியினால் கவசத்துடன் இரண்டாகத் துண்டாக்கப்பட்டு, வஜ்ரத்தினால் அடிக்கப்பட்ட மலைபோல விழுந்தான். சத்துருக்களைத் தபிக்கச் செய்கின்றவனும் ரதிகர்களுள் உத்தமனும் சூரனுமான சைனேயன் யுத்தத்தில் அந்த விந்தனைக் கொன்று யுதாமன்யுவினுடைய தேரில் விரைவாக ஏறினான். பிறகு, ஸாத்யகி மறுபடியும் முறைப்படி ஸித்தஞ்செய்யப்பட்ட வேறு ரதத்தின்மீதேறிக் கேகயர்களுடைய பெரிதான சேனையை அம்புகளால் அடித்தான். யுத்தத்தில் ஸாத்யகியினால் கொல்லப்பட்ட கேகயர்களுடைய அந்தப் பெருஞ்சேனை சத்துருவான ஸாத்யகியைவிட்டுப் பத்துத் திக்குகளிலும் ஓடிற்று.

பதினோராவது அத்யாயம்

(ப்ரதிவிந்தியனாலும் ஸ்ருதகர்மாவினாலும் முறையே சித்ரனும் சித்ரஸேனனும் கொல்லப்பட்டது)

அரசரே! பிறகு, ஸ்ருதகர்மா யுத்தத்தில் கோபங்கொண்டு ராஜாவான சித்ரஸேனனை ஐம்பது பாணங்களால் அடித்தான். வேந்தரே! சித்ரஸேனனோ அந்த ஸ்ருதகர்மாவை வணங்கின கணுக்களுள்ள ஒன்பது பாணங்களால் அடித்து ஸாரதியையும் ஐந்து பாணங்களால் அடித்தான். பிறகு, ஸ்ருதகர்மா கோபங்கொண்டு படைமுனையில் சித்ரஸேனனை மிக்ககூர்மையுள்ள நாராசத்தினாலே மர்மஸ்தானத்தில் அடித்தான். மஹாராஜரே! வீரனான சித்ரஸேனன் மகாபலசாலியான ஸ்ருதகர்மாவினால் அம்பினால் மிக அடிக்கப்பட்டு மூர்ச்சையை அடைந்தான்; புத்தியையும் இழந்தான். இந்தச் சமயத்தில், மிக்க கீர்த்தியுடையவனான ஸ்ருதகீர்த்தி ராஜாவான இந்த ஸ்ருதகர்மாவைத் தொண்ணூறு பாணங்களால் மூடினான். பிறகு, மகாரதனான சித்ரஸேனன் பிரஜ்ஞையடைந்து ஒரு பல்லத்தினாலே ஸ்ருதகர்மாவின் வில்லைத் துண்டாடி அவனையும் ஏழு பாணங்களால் அடித்தான். அந்த ஸ்ருதகர்மா (சத்துருவின்) வேகத்தை நாசம் செய்யக்கூடியதும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டதுமான வேறு வில்லை எடுத்துச் சித்ரஸேனனைச் சரமாரிகளாலே விசித்திரமான ரூபத்தைத் தரித்தவனாகச் செய்தான். அம்புகளால் சித்திரவர்ணமுள்ளவனாகச் செய்யப்பட்டவனும் விசித்திரமான மாலைகளை அணிந்தவனும் அரசனும் யௌவனமுள்ளவனுமான அந்தச் சித்ரஸேனன் பெரிய யுத்தரங்கத்தில் முட்களால் நிறைந்த முள்ளம்பன்றிபோல் விளங்கினான். பிறகு, சூரனான சித்ரஸேனன் ஸ்ருதகர்மாவை நாராசத்தினால் நடுமார்பில் வேகமாகப் பிளந்து வேகமாக 'நில், நில்' என்றும் சொன்னான். ஸ்ருதகர்மாவும், அந்த யுத்தத்தில் நாராசத்தால் அடிக்கப்பட்டு, ஒரு மலையானது தாதுக்களோடு கலந்த அருவியைப் பெருக்குவதுபோல இரத்தத்தைப் பெருக்கினான். பிறகு இரத்தத்தால் நனைக்கப்பட்ட அங்கங்களுள்ளவனும், இரத்தத்தால் உண்டுபண்ணப்பட்ட காந்தியுள்ளவனும், வீரனுமான அந்த ஸ்ருதகர்மா யுத்தத்தில் பூத்திருக்கின்ற பலாச விருக்ஷம்போல விளங்கினான். வேந்தரே! பிறகு, சத்துருவினாலே நன்றாக எதிர்க்கப்பட்ட ஸ்ருதகர்மா, கோபங்கொண்டு, பகைவர்களைத் தடுக்குந் திறமையுள்ள சித்ரஸேனனுடைய வில்லை இரண்டாகத் துண்டாக்கினான். பிறகு, வில் அறுக்கப்பட்டவனான சித்திரஸேனனை முந்நூறு நாராசங்க

ளாலே மூடி யுத்தத்தில் சிறந்த பாணங்களாலே அடித்தான். பிறகு, தீட்டப்பட்டதும் கூர்மையுள்ளதுமான வேறொரு பல்லத்தி னாலே மகாபலசாலியான அந்தச் சித்ரஸேனனுடைய தலைப்பாகை யையணிந்த தலையை அறுத்தான். சித்திரஸேனனுடைய காந்தி யுள்ள அந்தத் தலையானது, ஆகாயத்தினின்று தற்செயலாக நழுவி விழுகின்ற சந்திரன்போலப் பூமியில் விழுந்தது. ஐயா! அபிஸா ராதிபதியான சித்திரஸேன ராஜன் கொல்லப்பட்டதைக் கண்டு அவனுடைய ஸேனாவீரர்கள் விரைவாக ஓடினார்கள். பிறகு, கோபங்கொண்டவனும் பெரிய வில்லாளியுமான ஸ்ருதகர்மா, முடிவுக்காலத்தில் கோபங்கொண்ட யமன் எல்லாப் பிராணிகளை யும்நாசஞ்செய்வதுபோல, ஓடுகின்ற அச்சைனியத்தை அம்புகளால் அடித்து நாசஞ்செய்தான். யுத்தத்தில் உமது பௌத்திரனும் வில்லாளியுமான ஸ்ருதகர்மாவினாலே வதம் பண்ணப்படுகின்ற அந்த வீரர்கள் காட்டுத்தீயினால் தகிக்கப்பட்ட யானைகள்போல விரைவாகத் திக்குகளில் ஓடினார்கள். சத்துருக்களை ஜயிப்பதில் ஊக்கத்தையிழந்து ஓடுகின்ற அவர்களைக் கண்டு ஸ்ருதகர்மா கூர் மையான அம்புகளால் துரத்திக்கொண்டு பிரகாசித்தான். பிறகு, பிரதிவிந்தியன் ஐந்து பாணங்களாலே சித்திரனைப் பிளந்து மூன்று பாணங்களால் அவனது ஸாரதியை அடித்து ஒரு பாணத்தால் அவன் த்வஜத்தையும் அடித்தான். சித்திரனும் அந்தப் பிரதிவிந்தி யனைப் பொற்கட்டுகளையுடையவைகளும் பளபளப்பான நுனிக ளுள்ளவைகளும் கழுகிறகுகளால் வேகமுள்ளவைகளாகச்செய்யப் பட்டவைகளுமான ஒன்பது பல்லங்களாலே இரண்டு கைகளி லும் மார்பிலும் அடித்தான். பாரதரே! பிரதிவிந்தியன் பாணங் களாலே அந்தச் சித்திரனுடைய வில்லையறுத்துக் கூர்மையுள்ள ஐந்து பாணங்களாலே அவனையும் அடித்தான். மஹாராஜரே! பிறகு, சித்திரன் ஸ்வர்ணகண்டைகளுடன் கூடியதும் நெருங்க முடியாததும் உயிர்களைத் தேடுகிறதுபோலிருப்பதுமான ஒரு சக்தியைப் பிரதிவிந்தியன்மீது பிரயோகித்தான். வேகமாக வரு கின்றதும் ஆகாயத்திலுள்ள எரிநக்ஷத்திரம் போன்றதுமான அந்தச் சக்தியைப் பிரதிவிந்தியன் யுத்தத்தில் சிரித்துக் கொண்டே இரண்டாக வெட்டினான். பிரதிவிந்தியனுடைய கூர் மையுள்ள அம்புகளாலே இரண்டாக அறுக்கப்பட்ட அந்தச் சக்தியாயுதம், யுகாந்த காலத்தில் எல்லாப் பிராணிகளையும் பய மடையச் செய்கின்ற இடிபோல விழுந்தது. சித்திரன் அந்தச் சக்தியானது வீணாகச் செய்யப்பட்டதைக் கண்டு பொன்னின் தொகுதியால் அலங்கரிக்கப்பட்ட பெரிய கதையை எடுத்துப்

பிரதிவிந்தியன்மீது பிரயோகித்தான். மகாயுத்தத்தில் அந்தக் கதாயுதம் பிரதிவிந்தியனுடைய குதிரைகளையும் ஸாரதியையும் ரதத்தையும் பொடிசெய்து விரைவாகப் பூமியை நாடியது. பரா தரே! பிரதிவிந்தியன் இதே ஸமயத்தில் ரதத்தினின்று துள்ளிக் குதித்து ஸ்வர்ணமயமான தண்டத்தையுடையதும் அலங்கரிக்கப் பட்டதுமான சக்தியைச் சித்திரன்மீது பிரயோகித்தான். ராஜரே! மிக்க மனோதைரியமுள்ள ராஜாவான சித்திரன் வருகின்ற கதா யுதத்தைக் கையினால் பிடித்து அதனையே பிரதிவிந்தியன்மீது திருப்பி எறிந்தான். மிக்க ஒளி பொருந்திய அந்தக் கதாயுதம் யுத் தத்தில் சூரனான பிரதிவிந்தியனை அடைந்து வலக்கையைப் பிளந்து பூமியில் விழுந்தது. விழுகின்ற அந்தக் கதாயுதமானது அந்த இடத்தை மின்னல்போலப் பிரகாசிக்கச்செய்தது. அரசரே! பிறகு, பிரிதிவிந்தியன் மிகுந்த கோபங்கொண்டு சித்திரனைக் கொல்ல வேண்டுமென்கிற எண்ணத்தினால் பொன்னால் அலங்கரிக்கப்பட்ட ஒரு தோமரத்தைப் பிரயோகித்தான். அந்தத் தோமரம் அவனது தேகத்தில் அணிந்திருக்கின்ற கவசத்தையும் அவன் மார்பையும் பிளந்து பெரிய ஸர்ப்பம் புற்றில் புகுவதுபோலப் பூமியில் விரை வாகப் புகுந்தது. அரசனான அந்தச் சித்திரன், அப்பொழுது தோமரத்தினால் அடிக்கப்பட்டு, பருத்தும் நீண்டும் பரிகாயுதத் துக்கு ஒப்பாயுள்ள இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டு கீழே விழுந்தான். சித்திரன் கொல்லப்பட்டதைக் கண்டு யுத்தத்தில் பிரகாசிக்கின்றவர்களான உம்மைச் சேர்ந்த வீரர்கள் பிரதிவிந்தி யனை நோக்கி நான்கு பக்கங்களினின்றும் விரைவாக எதிர்த்தோடி வந்தார்கள். பற்பலவிதமான பாணங்களையும் கிங்கிணிகளுடன் கூடிய சதக்னிகளையும் அவர்கள் பிரயோகித்துக்கொண்டு சூரி யனை மேகக்கூட்டங்கள் மூடுவதுபோல அந்தப் பிரதிவிந்தியனை மூடினார்கள். தோள்வலிமை மிகுந்த பிரதிவிந்தியன், யுத்தத் தில் பாணஸமூகத்தினாலே அவர்களை நாசம் செய்து, வஜ்ரபாணி யான இந்திரன் அஸுரசேனையைத் துரத்துவதுபோல, உம் முடைய சேனையைத் துரத்தினான். வேந்தரே! யுத்தத்தில் பாண் டவர்களாலே வதம் செய்யப்படுகின்ற உம்மைச் சேர்ந்தவர்கள் காற்றினால் அலைக்கப்பட்ட மேகங்கள்போல விரைவாகச் சிதறினார்கள். நான்கு பக்கங்களிலும் அடிக்கப்படுகின்ற அந்தச் சைனியம் ஓடவே, துரோண புத்திரர் ஒருவரே மஹாபலசாலியான பீமஸேனனை விரைவாக எதிர்த்தார். முற்காலத்தில் தேவாஸுர யுத்தத்தில் விருத்திரனுக்கும் இந்திரனுக்கும் சண்டை நேர்ந்தது

போல யுத்தத்தின்பொருட்டுக் கோரமான சேர்க்கையானது அவ்விருவருக்கும் விரைவாக உண்டாகியது.

பன்னிரண்டாவது அத்யாயம்

(பீமஸேனனுக்கும் அஸ்வத்தாமாவுக்கும் யுத்தம்)

அரசரே! பிறகு, துரோண புத்திரர், மிக்க விரைவுடன் அஸ்த்ரலாகவத்தை வெளியிட்டுக்கொண்டு பாணத்தினாலே பீமஸேனனை அடித்தார். பிறகு, எதிரியின் மர்மஸ்தானங்களை அறிந்த அஸ்வத்தாமா ஹஸ்தலாகவத்துடன் எல்லா மர்மஸ்தானங்களையும் பார்த்துக் கூர்மையுள்ள தொண்ணூறு பாணங்களாலே மறுபடியும் அந்தப் பீமனை அடித்தார். அரசரே! துரோண புத்திரரால் கூர்மையுள்ள அம்புகளால் இறைக்கப்பட்ட பீமஸேனன், யுத்தரங்கத்தில், கிரணங்களுடன் கூடின சூரியன்போல விளங்கினான். பிறகு, பாண்டு புத்திரனான பீமஸேனன் நன்றாகப் பிரயோகிக்கப்பட்ட ஆயிரம் அம்புகளால் துரோண புத்திரரை மூடி ஸிம்மநாதஞ் செய்தான். அரசரே! பிறகு, துரோண புத்திரர் மந்தஹாஸத்துடன் பாணங்களால் பாணங்களைத் தடுத்து யுத்தத்தில் பாண்டவனை ஒரு நாராசத்தினால் நெற்றியில் அடித்தார். வேந்தரே! பிறகு, பாண்டவன், வனத்தில் கொழுத்திருக்கிற கட்கமிருகமானது கொம்பைத் தாங்குவதுபோல நெற்றியில் தைத்த பாணத்தைத் தாங்கினான். பிறகு, பராக்கிரமசாலியான அவன், ஆச்சரியங்கொண்டு; யுத்தத்தில் முயற்சியுள்ள துரோண புத்திரரை மூன்று நாராசங்களால் நெற்றியில் அடித்தான். பிறகு, அந்தப் பிராமணரான துரோண புத்திரர் நெற்றியில் தைத்திருக்கின்ற பாணங்களாலே வர்ஷாகாலத்தில் நனைக்கப்பட்ட மூன்றுகொடுமுடிகளுள்ள பர்வதராஜன்போல விளங்கினார். பிறகு, துரோணபுத்திரர் பாண்டவனை அனேக அம்புகளால் அடித்தார். காற்று மலையை அசைக்க முடியாததுபோலத் துரோண புத்திரர் பீமஸேனனை அசைப்பதற்குச் சக்தியற்றவரானார். அவ்வாறே மிக்க ஊக்கமுள்ளவனான பாண்டவன் ஜலப்பிரவாகம் மலையை அசைக்கமுடியாததுபோல யுத்தத்தில் அஸ்வத்தாமாவைக் கூர்மையான அனேக அம்புகளாலும் அசைக்கமுடியவில்லை. கோரமான அம்புகளாலே ஒருவரை ஒருவர் மூடுகின்றவர்களும் மகாரதர்களும் வலிமைமிக்கவர்களும் தீரர்களுமான அவ்விருவரும் சிறந்த தேர்களிலிருந்து விளங்கினார்கள். உத்தமமான பாணங்களாலே ஒருவரையொருவர் தவிக்கும்படி செய்கின்ற அவ்விருவரும் தட்கிரணங்களாலே உலகங்களுக்கு நாசத்தை

உண்டுபண்ணுகின்றவர்களும் மிக ஜ்வலிக்கின்றவர்களுமான இரண்டு சூரியர்கள்போல விளங்கினார்கள். பிறகு, மகாயுத்தத்தில் எதிர்த்து யுத்தஞ்செய்வதில் முயற்சியைச்செய்கின்றவர்களும்புருஷ ஶ்ரேஷ்டர்களுமான அவ்விருவரும், செய்ததற்குப் பிரதிசெய்வதில் முயற்சியுள்ளவர்களாகவும் பயமற்றவர்களாகவும், அம்புகளாகிற கோரப்பற்களையுடையவைகளும் ஜயிக்கமுடியாதவைகளும் விற்களாகிற வாயையுடையவைகளும் பயங்கரமானவைகளுமான இரண்டு புலிகள்போலப் போர்க்களத்தில் ஸஞ்சரித்தார்கள். ஆகாயத்தில் மேக மண்டலங்களால் மறைக்கப்பட்ட சந்திரசூரியர்கள் போலப் பாணஜாலங்களால் அவ்விருவரும் நாற்புறங்களிலும் மறைக்கப்பட்டுக் காணக்கூடாதவர்களானார்கள். பகைவர்களை அடக்குகிறவர்களான அவ்விருவரும் மேகக்கூட்டத்தினால்விடுபட்ட அங்காரகனும் புதனும்போலப் பிரகாசித்தார்கள். பிறகு, துரோண புத்திரர், மிக்க பயங்கரமான அவ்வித யுத்தம் நடக்கையில், மேகம் மழைத்தாரைகளைப் பர்வதத்தின்மீது பொழிவதுபோல உக்கிரமான அனேக அம்புகளை இறைத்துக்கொண்டு அந்த யுத்தகளத்தில் விருகோதரனை அப்ரதக்ஷிணமாகச் சுற்றிவந்தார். பீமன் சத்துருவினுடைய வெற்றிக்குறிப்பான அச்செய்கையைப் பொறுக்கவில்லை. வேந்தரே! பிறகு, பாண்டவனும் அபஸவ்யமாகச் சுற்றிப் பிரதிசெய்தான். புருஷஶ்ரேஷ்டர்களான அவ்விருவருக்கும் பற்பலவிதமான மண்டல கதிகளாலும் போக்குவரவினாலும் பிரமாதமான யுத்தம் நடந்தது. அவ்விருவரும், மண்டலஸ்தானத்திலேயே பலவிதமான மார்க்கங்களில் ஸஞ்சரித்துக் காதுவரையில் இழுத்துவிடப்பட்ட அம்புகளால் ஒருவரையொருவர் அடித்தார்கள்; ஒருவரை ஒருவர் கொல்வதிலும் மிகுந்த முயற்சியைச் செய்தார்கள்; அன்யோன்யம் யுத்தத்தில் தேரை இழக்கும்படி செய்வதிலும் முயற்சிசெய்தார்கள். பிறகு, மகாரதரான அசுவத்தாமா மகாஸ்திரங்களை வெளியிட்டார். பிறகு, பாண்டவன் யுத்தத்தில் அந்த அஸ்திரங்களை அஸ்திரங்களாலேயே திருப்பியடித்தான். மஹாராஜரே! பிறகு, பிராணிகளை நாசஞ்செய்யும் காலத்தில் அங்காரகன் முதலான கிரகங்களுக்கு எவ்வாறு கோரமான யுத்தம் நேருமோ அவ்வாறே கோரமான அஸ்திர யுத்தம் நடந்தது. பாரதரே! அவ்விருவராலும் விடப்பட்ட அந்தப் பாணங்கள் எல்லாத் திக்குக்களையும் பிரகாசிப்பித்துக்கொண்டு நான்கு பக்கங்களிலும் உம்முடைய சேனையில் வந்து பாய்ந்தன. ஆகாயமானது பாணஸமூகங்களால் சூழப்பட்டுப்பயங்கரமாகியது. வேந்தரே! பிரஜைகளுக்கு

முழுதும் நாசமுண்டாகிற காலத்திற்போல யுத்த பூமியானது, விழுகின்ற எரிநக்ஷத்திரங்களால் எல்லாப்பக்கங்களிலும் சூழப்பட்டது. அந்த யுத்தத்தில் பொறிகளுடனும் பிரகாசிக்கின்ற ஜ்வாலைகளுடனுங்கூடியதும் அந்த இரண்டு சேனையையுங் கொளுத்துவதுமான நெருப்பானது, பாணங்கள் ஒன்றோடொன்று மோதுவதினால் உண்டாயிற்று. மஹாராஜரே! பிரபுவே! யுத்தகளத்தில் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற ஸித்தர்கள், 'இந்த யுத்தம் எல்லா யுத்தங்களைக்காட்டிலும் மேலானது. எல்லா யுத்தங்களும் இந்த யுத்தத்தினுடைய பதினாறில் ஒரு பாகத்திற்கும் நிகராகாது; இவ்வித யுத்தம் எங்கும் ஒருபொழுதும் உண்டாகப்போகிறதில்லை; ஆச்சரியம்! பிராம்மணனும் க்ஷத்திரியனுமாகிய இவ்விருவரும் ஞானமுள்ளவர்கள்; ஆச்சரியமான சௌரியமுள்ளவர்கள்; இருவரும் உக்கிரமான பராக்கிரமமுள்ளவர்கள்; ஆச்சரியம்! பீமனோ பயங்கரமான பலமுள்ளவன்; இந்த அச்வத்தாமாவோ அஸ்திரங்களில் நல்ல பாண்டித்யமுள்ளவர்; வீரத்தினுடைய ஸாராம்சமானது ஆச்சரியகரமானது. இவ்விருவரும் அஸ்த்ரங்களைப் பிரயோகிக்கும் அழகானது ஆச்சரியகரமானது. இவ்விருவரும் யுத்தத்தில் காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்கும் ஒப்பானவர்கள். யுத்தத்தில் கோரரூபிகளும் ஆண்மையில் சிறந்தவர்களுமான இவ்விருவரும் இரண்டு ருத்திரர்கள் தோன்றியிருப்பதுபோலவும் இரண்டு சூரியர்கள் தோன்றியிருப்பதுபோலவும் இரண்டு யமன்கள் தோன்றியிருப்பதுபோலவும் இருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். இவ்விதமான ஸித்தர்களுடைய வார்த்தைகள் அடிக்கடி கேட்கப்பட்டன. ஒன்றுகூடியிருக்கிற தேவர்களுடைய ஸிம்மநாதமும் தோன்றியது. ஆச்சரியகரமும் யுத்தத்தில் நினைக்கவும் அரிதுமான அவ்விருவருடைய செய்கையையும் கண்டு ஸித்தசாரணர்களுடைய கூட்டங்களுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அப்பொழுது தேவர்களும் ஸித்தர்களும் பரமரிஷிகளும் புகழ்ந்தார்கள்; 'மிக்க புஜபலமுள்ளவரே! துரோண புத்திரரே! நல்லது, பீமா! நல்லது' என்றும் சொன்னார்கள்.

அரசரே! பரஸ்பரம் அபராதிகளாயிருக்கிற அந்தச் சூரர்களிருவரும் யுத்தத்தில் சினத்தினால் கண்களை நெறித்து விழித்து ஒருவரையொருவர் பார்த்தார்கள். கோபத்தினால் சிவந்த கண்களையுடையவர்களும் கோபத்தினால் மிகத்துடிக்கின்ற உதடுகளுள்ளவர்களும் கோபத்தினால் பற்களையும் உதடுகளையும் நன்றாகக் கடித்துக்

கொண்டவர்களும் மகாரதர்களுமான அவ்விருவரும் அம்புகளா கிற ஜலத்தையும் சஸ்திரங்களாகிற மின்னலொளியையுமுடைய (இரண்டு மேகங்கள்போல) யுத்தத்தில் ஒருவரையொருவர் அம்பு மழையினால் மூடினார்கள். மகாயுத்தத்தில் அன்யோன்யம் ஒருவர் மற்றொருவருடைய கொடியையும் ஸாரதியையும் அடித்து, ஒருவர் மற்றொருவருடைய குதிரைகளையும் கொன்று, ஒருவர் மற்றொருவ ரைப் பிளந்தார்கள். மஹாராஜரே! பிறகு, இருவரும் மகாயுத்தத் தில் கோபங்கொண்டு இரண்டு பாணங்களை எடுத்து ஒருவரை யொருவர் கொல்ல விரும்பி விரைவாகப் பிரயோகித்தார்கள். மஹா ராஜரே! வஜ்ரத்தினுடைய வேகம்போன்ற வேகமுடையவைகளும் (ஒருவராலும்) நெருங்கமுடியாதவைகளுமான அவ்விரண்டு பாணங்களும் ஸேனாமுகத்தில் பிரகாசித்துக்கொண்டு நன்றாகத் தாக்கி அடித்தன. அப்பொழுது, பரஸ்பரமுள்ள வேகத்தாலும் அம்புகளாலும் அதிகமாகத் துன்பஞ் செய்யப்பட்ட மகாவீரிய சாலிகளான அவ்விருவரும் தத்தம் தேர்த்தட்டில் விழுந்தார்கள். அரசரே! பிறகு, ஸாரதியோ துரோண புத்திரர் பிரஜ்ஞை யிழந் திருப்பதை அறிந்து எல்லாச் சேனைகளும் பார்த்துக்கொண்டிருக் கும்பொழுதே யுத்தரங்கத்தைவிட்டு விலக்கிக் கொண்டுபோனான். வேந்தரே! அவ்வாறே, விசோகன், யுத்தத்தில் பகைவரை வாட்டு கிறவனும் அடிக்கடி மூர்ச்சையடைகின்றவனுமான பீமனைத் தேருடன் வேறிடத்துக்குக் கொண்டுபோனான்.

பதின்மூன்றாவது அத்யாயம்

(சல்யனால் ஶ்ருதகீர்த்தி தோல்வியடைந்தது)

மஹாராஜரே! பிறகு, கூர்மையான பாணங்களை இறைத்துக் கொண்டுவருகின்ற ஶ்ருதகீர்த்தியைச் சல்யன் மனக்களிப்புடன் தடுத்தான். மகாரதனான ஶ்ருதகீர்த்தி மத்ரராஜனை அடைந்து பொன்னால் அலங்கரிக்கப்பட்ட இருபது பல்லங்களால் அடித் தான். பாரதரே! ஶ்ருதகீர்த்தி அந்தச் சல்யனை நேராகச் செல்லு கின்ற மூன்றம்புகளாலே விரைவாகத்திருப்பியடித்து அவனுடைய ஸாரதியையும் ஒரு பல்லத்தினால் நன்கு அடித்தான். அந்த ஶ்ருத கீர்த்தி சரமாரியினால் யுத்தத்தில் சல்யனை மூடி அவனுடைய தேரைக் குறித்துக் கூர்மையான அம்புகளைப் பிரயோகித்தான். மஹாராஜரே! பிறகு, சல்யன் யுத்தத்தில் ஶ்ருதகீர்த்தியினுடைய கைகளால் விடப்பட்ட பாணங்களை வணங்கின கணுக்களுள்ள

பாணங்களால் துண்டாடினன். பிறகு, ஸ்ருதகீர்த்தி சல்யனை உருக்குமயமான ஒன்பது பாணங்களால் அடித்து அவனுடைய ஸாரதியையும் மூன்று பாணங்களாலடித்துச் சல்யனை மறுபடியும் ஐந்து பாணங்களாலடித்தான். சல்யன் அந்த ஸ்ருதகீர்த்தியினுடைய வில்லையுங் கையுறையையும் அறுத்துச் சிறந்த ஏழு பாணங்களாலே யுத்தத்தில் அவனையும் விரைவாக அடித்தான். பிறகு, மகாரதனான ஸ்ருதகீர்த்தி வேறு தனுஸை எடுத்து மத்ரராஜனை அறுபத்துநான்கு பாணங்களாலே கைகளிலும் மார்பிலும் அடித்தான். வேந்தரே! பிறகு, அந்த ஸ்ருதகீர்த்தியினாலே பாணங்களால் யுத்தத்தில் அடிக்கப்பட்ட சல்யன் கூர்மையுள்ள தொண்ணூறு பாணங்களாலே அந்த ஸ்ருதகீர்த்தியைத் திருப்பியடித்தான். மத்ரராஜன் மறுபடியும் ஸ்ருதகீர்த்தியினுடைய வில்லைத் துண்டாக்கினன். அறுக்கப்பட்ட வில்லுள்ளவனான அந்த ஸ்ருதகீர்த்தி விரைவுடன் யுத்தத்தில் ஒரு கதையைப் பிரயோகித்தான். பாரதரே! பொன்னாலும் வெள்ளியாலும் பட்டங்கள் கட்டப்பட்டுச் சிறந்த வஸ்த்ரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு ஸ்திரீபோல் விளங்குகின்றதும் விரைவாக வருகின்றதும் பிரகாசிக்கின்றவஜ்ரத்தினுடைய காந்திபோன்ற காந்தியுள்ளதுமான அந்தக் கதையை மத்ரராஜன் அநேக ஆயிரக்கணக்கான அம்புகளாலே தடுத்தான். வேந்தரே! பிறகு, மிகுந்த முயற்சியையுடைய வீரனான சல்யன் கதையைத் தடுத்துப் பூமியில் தள்ளி ஸ்ருதகீர்த்தியையும் ஐந்து பாணங்களால் அடித்தான். திரும்பவும் ஸ்ருதகீர்த்தி யுத்தத்தில் சல்யன்மீது ஸர்ப்பத்திற்கொப்பான ஒரு சக்தியைப்ரயோகித்தான். சல்யன் அந்தச் சக்தியை இரண்டாகத் துண்டாக்கினன். அது பூமியிற் சிதறியது. ஆண்மையிற் சிறந்தவரே! குழந்தையினுடைய கையினின்று தின்பண்டங்களைப் பருந்து கவருவதுபோலச் சல்யன் க்ஷுரப்ரத்தினல் அந்த ஸ்ருதகீர்த்தியினுடைய ஸாரதியின் உடலிலிருந்து தலையை அறுத்தான். பாரதரே! அந்த ஸ்ருதகீர்த்தியினுடைய ஸாரதி தேர்த்தட்டினின்று விழுந்தான். பிறகு, மகாபலசாலியான ஸ்ருதகீர்த்தியினுடைய குதிரைகள் யுத்தத்தில் (எல்லாப் பக்கங்களிலும்) ஓடின. மஹாராஜரே! எல்லா யுத்த வீரர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ருதகீர்த்தி, ஓடுகின்ற அந்தக் குதிரைகளாலே யுத்தரங்கத்தினின்று வேறிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டான். பிறகு, மத்ரதேசாதிபதியான சல்யன், ஸந்தோஷத்துடன், தாமரை ஓடையில் யானை புகுவதுபோலப் பாண்டவ சேனையில் புகுந்தான். ஸிம்மமானது

மிருகக் கூட்டங்களை அலைப்பதுபோலச் சல்யன் அந்த மகாயுத்தத்தில் மகாபலசாலிகளான பாண்டவர்களுடைய சேனையை அலைத்தான். அவன் பாண்டவ வீரர்களையும் பாஞ்சால வீரர்களையும் நாசஞ்செய்து பகைவர் படைகளில் நிலைபெற்றவனாக இருந்துகொண்டு புகையில்லாமல் ஜ்வலிக்கின்ற நெருப்புப்போல யுத்தரங்கத்தில் விளங்கினான். ஜ்வலிக்கின்ற அக்னி உலர்ந்த காட்டைக் கொளுத்துவதுபோலச் சல்யன் பெரிய சேனையாகிற காட்டைக் கொளுத்தித் திரிபுரத்தை எரித்துச் சங்கரர் விளங்கியதுபோல யுத்தரங்கத்தில் நிலைபெற்று விளங்கினான்.

பதினான்காவது அத்யாயம்

(ஸஹதேவனால் துச்சாஸனன் தோல்வியடைந்தது)

மஹாராஜரே! அவ்வாறாகக் கோபங்கொண்டவனும் உமது படையை அழிக்கின்றவனும் பிராதாவுமான ஸஹதேவனைப் பிராதாவான துச்சாஸனன் எதிர்த்தான். மஹாராஜரே! அவ்விடத்தில் எதிர்த்திருக்கிற அவ்விருவரையுங் கண்டு மகாரதர்கள் ஸிம்மநாதங்களைச் செய்தார்கள்; ஆடையையும் வீசினார்கள். பாரதரே! பிறகு, ரோஷமுள்ளவனும் வில்லாளியுமான உம்முடைய புத்திரன் பலசாலியான பாண்டுபுத்திரனை மூன்று பாணங்களாலே மார்பில் அடித்தான். வேந்தரே! பிறகு, ஸஹதேவன் உமது புத்திரனை ஒரு நாராசபாணத்தால் அடித்து எழுபது பாணங்களால் அவனையும் மூன்று பாணங்களால் ஸாரதியையும் அடித்தான். பிறகு, துச்சாஸனன் மகாயுத்தத்தில் வில்லைத் துணித்து எழுபத்துமூன்று பாணங்களாலே ஸஹதேவனைக் கைகளிலும் மார்பிலும் அடித்தான். ஸஹதேவனோ, மிகுந்த கோபங்கொண்டு, மகாயுத்தத்தில் வாளை எடுத்து விரைவாகச் சுழற்றி உமது குமாரனுடைய தேரின்மீது எறிந்தான். பெரிதான வாள் துச்சாஸனனுடைய வில்லைப்பாணத்தோடும் நாண்கயிற்றோடும் துண்டாக்கி ஆகாயத்தினின்று நழுவின ஒரு ஸர்ப்பம்போலப் பூமியில் விழுந்தது. பிறகு, பிரதாபசாலியான ஸஹதேவன் வேறு வில்லை எடுத்து நாசத்தை உண்டுபண்ணுகிற ஓரம்பைத் துச்சாஸனன்மீது பிரயோகித்தான். துச்சாஸனன் (தன்னை நோக்கி) வருகின்றதும், யமதண்டத்திற்கு ஒப்பான காந்தியுள்ளதுமான அந்தப் பாணத்தைக் கூர்மையான நுனியுள்ள ஒரு கத்தியினாலே இரண்டாகத் துண்டாக்கினான். பிறகு, வீரியமுடையவனான அவன் யுத்தத்தில்

கூர்மையுள்ள அந்தக்கத்தியைச் சுழற்றி எறிந்துவிட்டு விரைவுடன் வேறுவில்லையும் எடுத்து ஓர் அம்பையும் எடுத்தான். ஸஹதேவன் யுத்தத்தில் வேகமாக வருகின்ற அந்தக் கத்தியைப் புன்னகை யுடன் கூர்மையான அம்புகளாலே (அறுத்துத்) தள்ளினான். பாரதரே! பிறகு, உம்முடைய குமாரனான துச்சாஸனன் மகா யுத்தத்தில் ஸஹதேவனுடைய தேரின்மீது அறுபத்துநான்கு பாணங்களை விரைவாக எய்தான். ராஜரே! யுத்தத்தில் வேகத் தோடு வருகின்ற அனேகமான அந்தப் பாணங்களுள் ஒவ்வொன் றையும் ஸஹதேவன் ஐந்தைந்து பாணங்களால் அறுத்தான். பிரதாபசாலியான அவன் சிறந்த பாணங்களைத் தடுத்துப் பிறகு யுத்தத்தில் துச்சாஸனன்மீது அனேக பாணங்களைப் பிரயோகித் தான். உம்முடைய புத்திரனும் அந்தப் பாணங்களை ஒவ்வொன் றையும் மும்மூன்று பாணங்களால் துணித்துப் பூமியை எதிரொலி யிடும்படி செய்துகொண்டு பெருந்த ஸிம்மநாதம் செய்தான். மன்னவரே! பிறகு, துச்சாஸனன் யுத்தத்தில் பாண்டுபுத்திரனை இரண்டு பாணங்களாலும் அவனுடைய ஸாரதியை ஒன்பது பாணங்களாலும் நிரப்பினான். மஹாராஜரே! பிறகு, பிரதாப சாலியான ஸஹதேவன் கோபம் மிக்கு மிருத்யுவுக்கும் காலனுக் கும் அந்தகனுக்கும் ஒப்பான கோரமான அம்பைத் தொடுத் தான். அந்த ஸஹதேவன் வில்லைத் திடமாக இழுத்து உமது புத்திரன்மீது அதனைப் பிரயோகித்தான். அரசரே! அந்தப் பாணமானது பெரிதான அவனுடைய கவசத்தை உடைத்து வேகத்துடன் அவனையும் பிளந்து ஸர்ப்பம் புற்றில் நுழைவது போலப் பூமியில் பிரவேசித்தது. அரசரே! பிறகு, மகாரதனான உம்முடைய குமாரன் மதிமயக்கமடைந்தான். மூர்ச்சையடைந்த வனும் கூர்மையான பாணங்களால் அடிக்கப்படுகின்றவனுமான அவனைப் பார்த்து ஸாரதியானவன் மிகப் பயந்து ரதத்தை விரை வுடன் வேறு இடம் செலுத்தினான். பாண்டுபுத்திரன் யுத்தத்தில் அந்தக் கௌரவனைத் தோல்வியடையச்செய்து துரியோதன னுடைய சேனையைப் பார்த்து நான்கு புறங்களிலும் அடித்தான். பாரதரே! ஒரு மனிதன் ரோஷத்தினாலே எறும்புக்கூட்டைத் தேய்ப்பதுபோல அந்தக் கௌரவசேனையை ஸஹதேவன் தேய்த்தான்.

பதினைந்தாவது அத்யாயம்

(கர்ணனுக்கும் நகுலனுக்கும் யுத்தமும், கர்ணன் நகுலனை வென்று பரிஹாஸஞ் செய்ததும்.)

வேந்தரே! யுத்தத்தில் வேகத்தோடு சேனையை ஓடும்படி செய்கின்ற நகுலனைச் சூரியகுமாரனான கர்ணன் ரோஷத்தினால் தடுத்தான். பிறகு, நகுலனே, கர்ணனைப்பார்த்து அட்டஹாஸம் செய்துகொண்டு, 'அடா! பாவீ! யுத்தத்தில் என்னுடைய கண்ணிற்கு நீ புலப்பட்டமையால், நான் தேவர்களாலே குளிர்ந்த கண்ணால் வெகு காலத்திற்குப் பிறகு (இப்பொழுதுதான்) பார்க்கப்பட்டேன். அனர்த்தங்களுக்கும் வைரத்திற்கும் கலகத்திற்கும் நீயல்லவோ மூலம்? உனது குற்றத்தினாலே குருகுலத்தவர்கள் ஒருவரோடொருவர் எதிர்த்து நாசம் அடைந்துவிட்டார்கள். உன்னை இப்பொழுது யுத்தத்தில் கொன்று மனக்கவலை நீங்கிக் கார்யத்தைச் செய்துமுடித்தவன் ஆகப்போகிறேன்' என்று கூறினான். இவ்வாறு சொல்லியதைக்கேட்ட ஸூதபுத்திரன் நகுலனைப்பார்த்து, 'ஓ! வீரனே! ராஜகுமாரனும் சிறந்த வில்லாளியுமான உனக்குத் தக்கபடி என்மீது பாணங்களைப் பிரயோகம் செய். உன் வல்லமையைப் பார்ப்போம். சூர! யுத்தத்தில் காரியத்தைச் செய்துவிட்டுப் பிறகு தற்புகழ்ச்சி செய்துகொள். அப்பனே! சூரர்கள் யுத்தத்தில் வாயினால் சொல்லாமல் சக்தியினால் போர்புரிவார்கள். என்னோடு வல்லமையுடன் யுத்தம் செய். உனது கொழுப்பையே நாசம் செய்யப்போகிறேன்' என்று மறுமொழி கூறினான். ஸூதபுத்திரன் இவ்விதம் சொல்லிவிட்டுப் பாண்டுபுத்திரனை விரைவாக அடித்தான். கர்ணன் நகுலனை யுத்தத்தில் எழுபத்துமூன்று பாணங்களால் அடித்தான். பாரதரே! பிறகு நகுலனே கர்ணனாலடிக்கப்பட்டு ஸர்ப்பம்போன்ற எண்பது பாணங்களாலே அவனை அடித்தான். சிறந்த வில்லாளியான கர்ணன் தங்கக்கட்டுக்களையுடையவைகளும் சாணைக்கல்லில் தீட்டப்பட்டவைகளுமான முப்பது பாணங்களாலே நகுலனுடைய வில்லை அறுத்து அவனையும் அடித்தான். அந்தப் பாணங்கள் அவனுடைய கவசத்தை உடைத்துப் பற்களில் விஷத்தையுடைய ஸர்ப்பங்கள் பூமியைப் பிளந்து ஜலத்தைப் பருகுவதுபோல யுத்தத்தில் அவனுடைய இரத்தத்தைக் குடித்தன. பிறகு, நகுலன் ஸ்வர்ணமயமான பின்புறத்தையுடையதும் நாடமுடியாததுமான வேறுவில்லை எடுத்து எழுபது பாணங்களால் கர்ணனையும் மூன்று பாணங்களால் அவனுடைய ஸாரதியையும் அடித்தான். மகாராஜரே!

பிறகு, பகைவீரர்களைக் கொல்லுகிறவனான நகுலன் கோபங்கொண்டு மிக்க கூர்மையுள்ள க்ஷுரப்ரத்தினாலே கர்ணனுடைய வில்லை வெட்டினான். பிறகு, வீரனான நகுலன் வில் அறுக்கப்பட்டவனும் ஸர்வலோகமகாரதனுமான அந்தக் கர்ணனை(ப் பார்த்து) அட்டஹாஸஞ்செய்துகொண்டு முந்நூறு பாணங்களால் அடித்தான். ஐயா! பாண்டுபுத்திரனாலே பீடிக்கப்பட்ட கர்ணனைக் கண்டு ரிஷிகளும் தேவர்களும் அதிகமான ஆச்சரியத்தை அடைந்தார்கள். பிறகு, விகர்த்தனகுமாரனான கர்ணன் அப்பொழுது வேறு வில்லை எடுத்து நகுலனை ஐந்து பாணங்களால் மார்பின் மேற்பக்கத்தில் அடித்தான். மார்பில் தைத்திருக்கின்ற அந்தப் பாணங்களால் மாத்ரீபுத்திரன் உலகத்தில் தன்கிரணங்களாலே ஒளியைப் பரவச்செய்கின்ற ஸூர்யன்போலப் பிரகாசித்தான். ஐயா! பிறகு, நகுலனே ஏழுபாணங்களால் கர்ணனை அடித்து அவனுடைய வில்லின் நுனியை மறுபடியும் அறுத்தான். பிறகு, அந்தக் கர்ணன் யுத்தத்தில் அதிகவேகத்துடன் வேறு வில்லை எடுத்துப் பாணங்களால் நகுலனுக்கு நான்கு பக்கங்களிலும் திசைகளை மூடினான். மகாரதனான நகுலன் கர்ணனுடைய வில்லினின்று விடுபட்ட அம்புகளாலே விரைவாக மூடப்பட்டு கர்ணனுடைய பாணங்களைத் தன் பாணங்களாலேயே விரைவாக வெட்டினான். பிறகு, ஆகாயத்தில் விரிக்கப்பட்ட அம்புமயமான வலையானது எல்லாப் பக்கங்களிலும் பறக்கின்ற மின்மினிப் பூச்சிகளுடைய கூட்டம்போலக் காணப்பட்டது. அரசரே! கர்ணனால் விடுக்கப்பட்ட அனேக அம்புகளாலே மூடப்பட்ட ஆகாயம் அப்பொழுது விட்டில்களுடைய கூட்டங்களாலே மூடப்பட்டதுபோல ஆகியது. ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளும் அடிக்கடி வரிசையாக வருகின்றவைகளுமான அந்த அம்புகள் வரிசையாக வருகின்ற க்ரௌஞ்ச பக்ஷிகள்போல் விளங்கின. ஆகாயம் பாணஸமூகங்களால் மூடப்பட்டு ஸூர்யனும் மறைக்கப்படவே, ஆகாயத்தில் ஸஞ்சரிக்கக்கூடிய ஒரு பிராணியும் ஸஞ்சரிக்கவில்லை. பாணஸமூகங்களாலே நாற்புறங்களிலும் வழி தடுக்கப்பட்டிருக்கையில், மகாபலசாலிகளான அவ்விருவரும், யுகாந்தகாலத்தில் உதித்திருக்கின்ற இரண்டு சூரியர்கள் போலவிளங்கினார்கள். ராஜேந்திரரே! கர்ணனுடைய வில்லினின்று விடுபட்ட அம்புகளாலே கொல்லப்படுகின்ற ஸோமகர்கள் வேதனையினால் பீடிக்கப்பட்டும் மிக்க துன்பத்துக்குள்ளாக்கப்பட்டும் பதுங்கினார்கள். வேந்தரே! அவ்வாறே நகுலனுடைய பாணங்களால் அடிக்கப்படுகின்ற உம்முடைய சேனையானது காற்றினாலே தள்ளப்பட்ட மேகங்கள்போலத் திசைகளில்

சிதறியது. அவ்விருவராலும் திவ்யமான சிறந்த பாணங்களாலே கொல்லப்படுகின்ற அவ்விரண்டு சேனைகளும் அப்பொழுது பாணம் விழும் இடத்தைத் தாண்டிப் பார்த்துக்கொண்டு நின்றன. கர்ண பாண்டவர்களுடைய அம்புகளாலே அந்த யுத்த பூமியில் ஜனங்கள் தூரவிலக்கப்பட்டிருக்கையில், மகாபலசாலிகளான அவ்விருவரும் யுத்த முனையில் திவ்யமான சஸ்திரங்களை வெளியிடுகின்றவர்களும் ஒருவரை ஒருவர் கொல்வதில் விருப்பமுள்ளவர்களும் விரைவாக மூடுகின்றவர்களுமாகச் சரமாரிகளால் அன்யோன்யம் அடித்துக் கொண்டார்கள். நகுலனால் விடப்பட்டவைகளும் கழுகிறகுகள் பூண்டவைகளுமான அம்புகள் சூதபுத்திரனை மூடிக்கொண்டு ஆகாயத்தில் எவ்வாறு நின்றனவோ அவ்வாறே ஸூதபுத்திரனாலே மகா யுத்தத்தில் பிரயோகிக்கப்பட்ட அம்புகள் பாண்டுபுத்திரனை மூடிக்கொண்டு ஆகாயத்தில் நின்றன. அரசரே! மேகங்களால் மூடப்படுகின்ற சூரிய சந்திரர்களைபோலச் சரமயமான வீட்டில் பிரவேசித்தவர்களான அவ்விருவரும் எவர்களாலும் காணப்பட வில்லை. பிறகு, யுத்தத்தில் கர்ணன் கோபங்கொண்டு சரீரத்தை அதிக கோரமாகச்செய்து எல்லாப் பக்கங்களிலும் சரமாரிகளாலே பாண்டவனை மூடினான். மகாராஜரே! ஸூதபுத்திரனால் நன்றாக மூடப்பட்ட அந்தப் பாண்டவன் மேகங்களால் மூடப்பட்ட சூரியன்போலத் துன்பத்தையடையவில்லை. ஐயா! பிறகு, அதிரத குமாரனான கர்ணன் சிரித்துக்கொண்டு நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் யுத்தத்தில் பாணஸமூகங்களைத் தொடுத்தான். மகாபலசாலியான அவனுடைய பாணங்களாலே எல்லாம் ஓரே நிழ லுள்ளனவாக இருந்தன. விழுகின்ற உத்தமமான பாணங்களால் மேகத்தின் நிழல் உண்டானதுபோலாயிற்று. மகாராஜரே! பிறகு, கர்ணன் மகாத்மாவான நகுலனுடைய வில்லைத் துண்டாடிச் சிரித் துக்கொண்டு அவனது ஸாரதியைத் தேர்த்தட்டினின்று கீழே தள்ளினான். பாரதரே! பிறகு, கூர்மையுள்ள நான்கு பாணங்களா லே அவனுடைய நான்கு குதிரைகளையும், விரைவாக யமனுடைய வீட்டிற்கு அனுப்பினான். ஐயா! பிறகு, யுத்தத்தில் அவனுடைய திவ்யமான தேரையும் கொடித்துணியையும் சக்ரரக்ஷகர்களையும் கதாயுதத்தையும் கத்தியையும் நூறு சந்திரப் பிரதிமைகளுள்ள அவனுடைய கேடகத்தையும் எல்லா உபகரணங்களையும் அம்பு களையும் பொன்னால் செய்யப்பட்ட அந்த வில்லையும் அம்புகளால் எள்ளளவு எள்ளளவாகத் தூளாக்கினான். ராஜரே! குதிரைகள் கொல்லப்பட்டவனும் ஸாரதியை இழந்தவனும் கவசமிழந்தவனு மான (நகுலன்,) ரதத்தினின்று விரைவாகக் கீழே இறங்கிப் பரி

காயுதத்தைக் கையில் எடுத்துநின்றான். வேந்தரே! ஸூதகுமாரன் அந்த நகுலனால் எடுக்கப்பட்ட மிகவும் கோரமான பரிகாயுதத்தை மிக்க கூர்மையுள்ளவைகளும் பெரிய கார்யங்களை நிறைவேற்றுதற்குச் சாதனமுமான அம்புகளாலே அடித்தான். கர்ணன் ஆயுதமிழந்தவனான அந்த நகுலனைக் குறிவைத்து வணங்கின கணுக்களுள்ள அனேக அம்புகளாலே அடித்தான். ஆனால், அவனைத் துன்பமடையும்படி செய்யவில்லை. அரசரே! யுத்தத்தில் அஸ்திரப்பயிற்சியுள்ளவனும் பலசாலியுமான கர்ணனால் அடிக்கப்படுகின்ற அந்த நகுலன் பொறிகலங்கி வேகமாக ஓடினான். பாரதரே! ராதேயன் அந்த நகுலனைப் பின்தொடர்ந்தோடி அடிக்கடி சிரித்துக்கொண்டு நாணேற்றிய வில்லை அந்த நகுலனுடைய கழுத்தில் மாட்டினான். வேந்தரே! பிறகு, கழுத்தில் மாட்டப்பட்ட பெரிய வில்லுடன் நகுலன் ஆகாயத்தில் வட்டமான ரேகையின் நடுவிலிருக்கின்ற சந்திரன் விளங்குவதுபோல் விளங்கினான். மகாராஜரே! கறுத்தமேகம் இந்திரவில்லினால் விளங்குவதுபோலப் பாண்டுபுத்திரன் யுத்தத்தில் விளங்கினான். பிறகு, கர்ணன், நகுலனைப் பார்த்து, 'வீணாகப் பேசினாய். அடிக்கடி என்னால் அடிக்கப்படுகின்ற நீ ஸந்தோஷத்துடன் மறுபடியும் இப்பொழுது பேசு. பாண்டவ! அப்பனே! உனக்குத் தகுந்தவர்களோடு யுத்தம் செய். பலவான்களான கௌரவர்களோடு நீ போர்புரியாதே. பாண்டவ! நீ வெட்கமடையவேண்டாம். மாத்திரிபுத்திர! வீட்டுக்கேனும் செல்; அல்லது எங்கே கிருஷ்ணனும் பல்குனனும் இருக்கின்றனரோ அங்கேனும் செல்' என்று சொன்னான். மகாராஜரே! கர்ணன் இவ்வாறு சொல்லி நகுலனை அப்பொழுது விட்டுவிட்டான். வேந்தரே! சூரனும் தர்மங்களை அறிந்தவனுமான கர்ணன் குந்தியினது வார்த்தையை நினைத்து, கொல்லும்படியான நிலைமையை அடைந்த நகுலனை அப்பொழுது கொல்லாமல் விட்டுவிட்டான். வேந்தரே! வில்லாளியான சூதபுத்திரனாலே விடப்பட்ட பாண்டவன் வெட்கி யுதிஷ்டிரனுடைய ரதத்தை நாடிச்சென்றான். கர்ணனால் வாட்டப்பட்ட நகுலன் துக்கத்தினால் மிகத் தவித்துக் குடத்தில் அடைக்கப்பட்ட பாம்புபோலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு யுதிஷ்டிரருடைய ரதத்திலேறினான்.

பிறகு, கர்ணனும் நகுலனை வென்று உயர்ந்தகொடியுள்ளதும் சந்திரன்போன்ற வர்ணமுள்ள குதிரைகளையுடையதுமான ரதத்தோடு பாஞ்சாலர்களை விரைந்து எதிர்த்தான். மன்னவரே! பாஞ்சாலர்களுடைய தேர்க்கூட்டங்களை நோக்கிச்செல்லுகின்ற ஸேனாபதியான கர்ணனைக்கண்டு அவ்விடத்தில் பாண்டவர்

களுள் கூக்குரல் உண்டாயிற்று.மகாராஜரே!அவ்விடத்தில் ஸூத புத்திரன் (பலரைத்) துன்பஞ்செய்தான். சூரியன் ஆகாயத்தின் நடுவிடத்தை அடைந்திருக்கையில்,பிரபுவான கர்ணன் அந்தஇடத்தில் சக்கரம்போலச் சுழன்றான். ஐயா! சக்கரங்களுடைந்தவைகளும் கொடிகளும் கொடித்துணிகளும் அறுக்கப்பட்டவைகளும் குதிரைகள் கொல்லப்பட்டவைகளும் ஸாரதியை இழந்தவைகளும் அச்சுமுறிந்தவைகளுமான சில ரதங்களாலே இழுத்துக்கொண்டு போகப்பட்ட பாஞ்சாலர்களுடைய தேர்க்கூட்டங்களைக் கண்டோம். பிறகு, யானைகள், பெரிய காட்டில் காட்டுத்தீயினால் நான்கு புறங்களிலும் சூழப்பட்ட அங்கங்களுடையவைபோலப் பரபரப்புடனே ஆங்காங்கு ஸஞ்சரித்தன. மகாபலசாலியான கர்ணனாலே அடிக்கப்பட்ட சில யானைகள் கும்பஸ்தலங்கள் பிளக்கப்பட்டவையும் இரத்தத்தைப் பெருக்குபவையும் துதிக்கைகள் அறுக்கப்பட்டவையும் கவசங்களுடைக்கப்பட்டவையும் வால்கள் அறுக்கப்பட்டவையுமாகி, (காற்றினால்) சிதற அடிக்கப்பட்ட மேகங்கள்போலக் கீழே விழுந்தன. மற்ற யானைகள் நாராசங்களாலும் அம்புகளாலும் தோமரங்களாலும் பயப்படுத்தப்பட்டு விட்டில்கள் நெருப்பை எதிர்த்துச் செல்வதுபோல அந்தக் கர்ணனையே எதிர்த்துச்சென்றன. சில பெரிய யானைகள் வீரிட்டுக்கொண்டும் அருவிப்பெருக்குக்களுடன் கூடிய மலைகள் போலச் சரீரங்களிலிருந்து இரத்தத்தைப் பெருக்கிக்கொண்டும் காணப்பட்டன. கவசங்களையும் வாலிற்கட்டும் வார்களையும் இழந்தவைகளும் வெள்ளியாலும் வெண்கலத்தாலும் பொன்னாலுமாகிய ஆபரணங்களையும் இழந்தவைகளும் மற்ற ஆபரணங்களையும் கடிவாளங்களையும் இழந்தவைகளும் சாமரங்களும் விரிப்புக்களும் அம்புப் பெட்டிகளும் நழுவினவைகளும் சூரர்களும் யுத்தத்தில் விளங்குகின்றவர்களுமான குதிரைவீரர்கள் கொல்லப்பட்டவைகளும் சுழலுகின்றவைகளுமான உத்தமமான குதிரைகளையும் அந்த யுத்தத்தில் கண்டோம். பாரதரே! ஈட்டிகளையும் கத்திகளையும் ரிஷ்டிகளையும் விட்டவர்களும் கவசத்தையும் தலைப்பாகையையும் அணிந்தவர்களும் கொல்லப்பட்டவர்களும் கொல்லப்படுகின்றவர்களும் நடுக்கமுற்றவர்களும் பற்பல அங்கங்களையும் அவயவங்களையும் இழந்தவர்களுமான குதிரைவீரர்களையும் ஆங்காங்கு கண்டோம். ரதிகர்கள் கொல்லப்பட்டபோது, பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளும் வேகமுள்ள குதிரைகளோடு கூடியவைகளும் விரைவாகச் சுழலும்படி செய்யப்படுகின்றவைகளுமான தேர்களையுங் கண்டோம். பாரதரே! அச்சுக்கட்டைகளும் ஏர்க்கால்

களும் முறிக்கப்பட்டவைகளும் சக்கரங்களுடைக்கப்பட்டவைகளு மான சில தேர்களையும், கொடித்துணிகளையும் கொடி மரங்களை யும் இழந்தவைகளும் அழகிய ஏர்க்கால்கள் வெட்டியெறியப்பட்ட வைகளுமான சில தேர்களையும் கண்டோம். மஹாராஜரே! அந்த யுத்தகளத்தில் ரதங்களையிழந்து ஆங்காங்கு ஓடுகின்றவர்களும் கர்ணனுடைய கூரிய அம்புகளாலே கொல்லப்படுகின்றவர்களு மான ரதிகர்களையும், சஸ்திரங்களை இழந்தவர்களும் அவ்வாறே சஸ்திரங்களையுடையவர்களும் கொல்லப்பட்டவர்களுமான அனேக வீரர்களையும், நக்ஷத்திரங்கள்போன்ற ஆபரணஸமூகங்களால் நன்றாக மூடப்பட்டவைகளும் சிறந்த கணுக்கால் அதிகமாகப் பிரகாசிக்கின்றவைகளும் பற்பலவர்ணங்களுள்ள விசித்திரமான கொடித்துணிகளால் அலங்கரிக்கப்பட்டவைகளும் நான்குபக்கங் களிலும் ஓடுகின்றவைகளுமான யானைகளையும் கண்டோம். கர்ண னுடைய வில்லினின்று விடுபட்ட அம்புகளாலே அறுக்கப்பட்ட தலைகளையும் கைகளையும் தொடைகளையும் அவ்வாறே மற்ற அவய வங்களையும் எங்கும் கண்டோம். கர்ணனுடைய அம்புகளால் அடிக் கப்பட்டவர்களும் கூர்மையுள்ள பாணங்களால் போர்புரிகின்றவர் களுமான யுத்தவீரர்களுக்குப் பயங்கரமும் பெரிதுமான யுத்தம் நடந்தது. யுத்தத்தில், ஸூதபுத்ரனால் கொல்லப்பட்ட அந்த ஸ்ருஞ்சயர்கள் விட்டில்கள் நெருப்பை எதிர்ப்பதுபோல அவ னையே எதிர்த்தார்கள். ஆங்காங்கு சேனைகளைக் கொளுத்துகின்ற வனும் மகாரதனும் பிரளயகால நெருப்புப்போல விருத்தியடைந் திருப்பவனுமான அந்தக் கர்ணனைவிட்டு க்ஷத்ரியர்கள் விலகினார் கள். தேஜஸ்வியும் வீரனுமான கர்ணன், இறந்தவர்கள்போக மிகுதி யுள்ளவர்களும் மகாரதர்களும் கவசமும் த்வஜமும் நொறுங்கி அபஜயமடைந்து ஓடுகின்றவர்களுமான பாஞ்சாலவீரர்களைப் பின் னால் பாணங்களையிறைத்துக்கொண்டு தொடர்ந்தோடினான். மிக்க பலசாலியான கர்ணன், நடுப்பகலையடைந்த சூரியன் பிராணிகளைத் தபிக்கச்செய்வதுபோல, அந்தப் பாஞ்சாலர்களைப் பாணங்களால் தபிக்கச்செய்தான்.

பதினைந்தாவது அத்யாயம்

(யுயுத்ஸுவுக்கும் உலூகனுக்கும் யுத்தமும், ஸுதஸோம னுக்கும் சகுனிக்கும் யுத்தமும்)

அரசரே! உம்முடைய குமாரனுடைய பெரிய சேனையை ஓடும்படி செய்கின்ற யுயுத்ஸுவை உலூகன் வேகத்துடன் எதிர்த்துச் சென்று, 'நில், நில்' என்று கூறினான். பிறகு, யுயுத்ஸுவும் வஜ்ரத்தினால் (இந்திரன் மலையை அடிப்பது)போலக் கூரிய நுனியுடன்கூடின அம்பினால் மிக்க வலிமையமைந்த உலூகனையடித்தான். உலூகனோ, கோபமூண்டு உமது புத்திரனுடைய வில்லை யுத்தத்தில் ஒரு க்ஷுரப்ரத்தினாலே அறுத்துக் கர்ணி என்கிற பாணத்தினால் அடித்தான். சிவந்த கண்களையுடைய யுயுத்ஸு அறுக்கப்பட்ட அந்த வில்லை எறிந்துவிட்டு மிக்க வேகமுள்ளதும் மிகப் பெரிதுமான வேறொரு வில்லை எடுத்தான். பரதச்ரேஷ்டரே! பிறகு, அவன் சகுனி குமாரனான உலூகனை அறுபது பாணங்களால் அடித்து (அவனுடைய) ஸாரதியையும் மூன்று பாணங்களால் அடித்து மறுபடியும் அந்த உலூகனை யடித்தான். உலூகனோ ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட இருபது பாணங்களாலே அவனை அடித்து, பிறகு, கோபங்கொண்டு யுத்தத்தில் யுயுத்ஸுவினுடைய பொன்மயமான கொடியையும் துண்டாக்கினான். அரசரே! அறுக்கப்பட்ட தண்டத்துடன் கூடியதும் மிக்க பெரிதும் ஸ்வர்ணமயமானதும் சிறந்ததுமான அந்த த்வஜமானது யுயுத்ஸுவின் முன்னிலையில் சிதறி விழுந்தது. த்வஜம் நாசம் செய்யப்பட்டதைக்கண்டு யுயுத்ஸு கோபமூண்டு உலூகனை ஐந்து பாணங்களால் நடுமார்பில் அடித்தான். பரதச்ரேஷ்டரே! உலூகன் எண்ணெயிட்டுத் தீட்டப்பட்ட பல்லத்தினாலே யுத்தத்தில் அவனது ஸாரதியினுடைய தலையை அறுத்தான். அந்த யுயுத்ஸுவின் ஸாரதியினுடைய அறுக்கப்பட்ட தலையானது அப்பொழுது ஆச்சரியகரமான நக்ஷத்திரம்போலப் பூமியில் விழுந்தது. பிறகு நான்கு குதிரைகளையும் கொன்றான். அவனையும் ஐந்து பாணங்களால் அடித்தான். பலசாலியான உலூகனால் அடிக்கப்பட்ட அந்த யுயுத்ஸு வேறு ரதத்தைக் குறித்து விரைவாகச் சென்றான். வேந்தரே! உலூகன் யுத்தரங்கத்தில் அந்த யுயுத்ஸுவைத் தோல்வியடையச்செய்து பாஞ்சாலர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் கூர்மையுள்ள அம்புகளால் நன்றாக அடித்துக்கொண்டு விரைவாகச் சென்றான். மஹாராஜரே! உம்முடைய புத்திரனான ச்ருதகர்மா விநாசமுடையவனாக அரை நிமிஷத்திற்குள் சதானீகனைக் குதிரை

களையும் ஸாரதியையும் ரதத்தையும் இழக்கச்செய்தான். ஐயா! குதிரைகள் கொல்லப்பட்ட தேரிலிருக்கின்ற மஹாரதனை சதானீகன் அதிக கோபத்துடன் உம்முடைய புத்திரன்மீது ஒரு கதாயுதத்தை எறிந்தான். பாரதரே! அந்தக் கதாயுதம் (அவனுடைய) தேரையும் ஸாரதியையும் குதிரைகளையும் சாம்பலாகச் செய்துவிட்டுப் பூமியைப் பிளப்பதுபோல வேகமாகக் கீழே விழுந்தது. கௌரவர்களுக்குப் புகழை விருத்திசெய்கின்றவர்களும் வீரர்களுமான அவ்விருவர்களும், தேர்களை இழந்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு யுத்தத்தைவிட்டு விலகிச் சென்றார்கள். உமது குமாரனை ஸ்ருதகர்மாவோ, பரபரப்புடன் விவிம்சனுடைய ரதத்தில் ஏறினன். சதானீகனும் பரபரப்புடன் பிரதிவிந்தியனுடைய ரதத்தின்மீது ஏறினன். மிக்க கோபங்கொண்ட சகுனி, கூர்மையுள்ள அம்புகளால் ஸுதஸோமனை அடித்தும் ஜலப்பிரவாகமானது மலையை அசைவுறச் செய்யாததுபோல அவனை அசைவுறச் செய்யவில்லை. பாரதரே! ஸுதஸோமனோ அந்தச் சகுனியைத் தன் தந்தைக்குப் பரம சத்துருவாக உணர்ந்து அனேக ஆயிரம் பாணங்களால் மூடினன். யுத்தத்தில், அஸ்திரப்ரயோகங்களில் தேர்ந்தவனும் விசித்ரமாக யுத்தஞ்செய்யும் தன்மையுள்ளவனும் வெற்றியோடு விளங்குபவனுமான சகுனி அந்த அம்புகளை வேறு அம்புகளாலே விரைவாகத் துண்டாக்கினன். (ஸுதஸோமனுடைய) அந்த அம்புகளைக் கூர்மையான அம்புகளாலே யுத்தத்தில் தடுத்து அதிக கோபங்கொண்டு மூன்று பாணங்களால் அவனையும் அடித்தான். மிக்க கோபங்கொண்டவனை சகுனி ஜலப்பிரவாகமானது மலையை அசைக்காததுபோல (ஸுதஸோமனை) அசைவுறச் செய்யவில்லை. மகாராஜரே! பிறகு, உம்முடைய மைத்துனனை சகுனி அம்புகளாலே அந்த ஸுதஸோமனுடைய குதிரைகளையும் கொடிமரத்தையும் ஸாரதியையும் எள்ளளவெள்ளளவாகப் பொடியாக்கினன். பிறகு, ஜனங்கள் மிகக் கூச்சலிட்டார்கள். ஐயா! குதிரைகள் கொல்லப்பட்டவனும் ரதத்தை இழந்தவனும் கொடிமரம் அறுக்கப்பட்டவனும் வில்லாளியுமான ஸுதஸோமன் உத்தமமான வில்லை எடுத்துக்கொண்டு ரதத்தினின்று கீழே குதித்துப் பூமியில் நின்றான். அவன் தங்கமயமான பிடிகளுள்ளவைகளும் சாணைக்கல்லில் தீட்டப்பட்டவைகளுமான அம்புகளைச் சகுனியின்மீது பிரயோகித்தான். பிறகு, அந்த அம்புக்கூட்டங்கள் விட்டிற்பூச்சிகளுடைய கூட்டங்கள்போல உமது மைத்துனனுடைய அவ்விதமான பெரிய ரதத்தை மூடிவிட்டன. ஸுபல புத்திரனை சகுனி நன்றாக மூடப்பட்

டாலும் சிறிதேனும் மனவருத்தமடையவில்லை. மஹாகீர்த்தி சாலியான சகுனி அந்த ஸுதஸோமனுடைய அம்புகளைப் பாணசமூகங்களால் நாசஞ்செய்தான். அந்த யுத்தகளத்தில் ரதத்தின்மீதிருக்கின்ற சகுனியைக் காலாளாயிருக்கின்ற ஸுத ஸோமன் எதிர்த்துப் போர்புரிந்தது (கேட்டவர்களுக்கு) நம்பத் தகாததும் ஆச்சரியகரமுமாயிருந்தது. அந்த ஸுதஸோமனுடைய செய்கையை அங்குள்ள யுத்தவீரர்களும் ஆகாயத்திலுள்ள ஸித்தர்களும் பார்த்து மனக்களிப்புற்றார்கள். அரசரே! சகுனி கூர்மையுள்ளவைகளும் மிக்க வேகமுள்ளவைகளும் வணங்கின கணுக்களுள்ளவைகளுமான பல்லங்களாலே அந்த ஸுதஸோம னுடைய வில்லையும் எல்லா அம்புத்தூணிகளையும் நாசஞ்செய்தான். இரதத்தை இழந்தவனும் அறுக்கப்பட்ட வில்லையுடையவனுமான அந்த ஸுதஸோமன் வைடூரியம் கருநெய்தல் இவைகளுடைய நிறம்போன்ற நிறமுள்ளதும் யானைத்தந்தத்தாலாகிய பிடியுள் ளதுமான ஒரு கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு ஸிம்மநாதஞ் செய்தான். பிறகு, சுழற்றப்படுகின்றதும் நிர்மலமான ஆகாயம் போன்ற காந்தியுள்ளதுமான புத்திசாலியான ஸுதஸோமனு டைய கத்தியைச் சகுனி காலதண்டத்துக்குச் சமமாக நினைத் தான். மஹாராஜரே! நல்ல தேர்ச்சியடைந்திருக்கின்ற அந்த ஸுதஸோமன் கத்தியுடன் விரைவாகப் பதினன்கு விதமான மண்டலகதிகளைப் பலவிதமாக வெளியிட்டுக்கொண்டு ஸஞ்சரித் தான். அவன் யுத்தத்தில் [1] பிராந்தம், உத்பிராந்தம், ஆவித்தம், ஆப்லுதம், விப்லுதம், ஸ்ருதம், ஸம்பாதம், ஸமூதீர்ணம் என்னும் கத்தி சுழற்றும் வகைகளைக் காண்பித்தான். திறமையமைந்த சகுனி யோ, பிறகு அந்த ஸுதஸோமன்மீது அம்புகளை எய்தான். அந்த அம்புகளை வரும்பொழுதே ஸுதஸோமன் உத்தமமான கத்தி யினால் விரைவாகத் துண்டாடினான். மஹாராஜரே! பிறகு, பகை வர்களைக் கொல்லுகின்றவனை சகுனி கோபங்கொண்டு ஸர்ப்பங் களுக்கு ஒப்பான அம்புகளை ஸுதஸோமன்மீது பிரயோகித்தான். கருடனுக்கு ஒப்பான வன்மையுள்ள ஸுதஸோமன், பயிற்சியினு லும் பலத்தினாலும் யுத்தத்தில் சுறுசுறுப்பைக் காண்பித்துக் கொண்டு அந்தப் பாணங்களைக் கத்தியினால் துண்டாடினான். அர சரே! அப்பொழுது மண்டலகதியோடு ஸஞ்சரிக்கின்ற அந்த ஸுத ஸோமனுடைய மிக்க ஒளி பொருந்திய கத்தியைச் சகுனி மிக்க கூர்மையுள்ள க்ஷுரப்ரத்தினால் வெட்டினான். பாரதரே! அறுக்கப் பட்ட அந்தப் பெரிய கத்தியானது பூமியில் விரைவாக விழுந்தது.

---

[1] பீஷ்ம பர்வம் 207-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

நல்ல பிடியையுடைய அந்தக் கத்தியினுடைய பாதியானது அவனுடைய கையிலிருந்தது. மஹாரதனான ஸுதஸோமன் தன் கத்தியானது துண்டாடப்பட்டதையறிந்து ஆறடி பாய்ந்து, பிறகு, பிருந்திருக்கின்ற அரைக்கத்தியைச் சகுனியை நோக்கிச் சுழற்றி எறிந்தான். அந்தக் கத்தியானது தீரனான அந்தச் சகுனியினுடைய ஸ்வர்ணத்தினாலும் வஜ்ரத்தினாலும் அலங்கரிக்கப்பட்ட வில்லை நாண்கயிற்றோடு யுத்தத்தில் அறுத்துவிட்டு விரைவாகப் பூமியில் விழுந்தது. பிறகு, ஸுதஸோமன் ஸ்ருதகீர்த்தியினுடைய பெரிய ரதத்தை யடைந்தான். சகுனியும், கோரமானதும் எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாததுமான வேறொரு வில்லை எடுத்து அநேக சத்ருக்களுடைய கூட்டங்களை நாசஞ்செய்துகொண்டு பாண்டவ சேனையை எதிர்த்துச் சென்றான். வேந்தரே! பயமற்றவனாக அந்த யுத்தத்தில் ஸஞ்சரிக்கின்ற சகுனியைக் கண்டு பாண்டவ வீரர்கள் பெருங்கூச்சலிட்டார்கள். கொழுப்புள்ளவைகளும், ஆயுதமுள்ளவைகளும், பெரியவைகளுமான அந்தப் பாண்டவ சேனைகள் மஹா பலசாலியான ஸௌபலனாலே துரத்தப்படுகின்றவைகளாகக் காணப்பட்டன. அரசரே! தேவராஜன் அஸுர சேனையை எவ்வாறு நாசம் செய்தானோ அவ்வாறே பாண்டவசேனையைச் சகுனி நாசம் செய்தான்.

பதினேழாவது அத்யாயம்

(கிருபரால் திருஷ்டத்யும்னனும், கிருதவர்மாவால் சிகண்டியும் தோல்வி அடைந்தது)

அரசரே! காட்டில் ஒரு சரபமானது ஒரு ஸிம்மத்தைக் கண்டு எவ்வாறு சண்டையில் தடுக்குமோ அவ்வாறே யுத்தரங்கத்தில் கிருபர் திருஷ்டத்யும்னனைத் தடுத்தார். பாரதரே! பலசாலியான அந்தக் கிருபாசார்யராலே தடுக்கப்பட்ட த்ருஷ்டத்யும்னன் அந்த யுத்தத்தில் ஓரடியினின்று மற்றோரடி நகருவதற்குஞ் சக்தியற்றவனானான். அவனுடைய ரதத்தை நோக்கிவருகின்ற கிருபருடைய ரதத்தைப் பார்த்து எல்லாப் பிராணிகளும் பயந்தன; அழிவு வந்துவிட்டதென்றும் எண்ணின. அப்பொழுது பாண்டவர்களுடைய தேர்வீரர்களும் குதிரைவீரர்களும், 'மனிதர்களுள் உத்தமரும் சரத்வானுடைய புத்திரரும் மிக்க தேஜஸை யுடையவரும் திவ்யாஸ்திரங்களை அறிந்தவரும் மேலான புத்தியை யுடையவருமான கிருபாசாரியர் துரோணருடைய வதத்தினால் நிச்சயமாகக் கோபங்கொண்டிருக்கிறார். திருஷ்டத்யும்ன

னுக்குக் கிருபரிடத்தினின்று இப்பொழுது க்ஷேமம் உண்டாகுமா? இந்தச் சேனை முழுதும் பெரிதான பயத்தினின்றும் விடுபடுமா? இந்தப் பிராம்மணர் ஒன்றுசேர்ந்திருக்கின்ற நம்மனைவரையும் கொல்லாமலிருப்பாரா? யுத்தத்தில் கிருபாசார்யர் ரூபத்தால் யம னுக்கு ஒப்பாகக்காணப்படுதலால், துரோணருடைய ஸ்தானத்தை அடையப்போகிறார். ஆசாரியரான இந்தக் கிருபரோ ஹஸ்த லாகவமுள்ளவர்; யுத்தத்தில் எப்பொழுதும் வெற்றி பெறுபவர்; அஸ்திரங்களை உடையவர்; வீர்யமுள்ளவர்; கோபத்தோடுங்கூடி யிருக்கிறார். பார்ஷதனும் மஹாயுத்தத்தில் இப்பொழுது புறங் காட்டினவனாகக் காணப்படுகிறான்' என்று பேசிக்கொண்டார்கள். மஹாராஜரே! அவ்விருவர்களுக்கும் அந்த யுத்தம் நேர்ந்திருக்குங் கால் சத்துருக்களோடு கூடின உம்மைச் சேர்ந்த வீரர்களுடைய இவ்விதமான பலவாறான பேச்சுக்கள் கேட்கப்பட்டன. ராஜரே! பிறகு, சாரத்வதரான கிருபர் கோபத்தால் பெருமூச்சு விட்டுக் கொண்டு, பார்ஷதனை எல்லா மர்மஸ்தானங்களிலும் அடித்து அசைவற்றிருக்கும்படி செய்தார். யுத்தத்தில் மகாபலசாலியான கௌதமராலே துன்பஞ்செய்யப்பட்ட அந்தப் பார்ஷதன் அதிக மயக்கத்தினால் மூடப்பட்டவனாகிச் செய்யவேண்டியதை அறிய வில்லை. பிறகு, பார்ஷதனை நோக்கி ஸாரதியானவன், 'பார்ஷ தரே! க்ஷேமமா? உமக்கு யுத்தத்தில் இவ்விதமான துன்பமுண் டானதை நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை. பிராம்மணோத்தம ரான கிருபராலே நான்கு பக்கத்திலும் மர்மஸ்தானங்களை லக்ஷி யம் வைத்து விடப்பட்டவைகளும் மர்மஸ்தானங்களைப் பிளக் கின்றவைகளுமான பாணங்கள் தெய்வச்செயலால் விழவில்லை. ஸமுத்திரம் நதியின் வேகத்தைத் திருப்புவதுபோல விரைவாக ரதத்தை நான் திருப்புகிறேன். உம்முடைய வல்லமையை அறிந்த வீரரான அந்தப் பிராமணர், உம்மால் கொல்லப்படத்தகாதவ ரென்று எண்ணுகிறேன்' என்றான். அரசரே! பிறகு, திருஷ்டத் யும்னன் (ஸாரதியை நோக்கி), 'அப்பா! என் மனமானது மோகம் அடைகிறது. தேகத்தில் வேர்வையுண்டாகிறது. ஸாரதியே! என் னுடைய சரீரத்தில் நடுக்கமும் மயிர்க்கூச்சமும் உண்டாகின்றன. இந்தப் பிராமணனை விட்டு யுத்தகளத்தில் அர்ஜுனன் இருக்கிற இடத்திற்கு மெதுவாகச் செல். ஸாரதியே! யுத்தகளத்தில் அர் ஜுனனையாவது பீமஸேனனையாவது அடைந்தால் எனக்கு இப் பொழுது க்ஷேமமுண்டாகலாமென்பது என்னுடைய நிச்சயமான எண்ணம்' என்ற மெதுவான வார்த்தையைச் சொன்னான். மஹா ராஜரே! பிறகு, ஸாரதியானவன் குதிரைகளை விரைவாக நடத்திக்

கொண்டு மஹா வில்லாளியான பீமன் எந்த இடத்தில் உங்களுடைய ஸைனிகர்களோடு போர்புரிந்துகொண்டிருந்தாரோ அவ்விடம் சென்றான். ஐயா ! ஓடுகின்ற திருஷ்டத்யும்னனுடைய தேரைக்கண்டு அப்பொழுது கிருபர் நூற்றுக்கணக்காகப் பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டே பின்தொடர்ந்தார். பகைவர்களை அடக்குகிற அவர் அடிக்கடி சங்கத்தை ஊதி, மஹேந்திரன் நமுசியென்னும் அஸுரனைப் பயமுறுத்தியதுபோலப் பார்ஷதனைப் பயமுறுத்தினார்.

யுத்தத்தில் நாடமுடியாதவனும் பீஷ்மருக்கு மிருத்யுவுமான சிகண்டியை ஹ்ருதிகனுடைய குமாரனான கிருதவர்மா அடிக்கடி புன்னகையோடு தடுத்தான். சிகண்டியோ ஹ்ருதிகர்களுள் மஹாரதனான கிருதவர்மாவைக் கூர்மையுள்ள ஐந்து பல்லங்களாலே தோள் பக்கத்தில் அடித்தான். அரசரே! மஹாரதனான கிருதவர்மாவோ மிகுந்த கோபமுண்டவனாகச் சிகண்டியை அறுபது பாணங்களால் பிளந்து நகைத்துக்கொண்டு ஒரு பாணத்தால் அவனது வில்லையும் வெட்டினான். பிறகு பலசாலியான துருபத குமாரன் வேறு வில்லெடுத்து மிக்க கோபங்கொண்டு கிருதவர்மாவைப் பார்த்து, 'நில், நில்' என்று சொன்னான். ராஜேந்திரரே ! பிறகு, பொன்னாலாகிய பிடிகளையுடையவைகளும் நன்றாகத் தீட்டப்பட்டவைகளுமான தொண்ணூறு பாணங்களைக் கிருதவர்மாவின்மீது பிரயோகித்தான். அவைகள் கிருதவர்மாவினுடைய கவசத்தினின்று கீழே விழுந்தன. அவை பயனற்றவையாகப் பூமியில் விழுகின்றதைக்கண்டு (சிகண்டி) மிக்க கூர்மையுள்ள க்ஷுரப்ரத்தினாலே அவனுடைய வில்லை நன்றாக வெட்டினான். பிறகு, கோபங்கொண்ட சிகண்டி வில் அறுக்கப்பட்டுக் கொம்பு ஒடிந்த காளை போலிருக்கின்ற கிருதவர்மாவை எண்பது பாணங்களாலே இரண்டு கைகளிலும் மார்பிலும் அடித்தான். மிக்க கோபங்கொண்ட கிருதவர்மாவோ மிகக் காயப்படுத்தப்பட்டுக் குடத்தின் வாயிலிருந்து ஜலம் வருவதுபோல் அவயவங்களாலே இரத்தத்தைக் கக்கினான். அரசரே ! இரத்தத்தினால் நாலு பக்கத்திலும் நனைக்கப்பட்ட கிருதவர்மா மழையினால் நனைக்கப்பட்ட தாதுக்களையுடைய மலைபோல விளங்கினான். பிறகு, பிரபுவான கிருதவர்மா பாணங்களையும் நாணையுமுடைய வேறு வில்லை எடுத்துச் சிகண்டியைப் பாணஸமூகங்களாலே தோள்பக்கத்தில் அடித்தான். சிகண்டியோ தோளில் பாய்ந்திருக்கின்ற பாணங்களால் பெருங்கிளைகளோடும் சிறு கிளைகளோடும் கூடி மிகப் பெரிதாயிருக்கின்ற மரம்போல் விளங்கினான். ஒருவரோடொருவர்

அடித்துக்கொண்டு உதிரத்தினால் எல்லாப் பக்கங்களிலும் நனைக்கப்பட்ட மகான்களான அவ்வீரர்களிருவர்களும் இரத்த மடுவில் நீந்துகின்றவர்கள்போல விளங்கினார்கள். இரத்தத்தினால் நனைக்கப்பட்ட அவ்விருவர்களும் வஸந்த காலத்தில் பூத்திருக்கின்ற இரண்டு பலாச விருக்ஷங்கள்போல விளங்கினார்கள். இரத்தத்தினால் எல்லா அங்கங்களும் நனைக்கப்பட்டவர்களும் ரக்தமயமான சந்தனத்தினால் பூசப்பட்டவர்களும் நரச்ரேஷ்டர்களுமான அவ்விருவர்களும் கோபங்கொண்ட இரண்டு ஸர்ப்பங்கள்போல் விளங்கினார்கள். பாணங்களால் வருத்திய அங்கங்களையுடையவர்களும், ஒருவர் மற்றொருவரால் பாணங்களால் காயப்படுத்தப்பட்டவர்களுமான அவ்விருவர்களும், ஒன்றோடொன்று கொம்புகளால் முட்டிக்கொள்ளுகின்ற இரண்டு காளைகள்போல் விளங்கினார்கள். ஒருவரையொருவர் கொல்லுவதில் முயற்சியைச் செய்கின்ற மஹாரதர்களான அவ்விருவர்களும் அந்த ரணகளத்தில் ஆயிரக்கணக்கான மண்டலகதிகளில் இரண்டு தேர்களோடும் ஸஞ்சரித்தார்கள். மஹாராஜரே! கிருதவர்மா, தங்கமயமான கட்டுக்களுள்ளவையும் சாணையில் தீட்டப்பட்டவையும் கூர்மையுள்ளவையுமான எழுபது பாணங்களாலே பார்ஷதனை யுத்தத்தில் அடித்தான். பிறகு, அடிப்பவர்களுள் உத்தமனான கிருதவர்மா யுத்தத்தில் சிகண்டியை நோக்கி உயிரை வாங்கக்கூடியதும் கோரமுமான ஓர் அம்பை விரைவுடன் பிரயோகித்தான். சிகண்டி அதனால் அடிக்கப்பட்டு உடனே மூர்ச்சையை அடைந்தான். மூர்ச்சையை அடைந்தவனான அவன் விரைவாகக் கொடிமரத்தில் சாய்ந்தான். கிருதவர்மாவினுடைய அம்பினாலே மிக வாட்டப்பட்டவனும், அடிக்கடி பெருமூச்சு விடுபவனும், ரதிகர்களுள் உத்தமனுமான சிகண்டியை ஸாரதியானவன் யுத்தரங்கத்தினின்று விரைவாக வேறு இடத்திற்கு நடத்திச் சென்றான். பிரபுவே! பிறகு, சூரனான துருபத குமாரன் கிருதவர்மாவினால் தோல்வியடையவே, பாண்டவ சேனையானது துன்பமடைந்து எல்லாப் பக்கத்திலும் ஓடியது.

பதினெட்டாவது அத்யாயம்

(அர்ஜுனனால் ஸம்சப்தகர்கள் தோல்வியடைந்தது)

மஹாராஜரே! அர்ஜுனனும், காற்றானது பஞ்சுக்குவியலைப் பறக்கச்செய்வதுபோல உம்முடைய சேனையை எல்லாப்பக்கங்களிலும் பறக்கச்செய்தான். அந்த அர்ஜுனனைத் திரிகர்த்தர்களும்

பிபிகளும் கௌரவர்களும் வஸாதிகளும் ஸால்வர்களும் கீர்த்தி சாலிகளான கோபாலர்களும் எதிர்த்தார்கள். பாரதரே! ஸத்ய தேவன், ஸத்யகீர்த்தி, மித்ரதேவன், ஸ்ருதஞ்சயன், ஸௌஸ்ருதி, சந்திரதேவன், மித்ரவர்மா, யுத்தத்தில் ப்ராதாக்களால் சூழப் பட்ட திரிகர்த்தராஜன் ஆகிய இவர்களும் சிறந்த வில்லாளிகளும் பற்பல சஸ்த்ரங்களில் ஸமர்த்தர்களுமான உம்முடைய புத்திரர்க ளுடன் சேர்ந்து யுத்தத்தில் அர்ஜுனன்மீது பாணஸமூகங்களை இறைத்தார்கள். ஜலப்பிரவாகங்கள் ஸமுத்திரத்தை எதிர்ப்பது போல அவர்கள் விரைவாக அவனை எதிர்த்தார்கள். லக்ஷக் கணக்கான அந்த வீரர்களெல்லாரும் யுத்தத்தில் அர்ஜுனனை நாடிக் கருடனைக் கண்ட ஸர்ப்பங்களைப்போல நாசமடைந்தார்கள். மஹாராஜரே! அவர்கள் போரில் அர்ஜுனனால் அடிக்கப்பட்டும், பீடிக்கப்பட்டும் விட்டில்கள் அக்னியை விடாததுபோலப் போர்க் களத்தில் அர்ஜுனனை விடவில்லை. யுத்தத்தில், பாண்டுபுத்திரனை ஸத்யதேவன் மூன்று பாணங்களாலும், மித்ரதேவன் அறுபத்து மூன்று பாணங்களாலும், சந்திரதேவன் ஏழு பாணங்களாலும், மித்ரவர்மா எழுபத்துமூன்று பாணங்களாலும், ஸௌஸ்ருதி ஏழு பாணங்களாலும், ஸ்ருதஞ்சயன் இருபது பாணங்களாலும், ஸுசர்மா ஒன்பது பாணங்களாலும் அடித்தார்கள். யுத்தத்தில் அநேகர்களாலே அடிக்கப்பட்ட அந்த அர்ஜுனன், அவர்களைத் திருப்பி அடித்தான். அவன் ஸௌஸ்ருதியை ஏழு பாணங்க ளாலும், [1] ஸத்யதேவனை மூன்று பாணங்களாலும், ஸ்ருதஞ்சயனை இருபது பாணங்களாலும், சந்திரதேவனை எட்டுப் பாணங்களா லும், மித்ரதேவனை நூறு பாணங்களாலும், ஸத்யதேவனை மூன்று பாணங்களாலும், மித்ரவர்மாவை ஒன்பது பாணங்களாலும், ஸுசர்மாவை எட்டுப் பாணங்களாலும் அடித்தான்; அந்த யுத் தத்தில் சாணையில் தீட்டப்பட்ட பாணங்களாலே ராஜாவான ஸ்ருதஞ்சயனைக் கொன்று ஸௌஸ்ருதியினுடைய தலைப்பாகையை அணிந்த தலையைச் சரீரத்தினின்று அறுத்தான்; விரைவுள்ளவ னாகி அம்புகளால் சந்த்ரதேவனையும் யமலோகத்தை அடைவித் தான்; மஹாராஜரே! அவ்வாறே, முயற்சி செய்கின்ற மற்ற மஹாரதர்கள் ஒவ்வொருவரையும் ஐந்து ஐந்து பாணங்களால் தடுத்தான். ஸத்யதேவனோ மிக்க கோபங்கொண்டு யுத்தத்தில் கிருஷ்ணனைக் குறித்துப் பெரிய தோமரத்தைப் பிரயோ கித்து ஸிம்மநாதஞ் செய்தான். இரும்புமயமானதும் பொற் காம்புள்ளதுமான அந்தத் தோமரமானது மஹாத்மாவான

[1] வேறு பாடம்.

மாதவருடைய இடக்கையைப் பிளந்துகொண்டு அப்பொழுது பூமியில் பிரவேசித்தது. அரசரே! மஹாயுத்தத்தில் தோமரத்தினால் அடிக்கப்பட்ட மாதவருடைய கொறடாவும் கடிவாளங்களும் கையினின்று விழுந்தன. குந்திபுத்திரனான தனஞ்சயன் வாஸுதேவருடைய அங்கங்கள் மிகப் பிளக்கப்பட்டிருப்பதைக் கண்டு மிக்க கடுங்கோபத்தை அடைந்தான்; அவரைப் பார்த்து, 'மிக்க புஜபலமுள்ளவரே! பிரபுவே! ஸத்யதேவனைநோக்கிக் குதிரைகளை நடத்தும் கூர்மையான அம்புகளால் அவனை யமலோகத்தை அடையும்படி செய்யப்போகிறேன்' என்று கூறினான். ஸ்ரீ வாஸுதேவரும் வேறு கொறடாவை எடுத்துக் கடிவாளங்களையும் விரைவாகக் கையிற் பிடித்து அக்குதிரைகளை ஸத்யதேவனுடைய ரதத்தைக்குறித்து ஓட்டினார். பிருதாபுத்திரனும் மஹாரதனுமான தனஞ்சயன் வாஸுதேவர் மிக அடிக்கப்பட்டதைக்கண்டு ஸத்தியதேவனைக் கூர்மையுள்ள அம்புகளால்தடுத்து, பிறகு, மிக்க கூர்மையுள்ள பல்லங்களாலே ராஜாவான அந்த ஸத்தியதேவனுடைய குண்டலங்களையணிந்த பெரிய தலையைச் சேனையின் நடுவில் உடலினின்று அறுத்தான். ஐயா! ஸத்யதேவனுடைய முடியை அறுத்துக் கூர்மையுள்ள பாணங்களால் மித்ரவர்மாவையும் கூர்மையான வத்ஸதந்தத்தினாலே அவனுடைய ஸாரதியையும் கொன்றான். பலசாலியான அர்ஜுனன் பிறகு அதிக கோபங்கொண்டு அனேக அம்புகளாலே நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களை மறுபடியும் கீழே தள்ளினான். வேந்தரே! பிறகு, மஹாரதனான அர்ஜுனன், வெள்ளிமயமானகட்டுக்களுள்ள க்ஷுரப்ரத்தினாலே வலிமை மிக்க மித்ரதேவனுடைய தலையை அறுத்தான்; மிகுந்த கோபங்கொண்டு ஸுசர்மாவைத் தோளில் அடித்தான். பிறகு, ஸம்சப்தர்களனைவர்களும் கோபங்கொண்டு பத்துத் திக்குக்களையும் எதிரொலியிடும்படிசெய்துகொண்டு தனஞ்சயனைச் சூழ்ந்து நின்று சஸ்திரஸமூகங்களாலே அடித்தார்கள். மிகத் துன்பம் செய்யப்பட்டவனும் இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரமம் அமைந்தவனும் அளவிடமுடியாத மனோதைர்யமுள்ளவனும் மஹாரதனுமான அர்ஜுனன் ஐந்திராஸ்திரத்தை வெளிப்படுத்தினான். அரசரே! பிறகு, பாண்டுபுத்திரனும் அளவற்றதேஜஸுள்ளவனுமான பார்த்தனுடைய வில்லினின்று ஆயிரக்கணக்காக அம்புகள் வெளியில் புறப்பட்டன. பாரதரே! பிறகு, யுத்தபூமியில் அறுக்கப்படுகின்ற கொடிமரங்கள், விற்கள், கொடித்துணிகளுடன்கூடின தேர்கள், அம்புப்பெட்டிகள், நுகத்தடிகள், அச்சுக்

கட்டைகள், சக்கரங்கள், பூட்டாம்வார்கள், கடிவாளங்கள், கூபரங்கள், ரதகுப்திகள், அம்புகள், கீழே விழுகின்ற குதிரைகள், ரிஷ்டிகள், ஈட்டிகள், கதாயுதங்கள், பரிகங்கள், சக்திகள், தோமரங்கள், சதக்னிகள், சக்ராயுதங்களுடன்கூடின கைகள், தொடைகள், கண்டஸூத்ரங்கள், தோள்வளைகள், கேயூரங்கள், ஹாரங்கள், ஸுவர்ணாபரணங்கள், கவசங்கள், குடைகள், விசிறிகள், கிரீடங்களுடன் பூதலத்தில் விழுந்திருக்கின்ற தலைகள் இவைகளுடைய குவியல்கள் காணப்பட்டன. குண்டலங்களோடுகூடியவையும் நல்லகண்களையுடையவையும் பூர்ணசந்திரனுக்கு ஒப்பானவையுமான தலைகள், ஆகாயத்தில் நக்ஷத்திரக்கூட்டங்கள்போலப் பூமியில் காணப்பட்டன. நல்ல மாலைகளை அணிந்தவைகளும், நல்ல வஸ்திரங்களை உடுத்தவைகளும், சந்தனத்தினால் நனைக்கப்பட்டவைகளுமான கொல்லப்பட்ட வீரர்களுடைய சரீரங்கள் பூமியில் காணப்பட்டன. மஹாராஜரே! அர்ஜுனனால் பெரிய யுத்தத்தில் ஆங்காங்கு கொல்லப்பட்ட ராஜபுத்திரர்களாலும் மஹா பலசாலிகளான க்ஷத்திரியர்களாலும், அப்பொழுது கோரமான அந்த யுத்தபூமியானது ருத்ரருடைய உத்யானத்துக்கு ஸமமாக விளங்கியது. சிதறி விழுந்திருக்கின்ற மலைகள்போல யுத்தத்தில் விழுந்திருக்கின்ற யானைகளாலும் குதிரைகளாலும் யுத்தபூமியானது பிரவேசிக்கமுடியாத தோற்றமுள்ளதாயிற்று. பகைவர்களை நாசஞ்செய்கின்றவனும் பல்லங்களாலே பெரிய யானைகளையும் குதிரைகளையும் அடித்துத் தள்ளுகின்றவனும் மஹாபலசாலியுமான அந்தப் பாண்டவனுக்குத் தேர் செல்ல வழியில்லை. ஐயா! அந்த யுத்தத்தில் இரத்தச்சேற்றில் ஸஞ்சரிக்கின்ற அந்த அர்ஜுனனுடைய தேருருளைகள் புதைந்து, அவனுடைய பரிவாரங்கள்போல, செல்வதற்குக் கிலேசமடைந்தன. மனத்துக்கும் காற்றுக்கும் ஒப்பான வேகமுள்ள குதிரைகள் அதிகமாக அமிழ்ந்துபோகின்ற சக்கரங்களை அதிகப் பிரயாசத்துடன் இழுத்தன. பாரதரே! வில்லாளியான பாண்டு புத்திரனாலே கொல்லப்படுகின்ற அச்சேனையெல்லாம் பெரும்பாலும் அங்கு நில்லாமல் ஓடிற்று. குந்திபுத்திரனான ஜிஷ்ணுவானவன் யுத்தத்தில் அந்த அநேகம் ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களை வென்று அப்பொழுது புகைஇழந்த நெருப்புப்போல் ஜ்வலித்துக்கொண்டு விளங்கினான்.

பத்தொன்பதாவது அத்யாயம்

(ஸங்குல யுத்த வர்ணனை)

மஹாராஜரே! அநேக பாணங்களைப் பிரயோகிக்கின்றவரான யுதிஷ்டிரரை ராஜாவான துரியோதனன் பயமற்றவனுக்குத் தானே எதிர்த்தான். விரைவாக வருகின்ற மஹாரதனுன உம்முடைய குமாரனைத் தர்மராஜரும் விரைவாக அடித்து, 'நில், நில்' என்று சொன்னார். அந்தத் துர்யோதனனோ மிக்க கோபங்கொண்டு கூர்மையுள்ள ஒன்பதுபாணங்களாலே அவரைத் திருப்பியடித்து, அவருடைய ஸாரதியையும் ஒரு பல்லத்தினால் நன்றாக அடித்தான். வேந்தரே! பிறகு, யுதிஷ்டிரர் தங்கக்கட்டுக்களுள்ளவைகளும் சாணைக்கல்லில் தீட்டப்பட்டவைகளுமான பதின்மூன்று பாணங்களைத் துர்யோதனன்மீது பிரயோகித்தார். மஹாரதரான அவர், அந்தத் துர்யோதனனுடைய நான்கு குதிரைகளையும் நான்கு பாணங்களால் கொன்று, ஐந்தாவது பாணத்தினாலே ஸாரதியினுடைய தலையைச் சரீரத்தினின்று தள்ளி, ஆறாவது பாணத்தினாலே அரசனுடைய கொடியையும், ஏழாவது பாணத்தினாலே வில்லையும், எட்டாவது பாணத்தினாலே கத்தியையும் பூமியில் தள்ளினார். அவர் ஐந்து பாணங்களாலே அரசனையும் நன்றாக அடித்தார். மிகுந்த வருத்தத்தை அடைந்தவனான உம்முடைய குமாரன், குதிரைகள் கொல்லப்பட்ட அந்த ரதத்தினின்று குதித்துப் பூமியில் நின்றான். அவன் கஷ்ட நிலைமையை அடைந்திருப்பதைக் கண்ட கர்ணன் அச்வத்தாமா கிருபர் முதலானவர்கள் அரசனைப் பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு வேகத்துடன் எதிர்த்துவந்தார்கள். அரசரே! பிறகு பாண்டு புத்திரர்களனைவரும் யுதிஷ்டிரரைச் சூழ்ந்துகொண்டு யுத்தத்தில் பின்தொடர்ந்தார்கள். பிறகு, யுத்தம் நடந்தது. மஹாயுத்தத்தில் ஆயிரக்கணக்கான தூரியவாத்தியங்கள் முழங்கின. யுத்தத்தில் எவ்விடத்தில் பாஞ்சாலர்கள் கௌரவர்களோடு சேர்ந்து எதிர்த்துச் சண்டை செய்தார்களோ அவ்விடத்தில் ஸிம்மநாதங்களும் கலகல என்னும் பேரொலியும் தோன்றின. காலாட்கள் காலாட்களோடும் யானைகள் உத்தமமான யானைகளோடும் ரதிகர்கள் ரதிகர்களோடும் குதிரைவீரர்கள் குதிரைவீரர்களோடும் எதிர்த்தார்கள். மஹாராஜரே! யுத்தத்தில் ஒன்றோடொன்று எதிர்த்தவை பார்க்கத்தக்கவையும் பற்பல விதமானவையும் நினைக்க முடியாதவையும் சஸ்திரங்களோடு கூடியவையும் சிறந்த

வையுமாயிருந்தன. அந்தச் சூரர்களனைவர்களும் மிக்க விரைவுடன் ஒருவரையொருவர் யுத்தத்தில் கொல்லுவதில் விருப்பமுற்று ஆச்சரியகரமாகவும் சுறுசுறுப்பாகவும் நன்கு போர்புரிந்தனர். அந்த வீரர்கள் யுத்தவீரர்களுக்குரிய விரதத்தை அனுஷ்டித்து யுத்தத்தில் ஒருவரையொருவர் கொன்றார்கள். அவர்கள் எவ்விதத்திலும் புறத்தில் நின்று போர்புரியவில்லை. அந்த யுத்தமானது ஒரு முகூர்த்த காலம் பார்ப்பதற்கு இனிமையாயிருந்தது. ராஜரே! பிறகு, பைத்தியங் கொண்டதுபோல் வரம்பு கடந்திருந்தது. ரதிகன் யானையை எதிர்த்துக் கூர்மையுள்ள அம்புகளாலே பிளந்து வணங்கின கணுக்களுடன் கூடின அம்புகளாலே அதை யமனிடம் அனுப்பினான். யானைகள் அனேக குதிரைகளை நாடி யுத்தரங்கத்தில் நான்கு பக்கத்திலும் எறிந்து ஆங்காங்கு அப்போதைக்கப்போது மிக்க உக்கிரமாகப் பிளந்தன. ஆங்காங்கு வந்துசேருகின்ற அனேக குதிரைவீரர்கள் உத்தமமான குதிரைகளைச் சூழ்ந்துகொண்டு தலத்வனிகளையும் ஸிம்மநாதங்களையும் செய்தார்கள். பிறகு, குதிரைவீரர்கள் விரைவாக ஓடுகின்ற பெரிய யானைகளை விலாப்புறங்களிலும் பின்புறத்திலும் அடித்தார்கள். வேந்தரே! மதம் பெருகுகின்ற யானைகள் அனேக் குதிரைகளை ஓடும்படி செய்தன. சில யானைகள் கொம்புகளால் கொன்றன. சில யானைகள் அதிகமாக மர்த்தித்தன. வலிமை மிக்கவைகளான வேறு சில யானைகள் அப்பொழுது குதிரைவீரர்களோடு கூடின குதிரைகளைக் கோபத்தினால் கொம்புகளால் பிடித்தன. மற்றவைகள் அப்பொழுது முட்டி வேகத்தால் தூர எறிந்தன. நாற்புறங்களிலும் சந்துகளிலிருக்கின்ற யானைகள் காலாட் படைகளாலே அடிக்கப்பட்டுக் கோரமான தீனஸ்வரத்தை வெளியிட்டுப் பத்துத் திசைகளிலும் ஓடின. மகாயுத்தத்தில் ஆபரணத்தை இழந்து விரைந்து ஓடுகின்ற காலாட்களுடைய ஆபரணத்தை யுத்தபூமியில் (கஜவீரர்கள்) அறிந்து எடுக்க விருப்பமுற்றார்கள். மகாகஜங்களின்மீது ஏறியிருக்கின்ற வீரர்கள் ஜயத்துக்குக் காரணத்தைச் சிந்தித்துக்கொண்டு யானைகளை மண்டியிடச்செய்து(அவைகளால்)விசித்ரமான ஆபரணங்களை எடுத்துத் தரும்படி செய்வித்தார்கள்; காலாட்படைகளையும் பிளந்தார்கள். அச்செய்கையில் பற்றுதலுள்ளவர்களான அந்த யானைவீரர்களை அதிக வேகமுள்ளவர்களும் வலிமை மிகுந்தவர்களுமான காலாட்கள் சூழ்ந்துகொண்டு துன்பஞ்செய்தார்கள். நன்றாகப் பழக்கப்பட்ட யானைகளாலே துதிக்கைகளால் தூக்கி ஆகாயத்தில்

எரியப்பட்ட சிலர் பெரும்போரில் கீழே விழுந்து கொம்பு நுனிகளாலே குத்தப்பட்டார்கள். இன்னும் சிலர், அந்த யுத்தத்தில் கஜங்களாலே சேனையின் நடுவிடத்தை அடைந்து விரைவாகப் பிடித்துக் கொம்புகளாலேயே நாசம் செய்யப்பட்டார்கள். மஹாராஜரே! வேறு சிலர் அடிக்கடி விலக்கித் தள்ளப்பட்டுப் பொடி பண்ணப்பட்ட சரீரத்தையுடையவர்களானார்கள் மற்றவர்கள் யுத்தத்தில் விசிறிகள்போலச் சுழலும்படிசெய்து அடிக்கப்பட்டார்கள். ராஜரே! யானைகளுக்கு முந்திச் செல்லுகின்றவர்களான மற்றவர்களுடைய சரீரங்களும் ஆங்காங்கு யுத்தபூமியில் மிக அடிக்கப்பட்டன. சில யானைகள், பிராஸங்களாலும் தோமரங்களாலும் சக்திகளாலும் மஸ்தகத்தின் கீழ்ப்பக்கங்களிலும் மஸ்தகங்களிலும் தந்தக்கட்டுக்களிலும் அதிகமாக அடிக்கப்பட்டன. இவ் யானைகள் பக்கத்திலிருக்கின்றவர்களும் மிக்க பயங்கரர்களுமான ரதிகர்களாலும் குதிரைவீரர்களாலும் எதிர்த்துப் பிளக்கப்பட்டு அந்த யுத்தத்தில் பூமியில் விழுந்தன. அரசரே! அந்த மஹாயுத்தத்தில் குதிரைகளின்மீதுள்ள குதிரைவீரர்கள் தோமரத்தினாலே கேடகத்தையுடைய காலாட்களையும் அவ்வாறே கவசங்களை அணிந்த வேறு சிலர்களையும் ஆங்காங்கு வேகத்தினால் பூமியில் நொறுக்கினார்கள். ஐயா! கோரமும் பயங்கரமுமாயிருக்கிற அந்த யுத்தத்தில் யானைகள் ரதங்களை அருகில் நெருங்கிப் பிடித்து விரைவாக எறிந்தன. நாராசங்களாலே அடிக்கப்பட்ட அதிக பலமுள்ள யானைகள் வஜ்ராயுதத்தினால் அடிக்கப்பட்ட மலைச் சிகரம்போலப் பூமியில் விழுந்தன. யுத்தத்தில் யுத்தவீரர்கள் யுத்த வீரர்களை நாடி முஷ்டிகளால் குத்தினார்கள். ஒருவரையொருவர் மயிர்களைப் பிடித்து இழுத்து விலக்கித் தள்ளினார்கள்; பிளக்கவும் பிளந்தார்கள். சிலர் கைகளை உயரத்தூக்கிப் பூமியில் தள்ளிக் காலால் மார்பில் மிதித்துக்கொண்டு துடிக்கத் துடிக்கத் தலையை அறுத்தார்கள். வேந்தரே! ஒருவன் கீழே விழுகின்ற மற்றொருவனுடைய தலையை வாளினால் அறுத்தான். மஹாராஜரே! அப்பொழுது மற்றொருவன் உயிரிழந்தவனைக் காலால் உதைத்தான். அவ்வாறே, வேறொருவன் உயிரோடிருக்கின்றவனுடைய சரீரத்தில் சஸ்திரத்தை அழுந்தும்படி செய்தான். பாரதரே! அந்த யுத்தத்தில் யுத்தவீரர்களுக்குள் பெரிதான முஷ்டியுத்தம் நேர்ந்தது. அவ்வாறே, உக்கிரமான மயிர்பிடிச் சண்டையும் பயங்கரமான பாகுயுத்தமும் நடந்தன. ஒருவன், அறியப்படாமலே இருந்துகொண்டு, வேறொருவனோடு சண்டை செய்துகொண்டிருக்

கின்ற மற்றொருவனுடைய உயிரைப் பலவாறாக அநேக சஸ்திரங்களாலே அபகரித்தான். போர்வீரர்கள் எதிர்த்துநின்று ஸங்குல யுத்தமானது நடக்கவே, உடனே நூற்றுக்கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் தலையில்லா முண்டங்கள் எழுந்து துள்ளின. இரத்தத்தாலே நனைக்கப்படுகின்ற சஸ்திரங்களும் கவசங்களும் நல்ல சாயத்தினால் நிறமேற்றப்பட்ட வஸ்திரங்கள்போல் விளங்கின. இவ்வாறு பயங்கரமானதும், சஸ்திரங்களால் நெருங்கியதும், கரைபுரண்ட கங்கைக்கு ஒப்பானதுமான அந்தப் பெரும்போரானது சப்தத்தால் உலகத்தை நிரப்பியது. ராஜரே! பாணங்களால் பீடிக்கப்பட்டு, தம்மைச்சேர்ந்தவர்களாவது பிறர்களாவது அறியப் பட்டார்களில்லை. ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான வேந்தர்கள் அவசியம் யுத்தம் செய்யத்தக்கதென்று யுத்தம் செய்தார்கள். மஹாராஜரே! தம்மைச்சேர்ந்தவர்களைத் தம்மைச்சேர்ந்தவர்களே கொன்றுகொண்டார்கள்; எதிர்த்துவந்த பிறர்களையும் கொன்றார்கள். சேனைகளின் இருதிறத்திலும் வீரர்களாலே ஸங்குலமான யுத்தம் நடந்தது. மஹாராஜரே! யுத்தபூமியானது, அங்கு உடைக்கப்பட்ட தேர்களாலும் வீழ்த்தப்பட்ட யானைகளாலும் சாய்ந்து கிடக்கின்ற குதிரைகளாலும் தள்ளப்பட்ட மனிதர்களாலும் க்ஷணத்திற்குள் நாடமுடியாத ரூபத்துடன் கூடியதாகியது; பூபாலரே! ஒரு க்ஷணத்தினுள், இரத்தப்பெருக்குள்ளதாகியது. கர்ணன் பாஞ்சாலர்களைக் கொன்றான். தனஞ்சயன் திரிகர்த்தர்களைக் கொன்றான். ராஜரே! பீமஸேனன் கௌரவர்களையும் நான்கு பக்கங்களிலுமுள்ள யானைப்படையையும் கொன்றான். சூரியன் பிற்பகலை அடைந்து நிற்கவே, கௌரவ பாண்டவ சேனைகளுக்கு அதிகமான கீர்த்தியை விரும்புகின்றவர்களான வீரர்களுக்கு இவ்விதமான நாசம் நேர்ந்தது" என்று கூறினான்.

இருபதாவது அத்யாயம்

(யுதிஷ்டிரரால் துர்யோதனன் தோல்வியடைந்தது)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! மிக்க கொடுமையுள்ளவையும், மிகவும் ஸகிக்கமுடியாதவையுமான அனேக துக்கங்களையும் புத்திரர்களுடைய நாசத்தையும் உன்னிடத்தினின்று நான் கேட்டேன். ஸூத! நீ சொல்வதிலிருந்தும் யுத்தம் நடந்திருக்கிற விதத்திலிருந்தும் கௌரவர்கள் இல்லையென்பது என்னுடைய நிச்சயமான எண்ணம். மகாரதனான துர்யோதனனும் அந்த யுத்தத்தில் ரதத்தை இழந்தவனாகச் செய்யப்பட்டான். தர்மபுத்திரன் என்ன செய்

தான்? ராஜாவான துரியோதனனுவது அந்தத் தர்மபுத்திரனுக்கு என்ன செய்தான்? ஸஞ்சய! பிற்பகலில் மயிர்சிலிர்த்தலை உண்டு பண்ணுகிறதான யுத்தம் எவ்வாறு நடந்தது? அதனை எனக்கு உள்ளபடி சொல். (நீ சொல்வதில்) திறமையுள்ளவன்" என்று கூற, ஸஞ்சயன் சொல்லத் தொடங்கினுன்.

"அரசரே! பாரதரே! ஒன்றோடொன்று சேர்க்கைபெற்றிருக்கின்ற இரண்டு சேனைகளும் துண்டு துண்டாகக் கொல்லப்படுமளவில், உம்முடைய குமாரனுன துர்யோதனன் வேறு ரதத்தின்மீதேறி அதிகக் கோபத்தோடு விஷத்துடன்கூடிய ஸர்ப்பம்போலச் சீறிக்கொண்டு தர்மராஜரான யுதிஷ்டிரரைக் கண்டு தன் ஸாரதியை நோக்கி, 'ஸாரதியே! எவ்விடத்தில் ராஜாவான பாண்டவன் கவசம்பூண்டு தூக்கிப்பிடிக்கப்பட்ட வெண்கொற்றக்குடையோடு விளங்குகிருனே அவ்விடத்தை என்னை விரைவாக அடையும்படி செய்; விரைவுடன் செல்; செல்' என்று சொன்னுன். அரசனுல் தூண்டப்பட்ட அந்த ஸாரதி ராஜாவினுடைய உத்தமமான ரதத்தை யுத்தக்களத்தில் யுதிஷ்டிரருக்கு எதிராக நடத்தினுன். பிறகு, மதப்பெருக்குள்ள யானைபோலக் கோபங்கொண்ட யுதிஷ்டிரர் தம் ஸாரதியைநோக்கி, 'ஸூத! எந்தஇடத்தில் துர்யோதனனிருக்கிருனே அவ்விடம் செல்' என்று தூண்டினுர். வீரர்களும் ரதிகர்களுள் சிறந்தவர்களும் பிராதாக்களுமான அவ்விருவர்களும் எதிர்த்தார்கள். மஹாவிரர்களும் மிக்க கோபங்கொண்டவர்களும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களும் பெரிய வில்லைக் கையில் பிடித்தவர்களுமான அவ்விருவரும் ஒருவரோடொருவர் யுத்தத்திற்காக எதிர்த்து யுத்தத்தில் ஒருவர்மீதொருவர் (பாணவர்ஷங்களைப்) பொழிந்தார்கள். ஐயா! பிறகு, துர்யோதனராஜன், யுத்தத்தில் சாணைக்கல்லில் தீட்டப்பட்ட ஒரு பல்லத்திலுலே தர்மசீலரான யுதிஷ்டிரருடைய வில்லைத் துணித்தான். தர்மநந்தனரான யுதிஷ்டிரர் மிக்க கோபங்கொண்டு அந்த அவமானத்தை ஸகிக்கவில்லை. யுதிஷ்டிரர் படைமுகத்தில் கோபத்திலுல் கண்கள் மிகச் சிவந்து, துணிக்கப்பட்ட வில்லை எறிந்துவிட்டு வேறு வில்லை எடுத்துத் துர்யோதனனுடைய கொடிமரத்தையும் வில்லையும் வெட்டினுர். பரதஸ்ரேஷ்டரே! உம்முடைய புத்திரனுனவன், பிறகு, வேறு வில்லை எடுத்துப் பொன்னுபரணங்களை அணிந்தவைகளும் தங்கமயமான கட்டுக்களுள்ளவைகளும் பளபளப்புள்ள நுனிகளுள்ளவைகளும் விஷத்துடன்கூடின ஸர்ப்பங்கள் போன்றவைகளுமான அம்புகளை யுதிஷ்டிரர்மீது தொடுத்தான். மிகுந்த கோபமுடையவர்களான அவ்விருவர்களும் ஸிம்

மங்கள்போல மிகுந்த பரபரப்புடன் பரஸ்பரம் வெற்றிபெற வேண்டுமென்று எண்ணி ஒருவர்மீதொருவர் அம்புமழைகளைப் பொழிந்தார்கள். மஹாரதர்களான அவ்விருவர்களும் காளைகள் போலக் கர்ஜித்துக்கொண்டு யுத்தத்தில் ஒருவரையொருவர் அடித்தார்கள். அவ்விருவர்களும் மையத்தைத் தேடுகின்றவர்களாகி ஸஞ்சரித்தார்கள். மஹாராஜரே! பின்பு, காதுவரையிலும் நன்றாக இழுத்துவிடப்பட்ட அம்புகளாலே உண்டுபண்ணப்பட்ட காயங்களையுடையவர்களான அவ்விருவர்களும் பூத்திருக்கின்ற பலாசவிருக்ஷங்கள்போல் விளங்கினார்கள். வேந்தரே! பிறகு, மஹாயுத்தத்தில் அடிக்கடி ஸிம்மநாதங்களை வெளியிட்டார்கள். அவ்வாறே, கையைக் கொட்டுதலால் உண்டாகிற சப்தத்தையும் வில்லினுடைய நாணொலிகளையும் சங்கவாத்யங்களுடைய சப்தங்களையும் வெளியிட்டார்கள். மஹாராஜரே! வேந்தர்களான அவ்விருவர்களும் ஒருவரையொருவர் மிகவும் துன்பஞ்செய்தார்கள். பிறகு, அரசரான யுதிஷ்டிரர் கோபங்கொண்டு வஜ்ராயுதத்தினுடைய வேகம்போன்ற வேகத்தையுடையவைகளும் நெருங்க முடியாதவைகளுமான மூன்று பாணங்களாலே உம்முடைய புத்திரனை மார்பிலே அடித்தார். அரசனை உம்முடைய குமாரனும் அந்தயுதிஷ்டிரரைக் கூர்மையுள்ளவைகளும் தங்கக்கட்டுக்களுள்ளவைகளும் சாணைக்கல்லில் தீட்டப்பட்டவைகளுமான ஐந்துபாணங்களாலே விரைவாகத் திருப்பியடித்தான். பாரதரே! பிறகு, ராஜாவான அவன், எல்லாவற்றையும் அழிக்கும் தன்மைபொருந்தியதும் கூர்மையுள்ளதும் பெரிதான எரிநக்ஷத்திரத்திற்கு ஒப்பானதுமாகிய ஒரு சக்தியை அப்பொழுது பிரயோகித்தான். விரைவாக வருகின்ற அந்தச் சக்தியைத் தர்மராஜர் கூர்மையுள்ள மூன்று பாணங்களால் துண்டாடி விரைவாக ஐந்து பாணங்களால் அந்தத் துரியோதனனையும் அடித்தார். பிறகு ஸ்வர்ணமயமான காம்புள்ளதான அந்தச் சக்தி பெரிய சப்தத்துடன் விழுந்தது. விழுகின்ற அந்தச் சக்தியானது பெரிய எரிநக்ஷத்திரம்போல நெருப்புக்கு ஒப்பாக விளங்கியது. அரசரே! உம்முடைய புத்திரன், சக்தியாயுதம் நாசஞ் செய்யப்பட்டதைக் கண்டு, கூர்மையான ஒன்பது பல்லங்களாலே யுதிஷ்டிரரை அடித்தான். பகைவர்களை வாட்டுபவரான யுதிஷ்டிரர் பலசாலியும் பகைவனுமான துர்யோதனனால் நன்றாக அடிக்கப்பட்டு அவனைக் குறித்து ஒரு பாணத்தை எடுத்தார். மஹாராஜரே! பிறகு, மஹாபலசாலியும் பராக்கிரமசாலியுமான அவர் கோபங்கொண்டு வில்லினுடைய நடுவில் அந்த அம்பைப் பூட்டிப் பிரயோகித்

தார். அந்தப் பாணமோ, மஹாரதனும் உம்முடைய புத்திரனும் அரசனுமான துர்யோதனனை அடைந்து மதிமயங்கச்செய்து பூமியைப் பிளந்தது. பிறகு, துர்யோதனன் கோபமுண்டு கதாயுதத்தைத் தூக்கிக்கொண்டு வேகத்துடன் கலகத்துக்கு முடிவைச் செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டவனாகத் தர்மராஜருடைய ஸமீபத்தில் ஓடிவந்தான். தர்மராஜர் கதாயுதத்தைத் தூக்கினவனும் தண்டத்தைக் கையில் கொண்ட அந்தகனைப் போன்றவனும் உமது குமாரனுமான துர்யோதனனைக்கண்டு ஜ்விலிக்கின்றதும் மிக்க வேகமுள்ளதும் ப்ரகாசிக்கின்ற பெரிய எரிநக்ஷத்திரம் போன்றதும் யமதண்டத்துக்கு ஒப்பானதும் கோரமானதும் வேறான காலராத்திரி போன்றதுமான பெரிய சக்தியாயுதத்தைப் பிரயோகித்தார். ரதத்திலிருந்த அந்தத் துர்யோதனன், அந்தச் சக்தியினால் கவசத்தைப் பிளந்து நடுமார்பில் அடிக்கப்பட்டு மனத்தில் மிக்க துன்பமுற்று விழுந்து மூர்ச்சையடைந்தான். பிறகு, அந்தத் தர்மராஜரை நோக்கி ஆகாசவாணியானது, 'ராஜனே! இவன் உன்னால் கொல்லத்தக்கவனல்லன். பீமஸேனனுடைய பிரதிஜ்ஞையைப் பரிபாலனம் செய்' என்று சொல்லிற்று. இவ்வாறு சொல்லப்பட்டதைக் கேட்ட தர்மராஜர் திரும்பிவிட்டார். பிறகு, கிருதவர்மா விரைவாக வந்து துக்கக்கடலில் மூழ்கியிருக்கின்ற உம்முடைய குமாரனை அரசனைப் பாதுகாத்தான். பீமனும் தங்கப்பட்டைகளால் அலங்கரிக்கப்பட்ட கதையை எடுத்துக்கொண்டு யுத்தத்தில் கிருதவர்மாவை நோக்கி வேகமாக எதிர்த்து ஓடிவந்தான். மஹாராஜரே! பிற்பகலில், யுத்தத்தில் வெற்றியை விரும்புகின்றவர்களான உம்மைச் சேர்ந்த வீரர்களுக்குப் பகைவர்களோடு இவ்வாறு யுத்தம் நடந்தது.

இருபத்தோராவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தமும், பதினாறுவது நாள் யுத்த முடிவும்)

வேந்தரே! பிறகு, யுத்தத்தில் அடங்கா மதங்கொண்டவர்களான உம்முடைய வீரர்கள், கர்ணனை முன்னிட்டுக்கொண்டு மீண்டும் யுத்தத்திற்காகத் திரும்பிவந்து தேவாஸுர யுத்தத்துக்கு ஒப்பான யுத்தத்தைச் செய்தார்கள். யானைகளும் மனிதர்களும் தேர்களும் குதிரைகளும் சங்கங்களுமாகிய இவைகளுடைய ஒலிகளாலே அதிக உற்சாகத்தை அடைந்தவைகளும் அதிகக் கோபத்தோடு கூடியவைகளும் எதிர்த்து நிற்கின்றவைகளு

மான அந்த யானைகள், தேராளிகள், காலாட்கள், குதிரைக் காரர்கள் இவர்களுடைய கூட்டங்களனைத்தும் பற்பலவிதமான சஸ்திரங்களுடைய வீழ்ச்சிகளால் நாசஞ்செய்யப்பட்டன. மஹா யுத்தத்தில், யானைகளும் ரதங்களும் குதிரைகளும், கூர்மை யுள்ள கோடாலிகளாலும் கத்திகளாலும் பட்டஸங்களாலும் பற் பலவிதமான பாணங்களாலும் சிறந்த வீரர்களால் நாசஞ்செய்யப் பட்டன. வாகனங்களால் வீரர்களும் கொல்லப்பட்டார்கள். பூமியானது, தாமரைப் புஷ்பத்துக்கும் ஸூர்யனுக்கும் சந்திரனுக் கும் ஒப்பானவைகளும், வெண்ணிறமுள்ள பற்களையுடையவைக ளும், அழகிய வாயையும் கண்ணையும் மூக்கையுமுடையவைகளும், அழகிய கிரீடங்களோடும் குண்டலங்களோடும்கூடியவைகளுமான மனிதர்களுடைய தலைகளாலே பரப்பப்பட்டதாக விளங்கியது. அனேகம் பரிகங்களாலும் உலக்கைகளாலும் சக்திகளாலும் தோமரங்களாலும் நகரங்களாலும் புசுண்டிகளாலும் கதாயுதங்க ளாலும், யானைகளும் மனிதர்களும் குதிரைகளும் ஆயிரக்கணக்கா கக் கொல்லப்பட்டனர். அப்பொழுது இரத்தநதிப் பிரவாகங்கள் தோன்றின. நன்றாக நாசஞ் செய்யப்பட்ட ரதங்கள், மனிதர்கள், குதிரைகள், யானைகள் இவைகளையுடையதும் பயங்கரமான காட் சியையுடையதும் அதிக காயமுள்ளதும் சத்துருக்களால் நாசம் செய்யப்பட்டதுமான அந்தச் சேனையானது, பிரஜைகள் அழியும் காலமான பிரளயகாலத்தில் யமனுடைய ராஜ்யம் விளங்குவது போல் விளங்கியது. அரசரே! பிறகு, உம்முடைய சேனை வீரர்களும் தேவகுமாரர்களுக்கு ஒப்பான உம்முடைய புத்திரர் களும் கணக்கிலடங்காத படைகளை முன்னிட்டவர்களான குரு ச்ரேஷ்டர்களும் யுத்தத்தில் சினியினுடைய குமாரனை எதிர்த்தார் கள். அதிக இரத்தத்தால் பயங்கரமானதும், புருஷச்ரேஷ்டர்க ளாலும் குதிரைகளாலும் தேர்களாலும் யானைகளாலும் நெருங்கி யதும், உப்புநீர் நிறைந்த கடலின் ஒலிபோன்ற பேரொலியுடன் கூடியதுமான அந்தச் சேனையானது, தேவாஸுர சைன்யங்களுக் குச் சமமான ஒளியுள்ளதாக விளங்கியது. பிறகு, தேவராஜனுக் குச் சமமான பராக்ரமமுள்ளவனும் ஸூர்யகுமாரனுமான கர் ணன் யுத்தத்தில் தேவராஜனுடைய இளைய ஸகோதரனை உபேந் திரனுக்குச் சமமான ஸாத்யகியை ஸூர்யனுடைய கிரணங்கள் போலப் பிரகாசிக்கின்ற அம்புகளால் அடித்தான். சினிகளுள் சிறந் தவனை ஸாத்யகியும், யுத்தத்தில் விரைவுடன் ரதத்தோடும் குதிரை களோடும் ஸாரதிகளோடும்கூடின புருஷச்ரேஷ்டனை அந்தக்

கர்ணனை ஸர்ப்பங்களின் விஷத்துக்குச் சமமான ஒளியையுடைய பற்பலவிதமான அம்புகளாலே அப்பொழுது நன்றாக மூடினான். சினிகுலவீரனை ஸாத்யகியினுடைய பாணங்களால் மிக்க துன்ப மடைந்தவனும் ரதிகர்களுள் சிறந்தவனுமான [1] வஸுஷேணனை அதிரதர்களான உம்முடைய நண்பர்கள் யானைகளோடும் ரதங்களோடும் குதிரைகளோடும் காலாட்களோடும் விரைவாக எதிர்த்தார்கள். அதிவேகமுடையவர்களும் துருபத புத்திரனை முதன்மையாகக்கொண்டவர்களுமான பகைவர்களாலே எதிர்த்துத் துரத்தப்பட்டதும் கடலுக்கொப்பானதுமான கௌரவ சேனையானது அப்பொழுது எல்லாப் பக்கத்திலும் ஓடத் தலைப்பட்டது. அச்சமயத்தில் மனிதர்களுக்கும் ரதங்களுக்கும் குதிரைகளுக்கும் யானைகளுக்கும் பெரிதான நாசம் நேர்ந்தது. பிறகு, ஆண்மையிற் சிறந்தவர்களான அர்ஜுனனும் கேசவரும், பகலில் செய்யவேண்டிய வைதிக கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, முறைப்படி பிரபுவான ருத்திரரைப் பூஜித்து, பகைவர்களைக் கொல்வதில் நிச்சயத்துடன் உம்முடைய சேனையை நோக்கி விரைவாக வந்தார்கள். அப்பொழுது பகைவர்கள், மேகத்தினுடைய இடிமுழக்கம்போன்ற முழக்கமுடையதும், காற்றினால் அலைக்கப்பட்ட துணியுடன் சேர்ந்த கொடிமரத்தையுடையதும், வெண்ணிறமான குதிரைகள் பூட்டியதும், சமீபத்தில் வருகின்றதுமான அர்ஜுனனுடைய ரதத்தைத் தைரியமுள்ள மனத்துடன் கண்டார்கள். பிறகு அர்ஜுனன், ரதத்தில் நர்த்தனம் செய்கிறவன்போல இருந்துகொண்டு, காண்டீவத்தை நாணொலி இடும்படி செய்து ஆகாயத்தையும் திக்குகளையும் திக்குக்கோணங்களையும் பாணங்களால் நெருங்கியவையாகச்செய்தான். அவன் அப்பொழுது விமானங்கள்போன்றவைகளும், ஆயுதங்களையும் த்வஜங்களையுமுடையவைகளும், ஸாரதிகளையுடையவைகளுமான ரதங்களைக் காற்று மேகங்களை நாசஞ்செய்வதுபோலப் பாணங்களால் நாசஞ்செய்தான். அவன், யானைகளையும் யானை வீரர்களையும் கொடித்துணிகளையும் ஆயுதங்களையும் கொடிமரங்களையும்குதிரைவீரர்களையும் குதிரைகளையும் காலாட்களையும் அம்புகளால் யமலோகத்தை அடையும்படி செய்தான். யமன்போலக் கோபங்கொண்டவனும் தடுக்கமுடியாதவனும் மஹாரதனுமான அந்த அர்ஜுனனைத் துரியோதனன் ஒருவனே நேராகச் செல்லுகின்ற பாணங்களால் அடித்துக்கொண்டு எதிர்த்தான். அர்ஜுனன், துர்யோதனனு

---

[1] கர்ணன்

டைய வில்லையும் ஸாரதியையும் குதிரைகளையும் கொடிமரத்தையும் ஏழு பாணங்களால் நாசஞ்செய்து ஒரு பாணத்தினாலே குடையையும் வெட்டினான். உயிரை வாங்கக்கூடிய சிறந்ததான ஒன்பதாவது பாணத்தையும் வில்லில் பூட்டித் துரியோதனன்மீது பிரயோகித்தான். அந்த அம்பை அச்வத்தாமா ஏழாகத் துண்டாடினார். பிறகு பாண்டவன், அம்புகளால் துரோணபுத்திரருடைய வில்லை வெட்டி, ரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகளையும் கொன்று, கிருபருடைய மிக க்ரூரமான அந்த வில்லையுந் துண்டாக்கினான்; கிருதவர்மாவினுடைய வில்லையும் கொடிமரத்தையும் வெட்டி, குதிரைகளையும் அப்பொழுது கொன்று, துச்சாஸனனுடைய வில்லையும் வெட்டி, ராதா புத்திரனை கர்ணனை எதிர்த்தான். பிறகு கர்ணன், ஸாத்யகியை விட்டுவிட்டு அர்ஜுனனை மூன்று பாணங்களால் விரைவுடன் அடித்து, இருபது பாணங்களால் கிருஷ்ணனையும் பார்த்தனையும் மறுபடியும் மறுபடியும் அடித்தான். யுத்தத்தில், அனேக அம்புகளை எய்து பகைவர்களை நாசஞ்செய்கின்ற கர்ணனுக்குக் கோபங்கொண்டிருக்கிற இந்திரனுக்கு வாட்டமுண்டாகாததுபோல வாட்டமுண்டாகவில்லை. பிறகு, ஸாத்யகி எதிர்ப்பட்டுக் கர்ணனைக் கூர்மையுள்ளவைகளும் கொடுமையுள்ளவைகளுமான தொண்ணூற்றொன்பது பாணங்களால் அடித்து, மறுபடியும் நூறு பாணங்களாலும் அடித்தான். பிறகு, பார்த்தர்களைச்சேர்ந்த எல்லாச் சிறந்த வீரர்களும் கர்ணனைப் பீடித்தார்கள். யுதாமன்யு, சிகண்டி, திரௌபதீபுத்திரர்கள், பிரபத்ரகர்கள், உத்தமௌஜஸ், யுயுத்ஸு, நகுல ஸஹதேவர்கள், திருஷ்டத்யும்னன், சேதி தேசத்து வீரர்கள், காரூசர்கள், மச்ச தேசத்து வீரர்கள், கேகயர்கள் ஆகிய இவர்களுடைய சேனையும் பலசாலியான சேகிதானனும் நல்ல விரதத்தையுடைய தர்மராஜருமாகிய இவர்களனைவர்களும், தேர்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் உக்கிரமான பராக்கிரமமுள்ள காலாட்களாலும், கர்ணனை யுத்தத்தில் சூழ்ந்துகொண்டு அவனைக் கொல்வதில் நிச்சயங்கொண்டவர்களும் கடுஞ்சொற்களைப் பேசுகின்றவர்களுமாகிப் பற்பலவிதமான சஸ்திரங்களை இறைத்தார்கள். கர்ணனவன் அந்தச் சஸ்திர வர்ஷத்தைக் கூர்மையான அம்புகளால் பலவாறுகத் துண்டாடி, அஸ்திர வீர்யத்தினால் காற்று மரத்தையொடித்து அடித்துக்கொண்டுபோவதுபோலத் தூரத்தில் விலக்கித் தள்ளினான். அவன் அதிகக் கோபங்கொண்டு தேராளிகளையும் யானைக்காரர்களுடன் கூடின யானைகளையும் குதிரைக்காரர்களுடன்

கூடின குதிரைகளையும் காலாட் கூட்டங்களையும் வருத்துபவனாகக் காணப்பட்டான். அவனுடைய அஸ்திர தேஜஸினாலே கொல்லப்படுகின்ற அந்தப் பாண்டவர்களுடைய சேனையானது, பெரும்பான்மையாகச் சஸ்திரங்களையும் வாகனங்களையும் தேகங்களையும் பிராணனையும் இழந்ததும் யுத்தத்தினின்று திரும்பினதுமாகியது. பிறகு அர்ஜுனன், நகைத்துக்கொண்டு கர்ணனுடைய அஸ்திரத்தை அஸ்திரத்தினால் தடுத்து, அம்புமழைகளாலே திசையையும் ஆகாயத்தையும் பூமியையும் மூடினான். சில பாணங்கள் உலக்கைகள்போலவும் பரிகாயுதங்கள்போலவும் மற்றப் பாணங்கள் சதக்னிகள் போலவும் சில பாணங்கள் உக்கிரமான வஜ்ராயுதங்கள் போலவும் விழுந்தன. அவைகளால் கொல்லப்படுகின்றதும், காலாட்களையும் குதிரைகளையும் ரதங்களையும் யானைகளையுமுடையதுமான அச்சேனையானது கண்களை மூடிக்கொண்டு மிகச் சுழன்றது; அலறவும் அலறியது. அப்பொழுது, காலாட்படைகளும் குதிரைகளும் யானைகளும் நிச்சயமாக மரணத்தை விளைவிக்கத்தக்க யுத்தத்தை நாடின. (அவைகள்,) பாணங்களால் அடிக்கப்படுகின்றவைகளும் துன்பமுற்றவைகளும் பயந்தவைகளுமாக அப்பொழுது ஓடின. அப்பொழுது, ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான உம்மைச் சேர்ந்த வீரர்கள், யுத்தத்தில் அதிகப் பற்றுதலுடனிருக்குங்காலத்தில். ஸூரியன் அஸ்தகிரியை அடைந்து மறைந்தான். "மஹாராஜரே! அதிகமாகத் தோன்றியிருக்கின்ற இருளினாலும் புழுதியினாலும் நல்ல வஸ்துவையோ அல்லது கெட்ட வஸ்துவையோ ஒன்றையும் கண்டோமில்லை. பாரதரே! சிறந்த வில்லாளிகளான அவர்கள் ராத்திரி யுத்தத்தில் பயந்தவர்களாக எல்லா யுத்தவீரர்களோடும் சேர்ந்து அந்த யுத்தத்தினின்று விலகிச்சென்றனர். அரசரே! அப்பொழுது, ஸூர்யாஸ்தமய காலத்தில் கௌரவர்கள் ஓடவே, பார்த்தர்கள் வெற்றியடைந்து மனக்களிப்புள்ளவர்களாகத் தங்கள் பாசறையைக் குறித்துச் சென்றார்கள். அந்த வீரர்களாலே யுத்தமானது நிறுத்தப்பட்டவுடனே, சேனையில் ஒன்றுகூடியிருக்கின்ற எல்லா அரசர்களும், வாத்யகோஷங்களோடும் கர்ஜனங்களோடு கூடின பலவிதமான ஸிம்மநாதங்களோடும் பிறரைப் பரிகசிக்கின்றவர்களும் அச்சுதரையும் அர்ஜுனனையும் புகழ்கின்றவர்களுமாகிப் பாண்டவர்களின் விஷயத்தில் ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். பிறகு யுத்தம் நிறுத்தப்படவே, அந்த யுத்தகளத்தில் பாண்டவர்கள் ஸந்தோஷமுடையவர்களானார்கள். அரசர்கள் இரவில்

பாசறையை அடைந்து வஸித்தார்கள். பிறகு, கோரரூபமுடைய தும் ருத்திரருடைய உத்தியானவனம் போன்றதுமான யுத்த களத்தை ரக்ஷஸுகளும் பிசாசங்களும் துஷ்டவிலங்குகளும் கூட்டங்கூட்டமாக வந்து நாடின" என்று கூறினன்.

பதினாறுவது நாள் யுத்தம் முடிந்தது.

இருபத்திரண்டாவது அத்தியாயம்

(கர்ணன் துரியோதனனை நோக்கித் தனக்குச் சல்லியன் ஸாரதியாக இருக்கவேண்டுமென்று கேட்டது)

திருதராஷ்டிரன், "ஓ ஸஞ்சய! அர்ஜுனன் தன்னிஷ்டப் படி நம்மைச் சேர்ந்தவர்களனைவர்களையும் நிச்சயமாகக் கொன்று விட்டான். [1] ஆததாயியான இந்த அர்ஜுனனுடைய யுத்தத்தில் அந்தகனும் விடுபடமாட்டான். பார்த்தன் ஒருவனுகவே ஸுபத் ரையை அபகரித்து வந்தான்; ஒருவனுகவே அக்னியை (க்காண் டவ வனத்தில்) திருப்திசெய்தான்; ஒருவனுகவே இந்தப் பூமியை ஜயித்து அரசர்களையும் கப்பங்கட்டுகிறவர்களாகச் செய்தான். திவ்யமான வில்லையேந்தியவனை அர்ஜுனன் ஒருவனுகவே நிவாதகவசர்களைக் கொன்றுன்; ஒருவனுகவே வேட வடிவத்துடன் நிற்கின்ற பரமசிவனேடு போர்புரிந்தான்; ஒருவனுகவே (கந்தர்வ யுத்தத்தில்) பரதவம்சத்தில் பிறந்தவர்களான துரியோதனுதிகளை ரக்ஷித்தான்; ஒருவனுகவே ஈசுவரனை ஸந்தோஷிப்பித்தான். அந்த அர்ஜுனன் ஒருவனுலேயே உக்கிரமான பராக்கிரமமுள்ளவர் களான என்னைச் சேர்ந்த அனைவர்களும் ஜயிக்கப்பட்டார்கள். அவர்கள் நிந்திக்கத்தக்கவர்களல்லர். அவர்கள் புகழத்தக்க வர்களே. அவர்கள் செய்ததைச் சொல். ஸூத! அதற்குப் பிறகு, அப்பொழுது துரியோதனன் யாது செய்தான்?" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானுன்.

"அடிக்கப்பட்டவர்களும் வெட்டப்பட்ட அவயவங்களை யுடையவர்களும் வாகனங்களினின்று கீழே தள்ளப்பட்டவர்க ளும் கவசங்களையும் ஆயுதங்களையும் வாகனங்களையும் இழந்த வர்களும் தீனஸ்வரம் அடைந்தவர்களும் மனவருத்தமுற்றவர் களும் பகைவர்களால் தோல்வி அடைவிக்கப்பட்டவர்களும் மானிகளுமான கௌரவர்கள், பல்லுடைந்து விஷத்தையிழந்து

---

[1] விராட பர்வம் 175-வது பக்கம் குறிப்பிற் காண்க.

காலால் மிதிக்கப்பட்ட ஸர்ப்பங்கள் போல வீரியமற்றவர்க ளாகச் சேனை தங்கியிருக்குமிடத்தை அடைந்து மறுபடியும் மந்திராலோசனை செய்தார்கள். பிறகு, கர்ணன் கோபமுண்டு ஸர்ப்பம்போல் மூச்சுவிட்டுக்கொண்டு கையினாலே கையைப் பிசைந்து உம்முடைய குமாரனைப் பார்த்துக்கொண்டு அந்தக் கௌரவர்களுக்குச் சொல்லலானான். ‘ராஜனே! அர்ஜுனன் முயற்சியுள்ளவன்; உறுதியுடையவன்; ஸமர்த்தன்; எப்பொழு தும் தைரியமுடையவன். கிருஷ்ணனும் ஸமயத்துக்குத் தக்கபடி அந்த அர்ஜுனனுக்குப் போதித்துக்கொண்டிருக்கிறான். நாம் அவனால் இப்பொழுது அஸ்திரப்பிரயோகத்தினால் விரைவில் வஞ்சிக்கப்பட்டோம். நான் அவனுடைய விருப்பமனைத்தையும் நாளைத் தினம் நாசஞ் செய்யப்போகிறேன்’ என்று சொன்னான். இவ்வாறு சொல்லக் கேட்ட அந்தத் துரியோதனன், ‘அவ்வாறே ஆகட்டும்’ என்று சொல்லிவிட்டு, உத்தமர்களான அரசர்களுக்கு அனுமதி கொடுத்தான். அனுமதி கொடுக்கப்பெற்றவர்களான அரசர்களனைவர்களும் தத்தம் வாசஸ்தானங்களை அடைந்தார்கள். அவர்கள் அந்த ராத்திரி இனிது வாசம் செய்து மனக்களிப்புடன் யுத்தத்திற்காக வெளியே புறப்பட்டார்கள். அவர்கள், கௌரவர் களுள் சிறந்தவனாகத் தர்மராஜனால் பிருகஸ்பதி சுக்கிராசார்யர் இவர்களுடைய கொள்கைப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதும் ஜயிக்கமுடியாததுமான வியூகத்தைப் பார்த்தார்கள். பிறகு சத்துருவீரர்களைக் கொல்லுகின்றவனான துரியோதனன் அப் பொழுது அதிக வீரியமுடையவனும் காளையினுடைய திமில் போன்ற தோள்களுள்ளவனும் பகைவர்களை நாசஞ்செய்பவனு மான கர்ணனை நினைத்தான். அரசனான துரியோதனனுடைய மன மானது, யுத்தத்தில் இந்திரனுக்கு ஒப்பானவனும் பலத்தில் தேவதைகளுடைய கூட்டங்களுக்கு ஸமானனும் வீரியத்தில் கார்த்தவீரியனுக்கு ஒப்பானவனுமான கர்ணனை நாடியது. எல்லாச் சைனியங்களுடைய மனமும், பிராணசங்கட காலங் களில் பந்துவை நாடுவதுபோலச் சிறந்த வில்லாளியும் ஸூத புத்திரனுமான கர்ணனையே நாடியது” என்று கூறினான்.

திருதராஷ்டிரன், “ஸூத! அதற்குப் பிறகு உங்களுடைய மனம் விகர்த்தன குமாரனான கர்ணனை நாடியிருக்கும்பொழுது, மந்தனான துரியோதனன் யாது செய்தான்? யுத்தம் நிறுத்தப்பட்டு மறுபடியும் சேனைகளால் யுத்தமானது தொடங்கப்பட்ட பொழுது, குளிரினால் துன்பத்தை அடைந்தவர்கள் சூரியனைப்பார்ப் பதுபோல ராதேயனைப் பார்த்தீர்களா? ஸஞ்சய! அந்த யுத்தத்

தில் பாண்டவனால் அதிகமாகப் பீடிக்கப்பட்ட துரியோதனனையும் மஹாயுத்தத்தில் பராக்கிரமமுள்ளவர்களான பாண்டு புத்திரர்களையுங் கண்டு விகர்த்தன குமாரனான கர்ணன் அவ்விடத்தில் எவ்வாறு போர்புரிந்தான்? பாண்டு புத்திரர்களனைவர்களும் அந்த யுத்தகளத்தில் ஸூத புத்திரனான கர்ணனோடு எவ்வாறு போர் புரிந்தார்கள்? மிக்க புஜபலமுள்ள கர்ணனொருவனே ஸிருஞ்சயர்களோடு கூடின பார்த்தர்களைக் கொல்வான். கர்ணனுடைய புஜபலமானது யுத்தத்தில் இந்திரனுக்கும் திருமாலுக்கும் ஸமமானது. மஹாத்மாவான அந்தக் கர்ணனுடைய சஸ்திரங்கள் கோரமானவை. அவனது வல்லமையும் கோரமானது. அவனை ஆதாரமாகக்கொண்டு அரசனான துரியோதனன் யுத்தத்தில் மதங்கொண்டிருக்கிறான். பிறகு, பாண்டவனாலே அதிகமாகத் துன்பமடையும்படி செய்யப்பட்ட துரியோதனனையும் பராக்கிரமசாலிகளான பாண்டு புத்திரர்களையும் கண்டு, மஹாரதனான கர்ணன் உற்சாகமடைகிறான். அறிவற்றவனான துரியோதனன் யுத்தத்தில் கர்ணனை ஆதாரமாகக்கொண்டு புத்திரர்களோடும் கேசவனோடும் கூடின பார்த்தர்களை ஜயிப்பதற்கு மறுபடியும் உற்சாகமடைகிறான். ஐயனே! ஸுபலனுடைய குமாரனான சகுனியை நீதிமானென்றெண்ணுகிறவனும், அவ்வாறே கர்ணனையும் யுத்தத்தில் ஒப்பற்றவனும் தேவர்களாலுங்கூட சகிக்கமுடியாதவனும் பார்த்தனைக்காட்டிலும் மேற்பட்டவனுமென்று எண்ணுகிறவனுமான அந்தத் துரியோதனனுடைய உள்ளத்தில் கர்ணன் ஒருவனே யுத்தத்தில் ஸோமகர்களுடன் கூடின பார்த்தர்களை ஜயித்துவிடுவானென்கிற இவ்விதமான எண்ணம் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கின்றது. மந்தனான துரியோதனன் எப்பொழுதுமே இவ்விஷயத்தை என் முன்னிலையிலும் புகழ்ந்துகொண்டிருக்கிறான். பராக்கிரமசாலியான கர்ணன், யுத்தத்தில் பாண்டு புத்திரர்களை மீற முடியாமையால், நிச்சயமாகத் தெய்வம் பிரதானமானது. அந்தோ! இது பெருங்கஷ்டம்; ஆச்சரியம். சூதாட்டத்தினுடைய முடிவானது இப்பொழுது கோரமாகவிருக்கின்றது. ஸஞ்சய! தீவிரமும் கோரமுமான முளைபோன்றவைகளும் துரியோதனனால் உண்டுபண்ணப்பட்டவைகளுமான பலவாறான துக்கங்களை நான் சகித்தேன். அப்பா! ஸுபல புத்திரனான சகுனி நீதிமானென்று அப்பொழுது எண்ணப்படுகிறான். கர்ணனும் நீதிமானென்றே எண்ணப்படுகிறான். கோபமுள்ளவனும் அரசனுமான துரியோதனனும் அவனை எப்பொழுதும் அனுசரிக்கின்றான். ஸஞ்சய! இவ்வாறாக மகாயுத்தங்கள் நடந்துவரு

கையில் நாள்தோறும் என் புத்திரர்களைக் கொல்லப்பட்டவர்களாகவும் தோல்வி அடைவிக்கப்பட்டவர்களாகவும் கேட்டேன். யுத்தத்தில் பாண்டவர்களுள் ஒருவனாவது கொல்லப்படவில்லையாம். பாண்டவர்கள் (கௌரவ சேனையின் மத்தியத்தில்) ஸ்திரீகளுடைய மத்தியில்போலப் பிரவேசிக்கின்றார்கள். (மனித பலத்தைக் காட்டிலும்) தெய்வபலமே மேலானது'' என்று கூறினான்.

ஸஞ்சயன் சொல்லலானான்: "ராஜரே! இவற்றிற்குக் காரணம் முன்பு செய்த பெரிய தர்மங்களென்று நினைத்துக் கொள்ளும். ஒருவன் சென்றதான எந்தக் காரியத்தைப்பற்றிப் பிறகு ஆலோசிக்கிறானோ அந்தக் காரியமும் அவனுக்கு ஒருகாலும் கைகூடுவதில்லை; அவனும் மனக்கவலையினால் அழிந்துபோகிறான். விவேகமுடையவரான உம்மால் யுக்தாயுக்த விசாரணையானது முந்தியே செய்யப்படாத காரணத்தினால் அவ்விதமான இந்தக் காரியமானது உம்மைவிட்டு வெகுதூரம் விலகிவிட்டது. அரசரே! பாண்டவர்களோடு யுத்தம் செய்யவேண்டாமென்று பலவாறாகச் சொல்லப்பட்டீர். பாண்டவர்களிடத்திலுள்ள பகைமையினால் அந்த வார்த்தையை நீர் ஏற்றுக்கொள்ளவில்லை. உம்மால் பாண்டு புத்திரர்கள் விஷயத்தில் கோரமான பாவங்கள் செய்யப்பட்டன. உம் நிமித்தமாக அரசர்களுக்கும் வீரர்களுக்கும் கோரமான க்ஷயம் நேர்ந்திருக்கின்றது. பரதச்ரேஷ்டரே! சென்றுபோன அந்த விஷயத்தைப்பற்றி நீர் இப்பொழுது விசனமடையவேண்டாம். கோரமான எல்லாக் கஷ்டத்தையும் நடந்தபடி சொல்லுகிறேன்; கேளும். கோரமான ஓராபத்தானது உரைக்கப்படப்போகிறது. இரவு விடிந்தவுடனே, மஹாபாகு பலமுள்ளவனான கர்ணன் துரியோதன ராஜனை நோக்கிச் சென்றான்; அவனை அணுகிப் பின்வருமாறு கூறலானான்.

'ராஜனே! புகழ்ச்சிபெற்ற பாண்டவனோடு இப்பொழுது நான் யுத்தத்திற்காக எதிர்க்கப்போகிறேன். அந்த வீரனை நான் கொல்லப்போகிறேன்; அல்லது அவனாவது என்னைக் கொல்வான். பரதகுலத்தில் பிறந்த ராஜனே! எனக்கும் அர்ஜுனனுக்கும் காரியங்கள் பலவாறாக இருந்ததினால் எங்கள் இருவர்களுக்கும் ஸந்திப்புஉண்டாகவேயில்லை. ராஜனே! என் புத்திக்குத் தக்கபடியான என்னுடைய இந்த வாக்கியத்தை நீ கேள். பாரத! யுத்தத்தில் நான் பார்த்தனைக் கொல்லாமல் திரும்பப்போகிறதில்லை. இந்தச் சேனையில் உத்தமர்களான வீரர்கள் கொல்லப்படவும், நானும் யுத்தத்தில் ஸந்நத்தனாக நிற்கவும், இந்திரனால் கொடுக்கப்பட்ட

சக்தியை இழந்தவனான என்னைப் பார்த்தன் யுத்தத்திற்காக எதிர்க்கப்போகிறான். ஜனேசுவர! ஆதலால், என்னுடையதும் அர்ஜுனனுடையதுமான சிறந்த ஆயுதங்களுடைய வெற்றியைத் தரும் வீர்யத்தை நீ தெரிந்துகொள். பெரிதான காரியத்தை நாசஞ் செய்வதிலும் லாகவத்திலும் தூரத்திலிருந்து லக்ஷியத்தில் தாக்கும்படி செய்வதிலும் சாமர்த்தியத்திலும் அஸ்திரங்களைப் பிரயோகிப்பதிலும் ஸவ்யஸாசியானவன் எனக்கு நிகராகான். பாரத! தேகவன்மையிலும் மனோபலத்திலும் அஸ்திர சிக்ஷையிலும் பராக்கிரமத்திலும் லக்ஷியத்தில் பாணங்கள்போய்த் தாக்குவதை நிச்சயிக்கும் விஷயத்திலும் ஸவ்யஸாசி எனக்கு நிகராகான். எல்லா ஆயுதங்களுக்கும் மேலானதும், விஜயம் என்று பிரஸித்திபெற்றதுமான அவ்விதமான வில்லானது இந்திரனுக்குப் பிரியத்தைச் செய்யவேண்டுமென்கிற எண்ணங்கொண்ட விசுவகர்மாவினாலே செய்யப்பட்டது. ராஜனே! இந்திரன் எந்த வில்லினாலே அஸுரர்களுடைய கூட்டங்களை ஜயித்தானோ, எந்த வில்லினுடைய சப்தத்தினாலே அஸுரர்களுக்குப் பத்துத் திசைகளிலும் மயக்கம் உண்டுபண்ணப்பட்டதோ அந்த ஸர்வோத்தமமான வில்லை இந்திரன் பரசுராமருக்குக் கொடுத்தான். விற்களுள் சிறந்த அந்த வில்லைப் பரசுராமர் எனக்குக் கொடுத்தார். அந்த வில்லினாலே ஜயசீலர்களுள் உத்தமனும் மஹாபாகு பலமுள்ளவனான அர்ஜுனனை (எதிர்த்துப்) போர் புரியப்போகிறேன். இந்திரன் எவ்வாறு யுத்தத்தில் ஒன்றுசேர்ந்திருக்கின்ற எல்லா அஸுரர்களையும் கொன்றானோ அவ்வாறே யுத்தத்தில் எல்லாப் பாண்டவர்களையும் நான் ஜயிக்கப்போகிறேன். பூமியை இருபத்தொரு முறை ஜயித்ததும் பரசுராமராலே கொடுக்கப்பட்டதும் கோரமுமான அந்த வில்லானது காண்டீவத்தைக்காட்டிலும் மேலானது. பிருகு குலத்தில் பிறந்த பரசுராமர் அந்த வில்லினுடைய திவ்யமான செய்கைகளைச் சொல்லியிருக்கிறார். அந்தத் தனுஸைப் பரசுராமர் எனக்குக் கொடுத்தார். அதனால் பாண்டவனோடு போர்புரியப் போகிறேன். துரியோதன! ஜயசீலர்களுள் உத்தமனும் வீரனுமான அர்ஜுனனை யுத்தத்தில் பந்துக்களோடு கொன்று யான் உன்னை இப்பொழுது ஆனந்தப்படுத்தப்போகிறேன். ராஜனே! மலைகளோடும் காடுகளோடும் தீவுகளோடும் கூடியதும், வீரர்கள் கொல்லப்பட்டதும், ஸமுத்திரங்களினால் சூழப்பட்டதுமான பூமியானது இப்பொழுது உனது புத்திர பௌத்திரர்களிடம் நிலை பெற்றதாகப்போகிறது. நன்றாக தர்மத்தில் பற்றுதலுள்ளவனும்

மனத்தை அடக்கினவனுமான ஒருவனுக்கு ஸித்தி உண்டாவது போல (நமக்குக்) காரியஸித்தி நிச்சயம். இப்பொழுது விசேஷித்து உன்னுடைய பிரியத்தின்பொருட்டு நான் செய்யத்தகாத காரியம் இல்லை. மரமானது எவ்வாறு நெருப்பை ஸஹிப்பதற்குச் சக்தியற்றதோ அவ்வாறே என்னுடைய பராக்கிரமத்தைத் தாங்குவதற்கு அந்த அர்ஜுனன் சக்தியுள்ளவனல்லன். எதனாலே நான் பல்குனனைவிடக் குறைந்திருக்கிறேனென்னும் விஷயம் நான் அவசியம் சொல்லத்தக்கதாயிருக்கிறது. அந்த அர்ஜுன வில்லினுடைய நாண்கயிறானது தெய்வத்தன்மையுள்ளது; அவ்வாறே, இரண்டு பெரிய அம்புத்தூணிகளும் குறையாதவைகள். அந்த அர்ஜுனனுக்கு ஸாரதி கோவிந்தன். எனக்கு அவ்விதமான ஸாரதி இல்லை. அந்த அர்ஜுனனுக்குத் திவ்யமானதும் யுத்தத்தில் (பிறரால்) ஜயிக்க முடியாததுமான காண்டீவம் என்கிற சிறந்த வில்லிருக்கிறது. எனக்கும் திவ்யமானதும் மஹிமை பொருந்தினதும் விஜயம் என்று பெயருள்ளதுமான சிறந்த வில்லிருக்கிறது. ராஜனே! அப்படிப்பட்ட வில்லினால் பார்த்தனைக் காட்டிலும் யான் மேலானவன். எந்த விதத்தினால் வீரனான பாண்டவன் மேலானவனென்பதை என்னிடத்தினின்று தெரிந்துகொள். (அர்ஜுனனுக்கு) ஸர்வலோகங்களாலும் நமஸ்கரிக்கப்படுகின்ற தாசார்ஹன் (குதிரைக்) கடிவாளங்களைப் பிடிக்கிறான். ஸ்வர்ணாலங்காரத்துடன் கூடினதும் சிறந்ததுமான ரதமானது அக்னியினால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வீரனே! குதிரைகளும் எவ்விதத்தாலும் கொல்லப்படத்தகாதவைகள்; மனத்தினுடைய வேகம்போன்ற வேகமுடையவைகள்; அற்புதமானதும் காந்தியுள்ளதுமான வானரக்கொடியும் பயங்கரமாயிருக்கின்றது. உலகத்தைப் படைத்தவனான கிருஷ்ணன் அந்த ரதத்தைப் பாதுகாக்கின்றான். இம்மூன்று விஷயங்களாலும் குறைந்தவனான நான் பாண்டு புத்திரனோடு போர்புரிவதற்கு விரும்புகிறேன். இந்தச் சல்யனோ கிருஷ்ணனுக்கொப்பானவன்; யுத்தத்தில் ஸமர்த்தன். இவன் எனக்கு ஸாரத்யம் செய்வானேயாகில் உனக்கு ஜயம் நிச்சயமாக உண்டாகும். பகைவர்களால் எளிதில் ஜயிக்கமுடியாதவனான சல்யன் அப்படிப்பட்ட எனக்கு ஸாரதியாக வேண்டும். எனக்கு நாராசங்களையும் கழுகிறகுகள் பூண்ட பாணங்களையும் வண்டிகள் சுமந்துகொண்டுவரட்டும். ராஜேந்திர! பரதச்ரேஷ்டனே! உத்தமமான குதிரைகள் பூட்டிய சிறந்த ரதங்களும் பின்புறத்தில் எப்பொழுதும் என்னைத் தொடர்ந்துகொண்டே

வரட்டும். இவ்விதமான குணங்களாலே நான் பார்த்தனைக்காட்டி லும் மேலானவனுவேன். சல்யனும் கிருஷ்ணனைக்காட்டிலும் மேலானவன். அர்ஜுனனைக்காட்டிலும் நானும் மேலானவன். பகைவீரர்களைக் கொல்லுகிறவனுன தாசார்ஹன் எவ்வாறு அச்வ ஹிருதயத்தை அறிகிருனே அவ்வாறே மஹாரதனுன சல்யனும் அச்வஹிருதயத்தை நன்ருக அறிந்திருக்கிருன். பாகுபலத்தில் மத்திர ராஜனுக்கு நிகரானவன் ஒருவனுமில்லை. அவ்வாறே, அஸ் திரத்தில் எனக்கு நிகரானவன் ஒரு வில்லாளியுமில்லை. அவ்வாறே, அச்வஸ்வபாவத்தை அறியும் விஷயத்தில் சல்யனுக்கு ஈடானவன் ஒருவனுமில்லை. எனது ரதமானது கிருஷ்ணனுடைய ரதத்தைக் காட்டிலும் மேன்மைபெற்றதாகிவிடும். இவ்வாறு செய்யப்பட் டால் நான் அர்ஜுனனைக்காட்டிலும் குணங்களால் சிறப்புற்ற வனுவேன். கௌரவரிற் சிறந்தவனே! நான் யுத்தத்தில் பல்குனனை ஜயிப்பேன். இந்திரனுடன் கூடின தேவர்களும் எதிர்ப்பதற்கு வல்லமையுள்ளவர்களாகார்கள். மஹாராஜனே! சத்ருக்களைத் தவிக்கச்செய்பவனே! இது உன்னுல் நிறைவேற்றப்படவேண்டு மென்று விரும்புகிறேன். இவ்விதமான என்னுடைய விருப்ப மானது நிறைவேற்றப்படவேண்டும். உங்களுக்கு இச்சமயமானது தாண்டிப்போகவேண்டாம். இவ்வாறு செய்யப்படுமானுல் உன் னுல் எனக்கு எல்லாம் செய்யப்பட்டதாகும். பாரத! பிறகு, யுத்தத்தில் என்ன செய்வேனென்பதைப் பார்ப்பாய். ஸர்வவிதத் திலும் யுத்தத்தில் ஒன்றுசேர்ந்திருக்கின்ற பாண்டவர்களை ஜயிக்கப்போகிறேன். யுத்தத்தில் தேவாஸுரர்களுங்கூட என்னை எதிர்ப்பதற்குச் சக்தியற்றவர்கள். ராஜனே! மனுஷ்ய ஜாதியில் பிறந்த பாண்டு புத்திரர்கள் எவ்வாறு எதிர்ப்பார்கள்?' என்று கூறினுன்.

யுத்தத்தில் பிரகாசிக்கின்றவனுன கர்ணன் இவ்வாறு சொல்ல, உம்முடைய குமாரன் மிக்க மனக்களிப்புள்ளவனுகிப் பிறகு ராதேயனைக் கொண்டாடி உரைக்கலானுன். 'கர்ண! நீ நினைக் கிறபடி இதனை இவ்விதமாகவே செய்வேன். யுத்தத்தில் அம்புப் பெட்டிகளுடன் கூடியவைகளும் குதிரைகளுடன் கூடியவை களுமான ரதங்கள் நன்ருகப் பின்தொடரப்போகின்றன. உனக் காக வண்டிகள் நாராசங்களையும் கழுகிறகுகள் பூண்ட அம்பு களையும் சுமந்துகொண்டு செல்லும். கர்ண! உன்னை நாங்களும் எல்லா அரசர்களும் பின்தொடரப்போகிருேம்' என்று கூறி னுன். மஹாராஜரே! பிரதாபசாலியும் ராஜாவுமான உம்

முடைய குமாரன் இவ்வாறு சொல்லிவிட்டு, மத்திரராஜனை அடைந்து பின்வருமாறு வார்த்தை சொல்லலானான்.

இருபத்துமூன்றாவது அத்தியாயம்

(துரியோதனனுடைய வேண்டுதலால் சல்யன் கர்ணனுடைய ரதத்திலிருந்து ஸாரத்தியம் செய்ய அதிகப் பிரயாசத்தோடு ஏற்றுக்கொண்டது.)

மஹாராஜரே! இவ்வாறு உரைக்கக் கேட்ட பிரதாபசாலியான உம்முடைய புத்திரன் யுத்தத்தில் தேவஸைன்யங்களுக்கும் பயத்தை உண்டுபண்ணுகிறவனான மத்திரராஜனைப்பற்றி ராதேயன் சொல்லியவற்றையெல்லாம் விரைவாக அப்படியே செய்தான். யுத்தத்தில் மஹாரதனான மத்திரராஜனை நமஸ்காரஞ்செய்து வணக்கத்துடன் அவனருகில் நெருங்கி, அன்புடனே பின்வரும் வாக்கியத்தை உரைக்கலானான். 'உண்மையை விரதமாகக் கொண்டவரே! மஹாபாக்கியமுள்ளவரே! சத்துருக்களுக்குத் தாபத்தை விருத்திபண்ணுகிறவரே! மத்ரதேசத்துக்குத் தலைவரே! யுத்தத்தில் சூரரே! பகைவர் படைகளுக்குப் பயத்தை உண்டு பண்ணுகிறவரே! பேசும் திறமையுடையவர்களுள் உத்தமரே! எனக்குப் பிரியத்தைச் செய்வதின்பொருட்டும் நன்மையைச் செய்வதின்பொருட்டும் அவ்வாறே பார்த்தனுடைய வதத்தின்பொருட்டும் ராஜச்ரேஷ்டர்களுடைய மத்தியில் கர்ணன் சொன்ன வார்த்தையை நீர் கேட்டிருக்கிறீர். உம்மை நான் பிரார்த்திக்கிறேன். ஒப்பற்ற வீரியமுடையவரே! சத்துரு பக்ஷங்களுக்கு நாசத்தை உண்டுபண்ணுகிறவரே! ஆதலால், நான் இப்பொழுது உம்மை முடியினால் வணங்கி வேண்டுகிறேன். நல்ல விரதமுள்ளவரே! ஆதலால், பார்த்தனுடைய நாசத்தின்பொருட்டும் என்னுடைய நன்மையின்பொருட்டும், ருத்திரரை பிரம்மா காத்ததுபோல நீர் கர்ணனை எல்லா ஆபத்தினின்றும் காப்பாற்றும். ரதிகச்ரேஷ்டரே! அன்பினாலே ஸாரத்யம் செய்யவேண்டும். நீர் ஸாரதியாக இருப்பீரேயாகில் ராதாபுத்திரனான கர்ணன் என் பகைவர்களை ஜயிப்பான். மஹாபாக்கியமுள்ளவரே! உம்மைத் தவிர வாஸுதேவனைப்போலக் கர்ணனுடைய குதிரைக்கடிவாளங்களைப் பிடிப்பவன் யுத்தத்தில் வேறொருவனுமில்லை. எவ்வாறு பிரம்மதேவர் மஹேச்வரரைக் காப்பாற்றினாரோ அவ்வாறே எல்லா விதத்தாலும் கர்ணனைக் காப்பாற்றும். மத்ரேச்வரரே! விருஷ்ணி

குலத்தில் பிறந்தவனான ஸ்ரீ கிருஷ்ணன் எவ்வாறு பாண்டவனை எல்லாவிதமான ஆபத்துக்களினின்றும் பாதுகாக்கிறானோ அவ்வாறே இப்பொழுது நீர் ராதேயனைக் காப்பாற்றும். நம்முடைய பலமானது பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், நீர், வீரியமுடையவனும் போஜனுமான கிருதவர்மா, ஸுபலனுடைய புத்திரனான சகுனி, துரோண புத்திரரான அஸ்வத்தாமா, நான் என ஒன்பது விதமாக வகுக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் மஹாத்மாவான பீஷ்மருடைய பாகமும், துரோணருடைய பாகமும் இல்லை. அவ்விருவர்களாலும் அவர்களுக்குரிய பாகங்களை மீறி என் சத்துருக்கள் கொல்லப்பட்டார்கள். தோஷமற்றவரே! பிராயம் முதிர்ந்தவர்களும் பெரிய வில்லைக் கையிலேந்தியவர்களுமான அவ்விருவர்களும் யுத்தத்தில் கபடத்தால் கொல்லப்பட்டார்கள். அவர்கள் செய்யமுடியாத காரியத்தைச் செய்து இம் மண்ணுலகினின்று விண்ணுலகமேகினார்கள். அவ்வாறு, மற்ற புருஷசிரேஷ்டர்களும் யுத்தத்தில் பகைவர்களால் கொல்லப்பட்டார்கள். நம்மைச் சேர்ந்தவர்கள் அநேகர்கள் சக்தியுள்ளவரையில் பூர்ணமான வல்லமையைக் காட்டிப் பிராணனை இழந்து பகைவர்களால் சுவர்க்கத்தை அடையும்படி செய்விக்கப்பட்டார்கள். ராஜரே! அல்பர்களான பார்த்தர்களாலே அவ்விதமான என்னுடைய இந்தச் சேனை முந்தியே பெரும்பான்மையாக நாசம்பண்ணப்பட்டுவிட்டது. இப்பொழுதும் பார்த்தர்களாலே நாசம்பண்ணப்படுமென்பதில் என்ன சந்தேகம்? ராஜரே! குந்திபுத்திரர்களோ பலசாலிகள்; அதிக தைரியமுடையவர்கள்; உண்மையான பராக்கிரமமுள்ளவர்கள். மிகுந்திருக்கின்ற என்னுடைய சேனை கொல்லப்படாமலிருக்கும்படியான உபாயத்தை நீர் செய்யும். பிரபுவே! இந்தச் சேனையானது யுத்தத்தில் பாண்டவர்களால் வீரர்கள் அழிக்கப்பட்டதாகியது. புருஷஸ்ரேஷ்டரே! மஹா பாகுபலமுள்ள கர்ணன் ஒருவனும் ஸர்வலோக மகாரதரான நீரும் நமக்குப் பிரியத்தையும் நன்மையையும் செய்யும் விஷயத்தில் பற்றுதலுள்ளவர்களாயிருக்கின்றீர்கள். சல்ய மஹாராஜரே! கர்ணன் இப்பொழுது யுத்தரங்கத்தில் அர்ஜுனனோடு போர் புரிய விரும்புகிறான். மத்திரராஜரே! அந்தக் கர்ணனிடத்தில் ஜயவிஷயமான பேராவல் இருக்கின்றது. அந்தக் கர்ணனுக்குக் (குதிரைகளைக்) கடிவாளம் பிடித்து நன்கு நடத்துபவன் புவியில் வேறொருவனுமில்லை. யுத்தத்தில் பார்த்தனுக்குக் கிருஷ்ணன் எவ்வாறு கடிவாளத்தைப் பிடித்துக் குதிரையை நடத்துகின்ற

உத்தம ஸாரதியாக இருக்கிறானோ அவ்வாறே நீரும் கர்ணனுடைய ரதத்தில் கடிவாளங்களைப் பிடித்துக் குதிரைகளை நடத்துகிறவராகவேண்டும். ராஜரே! பார்த்தன் யுத்தத்தில் அந்தக் கிருஷ்ணனோடு கூடி அவனால் பாதுகாக்கப்பட்டு எந்தக் காரியங்களைச் செய்கிறானோ அவை (உம்மால்) பிரத்யக்ஷமாகக் காணப்படுகின்றன. முந்தி நம்முடைய யுத்தத்தில் அர்ஜுனன் பகைவர்களை இவ்விதமாகக் கொன்றுவிட்டான். கிருஷ்ணனோடு சேர்ந்திருக்கின்ற இந்த அர்ஜுனனுக்கு இப்பொழுது பராக்கிரமம் மிகுந்திருக்கின்றது. மத்திரநாதரே! கிருஷ்ணனோடு சேர்ந்து பார்த்தன் பெரிதான தார்த்தராஷ்டிர சேனையை ஒவ்வொரு தினத்திலும் ஓட்டுகிறவனாகவே யுத்தத்தில் காணப்படுகிறான். மஹாகாந்தியுள்ளவரே! கர்ணனுடைய பாகமும் உம்முடைய பாகமும் மிகுந்திருக்கின்றன. அந்தப் பாகத்தைக் கர்ணனோடு கூடி நீர் ஒரே ஸமயத்தில் இப்பொழுது நாசஞ்செய்வீராக. அருணனோடு சேர்ந்து ஸூர்யன் எவ்வாறு இருளைப் போக்குகிறானோ அவ்வாறே மஹாயுத்தத்தில் கர்ணனோடு சேர்ந்து பார்த்தனை ஸம்ஹாரம் செய்யும். பாலசூரியனுடைய ஒளிபோன்ற ஒளியுடையவர்களான கர்ண சல்யர் இருவர்களையும் உதித்திருக்கின்ற இரண்டு சூரியர்கள் போலக் கண்டு மஹாரதர்கள் யுத்தத்தில் ஓடட்டும். சூரியனையும் அருணனையும் கண்டு இருள் எவ்வாறு நாசம் அடைகிறதோ அவ்வாறு பாஞ்சாலர்களோடும் ஸ்ருஞ்சயர்களோடுங் கூடின குந்திபுத்திரர்கள் நாசமடையட்டும். கர்ணன் ரதிகர்களுள் சிறந்தவன்; நீர் ஸாரத்யம் செய்பவர்களுள் சிறந்தவர். உங்கள் இருவர்களுக்கும் சேர்க்கையானது உண்டானதில்லை; (பிறகு) உண்டாகப் போவதுமில்லை. விருஷ்ணி குலத்தில் தோன்றிய கிருஷ்ணன் எல்லா நிலைமைகளிலும் பாண்டவனை எவ்வாறு பாதுகாக்கிறானோ அவ்வாறு நீர் விகர்த்தநகுமாரனான கர்ணனை யுத்தத்தில் பாதுகாக்கக் கடவீர். யுத்தரங்கத்தில் போர்புரிகின்ற அந்தக் கர்ணனுக்கு நீர் ஸாரத்யம் செய்யவேண்டும். யுத்தத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனை எவ்வாறு எல்லா சத்துருக்களிடத்தினின்றும் பாதுகாக்கிறானோ அவ்வாறே நீரும் மஹாயுத்தத்தில் ராதேயனைப் பாதுகாக்கவேண்டும். ராஜரே! இந்தக் கர்ணன், நீர் ஸாரதியானால், யுத்தத்தில் இந்திரனுடன் கூடின தேவர்களாலும் அவமதிக்க முடியாதவனாவான். பாண்டவர்களால் எவ்விதம் ஜயிக்கப்படுவான்? என் வார்த்தையில் நீர் ஸந்தேகப்படவேண்டாம்' என்று கூறினான். மஹாபாகுபலமுள்ளவனும், குலத்தினாலும் ஐச்வரியத்தினாலும் சாஸ்திர

ஞானத்திலும் பலத்திலும் இறுமாப்புள்ளவனுமான சல்யன், துரியோதனனுடைய வார்த்தையைக் கேட்டுக் கோபமூண்டு இரண்டு கடைவாய்களையும் (நாக்கினால்) நக்கிக்கொண்டு அவனை நோக்கிப் புருவத்தை முக்கோணமாகும்படி செய்துகொண்டும், இரண்டு கைகளையும் அடிக்கடி உதறிக்கொண்டும், கோபத்தினால் சிவந்திருக்கின்ற இரண்டு பெரிய கண்களையும் புரட்டி விழித்துக் கொண்டும் பின்வரும் வார்த்தையைக் கூறலானான். 'ராஜேந்திர! இப்படிப்பட்ட செய்கையில் என்னை ஏவுதல் தகாது. இழிந்த குலத்தில் பிறந்திருக்கின்றவனுக்கு உயர்குலத்தோன் அடிமை செய்யத் தகுந்தவனல்லன். தன்னை வந்து அடுத்தவனும் மிக்க கௌரவமுள்ளவனுமானமித்திரனை அதிகப்பாவியான ஒருவனுடைய வசத்தில் எவன் இருக்கும்படி செய்கிறானோ அவனுடைய அந்தக் காரியம் கீழோரை மேம்படுத்தலும் மேலோரைக் கீழ்ப்படுத்தலுமாகிற விபரீதச் செய்கையினாலுண்டான பாவமாகும். நான்முகனாலே பிராம்மணர்கள் முகத்தினின்று உண்டுபண்ணப்பட்டார்கள். க்ஷத்திரிய ஜாதியானது கையினின்று (உண்டுபண்ணப்பட்டது); பிறகு, வைசியர்கள் இரண்டு தொடைகளினின்றும், சூத்ரர்கள் இரண்டு கால்களினின்றும் உண்டுபண்ணப்பட்டார்களென்று சுருதி கூறுகிறது. பாரத! அந்த நான்கு வர்ணங்களிடத்திலின்றும் ஒன்றோடொன்று சேருவதினால் அநுலோம பிரதிலோம ஸாங்கர்யத்தினாலுண்டான ஜாதி விசேஷங்களுடைய உட்பிரிவுகள் உண்டாயின. க்ஷத்ரியர்கள் ரக்ஷகர்களும் தேடுகின்றவர்களும் கொடுக்கின்றவர்களுமாக எண்ணப்பட்டிருக்கின்றார்கள். பிராம்மணர்கள் யாகம் செய்வித்தாலும், அத்யயனம் செய்வித்தாலும், தோஷமற்ற பிரதிக்ரஹங்களாலும், லோகாநுக்ரஹத்தின் பொருட்டுப் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றார்கள். வைசியர்களுக்கு கிருஷி, பசுக் காத்தல், தருமத்தை அனுசரித்துத் தனத்தை அளித்தல் (என்ற இவைகள் செய்கைகளென்று) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சூத்திரர்கள் பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களுக்கு வேலைசெய்பவர்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள் ஸூதஜாதியில் பிறந்தவர்கள், பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் வேலைசெய்பவர்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். க்ஷத்திரியன் எவ்விதத்தினாலும் ஸூதர்களுடைய ஏவலைக் கேட்கமாட்டான். நான் முடியில் அபிஷேகம் செய்விக்கப்பெற்றவன்; ராஜரிஷிகளுடைய குலத்தில் பிறந்தவன்; மஹாரதனென்று பிரசித்திபெற்றவன்; வந்திகளால் ஸேவிக்கப்படத்தக்கவன்; ஸ்தோத்திரம்செய்யப்

படத்தக்கவன். பகைவர்களுடைய படைகளை நாசம் செய்கிறவனை நான் இவ்வாறாக இருந்துகொண்டு யுத்தத்தில் ஸூதபுத்திரனுக்கு ஸாரத்யம் செய்வதில் பிரியப்படவில்லை. காந்தாரீபுத்திர! அச்சமில்லாமல் ஸாரத்யம் செய்யும்படி சொல்லுகிறபடியால், நீ என்னை அவமதிக்கிறாய்; நிச்சயமாகவே அதிக ஸந்தேகம்கொண்டிருக்கிறாய்; நம்மைக்காட்டிலும் கர்ணனை மேலானவனாக நினைத்துக்கொண்டு அவனைப் புகழுகிறாய். நான் யுத்தத்தில் ராதேயனை எனக்குச் சமானனாக எண்ணவில்லை. ராஜனே! எனக்கு அதிகமான வேலையைக் கட்டளையிடலாம். (சேனையின் ஒரு பிரிவை) யுத்தத்தில் நாசம் செய்வதாகிய அதனைச் செய்துவிட்டு, எவ்விதமாக வந்தேனோ அவ்விதமாகவே திரும்பிச் செல்லுவேன். இல்லையேல், யான் ஒருவனாகவே உன்னுடைய சத்துருக்களோடு போர் புரிவேன். யுத்தத்தில் பகைவர்களைக் கொளுத்துகிற என்னுடைய வீரியத்தை இப்பொழுது நீ பார். குருகுலத்திலுதித்தவனே! என்னைப்போன்ற ஒரு மனிதன் உள்ளத்தில் மனோரதங்களை வைத்துக்கொண்டு பிரவர்த்திக்கமாட்டான். என்னைப்பற்றி நீ அதிக ஸந்தேகப்படாதே. மேலும், என் விஷயத்தில் அவமானம் எவ்விதத்தாலும் செய்யத்தக்கதன்று. பயங்கரமாயிருப்பவைகளும் வஜ்ராயுதத்தினுடைய உருவம்போன்ற உருவமுள்ளவைகளும் திடமாயிருப்பவைகளுமான என்னுடைய கைகளைப் பார். ஆச்சரியகரமான என்னுடைய வில்லையும் ஸர்ப்பங்களுக்கு ஒப்பான அம்புகளையும் காற்றைப் போன்ற வேகமுள்ள நல்ல குதிரைகளையுடையதும் ஆச்சரியகரமுமான என்னுடைய ரதத்தையும் பார். காந்தாரீ புத்திர! தங்கக் கட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட கதாயுதத்தையும் பார். யான் கோபித்துக்கொண்டேனேயாகில், பூமியையும் பிளப்பேன்; பர்வதங்களையும் சிதற அடிப்பேன்; கடல்களையும் வற்றச் செய்வேன்; சூரியனையும் கீழே தள்ளுவேன். ராஜனே! இவ்விதமிருப்பவனும் பகைவர்களை யழிப்பதில் திறமையுள்ளவனுமான என்னை அதிரதனுக்குப் புத்திரனாயிருக்கிற ஸூதனுக்கு ஸாரத்யம் செய்யும் விஷயத்தில் ஏன் ஏவுகிறாய்? ராதேயன் என்னுடைய பதினாறுவது அம்சத்திற்கும் ஈடாகான். ராஜனே! கர்ணனோடும் அர்ஜுனனோடும் ஜனார்த்தனனோடும் கூடி மூன்று உலகத்தார்களும் போரில் ஸன்னத்தர்களாக வந்தாலும் நான் அவர்களையும் எவ்விதத்திலும் மதிக்கமாட்டேன். நான் இழிகுலத்தில் பிறந்த ஒரு மனிதனல்லேன். நான் உன்னால் அறியப்பட்டவனல்லவா? இவ்விதமான அவமானமானது எவ்விதத்தினாலும்

எனக்குச் செய்யத்தக்கதன்று. காந்தாரீ புத்திர ! இப்பொழுதே நான் உன்னிடம் அனுமதி பெற்றுக்கொள்ளுகிறேன். நாட்டைக் குறித்துச் செல்லுவேன். நான் ஸூதபுத்திரனுக்கு ஸாரத்யம் செய்யும் விஷயத்தை ஒருகாலும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். நான் இந்த அவமானத்தை அடைந்து எவ்விதத்திலும் போர்புரியேன். காந்தாரீ புத்திர ! நான் இப்பொழுதே உன்னிடத்தினின்று விடைபெற்றுக்கொள்ளுகிறேன்; என் வீட்டுக்குப் போகிறேன்' என்றான்.

மஹாராஜரே ! யுத்தத்தில் தேர்ச்சியுள்ளவனான சல்யன் இவ்வாறு சொல்லிவிட்டுக் கோபங்கொண்டு அரசர்களின் மத்தியிலிருந்து விரைவாக எழுந்திருந்து சென்றான். அந்தச் சல்யனை உம்முடைய குமாரன் நட்பினாலும் பஹுமானத்தினாலும் தடுத்து, ஸாமோபாயத்தினால் ஸர்வார்த்த ஸாதகமும் மதுரமுமான வாக்கியத்தைச் சொல்லலானான். 'சல்ய மகாராஜரே ! நீர் சொல்லிய இது இவ்வாறுதான்; ஸந்தேகமில்லை. ஜனேஸ்வரரே ! என்னுடைய கருத்தோ ஒன்றிருக்கின்றது. அதனை நீர் தெரிந்துகொள்ளும். மத்ரேஸ்வரரே ! உம்மைக் காட்டிலும் கர்ணனும் மேலானவனல்லன்; மற்ற அரசர்களும் மேலானவர்களல்லர்; கிருஷ்ணனும் யுத்தத்தில் எதிர்ப்பதற்கு வல்லமையுள்ளவனாகான். புருஷஸ்ரேஷ்டர்களான உம்முடைய முன்னோர்கள் ஸத்யத்தையே சொல்லுகிறவர்கள். அதனால், நீர் [1] ஆர்த்தாயனி என்று சொல்லப்படுகிறீரென்பது என்னுடைய எண்ணம். பகைவர்களுடைய கர்வத்தை அழிப்பவரே ! நீர் யுத்தத்தில் பகைவர்களுக்கு மனத்தில் நாட்டப்பட்ட முளைபோலிருத்தலால் உமக்குச் சல்யன் என்கிற பெயர் இப்புவியில் சொல்லப்படுகிறது. அளவற்ற தக்ஷிணைகளைக் கொடுப்பவரே ! முன்பு உம்மால் இது கூறப்பட்டிருக்கிறது. தர்மங்களை அறிந்தவரே ! எதெது உம்மால் சொல்லப்பட்டிருக்கிறதோ அதை அதை எனக்காக நீர் செய்யும். உம்மைக் காட்டிலும் ராதேயனும் வீர்யமுடையவனல்லன். நானும் வீர்யமுடையவனல்லேன். இந்த யுத்தத்தில் (கர்ணனுடைய ரதத்தில் பூட்டியிருக்கின்ற) உத்தமமான குதிரைகளுக்கு ஸாரதியாகும்படி நான் உம்மை வேண்டுகிறேன். குணங்களாலே தனஞ்சயனைக் காட்டிலும் கர்ணனை மேலானவனாக எண்ணுகிறேன். உம்மை வாஸுதேவனைக் காட்டிலும் மேலானவரென்று இவ்வுலகம்

---

[1] ருதம் = ஸத்யம்; ருதாயனர் = ஸத்யத்தை ஆதாரமாகக்கொண்டவர்கள்; ஆர்த்தாயனி = அந்த மரபில் தோன்றியவன்.

எண்ணுகிறது. புருஷச்ரேஷ்டரே! கர்ணன் அஸ்திரங்களாலே பார்த்தனைக் காட்டிலும் மேலானவன். நீங்கள் அச்வஹிருதயத்தை அறிவதிலும் அவ்வாறே பலத்திலும் கிருஷ்ணனைக் காட்டிலும் மேலானவர். மத்ரராஜகுமாரரே! அதிகமான மனோதைர்யத்தையுடைய வாஸுதேவன் அச்வஹிருதயத்தை அறிகிறதைப்போல இருமடங்கு நீர் அறிகிறீர்' என்றான். சல்யன், 'காந்தாரீ புத்திர! கௌரவனே! சேனையின் நடுவில் நீ என்னைத் தேவகிபுத்திரனைக் காட்டிலும் மேலானவனென்று சொல்லுகிற காரணத்தினால் நான் உன்னிடத்தில் பிரீதியுள்ளவனாகிறேன். வீரனே! நீ எண்ணுகிறபடியே பாண்டவச்ரேஷ்டனான அர்ஜுனனோடு போர் புரிகின்ற கர்ணனுக்கு இதோ நான் ஸாரத்யம் செய்கிறேன். வீர! விகர்த்தன குமாரனான கர்ணனைப்பற்றி எனக்கு ஒருவிதமான பிரதிஜ்ஞை இருக்கின்றது. அவனுக்கு எதிரில் என்னிஷ்டப்படி வார்த்தைகளை வெளியிடுவேன்' என்றான். பாரதரே! உம்முடைய புத்திரன், 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லி, அந்த மத்திரராஜனுடைய அபிப்பிராயத்தைக் கர்ணனிடம் கூறினான்.

இருபத்துநான்காவது அத்தியாயம்

(துரியோதனன் சல்யனுக்குத் திரிபுராஸுரர் கதையைச் சொல்லத் தொடங்கியதும், திரிபுராஸுரரால் ஹிம்ஸிக்கப்பட்ட தேவர்களுக்கு ருத்ரர் பிரஸன்னரானதும்)

துரியோதனன், 'மத்திரராஜரே! உங்களுக்கு நான் பின்னும் உரைக்கப்போகிறதைக் கேட்கவேண்டும். பிரபுவே! முன்பு தேவாஸுர யுத்தத்தில் நடந்ததும் மிக்க தவமுடையவரான மார்க்கண்டேயரால் என் பிதாவினிடத்தில் சொல்லப்பட்டதுமான வரலாறு அனைத்தையும் சொல்லுகின்றேன். என்னிடத்தினின்று நீர் மனத்தினால் தெரிந்துகொள்ளும். இவ்விஷயத்தில் நீர் ஆலோசனை செய்யவேண்டாம். நற்குலத்திற் பிறந்த அரசர்களெல்லாரும் தர்மார்த்தங்களுடைய நிச்சயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளாவிட்டால் அதுவே பெருங்கலகமென்பது நிச்சயம். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பெரிய மேன்மையுண்டாயிருந்தது. அப்பொழுது கர்வமுடையவர்களான ஸிம்ஹிகா புத்திரர்கள் தேவர்களை நாசம் செய்தார்கள். பலத்தினால் கர்வங்கொண்ட அந்தத் தானவர்கள் தேவர்களாலே தோல்வி அடைந்தவர்களாகச் செய்

யப்பட்டார்கள். ராஜரே! அந்தச் சமயத்தில் முதலில் (தேவர்களுடைய துன்பத்துக்குக் காரணமான) தாரகாஸுரனுடைய யுத்தமானது நேர்ந்தது. அந்த யுத்தத்தில் தேவர்களால் அஸுரர்கள் ஜயிக்கப்பட்டார்களென்று நாம் கேட்டிருக்கின்றோம். தைத்யர்கள் ஜயிக்கப்பட்டபொழுது, தாரகாஸுரனுடைய மூன்று புத்திரர்களும், கர்வத்தை இழந்தவர்களும் உத்ஸாகத்தை இழந்தவர்களுமாகி, அப்பொழுது பாதாளத்தில் பிரவேசித்தார்கள். பகைவர்களை நாசம் செய்கிறவர்களான தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்ற தாரகாஸுரனுடைய குமாரர்கள் உக்கிரமான தவத்தை மேற்கொண்டு சிரேஷ்டமான நியமத்தில் நிலைபெற்றுத் தவத்தினால் தங்களுடைய சரீரங்களை வாட்டினார்கள். பிதாமஹரும், வரன்களைக் கொடுக்கிற ஸ்வபாவமுடையவருமான ஸ்ரீ பிரம்மதேவர், இந்திரிய நிக்ரஹத்தாலும் தவத்தாலும் விரதானுஷ்டானத்தாலும் ஸமாதியாலும் பிரீதியடைந்து அவர்களுக்கு வரத்தைக் கொடுக்க ஆரம்பித்தார். ஸர்வலோக பிதாமஹரான நான்முகனிடத்தினின்று அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து எப்பொழுதும் ஸர்வப் பிராணிகளிடங்களினின்றும் (தங்களுக்கு) மரணமில்லாமையை வேண்டினார்கள். ஸர்வலோகங்களுக்கும் குருவும் பிரபுவுமான ஸ்ரீ பிரம்மதேவர் அப்பொழுது அவர்களைப் பார்த்து 'அஸுரர்களே! எல்லாப் பிராணிகளாலும் கொல்லத்தகாமலிருக்குந்தன்மை உண்டாகாது. இவ்விடத்தினின்று திரும்புங்கள். உங்கள் மனத்துக்கு ருசித்திருக்கிற வேறு வரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறினார். ராஜரே! பிறகு, அவர்கள் ஒன்றுசேர்ந்து அடிக்கடி பலவாறாக ஆலோசித்து ஸர்வலோகேச்வரரான சதுர்முகரை வணங்கி இவ்விதமான வாக்கியத்தை உரைத்தார்கள். 'இஷ்டப்படி செல்லக்கூடியதும் மங்களகரமானதும் விரும்பப்படுகின்ற ஸமஸ்தவஸ்துக்களும் நிரம்பியதும் தேவர்களாலும் தானவர்களாலும் நாசம் செய்யத்தகாததுமான நகரத்தை வாசஸ்தானமாக ஏற்படுத்திக்கொள்வதற்கு விரும்புகிறோம். தேவரே! பிரபிதாமஹரே! யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் ஸர்ப்பக்கூட்டங்களாலும் நானாவித ஜாதியில் தோன்றின பிராணிகளாலும் பிசாசங்களாலும் சஸ்திரங்களாலும் பிரம்மவாதிகளுடைய சாபங்களாலும் நாசம் செய்யப்படாத மூன்று பட்டணங்களை எங்களுக்கு நீர் கொடுக்கக்கடவீர். தேவரீருடைய அனுக்கிரகத்தை முன்னிட்டு நாங்கள் இவ்வுலகத்தில் மூன்று பட்டணங்களையே வாசஸ்தானமாகக்கொண்டு இந்தப் பூமியில்

சஞ்சரிக்கப்போகின்றோம். ஆயிரக்கணக்கான வருஷங்கள் சென்ற பிறகு ஒருவரோடொருவர் சேரப்போகின்றோம். தோஷமற்றவரே! இந்த மூன்று பட்டணங்களும் ஐக்யமடையப்போகின்றன. ஒன்றுசேர்ந்த இந்த மூன்று பட்டணங்களையும் அப்பொழுது பெருமைபொருந்திய தேவஸ்ரேஷ்டனான எவன் ஒரே பாணத்தினால் நாசம் செய்வானோ அவனே எங்களுக்கு ம்ருத்யுவாகுக' என்று வேண்டினார்கள். அந்தத் தானவர்களுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, பிதாமஹரான ஸ்ரீ பிரம்மதேவர், 'இவ்வாறு ஆகுக' என்று மறுமொழி சொல்லிவிட்டு ஸத்தியலோகத்திற்கு ஏகினார். பிரம்மதேவரிடத்தினின்று வரத்தைப் பெற்றுப் பிரீதி அடைந்தவர்களும் மஹாரதர்களுமான அந்தத் தாரகனுடைய புத்திரர்கள் ஒருவரோடொருவர் ஆலோசித்து மூன்று பட்டணங்களையும் படைப்பதற்காக எல்லாச் சிற்பவேலைகளிலும் மிக்க தேர்ச்சியுள்ளவனும் மூப்பில்லாதவனும் தைத்யர்களாலும் தானவர்களாலும் பூஜிக்கப்படுகின்றவனுமான மயனை வரித்தார்கள். பிறகு, புத்திசாலியான மயன் தன்னுடைய தவத்தினாலே ஸ்வர்ணமயமும் வெள்ளிமயமும் அவ்வாறே [1] இரும்பு மயமுமான மூன்று பட்டணங்களை உண்டுபண்ணினான். பகைவர்களை வாட்டுகிறவரே! அவைகளுள், பொன்மயமான பட்டணமானது தேவலோகத்தில் நிலைபெற்றிருந்தது. வெள்ளிமயமான பட்டணம் ஆகாயத்தில் நிலைபெற்றிருந்தது. அவைகளுள், இரும்புமயமான பட்டணமோ அப்பொழுது பூமியில் நிலைபெற்றிருந்தது. ஒவ்வொரு பட்டணமும் நூறு யோஜனை விஸ்தாரமுடையது; அவ்வளவு நீளமுடையது; உறுதியானது; கொத்தளங்களோடு கூடியது; பெரிய பிராகாரங்களையும் கோட்டை வாயில்களையுமுடையது; சிறந்த வீடுகளால் நெருங்கியது; விசாலமான பெரிய ராஜவீதிகளோடு கூடியது; பற்பலவிதமான உப்பரிகைகளாலும் வாசல்களாலும் விளங்கியது. ராஜஸ்ரேஷ்டரே! அந்த மூன்று பட்டணங்களிலும் திவ்யமான மாலைகளையும் ஆடைகளையும் அணிந்த அஸுரர்கள் தனித்தனி அரசர்களாயிருந்தார்கள். திவ்யமான பொன்னகரமானது மஹாத்மாவான தாரகாக்ஷனுடையதாக இருந்தது. வெள்ளிமயமான பட்டணமானது கமலாக்ஷனுடையதாக இருந்தது. இரும்புமயமான பட்டணமானது வித்யுன்மாலியினுடையது. அந்தமூன்று தைத்திய அரசர்களும் மூன்று உலகங்களையும் வல்லமையினால் கவர்ந்துகொண்டார்கள். 'பிரம்மா என்பவர் யார்?' என்றும் சொன்னார்கள். ஒப்பற்ற வீர்யமுள்ள

---

[1] 'கார்ஷ்ணாயஸம்' என்பது மூலம்.

வர்களும் உத்தமர்களுமான அப்படிப்பட்ட தானவர்கள், லக்ஷமும் பத்து லக்ஷமும், கோடிகளுமாக அங்கு அங்கிருந்து வந்து கூடினார்கள். முன்பு தேவர்களாலே அபகாரம் செய்யப்பட்டவர்களும் மிக்க கொழுப்புள்ளவர்களுமான மாம்ஸ பக்ஷகர்கள் பெரிதான ஐச்வரியத்தை விரும்பித் திரிபுரமென்கிற துர்க்கத்தை அடைந்தார்கள். இந்த எல்லா அஸுரர்களுக்கும் மயன் எல்லாவிதமான உபாயங்களையும் சொல்லுகிறவனாயிருந்தான். அவனை ஆதாரமாகக்கொண்டு அந்த அஸுரர்களெல்லோரும் ஓரிடத்தினின்றும் பயமில்லாதவர்களாக இருந்தார்கள். திரிபுரத்தை வாசஸ்தானமாகக்கொண்ட எந்த அசுரன் எந்த விருப்பத்தை மனத்தினால் நினைத்தானோ அந்த விருப்பத்தை அவனுக்கு மயன் மாயையினாலே அப்பொழுது நிறைவேற்றினான். மஹாபலசாலியான ஹரியென்று பிரஸித்திபெற்ற தாரகாக்ஷ குமாரன் ஒருவனிருந்தான். பிதாமஹரான பிரம்மதேவர் எதனால் ஸந்தோஷமடைவரோ அந்த உத்தமமான தவத்தை அவன் செய்தான். ஸந்தோஷமடைந்திருக்கின்ற பிரம்மதேவரைப் பார்த்து ஹரியானவன், 'சஸ்திரங்களால் கொல்லப்பட்டு எந்தக் குளத்தில் விழுபவர்கள் மறுபடியும் அதிகப் பலசாலிகளாகத் தோன்றுவார்களோ அந்தக் குளமானது எங்களுடைய பட்டணத்தில் உண்டாகவேண்டும்' என்று வேண்டினான். பிரபுவே! தாரகாக்ஷனுடைய குமாரனும் வீரனுமான அந்த ஹரியானவன் வரத்தைப் பெற்று அவ்விடத்தில் மரித்தவர்களைப் பிழைக்கச்செய்யும் 'ம்ருதஸஞ்சீவினி' என்கிற அவ்விதமான குளத்தை உண்டுபண்ணினான். ராஜரே! எந்த அஸுரன் எந்த ரூபத்தோடும் எந்த வேஷத்தோடும் அடிக்கப்பட்டுத் தடாகத்தில் தள்ளப்படுகிறானோ அவன் ஸம்பூர்ணமான பலத்துடனும் வீரியத்துடனும் சௌரியத்துடனும் அவ்விதரூபத்துடனும் வேஷத்துடனுமே உண்டாகிறான். மஹாத்மாவான அந்த ஹரியினாலே உண்டுபண்ணப்பட்டதும் இவ்விதமான வீர்யத்துடன் கூடியதுமான அந்தத்தடாகத்தை அடைந்து திரிபுரவாஸிகளான அசுரர்கள் உலகங்களெல்லாவற்றுக்கும் துன்பஞ் செய்தார்கள். மிக்க தவத்தினால் ஸித்திபெற்றவர்களும் தேவர்களுக்குப் பயத்தை விருத்திபண்ணுகிறவர்களுமான (அஸுரர்கள்) ஓர் அசுரன் கொல்லப்பட்டவுடனே, பத்து அஸுரர்களை உண்டுபண்ணினார்கள். அரசரே! அவர்களுக்கு யுத்தத்தில் எவ்விதத்தினாலும் க்ஷயமுண்டாகிறதில்லை. பிறகு (பிரம்மதேவருடைய) வர

தானத்தினாலே இறுமாப்பையடைந்தவர்களான அந்த அசுரர்கள் லோபத்தினாலும் மோகத்தினாலும் பற்றப்பட்டவர்களும் புத்தியை இழந்தவர்களும் பயமற்றவர்களும் ஸமமானபேராவலுள்ளவர்களுமாகி எல்லோரும் ஒருங்குசேர்ந்து, ஆங்காங்கு அந்த அந்த ஸமயங்களில் பரிவாரங்களுடன் கூடின தேவர்களை ஓடும்படி செய்து தங்களிஷ்டப்படி ஸஞ்சரித்தார்கள். கெட்டநடையுள்ளவர்களான தானவர்கள் எல்லாத்தேவோத்யானங்களையும் தேவதைகளுடைய வாசஸ்தானங்களையும் பரிசுத்தமான ரிஷிகளுடைய ஆச்ரமங்களையும் அவ்வாறே ரமணீயமான நாடுகளையும் வரம்புகடந்துநாசம் செய்தார்கள். பிதிர்க்களுடன் கூடின தேவர்களும் ரிஷிகளும் தங்கள் தங்கள் ஸ்தானங்களை இழந்தவர்களாகச்செய்யப்பட்டார்கள். தேவவிரோதிகளான அந்த மூன்று அஸுரர்களாலே மூவுலகங்களும் ஆக்கிரமிக்கப்பட்டன. பிறகு, உலகங்கள் பீடிக்கப்படும் போது வஜ்ராயுதத்தைக் கையிலேந்திய இந்திரன், தேவர்களால் சூழப்பட்டுத் திரிபுரங்களையும் எல்லாப் பக்கத்திலும் சூழ்ந்து எதிர்த்துப் போர்புரிந்தான். ராஜரே! பகைவர்களை அடக்குபவரே! தேவராஜனான இந்திரன், அந்தப் பிரம்மதேவருடைய வரத்தினால் கொடுக்கப்பட்டவைகளும் பிளக்கமுடியாதவைகளுமான முப்புரங்களையும் பிளப்பதற்குச் சக்தியற்றவனானபொழுது பயந்து அந்தப் பட்டணங்களை விட்டுவிட்டு அந்தத்தேவர்களோடு கூடவே அஸுரர்களால் செய்யப்பட்ட அபகாரத்தைச் சொல்லுவதற்காக அப்பொழுது பிரம்மதேவரை அடைந்தான். அவர்கள், எல்லா உண்மையையும் உரைத்து முடிகளால் நன்றாக வணங்கி, 'பகவானே! அந்த அஸுரர்களைக் கொல்லும் உபாயத்தைச் சொல்லவேண்டும்' என்று விண்ணப்பம் செய்தார்கள். அந்த வார்த்தையைக் கேட்டு மஹிமையுள்ள ஸ்ரீ பிரம்மதேவர் தேவர்களைப்பார்த்து 'தேவர்களே! நீங்களனைவரும் என்னுடைய வாக்கிய கௌரவத்தைக் கேளுங்கள். அஸுரர்கள் எப்பொழுதுமே கெட்ட ஸ்வபாவமுடையவர்கள். அவர்களும் தேவர்களாகிய நீங்களும் என்னுடையவர்களே. அஸுரர்கள் சக்தியுள்ளவர்களல்லர்; (ஆனாலும்) அவர்களனைவர்களும் உங்களை ஹிம்ஸிக்கின்றார்கள். நானோ எல்லாப்பிராணிகளுக்கும் ஸமன். இதுவிஷயத்தில் ஸம்சயமில்லை. துஷ்டர்கள் கொல்லப்படத்தக்கவர்களென்பதனால் இவ்விஷயத்தை உங்களுக்கு நான் சொல்லுகிறேன். அந்தத் துர்க்கங்கள் ஒரேபாணத்தினால் பிளக்கத்தக்கவைகள். வேறுவிதத்தாலில்லை. அந்தப் பட்டணங்களை முக்கண்ணரே

பாணத்தால் நன்றாகப் பிளப்பதற்குத் திறமையுள்ளவர். நீங்களனைவர்களும், ஜகதீச்வரரும் ஜய்சீலரும் உத்தமமான கார்யங்களைச் செய்கின்றவருமான ஸ்தாணுவை யுத்தம்செய்யும்படி சீக்கிரம் வேண்டுங்கள். அந்த ஈச்வரர் அஸுரர்களை ஸம்ஹரிப்பார்' என்று கூறினார். அவ்விதமான வாக்கியத்தினாலே தூண்டப்பட்ட அந்தத் தேவர்கள் முடிவணங்கி நின்றார்கள். மங்களகரமான மனத்தையுடையவர்களும் மஹாத்மாக்களுமான தேவசிரேஷ்டர்கள் தேவவருஷத்தில் ஆயிரம் வருஷம் தவம் புரிந்து விருஷபத்வஜரிடம் சென்றனர். தேவர்கள் பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு சரண்யரான ருத்திரரைச்சரணமடைந்து சாச்வதமான வேதமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு பெருந்தவம் புரிந்தார்கள். எல்லோரும் மன்மதனை எரித்தவரும் தேவர்களுக்குந் தேவரும் சிரேஷ்டரும் ஸ்திரமாயிருப்பவரும் வரங்களைக் கொடுக்கின்றவரும் மூன்றுகண்களையுடையவரும் மங்களரூபியுமான ஈச்வரரை ஸர்வவிதத்தினாலும் சரணமடைந்தார்கள். அந்தத் தேவர்கள் (எல்லாப்பிரஜைகளையும்) ஸம்ஹரிப்பவரும் துதிக்கத்தக்கவரும் பிறப்பில்லாதவரும் சந்திரனால் அடையாளமிடப்பட்ட தலைமயிரையுடையவரும பயம் நேர்ந்த காலங்களில் அபயம் கொடுப்பவரும் தவறாத விரதமுள்ளவரும் ஸர்வ வஸ்துக்களையும் தம் சரீரமாகக்கொண்டவரும் பெருமையுள்ளவரும் உலகத்தையெல்லாம் ஸ்வரூபத்தால் வியாபித்திருக்கின்றவருமான ருத்திரரை, உக்கிரமானவையும் ராக்ஷஸர்களை நாசஞ் செய்பவையுமான மந்திரங்களால் ஸ்தோத்திரஞ்செய்தார்கள். எந்தப் பகவான் பற்பலவிதமான தபோவிசேஷங்களால் தம்முடைய மஹிமையை அறிந்திருக்கிறாரோ, எந்தப் பகவான் புத்தியினால் நிச்சயிக்கத்தக்க ஆத்மதத்துவத்தைத் தாமாகவே அறிந்திருக்கிறாரோ, எந்தப் பகவானுக்கு எப்பொழுதுமே மனமானது தம் வம்சத்தில் நிலைபெற்றிருக்கின்றதோ அத்தகைய மகிமை பொருந்தியவரும் தேஜோராசியும் உமாபதியும் (பாவங்களைப்) போக்குகின்றவரும் ஐசுவரியமுள்ளவரும் உலகத்தில் மற்றொருவரும் நிகரில்லாதவரும் அதிகமாகத் தபிக்கச்செய்பவரும் பாபமற்றவருவான ஈசுவரரை அந்தத் தேவர்கள், மிகுந்த முயற்சியினால் ஸாக்ஷாத்கரித்தார்கள். ஒருவராயிருக்கின்ற அந்தப் பகவான் அப்படிப்பட்ட தம் ரூபத்தினிடத்தில் பலவித ரூபங்களை உண்டுபண்ணினார். அதிகமான ஆச்சரியத்தையுடையவர்களான தேவர்களனைவர்களும் மஹாத்மாவிடத்தில் ஆத்மாவினுடைய பிரதிபிம்பங்களாயிருக்கிற

பரஸ்பர ரூபங்களைக் கண்டார்கள். ஸர்வபூதஸ்வரூபியும் பிறப் பற்றவரும் உலகத்திற்கு நாதருமான அந்த ருத்திரரைக் கண்டு தேவர்களும் பிரம்மரிஷிகளும் தலை பூமியில் படும்படி நமஸ்கரித்த னர். சங்கரர், வணங்குகின்ற அந்தத்தேவர்களைப்பார்த்து, 'மங்கள முண்டாகுக' என்று ஆசீர்வதித்து, அவர்களைப் புகழ்ந்து (பூமியி னின்று) எழுந்திருக்கும்படி செய்து, பகவானுன அவர், புன்னகை யுடன், 'சொல்லுங்கள்; சொல்லுங்கள்' என்று வினவினர். பிறகு, முக்கண்ணராலே அனுமதிகொடுக்கப்பட்ட அந்தத் தேவர்கள், தன் நிலையிலிருக்கின்ற மனத்துடன் ஈசுவரரைப் பார்த்து, 'பிர புவே! தேவரீருக்கு வந்தனம்; வந்தனம்; வந்தனம். தேவதைக ளுக்கெல்லாம் அதிதேவதையானவரும் பிராணவல்லபையான அம்பிகைக்கிருப்பிடமானவரும், அதிகக் கோபமுள்ளவரும், தக்ஷப் பிரஜாபதியினுடைய யாகத்தை அழித்தவரும், ஸ்ருஷ்டிகர்த்தர் களாலே ஸ்தோத்திரம் செய்யப்பட்டவருமான உமக்கு வந்தனம். ஸ்தோத்திரம் செய்யப்பட்டவரும் ஸ்த்தோத்திரம் செய்யப்படத் தக்கவரும் ஸ்தோத்திரம் செய்யப்படுகின்றவரும் மங்களங்களுக்கு உற்பத்திஸ்தானமாயிருப்பவரும் மிகச் சிறந்தவரும் (பிராணிகளை) ரோதனம் செய்யும்படி செய்கின்றவரும் கறுத்த கழுத்தையுடைய வரும் சூலத்தைத் தரித்தவரும் ஸபலமானவரும் [1] மிருகசரீரத் தைத் தரித்தவரும் சிறந்த ஆயுதங்களால் போர்புரிகின்றவரும் ஆராதனத்துக்குத் தகுந்தவரும் சுத்தரும் க்ஷயத்துக்குக் காரண மாயிருப்பவரும் ஹிம்ஸிக்கின்றவரும் ஒருவராலும் தடுக்க முடி யாதவரும் சுக்கிரஸ்வரூபியும் பிரம்மஸ்வரூபியும் பிரம்மசாரியும் ஜகதீசரும் மனத்தினாலே அளவிடமுடியாதவரும் (துஷ்டர்களை) ஸம்ஹரிக்கின்றவரும் புலித்தோலை ஆடையாக உடுத்தவரும் தவத் தில் பற்றுதலுள்ளவரும் மஞ்சள் நிறமுள்ளவரும் விரதங்களை அனுஷ்டிப்பவரும் யானைத்தோலைப் போர்த்தவரும் ஸுப்ரம்மண் யருக்குப் பிதாவும் முக்கண்ணரும் உத்தமமான ஆயுதங்களைத் தரித்தவரும் சரணமடைந்தவர்களுடைய துன்பத்தை நீக்குகின்ற வரும் பிரம்மத்வேஷிகளுடைய கூட்டங்களை நாசஞ்செய்கின்ற வரும் வனஸ்பதிகளுக்குப் பதியானவரும் வனங்களுக்குப் பதியான வருமான தேவரீருக்கு வந்தனம். பசுக்களுக்கெல்லாம் பதியும் எப்பொழுதும் யஜ்ஞங்களுக்குப் பதியுமான தேவரீருக்கு வந்

---

[1] மிருகம் = மான். 'மிருகாக்ஷாய' என்பது மூலம். அக்ஷம் என்ப தற்குச் சரீரம் என்றும், கண் என்றும் பொருளுண்டு. மானினுடைய கண் போன்ற அழகிய கண்களையுடையவரென்றும் கொள்ளலாம்.

தனம். ஸைன்யங்களையுடையவரும் மூன்று கண்களையுடையவரும் அளவுகடந்த வல்லமை பொருந்தியவருமான தேவரீருக்கு வந்தனம். மனோவாக்குக்காயங்களால் உம்மைச் சரணமடைந்திருக்கின்ற எங்களைத் தேவரீர் பாதுகாக்கவேண்டும்' என்று வேண்டினார்கள். பிறகு பகவான், பிரஸன்னராகி, 'நல்வரவா' என்கிற வார்த்தையினால் அவர்களைச் சந்தோஷிக்கச் செய்து, '(தேவர்களே!) உங்களுடைய பயம் விலகட்டும். உங்களுக்கு யான் என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்' என்று நியமித்தார். ஈசுவரருடைய வார்த்தையைக் கேட்டுத் தேவர்கள் ஸந்தோஷமடைந்தார்கள்.

இருபத்தைந்தாவது அத்தியாயம்

(தேவர்கள், ருத்திரனுடைய வசனத்தினால் அவருக்குத் தத்தம் பலத்திற் சரிபாதி கொடுத்து, அவருடன் திரிபுரஸம்ஹாரத்தின்பொருட்டுப் படை எடுத்துச் சென்றது)

மஹாத்மாவான ருத்திரராலே பிதிருக்கள், தேவர்கள், ரிஷிகள் இவர்களுடைய கூட்டங்களுக்கு அபயம் கொடுக்கப்பட்டவுடனே, உலகத்திற்குப் பிதாமஹரான பிரம்மதேவர், சங்கரரைப் பூஜித்துக் கூறலானார். 'இந்த அஸுர துர்க்கங்கள் மூவுலகங்களையும் ஆக்ரமிக்கின்றன அல்லவா? பிரஜைகளுக்கு யார் நாதன்? கோர ரூபிகளான அந்த த்ரிபுராஸுரர்களனைவர்களையும் காலதாமதமின்றி ஸம்ஹாரம் செய்யும். தேவநாதரே! சிறந்த இந்த பிரம்மபதவியை அடைந்திருக்கின்ற என்னால் வரங்களைக் கொடுக்கக்கூடிய காலம் நேர்ந்தபடியால் தானவர்களின்பொருட்டுப்பெரிய வரம் கொடுக்கப்பட்டுவிட்டது. யுத்தத்தில் அவர்களைக் கொல்லுகிறவர் வேறொருவருமில்லை என்று நாங்கள் கேள்விப்படுகிறோம். ஸர்வப்பிராணிகளுக்கும் ஈசுவரரே! உலக மரியாதையைக் கடந்தவர்களான அந்த அஸுரர்களை உம்மைத் தவிர வேறொருவன் ஸம்ஹரிப்பதற்குத் தகுந்தவனல்லன். தேவரீர் ஒருவரே இவர்களைக் கொல்வதில் தகுந்த சத்துரு. தேவரே! சரணமடைந்து வேண்டுகின்ற தேவர்களுக்குத் தேவரீர் அருள்புரிவீராக. வேண்டினவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பவரே! யுத்தத்தில் அஸுரர்களைக் கொல்லும். (பகைவர்களின்) கர்வத்தை அழிப்பவரே! தேவரீருடைய அனுக்ரகத்தினால் உலக முழுமையும் ஸுகமாக விருத்தியடைந்தது. தேவரீர் தேவர்களுக்குச் சரண்யர். உம்மை நாங்கள் சரணமடைந்தோம்' என்று கூறினார்.

ஈசுவரரே, 'உங்களுடைய சத்துருக்களனைவர்களும் கொல்லப்படத்தக்கவர்களென்பது என்னுடைய எண்ணம் பலசாலிகளான தேவ சத்துருக்களை நான் ஒருவனுயிருந்து ஸம்ஹரிப்பதற்கு மனம் எழவில்லை. நீங்களனைவர்களும் ஒருங்குசேர்ந்தும், என்னுடைய தேஜஸுடன்கூடியும் மஹாபலசாலிகளான அந்த அஸுரர்களனைவர்களையும் கூட்டமாக யுத்தத்தில் வெல்லுங்கள்' என்று நியமித்தார், தேவர்கள், 'எங்களுடைய தேஜசும் பலமும் எவ்வளவோ அவ்வளவைக் காட்டிலும் இரண்டு மடங்கான தேஜசும் பலமும் அஸுரர்களுக்கிருக்கின்றன' என்று நாங்கள் எண்ணுகிறோம். அவர்களுடைய தேஜஸும் பலமும் காணப்பட்டவையல்லவா?' என்று தெரிவித்தார்கள். ஈசுவரர், 'எவர்கள் உங்களுக்கு அபராதிகளோ அந்தப் பாபிகள் ஸர்வவிதத்தினாலும் (என்னால்) கொல்லத்தக்கவர்கள். நீங்களெல்லோரும் என்னுடைய தேஜஸ் பலம் இவைகளுடைய ஒரு பாதியினாலே பகைவர்களை நாசஞ்செய்யுங்கள' என்று நியமித்தார். தேவர்கள், ஸுரேசுவரரே! தேவரீருடைய தேஜஸின் பாதி பாகத்தைத் தரிப்பதற்கு நாங்கள் சக்தியற்றவர்களாயிருக்கிறோம். தேவரீரே! எங்களெல்லோருடைய பலத்தின் அர்த்தாம்சத்தினாலும் பகைவர்களை நாசஞ்செய்யும். தேவரே! எவ்விதத்தினாலும் நாங்கள் ரக்ஷிக்கப்படத்தக்கவர்கள். மஹாதேவரே! நீரே எங்களைக் காப்பாற்றும். நீரே பகைவர்களைக் கொல்லும்' என்று பிரார்த்தித்தார்கள். ஈசுவரர் 'என்னுடைய தேஜஸைத் தரிப்பதற்கு நீங்கள் சக்தியற்றவர்களாக இருப்பீர்களேயாகில், நானே உங்களுடைய தேஜஸிற் பாதியோடு கூடியவனாக இந்தச் சத்துருக்களைக் கொல்வேன். தேவர்களே! நீங்களனைவர்களும் ஒன்றுசேர்ந்து என் பலத்திற் பாதியை யுத்தத்தில் தாங்குவதற்குச் சக்தியற்றவர்களாயிருப்பீர்களானால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அஸுரர்களும் தேவர்களுமான எல்லோரும் எனக்குச் சமம். தேவர்களே! நான் எல்லாப் பிராணிகளுக்கும் மங்களத்தை உண்டுபண்ணுகிறவனுயிருக்கிறேன். அதனாலேதான், எனக்குச் சிவத்தன்மை. ஆனால், அந்தச் தேவ சத்துருக்கள் அதர்மத்துடன் இருக்கின்றார்கள். அதனாலும், உங்களுக்கு ஹிதத்தைச் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தினாலும், என்னால் அவர்கள் கொல்லப்படத்தக்கவர்கள். என்னைச் சரணமடைந்தவர்களும் தருமத்தினால் ஜயம்பெற விருப்பமுள்ளவர்களுமான உங்களுக்கு யான் உதவிபுரியப்போகின்றேன்; உங்களுடைய பகைவர்களைக் கொல்லப்

போகிறேன். எல்லாத் தேவர்களும் தனித்தனியாகப் பலத்தில் பாதிப்பாதி எனக்குக் கொடுங்கள். துன்பத்தை அடைவிக்கப் பட்டவர்களான எல்லாப் பிராணிகளும் எனக்குப் பசுவாயிருக்கும் தன்மையை ஏற்படுத்திக்கொள்ளட்டும். தேவர்களே! பசுக்களுக்குப் பாதியாயிருக்குந் தன்மையானது இப்பொழுது எனக்கு உண்டாகுக. இவ்வாறு தேவசத்துருக்களான பசுக்களைக் கொன்றும் நான் பாபத்தை யடையமாட்டேன். திவ்யமான ரதத்தையும் (பகைவர் படையைத் தாண்டிச்) செல்லக்கூடிய தேர்க்குதிரைகளையும் வில்லையும் அம்பையும் ஸாரதியையும் ஏற்படுத்துங்கள். அந்த ஸாதனங்களால் உங்களுடைய சத்துருக்களை நான் ஜயிப்பேன்' என்று கூறினார். தேவர்களுக்குத் தேவரும் பூமிக்கு நாதருமான ஈசுவரருடைய இவ்விதமான வார்த்தையைக் கேட்டுத் தேவர்களெல்லோரும் பசுத்தன்மையைப்பற்றி ஸந்தேகங்கொண்டவர்களாக வியஸனமடைந்தார்கள். அவர்களுடைய மனோபாவத்தைத் தேவரான ருத்திரர் அறிந்து, அவர்களைக் குறித்து இவ்விதமான வசனத்தை உரைக்கலானார். 'தேவஸ்ரேஷ்டர்களே! உங்களுக்கு இந்தப் பசுத்தன்மை விஷயத்தில் பயம் வேண்டாம். பசுத்தன்மைக்கு விமோசனத்தைக் கேளுங்கள். அதனைச் செய்யவேண்டும். உங்களுள் எவன் பசுபதியான என்விஷயமான விரதத்தை அனுஷ்டிக்கிறானோ அவன் பசுத்தன்மையினின்று விடுபடுவான். உங்களுடைய கோஷ்டியில் நான் ஸத்தியமாகப் பிரதிஜ்ஞை செய்கிறேன். இன்னும் மற்ற எவர்கள் இந்த விரதத்தை அனுஷ்டிப்பார்களோ அவர்களும் விடுபடுவார்கள். எவன் கடைசிக்காலம் வரையிலாவது பன்னிரண்டு வருஷமாவது மூன்று ருதுக்களடங்கின அரைவருஷமாவது ஒரு மாதமாவது பன்னிரண்டு நாளாவது (அனுஷ்டிப்பானோ) அவன் பசுத்தன்மையினின்று விடுபடுவான். ஆதலால், சிறந்ததும் ரஹஸ்யமானதும் திவ்யமுமான இந்த விரதத்தை நீங்கள் அனுஷ்டிப்பீர்களாக' என்று கூறினார். தேவதேவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவரும் பிரபுவும் தலைவருமான அந்தச் சங்கரரைப் பார்த்துத் தேவர்கள், 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு, 'எங்களுடைய தேஜஸைச் சேர்ந்த இந்த அர்த்தாம்சத்தையும் தேவரீர் பெற்றுக்கொள்ளவேண்டும்' என்று விண்ணப்பம் செய்தார்கள். ரஜாஸ்ரேஷ்டரே! சூலபாணியான சங்கரர், 'அவ்வாறே ஆகட்டும்' என்று மறுமொழிகூறினார். பிறகு, தேவர்களனைவர்களும் மஹாத்மாவான பசுபதியின்பொருட்டுத் தேஜஸினுடைய பாதியைக்

கொடுத்தார்கள். எல்லாத் தேவர்களுடைய தேஜஸினுடைய பாதியையும் பெற்றுக்கொண்டு தேஜஸினாலே அதிகரித்தவராகி மீண்டும் அதிக பலசாலியானார். அதுமுதல் அவர் தேவர்களுள் தேவ தேவரானார்; அப்பொழுது, பசுஸ்வரூபிகளான எல்லாப் பிராணிகளுக்கும் பதியுமானார்; பசுக்களாயிருக்கின்ற எல்லாப் பிராணிகளுக்கும் பதியாயிருத்தலால் பசுபதியென்றும், மங்களத்தை உண்டுபண்ணும் தன்மையால் பவரென்றும் சொல்லப்படுகிறார். மிக்க காந்தியுடையவரான தேவதேவர் எல்லாத் தேவர்களுடைய தேஜஸிலும் பாதியைப் பெற்றுக்கொண்டு, அந்தத் தேஜஸினால் நன்றாக ஜ்வலிக்கின்றவர்போலிருந்துகொண்டு அவர்களனைவர்களையும் பிரகாசிக்கச்செய்தார். பிறகு, தேவர்களனைவர்களும் புராரியான ருத்திரருக்கு அபிஷேகம் செய்வித்தார்கள். (அதனால்) ருத்திரர் மஹாதேவரும் தேவதேவரும் மஹேச்வரருமானார்.

இருபத்தாறுவது அத்தியாயம்

(விச்வகர்மா தேவர்களுடைய கட்டளையினால் பூமி முதலானவற்றை ஸாதனமாகக்கொண்டு யுத்தத்துக்குத் தேர் அமைத்தது)

எல்லாத் தேவர்களும், மஹாத்மாவான சங்கரரின்பொருட்டுத் தமது தேஜஸில் பாதியைக் கொடுத்தும், பசுத்தன்மையை ஏற்றுக்கொண்டும், குறைவில்லாதவனான விச்வகர்மாவை அழைத்துத் தேர் அமைக்கும்படி சொன்னார்கள். விச்வகர்மாவும் ஆலோசித்துத் திவ்யமான ஒரு ரதத்தை உண்டுபண்ணினான்; ஒன்று சேர்ந்ததும், விசாலமானதும், பட்டணங்களுடைய வரிசைகளுடன் கூடினதும், மலைகளோடும் காடுகளோடும் தீவுகளோடும் கூடியதும், எல்லாப்பிராணிகளையும் தரிக்கின்றதுமான பூதேவியை ரதமாகச் செய்தான்; நக்ஷத்திரமண்டலத்தை மூக்கணையாகவும் மஹாமேருகிரியைக் குடையாகவும் செய்தான்; அநேக விருக்ஷங்களால் சூழப்பட்டதும் ரத்னங்களுக்கு இருப்பிடமானதும் சிறந்ததுமான இமயமலையையும் பற்பல மரங்களாலும் கொடிகளாலும் வியாபிக்கப்பட்ட விந்தியமலையையும் திடமான [1] அவஸ்கரம் பிரதிஷ்டானம் முதலான தேருறுப்புக்களாக அப்பொழுது ஏற்படுத்தினான். மிக்க மஹிமையுள்ளவனான த்வஷ்டாவானவன்

---

[1] தேருறுப்புக்கள் பலவற்றிற்குப் பொருள் நிச்சயிக்கக்கூடாமையினால், அவைகள் மூலத்திலுள்ளபடியே பதிப்பிக்கப்பெற்றன.

நானாவிதமான பக்ஷிகளையுடைய அஸ்தகிரியை அதிஷ்டானமாகச் செய்தான்; உதயபர்வதத்தைக் கூபரமாக ஏற்படுத்தினன். மீன்களுக்கும் முதலைகளுக்கும் சுறுமீன்களுக்கும் இருப்பிடமானதும் தானவர்களுக்கு இருப்பிடமானதும் பட்டணங்களாலும் ரத்தினச் சுரங்கங்களாலும் விளங்குகின்றதுமான ஸமுத்திரத்தை இருசாகச் செய்தான். நக்ஷத்திரங்களுடைய கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்ட சந்திரனை ஒரு சக்கரமாகச்செய்தான். கிரணஸமூகங்களுடன் கூடின சூரியனை மற்றொரு சக்கரமாகச் செய்தான். குறைவற்றவனான விச்வகர்மா கங்கையையும் ஸரஸ்வதீ நதியையும் இரண்டு அம்புத்தூணிகளாகச் செய்தான். அவ்விதமே, நீர்ப்பெருக்குள்ள நதிகள் தேருக்கு அலங்காரங்களாயின. மூன்று அக்னிகளையும் மந்திரத்தின்படி அந்த ரதத்தின் [1] திரிவேணுகமாகச் செய்தான். நக்ஷத்திரங்களை ரதத்திற்கு அநுகர்ஷங்களாகவும் பிரகாசிக்கின்ற [2] வரூதங்களாகவும் ஏற்படுத்தினன். ஓஷதிகளையும் கொடிகளையும் ஒளிபொருந்திய மணிகளுடைய ஸமூகமாக ஏற்படுத்தினன். விபுவான விச்வகர்மா மாதங்களாலும் பக்ஷங்களாலும் ருதுக்களாலும் அஹோராத்திரங்களாலும் [3] கலைகளாலும் காஷ்டைகளாலும் அவ்வாறே அயனங்களாலும் ரதத்தை அலங்கரித்தான். அந்தரிக்ஷத்தை நுகமாகவும், பிரளயகால மேகங்களை நுகத்தினுடைய கணுக்களாகவும், [4] த்ருதி மேதை ஸ்திதி ஸன்னதி இவைகளை முளையாகவும், ருக்வேத ஸாமவேதங்களை ரதத்தினுடைய பாரத்தைப் பொறுக்கும் இரண்டு குதிரைகளாகவும் ஏற்படுத்தினன். யஜுர்வேதமும் அதர்வணவேதமுமாகிய இவ்விரண்டையும் பின்தின இரண்டு குதிரைகளாக ஏற்படுத்தினன். வேதத்திலுள்ள பத ஸமூகத்தையும் [5] ஸினீவாலி, [6] அநுமதி, [7] குஹூ, நல்ல ஒளிபொருந்தின [8] ராகை

---

[1] துரோண பர்வம் 601 ம் பக்கம் குறிப்பிற் காண்க.

[2] பீஷ்ம பர்வம், 412-ம் பக்கம் குறிப்பிலும், துரோண பர்வம் 10-ம் பக்கம் குறிப்பிலும் காண்க.

[3] விராட பர்வம் 218-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

[4] ஆதி பர்வம் 240-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

[5] சந்திரகலை தோற்றுகிற அமாவாஸ்யைக்குப் பெயர்.

[6] ஒரு கலையினால் குறைவுபட்ட சந்திரனுடன் கூடின பௌர்ணமாஸிக்குப் பெயர்.

[7] சந்திர கலை சிறிதும் இல்லாமலிருக்கும் அமாவாஸ்யை.

[8] குறைவற்ற சந்திரமண்டலத்துடன் கூடின பௌர்ணமாஸி.

இவைகளையும் குதிரைகளுக்கு அலங்காரமாகச் செய்தான்.[1] கூஷ்மாண்டங்களையும் ஸர்ப்பங்களையும் குதிரைகளுக்குப் பூட்டாம் வார்களாக ஏற்படுத்தினான். தாலப்ருஷ்டம், நஹுஷம், கார்க்கோடகம், தனஞ்சயம் இவைகளும் இன்னும் மற்ற ஸர்ப்பங்களும் குதிரைகளைக் கட்டுவதற்குரியவைகளாயின. ராஜரே![2] வேதாங்கங்கள் ஆறும் கடிவாளங்களாக ஏற்படுத்தப்பட்டன. ஓங்காரமானது விஸ்வகர்மாவினால் அந்தத் தேரினுக்குக் கொறடாவாக ஏற்படுத்கப்பட்டது. தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட எல்லா யஜ்ஞங்களும் துண்டுதுண்டாகத் தேருறுப்புக்களாயின. மனமானது வீற்றிருக்குமிடமாகியது. ஸரஸ்வதீ தேவி[3] பரிரத்யையானாள். நான்குவித அக்ஷரங்களுடன் கூடின சஸ்திரமந்திரங்கள் காற்றினால் அலைக்கப்பட்ட கொடித்துணிகளாயின. மின்னலானது இந்திரவில்லுடன் கூடின அந்த ரதத்தை ஒளியினால் விளக்கியது. கிரஹங்களுடைய கூட்டங்களாலே சூழப்பட்ட ஆகாசமானது யுத்தம் செய்வதற்காகப் பிளக்கமுடியாததும் ஒளிபொருந்தியதும் விசித்திரமாயுள்ளதும் காலசக்கரங்களால் எந்தப் பக்கத்திலும் பிளக்கப்பட்டதுமான கவசமாக ஏற்படுத்தப்பட்டது. மஹாராஜரே! ஆண்மையிற் சிறந்தவரே! இந்தமாதிரி விஸ்வகர்மாவினால் அமைக்கப்பட்டதும் பகைவர்களுக்கும் பயத்தைப் பெருக்குவதும் ரதங்களுள் சிறந்ததுமான அந்த ரதத்தில் சங்கரர் தம்முடைய திவ்யாயுதங்களை வைத்தார்; ஆகாயத்தைக் கொடிமரமாகச் செய்து அதில் விருஷபத்தை ஸ்தாபனம் செய்தார். ஓங்கியெழுந்து விளங்குகின்ற பிரம்மதண்டமும் காலதண்டமும் ருத்திரதண்டமும் ஜ்வரங்களும் ரதத்தினுடைய நான்கு திக்கிலும் அலங்காரங்களாயின. ஆறு ருதுக்களுடன் கூடின ஸம்வத்ஸரத்தை விசித்திரமான வில்லாகச் செய்து, தம்முடைய சாயையைக் குறைவற்றதும் அழிவற்றதுமான நாண்கயிறாக ஏற்படுத்தினார். மஹிமையுள்ளவரான ருத்திரர் காலஸ்வரூபியன்றோ? அந்த வில்லும் ஸம்வத்ஸர ரூபமன்றோ? ஆதலால், ரௌத்திரமான காலராத்திரியானது வில்லுக்குத் திடமான நாண்கயிறாக ஏற்படுத்தப்பட்டது. பிறகு, விரதத்தை மேற்கொண்டு நன்கு நிறைவேற்றிய ரிஷிகள், ரதத்தில் பூட்டத்தக்கவையும் களிப்பு மிக்கவையுமான அந்தக் குதிரைகளை ஒவ்வொன்றாகக் கொண்டுவந்து பூட்டினார்கள். ராஜரே! மந்திரங்களில் கரை கண்டவர்களான மஹா

---

[1] ஒருவகைப் பிசாசுகள். [2] ஆதிபர்வம் 56 ம் பக்கம் குறிப்பிற் காண்க.
[3] தேர்த்தட்டின் ஓரத்திலுள்ள வழி.

ரிஷிகளாலே வலப்பக்கத்து மூலையில் ருக்வேதமானது பூட்டப் பட்டது; இடப்பக்கத்தில் ஸாமவேதம் பூட்டப்பட்டது. தேவப் பிராம்மணர்களாலே யஜுர்வேதமானது பின்புறமாக வலப் பக்கத்தில் கட்டப்பட்டது; ராஜரே! அவ்விதமாகவே அதர்வண வேதமானது பின்புறத்தில் இடப்பக்கத்தில் கட்டப்பட்டது. இவ் வாறாக அந்தக் குதிரைகள் யஜ்ஞங்களை அறிந்தவர்களான மஹ ரிஷிகளாலே ரதத்தில் சேர்க்கப்பட்டன. அவ்வாறு சேர்க்கப் பட்ட அந்த நான்கு வேதங்களும் யாகத்தினுடைய மத்தியத்தை அடைந்திருந்தால் எவ்விதமோ அவ்விதமாக விளங்கின. உதார மான மனத்தையுடைய விஸ்வகர்மா திவ்ய ரதத்தை ஏற்படுத்திப் பிறகு பாணத்தையும் அமைக்க ஆரம்பித்தான். அழிவற்றவரும் யஜ்ஞத்தை வாகனமாகக் கொண்டவருமான ஸ்ரீ ஹரியைத் தியா னித்துப் பாணமாக அமைத்தான். ராஜரே! ராஜஸ்ரேஷ்டரே! பரிசுத்தமான கந்தத்துடன் கூடின வாயுவை அந்தப் பாணத்துக்குச் சிறகாகவும் புங்கமாகவும் ஏற்படுத்தினான். உலகமனைத்தும் விஷ்ணுஸ்வரூபமென்றும் அக்நீஷோமஸ்வரூபமென்றும் சொல்லப் படுகிறதினாலே அக்நீஷோமர்களை அப்பொழுது பாணமுகத் தில் ஏற்படுத்தினான். ஷாட்குண்ய பரிபூர்ணரும், அளவற்ற தேஜஸ்ஸையுடையவருமான ஈஸ்வரருக்கு மஹாவிஷ்ணுவானவர் ஆத்மாவாதலால், அந்த ருத்திரர் விஷ்ணுமயமான பாணத்தைத் தனுஸிலுள்ள நாண்கயிற்றில் சேர்ப்பதை [1] ஸஹித்தார். ப்ருகு, அங்கிரஸ் இவர்களுடைய கோபத்தினின்று தோன்றின வரும் அக்நிபோன்ற குரோதத்தை உடையவரும் ஸஹிக்க முடியாதவரும் (கண்டத்திலும் சடையிலும் முறையே) கறுப்பாக வும் சிவப்பாகவுமிருக்கின்றவரும் புகைநிறமுடையவரும் தோலை ஆடையாக உடுத்தவரும் பயங்கரரும் லக்ஷம் சூரியர்களுக்கு ஒப்பானவரும் தேஜஸ்ஸுகளுடைய ஜ்வாலைகளால் சூழப்பட்ட வரும் மங்களஸ்வரூபியும் கெட்ட நடையுள்ளவர்களை நழுவும் படி செய்பவரும் ஜயசீலரும் பிரம்மத்வேஷிகளை நாசம் செய் பவரும் உத்தமரும் பிரபுவுமான ருத்திரர் தாங்கமுடியாததான கடுங்கோபத்தை அந்தப் பாணத்தில் விட்டார். ராஜரே! அந்த வில்லினுடைய அங்கங்களை அடுத்து நிலைபெற்றிருக்கின்ற ஜங்கமா ஜங்கமஸ்வரூபமான இவ்வுலகமனைத்தும் ஆச்சரியகரமான காட்சி யுள்ளதாக விளங்கியது. அவ்விதமான திவ்ய ரதத்தைப் பார்த்து அந்த ருத்திரர் கவசமணிந்தவராகவும் கையில் விற்பிடித்தவராகவும்

[1] நீலகண்ட வ்யாக்யான பாடம் இங்கு சிறிது வேறுபடுகிறது.

சந்திரன், விஷ்ணு, அக்நி, வாயு இவர்களிடத்தினின்று உண்டான திவ்யமான அம்பைக் கையிலெடுத்தார். மஹாதேவர் அப்பொழுது முயற்சியுடன் அந்தப் பாணத்தைக் கையிலெடுத்துத் தைத்யர்களையும் தானவர்களையும் நடுங்கச்செய்துகொண்டு, ஆகாயத்தையும் பூமியையும் நடுங்கச்செய்கின்றவர்போல அந்தத் தேரின்மீதேறினார். மஹரிஷிகளாலே ஸ்தோத்திரம் செய்யப்படுகின்றவரும், வந்திகளாலே நமஸ்கரிக்கப்படுகின்றவரும், நடனத்தில் ஸாமர்த்தியமுள்ள அப்ஸரஸுகளுடைய கூட்டங்களால் செய்யப்படும் நர்த்தனத்தைக் கண்டு களிப்பவரும், வரங்களைக் கொடுப்பவரும், கத்தியையுடையவரும், பாணங்களையுடையவரும் வில்லையுடையவரும், ஜ்வலிக்கின்றவருமான அந்த ஈச்வரர் புன்னகை செய்துகொண்டு, 'எவன் ஸாரதியாயிருக்கக்கூடும்?' என்று வினவினார்.

இருபத்தேழாவது அத்தியாயம்

(தேவர்களுடைய வேண்டுதலால் பிரம்மா ருத்திரருக்கு ஸாரத்யம் செய்ததும், ருத்திரரால் திரிபுரங்கள் எரிக்கப்பட்டதும், துரியோதனன் மறுபடியும் சல்யனைக் கர்ணனுக்கு ஸாரத்யஞ்செய்ய வேண்டியதும்)

(தேவர்களெல்லாரும்) ஈச்வரரைநோக்கி, 'தேவேசரே! தேவரீர் எவனை ஏவப்போகிறீரோ அவன் உமக்கு ஸாரதியாவான்; ஸம்சயமில்லை' என்று சொன்னார்கள். மஹாதேவர், அந்தத் தேவர்களைப் பார்த்து, 'நீங்கள் நன்றாக ஆலோசித்து என்னைக் காட்டிலும் எவன் மிகவும் சிறப்புற்றவனோ அவனை ஸாரதியாக ஏற்படுத்துங்கள். காலதாமதம் செய்யவேண்டாம்' என்று சொன்னார். எல்லாத்தேவர்களும் இந்த வார்த்தையைக் கேட்டுப் பிதாமஹரை அடைந்து நமஸ்காரம்செய்து மஹரிஷிகளாலே அந்தப் பிரம்மதேவருக்கு அருள் வரச்செய்து ஒரே மனத்தையுடையவர்களாக விண்ணப்பம் செய்தார்கள். 'தேவரே! தேவசத்துருக்களான அஸுரர்களைக் கொல்லும்விஷயத்தில் தேவரீரால் எந்த உபாயம் சொல்லப்பட்டதோ அது அவ்வாறே எம்மால் செய்யப்பட்டது. விருஷபத்வஜரும் பிரஸன்னராக இருக்கிறார். விசித்திரமான ஆயுதங்களாலே நாலு பக்கத்திலும் நிறைக்கப்பட்டிருக்கிற ரதமும் அமைக்கப்பட்டது. அந்த உத்தமமான ரதத்தில் ஸாரதியாயிருக்கத்தக்கவனை நாங்கள் அறியோம். தேவச்ரேஷ்டரே! ஆதலால், ஒரு ஸாரதியை ஏற்படுத்தவேண்டும். விபுவே!

தேவரே! எங்களுடைய அவ்விதமான வாக்கை ஸபலமாகச் செய்வதற்கு நீரே தகுந்தவர். பகவானே! எங்களிடத்தில் முற்காலத்தில் இவ்விதமாக வார்த்தையைச் சொல்லியிருக்கிறீர். எப்பொழுதுமே அவமதிக்கமுடியாததும் பகைவர்களை ஓடும்படி செய்கின்றதும் உத்தமமுமான ரதமானது சேர்க்கப்பட்டுவிட்டது. இந்த ரதத்தில் தானவர்களைப் பயமுறுத்துகின்றவரும் முயற்சியுள்ளவரும் பிநாகத்தை வில்லாக உடையவருமான இவர் யுத்தஞ் செய்கிறவராக ஏற்பட்டுவிட்டார். அவ்வாறே, வேதங்களும் உத்தமமான ரதத்தில் குதிரைகளாக ஏற்படுத்தப்பட்டன. [1] நக்ஷத்திரங்களுடைய ஸமூஹங்களால் அனுஸரிக்கப்பட்டிருக்கின்றதும் வரூதங்களையுடையதுமான மஹாத்மாவான அந்தப் பரமசிவனுடைய ரதமானது மலைகளுடன் கூடின பூமிஸ்வரூபமாயிருக்கின்றது. இவைகளெல்லாவற்றிலும் விசேஷமுடையவனான ஒரு ஸாரதி அந்த ரதத்திற்கு வேண்டும். பிதாமஹரே! தேவர்கள் அந்த ரதத்திலும் ரதத்திலுள்ள யுத்தவீரனிலும் கவசங்களிலும் சஸ்திரங்களிலும் வில்லிலும் பிரவேசித்திருக்கின்றார்கள். உம்மைத்தவிர அந்த ரதத்திற்கு வேறு ஸாரதியை நாங்கள் காணவில்லை. பிரபுவே! நீர் எல்லாக் குணங்களும் அமைந்தவரன்றோ? எல்லாத் தேவதைகளையுங்காட்டிலும் சிறப்புற்றவர். தேவரே! லோகேசரே! அதிவேகமாகச் செல்லுகின்றவையும் உபநிஷத்துக்களுடன் கூடினவையுமான இந்த வேதங்களாகிற குதிரைகளை அடக்குவதற்குத் தேவரீரே சக்தியுடையவர். எங்களுக்கு நீரே ஸாரதியாக இருக்கவேண்டும். யுத்தம் செய்வதற்குப் பலத்தினாலும் வீரியத்தினாலும் ஸத்வத்தினாலும் வினயத்தினாலும் மேம்பட்டிருக்கின்ற ஒரு ஸாரதி ஏற்படவேண்டும். ருத்திரரைக்காட்டிலும் மேற்பட்டவர் வேறொருவருமில்லை. அப்படிப்பட்ட தேவரீர் எங்களைக் கரையேற்றிவிடும். அழிவற்றவரே! நீர் ஸாரத்யம் செய்யும். உம்மைவிட மேலான வேறு ஒருவன் இவ்வுலகில் இல்லை; உண்டாகப் போவதுமில்லை. தேவேசரே! பேசுபவருள் சிறந்தவரே! நீர் எல்லா விஷயங்களாலும் மேலானவர். நீர் அந்த ரதத்தின் மீதேறி உத்தமமான குதிரைகளைக் கடிவாளம் பிடித்து நடத்தும். தேவரே! தேவசத்துருக்கள் உம்முடைய அருளால் கொல்லப்படத்தக்கவர்கள். மிக்க தோள்வலியமைந்தவரே! நீர் அஸுரர்களிடத்தினின்றுண்டான பெரிய பயத்திலிருந்து எங்களைக் காப்பாற்றும். பற்றற்றவரே! நீரல்லவோ எங்களுக்குக் கதி? மஹாவிரதமுள்ளவரே! நீர் எங்களை ரக்ஷிக்கின்றவர். பிரபுவே!

---

[1] வேறு பாடம்

உம்முடைய அநுக்கிரஹத்தினாலே தேவர்களெல்லாரும் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுகிறார்கள்' என்றனர்.

இவ்வாறு அந்தத் தேவர்கள் திரிலோகநாதரான பிதாமஹரை முடியால் வணங்கி (ருத்திரருக்கு) ஸாரத்யம் செய்வதின் பொருட்டு வேண்டினார்களென்று நமக்குக் கேள்வி. பிரம்மா, 'தேவர்களே! இது இவ்விதம் உண்மையே. ருத்திரரைக் காட்டிலும் மேலானவன் வேறொருவனுமில்லை. மஹாத்மாவான சங்கரருக்கு ஸாரத்யத்தைச் செய்வேன். எவ்விதத்தினாலும் ரதிகனுக்கு மிகவும் சிறந்த ஒரு ஸாரதி ஏற்படுத்தப்படவேண்டும். ஆதலால், இந்த உண்மையை உள்ளபடி அறிந்து ஒன்றுசேர்ந்தவர்களான உங்களை (உத்தேசித்து) இதோ நான் தேவரான ருத்திரருக்குக் குதிரைகளைப் பிடித்து நடத்துகிறேன்' என்றார். ஆறு குணங்களால் நிறைந்தவரும் பிரபிதாமஹருமான ஸ்ரீபிரம்மதேவர் இவ்வாறு சொல்லிவிட்டு ஜடாபாரத்தைக் கட்டிக்கொண்டு கிருஷ்ணாஜினத்தைத் திடமாக உடுத்துக் கமண்டுலுவைக் கீழே வைத்துவிட்டுக் கொறடாவைக் கையில் பிடித்து அப்பொழுது (அந்த ருத்திரருடைய) ரதத்தின் மீதேறினார். தேவர்களாலே ஸாரதியாக ஏற்படுத்தப்பட்ட அந்தப் பிரம்மதேவர், ஸித்தம் செய்யப்பட்டதும், உலகத்திலுள்ள பொருள்களால் நிரப்பப்பட்டதும், மஹாத்மாவான ருத்திரருடையதுமான ரதத்தில் ஏறும்பொழுது, வேதங்களாலே ஏற்படுத்தப்பட்ட குதிரைகள் தலைவணங்கிப் பூமியில் விழுந்தன. லோகநாதர்களான இருவர்களாலும் வீற்றிருக்கப்பட்ட உத்தமமான ரதத்தை வேதங்களான குதிரைகள் சுமக்கச் சக்தியற்றவைகளாக முழங்கால்களால் மண்டியிட்டுப் பூமியில் விழுந்தன. மஹிமை பொருந்தியவரும் வியாபகரும் தேவர்களுக்கெல்லாம் பிரபுவும் அழிவற்றவருமான ஸ்ரீ பிரம்மதேவர், குதிரைகளைக் கடிவாளங்களாலே மேலே நிமிரும்படி செய்து 'வேதமயமான இக்குதிரைகளுக்கு வீர்யமும் சௌர்யமும் உண்டாகுக' என்று சங்கல்பித்து ரதத்தை நடத்தினார். வரங்களைக் கொடுக்கின்ற பிரம்மதேவர் ரதத்திலேறினவுடனே அப்பொழுது பசுபதியானவர் தேவர்களுக்கெல்லாம் நாதரான அந்தப் பிரம்மதேவரைப் பார்த்து, 'நல்லது; நல்லது' என்று சொல்லிப் புன்னகையுடன் வசனிக்கலானார்.

'சத்துருக்களைச் சிக்ஷிப்பவரே! தேவரே! புறப்படும். எவ்விடத்தில் தைத்யர்களிருக்கின்றார்களோ அவ்விடத்திற்குக் குதிரைகளை நடத்தும். யுத்தத்தில் பகைவர்களைக் கொல்லுகின்ற என்னுடைய இருகைகளுடைய பலத்தையும் இப்பொழுது பாரும்'

என்றார். பிறகு, பிரம்மதேவர், பலசாலிகளான தானவர்களுடைய ஆகாயத்தில் நிலைபெற்றிருக்கின்ற பட்டணங்களைக் குறித்து மனோ வேகத்துடனும் வாயுவேகத்துடனும் கூடின குதிரைகளை நடத்தினார். பிறகு, ரதத்தில் பூட்டப்பட்ட அந்த வேதமயமான குதிரைகள் உடனே கிளம்பி, ருத்திரரை அந்த க்ஷணத்திலேயே தைத்யர்களுடைய பட்டணத்தை அடையும்படி செய்தன. அதர்வஅங்கிரஸர்களும் மஹாத்மாவான இந்த ருத்திரருடைய சக்ர ரக்ஷகர்களாயிருந்தார்கள். பிறகு, ருத்திரர் வில்லில் நாணேற்றிட்டு அவ்விதமான பாணத்தைப் பூட்டிப் பாசுபதாஸ்திரத்தோடு சேர்த்துத் திரிபுரத்தை அழிக்கவேண்டுமென்று எண்ணினார். ராஜரே! பிறகு, அந்த ருத்திரர் வில்லில் பாணத்தைப் பூட்டிய அந்தச் சமயத்தில் மூன்று பட்டணங்களும் விரைவாக ஒன்றாயிருக்கும் தன்மையை அடைந்தன. அந்தத் திரிபுரமானது ஒன்றாயிருக்கும் நிலைமையை அடைந்தவுடனே, மஹாத்மாக்களான தேவர்களுக்கு அதிகமான மனக்களிப்பு உண்டாகியது. பிறகு, எல்லாத் தேவகணங்களும் ஸித்தர்களும் பரமரிஷிகளும் மஹேச்வரரை ஸ்தோத்திரம் செய்து, 'ஜயத்தை அடைவீராக' என்கிற வார்த்தையை வெளியிட்டார்கள். பிறகு, அஸுரர்களை நாசம் செய்யப்போகிறவரும், வர்ணிக்கமுடியாததும் சிறந்ததுமான சரீரமுள்ளவரும், ஸஹிக்கமுடியாத தேஜஸுள்ளவருமான மஹாதேவருக்கு எதிரில் திரிபுரமானது தோன்றியது. பிறகு, லோகநாதரும் ஷாட்குண்ய பரிபூர்ணருமான பிநாகியானவர், நேரில் (ஆகாயத்தில்) நிற்கின்ற மூன்று பட்டணங்களையுங் கண்டு திவ்யமான அந்த வில்லிலுள்ள நாண்கயிற்றை இழுத்து மூவுலகங்களிலும் ஸாரமான அந்தப் பாணத்தைத் திரிபுரத்தைக் குறித்துப் பிரயோகித்தார். பரமேச்வரரும் தேவதேவருமான மஹேச்வரர், அஸுரர்களுடைய கூட்டத்துடன் கூடின அந்தத் திரிபுரத்தை ஒரே பாணத்தினால் நாசஞ் செய்தார். பாணத்தினுடைய தேஜஸினாலுண்டான தீயினால் எரிக்கப்பட்டு ஆயிரம் துண்டாகச் சிதறிய அந்தப் பட்டணமானது அதிகமாகத் தீனஸ்வரத்தை வெளியிட்டுக்கொண்டு மிச்சமில்லாமல் அழிந்துவிட்டது. மத்திரராஜரே! அஸுரகணங்களுடன் கூடின அந்தத் திரிபுரமானது மேற்கு ஸமுத்திரத்தில் விழுந்துவிட்டது. கோபங்கொண்டவரும் மூவுலகங்களுக்கும் நன்மையை விரும்புகின்றவருமான மஹேச்வரராலே இவ்வாறு திரிபுரங்கள் எரிக்கப்பட்டன. அஸுரர்களும் மிச்சமில்லாமல் செய்யப்பட்டார்கள். தம்முடைய க்ரோதத்தினின்று உண்டானதும், 'கொளுத்து' என்று சொல்லப்பட்டதும், தடுக்கப்பட்டது

மான அந்த நெருப்பானது மறுபடியும் மூவுலகங்களையும் வேற்றுமையின்றிக் கொளுத்துவதற்கு ஆரம்பித்தது. பிரளயகால நெருப்புப்போலக் கொளுத்துவதற்கு மறுபடியும் மறுபடியும் எழுகின்ற அந்த நெருப்பை முக்கண்ணர், 'நீ உலகங்களைச் சாம்பலாகச் செய்யாதே' என்று கட்டளையிட்டார். பிறகு, தேவலோகவாஸிகளான தேவர்களும் அவ்வாறே ரிஷிகளும் தம் நிலைமையை அடைந்தார்கள். அவர்கள், சிறந்த வாக்குகளாலே த்ரிபுர சத்துருவான ஸ்தாணுவை ஸ்தோத்திரம் செய்தார்கள். பிரஸன்னரான பகவானாலே அனுமதி கொடுக்கப்பட்டவர்களும் மனோரதம் நிறைவேறியவர்களுமான பிரம்மாவை முதன்மையாகக்கொண்ட அந்தத் தேவர்களனைவர்களும் வந்தபடியே திரும்பிச்சென்றார்கள். இவ்விதமாகப் பிதாமஹரான பிரம்மதேவர் ருத்திரருக்கு ஸாரத்யத்தைச்செய்தார். நீரும் மஹாபலசாலியான இந்த ராதேயனுடைய குதிரைகளை நடத்தும். நீர் பலத்தினாலும் ரூபத்தினாலும் உபாயத்தினாலும் அஸ்திர சம்பத்தினாலும் கிருஷ்ணனையும் கர்ணனையும் பல்குனனையும் காட்டிலும் குணங்களால் மேன்மைபெற்றவர். ராஜரே! நன்றாக (மனத்தில்) ஊன்றியிருக்கின்றதும் விரும்பப்பட்டிருக்கின்றதுமான ஹிதத்தை எனக்குச் செய்யும். தோஷமற்றவரே! இந்தக் கர்ணன் யுத்தத்தில் கொஞ்சம் குறைய ருத்திரருக்கு ஸமமானவன். நீரும் பிரம்மதேவருக்கு ஒப்பானவர். ஆதலால், நீங்களிருவர்களும் என்னுடைய சத்துருக்களையும் ஸ்வர்க்கத்திலுள்ள தேவர்களையும் ஜயிப்பதற்கு வல்லமையுடையவர்கள். இந்தக் கர்ணன் கிருஷ்ணனை ஸாரதியாக வுடையவனும் வெண்ணிறமுள்ள குதிரைகளை யுடையவனுமான குந்திபுத்திரனை அடித்து உயிரை இழக்கும்படி செய்யக்கூடிய உபாயமானது உம்மால் செய்யப்படவேண்டும். ராஜரே! என்னுடைய ராஜ்யமும் ஸுகமும் உயிரும் ஜயமும் உம்மைச் சார்ந்திருக்கின்றன. அடைய வேண்டுமென்று விரும்பப்பட்டிருக்கின்ற இந்த ஹிதத்தை எனக்குச் செய்யும். பகைவர்களைத் தபிக்கச்செய்பவரே! ராஜரே! எனக்குப் பிரியத்தைச் செய்வதின்பொருட்டு இந்தக் கர்ணனுடைய குதிரைகளை அடக்கி நடத்தும்.

இருபத்தெட்டாவது அத்தியாயம்

(துரியோதனன் சல்யனுக்குப் பரசுராமருடைய சரித்திரத்தை உரைத்துக் கர்ணனுக்கு ஸாரத்யம் செய்வது தோஷமில்லை என்று காரணங்காட்டிக் கூறியது.)

சல்யமகாராஜரே! மறுபடியும், என்னிடத்திலின்று வேறு இந்த இதிஹாஸத்தையும் தெரிந்துகொள்ளும். தர்மங்களை அறிந்தவரான ஒரு பிராம்மணர் என் பிதாவினிடம் இதனைச் சொல்லினர். ஆச்சரியகரமான இந்த வார்த்தையைக்கேட்டு, காரணங்களையும் கார்யங்களையும் அர்த்த தத்துவங்களையும் அறிந்தவராகிய நீர் நன்ருக நிச்சயித்துச்செய்யும். இவ்விஷயத்தில் ஆலோசனை வேண்டாம். பார்க்கவர்களுடைய வம்சத்தில் மிக்க தவமுடையவரான ஜமதக்நி பிறந்தார். அவருக்குத் தேஜஸோடும் குணங்களோடுங்கூடின ராமரென்ற பிரஸித்தரான புத்திரரிருக்கிருர். அந்த ராமர் நிர்மலமான மனத்தையுடையவரும் நியமத்துடன் கூடியவரும் ஐம்பொறிகளையும் நன்கு அடக்கியவருமாகி அஸ்திரங்களை அடைவதற்காகக் கடுந்தவம்புரிந்து ருத்திரரைப் பிரஸன்னராகும்படி செய்தார். [1] தேவர்களுக்கெல்லாம் தேவரும் எல்லோருக்கும் மங்களத்தை உண்டுபண்ணுகிறவருமான சங்கரர் பக்தியினுலும் காந்தியினுலும் அந்தப் பரசுராமரிடத்தில் ஸந்தோஷமடைந்து அந்த ராமருடைய மனத்திலுள்ள விஷயத்தைத் தெரிந்துகொண்டு தமது ரூபத்தைப் பிரத்யக்ஷமாகக் காண்பித்தார். அவர், 'ராம! ஸந்தோஷமடைகிறேன். உனக்கு மங்களம். உன்னுடைய விருப்பமும் அறியப்பட்டுவிட்டது. ஆத்மாவைப் பரிசுத்தமாகச் செய்துகொள். இவையெல்லாவற்றையும் அடைவாய். எப்பொழுது நீ பரிசுத்தமாவாயோ அப்பொழுது உனக்கு நான் அஸ்திரங்களைக் கொடுப்பேன். பார்க்கவ! தகுதியற்றவனையும் திறமையற்றவனையும் அஸ்திரங்கள் கொளுத்துகின்றன' என்ருர். தேவ தேவரான சூலபாணி இவ்வாருகச்சொல்ல, பரசுராமர் மஹாத்மாவான பிரபுவை முடியினுல் வணங்கி மறுமொழி கூறலானுர். 'தேவேசரே! எப்பொழுது என்னை நீர் அஸ்திரங்களைத் தரிக்கும் விஷயத்தில் தகுதியுள்ளவனென்று அறிகிறீரோ அப்பொழுது சுச்ரூஷைசெய்கின்ற எனக்குத் தேவரீர் அஸ்திரங்களைக் கொடுக்கவேண்டும்' என்ருர். பிறகு, அந்தப் பரசுராமர் தவத்தினுலும், விரதத்தினுலும், நியமத்தினுலும், ஹோமங்கள் மந்திரங்கள் இவைகளை முதன்மையாகக்கொண்ட பூஜைகளாலும், காணிக்கை

[1] ஒரு சொல் விடப்பட்டது.

களாலும், பலிகளாலும், அப்பொழுது அநேக வருஷஸமூகங்களாக ஈஶ்வரரை ஆராதித்தார். மஹாத்மாவான பார்க்கவர் விஷயத்தில் பிரஸன்னரான மஹாதேவர் அடிக்கடி அவருடைய குணங்களைப் பார்வதியினுடைய ஸமீபத்தில், 'இந்த ராமன் எப்பொழுதும் என்னிடத்தில் பக்தியுள்ளவன்; எப்பொழுதும் திடமான விரதத்தையுடையவன்' என்று சொல்லிவந்தார். பகைவர்களை அழிப்பவரே! இவ்வாறாகப் பிரபுவானவர் ஸந்தோஷத்துடன் இவருடைய குணங்களை மிகுதியாகத் தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் முன்னிலையில் சொல்லினர். இச்சமயத்திலேயே தைத்யர்கள் அதிக பலசாலிகளானார்கள். அப்பொழுது, அவர்கள் கர்வத்தால் உண்டான மோகத்தினால் தேவர்களைத் துன்பஞ் செய்தார்கள். பிறகு, தேவர்கள் ஒன்றுசேர்ந்து அவர்களைக் கொல்வதற்கு நிச்சயம் செய்து சத்துருக்களைக் கொல்லுவதில் முயற்சியைச் செய்தார்கள்; ஆனால், தைத்யர்களை ஜயிப்பதற்குச் சக்தியற்றவர்களாயிருந்தார்கள். பிறகு, தேவர்கள் உமாபதியான மஹேஶ்வரரை அடைந்து, அப்பொழுது பக்தியோடு, 'சத்துருக் கூட்டங்களை ஸம்ஹாரம் செய்யும்' என்று பிரஸன்னராகும்படி செய்தார்கள். பிறகு, தேவரான சங்கரர், தேவதைகளுக்குச் சத்துருநாசத்தைப் பிரதிஜ்ஞை செய்து பார்க்கவ ராமரை அழைத்து, 'பார்க்கவ! உலகங்களுக்கு நன்மையைச் செய்வதின்பொருட்டும், எனக்குப் பிரியத்தைச் செய்வதின்பொருட்டும், ஒன்றுசேர்ந்திருக்கின்ற எல்லாத் தேவசத்துருக்களையும் ஸம்ஹாரம் செய்' என்று சொன்னார். பரசுராமர், 'தேவேசரே! யுத்தத்தில் அஸ்திரங்களில் பழக்கமில்லாத எனக்கு அஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றவர்களும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களுமான தானவர்களனைவர்களையும் கொல்லுவதற்கு வல்லமை ஏது?' என்று கூறினார். ஈஶ்வரர், 'என் அனுமதியினால் நீ செல். சத்துருக்களை ஸம்ஹரிப்பாய். எல்லாச் சத்துருக்களையும் ஜயித்து அதிகமான குணங்களை அடையப்போகிறாய்' என்று சொல்லினர். இந்த வார்த்தையைக் கேட்டுப் பரசுராமர் எல்லாவற்றையும் அங்கீகரித்து ஆசீர்வதிக்கப்பெற்றுத் தானவர்களை நோக்கிச் சென்றார். பிறகு, பார்க்கவ ராமர், அதிகமான இறுமாப்பையும் தேகவன்மையையுமுடையவர்களான தேவசத்துருக்களை வஜ்ரமும் இடியும்போலப் படுகின்ற அடிகளாலே ஜயித்தார். ராஜஶ்ரேஷ்டரே! தானவர்களாலே காயம் பண்ணப்பட்ட சரீரத்துடன்கூடின அந்தப் பரசுராமர் ருத்திரரால் தொடப்பட்டவுடனே காயங்கள் நீங்கினவரானார். அவ்விதமான அவருடைய செய்கையினாலே ஷாட்குண்யபரிபூர்ணரான மஹா

தேவர் பிரீதியுள்ளவருமானார்; மஹாத்மாவான பார்க்கவருக்குப் பற்பல விதமான வரன்களையும் கொடுத்தார். பிரீதியுள்ளவரும் தேவர்களுக்கெல்லாம் தேவரும் சூலபாணியுமான ஈஸ்வரர், 'பிருகு நந்தன ! உன்னுடைய சரீரத்தில் சஸ்திரங்கள் விழுந்ததி னுலுண்டான துன்பத்துடன் உன்னிடத்திலுள்ள மனிதச்செய்கை யையும் போக்கிவிட்டேன். இஷ்டப்படி என்னிடத்திலிருந்து திவ்யாஸ்திரங்களைப் பெற்றுக்கொள்' என்று நியமித்தார். பிறகு, மிக்கதவமுள்ள பரசுராமர், எல்லா அஸ்திரங்களையும், மனத்தினல் விரும்பிய பலவிதமான வரங்களையும் பெற்றுச் சிவபிரானை முடியினல் வணங்கித் தேவர்களுக்கெல்லாம் ஈசரான அவரிடத் தினின்று அனுமதிபெற்றுச் சென்ருர். இவ்விதமான இந்த முற் காலத்திய சரித்திரத்தை அந்த ரிஷியானவர் அவ்வாறு உரைத்தார். புருஷஸ்ரேஷ்டரான பார்க்கவரும், மிக்க பிரீதியுள்ள மனத்தோடு மஹாத்மாவான கர்ணனுக்குத் தனுர்வேதம் அனைத்தையும் கொடுத்தார். ராஜரே ! இந்தக் கர்ணனிடத்தில் கொஞ்சமேனும் பாபம் இல்லை. இவன் ஸூதனுலே எப்பொழுதும் வளர்க்கப் பட்டான். இவன் ஸூதனல்லன். இவன் அரசனே. பிருகு குலத்திற்பிறந்த பரசுராமரும் பரிசுத்தமான ஜாதியை அறிந்தே திவ்யாஸ்திரங்களைக் கொடுத்தார். கர்ணனை நான் எவ்விதத்தி னலும் ஸூத குலத்தில் பிறந்தவனுக நினைக்கவில்லை. க்ஷத்திரிய னுடைய குலத்தில் பிறந்த தேவகுமாரனென்றே எண்ணுகிறேன். குலம் தெரியாமல் போவதின்பொருட்டு விடப்பட்டவனுயிருக் கலாமென்பது என்னுடைய எண்ணம். குண்டலங்களையுடைய வனும் கவசமுள்ளவனும் நீண்ட கைகளையுடையவனும் பகை வர்களை அழிப்பவனும் சூரியனுக்கு ஒப்பாக விளங்குகின்ற வனுமான இந்தக் கர்ணன் ஸர்வ விதத்தினுலும் ஸூதகுலத்தில் பிறந்தவனேயல்லன். ஒரு ஸிம்மத்தைப் பெண் மானனது எவ்விதமாக உண்டுபண்ணும்? பருத்தும் சிறந்த யானையினுடைய துதிக்கையைப்போன்றும் இருக்கின்ற இவனுடைய கைகளைப் பாரும். யுத்தத்தில் எல்லாச் சஸ்திரங்களையும் பொறுக்கின்றதும் அகன்றிருக்கின்றதுமான மார்பையும் பாரும். (கவசகுண்டலங்களை அறுத்துக் கொடுத்தவனும் புருஷஸ்ரேஷ்டனுமான கர்ணன் ஸாமான்ய புருஷனேயல்லன். ராஜேந்திரரே ! ராமருக்குச் சிஷ்யனும் பிரதாபசாலியுமான இந்தக் கர்ணன் மஹாபுருஷனே.

இருபத்தொன்பதாவது அத்தியாயம்

(துரியோதனனால் வேண்டப்பட்ட சல்யன் ஒருவித உடன்பாட்டுடன் கர்ணனுக்குத் தேர் செலுத்தச் சம்மதித்தது)

மகிமை பொருந்தியவரும் தேவரும் எல்லா வுலகங்களுக்கும் பிதாமஹருமான பிரம்மதேவர் அந்தச் சமயத்தில் (ருத்திரருக்கு) ஸாரத்யம் செய்தார். ருத்திரர் ரதிகராயிருந்தார். வீரரே! ரதிகனைக் காட்டிலும் மேலாயிருப்பவன் ரதஸாரதியாக ஏற்படுத்தப் படத்தக்கவன். புருஷஶ்ரேஷ்டரே! ஆதலால், நீர் யுத்தத்தில் குதிரைகளை அடக்கி நடத்தும். அந்த திரிபுர ஸம்ஹாரத்தில் பிதாமஹர் தேவர்களுடைய கூட்டங்களாலே முயற்சியுடன் எவ்வாறு வரிக்கப்பட்டாரோ அவ்வாறே கர்ணனைக் காட்டிலும் மேலானவராயிருக்கின்ற நீர், எங்களால் பிரயத்னத்தினால் வரிக்கப்பட்டிருக்கிறீர். மஹாராஜரே! எவ்வாறு ஈஶ்வரரைக் காட்டிலும் மேலாயிருக்கின்ற பிரம்மதேவர் தேவர்களால் வரிக்கப்பட்டாரோ அவ்வாறே நீரும் வரிக்கப்பட்டிருக்கிறீர். மிக்க தேஜஸை உடையவரே! ருத்திரருடைய குதிரைகளைப் பிதாமஹர் நடத்தியதுபோல ராதாபுத்திரனான கர்ணனுடைய குதிரைகளை யுத்தத்தில் அடக்கி விரைவாக நடத்தும்' என்று கூறினான்.

சல்யன், 'ஆண்மையிற் சிறந்தவனே! (உன்னால்) சொல்லப்பட்டதும் திவ்யமானதும் மனிதர்களுடைய செய்கைக்கு மேற்பட்டதுமான தேவஶ்ரேஷ்டர்களுடைய இந்தச் சரித்திரமானது பலவாறாக என்னாலும் முந்தி கேட்கப்பட்டிருக்கின்றது. பாரத! பிரபிதாமஹரான பிரம்மதேவர் ருத்திரருக்கு ஸாரத்யம் செய்ததும் ஓரே பாணத்தினால் அஸுரர்கள் கொல்லப்பட்டதும் பகவானான பிதாமஹர் அப்பொழுது ஸாரதியாயிருந்ததுமாகிய எல்லாம் கிருஷ்ணன் அறிவான். கீழ்ச்சொல்லிய இவை அனைத்தும் முற்காலத்தில் நடந்தவை. முன் சென்றதையும் இனி வருவதையும் வாஸுதேவன் உள்ளபடி அறிகிறான். பாரத! பிரம்மதேவர் இவ்விஷயத்தைத் தெரிந்திருந்தும் ருத்திரருக்கு ஸாரதியாயிருத்தலை அடைந்ததுபோல வாஸுதேவன் பார்த்தனுக்கு ஸாரதியாயிருக்கும் தன்மையை அடைந்தான். ஸூதபுத்திரன் குந்திபுத்திரனான அர்ஜுனனை எவ்விதத்திலாவது கொல்லுவனேயாகில், பார்த்தன் கொல்லப்பட்டதைப் பார்த்துக் கேசவன் தானே போர்புரிவான். சங்கம், சக்கரம், கதை இவைகளைக் கையில்

கொண்டு ஸ்ரீகிருஷ்ணன் உன்னுடைய ஸைன்யத்தைக் கொளுத்துவான். கோபங்கொண்டவனும் மஹாத்மாவுமான அந்த ஸ்ரீகிருஷ்ணனுக்கு உன்னுடையவான இந்தப் பகைப்படைகளில் ஓர் அரசனாவது எதிரில் நிற்கப்போவதில்லை' என்று கூறினான்.

அவ்வாறு பேசுகின்ற அந்த மத்திரராஜனைப் பார்த்து, சத்துருக்களை அடக்குகிறவனும், மிக்க புஜபலமுள்ளவனும், மனத்தளர்ச்சியில்லாதவனுமான உம்முடைய குமாரன் மறுமொழி கூறலானான். 'மிக்க தோள்வலியமைந்தவரே! சஸ்திரங்களைப் பிடித்தவர்களான எல்லாச் சூரர்களுள்ளும் சிறந்தவனும், எல்லாச் சாஸ்திரார்த்தங்களிலும் கரைகடந்தவனும் (உடன்பிறந்த கவசத்தையும் குண்டலங்களையும்) அறுத்துக் கொடுத்தவனுமான கர்ணனை யுத்தத்தில் நீர் அவமதிக்கக்கூடாது. பயங்கரமும் பெரிதுமான அவனுடைய நாணொலியையும் தலத்வனியையும் கேட்டுப் பாண்டவ ஸைன்யங்கள் பத்து திக்குகளிலும் ஓடுகின்றதும், ராத்திரியில் அநேக மாயைகளை உண்டுபண்ணுகின்றவனும் மாயைகளை முன்னிட்டுக்கொண்டு வந்தவனுமான கடோத்கசன் கொல்லப்பட்டதும் உமக்கு நேரில் தெரியும். அர்ஜுனன், அதிக பயத்தினால் சூழப்பட்டு, இந்த நாள்களெல்லாம் எதிர்ப்படையில் எல்லாவிதத்தினாலும் வெளிப்பட்டு நிற்கவில்லை. பலசாலியான பீமஸேனனும் வில்லின் நுனியினால் எதிர்த்து அடித்துத் துரத்தப்பட்டான்; அரசரே! வயிற்றை நிரப்பிக் கொள்பவனான மூடனென்றும் குறிப்பினால் சொல்லப்பட்டான். ஐயா! அவ்வாறே, சூரர்களான மாத்ரீ புத்திரர்களை மஹாயுத்தத்தில் வென்றும், ஏதோ காரணத்தினால் யுத்தத்தில் கொல்லாமல் விட்டவனும், விருஷ்ணிகளுள் சிரேஷ்டனும், ஸாத்வதர்களுள் உத்தமனுமான ஸாத்யகியை யுத்தத்தில் ஜயித்துப் பலாத்காரத்தினால் அவனை ரதத்தை இழக்கும்படி செய்த சூரனும், யுத்தத்தில் புன்னகையுடன் திருஷ்டத்யும்னனைத் தலைவனாகக்கொண்ட ஸ்ருஞ்சயர்களையும் மற்றவர்களையும் அடிக்கடி யுத்தத்தில் ஜயித்தவனும், யுத்தத்தில் கோபங்கொண்டால் வஜ்ரபாணியான இந்திரனையும் வெல்லக்கூடியவனுமான அப்படிப்பட்ட மஹாரதனைப் பாண்டவர்கள் யுத்தத்தில் எவ்வாறு ஜயிக்கப்போகிறார்கள்? நீரோ ஸகல அஸ்திரங்களையும் அறிந்தவர்; வீரர்; எல்லா வித்தைகளிலும், அஸ்திரங்களிலும் கரையை அடைந்தவர்; பூமியில் புஜபலத்தில் உமக்குச் சமமானவன் ஒருவனுமில்லை. நீர் பகைவர்களுக்கு முளை

போலிருக்கிறீர்; பராக்கிரமத்தில் ஸஹிக்கமுடியாதவர். ராஜரே! பகைவர்களை அழிக்கும் வல்லமையுடையவரே! இக்காரணத்தினுலேயே நீர், 'சல்யர்' என்று சொல்லப்படுகிறீர். உம்முடைய பாகுபலத்துக்கு எதிர்ப்பட்டு (திரும்பிப் போவதற்கு) ஸாத்வதர்களனைவர்களும் சக்தியுள்ளவர்களல்லர். ராஜரே! உம்முடைய பாகுபலத்தைக் காட்டிலும் கிருஷ்ணனுடைய பலம் மேலானதா? பல்குனன் கொல்லப்பட்டபிறகு, எவ்வாறு கிருஷ்ணனுல் சேனை தரிக்கத்தக்கதோ அவ்வாறே கர்ணன் மாண்டுபோகுங்கால் உம்மால் பெரும்படையானது தரிக்கத்தக்கது. ஐயா! யுத்தத்தில் வாஸுதேவன் யாது காரணம்பற்றி நமது சேனையைத் தடுக்கப் போகிருன்? நீர் யாது காரணம்பற்றிச் சேனையை வதம்செய்யாமலிருப்பீர்? யுத்தத்தில் வீரர்களான ஸஹோதரர்களுக்கும் எல்லா அரசர்களுக்கும் கடனுளியாகாமலிருத்தலை உம்மால் அடைய விரும்புகிறேன்' என்று கூறினுன்.

சல்யன், 'காந்தாரீபுத்திர! சத்ருக்களுடைய கர்வத்தைப் போக்குபவனே! படைகளுக்கெதிரில் நீ என்னைத் தேவகீபுத்திரனைக்காட்டிலும் மேலானவனென்று சொல்லுகிற காரணத்தினுல் உன் விஷயத்தில் நான் பிரீதியுள்ளவனுகிறேன். வீர! நீ எண்ணுகிறபடியே, பாண்டவர்களுள் சிறந்தவனும் அர்ஜுனனேடு போர் புரிகின்றவனும் புகழ்ச்சியுடையவனுமான ராதேயனுக்கு இதோ நான் ஸாரத்யம் செய்கிறேன். வீரனே! வைகர்த்தனனைப்பற்றி நான் ஒரு சபதம் செய்திருக்கிறேன். அவனிடத்தில் இஷ்டப்படி நான் வார்த்தைகளை வெளியிடுவேன்' என்று கூறினுன். வேந்தரே! உம்முடைய குமாரன் கர்ணனேடு சேர்ந்து, 'அவ்வாறே ஆகட்டும்' என்று எல்லா அரசர்களுடைய முன்னிலையிலும் மத்திரராஜனைப் பார்த்துச் சொன்னுன். அப்பொழுது சல்யன் ஸாரதியாயிருப்பதை ஏற்றுக்கொண்டபடியால் மனத்தேறுதலை அடைந்த துரியோதனன் களிப்புற்று அந்தக் கர்ணனைக் கட்டிக் கொண்டான். ஸ்தோத்திரம் செய்யப்பட்ட உம்முடைய குமாரன் மறுபடியும் கர்ணனைப் பார்த்து, 'கர்ண! மஹேந்திரன் அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததுபோல யுத்தத்தில் எல்லாப் பார்த்தர்களையும் நீ ஸம்ஹாரம் செய்' என்று கூறினுன். சல்யன் குதிரைகளை அடக்கி நடத்தும் வேலையை ஏற்றுக்கொண்டவுடனே, கர்ணன் மனத்தில் மகிழ்ச்சியடைந்து மறுபடியும் துரியோதனனைப் பார்த்து, 'ராஜனே! இந்த மத்திரராஜன் மனத்தில் அதிக ஸந்தோஷமில்

லாதவனைகப் பேசுகிறான். மதுரமான வாக்கினாலே மறுபடியும் இவனுக்குச் சொல்லு' என்று சொன்னான். பிறகு, மஹாபுத்தி சாலியும் எல்லா அஸ்திரங்களிலும் தேர்ச்சியுடையவனும் பலசாலி யும் ராஜாவுமான துரியோதனன், பூபதியும் மத்திரராஜனுமான சல்யனை நோக்கி மேகம்போல கம்பீரமான வாக்கினால் (யுத்த பூமியை) நிரப்புகிறவன்போல, 'சல்ய மஹாராஜரே! கர்ணன் அர்ஜுனனோடு போர்புரியவேண்டுமென்று இப்பொழுது நினைக் கிறான். புருஷஸ்ரேஷ்டரே! நீர் யுத்தத்தில் அந்தக் கர்ணனுடைய குதிரைகளை நடத்தும். கர்ணன் மற்றவர்களனைவர்களையும் கொன்று பல்குனனையும் கொல்வதற்கு விருப்பமுற்றிருக்கிறான். அரசரே! அவனுடைய குதிரைக் கடிவாளங்களைப் பிடிக்கும் விஷ யத்தில் (கருணைபுரியவேண்டுமென்று) நான் அடிக்கடி உம்மை வேண்டுகிறேன். எவ்வாறு கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஸாரதியும் சிறந்த மந்திரியுமாயிருக்கிறானோ அவ்வாறே நீரும் (ஸாரதியும் மந் திரியுமாயிருந்து) ராதேயனைத் துன்பங்களிலிருந்தும் காப்பாற்றும்' என்று கூறினான். பிறகு, மத்திரதேசாதிபதியான சல்யன், அப்பொழுது பிரீதியை அடைந்து, பகைவர்களைக் கொல்லுகிறவ னும் உம்முடைய குமாரனுமான துரியோதனனைக் கட்டிக்கொண்டு (பின்வருமாறு) உரைக்கலானான். 'ராஜனே! காந்தாரீபுத்திர! இனிமையான தோற்றத்தையுடையவனே! இவ்வாறு நீ எண்ணு வாயானால் உனக்குப் பிரியமான அனைத்தையும் நான் செய்யக் கட மைப்பட்டிருக்கிறேன். பரதஸ்ரேஷ்ட! பகைவர்களை வாட்டு பவனே! எந்தக் காரியத்தில் நான் தகுந்தவனோ அந்தக் காரியத் தில் நான் எவ்விதத்தாலும் முயற்சிசெய்து காரியத்தை நிர்வஹிப் பேன். ஹிதத்தைச் செய்வதில் விருப்பமுள்ளவனான நான் கர்ண னைக் குறித்துப் பிரியமோ அப்பிரியமோ எதைச் சொல்வேனோ அந்த வசனமனைத்தையும் நீயும் கர்ணனும் எவ்விதத்தாலும் பொறுத்துக்கொள்ளுங்கள்' என்று சொன்னான். கர்ணன், 'மத்திரநாத! ஈஸ்வரருக்குப் பிரம்மா எப்படியோ, பார்த்தனுக் குக் கேசவன் எப்படியோ, அப்படியே நமக்கு நன்மை செய்வதில் எப்பொழுதுமே பற்றுதலுள்ளவனாயிரு' என்று வேண்டினான். சல்யன், 'தன் இகழ்ச்சி, தற்புகழ்ச்சி, பரநிந்தை, பிறரைப் புகழ் தல் என இந் நான்குவிதச் செய்கைகளும் ஆரியர்களால் அனுஷ் டிக்கப்பட்டவைகளல்ல. கற்றறிந்தவனே! நீ அறிவதின்பொருட்டு நான் சொல்லப்போகிறதான தற்புகழ்ச்சியோடு கூடின என்னு

டைய வார்த்தையை நீ உண்மையாக அறிந்துகொள். பிரபுவே! தவறுதலில்லாமையாலும், குதிரையை ஓட்டுகிற ஸாமர்த்தியத்தினாலும், வருங்காலத்தில் ஸம்பவிக்கக்கூடிய தோஷங்களை முந்தியே ஊகிப்பதினாலும், அவ்விதமான தோஷங்களுக்குப் பரிகாரத்தை அறிவதினாலும், நேர்ந்திருக்கின்ற தோஷங்களை விலக்குவதில் தகுந்த ஸாமர்த்தியத்தைப் பெற்றிருத்தலாலும், இந்திரனுக்கு ஸாரத்யம் செய்வதில் மாதலிபோல நான் ஸாரத்யம் செய்யத்தக்கவன். தோஷமற்றவனே! ஸூதபுத்திர! ஆதலால், யுத்தகளத்தில் பார்த்தனோடு போர்புரிகின்ற உன்னுடைய குதிரைகளை நான் நடத்துவேன். நீ கவலையற்றிருப்பாயாக' என்று கூறினான்.

முப்பதாவது அத்தியாயம்

(சல்யன் ஸாரதியாக வீற்றிருந்த தேரின்மீதேறிக் கர்ணன் யுத்தத்திற்குப் புறப்பட்டது)

துரியோதனன், 'கர்ண! கிருஷ்ணனைக் காட்டிலும் மேலானவனான இந்த மத்திரராஜன் தேவேந்திரனுக்கு மாதலிபோல உனக்கு ஸாரத்யம் செய்வான். இந்திரனுடைய குதிரைகளோடு கூடின ரதத்தை மாதலி எவ்வாறு நடத்துகிறானோ அவ்வாறே சல்யன் இப்பொழுது உன்னுடைய ரதத்திலுள்ள குதிரைகளைப் பிடித்து நடத்துவான். யுத்தவீரனான நீ ரதிகனாகவும் மத்திரராஜன் ஸாரதியாகவும் இருக்கையில், சிறந்த ரதமானது யுத்தத்தில் நிச்சயமாகப் பார்த்தர்களை அவமதிக்கவே போகின்றது' என்றான். வேந்தரே! பிறகு துரியோதனன், மறுபடியும் பலசாலியான மத்திரராஜனைப் பார்த்து, 'மத்திரராஜரே! காலையில் நேர்ந்திருக்கின்ற யுத்தத்தில் கர்ணனுடைய உத்தமமான குதிரைகளை ரணரங்கத்தில் அடக்கி நடத்தும். உம்மாலே எல்லாப் பக்கத்திலும் காக்கப்பட்டால் ராதேயன் தனஞ்சயனை ஜயிப்பான்' என்று கூறினான். பாரதரே! இவ்வாறு சொல்லியதைக் கேட்ட சல்யன், 'நான் ரதத்தின்மீதேறி அவ்வாறே ஸாரத்யம் செய்கிறேன்' என்று சொன்னான். சல்யன் ஏற்றுக்கொண்டவுடனே, கர்ணன் மனமகிழ்ச்சியுடன் ஸாரதியை நோக்கி, 'ஸூத! நீ எனக்காக ரதத்தை ஸித்தம் செய்' என்று அடிக்கடி விரைவுடன் சொன்னான். பிறகு ஸாரதியானவன், 'மங்களம்; ஜயிப்பீராக' என்று சொல்லி, ஜயத்தைத் தருவதும் கந்தர்வ நகரத்துக்கு

ஒப்பானதும் முறைப்படி அமைக்கப்பட்டதும் உத்தமமுமான ரத மானது யுத்தத்திற்காக ஸன்னத்தமாயிருப்பதாகத் தெரிவித்தான். ரதிகர்களுள் சிரேஷ்டனான கர்ணன், முன்னமே பிரம்மவித்தான புரோஹிதரால் அபிமந்திரணம் செய்யப்பட்ட அந்த ரதத்தை முறைப்படி அர்ச்சித்துப் பிரதக்ஷிணம் செய்து பிரயத்தனத்துடன் பாஸ்கரனைத் துதித்துப் பக்கத்திலுள்ள மத்திரராஜனை நோக்கி, 'நீ ரதத்தில் ஏறு' என்று கூறினான். பிறகு, ஜயிக்கமுடியாததும் பெரிதுமான கர்ணனுடைய உத்தமமான ரதத்தில் மஹாதேஜஸ் யான சல்யன் ஸிம்மமானது மலையின்மீது ஏறுவதுபோல ஏறினான். பிறகு, கர்ணன் சல்யனாலே ஏறப்பட்டதான உத்தமமான தன் ரதத்தைப்பார்த்து, மின்னலுடன் கூடின மேகத்தின்மீது ஸூர்யன் ஏறுவதுபோல ஏறினான். ஒரே தேரின் மீதேறினவர்களும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும் சமமான காந்தியுள்ளவர்களுமான அவ்விருவர்களும், ஆகாயத்தில் மேகத் தின்மீது ஸூர்யனும் அக்னியும் சேர்ந்திருந்தாற்போல விளங் கினார்கள். ஸ்தோத்திரம் செய்யப்படுகின்றவர்களும் மிக்க ஒளி பொருந்தியவர்களுமான அவ்விரு வீரர்களும் அப்பொழுது யாகத் தில் ரித்விக்குக்களாலும் ஸதஸ்யர்களாலும் ஸ்தோத்திரம்செய்யப் படுகின்ற இந்திரனையும் அக்னியையும்போல இருந்தார்கள். சல்ய னாலே பிடித்து நடத்தப்பட்ட குதிரைகளோடுகூடின ரதத்தில் வீற்றிருக்கின்ற கர்ணன், கோரமான வில்லை ஒலிக்கும்படி செய்து கொண்டு, [1]பரிவேஷத்துடன்கூடின பாஸ்கரன்போல் விளங்கி னான். உத்தமமான ரதத்தின்மீது ஏறியிருக்கின்றவனும் கிரணங் கள்போன்ற அம்புகளையுடையவனும் புருஷச்ரேஷ்டனுமான கர்ணன் மந்தரபர்வதத்தின்மீது இருக்கின்ற ஸூர்யன்போல மிக விளங்கினான். ரதத்திலிருப்பவனும் மிக்க தோள்வலியமைந்த வனும் யுத்தத்தில் அளவுகடந்த தேஜஸுள்ளவனுமான அந்த ராதேயனை நோக்கித் துரியோதனன் பின்வருமாறு வசனிக்க லானான்: 'அதிரதபுத்ர! வீரனே! எல்லா வில்லாளிகளும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது துரோணராலும் பீஷ்மரா லும் செய்யப்படாததும் யுத்தத்தில் செய்ய அரிதுமான காரியத்தை நீ செய். மஹாரதர்களான பீஷ்ம துரோணர்கள் அர்ஜுனனை யும் பீமஸேனனையும் நிச்சயமாகக் கொல்லுவார்களென்று என் மனத்தில் எண்ணமிருந்தது. வீர! ராதாபுத்திர! அவ்விரு வர்களாலும் செய்யப்படாத வீரச் செய்கையை வஜ்ராயுதத்தைக்

---

[1] பீஷ்ம பர்வம் 6-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

கையில் கொண்ட வேறொரு இந்திரன்போல மஹாயுத்தத்தில் நீ செய். ராதேய! தர்மராஜனையாவது பிடி; தனஞ்சயனையாவது கொல்; பீமஸேனனையும் இரட்டைப் பிள்ளைகளான மாத்ரீ புத்திரர்களையும் வதம்செய். ஆண்மையிற் சிறந்தவனே! உனக்கு ஜயமுண்டாகுக. உனக்கு மங்களம். நீ யுத்தத்திற்குச் செல். பாண்டு புத்திரனுடைய படைகளனைத்தையும் சாம்பலாகச் செய்' என்று கூறினான். பிறகு, அடிக்கப்படுகின்ற ஆயிரக்கணக்கான தூரிய வாத்தியங்களும் பதினாயிரக்கணக்கான பேரிவாத்தியங்களும் ஆகாயத்தில் மேகங்களுடைய முழக்கம்போல் இனிது முழங்கின. ரதிகச்ரேஷ்டனான ராதேயன் ரதத்திலிருந்துகொண்டே அந்தச் சொல்லை ஏற்றுக்கொண்டு யுத்தத்தில் ஸமர்த்தனான சல்யனை நோக்கி, மிக்க பலமுள்ளவனே! குதிரைகளை நடத்து. நான் தனஞ்சயனையும் பீமஸேனனையும் இரட்டைப் பிள்ளைகளான நகுல ஸகதேவர்களையும் ராஜாவான யுதிஷ்டிரனையும் கொல்லுவேன். சல்ய! தனஞ்சயன், கழுகிறகுகள் பூண்ட பாணங்களை நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் பிரயோகிக்கின்ற என்னுடைய புஜபலத்தை இப்பொழுது பார்க்கட்டும். சல்ய! பாண்டவர்கள் அழிவதின்பொருட்டும் துரியோதனனுடைய ஜயத்தின்பொருட்டும் மிக்க கூர்மையுள்ள பாணங்களை இப்பொழுது நான் பிரயோகிக்கப்போகிறேன்' என்று கூறினான்.

அரசரே! இவ்விதமான அந்தக் கர்ணனுடைய வார்த்தையைக் கேட்டுச் சல்யன் கர்ணனைப் பார்த்து, '(கர்ண!) நேரில் வந்த மகேந்திரனுக்கும் பயத்தையுண்டுபண்ணுகிறவர்களும் மஹாவீர்யமுள்ளவர்களும் எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவர்களும் பெரிய வில்லைக் கையில் பிடித்தவர்களும் மஹாபலசாலிகளும் புறங்கொடாதவர்களும் மஹாபாக்கியசாலிகளும் ஜயிக்கமுடியாதவர்களும் உண்மையான விக்கிரமமுள்ளவர்களுமான அந்தப் பாண்டவர்களனைவர்களையும் எவ்வாறு நீ அவமதிக்கலாம்? ராதேய! இடிமுழக்கம்போன்ற பார்த்தனது வில்லினுடைய நாணொலியைக் கேட்கும்பொழுது இவ்வாறு பேசமாட்டாய். பீமனாலே யுத்தத்தில் அடிக்கப்பட்டதும் தந்தம் முறிந்ததுமான யானைப் படையை நீ எப்பொழுது பார்ப்பாயோ அப்பொழுது இவ்வாறு பேசமாட்டாய். கூர்மையான பாணங்களால், ஆகாயத்தில் மேகங்களின் நிழலைப்போன்ற (நிழலைச்) செய்கின்ற தர்மபுத்திரனையும் நகுல ஸகதேவர்களையும் அவ்வாறே யுத்தரங்கத்தில் பாணங்களைப் பிரயோகிக்கின்றவர்களும் பகைவர்களைத் துன்புறுத்துபவர்களும்

கைச் சுறுசுறுப்புள்ளவர்களும் அணுக முடியாதவர்களுமான மற்ற அரசர்களையும் எப்பொழுது நீ பார்ப்பாயோ அப்பொழுது இவ்வாறாக நீ பேசமாட்டாய்' என்றான். வேந்தரே! மத்திரராஜனால் சொல்லப்பட்ட அந்த வார்த்தையை அலக்ஷியம்செய்துவிட்டு கர்ணன் அவனை நோக்கி, 'இப்பொழுது நீ பார்க்கப்போகிறாய்' என்று மறுமொழி கூறினான்.

முப்பத்தோராவது அத்தியாயம்

(கர்ணன் போருக்குப் புறப்படுகையில் துர்நிமித்தங்கள் தோன்றியதும், அவன் தன்னைப் புகழ்ந்து அர்ஜுனனுடைய வதத்தைப் பிரதிக்ஞை செய்ததும், சல்யன் அதனைப் பொறுமல் அர்ஜுனனைப் புகழ்ந்து கர்ணனை நிந்தித்ததும்)

மஹா வீர்யமுள்ளவனும் யுத்தம் செய்ய எண்ணங்கொண்டு ஸன்னத்தனாயிருக்கின்றவனுமான கர்ணனைப் பார்த்துக் கௌரவர்களனைவர்களும் அதிக ஸந்தோஷமுள்ளவர்களாக எல்லாப் பக்கத்திலும் கூச்சலிட்டார்கள். பிறகு, துந்துபி வாத்தியங்களுடைய சப்தங்களோடும் பேரிகளுடைய சப்தத்தோடும் பற்பலவிதமான [1]கோணங்களுடைய சப்தங்களோடும் குதிரை முதலானவைகளுடைய கர்ஜனங்களோடும் உம்மைச் சேர்ந்தவர்களனைவர்களும் மரணம் நிச்சயமாயிருப்பதாக நினைத்துப் புறப்பட்டார்கள். பிறகு, கர்ணன் புறப்படவே, ரதிகர்களும் உத்ஸாகத்துடனிருக்கும்பொழுது, பூமியனைத்தும் நடுங்கியது; மிகவும் விகாரமான ஒலியுடன் சப்திக்கவும் சப்தித்தது. சூரியனிடத்தினின்று ஏழு மஹாகிரகங்கள் வெளிவருகின்றவைகளாகக் காணப்பட்டன. திக்குகளுடைய எரிதல்களால் பயங்கரமான எரிநக்ஷத்திரங்களுடைய வீழ்ச்சிகளும் உண்டாயின. அவ்வாறே, இடிகளும் விழுந்தன. பயங்கரமான காற்றுகளும் வீசின. மிருக பக்ஷிகளுடைய கூட்டங்கள் பெரிதான பயத்தைத் தெரிவித்துக்கொண்டு பல வாறாக உம்முடைய சேனையை அப்பொழுது இடமாகச் சுற்றிவந்தன. புறப்பட்டவனான கர்ணனுடைய குதிரைகள் பூமியில் விழுந்தன. ஆகாயத்தினின்று பயங்கரமான எலும்பு மழை பொழிந்தது. அரசரே! சஸ்திரங்களும் ஜ்வலித்தன. கொடிகளும் நடுங்கின. வாகனங்களும் கண்ணீரைச் சொரிந்தன. ஐயா! இப்

---

[1] ஒருவகை வாத்தியம்; வாத்தியம் வாசிக்கும் கோல்; பல வாத்தியம் சேர்ந்து ஒலித்தல்.

படிப்பட்ட துர்நிமித்தங்களும் மிக்க பயங்கரமான மற்ற அநேக உத்பாதங்களும் கௌரவர்களுடைய விநாசத்தின் பொருட்டுத் தோன்றின. எல்லா அரசர்களும், தெய்வத்தினாலே புத்திமயக்கங் கொண்டவர்களாகி, அவைகளைக் கவனியாமலே புறப்பட்டிருக்கின்ற ஸூதபுத்திரனைப் பார்த்து, 'ஜயத்தை அடைவாயாக' என்று கூறினார்கள். அவ்விடத்திலுள்ள கௌரவர்கள், யுத்தத்தில் விளங்குகின்றவனும் சல்யனோடு கூடியவனுமான கர்ணனைப் பார்த்து, 'பாண்டவர்கள் ஜயிக்கப்பட்டார்கள்' என்றெண்ணினார்கள். பிறகு, பகைவீரர்களைக் கொல்லுகின்றவனும் ரதத்தில் வீற்றிருப்பவனும் மிக ஜ்வலிக்கின்றவனும் சூரியனுக்கும் அக்நிக்கும் ஸமமான ஒளிபொருந்தியவனும் பகைவர்களை மிகுதியாகத் துன்பம் செய்கிறவனும் ரதிகர்களுள் உத்தமனுமான அந்தக் கர்ணன், பீஷ்மரும் துரோணரும் விழுந்ததை ஆலோசித்தும், பார்த்தனுடைய ஒப்பற்றதான செய்கையைக்கண்டும், மானத்தினாலும் கர்வத்தினாலும் அதிகமாக எரிக்கப்படுகின்றவனும், கோபத்தினால் ஜ்வலிக்கின்றவனும், பெருமூச்சுவிடுகின்றவனுமாகி, சல்யனை அழைத்து (ப்பின்வரும்) வாக்கியத்தை உரைக்கலானான்,

'ரதத்தின்மீதேறி விற்பிடித்திருக்கின்றவனான யான் கோபங்கொண்டு வஜ்ராயுதத்தைக் கையில்கொண்ட இந்திரனிடத்தினின்றுங்கூடப் பயப்படமாட்டேன். படுத்திருக்கின்ற பீஷ்மர் முதலானவர்களைப் பார்த்துங்கூட என்னை அவ்விதமான மன உறுதியானது விட்டுவிலகவில்லை. மஹேந்திரனுக்கும் விஷ்ணுவுக்கும் ஒப்பானவர்களும், புகழத் தக்கவர்களும் ரதங்களையும் குதிரைகளையும் சிறந்த யானைகளையும் நாசம் பண்ணுகிறவர்களுமான பீஷ்மரும் துரோணரும் கொல்லப்படத்தகாதவர்களாயிருந்தும் பகைவர்களால் கொல்லப்பட்டார்கள். அப்படியிருந்தும், யுத்தத்தில் இப்பொழுது எனக்குப் பயமில்லை. யுத்தத்தில் சூதர்களோடும் யானைகளோடும் ரதங்களோடுங்கூடச் சத்துருக்களால் கொல்லப்பட்டிருக்கின்ற அதிபலசாலிகளான அரசர்களை நன்றாகப் பார்த்து, மஹாஸ்திரங்களை அறிந்தவரும் பிராமணச்ரேஷ்டரும் ஆசாரியருமான துரோணர் எல்லாச் சத்துருக்களையும் யுத்தத்தில் ஏன் கொல்லாமலிருந்தார்? கௌரவர்களே! மஹாயுத்தத்தில் அவ்விதமான நான் துரோணரை நினைத்துக்கொண்டு உண்மையாகச் சொல்லுகிறேன்; தெரிந்துகொள்ளுங்கள். மிருத்யுவைப்போல உக்கிரரூபியும் எதிர்த்துவருகின்றவனுமான அர்ஜுனனை யுத்தத்தில் என்னைத் தவிர உங்களில் வேறொருவனும் ஸஹிக்கமாட்டான். துரோணரிடத்தில் அஸ்திரசிக்ஷையும் மனத்தெளிவும் பலமும் தைரிய

மும் மஹாஸ்திரங்களும் வணக்கமும் (குடிகொண்டிருந்தன). அப்படிப்பட்ட மஹாத்மாவான துரோணரே மிருத்யுவசத்தை அடைந்துவிட்டாராதலால் மற்ற அனைவர்களையும் இப்பொழுது நெருங்கின மிருத்யுவை உடையவர்களென்றே எண்ணுகிறேன். இவ்வுலகத்தில் கர்மங்களுடைய ஸம்பந்தமானது எப்பொழுதும் இருப்பதால் நன்றாக ஆலோசிக்குமிடத்து ஒன்றுமே சாச்வதமல்லவென்று சொல்லுகிறேன். ஆசார்யரான துரோணர் இப்பொழுது கொல்லப்பட்டமையால் எந்த மனிதன்தான் (அடுத்தநாள்) ஸூர்யோதயத்தில் தானிருப்பதாக ஸம்சயமின்றி நினைப்பான்? ஆசார்யரே யுத்தத்தில் பகைவர்களால் கொல்லப்பட்டமையால் அஸ்திரங்களும் பலமும் பராக்கிரமும் கர்மானுஷ்டானங்களும் நல்ல நீதியும் உத்தமமான ஆயுதங்களும் மனுஷ்யனுடைய சுகத்தின்பொருட்டு இருப்பதற்குத் திறமையற்றவையே; நிச்சயம். நெருப்புக்கும் ஸூர்யனுக்கும் ஸமமான தேஜஸூடன் கூடியதும் பராக்கிரமத்தினால் விஷ்ணுவுக்கும் புரந்தரனுக்கும் ஒப்பானதும் நீதியில் பிருஹஸ்பதிக்கும் சுக்கிரனுக்கும் ஒப்பானதும் ஸஹிக்க முடியாததுமான இந்த அஸ்திரத்தை எப்பொழுதுமே அவர் உபாஸிக்கவில்லை. கௌரவ சேனையானது அழுகின்ற ஸ்திரீகளுடனும் சிறுவர்களுடனும் பெருங்கூச்சலுள்ளதும், தார்த்தராஷ்டிரனுடைய பௌருஷமும் அவமதிக்கப்பட்டதுமாகவே, இப்பொழுது நான் செய்யவேண்டிய காரியத்தை அறியவில்லை. சல்ய! ஆதலால், பகைவர்களுடைய படையை நோக்கிச் செல். எந்தச் சேனையில் ஸத்யஸந்தனும் அரசனுமான பாண்டுநந்தனனும் பீமஸேனனும் அர்ஜுனனும் அந்த வாஸுதேவனும் ஸாத்யகியும் ஸ்ருஞ்சயர்களும் நகுல ஸஹதேவர்களும் இருக்கிறார்களோ அதில் அவர்களை என்னைத் தவிர வேறு எவன் எதிர்த்து நிற்பான்? மத்திரராஜனே! ஆதலால், நீ யுத்தத்தில் பாஞ்சாலர்களையும் பாண்டவர்களையும் ஸ்ருஞ்ஜயர்களையும் நோக்கி விரைவாகச் செல். யுத்தத்தில் அவர்களோடு எதிர்த்து அவர்களையாவது கொல்லுவேன்; அல்லது, துரோணரை முன்னிட்டுக்கொண்டு யமலோகமாவது செல்வேன். சல்ய! நான் பீஷ்மாதிகளான அந்தச் சூரர்களுடைய மத்தியில் செல்லாமலிருக்கப்போகிறதே இல்லை என்று இப்பொழுது நீ அறிவாயாக. இந்த மித்ரத் துரோகமானது என்னால் ஸகிக்கத்தக்கதன்று. பிராணனை இழந்து துரோணரைப் பின் தொடரப் போகிறேன். ஆயுளினுடைய முடிவு காலம் நேர்ந்துவிட்டால், யமனுக்கு ஒப்பானவனாக இருந்தாலும் கற்றறிந்தவனோ அல்லது மூடனோ, ஒருவனையும் மிருத்யுவானது

விடுவதில்லை. கற்றறிந்தவனே! ஆதலால், பார்த்தனோடு போர் புரியப் போகிறேன். தெய்வத்தைமீறி நடக்கமுடியாது. விசித்திர வீர்யனுடைய குமாரனான திருதராஷ்டிரனுடைய புதல்வனான துரியோதனராஜன் எப்பொழுதும் என் விஷயத்தில் மங்களகர மான செய்கையை உடையவனாயிருந்தான். அவனுடைய காரிய ஸித்தியின் பொருட்டு நான் பிரியமான போகங்களையும், விட முடியாததான உயிரையும் இழக்கிறேன். புலித்தோல் மூட்ட முள்ளதும் சத்தமிடாத அச்சுள்ளதும் ஸ்வர்ணமயமானதும் மூன்று [1] கோசங்களோடு கூடினதும் வெள்ளியினால் செய்யப் பட்ட த்ரிவேணுவுள்ளதும் ஜாதிக் குதிரைகளுடன் கூடினது மான இந்தச் சிறந்த ரதத்தைப் பரசுராமர் எனக்குக் கொடுத் தார். சல்ய! அவர், நன்றாகப் பார்த்து விசித்திரமான விற்களை யும், கொடிமரங்களையும், கதாயுதங்களையும், கொடிய அம்புகளை யும், ஜ்வலிக்கின்ற கத்தியையும், உத்தமமான ஆயுதத்தையும், வெண்ணிறமும் நல்ல நாதமுமுள்ள உக்கிரமான சங்கத்தையும், எனக்குக் கொடுத்தார். கொடித்துணியுடன் கூடியதும் இடிவிழும் சப்தத்துக்கு ஒப்பான சப்தமுள்ளதும் வெண்ணிறமான குதிரை கள் கட்டியதும் மங்களகரமான அம்புப் பெட்டியால் விளங்கு கின்றதுமான இந்த உத்தமமான ரதத்தின் மீதேறிப் பலத்தினாலே யான் அர்ஜுனனை யுத்தத்தில் திடமாக அடித்துக் கொல்லப் போகிறேன். அந்தப் பாண்டுபுத்திரனை யுத்தத்தில் எல்லாவற் றையும் அபஹரிக்கிறவனான மிருத்யுவே எப்பொழுதும் கவனத் துடன் பாதுகாக்கினும் யுத்தத்தில் நான் எதிர்த்து அந்த யமனை யும் கொல்வேன்; இல்லையாயின் துரோணரை முன்னிட்டுக் கொண்டு யமனையாவது அடைவேன். அதிகமாகப் பேசுவதால் யாது பயன்? யமனும் வருணனும் குபேரனும் இந்திரனும், பரிவாரங்களோடு ஒன்றுசேர்ந்து ஒரே சமயத்தில் பல்குனனை இந்த மஹாயுத்தத்தில் காப்பாற்றினாலும் அவர்களோடுங்கூடவே அந்த அர்ஜுனனை ஜயிப்பேன்' என்று கூறினான்.

இவ்வாறாக யுத்தத்தில் அதிக விரைவுள்ளவனும் தற்புகழ்ச்சி செய்கின்றவனுமான கர்ணனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, வீர்யமுடையவனான அந்த மத்திரராஜன், அவமதித்துப் பரிகாசம் செய்தான்; மறுத்து மறுமொழியும் கூறலானான். 'கர்ண! தற் புகழ்ச்சியை நிறுத்து; நிறுத்து. நீ அதிக பலமுள்ளவனாயிருந் தாலும் அதிக வார்த்தையைச் சொல்லிவிட்டாய். இந்த யுத்தத் தில், புருஷஸ்ரேஷ்டனான தனஞ்சயன் எங்கே? புருஷாதமனான

---

[1] தேரின் உட்புறம்.

நீ எங்கே? ஆச்சரியம்! உபேந்திரனால் ரக்ஷிக்கப்பட்டதும் தேவ ராஜனால் ரக்ஷிக்கப்பட்ட தேவலோகம் போன்றதுமான யாதவர்களுடைய வாஸஸ்தானமான த்வாரகையைப் பலாத்காரமாக மிகக் கலங்கும்படி செய்து புருஷஸ்ரேஷ்டனை கிருஷ்ணனுக்கு இளைய சகோதரியான ஸுபத்திரா தேவியை அர்ஜுனனன்றி வேறு எந்த மனிதன் கவர்வான்? மிருகத்தை வேட்டையாடுவதில் நேர்ந்த கலகத்தில், தேவராஜனுடைய வீர்யத்துக்குச் சமமான வீர்யமுள்ள அர்ஜுனனைத் தவிர வேறு எந்த மனிதன் மூவுலகங்களையும் படைத்தவரும் ஈஸ்வரர்களுக்கெல்லாம் ஈஸ்வரருமான ருத்திரரை யுத்தத்திற்காக அழைப்பான்? விஜயன், அக்நியினிடத்திலுள்ள கௌரவத்தினாலே, அஸுரர்களையும் தேவர்களையும் மகாநாகங்களையும் மனிதர்களையும் கருடர்களையும் பிசாசங்களையும் யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் அம்புகளால் ஜயித்தான்; அவனுடன் விரும்பப்பட்ட ஹவிஸையும் (அக்நிக்குக்) கொடுத்தான். அதிரத புத்திர! அர்ஜுனன், பகைவரால் கவரப்பட்ட துரியோதனன் முதலான கௌரவர்களைப் புருஷஸ்ரேஷ்டர்களுடன்கூடின அந்தப் பல சத்துருக்களைக் கொன்று விடுவித்ததை நினைக்கிறாயா? நீ தொடக்கத்தில் (யுத்தத்தைவிட்டு) ஓடவே, கலகப்ரியர்களான திருதராஷ்டிரருடைய குமாரர்கள், கந்தர்வர்களுடைய கூட்டங்களைத் தோல்வியடையச்செய்து பாண்டவர்களால் விடுவிக்கப்பட்டதை நினைக்கிறாயா? மாடுபிடி சண்டையில் ஒன்றுசேர்ந்த படைகளோடும் வாகனங்களோடும் கூடியவர்களும் ஆசார்யரான துரோணருடனும் ஆசார்யபுத்திரரான அஸ்வத்தாமாவுடனும் பீஷ்மருடனும் கூடியவர்களுமான நீங்களனைவர்களும் புருஷஸ்ரேஷ்டனான அர்ஜுனனாலே ஜயிக்கப்பட்டீர்கள். அப்பொழுது உன்னாலே அப்படிப்பட்ட அர்ஜுனன் ஏன் ஜயிக்கப்படவில்லை? ஸூதபுத்திர! உன்னுடைய அழிவின்பொருட்டு இப்பொழுது ஸர்வோத்தமமான வேறு ஒரு யுத்தம் இதோ மீண்டும் வந்துவிட்டது. யுத்தரங்கத்தை அடைந்திருக்கிற நீ சத்துரு பயத்தால் ஓடாமலிருப்பாயாகில் இப்பொழுது மாண்டாய்' என்று கூறினான். உதாரமான மனமுள்ள சல்யன் அதி குரூரமாயுள்ள சத்துரு ஸ்தோத்திரத்தை இவ்வாறு கூறுமளவில், பகைவரை வாட்டுபவனும் கௌரவ ஸேனாபதியுமான கர்ணன் மிக்க கோபமுற்று மத்திரராஜனைப் பார்த்து உரைக்கலானான்.

'சல்ய! இருக்கட்டும்; இருக்கட்டும். ஏன் பிதற்றுகிறாய்? எனக்கும் அந்த அர்ஜுனனுக்கும் யுத்தம் நேர்ந்துவிட்டது. அவன் என்னை இந்த யுத்தத்தில் ஜயிப்பானேயாகில் அப்பொழுதல்லவோ

உன்னுடைய இந்தப் பிதற்றலெல்லாம் யதார்த்தமாகும்?' என்ருன். சல்யன், 'இவ்வாறு ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு வேறு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. யுத்தம் செய்யவேண்டுமென்ற விருப்பத்துடன் கர்ணன், 'சல்ய! போ' என்று கூறினுன். சல்யனை ஸாரதியாகக்கொண்ட அந்த ரதிகனுன கர்ணன், இருளை நாசஞ்செய்கின்ற சூரியன்போல யுத்தத்தில் பகைவர்களை நாசஞ்செய்துகொண்டு பகைவர்களைக் கொல்லுகின்ற சத்துருக்களை நோக்கி விரைவாகச் சென்ருன். பிறகு, காந்தியுடன் கூடியவனுன கர்ணன் புலித்தோலால் மூடப்பட்டதும் வெண்மையான குதிரைகளுடன் கூடியதுமான ரதத்தோடு சென்ருன். அவனும் பாண்டவர்களுடைய சேனையைப் பார்த்து விரைவுடன் தனஞ்சயனைப் பற்றி வினவினுன்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்

(கர்ணன், தனக்கு அர்ஜுனனைக் காட்டுபவனுக்கு அவன் விரும்பும் பரிசளிப்பதாக உறுதி கூறியது.)

அப்பொழுது, கர்ணன் தன்னுடைய சேனையை மிகுந்த முயற்சியுடனே ஸந்தோஷமடையும்படி செய்துகொண்டு யுத்த பூமியிலுள்ள ஒவ்வொருவரையும் பார்த்துப் பாண்டவனைப்பற்றி வினவினுன்: 'இப்பொழுது எனக்கு மஹாத்மாவான அர்ஜுனனைக் காண்பிப்பவனுக்கு அவன் மனத்திஞல் விரும்புகிற பொருளைக் கொடுப்பேன். எவன் எனக்கு அர்ஜுனனைக் காண்பிக்கிருனே அவன் அதில் திருப்தியடையாவிடின் அவனுக்கு நான் மறுபடியும் ரத்தினங்கள் நிறைந்த வண்டியைக் கொடுப்பேன். அர்ஜுனனை எனக்குக் காட்டுகின்ற மனிதன் அதில் திருப்தியடையாவிடின் அவனுக்கு எப்பொழுதும் [1] வெண்கலப்பானை நிறையப் பால்கறக்கக்கூடிய நூறு பசுக்களை நான் கொடுக்கிறேன். அர்ஜுனனைக் காண்பிக்கின்றவனுக்குச் சிறந்த நூறு கிராமங்களைக் கொடுப்பேன். எனக்கு அர்ஜுனனைக் காண்பிப்பவனுக்குக் கரிய கூந்தலையுடைய வேலைக்காரிகளுடன் வெண்மைநிறமுள்ளதும் பெண்கோவேறு கழுதைகள் கட்டியதுமான தேரை நான் கொடுப்பேன். அர்ஜுனனைக் காட்டுகின்ற மனிதன் அதில்

---

[1] 'காம்ஸ்யதோஹநம்' என்பது மூலம்; 'கறக்க வெண்கலப்பாத்திரங்களுடன்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

திருப்தியடையாவிடில் அவனுக்கு மறுபடியும் [1] ஸ்வர்ணமயமான கஜராஜனை நான் கொடுப்பேன். அவ்வாறே, பின்னும் அவனுக்கு நல்ல யௌவனப் பருவத்திலுள்ளவர்களும் கழுத்திற் பொன் அணிகளை அணிந்தவர்களும் பாட்டுக்களையும் வாத்தியங்களையும் நன்கு கற்றறிந்தவர்களும் அலங்கரிக்கப்பட்டவர்களுமான அநேகம் ஸ்திரீகளையும் நான் கொடுப்பேன். அர்ஜுனனைக் காட்டுகிற மனிதன் அதில் திருப்தியடையாவிடின் அவனுக்கு நூறு யானைகளையும் நூறுகிராமங்களையும் நூறுரதங்களையும் சிறந்த ஸ்வர்ணத்தையும் புஷ்டியுள்ளவையும் குணங்கள் நிரம்பியவையும் சாந்தமானவையும் பாரத்தைத் தாங்குவதில் திறமையுள்ளவையும் நன்றாகப் பழக்கப்பட்டவையுமான உத்தம ஜாதிக்குதிரைகள் பதினாயிரத்தையும் நான் கொடுப்பேன். எனக்குத் தனஞ்சயனைக் காண்பிப்பவனுக்குத் தங்கமயமான கொம்புக் குமிழ்களுள்ளவையும் கன்றுக்குட்டிகளை உடையவையும் புதிதாக ஈன்றவையுமான நானூறு பசுக்களைக் கொடுப்பேன். அர்ஜுனனைக் காண்பிக்கின்ற மனிதன் அதிலும் திருப்தியடையாவிடின் மேலான ஐந்நூறு வெள்ளைக் குதிரைகளைக் கொடுப்பேன்; பொன்னலங்காரங்களாலே மூடப்பட்டவைகளும் நன்றாகச் சாணைபிடிக்கப்பட்ட ரத்தினங்களிழைத்த பூஷணங்களையுடையவைகளும் நன்றாகப் பழக்கப்பட்டவைகளுமான சிறந்த பதினெட்டு குதிரைகளையும் நான் அவனுக்குக் கொடுப்பேன். தனஞ்சயனை எனக்குக் காண்பிப்பவனுக்கு நிர்மலமானதும் ஸ்வர்ணமயமானதும் நன்றாக அலங்கரிக்கப்பட்டதும் உத்தமமான காம்போஜ தேசத்தில் பிறந்த குதிரைகளோடு சேர்ந்திருக்கின்றதுமான ரதத்தையும் நான் கொடுப்பேன். அர்ஜுனனைக் காண்பிக்கின்ற மனிதன் அதனையும் மதியாவிடின் அவனுக்குப் பற்பல பொன்னணிகளாலே மறைக்கப்பட்டவைகளும் பொன்மாலையை அணிந்தவைகளும் மேற்கு ஸமுத்திரக்கரையில் தோன்றினவைகளும் யானை பழக்குபவர்களாலே பழக்கப்பட்டவைகளுமான சிறந்த வேறு அறுநூறு யானைகளை நான் கொடுப்பேன். அர்ஜுனனைக் காண்பிக்கின்ற மனிதன் இதையும் அல்பமென்று அவமதிப்பானேயாகில், சிறந்த வேறு பதினான்கு வைசிய கிராமங்களையும் நான் அவனுக்குக் கொடுப்பேன். மிக்க செழிப்புள்ளவைகளும் செல்வங்களையுடையவைகளும் அருகில் காடுகளும் ஜலமுள்ளவை

1 'யானைபோன்ற வடிவமுள்ள ஆறு காளைகள்கட்டிய பொன்னாலாகிய வேறொரு தேரையும்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு. 'யானைகளையே காளைகள்போலக் கட்டிய எனினுமாம்' என்பது பழைய உரை.

களும் எங்கிருந்தும் பயமில்லாதவைகளும் மிகுந்த ஸம்பத்துடைய வைகளுமான அரசர்களே அனுபவிக்கத்தக்க பதினுன்கு கிராமங் களையும் (கொடுப்பேன்). எவன் தனஞ்சயனை எனக்குக் காண்பிப் பனே அவனுக்குக் கழுத்தில் பொற்கலன்களை அணிந்தவர்களும் மகததேசத்தில் தோன்றியவர்களும் புதியயௌவன முள்ளவர்களு மான நூறு தாஸிகளையும் நான் கொடுப்பேன். அர்ஜுனனைக் காண்பிக்கின்ற மனிதன் இதனையும் அல்பமென்று அலக்ஷியம் செய்வானேயாகில் அவனுக்கு அவன் தானே எதை விரும்பு வனே அந்த வேறு வரத்தையும் நான் கொடுப்பேன். பிள்ளைகளை யும் பெண்டாட்டியையும் தவிர, என்னிடம் வேறு எந்தப் பொருள் இருக்கிறதோ அதையும் பின்னும் எந்த எந்த வஸ்துவை மனத்தி னுல் விரும்புகிருனே அந்த அந்த வஸ்துவையும் நான் அவனுக் குக் கொடுப்பேன். எந்த மனிதன் கேசவனையும் அர்ஜுனனையும் எனக்குக் காண்பிப்பனே அவனுக்கு ஒன்றுசேர்ந்திருக்கிற கிருஷ்ணுர்ஜுனர்களை நான் கொன்று அவ்விருவருடைய பொருள் களனைத்தையும் கொடுப்பேன்' என்று சொன்னுன்.

கர்ணன், இவ்வாருன வார்த்தைகளை யுத்தகளத்தில் பலவாறு சொல்லிக்கொண்டு, கடலிலிருந்து தோன்றியதும் இனிய ஒலியுள்ள தும் சிறந்ததுமான சங்கத்தை ஊதினுன். மஹாராஜரே! தகுந்தவைகளான ஸூதபுத்திரனுடைய அவ்விதமான வசனங் களைக் கேட்டுத் துர்யோதனன் ஸஹோதரர்களோடுகூட ஸந்தோ ஷத்தை அடைந்தான். அரசரே! புருஷச்ரேஷ்டரே! அப்பொழுது உம்முடைய சேனையில் நான்கு பக்கங்களிலும் துந்துபிகளுடைய கோஷமும் மிருதங்கங்களுடைய கோஷமும் வாத்திய முழக்கங்க ளுடன் கூடின ஸிம்மநாதமும் யானைகளுடைய சப்தமும் தோன் றின. அவ்வாறே, மிகுந்த மனக்களிப்புடன்கூடின யுத்தவீரர்க ளுடைய சப்தமும் தோன்றிற்று. அவ்வாறு மிகுந்த ஸந்தோஷத் துடன்கூடின ஸைன்யத்தில் அப்பொழுது ஸஞ்சரிக்கின்றவனும் தற்புகழ்ச்சிசெய்துகொள்பவனும் பகைவர்களைப் பீடிக்கின்றவ னும் மஹாரதனுமான ராதேயனை நோக்கி மத்திரராஜன் உரக்கச் சிரித்து இவ்வாருன வசனத்தை மறுமொழியாக உரைக்கலானுன்.

முப்பத்துமூன்ருவது அத்தியாயம்

(கர்ணனுடைய செருக்குமொழிகளைப் பொருத சல்யன் கர்ணனை இகழ்ந்தது)

சல்யன், 'ஸூதபுத்திர! நீ நினையாதே. பொன்னையும் சிறந்த யானைகளையும் வீணாகக்கொடுக்கிருய். இப்பொழுது நீ தனஞ்சயனைப் பார்க்கப்போகிருய். ஸூதபுத்திர! (அர்ஜுனனைத் தெரிவிக்கிற) மனிதனுக்கு நீ ஸ்வர்ணத்தையாவது உத்தமமான யானையையாவது தானமாகக் கொடாதே. தனஞ்சயனை நீ பார்ப்பாய். பலத்தினுல் மதங்கொண்டவனுன நீ குபேரன்போலப் பொருளைச் செலவிடுகிருய். ராதேய! யத்னமின்றியே இப்பொழுது நீ தனஞ்சயனைப் பார்ப்பாய். நீ மூடனைப்போல அதிகமான பொருளைச் செலவிடப்போகிருய். தகாதவர்களுக்கு அளிப்பதினுல் வரும் தோஷங்களை நீ அஜ்ஞானத்தினுல் தெரிந்துகொள்ளவில்லை. ஸூத! எந்தத் தனத்தை நீ மிகுதியாகக் கொடுப்பதாக வெளியிடுகிருயோ அந்தத் தனத்தைக்கொண்டு உன்னுல் பலவித யாகங்களாலே தேவர்களைப் பூஜிப்பதற்கு முடியும். நீ அந்தத் தனங்களாலே யாகம் செய்வாயாக. நீ, அறியாமையினுல், கிருஷ்ணர்ஜுனர்களைக் கொல்லுதற்கு விரும்புவது வீணே. யுத்தத்தில், ஒரு நரியினுலே இரண்டு ஸிம்மங்கள் கொல்லப்பட்டனவென்று நாம் கேட்டதேயில்லை. வேண்டக்கூடாததை நீ வேண்டுகிருய். அக்நியில் விரைவாக விழுகின்ற உன்னைத் தடுக்கக்கூடிய ஸ்னேகிதர்கள் உனக்கு இல்லை. நீ காரியாகாரியங்களை அறியவில்லை. ஸந்தேகமில்லாமல் காலத்தினுல் பரிபாகமடைந்தவனுக இருக்கிருய். பிழைத்திருக்க எண்ணங்கொண்ட எவன்தான் அர்த்தமில்லாததையும் காதால் கேட்கத் தகாததையுமான பல வார்த்தைகளைச்சொல்லுவான்? கழுத்தில் கல்லைக்கட்டிக்கொண்டு இருகைகளாலும்கடலைத் தாண்டுவதுபோலவும் மலையுச்சியினின்று கீழேவிழுவதுபோலவும் உன் விருப்பம் இருக்கின்றது. நீ நன்மையடைவதற்கு விருப்பமுள்ளவனுனுல், அணிவகுக்கப்பட்ட எல்லாச் சேனைகளுடனும் கூடின எல்லாப் போர்வீரர்களோடும் சேர்ந்தவனுகவும், நன்ருகக் காக்கப்பட்டவனுகவும் தனஞ்சயனேடு போர்புரிவாயாக. திருதராஷ்டிர புத்திரனுன துரியோதனனுடைய நன்மையின்பொருட்டு உனக்குநான்சொல்லுகிறேன். தீங்குசெய்வதற்காக அன்று. உனக்குப் பிழைத்திருப்பதில் விருப்பமிருக்குமானுல் என்னுல் சொல்லப்பட்ட இந்த விஷயத்தில் ஶ்ரத்தை பாராட்டுவாயாக' என்று

கூறினான். கர்ணன், 'சல்ய! என் தோள்வலிமையை ஆதாரமாகக் கொண்டு யுத்தத்தில் அர்ஜுனனை எதிர்பார்க்கிறேன். நீயோ மித்திரனென்று பெயர்கொண்ட சத்துரு. நீ என்னைப் பயப்படுத்துவதற்கு விரும்புகிறாய். என்னை இந்த அபிப்பிராயத்தினின்று ஒருவனும் இப்பொழுது திருப்பமுடியாது. வஜ்ரபாணியான இந்திரனாலும் எவ்விதத்திலும் முடியாது. அவ்வாறிருக்க, மனிதனால் எவ்விதம் முடியும்?' என்றான். இவ்வாறான கர்ணனுடைய வாக்கியத்தின் முடிவில் மத்திரராஜனான சல்யன், மீண்டும் கர்ணனை அதிகமாகக் கோபமூட்டவேண்டுமென்ற எண்ணங்கொண்டு மறுமொழி கூறலானான்.

'கர்ண! பல்குனனுடைய பாகுவேகத்தினாலே நாண்கயிற்றினின்று விடுபட்டவைகளும், வேகமுடையவைகளும், நெருப்புக்கு ஒப்பானவைகளும், ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியுள்ளவைகளும், கழுகு இறகுகளையுடையவைகளும், கூர்மையுள்ள நுனியுடன் கூடியவைகளுமான அம்புகள் உன்னை அடையும்பொழுது உன்னை இந்தப் புத்தியானது விட்டுவிடும். ஸவ்யஸாசியான பார்த்தன் சிறந்த வில்லை எடுத்துப் படையைத் தபிக்கச்செய்து துன்பத்தை விளைவிக்கின்ற அம்புகளால் எப்பொழுது உன்னை அடிப்பனோ அப்பொழுது நீ பாண்டவனைப்பற்றின கேள்வியை விட்டுவிடுவாய். ஸூதபுத்ர! தாயின் மடியில் படுத்திருக்கிற ஒரு சிறு குழந்தை சந்திரனைப் பிடித்துத் தருவதற்கு எவ்வாறு விரும்புமோ அவ்வாறே ரதாரூடனாகப் பிரகாசிக்கின்ற பார்த்தனை மோகத்தினால் ஜயிக்கவேண்டுமென்று விரும்புகிறாய். [1] நீ இப்போது அர்ஜுனனோடு யுத்தம்செய்ய விரும்புவது நன்கு தீட்டப்பட்டதும் கூர்மையான முனையுள்ளதுமான கத்தியைப் பூமியில் நாட்டி (அதன் முனையில் கையினால்) அடிப்பதுபோலவும் கூர்மையான பாணங்களால் (தன்மேல்) குத்திக்கொள்வதுபோலவும் இருக்கிறது. கர்ண! நீ மிக்க கூர்மையுள்ள ஆயுதத்தினுடைய நுனிக்கு ஒப்பான செய்கையுள்ள அர்ஜுனனோடு இப்பொழுது போர் புரிய விரும்புகிறபடியால் மிக்க கூர்மையுள்ள நுனியுடன்கூடின த்ரிசூலத்தைக் கட்டிக்கொண்டு எல்லா அங்கங்களையும் உரைத்துக்கொள்ளுகிறாய். இளமைப் பருவத்திலுள்ளதும் விவேகமற்றதுமான ஓர் அற்ப மானானது வேகத்தோடுகூடியதாகக் கோபமூண்டதும் பிடரிமயிருள்ளதும் பெரிதுமான ஸிம்மத்தை நெருங்கி எவ்வாறு சண்டைசெய்வதற்கு அழைக்குமோ அவ்வாறே நீ இப்பொழுது பார்த்தனை அழைக்கிறாய். ஸூதபுத்திர!

---

[1] இரட்டித்து வருவதால் ஒரு சுலோகம் விடப்பட்டது.

வனத்தில் மாமிசத்தினால் திருப்தியடைந்த ஒரு நரி மஹாவீரிய முள்ள ஸிம்மத்தை எவ்வாறு அழைக்குமோ அவ்வாறு ராஜபுத்திரனை நீ சண்டைக்கு அழைக்காதே; பார்த்தனை எதிர்த்து நாசத்தை அடையப்போகிறாய். கர்ண! ஏர்க்கால்போன்ற தந்தங்களையுடையதும் மதம்பெருகின்ற கன்னங்களுடனும் முகத்துடனும் கூடியதுமான பெரிய யானையை ஒரு முயல் அழைப்பது போலப் பார்த்தனான தனஞ்சயனை நீ யுத்தத்திற்கு அழைக்கிறாய். (நீ) பார்த்தனை யுத்தம் செய்வதின்பொருட்டு விரும்புகிற காரணத்தினால், மிக்க விஷமுள்ளதும் கோபத்தினால் நிறைந்ததும் புற்றிலிருப்பதுமான ஒரு கருநாகத்தை அவிவேகத்தினால் தடியினாலடிக்கிறாய். கர்ண! மூடனான நீ பிடரிமயிருள்ளதும் கோபங்கொண்டதுமான ஒரு ஸிம்மத்தை ஒரு நரி எதிர்ப்பதுபோல நரஸிம்மனான பாண்டவனை எதிர்த்துக் கர்ஜிக்கிறாய். கர்ண! அழகிய சிறகையுடையதும் பக்ஷிகளுள் சிறந்ததும் அதிவேகமுள்ளதுமான கருடனை ஒரு பெண்பக்ஷி போருக்கு அழைப்பதுபோலப் பிருதா புத்திரனான தனஞ்சயனை யுத்தத்திற்கு அழைக்கிறாய். நீ எல்லா ஜலங்களுக்கும் நிதியும், பயங்கரமான உருவத்துடன் கூடியதும், திமிங்கிலங்களாலடர்ந்ததும் சந்திரோதயகாலத்தில் விருத்தியடைகின்றதுமான ஸமுத்திரத்தை ஓடமின்றித் தாண்ட விரும்புகிறாய். கர்ண! துந்துபிவாத்தியம் போன்ற முழக்கமுள்ளதும், கூர்மையான கொம்புகளையுடையதும், நன்றாக முட்டும் திறமையுள்ளதுமான ஒரு விருஷபத்தை ஒரு கன்றுக்குட்டி சண்டைக்கு அழைப்பதுபோல நீ பிருதாபுத்திரனான தனஞ்சயனை யுத்தத்திற்காக அழைக்கிறாய். காலத்தில் பாணங்களாகிற ஜலத்தைப் பொழியும் நரனென்கிற அர்ஜுனனாகிற பெரிய மேகத்தை, தவளையானது உரக்கக் கர்ஜிக்கின்ற பெரிய மேகத்தை எதிர்த்துக் கர்ஜிப்பதுபோல எதிர்த்துக் கர்ஜிக்கிறாய். கர்ண! வீட்டைக் காத்திருக்கின்ற நாயானது காட்டிலிருக்கும் புலியைக் கண்டால் எவ்வாறு குரைக்குமோ அவ்வாறே தனஞ்சயனாகிற மனிதப்புலி(யைப் பார்த்து) நீ குரைக்கிறாய். கர்ண! காட்டில் வசிக்கின்ற ஒரு நரி முயல்களாலே சூழப்பட்டதாக எதுவரையில் ஸிம்மத்தைப் பார்க்கவில்லையோ (அதுவரையில்) தன்னை ஸிம்மமாக நினைத்துக்கொள்ளும். ராதேய! அவ்விதமாக, பகைவர்களைக் கொல்பவனும் மனிதருள் சிங்கம்போன்றவனுமான அர்ஜுனனை யுத்தத்தில் பாராமலிருந்துகொண்டு நீயும் உன்னை ஸிம்மமாக எண்ணிக்கொள்ளுகிறாய். ஒரு ரதத்தில் வீற்றிருக்கின்றவர்களும் ஸூர்ய சந்திரர்கள் போன்றவர்களுமான கிருஷ்ணார்ஜு

னர்களை எதுவரையில் நீ பாராமலிருக்கிறாயோ (அதுவரையில்) நீ உன்னைப் புலி என்று எண்ணிக்கொள்ளுகிறாய். கர்ண! மஹா யுத்தத்தில் நீ காண்டீவத்தினுடைய ஒலியைக் கேளாமலிருக்கிற அவ்வளவு வரையில்தான் உன்னால் நினைத்தபடி சொல்லிக்கொள்ள முடியும். ரதம், சங்கம், வில் இவைகளுடைய சப்தங்களால் பத்துத் திக்குகளையும் எதிரொலியிடும்படி செய்கின்றவனும் கர்ஜிக்கின்ற புலிபோன்றவனுமான தனஞ்சயனைக் கண்டு நீ நரியாகப் போகிறாய். மூடனே! எப்பொழுதுமே நீ நரி. எப்பொழுதுமே தனஞ்சயன் ஸிம்மம். அந்த வீரனைப் பகைப்பதினாலே நீ நரி போலக் காணப்படுகிறாய். பலாபலத்தில் பூனையும் எலியும் எவ்விதமோ, புலியும் நாயும் எவ்விதமோ, ஸிம்மமும் நரியும் எவ்விதமோ, யானையும் முயலும் எவ்விதமோ, ஸத்தியமும் பொய்யும் எவ்விதமோ, அமிருதமும் விஷமும் எவ்விதமோ அவ்விதமே பார்த்தனும் நீயும் உங்களிடத்திலுள்ள செய்கைகளாலே பிரஸித்திபெற்றவர்களாக இருக்கிறீர்கள்' என்று கூறினான்.

முப்பத்துநான்காவது அத்தியாயம்

(கர்ணன் மர்மங்களை வெளியிட்டுச் சல்யனை நிந்தித்தது.)

அளவுகடந்த வல்லமையுள்ள சல்யனாலே நிந்திக்கப்பட்ட ராதேயன், மிக்க கோபங்கொண்டு, சல்யன் கடுஞ்சொல் சொல்லுதலால், 'சல்யன்' என்றே நிச்சயித்து, அவனைப் பார்த்து வசனிக்கலானான். 'சல்ய! குணசாலிகளுடைய குணங்களைக் குணமுள்ளவனே அறிவான்; குணமில்லாதவன் அறியமாட்டான். நீயோ எப்பொழுதும் குணங்களை விட்டவன். குறைகுணங்களை நீ எப்படி அறிவாய்? சல்ய! அர்ஜுனனுடைய மஹாஸ்திரங்களையும் கோபத்தையும் வல்லமையையும் வில்லையும் பாணங்களையும் நானறிவேன். அவைகளை அவ்வாறு நீ அறியமாட்டாய். சல்ய! அரசர்களுள் உத்தமனான கிருஷ்ணனுடைய மகிமையை நான் எப்படி அறிகிறேனோ அப்படி நீ அறியமாட்டாய். சல்ய! இவ்வாறாக, நான் என்னுடைய வீரியத்தையும் பாண்டவனிடத்திலுள்ள வீரியத்தையும் அறிந்தே சண்டைசெய்வதற்காக அவ்விருவரையும் அழைக்கிறேனே தவிர, விட்டிற்பூச்சி நெருப்பை (எதிர்ப்பது) போலன்று. சல்ய! நல்ல கட்டுக்களுள்ளதும் இரத்தத்தைப் பானம் செய்வதும் ஒப்பற்றதும் அம்புத்தூணியில் படுத்திருக்கின்றதும் சிறகுகளுள்ளதும் நன்றாகத் தீட்டப்பட்டதும் நன்றாக

---

[1] அம்பு, ஆயுத நுனி, முள்.

அலங்கரிக்கப்பட்டதுமான இந்தப் பாணமிருக்கிறது. அனேக வருஷமாகச் சந்தனப்பொடியினால் பூஜிக்கப்பட்டதும் ஸர்ப்பமய மானதும் விஷமுள்ளதும் உக்கிரமானதும் மனிதர்கள் குதிரைகள் யானைகள் இவைகளுடைய கூட்டங்களைக் கொல்லுவதும் கோரஸ்வரூபமுள்ளதும் மஹாபயங்கரமானதும் கவசங்களையும் எலும்புகளையும் பிளக்கின்றதுமான இந்த அம்பானது உறங்கிக் கொண்டிருக்கிறது. நான் கோபங்கொள்ளுவேனானால் எந்தப் பாணத்தினால் மேருமஹாகிரியையும் பிளப்பேனோ அந்தப் பாணத்தைப் பல்குனனையும் தேவகியின் புத்திரனான கிருஷ்ணனையும் தவிர வேறுமனிதன்மேல் நான் ஒருகாலும் பிரயோகிக்கமாட்டேன். என்னுடைய ஸத்தியத்தையும் கேள். சல்ய! அவ்விதமான பாணத்தினால் மிக்க பரபரப்புள்ளவர்களான வாஸுதேவனையும் தனஞ்சயனையும் (எதிர்த்துப்) போர்புரியப் போகிறேன். அச்செய்கையே எனக்குத் தகுந்தது. எல்லா விருஷ்ணி வீரர்களுடைய ஐசுவரியமும் கிருஷ்ணனிடத்தில் நிலைபெற்றிருக்கின்றது. எல்லாப் பாண்டு புத்திரர்களுடைய வெற்றியும் பார்த்தனைப் பொறுத்திருக்கின்றது. இவ்விருவர்களையும் எதிர்த்து எவன் திரும்புவதற்குத் தகுந்தவனாவான்? புருஷசிரேஷ்டர்களான அவ்விருவர்களும் ஒன்றுசேர்ந்து தேரின்மீதேறி என்னொருவனை லக்ஷியம்வைத்துப் போர்புரிவதற்காக வந்திருக்கின்றார்கள். சல்ய! என்னுடைய நற்பிறப்பைப் பார். அத்தை அம்மான்களிடத்தினின்று தோன்றினவர்களும் நூலில் கோர்க்கப்பட்ட இரண்டு மணிகள் போலவும் ஸஹோதரர்கள்போலவும் ஒற்றுமையுள்ளவர்களுமான அவ்விருவரையும் என்னால் கொல்லப்பட்டவர்களாகப் பார்ப்பாய். சல்ய! அர்ஜுனனிடத்தில் காண்டீவம் இருக்கின்றது. கிருஷ்ணனிடத்தில் சக்ரமிருக்கின்றது. அவர்கள் ஹனுமானையும் கருடனையும் கொடியாகக் கொண்டவர்கள். இங்ஙனமிருப்பது பயப்படுகிறவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணும்; எனக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகின்றது. நீயோ கெட்ட ஸ்வபாவமுள்ளவன்; அறிவீனன்; மஹாயுத்தங்களில் பாண்டித்யமற்றவன்; பயத்தினால் பிளக்கப்பட்டுப் பயத்தினாலே பொருத்தமில்லாத பல வார்த்தைகளைச் சொல்லுகிறாய். இழிவான தேசத்தில் தோன்றியவனே! நீ ஏதோ ஒரு காரணத்தினால் அவ்விருவரையும் புகழ்கிறாய். அவ்விருவரையும் யுத்தத்தில் கொன்று, பந்துக்களுடன் உன்னையும் இப்பொழுது கொல்லப் போகிறேன். பாப தேசத்தில் பிறந்தவனே! கெட்ட புத்தியுடையவனே! அற்பனே! க்ஷத்திரியர்களுள் அதமனே! நீ

சினேகிதரூபியான சத்துரு. ஏன் என்னைக் கிருஷ்ணார்ஜுனர்க ளிடமிருந்து பயப்படுத்துகிறாய்? அவர்களே என்னை இப்பொழுது கொல்வார்களோ; அவர்களைத்தான் நான் கொல்லுவேனோ; என்னுடைய பலத்தை நன்கு அறிந்தவனான நான் கிருஷ்ணார்ஜுனர் களிடத்திலிருந்து பயப்படமாட்டேன். நிந்திக்கப்பட்ட தேசத்தில் பிறந்தவனே! நான் ஒருவனாக ஆயிரம் வாஸுதேவரையும் நூற்றுக்கணக்கான பல்குனரையும் கொல்வேன். பேசாமலிரு. சல்ய! ஸ்திரீகளும் பாலர்களும் விருத்தர்களுமான விளையாட்டில் கூடிய ஜனங்கள் வேதாத்தியயனம் செய்வதுபோலப் பெரும் பான்மையாகப் பாடுகின்றவைகளும் முன்பு அரசனுடைய ஸந் நிதியில் பிராம்மணர்களால் உள்ளபடி உரைக்கப்பட்டவைகளும் துராத்மாக்களான மத்திரர்களைப்பற்றியவைகளுமான காதை களை என்னிடத்தினின்று கேள். மூடா! நீ ஒரே மனத்துடன் கேட்டாவது எனக்கு மறுமொழி சொல். இழிந்ததான மத்திர தேசத்தில் பிறந்தவன் மித்திரத் துரோகி. எப்பொழுதுமே நம்மை எவன் பகைக்கிறானோ அவன் மத்திரகன். அற்பமான வாக் கியத்தைச் சொல்லுகிறவனும் நராதமனுமான மத்திரகனிடத்தில் நேசமென்பதில்லை. மத்திரகன் எப்பொழுதுமே கெட்ட மன முடையவன்; எப்பொழுதுமே பொய் சொல்பவன்; கபட ஸ்வ பாவமுள்ளவன்; இன்னும் வேறுவிதமான தௌஷ்டியமும் மத்திர தேசத்து ஜனங்களிடத்தில் உண்டென்று நாம் கேட்டிருக் கிறோம். தகப்பன், மகன், தாய், மாமி, மாமன், அம்மான், ஸஹோதரி, மகள், ஸஹோதரன், பேரன், மற்ற உறவினர்கள், தோழர்கள், தோழிகள், அதிதிகள், அடிமைக்காரர்கள், அடிமைக் காரிகள் யாவரும் கூடுகிறார்கள். அறியப்பட்டவர்களும் அறியப் படாதவர்களுமான பெண்டிர்கள், தங்கள் இஷ்டப்படி புருஷர் களோடு சேருகின்றார்கள். ஒழுக்கங் கெட்டவர்களும் எப்பொ ழுதுமே மாக்கலந்த சாராயத்தைக் குடிக்கின்றவர்களும் வீடுகளி லிருந்து கோமாமிசத்துடன் கூடின சாராயத்தை உண்டுவிட்டு அழுகின்றவர்களும் சிரிக்கின்றவர்களும் ஒன்றுக்கொன்று ஸம்பந்த மின்றிப் பாடுகின்றவர்களும் நினைத்தபடி பொருளில்லாத வசனங் களைச் சொல்லிக்கொண்டு காமத்தினாலே பரஸ்பரம் பிரவர்த்திக் கின்றவர்களும் கர்வமுள்ளவர்களும் பிரஸித்தமும் அமங்களகரமு மான செய்கைகளுள்ளவர்களுமான மத்திரர்களிடத்தில் தர்ம மானது எவ்வாறு இருக்கும்? மத்திர தேசத்தில் பிறந்தவனோடு பகையையாவது நேசத்தையாவது செய்யக்கூடாது. அற்பனான

மத்திரகனிடத்தில் நேசத்தன்மை இல்லை. மத்திரகன் எப்பொழுதும் பாவமுள்ளவன். மத்திரகர்களிடமும் காந்தாரகர்களிடமும் தூய்மை நாசமடைந்துவிட்டது. 'அரசனை யாகம் செய்விப்பவனாகக் கொண்ட யஜமானனால் செய்யப்படும் யாகத்தில் ஹவிஸ் எவ்வாறு நாசத்தை அடையுமோ, சூத்திரனுக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்கின்ற பிராமணன் எவ்வாறு அவமானத்தையடைவனோ, பிரம்மத்துவேஷிகள் இவ்வுலகத்தில் எப்பொழுதுமே எவ்வாறு அவமதிப்பையடைகின்றார்களோ, எவ்வாறு மனிதன் மத்திரதேசத்து மனிதர்களோடு சேர்ந்து பதிதனாகிறானோ அவ்வாறாக உன் விஷம் நாசமடையவேண்டும். தேளே! உனக்கு விஷமே தனம். அது எப்பொழுதும் உன் குட்டிகளுக்குங்கூட வேண்டாம். அதர்வண மந்திரத்தினாலே என்றால் ஸர்வசாந்தியும் செய்யப்பட்டிருக்கின்றது' என்று இவ்வாறு தேளால் கொட்டப்பட்டவனுக்கும் விஷவேகத்தினால் அடிக்கப்பட்டவனுக்கும் கற்றறிந்தவர்கள் பரிகாரம் செய்கின்றார்கள். அதுவும் ஸத்தியமாகக் காணப்படுகிறது. இவ்வாறான நடையை அறிந்தவனான நீ பேசாமலிரு. அல்லது, இவ்விஷயத்தில் மறுமொழியாவது கூறு. ஸ்திரீகள் சாராயத்தினால் மதிமயக்கங்கொண்டு துணிகளை அவிழ்த்தெறிந்துவிட்டுக் கூத்தாடுகிறார்கள். அந்த ஸ்திரீகள் இஷ்டப்பட்ட புருஷர்களுடன் சேர்க்கைபெற்றவர்களாகக் காம ஸுகத்தை அனுபவிப்பதில் பற்றுதலுள்வர்களாயிருக்கின்றார்கள். அவர்களுடைய புத்திரனான மத்திரகன் எவ்வாறு தர்மத்தைச் சொல்லுவதற்குத் தகுந்தவனாவான்? எந்த ஸ்திரீகள் ஒட்டகங்கள்போலவும் கழுதைகள்போலவும் நின்றுகொண்டே மூத்திரத்தை விடுகின்றார்களோ, தர்மத்தினின்று தவறினவர்களும் அந்த அந்தக் காரியங்களில் லஜ்ஜையற்றவர்களுமான அந்த ஸ்திரீகளுடைய புத்திரனான நீ இப்பொழுது தர்மத்தைச் சொல்லுவதற்கு விரும்புகிறாய். கஞ்சியை வேண்டப்பட்டவளான மத்திரதேசத்து ஸ்திரீயானவள் பின் தட்டுகளைச் சொறிந்துகொள்ளுகிறாள். கஞ்சி கொடுப்பதற்குப் பிரியமற்ற மத்திரதேசத்து ஸ்திரீ, 'எனக்குப் பிரியமான கஞ்சியை என்னிடத்தினின்று ஒருவனும் கேட்கவேண்டாம். பிள்ளையைக் கொடுப்பேன்; புருஷனைக் கொடுப்பேன்; கஞ்சியை யெனின் நான் கொடேன்' என்று குரூரமான இவ்வித வசனத்தைச் சொல்லுகிறாள். மத்திர தேசத்துப் பெண்கள் பெரும்பான்மையாக ருதுவாகாதவர்களும் பருத்த உருவமுள்ளவர்களும் வெட்கமற்றவர்களும் கம்பளியினால் மூடப்பட்டவர்களும் பெருந்தீனியுள்ளவர்க

ளும் சௌசாசாரத்தை விட்டவர்களுமாயிருக்கிறார்களென்று கேட்டிருக்கிறோம். ஜலமலங்களை விட்டுவிட்டுப் பிருஷ்டத்தைப் பூமியில் தேய்த்துவிட்டுச் சௌசமற்றவர்களாக இருக்கின்றார்கள். ஜலங்களாலும் மண்களாலும் சுத்தியாகாத அந்த ஸ்திரீகள் நித்தியம் உச்சிஷ்டர்களாகவே ஆகின்றார்கள். மயிர்நுனி தொடங்கி நகநுனி வரையில் நிந்திக்கத்தக்கவைகளும் அருவருக்கத்தக்கவைகளுமான செய்கைகளுள் இவ்விதமான அநேக விஷயங்கள் மத்திர ஸ்திரீகளைப்பற்றி என்னாலும் மற்றவர்களாலும் சொல்லத்தக்கனவாகும். பாப தேசத்தில் தோன்றினவர்களும் மிலேச்சர்களும் தர்மங்களை அறிவதில் திறமையற்றவர்களுமான மத்திரகர்களும் ஸிந்து தேசத்து ஜனங்களும் ஸௌவீரர்களும் எவ்விதமாக இவ்வுலகில் தர்மத்தை அறிவார்கள்? போரிலடிக்கப்பட்டுச் சாய்வதென்பது க்ஷத்திரியனுக்கு ஸாதுக்களால் நன்றாகப் புகழப்பட்ட மிக முக்கியமான தர்மமென்று நாம் கேட்டிருக்கிறோம். மரணத்தினால் வீர ஸ்வர்க்கத்தை விரும்புகின்ற எனக்கு யுத்தத்தில் நான் ஆயுதங்களைப் பிரயோகிக்கவேண்டுமென்பதுதான் முக்கியமான விருப்பம். புத்திசாலியும் திருதராஷ்டிர குமாரனுமான துரியோதனனுக்கு அப்படிப்பட்ட நான் பிரிய ஸகாவாயிருக்கிறேன். என்னுடைய உயிரும் என்னுடைய பொருளனைத்தும் அவனுக்காகவே. பாப தேசத்தில் தோன்றியவனே! நம் விஷயத்தில் நீ எல்லாவகையாலும் சத்துருவைப்போலப் பிரவர்த்திப்பதனால் நீ பாண்டவர்களால் வசப்படுத்தப்பட்டவனென்பது வெளிப்படை. நாஸ்திகர்களால் தர்மஜ்ஞனை வெல்லமுடியாததுபோல உன்னைப் போன்ற நூறு பேராலுங்கூட என்னைப்போரில் வெல்ல எவ்விதத்தினாலும் முடியாது. வெப்பத்தினால் துன்புறுத்தப்பட்ட மான்போல நீ இஷ்டப்படி புலம்பு; வறட்சியடை; க்ஷத்திரிய தர்மத்தில் நிலைபெற்றவனை நான் பயமுறுத்தப்பட முடியாதவன். ஆசாரியரான பரசுராமராலே யுத்தங்களில் திரும்பாதவர்களும் சரீரத்தை விடுகின்றவர்களுமான புருஷசிரேஷ்டர்களுக்கு எந்தக் கதி உண்டென்று அன்புடன் சொல்லப்பட்டதோ அந்தக் கதியை நான் நினைக்கிறேன். என்னை உத்தமமான புரூரவாவின் ஒழுக்கத்தில் நிலைபெற்றவனென்றும், சேர்ந்தவர்களைக் காப்பதற்கும் பகைவர்களைக் கொல்வதற்கும் முயல்கின்றவனென்றும், நல்ல ஒழுக்கத்தில் நிலைபெற்றவனென்றும் நீ அறிவாயாக. மத்திரநாத! என்னை இந்த அபிப்பிராயத்தினின்று தடுக்கும் பிராணியை நான் மூவுலகிலும் காணவில்லை. இவ்விதம் என்னுடைய எண்ணம். இவ்வாறாகத்

தெரிந்துகொண்டு நீ பேசாமலிரு. பயத்தினால் ஏன் பல வார்த்தைகளைப் பேசுகிறாய்? மத்திரகர்களுள் இழிவானவனே! உன்னைக் கொன்று புலாலுண்பவருக்குக் கொடேன். சல்ய! திருதராஷ்டிரன் துரயோதனன் இருவருக்கும் நண்பனென்கிற எண்ணம், ஸாரதியைக் கொன்றானென்னும் அபவாதம், பொறுமை இம் மூன்றாலும் நீ ஜீவித்திருக்கிறாய். மத்திர நாத! மறுபடியும் இவ்வாறான வாக்கியத்தை நீ உரைப்பாயாகில் உன் தலையை வஜ்ரத்துக்கு ஒப்பான கதாயுதத்தினாலே கீழே விழும்படி செய்வேன். இழிவான தேசத்தில் பிறந்தவனே! 'கிருஷ்ணனும் அர்ஜுனனுமாவது கர்ணனைக் கொன்றார்கள்; அல்லது, கர்ணனாவது அவர்களைக் கொன்றான்' என்கிற இந்த விஷயத்தை இப்பொழுது கேட்பவர்கள் நேரில் பார்க்கவும் போகின்றனர்' என்றான். அரசரே! ராதேயன் இவ்வாறு சொல்லிவிட்டு, மறுபடியும் மத்திர ராஜனைப் பார்த்துப் பரபரப்பில்லாதவனாகி, 'போ, போ' என்று சொன்னான்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்

(சல்யன் அன்னத்தையும் காக்கையையும்பற்றிய கதையைச் சொல்லியது.)

பெரியவரே! சல்யன், போரில் மகிழ்கின்றவனும் அதிரத புத்திரனுமான கர்ணனுடைய வார்த்தைகளைக் கேட்டு ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக் காட்டிக்கொண்டு மீண்டும் கர்ணனை நோக்கிக் கூறலானான். 'தர்மத்தை முதன்மையாகக்கொண்டவர்களும், விதிப்படி யாகஞ்செய்கிறவர்களும் யுத்தங்களில் திரும்பாதவர்களும் முடிசூட்டப்பட்டவர்களுமான மன்னர்களுடைய வம்சத்தில் பிறந்தவன். கர்ண! சாராயத்தால் மதங்கொண்டவன் எவ்வாறிருப்பானோ அவ்வாறு நீ காணப்படுகிறாய். ஆதலால், புத்தித் தவறுள்ளவனான உனக்கு இப்பொழுது ஸ்நேகத்தினால் சிகிச்சை செய்யப்போகிறேன். கர்ண! என்னால் உரைக்கப்படும் உபமானமாகிய இந்தக் காக்கைக் கதையை நீ தெரிந்துகொள் நீசனே! குலத்தில் இழிந்தவனே! கேட்ட பிறகு, உன் இஷ்டப்படி செய். கர்ண! மிக்க புஜபலமுள்ளவனே! நிரபராதியான என்னை நீ கொல்ல விரும்புகிறதற்கேற்ற பாவமானது என்னிடத்தில் சிறிதுமில்லை என்று நான் எண்ணுகிறேன். ரதத்திலிருக்கின்றவனும் விசேஷமாக அரசனுக்கு நன்மையை விரும்புகின்றவனுமான நான் ஹிதாஹிதங்களை அறிந்து அவசியம் உனக்கு உரைக்க

வேண்டும். இந்த ரதத்துக்குத் தலைவனுன என்ருல், (எதிரியின் பலத்தோடு) ஸமமாகவும் ஏற்றத்தாழ்வாகவுமிருக்கின்ற ரதிகனுடைய பலாபலமும் எப்பொழுதும் தேராளி குதிரைகளுடைய சிரமமும் துயரமும் ஆயுதத்தினுடைய அறிவும் மிருக பக்ஷிகளுடைய சப்தமும் பாணங்களுடைய ஸாராஸாரமும் பரிஹாரமும் அஸ்திரப்பிரயோகமும் யுத்தமும் அவ்வாறே நிமித்தங்களும் ஆகிய அனைத்தும் அறியத்தக்கன. கர்ண! ஆதலால், உனக்கு நிதர்சனமாக ஒரு விஷயத்தை நான் உரைக்கப்போகிறேன். கடற்கரையில் அதிகமான தனதான்யங்களையுடையவனும் யாகஞ்செய்பவனும் (சிறந்த) கொடையாளியும் பொறுமையுள்ளவனுமான ஒரு வைசியன் தனக்குரிய தர்மங்களில் நிலைபெற்றுச் சுத்தனுயிருந்தான். அநேக புத்திரர்களையுடையவனும் குழந்தைகளிடத்தில் அன்புடையவனும் எல்லாப் பிராணிகளிடத்திலும் தயையுடையவனுமான அந்த வைசியன், தர்மத்தைப் பிரதானமாகக்கொண்ட அரசனுடைய நாட்டில் பயமற்றவனுக வாசஞ்செய்துவந்தான். கீர்த்தியுடையவர்களும் சிறுவர்களுமான அவனுடைய அநேக புத்திரர்களுடைய எச்சிலை ஒரு காக்கையானது (தினந்தோறும்) புசித்துவந்தது. வைசிய புத்திரர்களான சிறுவர்கள் அந்தக் காகத்துக்கு மாமிசத்தையும் சோற்றையும் தயிரையும் பாலையும் பாயசத்தையும் தேனையும் நெய்யையும் எப்பொழுதும் கொடுத்து வந்தார்கள். வைசியனுடைய புத்திரர்களான சிறுவர்களால் எச்சிலால் வளர்க்கப்பட்ட அக்காகமானது இறுமாப்பை அடைந்து (தன்னை) ஒத்த பறவைகளையும், (தன்னிலும்) மேலான பறவைகளையும் அவமதித்தது. பிறகு அதிகமாகப் பறந்து செல்லும் தன்மையுள்ளவைகளும், செல்வதில் கருடனை ஒத்தவைகளுமான அன்னப்பறவைகள் மனமகிழ்ச்சியோடு கடற்கரையோரத்தில் சென்றுகொண்டிருந்தன. அப்பொழுது வைசிய குமாரர்கள், ஹம்ஸங்களைப் பார்த்துப் பிறகு காகத்தை நோக்கி, 'பறவையே! நீயே (மற்ற) பறவைகளைக்காட்டிலும் மேன்மை பெற்றிருக்கிருய். ஆகாயத்தை நாடி வெகுதூரம் பறந்துசெல்லுகின்ற இந்தப் பக்ஷிகளைப் பார். இங்கே வா. நீயும் சக்தியுள்ளவனன்ருே? ஏன் நீ பறக்கவில்லை?' என்று சொன்னுர்கள். அற்ப புத்தியையுடையவர்களான அவர்களனைவர்களாலும் ஏமாற்றப்படுகின்ற பக்ஷியானது மூர்க்கத்தனத்தினுலும் இறுமாப்பிலும் அவர்களுடைய வார்த்தையை உண்மையென்றே நினைத்தது. எச்சிலைத் தின்பதனுல் கர்வமுள்ளதும் கெட்ட புத்தியுடையதுமான அந்தக் காகமானது

'இந்தப்பக்ஷிகளுள் எது மேன்மையுடையது?' என்று அப்பக்ஷிகளை அனுஸரித்துச் சென்று அறிய எண்ணங்கொண்டதாக, ஒன்று சேர்ந்து வெகுதூரத்தில் பறக்கின்ற அந்த அநேக அன்னப்பறவைகளுள் எதைச் சிறந்ததென்று நினைத்ததோ அந்தப் பறவையை நோக்கி, 'பறந்துசெல்வோம்' என்று அழைத்தது. அவ்விடத்தில் வந்திருந்த அன்னப்பறவைகள் அந்த வார்த்தையைக் கேட்டு உரக்கச் சிரித்தன. பக்ஷிகளுள் சிறந்தவைகளான அந்த அன்னப் பறவைகள் பலவாறுகப் பேசுகின்ற காகத்தினுடைய மூர்க்கத் தன்மையினால் அந்தக் காகத்தை நோக்கி இவ்வார்த்தையைக் கூறின: 'நாங்கள், மானஸ தடாகத்தை வாசஸ்தானமாகக் கொண்ட ஹம்ஸங்கள்; பூமியில் சஞ்சரிக்கிறோம். வெகுதூரம் பறக்கும் தன்மையினால் நாங்கள் எப்பொழுதும் பக்ஷிகளுள் பூஜிக்கப்பட்டிருக்கிறோம். கெட்ட புத்தியுள்ளவனே! நீ காகமாயிருந்தும், பலசாலியும் தூரதேசத்தில் பறக்குஞ்சக்தியுள்ளதுமான அன்னப்பறவையைப் பறக்கும் விஷயத்தில் எவ்வாறு அழைக்கிறாய்? காகமே! எங்களோடுகூட நீ எப்படிப் பறப்பாய்? அதைச் சொல்' என்று மொழிந்தன. பிறகு, மூடத்தன்மையுள்ள காகமானது ஹம்ஸங்களுடைய வார்த்தையை அடிக்கடி நிந்தித்து ஜாதிக்குரிய அற்பத்தனத்தினால் தற்புகழ்ச்சி செய்துகொண்டு (அன்னங்களைப் பார்த்து) மறுமொழி கூறியது: 'நூற்றொரு விதமான பக்ஷி கதிகளோடு நான் ஸஞ்சரிப்பேன்; ஸம்சயமில்லை. விசித்திரமாயும் அவ்வாறே பற்பல விதமாயுமிருக்கின்ற ஒவ்வொன்றுக்கும் நூறு நூறு யோஜனை தூரம் பறப்பேன். நான், நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே இப்பொழுது உட்டீனம், அவடீனம், பிரடீனம், டீனம், நிடீனம், ஸம்டீனம், திர்யக்டீனம் என்கிற கதிகளையும் விடீனம், பரிடீனம், பராடீனம், ஸுடீனம், அபிடீனம், மஹாடீனம், நிர்டீனம், அதிடீனம், அவடீனம், பிரடீனம், ஸம்டீனம், டீனடீனம், ஸம்டீனோட்டீனடீனம், மறுபடியும் டீனவிடீனம், ஸம்பாதம், ஸமுதீபம் (என்கிற கதிகளையும்) இவற்றைத் தவிர மற்றும் வேறுள்ள கதிகளையும் கதாகதத்தையும் பிரதிகதத்தையும் அநேகமான நிகுடீனங்களையும் செய்வேன். அப்பொழுது என் பலத்தைப் பார்ப்பீர்கள். அவைகளுள், ஒரு கதியினாலே யான் ஆகாயத்தில் பறப்பேன். அன்னங்களே! எவ்விதமான கதியோடு நான் பறக்கவேண்டும்? நியாயமாகக் குறிப்பிடுங்கள். பக்ஷிகளே! அப்படிப்பட்ட நீங்கள் எவ்விதப் பற்றுமில்லாத ஆகாயத்தில் கீழ்ச்சொன்ன கதிகளோடு பறப்பதற்குத் திடமான நிச்சயங்கொண்டு என்னுடன் பறந்து வாருங்கள்'

என்று சொல்லியது. ராதாபுத்திர! காகம் இவ்வாறு சொல்லிய வுடன், ஒரு பக்ஷியானது உரக்கச் சிரித்துக் காகத்தைப் பார்த்துக் கூறிய வார்த்தையை என்னிடத்தினின்று நீ தெரிந்துகொள். அன்னம், 'காகமே! நீ நிச்சயமாய் நூற்றொரு கதிகளோடு பறக்கிறவன். எல்லாப் பறவைகளும் எந்த ஒரே கதியை அறிகின்ற னவோ அந்த ஒரு கதியுடன் நான் பறப்பேன்; மற்றொன்றையும் நான் அறியேன்' என்றது. காகம், 'அன்னமே! எந்தக் கதியுடன் பறந்து செல்வதற்கு நினைக்கிறாயோ அந்தக் கதியை அனுஸரித்து நீயும் விரைவாகப் பறந்து செல்' என்றது. பிறகு, அங்கு ஒன்று சேர்ந்திருக்கின்ற அன்னங்களெல்லாம், 'காகமே! ஹம்ஸமானது ஒரே ஒரு கதியினால் நூறு கதியுள்ள உன்னை எவ்வாறு ஜயிக்கும்? நீ ஒரு கதியினாலேயே இந்த அன்னத்தை ஜயித்துவிடுவாய்' என்று காக்கையைப் பரிஹாஸஞ் செய்தன. ஹம்ஸமும் உயரப் பறக்க ஆரம்பித்தது. பலசாலியும், சுறுசுறுப்பும் மிக்க திறமைவாய்ந்தது மான காகமும் பறக்க ஆரம்பித்தது. பிறகு, அந்த அன்னமும் காக மும் மகரங்களுக்கிருப்பிடமான ஸமுத்திரத்துக்கு மேலே மேலே ஒன்றை ஒன்று மிஞ்சும் எண்ணத்துடன் வேகமாகப் பறந்தன. வேகமுள்ளவைகளான ஹம்ஸம் காகம் இரண்டும் ஸ்பர்த்தை யுடன் கூடியவைகளாக (முறையே) ஒரு கதியுடனும் நூறு வித மான கதிகளுடனும் ஆகாயத்தை அடைந்து விரைவாகப் பறந் தன. ஸூதபுத்திர! ஹம்ஸமோ மெதுவான ஒரு கதியினாலே பறப்பதற்கு ஆரம்பித்தது; அந்தக் காகமோ அந்த ஹம்ஸத்துக்கு முந்தி வேகமாகப் பறக்கத் தொடங்கியது. காகமும் ஒரு முகூர்த்த காலம் வரையில் ஹம்ஸத்துக்குக் குறையவில்லை. அது சாபல்யத் தினால் சீக்கிரமாகப் பறக்கும் சக்தியைக் காண்பித்துக்கொண்டு வேகத்தாலே ஹம்ஸத்தைத் தாண்டிச் சென்று மீண்டும் அடிக்கடி திரும்பிவந்தது. காகம் இடமாகச் சென்றுகொண்டு அந்த அன்னப் பறவையை மூக்கினால் கொத்தியது; அடிக்கடி சத்தமிட்டுக் கொண்டு அந்த அன்னத்தை அழைத்தது. காகம் கதிகளாலே (பார்க்கும் பறவைகளை) ஆச்சரியமடையும்படி செய்ய நினைத்துத் தன்னுடைய செய்கையைக் காண்பித்தது. பிறகு, விசித்திரமான (காகத்தினுடைய) அந்தக் கதிகளையும் மற்றவைகளையுங் கண்டு மிக்க மனக்களிப்படைந்த காக்கைகள் மிக்க இரைச்சலோடு கத்தின. அன்னங்களும் தங்களைச் சேர்ந்த அன்னப்பறவைக்கு ஜயத்தை விரும்பினவைகளாகப் பற்பல சப்தங்களை வெளியிட்டுக் கொண்டு காகத்தைப் பரிஹஸித்தன; பிரியமான வாக்குகளையும்

எடுத்துக் கூறின. அந்த அன்னங்கள் மேலே பறந்து பறந்து, 'ஒரு முகூர்த்த காலம், ஒரு முகூர்த்த காலம்' என்றும் கூறின; மரங்களுடைய நுனிகளினின்று இறங்கின; தரைகளினின்று மேலாகவும் பறந்தன. காகமானது, அந்த அன்னத்தை அவமதித்து இந்த வார்த்தையைக் கூறியது. 'மேலே பறந்து வருகிற இந்த ஹம்ஸமே தோல்வியடைகிறது' என்றது. பிறகு, பக்ஷிகளுள் சிறந்ததும் பொறுமையற்றதுமான ஹம்ஸமோ அவ்வார்த்தையைக் கேட்டுச் சிறகுகளை உதறிக்கொண்டு ஆகாயத்தில் பிரவேசித்து மேற்குத் திக்கை நோக்கி வேகத்துடன் பறந்தது; அநேக ஜந்துக்களால் வியாபிக்கப்பட்டதும் அலைகளால் பயங்கரமான காட்சியுள்ளதும் மகரங்களுக்கு இருப்பிடமுமான ஸமுத்திரத்திற்கு மேல் மேலாக வேகத்தோடு பறந்து சென்றது. ராதேய! பிறகு, காகமானது அதிசீக்கிரத்தில் வேகத்தினால் குறைவடைந்தது. பிறகு, மிக்க களைப்படைந்து அதிக சிரமத்துடன் அன்னத்தைப் பின்தொடர்ந்தது.

கர்ண! பிரஜ்ஞையை இழந்த அந்தக் காகத்தைத் தீவிரமாகப் பயமும் வந்து அடைந்தது. ச்ரமத்தினால் பீடிக்கப்பட்ட காகமானது இளைப்பாறுவதின்பொருட்டு மரங்களுள்ள தீவுகளைப் பார்த்துக்கொண்டே, 'இளைப்படைந்திருக்கின்ற நான் எந்த விடத்தில் இறங்குவேன்? கடலோ அநேக ஜந்து ஸமூகங்களுக்கு இருப்பிடமானது; பெரிது; அனேகம் பிராணிகளால் அதிகமாகப் பிரகாசிக்கின்றது. ஆகாயத்தைக் காட்டிலும் விசேஷித்திருக்கிறது' என்று சிந்தித்துக்கொண்டே அந்த ஜல ஸமுத்திரத்தில் விழுந்துவிட்டது. இழிகுலத்தில் பிறந்தவனே! கர்ண! பண்டிதர்களும், ஆழத்தினால் ஸமுத்திரத்திற்கு உண்டாயிருக்கிற விசேஷத்தையும் சமுத்திர ஜலத்தில் வியாபித்திருக்கிற திக்குக்களுடைய பரிமாணத்தையும் முடிவில்லாமையால் அறிகிறார்களில்லை. கர்ண! காக்கை எப்படி அறியும்? பிறகு, அன்னமும் காகத்தைத் தாண்டி நெடுந்தூரம் சென்று ஒரு முகூர்த்த காலம் பறந்து அந்தக் காகத்தை நன்றாக உற்றுப் பார்த்தது. அன்னப்பறவை, மெல்ல மெல்லக் குறைவுபட்டதும் இளைப்படைந்ததும் பிரஜ்ஞையற்றதுமான அந்தக் காகத்தைப் பார்த்துத் திரும்பி வந்து சிரித்துக்கொண்டு, அப்பொழுது வேகம் குறைந்து மெதுவான கதியுடன்கூடின அந்தக் காகத்தைக் கண்டு உரக்கச் சிரித்து, ஸத்புருஷர்களுடைய விரதத்தை நினைத்துக்கொண்டு, நீரில் மூழ்குகின்ற காகத்தைக் கரையேற்றிவிட எண்ணி யதார்த்தமான சில வார்த்தைகளைக் கூறியது. 'காகமே!

நீ அடிக்கடி பற்பல கதிகளையும் சொல்லிக்கொண்டு ப்ரமத்தைச் சொல்லாமலே பறந்தாய். அதனால் (என்னைக் குறித்து) நிந்தைச் சொற்களைப் பேசினாய். இப்பொழுது நீ இரண்டு சிறகுகளாலும் மூக்கினாலும் அடிக்கடி ஜலத்தைத் தொட்டுக்கொண்டு பறப்பதான இது எவ்விதமான கதி? காகமே! நன்றாகச் சொல். இப்பொழுது இருக்கும் உன்னுடைய கதியானது எவ்விதமானது? காகமே! நீ சீக்கிரமாக வா; வா. இதோ நான் உன்னைப் பாதுகாக்கிறேன்' என்றது. அதிகமாக இளைப்படைந்ததும் துன்பமுற்றதுமான அந்தக் காகமானது இரண்டு சிறகுகளாலும் மூக்கினாலும் அப்பொழுது ஜலத்தைத் தொட்டுக்கொண்டு சீக்கிரமாக (ஸமுத்திரத்தில்) விழுந்துவிட்டது. ஸமுத்திர ஜலத்தில் விழுந்து பிரஜ்ஞையற்று உயிரை யிழக்கும் நிலைமையிலிருக்கின்ற அந்தக் காகத்தைக் கண்டு ஹம்ஸமானது இந்த வாக்கியத்தை உரைக்கலாயிற்று: 'காகமே! நூற்றொரு கதிகளுடன் நான் பறப்பேன்' என்று தற்புகழ்ச்சி செய்துகொண்டு பேசினாயன்றோ? என்னைக்காட்டிலும் மேற்பட்டவனாக நூற்றொரு கதிகளோடு செல்லுகின்ற நீ ஏன் இவ்வாறு களைப்படைந்து பெருங்கடலில் விழுந்துவிட்டாய்?' என்றது. பிறகு காகமானது, மனவருத்தமுற்று அப்பொழுது மேலே செல்லுகின்ற அந்த அன்னப்பறவையைப் பார்த்துக் கிருபைவரும்படி செய்துகொண்டு, 'அன்னமே! எச்சில் உணவினாலே நான் போஷிக்கப்பட்டவன்; கொழுப்பினாலே அதிக கர்வங்கொண்டவன்; குத்ஸிதமான புத்தியினாலும் சிறு பிள்ளைகளுக்குள்ள லாகவத்தாலும் என்னைக் கருடன்போல எண்ணிக்கொண்டுவிட்டேன். நான் உன்னைச் சரணமடைந்தேன். ஜலக்கரை ஓரத்தை நான் அடையவேண்டும். இப்பொழுது, களைத்திருக்கிற என்னை ஆபத்திினின்று தூக்கிவிடு. நான் மறுபடியும் பிழைத்து என்னுடைய இருப்பிடத்தை அடைவேனானால் மீண்டும் அற்பமாயிருந்தாலும் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற பக்ஷியை இவ்வாறு அலக்ஷியம் செய்யமாட்டேன்' என்று இவ்விதமான வார்த்தையை மறுமொழியாகக் கூறியது. இவ்வாறு மனம் உருகும்படி தீனமாகப் புலம்புகின்றதும், பிரஜ்ஞையை இழந்ததும், 'கா, கா, கா' என்று கத்துகின்றதும் மகாசமுத்திரத்தில் மூழ்குகின்றதுமான அந்தக் காகத்தைக் கண்டு கருணை மிகுந்த அந்த அன்னமானது துராத்மாவான அதனிடத்தில் கருணையைப் பாராட்டியது. பிறகு, தைன்யமுற்றதும் ஜலத்தில் நனைந்ததும் பிரஜ்ஞையற்றதும் நடுக்கமுற்றதுமான அந்தப் பக்ஷியை அப்பொழுது இரு கால்களாலும் தூக்கித் தன் முதுகில் ஏற்றிவைத்துக்கொண்டது. கர்ண!

அந்த அன்னப்பறவை மெய்ம்மறந்திருக்கின்ற காகத்தை முதுகில் ஏற்றிவைத்துக்கொண்டு எந்த விடத்தினின்று ஸ்பர்த்தையுடன் பறந்தனவோ அந்தவிடத்துக்கு அப்பொழுது கர்வமில்லாமல் மீண்டும் கொண்டுவந்து சேர்த்தது. விட்டுவிட்டு, மறுபடியும் நீ இவ்வாறு செய்யலாகாது' என்று சொல்லிற்று. அன்னமானது, களைத்திருக்கின்ற அந்தக் காக்கையை மறுபடியும் திட்டில் கொண்டுவந்து விட்டும் ஸமாதானம்செய்தும் மனம்போல விரைவாகச் சென்று இஷ்டமான இடத்தை யடைந்தது. கர்ண! இவ்வாறு எச்சிலைத் தின்று கொழுத்திருக்கின்ற அந்தக் காகம் ஹம்சத்தினால் தோல்வி அடைவிக்கப்பட்டதாகி அதிகமான பலத்தினாலும் வீரியத்தினாலும் உண்டான கர்வத்தைவிட்டுப்பொறுமையையடைந்தது. வைசியன் வீட்டில் முற்காலத்தில் எச்சிலைத் தின்றுவந்த காக்கைபோல நீ தார்த்தராஷ்டிரர்களாலே உச்சிஷ்டங்களால் போஷிக்கப்பட்டவன்; ஸம்சயமில்லை. கர்ண! சமானர்களாகவும் மேற்பட்டவர்களாகவும் இருக்கின்ற அனைவர்களையும் நீ அவமதிக்கிறாய். துரோணர், அஸ்வத்தாமா, கிருபர், பீஷ்மர் இவர்களாலும் மற்ற கௌரவர்களாலும் ரக்ஷிக்கப்பட்ட நீ அப்பொழுது விராடநகரத்தில் ஏகாகியான அர்ஜுனனை ஏன் கொல்லவில்லை? யுத்தத்தில் சிங்கத்தினால் நரிகள் வெல்லப்படுவதுபோலக் கிரீடியினால் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தவர்களாகவும் நீங்கள் வெல்லப்பட்டபொழுது உன்னுடைய வீரியம் எங்கே சென்றிருந்தது? யுத்தத்தில் ஸவ்யஸாசியினால் உன் தம்பி கொல்லப்பட்டதைப் பார்த்துக் கௌரவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே முதலில் நீ ஓடினாய். கர்ண! அவ்வாறே, த்வைதவனத்தில் கந்தர்வர்களாலே நன்றாக எதிர்த்துத் தாக்கப்பட்ட கௌரவர்களையும் அவர்கள் மனைவிகளையும் விட்டுவிட்டு நீயே முந்தி ஓடினாய். கர்ண! பார்த்தன் யுத்தத்தில் சித்ரசேனன் முதலான கந்தர்வர்களைக் கொன்றும் வென்றும் துரியோதனனையும் அவன் தம்பியர்களையும் விடுவித்தான். கர்ண! புராதனமான பார்த்தனுடையதும் கேசவனுடையதுமான பிரபாவமானது மீண்டும் பரசுராமரால் கௌரவர்களிருக்கும் சபையில் சொல்லப்பட்டது. கிருஷ்ணனும் அர்ஜுனனும் கொல்லத்தகாதவர்களென்று அரசர்களுடைய மத்தியில் துரோணரும் பீஷ்மரும் சொல்லிய வசனத்தை எப்பொழுதும் நீ கேட்டிருக்கிறாய். எல்லாப் பிராணிகளையும் காட்டிலும் பிராமணன் சிறந்தவனாய் இருப்பது போல உன்னைக்காட்டிலும் தனஞ்சயன் எந்த எந்த விஷயத்தினால் மேற்பட்டவனென்னும் விஷயத்தில் எவ்வளவை நானுரைப்பேன்?

பிரதானமான தேரில் வீற்றிருக்கின்ற வஸுதேவ புத்திரனை கிருஷ்ணனையும் குந்திபுத்திரனை தனஞ்சயனையும் இப்பொழுதே பார்க்கப்போகிறாய். காக்கையானது எவ்வாறு நல்ல புத்தியை அடைந்து அன்னத்தை ஆச்ரயித்ததோ அவ்வாறே நீயும் விருஷ்ணிகுலத்தில் பிறந்த கிருஷ்ணனையும் பாண்டு புத்திரனை தனஞ்சயனையும் ஆச்ரயிப்பாயாக. கர்ண! எப்பொழுது நீ யுத்தரங்கத்தில் ஒரு ரதத்தின் மீதுள்ள பராக்கிரமசாலிகளான வாஸுதேவனையும் தனஞ்யனையும் பார்ப்பாயோ அப்பொழுது இம்மாதிரி பேசமாட்டாய். எப்பொழுது பார்த்தன் அனேக பாணங்களால் உன் கொழுப்பை அழிப்பனோ அப்பொழுது உனக்கும் அர்ஜுனனுக்குமுள்ள தாரதம்மியத்தை நீ கண்டறிந்து கொள்வாய். புருஷச்ரேஷ்டர்களான எந்த இருவர்களும் தேவாஸுரமனுஷ்யர்களில் பிரஸித்திபெற்றிருக்கிறார்களோ அவர்களை மின்மினிப்பூச்சியானது ஸூர்யசந்திரர்களை அவமதிப்பதுபோல மூர்க்கத்தனத்தால் நீ அவமதிக்காதே. ஸூர்யசந்திரர்கள் எப்படியோ அப்படியே அர்ஜுனனும் கேசவனும் வெளிப்படையாக நான்கு பக்கத்திலும் பிரஸித்திபெற்றவர்கள். நீயோ மனிதர்களுள் மின்மினிப்பூச்சி போன்றவன். ஸூதபுத்திர! மனிதர்களுள் நாய்போலிருக்கின்ற நீ இவ்விதமிருப்பதை அறிந்து புருஷர்களுள் சிங்கங்களான அச்சுதனையும் அர்ஜுனனையும் அவமதிக்காதே; பேசாமலிரு. ஏன் புகழ்ந்துகொள்ளுகிறாய்?' என்று கூறினான்.

முப்பத்தாறுவது அத்தியாயம்

(கர்ணன் சல்யனை நோக்கித் தனக்குப் பரசுராமரிடத்தினின்றும் ஒரு பிராம்மணனிடத்தினின்றும் சாபம் நேர்ந்ததை எடுத்துக் கூறியது.)

மஹாத்மாவும் அதிரதபுத்திரனுமான கர்ணன், சல்யனுடைய அப்பிரியமான வார்த்தையைக்கேட்டு ஊக்கத்தை இழந்து சல்யனை நோக்கி,'கிருஷ்ணார்ஜுனர்கள் எப்படிப்பட்டவர்களென்பது எனக்குத் தெரியும். சல்ய! அர்ஜுனனுடைய தேரை ஓட்டுகின்ற கிருஷ்ணனுடைய பலத்தையும் பாண்டுகுமாரனை அர்ஜுனனுடைய பலத்தையும் மஹாஸ்திரங்களையும் நான் இப்பொழுது உள்ளபடி அறிகிறேன். அந்த விஷயம் உனக்கு நேரில் தெரியாது. சஸ்திரங்களைத் தரித்தவர்களுள் சிறந்தவர்களான அந்தக் கிருஷ்ணார்ஜுனர்களை நான் பயமில்லாமல் எதிர்த்து யுத்தம்செய்வேன். பரசுராம

ரிடத்தினின்றும் ஒரு பிராம்மணோத்தமரிடத்தினின்றும் நேர்ந்த சாபங்கள் இப்பொழுது என்னை அதிகமாகத்தபிக்கச் செய்கின்றன. சல்ய! முற்காலத்தில் ஸமுத்திரத்திலுள்ள உத்தமமானமஹேந்திர பர்வதத்தில்தவஞ்செய்துகொண்டிருந்த பரசுராமரைக் கபடமாகப் பிராம்மண வேஷத்தோடு அடுத்து, 'அஸ்திரங்களை யாசிக்கின்ற என்னை இப்பொழுது சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளும்' என்று சொன்னேன். பிராம்மணனல்லாதவனான நான், பிரம்மாஸ்திரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்கிற பேரவாவால் பொய்யாகப் பிராம்மணனென்று சொல்லிக்கொண்டு அந்த இடத்தில் வாஸஞ் செய்தேன். ஜமதக்னிகுமாரரான பரசுராமரால் அந்த மஹாஸ்திரமானது மந்திரங்களோடு எனக்கு உபதேசிக்கப்பட்டது. எப்பொழுது அந்த அஸ்திரம் என்னால் அறியப்பட்டதோ அப்பொழுது பிராம்மணரான மஹரிஷியானவர் என்னைப்பார்த்து, 'யுத்தத்தில் செல்லுகின்ற உனக்கு ஆபத்து நேருமானால் அப்பொழுது இந்த அஸ்திரம் பிரயோகிக்கத்தக்கது; போ' என்று சொன்னார். சல்ய! பல்குனனுக்கே நன்மையை விரும்புகின்ற தேவராஜன் விகாரரூபமுள்ள ஒரு புழுவினுடைய சரீரத்தில் பிரவேசித்து, என்னுடைய தொடையை அடைந்து குடைந்தபடியால் அதிலும் எனக்கு இடையூறைச் செய்தான். அந்தத் தொடையில் தலையை வைத்து ஆசாரியர் தூங்கிக்கொண்டிருக்கையில், புழுவானது என் தொடையை அடைந்து குடைந்தது. தொடை பிளக்கப்பட்டபடியால் என் சரீரத்தினின்று ரத்தவெள்ளமானது தாரையாகப் பெருகியது. நான் ஆசாரியரிடத்திலுள்ள பயத்தினால் அசைவற்றிருந்தேன். பிறகு, விழித்துக்கொண்ட அந்தப் பிராம்மணர் (இரத்தம் பெருகுவதைக்) கண்டார். அவர், தைரியத்துடன் கூடிய என்னை உற்றுப்பார்த்து, 'நீ பிராம்மணனல்லை. வேறு யார்? உண்மையைச் சொல்' என்று வினவினார். சல்ய! அவரிடத்தில் அப்பொழுது நான் ஸூதனென்றே உண்மையை உரைத்தேன். பிறகு, மிக்க தவமுள்ளவரான அந்தப் பரசுராமர் என்னைப் பார்த்து மனத்தில் ரோஷமிக்கவராகி, 'ஸூத! உன்னால் அடையப்பட்ட இந்தப் பிரம்மாஸ்திரம் உன் பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுகிற தருணத்தில் தோன்றாமல் போகுக. உனக்கு மரண காலத்தைத் தவிர மற்றகாலத்திலோ உன்னிடத்திலிருக்கும். பிராம்மணனல்லாதவனிடத்தில் வேதமந்திரம் நிலைபெற்றிராது' என்று சபித்தார். நேர்ந்திருக்கின்ற கைகலந்த இந்தயுத்தத்தில் இப்பொழுது எனக்கு அந்த அஸ்திரமானது உதவிசெய்வதற்கு மிகவும் போதுமானது.

சல்ய! உக்கிரமான வில்லையுடையவனும் மிக்க பெருமையுள்ள வனும் பலசாலியும் பயங்கரனும் சகிக்கத்தகாத வீரியமுடையவனும் யுத்தத்தில் ஸத்தியமான பிரதிஜ்ஞையுடையவனும் பாண்டு புத்தி ரனுமான தனஞ்சயனை மிருத்யுவினுடைய வாயை அடையும்படி நான் செய்வேன். பரசுராமரால் கொடுக்கப்பட்டிருக்கிற அஸ்தி ரத்தைத் தவிர, யுத்தத்தில் பகைவர்களை நாசஞ்செய்யக்கூடிய வேறோர் அஸ்திரமும் இப்போது என்னிடமிருக்கிறது. பிரதாப சாலியும் பலசாலியும் அஸ்திரத்தில் பயிற்சியுள்ளவனும் உக்கிர மான வில்லையுடையவனும் அளவற்ற தேஜஸை யுடையவனும் குரூரனும் சூரனும் பயங்கரனும் பகைவர்களை எதிர்த்துத் தாக்குப வனுமான தனஞ்சயனை யுத்தத்தில் நான் கொல்லப்போகிறேன். அநேக பிரஜைகளை முழுகச் செய்வதும் வேகமுள்ளதும் மனத்தி னுல் எண்ண முடியாததும் ஜலங்களுக்குப் பதியும் பேரொலியிடு வதுமான கடலைக் கரை தடுப்பதுபோல நான் எண்ணமுடியாத வீரியமுடையவனை அர்ஜுனனைத் தடுக்கப்போகிறேன். மனத் தினுல் எண்ணமுடியாதவைகளும் மர்மஸ்தானங்களை அறுப்பவை களும் வீரர்களைக் கொல்லுகின்றவைகளும் நல்ல சிறகுகளையுடைய வைகளுமான பாணசமூகங்களைப் பிரயோகிக்கின்றவனும் மனுஷ்யலோகத்தில் நாண்கயிற்றை இழுப்பவர்களுள் உத்தமனு மான குந்தீபுத்திரனை யுத்தத்தில் எதிர்த்துப் போர்புரியப்போகி றேன். இவ்விதமான பலத்தையுடைய நான், அதிக பலமுள்ளவ னும் மஹாஸ்திரங்களையுடைவனும் கடலுக்கொப்பானவனும் எவ் விதத்தாலும் ஒருவராலும் அணுகமுடியாதவனும் உக்கிர சுரூபி யும் பாண சமூகங்களையுடையவனும் பகையரசர்களை அழிப்ப வனுமான பார்த்தனைக் கடலைக் கரை தடுப்பதுபோலப் பாணங்க ளால் தடுக்கப்போகிறேன், ஸமர்த்தனும் அஸ்திரப் பயிற்சியுள்ள வனும் உறுதியான கையையுடைய வீரர்களோடு போர் புரிபவ னும் திவ்யாஸ்திரங்களை அறிந்தவனும் வெண்மையான குதிரை களையுடையவனும் (பகைவர்களை) நாசஞ்செய்பவனுமான எவன் யுத்தத்தில் தேவாஸுரர்களை ஜயிப்பானே அவனுடன் எனக்கு இப்பொழுது நேரப்போகிற மிக்க கோரமான யுத்தத்தைப் பார். பயமில்லாதவனும் அகங்காரமுடையவனும் யுத்தத்தில் விருப்ப முள்ளவனுமான பாண்டவன் மனிதர்களால் அடைதற்கரிய மகா அஸ்திரங்களாலே என்னை அடிக்கப்போகிறான். அவனுடைய அஸ்திரத்தை அஸ்திரங்களால் அவமதித்து உத்தமமான பாணங் களால் அவனை யுத்தத்தில் தள்ளப்போகிறேன். ஜ்வலிக்கின்ற வனும் எல்லாத் திக்குக்களையும் மிகத் தபிக்கச் செய்கின்றவனும்

உக்கிர ஸ்வரூபியும் இருட்டை விலக்குகின்றவனுமான சூரியனை மேகம் மூடுவதுபோல, சூரியனுக்கு ஒப்பான தனஞ்சயனைப் பாணங்களாலே அதிகமாக மூடப்போகிறேன். புகையைக் கொடியாகக் கொண்டதும் ஜ்வலிக்கின்றதும் தேஜஸையுடையதும் வைச்வாநரம் என்று சொல்லப்படுகிறதுமான அக்நிபோன்றவனும் நரவீரர்களை எரிப்பவனுமான அர்ஜுனனை, நான் மேகம்போன்றவனாகி, யுத்தத்தில் பாணவர்ஷங்களால் தணிக்கப்போகிறேன். பார்வையினாலேயே கொல்லுகின்றதும் மிக்க கோரமானதும் அதிகக் கூர்மையுள்ள விஷப்பல்லுள்ளதும் அக்நியுடைய பிரபாவம்போன்ற பிரபாவத்தையுடையதும் கோபத்தினால் ஜ்வலிக்கின்ற நெருப்புப்போல் எரிகின்றதுமான குந்தீபுத்திரனாகிற ஸர்ப்பத்தைப் பல்லங்களால் தணிக்கப்போகிறேன். சென்றுகொண்டிருக்கின்றதும் சிறந்த பலமுள்ளதும் அதிகமான வீரியமுள்ளதும் மிகுதியாக முறித்துத் தள்ளுகின்றதும் மிகக் கொடியதுமான காற்றை இமயமலை தாங்குவதுபோலக் கடுஞ்சினமுள்ளவனும் பகைவர்களைப் பொருதவனுமான தனஞ்சயனை யுத்தத்தில் நான் அசையாமலிருந்துகொண்டு எதிர்த்துத் தாங்கப்போகிறேன். ரதமார்க்கங்களில் ஸாமர்த்தியமுள்ளவனும் சக்தியுள்ளவனும் எப்பொழுதும் பாரத்தைப் பொறுப்பவனும் யுத்தங்களில் சிறந்த வீரனும் உலகத்தில் எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவனுமான தனஞ்சயனை யுத்தத்தில் நான் கொல்லப்போகிறேன். இப்பொழுது யுத்தத்தில் அவனுக்குச் சமமாக விற்பிடிக்கின்ற வேறொரு மனிதனிருப்பதாக நான் எண்ணவில்லை. இந்தப் பூமிமுழுமையும் எதிர்த்தாலும் தாங்கக் கூடியவனான அவனோடு இப்பொழுது நான் யுத்தத்துக்காக எதிர்க்கப்போகிறேன். காண்டவப் பிரஸ்தத்தில் தேவதைகளுடன்கூடின எல்லாப் பிராணிகளையும் ஜயித்த ஸவ்யஸாசியோடு என்னைத்தவிர உயிரைக் காப்பாற்றுகின்ற வேறு எந்த மனிதன் அஸ்திரங்களால் யுத்தம்செய்ய விரும்புவான்? அர்ஜுனன் கர்வமுள்ளவன்; அஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவன்; நல்ல கைப் பழக்கமுள்ளவர்களோடு போர் புரிபவன்; தேவ ஸம்பந்தம் பெற்ற அஸ்திரங்களை அறிந்தவன்; வெண்ணிறமுள்ள குதிரைகளையுடையவன்; பகைவர்களை முற்றும் அழிப்பவன். அதிரதனான அந்த அர்ஜுனனுடைய தலையைக் கூர்மையுள்ள பாணங்களாலே (அவனுடைய) சரீரத்தினின்று இப்பொழுது நான் கவரப்போகிறேன். சல்ய! யுத்தத்தில் மிருத்யுவையோ, அல்லது ஜயத்தையோ முன்னிட்டுக் கொண்டு இந்தத்தனஞ்சயனை எதிர்த்துப்போர்புரியப்போகிறேன்.

இந்திரனுக்கொப்பான பாண்டவனை ஒரு ரதத்தோடு எதிர்த்துப் போர் புரியக்கூடிய அப்படிப்பட்ட மனிதன் (என்னைத் தவிர) வேறொருவனுமில்லை. என்னைக் கேட்டால், யுத்தத்தில் அந்தப் பாண்டவனுடைய ஆண்மையைக் குறித்து அரசர்களுடைய ஸபையில் சொல்வேன். மூர்க்கனும் மூடபுத்தியுள்ளவனுமான நீ அட்டஹாஸம்செய்துகொண்டு பல்குனனுடைய பௌருஷத்தை எனக்கு ஏன் சொல்லுகிறாய்? மிக்க அபிப்பிராயத்தைச் செய்பவனும் குரூரனும் அற்பனும் பொறுமையுடையவர்களை அவமதிப்பவனும் பொறாமையுள்ளவனுமான உன்னைப்போன்ற அனேக மனிதர்களை நான் கொல்வேன். பொறுமையுடையவர்களுக்கு இது காலம். நான் பொறுக்கிறேன். பாவச் செய்கையையுடையவனே! நீ மூடன்போல் என்னை அவமதித்துக்கொண்டு பாண்டவனுக்குப் பிரியமான வார்த்தைகளைச் சொன்னாய். ருசுவான புத்தியுடையவனான என்னிடத்தில் நீ என்ன காரணத்தினால் கொடிய மனமுள்ளவனும் மித்திரத்துரோகியுமாகிவிட்டாய்? [1] ஏழு வார்த்தை சொல்வதினாலே ஸ்நேகம் ஏற்படுகிறதன்றோ? துரியோதனன் யுத்தத்துக்கு வந்துவிட்டமையால் இந்தக் காலமானது குரூர சுருபமுள்ளதாகநெருங்கி வருகிறது. அவனுடைய காரியஸித்தியை விரும்பி எந்தச் சமயத்தில் நிச்சயமாக ஜயமுண்டாகுமோ அந்த ஸமயத்தைத் தேடுகிறேன். அப்படியிருந்தாலும் நான் பாண்டவனையும் வாஸுதேவனையும் யுத்தத்தில் எதிர்த்துப் போர்புரியப் போகிறேன்; (இது) என்னைப் போன்றவனுடைய காரியம். அற்பனாயிருப்பவனும் கிருஷ்ணார்ஜுனர்களிருவரையும் எதிர்ப்பதற்கு ஒருநாளும் ஆயத்தமாகமாட்டான். நேசத்தாலும் ஸந்தோஷப்படுத்துவதாலும் பிரீதியினாலும் ரக்ஷணத்தினாலும் கௌரவிப்பதினாலும் உடன்மகிழ்தலாலும் மித்திரம் என்கிற சொல் ஏற்படுகிறது. இவையெல்லாம் எனக்குத் துரியோதனன் விஷயத்தில் இருக்கின்றன. என்னிடத்திலுள்ள அவையெல்லாவற்றையும் அரசன் அறிகிறான். அழிப்பதனாலும் கட்டளையிடுவதினாலும் இளைக்கச் செய்வதினாலும் ஹிம்ஸையினாலும் பெருமூச்சுவிடச் செய்வதினாலும் வாடச்செய்வதாலும் ப்ரமத்தை உண்டுபண்ணுவதினாலும் சோகத்தை உண்டுபண்ணுவதாலும் மிகுதியாக நாசத்தை யுண்டுபண்ணுவதாலும் சத்துரு என்கிற சொல் ஏற்படுகிறது. பெரும்பான்மையாக அவையனைத்தும் உன்னிடத்திலும் என்னிடத்திலும் உள்ளன. ஆதலால், நான் துரியோதனனுக்காவும் உன்

[1] 'ஸாப்தபதம்' என்பது மூலம் 'ஏழு அடி நடப்பதனால்' எனினுமாம்.

னுடைய பிரீதிக்காகவும் புகழுக்காகவும் மனத்தின் திருப்திக்காக வும் ஈஶ்வரனுக்காகவும் முயற்சியுடன் பாண்டவனோடும் வாஸு தேவனோடும் போர் புரியப்போகிறேன். என்னுடைய செய்கையை இப்பொழுது பார். சல்ய! நான் இப்பொழுது பாண்டவனை எதிர்த்து எவ்விதத்திலாவது உயிரோடு விடப்படுவேனாகில் அந்த யுத்தத்தினின்று விடுபட்டவனான நான் நிச்சயமாக எப்பொழுதும் யமனுக்கு அவமதிக்கத்தகாத ரூபமுள்ளவனாவேன். கோபமுள்ள ஸவ்யசாசி எப்பொழுது பிரம்மாஸ்திரத்தை மனத்தினால் நன்றாக ஜபித்துக்கொண்டு பிரயோகிப்பனோ அப்பொழுதும் என்னுடைய தேர்ச் சக்கரமானது பூமியில் அழுந்தாமலிருக்குமானால் அவன் இன்று என்னால் விடப்படமாட்டான். யுத்தத்தில் செல்லுகின்ற பிரம்ம ஸம்பந்தம் பெற்றவையும் தேவஸம்பந்தம் பெற்றவையும் மனுஷ்யஸம்பந்தம் பெற்றவையுமான அஸ்திரங்களை அடித்து மதப்பெருக்குக் கொண்ட ஒரு யானை மற்றொரு சிறந்த யானையை எதிர்ப்பதுபோல உக்கிரமான வீரியமுள்ள அர்ஜுனனை நான் எதிர்க்கப்போகிறேன். சல்ய! காலதண்டத்தைக் கையில்கொண்ட யமனிடத்தினின்றாவது பாசத்தையுடைய வருணனிடத்தினின்றா வது கதாயுதத்தையுடைய குபேரனிடத்தினின்றாவது வஜ்ராயுதத் தையுடைய தேவராஜனிடத்தினின்றாவது இன்னும் வேறு தேவ தையினிடத்தினின்றாவது ஆயுதத்தைக் கையிற்கொண்டு கொல்ல வருகின்ற சத்துருவினிடத்தினின்றாவது நிச்சயமாக நான் பயப்பட மாட்டேனென்று நீ தெரிந்துகொள். ஆதலால், எனக்குப் பார்த்த னிடத்தினின்றாவது ஜனார்த்தனனிடத்தினின்றாவது பயம் இல்லை. எனக்கு அவ்விருவர்களோடும் யுத்தரங்கத்தில் கடும்போர் நடக் கப்போகின்றது. 'யுத்தரங்கத்தில் போர் புரிகின்றவனும் ஒரு வீரனிடத்தினின்று பயத்தை அடைந்திருக்கின்றவனுமான உன்னு டைய தேர்ச் சக்கரமானது குழியில் அழுந்துக' என்று என்னை நோக்கி ஒரு பிராமணன் சொல்லியிருக்கிறான். அப்படிப்பட்ட பிராம்மணனுடைய வாக்கியத்தினின்று நான் அதிகமாகப் பய மடைகிறேன். இந்தப் பிராமணர்கள் சுகதுக்கங்களுக்கு அதிகாரி களல்லரோ? ராஜனே! நான் ஒரு சமயத்தில், சாபாநுக்ரக சக்தியுள்ள ஒரு பிராமணனுடைய ஹோமதேனுவின் கன்றின் மீது தெரியாத்தன்மையால் கோரசுரூபமுள்ளதும் பயங்கரமு மான அம்பைப் பிரயோகஞ் செய்துவிட்டேன். பிறகு, அஜாக்ர தையுடனிருந்த ஹோமதேனுவின் கன்றானது பாணத்தாலடிக்கப் பட்டுவிட்டது. சல்ய! அதனால், ஜனங்களில்லாத காட்டில்

ஸஞ்சரிக்கின்ற அந்தப் பிராம்மணன், (என்னை நோக்கி), ராஜனே ராதயே! இவ்விடத்தில் உன்னால் ஹோமதேனுவின் கன்று கொல்லப்பட்டமையால், நீயும் மிக்க துன்பந்தரும் கடுஞ்சொல்லைக் கேட்பாயாக. மரணம் நேரக்கூடிய ஆபத்காலத்தை நீ அடைந்திருக்கும்போது, சத்துருவோடு போர்புரிகின்ற உன்னுடைய ரதத்தின் சக்கரமானது குழியில் விழப்போகிறது. ஸூத! எவனோடு யுத்தத்தில் நீ போட்டி போடுகிறாயோ, எவனை வெல்ல எப்பொழுதும் முயற்சி செய்துகொண்டிருக்கிறாயோ அவனிடத்திலிருந்தே நிச்சயமாக யுத்தத்தில் மரணமடையப் போகிறாய்' என்று சொன்னான். அப்பொழுது நான் தீவிரமான விரதத்தையுடைய அந்தப் பிராம்மணனைப் பார்த்து அவனுக்கு ஆயிரம் பசுமாடுகளையும், பொருளையும் ஸ்வர்ணங்களால் நன்றாக மூடப்பட்ட அறுநூறு காளைகளையும், ஸ்வர்ணாபரணங்களைக் கண்டத்திலணிந்த நூறு தாஸிகளையும், பெண் கோவேறு கழுதை பூட்டப்பட்ட நூறு ரதங்களையும், ஸ்வர்ணாபரணங்களைக் கழுத்திலணிந்தவர்களும் நன்றாக அலங்கரிக்கப்பட்டவர்களுமான ஆயிரம் கன்னிகைகளையும் ஏர்க்கால் போன்ற தந்தங்களுள்ள அனேக யானைகளையும் அனேக தாஸிகளையும் அனேக தாஸர்களையும் கொடுக்கிறேனென்று சொல்லிக் கருணைபுரியும்படி வேண்டினேன். அந்தப் பிராம்மணோத்தமன் அவைகளாலும் என் விஷயத்தில் அனுக்கிரகம் செய்யவில்லை. வெண்ணிறமுள்ள கன்றுகளையுடைய ஆயிரத்துநானூறு காராம்பசுக்களைக் கொடுத்தும் அந்தப் பிராம்மணோத்தமனிடத்தினின்று அனுக்கிரகத்தை நான் பெறவில்லை. 'என்னுடையவைகளான மற்ற எந்தப் பொருளையும் உமக்கு அதீனமாகச் செய்கிறேன்' என்று வேண்டியும் என்னைப் பிராம்மணன் மறுத்துவிட்டான். சல்ய! குரோதத்தினால் ஜ்வலிக்கின்ற கண்களுடன் கூடிய அந்தப் பிராம்மணன் கண்ணினால் எரிக்கின்றவன்போல் (என்னைப் பார்த்து), 'ஸூத! என்னால் எது சொல்லப்பட்டதோ அது அவ்வாறே ஆகும்; அது வேறாகாது. பொய்யான வசனமானது ஸந்ததியை அழிக்கும். அதனால் பாவத்தையும் அடைவேன். ஆதலால், தர்மத்தைப் பாதுகாப்பதின்பொருட்டுப் பொய்யைச் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. நீ பிராம்மணனுக்குரிய கதியைக் கெடுக்காதே. உன்னால் பிராயச்சித்தம் செய்யப்பட்டுவிட்டது. ஸூதபுத்திர! ரோஷத்தையுடைய என்னால் எது சொல்லப்பட்டதோ அந்த என் வாக்கியத்தை உலகத்தில்

ஒருவனும் பொய்யாகச் செய்யமுடியாது. (பயனை) நீ அடை வாயாக. போ! தாமதம் செய்யாதே' என்றான். இவ்விதம் கோபங்கொண்டவனை அந்தப் பிராம்மணோத்தமன் என்னைப் பார்த்து அடிக்கடி சொன்னான். இந்தப் பிராம்மணர்கள் ஸுக துக்கங்களைக் கொடுப்பதில் தலைவர்களன்றோ? சல்ய! நான் அர் ஜுனனிடத்தினின்றும் மதுஸூதனனிடத்தினின்றும் பயப்பட வில்லை. ஸத்தியத்தின்மீது ஆணையிட்டு யான் உனக்குச் சொல்லு கிறேன். அந்தப் பிராம்மண சாபத்தினின்று நான் பயப்படு கிறேன். சல்ய! ஒன்றுசேர்ந்தவர்களான அந்தக் கிருஷ்ணார்ஜு னர்களோடு இதோ யுத்தம் வந்துவிட்டது. இந்த யுத்தத்தில் என் உயிரானது ஸம்சயத்தையும் அடைந்துவிட்டது. தேவ ராஜனான இந்திரனும் அவ்விருவர்களையும் யுத்தம் செய்வதற்காக அணுகினால் அதிக ஸம்சயத்தை அடைவான். நீ எப்படி எண் ணுகிறாய்? அவமதிக்கப்பட்டமையால் என்னால் இவ்விதமான விருத்தாந்தம் உனக்கு உரைக்கப்பட்டது; நேசத்தால் சொல்லப் படவில்லை. நீ நிந்தை செய்கிறவனென்பதை நான் அறிவேன். உன்னிடத்திலுள்ள தோஷத்தைக் கேள்' என்று கூறினான்.

முப்பத்தேழாவது அத்தியாயம்

(கர்ணன் சல்யனைப் பரிகாசத்துடன் நிந்தித்தது.)

மஹாராஜரே! பிறகு, பகைவர்களை அடக்குகிறவனான ராதேயன், மத்ரராஜனைத் தடுத்து மறுபடியும் மறுமொழி கூற லானான். 'சல்ய! என்னை வெருட்டுவதற்காகப் பிதற்றின வார்த்தையினால் போரில் நீ என்னைப் பயமுறுத்த இயலாது. இந்திரனுள்ளிட்ட தேவதைகளெல்லாரும் என்னுடன் போர் புரிந்தாலும் எனக்குப் பயமுண்டாகாது. கேசவனுடன்கூடின பார்த்தனிடம் எங்ஙனம் பயப்படுவேன்? சல்ய! மஹாயுத்தத்தில் சுத்தமான செய்கையுள்ள நான் உன்னால் பயப்படுத்தப்பட முடியாதவன். நீ மற்றவனை யுத்தத்தில் பயப்படுத்துவதற்குச் சக்தி யுள்ளவன் என்று தெரிந்துகொள். நீசனுக்குள்ள பலம் இவ் வளவுதான். ஆகையினால்தான், நீ என்னைப்பற்றிக் கடுமையாகப் பேசுகிறாய். என்னுடைய குணங்களைப் பேசுவதற்கு நீ சக்தி யற்றவனன்றோ? கெட்ட புத்தியுடையவனே! அதனாலேதான், அதிகமாகப் பிதற்றுகிறாய். மத்திரக! கர்ணன் பயப்படுவதற்காக இவ்வுலகத்தில் பிறந்தவனல்லன். நான் பராக்கிரமத்துக்காகவும்

அவ்வாறே என்னுடைய கீர்த்திக்காகவும் பிறந்தவன். சல்ய! ஸக்யம், ஸௌஹார்த்தம், மித்திரபாவம் இம்மூன்று காரணங்களாலும் இப்பொழுது நீ ஜீவித்திருக்கிறாய். சல்ய! திருதராஷ்டிர குமாரனான துரியோதனராஜனுக்கு மிகவும் பெரிதான ஒரு காரியம் நேர்ந்திருக்கிறது. அதுவும், என்னிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் என் (முன்னிலையில்) க்ஷணநேரம் ஜீவித்திருக்கிறாய். நீ செய்யும் அப்ரியமான காரியத்தை நான் பொறுத்துக்கொள்வதாக முந்தியே பிரதிஜ்ஞை செய்திருக்கிறேன். என்னுடைய பிரதிஜ்ஞையைக் காப்பாற்றவேண்டும். ஆதலால், இப்பொழுது நீ ஜீவித்திருக்கிறாய். ஆயிரம் சல்யனில்லாவிட்டாலும் நான் பகைவர்களை ஜயிப்பேன். மித்திரத் துரோகமானது மிக்க பாவமான செயல் என்கிற காரணத்தினால் இப்பொழுது நீ ஜீவித்திருக்கிறாய்' என்று சொன்னான். சல்யன், 'கர்ண! நீ எந்தச் சத்துருக்களைப் பற்றி வருத்தத்துடன் பிதற்றுகிறாயோ அந்தச் சத்துருக்கள் ஆயிரம் கர்ணனாலும் யுத்தத்தில் ஜயிக்க ஸாத்யப்படமாட்டார்கள்' என்று சொன்னான். அவ்வாறாகக் குரூரமாகப் பேசுகின்றவனும் வெறுப்பான தோற்றமுள்ளவனுமான மத்திரநாதனை அப்பொழுது கர்ணன் மறுபடியும் இரண்டுமடங்கு கடுமையாகப் பேசலானான்.

'மத்திரதேசத்திலுள்ள ஜனங்களுக்குத் தலைவனே! திருதராஷ்டிரருடைய ஸந்நிதானத்தில் சொல்லப்பட்டு நான் கேட்ட இந்த விஷயத்தை நீ ஒரே மனத்துடன் கேள். திருதராஷ்டிரருடைய அரண்மனையில் பிராம்மணர்கள் பற்பலதேசங்களையும் ஆச்சரியகரமான ஒழுக்கமுள்ள பண்டைக்காலத்து அரசர்களையும்பற்றிச் சொன்னார்கள். அந்தப் பிராம்மணர்களுள் பிராயம் முதிர்ந்த ஒரு பிராம்மணோத்தமர் பாஹ்லீகர்களையும் மத்திரர்களையும் இகழ்ந்துகொண்டு முன் நடந்த கதை ஸம்பந்தமான வாக்கியத்தை உரைத்தார். இமயமலையினால் விலக்கப்பட்டதும் கங்கையினாலும் ஸரஸ்வதியினாலும் யமுனையினாலும் குருக்ஷேத்திரத்தினாலும் விடப்பட்டதும் ஸிந்து நதியை ஆறாவதாகக்கொண்ட ஐந்து நதிகளின் நடுவிலிருப்பதும் தர்மத்தை விட்டு விலகினதும் அசுத்தமுமான அந்தப் பாஹ்லீகதேசத்தில் இருப்பவர்களையும் மனிதன் விலக்கவேண்டும். ராஜனே! பசு மாடுகளைக் கொல்லுகிற இடமானதால் கோவர்த்தனம் என்கிற பெயருள்ள ஆலமரமும் ஸுபாண்டமென்கிற பட்டணமும் கலி புருஷன் பிரவேசிப்பதற்குரிய வாயில்களென்பதை நான் இளமைதொடங்கியே அறிந்திருக்கிறேன். நான்

பாஹ்லீகதேசத்தில் மிகவும் ரகசியமான ஒரு காரியத்தால் வாஸம் செய்தேன். அங்கு வாஸஞ்செய்ததினால் அவர்களுடைய ஒழுக்கமானது என்னால் அறியப்பட்டது. (அந்தப் பாஹ்லீக தேசத்தில்) சாகலமென்கிற நகரம் இருக்கின்றது; ஙிம்நகை என்கிற நதி இருக்கின்றது; சண்டாளர்களென்கிற பாஹ்லீகர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய நடை மிக இழிவானது. சீலமற்றவர்களான அவர்கள் வெல்லம்சேர்ந்த சாராயத்தைப் பானஞ்செய்துவிட்டு வெங்காயங்களுடன் கோமாமிசத்தையும் பக்ஷிக்கின்றார்கள். அந்தப் பாஹ்லீகர்கள் பணியாரங்களையும் மாவையும் தின்கிறார்கள்; கள்ளையும் குடிக்கிறார்கள். மாதர்கள் குடியினால் மயக்கங்கொண்டு வஸ்திரமில்லாமல் புஷ்ப சந்தனங்களையும் அணிந்து நகரத்தைச் சேர்ந்த கடைத்தெருக்களிலும் தாஸித்தெருக்களிலும் வெளிப்படையாகப் பாடுகின்றார்கள்; ஆடுகின்றார்கள். குடியினால் மதங்கொண்ட அந்தப் பெண்கள் கழுதை ஒட்டகம் இவற்றின் குரல்போன்ற அபஸ்வரமுள்ள கானங்களோடு கூடியவர்களாகவும் புணர்ச்சியில் தம் புருஷர் அயல் புருஷர் என்கிற விவேகமில்லாதவர்களாகவும் எல்லா விதத்தினாலும் தம் இஷ்டப்படி செய்கின்றார்கள். மதத்தினாலே வரம்புகடந்தவர்களான அம்மாதர்கள் ஒருவரோடொருவர் காமக்குறிப்பான வார்த்தைகளை உரக்கச் சொல்லுகின்றார்கள். வ்ராத்யர்களான அந்த ஸ்திரீகள் கட்டுப்படாதவர்களாக, [1] 'ஓ! அடிபட்டவளே! ஓ!' என்றும், 'எஜமானனாலடிபட்டவளே! கணவனாலடிபட்டவளே' என்றும், உரக்கக் கூச்சலிட்டுக்கொண்டு உத்ஸவ தினங்களில் கூத்தாடுகின்றார்கள். கர்வமுள்ளவர்களும் துஷ்டைகளுமான அந்தப் பாஹ்லிக தேசத்து ஸ்திரீகளின் நடுவிலிருந்தவனும் குரு தேசத்தில் (வந்து) வஸித்தவனுமாகிய ஒருவன் அதிக ஸந்தோஷமில்லாத மனத்துடன், 'பருத்த தேகமுடையவளும் வெண்ணிறமுடையவளும் மெல்லிய கம்பளத்தையுடுத்தவளுமான அந்தப் பாஹ்லீக ஸ்திரீயானவள் குருதேசவாஸியான என்னையே நிச்சயமாக நினைத்துக்கொண்டு படுத்திருப்பாள். நான் எப்பொழுது சதத்ருவையும் ரம்யமான அந்த இராவதியையும் கடந்து ஸ்வதேசத்தை அடைந்து பருத்த கணுக்கால்களுள்ள மங்களகரிகளான ஸ்திரீகளைப் பார்ப்பேன்? அந்தப் பாஹ்லீக தேசத்து ஸ்திரீகள் மனோசிலைபோல் பிரகாசிக்கின்ற கடைக்கண்களுள்ளவர்கள்; வெண்ணிறமுடையவர்கள்; இனிமையில்லாத குரலுடன் விளங்காமல் பேசுபவர்கள்; கம்பளியையும் தோலையும் ஆடையாகக் கொண்டவர்கள்;

---

[1] இங்கு வியாக்கியானத்தில் வேறு பொருள் கூறப்பட்டிருக்கிறது.

ரோதனம் செய்பவர்கள்; பிரியமான தோற்றமுள்ளவர்கள்' என்று பாடினன். பாஹ்லீகர்கள், மதங்கொண்டவர்களாக, 'மிருதங்கங்கள் ஆனகங்கள் சங்கங்கள் மத்தளங்கள் ஆகிய இவைகளுடைய சப்தங்களோடும் கழுதைகளோடும் ஒட்டகங்களோடும் கோவேறு கழுதைகளோடும்கூட, வன்னிமரங்களும் பீலுமரங்களும் மூங்கில்களும் அடர்ந்த காடுகளில் நல்லவழிகளில் ஸுகமாகச் செல்வோம். மோருடன் கூடின பணியாரங்களையும் மாவுருண்டைகளையும் சாப்பிடுவோம். மார்க்கங்களில் அதிக பலமுள்ளவர்களாயிருந்து கொண்டுவருகின்ற அனேகம் வழிப்போக்கர்களை அடிப்போம்; துணிகளைப் பிடுங்கிக்கொள்வோம்' என்று பேசுகிறார்கள். இப்படிப்பட்ட ஸ்வபாவமுடையவர்களும் வ்ராத்யர்களும் கெட்ட எண்ணங்கொண்டவர்களுமான பாஹ்லீகரிடத்தில் விவேகமுள்ள எந்த மனிதன் ஒரு முகூர்த்தகாலம் வாஸஞ்செய்வான்? எவர்களுடைய புண்யம் பாவம் இரண்டிலும் ஆறில் ஒரு பாகத்தை நீ பெற்றுக் கொள்ளுகிறாயோ அந்தப் பாஹ்லீகர்கள் இவ்விதமான ஸ்வபாவமுடையவர்களென்றும் வீணான செய்கையுடையவர்களென்றும் பிராம்மணர் கூறினர். ஸாதுவான பிராம்மணர் இவ்வாறு சொல்லிவிட்டுத் துஷ்டர்களான பாஹ்லீகர் விஷயத்தில் மறுபடியும் உத்தரம் சொன்னார்; அதைச் சொல்லுகிறேன்; நீ தெரிந்துகொள். அந்தப் பாஹ்லிக தேசத்தில் செல்வப் பெருக்குள்ள சாகல நகரத்தில் ஒரு ராக்ஷஸி இரவில் துந்துபி வாத்யத்தை அடித்துக்கொண்டு கிருஷ்ண சதுர்த்தசியில் எப்பொழுதும் பாடுகிறாளாம். சாகல நகரத்தில் உங்களுடைய அவ்வித காதைகளை மறுபடியும் எவ்வாறு சொல்வேன்? வெல்லங்கலந்த கள்ளையும் சாரயத்தையும் குடித்துக் கோமாம்சத்தினால் திருப்தியடைந்தவர்களும் வெண்ணிறமுள்ள பருத்த ஸ்திரீகளோடு நன்றாக அலங்கரிக்கப்பட்டவர்களும் வாய் நிரம்ப உள்ளிப்பூண்டை அடக்கிக்கொண்டவர்களும் அநேகவிதமான துர்மாம்சங்களைத் தின்னுகின்றவர்களும் சாராயத்தால்மதங்கொண்டவர்களும் பீலுவிருக்ஷங்களடர்ந்த காட்டில் பாலர்களோடும் வ்ருத்தர்களோடும் கூடியவர்களும், 'பன்றி மாம்சத்தையும் கோழி மாம்சத்தையும் கோ மாம்சத்தையும் கழுதை மாம்சத்தையும் ஒட்டக மாம்சத்தையும் அவல்களையும் தின்னாதவர்களின் பிறப்பானது பயனற்றது' என்று இவ்வாறு பாடுகிறவர்களும் கூச்சலிடுகிறவர்களுமாயிருப்பவர்களுக்குத் தருமம் எப்படி உண்டாகும்? [1] எந்தத் தேசத்

[1] இது வியாக்கியான பாடத்திலில்லை.

தில் உக்கிரர்களான மனிதர்களாலே லோகநாதனும் தேவதேவனும் ஜனார்த்தனனுமான ஸ்ரீ கிருஷ்ணன் மறக்கப்பட்டானே அந்தத் தேசத்தவர்களுக்குத் தர்மம் எவ்வாறு உண்டாகும்? சல்ய! மற்றொரு பிராம்மணன் கௌரவஸபையில் நம்மைப்பார்த்துச்சொல்லியதையும் மறுபடியும் மனக்களிப்புடன் உனக்குச் சொல்லுகிறேன். நீ தெரிந்துகொள். 'பீலு விருக்ஷங்களடர்ந்த காடுகளும் சதத்ரு, விபாசை, ஐராவதி, சந்திரபாகை, விதஸ்தை என்கிற இந்த ஐந்து நதிகளும் ஆறாவதான ஸிந்து மகாநதியும் ஓடுவதும் ஆரட்டர்களென்கிற பாஹ்லீகர்களிருப்பதுமான இடத்தில் மேலோர்வாஸஞ் செய்யமாட்டார். வ்ராத்யர்களாகவும் தாஸமீயர்களாகவும் விதேகர்களாகவும் யாகஞ் செய்யாதவர்களாகவும் தர்மத்தை இழந்தவர்களாகவுமிருக்கின்ற அந்தப் பாஹ்லீகர்களுடைய (ஹவிஸை) தேவர்களும் பிதிர்க்களும் அவ்வாறே பிராமணர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று நாம் கேட்டிருக்கிறோம். கற்றறிந்த பிராம்மணர் ஸாதுக்களுடைய ஸபையில் சொல்லியதையுங் கேள். 'தயையற்றவர்களான பாஹ்லீகர்கள் மாவினாலும் சாராயத்தினாலும் பூசப்பட்டவைகளும் நாயினால் நக்கப்பட்டவைகளுமான மரக்குடங்களிலும் மண் பாண்டங்களிலும் சாப்பிடுகின்றார்கள். பாஹ்லீகர்கள் ஆட்டுப் பாலையும் ஒட்டகப் பாலையும் கழுதைப் பாலையும் குடிக்கின்றார்கள்; அந்தப் பால்களால் பக்குவம் செய்யப்பட்ட வஸ்துக்களையும் தின்கிறார்கள். சல்ய! போஜன பாத்திரங்களைக் கலந்துகொள்ளுகின்றவர்களும் அபசதர்களும் எல்லா அன்னங்களையும் புஜிப்பவர்களும் எல்லாப் பாலையும் குடிப்பவர்களுமான ஆரட்டர்களென்கிற பாஹ்லீகர்கள் கற்றறிந்தவனால் விலக்கத்தக்கவர்களென்று அறிந்துகொள். மேலும், மற்றொரு பிராம்மணன் கௌரவ ஸபையில் என்னை நோக்கிச் சொல்லியதையும் பின்னும் உனக்குச் சொல்லுகிறேன். [1] யுகந்தரத்தில் பாலைக்குடித்து அச்சுதஸ்தலத்தில் போய் வஸித்திருந்து அவ்வாறே பூதிலயத்தில் ஸ்நானம் செய்து ஒருவன் எவ்வாறு ஸ்வர்க்கத்தை அடைவான்? இந்த ஐந்து நதிகள் மலையினின்று வெளிப்பட்டு ஓடு

---

1 'யுகந்தர மென்னும் நகரத்திலிருப்பவர்கள் ஒட்டக முதலியவற்றின் பாலையும் குடிக்கிறார்கள். அச்சுதஸ்தலமென்னும் நகரத்தில் வஸிப்பவர்கள் சேரத்தகாதவர்களையும் சேர்க்கிறார்கள். பூதிலயத்தில் சண்டாளர்களுக்கும் பிராம்மணர்களுக்கும் பொதுவாக ஒரே குளமிருக்கிறது. ஆதலால், இவ்விடங்களில் முறையே பால் குடிப்பவனும், வஸிப்பவனும், ஸ்நானம் செய்பவனும் ஸ்வர்க்கத்தை அடையார்' என்பது பழைய உரையின் கருத்து. வனபர்வம், 470-ம் பக்கம் குறிப்பிலும் பார்க்க.

கின்றதும் ஆரட்டர்களென்கிற பாஹ்லீகர்களிருக்கின்றதுமான தேசத்தில் ஆர்யன் இரண்டு தினங்கள் வாஸஞ் செய்யக்கூடாது. விபாசை என்கிற நதியில் பாஹ்லீகை ஹீகமென்னும் பெண்ணும் ஆணுமான இரண்டு பிசாசுகள் இருக்கின்றன. பாஹ்லீகர்கள் அந்தப் பிசாசங்களுடைய குழந்தைகள். இவர்கள் பிரம்மசிருஷ்டியைச் சேர்ந்தவர்களல்லர். ஈன ஜாதியில் பிறந்தவர்களான அந்தப் பாஹ்லீகர்கள் பற்பல தர்மங்களை எவ்வாறு அறிவார்கள்? தீர்த்தம்தோறும் ஸஞ்சரிக்கின்றவளும் பெரிய உரல்களை மேகலையாக அணிந்தவளுமான ஒரு ராக்ஷஸி, 'காரஸ்கரத்தையும் மாஹிஷகத்தையும் கரம்பத்தையும் கடகாலிக்த்தையும் கர்க்கரத்தையும் வீரகத்தையும் உன்மத்த தேசத்தையும் வீரர்கள் (நேர்ந்தால்) ஓரிரவு வாஸம்செய்து விலக்கவேண்டும்' என்று சொன்னாள். ஆரட்டம் என்கிற அந்தத் தேசமும் பாஹ்லீமென்கிற அந்த வனமும் வஸாதி ஸிந்து ஸௌவீர தேசங்களும் பெரும்பான்மையாக அதிகமாக நிந்திக்கப்பட்டவை.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்

(சல்யனுக்கும் கர்ணனுக்கும் கலகமும், துரியோதனன் அவ்விருவரையும் ஸமாதானம் செய்ததும்)

சல்ய! இந்த விருத்தாந்தத்தை நன்கு தெரிந்துகொள். கஷ்டம்! உனக்கு மறுபடியும் சொல்கிறேன். என்னால் நன்கு உரைக்கப்படுகின்ற இந்த விஷயத்தை நீ ஒரே மனத்துடன் கேள். முற்காலத்தில் ஒரு பிராம்மணன் எங்கள் வீட்டுக்கு விருந்தினனாக வந்தான். அவன், அந்த வீட்டிலுள்ள ஆசாரத்தைப் பார்த்துப் பிரீதியடைந்து, (என்னைப்பார்த்து), 'நான் ஏகாகியாக இமயமலையினுடைய சிகரத்தில் நெடுங்காலம் வாஸஞ் செய்தேன். பற்பல தர்மங்கள் பரவியுள்ள அனேக தேசங்களையும் பார்த்தேன். இந்த ஜனங்கள் ஒரு தர்மத்தோடும் மாறுபடவில்லை. வேதத்தின் கரைகடந்தவர்களாலே சொல்லப்பட்ட தர்மத்தை எல்லாப்பிரஜைகளும் ஆசரிக்கின்றார்கள். மஹாராஜனே! பற்பல தர்மங்கள் பரவியுள்ள தேசங்களில் ஸஞ்சரித்துக்கொண்டுவரும் நான் பாஹ்லீக நாடுகளில் (ஒரு விஷயம்) கேட்டேன். அந்தப் பாஹ்லீகதேசத்தில் பிராம்மணனாயிருந்து மறுபடியும் க்ஷத்திரியனாகிறான். வைசியனாகவும் சூத்திரனாகவும் இருக்கின்ற பாஹ்லீகன் பிறகு நாவிதனாகிறான்; நாவிதனாயிருந்து மறுபடியும் பிராம்மணனா

கிறான். பிராம்மணனாக இருந்து அந்தத் தேசத்திலேயே மறுபடியும் தாஸனாகிறான். சிஷ்டர்களான பிராம்மணர்களும் ஒரு குலத்தில் காமசாரிகளாயிருக்கின்றார்கள். காந்தாரர்களும் மத்ரகர்களும் பாஹ்லீகர்களும் தேஜஸில்லாதவர்கள். பூமி முழுவதும் ஸஞ்சரித்துவரும் நான் அந்தப் பாஹ்லீக தேசத்தில் இப்படிப்பட்ட ஆசாரக் கலப்பையும் மாறுபாட்டையும் கேட்டேன்' என்றான். சல்ய! வேறொருவன் பாஹ்லீகர்களுடைய இழிவான செய்கையைப்பற்றி உரைத்த வாக்கியத்தையும் உனக்கு மறுபடியும் சொல்லுகிறேன். இதைத் தெரிந்துகொள். அந்தப் பாஹ்லீக தேசத்தில் திருடர்கள், அனுபவிக்கப்படாதவளான ஒரு கன்னிகையை ஆரட்டதேசத்தினின்று கொண்டுவந்து அதர்மத்தினால் அனுபவித்தார்கள். பிறகு, அந்தக் கன்னிகை, அவர்களைப் பார்த்து, 'இளமைப் பருவத்திலிருப்பவளும் பந்துக்களுள்ளவளுமான என்னை அதர்மத்தால் போகித்தீர்களாதலால் உங்களுடைய வம்சங்களில் குமாரிகள் வியபிசாரிகளாவார்கள். நராதமர்களே! கோரமான இந்தச் சாபத்தினின்று நீங்கள் விடுபடமாட்டீர்கள்' என்று சபித்தாள். ஆதலால், அந்தப் பாஹ்லீக நாட்டுத் திருடர்களுடைய பாகத்தைப் பெற்றுக்கொள்ளுகின்ற நீ எவ்வாறு தர்மங்களைப் பேசுவாய்? பாஹ்லீகத்தைத் தவிர மற்ற தேசங்களில் வஸிக்கின்ற அஸத்துக்களும் பெரும்பான்மையாகத் தர்மத்தை அறிகிறார்கள். கௌரவர்களும் பாஞ்சாலர்களும் ஸால்வர்களும் மாத்ஸ்யர்களும் நைமிசர்களும் கோசலர்களும் காசர்களும் பௌண்டிரர்களும் களிங்கர்களும் அவ்வாறே மகதர்களும் மஹாபாக்கியசாலிகளுமான சைத்யர்களும் சாஸ்வதமான தர்மத்தை அறிகிறார்கள். மத்ரர்களையும் கபடிகளான பாஹ்லீகர்களையும் தவிர மாத்ஸ்யர்களும் கௌரவர்களும் பாஞ்சாலர்களும் ஸால்வர்களும் நைமிசம் வரையிலுள்ள சிறந்த ஸாதுக்களான சைத்யர்களும் புராதன தர்மத்தைப் பின்பற்றி ஜீவிக்கின்றார்கள். சல்யராஜனே! இவ்வாறான ஸங்கதியை அறிந்த நீ எப்பொழுதும் தர்மகதைகளில் மௌனமாக இருப்பாயாக. நீ அந்தத் துஷ்ட ஜனங்களை ரக்ஷிக்கிறவன்; அரசன்; அவர்களுடைய புண்யபாவங்களில் ஆறில் ஒரு பாகத்தை நீ பெற்றுக்கொள்பவன்; அல்லது, காவாமலிருப்பாயாகில் நீ அவர்களுடைய பாவத்தைப் பெற்றுக்கொள்பவன். பிரஜைகளை ரக்ஷிக்கின்ற அரசன் அவர்களுடைய புண்யத்தைப் பெறுவான். நீ பிரஜைகளுடைய பாவங்களை அடைபவனாயிருக்கிறாய். முற்காலத்தில் எல்லாத் தேசங்களிலும் அழிவற்ற தர்மமானது பூஜிக்கப்படும்பொழுது பாஹ்லீக தேசத்து ஜனங்களிடத்திலுள்ள தர்மத்தைக் கண்டு

பிரம்மதேவர், 'நிந்திக்கத்தக்கது' என்று கூறினர். வ்ராத்யர்களும் செப்படவனைச்சேர்ந்தவர்களும் கிருதயுகத்தில் கெட்டகார்யத்தைச் செய்கின்றவர்களுமான அவர்களுடைய பிரம்மதேவரால் நிந்திக்கப்பட்ட தர்மங்களை ஒரு ஸித்தபுருஷன் உரைத்தான். பிரம்மதேவர் இவ்வாறு பாஹ்லீகர்களுடைய தர்மத்தை அவமதித்தார். நான்கு ஜாதிக்காரர்களும் தம் தர்மங்களில் நிலைபெற்றிருக்குங் காலத்தில் அந்தப் பிரம்மதேவரும் இவர்களைப் புகழுவில்லை. சல்ய! இதனைத் தெரிந்துகொள். மறுபடியும் உனக்குச் சொல்லுகிறேன். கல்மாஷபாதனென்கிற ராக்ஷஸன் தடாகத்தில் ஸ்நானம் செய்கையில், 'க்ஷத்திரியனுக்குப் பிச்சையெடுப்பது பாபம்; பிராம்மணனுக்குப் படிப்பின்மை பாபம்; பூமிக்குப் பாஹ்லீகர்கள் பாபம்; ஸ்திரீகளுக்குக் குதூகலமானது பாபம்' என்று சொன்னன். ராஜனே! ஓர் அரசன் ஜலத்தில் அமிழ்ந்துகொண்டிருக்கின்ற ராக்ஷஸனை மேலே எடுத்துவிட்டுக் கேட்டான். அவனால் உரைக்கப்பட்டதைக் கேள். 'மனுஷ்யர்களுள் மிலேச்சர்கள் பாபிகள்; மிலேச்சர்களிலும் முஷ்டிகர்கள் பாபிகள்; முஷ்டிகர்களிலும் [1] ஷண்டர்கள் பாபிகள்; ஷண்டர்களிலும் ராஜபுரோஹிதர்கள் பாபிகள். ராஜபுரோஹிதனைச் சிஷ்யனாகக்கொண்டவர்களுக்கும் மத்ரகர்களுக்கும் எந்தப் பாபமுண்டோ அந்தப் பாபமானது, என்னை விடாமலிருந்தால், உனக்கு ஸம்பவிக்கும்' என்றான். இவ்வாருக, ரக்ஷஸுகளால் பீடிக்கப்பட்டவர்கள் விஷயத்திலும் விஷத்தின் வீரியத்தினல் அடிக்கப்பட்டவர்கள் விஷயத்திலும் நன்றாக ஸித்தி அடைந்திருக்கின்ற ஸாதுக்களுடைய வசனத்தினல் மேன்மைபெற்ற மருந்தானது கற்றறிந்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. பாஞ்சாலர்கள் பிரம்மதேஜஸையுடையவர்கள். கௌரவர்கள் தர்மத்தைவிட்டு விலகாதவர்கள். மத்ஸ்ய தேசத்து ஜனங்கள் ஸத்யத்தில் நிலைபெற்றவர்கள். சூரசேனர்கள் யாகஞ்செய்விக்கத்தக்கவர்கள். கீழ்நாட்டிலுள்ளவர்கள் தாஸர்கள். தென்னுட்டிலுள்ளவர்கள் [2] வ்ருஷர்கள். பாஹ்லீகர்கள் திருடர்கள். சுராஷ்டிரர்கள் ஸாங்கர்யமுள்ளவர்கள். எவர்களுக்கு நன்றி மறத்தல், பிறர் பொருளை அபஹரித்தல், சாராயங் குடித்தல், குருபத்னியைப் புணர்தல், கடுஞ் சொல், பசுவைக் கொல்லுதல், திருடுதல் அல்லது பிறர் மனையாளைப் புணர்தல், பிறர்களுடைய வஸ்திரங்களை உடுத்து அனுபவித்தல் ஆகிய இவைகள் தர்மமோ அவர்களுக்கு அதர்மமே இல்லை. ஆரட்ட தேசத்தில் தோன்றியிருப்பவர்களையும் பஞ்சநதம் என்கிற பாஹ்லீக தேசத்து ஜனங்களையும்

---

[1] அலிகள். [2] சாந்தி பர்வம் 304-ம் பக்கம் பார்க்க.

நிந்திக்கவேண்டும். பாஞ்சாலர்களும் கௌரவர்களும் நைமிசர்களும் மாத்ஸ்யர்களும் தர்மத்தையே அனுஸரித்துப் பிழைக்கின்றார்கள். (ஞானத்தினால்) முதிர்ந்தவர்களான வடநாட்டார்களும் சைத்யர்களும் மாகதர்களும் சிஷ்டர்களுடைய தர்மத்தை அனுஸரித்துப் பிழைக்கின்றார்கள். அக்னியை முதன்மையாகக் கொண்ட தேவர்கள் கீழ்த் திசையை அடைந்தார்கள். தெற்குத் திக்கானது பிதிர்க்களாலும் நல்ல தர்மங்களுடன் கூடின யமனாலும் ரக்ஷிக்கப்பட்டது. அனேக அஸுரர்களை ரக்ஷிக்கின்ற வருணன் மேல் திசையைப் பாதுகாக்கிறான். பகவானான குபேரனும் ஈசானரும் பிரம்மதேவரும் பிராம்மணர்களோடு வடதிசையைக் காக்கின்றார்கள். இமயமலையானது ராக்ஷஸர்களையும் பிசாசங்களையும் பாதுகாக்கின்றது. கந்தமாதன பர்வதமானது குஹ்யர்களைக் காக்கின்றது. தேவர்களுள் உத்தமரான ஸ்ரீ விஷ்ணுவானவர் எல்லாப் பிராணிகளையும் பாதுகாக்கிறார்; நிச்சயம். மகதர்கள் இங்கிதத்தினால் அறிகிறவர்கள்; கோஸலர்கள் பார்வையினால் அறிகிறவர்கள்; கௌரவர்களும் பாஞ்சாலர்களும் பாதிசொல்லுவதனால் தெரிந்துகொள்ளுகிறவர்கள்; [1]தென்னாட்டார்கள் முழுதும் சொல்வதனால் தெரிந்துகொள்ளுகிறவர்கள். மலைநாட்டில் வஸிப்பவர்கள் [2]மலைகளைப்போல விஷம ஸ்வபாவமுடையவர்கள். அரசனே! யவனர்கள் எல்லாம் அறிந்தவர்கள். முக்கியமாகச் சூரர்களும் அப்படியே. மிலேச்சர்கள் (சாஸ்திர வழியில் செல்லாமல்) தாங்கள் செய்துகொண்ட கட்டுப்பாட்டிலேயே நிற்பவர்கள். மற்றவர்கள் ஹிதத்தைச் சொல்லாமல் தெரிந்துகொள்ளுவதில்லை. பாஹ்லீகர்களோ குருத்துரோகிகள். மத்ரகர்கள் ஒருவித வகுப்பிலும் சேராதவர்கள்' என்று கூறினான். சல்ய! இப்படிப்பட்ட நீ மறுமொழி சொல்லத் தகுந்தவனல்லை. பாபிகளுள் சிறந்தவனே! இவ்வாறு தெரிந்துகொண்டு நீ பேசாமலிரு. கோபித்து மறுக்காதே. தொடக்கத்தில் உன்னைப் புத்திரர்களோடும் சேனைகளோடும் சேர்த்துக் கொன்ற பிறகு வாஸுதேவனையும் அர்ஜுனனையும் கொல்லப்போகிறேன்' என்று சொன்னான்.

சல்யன், கர்ண! எந்தத் தேசத்தில் வசிக்கின்ற ஜனங்களுக்கு நீ தலைவனாயிருக்கிறாயோ அந்த அங்கதேசத்தில் வியாதியினால் வருந்துகின்ற மனிதர்களைக் காவாமல் விட்டுவிடுவதும் தன் மனைவியையும் புத்திரனையும் விற்பதும் வழக்கமாயிருக்கின்றன. பீஷ்மர்

[1] 'ஸால்வர்கள்' என்பது வியாக்கியான பாடம்.

[2] 'சிபிகளை' என்பது வியாக்கியான பாடம்.

அப்பொழுது ரதிகர்களையும் அதிரதர்களையும் எண்ணுங் காலத்தில் உன்னைப்பற்றிச் சொல்லியவையும் உன்னிடத்திலுள்ளவையுமான தோஷங்களைத் தெரிந்துகொண்டு அற்பத்தனத்தை விட்டுவிடு; கோபங்கொள்ளாதே. எல்லாவிடத்திலும் பிராம்மணர்கள் இருக்கின்றார்கள். எல்லாவிடத்திலும் க்ஷத்திரியர்களும் இருக்கிறார்கள். கர்ண! அவ்வாறே, வைஸ்யர்களும் சூத்திரர்களும் இருக்கின்றார்கள். நல்ல விரதமுள்ள பதிவ்ரதைகளான ஸ்திரீகளும் இருக்கின்றார்கள். தேசந்தோறும் மதங்கொண்டவர்களான புருஷர்கள் புருஷர்களோடு பரிஹஸிக்கும்படியாக அன்யோன்யம் சிற்றின்பத்தில் பற்றுதலுள்ளவர்களாகி மகிழ்கின்றனர். எல்லோரும் எப்பொழுதும் பிறருடைய தோஷங்களை எடுத்துக் கூறுவதில் ஸமர்த்தர்களே; தம் குற்றத்தை அறிகிறவர்களில்லை. அறிந்திருந்தாலும் மோகத்தை அடைகிறார்கள். தத்தம் தர்மத்தில் நிலைபெற்ற அரசர்கள் எல்லா இடத்திலும் இருக்கின்றார்கள். எல்லா இடத்திலும் தர்மத்தை அனுஷ்டிக்கின்ற ஸத்புருஷர்கள் இருக்கின்றார்கள்; கெட்ட மனிதர்களை நிக்ரஹிக்கின்றார்கள். கர்ண! தேசந்தோறும் எல்லாரும் பாவத்தைச் செய்யமாட்டார்கள். மனிதர்கள் தத்தம் ஸ்வபாவத்திற்கேற்றபடி அந்தந்தத் தேசங்களை அறிகிறார்கள்' என்று கூறினான். பிறகு துரியோதன ராஜன் ஸ்நேகத்தால் ராதா புத்திரனான கர்ணனையும் ஸௌஜன்யத்தினால் சல்யனையும் தடுத்தான். பெரியவரே! ராஜேந்திரரே! பிறகு, திருதராஷ்டிர புத்திரனான துரியோதனனாலே தடுக்கப்பட்ட கர்ணன் உரக்கச் சிரித்துக்கொண்டு அச்சமயத்தில், 'சல்ய! போ' என்று ஏவினான்.

முப்பத்தொன்பதாவது அத்தியாயம்

(சல்யனுக்கும் கர்ணனுக்கும் ஸம்வாதமும், இரண்டு சேனைகளும் யுத்தத்துக்கு எதிர்த்ததும்)

பிறகு, கர்ணன், பகைவர்களுடைய படையைப் பிளக்கும்திறமையுள்ளதும் நிகரற்றதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதும் திருஷ்டத்யும்னனால் நான்கு பக்கத்திலும் பாதுகாக்கப்பட்டிருக்கிறதுமான பார்த்தர்களுடைய படையைக் கண்டு, ரதத்தினுடைய சப்தத்தாலும்ஸிம்மநாதத்தின் ஒலியினாலும் நான்குவித வாத்தியங்களுடைய ஓசைகளாலும் பூமியை நடுங்கச்செய்கிறவன்போலச் சென்றான். பிறகு, செல்லுகின்ற ராதாபுத்திரனை மத்ர ராஜனானவன் அவமதித்துப் புன்னகைசெய்து கௌரவர்களுடைய முன்னிலையில் இந்த வாக்கியத்தைக் கூறலானான். 'பெரியதும் நிறைந்ததும்

எண்ணமுடியாததும் குதிரைகளாலும் மனிதர்களாலும் நிரம்பியதுமான உன்னுடைய இந்தச் சேனையை ஜ்வலிக்கின்ற நெருப்பானது உலர்ந்த காட்டை எரிப்பதுபோலத் தனஞ்சயன் யுத்தத்தில் எரித்துக்கொண்டு வரப்போகிறான். நீ இப்பொழுது ரதத்திலிருப்பவர்களும் சிறந்தவர்களும் சிம்மத்தினுடைய தோள்போன்ற தோளை உடையவர்களும் செந்தாமரை மலர்போன்ற கண்களையுடையவர்களுமான சிறந்த இரண்டு வீரர்களையும் பிரயத்தனமில்லாமல் பார்க்கப்போகிறாய். அப்படியே சகுனங்கள் எனக்கு இந்த விஷயத்தைத் தெரிவிக்கின்றன. கர்ண! எவனைப்பற்றி அடிக்கடி நீ கேட்கிறாயோ வெண்மையான குதிரைகளையுடையவனும் கிருஷ்ணனை ஸாரதியாக உடையவனும் யுத்தத்தில் பகைவர்களைக் கொல்லுகின்றவனுமான அந்த வீரனை இப்போது நீ பார்க்கப்போகிறாய். கர்ண! புருஷஸ்ரேஷ்டர்களும் சிவந்த கண்களையுடையவர்களும் சத்துருக்களைத் தபிக்கச் செய்கின்றவர்களும் அளவுகடந்த விக்கிரமமுள்ளவர்களுமான அந்த வாஸுதேவனையும் அர்ஜுனனையும் இப்பொழுது பார்க்கப்போகிறாய். ராதேய! எவனுக்குக் கோவிந்தன் ஸாரதியோ எவனுக்குக் காண்டீவம் வில்லோ அவனை நீ கொல்வாயாகில், நீ எங்களுக்கு அரசனாவாய். இதோ, பெருங்காற்றானது உன்னுடைய சேனைக்கு நாற்புறத்திலும் பலமாக வீசுகிறது. இதோ, ஊனுண்பவைகளான பிராணிகள் கத்துகின்றன. மிருகங்கள் பயங்கரமான சப்தத்தை உண்டுபண்ணுகின்றன. கர்ண! மஹாகோரமாயிருப்பதும் மயிர்க்கூச்சத்தை உண்டுபண்ணுகிறதுமான பயத்தைப் பார். மேகம்போன்ற தலையில்லா முண்டமானது சூரியனைத் தடுத்துக்கொண்டு நிற்கின்றது. எல்லாத் திக்குகளிலும் மிருகங்களுடைய நூற்றுக்கணக்கான கூட்டங்கள் ஜ்வலிக்கின்ற வாலுடன் சூரியனுக்கெதிராக நின்றுகொண்டு கத்துகின்றன; பார். கர்ண! ஆயிரக்கணக்காக ஒன்றுசேர்ந்திருக்கின்ற காக்கைகளையும் கழுகுகளையும் பார். அமங்களகரமான இந்தப் பக்ஷிகள் சப்தத்துடன் சூரியனை எதிராகப் பார்க்கின்றன. கர்ண! வெண்மையான குதிரைகள் கட்டின உன்னுடைய மஹாரதத்திலுள்ள இந்தக் கொடித்துணிகள் மிக விளங்குகின்றன. த்வஜங்களும் மிக நடுங்குகின்றன. பருத்த வுடலுள்ளவைகளும் அதிக வேகமுள்ளவைகளும் மகாவீர்யமுள்ளவைகளும் ஆகாயத்தில் கருடன்களைப் போலப் பறக்கின்றவைகளும் விரைவாகச் செல்லுகின்றவைகளுமான குதிரைகளைப் பார். கர்ண! இந்த நிமித்தங்களால் அரசர்

கள் நூறுநூருகவும் ஆயிரமாயிரமாகவும் அடிக்கப்பட்டு நிச்சயம் பூமியை மறைத்துக்கொண்டு தூங்கப்போகிருர்கள். ராதேய! சங்கங்கள், ஆனகங்கள், அடிக்கப்படுகின்ற மிருதங்கங்கள் இவற்றின் மயிர் பொடித்தலை உண்டுபண்ணுகின்ற நெருங்கிய சப்தம் கேட்கிறது. கர்ண! மனிதர்கள், குதிரைகள், ரதங்கள், ரதத்திலுள்ள குதிரைகள் இவைகளுடைய பற்பலவிதமான சப்தங்களைக் கேள். மஹாத்மாக்களுடைய நாணெலிகளையும் தலத்வனிகளையும் பாண சப்தங்களையும் கேள். கர்ண! பொன் வெள்ளிகளால் இழைக்கப்பட்ட வஸ்திரங்களைக்கொண்டு சிற்பிகளால் அமைக்கப்பட்டவைகளும் பொன்னுலாகிய சந்திரப் பிரதிமைகளாலும் நக்ஷத்திரப்பிரதிமைகளாலும் ஒளி பொருந்தியவைகளும் கிங்கிணிகளோடு கூடியவைகளும் பற்பல வர்ணமுள்ளவைகளுமான இந்த அர்ஜுனனுடைய கொடித்துணிகள் காற்றினல் நன்ருக அசைக்கப்பட்டு மேகத்தில் கொடிமின்னல்கள்போல் யுத்தத்தில் பிரகாசிக்கின்றன; பார். மிக்க பலசாலிகளான பாஞ்சாலர்களுடைய ரதத்தில் நாட்டப்பட்டிருக்கின்ற துணிகளுடன் கூடின கொடிகள் காற்றினல் நன்ருக அசைக்கப்பட்டவைகளாகி, 'கணகண' என்று சப்திக்கின்றன. கர்ண! இதோ மேலே எழுந்த புழுதியானது ஆகாயத்தை மூடிக்கொண்டிருக்கிறது. யானைகளாலும் குதிரைகளாலும் காலால் மிதிக்கப்பட்ட பூமியானது நடுங்குகிறது. அவ்வாறே, மேகத்தின் முழக்கத்துக்கு ஒப்பான ரதசக்ரங்களின் கட்டுக்களாலுண்டாகும் சப்தமானது கேட்கிறது. ஜயிக்கப்படாதவனும் குந்தீபுத்திரனும் வீரனும் அடிக்க எண்ணங்கொண்டு வருகின்றவனும் சிறந்த வானரத்தைக் கொடியாகக் கொண்டவனுமான பீபத்ஸுவைப்பார். யுத்தத்தில் உன்னுடைய யானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் காலாட்களுடைய கூட்டங்களையும் கொல்லுகின்ற அந்த அர்ஜுனனுடைய த்வஜத்தினுடைய நுனி காணப்படுகிறது. நாணெலியும் கேட்கிறது. இந்தப் பலசாலியான அர்ஜுனன் மறுபடியும் அந்த ஸம்சப்தகர்களுக்கு எதிராகவே சென்று யுத்தத்தில் பகைவர்களுக்குத் துன்பத்தைச் செய்கிருன்' என்ருன். இவ்வாறு சொல்லுகின்ற மத்திரராஜனைப் பார்த்துக் கோபமுற்றவனுன கர்ணன், 'சல்ய! கோபங்கொண்ட ஸம்சப்தகர்களாலே நான்கு பக்கத்திலும் நன்ருக எதிர்க்கப்பட்டிருக்கின்ற இந்தப் பார்த்தன் மேகங்களால் மூடப்பட்ட சூரியன்போலக் காணப்படவில்லை; பார். பழக்கப்பட்டவனுன இந்த அர்ஜுனன் சோகஸாகரத்தில் மூழ்கிவிட்டான்' என்று கூறினன். சல்யன், 'வருணனை ஜலத்தால் எவன் அடிப்பான்? எவன் விறகினல் அக்னியை வருத்துவான்? எவன்

வாயுவைக் கட்டிப் பிடிப்பான்? எவன் பெருங்கடலைக் குடிப்பான்? யுத்தத்தில் பார்த்தனுடைய தோல்வியை இத்தன்மையதாக நான் எண்ணுகிறேன். அர்ஜுனன் யுத்தத்தில் தேவாஸுரர்களாலும் ஜயிக்க ஸாத்தியப்படாதவன். அப்படியின்றி இவ்வாறான வாக்குகளாலேயே உனக்கு ஸந்தோஷமுண்டாகுமாகில் நீ இப்படிச் சொல்வதினாலேயே மன அமைதியுள்ளவனாயிரு. பார்த்தன் யுத்தத்தினால் ஜயிக்கமுடியாதவன். வேறுவிஷயத்தில் ஆசை வை. அர்ஜுனன் கோபித்துக்கொள்வானேயாகில் இரண்டு கைகளாலும் பூமியைத் தூக்குவான்; இந்தப் பிரஜைகளை எரித்து விடுவான்; ஸ்வர்க்கத்தினின்று தேவர்களைத் தள்ளிவிடுவான். அவனை யுத்தத்தில் (ஒருவனும்) ஜயிக்கமாட்டான். வீரியமுடையவனும் எளிதில் (யுத்தத்தைச்) செய்பவனும் (பகைவர்களை) அடிக்கிறவனும் நீண்ட கைகளை உடையவனும் மஹாமேருவைப்போல் அசைவற்றிருப்பவனும் குந்திபுத்திரனுமான பீமனைப் பார். புருஷஃரேஷ்டனும் சிறந்த வீரியமுள்ளவனுமான இந்தப் பீமன் எப்பொழுதும் வைரத்தை நினைத்துக்கொண்டு கோபமுள்ளவனாகி யுத்தத்தில் ஜயத்தையடைவதில் விருப்பமுற்று நிற்கிறான். தர்மத்தை அனுஷ்டிப்பவர்களுள் சிறந்தவனும் தர்மராஜனென்று பிரஸித்தி பெற்றவனும் சத்துருபட்டணங்களை ஜயிப்பவனுமான இந்த யுதிஷ்டிரன் யுத்தத்தில் பகைவர்களால் சுலபமாக எதிர்த்துப் போர்புரியத் தகாதவனாக நிற்கிறான். புருஷஃரேஷ்டர்களும் மஹாரதர்களும், அஃவினிதேவர்களுடைய குமாரர்களுமான இந்த நகுல ஸஹதேவர்கள் யுத்தத்தில் ஜயிக்க முடியாதவர்களாக நிற்கின்றார்கள். மஹாவீரியமுள்ளவர்களும் யுத்தத்தில் பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் ஒப்பானவர்களும் திரௌபதி புத்திரர்களுமான ஐவர்கள் யுத்தம் செய்பவர்களாக இதோ ஐந்து மலைகள் போல நிற்கின்றார்கள். த்ருஷ்டத்யும்னனை முதன்மையாகக் கொண்டவர்களும் வீரர்களும் உத்தமமான பராக்கிரமமுடையவர்களும் ஸத்யஜித்தினால் விடுபட்டவர்களுமான த்ருபதனுடைய குமாரர்கள் இதோ நிற்கின்றார்கள். எந்த இடத்தில் வீரர்களான கிருஷ்ணார்ஜுனர்கள் இருக்கின்றார்களோ, எந்த இடத்தில் ராஜாவான யுதிஷ்டிரன் இருக்கிறானோ அந்த இடத்தில் தர்மமும் ஸத்தியமும் இருக்கின்றன. எங்கே தர்மமோ அங்கே ஜயம்' என்றான். புருஷஃரேஷ்டர்களான அவ்விருவர்களும் இவ்வாறு ஸம்வாதம் செய்துகொண்டிருக்கும்பொழுதே அந்த இரண்டு சேனைகளும் கங்கையும் யமுனையும் எதிர்த்ததுபோல நன்றாக எதிர்த்தன.

நாற்பதாவது அத்தியாயம்

(துரியோதனன் சேனையை உத்ஸாஹப்படுத்தியும், பீமன் துரியோதனனை வென்று பிறகு யானைப் படையைக் கொன்றதும்)

பரதச்ரேஷ்டரே! பிறகு, துரியோதனன் கர்ணனையும் மத்திர ராஜனையும் அவ்வாறே மற்ற மஹாரதர்களையும் அடைந்து பின்வருமாறு கூறலானான். 'தற்செயலாக நேர்ந்திருக்கின்ற இந்த யுத்தமானது கவலையற்று அனுஷ்டிக்கத்தக்க தர்மம்; உத்தமமான நேசன். கர்ண! சுகமுடையவர்களான க்ஷத்திரியர்கள் இப்படிப்பட்ட யுத்தத்தை அடைகிறார்கள். ராதேய! யுத்தத்தில், சூரர்களான க்ஷத்திரியர்களோடு போரென்னும் சூதாடுகின்ற சூரர்களுக்கு எப்படிப்பட்ட யுத்தம் இஷ்டமாயிருக்குமோ அந்த யுத்தம் இதோ நேர்ந்துவிட்டது. யுத்தத்தில் பாண்டவர்களைக் கொன்று ஸ்திரமான பூமியை ஆளுங்கள். அல்லது, யுத்தத்தில் சத்துருக்களால் கொல்லப்பட்டு வீரலோகங்களை அடையுங்கள்' என்றான். துரியோதனனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு க்ஷத்திரிய ச்ரேஷ்டர்கள் உரக்க ஸிம்மநாதங்களைச் செய்தார்கள்; பற்பல வாத்தியங்களையும் முழக்கினார்கள். பரதச்ரேஷ்டரே! மிக்க மனக்களிப்புற்ற உம்மைச் சேர்ந்ததான அந்தப் படையில், துரோண குமாரரான அச்வத்தாமா, உம்மைச் சேர்ந்த யுத்த வீரர்களை ஸந்தோஷிக்கச் செய்துகொண்டு, 'எல்லா சைனிகர்களும் நீங்களும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நேரில் சஸ்திரத்தைக் கீழே வைத்திருப்பவரான என் பிதா திருஷ்டத்யும்னனால் வீழ்த்தப்பட்டார். பாரத! அப்படிப்பட்ட நான் அந்த ரோஷத்தால் என் பிதாவுக்காகத் திருஷ்டத்யும்னனைக் கொல்லாமல் கவசத்தைக் கழற்றமாட்டேன். உங்களிடத்தில் பொய்யான பிரதிஜ்ஞையைச் செய்து பெரிதான பயனை அடையவனாகமாட்டேன். அர்ஜுனனையும் பீமசேனனையும் மற்றும் என்னை எதிர்த்துப் போர் புரிபவனையும் நன்றாக நாசஞ் செய்வேனென்பது என்னுடைய நிச்சயமான எண்ணம்' என்று கூறினார். இவ்வாறு சொல்லப்பட்ட பிறகு, பாரதசேனை முழுவதும் ஸந்தோஷமுள்ளதாகக் குந்திபுத்திரர்களை எதிர்த்தது. அவ்வண்ணமே அதனையும் பாண்டவர்கள் எதிர்த்தார்கள். பாரதரே! ஆசைப்படத் தக்க மஹாயுத்தத்தில் ரதயூதபதிகளுக்கு அவ்விதமாகப் பெரிய போர் நடந்தது. கௌரவர்களுக்கும் ஸ்ருஞ்சயர்களுக்கும் முன்னிலையில் காலனால் யுகத்தின் முடிவில் உண்டுபண்ணப்படும் க்ஷயத்துக்கொப்பான ஜன க்ஷயமானது தோன்றிவிட்டது. பிறகு, யுத்தரங்கத்

தில் யுத்தம் நடக்க ஆரம்பிக்கவே, தேவதைகளுள்ளிட்ட எல்லாப் பிராணிகளும் யுத்தத்தில் வீரர்களுடைய கூட்டங்களைப் பார்க்கின்ற அப்ஸரஸ்திரீகளோடு சேர்ந்திருந்தன. யுத்தங்களில் காரியத்தைச் செய்கின்றவர்களும் மிக்க ஊக்கமுடையவர்களுமான புருஷச்ரேஷ்டர்களை அதிக ஸந்தோஷமுள்ளவர்களான அப்ஸரஸுகள் திவ்ய கந்தங்களாலும் உத்தமமான புஷ்பங்களாலும் மற்றப் பற்பல ரத்னங்களாலும் ஆனந்தமடையச் செய்தார்கள். வாயுவானது அந்தக் கந்தங்களைத் தாங்கிக்கொண்டுவந்து அந்தச் சிறந்த யுத்த வீரர்களை உபசரித்தது. காற்றினால் நன்றாக வீசப்படுகின்ற யுத்த வீரர்கள் யுத்தத்தினுடைய மத்தியில் ஒருவரையொருவர் அழைத்தார்கள். சேனையின் மத்தியிலிருக்கிற துரியோதனன் அவ்வாறு கைகலந்த அந்தச் சண்டை ஆரம்பிக்கப்படவே கோபத்தை அடக்குவதற்குச் சக்தியற்றவனாகிப் பீமனை நோக்கி நூறு க்ஷுத்ரங்களென்கிற பாணங்களைப் பிரயோகித்தான். அவ்வாறு எதிர்த்திருக்கின்ற பீமஸேனனைத் துச்சாஸனனும் வீரனான சித்ரஸேனனும் அவ்வாறே உலூகனும் சூதாடியான சகுனியும் நான்கு பக்கத்திலும் யானைப் படைகளோடு விரைவாக எதிர்த்து வந்தார்கள். மிக்க புஜபலமுள்ளவனான பீமஸேனன் வருகின்ற அந்த யானைப்படையைக் கண்டு துரியோதனன் மீது அம்பு மழைகளைப் பொழிந்தான். பிறகு பலசாலியும் பாண்டு புத்திரனுமான பீமன் வஜ்ராயுதத்துக் கொப்பான பாணங்களாலே துரியோதனனைப் புறங்காட்டி ஓடும்படி செய்து யானைகளை எதிர்த்தான். பிறகு, பாண்டவன் நெருப்புப் போன்றவைகளும் நேராகச் செல்லுகின்றவைகளும் விட்டிற்பூச்சிகள் போன்றவைகளும் பயங்கரமுமான அம்புகளால் அந்த யானைகளைப் பீடித்தான். பிறகு, மஹா பலசாலியான பீமஸேனன் யானைக் கூட்டங்களைக் கூர்மையுள்ள பாணங்களால் பெருங் காற்றானது மேகங்களைச் சிதறச் செய்வது போலச் சிதறி ஓடும்படி அடித்தான். வேந்தரே! மதங்கொண்டவைகளும் மதங்கொண்ட வீரர்களால் ஏறப் பெற்றவைகளும் இருப்பு உலக்கையையும் மாவெட்டியையும் கையில்கொண்டு மேலே ஏறியிருக்கின்ற மாவுத்தர்களால் ஸ்வர்ணமயமான விரிப்புக்களாலும் ரத்தினங்களிழைத்த விரிப்புக்களாலும் நன்றாக மூடப்பட்டவைகளும் பொன்னும் வெள்ளியும் போலப் பிரகாசிக்கின்றவைகளும் கத்திகளுடைய சமூகங்களால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான அந்த [1] யானைகள் பீமஸேனனால் விடப்பட்ட அம்புகளால் நாசஞ் செய்யப்பட்டன. சில யானைகள் நெஞ்சம் பிளக்

[1] கூறியது கூறலால் இரண்டு சொற்கள் விடப்பட்டன.

கப்பட்டு அவ்விடத்திலேயே பூமியில் விழுந்தன. மஹாராஜரே! தாதுவர்க்கங்களால் விசித்திரமாயிருக்கிற மலைகளால் பூமி விளங்குவது போல மிக்க வேகமுள்ளவைகளும் பொற்கலன்களால் அலங்கரிக்கப்பட்டவைகளும் விழுகின்றவைகளுமான யானைகளால் (யுத்த பூமியானது) விளங்கியது. மன்னரே! யானையினுடைய முதுகினின்று தள்ளப்பட்டவர்களும் பிரகாசிக்கின்ற ஆபரணங்களுடன் கூடியவர்களும் புண்ணியம் குறைந்த தேவர்கள் போன்றவர்களுமான வீரர்களாலே யுத்த பூமியானது பிரகாசித்தது. வில்லை இழுப்பவனான பீமஸேனனுடைய பெரிய பரிகாயுதம் போன்றவைகளும் சந்தனத்தினாலும் அகிற் சாந்தினாலும் பூசப்பட்டவைகளுமான புஜங்களைக் கண்டேன். இடப்புறமாகவும் வலப்புறமாகவும் பாணங்களைப் பிரயோகிக்கின்ற அந்தப் பீமஸேனனுடைய நாணொலியையும் தலத்வனியையும் கேட்டு யானைகள் பீமஸேனனிடத்தினின்று உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டவைகளாக நான்கு பக்கத்திலும் ஓடின. அரசரே! நிகரில்லாதவனும் புத்திசாலியுமான அந்தப் பீமனுடைய அச்செய்கையைக் கண்டோம். மஹாராஜரே! அது ஆச்சரியமாயிருந்தது.

நாற்பத்தோராவது அத்தியாயம்

(இரண்டு சேனைகளும் அணிவகுத்தது)

பிறகு, கர்ணன், ஒப்பற்றதும் பெரிதும் பகைவர்களுடைய படையைப் பிளக்கின்றதும் திருஷ்டத்யும்னனால் நாற்புறத்திலும் பாதுகாக்கப்பட்டதுமான பார்த்தர்களுடைய அந்தப் படை வகுப்பைப் பார்த்து ரதத்தின் கோஷத்தாலும் ஸிம்மநாதத்தினாலுண்டாகும் ஓசையாலும் பற்பல வாத்தியங்களுடைய கோஷங்களாலும் பூமியை நடுங்கச்செய்கிறவன்போல் எதிர்த்துச்சென்றான். பரதஸ்ரேஷ்டரே! யுத்தத்தில் ஸாமர்த்தியமுள்ளவனும் பகைவர்களைத் தபிக்கச் செய்பவனும் அதிக தேஜஸையுடையவனுமான கர்ணன் சினத்தினால் துடித்துக்கொண்டு முறைப்படி எதிரணி வகுத்து இந்திரன் அஸுர ஸேனையை அழித்ததுபோலப் பாண்டவ சேனையை நாசஞ் செய்தான்; யுதிஷ்டிரரையும் அடித்தான். அவரை இடப்பக்கத்தில் இருப்பவராகவும் செய்தான். கர்ணனுடைய தேரினொலியினாலும் நாண்கயிறு உரைவதினாலும் கடிவாளங்களை நன்றாகப் பிடிக்கும் திறமையினாலும் ஸ்ருஞ்சயர்கள் மிக நடுக்கமுற்றார்கள். ராஜரே! உம்மைச் சேர்ந்த அந்த எல்லாச் சேனைகளும் போர் புரியும் விருப்பத்துடன் கர்ணனைக் கண்டு

மிக்க மனக்களிப்பை அடைந்தன. ராஜரே! பிறகு, 'இப்பொழுது கர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் இதோ பெரிதான யுத்தம் நடக்கப் போகிறது. இப்பொழுது துரியோதன ராஜன் சத்துருக்கள் கொல்லப்பட்டவனாகப்போகிறான். யுத்தத்தில் இப்பொழுது கர்ணனைக் கண்டு பல்குனன் ஓடப்போகிறான். இப்பொழுது நாம் யுத்தத்தில் கர்ணனையே பற்றிநின்று, பயங்கரமான அவனுடைய பாணமயமான யுத்தத்தை யுத்தரங்கத்தில் பார்ப்போம். வெகு காலமாக விரும்பப்பட்ட இந்த யுத்தமானது இன்று இப்பொழுது உண்டாகப்போகிறது. கோரமானதும் தேவாஸுரர்களுடைய யுத்தத்திற்கு ஒப்பானதுமான யுத்தத்தை இப்பொழுது பார்க்கப் போகிறோம். இன்று பயங்கரமான மஹாயுத்தமானது இப்பொழுது உண்டாகப்போகிறது. இன்று யுத்தத்தில் இப்பொழுது ஜயம் உண்டாகப்போகிறது. பிரதி தினமும் ஒருவனுக்கே ஜயம் உண்டாகுமா? ராதேயன் அர்ஜுனனை மஹாயுத்தத்தில் கொல்லப்போகிறானன்றோ? இல்லையேல், உலகத்தில் எந்த மனிதனைத்தான் ஆசை பற்றுகிறதில்லை?' என்கிற உம்மைச் சேர்ந்த யுத்த வீரர்களுடைய வாக்குகள் கேட்கப்பட்டன. குரு நந்தனரே! கௌரவர்கள் இவ்வாறு பற்பல சொற்களைச் சொல்லிக்கொண்டு ஆயிரமாயிரமாகப் படகங்களையும் தூரியங்களையும் அடித்தார்கள். பற்பல விதமான பேரிநாதங்களையும் உரத்த ஸிம்மநாதங்களையும் முரஜங்களுடைய மஹாநாதங்களையும் ஆனகங்களுடைய பெரொலிகளையும் உண்டுபண்ணினார்கள். ஐயா! யுத்தரங்கத்தை அடைந்திருக்கின்ற மனிதர்கள் கூத்தாடுகின்றவர்களாகவும் பலவாறு வெருட்டுகின்றவர்களாகவும் ஒருவரையொருவர் யுத்தத்தில் எதிர்த்தார்கள். அந்த யானைகளுடைய பாதரக்ஷகர்களான காலாட்கள் நாற்புறங்களிலும் பட்டஸங்களையும் கத்திகளையும் தரித்தவர்களும் சௌரியமுள்ளவர்களும் விற்களையும் அம்புகளையும் முசுண்டிகளையும் தரித்தவர்களும் பிண்டிபாலங்களையும் சூலங்களையும் சிறந்த சக்கரங்களையுமுடையவர்களுமாயிருந்தார்கள். கோரமான அவர்களுடைய யுத்தமானது தேவாசுரர்களுடைய யுத்தத்திற்கு ஸமமாயிருந்தது" என்று கூறினான்.

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! த்ருஷ்டத்யும்னனைத் தலைவனாகக் கொண்டவர்களும் யுத்தத்தில் பீமஸேனனால் நாற்புறங்களிலும் பாதுகாக்கப்பட்டவர்களும் சிறந்த வில்லாளிகளும் தேவர்களாலும் ஜயிக்க முடியாதவர்களுமான எல்லாப் பாண்டவர்களையும் நோக்கி, ராதேயன் எவ்வாறு எதிரணி வகுத்தான்? ஸஞ்சய! முறைப்படி நன்றாக அணிவகுத்துக்கொண்டு, நல்ல கவசம் பூண்ட

வர்களான எந்த வீரர்கள் என்னுடைய சேனைக்குப் பக்ஷங்களா கவும் பக்ஷங்களின் நுனிகளாகவும் நின்றார்கள்? பாண்டு புத்தி ரர்களும் என்னைச் சேர்ந்தவர்களை நோக்கி எவ்வாறு எதிரணி வகுத்தார்கள்? மிக்க பயங்கரமான இந்தப் பெரிய யுத்தம் எவ்வாறு தொடங்கியது? கர்ணன் யுதிஷ்டிரனை எதிர்த்துச் சென்ற பொழுது பீபத்ஸுவானவன் எவ்விடத்திலிருந்தான்? அவனுடைய ஸமீபத்தில் யுதிஷ்டிரனை ஜயிப்பதற்கு எவன் வல்லமையுடைய வன்? முற்காலத்தில் எவன் ஒருவனாயிருந்துகொண்டு காண்டவ வனத்தில் எல்லாப் பிராணிகளையும் ஜயித்தானோ அந்த அர்ஜுனனை ராதேயனைத் தவிர உயிருடனிருக்க விரும்புகிற வேறு எவன் எதிர்த்துப் போர் புரிவான்?'' என்று சொல்ல, ஸஞ்சயன் சொல்லத் தொடங்கினான்.

"அணிவகுத்ததையும், அர்ஜுனன் எல்லா அரசர்களையும் நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டு ஸஞ்சரித்ததையும், யுத்தம் நடந்த விதத்தையும் கேளும். அரசரே! சரத்வானுடைய குமார ரான கிருபரும் பலசாலிகளான மாகதர்களும் ஸாத்வதனான கிருதவர்மாவும் வலப்பக்கத்தை அடுத்திருந்தார்கள். அவர்களு டைய பக்ஷத்தின் கோடியில் சகுனியும் மஹாரதனான உலூகனும் பளபளப்பான ஈட்டிகளுடன் கூடின குதிரை வீரர்களோடு அப் பொழுது பாதுகாத்தார்கள். திரும்பாதவர்களும் யுத்தத்தில் சமர்த் தர்களுமான இருபத்துநாலாயிரம் ஸம்சப்தகர்கள் விட்டிற்பூச்சி களுடைய கூட்டங்கள் போன்றவர்களும் பிசாசங்கள் போலப் பார்க்கப் பயங்கரமானவர்களும் கலங்காதவர்களுமான காந்தாரர் களோடும் ஜயிக்க முடியாதவர்களான மலைநாட்டு வீரர்களோடும் (வியூகத்தினுடைய) இடப்பக்கத்தைப் பாதுகாத்தார்கள். கிருஷ்ண னையும் அர்ஜுனனையும் கொல்ல எண்ணங்கொண்டவர்களான யவனர்களுடன் கூடின காம்போஜர்களும் சகர்களும் உம்முடைய புத்திரர்களோடு சேர்ந்து அவர்களுக்குப் பக்ஷங்களின் கோடியில் இருப்பவரானார்கள். ரதங்களுடனும் குதிரைகளுடனும் யானை களுடனும் காலாட்களுடனும் கூடின அந்த வீரர்கள் ஸூத புத்தி ரனுடைய கட்டளையினால் அர்ஜுனனையும் மஹாபலசாலியான கேசவரையும் அழைத்துக்கொண்டு நின்றார்கள். பிறகு, விசித் திரமான கவசத்தையும் தோள்வளைகளையும் அணிந்தவனும் புஷ்ப மாலையைத் தரித்தவனுமான கர்ணன் ஸேனாமுகத்தைப் பாது காத்துக்கொண்டு சேனையின் முன்னணியில் நின்றான். சஸ்திர தாரிகளுள் உத்தமனும் வீரனுமான கர்ணன் ரக்ஷகர்களும் மிக்க

பராபரப்புள்ளவர்களுமான புத்திரர்களோடு சேனையை நடத்திக் கொண்டு படையின் முன்னிலையில் விளங்கினான். மிக்க தோள் வலிமையுள்ளவனும் சூரியனுக்கும் அக்னிக்கும் சமமான காந்தியை யுடையவனுமான அசோகனும், மஞ்சள் நிறமுள்ள கண்களை யுடையவனும் இனிய தோற்றமுள்ளவனும் சேனைகளால் சூழப் பட்டவனுமான துச்சாஸனனும், பெரிய யானையின் கழுத்தின் மீதேறிக்கொண்டு வ்யூகத்தினுடைய பின்புறத்தில் நின்றார்கள். மிக்க கைவன்மையுள்ளவனான அந்தத் துரியோதன ராஜன் ஆச் சரியகரமான குதிரைகளையுடையவர்களும் விசித்திரமான ஸன்னாக முள்ளவர்களுமான ஸஹோதரர்களால் நாற்புறத்திலும் பாதுகாக் கப்பட்டவனாக அந்த வ்யூக மத்தியில் தானே நின்றான். மஹா ராஜரே! மஹாவீரியமுள்ளவர்களும் ஒன்று சேர்ந்தவர்களுமான மத்திரர்களாலும் கேகயர்களாலும் காக்கப்படுகின்ற துரியோ தனன் தேவர்களால் காக்கப்படுகின்ற இந்திரன்போல் விளங்கினான். அச்வத்தாமாவும் கௌரவர்களுள் மஹா ரதர்களான வீரர்களும் தேரேறி யுத்தத்திற்காகச் சென்றார்கள். எப்பொழுதும் மதமுள்ளவைகளும் சூரர்களான மிலேச்சர்க ளோடு கூடியவைகளுமான யானைகள் மழை பொழிந்துகொண் டிருக்கின்ற மேகங்கள் போல் அந்தத் தேர்ப் படையைப் பின் தொடர்ந்து சென்றனர். த்வஜங்களுடனும் [1] வைஜயந்திகளுட னும் ஜ்வலிக்கின்ற உத்தமமான ஆயுதங்களுடனும் ஏறியிருக்கிற மாவுத்தர்களுடனும் இருக்கின்ற அந்த யானைகள் மரங்களுடன் கூடின மலைகள்போல் விளங்கின. பட்டஸங்களையும் கத்திகளை யும் தரித்தவர்களும் திரும்பாதவர்களுமான சூரர்கள் ஆயிரக்கணக் காகச் செல்லுகின்ற யானைகளுக்குப் பாதரக்ஷர்களானார்கள். நன்றாக அலங்கரிக்கப்பட்ட குதிரை வீரர்களாலும் ரதங்களாலும் யானைகளாலும் அந்த உத்தம வ்யூகமானது தேவாஸுரர்களு டைய சேனா வ்யூகத்துக்கு ஒப்பாக விளங்கியது. கற்றறிந்தவ னான ஸேனாபதியினால் நன்றாக ஏற்படுத்தப்பட்ட பார்ஹஸ்பத்ய மென்கிற மஹாவ்யூகமானது பகைவர்களுக்குப் பயத்தை விளை வித்துக்கொண்டு நர்த்தனஞ் செய்கின்றதுபோல் இருந்தது. அந்த மஹாவ்யூகத்தினுடைய இரு பக்கங்களினின்றும் பக்கங்களின் கோடிகளினின்றும் யுத்தஞ்செய்ய விருப்பங்கொண்ட சிறந்த யானைகளும் குதிரைகளும் ரதிகர்களும் வருஷாகாலத்தில் மேகங் கள் போல வெளிப்பட்டனர். பிறகு, கர்ணன் ஸேனாமுகத்திலிருக் கின்றதைப் பார்த்து யுதிஷ்டிரராஜர் பகைவர்களைக் கொல்பவனும்

[1] கொடிகள்

நிகரற்ற வீரனுமான தனஞ்சயனை நோக்கி, 'அர்ஜுன! யுத்தத்தில் கர்ணனால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற மஹா வ்யூகத்தைப் பார். பகைவர்களுடைய படையானது பக்ஷங்களோடும் பக்ஷங்களின் கோடிகளோடும் கூடியதாகப் பிரகாசிக்கின்றது. பகைவர்களை எதிர்த்துப் பக்கத்தில் வந்திருக்கின்ற பெரிதான அப்படிப்பட்ட இந்தச் சேனையானது நம்மை அவமதிக்காதபடியான முறையை நீ செய்யவேண்டும்' என்று சொன்னார். அரசரால் இவ்வாறு சொல்லப்பட்ட அர்ஜுனன், அஞ்சலிபந்தஞ் செய்து கொண்டு அவரைப் பார்த்து, 'நீர் எதை எப்படி சொல்லுகிறீரோ அது அப்படியே ஆகும்; அது வேறுவிதமாகாது. நல்ல விரதமுள்ளவரே! அதற்குத் தக்கதைச் செய்யப்போகிறேன். பிறகு, பிரதானமான இதனுடைய விநாசத்தையும் நான் செய்வேன்' என்று சொன்னான். யுதிஷ்டிரர், '(அர்ஜுன!) அவ்விதமானால் நீ ராதேயனைக் கொல். பீமஸேனன் துரியோதனனைக் கொல்லுக. நகுலன் வ்ருஷஸேனனையும், ஸகதேவன் சகுனியையும், சதானீகன் துச்சாசனனையும், ஸாத்யகி கிருதவர்மாவையும், த்ருஷ்டத்யும்னன் துரோணபுத்திரனையும் கொல்லுக. கிருபருடன் நானே போர் புரியப்போகிறேன். திரௌபதி புத்திரர்கள், சிகண்டியுடன் சேர்ந்து, மீதியிருக்கின்ற தார்த்தராஷ்டிரர்களையும் எதிர்க்கட்டும். என்னைச் சேர்ந்தவர்களான அந்த அந்த வீரர்கள் நம்முடைய அந்த அந்தப் பகைவர்களை ஸம்ஹாரஞ் செய்யட்டும்' என்று கூறினார்.

தர்மராஜரால் இவ்வாறு சொல்லப்பட்ட தனஞ்சயன், 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டுத் தன் சேனைகளைக் கட்டளையிட்டான். தானும் ஸேனாமுகத்தை அடைந்தான். மஹாராஜரே! தனஞ்சயன் (சேனையின்) வலப்பக்கத்தை அடைந்தான். மிக்கபுஜபலமுள்ள பீமஸேனன் இடப்பக்கத்தை அடைந்தான். ஸாத்யகியும் திரௌபதிபுத்திரர்களும் ராஜாவான பாண்டுநந்தனரும், தம்முடைய சேனையினால் சூழப்பட்டு வ்யூகத்தினுடைய முகத்தில் நின்றார்கள். பாண்டவன் தன்னுடைய சேனையினால் அந்தப் பகைப்படையை எதிரில் பிரமித்துநிற்கும்படி செய்து, த்ருஷ்டத்யும்னனையும் சிகண்டியையும் முன்னிட்டு எதிரணி வகுத்தான். குதிரைவீரர்களாலும் யானைகளாலும் காலாட்களாலும் ரதங்களாலும் நெருங்கியதும் த்ருஷ்டத்யும்னனைத் தலைவனாகக்கொண்டதும் கோரமானதுமான பெரும் படையானது பிரகாசித்தது" என்று கூறினான்.

நாற்பத்திரண்டாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! அவ்வாறு அணிவகுக்கப்பட்ட சேனைகள் போருக்காகக் கூடியபொழுது ஸம்சப்தகர்கள் எவ்வாறு பார்த்தனை எதிர்த்தார்கள்? பாண்டவர்களும் கர்ணனை எவ்வாறு எதிர்த்தார்கள்? இந்த யுத்தத்தை விஸ்தாரமாகச் சொல். நீ ஸமர்த்தனாயிருக்கிறாய். யுத்தத்தில் வீரர்களுடைய விக்ரமத்தைக் கேட்டும் நான் திருப்தி அடையவில்லை" என்று சொல்ல ஸஞ்சயன் சொல்லத் தொடங்கினான்.

"பிறகு, கர்ணன் பகைவர்களுக்கு எதிராக நிற்கின்ற அந்தப் பெரிய சேனையைக் கண்டு உம்முடைய புத்திரனுக்கு நன்மையைச் செய்வதற்காக எதிரணி வகுத்தான். குதிரைவீரர்களாலும் யானைகளாலும் நிரம்பியதும் காலாட்களாலும் தேர்களாலும் நெருங்கியதும் த்ருஷ்டத்யும்னனை முகமாகக்கொண்டதும் கோரமாயிருப்பதுமான அந்தப் பெரும் படையானது விளங்கியது. புறாவின் நிறம்போன்ற நிறமுள்ள குதிரைகளையுடையவனும் சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஒப்பான ஒளி பொருந்தியவனுமான அந்தப் பார்ஷதன் வில்லைக் கையில்கொண்டு சரீரத்துடன் வந்த காலன் போல் விளங்கினான். உதவி வீரர்களோடு கூடியவர்களும் விளங்குகிற சரீரத்தையுடையவர்களுமான த்ரௌபதீ குமாரர்கள் போர்செய்யக் கருதிச் சந்திரனை நக்ஷத்திரங்களுடைய கூட்டங்கள் சூழ்வதுபோலப் பார்ஷதனை நாற்புறமும் சூழ்ந்துகொண்டார்கள். சேனைகள் அணிவகுக்கப்பட்ட பிறகு, அர்ஜுனன், ஸம்சப்தகர்களை யுத்தரங்கத்தில் பார்த்துக் கோபங்கொண்டவனாகிக் காண்டீவமென்கிற வில்லை நாணொலியிடும்படி செய்துகொண்டு விரைவாக எதிர்த்துச் சென்றான். பிறகு, வெற்றியில் உறுதியான எண்ணமுள்ள ஸம்சப்தகர்கள் மரணம் வரையில் யுத்தம் செய்வதாக நிச்சயித்துப் பார்த்தனைக் கொல்ல எண்ணி எதிர்த்தார்கள். குதிரைக் கூட்டங்கள் மிகுந்ததும் காலாட்களாலும் யானைகளாலும் தேர்களாலும் நெருங்கியதும் பராக்கிரமத்தினால் மீறினதும் கோபமுள்ளதும் தனஞ்சயனை எதிர்த்துச் செல்லுகின்றதும் முயற்சியுள்ளதும் வேகத்தில் கடல் வெள்ளத்துக்கு ஒப்பானதுமான அந்தப் பெரும் படையானது பார்த்தனாகிற கரையையடைந்து உறுதியுடன் நின்றதாகக் காணப்பட்டது. அந்தப் படையானது பாண ஸமூகங்களுடைய வர்ஷங்களால் அடிக்கின்ற

அர்ஜுனனை விரைவாக வருத்தியது. மன்னரே! அந்த அர்ஜுனனுக்கே நிவாதகவசர்களோடு (முற்காலத்தில்) யுத்தம் நேர்ந்தது போலவே ஸம்சப்தகர்களோடு நெருங்கிய யுத்தம் நேர்ந்தது. பார்த்தன் பகைவர்களுடைய ரதங்களையும் குதிரைகளையும் கொடிகளையும் யானைகளையும் காலாட்களையும் யானையின்மீதிருப்பவர்களையும் அம்புகளையும் விற்களையும் கத்திகளையும் சக்கரங்களையும் பரசுக்களையும் ஆயுதங்களோடு மேலே தூக்கப்பட்ட கைகளையும் பற்பலவித ஆயுதங்களையும் தலைகளையும் ஆயிரமாயிரமாக வெட்டினான். பாதாளலோகத்துக்கு ஒப்பான அந்தச் சேனையாகிற பெருஞ் சுழலில் அந்த ரதம் முழுகினதைக் கண்டு ஸம்சப்தகர்கள் ஸந்தோஷத்தோடு ஸிம்நாதஞ் செய்தார்கள். அந்த அர்ஜுனன், கோபங்கொண்டு, ருத்திரர் பசுக்களைக் கொல்வதுபோலப் பகைவர்களை முன்னிலையில் கொன்று மறுபடியும் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் பின்புறத்திலும் கொன்றான். ஐயா! பிறகு, பாஞ்சாலர்களுக்கும் சைத்தியர்களுக்கும் ஸ்ருஞ்சயர்களுக்கும் உம்மைச் சேர்ந்தவர்களோடு அதி பயங்கரமான யுத்தம் நேர்ந்தது. யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களும் ஊக்கமுள்ள சேனையுடன் கூடியவர்களும் மிக்க ரோஷமுள்ளவர்களும் தேர்ப் படையை அடிக்கின்றவர்களுமான கிருபரும் கிருதவர்மாவும் ஸுபலபுத்திரனான சகுனியும் கோசலர்களோடும் காசி தேசத்து வீரர்களோடும் மாத்ஸ்யர்களோடும் காரூசர்களோடும் கேகயர்களோடும் சூரர்களுள் சிறந்தவர்களான சூரஸேனர்களோடும் போர் புரிந்தார்கள். நாசத்தை உண்டுபண்ணுகின்றதும் தேக சம்பந்தமான பாபத்தை அழிக்கின்றதும் வீரர்களான க்ஷத்திரியர்களுக்கும் வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் [1] விதிக்கப்பட்டதும் ஸ்வர்க்கத்தைக் கொடுக்கின்றதும் கீர்த்தியை உண்டுபண்ணுகின்றதுமான அந்தத் தர்மயுத்தமானது அவர்களுக்கு உண்டாயிற்று. பரதஶ்ரேஷ்டரே! பிறகு, குரு வீரனான துரியோதனன், ஸஹோதரர்களோடு கூடிச் சிறந்த கௌரவவீரர்களாலும் மஹாரதர்களான மத்திர தேசத்து வீரர்களாலும் ரக்ஷிக்கப்பட்டுப் பாண்டவர்களோடும் பாஞ்சாலர்களோடும் சைத்யர்களோடும் ஸாத்யகியோடும் யுத்தகளத்தில் போர் புரிகின்ற கர்ணனை நான்கு பக்கங்களிலும் பாதுகாத்தான். கர்ணனும் கூர்மையுள்ள பாணங்களால் பெரும் படையை அடித்துச் சிறந்த ரதிகர்களையும் நொறுக்கி யுதிஷ்டிரரையும் அடித்தான். அவன் பகைவர்களை ஆயிரக் கணக்

[1] இதனால், போர் அந்தணருக்குச் சிறந்ததன்றென்பது விளங்கும்.

கான வாகனங்களையும் ஆயுதங்களையும் தேகங்களையும் உயிர்களையும் இழந்தவர்களாகச் செய்து, ஸ்வர்க்கத்தோடும் கீர்த்தியோடும் சேர்ப்பித்துத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணினான். மஹாரதனான ஸூதபுத்திரன் அந்தப் பெரும் படையில் பிரவேசித்து ரக்த வெள்ளத்தினால் அலை மோதுகின்றதும் ரக்தமாகிற ஜலமுள்ளதும் துண்டிக்கப்பட்ட அங்கங்களாகிற மத்ஸ்யங்களையுடையதும் யானைகளாகிற முதலைகளிருப்பதால் தாண்ட முடியாததும் மாம்ஸங்களாலும் மஜ்ஜைகளாலும் சேறுள்ளதும் சக்கரங்களாகிற ஆமைகளும் பெரிய தெப்பங்களும் உள்ளதுமான நதியைப் பெருகியோடச் செய்தான். அரசரே! ஆங்காங்கு வஜ்ராயுதங்களால் அடித்துத் தள்ளப்பட்ட மேகங்கள் போலக் கீழே விழும்படி செய்யப்பட்ட பெரிய யானைகளால் ரக்த நதியானது விளங்கியது. மஹாராஜரே! அம்புகளாகிய அலைகளோடும் பெருஞ் சுழல்களோடுங் கூடியதும் குடைகளாகிற அன்னப் பறவைகளால் நன்றாகச் சூழப்பட்டதும் கவசங்களும் தலைப்பாகைகளுமாகிற தெப்பங்களோடு கூடியதும் எலும்புகளாகிற கற்களால் நெருங்கியதும் கரையில்லாததும் கரையுள்ளதும் சங்கங்கள் துந்துபிகள் இவற்றின் கோஷமுள்ளதும் பயங்கரமானதும் நான்கு பக்கத்திலும் புழுதியினால் மூடப்பட்டதும் அதிவேகமாகச் செல்லுகின்றதும் மனிதர்களால் நான்கு பக்கத்திலும் சூழப்பட்டதும் யமனுடைய பக்கத்தைக் குறித்துச் செல்லுகின்றதும் ஸமமாகவும் விஷமமாகவும் பெருகி வருகின்றதும் மஹா பயங்கரமாயிருக்கின்றதுமான அந்த நதியை (வீரர்கள் உண்டுபண்ணினார்கள்.) வேந்தரே! மனிதர்களால் நாற்புறமும் எறியப்பட்ட பருத்த மரங்கள்போல மனக்கவலையுற்ற மனிதர்கள் அந்த நதியிலுள்ள இந்த இரத்தச் சேற்றில் வாட்டமுற்றார்கள். பிறகு, ஆங்காங்கு அந்த மஹாநதியில் ஸஞ்சரிக்கின்றவர்களான அந்த யுத்த வீரர்கள் யானைகளும் மஹாரதங்களுமாகிற ஓடங்களால் நான்கு பக்கங்களிலும் ஸஞ்சாரம் செய்தார்கள். ராஜரே! ஜனாதிபரே! நதி வேகத்தால் பூமியானது ஸமம் செய்யப்படுவது போலப் போர்க்களமானது ரக்த நதியால் எங்கும் ஸமம் செய்யப்பட்டது. பாரதரே! மனிதர்களுக்கும் குதிரைகளுக்கும் யானைகளுக்கும் க்ஷயத்தை உண்டுபண்ணுகிற கௌரவர்களுக்கும் ஸ்ருஞ்சயர்களுக்கும் நடந்த இவ்வாறான யுத்தமானது தேவாஸுரர்களுடைய யுத்தத்திற்கு ஒப்பாகியது" என்று கூறினான்.

நாற்பத்துமூன்றுவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! ஒன்றுசேர்ந்திருக்கின்ற பார்த்தனுடைய சேனையில் நுழைந்து ஜனங்களுக்கு நாசத்தை உண்டு பண்ணுகின்ற கர்ணன் அரசனுக்கு நான்குபக்கத்திலும் சஞ்சரித்துக்கொண்டு என்ன செய்தானென்பதை எனக்குச் சொல்வாயாக. யுத்தத்தில் பார்த்தர்களுள் எந்த வீரர்கள் கர்ணனைத் தடுத்தார்கள்? அதிரதபுத்திரனான கர்ணன் எவர்களை நாசஞ்செய்து யுதிஷ்டிரனை அடித்தான்?" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான்.

"சத்துருக்களை அடிக்கின்றவனான கர்ணன், ஸன்னத்தர்களாக நிற்கின்ற த்ருஷ்டத்யும்னனை முதன்மையாகக்கொண்ட பார்த்தர்களைப் பார்த்துப் பாஞ்சாலர்களையும் நோக்கி விரைபவனாக எதிர்த்துச் சென்றான். எதிர்த்து விரைவாக வருகின்ற அந்த மஹாத்மாவான கர்ணனை வெற்றியோடு விளங்குகின்றவர்களான பாஞ்சாலர்கள் வெயிற்காலத்தில் அன்னப்பறவைகள் தடாகத்தை நோக்கிச் செல்வதுபோல எதிர்த்துச் சென்றார்கள். பிறகு, இருதிறத்துச் சேனைகளிலும் மனத்துக்கினிய ஆயிரக்கணக்கான சங்கங்களுடைய ஒலியும் பயங்கரமான பேரி முழக்கமும் பற்பல வித பாணங்களுடைய சப்தமும் யானைகள் குதிரைகள் தேர்கள் இவற்றின் சப்தமும் வீரர்களுடைய ஸிம்மநாதமும் அப்பொழுது பயங்கரமாகத் தோன்றின. பிராணிகள் அந்தச் சப்தத்தைக் கேட்டு, மலைகளுடனும் மரங்களுடனும் ஸமுத்திரங்களுடனும் கூடின பூமியும் காற்றுடனும் மேகங்களுடனும் கூடின ஆகாயமும் சூரியனோடும் சந்திரனோடும் நவக்கிரகங்களோடும் நக்ஷத்திரங்களோடும்கூடின மேலுலகமும் வெளிப்படையாக நிலைதப்பிச் சுழன்றனவென்று எண்ணின; அவைகளும் துன்பமடைந்தன. அல்ப பலமுள்ள பிராணிகள் பெரும்பான்மையாக மாண்டன. பிறகு, கர்ணன் மிகுந்த கோபங்கொண்டவனாகி அஸ்திரத்தை விரைவாகப் பிரயோகித்துக்கொண்டு இந்திரன் அஸுர சேனையைக் கொன்றதுபோலப் பாண்டவசேனையைக் கொன்றான். அந்தக் கர்ணன் பாண்டவசேனையில் புகுந்து பாணங்களைப் பிரயோகித்துப் பிரபத்ரகர்களுள் சிறந்தவர்களான எழுபத்தேழு வீரர்களைக் கொன்றான். பிறகு, கர்ணன் நல்ல கட்டுக்களுள்ளவைகளும் கூர்மையுள்ளவைகளுமான இருபத்தைந்து அம்புகளாலே இருபத்தைந்து பாஞ்சால வீரர்களைக் கொன்றான். வீரனான கர்ணன் ஸ்வர்ணமயமான கட்டுக்களுள்ளவைகளும் பகைவர்

களுடைய சரீரங்களைப் பிளக்கின்றவைகளுமான நாராசங்களால் சேதிவீரர்களையும் நூறுநூறாகவும் ஆயிரமாயிரமாகவும் கொன்றான். மஹாராஜரே! அவ்வாறு யுத்தத்தில் மனித இயற்கைக்கு மேற்பட்ட காரியத்தைச் செய்கின்ற கர்ணனைப் பாஞ்சாலர்களுடைய தேர்க்கூட்டங்கள் நாற்புறங்களிலும் சூழ்ந்துகொண்டன. பாரதரே! பிறகு சூரியனுடைய புதல்வனும் தர்மிஷ்டனுமான கர்ணன் தாங்கமுடியாதவைகளான ஐந்து பாணங்களை வில்லில் பூட்டிப் பானுதேவன், சித்ரஸேனன், ஸேனாபிந்து, தபனன், சூரஸேனன் என்னும் ஐந்து பாஞ்சாலர்களை யுத்தத்தில் கொன்றான். மஹாயுத்தத்தில் பாணங்களால் சூரர்களான பாஞ்சாலர்கள் வதஞ்செய்யப்படும் காலத்தில் பாஞ்சாலர்களுடைய பெரியதான ஹாஹாகாரம் தோன்றியது. அவர்கள் நன்றாகப் போர்புரிந்துகொண்டும் ஹாஹாகாரஞ் செய்துகொண்டுமிருக்கும்பொழுதே கர்ணன் மீண்டும் அவர்களை விரைவாகப் பாணங்களாலடித்தான். பெரியவரே! ஜயிக்க முடியாதவர்களும் சக்கர ரக்ஷகர்களுமான ஸுஷேணன், ஸத்தியஸேனனென்கிற கர்ணனுடைய இரண்டு புத்திரர்களும் பிராணனில் ஆசையை விட்டுப் போர்புரிந்தார்கள். கர்ணனுடைய பின்புறத்தை ரக்ஷிப்பவனும் மஹாரதனும் (கர்ணனுடைய) மூத்த குமாரனுமான வ்ருஷஸேனன் பின்புறத்தைப் பாதுகாத்துக்கொண்டு கர்ணனைத் தொடர்ந்து சென்றான். த்ருஷ்டத்யும்னனும் ஸாத்யகியும் திரௌபதிபுத்திரர்களும் விருகோதரனும் ஜனமேஜயனும் சிகண்டியும் சிறந்த வீரர்களான ப்ரபத்ரகர்களும் சைத்தியர்களும் கேகயர்களும் பாஞ்சாலர்களும் நகுலஸஹதேவர்களும் கவசம்பூண்டவர்களான மாத்ஸ்யர்களும் அடிக்கின்றவனான ராதேயனைக் கொல்ல விரும்பி நன்றாக எதிர்த்தார்கள். பகைவர்களை நன்றாக அடிக்கின்ற இந்தக் கர்ணன்மீது அவர்கள் கார்காலத்தில் மேகங்கள் மலையின்மீது மழையைப் பொழிவதுபோலப் பற்பலவிதமான சஸ்திரங்களையும் அம்புமழைகளையும் பொழிந்தார்கள். அரசரே! பிதாவான கர்ணனை மீட்க எண்ணியவர்களும் மிக அடிக்கின்றவர்களுமான கர்ணபுத்திரர்களும் மற்ற உம்மைச் சேர்ந்தவீரர்களும் சத்துருவீரர்களை எதிர்த்தார்கள். ஸுஷேணன் ஒரு பல்லத்தினால் பீமஸேனனுடைய வில்லை அறுத்து ஏழு நாராசங்களால் அவனை மார்பிலடித்து ஸிம்மநாதஞ் செய்தான். பிறகு, பயங்கரமான பராக்கிரமமுள்ள விருகோதரன் மிக்க திடமான வேறு வில்லை எடுத்து நாணேற்றி ஸுஷேணனுடையவில்லை வெட்டினான். பீமன் கோபமுண்டு நர்த்தனம் செய்கின்றவன்போலப் பத்துப்பாணங்

களால் அந்த ஸுஷேணனை அடித்துக் கூர்மையுள்ள எழுபத்து மூன்று பாணங்களால் கர்ணனையும் விரைவாக அடித்தான். குதிரைகளுடனும் ஸாரதியுடனும் ஆயுதங்களுடனும் த்வஜத்துடனும் கூடின கர்ணபுத்திரனான ஸத்யஸேனனையும் பத்துப் பாணங்களாலடித்துப் பார்த்துக்கொண்டிருக்கிற ஸுஹ்ருத்துக்களின் நடுவில் கீழே தள்ளினான். க்ஷுரப்ரத்தினால் தள்ளப்பட்டதும் சந்திரனுக்கு ஒப்பான முகமுள்ளதுமான அந்த ஸத்யஸேனனுடைய தலையானது, காம்பினின்று கீழே விழுந்திருக்கின்ற தாமரைப் புஷ்பம்போல மங்களகரமான காட்சியுள்ளதாகவே இருந்தது. பீமன், கர்ணபுத்திரனைக்கொன்று மறுபடியும் உம்மைச் சேர்ந்தவர்களைப் பிடித்தான்; கிருபர் கிருதவர்மா இவர்களுடைய விற்களையும் அறுத்து அவர்களையும் அடித்தான்; துச்சாஸனனை மூன்று பாணங்களாலும் சகுனியை உருக்கு மயமான ஆறு பாணங்களாலும் அடித்து உலூகன் பதத்திரி இருவர்களையும் ரதத்தை இழந்தவர்களாகச் செய்தான்; 'ஸுஷேண! மாண்டாய்' என்று சொல்லிக்கொண்டு அம்பை எடுத்தான். கர்ணன் இவனுடைய அந்தப் பாணத்தை அறுத்து மூன்று பாணங்களால் இவனையும் அடித்தான். பீமன், பிறகு, நல்ல கணுக்களுள்ளதும் நன்றாகத் தீட்டப்பட்டதுமான வேறுபாணத்தைக் கையிலெடுத்து ஸுஷேணன் மீது பிரயோகித்தான். கர்ணன் பீமனுடைய அந்தப் பாணத்தையும் துண்டாக்கினான். மறுபடியும் கோபமுள்ள கர்ணன் புத்திரனைப் பாதுகாக்கக் கருதிப் பகைவனைக் கொல்லும் விருப்பத்தினால் எழுபத்துமூன்று பாணங்களால் பீமஸேனனை அடித்தான். ஸுஷேணனோ பெரிய காரியத்தைச் செய்யத்தக்கதும் உத்தமமுமான ஒரு வில்லை எடுத்து நகுலனை ஐந்து பாணங்களால் இரு கைகளிலும் மார்பிலும் அடித்தான். நகுலனோ, பெரிய காரியங்களைச் செய்யத் தக்கவையும் உறுதியாயிருப்பவையுமான இருபது பாணங்களாலே ஸுஷேணனை அடித்துக் கர்ணனுக்குப் பயத்தை உண்டுபண்ணிக்கொண்டு உரக்க ஸிம்மநாதஞ் செய்தான். மஹாராஜரே! மஹாரதனான ஸுஷேணன் அந்த நகுலனைப் பத்து அம்புகளால் அடித்து ஒரு க்ஷுரப்ரத்தினாலே வில்லையும் விரைவாக வெட்டினான். பிறகு, கோபம் மூண்டவனான நகுலன் வேறு வில்லைக் கையிலெடுத்து ஒன்பது பாணங்களால் யுத்தத்தில் ஸுஷேணனை எதிர்த்துத்தடுத்தான். அரசரே! சத்துரு வீரர்களைத் துன்பஞ் செய்கின்றவனான அந்த நகுலனோ, பாணங்களால் திக்குகளை மூடி ஸுஷேணனுடைய ஸாரதியைக் கொன்றான்; பிறகு ஸுஷேணனையும் மூன்று பாணங்களாலடித்

தான். இந்த ஸுஷேணனுடைய மிக்க திடமான வில்லை மூன்று பல்லங்களாலே மூன்றாகத் துண்டாக்கினான். பிறகு, ஸுஷேணன் கோபமூண்டவனாகி வேறு வில்லைக் கையிலெடுத்து நகுலனை அறுபது பாணங்களாலும் ஸஹதேவனை ஏழு பாணங்களாலும் அடித்தான். ஒருவரை ஒருவர் வதம் செய்யக் கருதி அம்புகளால் விரைவாக அடித்துக்கொள்ளுகிறவர்களான வீரர்களுடைய மிக்க கோரமான அந்த யுத்தமானது தேவாஸுரர்களுடைய யுத்தத்திற்கு ஒப்பானதாயிற்று. ஸாத்யகி விருஷஸேனனை உருக்கினாலாகிய ஏழு பாணங்களால் அடித்து மறுபடியும் எழுபது பாணங்களால் அடித்தான்; கூர்மையுள்ள மூன்று பாணங்களால் அவன் ஸாரதியையும் அடித்தான்; மஹாராஜரே ! விருஷஸேனனோ, மஹாரதனான ஸாத்யகியை கணுக்கள் உட்படிந்துள்ள அம்பினால் நெற்றியில் அடித்தான். மஹாராஜரே ! விருஷஸேனன் பிரயோகித்த பாணத்தால் பீடிக்கப்பட்ட ஸாத்யகியானவன் கோபங்கொண்டான்; கோபங்கொண்டு, பயங்கரமான வேகத்தையும் வெளிப்படுத்தினான். வீரனான ஸாத்யகி சீக்கிரமாகச் சிறந்த பதினைந்து பாணங்களைக் கையிலெடுத்து விருஷஸேனனுடைய ஸாரதியை மூன்று பாணங்களால் கொன்று, அவனுடைய வில்லை ஒரு பல்லத்தினால் துண்டாக்கிக் குதிரைகளை ஏழு பாணங்களால் கொன்று கொடியை ஒரு பாணத்தால் நாசஞ்செய்து மூன்று பாணங்களால் அவனை மார்பில் அடித்தான். பிறகு, அந்த விருஷஸேனன் தனது தேரில் மூர்ச்சை அடைந்து ஒரு முகூர்த்த காலத்தினுள் மறுபடியும் எழுந்திருந்தான். யுத்தத்தில் யுயுதானனால் ஸாரதியையும் குதிரைகளையும் ரதத்தையும் கொடியையும் இழந்தவனாகச் செய்யப்பட்ட அந்த விருஷஸேனன் யுயுதானனைக் கொல்ல விரும்பிக் கத்தியையும் கேடகத்தையும் கையில்கொண்டு அவனை எதிர்த்துச் சென்றான். விரைவாக வருகின்ற விருஷஸேனனுடைய கத்தியையும் கேடகத்தையும் ஸாத்யகியானவன் வராஹகர்ணங்களென்கிற பத்துப் பாணங்களால் அடித்தான். துச்சாஸனனோ, ரதத்தை இழந்தவனும் ஆயுதங்களை இழந்தவனுமாகச் செய்யப்பட்ட அந்த விருஷஸேனனைக் கண்டு விரைவாக அவனைத் தனது தேரின்மீது ஏற்றிவைத்துக்கொண்டு வேறொரு ரதத்தை அடையும்படி செய்தான். பிறகு, மஹாரதனான விருஷஸேனன் வேறு ரதத்தின் மீதேறிக்கொண்டு எழுபத்து மூன்று பாணங்களால் திரௌபதீ புத்திரர்களையும் ஐந்து பாணங்களால் யுயுதானனையும் அறுபத்துநான்கு பாணங்களால்

பீமஸேனனையும் ஐந்து பாணங்களால் ஸஹதேவனையும் முப்பது பாணங்களால் நகுலனையும் ஏழு பாணங்களால் சதானீகனையும் பத்துப் பாணங்களால் சிகண்டியையும் நூறு பாணங்களால் தர்மராஜரையும் அடித்தான். ராஜேந்திரரே! ஜனாதிபரே! சிறந்த வில்லாளியான கர்ண புத்திரன் இவர்களையும் ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான மற்ற சிறந்த வீரர்களையும் அடித்தான். பிறகு, யுத்தத்தில் ஜயிக்கமுடியாதவனான விருஷஸேனன் கர்ணனுடைய பின்புறத்தைப் பாதுகாத்தான். ராதேயன் ஒன்பது புதிய பாணங்களாலே யுயுதானனை ஸாரதியையும் குதிரைகளையும் தேரையும் இழந்தவனாகச் செய்து மூன்று பாணங்களால் அவன் நெற்றியில் அடித்தான். அந்த ஸாத்யகி சாஸ்திரத்தில் சொல்லியபடி அமைக்கப்பட்ட வேறு ரதத்தில் மறுபடியும் ஏறிக்கொண்டு பாண்டவர்களோடுகூடி யுத்தஞ்செய்து கர்ணனுடைய படையைச் சிதற அடித்தான். பிறகு கர்ணனைத் திருஷ்டத்யும்னன் பத்துப்பாணங்களாலும் திரௌபதீ புத்திரர்கள் எழுபத்துமூன்று பாணங்களாலும் யுயுதானன் ஏழு பாணங்களாலும் அடித்தார்கள். கர்ணனைப் பீமஸேனன் அறுபத்துநான்கு பாணங்களாலும் ஸஹதேவன் ஏழு பாணங்களாலும் நகுலன் முப்பது பாணங்களாலும் சதானீகன் ஏழு பாணங்களாலும் சிகண்டி பத்துப் பாணங்களாலும் வீரரான தர்மராஜர் நூறு பாணங்களாலும் அடித்தார்கள். ராஜேந்திரரே! ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான இவர்களும் மற்ற சிறந்த வீரர்களும் மஹாயுத்தத்தில் மஹா வில்லாளியான ஸூதபுத்திரனை அடித்தார்கள். சத்துருக்களைச் சிட்சிக்கிறவனும் வீரனுமான அந்த ஸூதபுத்திரன் ரதத்தோடு சஞ்சரித்துக்கொண்டு அவர்களை நல்ல கூர்மையான பத்துப் பத்துப் பாணங்களால் திருப்பி அடித்தான். பிறகு, ஸூதநந்தனனான கர்ணன் எல்லாப் போர்வீரர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே சிறந்த ரதிகர்களும் கோபமுள்ளவர்களும் முயற்சியுள்ளவர்களும் மஹாரதர்களுமான ஸாத்யகி, பீமஸேனன், திருஷ்டத்யும்னன், சிகண்டி, திரௌபதீ புத்திரர்கள் ஆகிய இவர்களை அரைநிமிஷத்தினுள் ரதங்களை இழந்தவர்களாகச் செய்தான். பாணங்கள் வீணாகாமலிருப்பதால் பிராணிகளுடைய கூட்டங்கள் ஆச்சரியமடைந்தன. மஹா பாக்கியமுள்ளவரே! அந்த யுத்தத்தில் மகாத்மாவான கர்ணனுடைய அஸ்திர வீரியத்தையும் லாகவத்தையும் கண்டோம். அது ஆச்சரியம்போலிருந்தது. அந்தக் கர்ணன் பரபரப்புடன் பாணங்களை எடுப்பதையும் தொடுப்பதையும் விடுப்பதையும் ஜனங்கள் காணவேயில்லை. ராஜேந்திரரே! மேற்குத் திக்கில் அவனைக் கண்டு லாகவத்தினால் கிழக்குத்திக்கிலும் கண்டோம்.

எங்குக் கர்ணன் இருந்தானே நாங்கள் கண்டறியோம். மன்னரே! விட்டிற்பூச்சிகளின் கூட்டங்களைப்போலத் திக்குகளை மூடுகின்றவைகளும் நான்கு பக்கத்திலும் வாரியிறைக்கப்படுகின்றவைகளுமான அந்தக் கர்ணனுடைய பாணங்களைமாத்திரம் கண்டோம். வேந்தரே! அப்பொழுது யுத்தவீரர்கள், எல்லாத் திக்குக்களையும், சூரியனுடைய கிரணங்களால் சூழப்படுவதுபோலக் கூர்மையானவைகளும் நாற்புறங்களிலும் ஆயிரமாயிரமாக வந்து விழுகின்றவைகளும் உட்படிந்த கணுக்களுள்ளவைகளுமான அந்தக் கர்ணனுடைய பாணங்களால் சூழப்பட்டவைகளாகக் கண்டார்கள். அந்த யுத்தத்தில் அம்புகளால் மூடப்பட்ட ஆகாயமானது மேகங்களால் மூடப்பட்டதுபோலத் தோன்றியது. கூர்மையுள்ள அம்புகளாலே சுவர்க்கமும் ஆகாயமும் பூமியும் திக்குக்களும் மூடப்பட்டன. அந்த இடத்தில் ஆகாயமானது சிவந்த மேகத்தால் மூடப்பட்டதுபோல் விளங்கியது. பிறகு, யுத்தவீரர்களின் செய்கையைச் செய்பவனும் அளவிடமுடியாத ஆண்மையுள்ளவனும் மஹாரதனும் அரசனுமான கர்ணன் யுத்தத்தில் யுத்தவீரர்களைக் கொன்றான். வில்லைக் கையிற் பிடித்து யுத்தரங்கத்தில் நர்த்தனஞ்செய்கின்றவன்போன்ற கர்ணன் எவர்களால் அடிக்கப்பட்டானே அவர்கள் ஒவ்வொருவரையும் மும்மூன்று மடங்கு அதிகமான பாணங்களால் திருப்பியடித்தான். கர்ணன் மறுபடியும் அந்த வீரர்களை ஆயிரம் பாணங்களாலடித்து ஸிம்மநாதஞ் செய்தான். பிறகு, அந்த வீரர்கள் குதிரைகளோடும் ஸாரதிகளோடும் துவஜங்களோடும் குடைகளோடுங் கூடியவர்களாக (கர்ணனுக்கு) [1] அவகாசத்தைக் கொடுத்தார்கள். கர்ணனால் ஹிம்ஸிக்கப்படுகின்ற அந்த யுத்தவீரர்கள் கர்ணனிடத்தினின்று பயந்து பிரஜ்ஞையை யிழந்து எல்லாத் திக்குகளையும் (தங்களுடைய சப்தத்தால்) எதிரொலியிடும்படி செய்துகொண்டு பத்துத் திக்குக்களிலும் ஓடினார்கள். பகைவர்களை அழிப்பவனான ராதேயன் அந்த மஹாவில்லாளிகளை அம்பு மழைகளாலே நன்றாக அடித்து, அரசர்களுடைய படையில் துன்பமில்லாமல் பிரவேசித்தான். அந்த ராதேயன் பின்வாங்காத தேர்வீரர்களான சேதி தேசத்து வீரர்கள் முந்நூற்றுவரைக் கூர்மையுள்ள பாணங்களால் அடித்துப் பிறகு யுதிஷ்டிரரை எதிர்த்துச் சென்றான். மஹாராஜரே! பிறகு, தேரிழந்தவர்களான அந்தச் சூரர்கள் வேறு தேர்களில் ஏறிக்கொண்டு தர்மராஜனுடைய புத்திரரான யுதிஷ்டிரரைச் சூழ்ந்துகொண்டார்கள். அரசரே! பிறகு, அந்தச் சத்துரு வீரர்களும் ஸாத்யகியுடன்

[1] பின்வாங்கினரென்பது

கூடின சிகண்டியும் ஸ்வர்ணக்கட்டுடன் கூடியவைகளும் சாணைக் கல்லில் தீட்டப்பட்டவைகளுமான பற்பல பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டு ராதேயனிடத்தினின்று அரசரைப் பாது காப்பதற்காக (அவரைச்) சூழ்ந்துகொண்டார்கள். அவ்வாறே, முயற்சியுள்ளவர்களும் பெரிய வில்லைக் கையில் பிடித்தவர்களுமான உம்மைச் சேர்ந்த சூரர்களனைவர்களும் யுத்தத்தில் தடுக்கமுடியாத கர்ணனை நான்கு பக்கத்திலும் பாதுகாத்தார்கள். அரசரே ! நானுவிதமான வாத்திய கோஷங்களும் தோன்றின. எதிரில் கர்ஜிக்கிற சூரர்களுடைய ஸிம்மநாதமும் தோன்றியது. பிறகு, யுதிஷ்டிரரை முதன்மையாகக்கொண்ட பிருதா புத்திரர்களான பாண்டவர்களும் கர்ணனை முதன்மையாகக்கொண்ட கௌரவர்க ளான நாங்களும் பயமற்றவர்களாக மீண்டும் எதிர்த்தோம்.

நாற்பத்து நான்காவது அத்தியாயம்

(கர்ணன் யுதிஷ்டிரரைத் தோல்வியடையச்செய்து பரிஹாஸஞ் செய்ததும், ஸங்குல யுத்தமும்)

கர்ணன், அந்தச் சேனையைப் பிளந்து, பிறகு ஆயிரக்கணக் கான ரதங்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் காலாட் களாலும் சூழப்பட்டவனாக யுதிஷ்டிரரை எதிர்த்தான். அவன் சத்ருக்களால் பிரயோகிக்கப்படுகின்ற ஆயிரக்கணக்கான பற் பல ஆயுதங்களை உக்கிரமான அநேக பாணங்களால் அறுத்துப் பரபரப்பில்லாமல் அவர்களை அடித்தான். ஸூதபுத்திரன் அவர்களுடைய தலைகளையும் கைகளையும் தொடைகளையும் அறுத் தான். அடிக்கப்பட்டவர்களான அவர்கள் பூமியில் விழுந்தார்கள். மற்றவர்கள் தோல்வி அடைந்து விரைவாக ஓடினார்கள். மீண் டும் ஸாத்யகியினால் ஏவப்பட்டவர்களும் காலாட்களுமான திராவிடர்களும் ஆந்திரர்களும் நிஷாதர்களும் யுத்தத்தில் கர்ண னைக் கொல்ல விரும்பி எதிர்த்தோடினார்கள். கர்ணனுடைய அம்புகளால் நன்றாக அடிக்கப்பட்டவர்களான அவர்கள் கைகளை யும் தலைப்பாகைகளையும் இழந்தவர்களாக வெட்டித் தள்ளப்பட்ட ஸாலவனம்போல் ஒரே சமயத்தில் பூமியில் விழுந்தார்கள். இவ் வாறாக யுத்தத்தில் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காவும் யுத்தவீரர்கள் கொல்லப்பட்டவர்களாகித் தேகங்களால் பூமியை அடைந்தார்கள் ; புகழினால் திக்குகளையும் நிரப்பினார்கள். பிறகு, யுத்தத்தில் கோபங்கொண்ட அந்தகன்

போன்ற சூரியகுமாரனை கர்ணனைப் பாண்டவர்களும் பாஞ்சாலர் களும், வியாதியை மந்திரங்களும் ஒளஷதங்களும் தடுப்பதுபோலத் தடுத்தார்கள். அந்தக் கர்ணன் அவர்களை நன்முக அடித்து மந்தி ரங்களாலும் ஒஷதிகளாலும் செய்யப்பட்ட பரிகாரத்தை மீறி அடங்காமல் மேலிடுகின்ற வியாதிபோல மறுபடியுமே யுதிஷ் டிரரை எதிர்த்தான். அவன், அரசரைக் காப்பதில் பேராவ லுடையவர்களான பாண்டவர்களாலும், பாஞ்சாலர்களாலும், கேகயர்களாலும் தடுக்கப்பட்டு, ம்ருத்யு பிரம்மவித்துக்களை மீறிச் செல்லச் சக்தியற்றவனுவதுபோல், அவர்களை மீறிச் செல்வ தற்குச் சக்தியற்றவனுனன். பிறகு, யுதிஷ்டிரர் பிரதானர்க ளான அந்த யுத்தவீரர்களால் தடுக்கப்பட்டு சமீபத்திலிருக்கின்ற வீரனை கர்ணனைக் கண்டு பாணங்களால் அடித்தார். ஈட்டியினுல் குத்தப்பட்ட யானைபோலப் பார்த்தருடைய அம்புகளால் அடிக் கப்பட்ட கர்ணன் ஒன்றுசேர்ந்திருக்கின்ற வீரர்களை நன்முக அடித்து யுதிஷ்டிரரைப் பீடித்தான். பிறகு, யுதிஷ்டிரர் கோபத்தி னுல் கண்கள் நன்முகச் சிவந்து சத்துரு வீரர்களைக் கொல்லுகின்ற வனும் ஜயிப்பவர்களுள் சிறந்தவனுமான கர்ணனை அடைந்து, 'கர்ண! கர்ண! வீண் நோக்கமுள்ளவனே! ஸூதபுத்திர! என் வார்த்தையைக் கேள். யுத்தத்தில் பலசாலியான பல்குனனேடு எப்பொழுதும் போட்டி போடுகிருய். துரியோதனனுடைய அபிப்பிராயத்தில் நிலைபெற்றவனுக எங்களை நித்தியம் ஹிம்ஸிக் கிருயாதலால், உனக்குள்ள பலம், வீரியம், பாண்டவர்களிடத்தி லுள்ள பகைமை ஆகிய எல்லாவற்றையும் இப்பொழுது மிக்க ஆண்மையைக் கைக்கொண்டு காட்டு. மஹா யுத்தத்தில் உனக்கு யுத்தத்திலிருக்கின்ற ச்ரத்தையை நான் இப்பொழுது போக்குவேன்' என்று சொன்னார். மஹாராஜரே! பாண்டு புத்திரர், அப்பொழுது கர்ணனைப்பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டு ஸ்வர்ணமயமான புங்கங்களுள்ளவைகளும் உருக்கினுற் செய்த வையுமான பத்துப் பாணங்களால் அவனை அடித்தார். பாரதரே! பகைவர்களை அடக்குபவனும் சிறந்த வில்லாளியுமான ஸூத புத்திரன் அட்டஹாஸஞ் செய்கின்றவன்போலப் பத்து வத்ஸதந்தங்களால் அவரைத் திருப்பியடித்தான். ஸூத புத்திரனுல் நன்முக அடிக்கப்பட்ட அந்தப் பாண்டவரோ அலட்சியஞ்செய்து ஹவிஸினுல் அக்னி ஜ்வலிப்பதுபோலக் கோபத்தினுல் ஜ்வலித்தார். ஜ்வாலைக் கூட்டங்களால் சூழப்பட்ட யுதிஷ்டிரராஜருடைய தேகமானது யுகாந்த காலத்தில் எரிக்க எண்ணங்கொண்ட பிரளயகால நெருப்பினுடைய வேருேர் உருவம் போலக் காணப்பட்டது. பிறகு, யுதிஷ்டிரர் மிகப் பெரிதாயிருப்ப

தும், பொன்னால் அலங்கரிக்கப்பட்டதுமான வில்லில் நாணேலி யெழுப்பிக் கூர்மையுள்ளதும் மலைகளையும் பிளக்குந் திறமை யுள்ளதுமான ஓர் அம்பை (அந்த வில்லில்) பூட்டி எய்தார். பிறகு ராஜரான யுதிஷ்டிரர் ஸூத புத்திரனைக் கொல்லும் விருப்பத் தினால் விரைவுடன் யமதண்டத்துக்கொப்பான ஓர் அம்பை நன்றாக இழுத்துப் பிரயோகித்தார். வேகமுடைய யுதிஷ்டிரரால் விடப்பட்டதும் இடி, வஜ்ராயுதம் இவற்றின் சப்தத்துக் கொப் பான சப்தமுள்ளதுமான அந்தப் பாணமானது மஹாரதனான கர்ணனுடைய இடது விலாப்புறத்தில் விரைவாக நுழைந்தது, அந்த அடியினால் பீடிக்கப்பட்ட மிக்க புஜபலமுள்ள அந்தக் கர்ணன் தேகத்தளர்ச்சியடைந்து வில்லை நழுவவிட்டு நடுக்கமுற்று மூர்ச்சையடைந்தான். கர்ணன் உயிரை இழந்தவன்போலப் பிரஞ் ஞையையிழந்தவனாகிச் சல்யனுக்கு எதிராக விழுந்தான். யுதிஷ்டிர ராஜரும் பார்த்தனுக்கு நன்மையைச் செய்யும் எண்ணத்தினால் கர்ணனை மறுபடியும் அடிக்கவில்லை. பிறகு, நிறம் மாறி யிருக்கின்ற முகத்தை யுடையவனும், துன்பமுற்றவனும், அவ்வித நிலைமையை அடைந்திருக்கின்றவனுமான கர்ணனைக் கண்டு பெரி தான தார்த்தராஷ்டிரனுடைய படை முழுவதும் ஹாஹாகாரங் கொண்டது. மஹாராஜரே! ராஜாவினுடைய பராக்கிரமத்தைக் கண்டு பாண்டவர்களுள் ஸிம்மநாதங்களும், கொக்கரித்தல்களும், அவ்வாறே 'கலகல' என்னும் சப்தங்களும் தோன்றின. கொடிய பராக்கிரமமுள்ள ராதேயன் சற்று நேரத்துக்குள் பிரஞ்ஞையை அடைந்து அரசரை அழிப்பதன்பொருட்டு மனத்தைச் செலுத்தினான். அளவிடமுடியாத பராக்கிரமமுள்ள அந்தக் கர்ணன் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டதும் வெற்றியைக் கொடுக்கக்கூடியதும் பெரிதுமான வில்லில் நாணேலி எழுப்பிக் கூர்மையுள்ள பாணங்களைப் பாண்டவர் மீது இறைத்தான். பிறகு, மஹாத்மாவான யுதிஷ்டிரருடைய சக்ர ரக்ஷகர்களான சந்திரதேவன், தண்டதாரன் என்கிற இரண்டு பாஞ்சால வீரர் களையும் யுத்தத்தில் இரண்டு க்ஷுரங்களால் கொன்றான். பாரதரே! யுத்தத்தில் சிறந்த வீரர்களான அவ்விருவரும் சந்திர னுடைய ஸமீபத்தில் புனர்வஸு நக்ஷத்திரங்கள் போலத் தர்ம ராஜருடைய ரதத்திற்கு ஸமீபத்தில் பிரகாசித்தார்கள். யுதிஷ்டிரர் மறுபடியும் கர்ணனை முப்பது பாணங்களால் அடித்தார். ஸுஷேணனையும் ஸத்யஸேனனையும் மும்மூன்று பாணங்களால் அடித்தார்; யுதிஷ்டிரர் சல்யனைத் தொண்ணூறு பாணங்களாலும், ஸூத புத்திரனை எழுபத்துமூன்று பாணங்

களாலும், அவனுக்கு ரக்ஷகர்களான அவ்வீரர்களை மும்மூன்று பாணங்களாலும் அடித்தார். அரசரே! பிறகு, அதிரத புத்திரனான கர்ணன் உரக்கச் சிரித்துக் கூர்மையுள்ள அறுபது பாணங்களால் யுதிஷ்டிரரை அடித்து யுத்தத்தில் அப்பொழுது ஸிம்மநாதஞ் செய்தான். பிறகு, பாண்டவர்களைச் சேர்ந்த சிறந்த வீரர்கள் கோபங்கொண்டு, யுதிஷ்டிரரைப் பாதுகாக்கக் கருதி, கர்ணனை அம்புகளால் அடித்தார்கள். ஸாத்யகி, சேகிதானன், யுயுத்ஸு, பாண்டியன், திருஷ்டத்யும்னன், சிகண்டி, திரௌபதி புத்திரர்கள், பிரபத்ரகர்கள், நகுல ஸஹதேவர்கள், பீமஸேனன், சிசுபாலனுடைய குமாரன், காரூசர்கள், மிகுந்திருக்கின்ற மாத்ஸ்யர்கள், கேகயர்கள், காசிதேசத்து வீரர்கள், கோஸலர்கள் ஆகிய இந்த வீரர்கள் விரைவுடன் வஸுஷேணனை அடித்தார்கள். பாஞ்சால்யனான ஜனமேஜயனும் கர்ணனைப் பாணங்களாலும் வராஹகர்ணங்களாலும், நாராசங்களாலும், நாளீகங்களாலும், கூர்மையுள்ள அம்புகளாலும், வத்ஸதந்தங்களாலும் விபாடங் களாலும், க்ஷுரப்ரங்களாலும், சடகாமுகங்களாலும் அடித்தான். ஜனமேஜயன், உக்கிரர்களும் நானாவிதமான ஆயுதங்களை யுடையவர்களுமான ரதிகர்களோடும், யானை வீரர்களோடும், குதிரை வீரர்களோடும் நான்கு பக்கத்திலும் கர்ணனைச் சூழ்ந்து கொண்டு கொல்லவேண்டுமென்கிற எண்ணத்தினால் எதிர்த்து வந்தான். பாண்டவர்களுடைய சிறந்த வீரர்களால் நன்கு எதிர்க்கப்பட்டவனும், கூர்மையுள்ளவைகளும், கோரமானவை களும், அவரவர் பெயர்களால் அடையாளமிடப்பட்டவை களுமான அம்புகளாலே மூடப்படுகின்றவனுமான அந்தக் கர்ணன் அஸுரர்களால் சூழப்படுகின்ற மஹேந்திரன்போல யுத்தத்தில் சற்றேனும் அசையவில்லை. பரதஸ்ரேஷ்டரே! பிறகு, அளவிட முடியாத பலமுள்ள சூரியகுமாரனான கர்ணன், மஹா வில்லாளி களான பாஞ்சாலர் இருபத்தொருவரையும், சிறந்தவர்களான சேதிவீரர் பதின்மரையும் அப்பொழுது கொன்றான். பெரியவரே! நன்குபிரயோகிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான அந்தக்கர்ணனுடைய பாணங்கள் விட்டிற்பூச்சிகளுடைய கூட்டங்கள் போல எல்லா திக்குக்களிலும் காணப்பட்டன. கர்ணனுடைய பெயரினால் அடை யாளமிடப்பட்டவைகளும், ஸ்வர்ணமயமான கட்டுகளுள்ளவை களும், நன்றாகத் தீட்டப்பட்டவைகளுமான பாணங்கள், மனிதர் கள், குதிரைகள் இவற்றின் சரீரங்களைப் பிளந்துகொண்டு நாற் புறத்திலும் பூமியில் விழுந்தன. யுத்தகளத்தில் அப்பொழுது

கர்ணன் ஒருவனாலே இறந்த சைத்யவீரர்களும் எல்லா ஸ்ருஞ்சயர்களும் நூறுநூறாகக் கொல்லப்பட்டார்கள். கர்ணனுடைய பாணங்களால் (ஆகாயம்) நன்றாக மறைக்கப்படவே, மிகுந்த இருள் தோன்றியது. பிறகு, பகைவர்களுடையதும் தன்னுடையதுமான ஒன்றுமே அறியப்படவில்லை. க்ஷத்திரியர்களுக்குப் பயங்கரமாக ஏற்பட்டிருக்கின்ற அந்த இருட்டில் மிக்க கைவலிமையுள்ள கர்ணன் அநேக க்ஷத்திரியர்களை எரித்துக்கொண்டு ஸஞ்சரித்தான். பிறகு, பாணங்களாகிற மஹாஜ்வாலைகளுடன் கூடியதும், வீரியமாகிற சுடுகையுள்ளதுமான கர்ணனாகிற நெருப்பானது பாண்டவர்களாகிற காட்டை எரித்துக்கொண்டு யுத்தத்தில் அழகாக நாற்புறத்திலும் ஸஞ்சரித்தது. மஹாராஜரே! பிறகு, அந்தப் பாண்டவர்களைச் சேர்ந்த மஹாரதர்களும், எல்லா ஸ்ருஞ்சயர்களும் நூறுநூறாகவும் ஆயிரமாயிரமாகவும் அஸ்திரங்களைப் பிரயோகித்துக்கொண்டு மஹாவில்லாளியான கர்ணனை நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டார்கள். மஹாவில்லாளியான அந்தக் கர்ணன் மஹாபலசாலிகளான வீரர்களுடைய மஹாஸ்திரங்களைத் தடுத்து அட்டஹாஸஞ் செய்து, அரசரான யுதிஷ்டிரருடைய வில்லை வெட்டினான். பிறகு, கர்ணன் ஒரு நிமிஷத்துக்குள் படிந்த கணுக்களுள்ள தொண்ணூறு பாணங்களை ஸந்தானஞ் செய்து, கூர்மையுள்ள அந்த அம்புகளால் யுத்தத்தில் யுதிஷ்டிரராஜருடைய கவசத்தை உடைத்தான். பொன்னால் வேலைசெய்யப்பட்டதும், இரத்தினங்களால் சித்திரிக்கப்பட்டதும், விழுகின்றதுமான அந்தக் கவசமானது காற்றினாலடிக்கப்பட்டுச் சூரியனோடு சேர்ந்திருக்கிற மின்னலுள்ள மேகம்போல் விளங்கியது. யுதிஷ்டிரராஜருடைய அங்கத்தினின்று நழுவினதும், விசித்திரமான இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான அந்தக் கவசமானது இரவில் மேகமில்லாத ஆகாயம்போல் விளங்கியது. புருஷச்ரேஷ்டரே! பாணங்களால் கவசம் பிளக்கப்பட்டவரும் ரத்தத்தினால் நன்கு நனைக்கப்பட்டவருமான யுதிஷ்டிரர் உதிக்கின்ற சூரியன்போலப் பிரகாசித்தார். பாணங்களால் எல்லா அங்கங்களும் நிறைக்கப்பட்டவரும் கவசம் உடைக்கப்பட்டவருமான அந்த யுதிஷ்டிரர் யுத்தத்தில் க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொண்டு ஸிம்மநாதஞ் செய்தார். பாண்டவர் யுத்தத்தில் பரபரப்புள்ளவராக நெடுநேரம் கர்ஜித்து ஜ்வலிக்கின்ற வஜ்ராயுதம் போலிருக்கின்ற சக்தியை வேகத்துடன் பிரயோகித்தார். ஆகாயத்தில் ஜ்வலிக்கின்றதுபோலுள்ள அந்தச் சக்தியை விரைவாகச் செல்லுகின்ற ஏழு பல்லங்களாலே ராதேயன் துண்டாக்கினான்.

அந்தச் சக்தியானது யுத்தத்தில் சிதறிவிட்டது. சுறுசுறுப்புடன் காரியத்தைச் செய்பவரான யுதிஷ்டிரர் நான்கு தோமரங்களாலே கர்ணனை மார்பிலும் இரண்டு கைகளிலும் நெற்றியிலும் அடித்து ஸந்தோஷத்தாலே ஸிம்மநாதஞ்செய்தார். வெளியில் பெருகுகின்ற இரத்தத்துடன் கூடின கர்ணன் கோபமுள்ள ஸர்ப்பம்போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஒன்பது பாணங்களாலே யுதிஷ்டிரருடைய ஸாரதியான [1] பார்ஷ்டியை அடித்தான்; அரசரான யுதிஷ்டிரருடைய துவஜத்தையும் வெட்டினான்; அந்த யுதிஷ்டிரரையும் மூன்று பாணங்களால் அடித்தான்; அவருடைய இரண்டு அம்புத் தூணிகளையும் உடைத்தான்; ரதத்தையும் எள்ளளவாக வெட்டினான். பாரதரே! இந்த ஸமயத்தில் பாண்டவர்களைச் சேர்ந்த சூரர்களான மஹாரதர்கள் ராதேயன்மீது அம்பு மழைகளைப் பொழிந்தார்கள். மஹாராஜரே! ஸாத்யகியும் சிகண்டியும், பகைவர்களை நாசஞ் செய்பவனான கர்ணன்மீது இருபத்தைந்து பாணங்களையும் ஒன்பது பாணங்களையும் வருஷித்தார்கள். அரசரே! பிறகு, கர்ணன் கோபங்கொண்டு ஐந்து பாணங்களாலும் வேறு மூன்று சிலீமுகங்களாலும் யுத்தத்தில் ஸாத்யகியை அடித்தான். அவன் அந்தச் சைனேயனுடைய வலக்கையை மூன்று பாணங்களாலும், இடக்கையை பதினாறு பாணங்களாலும், அவனுடைய ஸாரதியை ஏழுபாணங்களாலும் அடித்தான். பிறகு, கூர்மையுள்ள நான்கு அம்புகளாலே அவனுடைய நான்கு குதிரைகளையும் சீக்கிரம் யமனுடைய வீட்டுக்கு அனுப்பினான். பிறகு, மஹாரதனான கர்ணன் வேறொரு பல்லத்தினாலே வில்லை அறுத்துத் தலைப்பாகையுடன் கூடின ஸாரதியினுடைய தலையைச் சரீரத்தினின்று கவர்ந்தான். குதிரைகளும் ஸாரதியும் கொல்லப்பட்ட ரதத்தில் வீற்றிருக்கின்ற அந்தச் சைனேயன் கர்ணன்மீது வைடூர்ய ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சக்தியாயுதத்தைப் பிரயோகித்தான். பாரதரே! வில்லாளிகளுள் சிறந்தவனான கர்ணன் வருகின்ற அந்தச் சக்தியை உடனே இரண்டாகத் துண்டாக்கி அவர்களனைவரையும் எதிர்த்தான். அளவிடற்கரிய பலமுள்ள கர்ணன் பிறகு மஹாரதர்களான அந்தப் பாண்டவ வீரர்களைக் கூர்மையுள்ள பாணங்களால் பயிற்சியினாலும் பலத்தினாலும் தடுத்தான். ராதாபுத்திரனான கர்ணன் ஸிம்மமானது அற்ப மிருகங்களைப் பிடிப்பதுபோலப் பாணங்களால் அவர்களைப் பிடித்துப் படிந்த கணுக்களுள்ள அம்புகளால் தர்ம

[1] 'பார்ஷ்ணி' என்பது வியாக்கியான பாடம்.

ராஜரைத் துன்புறும்படி செய்து கூர்மையான அம்புகளைப் பிரயோகித்துக்கொண்டு அவருக்கெதிரில் வந்தான். பிறகு, குதிரைகளும் ஸாரதியும் கொல்லப்பட்ட தர்மபுத்திரர் மனம் நொந்து கர்ணனுக்கு எதிரில் நிற்பதற்குச் சக்தியற்றவராகி விலகிச் சென்றார். அரசரே! கர்ணன், பாண்டு புத்திரரான அந்த யுதிஷ்டிரரை எதிர்த்துச் சென்று நிந்திக்கிறவன்போல உரக்கச் சிரித்துக் கொண்டு பாண்டவரைப் பார்த்து, 'நற்குலத்தில் பிறந்து க்ஷத்திரிய தர்மத்தில் நிலைபெற்றவன் எவ்வாறு யுத்தத்தில் பகைவர்களை விட்டு விலகுவான்? மஹாயுத்தத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள். நீ க்ஷத்திரிய தர்மங்களில் சாமர்த்தியமற்றவனென்பது என்னுடைய எண்ணம். பிராம்மணனுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடிய வேதாத்யயனத்திலும் யஜ்ஞ கர்மத்திலும் நீ பற்றுள்ளவன். குந்தீ புத்திர! நீ யுத்தஞ் செய்யாதே. வீரர்களை அணுகாதே. இவ்வாறு அப்பிரியத்தைப் பேசாதே. நீ யுத்தத்தை நாடாதே. ஐயா! மற்றவர்களைச் சொல்லலாம். என்னைப்போன்றவர்கள் சொல்லத்தக்கவர்களல்லர். யுத்தத்தில் என்னைப்போன்றவர்களைப்பற்றிப் பேசுகின்ற நீ இதனையும் மற்றதையும் அடைவாய். குந்தீ புத்திர! உன்னுடைய வீட்டுக்குப் போ. அல்லது எவ்விடத்தில் கிருஷ்ணார்ஜுனர்கள் இருக்கிறார்களோ அங்கே போ. ராஜனே! கர்ணன் எவ்விதத்தினாலும் யுத்தத்தில் உன்னைக் கொல்லமாட்டான்' என்று சொன்னான். புருஷர்களுள் சிறந்தவனும் மஹாரதனுமான கர்ணன் குந்தி தேவிக்குக் கொடுத்திருக்கிற வரத்தை நினைத்து, வதமடையவேண்டிய நிலைமையை அடைந்திருக்கின்ற தர்மராஜரைக் கொல்லவில்லை. பிறகு, மஹாபலசாலியான கர்ணன், இவ்வாறு சொல்லி யுதிஷ்டிரரை விட்டு விட்டு, வஜ்ரபாணியான இந்திரன் அஸுர ஸேனையைக் கொல்வதுபோலப் பாண்டவ சேனையைக் கொன்றான். அரசரே! பிறகு, யுதிஷ்டிர ராஜர் வெட்கமடைந்து விரைவாக யுத்தத்தை விட்டு விலகினார். பிறகு, யுதிஷ்டிரராஜர் விலகினதாக எண்ணிச் சைத்யர்களும் பாண்டவர்களும் பாஞ்சாலர்களும் மஹாரதனான ஸாத்யகியும் அவ்வாறே சூரர்களான திரௌபதி புத்திரர்களும் மாத்ரீ புத்திரர்களான நகுல ஸஹதேவர்களும் நிலையில் தவறாதவரான தர்மராஜரை அனுஸரித்தார்கள். பிறகு, வீரனான கர்ணன் திரும்பிச் செல்லுகின்ற யுதிஷ்டிரருடைய படையைக் கண்டு மகிழ்ச்சியுற்றுக் கௌரவர்களுடன் கூடிப் பின்புறத்தில் தொடர்ந்து சென்றான். பேரிகள், சங்கங்கள், மிருதங்கங்கள், விற்கள் இவற்றின் ஒலியும் அவ்வாறே தார்த்தராஷ்டிரர்களுடைய ஸிம்மநாதமும் தோன்றின. கௌரவரே! மஹாராஜரே!

பெரியவரே! யுதிஷ்டிரரே, விரைவாக ஸ்ருதகீர்த்தியினுடைய ரதத்தில் ஏறிக்கொண்டு அந்தக் கர்ணனுடைய விக்கிரமத்தையும் அவனாலே சேனை துரத்தியடிக்கப்படுவதையுங் கண்டு கோபங் கொண்டு, தம்முடைய யுத்த வீரர்களைப் பார்த்து, 'வீரர்களே! இவர்களைக் கொல்லுங்கள். ஏன் சும்மா இருக்கிறீர்கள்?' என்று சொன்னார். பிறகு, அரசராலே அனுமதி கொடுக்கப்பட்டவர்களும் பீமஸேனனை முதன்மையாகக் கொண்டவர்களுமான பாண்டவர்களுடைய எல்லா மஹாரதர்களும் உம்முடைய புத்திரர்களை நோக்கி ஸமீபத்தில் வந்தார்கள். பாரதரே! அவ்விடத்தில் யுத்த வீரர்களுடைய சப்தமும் ஓடுகின்ற ரதங்கள், யானைகள், குதிரைகள், காலாட்கள் இவைகளுடைய பெரிய சப்தமும் ஆங்காங்கு உயரத் தூக்கிப் பிடிக்கப்பட்ட சஸ்திரங்களுடைய சப்தமும் மிகுதியாகத் தோன்றின. மஹாயுத்தத்தில் போர்வீரர்கள் 'வாருங்கள்; அடியுங்கள்; விரைவாக நாற்புறங்களிலும் ஓடுங்கள்' என்று சொல்லிக்கொண்டு ஒருவரையொருவர் அடித்தார்கள். அந்த ரணகளத்தில் ஆகாயத்தில் அம்பு மழைகளால் மேகத்தினால் நிழலுண்டாவதுபோல நிழலுண்டாயிற்று. ஐயா! சூழ்ந்திருப்பவர்களும் ஒருவரையொருவர் துன்பஞ் செய்கின்றவர்களுமான புருஷச்ரேஷ்டர்களால் அரசர்கள், கொடிகளையும் கொடி மரங்களையும் குடைகளையும் குதிரைகளையும் ஸாரதிகளையும் ரதங்களையும் ஆயுதங்களையும் இழந்தவர்களாகவும் அங்கங்களையும் அங்கங்களின் உறுப்புக்களையும் இழந்தவர்களாகவும் க்ஷீணித்து, வஜ்ராயுதத்தால் பிளக்கப்பட்ட மலைச்சிகரங்கள் போல விழுந்தார்கள். பாகர்களுடன் கூடின யானைகள் வெட்டப்பட்டும் உடைக்கப்பட்டும் மாறுபாடடைந்துமிருக்கின்ற கவசங்களுடனும் அலங்காரங்களுடனும் கூடின சரீரங்களையுடையவர்களாக வெட்டப்பட்டும் கொல்லப்பட்டும் பூமியில் விழுந்தன. வீரர்கள் ஏறிச் செலுத்திய குதிரைகள் அவ்வீரர்களும் கொல்லப்பட்டு ஆயிரமாயிரமாக விழுந்தன. ஆயுதங்களால் நன்கு அடிக்கப்பட்ட சரீரங்களையுடைய யானைகள் ரதிகர்களால் கொல்லப்பட்டன. யுத்தத்தில் ஆயிரக்கணக்கான காலாட் கூட்டங்கள் எதிரி வீரர்களால் நாசம் பண்ணப்பட்டன. அகன்றும் நீண்டும் சிவந்துமிருக்கின்ற கண்களை உடையவைகளும் தாமரைமலரும் சந்திரனும் போன்றவைகளுமான முகங்களுள்ள யுத்த வீரர்களுடைய தலைகளால் பூமியானது நான்கு பக்கத்திலும் மூடப்பட்டது. ஜனங்கள் விமானத்தில் அப்ஸரஸுக் கூட்டங்களின் கான வாத்யங்களின் சப்தங்களுடன் கூடின சப்தத்தை, பூமியில்போல ஆகாயத்திலும் கேட்டார்கள். வீரர்களாலே லக்ஷக்கணக்காக எதிரில் கொல்லப்பட்டிருக்

கின்ற வீரர்களை அப்ஸரஸுக்களின் கூட்டங்கள் விமானங்களில் ஏற்றி ஏற்றி வைத்துக்கொண்டு சென்றனர். மிக்க ஆச்சரியமான அந்தச் செய்கையைப் பிரத்யக்ஷமாகக் கண்டு ஸ்வர்க்கத்திலுள்ள விருப்பத்தினால் சூரர்கள் மிக்க ஸந்தோஷமுள்ள மனத்தையுடையவர்களாக ஒருவரையொருவர் விரைவாகக் கொன்றார்கள். யுத்தத்தில் ரதிகர்கள் ரதிகர்களோடு எதிர்த்து விசித்திரமாக யுத்தம் செய்தார்கள். காலாட்களோடு காலாட்களும் யானைகளோடு யானைகளும் குதிரைகளோடு குதிரைகளும் போர்புரிந்தன. யானைகளுக்கும் குதிரைகளுக்கும் மனிதர்களுக்கும் நாசத்தை உண்டுபண்ணுகின்ற யுத்தமானது சேனையினால் உண்டுபண்ணப்பட்ட புழுதியினால் மூடப்பட்டு இவ்வாறு நடந்துவரும் பொழுது நம்மவர் நம்மவரையும் பகைவர்கள் பகைவர்களையும் கொன்றார்கள். வீரர்கள் ஒருவரையொருவர் மயிரைப் பிடித்தும் பற்களால் கடித்தும் நகங்களால் கிள்ளியும் சண்டைசெய்தார்கள். வீரர்களுடைய தேகங்களையும் பாவங்களையும் போக்குகின்ற முஷ்டி யுத்தமும் வாகு யுத்தமும் நடந்தன. யானைகளுக்கும் குதிரைகளுக்கும் மனிதர்களுக்கும் க்ஷயத்தை உண்டுபண்ணுகின்ற அவ்வாறான யுத்தம் நடக்கும் போது மனிதர்கள் குதிரைகள் யானைகள் இவற்றின் தேகங்களினின்று இரத்தநதி பெருகியது. அந்த ரத்த நதியானது மனிதர்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் நெருங்கிய அந்த யுத்தத்தில் விழுந்திருக்கின்ற அநேக மனிதர்கள், குதிரைகள், யானைகள், பாகர்கள் இவர்களுடைய சரீரங்களை இழுத்துக் கொண்டு சென்றது. இரத்தத்தை ஜலமாகக்கொண்டதும் மிக்க கோரமாயிருப்பதும் மாமிசங்களாலும் ரத்தங்களாலும் சேருள்ளதும் மனிதர்கள் குதிரைகள் யானைகளின் தேகங்களை இழுத்துக் கொண்டு செல்லுகின்றதுமான அந்த இரத்த நதியானது பயப்படுகிறவர்களுக்குப் பயத்தைச் செய்வதாயிருந்தது. வெற்றியை விரும்புகின்றவர்களான சிலர் அந்த ரத்தத் நதியினுடைய அக்கரையை யானையினால் அடைந்தார்கள். மற்றவர்கள் நீந்தியும் அமிழ்ந்தும் மேலே எழுந்தும் அக்கரையை அடைந்தார்கள். பரதஸ்ரேஷ்டரே! அந்த வீரர்கள் ரக்தத்தினால் பூசப்பட்ட அங்கங்களையுடையவர்களாகவும் சிவந்திருக்கின்ற கவசங்களையும் ஆயுதங்களையும் வஸ்திரங்களையுமுடையவர்களாகவும் அந்த ரத்த நதியில் மூழ்கினார்கள்; இரத்தத்தையுங் குடித்தார்கள்; ஸந்தோஷத்தையும் இழந்தார்கள். ஆயிரக்கணக்காக விழுந்திருக்கின்ற ரதங்களையும் குதிரைகளையும் மனிதர்களையும் யானைகளையும் ஆயுதங்களையும் ஆபரணங்களையும் கவசங்களையும் கண்டோம். ஆகாயத்

தையும் ஸ்வர்க்கத்தையும் பூமியையும் திக்குகளையும் பெரும்பான்மையாகச் சிவந்த நிறமுள்ளவைகளாகக் கண்டோம். பாரதரே! ரத்தத்தினுடைய நாற்றத்தினாலும் ஸ்பரிசத்தினாலும் ரஸத்தினாலும் மிக்க சிவப்பான ரூபத்தினாலும் பரவுகின்ற சப்தத்தினாலும் சேனைக்குப் பெரும்பான்மையாக மிக்க பெரிதான துயரம் நேர்ந்தது. பீமஸேனன் முதலான வீரர்களால் நன்றாக அடிக்கப்பட்ட உம்முடைய அந்தச் சேனையைக் குறித்து அப்பொழுது ஸாத்யகிமுதலான வீரர்கள் மறுபடியும் நன்றாக எதிர்த்து வந்தார்கள். ராஜரே! வருகின்ற அந்த வீரர்களுடைய வேகம் ஸஹிக்க முடியாமலிருப்பதைக் கண்டு உம்முடைய புத்திரர்களது பெருஞ் சேனையானது புறங்காட்டி ஓடியது. நான்கு பக்கத்திலும் அந்த வீரர்களாலே கலக்கப்பட்ட உம்முடைய அந்தச் சேனையானது ரதங்களும் குதிரைகளும் யானைகளும் சிதறினதாகவும் மனிதர்களாலும் குதிரைகளாலும் வியாபிக்கப்பட்டதாகவும் கவசங்கள் அழிக்கப்பட்டதாகவும் நன்றாக அடிக்கப்பட்டிருக்கிற ஆயுதங்களையும் விற்களையுமுடையதாகவும் காட்டில் சிங்கத்தால் பீடிக்கப்படும் யானைக்கூட்டம்போல் விரைவாக ஓடியது.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்

(கர்ணனைத் தோல்வி அடையச் செய்து கொல்லக் கருதிய பீமனைச் சல்யன் காரணங்களைச் சொல்லித் தடுத்தது)

மஹாராஜரே! எதிர்த்துவருகின்ற அந்தப் பாண்டவர்களைக் கண்டு உம்முடைய சேனையைத் துரியோதனன் நான்கு பக்கத்திலும் தடுத்தான். பாரதரிற் சிறந்தவரே! அரசரே! யுத்த வீரர்களையும் தன்னுடைய சேனையையும் நாற்புறங்களிலும் உம்முடைய புத்திரன் அழைத்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் திரும்பவில்லை. பாரதரே! பிறகு, பக்ஷங்களிலும் பக்ஷங்களுடைய நுனிகளிலும் நடுவயிற்றிலும் நின்றுகொண்டிருந்த கௌரவர்கள் அப்பொழுது சஸ்திரங்களுடன் கூடினவர்களாக யுத்தத்தில் பீமஸேனனைக் குறித்து எதிர்த்துச் சென்றார்கள். கர்ணனும், புறங்காட்டி ஓடுகின்ற தார்த்தராஷ்டிரர்களைக் கண்டு மத்திரராஜனைப் பார்த்து, 'பீமனுடைய ரதத்தை நோக்கிச் செல்' என்று சொன்னான். கர்ணன் இவ்வாறு சொல்லக் கேட்ட மத்திரதேசாதிபதியான சல்யன் அப்பொழுது பீமஸேனன் இருக்குமிடத்துக்கு ஹம்ஸம் போன்ற நிறமுள்ள சிறந்த குதிரைகளை

நடத்தினன். மஹாராஜரே! யுத்தத்தில் பிரகாசிக்கின்ற சல்யனாலே தூண்டப்பட்ட அந்தக் குதிரைகள் பீமஸேனனுடைய ரதத்தை நெருங்கி நன்றாக எதிர்த்து நின்றன. பரதஸ்ரேஷ்டரே! எதிர்த்துவருகின்ற கர்ணனைக்கண்டு பீமன் கோபத்துடன் அவனுடைய அழிவின்பொருட்டுப் புத்தியைச் செலுத்தினன். அந்தப்பீமன் வீரனான ஸாத்யகியையும் பார்ஷதனான திருஷ்டத்யும்னனையும் பார்த்து, 'நீங்கள் தர்மாத்மாவான யுதிஷ்டிரராஜரை ரக்ஷியுங்கள்; நான் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பெரிதான ஸம்சயத்தினின்று பிரயாஸத்தால் விடுபட்டார். துராத்மாவான ராதேயனால் துரியோதனனுடைய பிரீதிக்காக என் முன்னிலையில் ராஜாவான தர்மநந்தனர் எல்லா உபகரணங்களும் முறிக்கப்பட்டவராகச் செய்யப்பட்டார். பார்ஷத! இப்பொழுது அந்தத் துக்கத்தினுடைய முடிவை அடையப்போகிறேன். மிக்க கோரமான இந்த யுத்தத்தில் [1] இப்பொழுது கர்ணனையாவது நான் கொல்வேன்; அல்லது கர்ணனாவது என்னைக் கொல்லுவான். இது ஸத்தியமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுது அரசரை உங்களிடத்தில் அடைக்கலப் பொருளாகக் கொடுக்கிறேன். நீங்களனைவரும் மனக் கவலையற்றவர்களாக அவரை ரக்ஷிப்பதில் முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொன்னன். மிக்க தோள்வலிமையுள்ள பீமஸேனன் இவ்வாறு சொல்லிவிட்டு உரத்த ஸிம்மநாதத்தினாலே எல்லாத் திக்குக்களையும் எதிரொலியிடும்படி செய்துகொண்டு கர்ணனைநோக்கி எதிர்த்துச் சென்றான். போரில் மகிழ்பவனும் விரைவாக வருகின்றவனுமான பீமனைக் கண்டு பிரபுவான மத்ரநாதன் பிறகு ஸூதபுத்திரனைப் பார்த்துக் கூறலானான். 'கர்ண! மிக்க புஜபலமுள்ளவனும் கடுங்கோபமுள்ளவனும் நெடுநாளாகச் சேர்த்துவைத்த கோபத்தை உன்னிடத்தில் விடவேண்டுமென்று நிச்சயமான எண்ணங்கொண்டவனுமான பாண்டுநந்தனனைப் பார். கர்ண! முன்பு, அபிமன்யு கொல்லப்பட்டபோதும் ராக்ஷஸனான கடோத்கசன் கொல்லப்பட்டபோதுங்கூட இந்தப் பீமஸேனனிடத்தில் இவ்வித ரூபத்தை நான் ஒருபொழுதும் கண்டதில்லை. பீமன் கோபித்தால் மூவுலங்களனைத்தையும் எதிர்ப்பதில் ஸாமர்த்தியமுடையவன்; பிரளயகால நெருப்புக்குச் சமமான ஒளி பொருந்தியதும் தகுந்ததுமான ரூபத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறான்' என்று சொன்னன். அரசரே! மத்திரநாதன் ராதேயனை நோக்கி இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, விருகோதரன் கோபத்தினால் ஜ்வலித்துக்கொண்டு கர்ணனை எதிர்த்து

---

[1] இரண்டு சொற்கள் விடப்பட்டன.

வந்தான். பிறகு, எதிர்த்து வருகின்றவனும் யுத்தத்தைக் கண்டு களிப்பவனுமான பீமனைக் கண்டு, ராதேயன், உரக்கச் சிரித்துக்கொண்டு சல்யனைப்பார்த்து, மத்திரராஜனே! பிரபுவே! பீமஸேனனைப்பற்றி நீ என்னிடத்தில் இப்பொழுது சொல்லிய வார்த்தை உண்மையே. இந்த விஷயத்தில் ஸம்சயமில்லை. இந்த விருகோதரன் சூரன்; வீரன்; கடுஞ் சினமுள்ளவன்; சரீரத்தில் அபேக்ஷையில்லாதவன்; பலத்தினால் பலசாலிகளை மிஞ்சியவன். அப்பொழுது விராட நகரத்தில் அஞ்ஞாதவாஸஞ் செய்கின்ற பீமஸேனன், மறைந்திருக்குந்தன்மையை அடைந்து, திரௌபதிக்குப் பிரியத்தைச் செய்யும் விருப்பத்தினாலே தன் கைகளின் உதவியினாலேயே அவன் கீசகனைப் பந்துவர்க்கங்களுடன் கொன்றான். போர் முனையில் ஸன்னத்தனாயிருப்பவனும் கோபமூண்டவனுமான அந்தப் பீமஸேனன் இப்பொழுது காலதண்டத்தைக் கையிற்கொண்ட மிருத்யுவோடும் எதிர்த்து யுத்தத்தைச் செய்வான். 'யுத்தத்தில் அர்ஜுனனையாவது நான் கொல்ல வேண்டும்; அல்லது, அவனாவது என்னைக் கொல்லவேண்டும்' என்கிற இந்த விருப்பமானது நெடுங்காலமாக என்னால் கொள்ளப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட என்னுடைய மனோரதமானது ஒருகால் இப்பொழுதே பீமனுடைய எதிர்ப்பினால் உண்டாகலாம். பீமஸேனன் கொல்லப்பட்டாலும் அல்லது ரதத்தை இழந்தவனாகச் செய்யப்பட்டாலும் அர்ஜுனன் என்னை எதிர்த்துவருவான். அது எனக்கு நல்லதாகும். இச்சமயத்தில் எதனைத் தகுந்ததாக எண்ணுகிறாயோ அதனைச் சீக்கிரமாக நிச்சயம் பண்ணு' என்று சொன்னான்.

சல்யன், அளவற்ற பராக்கிரமமுள்ள ராதேயனுடைய இந்த வார்த்தையைக் கேட்டு, அவ்வித நிலைமையை அடைந்திருக்கின்ற ஸூதபுத்திரனைப்பார்த்து, மிக்கதோள்வலியமைந்தவனே! மஹா பலசாலியான பீமஸேனனை எதிர்த்துச்செல். உன்னுடையசக்தியை நன்றாகக் காட்டிக்கொண்டு (உயிரில்) அபேக்ஷையில்லாதவனாக யுத்தஞ்செய். கர்ண! நெடுங்காலமாக உன்னால் விரும்பப்பட்டு மனத்திலேயேயிருக்கிற விருப்பத்தை நீ அடையப்போகிறாய். இது ஸத்யமென்று உனக்குச் சொல்லுகிறேன்' என்று சொன்னான். பிறகு, இவ்வாறு சொல்லக்கேட்ட கர்ணன், மறுபடியும் சல்யனைப்பார்த்து, 'கோபமுள்ளவனான இந்தப் பீமஸேனனை நான் கொல்வேன்; அல்லது விருகோதரனாவது என்னைக்கொல்வான்' என்றுகூறினான். மஹாராஜரே! ரதிகர்களுள் சிறந்தவனான ராதேயன், இவ்வாறு

சொல்லிவிட்டு, யுத்தத்தில் மனத்தைச் செலுத்தி 'போ, போ' என்று தூண்டினான். அரசரே! பிறகு, மஹாவில்லாளியான பீமன் சேனையைத் துரத்துமிடத்திற்குச் சல்யன் விரைவாக ரதத்தோடு சென்றான். ராஜேந்திரரே! கர்ணனுக்கும் பீமனுக்கும் யுத்தம் நேர்ந்திருக்குங் காலத்தில் தூர்யங்களுடைய கோஷமும் பேரிகளுடைய பேரொலியும் தோன்றின. பிறகு, பலசாலியான பீமஸேனன் கோபங்கொண்டு அணுக முடியாததான அந்தக் கர்ணனுடைய சேனையைப் பளபளப்புள்ளவைகளும் கூர்மையுள்ளவைகளுமான நாராசங்களாலே திக்குகளில் ஓடும்படி செய்தான். மன்னரே! மஹாராஜரே! யுத்தத்தில் கர்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் கைகலந்ததும் கோரமான காட்சியுள்ளதுமான அப்படிப்பட்ட யுத்தமானது அதிபயங்கரமாக நேர்ந்தது. ராஜேந்திரரே! பிறகு, மிக்க தோள்வலியமைந்த பீமஸேனன் சிரித்துக்கொண்டே ஒரு முகூர்த்த காலத்திற்குள் அதிக ச்ரமமில்லாமல் கர்ணனை அணுக எண்ணி எதிரில் சென்றான். சூரியனுடைய குமாரனும் தார்மிகனுமான கர்ணன் எதிர்த்துவருகின்ற பீமஸேனனைக் கண்டு மிக்க கோபங்கொண்டு நாராசத்தினாலே நடு மார்பில் அடித்தான். அளவிட முடியாத பலமுள்ளவனான அந்தக் கர்ணன் மீண்டும் பாண மழைகளைப் பீமஸேனன்மீது பொழிந்தான். ஸூத புத்திரனால் அடிக்கப்பட்ட அந்தப் பீமஸேனன் பாணங்களால் அவனை மூடிக் கூர்மையுள்ளவைகளும் அமிழ்ந்த கணுக்களுள்ளவைகளுமான ஒன்பது பாணங்களால் அடித்தான். கர்ணன் பாணங்களால் அந்தப் பீமஸேனனுடைய வில்லை நடுவில் இரண்டாகத் துண்டாக்கினான். பிறகு, வில்லறுக்கப்பட்ட அந்தப் பீமஸேனனை மிக்க கூர்மையுள்ளதும் எல்லாக் கவசங்களையும் உடைக்குந்தன்மையுள்ளதுமான ஒரு நாராசத்தினால் நடு மார்பில் திருப்பி அடித்தான். அரசரே! மர்மஸ்தானங்களை அறிந்தவனான அந்தப் பீமஸேனன் வேறு வில்லை எடுத்துக் கூர்மையுள்ள அம்புகளால் கர்ணனை மர்மஸ்தானங்களில் அடித்து ஆகாயத்தையும் பூமியையும் நடுங்கச் செய்கிறவன்போல உரத்த சப்தத்துடன் ஸிம்மநாதஞ் செய்தான். கர்ணன், காட்டில் மதமிஞ்சின செருக்குள்ள யானையைக் கொள்ளிக்கட்டைகளால் அடிப்பதுபோல அந்தப் பீமஸேனனை இருபத்தைந்து நாராச பாணங்களால் அடித்தான். பிறகு, பாணங்களால் பிளக்கப்பட்ட அங்கங்களையுடையவனும் கோபமூண்டவனுமான பாண்டு நந்தனன் பரபரப்பினாலும் பொறாமையினாலும் கண்கள் சிவந்து ஸூத புத்திரனைக் கொல்ல விரும்பி மஹா வேகமுள்ளதும் பெரிய காரியங்களை

ஸாதிப்பதும் சிறந்ததும் மலைகளையும் பிளக்குந் திறமையுள்ளது மான ஓர் அம்பை வில்லில் பூட்டினான். வாயு குமாரனான ஹனுமானை மீறியிருக்கின்றவனும் மஹா வில்லாளியுமான அந்தப் பீமஸேனன் கோபங்கொண்டு திடமான வில்லைக் காதுவரையில் இழுத்துக் கர்ணனைக் கொல்லும் விருப்பத்தினால் அந்தப் பாணத்தைப் பிரயோகித்தான். பலசாலியான பீமஸேனனால் விடப்பட்டதும் வஜ்ராயுதம் இடி இவற்றின்[1] சப்தத்திற்கு ஒப்பான சப்தமுள்ளதுமான அந்தப் பாணமானது வஜ்ராயுதத்தினுடைய வேகமானது மலையைப் பிளப்பதுபோல யுத்தத்தில் கர்ணனைப் பிளந்தது. குருச்ரேஷ்டரே! பீமஸேனனால் அடிக்கப்பட்டவனும் பகைவர்களை அடக்கும் திறமையுடையவனும் ஸேனாதிபதியுமான அந்த ஸூத புத்திரன் ரத்தத்தினால் நனைக்கப்பட்ட மேனியை உடையவனாகிப் பிரஜ்ஞையை இழந்து உயிரை விட்டவன்போல் தேர் நடுவில் உட்கார்ந்தான். இந்த ஸமயத்தில் கர்ணனைக் கொல்லக் கருதி வருகின்ற விருகோதரனைக் கண்டு, திரும்பிச் செல்லும்படி செய்வதற்காக மத்திரராஜன் இந்த வார்த்தையைக் கூறலானான்.

'மிக்க புஜபலமுள்ளவனே! பீமஸேன! நான் உன்னைப் பார்த்துச் சொல்லுவதைக் கேள். காரணங்களோடு கூடின அந்த வார்த்தையைக் கேட்டு அதை அப்படியே செய்வாயாக. பராக்கிரமசாலியான கர்ணனுடைய வதமானது அர்ஜுனனால் பிரதிஜ்ஞை பண்ணப்பட்டிருக்கிறது. ஸவ்யஸாசியினுடைய அந்தப் பிரதிஜ்ஞையை அப்படியே நிறைவேற்றுவாயாக. உனக்கு மங்களமுண்டாகுக' என்றான். பீமஸேனன், 'அரசர்களுள் சிறந்தவனே! பார்த்தனுடைய உறுதியான விரதத்தை நான் அறிவேன். பாபியான கர்ணன் என் அருகில் அரசரான தர்மநந்தனரைப் பலாத்காரமாகப் பீடித்தான். அதனாலுண்டான கோபத்தால் மூடப்பட்ட நான் மற்ற விஷயத்தை ஆலோசிக்கவில்லை. ராதேயன் விழுந்தாலும் என்னுடைய கோபம் சாந்தியை அடையாது. இவனுடைய நாவை அறுப்பதற்கு இதுவே தகுந்த ஸமயமென்பது என்னுடைய எண்ணம். சல்ய! மாதுல! அரசர்கள் ஒன்றுசேர்ந்திருக்குந் தருணத்தில் மிக்க குரூரரான இந்தக் கர்ணன் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதே பொறுக்க முடியாத இழிவான அநேக வார்த்தைகளைச் சொன்னான். (அப்பொழுதே) தூரத்திலிருந்தே இந்தக் கர்ணனுடைய நாவை அறுத்தலை நான் பிரதிஜ்ஞை செய்தேன். அப்பொழுதே அதனைச் செய்யவும் விரும்பினேன்; யுதிஷ்டிரராஜருக்குப் பிரியத்தைச் செய்யும் விருப்பத்தினால் அந்தக் காலமானது பரிபாலிக்கப்பட்டது. மஹா

ராஜனே! காரணங்களுடனும் அர்த்தத்துடனுங்கூட நீ என்னை நோக்கிக் கூறிய வசனத்தை உக்ரமான வீர்யமுள்ள ஒளஷதம்போல் ஏற்றுக்கொண்டேன். பீபத்ஸுவானவன் பிரதிஜ்ஞையை இழந்து ஒருகாலும் ஜீவித்திருக்கமாட்டான். அவன் நாசமடைந்தால் கேசவருடன் கூடின நாங்களெல்லோரும் நாசமடைந்தவர்களே. கொடுந்தன்மையுடையவனும் பாவியும் பாவிகளுள் சிறந்தவனுமான கர்ணன் இப்பொழுது கிரீடியினால் பார்க்கப்பட்டவுடன் அவமானத்தை அடைவான். கொடிய செய்கையைச் செய்தவனான கர்ணன் யுதிஷ்டிரருடைய கோபத்தினால் முந்தியே எரிக்கப்பட்டிருக்கிறான். இப்பொழுது என்னுடைய ஸமீபத்தில் வந்திருக்கின்ற இந்தக் கர்ணன் உன்னால் பாதுகாக்கப்பட்டான்' என்றான்.

மத்ரநாதன் இவ்வாறான வார்த்தையைக் கேட்டு, பிரஜ்ஞையை இழந்தவனும் யுத்தத்தில் விளங்குகின்றவனும் ஸூதபுத்திரனுமான கர்ணனை ரதத்தோடு யுத்தபூமியினின்று வேறிடத்திற்குக் கொண்டு சென்றான். பிறகு கர்ணன் தோல்வியடையவே, துரியோதனனுடைய பெரும் படையானது நான்கு பக்கத்திலும் முறியடிக்கப்பட்டு ஹாஹாகாரங்கொண்டு நாற்புறங்களிலும் ஓடியது" என்று கூறினான்.

நாற்பத்தாறுவது அத்தியாயம்

(பீமனுக்கும் கர்ணனுக்கும் யுத்தமும், பீமன் துரியோதனன் தம்பியர் சிலரைக் கொன்றதும், ஸங்குல யுத்தமும்)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! மிக்க தோள்வலிமை யமைந்த கர்ணன் விருப்படிசெய்யப்பட்ட காரணத்தினால் பீமனால் செய்யப்பட்ட இந்தக் காரியமானது எவ்விதத்தாலும் எவராலும் செய்ய முடியாதது. கர்ணன் ஒருவனே யுத்தத்தில் ஸ்ருஞ்சயர்களுடன் கூடின பாண்டவர்களைக் கொல்லத் திறமையுள்ளவனென்று துரியோதனன் அடிக்கடி என்னிடத்தில் சொல்லியிருக்கிறான். பீமனால் யுத்தத்தில் கர்ணன் தோல்வியடைவிக்கப்பட்டதைக் கண்டு என் புத்திரனான துரியோதனன் அதற்குப்பிறகு என்ன செய்தான்?" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லத் தொடங்கினான்.

"மஹாராஜரே! மஹாயுத்தத்தில் ஸூத புத்திரனான கர்ணன் புறங்காட்டியதைப் பார்த்து, உம்முடைய குமாரன், தம்பியர்களை நோக்கி, 'சீக்கிரமாகச் செல்லுங்கள். உங்களுக்கு மங்களம். ஆழ்ந்திருக்கின்றதும் பீமஸேனனிடத்தினின்று உண்டான பயத்துடன்

கூடியதுமான துயரக்கடலில் முழுகுகின்ற ராதேயனை நான்குபக்கங்களிலும் காப்பாற்றுங்கள்' என்று கட்டளையிட்டான். அரசனால் கட்டளையிடப்பட்ட அவர்களோ பீமஸேனனைக் கொல்லவிரும்பி மிக்க கோபத்துடன் விட்டிற்பூச்சிகள் நெருப்பினிடம்வருவதுபோல (பீமஸேனனுக்கு)எதிரில்வந்தார்கள். வீர்யமுடையவர்களும்மிக்கவன்மையுடையவர்களுமான ஸ்ருதாயு, துர்த்தரன், க்ராதன், விவித்ஸு, விகடன், ஸமன், நிஷங்கி, கவசி, பாசி, நந்தன், உபநந்தன், துஷ்பிரதர்ஷன், ஸுபாஹு, வாதவேகன், ஸுவர்ச்சஸ், தனுக்ராஹன், துர்மதன், ஜலஸந்தன், சலன், ஸஹன் ஆகிய இவர்கள் ரதிகர்களால் சூழப்பட்டவர்களாகிப் பீமஸேனனை யடைந்து நாற்புறங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள். அவர்கள் பற்பல அடையாளமுள்ள பாண ஸமூகங்களை நாற்புறங்களிலும் பிரயோகித்தார்கள். அரசரே! அவர்களால் அடிக்கப்படுகின்ற மஹா பலசாலியான பீமஸேனன் விரைவாகவருகின்ற அந்த உமது குமாரர்களுடைய ஐந்நூற்றைம்பது ரதங்களையும் நாசஞ்செய்தான். மஹாராஜரே! பிறகு, கோபமுண்டபீமஸேனன், விவித்ஸுவினுடைய தலையை ஒருபல்லத்தினால் கவர்ந்தான். அறுக்கப்பட்ட அந்தத் தலையானது பூமியில் விழுந்தது. மஹாராஜரே! குண்டலங்களோடுகூடியதும் தலைப்பாகையை அணிந்ததும் பூர்ணசந்திரனைப்போன்றதுமான அந்தத் தலையானது ஆகாயத்தில் பூர்ணசந்திரன் விளங்குவதுபோல் விளங்கியது. சூரனான அந்த விவித்ஸு கொல்லப்பட்டதைகண்டு அப்பொழுது நாற்புறங்களிலுமுள்ள பிராதாக்கள் பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமனை யுத்தத்தில் எதிர்த்துவந்தார்கள். பிறகு, யுத்தத்தில் பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமன் மஹாயுத்தத்தில் வேறு இரண்டு பல்லங்களாலே உமது இரண்டு குமாரர்களுடைய உயிரை வாங்கினான். அரசரே! தேவகுமாரர்களுக்கொப்பான விகடன், ஸஹன் என்கிற இவ்விருவரும் காற்றினால் முறிக்கப்பட்ட இரண்டு மரங்கள் போலப் பூமியில் விழுந்தார்கள். பிறகு, பீமன் விரைவுள்ளவனாகி மிக்க கூர்மையான நாராசத்தினால் க்ராதனை யமலோகத்துக்கு அனுப்பினான். அவன் கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்தான். ஜனேஸ்வரரே! பிறகு, வீரர்களும் வில்லாளிகளுமானஉம்முடைய புத்திரர்கள் கொல்லப்படும்பொழுது மிக அதிகமான கூக்குரல் தோன்றியது. அவர்களுடைய சேனையானது நன்கு கலக்கப்படுகையில் மஹா பலசாலியான பீமன் யுத்தத்தில் நந்தனையும் உபநந்தனையும் யமலோகத்துக்கனுப்பினான். பிறகு, யுத்தத்தில் காலனுக்கும் அந்தகனுக்

கும் யமனுக்கும்ஒப்பான பீமஸேனனைக்கண்டுமனத்தளர்ச்சியடைந்த உம்முடைய அந்தப் புத்திரர்கள் பயந்து ஓடினார்கள். உம்முடைய புத்திரர்கள் கொல்லப்பட்டதைக்கண்டு மிக்கமனவருத்தமுற்றவனான கர்ணன் எந்த இடத்தில் பாண்டவனிருக்கிறானோ அந்த இடத்திற்கு ஹம்ஸங்களுடைய நிறம்போன்ற நிறமுடைய குதிரைகளைமறுபடியும் ஓட்டும்படி செய்தான். மஹாராஜரே! மத்திர ராஜனாலே ஓட்டப் பட்ட அந்தக் குதிரைகள் வேகத்துடன் பீமஸேனனுடைய தேரை அடைந்து ஸன்னத்தமாக நின்றன. வேந்தரே! 'யுத்தத்தில் கர்ண னுக்கும் பாண்டவனுக்கும் கைகலந்ததும் கோரமானதும் பயங்கரமு மான அப்படிப்பட்ட யுத்தமானது ஸம்பவித்தது. மஹாராஜரே! எதிர்த்திருக்கின்ற மஹாரதர்களான அவ்விருவரையுங் கண்டு, 'இந்த யுத்தம் இப்பொழுது எவ்வாறாகுமோ?' என்று எனக்கு எண்ண முண்டாயிற்று. மஹாராஜரே! பிறகு, யுத்தத்தைப் புகழ்கின்ற வனை பீமன், உம்முடைய புத்திரர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே யுத்தத்தில் பாணங்களால் கர்ணனை மூடினான். பிறகு, உத்தமமான அஸ்திரங்களை அறிந்த கர்ணன் அதிகக் கோபங்கொண்டு கணுக்கள் படிந்துள்ளவைகளும் உருக்குமயமாயிருப்பவைகளுமான ஒன்பது பல்லங்களாலே பீமனை அடித்தான். மிக்க தோள்வலிமை அமைந்தவனும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனுமான பீமன் அந் தப் பல்லங்களை நாசஞ்செய்து காதுவரையில் இழுத்துவிடப்பட்ட ஏழுபாணங்களால் கர்ணனை அடித்தான். மஹாராஜரே! பிறகு கர்ணன் ஸர்ப்பம்போலச் சீறிக்கொண்டு பெரிய அம்புமழையினால்பாண்டவனை மூடினான். மஹாபலசாலியான பீமனும் கௌரவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே மஹாரதனான அந்தக் கர்ணனைப் பாண ஸமூகங்களால் மூடி ஸிம்மநாதஞ் செய்தான். பிறகு, கர்ணன் மிக்க கோபமுள்ளவனாகத் திடமான ஒரு வில்லை எடுத்துக் கழுகிறகுகள் பூண்டவைகளும் சாணை பிடிக்கப்பட்டவைகளுமான பத்துப் பாணங் களால் பீமனை அடித்தான்; கூர்மையுள்ள ஒரு பல்லத்தினால் அந்தப் பீமனுடைய வில்லையும் துண்டாக்கினான். பிறகு, மிக்க புஜபலமுள்ள வனும் அதிக பலசாலியுமான பீமன் பொற்பட்டங்களால் அலங்கரிக் கப்பட்டதும் வேறு யமதண்டம் போன்றதும் கோரமுமான ஒரு பரிகாயுதத்தை எடுத்துக் கர்ஜித்துக்கொண்டு கர்ணனைக் கொல்ல விரும்பிப் பிரயோகித்தான். வருகின்றதும் வஜ்ராயுதமும் இடியும் போன்ற ஒலியுள்ளதுமான பரிகாயுதத்தைக் கர்ணன் ஸர்ப்பம் போன்ற அம்புகளாலே பலவாறாகத் துண்டாக்கினான். பிறகு, பீமன்

மிக்க உறுதியான ஒரு வில்லை எடுத்து அப்பொழுது பகைவர்களுடைய படையை நாசஞ்செய்கின்ற கர்ணனைப் பாணங்களால் மூடினன். பிறகு, யுத்தத்தில் அடிக்கடி ஒருவரையொருவர் கொல்ல எண்ணங்கொண்டவர்களான கர்ணன் பாண்டவன் இருவருக்கும், பலிக்கும் இந்திரனுக்கும் யுத்தம் நேர்ந்ததுபோலக் கோரமான யுத்தம் நேர்ந்தது. மஹாராஜரே! பிறகு, கர்ணன் திடமான வில்லைவளைத்துக் காதுவரையில் இழுத்துவிடப்பட்ட மூன்றுபாணங்களால் பீமஸேனனை அடித்தான். கர்ணனாலே அதிகமாக அடிக்கப்பட்டவனும் பெரிய வில்லையுடையவனும் பலசாலிகளுள் சிறந்தவனுமானஅந்தப் பீமன் கர்ணனுடைய சரீரத்தைப் பிளக்கக்கூடிய கோரமான ஒரு பாணத்தை எடுத்தான். அரசரே! அந்தப் பாணமானது அவனுடைய கவசத்தை உடைத்துச் சரீரத்தைப் பிளந்து புற்றில் பாம்பு நுழைவதுபோலப் பூமியில் நுழைந்தது. அந்த அதிகமான அடியினால் துன்பமுற்ற அந்தக் கர்ணன், மனத்தளர்ச்சி அடைந்து, பூகம்பம் உண்டாகும் காலத்தில் மலை அசைவதுபோல ரதத்தில் மிக்க நடுக்கமுற்றான். மஹாராஜரே! பிறகு, கர்ணன் கோபத்தோடும் பொறாமையோடும் அந்தப் பீமன்மீது இருபத்தைந்து நாராசங்களைப் பிரயோகித்து வேறு பாணத்தால் பாண்டவனுடைய வில்லை மிக விரைவாக வெட்டினன். ராஜேந்திரரே! பிறகு, கர்ணன் ஒரு முகூர்த்தத்திற்குள் அதிக சிரமமில்லாமல் சிரித்துக்கொண்டே பயங்கரமான செய்கையுள்ள பீமனை ரதத்தை இழக்கச்செய்தான். பரதசிரேஷ்டரே! மிக்க கைவன்மையுள்ளவனும் வாயுவுக்கு ஒப்பானவனுமான அந்தப் பீமஸேனன் ரதத்தை இழந்து உரக்கச் சிரித்துக்கொண்டும் கதாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டும் உத்தமமான ரதத்தினின்று குதித்தான். மஹாராஜரே! பகைவர்களை வாட்டுபவனான அந்தப் பீமஸேனன் யுத்தத்தில் மிகுந்த கோபமுள்ளவனாகிக் கதாயுதத்தினால் கர்ணனுடைய ரதகூபரத்தை நொறுக்கினான். கோபத்துக்கு வசப்பட்டவனும் சிறந்த பிரதாபமுள்ளவனும் வீரனுமான அந்தப் பாண்டுபுத்திரன் கதாயுதத்தினால் மஹாயுத்தத்தில்உம்முடைய குமாரர்களை ஓடும்படி செய்தான்.மன்னரே! அதிகக் கோபங்கொண்டவனும் பகைவர்களை வாட்டுபவனுமான பீமன் அடிக்கும் தன்மையுள்ளவைகளும்ஏர்க்கால்போன்ற தந்தங்களையுடையவைகளுமான எழுநூறு யானைகளைப் பலத்தால் நாசஞ்செய்தான். பலசாலியும் மர்மஸ்தானங்களை அறிந்தவனுமான பீமஸேனன் தந்தக்கட்டுக்களிலும் நேத்திரங்களிலும் கும்பஸ்தலங்களிலும் கபோலங்

களிலும் மர்மஸ்தானங்களிலும் அந்த யானைகளை அடித்துக் கொன்றான். பிறகு பீமஸேனனால் அடிக்கப்பட்டவைகளும் வீறிடுகின்றவைகளும் மிக்க துன்பமுற்றவைகளுமான அந்த யானைகள் அடிக்கடி அடிக்கப்பட்டுப் பயந்து ஓடின. யானைப்பாகர்கள் மேகங்கள் சூரியனைச் சூழ்ந்துகொள்வதுபோல அந்தப் பீமனைச் சூழ்ந்துகொண்டார்கள். பூமியிலிருக்கின்ற பீமஸேனன் வீரர்களால் ஏற்பட்டவைகளும் ஆயுதங்களையும் கொடிகளையுமுடையவைகளுமான அப்படிப்பட்ட எழுநூறு யானைகளை இந்திரன் வஜ்ராயுதத்தினால் மலைகளை அடிப்பது போலக் கதாயுதத்தினால் அடித்தான். பிறகு பகைவர்களை அடக்குபவனான குந்திபுத்திரன் ஸுபல புத்திரனான சகுனியினுடைய மிக்க பலமுள்ள ஐம்பத்திரண்டு யானைகளை மறுபடியும் நாசஞ்செய்தான் அவ்வாறே பாண்டவன் யுத்தத்தில் உமது சேனையைத் தபிக்கச் செய்துகொண்டு நூற்றுக்கு மேற்பட்ட தேர்களையும் காலாட்களையும், மற்றவர்களையும் நூற்றுக்கணக்காகக் கொன்றான். சூரியன் போன்ற கர்ணனாலும் மஹாத்மாவான பீமனாலும் மிக வாட்டப்படுகின்ற உம்முடைய படையானது நெருப்பில் போடப்பட்ட தோல்போலச் சுருங்கியது. பரதர்களுள் சிறந்தவரே! பீமனிடத்திலுண்டான பயத்தினாலே மிக நடுக்கமுற்ற உம்மைச் சேர்ந்த அந்த வீரர்கள் யுத்தத்தில் கர்ணனை விட்டுவிட்டுப் பத்துத் திசைகளிலும் ஓடினார்கள். ஸிம்மநாதம் செய்கின்றவர்களும் அம்புகளைப் பொழிகின்றவர்களுமான வேறான ஐந்நூறு ரதிகர்கள் பாணஸமூகங்களால் நான்கு பக்கத்திலும் அடித்துக்கொண்டு பீமனை எதிர்த்துவந்தார்கள். அந்தப் பீமன் கொடித்துணிகளோடும் கொடிமரங்களோடும் ஆயுதங்களோடும்கூடின அந்த ஐந்நூறு வீரர்களையும் திருமால் அஸுரர்களை நொறுக்கியது போலக் கதையினால் அடித்து நொறுக்கினான். பிறகு சூரர்களாலே ஒப்புக்கொள்ளப்பட்டவர்களான மூவாயிரம் குதிரை வீரர்கள் சகுனியினால் கட்டளையிடப்பட்டு பாணங்களையும் சக்திகளையும் ரிஷ்டிகளையும் கையில் கொண்டவர்களாக எதிர்த்துவந்தார்கள். அப்பொழுது பகைவரைக் கொல்பவனான அந்தப் பீமன் குதிரைகளின்மீதேறியிருக்கிற வீரர்களோடுகூடின அந்த யவனர்களை எதிர்த்துப் பற்பலவிதமான யுத்தமார்க்கங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு கதாயுதத்தினால் அவர்களை நொறுக்கினான். பாரதரே! நான்கு பக்கங்களிலும் அடிக்கப்பட்ட அந்த யவனர்களுடைய பேரொலியானது தீயால் எரிக்கப்படுகின்ற கோரைகளுடைய ஒலிபோல் உண்டாயிற்று. இவ்வாறு ஸுபலபுத்திரனான சகுனியினுடைய மூவாயிரம் குதிரைவீரர்களைக்கொன்று வேறு

தேரின் மீதேறிக்கொண்டு கோபமுள்ளவனாகி ராதேயனை எதிர்த்தான். அரசரே! அந்தக் கர்ணனும் பகைவர்களைச் சிக்ஷிப்பவரான தர்மபுத்திரரை யுத்தத்தில் பாணங்களால் மூடி ஸாரதியையும் தள்ளினான். பிறகு மஹாரதனான அந்தக் கர்ணன் ஓடுகின்ற சேனையைக் கண்டு கழுகிறகுபூண்டவைகளும் நேராகச் செல்லுகின்றவைகளுமான பாணங்களை இறைத்துக்கொண்டு பின்தொடர்ந்து சென்றான். கோபமுள்ளவனான பீமஸேனன் யுதிஷ்டிர ராஜரை எதிர்த்து வேகமாகச் செல்லுகின்ற கர்ணனைப் பாணங்களால் மூடி அம்பு வலையினால் ஆகாயத்தையும் பூமியையும் நன்கு மூடினான். பிறகு பகைவர்களைக் கொல்பவனான ராதேயன் விரைவுடன் திரும்பி, கூர்மையுள்ள அம்புகளால் பீமனை நான்கு பக்கத்திலும் மூடினான். பாரதரே! அளவிடற்கரிய பலமுள்ள ஸாத்யகியானவன் பீமஸேனனுடைய ரதத்தை அடைய விரும்பின கர்ணனை, தான் பீமஸேனனுடைய பின்புறத்தை அடுத்து நிற்கவேண்டியதற்காக, எதிர்த்து அடித்தான். பாரதரே! கர்ணன் பீமஸேனனுடைய ரதத்தை அடையக் கருதிய சினிகுலத்தில் பிறந்தவனான ஸாத்யகியை அம்பு மழைகளால் அடித்துக்கொண்டு எதிர்த்தான். எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவர்களும் பெரிய மனமுள்ளவர்களுமான அவ்விருவர்களும் ஒருவரையொருவர் எதிர்த்துத் தாக்கி ஜ்வலிக்கின்ற பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டு விளங்கினார்கள். ராஜேந்திரரே! அவ்விருவர்களாலும் ஆகாயத்தில் பரப்பப்பட்டதும் பயங்கரமானகாட்சியுள்ளதும் க்ரௌஞ்ச பக்ஷியின் பின்புறம் போலச் சிவந்திருக்கின்றதுமான பாண ஸமூகமானது பயங்கரமாகக் காணப்பட்டது. மன்னரே! ஆயிரக்கணக்காகப் பிரயோகிக்கப்பட்ட பாணங்களால் நாங்களாவது அவர்களாவது சூரியனுடைய ஒளிகளையும் அவ்வாறே திக்குகளையும் திக்கோணங்களையும் காணவில்லை. அரசரே! உச்சிப்பொழுதில் ஜ்வலிக்கின்ற சூரியனுடைய பெரிய ஒளிகள் முழுதும் அப்பொழுது கர்ணன் ஸாத்யகி இவர்களுடைய பாண ஸமூகங்களால் கவரப்பட்டன. சகுனியும் கிருதவர்மாவும் அசுவத்தாமாவும் கர்ணனும் கிருபரும் பாண்டவர்களோடு எதிர்த்திருப்பதைக் கண்டு மீண்டும் கௌரவர்கள் திரும்பினார்கள். மன்னரே! வருகின்ற அந்தக் கௌரவர்களுடைய மிக்க ஒலியானது மழையினால் பெருகிவருகின்ற ஸமுத்திரங்களுடைய பயங்கரமான ஒலிபோல இருந்தது. அந்த இருதிறத்துச் சேனைகளும் மஹா யுத்தத்தில் ஒன்றைமற்றொன்று பார்த்து அதிக ஸந்தோஷத்தோடு கூடியவைகளாக ஒன்றை மற்றொன்று பற்றியிழுத்துக்கொண்டு மிக்க கை

கலந்த யுத்தத்தைச் செய்தது. பிறகு சூரியன் உச்சியிலிருக்குங்காலத்தில் யுத்தம் நடந்தது. இவ்வித யுத்தமானது இதற்குமுன் நடந்ததாக நம்மால் கேட்கப்பட்டதுமில்லை; பார்க்கப்பட்டதுமில்லை. நீர்ப் பெருக்கானது வேகத்தோடு சமுத்திரத்தை அடைவதுபோலச் சேனைக் கூட்டமானது யுத்தத்தில் விரைவாக எதிரியின் சேனைக் கூட்டத்தை எதிர்த்து அருகில் நெருங்கிற்று. ஒன்றோடொன்று மோதிக்கொள்கின்ற பாண ஸமூகங்களுடைய மிகப் பெரிய சப்தமானது முழங்குகின்ற ஸமுத்திரக் கூட்டங்களுடைய பெரிய சப்தம் போலிருந்தது. அந்த இரண்டு சேனைகளும் வேகமுள்ளவைகளாக ஒன்றையொன்று தாக்கி ஸங்கமஸ்தலத்தில் இரண்டு நதிகள் கலந்தாற்போலக் கலந்தன. வேந்தரே! பிறகு மிக்க பெரிதான கீர்த்தியை அடையவிரும்புகின்றவர்களான கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் கோர ரூபமான யுத்தமானது நடந்தது. பாரதரே! ராஜரே! அந்த யுத்தத்தில் பெயர்களைக் குறிப்பிட்டுக் கர்ஜிக்கின்ற சூரர்களுடைய தொடர்ச்சியாக உண்டுபண்ணப்பட்ட பற்பலவித வாக்குகள் கேட்கப்பட்டன. மாதாவிடத்தினின்றாவது பிதாவினிடத்தினின்றாவது செய்கையிலாவது சீலத்திலாவது எவனுக்கு எந்தத் தோஷம் ஸம்பவித்திருக்குமோ அந்தத் தோஷத்தை அவன் யுத்தத்தில் கேட்கும்படி அவனது பகைவன் செய்தான். அரசரே! யுத்தத்தில் ஒருவரையொருவர் வெருட்டுகின்றவர்களான அந்தச் சூரர்களைக் கண்டு, 'இவர்களுக்கு இனி உயிர் இராது' என்று எனக்கு எண்ணம் உண்டாயிற்று. கோபங் கொண்டவர்களும் அதிக தேஜஸையுடையவர்களுமான அந்த வீரர்களுடைய சரீரங்களைக் கண்டு, 'இது எப்படியாகுமோ?' என்று எனக்கு மிகுதியான பயமுண்டாயிற்று. அரசரே! பிறகு மஹாரதர்களான அந்தப் பாண்டவர்களும் கௌரவர்களும் ஒருவரையொருவர் ஜயிக்க விருப்பங்கொண்டு அம்புகளால் விரைவாக அடித்தார்கள்.

—o—

நாற்பத்தேழாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

மஹாராஜரே! பகையைச் செய்துகொண்டவர்களும் அதிக பராக்கிரமசாலிகளுமான அந்த அரசர்கள் ஒருவரையொருவர் கொல்வதில் நோக்கமுள்ளவர்களாக யுத்தத்தில் அன்யோன்யம் அடித்துக் கொண்டார்கள். மஹாராஜரே! ரதிகர்களுடைய கூட்டங்களும்

குதிரைக் கூட்டங்களும் காலாட்களுடைய கூட்டங்களும் யானைக் கூட்டங்களும் நாற்புறங்களிலும் ஒன்றோடொன்று எதிர்த்தன. மிக்க பயங்கரமான யுத்தத்தில் கதைகளும் பரிகங்களும் சக்திகளும் ப்ராஸங்களும் பிண்டிபாலங்களும் முஸுண்டிகளும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு நான்கு பக்கத்தினின்றும் விழுவதையும் கண்டோம். பாணவர்ஷங்கள் நான்கு பக்கத்தினின்றும் விட்டிற் பூச்சிகள்போல் வந்து விழுந்தன. யானைகள் யானைகளைத் தாக்கி ஒன்றையொன்று நாசஞ் செய்தன. ராஜரே! யுத்தத்தில் குதிரைகள் குதிரைகளையும், அவ்வாறே ரதிகர்கள் ரதிகர்களையும், காலாட்கள் காலாட்படைக் கூட்டங்களையும், காலாட்கள் குதிரைக் கூட்டங்களையும், ரதங்களையும் யானைகளையும், ரதங்கள் யானைகளையும் குதிரைகளையும், விரைவாகச் செல்லுகின்ற யானைகள் ரதங்களையும் குதிரைகளையும் காலாட்களையும் யுத்தத்தில் அழித்தன. அந்த யுத்தத்தில் கொல்லப்படுகின்றவர்களும், கொல்லுகிற இடத்தில் பசுக்கள் கதறுவதுபோலக் கதறுகின்றவர்களுமான சூரர்களுக்குப் பரஸ்பரம் கோரமான யுத்தம் உண்டாயிற்று. பாரதரே! ரத்தம் எல்லாப் பக்கத்திலும் பரவியிருக்கிற யுத்த பூமியானது மாரிக்காலத்தில் இந்திர கோபமென்னும் பூச்சிகளுடைய கூட்டங்களால் நிரம்பிய பூமிபோல் விளங்கியது. பொன்னால் அலங்கரிக்கப்பட்ட வெண்ணிறமான இரண்டு வஸ்திரங்களைத் தரித்தவளும் நடுயௌவனத்திலிருப்பவளுமான யுவதிபோல யுத்த பூமியானது பிரகாசித்தது. தங்கத்தினால் கட்டப்பட்ட சூடாமணிகளைத் தரித்தவைகளும், அழகிய குண்டலங்களையுடையவைகளும் தள்ளப்பட்டவைகளுமான வீரர்களுடைய தலைகளால் யுத்த பூமியானது விளங்கியது. பரதசிரேஷ்டரே! பூமியானது மாமிசரத்தத்தால் பூசப்பட்டதுபோலவும் ஸ்வர்ணத்தால் இழைக்கப்பட்டதுபோலவும் ஜ்வாலை அடங்கியிருக்கின்ற அக்னிகளால் வியாபிக்கப்பட்டது போலவும் பிரகாசித்தது. பாரதரே! அறுக்கப்பட்ட தலைகள், கைகள், தொடைகள், அணிந்துகொள்ளப்பட்ட குண்டலங்கள், ஆபரணங்கள், கண்டாபரணங்கள், பொன் அரைஞாண்கள், வில்லாளிகளுடைய சரீரங்கள், கேடகங்கள், கொடிகள் இவற்றின் கூட்டங்கள் அந்த யுத்த பூமியில் வீழ்ந்தன. நான்கு பக்கத்திலும் அதிகச் சேறுள்ள யுத்த பூமியானது நெருங்கத்தகாத தோற்றமுள்ளதாயிற்று. மஹாராஜரே! யானைகள் யானைகளை எதிர்த்துக் கொம்புகளால் துன்பம் செய்தன. அந்த யுத்த பூமியில் கொம்பு நுனிகளாலே அடிக்கப்பட்ட சிறந்த யானைகள் மலையிலுள்ள தாதுக்களைப் பெருகவிடுவதுபோல ரத்தத்

தால் நன்கு நனைக்கப்பட்ட மேனியுள்ளவைகளாக மழைக் காலத்தில் மின்னல்களுடன்கூடிய மேகங்கள்போலப் பிரகாசித்தன. அவ்வாறே யுத்தத்தில் இரத்தத்தினால் நனைக்கப்பட்ட யானைகள் தாதுக்களால் அலங்கரிக்கப்பட்டவையும், ஜலப்பெருக்குடன் கூடினவையுமான பர்வதங்களைப்போல விளங்கின. யுத்தத்தில் வேறு சில யானைகள் யானை வீரர்களால் பிரயோகிக்கப்பட்டவைகளும், மத்தகத்துக்குக் கீழே பாய்ந்திருப்பவைகளுமான அனேக தோமராயுதங்களைத் துதிக் கைகளால் பிடுங்கி அவைகளை முறித்தன. அரசரே! நாராசங்களால் கவசங்கள் உடைக்கப்பட்ட உத்தம கஜங்கள் பனிக் காலத்தில் மேக மில்லாதவைகளான மலைகள்போல் விளங்கின. பாரதரே! பொன்னு லாகிய புங்கமுள்ள அம்புகளால் நிரப்பப்பட்ட சிறந்த யானைகள் கொள்ளிக் கட்டைகளால் ஜ்வலிக்கின்ற சிகரங்களையுடைய மலைகள் போல் விளங்கின. பெரிய மலைகளுக்கொப்பான சில யானைகள் யானை களால் அடிக்கப்பட்டுச் சிறகுகளறுக்கப்பட்ட மலைகள்போல அந்த யுத்தத்தினின்று நகரவில்லை. வேறு சில யானைகள் பாணங்களால் பீடிக்கப்பட்டும், காயங்களால் துன்புறுத்தப்பட்டும் (யுத்தத்தை விட்டு) விரைவாக ஓடின. மற்றும் சில யானைகள் மஹாயுத்தத்தில் மத்தகத்தின் கீழ்ப்புறங்களாலும் மத்தகங்களாலும் பூமியில் விழுந் தன. மற்ற யானைகள் ஸிம்மங்கள் போலப் பயங்கரமான சப்தங்களை வெளிப்படுத்திக்கொண்டு விழுந்தன. அரசரே! அனேக யானைகள் இரத்தத்தைக் கக்கின. சில யானைகள் அலறின. ஸ்வர்ணாலங்காரங் களால் அலங்கரிக்கப்பட்ட குதிரைகள் பாணங்களால் அடிக்கப்பட்டு (அசைவற்று) நின்றன; வாட்டத்தையும் அடைந்தன; பத்துத் திசை களிலும் சுற்றி வந்தன. மற்ற குதிரைகள் துயரத்தை அடைவிக்கப் பட்டவைகளாகப் பூமியில் விழுந்து புரண்டன. அம்புகளாலும் தோமரங்களாலும் அடிக்கப்பட்டவர்கள் பலவித எண்ணங்களை வெளி யிட்டார்கள். ஐயா! மெதுவாக அலறுகின்ற மனிதர்களோ அந்த யுத்த பூமியில் கொல்லப்பட்டார்கள். பாரதரே! சிலர் பந்துக்களைப் பார்த்தும், மற்றவர்கள் தந்தையர்களையும் பாட்டன்மார்களையும் பார்த் தும், வேறு சிலர் ஓடுகின்ற பகைவர்களைப் பார்த்தும் பிரஸித்தமான கோத்திரங்களையும் பெயர்களையும் ஒருவரோடொருவர் புகழ்ந்து பேசி னார்கள். மஹாராஜரே! அறுக்கப்பட்டவைகளும் பொன்னாலாகிய பூஷணங்களணிந்தவைகளுமான அவர்களுடைய கைகள் தத்தித் தத்திப் புரண்டன; தரையிலேயே புரண்டன; சுழன்றன; மேலே துள்ளின. அவ்வாறே ஆயிரக்கணக்கான மற்றக் கைகள் விழுந்தன;

துடித்தன; வேறு சில கைகள் ஐந்து தலை நாகங்கள்போல யுத்தத்தில் வேகத்தை வெளியிட்டன. மன்னரே! ஸர்ப்பங்களுடைய உடல்கள் போலப்பிரகாசிக்கின்றவைகளும் சந்தனத்தினால்பூசப்பட்டவைகளும் இரத்தத்தால் நனைந்திருப்பவைகளுமான அந்தக் கைகள் ஸ்வர்ண த்வஜங்கள்போல மிகவும் பிரகாசித்தன. எல்லாத் திக்குகளிலும் கோர மான ஸங்குல யுத்தமானது அவ்வாறு நடக்கும்போது (சூரர்கள்) அறியப்படாதவர்களாகி ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டு போர் புரிந்தார்கள். அரசரே! பூமியிலுண்டான புழுதியினாலே நான்கு பக்கத்திலும் வியாபிக்கப்பட்டதும் சஸ்திரங்களுடைய வீழ்ச்சிகளால் நெருங்கியதுமான இருளால் மூடப்பட்டு நம்மைச் சேர்ந்தவர்களும் பிறர்களும் அறியப்படவில்லை. அந்த யுத்தமானது அவ்விதக் கொடிய காட்சியுள்ளதாகவும் பயங்கரமாகவும் இருந்தது. அந்த யுத்தத்தில் அடிக்கடி குருதி வெள்ளம் நிரம்பிய பேராறுகள் பெருகின. வீரர்கள் அந்த யுத்தத்தில் தலைகளாகிற கற்களால் நன்றாக மூடப்பட்டவைகளும், மயிர்களாகிற பாசிக் கொத்துகளுடனும் புல் தரைகளுடனுங்கூடியவைகளும், எலும்புகளாகிற மீன்களால் நன்றாக வியாபிக்கப்பட்டவைகளும், விற்களும், அம்புகளும், கதைகளுமாகிற தெப்பங்களுடன் கூடியவைகளும்,மாம்ஸங்களும் இரத்தங்களுமாகிற சேறுள்ளவைகளும், கோர ரூபத்துடன் கூடியவைகளும், மிக்கபயங் கரமாயிருப்பவைகளும், இரத்த வெள்ளத்தால் விருத்தியடைந்து கொண்டிருப்பவைகளுமான நதிகளை உண்டுபண்ணினார்கள். பயப் படுகிறவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுகின்றவைகளும், சூரர் களுக்கு ஸந்தோஷத்தை விருத்தி பண்ணுகின்றவைகளும், கோர ரூப மாயிருப்பவைகளும் எல்லாப் பிராணிகளையும் யமனுடைய வீட்டை அடையச் செய்கின்றவைகளும், விழுந்தவர்களை அமிழ்த்துகின்றவை களுமான அந்த நதிகள் க்ஷத்திரிய ஸமூகத்திற்குப் பயத்தை உண்டு பண்ணின. புருஷஶ்ரேஷ்டரே! ஆங்காங்கு கத்துகின்ற கொடிய விலங்குகளின் சப்தமும் பயத்தை உண்டுபண்ணியது. யுத்த பூமியா னது யமனுடைய பட்டணத்துக் கொப்பாகக் கோரமாயிற்று. நான்கு பக்கத்திலும் எண்ணிறந்த தலையில்லா முண்டங்கள் எழுந்தன. பூத கணங்கள் மாம்ஸங்களாலும் இரத்தங்களாலும் நன்றாகத் திருப்தி யடைந்து கூத்தாடின. பாரதரே! அவ்வாறே காக்கைகளும், கழுகு களும், கொக்குகளும் அந்த யுத்தரங்கத்தில் இரத்தத்தைக் குடித்தும் ஊனீரைப் பருகியும் கொழுப்பினாலும் மஜ்ஜையினாலும் ஊனீரினாலும் மதங்கொண்டு மாம்ஸத்தினால் திருப்தியடைந்தவைகளாகவும் ஓடுகின்

றவைகளாகவும் காணப்பட்டன. அரசரே! யுத்த வீர விரதத்தில் பிரவித்திபெற்றவர்களான சூரர்களோ எவ்விதத்தாலும் விடமுடியாத பயத்தை யுத்தத்தில் விட்டுப் பயமற்றவர்கள் போலக் கார்யங்களைச் செய்தார்கள். அம்புகளாலும் சக்திகளாலும் எல்லாப் பக்கத்திலும் வியாபிக்கப்பட்டதும் மாம்ஸத்தைப் புஜிக்கும் ஜந்துக்களுடைய கூட்டங்களால் நெருங்கியதுமான யுத்தத்தில் சூரர்கள் தம் ஆண்மையை வெளிப்படுத்திக் கொண்டு ஸஞ்சரித்தார்கள். பாரதரே! பிரபுவே! வீரர்கள் பரஸ்பரம் பேர்களையும், குலங்களையும், பித்ருக்களுடைய நாமதேயங்களையும் கோத்திரப் பெயர்களையும் யுத்தத்தில் கேட்கும்படி செய்தார்கள். அரசரே! அந்த யுத்தரங்கத்தில் அனேக யுத்த வீரர்கள் தத்தம் பிரவித்தியைப் பகைவர் கேட்கும்படி சொல்லிக் கொண்டு சக்திகளாலும் தோமரங்களாலும் பட்டஸங்களாலும் அன்யோன்யம் அடித்துக்கொண்டார்கள். அவ்வாறு கோர ரூபமுள்ளதும் மிக்க பயங்கரமுமான யுத்தமானது நடந்து வரும்பொழுது கௌரவ சேனையானது கடலில் உடைபட்ட மரக்கலம் போலத் துயரத்தை அடைந்தது.

நாற்பத்தெட்டாவது அத்தியாயம்

(அர்ஜுனனுந்த ஸம்சப்தகர்களோடு யுத்தம்)

ஐயா! க்ஷத்திரியர்களை அமிழ்த்துகின்றதான யுத்தம் அவ்வாறு நடந்து வரும்பொழுது, காண்டீவத்தினுடைய பேரொலியானது யுத்தத்தில் கேட்கப்பட்டது. அரசரே! அந்த யுத்தத்தில் பாண்டவன் ஸம்சப்தகர்களுக்கும் கோஸலர்களுக்கும் அவ்வாறே நாராயண சேனைக்கும் துன்பத்தை உண்டு பண்ணினான். யுத்தத்தில் ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான ஸம்சப்தகர்களோ அதிக கோபங்கொண்டவர்களாகிப் பார்த்தனுடைய முடியின்மீது நான்கு பக்கங்களினின்றும் சரமாரியைப் பொழிந்தார்கள். பிரபுவான பார்த்தன் வருகின்ற அந்தச் சரமாரியை மார்பினால் தாங்கிக் கொண்டும், ரதிகர்களுள் சிறந்தவர்களை அடித்துக் கொண்டும் பகைவர்களுடைய மத்தியில் பிரவேசித்தான். பார்த்தன் சாணையில் தீட்டப்பட்டவைகளும் கழுகிறகுகள் பூண்டவைகளுமான அம்புகளால் தேர்ப் படையைக் கலக்கிய பிறகு, மஹாரதனான ஸுசர்மாவை எதிர்த்தான். ரதிகர்களுள் சிறந்தவனான அந்தப் பார்த்தன் அந்த ஸுசர்மாவின் மீது அம்பு மழைகளைப் பொழிந்தான். அவ்வாறே யுத்தத்தில் நிற்கின்ற ஸம்சப்தகர்களும்

பார்த்தன் மீது சரமாரிகளைப் பொழிந்தார்கள். பிறகு, ஸுசர்மாவோ பத்துப் பாணங்களால் பார்த்தனை அடித்து, மூன்று பாணங்களால் ஜனார்த்தனரை வலக்கையில் அடித்தான். ஐயா! அரசரே! பிறகு ஸுசர்மா கோபம் மூண்டவனாக வேறொரு பல்லத்தினால் பார்த்தனுடைய கொடியை யுத்தத்தில் அடித்தான். மன்னரே! விஸ்வகர்மாவினால் உண்டுபண்ணப்பட்டதும் பெரிதுமான அந்தச் சிறந்த வானரமானது நர்த்தனம் செய்கின்றது போலப் பயமுறுத்திக் கொண்டு மிக்க உரத்த நாதத்துடன் சப்தித்தது. வானரத்தினுடைய சப்தத்தைக் கேட்டு உம்முடைய சேனையானது நடுக்கமுற்றது; அதிக பயத்தை அடைந்து அசைவற்றதாகியது. வேந்தரே! பிறகு, அசைவற்று நிற்கின்ற அந்தச் சேனையானது, பற்பல புஷ்பங்களால் நன்முக நிரம்பி விசித்திரமாகச் செய்யப்பட்ட வனம் போல் விளங்கியது. குருஶ்ரேஷ்டரே! பிறகு, அந்த யுத்த வீரர்கள் பிரஜ்ஞையை அடைந்து மேகங்கள் (ஜலத்தால்) பர்வதத்தை நனைப்பது போல அம்புகளால் அர்ஜுனனை நனைத்தார்கள். அவர்கள் யுத்தத்தில் பார்த்தனை மூடிக் கொண்டு நான்கு பக்கத்திலும் சூழ்ந்து கொண்டார்கள். ஐயா! அவர்கள் கோபத்தால் மூடப்பட்டவர்களாக நான்கு பக்கத்திலும் (அர்ஜுனனுடைய) குதிரைகளையும் தேருருளைகளையும் தேரின் ஏர்க்காலையும் பிடிப்பதற்கு ஆரம்பித்தார்கள். ஆயிரக் கணக்கான அந்த யுத்த வீரர்கள் அளவு கடந்த பராக்கிரமத்தையுடைய அந்த அர்ஜுனனுடைய ரதத்தைத் தடுத்து அந்த ரதத்தை அசையாமல் செய்தார்கள். ஸம்சப்தகர்களைச் சேர்ந்த சில யுத்த வீரர்கள் கிருஷ்ணனையும் பார்த்தனையும் பிடிக்க விரும்பி ரதத்தின் மீது ஏறினார்கள்; ஸிம்மநாதங்களையும் செய்தார்கள். சிலர் கேசவருடைய இரண்டு பெரிய கைகளையும் பிடித்துக் கொண்டார்கள். மஹாராஜரே! சிலர் ரதத்தின் மீதுள்ள பார்த்தனை ஸந்தோஷத்தோடு பிடித்துக் கொண்டார்கள். மிக்க தோள் வலிமையுள்ள அந்த அச்சுதர் யுத்த முனையில் கைகளை உதறுகின்றவராகித் துஷ்ட கஜமானது மாவுத்தர்களைத் தள்ளுவது போல அந்த ஸம்சப்தக வீரர்களனைவரையும் தள்ளினார். அரசரே! அந்த ஸம்சப்தக வீரர்களாலே பிடிக்கப்பட்ட மஹாத்மாவான பாண்டவனுடைய ரதமானது அசைவதற்குச் சக்தியற்றதாகியது. அது ஆச்சர்யம் போலிருந்தது. பிறகு அந்த மஹாரதர்களால் சூழப்பட்டவனை மிக்க பாகுபலமுள்ள பார்த்தன் தடுக்கப்பட்டிருக்கிற ரதத்தையும், எதிர்த்து ஓடி வருகின்ற அந்தப் பல வீரர்களையும், ரதத்தின் மீதேறியிருக்கின்ற அனேக வீரர்

களையும் காலால் உதைத்துத் தள்ளினன். சத்ரு பட்டணங்களை ஜயிப்பவனும் மிக்க தோள்வலியமைந்தவனுமான பார்த்தன், மனங் கலங்காமல், அவர்களைக் கீழே தள்ளி ஸமீபத்திலிருப்பவர்களை அடிக்கும் திறமையுள்ள அம்புகளால் அவர்களைத் தவிக்கச் செய்துவிட்டுப் புன்னகையுடன் கேசவரைப் பார்த்து, 'கிருஷ்ண! மஹாபாஹுபலமுள்ளவரே! எவ்விதத்தினுலும் செய்ய முடியாத காரியத்தைச் செய்கின்றவர்களும், மரிக்கப் போகின்றவர்களும், காலனுல் தூண்டப்பட்டவர்களும் அனேகர்களுமான ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களைப் பாரும். உலகத்தில் இப்படிப்பட்ட ரதபந்தத்தை அடைந்து தாங்கக் கூடிய க்ஷத்திரிய ச்ரேஷ்டன் பூமியில் என்னைத் தவிர வேறொருவனுமில்லை. கோவிந்தரே! போரில் என்னுல் பிரயோகிக்கப்படுகின்றவைகளும் நன்றாகத் தீட்டப்பட்டவைகளும் ஸர்ப்பங்களுக்கொப்பானவைகளுமான அம்புகளாலே யுத்த பூமியில் விழும்படி செய்யப்படுகின்ற இவர்களை இப்பொழுது பாரும்' என்று சொன்னன். அளவிட முடியாத பலமுள்ள அர்ஜுனன், இவ்வாறு சொல்லிவிட்டு, மஹா யுத்தத்தில் தேவதத்தமென்கிற உத்தமமான சிறந்த சங்கத்தை முழக்கினன். மிக்க புகழுள்ளவரான கேசவரும் தேவதத்தத்தினுடைய ஒலியைக் கேட்டு ஆகாயத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் போலப் பாஞ்சஜன்யத்தை முழக்கினர். மஹாராஜரே! ஸம்சப்தகர்களுடைய சேனையானது அவ்விருவர்களுடைய சங்கத்வனியையும் கேட்டு மிகுதியும் நிலை தவறியது; மிகப் பயந்தும் ஓடியது. பிறகு மஹாஸ்திரங்களை அறிந்தவனை அந்தப் பார்த்தன் சிரித்துக்கொண்டு நாகாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்து, அந்த அஸ்திரத்தினுல் அவர்களுடைய கால்களைக் கட்டி விட்டான். பார்த்தன் யுத்தத்தில் எவர்களை உத்தேசித்துக் கால்களைக் கட்டினனே அந்த ஸம்சப்தக யுத்த வீரர்கள் அப்பொழுது அந்தக் காற்கட்டுக்களால் கட்டப்பட்டார்கள். அவர்கள், பாண்டவனுடைய அஸ்திர தேஜஸினுல் அப்பொழுது அசைவற்றவர்களானர்கள். பாண்டுநந்தனன், பிறகு, அசைவற்றவர்களான யுத்த வீரர்களை முற்காலத்தில் இந்திரன் தாரகாஸுரனை வதம் செய்வதற்காக ஏற்பட்ட யுத்தத்தில் அஸுரர்களைக் கொன்றது போலக் கொன்றன். யுத்தத்தில் வதம் செய்யப்படுகின்ற அந்த வீரர்கள் அந்த உத்தம ரதத்தை விட்டுவிட்டார்கள்; எல்லா ஆயுதங்களையும் பிரயோகிக்க ஆரம்பித்தார்கள். ராஜேந்திரரே! பிறகு மஹாரதனை ஸுசர்மா கட்டப்பட்டிருக்கிற சேனையைக் கண்டு விரைபவனுகிக் காருடாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அரசரே! பிறகு

கருடன்கள் ஸர்ப்பங்களைப் பக்ஷிக்கவந்தன. ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற அந்தக் கருடன்களைக் கண்டு பிறகு ஸர்ப்பங்கள் ஓடிவிட்டன. அரசரே! பாதபந்தத்தினின்று விடுபட்ட அந்தச் சேனையானது மேக பந்தத்தினின்று விடுபட்டுப் பிரஜைகளைத் தபிக்கச் செய்கின்ற சூரியன்போலப் பிரகாசித்தது. பெரியவரே! நாகபந்தத்தினின்று விடுபட்டவர்களான நம்மைச் சேர்ந்த யுத்த வீரர்கள் பல்குனனுடைய ரதத்தைக் குறித்துப் பாணஸமூகங்களையும் சஸ்திரஸமூகங்களையும் பிரயோகித்தார்கள். பாரதரே! பகை வீரர்களைக் கொல்பவனான அந்த இந்திரகுமாரன் மஹாஸ்திரமயமான அந்த மழையை அம்புகளால் அழித்துப் பிறகு யுத்த வீரர்களைக் கொன்றான். ராஜரே! பிறகு ஸுசர்மாவோ வணங்கின கணுக்களுள்ள அம்பினால் அர்ஜுனனை மார்பிலடித்து வேறு இருபத்தொரு பாணங்களாலும் அடித்தான். நன்றாக அடிக்கப்பட்ட அந்த அர்ஜுனனானவன் துன்பமுற்றுத் தேர் நடுவில் உட்கார்ந்தான். பிறகு எல்லோரும் பார்த்தன் கொல்லப்பட்டானென்று சொல்லிக்கொண்டு பெருங் கூச்சலிட்டார்கள். பிறகு, சங்கங்களுடைய முழக்கங்களும், கம்பீரமான பேரிகை முழக்கங்களும், பற்பலவித வாத்யகோஷங்களும், ஸிம்ம நாதங்களும் தோன்றின. மஹாராஜரே! பிறகு ஸர்ப்பங்களுக்கொப்பான பாணங்களாலே நன்றாக அடிக்கப்பட்டவனும் பெரிய வில்லைக் கையிற் பிடித்தவனும் மஹாரதனும் மஹாஸ்திரங்களை அறிந்தவனும் கிருஷ்ணனை ஸாரதியாகவுடையவனும் சுவேதவாஹனனுமான அந்தப் பார்த்தன் பிரஜ்ஞையையடைந்து கோபத்தால் மூடப்பட்டவனாகி யுத்தத்தில் அந்த ஸுசர்மாவை ஒரு க்ஷணத்துக்குள் அநேக அம்புகளால் மூடித் திக்குகளையும் பாணங்களால் மறைத்தான். அளவிட முடியாத பராக்கிரமமுள்ள தனஞ்சயன் யுத்தத்தில் ஸுசர்மாவைத் திரும்பி ஓடச் செய்து நகைத்துக் கொண்டே ஐந்திராஸ்திரத்தை வெளிப்படுத்தினான். ஐயா! பிறகு அவனால் விடப்பட்ட ஆயிரம் பாணங்கள் எல்லாத் திக்குக்களிலும் காணப்பட்டன; ரதங்களையும் யானைகளையும் நாசஞ்செய்தன. அரசரே! இந்திரன் யுத்தத்தில் அஸுரர்களைக் கொல்லுவதுபோல அர்ஜுனன் யுத்தத்தில் லக்ஷக் கணக்கான குதிரைகளையும் காலாட்களையும் சஸ்திரங்களால் கொன்று கொண்டு விளங்கினான். பாரதரே! பிறகு சேனையானது கொல்லப்படும்பொழுது ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களையும் கோபாலர்களையும் மிக்க பெரிதான பயம் வந்து அடைந்தது. அந்த யுத்தத்தில் அர்ஜுனனைத் தெரிந்து கொள்ளக்கூடிய மனிதன் ஒருவனுமில்லை. அந்த யுத்தத்தில் வீரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே

உம்முடைய சேனையானது கொல்லப்பட்டது. கொல்லப்படுகின்ற அந்தப் படையானது பராக்கிரமத்தை வெளியிட வேண்டும் தருணத்தில் (கைகால்) அசைவற்று நின்றது. மஹாராஜரே! பாண்டுபுத்திரன் அந்த யுத்தத்தில் பதினாயிரம் யுத்த வீரர்களைக் கொன்று புகையில்லாமலிருக்கிற அக்னிபோல் ஜ்வலித்துக்கொண்டு பிரகாசித்தான். பாரதரே! (அர்ஜுனன்) பதினாலாயிரம் வீரர்களையும், பதினாயிரம் ரதிகர்களையும், மூவாயிரம் யானைகளையும் கொன்றான். பிறகு ஸம்சப்தகர்கள் மரணத்தையோ அல்லது ஜயத்தையோ நிச்சயமாகக் கொண்டு மறுபடியும் தனஞ்சயனைச் சூழ்ந்து கொண்டார்கள். மன்னவரே! அச்சமயத்தில் உம்மைச் சேர்ந்த வீரர்களுக்குச் சூரனும் பலசாலியும் பாண்டுபுத்திரனுமான கிரீடியோடு பெரும் போர் நடந்தது. பார்த்தன், இந்திரன் அஸுரர்களை ஜயித்ததுபோல அந்தச் சத்ருக்களை ஜயித்து நாசஞ்செய்தான்.

—o—

நாற்பத்தோன்பதாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

ஐயா! கிருதவர்மா, கிருபர், அஸ்வத்தாமா, கர்ணன், உலூகன், சகுனி, ஸஹோதரர்களுடன் கூடின துரியோதனராஜன் ஆகிய இவர்கள், பாண்டுபுத்திரனிடத்தினின்று உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டுக் கடலில் உடைக்கப்பட்ட மரக்கலம்போல் ஆபத்திலகப்பட்டு வருந்துகின்ற சேனையைக்கண்டு வேகத்தோடு மீட்பதற்கு முயன்றார்கள். பாரதரே! பிறகு பயப்படுகின்றவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுகின்றதும் சூரர்களுக்கு உத்ஸாஹத்தை விருத்தி பண்ணுகின்றதுமான யுத்தமானது ஒரு முகூர்த்த காலம் அமிதமாக நடந்தது. யுத்தத்தில் கிருபரால் பிரயோகிக்கப்படும் அம்பு மழைகள் விட்டிற்பூச்சிகளுடைய கூட்டங்கள்போல ஸ்ருஞ்சயர்களை மூடின. பிறகு கோபங்கொண்ட சிகண்டியும் விரைவுடன் கிருபரை எதிர்த்துச் சென்று பிராம்மணோத்தமரான அவர்மீது நான்கு பக்கத்திலும் அம்பு மழைகளைப் பொழிந்தான். மஹாஸ்திரங்களை அறிந்தவரான கிருபரோ, யுத்தத்தில் கோபங்கொண்டு, அந்தச் சரமாரியை நாசஞ்செய்து பத்துப் பாணங்களால் சிகண்டியை அடித்தார். பிறகு சிகண்டி கோபமூண்டு, கழுகிறகுகள் பூண்டவைகளும் நேராகச் செல்லுகின்றவைகளுமான பாணங்களால் கோபங்கொண்டவரான

கிருபரை யுத்தத்தில் அடித்தான். பிறகு கூர்மையுள்ள அம்புகளால் அதிகமாக அடிக்கப்பட்டவரும், மஹாரதரும் பிராம்மணருமான அந்தக் கிருபர், நன்றாகத் தீட்டப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான க்ஷுரப்ரங்களாலே சிகண்டியைக் குதிரைகளையும், ஸாரதியையும், தேரையும் இழந்தவனாகச் செய்தார். பிறகு மஹாரதனான சிகண்டி குதிரைகள் கொல்லப்பட்ட ரதத்தினின்று துள்ளிக் குதித்துக் கத்தியையும் கேடகத்தையும் கையிலெடுத்து விரைவுடன் பிராம்மணரை எதிர்த்துச் சென்றான். அந்தச் சிகண்டியைக் கிருபர் படிந்த கணுக்களுள்ள பாணங்களாலே யுத்தத்தில் விரைவாகத் தடுத்தார். அது ஆச்சரியமாயிருந்தது. வேந்தரே! அந்த யுத்தத்தில் சிகண்டி அசைவற்று நின்றதைக் கற்கள் மிதப்பதைப் போல ஆச்சரியமாகக் கண்டோம். அரசரே! மஹாரதனான த்ருஷ்டத்யும்னன், கிருபராலே சிகண்டி தடுக்கப்பட்டதைக் கண்டு கிருபரை விரைவாக எதிர்த்தான். பிறகு மஹாரதனை கிருதவர்மா, கிருபருடைய ரதத்தைக் குறித்துச் செல்லுகின்ற த்ருஷ்டத்யும்னனை வேகத்தோடு எதிர்த்தான். பிறகு புத்திரர்களோடும் ஸைன்யங்களோடும் கிருபருடைய ரதத்தைக் குறித்து எதிர்த்து வருகின்ற யுதிஷ்டிரரைத் துரோணபுத்திரர் தடுத்தார். விரைவுள்ள மஹாரதர்களான நகுலஸஹதேவர்களை உம்முடைய புத்திரன் சரமாரியினால் தடுத்துக்கொண்டு எதிர்த்தான். பாரதரே! சூரிய குமாரனை கர்ணன், பீமஸேனனையும் கரூசர்களையும் ஸ்ருஞ்சயர்களுடன்கூடின கேகயர்களையும் யுத்தத்தில் தடுத்தான். பிறகு சாரத்வதரான கிருபர் விரைவுடன் பீபத்ஸுவினுடைய அருகில் சிகண்டியின்மீது யுத்தத்தில் பாணங்களைப் பிரயோகித்தார். பாரதரே! அந்தக் கிருபரால் பிரயோகிக்கப்பட்டவைகளும் நான்கு பக்கத்திலும் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான அந்த அம்புகளைச் சிகண்டியானவன் அடிக்கடி நான்கு பக்கத்திலும் கத்தியைச் சுழற்றி வெட்டினான். பாரதரே! கௌதமர் அந்தச் சிகண்டியினுடைய நூறு சந்திரப் பிரதிமைகளுள்ள கேடகத்தை அம்புகளால் விரைவாக நாசஞ்செய்தார். பிறகு ஜனங்கள் பெருங்கூச்சலிட்டனர். மஹாராஜரே! கேடகத்தை இழந்தவனை சிகண்டி கத்தியைக் கையிற் கொண்டு பக்கத்தில் விரைவாகச் சென்றான். கிருபர் விரைவில் வருகின்ற அந்தச் சிகண்டியைப் பாணஸமூகங்களால் துன்பமுறும்படி செய்தார். அரசரே! மஹாபலசாலியும் சித்திரகேதுவினுடைய குமாரனுமான ஸுகேதுவானவன்

விரைவுள்ளவனாகி, சாரத்வதருடைய அம்புகளால் மூடப்பட்டுத் துன்பத்தை அடைவிக்கப்பட்ட சிகண்டியை நோக்கிச் சென்றான். அளவுகடந்த மனோதைரியத்துடன் கூடின அந்த ஸுகேது யுத்தத்தில் கூர்மையுள்ள அனேக பாணங்களைப் பிராம்மணர் மீது இறைத்துக்கொண்டு அவருடைய ரதத்தை நோக்கி எதிர்த்து வந்தான். ராஜஸ்ரேஷ்டரே! சிகண்டி, ஸுகேது எதிர்த்திருப் பதையும் பிராம்மணரான கிருபர் தடுக்கப்பட்டதையும் பார்த்துப் பிறகு விரைவாக விலகிச் சென்றான். மன்னரே! பிறகு, ஸுகேதுவோ கிருபரை ஒன்பது பாணங்களால் அடித்து மறுபடியும் அவரை எழுபத்துமூன்று பாணங்களால் அடித்தான். பெரியவரே! பிறகு, ஸுகேது இந்தக் கிருபருடைய அம்புகளுடன் கூடின வில்லை வெட்டி, மறுபடியும் அவருடைய ஸாரதியை ஓர் அம்பினால் மர்மஸ்தானங்களில் அதிகமாக அடித்தான். பிறகு, கௌதமரோ கோபங்கொண்டு புதியதும் திடமுமான வில்லை யெடுத்து முப்பது பாணங்களால் ஸுகேதுவை எல்லா மர்ம ஸ்தானங்களிலும் அடித்தார். அந்த ஸுகேது, எல்லா அங்கங் களும் தளர்ந்தவனாக, அசையாமலிருக்கிற மரமானது பூகம்பத்தில் மிக அசைவதுபோல உத்தமமான ரதத்தில் அசைந்தான். நிலை குலைந்தவனான அந்த ஸுகேதுவினுடைய சரீரத்தினின்று ஜ்வலிக் கின்ற குண்டலங்களுடன் கூடியதும் தலைப்பாகையைத் தரித்ததும் சிரஸை ரக்ஷிக்கின்ற ஸாதனங்களுடன் கூடியதுமான தலையை ஒரு க்ஷுரப்ரத்தினால் தள்ளினார். அந்தத் தலையானது கழுகினால் கொத்திக் கொண்டுபோகப்பட்ட மாம்ஸம்போலப் பூமியில் விழுந்தது. பிறகு அவனுடைய உடலானது, தலை விழுந்த பிறகு பூமியில் விழுந்தது. மஹாராஜரே! அந்த ஸுகேது கொல்லப்பட்ட உடனே, அனுஸரித்துவந்த அவனுடைய புத்திரர்கள் யுத்தத்தில் கிருபரை விட்டுவிட்டுப் பத்துத் திசைகளிலும் ஓடினார்கள். பாரதரே! மஹாரதனான கிருதவர்மா யுத்தத்தில் த்ருஷ்டத்யும்னனைத் தடுத்துத் தைரியமுள்ளவனாக, 'நில், நில்' என்று சொன்னான். அரசரே! மாம்ஸத்துக்காகக் கோபங்கொண்ட இரண்டு கழுகுகளுக்கு யுத்தம் நேருவதுபோலப் போர்க்களத்தில் த்ருஷ்டத் யும்னனுக்கும் கிருதவர்மாவுக்கும் கை கலந்த யுத்தம் நேர்ந்தது. த்ருஷ்டத்யும்னனோ கோபங்கொண்டு ஹ்ருதிகனுடைய குமாரனான கிருதவர்மாவை யுத்தத்தில் துன்பம் அடையும்படி ஒன்பது பாணங்களால் மார்பில் அடித்தான். கிருதவர்மாவோ யுத்தத்தில் பார்ஷதனால் நன்றாக அடிக்கப்பட்டு ரதத்தையும் குதிரை களையுமுடைய பார்ஷதனை அம்புகளால் மூடினான். வேந்தரே!

ஜலத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற மேகங்களாலே நான்கு பக்கத்திலும் மூடப்பட்ட சூரியன்போல அம்புகளால் மூடப்பட்ட ரதத்துடன் கூடிய த்ருஷ்டத்யும்னன் காணப்படவில்லை. மன்னரே! (ஆயுதங்களால்) உண்டுபண்ணப்பட்ட காயங்களை உடைய த்ருஷ்டத்யும்னன் பொன்னால் அலங்கரிக்கப்பட்ட அம்புகளாலே அந்தப் பாணஸமூகத்தைச் சிதற அடித்து யுத்தத்தில் பிரகாசித்தான். பிறகு, ஸேனாதிபதியான அவன் கோபங்கொண்டு கிருதவர்மாவை அணுகி, மிக்க பயங்கரமான அம்பு மழையைப் பிரயோகித்தான். ஹார்த்திக்யன் விரைவாக வருகின்ற மிக்க பயங்கரமான அந்தச் சரமாரியை அனேக ஆயிரக் கணக்கான அம்புகளால் யுத்தத்தில் தடுத்தான். பார்ஷதன் அணுக முடியாத சரமாரியானது யுத்தத்தில் (கிருதவர்மாவினால்) தடுக்கப்பட்டதைக் கண்டு அவனை நெருங்கித் தடுத்தான். [1]த்ருஷ்டத்யும்னன் கத்தியையும் கேடகத்தையும் கையில் கொண்டு அவன் ரதத்தில் துள்ளிக் குதித்தான். பிறகு, குதிரைகள் ஒன்றுசேர்ந்து பார்ஷதனும் பக்கத்தில் நெருங்கவே, அந்தப் பார்ஷதனுடைய மூர்க்கின செய்கையைக் கண்டு கிருதவர்மா விரைவாகக் கதையைக் கையில் எடுத்தான். அரசரே! பிறகு, கதையைக் கையில் கொண்டவனை அவன் ரதத்தினின்று விரைவாகத் துள்ளிக் குதித்து ரதமத்தியில் பார்ஷதனைக் காணமல் ஸாரதியை நன்றாக அடித்தான். கூர்மையான முனையுள்ள கத்தியினால் வெட்டப் பட்ட அந்த ஸாரதியானவன் ரதத்தினின்று கீழே விழுந்தான். பிறகு, கிருதவர்மா ஸந்தோஷமடைந்து தலத்வனியை உண்டு பண்ணினான்; பார்ஷதனைப் பார்த்து மறுபடியும் மறுபடியும், 'வா, வா' என்றும் சொன்னான். ராஜரே! அந்தப் பார்ஷதன் யுத்தத்தில் கிருதவர்மாவினால் உண்டுபண்ணப்பட்ட அந்தத் தலத்வனியைப் பொறுக்கவில்லை. அவன் அந்தத் தேரினின்று கிளம்பி மறுபடியும் தன் ரதத்தை வந்தடைந்தான். அந்த த்ருஷ்டத்யும்னனே அந்தக் கிருதவர்மாவை எதிர்த்து, 'நில், நில்' என்றும் சொன்னான். அரசரே! பிறகு, த்ருஷ்டத்யும்னன் கதையைக் கையிலெடுத்து மஹாவில்லாளியான கிருதவர்மாவை மறுபடியும் வேகத்தால் விரைவாக அடித்தான். பலசாலியான த்ருஷ்டத்யும்னனால் அதிகமாக அடிக்கப்பட்ட அந்தக் கிருதவர்மா மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். அந்தக் கிருதவர்மாவை ஸ்ருதர்வாவானவன் ரதத்தின்மீது ஏற்றிவைத்துக்கொண்டு யுத்தரங்கத்தை விட்டுவிட்டு விலகிச் சென்றான். மஹாரதனான

[1] அதிக பாடத்தில் அரை ஸ்லோகம் விடப்பட்டது.

த்ருஷ்டத்யும்னனே யுத்தத்தில் சத்துருவைக் கண்டு கௌரவர்களை யுத்தத்தில் அம்புகளால் விரைவாகத் தடுத்தான். பிறகு, உம்மைச் சேர்ந்தவர்களான அந்த யுத்த வீரர்கள் த்ருஷ்டத்யும்னனுடைய அருகில் விரைவாகச் சென்றார்கள்; ஸிம்ம நாதங்களையும் செய்தார்கள். பிறகு, யுத்தம் நடந்தது.

ஐம்பதாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தமும், அச்வத்தாமாவினல் யுதிஷ்டிரர் தோற்றதும்)

ஸாத்யகியினலும் அவ்வாறே சூரர்களான திரௌபதி புத்திரர்களாலும் யுதிஷ்டிரர் நான்கு பக்கங்களிலும் பாதுகாக்கப் பட்டிருப்பதைக் கண்டு, துரோண புத்திரர், உத்ஸாகமுள்ளவர் போல் (அவரை) எதிர்த்தார். கைதேர்ந்தவரான அச்வத்தாமா, கோரமாயிருப்பவைகளும் பொன்னலமைந்த புங்கமுள்ளவைகளும் சாணையில் தீட்டப்பட்டவைகளுமான பாண ஸமூகங்களை இறைத்துக்கொண்டும் பயிற்சி வன்மையினல் பற்பல மார்க்கங் களைக் காண்பித்துக்கொண்டும், கூர்மையுள்ளவைகளும் வேக முள்ளவைகளுமான அம்புகளால் ஆகாயத்தை நான்கு பக்கத் திலும் நிரப்பிக்கொண்டும், யுத்தத்தில் யுதிஷ்டிரரைச் சுற்றி எல்லாத் திக்குக்களையும் நன்ருக மூடிவிட்டார். அச்வத்தாமாவி னுடைய அம்புகளால் மூடப்பட்டு ஒன்றுமே அறியப்படவில்லை. பெரிதான யுத்தமுனையானது முழுதும் பாணமயமாகவே ஆகியது. பரதர்களுள் சிறந்தவரே! ஸுவர்ணக் கட்டுக்களால் அலங்கரிக்கப் பட்டதும் ஆகாயத்திலிருக்கின்றதுமான அந்தப் பாண ஸமூக மானது (ஆகாயத்தில்) நிலைபெற்றிருக்கின்ற விமானம்போல் விளங்கியது. அரசரே! பிரகாசிக்கின்ற அந்தப் பாணஸமூகத் தினலே போர்க்களம் மூடப்பட்டிருக்கும்பொழுது மேகங்களில் நிழல் உண்டானதுபோலிருந்தது. சூரியனும் காந்தியை இழந்தவ னனன். பாணஸ்வரூபமாக இருக்கின்ற ஆகாயத்தில் அந்த ஆச்சரியத்தைக் கண்டோம். அச்வத்தாமாவினுடைய பராக் கிரமத்தைப் பார்த்து ஒரு பிராணியும் அவரை எதிர்த்துவர வில்லை. முயற்சியுடையவனன ஸாத்யகியும் பாண்டுபுத்திரரான தர்மராஜரும் அவ்வாறே மற்ற சேனைகளும் பராக்கிரமத்தை வெளிப்படுத்தவில்லை. மஹாராஜரே! அந்த யுத்தத்தில் மஹா ரதர்கள் துரோண புத்திரருடைய தேர்ச்சியைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். அந்த எல்லா அரசர்களும் பிரகாசிக்கின்ற சூரியன்

போன்ற அந்த அச்வத்தாமாவை எதிரில் பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களானார்கள். பிறகு, சேனையானது கொல்லப்படும்பொழுது மஹாரதர்களான த்ரௌபதி குமாரர்களும் ஸாத்யகியும் தர்மராஜரும் பாஞ்சாலர்களும் ஒன்றுசேர்ந்து ம்ருத்யு பயத்தை விட்டுக் கோரஸ்வரூபியான துரோண புத்திரருக்கருகில் விரைவாகச் சென்றார்கள். ஸாத்யகியானவன் துரோண புத்திரரை இருபத்தேழு பாணங்களால் அடித்து மறுபடியும் ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட ஏழு பாணங்களால் அடித்தான். யுதிஷ்டிரர் எழுபத்துமூன்று பாணங்களாலும் பிரதிவிந்தியன் ஏழு பாணங்களாலும் ச்ருதகர்மா மூன்று பாணங்களாலும் ச்ருதகீர்த்தி ஏழு பாணங்களாலும் ஸுதஸோமன் ஒன்பது பாணங்களாலும் சதானீகன் ஏழு பாணங்களாலும் அடித்தார்கள். மற்ற அனேக சூரர்களும் நாற்புறங்களிலும் அந்த அச்வத்தாமாவை அடித்தார்கள். அரசரே! பிறகு, கோபங்கொண்ட அந்த அச்வத்தாமாவோ ஸர்ப்பம்போலச் சீறிக்கொண்டு ஸாத்யகியை இருபத்தைந்து பாணங்களாலும் ச்ருதகீர்த்தியை ஒன்பது பாணங்களாலும் ஸுதஸோமனை ஐந்து பாணங்களாலும் ச்ருதகர்மாவை எட்டுப் பாணங்களாலும் பிரதிவிந்தியனை மூன்று பாணங்களாலும் சதானீகனை ஒன்பது பாணங்களாலும் தர்மபுத்திரரை ஐந்து பாணங்களாலும் அவ்வாறே மற்ற சூரர்களை இரண்டிரண்டு பாணங்களாலும் அடித்தார். அவ்வாறாகவே, கூர்மையுள்ள அம்புகளாலே ச்ருதகீர்த்தியினுடைய வில்லையும் துண்டாக்கினார். பிறகு, மஹாரதனான ச்ருதகீர்த்தியானவன் வேறு வில்லை எடுத்து மூன்று பாணங்களால் அச்வத்தாமாவை அடித்துக் கூர்மையுள்ள வேறு பாணங்களாலும் அடித்தான். மஹாராஜரே! பெரியவரே! பாரதர்களுள் சிறந்தவரே! பிறகு, துரோணபுத்திரர் சரமாரியினால் அந்தச் சேனையை நான்கு பக்கத்திலும் மூடினார். பிறகு, அளவிடமுடியாத மனவலிமையுள்ள துரோண புத்திரர் மறுபடியும் தர்மராஜருடைய வில்லை அறுத்துச் சிரித்துக்கொண்டு மூன்று பாணங்களால் அவரை அடித்தார். ராஜரே! பிறகு, தர்மநந்தனர் பெரிதான வேறொரு வில்லை எடுத்து அறுபத்துமூன்று பாணங்களால் துரோண புத்திரரை இரண்டு கைகளிலும் மார்பிலும் அடித்தார். ஸாத்யகியோ பிறகு கோபங்கொண்டு யுத்தத்தில் அடிக்கின்ற துரோணபுத்திரருடைய வில்லைக் கூர்மையுள்ள ஓர் அர்த்தசந்திரபாணத்தா லறுத்து மிகவும் கர்ஜித்தான். பிறகு, வில் அறுக்கப்பட்டவரும் சக்தியையுடையவர்களுள் சிறந்தவருமான துரோணபுத்திரர் சக்தி ஆயுதத்தினால் சைனேயனுடைய

ஸாரதியை ரதத்தினின்று விரைவாகத் தள்ளினர். பாரதரே! பிரதாபசாலியான துரோண புத்திரர் பிறகு வேறு வில்லையெடுத்து ஸாத்யகியைச் சரமாரியினால் மூடினர். பாரதரே! யுத்தத்தில் ரதத்திலிருந்த ஸாரதி கீழே விழுந்தவுடனே வேகத்தோடு ஓடுகின்ற அவனுடைய குதிரைகள் ஆங்காங்கு ஓடுகின்றவைகளாகக் காணப்பட்டன. யுதிஷ்டிரரைத் தலைமையாகக் கொண்ட பாண்டவ வீரர்களோ கூர்மையான அம்புகளைப் பிரயோகித்துக் கொண்டு ஆயுதம் பிடித்தவர்களுள் சிறந்தவரான அஶ்வத்தாமாவை வேகத்தோடு எதிர்த்து (அம்புகளை) வருஷித்தார்கள். பகைவர்களை வாட்டுகின்றவரான துரோண புத்திரர் விரைவாக வருகின்றவர்களும் அதிக கோபமுள்ளவர்களுமான அந்தவீரர்களை உரக்கச் சிரித்துக்கொண்டு மஹாயுத்தத்தில் எதிர்த்தார். பிறகு, எழுந்த அக்கினியானது உலர்ந்த காட்டை எரிப்பதுபோல அனேக பாணங்களாகிற ஜ்வாலைகளுடன் கூடின அஶ்வத்தாமா என்கிற நெருப்பானது சேனையாகிற உலர்ந்த காட்டை [1] மஹாயுத்தத்தில் கொளுத்தியது. பரதர்களிற் சிறந்தவரே! துரோண புத்திரரால் நன்றாக வாட்டப்பட்ட பாண்டு புத்திரருடைய அந்தச் சேனையானது அந்த ஸேனாமுகத்திலேயே தத்தளித்தது. பரதர்களிற் சிறந்தவரே! சூரியன் கிரணங்களால் தவிக்கச் செய்வதுபோல துரோண புத்திரர் பாணங்களுடைய ஜ்வாலையினாலே பாண்டு புத்திரருடைய அந்தச் சேனையைத் தவிக்கச் செய்தார். பிராம்மணருடைய பொறுமையினாலும் பாணங்களாலும் வாட்டப்படுகின்ற அந்தப் பாண்டவ சேனையானது திமியினால் நதியின் முகம் கலங்குவதுபோலக் கலங்கிற்று. மஹாராஜரே! துரியோதனன் துரோண புத்திரருடைய பராக்கிரமத்தைக் கண்டு யுத்தத்தில் எல்லாப் பார்த்தர்களையும் மாண்டவர்களாகவே எண்ணினன். யுதிஷ்டிரரோ, விரைபவராகி, மஹாரதரான துரோணபுத்திரரை அடித்துக் கோபத்தோடும் பொறுமையோடும் அவரைப் பார்த்துக் கூறலானர்.

'யுத்தத்தில் மேன்மை பெற்றவரே! உம்மை வீரியமுள்ளவரென்றும் பலமுள்ளவரென்றும் அஸ்திரங்களில் நல்ல தேர்ச்சி உள்ளவரென்றும் ஸமர்த்தரென்றும் அவ்வாறே வேகமுள்ள பராக்கிரமமுள்ளவரென்றும் அறிவேன். நீர் இந்தப் பல மனைத்தையும் பார்ஷதனிடத்தில் காண்பிப்பீராகில் அப்பொழுது உம்மைப் பலசாலியென்றும் அஸ்திர வித்தையில் தேர்ச்சியுள்ள

[1] இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

வரென்றும் நாம் அறிவோம். யுத்தத்தில் பகைவர்களை நாசஞ் செய்பவனான த்ருஷ்டத்யும்னனைப் பார்த்தபின் உமக்குப் பலம் சிறிதுமுண்டாகாது. உம்மைப் பிராம்மணரென்று நான் சொல்லவில்லை. மனிதர்களுள் சிறந்தவரே! நீர் என்னையே இப்பொழுது கொல்ல விரும்புகிறீராதலால் உமக்கு அன்பு இல்லை; நன்றியறிவுமில்லை. பிராம்மணனுக்குத் தவமும் சமதமங்களும் வேண்டும். வில் க்ஷத்திரியனால் வளைக்கத்தக்கது. அப்படிப்பட்ட நீர் பிராம்மணாதமர். மஹாபாகுபலமுள்ளவரே! நீர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே யுத்தத்தில் கௌரவர்களை ஜயிப்பேன். பிராம்மணாதமரே! யுத்தத்தில் உமது விருப்பப்படி காரியத்தைச் செய்யக்கடவீர்' என்று சொன்னார். மஹாராஜரே! இவ்வாறு சொல்லப்பட்ட துரோண புத்திரர் சிரித்துக்கொண்டே (யுதிஷ்டிரர் சொல்லியதைத்) தகுந்ததென்றும் உண்மையென்றும் எண்ணி, ஒன்றும் மறுமொழி கூறவில்லை. பிறகு, துரோண புத்திரர் ஒன்றும் மறுமொழி சொல்லாமல், கோபங்கொண்ட யமன் பிரஜைகளை (நாசஞ்செய்வது) போல யுத்தத்தில் சரமாரியினால் பாண்டவரை மூடினார். ஐயா! துரோண புத்திரரால் அப்பொழுது மூடப்படுகின்ற அந்த யுதிஷ்டிரர் பெரும் படையைக் கூட்டிக்கொண்டு விரைவாக விலகி அப்புறஞ் சென்றார். அரசரே! பிறகு, தர்மநந்தனரான அந்த யுதிஷ்டிரர் யுத்தத்தை விட்டு விலகிய பின், துரோணபுத்திரர் மஹாத்மாவான தர்மநந்தனருடைய விலக்கத்தால் சும்மா நின்றார். அரசரே! பிறகு, யுதிஷ்டிரர் மஹா யுத்தத்தில் துரோண புத்திரரை விட்டு ஜாக்கிரதையுடன் கூடியவராகக் குரூரமான செய்கையின்பொருட்டு உம்முடைய சேனையில் பிரவேசித்தார்.

ஐம்பத்தோராவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

பாஞ்சாலர்களோடு கூடியவனும் சைத்தியர்களாலும் கேகயர்களாலும் சூழப்பட்டவனுமான பீமஸேனனை ஸேனாபதியான கர்ணன் கோபங்கொண்டு தானே அம்புகளால் தடுத்தான். பிறகு, கர்ணனே யுத்தத்தில் பீமஸேனன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே மஹாரதர்களான சைத்தியர்களையும் காரூசர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் அடித்தான். பிறகு, பீமஸேனன் ரதிகர்களுள் சிறந்தவனான கர்ணனை விட்டுவிட்டு, ஜ்வலிக்கின்ற நெருப்பானது

உலர்ந்த காட்டில் பிரவேசிப்பது போலக் கௌரவ சேனையில் பிரவேசித்தான். ஸூத புத்திரனும், யுத்தத்தில் மஹா வில்லாளிகளான பாஞ்சாலர்களையும் கேகயர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் ஆயிரக்கணக்காகக் கொன்றான். மஹாரதர்களாயிருக்கின்ற பார்த்தனும் விருகோதரனும் கர்ணனும், ஸம்சப்தகர்களுக்கும் கௌரவர்களுக்கும் பாஞ்சாலர்களுக்கும் நாசத்தை உண்டுபண்ணினார்கள். அரசரே! உம்முடைய துராலோசனையினால் ஏற்பட்ட யுத்தத்தில் அக்னிக்கு ஒப்பான அந்த மூன்று வீரர்களாலே அந்த க்ஷத்திரியர்கள் எரிக்கப்படுகின்றவர்களாகி நாசத்தையடைந்தார்கள். பரதஸ்ரேஷ்டரே! பிறகு, துரியோதனன் கோபங்கொண்டு நகுலனை ஒன்பது பாணங்களால் அடித்து அவனுடைய நான்கு குதிரைகளையும் அடித்தான். ஜனாதிபரே! பிறகு, அளவிடமுடியாத பலமுள்ள உம்முடைய புத்திரன் ஒரு க்ஷுரத்தினால் ஸ்வர்ணமயமான ஸஹதேவனுடைய த்வஜத்தைத் துண்டாக்கினான். ராஜரே! பிறகு, நகுலனே கோபங்கொண்டு உம்முடைய புத்திரனை ஏழு பாணங்களால் அடித்தான். ஸஹதேவன் யுத்தத்தில் ஐந்து பாணங்களால் (உம்முடைய புத்திரனை) அடித்தான். பரதஸ்ரேஷ்டர்களும் எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவர்களுமான அவ்விருவரையும் (உம்முடைய புத்திரன்) கோபங்கொண்டு ஐவைந்து பாணங்களால் மார்பில் அடித்தான். பிறகு, வீரனான உம்முடைய புத்திரன் பலாத்காரமாக வேறு இரண்டு பல்லங்களாலே இரட்டைப் பிள்ளைகளான அவர்களுடைய விற்களை வெட்டினான். (மும்மூன்று பாணங்களால் விரைவாக அவர்களை அடித்தான்.) தேவ குமாரர்களுக்கு ஒப்பான அந்த இரண்டு சூரர்களும் யுத்தத்தில் இந்திரவிற்போன்றவைகளும் மங்களகரமானவைகளும் சிறந்தவைகளுமான வேறு இரண்டு விற்களை எடுத்துக்கொண்டு விளங்கினார்கள். பிறகு, யுத்தத்தில் சுறுசுறுப்புள்ளவர்களும் ஸஹோதரர்களுமான அவ்விருவரும் இரண்டு மகாமேகங்கள் மலையின்மீது நீர்த்தாரைகளைப் பொழிவதுபோல யுத்தத்தில் பிராதாவின் மீது கோரமான பாணங்களை வருஷித்தார்கள். மஹாராஜரே! பிறகு, மஹாரதனான உம்முடைய புத்திரன் கோபங்கொண்டு மஹாவில்லாளிகளான பாண்டு புத்திரர்களிருவரையும் பாணங்களால் தடுத்தான். பாரதரே! யுத்தத்தில் துரியோதனனுடைய வில்லானது வட்டமாகவே காணப்பட்டது; அம்புகளும் நான்கு பக்கத்திலும் வெளிப்படுகின்றவைகளாகக் காணப்பட்டன. அந்தத் துரியோதனனுடைய அம்புகளால் நன்றாக மூடப்பட்ட மாத்ரீ புத்திரர்கள் ஆகாயத்தில்

மேகங்களால் மறைக்கப்பட்டு ஒளியை இழந்திருக்கின்ற சந்திர சூரியர்கள்போலப் பிரகாசிக்கவில்லை. மஹாராஜரே! பொற் கட்டுகளுள்ளவையும் சாணையில் தீட்டப்பட்டவையுமான அந்தப் பாணங்கள் சூரியனுடைய கிரணங்கள்போல எல்லாத் திக்கு களையும் மறைத்தன. பிறகு, அந்த ஆகாயமானது பாண ஸ்வரூபமாகி நன்றாக மூடப்பட்டிருக்கும் ஸமயத்தில் அரசனுடைய உருவமானது காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்கும் ஒப்பாகக் காணப்பட்டது. உமது குமாரனுடைய அந்தப் பராக்கிரமத்தைப் பார்த்து மஹாரதர்கள் மாத்ரீபுத்திரர்களை ம்ருத்யுவினுடைய ஸமீ பத்தையடைந்தவர்களென்றே எண்ணினார்கள். மன்னரே! பிறகு, பாண்டவர்களுடைய ஸேனாபதியும் மஹாரதனுமான பார்ஷதன் துரியோதன ராஜன் இருக்கிறவிடத்துக்குச் சென்றான். பிறகு, திருஷ்டத்யும்னன் மஹாரதர்களும் சூரர்களுமான மாத்ரீபுத்திரர் களைத் தாண்டி உம்முடைய குமாரனை அம்புகளால் அடித்தான். அளவிடமுடியாத மனோபலமுடையவனும் புருஷச்ரேஷ்டனுமான உம்முடைய புத்திரன் கோபங்கொண்டு உரக்கச் சிரித்துக் கொண்டு அந்தப் பாஞ்சால்யனை இருபத்தைந்து பாணங்களால் அடித்தான். பிறகு, அளவிடமுடியாத பராக்கிரமமுள்ள உம் முடைய புத்திரன் கோபமுள்ளவனாகி மறுபடியும் பாஞ்சால்யனை அறுபத்தைந்து பாணங்களால் அடித்து ஸிம்மநாதஞ் செய்தான். அரசரே! ராஜாவான துரியோதனன் மிக்க கூர்மையுள்ள க்ஷுர ப்ரத்தினால் அந்த த்ருஷ்டத்யும்னனுடைய அம்புடன் கூடின வில்லை யுத்தத்தில் கைப்பிடியில் வெட்டினான். பகைவர்களை அழிப்பவ னான பாஞ்சால்யன் அறுக்கப்பட்ட அந்த வில்லை எறிந்துவிட்டுப் பாரத்தை சகிக்கக்கூடிய புதிதான வேறொரு வில்லை வேகத்தோடு எடுத்தான். கோபத்தினால் ரத்தம் போலச் சிவந்த கண்களையுடைய வனும் காயப்படுத்தப்பட்டவனும் சிறந்த வில்லாளியுமான த்ருஷ்ட த்யும்னன் கோபத்தால் ஜ்வலிக்கின்றவன்போல விளங்கினான். அந்த த்ருஷ்டத்யும்னன் பரதச்ரேஷ்டனான துரியோதனனைக் கொல்லவிரும்பி ஸர்ப்பம்போலச் சீறுகின்ற பதினைந்து பாணங்களை அவன்மீது பிரயோகித்தான். கழுகிறகுகள் பூண்டவைகளும் மயிலிறகுகளுடன் கூடினவைகளுமான அந்தப் பாணங்கள் அரசனுடைய பொன்னால் செய்யப்பட்ட கவசத்தை உடைத்து வேகத்துடன் பூமியில் பிரவேசித்தன. மஹாராஜரே! அதிகமாக அடிக்கப்பட்ட அந்த உம்முடைய குமாரன் வஸந்த காலத்தில் நன்றாகப் பூத்திருக்கின்ற மிகப் பெரிதான பலாச மரம்போல் அதிகமாக விளங்கினான். கவசம் உடைக்கப்பட்டவனும்

நாராசங்களுடைய வீழ்ச்சிகளால் வலிமை குன்றியிருப்பவனுமான அந்தத் துரியோதனன் கோபமுள்ளவனாகி ஒரு பல்லத்தினால் த்ருஷ்டத்யும்னனுடைய வில்லை அறுத்தான். ராஜரே! பிறகு, ராஜாவான துரியோதனன் விரைவுடன் வில் அறுக்கப்பட்டவனான அந்த த்ருஷ்டத்யும்னனை இரண்டு புருவங்களின் இடையில் பத்துப் பாணங்களால் அடித்தான். கருமானால் நன்கு சாணை பிடிக்கப்பட்ட அந்த அம்புகள், தேனில் ஆசைகொண்ட வண்டுகள் மலர்ந்த தாமரைப் பூவை அலங்கரிப்பதுபோல அந்த த்ருஷ்டத்யும்னனுடைய முகத்தை விளங்கச் செய்தன. பெரிய மனமுள்ளவனான த்ருஷ்டத்யும்னன் அறுக்கப்பட்ட அந்த வில்லை எறிந்துவிட்டு வேகத்தோடு வேறு வில்லையும் பதினாறு பல்லங்களையும் எடுத்தான். பிறகு, திருஷ்டத்யும்னன் ஐந்து பாணங்களாலே துரியோதனனுடைய குதிரைகளையும் ஸாரதியையுங் கொன்று ஒரு பல்லத்தினாலே ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட வில்லையும் வெட்டினான். பார்ஷதன் பத்துப் பல்லங்களாலே உமது புத்திரனுடைய உபகரணங்களுடன் கூடின ரதத்தையும், குடையையும், சக்தியையும், கத்தியையும், கதையையும், த்வஜத்தையும் துண்டாக்கினான். எல்லா அரசர்களும் குருராஜனுடைய பொன்வளையமுள்ள குடையும், மணிமயமாயும், மங்களகரமாயுமுள்ள அரவக் கொடியும் அறுக்கப்பட்டதைக் கண்டார்கள். பரதர்களுள் சிறந்தவரே! ஸஹோதரர்கள் ப்ராதாவான துரியோதனனை ரதத்தை இழந்தவனாகவும் கவசமும் ஆயுதங்களும் த்வஜமும் அறுக்கப்பட்டவனாகவும் கண்டார்கள். அரசரே! குண்டதாரன் மனங்கலங்காமல் த்ருஷ்டத்யும்னன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, மஹாரதனான அந்தத் துரியோதனனைத் தன் ரதத்தின்மீது ஏற்றிவைத்துக்கொண்டு வேறு இடத்திற்குக் கொண்டுபோனான். அரசனிடத்தில் அதிக ஆவலுள்ள கர்ணனோ, கோபங்கொண்டு ஸாத்யகியை விட்டுவிட்டு யுத்தரங்கத்தில் துரோணரைக்கொன்றவனும் உக்கிரமான பாணங்களை உடையவனுமான அந்த த்ருஷ்டத்யும்னனை எதிர்த்துச் சென்றான். அம்புகளால் அடிக்கப்பட்டவனான சைனேயன் ஒரு யானையைப் பின்புறத்தில் வேறொரு யானையானது இரண்டு தந்தங்களாலும் (இடித்துக்கொண்டு) செல்வதுபோல அந்தக் கர்ணனை விரைவாகப் பின்புறத்தில் அனுஸரித்துச் சென்றான். பாரதரே! கர்ணனுக்கும் பார்ஷதனுக்கும் நேர்ந்த மஹாயுத்தத்தில் மிகுந்த கோபமுள்ளவர்களும் அதிக பலசாலிகளும் முன் செல்பவர்களுமான அரசர்களுள்ளும் பாண்டவர்களுள்ளும் நம்மைச் சேர்ந்தவர்களுள்ளும் ஒருவனாவது

யுத்தத்தில் பின்னிடுபவனுகக் காணப்படவில்லை. கர்ணன் விரைவுடன் பாஞ்சாலர்களை நோக்கிச் சென்றுன். அரசரே ! நரஶ்ரேஷ்டரே ! அந்த க்ஷணத்தில் நடுப்பகலில் இரண்டு பக்கத்திலும் யானைகள் குதிரைகள் தேர்களாகிய இவைகளுடைய அழிவு தோன்றியது. மஹாராஜரே ! பாஞ்சாலர்களோ ஜயத்தில் விருப்பமுள்ளவர்களாக, ஒரு மரத்தைக் குறித்துப் பக்ஷிகள் ஓடிவருவது போலக் கர்ணனைக் குறித்து நான்கு பக்கத்தினின்றும் விரைவுடன் எதிர்த்து வந்தார்கள். அதிரத புத்திரனுன கர்ணன் அவ்வீரர்களுள் எதிரிலிருக்கின்ற தலைவர்களான பலசாலிகளைப் பாண ஸமூகங்களாலே தேடுகிறவன்போல அடைந்தான். வ்யாக்ரகேது, ஸுசர்மா, சுக்ரன், சித்ராயுதன், க்ரது, துர்ஜயன், ரோசமானன், எட்டாமவனுன ஸிம்மஸேனன் இவர்கள் யுத்தத்தில் பிரகாசிக்கின்ற புருஷஶ்ரேஷ்டனுன கர்ணன் மீது விரைவாகப் பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டு பெரிய தேர்க் கூட்டத்தோடு அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அரசனுன கர்ணன் யுத்தத்தில் முயற்சி செய்கின்றவர்களான அந்த எட்டுப் பாஞ்சால வீரர்களையும் கூர்மையுள்ள எட்டு அம்புகளால் கொன்றுன். மஹாராஜரே ! பிறகு பிரதாபசாலியான ஸூதபுத்திரன் யுத்தத்தில் ஸமர்த்தர்களான அனேக ஆயிரக்கணக்கான மற்றப் போர்வீரர்களையும் கொன்றுன். கர்ணன் மிகுந்த கோபமுள்ளவனுக யுத்தத்தில் சேதி தேசத்தார்களும் மஹாரதர்களுமான விஷ்ணுவையும், விஷ்ணுவர்மாவையும், தேவாபியையும், பத்ரனையும், தண்டதாரனையும், சித்ரனையும், சித்ராயுதனையும், ஹரியையும், ஸிம்மகேதுவையும், ரோசமானனையும், சலபனையும் கொன்றுன். அவர்களுடைய உயிரைக் கவர்கின்றவனும் இரத்தத்தால் அங்கங்கள் நன்றுக நனைக்கப்பட்டவனுமான அந்தக் கர்ணனுடைய சரீரமானது ருத்திரருடைய சரீரம்போல் அதிபயங்கரமாயிருந்தது. பாரதரே! அந்த யுத்தத்தில் கர்ணனுல் அம்புகளால் அடிக்கப்பட்ட யானைகள் பயந்து பெரிதான (அச்சேனையை) மனங்கலங்கச் செய்துகொண்டு நாற்புறங்களிலும் ஓடின. யானைகள் யுத்தத்தில் கர்ணனுடைய அம்புகளால் அடிக்கப்பட்டவைகளாகப் பற்பல சப்தங்களை வெளியிட்டுக்கொண்டு வஜ்ரத்தினுல் தள்ளப்பட்ட மலைகள் போலப் பூமியில் விழுந்தன. நான்கு பக்கத்திலும் விழுகின்ற யானைகளாலும் குதிரைகளாலும் மனிதர்களாலுமுடைக்கப்பட்ட ரதங்களாலும் கொடிகளாலும் யுத்த பூமியானது நன்கு பரப்பப்பட்டது. யுத்தத்தில் கர்ணன் செய்ததுபோன்ற காரியத்தைப் பீஷ்மராவது துரோணராவது யுத்தபூமியிலிருந்த உம்மைச்

சேர்ந்த மற்ற வீரர்களாவது செய்யவில்லை. மிருகங்களுடைய மத்தியில் ஸிம்மம் பயமற்று ஸஞ்சரிப்பது போலக் கர்ணன்பாஞ்சாலர்களுடைய மத்தியில் பயமற்று ஸஞ்சரிக்கின்றவனாகக் காணப்பட்டான். பிறகு, புருஷச்ரேஷ்டனான ஸூத புத்திரன் யானைகளிடத்திலும் குதிரைகளிடத்திலும் ரதிகர்களிடத்திலும் காலாட்களிடத்திலும் அதிக ஹிம்ஸையை உண்டு பண்ணினான். பயந்துகொண்டிருக்கிற மான் கூட்டங்களை ஸிம்மமானது திக்குக்களில் ஓடும்படி செய்வதுபோலக் கர்ணன் பாஞ்சால ரதிகர்களுடைய கூட்டங்களை ஓடும்படி செய்தான். ஸிம்மத்தை எதிர்த்து மான்கள் ஓரிடத்திலும் ஜீவிக்காதது போல ஸ்ருஞ்சயர்கள் கர்ணனை எதிர்த்து ஜீவிக்கவில்லை. பாரதரே! அக்னி முகத்தை அடைந்து எவ்வாறு விட்டிற் பூச்சிகள் எரிக்கப்படுமோ அவ்வாறே யுத்தத்தில் ஸ்ருஞ்சயர்கள் கர்ணனாகிற நெருப்பை அடைந்து எரிக்கப்பட்டார்கள். பாரதரே! கர்ணன் ஒருவனாலே சைத்தியர்களிலும் பாஞ்சாலர்களிலும் சூரர்களென்று ஒப்புக்கொள்ளப்பட்ட அனேகர்கள் பெயரைக் கேட்கும்படி செய்து கொல்லப்பட்டார்கள். அரசரே! கர்ணனுடைய பராக்கிரமத்தைக் கண்டு 'கர்ணனிடத்தினின்று யுத்தத்தில் பாஞ்சாலர்களுள் ஒருவனாவது உயிரோடு விடுபடப்போகிறதில்லை' என்கிற புத்தியானது எனக்கும் உண்டாயிற்று. ஸூத புத்திரன் அடிக்கடி பாஞ்சாலர்களை யுத்தத்தில் அடித்து மிகுந்த கோபங்கொண்டு குந்தீ புத்திரரான யுதிஷ்டிரரை எதிர்த்துச் சென்றான். ஐயா! பகைவர்களைக் கொல்பவரான யுதிஷ்டிரராஜரை த்ருஷ்டத்யும்னனும் த்ரௌபதீ புத்திரர்களும் நூறுநூறாக மற்ற ஜனங்களும் சூழ்ந்துகொண்டார்கள். சிகண்டியும் ஸஹதேவனும் நகுலனும் அவ்வாறே நகுலபுத்திரனான ஜனமேஜயனும் ஸாத்யகியும் அனேகர்களான பிரபத்திரகர்களும் த்ருஷ்டத்யும்னனும், யுத்தத்தில் முந்திச் செல்பவர்களாகி, அழிக்கின்றவனும் அளவுகடந்த பராக்கிரமமுள்ளவனுமான கர்ணனைப் பாணங்களாலும் அஸ்திரங்களாலும அடித்தார்கள். அந்த யுத்தத்தில், கருடன் ஸர்ப்பங்களை எதிர்ப்பதுபோல ஏகாகியான கர்ணன் அனேக சைத்யர்களையும் பாஞ்சாலர்களையும் பாண்டவர்களையும் எதிர்த்தான். அரசரே! தேவர்களுக்கு அஸுரர்களோடு முற்காலத்தில் நடந்ததுபோன்ற கோர ஸ்வரூபமான யுத்தம் கர்ணனுக்கு அவர்களோடு நடந்தது. ஒன்று சேர்ந்தவர்களும் பெரிய வில்லையுடையவர்களும் சரமாரிகளைக் கூட்டங்கூட்டமாகப் பொழிகின்றவர்களுமான அந்த வீரர்களை, சூரியன் இருளை நாசஞ்செய்வது போல, ஏகாகியான கர்ணன் மனக்கலக்கமற்ற

வனுக நாசஞ் செய்தான். பீமஸேனனே, கர்ணன் பாண்டவர்களோடு எதிர்த்திருக்கும் ஸமயத்தில் கோபங்கொண்டவனுகி யம தண்டம் போன்ற அம்புகளாலே நான்கு பக்கத்திலும் கர்ணனை அடித்தான். மஹா வில்லாளியான கர்ணன் யுத்தத்தில் ஒருவனுயிருந்துகொண்டு பாஹ்லீகர்களையும் கேகயர்களையும் மாத்ஸ்யர்களையும், வாஸாத்யர்களையும், மத்ரர்களையும், ஸைந்தவர்களையும் எதிர்த்துப் போர் புரிந்துகொண்டு அதிகமாக விளங்கினுன். அந்த யுத்தரங்கத்தில் பீமனுல் மர்மஸ்தானங்களில் நாராசங்களால் அடிக்கப்பட்ட யானைகள் யானைவீரர்கள் கொல்லப்பட்டவைகளாகிக் கீழேவிழுந்து பூமியை நடுங்கச்செய்தன. மஹாராஜரே! குதிரைவீரர்கள் கொல்லப்பட்ட குதிரைகளும் உயிரை இழந்தவர்களான காலாட்களும் மிகுதியாக ரத்தத்தைக் கக்கிக்கொண்டு (பூமியில்) படுத்தார்கள். பெரியவரே! பீமஸேனனுல் விரைவாக அடிக்கப்பட்ட மஹாவேகமுள்ள யானைகள் வஜ்ராயுதத்தினுல் அடிக்கப்பட்ட மலைகள்போலக் கீழே விழுந்தன. மன்னரே! வேகமுள்ளவைகளும் கீழே விழுந்திருக்கின்றவைகளுமான அந்த மஹாரதங்களால் யுத்தபூமியானது சிதறிக் கிடக்கின்ற மலைகளால் நிரப்பப்பட்டதுபோல விளங்கியது. ஆயிரக்கணக்கான ரதிகர்களும் காலாட்களும் ஆயுதங்களால் அடிக்கப்படாதவர்களாகவே பீமனிடத்தினின்று பயந்து ஆயுதங்களை விட்டு உயிரை விட்டவர்களாகக் காணப்பட்டார்கள். யுத்தபூமியானது பீமஸேனனுடைய அம்புகளாலே வெட்டப்பட்ட ரதிகர்களாலும் குதிரைவீரர்களாலும் ஸாரதிகளாலும் காலாட்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் நான்கு பக்கங்களிலும் மூடப்பட்டதாகியது. பீமஸேனனிடத்திலிருந்து உண்டான பயத்தினுல் பிடிக்கப்பட்டதும் யுத்தத்தில் உத்ஸாகத்தை இழந்ததாகச் செய்யப்பட்டதுமான அந்தத் துரியோதனனுடைய சேனை முழுவதும் அசைவற்றதுபோல நின்றது. அரசரே! அந்த மஹாயுத்தத்தில் அசைவற்றதும் நெருங்கியதும் எளிமையுற்றதுமான அந்தச்சேனையானது தெளிந்த ஜலத்தை உடையதான காலத்தில் ஸமுத்திரம் விளங்குவது போலச் சலிக்காமல் நிலைபெற்றதாக விளங்கியது. கோபத்தோடும் வீரியத்தோடும் பலத்தோடும்கூடின உமது புத்திரனுடைய அந்தச் சேனையானது அப்பொழுது மதத்தை இழக்கும்படி செய்யப்பட்டு ஒளியை இழந்ததாயிற்று. பரதஶ்ரேஷ்டரே! பரஸ்பரம் பிடிக்கப்படுகின்ற அந்த இரு சேனைகளும் [1] ரத்த வெள்ளத்தால் நான்கு பக்கங்களிலும் நனைக்கப்பட்டவைகளாயின.

---

[1] ஒரு சொல் விடப்பட்டது.

ஸூத புத்திரன் கோபங்கொண்டவனாகப் பாண்டவர்களுடைய சேனையைக் கொன்றான். பீமஸேனன் கௌரவ சேனையையும் தனஞ்சயன் திரிகர்த்தர்களுடைய படையையும் நாசஞ்செய்தார்கள். அவ்வாறு பயங்கரமானதும் ஆச்சரியகரமான காட்சியுள்ளதுமான யுத்தம் நடந்துவரும்பொழுது ஜயசாலிகளுள் சிறந்தவனான அர்ஜுனன் சேனையின் மத்தியில் அனேக ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களைக் கொன்று பிறகு வாஸுதேவரைப் பார்த்துக் கூறலானான்.

'என்னோடுகூடப் போர் புரியப்போகிற இந்தச் சேனையானது நன்றாக முறியடிக்கப்பட்டுவிட்டதன்றோ? இந்த ஸம்சப்தக மஹாரதர்கள் பரிவாரங்களோடு ஓடுகிறார்கள். இவர்கள் யுத்தத்தில் இந்திரனுடன் கூடின தேவர்களாலும் ஜயிக்க முடியாதவர்கள். ஸிம்மத்தினுடைய கர்ஜனத்தை மான்கள் ஸஹிக்காததுபோல இவர்கள் என்னுடைய பாணங்களை ஸஹிக்கச் சக்தியற்றவர்களாகிவிட்டார்கள். மஹாயுத்தத்தில் ஸ்ருஞ்சயர்களுடைய பெரும் படையானது பிளக்கப்படுகிறது. கௌரவர்களும் பீமஸேனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகி ஓடுகின்றார்கள். வாஸுதேவரே! ராஜ ஸைன்யத்தினுடைய மத்தியில் அடிக்கடி ஸஞ்சரிக்கின்ற புத்திமானான கர்ணனுடைய யானைகட்டும் கச்சைக் கொடியானது இதோ காணப்படுகிறது. இந்த மஹாரதர்கள் கர்ணனை யுத்தத்தில் ஜயிப்பதற்குச் சக்தியற்றவர்கள். நீர் கர்ணனை, பகைவர்களை வெல்வதில் சிறந்த வீர்யமுடையவனென்று அறிந்திருக்கிறீரன்றோ? எந்த இடத்தில் கர்ணன் நம்முடைய சேனையைத் துரத்துகிறானோ அந்த இடத்திற்குச் செல்லும். த்ரிகர்த்தர்களை விட்டு விலகி மஹாரதனான ஸூத புத்திரனை நோக்கிச் செல்லும். மாதவரே! இது என் மனத்துக்கு விருப்பம். உமக்கு எப்படித் தோன்றுகிறதோ?' என்று வினவினான்.

அந்த அர்ஜுனனுடைய இந்த வார்த்தையைக் கேட்டு, கோவிந்தர் உரக்கச் சிரித்துக்கொண்டு அவனைப் பார்த்து, 'பாண்டவ! கௌரவர்களைக் குறித்து விரைவாகச் செல்' என்று கூறினார். பிறகு, அன்ன நிறமுள்ள குதிரைகள் கோவிந்தரால் தூண்டப்பட்டவைகளாகி அர்ஜுனனை யுத்த பூமியில் வஹித்துக் கொண்டு உமது பெரும் படையில் விரைவாகப் பிரவேசித்தன. கேசவரால் ஓட்டப்பட்டவைகளும் வெண்ணிறமுள்ளவைகளும் பொன்னணிகளை அணிந்தவைகளும் (சேனையில்) பிரவேசிக்கின்ற

வைகளுமான குதிரைகளால் உம்முடைய சேனையானது நான்கு திசைகளிலும் பிளக்கப்பட்டது. மேகத்தின் இடிபோன்ற முழக்கமுள்ளதும் வானரக் கொடியை உடையதும் அசைகின்ற கொடித் துணியுடன் கூடியதுமான அந்த ரதமானது, விமானம் ஆகாயத்தில் பிரவேசிப்பது போல அந்தச் சேனையில் பிரவேசித்தது. பெருஞ் சேனையைப் பிளந்துகொண்டு நுழைந்தவர்களும் கோபமுள்ளவர்களும் கோபத்தினால் சிவந்த கண்களையுடையவர்களுமான அந்தக் கேசவரும் அர்ஜுனனும் மிக்க காந்தியுள்ளவர்களாக விளங்கினார்கள். யுத்தத்தில் ஸமர்த்தர்களும் யுத்த யாகத்திற்காக அழைக்கப்பட்டு வந்தவர்களுமான அவ்விருவர்களும் யாகஞ் செய்பவர்களால் விதிப்படி அழைக்கப்பட்டு யாகத்திற்கு வந்திருக்கின்ற அக்னி தேவதைகள் போல விளங்கினார்கள், கோபத்தினால் சிவந்த கண்களையுடையவர்களும் மஹாபலசாலிகளுமான (அந்த இரண்டு) சூரர்களும் அதிக மதங்கொண்டவைகளும் த்ருஷ்டி ஸஞ்சாரத்துடன் ஸஞ்சரிக்கின்றவைகளுமான இரண்டு யானைகள்போல் விளங்கினார்கள். கோபங்கொண்டவர்களும் சிறந்த உபாயமுள்ளவர்களுமான அந்த இரண்டு புருஷ ச்ரேஷ்டர்களும் தலத்வனியினால் கோபமூட்டப்பட்ட இரண்டு மஹா கஜங்கள்போல அடங்காத பலமுடையவர்களானார்கள். பல்குனன் தேர்ப்படையிலும் குதிரைக் கூட்டங்களிலும் நுழைந்து பாசத்தைக் கையில்கொண்ட யமன் போலச் சேனையின் மத்தியில் ஸஞ்சரித்தான். பாரதரே! யுத்தத்தில் உமது சேனையில் விக்கிரமத்துடன் கூடின அந்த அர்ஜுனனைக் கண்டு உம்முடைய குமாரன் ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களை மறுபடியும் ஏவினான். பிறகு, சூரர்களும் அஸ்திர வித்தையில் தேர்ச்சியுள்ளவர்களும் எங்கும் பிரசித்தி பெற்றவர்களும் மஹாரதர்களும் வில்லாளிகளுமான ஸம்சப்தகர்கள் மஹாயுத்தத்தில் ஆயிரம் ரதங்களோடும் முந்நூறு யானைகளோடும் பதினாலாயிரம் குதிரைகளோடும் இரண்டு லக்ஷம் காலாட்களோடும் குந்தீ புத்திரனை பாண்டுநந்தனனைச் சரமாரிகளால் நான்கு பக்கத்திலும் மூடிக்கொண்டு எதிர்த்தார்கள். மஹாராஜரே! பகைவர் படையைக் கொல்பவனான அந்தப் பார்த்தன் யுத்தத்தில் அம்புகளால் மூடப்பட்டவனாகப் பாசத்தைக் கையில்கொண்ட யமன் போலத் தன் உருவத்தைப் பயங்கரமாகக் காண்பித்துக்கொண்டும் ஸம்சப்தகர்களைக் கொன்றுகொண்டும் மிகவும் பார்க்கத்தக்கவனானான். பிறகு, கிரீடியினால் மின்னல்போலப் பிரகாசிக்கின்றவைகளும் ஸ்வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான பாணங்களால் ஆகாயமானது மூடப்பட்டு இடைவெளியற்றது போல் ஆயிற்று.

பிரபுவே! கிரீடியினுடைய வில்லினால் விடப்பட்டவைகளும் ஸர்ப்பங்கள்போல நன்றாக விழுகின்றவைகளுமான பெரிய அம்பு களால் எல்லாம் மூடப்பட்டுப் பிரகாசித்தது. அளத்தற்கு அரிய பராக்கிரமமுள்ள பாண்டவன் ஸ்வர்ணக் கட்டுள்ளவைகளும் கோரமானவைகளும் பளபளப்பானவைகளும் படிவான கணுக்க ளுள்ளவைகளுமான பாணங்களை எல்லாத் திக்குக்களிலும் பிரயோகித்தான். பார்த்தனுடைய கையுறையில் மோதும் ஒலியினால் ஜனங்கள், பூமி ஆகாயம், எல்லாத்திக்குக்கள், கடல்கள், மலைகள் இவைகளெல்லாம் வெடிக்கின்றனவென்று எண்ணினார்கள். மஹாரதனான கௌந்தேயன் பதினாயிரம் அரசர்களைக் கொன்று ஸம்சப்தகர்களுடைய ப்ரபக்ஷத்தை நோக்கி விரைவாகச்சென்றான், பார்த்தன் காம்போஜர்களால் ரக்ஷிக்கப் பட்ட ப்ரபக்ஷத்தையடைந்து இந்திரன் அஸுரர்களை அழித்தது போலச் சேனையைப் பல்லங்களால் அழித்தான். தன்னைக் கொல்ல வருகின்ற பகைவர்களுடைய சஸ்திரங்களுள்ள கைகளுடன்கூடின புஜங்களையும் அவ்வாறே தலைகளையும் விரைவாகப் பல்லத்தினால் துண்டாக்கினான். நான்கு பக்கத்திலும் காற்றினால் பலகிளைகள் முறிக்கப்பட்ட மரங்கள்போல அவர்கள் ஆயுதங்களையிழந்து வெட்டப்பட்ட அங்கங்களோடும் அங்கங்களின் உறுப்புக் களோடும் பூமியில் விழுந்தார்கள். யானைகள், குதிரைகள், தேர்கள், காலாட்கள் இவைகளுடைய கூட்டங்களைக் கொல்லு கின்றவனான அர்ஜுனனை ஸுதக்ஷிணனுக்கு இளையஸஹோதரன் எதிர்த்துச் சரமாரியினால் வர்ஷித்தான். அந்தப் பார்த்தன், (பாணங்களைப்) பிரயோகிக்கின்ற அந்த ஸுதக்ஷிணனது இளைய ஸஹோதரனுடைய பரிகாயுதம்போன்ற இரண்டு கைகளையும் இரண்டு அர்த்தசந்திர பாணங்களால் அறுத்துப் பூர்ணசந்திரன் போல் பிரகாசிக்கின்ற முகத்துடன் கூடின தலையையும் ஒரு க்ஷுரத் தினால் அறுத்தான். பிறகு, தன்னிடத்தினின்று உண்டான ரத்தத் தினால் அலங்கரிக்கப்பட்டுள்ள அந்தத் தலையானது வஜ்ராயுதத் தினால் பிளக்கப்பட்ட மனோசிலை மயமான மலையினுடைய சிகரம் போல வேகத்துடன் கீழே விழுந்தது. காம்போஜர்கள், உன்னதனா யிருப்பவனும் தாமரை இதழ்போன்ற கண்களையுடையவனும் மிக இனிய தோற்றமுள்ளவனும் பொற்றூண் போன்றவனும் கொல்லப்பட்டவனுமான ஸுதக்ஷிணனுடைய இளைய ஸஹோ தரனைப் பிளக்கப்பட்ட மஹாமேருவைப்போலக் கண்டார்கள். பிறகு, கோரமும் மிக்க ஆச்சரியகரமுமான யுத்தம் மறுபடியும் உண்டாகியது. அந்த யுத்தத்தில் சண்டைசெய்கின்ற யுத்த வீரர்களுக்குப் பற்பல அவஸ்தைகள் உண்டாயின. அரசரே!

பார்த்தனுடைய அம்புகளாலே அடிக்கப்பட்டு ரத்தத்தினால் நனைக்கப்பட்ட காம்போஜ தேசத்துக் குதிரைகளாலும் யவனர்களாலும் சகர்களாலும் அப்பொழுது எல்லாம் ரத்தமாகியது. மஹாராஜரே! அர்ஜுனனும் கர்ணனும் பீமஸேனனும் கோபத்துடன் கூடியவர்களாகவே, குதிரைகளும் ஸாரதிகளும் கொல்லப்பட்ட ரதங்களாலும், குதிரை வீரர்கள் கொல்லப்பட்ட குதிரைகளாலும் பாகர்கள் அழிக்கப்பட்ட யானைகளாலும் யானைகளழிக்கப்பெற்ற மஹா மாத்ரர்களாலும் அரசர்களுக்கு அந்யோந்யம் பயங்கரமான விநாசம் உண்டாயிற்று. அந்தக் கௌரவசேனையின் பக்ஷக்கோடியும் பக்ஷமும் வதம்பண்ணப்படுங்கால், அதிக மதங்கொண்ட துரோண புத்திரர், பொன்னால் அலங்கரிக்கப்பட்ட பெரிதான வில்லை அசைத்துக்கொண்டு சூரியன் தன்னுடைய கிரணங்களை எடுப்பதுபோலக் கோரமான பாணங்களை எடுக்கின்றவராகவும் விரைபவராகவும் ஜயசாலிகளுள் சிறந்தவனான அர்ஜுனனை எதிர்த்தார். உலகத்தை ஆச்சரியப்படும்படி செய்கின்றவர்களும் உத்தமமான கீர்த்தியை விரும்புகின்றவர்களும் தர்ம புத்திரருடைய ஸஹோதரர்களுமான அவ்விருவருக்கும் ஜயத்தில் நிச்சயமில்லாத பெரும்போர் நடந்தது. அர்ஜுனன் பீமஸேனன் கர்ணனாகிய மூவரும், முறையே, சுறுசுறுப்புள்ளவர்களாக ஸம்சப்தகர்களையும், கௌரவர்களையும், பாஞ்சாலர்களையும் அம்புகளால் நாசஞ்செய்தார்கள். மஹாராஜரே! ஸேனாமுகமானது அவ்வாறு மூன்றாகப் பிரிந்திருக்குந் தருணத்தில், அரசர்களுக்குக் கோரமான யுத்தமும் இவ்விதமான விநாசமும் நேர்ந்தன" என்று கூறினான்.

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்

(ஸம்சப்தகர்களோடு போர்புரிகின்ற அர்ஜுனனை அச்வத்தாமா யுத்தஞ்செய்வதற்காக அழைத்ததும், அவ்விருவருக்கும் யுத்தமும்)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! அர்ஜுனனுக்கு ஸம்சப்தகர்களோடு எவ்வாறு யுத்தம் நடந்தது? ஸூத புத்திரனான கர்ணனுக்குப் பாஞ்சாலர்களோடு எவ்வாறு யுத்தம் நடைபெற்றது? அச்வத்தாமாவுக்கும் அர்ஜுனனுக்கும் என்னைச் சேர்ந்த மற்ற வீரர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த யுத்தத்தையும் எனக்குச் சொல்வாயாக" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான்.

"அரசரே! வீரர்களுக்குத் தேகங்களையும் பாவங்களையும் அழிக்கின்ற யுத்தமானது பகைவர்களோடு நடந்த விதத்தைச் சொல்லுகின்றேன்; என்னிடத்தினின்று கேளும். பகைவர்களைப்

பிடிப்பவனுன பார்த்தன், பெருங்காற்று ஸமுத்திரத்தைக் கொந் தளிக்கச் செய்வதுபோல ஸமுத்திரத்திற்கு ஒப்பான ஸம்சப்தகர் களுடைய படையில் புகுந்து அதனைக் கொந்தளிக்கச் செய்தான். தனஞ்சயன் கூர்மையுள்ள பல்லங்களாலே பூர்ணசந்திரன்போலப் பிரகாசிக்கின்ற முகமுள்ளவைகளும் அழகிய கண்களையும் புருவங் களையும் பற்களையும் உடையவைகளுமான வீரர்களுடைய தலை களை அறுத்துக் காம்பில்லாத தாமரை மலர்கள்போன்ற அவை களால் பூமியை விரைவாக மூடினுன். அர்ஜுனன் யுத்தத்தில் நன்கு உருட்சியாயிருப்பவைகளும் நீண்டவைகளும் புஷ்டியுள்ள வைகளும் சந்தனத்தினுலும் அகிற்சாந்தினுலும் அலங்கரிக்கப் பட்டவைகளும் ஆயுதங்களுடன் கூடியவைகளும் கையுறைகள் அணிந்தவைகளும் ஐந்து தலை நாகம்போன்றவைகளுமான பகை வர்களுடைய கைகளை க்ஷுரங்களால் வெட்டினுன். பாண்டவன் தேரிற் பூட்டியிருக்கிற குதிரைகளையும் அவைகளைத்தவிர மற்றவை களையும் ஸாரதிகளையும் கொடிமரங்களையும் விற்களையும் அம்பு களையும் கைகளையும் மிக்க கூர்மையுள்ள பல்லங்களால் துண் டாக்கினுன். அரசரே! அர்ஜுனன் யுத்தத்தில் அநேக ஆயிரம் அம்புகளாலே ரதங்களையும் யானைகளையும் குதிரைகளையும் குதிரையின்மீது ஏறியிருக்கின்ற வீரர்களையும் யமலோகத்துக்கு அனுப்பினுன். சிறந்த வீரர்கள் மிக்க கோபங்கொண்டு யௌவன வயதுள்ள பசுவின் நிமித்தமாகக் கர்ஜிக்கின்றவைகளும் அடங்காத மதங்கொண்டவைகளுமான விருஷபங்கள் கொம்பு களால் (பகைக்காளையை முட்டுவதுபோலத்) துன்பஞ்செய்ப வனும் கோபமுள்ளவனுமான அர்ஜுனனை எதிர்த்துச் சென்று அம்புகளால் அடித்தார்கள். மூவுலகங்களையும் ஜயிப்பதற்காக அஸுரர்களுக்கு இந்திரனேடு எதிர்த்து யுத்தம் நடந்ததுபோல அந்த அர்ஜுனனுக்கும் அந்த ஸம்சப்தகர்களுக்கும் மயிர்சிலிர்க் கும்படியான யுத்தம் நடந்தது. அந்த அர்ஜுனன் சத்துருக்க ளுடைய அஸ்திரங்களை அஸ்திரங்களால் நான்கு பக்கத்திலும் தடுத்து அநேக பாணங்களாலே விரைவாக அடித்து (அவர்களு டைய) உயிரைக் கவர்ந்தான். அர்ஜுனன் காற்றுனது பெரிய மேகங்களைச் சிதறச் செய்வதுபோல ரதங்களை [1] த்ரிவேணுவும் சக்கரமும் அச்சும் வெட்டப்பட்டவைகளாகவும் போர்வீரர்கள் கொல்லப்பட்டவைகளாகவும் ஸாரதிகளும் ஆயுதங்களும் அம்புப் பெட்டிகளும் கொடிகளும் அழிக்கப்பட்டவைகளாகவும் கட்டுக் கயிறுகளும் கடிவாளங்களும் தண்டங்களும் நன்கு அறுக்கப்பட்ட

[1] துரோண பர்வம் 601-ஆம் பக்கம் குறிப்பிற் காண்க.

வைகளாகவும் த்ரிவேணுக்களையும் ஏர்க்கால்களையும் இழந்தவை களாகவும் தேர்த்தட்டும் நுகமும் சிதைந்தவைகளாகவும் [1] அக்ஷப்பிர மண்டலங்கள் மிக நழுவினவைகளாகவும் துண்டுதுண்டாகச் செய்துகொண்டு பார்ப்பவருக்கு ஆச்சரியகரமும் சத்துருக்களுக்கு பயங்கரமுமாய் இருக்கின்ற செய்கையை ஆயிரம் மஹாரதர் களுக்குச் சமமாகச் செய்தான். ஸித்தர்கள் தேவரிஷிகள் இவர் களுடைய கூட்டங்களும் சாரணர்களும் ஸ்தோத்திரஞ் செய்தார் கள். தேவ துந்துபிகள் ஒலித்தன. கேசவார்ஜுனர்களுடைய முடியில் பூமாரிகளும் விழுந்தன. அசரீரிவாக்கும், 'சந்திரன், அக்னி, வாயு, சூரியன் இவர்களுடைய காந்தியையும் தேஜஸையும் பலத்தையும் பிரகாசத்தையும் எப்பொழுதும் முறையே தரிக்கும் வீரர்களான கேசவார்ஜுனர்கள் இவர்களே. முற்காலத்தில் பிரம்மருத்திரர்கள் வீற்றிருந்ததுபோல் ஒரே ரதத்தில் வீற்றிருக் கின்ற இந்த இரண்டு வீரர்களும் எல்லாப் பிராணிகளுள்ளும் சிறந்தவர்களான நரநாராயணர்கள்' என்று மொழிந்தது. பாரதரே! இவ்வாறான இந்தப் பெரிய ஆச்சரியத்தைக் கண்டும் கேட் டும் அச்வத்தாமா மிக்க கோபங்கொண்டு யுத்தத்தில் கிருஷ்ணார் ஜுனர்களை விரைவாக எதிர்த்தார். பிறகு, துரோண புத்திரர் அட்டஹாஸஞ் செய்துகொண்டு பகைவரை அழிக்கக்கூடிய அம்பு களைத் தொடுக்கின்ற பாண்டவனை அம்புகளுடன் கூடின கையி னால் சண்டைக்கு அழைத்து, 'வீர! நீ இச்சமயத்தில் வந்து எதிர்க்கின்ற என்னைத் தகுந்த அதிதியாக நினைப்பாயாகில் எல்லா விதத்தினாலும் எனக்கு இப்பொழுது யுத்தம் என்கிற விருந்தைக் கொடு' என்று சொன்னார். ஆசாரிய புத்திரரால் யுத்தஞ்செய் யும் விருப்பத்தோடு இவ்வாறு அழைக்கப்பட்ட அர்ஜுனன் தன்னை நன்கு மதித்தான்; ஜனார்த்தனரைப் பார்த்தும் இவ்வாறு சொன்னான். 'மாதவரே! ஸம்சப்தகர்களை நான் கொல்லவேண்டும். அச்வத்தாமாவோ யுத்தத்திற்கு என்னை அழைக்கிறார். இச்சம யத்தில் எதை முதலில் செய்யவேண்டுமோ அதை எனக்குச் சொல்லும். தேவரீருக்கு விருப்பமிருந்தால் எதிர்கொண்டு ஆதித் யம் கொடுப்பேன்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லக் கேட்ட மாதவர், யாகத்தில் சிக்ஷையென்னும் வேதாங்கத்தில் கூறிய முறைப்படி அழைக்கப்பட்ட இந்திரனை வாயுவானவன் கொண்டுவந்து சேர்ப்பதுபோல அழைக்கப்பட்ட பார்த்தனை அச் வத்தாமாவின் பக்கத்தை அணுகும்படி செய்தார். கேசவர் ஒரே மனத்தை உடையவரான அந்த அச்வத்தாமாவை அழைத்து,

---

[1] ரதத்திலுள்ள பீடத்திலும் அச்சிலும் சேர்த்து இசைக்கப்பட்டிருக்கிற கட்டைகளின் ஸமூகம்.

'அஶ்வத்தாமாவே! ஸ்திரமாயிருந்துகொண்டு விரைவாக அடிக்கக்கடவீர். ஆயுதங்களையும் நீர் ஸஹித்துக் கொள்ளும். வேலைக்காரர்களுக்கு யஜமானனிட்ட சோற்றுக் கடனைக் கழிப்பதற்கு இதன்றோ காலம்! பிராம்மணர்களுடைய விவாதம் ஸூக்ஷ்மமானது. க்ஷத்திரியர்களுடைய வெற்றி தோல்விகள் ஸூக்ஷ்மமானவைகள். பார்த்தனுடைய திவ்ய பூஜையை மயக்கத்தினால் பொறாமல் போவீராகில் நீர் முடிவை விரும்பித் திடமாயிருந்துகொண்டு இப்பொழுது அர்ஜுனனோடு போர்புரிவீராக' என்று சொன்னார். வாஸுதேவரால் இவ்வாறு சொல்லப்பட்ட பிராம்மணோத்தமர் 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லிக் கேசவரை அறுபது நாராசங்களாலும் அர்ஜுனனை மூன்று நாராசங்களாலும் அடித்தார். அர்ஜுனன் மிக்க கோபங்கொண்டு மூன்று பாணங்களால் அஶ்வத்தாமாவினுடைய வில்லைத் துண்டாக்கினான். திரௌணியானவர் மிக்க கோரமான வேறு வில்லை எடுத்து நாணேற்றி நிமிஷத்தினுள் பாண்டுநந்தனனான அர்ஜுனனையும் வஸுதேவ புத்திரரான கேசவரையும் ஆயிரம் பாணங்களாலும் முந்நூறு பாணங்களாலும் அடித்தார். பிறகு, முயற்சியுடையவரான துரோண குமாரர் ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் லக்ஷக்கணக்காகவும் பாணங்களைப் பிரயோகித்து அர்ஜுனனை ஸ்தம்பிக்கச்செய்தார். ஐயா! பிரம்மவாதியான அஶ்வத்தாமாவினுடைய அம்பறாத் தூணியினின்றும் வில்லினின்றும் நாண்கயிற்றினின்றும் விரல்களினின்றும் இரண்டு கைகளினின்றும் இரண்டு உள்ளங்கைகளினின்றும் மார்பினின்றும் முகத்தினின்றும் மூக்கினின்றும் கண்ணினின்றும் இரண்டு காதுகளினின்றும் தலையினின்றும் அங்கங்களினின்றும் ரோமங்களினின்றும் கவசங்களினின்றும் ரதத்தினின்றும் த்வஜத்தினின்றும் பாணங்கள் வெளிப்பட்டன. துரோண புத்திரர் பெரிதான பாண வலையினால் மாதவரையும் அர்ஜுனனையும் கட்டி ஸந்தோஷமுள்ளவராகப் பெரிய மேகக் கூட்டத்தினுடைய இடிமுழக்கம் போன்ற சப்தத்தோடு ஸிம்மநாதஞ் செய்தார். மஹாராஜரே! திரௌணியினால் விடப்பட்டு நான்கு பக்கத்தினின்றும் வந்து விழுகின்ற அந்தப் பாணங்களால் ரதத்திலிருக்கின்ற அந்தக் கிருஷ்ணார்ஜுனர் இருவரும் நன்றாக மூடப்பட்டார்கள். பிறகு, பிரதாபசாலியான அசுவத்தாமா யுத்தத்தில் அந்த மாதவர் பாண்டவன் இருவரையும் கூர்மையுள்ள அநேக அம்புகளாலே அசைவற்றவர்களாகச் செய்தார். சராசரங்களுக்கு ரக்ஷகர்களான அவ்விருவரும் பாணங்களால் நன்றாக மூடப்பட்டார்களென்பதைக் கண்டு ஜங்கமஸ்தாவரம் அனைத்தும் ஹாஹாகாரம் கொண்டன. ஸித்த சாரணர்

களுடைய கூட்டங்கள் நான்கு பக்கத்தினின்றும் வந்தன, 'இப்பொழுது உலகங்களுக்கு க்ஷேமமானது உண்டாகுமா' என்றும் சொல்லின. அரசரே! யுத்தத்தில் கிருஷ்ணார்ஜுனர்களை மூடுகின்ற துரோண புத்திரருக்கு உண்டானதுபோன்ற பராக்கிரமம் என்றால் இதற்குமுன் பார்க்கப்பட்டதேயில்லை. மன்னரே! யுத்தத்தில் ரதிகர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுகிற திரௌணியினுடைய வில்லின் சப்தத்தைக் கர்ஜிக்கின்ற ஸிம்மத்தினுடைய சப்தத்தைப்போலப் பல தரம் கேட்டேன். யுத்தத்தில் இடமாகவும் வலமாகவும் ஸஞ்சரிக்கின்றவரும் (அம்புகளைத்) தொடுப்பவருமான இந்த அசுவத்தாமாவினுடைய வில்லிலுள்ள நாண்கயிறானது மேகத்தினுடைய மின்னல்போல் விளங்குவதாகக் காணப்பட்டது. சுறுசுறுப்புடன் காரியத்தைச் செய்பவனும் திடமான கைப்பிடியுள்ளவனும் பாண்டு நந்தனனுமான அந்தத் தனஞ்சயன் அப்பொழுது அதிக மதிமயக்கத்தை அடைந்து பார்த்துக்கொண்டிருந்தான். யுத்தகளத்தில் விக்கிரமத்துடன் இடமாகவும் வலமாகவும் ஸஞ்சரிக்கின்றவனும் (அம்புகளைப்) பிரயோகின்றவனுமான தன்னுடைய பராக்கிரமத்தை யுத்தத்தில் அந்த அசுவத்தாமாவினால் கவரப்பட்டதாக எண்ணினான். வேந்தரே! பிறகு, யுத்தத்தில்அவ்விதமான காரியத்தைச் செய்கின்ற துரோண புத்திரருடைய ஸ்வரூபமானது ருத்திரருடைய சரீரம்போலப் பார்க்கமுடியாததாயிருந்தது. அரசரே! பிறகு, அந்த யுத்தத்தில் துரோணபுத்திரர் விருத்தியடைந்து குந்திபுத்திரனும் குறைவுபடவே, ரோஷமானது கிருஷ்ணனை வந்தடைந்தது. அரசரே! அந்த வாஸுதேவர், ரோஷத்தால் பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்ணினால் எரிக்கின்றவர்போல யுத்தத்தில் துரோணபுத்திரரையும் பல்குனனையும் அடிக்கடி பார்த்தார்.

பிறகு, கண்ணபிரான், கோபங்கொண்டு பார்த்தனை நோக்கி, 'பாரத! குந்திபுத்திர! யுத்தத்தில் துரோண புத்திரர் உன்னை இப்பொழுது மீறியதை உன்னிடத்தில் ஆச்சரியமாக எண்ணுகிறேன். உன்னுடைய கையிலுள்ள காண்டீவமானது சிதறிப்போகாமலிருக்கின்றதா? கைப்பிடி நழுவாமலிருக்கின்றதா? வீரியமானது முன்போலிருக்கின்றதா? உனக்கு இரு கைகளுடைய பலமும் முன்போலிருக்கின்றதா? பாண்டவர்களுள் சிறந்தவனே! யுத்தத்தில் துரோண புத்திரரை அதிக ஆண்மையுள்ளவராகக் காண்கிறேன். குரு புத்திரர் என்று இவரைக் கௌரவித்துக்கொண்டு போரில் உபேக்ஷை செய்யாதே. பார்த்த! உபேக்ஷை செய்வதற்கு இது சமயமன்று' என்று அன்புடன் இவ்வசனத்தைக் கூறினார். அர்ஜுனன், 'மாதவரே! என் விஷயத்தில் குரு

புத்திரருடைய துஷ்ட ஸ்வபாவத்தைப் பாரும். அம்பு மயமான வீட்டில் பிரவேசிக்கச் செய்து நம்மை மாண்டவர்களென்று எண்ணுகிறார். சிக்ஷையினாலும் பலத்தினாலும் இதோ நான் இவரைக் கொல்ல சங்கல்பித்துவிட்டேன்' என்று கூறினான். இவ்வாறு சொல்லிவிட்டு, பரதர்களுள் சிறந்தவனான அர்ஜுனன் அந்த அஸ்வத்தாமாவினுடைய வில்லையும் குடையையும் கொடித் துணியையும் தாழை மடல்போன்ற வடிவமுள்ள சக்தியையும் சிறந்த கதாயுதத்தையும் கருமானால் சாணையிடப்பட்ட பல்லங்களால் துண்டாக்கினான். அர்ஜுனன் அஸ்வத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட அம்புகள் ஒவ்வொன்றையும் மும்மூன்றாகத் துண்டாக்கி, காற்றானது பனியை நாசம் செய்வதுபோல நாசம் செய்தான். பிறகு, பாண்டவன் குதிரைகளோடும் ஸாரதிகளோடும ரதங்களோடும் யானைகளோடும் துவஜங்களோடும் காலாட்களுடைய கூட்டங்களோடுங் கூடின ஸம்சப்தகர்களை மறுபடியும் உக்கிரமான பாணங்களால் அடித்தான். அந்த யுத்தரங்கத்தில் அப்பொழுது பற்பல ரூபமுடையவர்களாகக் காணப்பட்ட ஜனங்கள் அந்த யுத்தத்தில் தாங்களே தங்களைப் பாணங்களால் மூடப்பட்டவர்களாக எண்ணிக்கொண்டார்கள். காண்டீவத்தினால் விடப்பட்டவைகளும் பற்பல உருவமுள்ளவைகளுமான அந்த அம்புகள் யுத்தத்தில் ஒரு குரோசத்துக்கு அப்புறத்திலுள்ள யானைகளையும் மனிதர்களையும் கொன்றன. காட்டில் கோடாலிகளால் வெட்டப்பட்ட இலவமரங்கள்போல மதத்தைப் பெருக்குகின்ற யானைகளுடைய துதிக்கைகள் பல்லங்களால் அறுக்கப்பட்டு விழுந்தன. பிறகு, மலைபோன்ற அந்த யானைகள் மாவுத்தர்களோடு இந்திரனுடைய வஜ்ராயுதத்தினால் பிளக்கப்பட்ட மலைகளுடைய கூட்டங்கள்போலக் கீழே விழுந்தன. தனஞ்சயன் நன்கு பழக்கப்பட்ட வேகமுள்ள குதிரைகளோடு கூடியவைகளும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்ட வீரர்களால் வீற்றிருக்கப்பட்டவைகளும் [1] கந்தர்வ நகரம் போன்ற உருவமுள்ளவைகளும் நன்றாக அமைக்கப்பட்டவைகளுமான ரதங்களைப் பாணங்களால் துண்டுதுண்டாகச் செய்து சத்துருக்களின்மீது அம்புகளைப் பொழிந்தான். அவன் நன்றாக அலங்கரிக்கப்பட்ட குதிரை வீரர்களையும் காலாட்களையும் கொன்றான். தனஞ்சயனாகிற பிரளயகாலத்துச் சூரியன் வறட்சி அடைவிக்கக்கூடாததான ஸம்சப்தகர்களாகிற மஹா சமுத்திரத்தைக் கூர்மையுள்ள அம்புகளாகிற கிரணங்களால் வறளச் செய்தான். மறுபடியும் அர்ஜுனன் விரைவுள்ளவனாக மிக்க வேகமுள்ளவைகளும் வஜ்ராயுதத்திற்கு ஒப்பானவைகளுமான நாராசங்களால் இந்திரன்

பர்வதத்தைப் பிளப்பதுபோல் துரோண புத்திரராகிய பெருமலையைப் பிளந்தான். கோபங்கொண்டவரான ஆசாரிய குமாரர் யுத்தம் செய்ய விரும்பிக் குதிரைகளுடனும் சாரதிகளுடனும் கூடின அந்த அர்ஜுனன்மீது பாணங்களைப் பிரயோகித்துக் கொண்டு யுத்தம் செய்வதற்காக எதிரில் வந்தார். பார்த்தன் அந்த அம்புகளை வெட்டினான். பிறகு அச்வத்தாமா மிகுந்த கோபங்கொண்டு நற்குணமுள்ள அதிதிக்கு வீட்டை (=வீட்டிலுள்ள பொருள்களை) அர்ப்பணம் செய்வதுபோல அம்பறாத் தூணியை (=தூணியிலுள்ள அம்புகளை) அர்ஜுனனுக்கே அர்ப்பணஞ் செய்தார். பிறகு, பாண்டவன், பந்தியில் வைக்கத் தகாதவர்களை விட்டுப் பந்தியில் ஏற்றுக்கொள்ளத்தக்க யாசகனைக் கொடையாளியானவன் நாடுவதுபோல ஸம்சப்தகர்களை விட்டுத் துரோண புத்திரரை எதிர்த்து வந்தான். ராஜரே! ஸம்சப்தகர்கள் மகாத்மாக்களான அவ்விருவருடைய யுத்தத்தையும் பார்த்துக்கொண்டே நின்றார்கள்.

ஐம்பத்துமூன்றாவது அத்தியாயம்
(அர்ஜுனனால் அச்வத்தாமா தோல்வி அடைந்தது)

பிறகு, சுக்கிரன் பிருகஸ்பதி இவர்களுடைய தேஜஸ்போன்ற தேஜஸை உடையவர்களான அர்ஜுனன் அச்வத்தாமா இருவருக்கும் ஆகாயத்தில் நக்ஷத்திரத்தை லக்ஷ்யமாய் வைத்துச் சுக்கிரனுக்கும் பிருகஸ்பதிக்கும் யுத்தம் நேர்ந்ததுபோல யுத்தம் நேர்ந்தது. ஜ்வலிக்கின்ற பாணங்களுடைய கிரணங்களால் ஒருவரையொருவர் நன்கு தபிக்கச்செய்கின்றவர்களான அவ்விருவரும், உலகத்திற்குப் பயத்தை உண்டுபண்ணுகின்றவைகளும் வக்ர கதிகளை அடைந்திருப்பவைகளுமான இரண்டு கிரகங்கள் போலிருந்தார்கள். பிறகு, அர்ஜுனன் அச்வத்தாமாவை நாராசங்களால் இரண்டு புருவங்களுக்கும் இடையில் நன்றாக அடித்தான். அந்த த்ரௌணி அதனால் மேல்நோக்கிய கிரணங்களையுடைய சூரியன்போல் விளங்கினார். பிறகு, அச்வத்தாமாவினால் அநேக அம்புகளால் மிகவும் அடிக்கப்பட்ட கிருஷ்ணார்ஜுனர்கள் தம்முடைய கிரணஸமூகங்களால் மலர்ந்திருக்கின்ற யுகாந்த காலத்திலுள்ள இரண்டு சூரியர்கள்போலப் பிரகாசித்தார்கள். பிறகு, அர்ஜுனன், வாஸுதேவர் அவமதிக்கப்படவே, அச்வத்தாமாவின்மீது நான்கு பக்கங்களிலும் பரவக்கூடிய

---

[1] பீஷ்ம பர்வம், 402ம் பக்கத்திலும், துரோண பர்வம் 72, 566-ம் பக்கங்களிலும் குறிப்பிற் காண்க.

அஸ்திரத்தைப் பிரயோகித்தான். துரோண புத்திரரும், வஜ்ரா யுதத்துக்கும் அக்கினிக்கும் யமதண்டத்துக்கும் ஒப்பான அம்புகளால் (அர்ஜுனனை) அடித்தார். அதிக தேஜஸையுடையவரும் மிகவும் பயங்கரமான செய்கையையுள்ளவருமான அந்த அஸ்வத்தாமா, அடித்தால் யமனையும் துன்பத்தை அடைவிப்பவைகளும் நன்கு விடப்பட்டவைகளும் அதிதீவிரமான வேகமுள்ளவைகளுமான அம்புகளால் கேசவரையும் அர்ஜுனனையும் மர்மஸ்தானங்களில் அடித்தார். அர்ஜுனன் போர் புரிகின்ற துரோண புத்திரருடைய பாணங்களை உறுதியான புங்கமுள்ளவைகளும் அவற்றிலும் இரண்டு மடங்குள்ளவைகளுமான அம்புகளால் நன்றாகத் தடுத்துக் குதிரைகளோடும் சாரதியோடும் கொடியோடுங் கூடின அந்த ஏகவீரரைத் தடுத்து ஸம்சப்தகர்களுடைய படையைக் குறித்துச் சென்றான், அவன் நன்றாகப் பிரயோகிக்கப்பட்ட அம்புகளால், புறங்காட்டாதவர்களும் சிறப்பவர்களுமான பகைவர்களுடைய விற்களையும் பாணங்களையும் அம்பறாத்தூணிகளையும் வில்லிற் கட்டிய நாண்கயிறுகளையும் உள்ளங்கைகளையும் புஜங்களையும் கையிலிருந்த சஸ்திரத்தையும் குடைகளையும் கொடிகளையும் குதிரைகளையும் தேரின் ஏர்க்காலையும் ஆடைகளையும் மாலைகளையும் பூஷணங்களையும் கேடகங்களையும் அழகிய கவசங்களையும் அவர்களின் தலைகளையும் பலாத்கரித்து வெட்டினான். மிக்க ஸன்னாகமுடையவைகளும் நல்ல முயற்சியுள்ள நரவீரர்களால் ஏறப்பட்டவைகளுமான ரதங்களும் குதிரைகளும் யானைகளும் பார்த்தனால் விடப்படும் அநேக அம்புகளாலே அடித்துத் தள்ளப்பட்டு அந்த நரவீரர்களோடு கூடவே அழிந்தன. அர்ஜுனன் தாமரை மலருக்கும் சூரியனுக்கும் பூர்ண சந்திரனுக்கும் ஒப்பான முகமுள்ளவைகளும் கிரீடங்களாலும் புஷ்பமாலைகளாலும் ஆபரணங்களாலும் விளங்குகின்றவைகளுமான பகைவர்களுடைய தலைகளைப் பல்லங்களாலும் அர்த்தசந்திர பாணங்களாலும் க்ஷுரங்களாலும் ஓயாமல் நன்கு அறுத்துத் தள்ளினான். பிறகு, தேவ சத்துருக்களான அசுரர்கள் போன்றவர்களும் வீரர்களுமான கலிங்கர்களும் வங்கர்களும் அங்கர்களும் நிஷாதர்களும், அசுரர்களுடைய யானைகள் போலப் பிரகாசிக்கின்றவைகளும் பலமும் கோபமும் வடிவு எடுத்தாற்போன்றவைகளுமான யானைகளுடன் பாண்டவனைக் கொல்ல விரும்பி எதிர்த்துவந்தார்கள். பார்த்தன் அந்த யானைகளுடைய கவசங்களையும் தோள்களையும் துதிக்கைகளையும் யானை வீரர்களையும் வெட்டினான். அந்த யானையினின்று கொடிகளும்

கொடித் துணிகளும் வஜ்ரத்தினால் அடிக்கப்பட்ட மலைச் சிகரங்கள்போல் விழுந்தன. அந்த ஸம்சப்தகர்கள் முறிய அடிக்கப்பட்டவுடன், காற்றானது பெரிய மேகமண்டலங்களால் உதிக்கின்ற சூரியனை மூடுவதுபோலக் கிரீடியானவன் உதிக்கின்ற சூரியனுடைய வர்ணம்போன்ற வர்ணமுள்ள பாணங்களால் குரு புத்திரரை மூடினான். பிறகு, அச்வத்தாமா, கூர்மையுள்ள அம்புகளால் அர்ஜுனனுடைய அம்புகளை நாசஞ்செய்து, மேகமானது மாரிக்காலத்தில் சந்திர சூரியர்களை ஆகாயத்தில் மறைப்பதுபோல அர்ஜுனனையும் வாசுதேவரையும் நன்றாக மூடி ஸிம்ம நாதஞ்செய்தார். அந்த வீரர்களால் எதிர்த்துவந்து ஆயுதங்களால் அடிக்கப்பட்ட குந்தீ புத்திரனான அர்ஜுனன் பாணாந்தகாரத்தை விரைவாகச் சேதித்துச் சிறந்த பொற்கட்டமைந்த அம்புகளால் அந்த அசுவத்தாமாவையும் உம்மைச் சேர்ந்த அந்த வீரர்களையும் மீண்டும் அடித்தான். பாணங்களை எடுப்பவனும் ஸந்தானம் செய்பவனும் பிரயோகிப்பவனுமான ஸவ்யஸாசி ரதத்தில் காணப்படவில்லை. ரதங்களையும் யானைகளையும் குதிரைகளையும் காலாட்களையும் ஒன்றோடொன்று நன்றாக மோதிக்கொண்டிருக்கின்ற சரீரங்களை உடையவைகளாகவும் கொல்லப்பட்டவைகளாகவும் கண்டார்கள். துரோண புத்திரர் விரைபவராகிச் சிறந்த பத்து நாராசங்களை வேகமாகத் தொடுத்து ஒரு பாணம்போலப் பிரயோகித்தார். அவைகளுள், ஐந்து பாணங்கள் அர்ஜுனனை எதிரில் அடித்தன. நல்ல கட்டுகளுடன் கூடின ஐந்து பாணங்களால் அச்சுதரைப் பிளந்தன. தனுர்வேதத்தை அறிந்தவரான அந்த அசுவத்தாமாவினால் அவ்வாறு அவமதிக்கப்பட்டவர்களும் அந்த அம்புகளாலே அடிக்கப்பட்டு ரத்தத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறவர்களும் குபேரனும் இந்திரனும் போன்றவர்களும் எல்லா மனிதர்களுள்ளும் சிறந்தவர்களுமான அவ்விருவர்களையும் யுத்தத்தில் மாண்டவர்களென்றே மற்றவர்கள் எண்ணினார்கள். பிறகு, தாசார்ஹர்களுக்கு நாதரான ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனைப் பார்த்து, 'ஏன் அஜாக்ரதையாயிருக்கிறாய்? இந்தப் போர்வீரரைக் கொல். இவர் உபேக்ஷிக்கப்பட்டால் சிகித்சை செய்யப்படாத கஷ்டமான வியாதி போலத் தோஷத்தை விளைவிப்பாரன்றோ?' என்று சொன்னார்.

ஊக்கமுள்ள கிரீடியானவன் அச்சுதரைப் பார்த்து, 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு அட்டஹாஸஞ் செய்து விரைவாகக் காண்டீவத்தினின்று விடப்படுகின்றவைகளும் கோபங்கொண்ட ஸர்ப்பம் போன்றவைகளுமான பாணங்

களாலே த்ரோண புத்திரருடைய சிறந்த சந்தனத்தினால் பூசப் பட்ட உத்தமமான இருகைகளையும் மார்பையும் தலையையும் அவ்வாறே நிகரற்ற இரண்டு தொடைகளையும் அடித்துத்த்ரோண புத்திரரையும் யுத்தத்தில் பிளந்தான். அர்ஜுனன் கடிவாளங் களை அறுத்துக் குதிரைகளையும் அடித்தான். அந்தக் குதிரைகள் அவரை யுத்த பூமியினின்று வெகு தூரம் இழுத்துக்கொண்டு சென்றுவிட்டன. காற்றின் வேகம்போன்ற வேகமுடைய அக் குதிரைகளாலே இழுத்துக்கொண்டு போகப்பட்டவரும் புத்தி சாலியுமான அந்தத் த்ரோண புத்திரர் பார்த்தனுடைய அம்புக ளால் திடமாக அடிக்கப்பட்டு (மறுபடியும்) திரும்பிவந்து பார்த்த னோடு போர்புரிவதற்குச் சக்தியற்றவரானார். அங்கிரஸின் வம் சத்தில் பிறந்தவர்களுள் சிறந்தவரும் சிறந்த பலமுள்ளவருமான அந்த அச்வத்தாமா பாணங்களும் அஸ்திரங்களும் குறைந்து போய் உத்ஸாகத்தை இழந்து விருஷ்ணி வீரரான கிருஷ்ணரிடத் திலும் தனஞ்சயனிடத்திலும் ஜயம் நிச்சயமென்று ஆலோசித்துக் கர்ணனுடைய படையில் பிரவேசித்து விட்டார். மந்திரங்களா லும் ஔஷதங்களாலும் சிகித்ஸைகளாலும் உபாயங்களாலும் தேகத்தினின்று எடுக்கப்பட்ட வியாதிபோல விருத்தமான காரி யத்தைச் செய்ய எண்ணங்கொண்ட அச்வத்தாமா குதிரைக ளால் வேறிடத்திற்கு இழுத்துக்கொண்டு போகப்பட்ட பின், கேசவரும் அர்ஜுனனும் காற்றினால் அசைக்கப்பட்ட கொடியுள் ளதும் வெள்ளம்போல முழங்குகின்றதுமான ரதத்துடன் ஸம்சப் தகர்களுக்கு எதிராகச் சென்றார்கள்,

---

ஐம்பத்துநான்காவது அத்தியாயம்

(அர்ஜுனன் தண்டதாரனையும் தண்டனையும் கொன்றது)

பிறகு, வடபுறத்தில் பாண்டவர்களுடைய சேனையில் தண்ட தாரனால் கொல்லப்படுகின்ற ரதங்கள், யானைகள் குதிரைகள் காலாட்கள் இவைகளுடைய சப்தமானது தோன்றியது, கருடன் காற்று இவைகளுடைய வேகத்துக்குச் சமமான வேகமுள்ள குதிரைகளை நடத்திக்கொண்டே செல்லுகின்ற கேசவர், ரதத் தைத் திருப்பி அர்ஜுனனைப் பார்த்து, பகைவரை அழிக்கின்ற யானையோடு இதோ மகததநாடன் மீறிச் செல்லுகிறான். இவன் படைப் பயிற்சியினாலும் பலத்தினாலும் பகதத்தனுக்குக் குறைந்த வனல்லன்; இவனைக் கொன்று மறுபடியும் ஸம்சப்தகர்களைக் கொல்வாய் 'என்று சொன்னார். பேச்சு முடிவதற்குள் பார்த்தனைத்

தண்டதாரனுடைய யானையை அடையச்செய்தார், மகாரதர்களுள் சிறந்தவனும் மகாபலசாலியும் அமங்களகாரியத்தில் பிடிவாதமுள்ளவனுமான அந்தத்தண்டதாரன் யுத்தவீரர்களுடைய கூட்டங்களோடு கூடிப் பயங்கரமாயும் விஸ்தீர்ணமாயுமுள்ள தூமகேது ஸ்வரூபியான உத்பாத கிரகமானது பூமி முழுமையும் நாசஞ்செய்வதுபோலப் பகைவர் சேனையை நாசஞ்செய்தான். நன்கு பழக்கப்பட்டதும் கஜாசுரன்போன்றதும் மகாமேகத்தினுடைய இடிமுழக்கம்போன்ற முழக்கமுள்ளதும் ரதங்களையும் குதிரைகளையும் யானைகளையும் மனிதர்களையும் நாசஞ் செய்கின்றதுமான சிறந்த யானையின்மீது வீற்றிருப்பவனும் யுத்தத்தில் வீரியமுள்ளவனுமான அந்தத் தண்டதார ராஜன் யுத்தத்தில் யானை வீரர்களையும் காலாட் கூட்டங்களையும் மகாரதர்களையும் குதிரை வீரர்களுடன் கூடின குதிரைகளையும் யானைகளையும் கால சக்கரம் போல எல்லாப் பக்கங்களிலும் பாணங்களால் கொன்றான். அந்தத் தண்டதாரன் வெண்கலத்தாலானவையும் இரும்பினாலானவையுமான கவசங்களைப் பூஷணங்களாக அணிந்தவர்களும் குதிரைகளையுடையவர்களுமான மனிதர்களைக் காலாட்களுடன் கூட விழும்படிசெய்து, பலமுள்ள ஒரு சிறந்த யானையானது பெருங்கோரைகளை ஓசையுடன் அழிப்பதுபோல நாசஞ்செய்தான். பிறகு, அர்ஜுனன் நாண்கயிற்றினின்றும் கைவிரலுறையினின்றும் சக்கரங்களுடைய நுனியின்றும் உண்டான சப்தமுள்ளதும் மிருதங்கங்களாலும் பேரிகளாலும் அநேக சங்கங்களாலும் ஒலியுள்ளதாகச் செய்யப்பட்டதும் ரதங்களாலும் குதிரைகளாலும் ஆயிரக்கணக்கான யானைகளாலும் சப்தமுள்ளதாகச் செய்யப்பட்டதுமான யுத்தத்தில் சிறந்த ரதத்துடன் (தண்டதாரனுடைய சிறந்த யானையை) எதிர்த்தான். பிறகு, அந்தத் தண்டதாரன் அர்ஜுனனை உத்தமமான பன்னிரண்டு பாணங்களாலும் ஜனார்த்தனரைப் பதினாறு பாணங்களாலும் குதிரைகளை மும்மூன்று பாணங்களாலும் அடித்து, பிறகு, ஸிம்மநாதஞ்செய்தான்; அடிக்கடி சிரிக்கவும் சிரித்தான், பிறகு, பார்த்தன் பல்லங்களாலே நாண்கயிற்றோடும் பாணங்களுடனும் கூடின அந்தத் தண்டதாரனுடைய வில்லையும் அலங்கரிக்கப்பட்ட துவஜத்தையும் அறுத்து மறுபடியும் பாதரக்ஷகர்களோடு பாகர்களையும் கொன்றான், பிறகு, கிரிவ்ரஜ தேசத்தரசனான அந்தத் தண்டதாரன் கோபங்கொண்டான், பிறகு அர்ஜுனனை அதிகமாகக் கோபமூட்டக் கருதிய அந்தத்தண்டதாரன் கபோலங்களில் மதநீர் பெருகுவதும் துன்பஞ்செய்யுந்தன்மையுள்ளதும் காற்றுபோன்ற வேகமுள்ளதுமான யானையிலிருந்து தோமரங்களால் ஜனார்த்தனரையும் தனஞ்

சயனையும் அடித்தான், பிறகு, பாண்டவன் மூன்றுபாணங்களால் யானைத் துதிக்கைக்கு ஒப்பான அந்தத் தண்டதாரனுடைய இரண்டு கைகளையும் பூர்ண சந்திரனுக்கு ஒப்பான முகத்துடன் கூடின தலையையும் ஒரே சமயத்தில் அறுத்துப் பிறகு யானையின் மீது அநேக பாணங்களைப் பிரயோகித்தான், பொன்னால் அலங் கரிக்கப்பட்ட பார்த்தனுடைய பாணங்களால் நன்கு சூழப்பட்ட தும் பொற்கவசத்தை அணிந்திருப்பதுமான அந்த யானை இரவில் காட்டுத் தீயினால் பற்றியெரிகின்ற ஓஷதிகளோடும் மரங்களோ டும் கூடின மலைபோல அதிகமாக விளங்கிற்று. வேதனையினால் பீடிக்கப்பட்ட அந்த யானை மேகத்தினுடைய இடிமுழக்கம்போல் வீரிட்டுக் கதறிக்கொண்டும் நிலை தவறி நான்கு பக்கத்திலும் சுற்றிக்கொண்டும் மனந்தடுமாறி (யுத்தரங்கத்தைவிட்டு) ஓடியது. துன்பத்தையடைந்த அந்த யானை, பாகனோடுகூடவே வஜ்ராயுதத் தினால் பிளக்கப்பட்ட மலைபோல்விழுந்தது, பனிபோல வெண்ணிற முள்ளதும் பொன்மாலையை அணிந்ததும் இமயமலையினுடைய சிகரம் போன்றதுமான யானையுடன் பிராதாவானவன் யுத்தத்தில் கொல்லப்படவே, தண்டன், உபேந்திரரான கண்ணபிரானையும் அர்ஜுனனையும் கொல்ல எண்ணி விரைவாக ஓடி வந்தான், அந்தத் தண்டன் சூரியனுடைய கிரணங்கள்போற் பிரகாசிப்ப வைகளும் கூர்மையுள்ளவைகளுமான மூன்று தோமரங்களால் ஜனார்த்தனரையும் ஐந்து தோமரங்களாலே அர்ஜுனனையும் அடித்து ஸிம்மநாதஞ் செய்தான், பிறகு, பாண்டவன் அடிப்பவ னுடைய அவனுடைய இருகைகளையும் அறுத்தான். க்ஷுரப்ரத்தினால் அறுக்கப்பட்டவைகளும் பருத்திருப்பவைகளும் தோமராயுதத் துடன் கூடியவைகளும் நல்ல தோள்வளைகளை அணிந்தவைகளும் சந்தனத்தினால் பூசப்பட்டவைகளும் யானையின்மீதிருந்து ஒரே சமயத்தில் விழுகின்றவைகளுமான இரு கைகளும் மலையினது சிகரத்தினின்று பூமியில் வீழுகின்ற இரண்டு ஸர்ப்பங்கள்போல விளங்கின, பிறகு, கிரீடியினால் அர்த்தசந்திர பாணத்தால் அறுக் கப்பட்ட தண்டனுடைய தலையானது யானையின்மீதிருந்து பூமி யில் விழுந்தது. ரத்தத்தால் நனைந்து விழுகின்ற அந்தத் தண்டன் அஸ்தகிரியினின்று மேற்றிசையில் விழுகின்ற சூரியன்போல் விளங்கினான், பிறகு, பார்த்தன் சூரியனுடைய கிரணங்களுக்கு ஒப்பான உத்தமமான பாணங்களாலே இமயமலையினுடைய சிக ரத்துக்கு ஒப்பான அந்த யானையைப் பிளந்தான், அந்த யானை யானது வஜ்ஜிராயுதத்தினால் அடிக்கப்பட்ட இமயமலையினுடைய சிகரம்போல வீரிட்டுக்கொண்டு விழுந்தது. பிறகு, ஸவ்யஸாசி யினால் யுத்தத்தில் ஜயத்தில் விருப்பமுள்ளவைகளான அந்த

யானை போன்ற மற்ற யானைகளும் அந்த இரண்டு யானைகள் போலவே நாசஞ் செய்யப்பட்டன. பிறகு, மிகப் பெரிதான சத்துருவினுடைய படையானது நன்கு நாசஞ் செய்யப்பட்டது, யானைகளும் ரதிகர்களும் குதிரைகளும் மனிதர்களும் கூட்டம் கூட்டமாகப் பரஸ்பரம் கொன்றுகொண்டு யுத்தத்தில் விழுந்தார்கள். மிக்க தடுமாற்றமுற்றவர்களும் நன்கு அடிக்கப்பட்டவர்களும் அதை அதைப் பலவாறாகப் பேசுகின்றவர்களுமான மனிதர்கள் ஒருவரால் மற்றொருவர் கொல்லப்பட்டார்கள். பிறகு, அர்ஜுனனுடைய படைவீரர்கள், தேவ கணங்கள் இந்திரனைச் சூழ்ந்துகொள்வதுபோல அர்ஜுனனைச் சூழ்ந்துகொண்டு, 'வீர! பிரஜைகள் மரணத்தினின்று பயப்படுவதுபோல எவனிடத்தினின்று பயமடைந்தோமோ அந்தச் சத்துருவானவன் எங்களுடைய பாக்கியத்தால் உன்னால் கொல்லப்பட்டான். பகைவர்களை நாசஞ் செய்பவனே! இவ்வாறு பலசாலிகளான பகைவர்களால் மிகப் பீடிக்கப்பட்ட இந்த ஜனங்களைப் பயத்தினின்று பாதுகாவாமற் போனால், அப்பொழுது, இவர்கள் கொல்லப்பட்டதால் இப்பொழுது நமக்கு உண்டானதுபோன்ற ஸந்தோஷம் பகைவர்களுக்கு உண்டாயிருக்கும்' என்று கூறினார்கள். அர்ஜுனன் இவ்வாறாகவே மறுபடியும் நண்பர்களால் புகழப்படுகின்ற வாக்குக்களைக் கேட்டு அப்போது ஸந்தோஷமுள்ள மனத்தையுடையவனாகத் தக்கபடி அந்த ஜனங்களுக்குப் பிரதிமரியாதை செய்துவிட்டு மறுபடியும் ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களைக்கொல்லச் சென்றான்.

ஐம்பத்தைந்தாவது அத்தியாயம்

(அர்ஜுனன் ஸம்சப்தகர்களைக் கொன்றது.)

அர்ஜுனன், அங்காரகக் கிரஹம்போல வக்ரானுவக்ரமான கதியினால் மறுபடியும் திரும்பிவந்து ஸம்சப்தகர்களை ஜயித்துப் பிரகாசித்தான், அரசரே! பாரதரே! பார்த்தனுடைய அம்புகளால் அடிக்கப்பட்ட மனிதர்களும் குதிரைகளும் ரதங்களும் யானைகளும் நிலை தவறின; சுற்றி வந்தன; அழிந்தன; விழுந்தன; வாட்டமுற்றன. பாண்டவன் யுத்தத்தில் எதிர்த்துப் போர் புரிகின்ற சத்துருவீரர்களுடைய ரதத்தில் பூட்டியிருக்கின்ற குதிரைகளையும் மற்றக் குதிரைகளையும் ஸாரதிகளையும் கொடிகளையும் விற்களை

யும் கத்திகளையும் அம்புகளையும் கைகளையும் கையிலுள்ள சஸ்திரங்களையும் புஜங்களையும் தலைகளையும் பல்லங்களாலும் க்ஷுரங்களாலும் அர்த்தசந்திர பாணங்களாலும் வத்ஸதந்தங்களாலும் அறுத்தான். ஊர்மைச் சேர்ந்த யுத்த வீரர்கள் கர்ஜித்துக் கொண்டு அந்த அர்ஜுனனை விரைவாக எதிர்த்தார்கள். ஒரு பசு நிமித்தமாகச் சண்டைபோட எண்ணங்கொண்ட காளைகள் ஒரு காளையைத் தாக்குவதுபோலச் சூரர்கள் நூறுநூருகவும் ஆயிரமாயிரமாகவும் அர்ஜுனனைத் தாக்கினார்கள், அவர்களுக்கும் அந்த அர்ஜுனனுக்கும், மூவுலகங்களையும் ஜயிக்கும் விஷயத்தில் அசுரர்களுக்கு இந்திரனோடு யுத்தம் நேர்ந்ததுபோல, மயிர் புளகித்தலை உண்டுபண்ணுகின்ற போர் நடந்தது. அர்ஜுனன் கடிக்குந்தன்மையுள்ள ஸர்ப்பங்கள்போன்ற மூன்று பாணங்களால் [1] உக்கிராயுதனை அடித்து அவனுடைய தலையைச் சரீரத்தினின்று கவர்ந்தான். அந்த ஸம்சப்தக வீரர்கள் கோபங்கொண்டு மாரிக் காலத்தில் காற்றுக்களால் செலுத்தப்பட்ட மேகங்கள் இமயமலையின்மீது பொழிவதுபோல அர்ஜுனன்மீது நான்கு பக்கத்திலும் பற்பல சஸ்திரங்களைப் பொழிந்தார்கள். அர்ஜுனன் நான்கு பக்கத்தினின்றும் வந்து விழுகின்ற சத்துருக்களுடைய அஸ்திரங்களை அஸ்திரங்களால் தடுத்து நன்கு பிரயோகிக்கப்பட்ட பாணங்களால் கணக்கிலடங்காத பகைவர்களனைவரையும் அடித்தான், அர்ஜுனன் விரைவுள்ள பாணங்களால் ரதங்களை, திரிவேணுவும் அச்சும் ஏர்க்கால்களும் வெட்டப்பட்டவைகளாகவும் குதிரைகளும் ஸாரதிகளும் கொல்லப்பெற்றவைகளாகவும் கைகளினின்று நழுவி விழுந்த அம்புத் தூணிகளையுடையவைகளாகவும் சக்கரங்களையும் தேர்க்கொடிகளையுமிழந்தவைகளாகவும் கடிவாளங்களும் கட்டுக் கயிறுகளும் அச்சுக்களும் அறுக்கப்பட்டவைகளாகவும் அநுகர்ஷங்களையும் நுகத்தடிகளையும் இழந்தவைகளாகவும் எல்லா ஸன்னகங்களும் அழிக்கப்பட்டவைகளாகவும் செய்தான். அந்த யுத்தத்தில், நாசம் பண்ணப்பட்ட அந்தச் சிறந்த ரதங்கள் நெருப்பினாலும் காற்றினாலும் தண்ணீராலும் நாசஞ்செய்யப்பட்ட செல்வவான்களின் வீடுகள் போலப் பலவாருக விளங்கின. யானைகள் வஜ்ஜிராயுதத்துக்கும் இடிக்குஞ்சமமான அம்புகளால் உயிர் நிலைகள் நன்கு பிளக்கப்பட்டு, இடியினாலும் காற்றினாலும் நெருப்பினாலும் (நாசம்

---

[1] திருதராஷ்டிரனுடைய குமாரன் அல்லன்; இவன் வேறு, 'உக்ராயுத குமாரனை' என்பது வியாக்கியான புஸ்தக பாடம்.

பண்ணப்பட்ட) மலையுச்சியிலுள்ள வீடுகள்போல் விழுந்தன. இந்திரன் அசுரர்களைக் கொல்வதுபோலப் பார்த்தன் (வீரர்களை) வஜ்ஜிராயுதத்திற்கும் தழலுக்கும் விஷத்துக்கும் ஒப்பான சாணை பிடிக்கப்பட்ட அநேக அம்புகளால் கொன்றான்: அர்ஜுனனால் அடிக்கப்பட்ட அநேகம் குதிரைகள் ஏறியிருக்கின்ற வீரர்களோடு கூடவே விழுந்தன. ரத்தத்தினால் நனைந்திருக்கின்ற அக்குதிரைகள் நாக்கும் குடலும் வெளியில் வந்து பார்க்கத்தகாதவைகளாகி யுத்த பூமியில் உயிரை இழந்தன. அர்ஜுனனால் நாராசங்களால் நன்கு கோக்கப்பட்ட மனிதர்களும் யானைகளும் குதிரைகளும் சுழன்றன; தடுமாற்றமுற்றன; கீழே விழுந்தன; அலறின; வாடின. விலையுயர்ந்த கவசமும் பூஷணமும் பூண்டவர்களும் நானாவிதமான ஆடைகளையும் ஆயுதங்களையும் தரித்தவர்களுமான வீரர்கள் ரதங்களோடும் குதிரைகளோடும் யானைகளோடும் அர்ஜுனனால் கொல்லப்பட்டுப் படுத்தார்கள். பயமற்றவர்களும் உயர் குலத்தில் தோன்றியவர்களும் பிரசித்தர்களுமான புண்ணிய கர்மம் செய்தவர்கள் சரீரங்களால் பூமியை அடைந்தார்கள்; சிறந்த கர்மங்களால் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். பிறகு, பற்பல தேசங்களுக்குத் தலைவர்களாயிருப்பவர்களும் கூட்டங்களோடு கூடியவர்களும் உம்மைச் சேர்ந்தவர்களுமான வீரர்கள் கோபங்கொண்டு அர்ஜுனனுடைய ரதத்தை நோக்கி எதிர்த்துச் சென்றார்கள். ரதங்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் சுமக்கப்படுகின்றவர்களும் காலாட்களும் கொல்ல எண்ணிப் பலவித ஆயுதங்களை விரைவாகப் பிரயோகித்துக்கொண்டு எதிர்ந்து ஓடினார்கள், அர்ஜுனனாகிற காற்றானது யுத்த வீரர்களாகிற மஹாமேகங்களால் பிரயோகிக்கப்பட்ட அந்த ஆயுதங்களாகிற பெருமழையைக் கூர்மையுள்ள பாணங்களால் விரைவாக நாசஞ்செய்தது. குதிரைகளோடும் காலாட்களோடும் யானைகளோடும் ரதங்களோடும்சேர்ந்ததும் பெரிய ஆயுதத்திரள்களால் வியாபிக்கப்பட்டதுமான பகைவர்களுடைய படையாகிற கடலைச் சஸ்திரங்களும் அஸ்திரங்களுமாகிற அணையினாலே விரைவாகத் தாண்டக் கருதிய பார்த்தனை, வாசுதேவர், 'பார்த்த! தோஷமற்றவனே! ஏன் விளையாடுகிறாய்? இந்த ஸம்சப்தகர்களை நாசஞ்செய்து பிறகு கர்ணனைக் கொல்லும் விஷயத்தில் விரைவு பாராட்டு' என்று கூறினார். அர்ஜுனன், 'அவ்வாறே ஆகட்டும்' என்று அவரைப் பார்த்துச் சொல்லிவிட்டு, அப்பொழுது மிகுந்திருக்கின்ற ஸம்சப்தகர்களை நாசஞ் செய்யப் போகின்றவனாக, இந்திரன் அசுரர்களை அடித்ததுபோலப் பாணங்

கனால் அடித்தான். யுத்தத்தில் பாணங்களை எடுப்பவனும் தொடுப்பவனும் விடுட்பவனுமான அர்ஜுனன் சிலரால் காணப் படவில்லை. மனிதர்கள் விரைவிற் கொல்லப்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள். கோவிந்தர், 'ஆச்சரியம்' என்று சொல்லிக் கொண்டு குதிரைகளை நடத்தினர். அன்னப்பறவைகளுடைய நிறம்போன்ற வெண்ணிறமுள்ள அந்தக் குதிரைகள் அன்னங் கள் தடாகத்தில் பிரவேசிப்பதுபோலக் கௌரவ சேனையில் பிர வேசித்தன. பிறகு, ஜனங்களுக்கு நாசமானது நடந்துகொண் டிருக்கும் தருணத்தில், அந்த யுத்தப் பூமியை பார்க்கின்ற கோவிந் தர், ஸவ்யஸாசியைப் பார்த்து, 'பார்த்த'! மகாபயங்கரமான பாரதர்களுடைய க்ஷயமானது இதோ நடந்து வருகின்றது. துரியோதனனுக்காகப் பூமியிலுள்ள அரசர்களுக்கெல்லாம்பெரிதான நாசமுண்டாகிவிட்டது. பாரத! கொல்லப்பட்ட வில்லாளிகளு டைய பொன்மயமான பின்புறமுள்ளவைகளும் புரட்டித் தள்ளப் பட்டவைகளுமான விற்களையும் பூஷணங்களையும் அவ்வாறே அம்புத் தூணிகளையும் பொன்மயமான கட்டுக்களுள்ளவைகளும் படிந்த கணுக்களுள்ளவைகளுமான பாணங்களையும் எண்ணெ யிட்டுத் தீட்டப்பட்டவைகளும் சட்டையுரித்த பாம்புகள்போன்ற வைகளுமான நாராசங்களையும் நான்கு பக்கத்திலும் இறைந்து கிடக்கின்ற தோமரங்களையும் குதிரைகளையும் ஸ்வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்ட குடைகளையும் புரட்டித் தள்ளப்பட்டவையும் பொன்னலாகிய பின்புறமுள்ளவைகளுமான கேடகங்களையும் பொன்னால் சித்திர வேலை செய்யப்பட்ட ஈட்டிகளையும் பொன் னால் அலங்கரிக்கப்பட்ட சக்திகளையும் பொற்பட்டங்களால் கட்டப்பட்ட பெரிய கதைகளையும் பொன்மயமான ரிஷ்டிகளையும் பொன்னலங்காரமுள்ள பட்டஸங்களையும் பொன்னால் சித்திர வேலை செய்யப்பட்ட காம்புகளோடு முறித்துக் கீழே தள்ளப் பட்ட பரசுகளையும் பரிகங்களையும் பிண்டிபாலங்களையும் புசுண்டி களையும் கணபங்களையும் விழுந்திருக்கின்ற இருப்பு மயமான குந்தங்களையும் பெரிய உலக்கைகளையும் பார். உயிரை இழந்த பலசாலிகளான இந்த வீரர்கள் ஜயத்தில் விருப்பங்கொண்டு பற்பலவித சஸ்திரங்களைப் பிடித்து உயிரோடிருக்கின்றவர்கள் போலக் காணப்படுகிறார்கள். கதையினால் உடல்கள் நொறுக்கப் பட்டவர்களும் உலக்கைகளால் மண்டைகள் உடைக்கப்பட்டவர் களும் யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களாலும் பொடி பண்ணப்பட்டவர்களுமான யுத்த வீரர்களை ஆயிரமாயிரமாகப் பார். பகைவர்களை அழிப்பவனே! பாணங்களாலும் சக்திகளா

லும் ரிஷ்டிகளாலும் தோமரங்களாலும் கத்திகளாலும் பட்டஸங்களாலும் ஈட்டிகளாலும் நகங்களாலும் கருடங்களாலும் பலவாறு பிளக்கப்பட்டும் ரத்த வெள்ளத்தினால் நான்கு பக்கமும் நனைக்கப்பட்டும் உயிர் துறந்த மனிதர்கள் யானைகள் குதிரைகள் இவற்றின் சரீரங்களால் யுத்த பூமியானது நன்கு மூடப்பட்டு விட்டது, பாரதனே! சந்தனத்தினால் பூசப்பட்டவைகளும் தோள்வளைகளுடன் கூடியவைகளும் மங்களமான பூஷணங்களுள்ளவைகளும் கையுறைகள் அணிந்தவைகளும் கேயூரங்களுடன் கூடியவைகளுமான (வீரர்களுடைய) கைகளால் பூமியானது விளங்கியது. பரதர்களுள் உத்தமனே! விருஷபத்தின் கண்கள் போன்ற கண்களையுடையவர்களும் பலசாலிகளுமான வீரர்களுடைய விரலுறைகளுடன் கூடியவைகளும் அலங்கரிக்கப்பட்டவைகளும் அடித்துத் தள்ளப்பட்டவைகளுமான நுனிக்கைகளாலும், அறுக்கப்பட்ட யானைத் துதிக்கைகளுக்கு ஒப்பான தொடைகளாலும், உயர்ந்த சூடாமணியை அணிந்தவைகளும் குண்டலங்களுடன் கூடியவைகளுமான தலைகளாலும், கூட்டம் கூட்டமாக அறுக்கப்பட்ட சரீரங்களாலும், பாணங்களாலும் சக்திகளாலும் ரிஷ்டிகளாலும் தோமரங்களாலும் உடல்களும் கழுத்துகளும் அறுக்கப்பட்டவைகளும் ரத்தத்தினால் நனைக்கப்பட்டவைகளுமான யானைகள் குதிரைகள் மனிதர்கள் இவர்களுடைய தலையில்லா முண்டங்களாலும், பூமியானது யாகத்தில் தணிந்த அக்கினிகளாலே விளங்குவதுபோல விளங்கியது. பொற் கிண்கிணிகளுள்ளவைகளும் மங்களகரமானவைகளும் பலவாறாக உடைக்கப்பட்டவைகளுமான ரதங்களையும் ரத்தத்தினால் நனைக்கப்பட்டுப் பலவாறு (சிதறிக் கிடக்கின்ற) குதிரைகளையும் பார். அனுகர்ஷங்களையும், அம்புத் தூணிகளையும், கொடித் துணிகளையும், பலவிதமான துவஜங்களையும், யுத்த வீரர்களுடைய பெரிய சங்கங்களையும், வெண்ணிறமுள்ள சாமரங்களையும், நாக்குத் தெறித்து மலைபோலச் சாய்ந்திருக்கின்ற யானைகளையும், விசித்திரமான வைஜயந்திகளையும், கொல்லப்பட்ட யானை வீரர்களையும், அனேக கம்பளங்களுடன் கூடின யானைகளுடைய மேல் விரிப்புக்களையும், அவ்வாறே கிழிக்கப்பட்ட விசித்திரமான பற்பல வடிவமுள்ள விரிப்புக்களையும், பலவாறு உடைக்கப்பட்டும் விழுகின்ற யானைகளால் நொறுக்கப்பட்டுமிருக்கின்ற மணிகளையும், வைடூரிய ரத்தினங்களிழைத்த பிடிகளுடன் பூமியில் விழுந்திருக்கின்ற மாவெட்டிகளையும் குதிரைகளுடைய நுகங்களையும் தலை அலங்காரங்களையும், இரத்தினங்களால் சித்திர வேலை செய்யப்பட்ட கவசங்களையும், குதிரை வீரர்களின் மீதும் துவஜங்களுடைய நுனி

களிலும் அடிக்கப்பட்டவையும் பொன்னால் சித்திரவேலை செய்யப் பட்டவையுமான விரிப்புக்களையும், மணிகளால் விசித்திரமா யிருப்பவைகளும் இரத்தினங்களால் சித்திரவேலை செய்யப்பட்ட வைகளும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளும் ஆட்டு மயிரினால் செய்யப்பட்டவைகளும் பூமியில் விழுந்திருப்பவைகளு மான குதிரைகளின்மீது விரிக்கின்ற விரிப்புக்களையும், அரசர் களுடைய சூடாமணிகளையும், விசித்திரமான பொன் மாலைகளை யும், புரட்டித் தள்ளப்பட்ட குடைகளையும், சாமரங்களையும், விசிறிகளையும் பார். சந்திரன்போலவும் நக்ஷத்திரங்கள்போலவும் பிரகாசிப்பவைகளும் அழகிய குண்டலங்கள் அணிந்தவைகளும் ஒழுங்குபடுத்தப்பட்ட மீசையுள்ளவைகளும் நன்றாக அலங் கரிக்கப்பட்டவைகளுமான வீரர்களுடைய முகங்களால் நன்கு மூடப்பட்டதும் ரத்தச் சேறுள்ளதுமான யுத்த பூமியைப் [1] பார். அரசனே! ஆயுதங்களைக் கீழே வைத்தவர்களும் நான்கு பக்கங் களிலும் அலறுகின்றவர்களுமான ஞாதிகளால் சூழப்படுகின்ற வர்களும் ஜலத்தால் நனைக்கப்பட்டவர்களும் அடிக்கடி சத்தமிடு கிறவர்களும் உயிருடன் கூடியவர்களுமான மனிதர்களையும் பார். பலசாலிகளும் ஜயத்தில் அவாவுள்ளவர்களுமான வீரர்கள் உயிரை இழந்தவர்களாக மற்ற போர்வீரர்களை மூடி (அடக்கம் செய்து) விட்டு அதிகக் கோபமூண்டு மீண்டும் யுத்தத்திற்குச் செல்லுகின்றார்கள். மற்ற மனிதர்கள் ஆங்காங்கே எல்லாப் பக்கத்திலும் ஓடுகிறார்கள். அந்தச் சூரர்கள் பிரஜ்ஞையற்றவர் களான இவர்களைப் பார்த்துத் திரும்பிவிட்டார்கள். பாரத! சிலர் கண்ணீர் சொரிந்து ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு விரைவாக ஓடுகின்றார்கள். பாரத! ஜலத்தைக் குடித்து உயிர் துறந்தவர்களையும் (ஜலத்தைக்) குடிக்கின்ற மற்றவர்களையும் பார். பந்துக்களிடத்தில் நேயமுள்ளவர்களான சிலர் மஹா யுத்தத்தில் ஆங்காங்கு யுத்த பூமியில் பிரஜ்ஞையை இழந்தவர் களும் பிரிய பந்துக்களுமான போர்வீரர்களைக் கட்டிக்கொண்டு (துயரமடைகின்றார்கள்). மனிதர்களுள் உத்தமனே! பற்களால் உதடுகளை நன்கு கடித்துக்கொண்டிருப்பவர்களும் புருவநெறித் தலால் குடிலமான முகங்களோடு மஹாயுத்தத்தைப் பார்க் கின்றவர்களுமான மற்றவர்களையும் பார். அர்ஜுன! பெரும் போரில் இச்செய்கை உனக்கே தகுந்தது. அல்லது, பெரும் போரில் உன்னாற் செய்யப்பட்ட செய்கையானது ஸ்வர்க்க லோகத்தில் தேவராஜனுக்குத் தகுந்தது' என்று கூறினர்.

---

[1] இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

மாதவர் கிரீடிக்கு அந்த யுத்த பூமியை இவ்வாறு காண்பித்துக்கொண்டு செல்லவே, துரியோதனனுடைய படையில் பெரிய சங்க முழக்கத்தையும் துந்துபியின் முழக்கத்தையும் பேரியினுடைய பேரொலியையும் பணவங்களுடைய ஓசையையும் பயங்கரமான தேரொலிகளையும் குதிரைகளும் மனிதர்களும் யானைகளும் கால் வைப்பதினால் உண்டாகும் சத்தங்களையும் கேட்டார். வாஸுதேவர், காற்றைப்போன்ற வேகமுள்ள குதிரைகளால் அச்சேனையில் நுழைந்து பாண்டியனாலே எதிர்த்தடிக்கப்பட்டிருக்கின்ற உம்முடைய சேனையைக் கண்டு வியப்புற்றார். பாணங்களிலும் அஸ்திரங்களிலும் சிறந்தவனான பாண்டியன் யுத்தத்தில் நானாவிதமான பாணங்களால் ஆயுள் முடிந்தவர்களை யமன் கொல்வதுபோலப் பகைவர்களுடைய கூட்டங்களைக் கொன்றான். அடிப்பவர்களுள் சிறந்தவனான பாண்டியன் கூர்மையுள்ள பாணங்களால் யானைகள் குதிரைகள் மனிதர்கள் இவற்றின் சரீரங்களைப் பிளந்து சரீரங்களையும் உயிரையும் இழந்தவைகளாகச் செய்து தள்ளினான். அவன் சிறந்த சத்துரு வீரர்களாலே பிரயோகிக்கப்படும் அஸ்திரங்களையும் பற்பல சஸ்திரங்களையும் அம்புகளால் வெட்டி இந்திரன் அஸுரர்களைக் கொன்றதுபோல அவர்களைக் கொன்றான்'' என்று கூறினான்.

ஐம்பத்தாருவது அத்தியாயம்
(அஸ்வத்தாமா பாண்டியனைக் கொன்றது.)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! பாண்டியன் உலகத்தில் பிரஸித்திபெற்ற உத்தம வீரனென்று முன்னமே உன்னால் சொல்லப்பட்டிருக்கின்றான். யுத்தத்தில் அவனுடைய செய்கையானது உன்னால் கூறப்படவில்லை. அந்த உத்தம வீரனுடைய விக்கிரமத்தையும் சிக்ஷையையும் பிரபாவத்தையும் வீரியத்தையும் பிரமாணத்தையும அகங்காரத்தையும் இப்பொழுது விஸ்தாரமாகச் சொல்வாயாக'' என்று வினவ, ஸஞ்சயன் சொல்லத் தொடங்கினான்.

"தனுர் வேதத்தை முழுதும் அறிந்தவர்களென்றும் விற்பிடிப்பதில் சிறந்தவர்களென்றும் உம்மால் கருதப்படுகின்ற எழுவர்களான பீஷ்மர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமா, கர்ணன், அர்ஜுனன், ஜனார்த்தனர் ஆகிய எல்லா மஹாரதர்களையும் வீரியத்தினால் அவமதிப்பவனும் ஓர் அரசனையும் தனக்குச் சமமாகக் கருதாதவனும் தனக்குத் துரோண பீஷ்மர்களோடு ஒப்புமையையும் பொருதவனும்

தன்னிடத்தில் கிருஷ்ணார்ஜுனர்களைக் காட்டிலும் குறையை விரும்பாதவனும் அரசர்களுள் சிறந்தவனும் எல்லாச் சஸ்திர தாரிகளுள்ளும் சிறந்தவனுமான அந்தப் பாண்டியன் பாசத்தைக் கையிற் கொண்ட யமன்போலக் கர்ணனுடைய படையை நாசம் செய்தான். பிரகாசிக்கின்ற தேர்களையும் குதிரைகளையும் யானைகளையுமுடையதும் சிறந்த காலாட்களால் நிரம்பியதும் குயவனுடைய சக்கரம்போலச் சுற்றிவருகின்றது மான அந்தச் சேனையானது பாண்டியனால் பலத்தினால் எதிர்த்தடிக்கப்பட்டது. பாண்டியன், குதிரைகளையும் ஸாரதி யையும் துவஜங்களையும் இழந்தவையும் நுகங்கள் தனியாகப் பிரிக்கப்பட்டவையுமான ரதங்களை, வாயுவானது மேகங்களை விலக்குவதுபோல, நன்கு பிரயோகிக்கப்பட்ட அம்புகளாலே விலகச் செய்தான். அந்தப் பாண்டியன், சிறந்த பாகர் களுடன் கூடியவைகளும் கொடித் துணிகளையும் ஆயுதங்களை யும் கொடிகளையும் இழந்தவைகளுமான யானைகளைப் பாதரக்ஷகர்களுடன் இந்திரன் வஜ்ராயுதத்தினால் மலைகளை அடிப்பதுபோல அடித்தான். அந்தப் பாண்டியன் சக்திகள் ஈட்டிகள் அம்புப் பெட்டிகள் இவைகளையுடைய குதிரை வீரர் களையும் கொன்றான், அந்தப் பாண்டியன் புளிந்தர்களையும் கஸர்களையும் பாஹ்லிகர்களையும் நிஷாதர்களையும் ஆந்திரர்களை யும் குந்தலர்களையும் தென்தேசத்து வீரர்களையும் சூரர்களையும் யுத்தத்தில் கடின சுபாவமுள்ளவர்களுமான போஜர்களை யும் பாணங்களால் சஸ்திரங்களையும் கவசங்களையும் இழந்தவர் களாகச் செய்து உயிரை இழந்தவர்களாகவும் செய்தான். யுத் தத்தில் பாணங்களால் சதுரங்க சேனையை நாசஞ்செய்கின்ற வனும் பரபரப்பில்லாதவனுமான பாண்டியனைக் கண்டு துரோண புத்திரர் பிறகு பரபரப்பில்லாதவராக அவனுக்கு எதிரில் சென்றார். அடிப்பவர்களுள் சிறந்தவரான அவர் பயமற்றவராகிப் பயமற்றவனான அந்தப் பாண்டியனை இனிமை யாக அழைத்து நகைத்துக்கொண்டு கூறலானார்.

'அரசனே! தாமரையிதழ்போன்ற கண்களையுடையவனே! பிரதானமான ஆயுதங்களையும் வாகனங்களையும் உடையவனே! வஜ்ரம்போன்ற தேகபலமுள்ளவனே! பிரசித்தமான வலிமை யும் ஆண்மையுமுடையவனே! கைப்பிடியினாலே விரல்கள் நசுக்கப்பட்டவைகளும் மிக நீண்டவைகளுமான இரு கைகளாலும் பெரிய வில்லை நாணொலியிடும்படி செய்து கொண்டும் மஹாமேகம்போலக் கர்ஜித்துக்கொண்டும் அதிக மாகப் பிரகாசிக்கிறாய். மிக்க வேகமுள்ள பாணவர்ஷங்களைப்

பகைவர்களின்மீது பொழிகின்ற உனக்கு யுத்தத்தில் என்னைத் தவிர மற்றவனை எதிரிவீரனாக நான் பார்க்கவில்லை. பயமற்றதும் பயங்கரமான பலமுள்ளதுமான ஸிம்மமானது வனத்தில் மிருகங் களுடைய கூட்டங்களைக் கொல்வதுபோல நீ ஒருவனுயிருந்து கொண்டு அநேக ரதங்களையும் யானைகளையும் காலாட்களையும் குதிரைகளையும் நாசஞ்செய்கிறாய்; பெரிய தேரொலியினாலே ஆகாயத்தையும் பூமியையும் எதிரொலியிடும்படி செய்து கொண்டும் வெயிற் காலத்தில் பயிருள்ள பூமியைக் கிரணங் களால் கொளுத்துகிற சூரியனைப்போலப் போர்வீரர்களைத் தபிக்கச்செய்துகொண்டும் ஸர்ப்பங்கள்போன்ற அம்புகளால் நிறைந்த இரண்டு அம்புப் பெட்டிகளை நன்றாகத் தொட்டுக் கொண்டும் முக்கண்ணரோடு அந்தகனென்கிற அஸுரன் போர் புரிந்ததுபோல என் ஒருவனோடேயே யுத்தம் செய்' என்று சொன்னார்.

இவ்வாறு சொல்லப்பட்ட அந்த மலையத்துவஜ பாண்டிய ராஜன் 'அவ்விதமே ஆகுக' என்று சொல்லி இந்த அஸ்வத்தாமவைக் கர்ணி என்கிற பாணத்தால் நன்றாக அடித்துத் துன்பமடையும்படி செய்தான். ஆசாரியபுத்திரரான அஸ்வத்தாமாவும் மர்மஸ்தானங்களைப் பிளக்கின்றவைகளும் அதியுக்ரமாயிருப்பவைகளும் அக்கினி ஜ்வாலைக்கு ஒப்பானவை களுமான பாணங்களால் பாண்டியனை மர்ம ஸ்தானங்களில் அடித்தார். பிறகு, அவர் கழுகிறகு கட்டியவைகளும் பத்தாவது கதியோடு[1] கூடியவைகளுமான வேறு புதிய நாரா சங்களை விரைவாகப் பாண்டியன்மீது பிரயோகித்தார். அப் பொழுது, பாண்டியன் அந்தப் பாணங்களை வெட்டி வேறு நான்கு பாணங்களாலே அஸ்வத்தாமாவினுடைய நான்கு குதிரைகளையும் விரைவாக அடித்தான். அவை உயிரை இழந்தவைகளாயின. பிறகு, பாண்டியன் சூரியனுடைய காந்திபோன்ற காந்தியையுடையவரான துரோணபுத்திரருடைய அந்தப் பாணங்களைக் கூர்மையுள்ள அம்புகளால் வெட்டி, இழுத்துக் கட்டப்பட்ட வில்லிலுள்ள நாண்கயிற்றையும் அறுத் தான். பகைவர்களை அழிப்பவரான துரோண புத்திரர் சிறந்த வில்லை நாணேற்றிக் கிங்கரர்கள் வேறு சிறந்த குதிரைகளை விரை வாகத் தேரில் பூட்டியதைப் பார்த்தார். பிறகு, பிராம்மணர்

---

[1] பாணகதி பத்துவகை; அவை: உன்முகி, அபிமுகி, திர்யக், மந்தா, கோமூத்ரிகா, த்ருவா, ஸ்கலிதா, யமகா, க்ராந்தா, க்ருஷ்டா என்பன. பத்தாவதான க்ருஷ்டா அதிக்ருஷ்டா என்றும் பெயர் கூறப்படுகிறது. அது தலையுடன்கூடத் தூரத்தில் போய் விழக்கூடியது.

ஆயிரம் பாணங்களைப் பிரயோகித்து ஆகாயத்தையும் திக்குக்களையும் பாணங்களால் நெருங்கியதாகச் செய்தார். பிறகு, ஆண்மையிற் சிறந்தவனான பாண்டியன், பிரயோகிக்கின்ற மஹாத்மாவான துரோண புத்திரருடைய அந்தப் பாணங்களனைத்தையும் குறைவுபடாதவை என்று அறிந்திருந்தும் அவைகளை அடித்து நாசஞ்செய்தான். பகைவனான பாண்டியன் முயற்சியோடு விடப்பட்ட அந்த த்ரோண புத்திரருடைய அம்புகளை அறுத்துக் கூர்மையுள்ள பாணங்களால் யுத்தத்தில் அவருடைய இரண்டு சக்கர ரக்ஷகர்களையும் அடித்தான். பிறகு, துரோண புத்திரர் அவனுடைய லாவகத்தைக் கண்டு வட்டமாகச் செய்யப்பட்ட வில்லுடன் (மழைக்கடவுளான) பர்ஜன்யன் மழையைப் பொழிவதுபோலப் பாணங்களைப் பிரயோகித்தார். ஐயா! எட்டு எட்டுக் காளைகள் கட்டின எட்டு வண்டிகள் சுமந்து வந்த அவ்வளவு ஆயுதங்களையும துரோண புத்திரர் மூன்றே முக்கால் நாழிகைக்குள் பிரயோகித்துவிட்டார். அந்தகன் போலக் கோபங்கொண்டவரும் முடிவுக்காலத்தில் அழிக்கின்ற அந்தகன்போன்றவருமான அந்த அஸ்வத்தாமாவினுடைய உருவத்தை எவரெவர்கள் கண்டார்களோ அவரவர்கள் பெரும்பான்மையாகப் பிரஜ்ஞையை இழந்தவர்களானார்கள். ஆசாரிய புத்திரர் வர்ஷாகாலத்தில் மேகமானது மலைகளுடனும் மரங்களுடனும் கூடிய பூமியின்மீது மழையைப் பொழிவதுபோல அந்தப் பாண்டவ சேனையின்மீது அம்பு மழையைப் பொழிந்தார். துரோண புத்திரராகிய பர்ஜன்யனால் விடப்பட்ட பொறுத்தற்கரிய அந்த அம்பு மழையை அந்தப் பாண்டியனாகிற காற்றானது வாயவ்யாஸ்திரத்தினால் விரைவாக அடித்துச் சப்தித்தது. அடிக்கடி கர்ஜிக்கின்ற அந்தப் பாண்டியனுடைய சந்தனத்தினாலும் காரகிலினாலும் பூசப்பட்டதும் மலைய பர்வதத்தினுடைய பிரதிமையுள்ளதுமான கொடியைத் துரோண புத்திரர் அறுத்து நான்கு குதிரைகளையும் அடித்தார். ஸாரதியை ஓர் அம்பினாலடித்துப் பெரிய மேகம்போலக் கர்ஜிக்கின்ற (அவனுடைய) வில்லையும் அறுத்து ஒரு பிறைக்கணையால் ரதத்தையும் எள்ளளவெள்ளளவாகச் சிதறச் செய்தார். அவர் அஸ்திரங்களால் அஸ்திரங்களைத் தடுத்து எல்லா ஆயுதங்களையும் வெட்டி யுத்தம் செய்யும் விருப்பத்தினால் கிட்டியவனாயிருந்தும் பகைவனான அந்தப் பாண்டியனைக் கொல்லவில்லை. பாகன் கொல்லப்பட்டதும் (ஆஸன முதலியன) நன்கு அமைக்கப் பெற்றதும் விரைவுள்ளதும் (யானைகளுடைய முழக்கத்தைக் கேட்டு) எதிர் முழக்கம் செய்கின்றதும் பலமுள்ளதும் பல்லுள்ள

வற்றுட் சிறந்ததும் துரோண புத்திரருடைய அம்புகளால் அடிக்கப்பட்டு வேகத்துடன் எதிரியினுடைய யானைகளை வீறிடச் செய்துகொண்டு அந்தப் பாண்டியனுக்கருகில் விரைவுடன் ஓடி வந்ததும் மலையின் தாழ்வரைக் கொப்பானதும் யானைகளுள் சிறந்ததுமான அந்த யானையின்மீது யானைப்போரில் பாண்டித்தியமுள்ளவனான மலயத்வஜராஜன் உரக்கக் கர்ஜிக்கின்ற சிங்கமானது மலையினுடைய உச்சியில் ஏறுவதுபோல விரைவுள்ளவனாக ஏறி வீற்றிருந்தான். தமிழ்நாட்டு அரசனான அந்தப் பாண்டியன் ஸிம்மநாதஞ்செய்து யானையை அங்குசத்தினால் கோபிக்கச் செய்துகொண்டு குருபுத்திரரான அஶ்வத்தாமாவைக் குறித்துப் பலத்தினாலும் அஸ்திரப்பிரயோகத்தினாலும் சிறந்த முயற்சியினாலும் கோபத்தினாலும் சூரியனுடைய கிரணம் போன்ற ஒளியுள்ள ஒரு தோமராயுதத்தை விரைவாகப் பிரயோகித்தான். அவன், 'என்னால் நீ கொல்லப்பட்டாய்' என்று அடிக்கடி ஸந்தோஷத்தோடு ஸிம்மநாதஞ் செய்துகொண்டு உத்தமமான ரத்னங்களாலும் வஜ்ரங்களாலும் ஸ்வர்ணங்களாலும் வஸ்திரங்களாலும் மாலைகளாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட துரோண புத்திரருடைய கிரீடத்தைப் பிளந்தான். சூரியன் சந்திரன் ஜ்யோதிர்க்கிரஹங்கள் அக்னி இவைகளுடைய காந்திபோன்ற காந்தியையுடைய அந்தக் கிரீடமானது மஹேந்திரனுடைய வஜ்ராயுதத்தினால் அடிக்கப்பட்டுப் பேரொலியுடன் பூமியில் விழுகின்ற மலைச் சிகரம் போல (பாண்டியனுடைய ஆயுதத்தினால்) நன்றாக அடிக்கப் பட்டுச் சுழன்றுகொண்டு கீழே விழுந்தது. பிறகு, அஶ்வத்தாமா காலால் மிதிக்கப்பட்ட சிறந்த ஸர்ப்பம்போல அதிகக் கோபத்தோடு நன்றாக ஜ்வலித்தார். யமதண்டத்துக்கொப்பானவையும் பகைவர்களுக்கு நாசத்தை யுண்டுபண்ணுகின்றவையுமான பதினான்கு பாணங்களை எடுத்தார். அந்த த்ரோண புத்திரர் ஐந்துபாணங்களாலே பாண்டியனது யானையினுடைய கால் நுனிகளையும் துதிக்கையையும் மூன்று பாணங்களால் அவனுடைய இரண்டு கைகளையும் தலையையும் அறுத்து ஆறு பாணங்களாலே ஆறு ருதுக்களுக்கு ஒப்பான காந்தியையுடையவர்களும் மஹாரதர்களுமான பாண்டிய ராஜனுடைய துணை வீரர்களையும் கொன்றார். மிக நீண்டவைகளும் உருட்சியானவைகளும் பொன்னாலும் முத்துக்களாலும் மணிகளாலும் வஜ்ரங்களாலும் (இழைக்கப்பட்ட) பூஷணங்களை அணிந்தவைகளும் பூமியில் விழுந்தவைகளுமான அந்தப் பாண்டியராஜனுடைய இரண்டு கைகளும் கருடனால் கொல்லப்பட்ட இரண்டு

ஸர்ப்பங்கள்போலத் துடித்தன. பூர்ணசந்திரனுடைய ஒளி போன்ற ஒளி பொருந்திய முகமுள்ளதும் கோபத்தினால் சிவந்த அகன்ற கண்களுள்ளதும் உயர்ந்த மூக்குள்ளதும் குண்டலங்களுடன் கூடியதுமான அந்தத் தலையானது, இரட்டையான விசாக நக்ஷத்திரங்களுக்கு இடையிலுள்ள சந்திரன் பூமியிலும் விளங்குவதுபோல விளங்கியது. யுத்தஞ் செய்கின்றவரும் ஸமர்த்தருமான அஸ்வத்தாமாவினால் தேவதையை உத்தேசித்துப் பத்தாகப் பகுத்துக் கொடுக்கப்பட்ட ஹவிஸ்போல அந்த யானையானது ஐந்து உத்தம பாணங்களால் ஆறு துண்டும் பாண்டியராஜன் மூன்று பாணங்களால் நாலு துண்டுமாகப் பத்துத் துண்டாகச் செய்யப்பட்டார்கள். பிதிர்க்களுக்குப் பிரியனான அந்தப் பாண்டியன் அனேக குதிரைகளையும் மனிதர்களையும் யானைகளையும் கால் வேறு கை வேறாகத் துண்டாடி அரக்கர்களுக்கு உணவாக்கி, சுடலைத் தீயானது உயிரற்றவுடலாகிற ஹவிஸைப் பெற்று மூண்டெரிந்து நீர்ப் பெருக்கால் நனைக்கப்பட்டுத் தணிவதுபோல ஓய்ந்தான். உம்முடைய புத்திரனான துரியோதன ராஜன், நண்பர்களால் சூழப்பெற்று, வித்தையை முறையாகக் கற்றவரும் போர்செயலை நிறைவேற்றியவருமான குரு புத்திரரை அடைந்து, பலிச் சக்ரவர்த்தி ஜயிக்கப்பட்டவுடன் இந்திரன் விஷ்ணுவைப் பூஜித்ததுபோல, ஸந்தோஷத்தோடு அதிகமாகப் பூஜித்தான்'' என்று கூறினான்.

ஐம்பத்தேழாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

திருதராஷ்டிரன், "பாண்டியன் கொல்லப்பட்டு ஏகவீரனான கர்ணனால் யுதிஷ்டிரரும் துரத்தப்பட்டவுடன், ஜயசாலிகளுள் சிறந்தவனும் வித்தையை முழுதும் கற்றவனும் பலமுள்ளவனும் முயற்சியுள்ளவனும் வீரனும் மகாத்மாவான சங்கரரால் ('எல்லாப் பிராணிகளுள்ளும் வெல்லப்படாதவனாய்' என்று) அனுக்கிரகிக்கப்பட்டவனும் பாண்டு புத்திரனுமான அர்ஜுனன் யாது செய்தான்? ஸஞ்சய! பகைவர்களைக் கொல்பவனான அந்தத் தனஞ்சயனிடத்தினின்று கொடிதும் பெரிதுமான பயமானது உண்டாயிருக்கிறது. அந்தப் பார்த்தன் அந்த யுத்தத்தில் செய்ததை எனக்கு உரைப்பாயாக'' என்று வினவ ஸஞ்சயன் சொல்லலானான்.

"பாண்டியன் கொல்லப்பட்டவுடன், வாசுதேவர் விரைவுடன் அர்ஜுனனைப் பார்த்து இதமான வார்த்தையைக் கூறலானார். 'நமது பாண்டிய ராஜன் கொல்லப்பட்டதையும்

பாண்டவர்கள் ஓடுவதையும் பார். பெரும் போர்க்களத்தில் மண்டுகின்ற நெருப்புப் போன்ற கர்ணனைப் பார். மகாவில்லாளியான இந்தப் பீமன் யுத்தத்தை நோக்கித் திரும்பிவிட்டான். திருஷ்டத்யும்னனை முதன்மையாகக்கொண்ட அப்படிப்பட்ட இந்தப் பாஞ்சாலர்களும் ஸ்ருஞ்சயர்களும் பாண்டவர்களுடைய படைமுகத்தை அனுசரித்து வரவில்லை. மீண்டும் திரும்பி வருகின்ற பார்த்தர்களாலே பெரிதான பகைவர் படையானது நாசஞ் செய்யப்பட்டது. இதோ கர்ணன், ஓடுகின்ற கௌரவர்களை அதிகமாகத் தடுக்கிறான். குந்தீபுத்திர! வேகத்தில் யமனுக்கு ஒப்பானவரும் பராக்கிரமத்தில் இந்திரனையொத்தவரும் சஸ்திரங்களைத் தரித்தவர்களுள் சிறந்தவருமான துரோணபுத்திரர் செல்லுகிறார். மஹாரதனான இந்தத்ருஷ்டத்யும்னன் யுத்தத்தில் அவரை எதிர்த்துச் செல்லுகிறான், குந்தீபுத்திர! அஸ்வத்தாமாவினால் யுத்தத்தில் எல்லா ஸ்ருஞ்சயர்களும் கொல்லப்பட்டார்கள், ரதங்களுக்கும் குதிரைகளுக்கும் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் பெரிதான துன்பம் உண்டு பண்ணப்பட்டுவிட்டது என்றார். வாஸுதேவர் இவை எல்லாவற்றையும் இவ்வாறு கிரீடிக்கு உரைத்தார்,

பாண்டவன், இவற்றைக் கேட்டும் பிராதாக்களுடைய பெரிதான வியஸனத்தைப் பார்த்தும், 'ஹ்ருஷீகேசரே! குதிரைகளை விரைவாக நடத்தும்' என்று சொன்னான். யுத்தத்தில் நிகரில்லாதவரான ஹ்ருஷீகேசர் ரதத்தோடு சென்றார். பிறகு அந்த மஹாயுத்தத்தில் மீண்டும் புழுதியானது தோன்றியது. அரசரே! பிறகு, பெரிதும் மயிர் பொடித்தலைச் செய்கின்றதுமான போர் நடந்தது. வீரர்கள் சேர்ந்து யுத்தம் செய்யுங் காலத்தில் ஸிம்மநாதங்களுடைய ஓசைகளும் தோன்றின. மன்னரே! இரண்டு சேனைகளிலும் வீரர்கள் எக்காலத்திலும் மிருத்யு இருப்பதாக எண்ணிப் போர்புரிந்தார்கள். பிறகு, கௌரவர்களும் ஸ்ருஞ்சயர்களும் யுதிஷ்டிரரை முதன்மையாகக் கொண்ட பாண்டவர்களும் சூரிய குமாரனான கர்ணனை முதன்மையாகக்கொண்ட நாங்களும் மறுபடியும் எதிர்த்தோம். வேந்தரே! பிறகு, கர்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் யமனுடைய ராஜ்ஜியத்தை விருத்திபண்ணுகின்ற கோரமான யுத்தம் நடந்தது. பாரதரே! மகாராஜரே! நெருங்கியதும் மயிர் பொடிக்கச் செய்கின்றதுமான அந்த யுத்தமானது நடக்கத் தொடங்கி ஸம்சப்தக வீரர்களும் கொஞ்சம் மிகுந்திருக்கையில் திருஷ்டத்யும்னன் எல்லா அரசர்களுடனுங் கூடிக் கர்ணனையே எதிர்த்துச் சென்றான், மகாரதர்களான பாண்டவர்களும்

கர்ணனை எதிர்த்தார்கள். எதிர்த்து வருகின்றவர்களும் போரில் வெற்றியை விரும்புகின்றவர்களுமான அவர்களைக் கண்டு, மலையானது நீர்ப் பெருக்குகளைத் தடுப்பதுபோலக் கர்ணன் ஒருவனாகவே யுத்தத்தில் தடுத்தான். அந்த மகாரதர்கள், கர்ணனை அடைந்து, ஜலப்பிரவாகங்கள் மலையில் விழுந்து எல்லாத் திக்குகளிலும் சிதறுவதுபோலச் சிதறினார்கள். மகாராஜரே! பெரிய யுத்தரங்கத்தில் விருத்தியடைகின்றவர்களும் பலசாலிகளும் பரஸ்பரம் ஜயிப்பதில் நோக்கமுள்ளவர்களுமான அவ்விருவருக்கும் கோரமான காட்சியுள்ள யுத்தமானது நடந்தது. திருஷ்டத்யும்னனோ மிகுந்த கோபங்கொண்டு கணுக்கள் படிந்துள்ள அம்பினாலே ராதேயனை அடித்து 'நில், நில்' என்றும் சொன்னான். மகாரதனான கர்ணன் வெற்றியைக் கொடுக்கக் கூடிய சிறந்த வில்லை அசையும்படி செய்துகொண்டு பார்ஷதனுடைய வில்லை அறுத்து ஸர்ப்பங்களுக்கு ஒப்பான அம்புகளைத் தன் வில்லில் பூட்டி மேகமானது மழையைப் பொழிவது போல அம்பு மழையைப் பொழிந்தான். அவன் கோபமுண்டவனாகி ஒன்பது பாணங்களால் பார்ஷதனை மூடினான். தோஷமற்றவரே! அந்தப் பாணங்கள், மகாத்மாவான அந்தப் பார்ஷதனுடைய பொன்னாற் செய்யப்பட்ட கவசத்தை உடைத்து ரத்தத்தினால் நனைக்கப்பட்டு, இந்திரகோபமென்னும் பூச்சிகள்போல் விளங்கின. பிரதாபசாலியான திருஷ்டத்யும்னன் அறுக்கப்பட்ட அந்த வில்லை எறிந்துவிட்டுப் பிறகு, பலமுள்ளதும் பெரிய காரியத்திற்கு ஏற்றதுமான வேறொரு வில்லை எடுத்துக் கணுக்கள் உட்படிந்துள்ள எழுபது பாணங்களால் கர்ணனை அடித்தான். அரசரே! அவ்வாறே, மகாவில்லாளியான கர்ணனும், சத்துருக்களைத் தபிக்கச் செய்பவனும் துரோணருக்குச் சத்துருவுமான பார்ஷதனைக் கூர்மையுள்ள பாணங்களால் அடித்தான். மகாராஜரே! கர்ணன், பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும் வேறொரு யமதண்டம் போன்றதுமான வேறோர் அம்பை எடுத்து யுத்தத்தில் பார்ஷதன்மேல் மீண்டும் பிரயோகித்தான். அரசரே! வேகத்துடன் வருகின்றதும் கோர ரூபமுள்ளதுமான அந்த அம்பைப் பார்ஷதன் கைத் தேர்ச்சியால் நூறாகத் துண்டாக்கினான். மன்னரே! கர்ணன் பாணம் பூமியில் விழுந்ததைக் கண்டான். அப்பொழுது பார்ஷதனும் நான்கு பக்கத்திலும் அம்பு மழையால் தடுத்தான். அப்பொழுது பார்ஷதனும் இந்தக் கர்ணனை விரைவாக ஏழு பாணங்களால் அடித்தான். கர்ணனும் பொன்னலங்காரமுள்ள பத்துப் பாணங்களால் அந்தப் பார்ஷ

தனைத் திருப்பி அடித்தான். கண்களையும் காதுகளையும் மனத்தையும் கவர்கின்ற யுத்தமானது அவ்விருவருக்கும் நேர்ந்தது. அந்த யுத்தமானது கோரமாகவும் விசித்திரமாகவும் எல்லா விதத்தாலும் பார்க்கத்தக்கதாகவும் இருந்தது. அரசரே! அந்த யுத்தத்தில் கர்ண திருஷ்டத்யும்னர்களுடைய அச் செய்கையைக் கண்டு எல்லாப் பிராணிகளுக்கும் மயிர்க்கூச்சல் உண்டாயிற்று. இச்சமயத்தில் துரோண புத்திரர், பகைவர்களை அடக்குகிறவனும் பகைவர்களுடைய வீரியத்தையும் உயிரையும் அழிப்பவனும் மகாரதனுமான அந்தப் பார்ஷதனை எதிர்த்துவந்தார். அந்தப் பிராம்மணர், யுத்தத்தில் செல்லுகின்றவனும் பயமற்றவனும் சத்துருக்களைத் தபிக்கச் செய்பவனும் மகாரதனுமான அந்தத் திருஷ்டத்யும்னனைப் பார்த்து, மிகுந்த கோபமுள்ளவராகி, அவனுடைய ரதத்தோடு தன் ரதத்தை நெருக்கி, 'அடா! பிரம்மஹத்தி செய்தவனே! நில்; நில்; நீ உயிரோடு என்னிடத்திலிருந்து விடுபடப்போகிறதில்லை!' என்று சொன்னார். சீக்கிரமாக யுத்தம் செய்கிறவரும் மஹாரதரும் யுத்தத்தில் முயற்சியுள்ளவருமான வீரர் இவ்வாறு சொல்லிவிட்டுக் கூர்மையுள்ள அம்புகளால் யுத்தத்தில் நன்றாக அவனை மூடினார். மன்னரே! யுத்தத்தில் அதிகக் கோபங்கொண்ட அவர் முயற்சியுடன் மகாரதனான திருஷ்டத்யுனனை எதிர்த்துப் பெரிய சக்தியுடன் போர் புரிந்தார். பிரஜைகளுக்கு நாதரே! அவ்விருவருக்கும் மிக்க கோரமான யுத்தம் நடந்தது. பெரியவரே! துரோண புத்திரர் யுத்தத்தில் பார்ஷதனைக் கண்டு (அவனைத்) தமக்கு மிருத்யுவாக எண்ணி மகிழ்ச்சி குன்றிய மனமுள்ளவரானார். மகாபலசாலியான அந்த அசுவத்தாமா மகா யுத்தத்தில் அந்தப் பார்ஷதனைப் பிதாவுக்குக் கடும் பகையாளியாகவும் தம்மை யுத்தத்தில் சஸ்திரங்களால் கொல்லத்தகாதவனாகவும் அறிந்து, வாழ்நாளின் முடிவில் காலன் வருவதுபோல வேகத்தோடு (அந்தப் பார்ஷதனை) எதிர்த்துச் சென்றார். ராஜேந்திரரே! வீரரான அவர், ஸன்னத்தனாக நிற்கின்ற திருஷ்டத்யும்னனைப் பார்த்துக் கோபத்தினால் பெருமூச்சு விட்டுக் கொண்டு அவனை நன்றாக எதிர்த்துச் சென்றார். அந்த இரண்டு வீரர்களும் உறுதியான நாண்கயிறுள்ள பெரிய விற்களைக் கையில் பிடித்து ஒருவரையொருவர் பார்த்தே அதிகக் கோபத்தை அடைந்தார்கள். மகாராஜரே! மன்னரே! பிறகு, பிரதாபசாலியான துரோண புத்திரர் விரைவுடன் சமீபத்திலிருக்கிற திருஷ்டத்யும்னனைப் பார்த்து, 'பாஞ்சாலர்களுள் இழிந்தவனே! இப்பொழுது உன்னை யமனுடைய வீட்டுக்கு அனுப்புகிறேன். யுத்தத்தில் என் பிதாவைக் கொன்று உன்னால் எந்தப் பாபகாரியம்

செய்யப்பட்டதோ அதன் பயனை இப்பொழுது அடையப் போகிறாய்; யுத்தத்தில் பார்த்தனால் பாதுகாக்கப்படாமல் நீ நின்றாலும் சரி; அல்லது, மோகத்தினால் யுத்தத்தை விட்டு ஓடாமலிருந்தாலும் சரி; நீ க்ஷேமத்தை அடையாவண்ணம் செய்யப்படுவாய். இதை சத்தியமாக உனக்குச் சொல்லு கிறேன்' என்று கூறினார்.

ஐம்பத்தெட்டாவது அத்தியாயம்

(அர்ஜுனன் த்ருஷ்டத்யும்னனைக்காத்து அஶ்வத்தாமாவை வென்று ஸம்சப்தர்களைக் குறித்துச் சென்றது.)

இவ்வாறு சொல்லக் கேட்ட பிரதாபசாலியான திருஷ்ட த்யும்னன், அஶ்வத்தாமாவைப் பார்த்து, 'யுத்தத்தில் முயல் கின்ற உம்முடைய பிதாவுக்குச் செய்யப்பட்டதுபோன்ற கொண் டாடத்தக்க நன்மையை என்னுடைய கத்தியானது உமக்குக் கொடுக்கப்போகிறது. எந்தக் கத்தியினாலே யுத்தத்தில் முயலு கின்ற உமது பிதாவினுடைய தலை அறுக்கப்பட்டதோ அப் படிப்பட்ட என்னுடைய இந்தக் கத்தியே உமக்கு மறுமொழி யைக் கொடுக்கப்போகின்றது. பிராம்மணர்களுள் அபசதரான துரோணரையே நான் கொன்றமையால் பாபியான உம்மை யுத்தத்தில் இப்பொழுது நான் ஏன் கொல்லமாட்டேன்?' என்று மறுமொழி கூறினான். மஹாதேஜஸ்வியும் பகைவர்களை அடக்குகிறவனும் சேனாபதியுமான பார்ஷதன் இவ்வாறு சொல்லிவிட்டு, மிக்க கூர்மையுள்ள ஒரு பல்லத்தினால் துரோண புத்திரரை அடித்தான். அரசரே! பிறகு, அவர் மிக்க கோபம் கொண்டு கணுக்கள் உட்படிந்துள்ள அம்புகளால் யுத்தகளத் தில் திருஷ்டத்யும்னனை நான்கு திசைகளிலும் மூடினார். மஹா ராஜரே! நான்கு பக்கத்திலும் அம்புகளால் மூடப்பட்டபோது ஆகாயமாவது திக்குகளாவது ஆயிரக்கணக்கான யுத்த வீரர் களாவது காணப்படவில்லை. அஶ்வத்தாமா ஒருவரே பார்க்கத் தக்கவராயிருந்துகொண்டு நாற்புறங்களிலும் தடுத்தார். அர சரே! அவ்வாறு பார்ஷதனும் யுத்தத்தில் பிரகாசிக்கின்ற அஶ்வத்தாமாவைக் கர்ணன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அம்புகளால் மூடினான். மகாராஜரே! பார்ப்பதற் கினிய காட்சியுள்ள கர்ணனும் தான் ஒருவனாகவே இருந்து கொண்டு பாண்டவர்களோடு கூடின பாஞ்சாலர்களையும் திரௌ பதி புத்திரர்களையும் யுதாமன்யுவையும் உத்தமௌஜஸையும் ஸாத்யகியையும் ஆயிரக்கணக்காக இருக்கின்ற இன்னும் மற்ற

போர்வீரர்களையும் அம்புகளால் நான்கு பக்கத்திலும் தடுத்தான். திருஷ்டத்யும்னனே எல்லா வில்லாளிகளும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே யுத்தரங்கத்தில் மிக்க கூர்மையுள்ள ஒரு க்ஷுரப்ரத்தினால் த்ரௌணியினுடைய வில்லை அறுத்தான். துரோண புத்திரர், அறுக்கப்பட்ட அந்த வில்லை எறிந்துவிட்டு யுத்தத்தில் வேகமுள்ளதும் கோரமாயிருப்பதுமான வேறொரு வில்லையும் ஸர்ப்பங்களுக்கு ஒப்பான பாணங்களையும் கையில் எடுத்தார். ராஜேந்திரரே! அவர் பார்ஷதனுடைய வில்லையும் சக்தியையும் கதையையும் துவஜத்தையும் குதிரைகளையும் ஸாரதியையும் ரதத்தையும் ஒரு நிமிஷத்தில் அம்புகளால் நாசஞ் செய்தார். வில் அறுக்கப்பட்டவனும் ரதத்தை இழந்தவனும் குதிரைகளும் சாரதியும் கொல்லப்பட்டவனுமான பார்ஷதன் ஒரு பெரிய கத்தியையும் ஒளி பொருந்தியதும் நூறு சந்திரப் பிரதிமைகளுடன் கூடியதுமான ஒரு கேடகத்தையும் கையில் எடுத்தான். ராஜேந்திரரே! மஹாரதரும் வீரரும் கைதேர்ந்தவரும் திடமான ஆயுதங்களை உடையவருமான துரோண புத்திரர், எல்லா ஸைனிகர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே ரதத்தினின்று கீழே இறங்காதவனும் வில்லாளியும் தோள்வலி மிக்கவனுமான அந்தப் பார்ஷதனுடைய அந்தக் கத்தியையும் கேடகத்தையும் யுத்தத்தில் பல்லங்களால் விரைவாகத் துண்டாக்கினார். அது ஆச்சரியமாயிருந்தது. பரதர்களுள் சிறந்தவரே! முயற்சியையுடையவரும் மகாரதருமான துரோண புத்திரர் ரதத்தை இழந்தவனும் குதிரைகளும் தேர்ப்பாகனும் கொல்லப்பெற்றவனும் சஸ்திரங்களால் பலவாறு அடிக்கப்பட்டவனும் அஸ்திரங்களால் அறுக்கப்பட்டவனுமான திருஷ்டத்யும்னனை (வல்லமையினால்) மீறவில்லை. அரசரே! வீரனான துரோண புத்திரர், பாணங்களாலே அந்த திருஷ்டத்யும்னனுக்கு முடிவை உண்டுபண்ண இயலாமற்போனதும், ரதத்தை விட்டுவிட்டுப் பொன்னால் அலங்கரிக்கப்பட்ட பெரிய கத்தியை எடுத்துக்கொண்டு வேகமுள்ளவராக அவனை நோக்கிச் சென்றார். அரசரே! வேகமாக வருகின்ற மகாத்மாவான அந்த அஸ்வத்தாமாவினுடைய சரீரமானது உத்தமமான ஸர்ப்பத்தைப் பிடிக்க விரும்பி விழுகின்ற கருடனுடைய சரீரம்போலாயிற்று. இச்சமயத்தில், பகைவீரர்களைக் கொல்லுபவரான கேசவர் பரதர்களுள் சிறந்தவனும் ஜயிப்பவர்களுள் சிறந்தவனுமான அர்ஜுனனைப் பார்த்துக் கூறலானார்.

'அர்ஜுன! பார்ஷதனுடைய வதத்தைக் குறித்து முயல்கின்ற துரோண புத்திரரைப் பார். அதிக முயற்சி செய்கிறார்; இவனைக் கொன்றுவிடுவார், ஸம்சயமில்லை. மிக்க கைவன்மை

யுள்ளவனே! வீர! மிருத்யுவினுடைய வாயை அடைந்தது போல துரோண புத்திரருடைய வாயை அடைந்திருக்கின்ற வனும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவனுமான இந்தப் பார்ஷதனைப் பாதுகாப்பாயாக' என்று சொன்னார். மகாராஜரே! பிரதாபமுள்ள வாஸுதேவர் இவ்வாறு சொல்லிவிட்டு வீரரான துரோண புத்திரர் இருக்கும் இடத்துக்குக் குதிரைகளை ஓட்டி னார். சந்திரனுக்கொப்பான அந்தக் குதிரைகள் கேசவரால் ஓட்டப்பட்டு ஆகாயத்தைப் பானம் பண்ணுகின்றவைகள் போல மஹாரதரான அஸ்வத்தாமாவை நாடின. மஹாராஜரே! மகாபலசாலியான துரோண புத்திரர் வாஸுதேவரையும் தனஞ் சயனையும் பார்த்து, திருஷ்டத்யும்னனைக் கொல்லும் விஷயத் தில் முயற்சியைச் செய்தார். ஜனேஸ்வரரே! மஹாரதனான அர்ஜுனன் துரோண புத்திரராலே அதிகமாய் ஹிம்ஸிக்கப் படுகிற திருஷ்டத்யும்னனைக் கண்டே அஸ்வத்தாமாவின்மீது பாணங்களைப் பிரயோகித்தான். பொன்னால் அலங்கரிக்கப்பட்ட வைகளும் காண்டீவத்தினால் அதிகமாய்ப் பிரயோகிக்கப்பட்ட வைகளுமான அந்த அம்புகள் அஸ்வத்தாமாவை அடைந்து, புற்றில் பாம்புகள் நுழைவதுபோல நுழைந்தன. வேந்தரே! பிரதாபசாலியும் வீரருமான துரோணபுத்திரர், கோரமான அந்த அம்புகளால் அடிக்கப்பட்டு, யுத்தத்தில் அளத்தற்கரிய பல முள்ள பாஞ்சாலனை விட்டுவிட்டுத் தனஞ்சயனுடைய அம்பு களால் பீடிக்கப்பட்டவராக ரதத்தின்மீது ஏறினார். அவர் சிறந்த வில்லைக் கையில் பிடித்துப் பார்த்தனை அம்புகளால் அடித் தனர். அரசரே! இச்சமயத்தில், வீரனான ஸஹதேவன் பகை வர்களை வாட்டுபவனான பார்ஷதனை யுத்தத்தில் ரதத்திலேற்றி வேறிடத்திற்குக் கொண்டு சென்றான். மகாராஜரே! அர்ஜுன னும் துரோண புத்திரரை அம்புகளால் அடித்தான். துரோண புத்திரரும் கோபமூண்டவராகி அந்த அர்ஜுனனை இரண்டு கை களிலும் மார்பிலும் அடித்தார். கோபமூட்டப்பட்ட பார்த்தன் யுத்தத்தில் வேறொரு யமதண்டம் போன்றதும் காலனுக்கொப் பானதுமான நாராசத்தை துரோண புத்திரர்மீது பிரயோகித் தான். அந்த அம்பானது மிக்க காந்தியுள்ளவரான பிராம்மண ருடைய தோளில் விழுந்தது. மஹாராஜரே! யுத்தத்தில் பாண வேகத்தினால் அடிக்கப்பட்ட அந்த அஸ்வத்தாமா தேர் நடுவில் உட்கார்ந்து மிக்க மனத்தளர்ச்சி அடைந்தார். ஸாரதியானவன் சத்துருக்களை ஹிம்ஸிப்பவரான அந்த வீரரை யுத்தத்தில் கொல்லப்பட்டவராக எண்ணி யுத்த பூமியினின்று தேரோடு வேறிடத்திற்குக் கொண்டுசென்றான். மகாராஜரே! பிறகு, விடு

விக்கப்பட்ட பார்ஷதனையும் பிடிக்கப்பட்ட துரோணபுத்திரரையுங் கண்டு ஜயத்தினால் பிரகாசிக்கின்ற பாஞ்சாலர்கள் உரக்கச் சத்தமிட்டார்கள். அந்த அற்புத யுத்தத்தைக் கண்டு திவ்யமான நான்குவித வாத்தியங்களும் வாசிக்கப்பட்டன. ஸிம்மநாதமும் தோன்றியது.

மஹாராஜரே! பிறகு, மிக்க காந்தியையுடையவனான கர்ணன் யுத்தத்தில் அர்ஜுனனைப் பார்த்துக் கோபங்கொண்டு பார்த்தனோடு த்வந்த்வ யுத்தஞ்செய்ய விருப்பமுள்ளவனாகி வெற்றியைத் தரக்கூடிய வில்லை அசைத்துக்கொண்டு அடிக்கடி (அதனைப்) பார்த்தான். பிருதா புத்திரனான தனஞ்சயன் இவ்வாறு செய்துவிட்டு வாஸுதேவரைப் பார்த்து, 'மாதவரே! ஸம்சப்தகர்களைக் குறித்துச் செல்லும். இது எனக்கு முக்கியமான காரியம்' என்று சொன்னான். பிறகு, கோவிந்தர் பார்த்தனுடைய வார்த்தையைக் கேட்டு அதிகமான கொடித் துணிகளுடன் கூடினதும் மனத்துக்கும் காற்றுக்கும் ஒப்பான வேகமுள்ளதுமான ரதத்தோடு (ஸம்சப்தகர்களைக் குறித்துச்) சென்றார். பூமிக்கு நாதரே! உம்முடைய துராலோசனையினால் இவ்வாறு உம்முடைய ஸைனிகர்களுக்கும் சத்ருக்களுக்கும் பூமியில் இப்படிப்பட்ட அழிவு நேர்ந்தது.

ஐம்பத்தொன்பதாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

அரசர்களுள் சிறந்தவரே! பிறகு, கர்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் யமனுடைய ராஜ்யத்தை விருத்திபண்ணக்கூடிய யுத்தமானது மறுபடியும் நடக்க ஆரம்பித்தது. யுத்த வீரர்கள் விற்களையும் பாணங்களையும் பரிகங்களையும் கத்திகளையும் பட்டஸங்களையும் தோமரங்களையும் உலக்கைகளையும் புசுண்டிகளையும் சக்திகளையும் ரிஷ்டிகளையும் பரசுகளையும் கதைகளையும் ஈட்டிகளையும் கூர்மையுள்ள குந்தங்களையும் பிண்டிபாலங்களையும் பெரிய மாவெட்டிகளையும் எடுத்துக்கொண்டு ஒருவரையொருவர் கொல்ல விரும்பி விரைவாக வந்தார்கள். அவர்கள் பாணங்களுடைய சப்தத்தினாலும் நாணொலியினாலும் தலத்வனியினாலும் ஸ்வர்க்கத்தையும் திக்குகளையும் திக்கோணங்களையும் ஆகாயத்தையும் தேருருளையின் நேமியினால் உண்டுபண்ணப்பட்ட ஓசையினால் பூமியையும் ஒலியிடும்படி செய்துகொண்டு பகைவர்களை எதிர்த்துச் சென்றார்கள். வீரர்கள் மஹாகோரமான யுத்தத்தைத் தாண்டிச் செல்லக் கருதி அந்தப் பேரொலியினால் மிக்க உத்ஸாகத்தைப் பெற்று வீரர்களோடு போர்புரிந்தார்கள்.

நாண்கயிறுகளின் ஓசைகளையும் தலத்வனிகளையும் விற்களின் ஒலிகளையும பிரயோகிக்கப்படுகின்ற சஸ்திரங்களுடைய சத்தங்களையும் அடிக்கப்பட்டு விழுகின்ற காலாட்களுடைய கூக்குரல்களையும் எதிர்த்துக் கர்ஜிக்கின்ற சூரர்களுடைய பற்பலவித பாண சப்தங்களையும் கேட்டு யானைகள் மிக்க பயமடைந்தன; கீழே விழுந்தன. ஸைனிகர்கள் வாட்டமுற்றார்கள். சப்திக்கின்றவர்களும் சஸ்திரவர்ஷத்தை விடுகின்றவர்களுமான அநேக சத்ருக்களை வீரனான கர்ணன் பாணங்களால் பிளந்தான். அவன் குதிரைகளோடும் ஸாரதிகளோடும் துவஜங்களோடுங் கூடின பாஞ்சால வீரர்களுடைய இருபது ரதங்களைப் பாணங்களால் யமலோகத்துக்கு அனுப்பினான். யுத்தத்தில் மஹா வீரியமுடையவர்களும் தேர்ச்சிபெற்றவர்களும் தலைவர்களுமான பாண்டவ வீரர்கள் கர்ணனை எதிர்த்தோடிவந்து நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டார்கள். பிறகு, கர்ணன் பக்ஷிகளால் நான்கு பக்கத்திலும் சூழப்பட்ட ஒரு தாமரை ஓடையை யூதபதியான ஒரு யானை இறங்கிக் கலக்குவதுபோலப் பகைவர் சேனையைச் சராமாரியால் கலக்கிக்கொண்டு அச்சேனையில் நுழைந்தான்; ராதேயன், சத்துரு சேனையை எதிர்த்து உத்தமமான வில்லை உதறிக்கொண்டு கூர்மையுள்ள அம்புகளாலே (பகைவர்களுடைய) தலைகளை அறுத்துத் தள்ளினான். அவன் யானை வீரர்களுடன் கூடின யானைகளையும் குதிரை வீரர்களுடன் கூடின குதிரைகளையும், சுற்றுகின்ற ரதிகர்களையும் ஒரு பாணத்தால் தள்ளினான். பிராணிகள் காற்றும் உள்ளே புகாத கவசத்தையாவது தோலையாவது அணிந்திருந்தாலும் அந்தக் கர்ணனுடைய இரண்டாவது பாணம் படுவதைப் பொறுக்கவில்லை. கர்ணன் வில்லினின்று கூர்மையான பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டு கொறடாவினால் குதிரைகளை அடிப்பதுபோலக் கவசங்களையணிந்த தேகங்களிலும் நாண்கயிற்றிலும் கையுறையிலும் அடித்தான். அவன் ஸிம்மம் மிருகக்கூட்டங்களை அடிப்பதுபோலப் பாணத்திற்கிலக்கான இடத்தை வந்தடைந்திருக்கின்ற பாண்டவர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் பாஞ்சாலர்களையும் பலத்தினாலடித்தான். ஐயா! பிறகு, பாஞ்சால புத்திரனும் திரௌபதி புத்திரர்களும் நகுல ஸஹதேவர்களும் யுயுதானனும் விரைபவர்களாகிக் கர்ணனை எதிர்த்தார்கள். அந்தக் கௌரவர்களும் பாஞ்சாலர்களும் பாண்டவர்களும் முயலும்பொழுது, யுத்தவீரர்கள் யுத்தத்தில் உயிரில் ஆசையைவிட்டு ஒருவரை ஒருவர் கொன்று கொண்டார்கள். பெரியவரே! நல்ல யுத்தஸன்னாகமுள்ளவர்களும் கவசமணிந்தவர்களும் தலைப்பாகைகளை உடையவர்களும் பூஷணங்களை அணிந்தவர்களும் மஹாபலசாலிகளுமான, மற்ற

வீரர்கள் உயர எடுக்கப்பட்ட காலதண்டம் போன்ற கதைகளோடும் உலக்கைகளோடும் பரிகங்களோடும் கர்ஜித்துக்கொண்டும் யுத்தத்திற்காக அழைத்துக்கொண்டும் அதிகப் பரபரப்புடன் பகைவர்களை எதிர்த்துச் சென்றார்கள். பிறகு வீரர்கள் ஒருவரையொருவர் கொன்றார்கள். ஒருவரால் ஒருவர் அடிக்கப்பட்டு மூளை சிதறிக் கண்தெறிக்கவும் ஆயுதங்கள் சிதறவும் சரீரங்களால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு விழுந்தார்கள். சிலர் சஸ்திர சமூகங்களால் நிறைக்கப்பட்டவர்களாக உதிரத்துடன் கூடினவைகளும் தந்தங்களால் நிறைந்தவைகளும் மாதுளம்பழம் போன்றவைகளுமான வாய்களோடு உயிருள்ளவர்கள்போல் இருந்தார்கள். அரசரே! மகாயுத்தத்தில் மற்ற யுத்த வீரர்கள் பரசுகளாலும் பட்டஸங்களாலும் கத்திகளாலும் சக்திகளாலும் பிண்டிபாலங்களாலும் நகங்களாலும் ஈட்டிகளாலும் தோமரங்களாலும் செதுக்கினார்கள்; வெட்டினார்கள்; பிளந்தார்கள்; அவ்வாறே, விலக்கித் தள்ளினார்கள்; நன்றாக அறுத்தார்கள்; கொன்றார்கள். ஒருவராலொருவர் அடிக்கப்பட்ட வீரர்கள் வெட்டப்பட்டும், தம்மிடத்திலுள்ள சிவப்பான சாற்றைக் கக்கிக்கொண்டிருக்கின்ற சிவந்த சந்தன மரங்கள்போல இரத்தத்தால் நனைக்கப்பட்டும், உயிரை யிழந்து விழுந்தார்கள். தேர்களால் தேர்கள் அடிக்கப்பட்டன. யானைகளால் யானைகள் கொல்லப்பட்டன. காலாட்களால் காலாட்கள் கொல்லப்பட்டு விழுந்தார்கள். குதிரைகளால் குதிரைகளும் ஆயிரமாயிரமாகக் கொல்லப்பட்டன. கொடிகளும் தலைகளும் குடைகளும் யானைத் துதிக்கைகளும் மனிதர்களுடைய கைகளும் க்ஷுரங்களாலும் பல்லங்களாலும் அர்த்தசந்திர பாணங்களாலும் அறுக்கப்பட்டுப் பூமியில் விழுந்தன. மனிதர்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் ரதிகர்களாலும் கொல்லப்படுகின்றவர்களும் விழுந்து வீறிடுகின்றவர்களுமான மனிதர்கள் குதிரைகள் யானைகள் தேராளிகள் இவர்களுடைய சப்தங்கள் பயங்கரமாகத் தோன்றின. வீரர்கள் யுத்தத்தில் மனிதர்களையும் யானைகளையும் ரதங்களையும் குதிரைகளையும் அடித்தார்கள். குதிரை வீரர்களால் சூரர்கள் கொல்லப்பட்டார்கள். யானைகள் துதிக்கைகள் அறுக்கப்பட்டவைகளாகவும் கொடித் துணிகளுடனும் கொடிகளுடனும் கூடியவைகளாகவும் சிதறின; மலைகள்போலக் கீழேவிழுந்தன. காலாட்களால் பாய்ந்து யானைகளும் அவ்வாறே ரதிகர்களும் கொல்லப்பட்டவர்களாகவும் கொல்லப்படுகின்றவர்களாகவும் நான்கு பக்கத்திலும் விழுந்தார்கள். விரைவுள்ளவர்களான குதிரை வீரர்கள் காலாட்களாலே நெருங்கிக் கொல்லப்பட்டார்கள்.

குதிரை வீரர்களாலே காலாட்களுடைய கூட்டங்களும் கொல்லப் பட்டு யுத்தத்தில் படுத்தன. மகாயுத்தத்தில் கொல்லப்பட்ட வீரர்களுடைய முகங்கள் கசக்கப்பட்ட தாமரைமலர்கள் போல வும், சரீரங்கள் நன்றாக வாடியிருக்கின்ற மலைகள்போலவும் இருந் தன. அரசரே! யானைகள் குதிரைகள் காலாட்கள் இவற்றின் மிக அழகிய உருவங்கள், உப்புக் கசிவினால் அழுக்கடைந்த வஸ்திரங்கள்போல மிகவும் பார்க்கத்தகாத நிலைமையை அடைந்தன.

அறுபதாவது அத்தியாயம்

(யானைப் போரும் ஸங்குல யுத்தமும்)

அரசரே! திருஷ்டத்யும்னனை யானைகளால் விரைந்து கொல் லுங்கள்' என்று உம்முடைய புத்திரனால் தூண்டப்பட்ட யானை வீரர்கள் துரோணத்துடன் பார்ஷதனை எதிர்த்துச் சென்றார்கள். பாரதரே! பிறகு, யானைப்போரில் ஸாமர்த்தியமுள்ளவர்களான எல்லாக் கீழ்நாட்டு வீரர்களும் தென்னாட்டு வீரர்களும் யானைப் போர் புரிவதில் மிகுந்த தேர்ச்சியுள்ளவர்களான அங்கர்களும் வங்கர்களும் புண்ட்ரர்களும் மாகதர்களும் தாம்ரலிப்தகர்களும் மேகலர்களும் கோஸலர்களும் மத்ரர்களும் தசார்ணர்களும் நிஷ தர்களும் கலிங்கர்களோடு சேர்ந்து மழை பொழிகின்ற மேகங் கள் போல யுத்தத்தில் பாஞ்சால சேனையின்மீது அம்புகளையும் தோமரங்களையும் நாராசங்களையும் வருஷித்தார்கள். திருஷ்ட த்யும்னன், எதிர்த்துவருகின்றவைகளும் மதத்தினுடைய வேகத்தினால் மிக்க கொழுப்புள்ளவைகளுமான அந்த யானை களின்மீது விபாடங்களையும் க்ஷுரங்களையும் நாராசங்களையும் வர்ஷித்தான். பார்ஷதன் பர்வதங்களுக்கொப்பான யானைகளில் ஒவ்வொன்றையும் பத்துப் பத்துப் பாணங்களாலும் ஆறுஆறு பாணங்களாலும் எட்டெட்டுப் பாணங்களாலும் விரைவாக அடித் தான். மேகங்களால் சூரியன் மூடப்படுவதுபோல யானைகளால் நன்கு மூடப்படுகின்ற அந்தத் திருஷ்டத்யும்னனைப் பாண்டவர் களும் பாஞ்சாலர்களும் ஸிம்மநாதஞ் செய்துகொண்டு விற்களைக் கையில் கொண்டவர்களாக நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டார்கள். வீரர்களான நகுலனும் ஸஹதேவனும் திரௌ பதீகுமாரர்களும் ப்ரபத்ரகர்களும் ஸாத்யகியும் சிகண்டியும் வீரியமுள்ள சேகிதானனும், நானும் கையுறையும் ஒலிக்கச் சூரர்களுக்குரிய தாளங்களுடன் வீர நர்த்தனஞ்செய்துகொண்டு மேகங்கள் மலைகளின்மீது ஜலத்தைப் பொழிவதுபோல, அந்த

யானைகளின்மீது (பாணங்களை) நாற்புறங்களிலும் பொழிந்தனர். மிலேச்சர்களாலே தூண்டப்பட்டு மிக்க கோபங்கொண்ட அந்த யானைகள் மனிதர்களையும் குதிரைகளையும் ரதங்களையும் துதிக்கை கொம்புகளால் பிடித்து இழுத்துத்தள்ளிக் கால்களால் துகைத்தன; நுனிகளாலே பிளந்து தூக்கி எறிந்தன. கொம்புகளில் சிக்கிக்கொண்டிருக்கின்ற மற்றவை மிக்க பயங்கரமாகக் கீழே விழுந்தன. எதிரில் நிற்கின்ற அங்கனுடைய யானையை ஸாத்யகி உக்கிரவேகத்துடன் கூடின நாராசத்தினால் பிளந்து மர்மஸ்தானங்களில் அடித்தான். அவன், யானையினின்று மேலே எழும்பித் தாவப்போகின்றவனும் எதிரியினுடைய ஆயுதப் பிரயோகங்களை வஞ்சிப்பதினால் காப்பாற்றப்பட்டிருக்கிற சரீரமுள்ளவனுமான அந்த அங்கனுடைய மார்பை நாராசத்தால் அடித்தான். அவன் (=அங்கன்) பூமியில் விழுந்தான். எதிர்த்து வருகின்றபுண்ட்ரனுடையநடக்கின்ற பர்வதம்போன்ற யானையை ஸஹதேவன் கூர்மையான முனையுள்ள மூன்று அம்புகளால் அடித்தான். அவன், அந்த யானையைக் கொடியை இழந்ததாகவும் பாகனை இழந்ததாகவும் கவசத்தையும் துவஜத்தையும் உயிரையும் இழந்ததாகவும் செய்துவிட்டு, மறுபடியும் அங்கனை எதிர்த்தான். ஸஹதேவனைத் தடுத்து நகுலன் யமதண்டம் போலப் பிரகாசிக்கின்ற மூன்று நாராசங்களால் அங்கனையும் நூறு அம்புகளால் அந்த யானையையும் அடித்தான். அங்கன் நகுலன் மீது சூரிய கிரணம்போன்ற நூற்றெட்டுத் தோமரங்களைப் பிரயோகித்தான். அந்த நகுலன் ஒவ்வொன்றையும் மும்மூன்றாகத் துண்டாக்கினான். பாண்டு குமாரனான அவன் அவ்வாறே அர்த்தசந்திர பாணத்தினால் அவனுடைய தலையை அறுத்தான். அந்த மிலேச்சன் கொல்லப்பட்டு அந்த யானையுடனே விழுந்தான். பிறகு, யானையைப்பழக்குவதில் ஸமர்த்தனான அங்க புத்திரன் கொல்லப்படவே, அங்கதேசத்து மஹாமாத்திரர்கள் கோபங்கொண்டு நகுலனை அடிக்க விரும்பி விரைபவர்களாகி அசைகின்ற கொடிகளையுடையவைகளும் அழகிய முகங்களை யுடையவைகளும் ஸ்வர்ணமயமான முதுகில் கட்டியிருக்கிற தோல் கவசங்கள் இவைகளையுடையவைகளும் நன்கு விளங்குகின்ற மலைகள் போன்றவைகளுமான யானைகளோடு நகுலனை எதிர்த்தார்கள். மேகலர்களும் உத்கலர்களும் கலிங்கர்களும் நிஷதர்களும் தாம்ரலிப்தகர்களும் (நகுலனைக்) கொல்லக் கருதி அம்பு மழைகளையும் தோமர மழைகளையும் பொழிந்தார்கள். மேகங்களால் மூடப்படுகின்ற சந்திரனைப்போல அந்த வீரர்களால் மூடப்படுகின்ற நகுலனைப் பாண்டவர்களும் பாஞ்சாலர்

களும் ஸாத்யகர்களும் மிக்க பரபரப்புள்ளவர்களாக நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டனர். பிறகு, அம்பு மழைகளையும் ஆயிரமாயிரமாகத் தோமரங்களையும் பிரயோகிக்கின்ற ரதிகர்களுக்கு யானைகளோடு அவ்விதமான யுத்தம் நேர்ந்தது. அந்த வீரர்களால் பொன்னலங்காரமுள்ள நாராசங்களால் நன்றாக அடிக்கப்பட்ட யானைகளுடைய மத்தகங்கள் வெடித்தன; மர்மஸ்தானங்கள் வெடித்தன; நகங்கள் சிதறின; பற்கள் உடைந்தன. ஸஹதேவன் நல்ல முனையுள்ள அறுபத்துநான்கு நாராசங்களால் அந்த யானைகளுள் எட்டுப் பெரிய யானைகளைப் பாகர்களோடுகூடவே கீழே தள்ளினான். குலத்தை ஆனந்தப்படுத்துகின்றவனான நகுலன் சிறந்த யுத்தகதிகளுடன் முயற்சியினால் உத்தமமான வில்லை வளைத்து நாராசங்களால் யானைகளை அடித்தான். பிறகு, திருஷ்டத்யும்னனும் ஸாத்யகியும் திரௌபதீ புத்திரர்களும் பிரபத்ரகர்களும் சிகண்டியும் சரமாரிகளால் பெரிய யானைகளை நனைத்தார்கள். பாண்டவ சேனையிலுள்ள யுத்த வீரர்களாகிற மேகங்களால் பாணங்களாகிற மழைகளால் அடிக்கப்பட்ட சத்துருக்களுடைய யானைகளாகிற மலைகள் வஜ்ர வருஷங்களால் மலைகள் விழுவதுபோல் விழுந்தன. பாண்டவர்களுடைய அந்த ரதிகச்ரேஷ்டர்கள், இவ்வாறாக உம்முடைய யானைகளைக் கொன்று, கரையை உடைத்துக்கொண்டு பெருகுகின்ற நதியைப்போன்ற சேனையின்மீது விரைவாக அம்புகளைப் பொழிந்தார்கள். பாண்டுபுத்திரனுடைய ஸைனிகர்கள் உம்முடைய அந்தச் சேனையைக் கலக்கிக் கொந்தளிக்கும்படி செய்து மறுபடியும் கர்ணனை எதிர்த்துச் சென்றார்கள்.

அறுபத்தோராவது அத்தியாயம்

(கௌரவர்கள் யுதிஷ்டிரரைப் பிடிக்க முயல்வதை மாதவர் அர்ஜுனனுக்குக் கூறியது.)

பெரிதும் ரத்தவெள்ளத்துடன் கூடியதுமான யுத்தமானது அந்த வீரர்களுக்குள் நடக்கும்போது, பலவாறு ரத்தத்தினால் நனைக்கப்பட்ட பூமியானது மிகவும் விளங்கியது. பிறகு, புழுதி அடங்கவே, நான்கு பக்கத்திலும் பிரகாசமுண்டாயிற்று. இந்தச் சமயத்தில், வாஸுதேவர், குந்தி புத்திரரும் தர்மராஜருமான யுதிஷ்டிரரைக் காண்பித்து, அர்ஜுனனைப் பார்த்து வசனிக்கலானார்.

'பாண்டவ! இதோ உன்னுடைய பிதாவான யுதிஷ்டிரர் மஹாபலசாலிகளும் கொல்லக் கருதினவர்களும் பெரிய வில்லைக் கையிற் பிடித்தவர்களுமான தார்த்தராஷ்டிரர்களாலே சீக்கிரமாகப் பின்தொடரப்படுகிறார். பாரத! பாஞ்சாலர்களும் சைத்தியர்களும் மாத்ஸ்யர்களும் மஹாத்மாவான யுதிஷ்டிரரைப் பாதுகாக்க எண்ணி அதிக வேகமுள்ளவர்களாக அவரைக் கூடவே தொடர்கின்றார்கள். பார்த்த! உலக முழுமைக்கும் அரசனும் பலசாலியும் கவசம்பூண்டவனுமான இந்தத் துரியோதனன், புருஷஶ்ரேஷ்டரான தர்மபுத்திரரைக் கொல்லக் கருதி ஸர்ப்பங்கள் போலத் தீண்டுகின்றவர்களும் எல்லா ஆயுதங்களிலும் சமர்த்தர்களும் ஸிம்மநாதங்களை வெளியிடுகின்றவர்களும் சங்கங்களை முழக்குகின்றவர்களும் சிறந்த பலமுள்ளவர்களும் பெரிய வில்லை உடையவர்களும் விற்களை உதறுகின்றவர்களுமான பிராதாக்களோடுகூடி யானைப்படையுடன் யுதிஷ்டிர ராஜரைப் பின்தொடருகிறான். துரியோதனனைச் சேர்ந்த இந்த யானைகளும் குதிரைகளும் ரதங்களும் காலாட்களும், யாசகர்கள் உத்தமமான இரத்தினத்தை விரும்புவதுபோல யுதிஷ்டிரரைப் பிடிக்க விரும்பிச் செல்லுகின்றார்கள். அமிர்தத்தைக் கவரக் கருதிய அஸுரர்கள் யுத்தத்தில் இந்திரனாலும் அக்னியினாலும் தடுக்கப்பட்டதுபோல ஸாத்யகியினாலும் பீமனாலும் தடுக்கப்பட்டு (இந்த ஸைனிகர்கள்) மீண்டும் நின்றுவிட்டார்கள்; பார். கார்காலத்தில் நீர்ப் பெருக்குக்கள் சமுத்திரத்தை யடைவதுபோல, இந்த மகாரதர்கள் அனேகர்களாயிருப்பதினால் மறுபடியும் தர்மபுத்திரரைக் குறித்துச் செல்லுகின்றார்கள். துரியோதனனுடைய வசத்தை அடைந்திருக்கின்ற குந்திபுத்திரரான யுதிஷ்டிரரை மிருத்யுவின் வாயை அடைந்தவரென்றும் அக்னியில் ஹோமம் பண்ணப்பட்டவரென்றும் எண்ணுகிறேன். பாண்டவ! தார்த்தராஷ்டிரருடைய சேனையானது தக்கபடி எதிர்த்திருப்பதால், இந்தச் சேனையினுடைய பாணங்களுக்கு இலக்கானால் இந்திரனும் விடுபடமாட்டான். வீரனும் பாணசமூகங்களைச் சீக்கிரமாகப் பிரயோகிக்கின்றவனும் மிக்க கோபங்கொண்ட யமன் போன்றவனுமான துரியோதனனுடைய வேகத்தை யுத்தத்தில் எவன் சகிப்பான்? கர்ஜிக்கின்ற வீரனான அந்தத் துரியோதனன் துரோண புத்திரர் கிருபர் கர்ணன் இவர்களுடைய பாண வேகமானது மலைகளையும் சிதறும்படி செய்யும். யுதிஷ்டிர ராஜர் இப்பொழுது கர்ணனால் தோற்கச்செய்யப்பட்டவராகக் காணப்படுகிறார். சிறந்த பலமுள்ளவனும் ஹஸ்தலாகவமுள்ளவனும் சமர்த்தனும் யுத்தத்தில் சாமர்த்தியமுடையவனுமான கர்ணன்

சூரர்களும் மகாபலசாலிகளுமான திருதராஷ்டிரபுத்திரர்களோடு சேர்ந்து யுத்தத்தில் பாண்டவஸ்ரேஷ்டரைப் பீடிக்கக்கூடிய வனுயிருக்கிறுன். போர் புரிகின்றவரும் யுத்தத்தில் புகழ்பட்ட பலத்துடன் கூடியவருமான அந்தப் பார்த்தருக்கு இந்தத் துரியோதனன் முதலானவர்களாலும் மற்றவர்களாலும் தோல்வி உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. பரதஸ்ரேஷ்டரும் பிரபுவுமான தர்மராஜர் உபவாசத்திஞல் மிகவும் இளைத்திருக் கிருர்; பிராம்மணருக்குரிய பொறுமையில் நிலைபெற்றிருக்கிருர்; க்ஷத்திரியருக்குரிய கொடுமையில் நிலைபெற்றிருக்கவில்லை. சத்துருக்களைத் தபிக்கச்செய்கின்றவரும் பாண்டு புத்திரருமான இந்த யுதிஷ்டிர ராஜர் கர்ணனுல் எதிர்க்கப்பட்டுப் பிராண ஸம்சயத்தை அடைந்துவிட்டார். பார்த்த! கோபமுள்ளவனும் பகைவர்களை அடக்குந் திறமையுள்ளவனுமான பீமசேனன் அடிக்கடி கர்ஜிக்கின்றவர்களும் மஹாசங்கங்களை ஊதுகின்றவர்களும் யுத்தத்தில் ஜயத்திஞல் பிரகாசிக்கின்றவர்களுமான தார்த்தராஷ்டிரருடைய ஸிம்மநாதத்தைப் பொறுத்துக்கொண்டிருத்தலால், மகாராஜரான யுதிஷ்டிரர் பிழைக்கமாட்டாரென்று எண்ணுகிறேன். பரதர்களுள் சிறந்தவனே! இந்தக் கர்ணன், 'பாண்டு புத்திரனுன யுதிஷ்டிரனைக் கொல்லுங்கள்' என்று மகாபலசாலிகளான தார்த்தராஷ்டிரர்களை ஏவுகிறுன். பார்த்த! மகாரதர்கள் யுதிஷ்டிர ராஜரை ஸ்தூணுகர்ணனென்கிற கந்தர்வனைத் தேவதையாகக்கொண்ட அஸ்திர சமூகத்திஞலும் பாசுபதாஸ்திரத்திஞலும் நன்கு மூடுகின்றுர்கள்; தொடர்ந்தும் செல்லுகின்றுர்கள்.

அறுபத்திரண்டாவது அத்தியாயம்

(மாதவர் யுதிஷ்டிரருக்கு நேர்ந்த அவமானத்தை அர்ஜுனனுக்குக் கூறி, கர்ணனது போரையும் பீமனது போரையும் காட்டியது.)

பாரத! விரையவேண்டும்போது விரைபவர்களும் பலசாலிகளும் எல்லாச் சஸ்திரதாரிகளுள்ளுஞ் சிறந்தவர்களுமான பாஞ்சாலர்கள், பாண்டவர்களோடு பாதாளத்தில் அமிழ்கின்றவர் போல் இருக்கின்ற யுதிஷ்டிரரைக் கரையேற்றிவிட எண்ணி இந்த யுதிஷ்டிரரைப் பின்தொடர்தலால் இவர் மிக்க துன்ப முற்றிருக்கிருரென்றும் தாங்கக்கூடாத கெட்ட நிலைமையை அடைந்திருக்கிருரென்றும் நான் எண்ணுகிறேன். பார்த்த! பிரபுவே! நகுல ஸஹதேவர்களும் ஸாத்யகியும் சிகண்டியும் திருஷ்டத்யும்னனும் பீமஸேனனும் சதானீகனும் பாஞ்சாலர்

களும் எல்லாச் சைத்தியர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே யுதிஷ்டிரராஜருடைய கொடியானது கர்ணனுடைய பாணங்களால் மூடப்பட்டுக் காணப்படவில்லை. பாரத! பார்த்த! இந்தக் கர்ணன், தாமரை ஓடையை ஒரு யானையானது நாசஞ் செய்வதுபோல யுத்தத்தில் பாண்டவர்களுடைய சேனையை அம்புகளால் நாசஞ் செய்துவிட்டான். பாண்டுநந்தன! இதோ உன்னைச் சேர்ந்த ரதிகர்கள் ஓடுகிறார்கள். பார்த்த! இந்த மகாரதர்கள் ஓடும் விதத்தைப் பார்; பார். பாரத! இந்த யானைகள் கர்ணனால் பாணங்களால் அடிக்கப்பட்டுத் துன்பத்தைத் தெரிவிக்கும் ஒலிகளை வெளியிட்டுக்கொண்டு பத்துத் திசைகளிலும் ஓடுகின்றன. பார்த்த! அளவு கடந்த வல்லமையுள்ள கர்ணனாலே யுத்தத்தில் ஓட்டப்படுகின்ற ரதிகர்களுடைய கூட்டமானது இதோ நான்கு பக்கத்திலும் ஓடுகின்றது. சிறந்த கொடியுடையவர்களுள் சிறந்தவனே! ரணகளத்தில் ஆங்காங்கு சஞ்சரித்துக்கொண்டிருக்கின்ற கர்ணனுடைய தேரிலுள்ள யானைக்கச்சை வடிவமான கொடியைப் பார். இந்த ராதேயன் நூற்றுக்கணக்காக அம்புகளை இறைத்துக்கொண்டும், உன்னுடைய சேனையை நாசஞ் செய்துகொண்டும் பீமஸேனனுடைய ரதத்தை நோக்கி விரைவாகச் செல்லுகிறான். வீரனான கர்ணனால் துரத்தப்படுகின்ற பாஞ்சாலர்கள் மகாத்மாவான இந்திரனாலே துரத்தப்படுகின்ற அசுரர்கள்போல இதோ ஓடுகின்றார்கள். இதோ கர்ணன் யுத்தத்தில் பாஞ்சாலர்களையும் பாண்டவர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் ஜயித்து உன் நிமித்தமாக எல்லாத் திக்குக்களையும் பார்க்கிறானென்பது என்னுடைய எண்ணம். சிறந்த வில்லை உதறிக்கொண்டிருக்கின்ற இந்தக் கர்ணன் சத்துருவை ஜயித்துத் தேவர்களுடைய கூட்டங்களால் சூழப்பட்ட இந்திரன்போல் அதிகமாகப் பிரகாசிக்கிறான். இதோ கௌரவர்கள் யுத்தத்தில் பாண்டவர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் நான்கு பக்கத்திலும் பயமுறுத்துகின்றவர்களாகிக் கர்ணனுடைய பராக்கிரமத்தைக் கண்டு கர்ஜிக்கின்றார்கள். (பகைவர்களுடைய) கௌரவத்தை அழிப்பவனே! இதோ ராதேயன் மகாயுத்தத்தில் பாண்டவர்களை எல்லா விதத்தினாலும் பயமுறுத்தி எல்லாப் போர்வீரர்களையும் பார்த்து, 'கௌரவர்களே! எதிர்த்தோடுங்கள். உங்களுக்கு மங்களம். விரைவாக ஓடுங்கள். யுத்தத்தில் ஸ்ருஞ்சயன் ஒருவனாவது உயிரோடு விடுபடாதபடி செய்யுங்கள். நாங்களும் முயற்சியுள்ளவர்களாகப் பின்புறத்தில் வருகிறோம்' என்று சொல்லுகிறான். இந்தக் கர்ணன் இவ்வாறு சொல்லிவிட்டுப் பாணங்களை இறைத்துக்கொண்டு பின்புறத்.

தில் சென்றுவிட்டான். பார்த்த! சந்திரனால் பிரகாசிக்கின்ற உதயபர்வதம்போல் யுத்தத்தில் வெள்ளைக் குடையோடு விளங்குகின்ற கர்ணனைப் பார். பாரத! தனஞ்சய! இதோ கர்ணன் யுத்தத்தில் தூக்கிப்பிடிக்கப்படுகின்றதும் காந்தியுள்ள நூறு கம்பிகளுள்ளதும் பூர்ண சந்திரன் போன்றதுமான முடியின்மீதுள்ள குடையோடுகூடியவனாகி உன்னைக் கடைக்கண்ணால் பார்க்கிறான். யுத்தத்தில் சிறந்த முயற்சியைக் கைக்கொண்டு (உன்னை) நிச்சயமாக எதிர்க்கப்போகிறான். மிக்க தோள்வலியுள்ளவனே! மஹா யுத்தத்தில் பெரிய வில்லை நடுங்கச்செய்கின்றவனும் அரவங்கள்போன்ற அம்புகளை எய்பவனுமான இந்தக் கர்ணனைப் பார். பகைவர்களை வாட்டுகின்றவனே! பார்த்த! இதோ ராதேயன் உன்னுடைய வானரக் கொடியைக் கண்டு உன்னோடு யுத்தத்தை விரும்பித் திரும்பிவிட்டான். இந்தக் கர்ணன் விட்டிற்பூச்சி நெருப்பை எதிர்ப்பதுபோலத் தன் நாசத்திற்காக உன்னை வந்து எதிர்க்கிறான். பரதர்களுள் சிறந்தவனே! திருதராஷ்டிர புத்திரனான துரியோதனன், தர்மாத்மாவான யுதிஷ்டிரருக்குத் தீங்கிழைத்தவனும் யுத்தரங்கத்தில் ஏகாங்கியாயிருப்பவனும் ராதாபுத்திரனுமான கர்ணனையும், கர்ணனைக் குறித்து மிக்க பரபரப்புள்ள மகாரதனான உன்னையும், காரியம் நிறைவேறினவனான தன்னையும் பார்த்துக் கோபங்கொண்டவனாகவும் தேர்ப்படையுடன் கர்ணனைக் காக்கக் கருதியவனாகவும் நல்ல முயற்சியுள்ளவனாகவும் திரும்புகிறான். கீர்த்தியையும் ராஜ்ஜியத்தையும் உத்தமமான சுகத்தையும் விரும்புகின்ற நீ துஷ்டாத்துமாவான துரியோதனனை இவர்கள் அனைவரோடும் முயற்சியினால் கொல். பார்த்த! தேவாசுர யுத்தத்தில் தேவாசுரர்கள் போலப் போர்புரியப் போகின்றவர்களும் தைரியசாலிகளும் பிரசித்திபெற்றவர்களுமான உங்களிருவருடைய யுத்தத்தில் எல்லாக் கௌரவர்களும் உன்னுடைய பராக்கிரமத்தைப் பார்க்கட்டும். பார்த்த! பரதர்களுள் சிறந்தவனே! மிக்க கோபமுள்ளவனான உன்னையும் கர்ணனையும் கண்டு கோபமுள்ளவனான அந்தத் துரியோதனன் மேலே செய்யவேண்டிய காரியத்தை அறியப்போகிறதில்லை. பரதஶ்ரேஷ்ட! குந்தீபுத்திர! தகுதியுள்ளவனான உன்னையும் தர்மாத்மாவான யுதிஷ்டிரருக்குத் தீங்கிழைத்தவனான கர்ணனையும் பார்த்து இச்சமயத்திற்கேற்றதும் அடுத்துச் செய்யவேண்டியதுமான காரியத்தைத் தெரிந்துகொண்டு செய். யுத்தத்தில் சிறந்த புத்தியைச் செலுத்தித் தேர்ப்படைகளைக் காப்பவனான கர்ணனை எதிர்த்துச் செல். ரதிகர்களுள் சிறந்தவனே! குந்தீபுத்திர! வீர!

யுத்தத்தில் பலசாலிகளும் குரூரமான தேஜஸுள்ளவர்களும் முக்கியர்களுமான வேறு ஐந்நூறு ரதிகர்களும் ஐயாயிரம் யானைகளும் பதினாயிரம் குதிரைகளும் லக்ஷம் காலாட்களும் அடங்கின இந்தப் பெரும் படையானது ஒன்றுசேர்ந்து அந்யோந்யம் பாதுகாக்கப்பட்டுத் துரோண புத்திரரை முன்னிட்டுக்கொண்டு யுத்தத்தில் உன்னை எதிர்த்து வருகின்றது. இச் சேனையைச் சீக்கிரமாக நாசஞ் செய். வலிமை பொருந்தியதும் உலகத்தில் பிரசித்திபெற்றதுமான இந்தத் தேர்ப் படையை நாசஞ்செய்து சிறந்த வில்லாளியான ஸூதபுத்திரனிடத்தில் உன் பௌருஷத்தை நீயே காட்டுவாயாக. பரதர்களுள் சிறந்தவனே! உத்தமமான வேகத்தைக் கைக்கொண்டு இவனை எதிர்த்துச் செல். இந்தக் கர்ணன் மிக்க கோபங்கொண்டவனாகப் பாஞ்சாலர்களை எதிர்த்துச் செல்லுகிறான். பகைவர்களை வாட்டுபவனே! திருஷ்டத்யும்னனுடைய ரதத்திற்கு நேராக இவனுடைய கொடியைக் காண்கிறேன். இவன் பாஞ்சாலர்களை நன்கு எதிர்க்கப் போகிறானென்று நினைக்கிறேன். பரதர்களுள் உத்தமனே! பார்த்த! உனக்குப் பிரியமான இதைச் சொல்லுகிறேன். தர்மபுத்திரரும் அரசருமான அந்த யுதிஷ்டிரர் க்ஷேமமுள்ளவராகவும் ஒளியுள்ளவராகவுமாயிருக்கிறார். பாரத! மிக்க தோள்வலியுள்ளவனான இந்த பீமன் ஸ்ருஞ்சயர்களுடைய சேனையினாலும் ஸாத்யகியினாலும் சூழப்பட்டுப் படைமுகத்தில் திரும்பிவிட்டான். குந்தீபுத்திர! பீமஸேனனாலும் மஹாத்துமாக்களான பாஞ்சாலர்களாலும் கூர்மையான அம்புகளாலே யுத்தத்தில் இந்தக் கௌரவர்கள் கொல்லப்படுகிறார்கள். துரியோதனனுடைய சேனையானது பீமஸேனனுடைய வேகத்தினால் பற்பல அம்புகளால் அடிக்கப்பட்டு யுத்தத்தினின்று புறங்காட்டி ஓடிவிட்டது. பரதச்ரேஷ்ட! பாரதசேனையானது பயிரழிந்த பூமிபோல இரங்கற்குரிய தோற்றமுள்ளதும் ரத்தத்தால் நனைக்கப்பட்டதுமாயிற்று. குந்திபுத்திர! யுத்தஞ் செய்பவர்களுக்குத் தலைவனும் சர்ப்பம்போலக் கோபங்கொண்டவனும் திரும்பியிருப்பவனுமான பீமசேனனைப் பார். அவனிடத்தினின்று பாரத சேனையானது ஓடுகின்றது. அர்ஜுன! மஞ்சள் நிறமுள்ளவைகளும் சிவப்பு நிறமுள்ளவைகளும் கறுப்பு நிறமுள்ளவைகளும் வெண்ணிறமுள்ளவைகளும் நக்ஷத்திரப் பிரதிமைகளாலும் சந்திரப் பிரதிமைகளாலும் சூரியப் பிரதிமைகளாலும் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கொடிகளும் குடைகளும் இதோ சிதறச் செய்யப்படுகின்றன. பொன்மயமாயும் வெள்ளிமயமாயும் தேஜோமயமாயும் வெவ்வேறு விதமாயுமிருக்கின்ற கொடிகள் எதிரில் தள்ளப்படுகின்றன. யானைகளும்

குதிரைகளும் அலைக்கப்படுகின்றன. இந்த ரதிகர்கள், பயந்து ஓடாத தன்மையுள்ள பாஞ்சாலர்களால் பற்பல வர்ணமுள்ள பாணங்களால் அடிக்கப்பட்டு உயிரையிழந்து தேர்களினின்று சாய்கின்றார்கள். தனஞ்சய! வேகமுள்ளவர்களான பாஞ்சாலர் கள் கௌரவ சேனையிலுள்ள வீரர்களை இழந்த யானைகளையும் குதிரை வீரர்களில்லாத குதிரைகளையும் ரதிகர்களில்லாத ரதங் களையும் நோக்கி நான்கு பக்கத்தினின்றும் விரைவாகச் செல்லு கின்றார்கள். பகைவர்களை அடக்குபவனே! புருஷஶ்ரேஷ்டர்கள் பீமஸேனனுடைய பலத்தை ஆதாரமாகக்கொண்டு உயிரில் ஆசையைவிட்டு ஒருவராலும் அவமதிக்கமுடியாத பகைவர்களு டைய படையை நன்றாக அடிக்கின்றார்கள். இதோ பாஞ்சாலர்கள் கர்ஜிக்கின்றார்கள்; சங்கங்களை ஊதுகின்றார்கள்; யுத்தத்தில் பாணங்களால் சத்துருக்களை அடித்துக்கொண்டு எதிர்த்துச் செல்லுகின்றார்கள். ஸ்வர்க்கத்தினுடைய பெருமையைப் பார். பாஞ்சாலர்கள் வல்லமையினால் தார்த்தராஷ்டிரர்களை நாசஞ் செய்துகொண்டு உத்தமர்களான ரதிகர்களிடத்தில் இதோ பிரவேசிக்கின்றார்கள். ஆயுதமில்லாதவர்களும் வீணாகாத அஸ்திரங்களை உடையவர்களுமான இந்தப் பாஞ்சாலர்கள் ஆயுதம் பிடித்திருப்பவர்களான பகைவர்களுடைய ஆயுதங் களைப் பிடுங்கி அவற்றினாலேயே இவர்களைக் கொல்லுகின்றார் கள்; கர்ஜிக்கவும் கர்ஜிக்கின்றார்கள். பகைவர்களுடைய இந்தத் தலைகளும் கைகளும் தள்ளப்படுகின்றன. ரதங்களும் யானைகளும் குதிரைகளும் கீர்த்திசாலிகளான எல்லா வீரர்களும் கீழே தள்ளப்படுகிறார்கள். நான்கு பக்கத்திலும் ஆபத்தை அடை விக்கப்பட்ட இந்தத் துரியோதனனைச் சேர்ந்த பெரும்படையா னது உயிரில் ஆசையைவிட்ட மகாவில்லாளிகளான பாஞ்சாலர் களால் நான்குபக்கத்திலும் கீழே தள்ளப்படுகின்றது. பிரபுவே! பகைவர்களை வாட்டுபவனே! சினேகிதர்களும் பராக்கிரமசாலி களும் மகாவில்லாளிகளுமான கிருபர் கர்ணன் முதலானவர்கள் பாஞ்சாலர்களைத் தடுப்பதில் [முயலுகின்றார்கள்.] சத்துருக்களைத் தபிக்கச் செய்பவனே! திருஷ்டத்யும்னனை முதன்மையாகக் கொண்ட வீரர்கள் திரும்பாதவர்களும் பயந்தவர்களும் ஆயிரம் ஆயிரமாக இருப்பவர்களும் பகைவர்களுமான அந்தத் தார்த்த ராஷ்டிரர்களைக் கொல்லுகின்றார்கள். பரதஶ்ரேஷ்டனான பீம ஸேனன் திரும்பினவுடனே, பற்பல விதமான எல்லா ரதங்களும் துரியோதனனுடைய பெரும் படையும் பெரும்பான்மையாக நிறம் மாறிய முகங்களையுடையனவாயின. பீமனாலே நாராசங்

களால் பிளக்கப்பட்ட இந்த யானைகள் இந்திரனுடைய வஜ்ராயுதத்தினால் பிளக்கப்பட்ட மலைகளினுடைய சிகரங்கள்போலக் கீழே விழுகின்றன; பார்த்த! கணுக்கள் படிந்துள்ள பீமஸேனனுடைய பாணங்களால் அடிக்கப்படுகின்ற இந்தப் பெரிய யானைகள் தம் படைகளையே நாசஞ் செய்துகொண்டு ஓடுகின்றன. பீமஸேனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் பீடிக்கப்படுகின்ற இந்தக் கௌரவர்கள் ஆயிரமாயிரமாக ரதங்களையும் யானைகளையும் குதிரைகளையுமிழந்து ஓடுகின்றார்கள். ஓடுகின்ற யானைகள் குதிரைகள் ரதங்கள் காலாட்கள் இவர்களுடைய சப்தத்தையும் கௌரவர்களைத் துரத்துகிற பீமஸேனனுடைய சப்தத்தையும் கர்ஜிக்கின்றவனும் யுத்தத்தில் ஜயத்தினால் பிரகாசிப்பவனும் பாண்டுநந்தனனுமான பீமஸேனனுடைய சிம்மநாதத்தையும் அடிக்கடி நான் தெரிந்துகொள்ளுகிறேன். இதோ நிஷாததேசாதிபதியானவன் கோபங்கொண்டு காலதண்டத்தைக் கையில் கொண்ட யமன்போலத் தோமரங்களைப் பிரயோகித்துக்கொண்டு உத்தமமான யானையோடு பீமனை எதிர்த்துவருகிறான். கர்ஜிக்கின்ற அவனுடைய இரு கைகளும் பீமஸேனனால் அறுக்கப்பட்டுவிட்டன. யானையும் வாள்போன்ற பத்து நாராசங்களால் அடிக்கப்பட்டது. அடிக்குந் திறமையுள்ளவைகளும், கறுத்த மைக்குவியல்களைப்போல் பிரகாசிப்பவைகளும், யானை வீரர்களால் வீற்றிருக்கப்பட்டவைகளும் சக்திகளாலும் தோமரங்களுடைய கூட்டங்களாலும் பீமனைப் பிடிக்கின்றவைகளுமான வேறு சில யானைகள் இதோ மறுபடியும் வருகின்றன. பார்த்த! உனக்கு மூத்த ஸகோதரனை பீமஸேனனால் யானையின்மீதிருக்கின்ற துவஜங்களுடன்கூடின நாற்பத்தொன்பது வைஜயந்திகளும் கூர்மையுள்ள தொண்ணூறு பாணங்களால் அறுக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொரு யானையும் பப்பத்து நாராசங்களால் அடிக்கப்பட்டுவிட்டது. இந்திரனுக்கு ஒப்பானவனும் பரதர்களுள் சிறந்தவனுமான பீமஸேனன் கோபங்கொண்டு யுத்தத்திற்குத் திரும்பினவுடனே தார்த்தராஷ்டிரர்களுடைய இந்தச் சப்தம் அவ்வாறாகக் கேட்கப்படவில்லை. அவ்வாறு ஒன்றுசேர்ந்திருக்கின்ற தார்த்தராஷ்டிரனுடைய மூன்று [1] அக்ஷௌஹிணி சேனைகள் புருஷஶ்ரேஷ்டனும் கோபங்கொண்டவனுமான பீமஸேனனால் தடுக்கப்பட்டுவிட்டன. துர்பலமான கண்களையுடைய மனிதர்கள் நடுப்பகலை அடைந்திருக்கின்ற சூரியனைப் பார்க்கச் சக்தியற்றவர்களாவதுபோல, அரசர்கள் பார்த்தனைப் பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களானார்கள். சிம்மத்துக்கு மற்ற மிருகங்கள்

---

[1] ஆதி பர்வம் 3-வது பக்கத்திற் காண்க.

நடுங்குவதுபோல இந்த வீரர்கள் பீமனுடைய அம்புகளால் பயமுறுத்தப்பட்டு யுத்தத்தில் ஓரிடத்திலாவது சுகத்தை அடையவில்லை. அந்த ராதேயன், பயப்படுந் தன்மையுள்ள அந்தத் துரியோதனனை விருத்தியடையும்படி செய்துகொண்டும் மஹாராஜனை அந்தத் தார்த்தராஷ்டிரனைப் பாதுகாத்துக் கொண்டும் சேனையுடன் கூடியவனாகவும் வில்லை ஏந்தியவனாகவும் வேகமுள்ளவனாகவும் அநேக வீரர்களோடு அவனருகில் செல்லுகின்றான்' என்று கூறினார்.

மிக்க புஜபலமுள்ள அர்ஜுனன் வாஸுதேவரிடத்தினின்று இந்த வார்த்தையைக் கேட்டும் பீமஸேனனால் செய்யப்பட்டதும் ஒருவராலும் செய்ய முடியாததுமான அச் செய்கையைக் கண்டும் மிகுந்திருக்கின்ற அநேக ஸம்சப்தகர்களுடைய கூட்டங்களை நாசஞ்செய்தான். "பிரபுவே! பார்த்தனால் கொல்லப்படுகின்ற அந்த ஸம்சப்தகர்களுடைய கூட்டங்கள் அப்பொழுது இந்திரனுக்கு அதிதியாயிருக்கும் நிலைமையை அடைந்து சோகமுற்றவைகளாயின. பாண்டுநந்தனன் உத்தமமான வேகத்தைக் கைப்பற்றிப் பெருங் காற்றானது மேகங்களை அழிப்பதுபோல நாராயணர்களையும் கோபாலர்களையும் நாசஞ் செய்தான். பாரதரே! பயந்தவர்களான அந்த வீரர்கள் அந்தந்த இடத்திலேயே சிதற அடிக்கப்பட்டார்கள். பிறகு, புருஷோத்தமனான அர்ஜுனன் வாட்டப்பட்டிருக்கிற அந்த வீரர்களைக் கொன்றான். புருஷச்ரேஷ்டனான அவன் துரியோதனனுடைய சதுரங்க சேனையுடன் கூடின படையைக் கணுக்கள் படிந்துள்ள அம்புகளால் மறுபடியும் கொன்றான்" என்று கூறினான்.

அறுபத்துமூன்றாவது அத்தியாயம்

(துவந்துவ யுத்தத்துக்காக அரசர்கள் எதிர்த்ததும், கர்ணன் சிகண்டியை வென்றதும், திருஷ்டத்யும்னனுக்கும் துச்சாஸனனுக்கும் யுத்தமும்)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! பீமஸேனனும் பாண்டவனான யுதிஷ்டிரனும் திரும்பிப் பாண்டவர்களாலும் ஸ்ருஞ்சயர்களாலும் என்னுடைய சேனையும் கொல்லப்பட்டுச் சேனைக் கூட்டமும் அலறிக்கொண்டு அடிக்கடி ஓடினதால் என்னுடைய சேனைகளில் மிகுந்திருப்பவனை நான் காணவில்லை. அந்தோ! கஷ்டமான நிலைமையை நான் அடைந்துவிட்டேன். நான் ஜீவிப்பதற்குச் சக்தியற்றவனாகிவிட்டேன். ஸூத! பின்வாங்காதவர்களான என் புத்திரர்களுக்கு ஜயத்தை விரும்பின் நான் என்னு

டைய வீரர்கள் கொல்லப்பட்டதைக் கேட்டு எவ்வாறு ஜீவித்திருப்பேன்? இப்பொழுது அநேகவிதமான வார்த்தையைச் சொல்வதினால் யாது பயன்? அவர்களுக்கு அதிர்ஷ்டமானது முக்கியமாயிருக்கின்றது. ஸஞ்சய! என்னைச் சேர்ந்தவர்கள் என்ன செய்தார்கள்? அதனை எனக்குச் சொல்வாயாக'' என்று வினவ, ஸஞ்சயன் சொல்லத் தொடங்கினான்.

"அரசரே! மிக்க புஜபலமுள்ளவனான பீமனைக் கண்டு சிறந்த பிரதாபமுள்ளவனான உம்முடைய குமாரன் கோபத்தினால் சிவந்த கண்களுடன் பீமஸேனனை எதிர்த்துச் சென்றான். 'குந்தீ புத்திர! நில்; நில்; என் பராக்கிரமத்தைப் பார். இப்பொழுது உன்னை யமனுடைய வீட்டுக்கு அனுப்பப்போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு பீமஸேனனிருக்கிற அந்தவிடத்திற்குச் சென்றான். பலசாலியான கர்ணன் பீமசேனனிடத்தினின்று திரும்புகின்ற உம்முடைய சேனையைக் கண்டு அதிக முயற்சியோடு அதனை நிலைபெறும்படி செய்தான். நீண்ட கைகளையுடையவனான கர்ணன் உமது புத்திரனுடைய சேனையை நிலை நிறுத்தி, யுத்தத்தில் கெட்டமதங்கொண்ட பாண்டவர்களை அப்பொழுது எதிர்த்துச் சென்றான். பாண்டவர்களைச் சேர்ந்த மகாரதர்கள் யுத்தத்தில் விற்களை அசைத்துக்கொண்டும் பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டும் ராதேயனை எதிர்த்தார்கள். யுத்தத்தில் ஜயத்தினால் விளங்குகின்றவர்களான பீமஸேனனும் ஸாத்யகியும் சிகண்டியும் ஜனமேஜயனும் சிறந்த பலமுடையவனான திருஷ்டத்யும்னனும் எல்லா பிரபத்திரகர்களும் புருஷச்ரேஷ்டர்களான பாஞ்சாலர்களும் மிக்க கோபங்கொண்டவர்களாக உம்முடைய படையை நான்கு பக்கத்திலும் எதிர்த்து வந்தார்கள். அரசரே! அவ்வாறே, உம்முடைய போர் வீரர்கள் (பாண்டவ சேனையிலுள்ள) மஹாரதர்களைக் கொல்ல விரும்பி, விரைவுடன் பாண்டவர்களுடைய சேனையை எதிர்த்துச் சென்றார்கள். ஆண்மையிற் சிறந்தவரே! ரதங்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் வியாபிக்கப்பட்டும் காலாட்களாலும் துவஜங்களாலும் நிறைக்கப்பட்டுமிருக்கின்ற சேனையானது ஆச்சரியகரமான காட்சியுள்ளதாயிற்று. மஹாராஜரே! சிகண்டி கர்ணனை எதிர்த்தான். திருஷ்டத்யும்னன் பெருஞ்சேனையுடன் உம்முடைய புத்திரனான துரியோதனனையும் துச்சாஸனனையும் எதிர்த்தான். நகுலன் விருஷஸேனனை எதிர்த்தான். யுதிஷ்டிரர் சித்திரஸேனனை எதிர்த்தார். மன்னரே! சகதேவன் யுத்தத்தில் உலூகனை எதிர்த்தான். ஸாத்யகி சகுனியையும் திரௌபதி புத்திரர்கள் கௌரவர்களையும் எதிர்த்தார்கள். யுத்

த்தில் முயற்சியுள்ளவரும் மகாரதருமான துரோணபுத்திரர் அர்ஜுனனை எதிர்த்தார். இருபர் மகாவில்லாளியான யுதாமன்யுவை யுத்தத்தில் எதிர்த்தார். பலசாலியான கிருதவர்மா உத்தமௌஜஸை எதிர்த்தான். ஐயா! மிக்க தோள்வலியமைந்த பீமசேனன் குருகுலத்திலுதித்தவர்களும் சேனையுடன் கூடியவர்களுமான உம்முடைய புத்திரர்களனைவர்களையும் ஒருவனாகவே எதிர்த்தான். மஹாராஜரே! பிறகு, பீஷ்மரைக் கொன்றவனான சிகண்டி பயமற்றவன்போல சஞ்சரிக்கின்ற கர்ணனைப் பாணங்களால் தடுத்தான். பிறகு, தடுக்கப்பட்ட கர்ணன், கோபத்தினால் உதடுகள் மிகத் துடிக்க, சிகண்டியை மூன்று பாணங்களால் இரண்டு புருவங்களுடைய மத்தியிலுமடித்தான். அந்தப்பாணங்களைத் தரித்துக்கொண்டிருக்கின்ற அந்தச் சிகண்டி மூன்று சிகரங்களோடு கூடின வெள்ளிமலைபோல மிக விளங்கினான். ஸூதபுத்திரனால் யுத்தத்தில் நன்றாயடிக்கப்பட்ட சிறந்தவில்லாளியான அந்தச் சிகண்டி யுத்தத்தில் கூர்மையுள்ள தொண்ணூறு பாணங்களால் கர்ணனை அடித்தான். மகாரதனான கர்ணன், மூன்று பாணங்களால் அந்தச் சிகண்டியினுடைய குதிரைகளையும் ஸாரதியையும் கொன்று ஒரு க்ஷுரப்ரத்தினால் அவனுடைய கொடியையும் நாசஞ்செய்தான். பிறகு, பகைவர்களை வாட்டுபவனும் மகாரதனுமான சிகண்டி மிகுந்த கோபங்கொண்டு குதிரைகள் கொல்லப்பட்ட அந்த ரதத்தினின்று துள்ளிக்குதித்துக் கர்ணன்மீது ஒரு சக்தியைப் பிரயோகித்தான். பாரதரே! கர்ணன் யுத்தத்தில் அந்தச் சக்தியை மூன்று பாணங்களால் துண்டாக்கிப் பிறகு கூர்மையுள்ள ஒன்பது பாணங்களால் சிகண்டியை அடித்தான். புருஷச்ரேஷ்டனான சிகண்டி மிகவும் காயப்படுத்தப்பட்டுக் கர்ணனுடைய வில்லினின்று வெளிப்பட்டுவருகின்ற பாணங்களைத் தன்மீது தாக்கமலிருக்கும்படி செய்துகொண்டு அந்த யுத்தரங்கத்தினின்று விரைவாக ஓடினான். மஹாராஜரே! பிறகு, கர்ணன், அதிகப் பலமுள்ள காற்றானது பஞ்சுக் குவியலை அடைந்து அழிப்பதுபோலப் பாண்டவர்களுடைய படை வீரர்களை நாசஞ்செய்தான். மஹாராஜரே! உம்முடைய புத்திரனாலே பீடிக்கப்பட்ட திருஷ்டத்யும்னன் துச்சாஸனனை மூன்று பாணங்களால் நடுமார்பில் திருப்பி அடித்தான். பெரியவரே! துச்சாஸனன் பொன்மயமான புங்கமுள்ளதும் உட்படிந்த கணுக்களுள்ளதுமான அந்தப் பல்லத்தினாலே திருஷ்டத்யும்னனுடைய இடக்கையை அடித்தான். பாரதரே! ரோஷமுள்ளவனான திருஷ்டத்யும்னனோ அடிக்கப்பட்டு மிக்க கோபமுண்டு துச்சாஸனனைக் குறித்துக் கொடிய ஓர்

அம்பைப் பிரயோகித்தான். அரசரே! திருஷ்டத்யும்னனால் விடப்பட்டுவருகின்ற மகாவேகமுள்ள அந்த அம்பை உம்முடைய புத்திரன் மூன்று பாணங்களால் துண்டாக்கினான். பிறகு, ஸ்வர்ணாலங்காரங்களுடன் கூடின வேறு பதினாறு பல்லங்களாலே திருஷ்டத்யும்னனை எதிர்த்து இருகைகளிலும் மார்பிலும் அடித்தான். ஐயா! பிறகு, அந்தப் பார்ஷதன் கோபங்கொண்டவனாகி மிக்க கூர்மையுள்ள ஒரு க்ஷுரப்ரத்தினால் வில்லை வெட்டி எறிந்தான். பிறகு, ஜனங்கள் பெருங்கூச்சலிட்டார்கள். பிறகு உம்முடைய புத்திரன், அட்டஹாஸஞ் செய்து, வேறொரு வில்லை எடுத்து, திருஷ்டத்யும்னனைப் பாண ஸமூகங்களால் நான்கு பக்கத்திலும் தடுத்தான். மிக்க பலசாலியான உம்முடைய புத்திரனுடைய பராக்கிரமத்தைக் கண்டு யுத்தத்தில் யுத்த வீரர்களும் ஸித்தர்களும் அவ்வாறே அப்ஸரஸுகளும் ஆச்சரியம் அடைந்தார்கள். போர் புரிகின்றவனும் மகாபலசாலியும் துச்சாஸனனால் தடுக்கப்பட்டவனுமான திருஷ்டத்யும்னனைச் சிங்கத்தினால் தடுக்கப்பட்ட பெரிய யானையைப்போலக் கண்டோம்.

அறுபத்துநான்காவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

பிறகு, தேர்களையும் யானைகளையும் குதிரைகளையுமுடையவர்களான பாஞ்சாலர்களும் பாண்டவர்களும் ஸ்ருஞ்சயர்களும் சேனாபதியான திருஷ்டத்யும்னனைப் பாதுகாக்க எண்ணி உம்முடைய புத்திரனைத் தடுத்தார்கள். பகைவர்களை வாட்டுபவரே! பிறகு, அக்காலத்தில், உம்மைச் சேர்ந்த வீரர்களுக்குக் கோரமும் மிக்க பயங்கரமுமான யுத்தமானது பகைவர்களோடு நடக்கத் தொடங்கியது. நகுலன், பிதாவினுடைய பக்கத்தில் நிற்கின்ற விருஷஸேனனை ஐந்து பாணங்களால் அடித்து வேறு மூன்று பாணங்களாலும் அடித்தான். பிறகு, சூரனான விருஷஸேனன் சிரிக்கின்றவன்போல் இருந்துகொண்டு மிக்க கூர்மையுள்ள நாராசத்தால் நகுலனை மார்பில் அதிகமாக அடித்தான். பகைவர்களை அழிப்பவரே! பலசாலியான பகைவனால் நன்றாக அடிக்கப்பட்ட அந்த நகுலன் சத்துருவை இருபது பாணத்தினால் அடித்து, அவனுடைய சாரதியையும் ஏழு பாணங்களால் அடித்தான். பிறகு, புருஷஶ்ரேஷ்டர்களான அவ்விருவரும் ஆயிரம் பாணங்களால் ஒருவரையொருவர் மூடினார்கள். உம்முடைய சேனையானது நொறுக்கப்பட்டது. அரசரே! அந்த ஸூத புத்திரன் கௌரவர்களுடைய சேனை விரைவாக ஓடுவ

தைக் கண்டு பின்தொடர்ந்து பலாத்காரத்தினால் திருப்பினான். வேந்தரே! இந்தச் சமயத்தில் கஷ்டமான யுத்தமானது நடந்தது. பிறகு, சேனை திரும்பினவுடனே, நகுலன் கௌரவர்களைக் குறித்துச் சென்றான். ஐயா! கர்ணபுத்திரனே யுத்தத்தில் நகுலனை விட்டுவிட்டு விரைபவனாகி ராதேயனுடைய சேனையை ரக்ஷித்தான். பெரியவரே! யுத்தத்தில் கோபங்கொண்ட உலூகனே கோபங்கொண்ட ஸஹதேவனாலே யுத்தமுனையில் அநேக அம்புகளால் தடுக்கப்பட்டான். சிறந்த பிரதாபமுள்ளவனான ஸஹதேவன் அவனுடைய நான்கு குதிரைகளையுங் கொன்று சாரதியையும் யமனுடைய வீட்டிற்கனுப்பினான். மன்னரே! பிதாவுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுகின்ற உலூகனே, பிறகு வாகனத்தினின்று கீழே குதித்துத் திரிகர்த்தர்களுடைய படையைக் குறித்து விரைவாகச் சென்றான். ஸாத்யகி கூர்மையுள்ள இருபது பாணங்களால் சகுனியை அடித்துச் சிரித்துக்கொண்டே ஒரு பல்லத்தினால் அவனுடைய துவஜத்தை வெட்டி எறிந்தான். அரசரே! பிரதாபசாலியான சகுனி யுத்தத்தில் கோபங்கொண்டு அந்த சாத்யகியினுடைய கவசத்தைப் பிளந்து மீண்டும் பொன்மயமான துவஜத்தையும் அறுத்தான். மகாராஜரே! அவ்வாறே சாத்தியகி கூர்மையுள்ள பாணங்களால் அந்தச் சகுனியைத் திருப்பியடித்து, சாரதியையும் மூன்று பாணங்களால் அடித்தான். பிறகு, விரைபவனான சாத்யகி அந்தச் சகுனியினுடைய குதிரைகளையும் பாணங்களால் யமன் வீட்டையடைவித்தான். பரதர்களுள் சிறந்தவரே! பிறகு, சகுனி விரைவுடன் குதித்து மகாத்மாவான உலூகனுடைய ரதத்தில் விரைவாக ஏறிக்கொண்டான். அந்தச் சகுனி, பிறகு, யுத்தஞ் செய்கின்ற சாத்யகியினிடத்தினின்று விரைவாக வேறிடத்திற்குச் சென்றுவிட்டான். அரசரே! சாத்யகியோ யுத்தத்தில் உமமுடைய படையை நோக்கி வேகத்துடன் எதிர்த்துச் சென்றான். பிறகு, சேனையானது அடிக்கப்பட்டது. வேந்தரே! ஸாத்யகியினுடைய பாணங்களால் நன்றாக மூடப்பட்ட உம்முடைய சேனைகள் விரைவாகப் பத்துத் திக்குக்களையு மடைந்தன; உயிரையிழந்தவைபோல விழுந்தன. உம்முடைய குமாரனான துரியோதனன் யுத்தத்தில் பீமசேனனைத் தடுத்தான். பீமன் லோகேசுவரனான அந்தத் துரியோதனனை ஒரு முகூர்த்தத்தில் குதிரைகளையும் ஸாரதியையும் ரதத்தையும் துவஜத்தையும் இழந்தவனாகச் செய்தான். அச்சமயத்தில் அந்தச் செய்கையினால் ஜனங்கள் ஸந்தோஷமடைந்தார்கள். பிறகு, பீமஸேனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டு

அந்தத் துரியோதனராஜன் அந்த யுத்தரங்கத்தைவிட்டு விலகிச் சென்றுவிட்டான். பிறகு, கௌரவ ஸேனை முழுவதும் பீம ஸேனனுக்கருகில் விரைவாகச் சென்றது. அந்த யுத்தரங்கத்தில் பீமஸேனனைக் கொல்ல விரும்பின வீரர்களுடைய பெரிய சப்தம் உண்டாயிற்று. யுதாமன்யு கிருபரை அடித்து அவருடைய வில்லை விரைவாக வெட்டினன். சஸ்திரதாரிகளுள் உத்தமரான கிருபர், பிறகு, வேறு வில்லைக் கையிலெடுத்து யுதாமன்யுவினு டைய கொடியையும் சாரதியையும் குடையையும் பூமியில் தள்ளி ஞர். பிறகு, மஹாரதனை யுதாமன்யு ரதத்தோடேயே விலகி வேறிடத்திற்குச் சென்றுவிட்டான். உத்தமௌஜஸானவன் பயங்கரனும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனுமான கிருத வர்மாவை மேகமானது மழையினல் மலையை மூடுவதுபோல விரைவாக மூடினன். பகைவர்களை வாட்டுபவரே! மிகப் பெரிதும் கொடிதுமான அப்படிப்பட்ட யுத்தம் நடந்தது. அரசரே! அவ் விதமான யுத்தம் என்னல் முன் பார்க்கப்பட்டதில்லை. அரசரே! பிறகு கிருதவர்மா யுத்தத்தில் உத்தமௌஜஸை விரைவாக மார்பிலடித்துத் தேர் நடுவில் உட்காரும்படி செய்துவிட்டான். ரதிகர்களுள் சிறந்தவனை அந்த உத்தமௌஜஸை சாரதி யானவன் ரதத்தோடு போர்க்களத்தைவிட்டு வேறிடத்திற்குக் கொண்டுபோனன். வேந்தரே! பிறகு, கிருதவர்மா பாண்டவ ஸேனையை எதிர்த்துச் சென்றனர். துச்சாஸனனும் சகுனியும் பெரிய யானைப் படையோடு பாண்டவனைச் சூழ்ந்துகொண்டு க்ஷுத்ரகங்களென்கிற பாணங்களால் நான்கு பக்கங்களிலும் அடித்தார்கள். பிறகு, பீமன் கோபமுள்ளவனை துரியோதனனை அநேக அம்புகளால் புறங்காட்டி ஓடும்படி யடித்து வேகத்துடன் யானைப்படைக்கு அருகில் சென்றன. விருகோதரன் விரைவாக எதிரில் வருகின்ற அந்த யானைப் படையைக் கண்டவுடனே, மிக்க கோபங்கொண்டு திவ்யாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய் தான். இந்திரன் வஜ்ராயுதத்தினல் அசுரர்களை அடிப்பதுபோல யானைகளாலே யானைகளை அடித்தான். பிறகு, யுத்தத்தில் யானை களைக் கொல்லுகின்ற விருகோதரன் விட்டிற் பூச்சிகளால் மரத்தை மூடுவதுபோலப் பாண சமூகங்களால் ஆகாயத்தை மூடினன். பிறகு, பீமன் ஆயிரக்கணக்காக ஒன்றுகூடியிருக் கின்ற யானைக் கூட்டங்களைக் காற்றானது மேகக்கூட்டங்களை நாசஞ்செய்வதுபோல வேகத்துடன் நாசஞ்செய்தான். பொன்னு லாகிய விரிப்புக்களாலும் ரத்னசமூகங்களாலும் மூடப்பட்ட யானை கள் யுத்தரங்கத்தில் மின்னல்களுடன்கூடின மேகங்களைப்போல

அதிகமாக விளங்கின. மன்னரே! பீமனாலே கொல்லப்படுகின்ற அந்த யானைகள் விரைவாக ஓடின. சில யானைகள் மார்பு பிளக்கப்பட்டவைகளாகப் பூமியில் விழுந்தன. கீழே விழுந்தவைகளும் விழுகின்றவைகளும் ஸ்வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டவைகளும் சிதற அடிக்கப்பட்ட மலை போன்றவைகளுமான யானைகளால் அச்சமயத்தில் யுத்த பூமி விளங்கியது. பிரகாசிக்கின்றவர்களும் சிறந்த இரத்தினங்களை அணிந்தவர்களும் கீழே விழுந்திருக்கின்றவர்களும் புண்ணியம் குறைந்ததினால் விழுந்திருக்கின்ற கிரஹங்கள் போன்றவர்களுமான யானை வீரர்களாலே பூமி விளங்கியது. பிறகு, யுத்தத்தில் பீமஸேனனுடைய அம்புகளால் அடிக்கப்பட்டுக் கபோலமுடைந்தும் மத்தகம் பிளந்தும் அவ்வாறே துதிக்கை யறுந்துமிருக்கின்ற யானைகள் நூறுநூறாக ஓடின. பர்வதம் போன்ற சில யானைகள் ரத்தத்தைக் கக்கிக்கொண்டும் பயத்தினால் பீடிக்கப்பட்டும் அம்புகளால் அடிக்கப்பட்ட அங்கங்களோடு கூடியவைகளாகித் தாதுக்களால் பலநிறத்துடன் கூடின மலைகள் போல ஓடின. மஹா ஸர்ப்பங்களுக்கொப்பானவைகளும் சந்தனத்தினாலும் அகிற் சாந்தினாலும் பூசப்பட்டவைகளும் வில்லினின்று அம்புகளை விடுப்பவைகளுமான பீமஸேனனுடைய இரு கைகளையும் கண்டேன். அந்தப் பீமஸேனனுடைய இடிமுழக்கத்துக்கு ஒப்பான நாணொலியையும் தலத்வனியையும் கேட்டு யானைகள் பயத்தினால் மலஜலங்களைப் பெருக்கிக்கொண்டு அதிகமாக ஓடின. அரசரே! ஒருவனாயிருப்பவனும் புத்திமானுமான பீமஸேனனுடைய அந்தச் செய்கையானது (பிரளயகாலத்தில்) எல்லாப் பிராணிகளையும் ஸம்ஹரிக்கின்ற ருத்திரருடைய செய்கைபோல் விளங்கியது.

அறுபத்தைந்தாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

பிறகு, வெண்மையான குதிரைகளோடு கூடியதும் நாராயணரால் நடத்தப்படுவதுமான உத்தமமான ரதத்தில் வீற்றிருக்கின்ற அர்ஜுனன் மிகுந்த காந்தியை உடையவனானான். அரசர்களுள் சிறந்தவரே! விஜயன், அதிகமான யுத்த முயற்சியுள்ள குதிரைகளுடன் கூடின உம்முடைய அந்தச் சேனையை யுத்தத்தில் காற்று பெருங்கடலைக் கலக்குவதுபோலக் கலக்கினான். ச்வேதவாஹனன் அஜாக்கிரதையாயிருக்கும்போது உம்முடைய குமாரனான துரியோதனன் கோபமூண்டவனாகவும் பாதிச் சேனையினால் சூழப்பட்டவனாகவும் விரைவாக எதிர்த்துச் சென்று,

கோபங்கொண்டு வருகின்ற யுதிஷ்டிரரை நாற்புறத்திலும் சூழ்ந்துகொண்டான்; பிறகு, எழுபத்து மூன்று க்ஷுரப்ரங்களால் அவரை அடித்தான். குந்தி புத்திரரான யுதிஷ்டிரர் அச்சமயத்தில் அதிகக் கோபங்கொண்டார். அவர் உம்முடைய புத்திரன் மீது முப்பது பல்லங்களை விரைவாகப் பிரயோகித்தார். பிறகு, கௌரவர்கள் யுதிஷ்டிரரைப் பிடிக்க எண்ணி ஓடினார்கள். பகைவர்களுடைய கெட்ட எண்ணத்தை அறிந்து மஹாரதர்கள் ஒன்றுகூடிக் குந்தி புத்திரரான யுதிஷ்டிரரைப் பாதுகாக்க எண்ணி அவரை வந்தடைந்தார்கள். யுதிஷ்டிரர் சித்ரஸேனன் மீது சரமாரிகளைப் பொழிந்தார். சித்ரஸேனனே மிக்க கோபங்கொண்டு குந்தீ புத்திரரைத் தடுத்தான். அந்தத் தர்மராஜர் சித்ரஸேனனை ஒரு முகூர்த்தத்தில் புறங்காட்டி ஓடும்படி செய்து உம்முடைய படையை நான்கு பக்கத்திலும் கூர்மையுள்ள பாணங்களால் அடித்தார். புஜபலமுள்ளவரே! துரியோதனனை முதன்மையாகக்கொண்ட உம்மைச் சேர்ந்தவர்கள் யுதிஷ்டிரரைப் பிடிக்க எண்ணங்கொண்டு எல்லாச் சேனையையும் நன்றாக விலக்கித் தள்ளினார்கள். முன்னரே அறியப்பட்ட பிரபாவமுள்ள அந்த மஹாரதர்கள் சேர்ந்து வந்திருப்பதை அறிந்து நகுலனும் ஸஹதேவனும் பார்ஷதனும் திருஷ்டத்யும்னனும் பாண்டு புத்திரரான யுதிஷ்டிரரைப் பாதுகாக்கக் கருதி ஓர் அக்ஷௌஹிணி சேனையினால் சூழப்பட்டவர்களாக யுதிஷ்டிரருக்கு எதிரில் ஓடி வந்தார்கள். பீமஸேனனும் உம்முடைய மஹாரதர்களை நாராசங்களால் அடித்துக்கொண்டு பகைவர்களால் சூழப்பட்டிருக்கிற யுதிஷ்டிர ராஜரை மீட்க விரும்பி எதிரில் ஓடிவந்தான். சூரிய குமாரனும் தர்மவானுமான கர்ணன் வந்திருக்கின்ற அந்த எல்லா மஹாவில்லாளிகளையும் பெரிதான சரமாரியினால் தடுத்தான். அம்புத் திரள்களைத் தொடுக்கின்றவர்களும் யானைகளைத் தூண்டி நடத்துகின்றவர்களுமான அந்த வீரர்கள் சிறந்த முயற்சியுள்ளவர்களாயிருந்தும் ராதேயனைப் பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களாயிருந்தார்கள். ராதேயன் எல்லாச் சஸ்திரங்களையும் பிரயோகிப்பதில் ஸமர்த்தர்களான அந்த எல்லா மஹாவில்லாளிகளையும் பெரிய சரமாரியினால் தடுத்தான். பலசாலியும் ஸமர்த்தனுமான ஸஹதேவன் விரைவாக எதிரில் வந்து ராஜனான துரியோதனனை இருபது நாராசங்களால் அடித்தான். சேனையின் அருகில் ஸஹதேவனால் அடிக்கப்பட்ட அந்தத் துரியோதனன் இரத்தத்தினால் நான்கு பக்கத்திலும் நனைக்கப்பட்டவனாக மதப் பெருக்குள்ள யானைபோல் விளங்கினான். ரதிகர்களுள் சிறந்தவனான ராதேயன் அந்த யுத்தகளத்தில் நன்றாகத் தீட்டப்பட்ட அம்புகளால் மிக

அடிக்கப்பட்டிருக்கின்ற உம்முடைய புத்திரனைக் கண்டு மிக்க கோபங்கொண்டு அவனுக்கு எதிரில் ஓடினான். பெரியவரே! அந்தக் கர்ணன் அவ்வித நிலைமையிலிருக்கின்ற துரியோதனனைக் கண்டு சீக்கிரம் அஸ்திரத்தைப் பிரயோகித்துப் பாண்டவர்களுடைய சேனையையும் பாஞ்சாலர்களையும் கொன்றான். அரசரே! பிறகு, மஹாத்மாவான ஸூதபுத்திரனுடைய பாணங்களால் ஹிம்ஸிக்கப்பட்ட யுதிஷ்டிரருடைய படையானது விரைவாக ஓடியது. கர்ணனுடைய வில்லினின்று விடுபட்டவைகளும் குதைகளுள்ளவைகளுமான பற்பலவித பல்லங்களும் அம்புகளும் அந்த ரணகளத்தில் ஒன்றன்மீது ஒன்றாக விழுந்தன. மஹாராஜரே! ஆகாயத்தில் பாய்கின்ற பாண ஸமூகங்கள் ஒன்றோடொன்று உரைந்துகொள்வதினாலே நெருப்பு தோன்றியது. ராஜரே! பிறகு, கர்ணன் விட்டிற் பூச்சிகள்போலப் பத்துத் திசைகளிலும் செல்லுகின்றவைகளும் பகைவர்களுடைய சரீரங்களை அடைகின்றவைகளுமான அம்புகளாலே விரைவாக எதிர்த்தடித்தான். அவன் உத்தமமான அஸ்திரங்களை வெளியிட்டுக்கொண்டு செஞ்சந்தனங்களால் நன்றாகப் பூசப்பட்டவைகளும் இரத்தினங்களாலும் பொன்னணிகளாலும் அலங்கரிக்கப்பட்டவைகளுமான இரண்டு கைகளாலும் பிரயோகித்தான். மன்னரே! பிறகு, கர்ணன் எல்லாத் திக்குக்களையும் பாணங்களால் நன்றாக மயங்கச் செய்துகொண்டு தர்மராஜரான யுதிஷ்டிரரை மிகவும் பீடித்தான். மஹாராஜரே! பிறகு, தர்மபுத்திரரான யுதிஷ்டிரர் கோபங்கொண்டு கர்ணன்மீது கூர்மையுள்ள ஐம்பது பாணங்களைப் பிரயோகித்தார். அந்த யுத்தமானது பாணங்களால் உண்டு பண்ணப்பட்ட இருளுள்ளதும் கோரமான காட்சியுள்ளதுமாகியது. ராஜரே! அப்பொழுது (உம்முடைய) சேனையானது தர்மபுத்திரரால் பற்பல விதமானவைகளும் கூர்மையுள்ளவைகளும் கழுகிறகுகள் பூண்டவைகளும் சாணையில் தீட்டப்பட்டவைகளுமான அம்புகளாலும் பற்பலவிதமான அநேக பல்லங்களாலும் சக்திகளாலும் ரிஷ்டிகளாலும் இருப்புலக்கைகளாலும் கொல்லப்படும்பொழுது உம்மைச் சேர்ந்தவர்களுடைய பெரியக் கூக்குரல் உண்டாயிற்று. பரதர்களுள் சிறந்தவரே! தர்மாத்மாவான அந்த யுதிஷ்டிரர் எந்த எந்த இடத்தில் குரூரமான பார்வையைச் செலுத்தினாரோ அந்த அந்த இடத்தில் உம்மைச் சேர்ந்தவர்கள் சிதற அடிக்கப்பட்டார்கள். மிக்க கோபமுள்ள கர்ணனும் தர்மராஜரான யுதிஷ்டிரரை யுத்தத்தில் நாராசங்களினாலும் அர்த்த சந்திர பாணங்களினாலும் வத்ஸ தந்தங்களினாலும் அடித்தான்.

பொருதவனும் கோபமுள்ளவனும் கோபத்தினால் வாய் துடிக்கின்றவனும் அளவிடமுடியாத பராக்கிரமமுள்ளவனுமான கர்ணன் யுதிஷ்டிரரை அம்புகளால் அடித்துக்கொண்டு எதிர்த்துச் சென்றான். அந்த யுதிஷ்டிரரும் கர்ணனைப் பொற் புங்கமுள்ள கூர்மையான அம்புகளால் அடித்தார். கர்ணன் கழுகிறகுகளுடன் கூடியவைகளும் சாணைக் கல்லில் தீட்டப்பட்டவைகளுமான அம்புகளால் குந்தீ புத்திரரும் ராஜாவுமான யுதிஷ்டிரரை அட்டஹாஸத்துடன் மார்பில் அடித்தான். அந்தக் கர்ணனாலே மிகுதியாகத் துன்பம் செய்யப்பட்ட அந்தத் தர்மராஜரான யுதிஷ்டிரர் தேர் நடுவில் உட்கார்ந்து ஸாரதியைப் பார்த்து 'இந்த யுத்த ரங்கத்தை விட்டுச் செல்' என்று ஏவினார். பிறகு, கௌரவர்களனைவரும் துரியோதனராஜனும் ஆரவாரித்தார்கள். 'அரசனைப் பிடியுங்கள்' என்று நாற்புறத்திலுமிருந்து எதிரில் ஓடிவந்தார்கள். அரசரே! பிறகு, பகைவர்களை அடிக்கும் தன்மையுள்ளவர்களான ஆயிரத்தெழுநூறு கேகயர்கள் பாஞ்சாலர்களோடு கூடிக் கௌரவர்களைத் தடுத்தார்கள். அவ்வாறு கைகலந்த யுத்தத்தில் ஜனங்களுக்கு அழிவானது நேர்ந்திருக்கும் ஸமயத்தில், மஹாபலசாலிகளான துரியோதனனும் பீமனும் யுத்தத்திற்காக எதிர்த்தார்கள்.

அறுபத்தாறுவது அத்தியாயம்

(கர்ணனுடைய பாணங்களால் பீடிக்கப்பட்ட யுதிஷ்டிரர் இளைப்பாறப் போனது)

கர்ணனும், முற்படையில் நிற்பவர்களும் மஹாவில்லாளிகளும் மஹாரதர்களுமான கேகயர்களைப் பாண ஸமூகத்தினால் அடித்தான். அவன், தன்னைத் தடுக்கும் விஷயத்தில் அதிகமாக முயலுகின்றவர்களான அந்தக் கேகய வீரர்களுடைய ஐந்நூறு ரதிகர்களை யமனுடைய வீட்டிற்கு அனுப்பினான். யுத்தத்தில் ராதேயனை மிகவும் தாங்கமாட்டாதவனென்று கண்டு யுத்த வீரர்கள் அவனுடைய பாணத்தினால் நன்றாகப் பீடிக்கப்பட்டவர்களாகப் பீமஸேனனை வந்தடைந்தார்கள். அரசரே! கர்ணன் தேர்ப்படையைப் பாணங்களால் அநேக விதமாகப் பிளந்து கொண்டே ஒற்றைத் தேருடனேயே யுதிஷ்டிரரை எதிர்த்து அருகில் சென்றான். பாணங்களால் அதிகமாகப் பீடிக்கப்பட்டவரும் சேனை தங்கியிருக்கும் இடத்தைக் குறித்துச் செல்பவரும் நகுல ஸஹதேவர்களுடைய மத்தியத்தை அடைந்தவரும் வீரரும் மெதுவாகச் செல்லுகின்றவரும் பிரஜ்ஞையற்றவருமான யுதிஷ்டிர

ராஜரை ஸூத புத்திரனான அந்தக் கர்ணன் அணுகித் துரியோதனனுக்கு நன்மையைச் செய்யும் விருப்பத்தினாலே கூர்மையுள்ள மூன்று உத்தமமான பாணங்களால் அடித்தான். அவ்வாறே யுதிஷ்டிர ராஜனும் ராதேயனை நடுமார்பில் திருப்பியடித்து மூன்று பாணங்களால் (அவனுடைய) ஸாரதியையும் நான்கு பாணங்களால் நான்கு குதிரைகளையும் அடித்தார். சத்துருக்களைத் தபிக்கச் செய்கின்றவர்களும் ராஜ குமாரர்களும் சக்ர ரக்ஷகர்களுமான அந்த மாத்ரீ குமாரர்கள் இருவரும் யுதிஷ்டிர ராஜரைக் கொல்லாமலிருக்க வேண்டுமென்று கர்ணனை எதிர்த்து ஓடினார்கள். நகுல ஸஹதேவர் இருவரும் அதிக முயற்சியுடையவர்களாக அம்பு மழைகளை ராதேயன்மீது தனித்தனி பொழிந்தார்கள். பிரதாபசாலியான ஸூத புத்திரன், மஹாத்மாக்களும் பகைவர்களை அடக்குகின்றவர்களுமான அவ்விருவரையும் கூர்மையான முனையுள்ள இரண்டு பல்லங்களாலே அவ்வாறே திருப்பி அடித்தான். கர்ணன் தந்தம்போன்ற நிறமுள்ளவைகளும் மனோவேகம்போன்ற வேகமுள்ளவைகளும் கறுத்த வாலுள்ளவைகளுமான யுதிஷ்டிரருடைய சிறந்த குதிரைகளை யுத்தத்தில் கொன்றான். பிறகு, மஹா வில்லாளியான ஸூத புத்திரன் அட்டஹாஸத்துடன் வேறொரு பல்லத்தினாலே யுதிஷ்டிரருடைய தலைப்பாகையைத் தள்ளினான். பாரதரே! மஹாரதனான அவன் அவ்வாறே நகுலனுடைய குதிரைகளையும் கொன்று, பிறகு மிக்க கூர்மையுள்ள வேறொரு பல்லத்தினாலே வீரனும் புத்திசாலியுமான அவனுடைய வில்லையும் வெட்டினான். குதிரைகளையும் ரதங்களையும் இழந்தவர்களும் மிகக் காயப்படுத்தப்பட்டவர்களும் ஸஹோதரர்களுமான அந்தப் பாண்டவர்கள் இருவரும் அப்பொழுது ஸஹதேவனுடைய ரதத்தின்மீது ஏறினார்கள். சத்துரு வீரர்களை அழிப்பவனும் அம்மானுமான மத்திர ராஜன், அந்த யுத்தகளத்தில் ரதத்தை இழந்தவர்களான அந்தப் பாண்டவர்கள் இருவரையும் கண்டு தயையினால் ராதேயனைப் பார்த்து, 'கர்ண! குந்தீ புத்திரனான தனஞ்சயனை நீ தேடவேண்டும். ஆதலால், தர்மராஜனோடு நீ யாது காரணம்பற்றி இப்பொழுது போர்புரிகிறாய்? ராதேய! நீ கவசமிழந்து சஸ்திரமும் அஸ்திரமும் குறைந்து பாணமும் பாணப் பெட்டியும் அற்று ஸாரதியும் குதிரைகளும் களைப்பை அடைந்து பகைவரின் பாணங்களால் மூடப்பட்டபிறகு, பார்த்தனை அடைந்து பரிஹாஸத்துக்குப் பாத்திரனாவாய்' என்று கூறினான். அப்படிச் சொல்லப்பட்டாலும், கர்ணன், கோபமுள்ளவனாகக் கூர்மையுள்ளவைகளும் மஹா வீரியமுள்ளவைகளுமான அம்புகளால் யுதிஷ்டிரரையும் மாத்ரீ புத்திரர்களான பாண்டவர்

களையும் பிடித்தான். பிறகு, சல்யன், உரக்கச் சிரித்து, தேரிலிருப்பவனும் அதிகக் கோபமுள்ளவனும் யுதிஷ்டிரரைக் கொல்வதில் உறுதியாயிருப்பவனுமான கர்ணனைப் பார்த்து, 'ராதேய! தார்த்தராஷ்டிரனால் எந்த அர்ஜுனனுக்காக நீ எப்பொழுதும் வெகுமானிக்கப்பட்டாயோ அந்த அர்ஜுனனைக் கொல்; யுதிஷ்டிரனைக் கொன்று உனக்கு என்ன பயன்? இவன் கொல்லப்பட்டால் அர்ஜுனன் நிச்சயமாக நமது எல்லா ரதிகர்களையும் கொன்றுவிடுவான். அந்த அர்ஜுனன் கொல்லப்பட்டாலன்றோ தார்த்தராஷ்டிரனுக்கு நிச்சயமான ஜயம். அதோ அர்ஜுனனுடைய கொடியானது பிரகாசிக்கின்ற சூரியன்போலக் காணப்படுகிறது. மிக்க புஜபலமுள்ளவனே! இதல்லவோ பயன்? யுதிஷ்டிரனைக் கொன்று உனக்கு என்ன பயன்? இதோ ஊதப்படுகிற கிருஷ்ணார்ஜுனருடைய இரண்டு சங்கங்களுடைய பேரொலியும் கேட்கிறது. மாரிக்காலத்தில் மேகத்தினுடைய இடிமுழக்கம் போல வில்லினுடைய நாணொலியும் கேட்கிறது. கர்ண! இந்த அர்ஜுனன் அம்பு மழைகளால் சிறந்த ரதிகர்களை அழித்துக் கொண்டு நம்முடைய சேனையனைத்தையும் விழுங்குகிறான். யுத்தத்தில் இவனைப் பார். சூரனான அர்ஜுனனுடைய பின்புறத்தை ரக்ஷிக்கின்றவர்களான யுதாமன்யுவையும் உத்தமௌஜஸையும் பார். சூரனான ஸாத்யகி இவனுடைய வடபுறத்திலுள்ள ஸேனாஸமூகத்தை ரக்ஷிக்கிறான். அவ்வாறே திருஷ்டத்யும்னன் இவனுடைய தென்புறத்திலுள்ள சேனையைப் பாதுகாக்கிறான். பீமஸேனனும் துரியோதன ராஜனோடு போர்புரிகிறான். நாம் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பீமன் இப்பொழுது துரியோதனனைக் கொல்லாமலிருக்கும்படியும் துரியோதன ராஜன் விடுபடும்படியும் செய். யுத்தத்தில் பிரகாசிக்கின்ற பீமஸேனனால் விழுங்கப்பட்டிருக்கிற இந்தத் துரியோதனனைப் பார். இவன் இப்பொழுது பீமனிடத்தினின்று விடப்படுவானானால் மிக்க பெரிதான ஆச்சரியம் உண்டாகும். அதிக ஸம்சயத்தை அடைந்திருக்கின்ற இந்தத் துரியோதனனை அணுகிப் பாதுகாப்பாயாக. மாத்ரீ புத்திரர்களையும் ராஜனான யுதிஷ்டிரனையும் கொன்று என்ன பயன்?' என்று கூறினான்.

மன்னவரே! வீரியமுள்ளவனான ராதேயன் இவ்வாறான சல்யனுடைய வார்த்தையைக் கேட்டு, மஹாயுத்தத்தில் துரியோதனன் பீமனால் விழுங்கப்பட்டதையுங் கண்டு, சல்யனுடைய சொல்லினால் தூண்டப்பட்டு, அரசனிடத்திலுள்ள பேரவாவால் அஜாதசத்துருவையும் மாத்ரீ புத்திரர்களான பாண்டவர்களையும்

விட்டுவிட்டு, உம்முடைய புத்திரனைப் பாதுகாத்தற்காக எதிரில் ஓடினன். பெரியவரே! கர்ணன் மந்திர ராஜனால் தூண்டப் பட்டவைகளும் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவை போன்றவைகளு மான குதிரைகளோடு (துரியோதனனுடைய அருகில்) சென்ற வுடன், பாண்டுவினுடைய புத்திரரும் குந்தி புத்திரருமான யுதிஷ் டிரர் வேகமுள்ள ஸஹதேவனுடைய குதிரைகளோடு யுத்தத்தை விட்டு விலகிச் சென்றார். பாணங்களால் நன்றாகக் காயப்படுத்தப் பட்ட அந்த யுதிஷ்டிர ராஜர் வெட்கினவர்போல அந்த நகுல ஸஹதேவர்களோடு விரைவாகத் தம்முடைய சேனை தங்கியிருக்கும் இடத்தை அடைந்து ரதத்தினின்று கீழே இறங்கிச் சீக்கிர மாகப் படுக்கையில் படுத்தார். மேனியில் தைத்திருக்கிற பாணங் களை விலக்கிக்கொண்டவரும் மனத்துயரத்தால் பீடிக்கப்பட்ட வருமான அந்த யுதிஷ்டிர ராஜர், மஹாரதர்களும் வீரர்களும் பிரதாபர்களுமான மாத்ரீ புத்திரர்களைப் பார்த்து, 'வீரர்களே! பீமன் இருக்குமிடத்திற்கு விரைவாகச் செல்லுங்கள்' என்று கட்டளையிட்டார். அந்தப் பாண்டவர்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் ஸல்லாபஞ் செய்தபிறகு, பாண்டவர்களான நகுல ஸஹ தேவர்கள் பீமஸேனனுடைய சேனையைக் குறித்துச் சென்றார் கள். அந்த விருகோதரனே (அந்த இடத்தில்) மேகம்போலக் கர்ஜித்துக்கொண்டு போர்புரிந்துகொண்டிருக்கிறான். பிறகு, பகைவர்களை அழிப்பவர்களும் பலமுள்ளவர்களும் பிரதாபர்களு மான ரதிகச்ரேஷ்டனான நகுலனும் தேஜஸ்வியான ஸஹதேவனு மாகிய இருவரும் வேறு ரதத்தின்மீதேறிச் சிறந்த வேகமுள்ள குதிரைகளோடு பீமன் போர்புரியும் இடத்தில் சேனைகளோடு சென்று நின்றார்கள்.

அறுபத்தேழாவது அத்தியாயம்

(அர்ஜுனன் அச்வத்தாமாவை வென்றதும், கர்ணன் பாண்டவ சேனையைத் துன்பஞ் செய்ததும்)

அரசரே! துரோண புத்திரர், பெரிய ரத ஸமூகத்தினால் சூழப்பட்டு, பார்த்தன் ஸன்னத்தமாயிருந்த இடத்திற்கு விரை வாகச் சென்றார். வருகின்ற அந்த அச்வத்தாமாவைச் சூரனும் கண்ணபிரானைத் துணையாகக்கொண்டவனுமான அர்ஜுனன் கரையானது கடலைத் தடுப்பதுபோல யுத்தத்தில் விரைவாகத் தடுத்தான். மஹாராஜரே! பிறகு, கோபங்கொண்டவரும் பிரதாபசாலியுமான துரோண புத்திரர் அர்ஜுனனையும் வாஸு தேவரையும் பாணங்களால் மூடினர். பிறகு, மஹாரதர்களான

கௌரவர்கள் அப்பொழுது அந்த யுத்தத்தில் கிருஷ்ணார்ஜுனர்கள் (பாணங்களால்) மூடப்பட்டதைக் கண்டு அதிக ஆச்சரியத்தை அடைந்து பார்த்துக்கொண்டிருந்தனர். பாரதரே! பிறகு, அர்ஜுனனே சிரித்துக்கொண்டு திவ்யாஸ்திரத்தைப் பிரயோகித்தான். பிராம்மணர் யுத்தத்தில் அந்த அஸ்திரத்தைத் தடுத்தார். பல்குனன், (அச்வத்தாமாவைக்) கொல்லவேண்டுமென்ற எண்ணத்தினால் பிரயோகித்த அஸ்திரத்தையெல்லாம் மஹா வில்லாளியான அவர் அஸ்திரங்களால் நாசஞ் செய்தார். மஹாராஜரே! மஹா பயங்கரமான அஸ்திர யுத்தம் நடந்துவருங் காலத்தில் யுத்தத்தில் அச்வத்தாமாவை வாயைத் திறந்திருக்கும் அந்தகனைப்போலக் கண்டோம். அந்த அச்வத்தாமா திக்குக்களையும் திக்கோணங்களையும் பாணங்களால் மூடி வாசுதேவரை மூன்று பாணங்களால் வலக்கையில் அடித்தார். பிறகு, அர்ஜுனன் அந்த அச்வத்தாமாவுக்குத் துணையாக வந்திருக்கின்ற ரதிகர்கள் எல்லோரையுங் கொன்று யுத்தத்தில் பூமியை இரத்த வெள்ளத்தினால் நான்கு பக்கத்திலும் நனைக்கப்பட்டதாகச் செய்தான். பார்த்தனுடைய வில்லினின்று விடுக்கப்படும் பாணங்களாலே (அடிக்கப்படும்) ரதிகர்கள், எல்லாப் பிராணிகளையும் இழுத்துக்கொண்டு செல்லுகின்றதும் பயங்கரமானதும் பரலோகத்தைக் குறித்துச் செல்லுகின்றதுமான நதியில் ரதங்களோடு விழுந்தார்கள். யுத்தத்தில் துரோண புத்திரரால் அடிக்கப்பட்ட வீரர்களை ஜனங்கள் கண்டார்கள். அந்த துரோண புத்திரரும் அப்பொழுது மிக்க கோரமானதும் பகைவர்களையிழுத்துச் செல்வதுமானஒரு ரத்த நதியை உண்டுபண்ணினர். அவருக்கும் பார்த்தனுக்கும் பயங்கரமான கைகலந்த யுத்தம் நடந்து வருங்காலத்தில் வீரர்கள் வரம்புகடந்து போர்புரிகின்றவர்களாகப் பின்புறத்தில் ஓடிவந்தார்கள். குதிரைகளும் ஸாரதிகளும் கொல்லப்பட்ட யானைகளாலும், யானைகள் கொல்லப்பட்ட வீரர்களாலும் யுத்த பூமியானது நிரம்பியது. மன்னரே! பார்த்தனால் யுத்தத்தில் கோரமான ஜனநாசம் உண்டுபண்ணப்பட்டது. ரதிகர்கள் பார்த்தனுடைய வில்லினின்று விடுபட்ட அம்புகளாலே கொல்லப்பட்டு விழுந்தார்கள். குதிரைகளும் கடிவாளங்கள் அறுபட்டு ஆங்காங்கு நான்கு பக்கத்திலும் ஓடின. பிறகு, வீரியவானான [1] துரோண புத்திரர், யுத்தத்தில் பிரகாசிக்கின்ற பார்த்தனுடைய அச்செய்கையைக் கண்டு விரைபவனும் ஜயசாலிகளுள் சிறந்த

---

[1] இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

வனுமான அவனை அணுகி, ஸ்வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்ட பெரிய வில்லை அசைத்துக்கொண்டு, கூர்மையுள்ள பாணங்களை நான்கு பக்கத்திலும் இறைத்தார். மஹாராஜரே! மறுபடியும் அவர் முயன்று ஒரு பாணத்தினால் பார்த்தனை மார்பில் தயையின்றி மிக அடித்தார். பாரதரே! யுத்தத்தில் அந்தத் துரோண புத்திரரால் அதிகமாக அடிக்கப்பட்டவனும் காண்டீவத்தை வில்லாகக் கொண்டவனும் உதாரமான புத்தியை யுடையவனுமான அர்ஜுனன் பாண வர்ஷங்களினால் யுத்தத்தில் பலாத்காரமாகத் துரோண புத்திரரை மூடி அவருடைய வில்லையும் துண்டாக்கினான். வில் அறுக்கப்பட்ட அந்தத் துரோண புத்திரர் யுத்தத்தில் வஜ்ராயுதம் போலத் தாக்குகின்ற ஒரு பரிகத்தை எடுத்து அப்பொழுது கிரீடியின்மீது பிரயோகித்தனர். ராஜரே! எதிரில் வருகின்றதும் ஸ்வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டதுமான அந்தப் பரிகத்தைப் பாண்டவன் உரக்கச் சிரித்துக்கொண்டு உடனே துண்டாக்கினான். அரசரே! பார்த்தனுடைய அம்புகளால் அறுக்கப்பட்ட அந்தப் பரிகமானது அப்பொழுது வஜ்ரத்தினால் அடிக்கப்பட்ட மலைபோலச் சிதறிப் பூமியில் விழுந்தது. மஹாராஜரே! பிறகு, கோபங்கொண்ட மஹாரதரான துரோண புத்திரர் பீபத்ஸுவின்மீது வேகமுள்ள ஐந்திராஸ்திரத்தைப் பிரயோகித்தார். வேந்தரே! அந்தப் பார்த்தன் பிரயோகிக்கப்பட்ட அந்த அச்வத்தாமாவினுடைய ஐந்திராஸ்திரத்தைக் கண்டு காண்டீவத்தை எடுத்தான். பலசாலியான அவன், மஹேந்திரனால் கொடுக்கப்பட்ட உத்தமமான அஸ்திரத்தை எடுத்து ஐந்திராஸ்திரத்தைத் திருப்பி அடித்தான். அவன் ஐந்திராஸ்திரத்தினால் உண்டுபண்ணப்பட்ட அந்தப் பாண வலையைப் பிளந்து, பிறகு, ஒரு க்ஷணத்தில் அச்வத்தாமாவினுடைய ரதத்தை நன்றாக மூடினான். பிறகு, பார்த்தனுடைய அம்புகளால் அடிக்கப்பட்ட துரோண புத்திரர், அப்பொழுது அவனை எதிர்த்து அருகில் வந்து அவனுடைய சரமாரியில் நுழைந்து, பாணங்களாலே சிறந்த பெயரை வெளிப்படுத்திப் பிறகு நூறு பாணங்களால் கோவிந்தரையும் முந்நூறு க்ஷுத்ரகங்களால் அர்ஜுனனையும் விரைவாக அடித்தார். பிறகு, அர்ஜுனன், உம்மைச் சேர்ந்தவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நூறு பாணங்களால் குரு புத்திரரை மர்மஸ்தானங்களில் பிளந்து, அவருடைய குதிரைகளின் மீதும் ஸாரதியின்மீதும் வில் நாணின்மீதும் (பாணங்களை) இறைத்தான். சத்துரு வீரர்களைக் கொல்லுகின்றவனான பாண்டவன் துரோண புத்திரரை மர்மஸ்தானங்களில் அடித்து, அவரு

டைய ஸாரதியை ஒரு பல்லத்தினால் தேர்த் தட்டினின்று கீழே தள்ளினான். அந்த அச்வத்தாமா தாமே குதிரைகளைப் பிடித்து நடத்திக்கொண்டு கிருஷ்ணார்ஜுனர்களை அம்புகளால் மூடினார். தாமே குதிரைகளை நடத்திக்கொண்டு பல்குனனையும் எதிர்த்துப் போர்புரிந்ததாகிய சுறுசுறுப்புடன் கூடின துரோண புத்திரருடைய பராக்கிரமத்தை அந்த யுத்தத்தில் ஆச்சரியமாகக் கண்டோம். அரசரே! யுத்தத்தில் திரௌணியினுடைய அந்தப் பராக்கிரமத்தை எல்லாப் பிராணிகளும் புகழ்ந்தன. அவருடைய அவ்விதமான பராக்கிரமத்தினால் உம்மைச் சேர்ந்த எல்லா யுத்த வீரர்களும் யுத்தத்தில் அவரைப் புகழ்ந்தார்கள். பிருதா புத்திரனான விஜயன், வில்லேந்தினவரான துரோண புத்திரரால் மீறப்பட்டவுடன், அட்டஹாஸஞ் செய்து யுத்தத்தில் துரோண புத்திரருடைய குதிரைகளின் கடிவாளங்களை க்ஷுரப்பிரங்களால் விரைவாக வெட்டினான். அந்த அச்வத்தாமாவினுடைய குதிரைகள் பாணவேகத்தினால் நன்றாகப் பீடிக்கப்பட்டு ஓடின. பாரதரே! பிறகு, உமது சேனையினுடைய கோரமான சப்தமானது தோன்றியது. ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான பாண்டவர்களோ ஜயத்தைப் பெற்று நான்கு பக்கங்களிலும் கூர்மையுள்ள பாணங்களைப் பிரயோகிக்கின்றவர்களாக உமது படையைத் துரத்தினார்கள். மஹாராஜரே! ஜனங்களுக்கு நாதரே! நான்கு அங்கங்களுள்ள உம்முடைய இந்தப் பெரும் படையானது, விசித்திரமாகப் போர் புரிகின்ற உம்முடைய குமாரர்களும் ஸுபல குமாரனான சகுனியும் கர்ணனும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ஜயத்தினால் பிரகாசிக்கின்ற வீரர்களான பாண்டவர்களால் அடிக்கடி நன்கு அடிக்கப்பட்டது. ஜனேச்வரரே! உம்முடைய புத்திரர்களாலே தடுக்கப்படுகின்ற பெரிய சேனையானது நான்கு பக்கத்திலும் ஹிம்ஸிக்கப்பட்டு யுத்தத்தில் நிலைபெறவில்லை. மஹாராஜரே! பிறகு, நான்கு பக்கத்திலும் ஓடுகின்ற யுத்தவீரர்களோடு கூடியதான உமது குமாரர்களுடைய பெரும் படையானது பயந்ததும் துன்பமுற்றதுமாகியது. மஹா பலசாலிகளான பாண்டவ சேனா வீரர்களாலே பீடிக்கப்படுகின்ற அந்தச் சேனையானது ஸூத புத்திரனான கர்ணனால் 'நில்,' 'நில்' என்று எப்போதும் சொல்லப்பட்டும் நிலைபெறவில்லை.

மஹாராஜரே! பிறகு, ஜயத்தினால் பிரகாசிக்கின்ற பாண்டவர்களாலே அதிகமாக அலறும்படி செய்யப்பட்டதும் நான்கு பக்கத்திலும் ஓடுகின்றதுமான தன்னுடையதான படையைக் கண்டு, பிறகு துரியோதனன் அன்புடன் கர்ணனைப் பார்த்து, 'கர்ண! பாண்டவர்களாலே அதிகமாகப் பீடிக்கப்பட்ட நமது

பெரிய சேனையைப் பார். நீ நின்றுகொண்டிருக்கும்பொழுதே சேனையானது நான்கு பக்கத்திலும் பயத்தினால் ஓடுகின்றது. மிக்க புஜபலமுள்ளவனே ! பகைவர்களை அடக்குபவனே ! இதனை அறிந்து செய்யத்தக்கதைச் செய். ஆண்மையிற் சிறந்தவனே ! வீர ! பாண்டவர்களாலே துரத்தப்படுகின்ற ஆயிரக்கணக்கான யுத்த வீரர்கள் யுத்தத்தில் உன்னையே அழைக்கின்றார்கள்' என்று சொல்லினன். கர்ணன், கௌரவம் பொருந்தின துரியோதனனுடைய இந்த வார்த்தையைக் கேட்டு, அட்டஹாஸஞ் செய்து கொண்டு மத்ர ராஜனைப் பார்த்து, 'ஜனேச்வர ! என்னுடைய புஜ வீரியத்தையும் அஸ்திர வீரியத்தையும் பார். யுத்தத்தில் பாண்டவர்களையும் எல்லாப் பாஞ்சாலர்களையும் இப்பொழுது கொல்லுகிறேன். புருஷச்ரேஷ்ட ! குதிரைகளை நடத்து. மத்ர நாத ! ஸம்சயமில்லை' என இந்த வாக்கியத்தை உரைத்தான். மஹாராஜரே! பிரதாபசாலியும் வீரனும் அளவிடமுடியாத பராக்கிரமமுள்ளவனும் மஹாபலசாலியுமான ஸூத புத்திரன், இவ்வாறு சொல்லிவிட்டு, வெற்றியைத் தரக்கூடிய புராதனமான சிறந்த வில்லை எடுத்து நாணேற்றி அடிக்கடி துடைத்து, ஸத்தியத்தாலும் சபதத்தாலும் அந்த யுத்த வீரர்களைத் தடுத்து, பரசுராமரால் கொடுக்கப்பட்ட அஸ்திரத்தைப் பிரயோகித்தான். அரசரே! மஹா யுத்தத்தில் அந்த அஸ்திரத்தினின்று ஆயிரக்கணக்காகவும் லக்ஷக்கணக்காகவும் பத்துலக்ஷக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் கூர்மையான அம்புகள் வெளிப்பட்டன. ஜ்வலிக்கின்றவைகளும் கோரமானவைகளும் கழுகுசிறகுகளால் வேகமுள்ளவைகளாகச் செய்யப்பட்டவைகளுமான அந்த அம்புகளாலே பாண்டவ சேனை நன்றாக மூடப்பட்டுவிட்டது; ஒன்றும் அறியப்படவில்லை. பிரஜைகளுக்கு நாதரே ! யுத்தத்தில் சிறந்த பலமுள்ள பார்க்கவாஸ்திரத்தினால் பீடிக்கப்பட்ட பாண்டவர்களுடைய 'ஆ!' 'ஆ!' என்னும் ஒலியானது மிகுதியாகத் தோன்றியது. அரசரே ! புருஷச்ரேஷ்டரே ! நாற்புறத்திலும் ஆயிரக்கணக்காக விழுகின்ற யானைகளாலும் குதிரைகளாலும் தேர்களாலும் மனிதர்களாலும் பூமியானது மிக நடுக்கமுற்றது. வேந்தரே! பாண்டவர்களுடைய பெரும் படையானது நான்கு பக்கத்திலும் கொல்லப்பட்ட அவைகளாலே முழுதும் வியாகுலமடைந்ததாகியது. யுத்தம் செய்பவர்களுள் சிறந்தவனும் புருஷர்களுள் உத்தமனும் பகைவர்களைத் தபிக்கச் செய்கிறவனுமான அந்தக் கர்ணன் ஒருவனே புகையற்ற நெருப்புப் போலப் பகைவர்களை எரித்துக்கொண்டு

பிரகாசித்தான். அவனால் கொல்லப்படுகின்ற அந்தப் பாஞ்சாலர்களும் சைத்யர்களும், காடு எரியும்போது யானைகள் ஆங்காங்கு மயங்குவதுபோல, மயக்கமடைந்தார்கள். புருஷச்ரேஷ்டரே! புருஷச்ரேஷ்டர்கள் பலத்திற்குத் தக்கபடி அலறினார்கள். மன்னரே! தீனமாக அலறுகின்றவர்களும் போர்முனையில் பயந்தவர்களும் அதனால் ஓடுகின்றவர்களும் நான்கு பக்கத்திலும் நடுங்குகிறவர்களுமான அவர்களுடைய தீனஸ்வரமானது, பிரளயத்தில் பிராணிகளுடைய சப்தம்போல் அந்தச் சமயத்தில் தோன்றியது. ஐயா! ஸூத புத்திரனாலே கொல்லப்படுகின்ற அந்த யுத்த வீரர்களைக் கண்டு திர்யக்ஜாதியில் தோன்றிய எல்லாப் பிராணிகளும் பயமடைந்தன. யுத்தத்தில் ஸூத புத்திரனால் கொல்லப்படுகின்ற அந்த ஸ்ருஞ்சயர்கள், பிரஜ்ஞையற்றவர்களாகி, யமனுடைய நகரத்தில் பிராணிகள் யமனை அழைப்பதுபோல அடிக்கடி அர்ஜுனனையும் வாஸுதேவரையும் அழைத்தார்கள். கர்ணனுடைய அம்புகளால் கொல்லப்படுகின்ற அவர்களுடைய சப்தத்தைக் கேட்டும், அந்த யுத்தத்தில் பிரயோகிக்கப்பட்ட மஹா கோரமான பார்க்கவாஸ்திரத்தைக் கண்டும், பிறகு குந்தீ புத்திரனான தனஞ்சயன், வாஸுதேவரைப் பார்த்து, 'கிருஷ்ண! மிக்க புஜபலமுள்ளவரே! பார்க்கவாஸ்திரத்தினுடைய விக்கிரமத்தைப் பாரும். இந்த அஸ்திரத்தை யுத்தத்தில் எவ்விதத்தாலும் நாசஞ் செய்யமுடியாது. மாதவரே! மஹாயுத்தத்தில் வீரியத்தில் யமனுக்கொப்பானவனும் பயங்கரமான காரியத்தைச் செய்பவனும் கோபமுள்ளவனுமான ஸூத புத்திரனைப் பாரும். அடிக்கடி குதிரைகளை நடத்திக்கொண்டு அவன் என்னை அடிக்கடி பார்க்கிறான். அவனுடைய யுத்தத்தில் நான் ஓடக்கூடியவனாக மாட்டேன். மனிதன் பிழைத்திருப்பானாகில் யுத்தத்தில் வெற்றி தோல்விகளை அடைகிறான். ஹ்ருஷீகேசரே! மரித்தவனுக்கு நாசமேயொழிய ஜயமேது? இந்தக் கர்ணன் யுத்தத்தில் மத்யான்ன சூரியன்போலப் பிரகாசிக்கின்றான். கோவிந்தரே! ரதத்தைத் திருப்பும். உயிரோடிருப்பவன் மங்களங்களைக் காண்கிறான்' என்றான்.

அறுபத்தெட்டாவது அத்தியாயம்

(யுதிஷ்டிரர் பாசறைக்கு வந்ததை யறிந்த கண்ணபிரான் பீமனைப் பகைவரை எதிர்க்க ஏவித் தாம் அர்ஜுனனுடன் யுதிஷ்டிரரிடம் வந்தது)

கௌரவரே! 'யுத்தத்தை விட்டு ரதத்துடன் சீக்கிரமாக விலகிச் செல்லும்' என்கிற அந்த அர்ஜுனனுடைய வார்த்தையைக் கேட்டு, வீரரான ஜனார்த்தனர், 'நன்றாக எதிர்க்கின்ற கௌரவர்களைத் தாங்குவதற்கு இவனல்லனோ போதுமான திறமையுடையவன்' என்று பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமனைப் பகைவர் படைக்கு எதிரில் நிறுத்தி, யுத்தத்தில் கர்ணனை சிரமத்தை அடையும்படி செய்விக்கும்பொருட்டும் மஹாத்மாவான பார்த்தன் இளைப்பாறுவதன்பொருட்டும் யுதிஷ்டிரரைப் பார்ப்பதன்பொருட்டும் யுத்தரங்கத்தை விட்டு விலகிச் சென்றார். வாஸுதேவர் அர்ஜுனனைப் பார்த்து, 'குருச்ரேஷ்ட! அரசர் நான்கு பக்கத்திலும் காயப்படுத்தப்பட்டிருக்கிறார். அவரைக் களைப்பாறச் செய்தபிறகு கர்ணனைக் கொல்வாய்' என்று கூறினார். பிறகு தனஞ்சயன், அரசர் பாணங்களால் பீடிக்கப்பட்டிருக்கிறாரென்பதைக் கேட்டு, 'விருஷ்ணி வம்சத்தில் உதித்தவரே! திடமான என் மனமானது அரசரைப்பற்றிப் பரிதாபத்தை அடைகிறது. போம், போம்' என்று பலவாறாக வாஸுதேவரை ஏவினான். கேசியை அழித்தவரும் விருஷ்ணிகளை ஸந்தோஷிக்கச் செய்பவருமான அந்த வாஸுதேவர் அர்ஜுனனால் தூண்டப்பட்டுக் கோரமான காட்சியுள்ள யுத்தத்தினின்று சீக்கிரமாக ரதத்துடன் விலகிச் சென்றார். தர்மராஜரைப் பார்க்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு குந்திபுத்திரனான அர்ஜுனன் சென்றுகொண்டே சேனையைப் பார்த்தான். அவ்விடத்தில் தமையனாரைக் காணவில்லை. பாரதரே! நாண் கழற்றிவிடப்பட்ட கொடிய வில்லுள்ளவனும் பகைவர்களால் அவமதிக்கத்தகாதவனும் சூரனும் சூரர்களை ஸந்தோஷிக்கச் செய்கின்றவனும் இடக்கையினாலும் பாணங்களைப் பிரயோகிப்பவனும் குந்தி புத்திரனுமான தனஞ்சயன், துரோண புத்திரரோடு போர் புரிந்து, யுத்தத்தில் இந்திரனாலும் சகிக்கமுடியாத குரு புத்திரரான அச்வத்தாமாவைத் தோல்வி அடைவித்து, செய்யமுடியாததும் பெரிதுமான வீரச்செய்கையைச் செய்தபிறகு தன் சேனையைப் பார்த்தான். சூரனான ஸவ்யசாசி படைமுகத்தில் நின்று நன்றாகப்போர் புரிகின்ற சூரர்களை ஸந்தோஷிக்கச் செய்துகொண்டும் தன்னுடைய தேராளிகளைப் பிரஸித்தமான அவர்களுடைய முந்தின செய்கைகளால் புகழ்ந்து

கொண்டும் அவர்களைப்படையில் நிலைபெற்றிருப்பவர்களாகச்செய்தான். கிரீடியானவன், அஜமீடனுடைய வம்சத்தில் தோன்றியவரும் பிராதாவுமான யுதிஷ்டிரரைக் காணமல் விரைவாகப் பீமனை யடைந்து, 'அரசருடைய விருத்தாந்தமென்ன? இப்பொழுது அவர் எங்கே இருக்கிறார்?' என்று வினவினான். பீமஸேனன், 'தர்மபுத்திரரும் அரசருமான யுதிஷ்டிரர் கர்ணனுடைய பாணங்களால் அங்கங்கள் மிகத் தவிக்கச்செய்யப்பட்டும் இவ்விடத்தினின்று விலகிச் சென்றுவிட்டார்; சிரமப்பட்டு ஜீவித்திருக்கலாம்' என்று மறுமொழி கூறினான். அர்ஜுனன், 'அப்படி இருக்குமானால், குருஶ்ரேஷ்டரான யுதிஷ்டிரருடைய விருத்தாந்தத்தை அறிவதற்காக நீ சீக்கிரமாக இவ்விடத்தினின்று போ. அரசரான அந்தத் தர்மநந்தனர் நிச்சயமாகக் கர்ணனால் பாணங்களால் நன்கு அடிக்கப்பட்டுப் பாசறையைக் குறித்துச் சென்றுவிட்டார். பலசாலியான யுதிஷ்டிரர் யுத்தம் நடந்துவரும்போது துரோணரால் ஆயுதங்களால் நன்குக அடிக்கப்பட்டும் அந்தச் சமயத்தில் ஜயத்தை எதிர்பார்த்துக்கொண்டு உறுதியாக நின்றார்; துரோணராலும் கொல்லப்படவில்லை. மஹானுபாவரும் பாண்டவர்களுள் சிறந்தவருமான அந்த யுதிஷ்டிரர் இப்பொழுது யுத்தத்தில் கர்ணனால் ஸம்சயத்தை அடையும்படி செய்யப்பட்டுவிட்டார். பீம! இப்பொழுது அந்த யுதிஷ்டிரரை அறியவேண்டி விரைவாகச் செல். நான் பகைவர்களுடைய கூட்டங்களைத் தடுத்துக்கொண்டு நிற்கப்போகிறேன்' என்று சொன்னான். பீமஸேனன், 'மஹானுபாவ! பரதர்களுள் சிறந்தவரான யுதிஷ்டிரராஜருடைய விருத்தாந்தத்தை நீயே அறி. அர்ஜுன! நான் போனால் சத்துருவீரர்கள் என்னைப் பயந்தவனென்று சொல்லுவார்கள்' என்று சொன்னான். பிறகு அர்ஜுனன் பீமஸேனனைப் பார்த்து, 'ஸம்சப்தகர்கள் என்னுடைய எதிர்ப் படையில் நிற்கின்றார்கள். இப்பொழுது இவர்களைக் கொல்லாமல் இந்தச் சத்துருக் கூட்டத்தினிடையிலிருந்து விலகிச்செல்வதற்கு என்னால் முடியாது' என்று சொன்னான். பிறகு பீமஸேனன் அர்ஜுனனைப் பார்த்து, 'பாண்டவர்களுள் சிறந்த வீர! என்னுடைய வீரியத்தையே கடைப்பிடித்துப் போரில் எல்லா ஸம்சப்தகர்களையும் எதிர்த்துப் போர்புரிவேன். தனஞ்சய! நீ போ' என்று சொன்னான். தனஞ்சயன், பகைவர்களுடைய மத்தியில் ஸஹோதரனான பீமஸேனனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, கௌரவஶ்ரேஷ்டரான யுதிஷ்டிரரைப் பார்ப்பதற்குச் செல்பவனாகி, அப்பொழுது விருஷ்ணிகளுள் சிறந்தவரான மாதவரைப்

பார்த்து உரைக்கலானான். 'விருஷ்ணி குலத்தில் உதித்தவரே! மன்னரைப்பற்றி என் மனம் அதிக வருத்தம் அடைகிறது. ஹ்ருஷீகேசரே! இந்த ஸேனாசமுத்திரத்தை விட்டுக் குதிரைகளை நடத்தும். கேசவரே! அரசரான அஜாதசத்துருவைப் பார்க்க விரும்புகிறேன்' என்றான். ஸ்ரீமந் நாராயண ஸ்வரூபியான வாசுதேவர் அர்ஜுனனுடைய வசனத்தினால் அந்த ரதத்தைச் செலுத்தினார். பிறகு, தாசார்ஹரனைவருள்ளும் சிறந்தவரான ஸ்ரீ கிருஷ்ணர், குதிரைகளை நடத்திக்கொண்டே பீமனைப் பார்த்து, 'பீம! இந்த உன்னுடைய செய்கையானது இப்பொழுது ஆச்சரியகரமன்று. பிருதையின் புத்திர! (நாங்களிருவரும்) போகப் போகிறோம். சத்துருக் கூட்டங்களை நீயே கொல்வாயாக' என்று சொன்னார்.

அரசரே! ராஜேந்திரரே! பிறகு, ஹ்ருஷீகேசர் எதிரியின் படையில் பகைவர்களை யடக்குகிறவனான பீமஸேனனை இருக்கும் படி செய்து, விருகோதரனான அவனைக் குறித்து யுத்தத்தைப் பற்றின விஷயங்களைச் சொல்லிவிட்டுக் கருடனுக்கொப்பான குதிரைகளாலே மிக்க விரைவுடன் அரசரான யுதிஷ்டிரர் இருக்குமிடத்திற்குச் சென்றார். பிறகு, புருஷர்களுள் சிறந்தவர்களான அவ்விருவரும் சென்று, தனித்துப் படுத்திருக்கின்ற அரசரை அடைந்து, அந்த ரதத்தினின்று கீழே இறங்கி அவருடைய இரண்டு சரணங்களிலும் வந்தனம் செய்தார்கள். மஹாராஜரே! இவ்விதம் உமது சேனையைக் கொன்று போர்க்களம் விட்டுச் சென்றவரும், சஸ்திரங்களால் காயப்படுத்தப்பட்டு ரத்தத்தால் நனைந்தவருமான அவ்விருவரும் (யுதிஷ்டிரரை) வந்தனம் செய்து கைகுவித்து நின்றனர். கிருஷ்ணார்ஜுனர்கள் இருவரும் க்ஷேமமுள்ளவரும் புருஷசிரேஷ்டருமான அந்த யுதிஷ்டிரரைக் கண்டு இந்திரனைப் பார்த்து அசுவினீ தேவர்கள் புகழ்வதுபோல ஸந்தோஷத்தினால் புகழ்ந்தார்கள். யுதிஷ்டிர ராஜரும், அசுவினீ தேவர்களைப் பார்த்து ஸூரியன் புகழ்ந்ததுபோலவும் ஜம்பனென்கிற மஹாசுரன் கொல்லப்பட்டவுடன் இந்திரனையும் விஷ்ணுவையும் பார்த்து பிருகஸ்பதி புகழ்ந்ததுபோலவும் அவ்விருவரையும் கண்டு புகழ்ந்தார். சத்துரு பட்டணங்களை ஜயிப்பவரும் புருஷசிரேஷ்டரும் சத்துருக்களைத் தவிக்கச் செய்பவருமான அந்த யுதிஷ்டிரர், கர்ணன் மாண்டதாக எண்ணி, பிரீதியை அடைந்து அச்சமயத்தில் ஸந்தோஷத்தால் தழுதழுத்த வாக்குடன் கூறலானார்.

அறுபத்தொன்பதாவது அத்தியாயம்

(அர்ஜுனன் கர்ணனைக் கொன்றுவிட்டானென்கிற பிரமத்தினால் யுதிஷ்டிரர் அர்ஜுனனைப் புகழ்ந்தது)

பிறகு யுதிஷ்டிரர், அருகில் வந்திருக்கின்றவர்களும் விசாலமான சிவந்த கண்களையுடையவர்களும் பாணங்களால் நான்கு பக்கங்களிலும் நிறைக்கப்பட்ட அங்கங்களையுடையவர்களும் ரத்தத்தினால் நன்றாகப் பூசப்பட்டவர்களும் படைமுகத்தில் செல்லுகின்ற நரசிரேஷ்டர்களுமான கிருஷ்ணார்ஜுனர்களைக் கண்டு பின் வரும் வாக்கியத்தை உரைக்கலானார். பிறகு யுதிஷ்டிரர், சேர்ந்திருக்கின்ற கேசவரையும் அர்ஜுனனையும் பார்த்து, யுத்தத்தில் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனால் கர்ணன் கொல்லப்பட்டானென்று எண்ணினார், பரதர்களுள் சிறந்தவரே! குந்தீ புத்திரரான யுதிஷ்டிரர், சத்துருக்களைக் கொல்பவனான அர்ஜுனனைப் புன்சிரிப்பை முன்னிட்டுக்கொண்டு புகழ்கின்றவராகி, மனத்துக்கு மிகவும் இனிமையான நல்வார்த்தையினால் அவர்கள் இருவரையும் துதித்தார். யுதிஷ்டிரர், 'தேவகீ புத்திரரே! நல்வரவா? தனஞ்சய! உனக்கு நல்வரவா? மஹாரதனான கர்ணனைக் கொன்று காயப்படுத்தப்படாதவர்களாகவும் க்ஷேமமுள்ளவர்களாகவும் இருக்கின்ற புருஷசிரேஷ்டர்களான உங்கள் இருவர்களுடைய தரிசனமும் எனக்கு மிகவும் பிரியமானது. யுத்தத்தில் ஸர்ப்பம்போல் இருப்பவனும் எல்லாச் சாஸ்திரங்களிலும் கைதேர்ந்தவனும் திருதராஷ்டிர புத்திரர்களனைவர்களுக்கும் முந்திச் செல்லுகின்றவனும் சுகத்தைக் கொடுப்பவனும் கவசம்போலிருப்பவனும் விருஷஸேனனாலும் வில்லாளியான ஸுஷேணனாலும் பாதுகாக்கப்பட்டவனும் மகாவீரியமுள்ளவனும் பரசுராமரால் அஸ்திரவித்தையில் (தேர்ச்சி அடைவித்து) அனுமதி கொடுக்கப்பட்டவனும் எவ்விதத்தினாலும் ஜயிக்க முடியாதவனும் எல்லா ஜனங்களுள்ளும் சிறப்புற்றவனும் உலகத்தில் பிரஸித்திபெற்ற ரதிகனும் தார்த்தராஷ்டிரர்களைக் காப்பாற்றுகிறவனும் படைமுகத்தில் செல்பவனும் பகைவர்களுடைய சேனைகளைக் கொல்லுகிறவனும் சத்துருக்களுடைய கூட்டத்தை அடிக்கின்றவனும் துரியோதனனுக்கு ஹிதத்தைச் செய்வதில் பற்றுள்ளவனும் நமக்குத் துக்கத்தை உண்டுபண்ணுவதன்பொருட்டு முயல்கின்றவனும் மஹாயுத்தத்தில் இந்திரனுடன் கூடின தேவர்களாலும் அவமதிக்க முடியாதவனும் தேஜஸினாலும் பலத்தினாலும் நெருப்புக்கும் காற்றுக்கும் ஒப்பானவனும் பாதாளம் போல் ஆழ்ந்த ஹிருதயமுடையவனும் நண்பர்களுக்குச் சந்தோஷத்தை

விருத்திபண்ணுகிறவனும் எனது சிநேகிதர்களுக்கு யமனுயிருந்தவனுமான கர்ணனை மகாயுத்தத்தில் கொன்று, அஸுரனைக் கொன்றுவந்த இரண்டு தேவர்களைப்போலப் பாக்கியவிசேஷத்தால் நீங்கள் இருவரும் என் அருகில் வந்தீர்கள். மஹாபாகுபலமுள்ள மாதவரே! அர்ஜுன! த்ருஷ்டத்யும்னன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, நான் பயமற்றவனுன அந்தக் கர்ணனேடு கோரமான யுத்தத்தைச் செய்தேன். எல்லாப்பிரஜைகளையும் கொல்லும் விருப்பத்தினுல் கோபங்கொண்ட யமன்போன்ற அந்தக் கர்ணனுல் என்னுடைய கொடியும் அறுக்கப்பட்டது. இரு பக்கத்திலிருந்த ஸாரதிகளும் கொல்லப்பட்டார்கள். யுயுதானன், திருஷ்டத்யும்னன், நகுலஸஹதேவர்கள், வீரனுன சிகண்டி, த்ரௌபதிபுத்திரர்கள், மஹாத்மாவான சதத்ரு இவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, நான் குதிரைகளை இழந்தவனுகச் செய்யப்பட்டேன். மஹாபாகுபலமுள்ளவனே! மஹாவீர்யமுள்ளவனுன கர்ணன், இந்த அநேகம் பகைவர் கூட்டங்களை வென்று மஹாயுத்தத்தில் முயல்கின்றவனுகி என்னையும் ஜயித்தான். யுத்தவீரர்களுள் சிறந்தவனே! கர்ணன் என்னை யுத்தத்தில் ஸம்சயமில்லாமல் ஆங்காங்கு அவமதித்துப் பின்தொடர்ந்து கடுமையான சொற்களைப் பலவாறு உரைத்தான். தனஞ்சய! பீமஸேனனுடைய பிரபாவத்தினுல் ஜீவிக்கிறேன். இந்த விஷயத்தில் அதிகமாகச் சொல்வதினுல் என்னபயன்? [1] நான் அவனை ஸஹிப்பதற்குச் சக்தியற்றவனுக இருக்கிறேன். தனஞ்சய! எவனிடத்தினின்று நான் பதின்மூன்று வருஷங்களாகப் பயந்துகொண்டு இரவில் உறக்கத்தையும் பகலில் ஸுகத்தையும் ஒரு ஸமயத்திலும் அடையவில்லையோ, எவனுடைய பகையோடுகூடி நான் என்னுடைய மரணத்தை அறிந்து, [2] வாத்ரீணஸபக்ஷிபோலத் தவித்துக்கொண்டிருந்தேனே அந்தக்கர்ணன் என்னுல் எவ்வாறு யுத்தத்தில் நாசம் செய்யத் தக்கவனுவான் என்று நெடுநாளாக நான் சிந்தித்துக்கொண்டிருந்தேன். தனஞ்சய! அதற்கு ஸமயம் வந்துவிட்டது. குந்திபுத்திர! விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும் உறங்கிக்கொண்டிருக்கும்பொழுதும், கர்ணனையே நான் நினைக்கிறேன். ஆங்காங்கு இந்த உலகத்தைக் கர்ணமயமாகிவிட்டதாகப் பார்க்கிறேன். தனஞ்சய! கர்ணனிடத்தில் பயந்தவனுன நான் செல்லும் இடங்களிலெல்லாம் கர்ணனையே எதிரில் நிற்கின்றவனுகக் காண்கிறேன். பார்த்த! அப்படிப்பட்ட நான் யுத்தங்

[1] வேறு பாடம். [2] கறுத்த கழுத்தும் சிவந்த தலையும் வெளுத்த சிறகுமுள்ள ஒருவகைப் பறவை.

களில் ஓடாதவனை அந்த வீரனாலேயே குதிரைகளுடனும் ரதத்துடனும் கூடினவனாகத் தோல்வியடைவிக்கப்பட்டு உயிரோடு விடப்பட்டேன். யுத்தத்தில் பிரகாசிக்கின்ற அவனால் இப்பொழுது இவ்வாறு அடிக்கப்பட்டிருக்கிற எனக்கு உயிரினால் என்ன பயன்? மறுபடியும் ராஜ்யத்தினால் யாதுபயன்? முன் யுத்தத்தில் பீஷ்மரிடத்தினின்றும் கிருபரிடத்தினின்றும் துரோணரிடத்தினின்றுங்கூட அடையப்படாத(துன்பமானது) யுத்தத்தில் மஹாரதனான. ஸூத புத்திரனிடத்தினின்று என்னால் இப்பொழுது அடையப்பட்டது. குந்திபுத்திர! அப்படிப்பட்ட நான் உன்னை வினவுகிறேன். நிகரற்ற திறமை அமைந்த கர்ணன் உன்னால் கொல்லப்பட்ட விதத்தை முழுதும் எனக்கு உரைப்பாயாக. யுத்தத்தில் இந்திரனுக்கொப்பான பலத்தை உடையவனும், பராக்கிரமத்தில் யமனுக்கு நிகரானவனும், அவ்வாறே அஸ்திரங்களில் பரசுராமர்போன்றவனுமான அந்தக் கர்ணன் உன்னால் எவ்வாறு நாசஞ்செய்யப்பட்டான்? அர்ஜுன! மஹாரதனென்று பிரஸித்திபெற்றவனும் எல்லா யுத்தங்களிலும் ஸமர்த்தனும் எல்லா வில்லாளிகளுள்ளும் எப்பொழுதும் சிறந்தவனும் [1] புத்திரர்களுடன்கூடின த்ருதராஷ்டிரனாலே உன்னிமித்தமாகவே பூஜிக்கப்பட்டிருந்தவனுமான அந்தக்கர்ணன் உன்னால் எவ்வாறு கொல்லப்பட்டான்? அர்ஜுன! புருஷச்ரேஷ்ட! எப்பொழுதும் த்ருதராஷ்டிர புத்திரனைச் சேர்ந்த போர்வீரர்களனைவரும் எந்தக் கர்ணனை யுத்தத்தில் உனக்கு ம்ருத்யுவாக எண்ணுகிறார்களோ அவன் உன்னால் எவ்வாறு யுத்தத்தில் கொல்லப்பட்டான்? புருஷர்களுள் சிறந்தவனே! குந்திபுத்திர! அவன் உன்னால் நாசஞ்செய்யப்பட்ட விதத்தை எனக்குச் சொல்வாயாக. புருஷப்புலியே! சிங்கத்தினால் ருரு என்கிற மானுடைய தலையானது கவரப்படுவதுபோல நண்பர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே உயரத்தூக்கப்பட்டிருந்த அந்தக் கர்ணனுடைய தலையானது உன்னால் கவரப்பட்டது. மனிதர்களுக்கு ரத்னங்களால் நிறைந்த வண்டியைக் கொடுக்க எண்ணங்கொண்ட கர்ணன் யுத்தத்தில் உன்னைக் கவர்ந்து கொள்ள விரும்பி உனக்காக எல்லாத்திக்குகளிலும் ஸஞ்சாரம் செய்தான். அந்தக் கர்ணன் எவ்வாறு உன்னால் இப்பொழுது கொல்லப்பட்டான்? துராத்மாவான கர்ணன் உன்னால் யுத்தத்தில் கொல்லப்பட்டுப் பூமியில் படுத்திருக்கிறானா? ஸூதபுத்திரனை யுத்தத்தில் கொன்று உன்னால் எனக்கு இப்பொழுது சிறந்த நன்மை செய்யப்பட்டதா? கர்வமுள்ளவனை ஸூதபுத்திரன்

---

[1] ஒரு சொல் விடப்பட்டது.

ஸந்தோஷத்தோடு உன் நிமித்தமாக எல்லாத் திசைகளிலும் சுற்றி வந்தான். சூரனென்கிற எண்ணமுள்ளவனான அந்த ஸூதபுத்திரன் யுத்தத்தில் எதிர்த்து உன்னால் கொல்லப்பட்டானா? உன் நிமித்தமாக யானைகளோடும் பசுக்களோடும் குதிரைகளோடும் கூடின சிறந்த ராஜ்யத்தைப் பகைவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு உன்னோடு யுத்தகளத்தில் போர் புரிந்த பாப புத்தியுள்ள கர்ணன் உன்னால் கொல்லப்பட்டானா? அப்பனே! செளரிய மதத்தினால் நித்தியம் மயங்கினவனான துரியோதனனுடைய பிரீதியின்பொருட்டுக் கௌரவர்களுடைய ஸபையில் தன்னைப் புகழ்ந்து கொள்ளும் பாபியான கர்ணன் உன்னால் இப்பொழுது கொல்லப்பட்டானா? ஸூதபுத்திரன், (உன்னை) எதிர்த்து, வில்லினின்று விடுபட்டவைகளும் உன்னால் பிரயோகிக்கப்பட்டவைகளும் இரும்பினால் செய்தவைகளுமான அம்புகளால் பிளக்கப்பட்டு, புழுதிகளில் படுத்திருக்கிறானா? தார்த்தராஷ்டிரனுடைய இரண்டு கைகளும் முறிக்கப்பட்டனவா? அப்பா! கொழுப்புள்ள எவன் துரியோதனனை மகிழ்விப்பதற்காக, 'நான் எல்லாப் பாண்டு புத்திரர்களையும் கொல்லப்போகிறேன்; பல்குனனையும் கொல்லப்போகிறேன்' என்று மயக்கத்தினால் அரசர்களுடைய மத்தியில் எப்பொழுதும் தன்னைப் புகழ்ந்து கொண்டிருந்தானோ, அந்தக் கர்ணன், 'ஓ! திரௌபதி! நீ பதிகளை இழந்தவள். பாண்டவர்கள் நிந்திக்கத் தக்கவர்கள்' என்று ஸபையின் மத்தியில (நமது) பிரியையான திரௌபதியைக் குறித்துச் சொல்லியதும் கொடியதும பலவிதமாயுள்ளதுமான வசனமானது உன்னால் வீணாகச் செய்யப்பட்டதா? பகைவரைத் தாங்குகிறவனும் துரியோதனனுடைய காரியத்தில் மிகப்பற்றின புத்தியை யுடையவனும் 'யுத்தங்களில் உக்கிரமான வேகமுள்ள தனஞ்சயனை நான் கொல்லும் வரையில் கால்களை அலம்புகிறதில்லை' என்று கோரமான விரதத்தைப் பன்னிரண்டு வருஷகாலம் தரித்தவனும் மஹாத்மாவுமான கர்ணன் நிச்சயமாகச் சத்துருவல்லவோ? பல்குன! யுத்தத்தில் அவனைக் கொன்று அவனுடைய விரதமானது உன்னால் நாசஞ் செய்யப்பட்டதா? துஷ்ட புத்தியை யுடையவனான எந்தக் கர்ணன் ஸபையில் குரு வீரர்களின் மத்தியில் திரௌபதியைப் பார்த்து, 'ஓ! கிருஷ்ணையே! மிக்க துர்ப்பலர்களும் பதிதர்களும் பலத்தை இழந்தவர்களுமான பாண்டவர்களை நீ ஏன் விடுகிறாயில்லை?' என்று சொன்னானோ, எந்தக் கர்ணன் உன் நிமித்தமாகவே, 'நான் கிருஷ்ணனோடுகூடப் பார்த்தனைக் கொல்லாமல் இங்கு திரும்பிவரப்போகிறதில்லை' என்று பிரதிஞ்ஞை செய்தானோ பாபபுத்தியை யுடையவனான அந்தக்

கர்ணன் அம்புகளால் நன்கு பிளக்கப்பட்ட சரீரத்தையுடையவ னாகப் படுத்திருக்கிறானா? ஸ்ருஞ்சயர்களுக்கும் கௌரவர்களுக் கும் எதிர்த்தல் நேர்ந்தபோது நேர்ந்த இந்த யுத்தமானது உன்னால் அறியப்பட்டதா? (அந்த யுத்தத்தில்) எவனால் நான் இவ்வித மான நிலைமையை அடைவிக்கப்பட்டேனோ அந்தத் துராத்மா வானவன் உன்னால் இப்பொழுது கொல்லப்பட்டானா? ஸவ்ய ஸாசியே! காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் ஜ்வலிக்கின்ற வைகளுமான பாணங்களால் மிக்க மந்த புத்தியுள்ளவனை அந்தக் கர்ணனுடைய குண்டலங்களுடன் கூடியதும் ஒளி பொருந் தியதுமான தலையானது யுத்தத்தில் சரீரத்தினின்று உன்னால் நன்றாக அறுக்கப்பட்டதா? வீர! பாணங்களால் நன்றாக அடிக் கப்பட்டிருக்கிற நான் கர்ணனுடைய வதத்தின்பொருட்டு உன்னை நினைத்ததாகிய என்னுடைய தியானமானது கர்ணனுடைய மரணத்தினால் இப்பொழுது உன்னால் ஸபலமாகச் செய்யப்பட் டதா? அகங்காரத்தினால் நிறைந்த அந்தத் துரியோதனன் எந்தக் கர்ணனைப் பின்பற்றி நம்மை எரிக்க எண்ணங்கொண்டிருக் கிறானோ அந்தத் துரியோதனனுக்கு நல்ல ஆதாரமாயிருந்த அந்தக் கர்ணன் உன்னால் பராக்கிரமத்தை வெளியிட்டு இப்பொழுது நாசஞ் செய்யப்பட்டானா? எவன் முற்காலத்தில் ஸபையின் நடுவில் கௌரவர்களுக்கு நேரில் நம்மை, 'எள்ளுப்பதர்கள்' என்று சொன்னானோ கெட்ட புத்தியை யுடையவனும் பொறாமை யுள்ளவனும் ஸூதபுத்திரனுமான அந்தக் கர்ணன் யுத்தத்தில் அருகில் நெருங்கி உன்னால் கொல்லப்பட்டானா? மஹாபல சாலியே! துராத்மாவான எந்த ஸூத புத்திரன், 'சகுனியே! சூதாட்டத்தினால் ஜயிக்கப்பட்டிருக்கின்ற கிருஷ்ணையை இங்கு அழைத்துவா' என்று அனுப்பினானோ மந்தபுத்தி உள்ளவனை அந்தக் கர்ணன் பலாத்காரமாக இப்பொழுது கொல்லப்பட்டானா? மஹாத்மாவே! அல்ப புத்தியுள்ளவனும் அர்த்த ரதனாக எண்ணப்பட்டவனுமான எந்தக் கர்ணன் உலகத்தில் சஸ்திர தாரிகளுள் மிக்க சிறப்புற்றவரான பிதாமஹரைத் திக்காரம் செய்தானோ அந்தக் கர்ணன் உன்னால் இப்பொழுது கொல்லப்பட் டானா? பல்குன! கோபத்தினால் உண்டானதும் வஞ்சனையாகிற காற்றினால் தூண்டிவிடப்பட்டதும் எப்பொழுதுமே என்னுடைய ஹிருதயத்தில் இருப்பதுமான இந்த நெருப்பை 'என்னால் இப்பொழுது யுத்தத்தில் எதிர்த்து அந்தக் கர்ணன் கொல்லப் பட்டான்' என்று சொல்லி இப்பொழுது தணியச் செய்கிறாய்' என்று கூறினார்.

எழுபதாவது அத்தியாயம்

(அர்ஜுனன் தன்னுடைய யுத்தத்தின் வரலாற்றைக் கூறிக் கர்ணனுடைய வதத்தைப் பிரதிஜ்ஞை செய்தது)

தர்மசீலரும் கோபங்கொண்டவருமான அரசருடைய அந்த வசனத்தைக் கேட்டு, அதிரதனும் மஹாத்மாவும் தீரஸ்வபாவமுடையவனும் முடிவில்லாத வீரியமுள்ளவனுமான ஜிஷ்ணுவானவன், பொறுமையில்லாதவரான யுதிஷ்டிரரைப் பார்த்துக் கூறலானான். 'குந்தீ புத்திரரே! அளவிட முடியாத பராக்கிரமத்தை உடையவனும் அதிரத புத்திரனும் மிக்க கொடையாளியுமான அந்தக் கர்ணன், துரோணர் கொல்லப்பட்டதையும் தார்த்தராஷ்டிரர்கள் ஆழ்ந்த கடலில் உடைபட்ட மரக்கலம்போல மதிமயக்கமுற்றவர்களாகவும் சத்துருக்களை ஜயிப்பதில் உத்ஸாகத்தை இழந்தவர்களாகவும் இருப்பதையும் அறிந்து, பிறகு, ஸகோதரன் போல் விரைபவனாகவும் திருதராஷ்டிர புத்திரர்களைக் கரையேற்றி விடுகிறவனாகவும் யுத்தத்தில் ரதத்தோடு என்னை விரைவாக எதிர்த்து வந்தான். அரசரே! நான் இப்பொழுது ஸம்சப்தகர்களோடு போர் புரிந்துகொண்டிருக்கும் சமயத்தில், என் முன்னிலையில் கௌரவ சேனைக்கு முன்பாகத்தில் செல்லுந்தன்மையுள்ள அசுவத்தாமா ஸர்ப்பங்கள் போல் விளங்குகிற பாண ஸமூகங்களை இறைத்துக்கொண்டு விரைவாகத் தோன்றினார். மிக்கசூரரான அந்தத் துரோணபுத்திரர் என்னுடைய துவஜத்தின் நுனியைப் பார்த்து அநேக ரதிகர்களுடைய கூட்டங்களை ஏவினார். நான் அவர்களுள் ஐந்நூறு ரதிகர்களையும் கொன்று, கர்ஜிக்கின்ற துரோண புத்திரரை அடைந்தேன். மஹாத்மாவான அந்தத் துரோண புத்திரர், அந்தச் சேனையின் மத்தியில் ஸ்வாதியை அடைந்திருக்கின்ற சுக்கிரன் போலப் பற்பலவிதமாயும் விசித்திரமாயும் இருக்கிற பாண ஸமூகங்களை இறைத்துக்கொண்டு ஸமானனான என்னையும் தடுத்தார். அவர் என் மீது கழுகிறகுகளுடன் கூடியவைகளும் பூமியில் பிரகாசிக்கின்றவைகளுமான பாணங்களை நான்கு பக்கத்திலும் பிரயோகித்து யுத்த மத்தியில் அதிசீக்கிரமாகத் தடுத்துப் பிறகும் என்மீது பாணஸமூகங்களைப் பிரயோகித்தார். அந்த மகாரதனுடைய நாண்கயிற்றை இழுத்தலும் இழுத்து அம்புகளை எய்தலும் காணப்படவில்லை. அவர் அம்புகளை எடுப்பவராகவாவது வில்லில் பூட்டுபவராகவாவது, வில்லை அசைப்பவராகவாவது, இழுப்பவராகவாவது, அம்பை விடுப்பவராகவாவது காணப்படவில்லை. இடக்கையினாலோ வலக்

கையினாலோ எதனால் எய்கிறாரென்பதும் காணப்படவே இல்லை. ஆசார்யரைப்போல நான்கு பக்கத்திலும் மிக்க ஆச்சரியத்தைக் காட்டிக்கொண்டு யுத்தபூமியில் சுற்றிவந்தார். கண்களுக்கு விஷமாயிருப்பதும் பகைவர்களுடைய உயிரை வாங்குகின்றதும் பாணஸமூகங்களால் எல்லாத் திக்குக்களையும் நிரப்புகின்றதுமான மஹாத்மாவான பிராம்மணாதமருடைய வில்லானது எப்பொழுதும் வளைந்து கொள்ளிவட்டம்போலிருந்தது. பிறகு, வீரரான த்ரௌணியானவர் விரைவாக அஸ்திர பலத்தினால் காலமேகமானது மாரிக்காலத்தில் நீரைப்பொழிவது போலக் காதுவரையில் நன்றாக இழுத்துவிடப்பட்ட பலவேறு அம்புத் திரள்களைப் பிரயோகித்தார். அவர் ஐந்து பாணங்களால் என்னையும் கூர்மையுள்ள ஐந்து பாணங்களால் வாஸுதேவரையும் அடித்தார். நான் ஒரு நிமிஷநேரத்துக்குள்ளாக நல்ல முனையுள்ளவைகளும் ஸ்வர்ணமயமான கட்டுக்களுள்ளவைகளுமான பாணங்களால் அவரை அடித்தேன். நன்றாக அடிக்கப்பட்டவரும் ரதத்தை இழந்தவருமான அந்தத் துரோணபுத்திரர் தம்முடைய ரதத்திலுள்ள ஸாமக்ரிகள் என்னாலழிக்கப்பட்டதையும் அஸ்திரங்கள் ரத்தத்தினால் பூசப்பட்டதையும் பார்த்துக்கொண்டே கர்ணனுடைய தேர்ப்படையில் நுழைந்தார். பிறகு, யுத்தத்தில் அவமதிக்கப்பட்டதும் யுத்தவீரர்களழிக்கப்பட்டதும் ஓடுகின்ற யானைக் கூட்டங்களோடு கூடியதுமான சேனையைக்கண்டு, நாசஞ்செய்யுந்தன்மை பொருந்தினவனான கர்ணன், விரைவனாகிப் பிரதானர்களான ஐம்பது ரதிகர்களோடுகூடி (என்னை) எதிர்த்து வந்தான். நான் அவர்களை நாசஞ்செய்து கர்ணனைத் துரத்திவிட்டு உம்மைப் பார்ப்பதற்காக விரைவுடன் வந்தேன். ஸிம்மத்தைக்கண்ட பசுக்கள் போல எல்லாப்பாஞ்சாலர்களும் கர்ணனைக் கண்டு பயமடைகிறார்கள். ப்ருதாபுத்திரரே! திறக்கப்பட்டிருக்கிற யமனுடைய வாயை நோக்கிச்செல்வதுபோலக் கர்ணனை எதிர்த்துச்சென்று பிரபத்திரகர்களெல்லாரும் பயமடைந்திருக்கிறார்கள். அந்தச் சேனைக் கூட்டங்களைக் கரையேற்றுவிப்பதற்காகப் போகப்போகிறேன். பாக்கியத்தினால் உம்மை க்ஷேமமுள்ளவராகப் பார்த்தேன். பாரதரே! இப்பொழுது இந்த யுத்தத்தில் காணப்படுவனேயாகில், நான் ஸூதபுத்திரனைக் கொல்வேன்; வாரும். யுத்தத்திற்காக நிச்சயத்துடன் கூடினவர்களும் யுத்தஞ்செய்வதில் விருப்பமுள்ளவர்களுமான என்னையும் ஸூதபுத்திரனையும் இப்பொழுது பாரும். பாரதரே! ராஜகுமாரர்களான ஆறாயிரம் பிரபத்திரகர்கள் பெரிய மீனினுடைய வாயை அடைந்தாற்போலக் கர்ண

னுடைய வாயை அடைந்து சுவர்க்கலோகத்தை அடைவதின் பொருட்டு யுத்தத்தில் முழுகிவிட்டார்கள். இப்பொழுது அவர்களை யுத்தத்தினின்று விடுவிப்பதற்கும் எல்லாவிதத் தாலும் ஸூதபுத்திரனைக் கொல்வதற்கும் போகப்போகிறேன். மஹானுபாவரே! அரசர்களுள் சிறந்தவரே! பிறகு விஸ்தாரமாகப் பகைவர் படையை எதிர்த்துக்கொண்டு இந்திரன் வ்ருத்ராஸுரனோடு போர்புரிவதுபோலச் சிறந்தவீரனை ஸூத புத்திரனோடு எதிர்த்து நான் யுத்தத்தில் போர்புரியப்போகிறேன். இப்படி இருக்கும் ஸமயத்தில், நான் இப்பொழுது ஸூதபுத்திரனை வெல்லும் விஷயத்திலும், அவ்வாறே அரசனான துர்யோதனனை வெல்லும் விஷயத்திலும், இன்னும் என்னோடு எதிர்த்துப் போர்புரிய விரும்புகிறவர்கள் விஷயத்திலும் செய்யவேண் டியதைச் செய்யச் சக்தியுள்ளவனாயிருக்கிறேன். அரசரே! அரசர்களுள் சிங்கம்போன்றவரே! பந்துக்களோடு சேர்ந்திருப்ப வனும் பலாத்காரமாகப் போர்புரிகின்றவனுமான கர்ணனை இப்பொழுது நான் கொல்லாமல்போனால் செய்த பிரதிஜ்ஞையை நிறைவேற்றாதவர்களுக்கு எந்தக் கஷ்டமான கதி உண்டோ அந்தக் கதியை நான் அடையக்கடவேன். உம்மிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளுகிறேன். யுத்தத்தில் எனக்கு ஜயத்தைக்கூறும். முன்னால், தார்த்தராஷ்டிரர்கள் பீமனை விழுங்கப்போகிறார்கள். ராஜசிரேஷ்டரே! ஸூதபுத்திரனையும் சேனையையும் அவ்வாறே எல்லாப் பகைவர்களுடைய கூட்டங்களையும் கொல்வேன்' என்று சொன்னான்.

எழுபத்தோராவது அத்தியாயம்

(கர்ணன் மாளவில்லையென்றறிந்த யுதிஷ்டிரர் அர்ஜுனனை நிந்தித்துக் காண்டீவத்தைக் கிருஷ்ணனிடம் கொடுக்க ஏவியது)

அளவுகடந்த வல்லமையுடையவரும் கர்ணனுடைய பாணங் களால் மிகத் தவிக்கச்செய்யப்பட்டவரும் குந்தீபுத்திரரும் அரசரு மான யுதிஷ்டிரர், கர்ணன் ஸௌக்கியமாயிருக்கிறானென்பதைக் கேட்டுப் பல்குனன்விஷயத்தில் கோபங்கொண்டு அவனைப் பார்த்துப் பின்வரும் வாக்கியத்தை உரைக்கலானார்: 'பல்குன! நானும் பீமஸேனனும் மாத்ரீ புத்திரர்களான நகுல ஸஹதேவர் களும் வாஸுதேவரும் ஆகிய நாங்கள் கர்ணனால் ஜயிக்கப் பட்டோம். கர்ணனிடத்தினின்று உண்டான பயத்தினால் இந்த வாஸஸ்தானத்தை விட்டு மறுபடியும் கானகஞ் சென்று தவம் புரிவோம். அல்லது, தார்த்தராஷ்டிரர்களுக்குத் தொண்டு

செய்வோம்' என்றார். கோபத்தினால் கண்கள் மிகச் சிவந்த தர்மராஜரான யுதிஷ்டிரர் பீபத்ஸுவைப் பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டு மீண்டும் அவனிடத்தில் கூறலானார். "மன்னவ! 'கர்ணனை எதிர்த்துப் போர் புரிவதற்கு நான் ஸமர்த்தனல்லேன்' என்று இந்த வசனம் த்வைத வனத்தில் நன்கு சொல்லப்பட்டிருந்தால், பிறகு, நாங்கள் ஸமயத்துக்குத் தக்கபடி காரியத்தைச் செய்து அவ்வாறே ராஜ்யத்தை உபேக்ஷித்திருப்போம். அப்படிப் பட்ட நீ யுத்தத்தில் கர்ணனுடைய வதத்தையும், அவ்வாறே கௌரவ சேனையில் பாதியைக் கொல்வதையும் என்னிடம் பிரதிஞ்ஞை செய்து என்னைப் பகைவர்களுடைய மத்தியில் கொண்டுவந்து யாது காரணத்தினால் உயரத் தூக்கிப் பூமியில் போட்டுப் பொடி செய்தாய்? பார்த்த! ஸத்தியத்துடன் அனுசரித்திருந்து வாஸுதேவரோடு ஸத்தியத்தின்மீது ஆணையிட்டுச் சொல்லிய வார்த்தையாகிய நம்முடைய ஸத்தியத்தைப் பயனற்றதாகச் செய்தாய். பல காலத்தில் பூத்த மரத்தை வெட்டினாய். மூர்க்க! நீ அபகீர்த்திகளால் நன்கு மூடப்பட்டிருக்கிறாய். அர்ஜுன! நீ அர்த்தமில்லாத பேச்சையுடையவன். ஸாதுவல்லை. பயங்கரர்களான எல்லா வீரர்களுள்ளும் பயங்கரனாயிருக்கிற பீமனை விட்டு, ஸூதபுத்திரனைக் கொல்வதற்காக நீ ஏற்படுத்தப் பட்டாய். மந்த புத்தி உள்ளவனான நீ பிறந்து ஏழாவது நாளில் 'புண்ணியாத்மாவும், இந்திரனுக்குக் குந்தியிடத்தில் பிறந்தவனுமான இந்த அர்ஜுனனே அனேக யுத்தங்களில் ஜயமடையப் போகிறான்' என்று ஆகாயத்தில் கூறிய வாக்கு வீணாகப்போய் விட்டது. உத்தமமான தேஜஸுள்ள இந்தப் பாண்டவன் தேவர்களுடைய கூட்டங்களையும் எல்லாப் பிராணிகளையும் ஜயிக்கப் போகிறான். இவன் மத்ரர்களையும் கலிங்கதேசத்தில் பிறந்தவர்களையும் அஸுரர்களையும் ஒன்றுசேர்ந்திருக்கின்ற ராக்ஷஸர்களையும் ஜயிக்கப்போகிறான்; பூமண்டலம் முழுமையையும் மிச்சமின்றி ஜயிக்கப்போகிறான்; கௌரவர்களையும் ஜயிக்கப்போகிறான்; தன்னைச்சேர்ந்தவர்களுடைய கூட்டங்களையும் ஜயிக்கப்போகிறான்; இவனைக்காட்டிலும் சிறந்த வில்லாளியானவன் உண்டாகப் போகிறதில்லை. இவனை ஜயிக்கிறவன் ஒருவனும் முன் உண்டானதுமில்லை; இனி உண்டாகப்போவதுமில்லை. குருவினிடத்தினின்று முறையோடு எல்லா வித்தைகளையும் நன்றாகக்கற்றவனும் ஜிதேந்திரியனுமான இந்தப் பார்த்தன் விரும்பினால் எல்லாப்பிராணிகளையும் தன் வசத்தில் இருக்கும்படி செய்வான். ஓ! குந்தி! உன்னுடைய மஹாத்மாவான இந்தப் புத்திரன் காந்தியினால் சந்திர

னுக்கும் வேகத்தினால் வாயுவுக்கும் நிலைத்திருப்பதனால் மேருவுக்கும் பொறுமையினால் பூமிக்கும் தாபத்தினால் அக்னிக்கும் ஐசுவரியத்தினால் குபேரனுக்கும் சௌரியத்தினால் இந்திரனுக்கும் ஜயத்தினால் விஷ்ணுவுக்கும் ஒப்பானவன். அதிதிக்கு மஹா தேஜஸ்வியான விஷ்ணு தோன்றியதுபோல, (உனக்கு இவன்) தோன்றியிருக்கிறான். உனக்கு ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறவனான இந்த மஹாத்மா தன்னைச் சேர்ந்தவர்களின் ஜயத்தின் பொருட்டும் பகைவர்களுடைய வதத்தின் பொருட்டும் தோன்றியிருக்கிறான்' என்று ஆகாயத்தில் ஒரு வாக்கானது சதசிருங்க பர்வதத்தின் சிகரத்தில் தபஸ்விகள் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது உரைத்தது. இப்பொழுது இவ்விதமாயிருக்கிற நீ அவ்விதம் ஆகவில்லை. தேவர்களுங்கூட நிச்சயமாகப் பொய் சொல்லுகிறார்கள். அவ்வாறே, உன்னை எப்பொழுதும் புகழ்கின்ற மற்ற ரிஷிசிரேஷ்டர்களுடைய வார்த்தைகளைக் கேட்டுத் துரியோதனனுக்கு நான் கீழ்ப்படியாமலிருந்தேன். நீ கர்ணனிடத்தினின்று உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டவனென்பதை நான் அறியேன். பார்த்த! விசுவகர்மாவினால் உண்டுபண்ணப்பட்டதும் சத்தமிடாத அச்சுடன் கூடியதும் மங்களகரமானதும் வானரத்தைக் கொடியாகக் கொண்டதுமான அப்படிப்பட்ட ரதத்தின்மீதேறிக் கத்தியையும் ஸ்வர்ணத்தினால் விசித்திரமான கட்டுக்களுள்ளதும் பனையளவுள்ளதுமான காண்டீவமென்கிற சிறந்த வில்லையும் பிடித்து, வாசுதேவரால் நடத்தப்படுகின்றவனான நீ எவ்வாறு கர்ணனிடத்தினின்று பயந்து யுத்தரங்கத்தை விட்டு விலகிச் சென்றாய்? 'மகாபலசாலியான கர்ணனுடைய யுத்தத்தில் பல்குனன் எதிரில் நிற்கமாட்டான்' என்று துரியோதனன் முன்பு சொல்லியதை நான் மூர்க்கத்தனத்தால் அறியாமற் போனேன். நண்பர்களின் கூட்டமானது அளவிடமுடியாத துன்பத்தில் அகப்பட்டு விட்டமையால் இப்பொழுது தவிக்கப்போகிறேன். அர்ஜுனா! 'நான் எவ்விதத்தினாலும் ஸூதபுத்திரனை எதிர்த்துப் போர் புரிய மாட்டேன்' என்று அப்பொழுதே நீ எனக்குச் சொல்லியிருக்க வேண்டுமன்றோ? அவ்வாறு நீ சொல்லியிருந்தால் நான் ஸ்ருஞ்சயர்களையும், கேகயர்களையும், மற்ற நண்பர்களையும் யுத்தத்துக்கு அழைத்து வந்திருக்கமாட்டேன். இவ்வாறு நடந்து போன பிறகு, இப்பொழுது ஸூதபுத்திரனையும் அவ்வாறே அரசனான துரியோதனனையும் மற்றும் ஒன்று சேர்ந்து என்னை எதிர்த்துப் போர் புரிவதில் விருப்பமுள்ளவர்களா யிருப்பவர்களையும்

அடக்குவதிலும் நான் எதைச் செய்யக் கூடியவனாவேன்? கோவிந்தரே! துரியோதனனுடன் கூடின கௌரவர்களும் யுத்தஞ் செய்ய எண்ணங் கொண்டவர்களாக ஒன்று சேர்ந்திருக்கிற மற்றவர்களுமாகிய இவர்களின் மத்தியில் நான் ஸூதபுத்திரனுடைய வசத்தை அடைந்தமையால், நான் உயிரோடிருப்பது இப்பொழுது நிந்திக்கத் தக்கது. எந்தப் பீமனால் மஹாபயங்கரமான யுத்தத்தில் நான் ரக்ஷிக்கப்பட்டேனோ அவன் ஒருவனே எனக்கு இப்பொழுது நாதன். அவன் ரோஷத்தோடு என்னையும் விடுவித்துப் பிறகு கூர்மையான பாணத்தால் கர்ணனையும் பிளந்தான். பீமஸேனன், கதாயுதத்தை நுனிக்கையிற்கொண்டு இரத்தத்தினால் நனைக்கப்பட்ட மேனியை உடையவனாகி, பிரளயகாலத்தில் காலன் போல ரணகளத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு, போரில் உயிரில் ஆசையை விட்டு, ஒன்றுசேர்ந்திருக்கின்ற கௌரவ முக்கியர்களோடு போர் புரிந்தான். இதோ பீமனுடைய பெரிய சப்தமானது தார்த்தராஷ்டிரர்களால் அடிக்கடி கேட்கப்படுகிறது. பார்த்த! மஹாரதர்களுள் சிறந்தவனும் புருஷசிரேஷ்டனும் யுத்தத்தில் பகைவர்களைக் கொல்பவனும் உன்னுடைய புதல்வனுமான அபிமன்யு இப்பொழுது ஜீவித்திருப்பானாகில் நான் யுத்தத்தில் அவமானத்தை அடையமாட்டேன். மேலும், யுத்தத்துக்கு முந்திச் செல்பவனும் மஹாஸ்திரங்களை அறிந்தவனும் உன்னை ஒத்தவனும் பீமனுடைய குமாரனுமான கடோத்கஜன் யுத்தத்தில் உயிரோடிருப்பானாயின் நான் யுத்தத்தில் புறங்கொடுப்பவனாயிருக்கமாட்டேன். எவனை எதிர்த்து நமது பகைவர்களுடைய படையானது பயத்தினால் கவரப்பட்டதும் கண்களை மூடிக்கொண்டதுமாயிற்றோ, எவன் ஒருவனாக இருந்துகொண்டு இரவில் யுத்தம் செய்தானோ, எவனிடமிருந்து பயந்து (பகைவர்கள்) யுத்தத்தை விட்டு ஓடினார்களோ அந்த மஹானுபாவனும், யுத்தத்தில் கர்ணனை எதிர்த்துப் பாண ஸமூகங்களால் நன்றாக மயங்கச் செய்து, பிறகு, தைரியத்தில் நிலைபெற்றிருக்கிற அந்த ஸூதபுத்திரனால் இந்திரனால் கொடுக்கப்பட்ட அந்தச் சக்தியினால் கொல்லப்பட்டான். (எல்லாம்) என்னுடைய பாக்கியமே. பூர்வஜன்மத்தில் செய்யப்பட்ட பாபங்கள் நிச்சயமாக யுத்தத்தில் பலிக்கின்றன. யுத்தத்தில் உன்னைத் துரும்பாக எண்ணித் துராத்மாவான கர்ணனால் நான் இவ்வண்ணம் துன்புறுத்தப்பட்டேன். சக்தியற்றவனும் பந்துக்களை இழந்தவனுமான ஒரு மனிதன் எவ்வாறு செய்யப்படுவனோ அவ்வாறே நான் கர்ணனாலேயே செய்யப்பட்டேன். எந்த மனிதன் ஆபத்தை அடைந்

திருப்பவனே விடுவிப்பனோ அவனே பந்து; ஸ்னேகத்துடன்கூடின ஸுஹ்ருத்து. இவ்வாறு புராதனர்களான ரிஷிகள் சொல்லு கிறார்கள். பெரியோர்களால் இந்தக் காரியம் எப்பொழுதும் செய்யப்பட்டுமிருக்கிறது. பொற்பிடியுடன்கூடின கத்தியையும் தனுர்வேதத்தையும் பனைமர அளவுள்ள காண்டீவத்தையும் தரித்தவனும் கேசவரால் நடத்தப்படுகின்றவனும் குந்தீ புத்திரனு மான நீ எவ்வாறு கர்ணனிடத்தினின்று விலகுவதற்கு எண்ணங் கொண்டாய்? அப்படிப்பட்ட நீ காண்டீவத்தைக் கேசவரிடம் கொடுத்து விட்டுக் கேசவருக்கு ஸாரதியாயிருப்பாயாகில் அப் பொழுது அவர், வஜ்ராயுதத்தைக் கையிற்கொண்ட தேவராஜன் விருத்ரனைக் கொன்றது போல உக்கிரனான கர்ணனை நாசஞ் செய் வார். நீ (கர்ப்பத்தினின்று) ஐந்தாவது மாதத்திலேயே விழுந் திருந்தாலும் அல்லது குந்தியினுடைய கர்ப்பத்தில் நீ உண்டாகாம லிருந்தாலும் என்னைவிடச் சிறந்த ராஜகுமாரனாகப் பிறந்திருப் பாய். உன்னுடைய 'பல்குனன்' என்னும் கீர்த்தியும் இவ்வாறு அழிந்துபோயிராது என்று கூறினர்.

எழுபத்திரண்டாவது அத்தியாயம்

(யுதிஷ்டிரரைக் கொல்ல முயன்ற அர்ஜுனனை மாதவர் தடுத்து அவரை நிந்திக்க மட்டும் சொல்லியது)

யுதிஷ்டிரர் இவ்வாறு சொல்லியதைக் கேட்டவனும் வெண்மை யான குதிரைகளையுடையவனும் குந்தீபுத்திரனுமான அர்ஜுனன் மிகுந்த கோபங்கொண்டு பரதசிரேஷ்டரான யுதிஷ்டிர ரைக் கொல்ல எண்ணங்கொண்டு கத்தியைக் கையில் எடுத்தான். அப்பொழுது, அவன் சித்தத்தை அறிந்தவரான கேசவர், அவனு டைய கோபத்தை அறிந்து, 'அர்ஜுன! ஏன் இந்தக் கத்தியை எடுக்கிறாய்? எனக்குச் சொல். தனஞ்சய! உன்னால் இவ் விடத்தில் யுத்தஞ் செய்யத் தக்கது ஒன்றையும் நான் காண வில்லை. தார்த்தராஷ்டிரர்கள் இங்கே வரவில்லை. எல்லோரும் பீமனால் தடுக்கப்பட்டார்கள். குந்தீ புத்திர! இந்த யுதிஷ்டிர ராஜரைப் பார்க்கவேண்டுமென்று இவ்விடம் வந்தாய். அப்படிப் பட்ட யுதிஷ்டிரராஜர் க்ஷேமமுள்ளவராய் இருப்பதைப் பார்த் தாய். புலிக்கொப்பான வல்லமையுள்ளவரும் புருஷசிரேஷ்டரு மான அந்த யுதிஷ்டிரரைக் கண்டு ஸந்தோஷகாலம் வந்திருக்க, ஏன் கோபம் உன்னை வந்தடைந்தது? குந்தீபுத்ர! இவ்விடத்தில் உன்னால் கொல்லத்தக்கவனை நான் காணவில்லை யாது காரணத்தினால் வெட்ட விரும்புகிறாய்? உனக்கு என்ன புத்தி மயக்கம்? யாரைக் குறித்து அகாரணமாகப் பெரிய கத்தியைக்

கையில் எடுக்கிருய்? குந்தீ புத்திர! ஆச்சரியமான விக்கிரம முள்ளவனே! கத்தியை உருவினதால் உன்னைக் கேட்கிறேன். நீ செய்ய விரும்பின இக்காரியம் என்ன?' என வினவினர்.

வாஸுதேவர் இவ்வாறு சொல்ல, அர்ஜுனன், கடைக் கண்ணுல் யுதிஷ்டிரரைப் பார்த்துக்கொண்டும் கோபங்கொண்ட ஸர்ப்பம் போல மூச்சு விட்டுக்கொண்டும் கோவிந்தரைப் பார்த்து, 'எவன், 'காண்டீவத்தை வேறு ஒருத்தனுக்குக் கொடு' என்று என்னை ஏவுவனே அவன் தலையை நான் பிளப்பேன்' என்பது என்னுடைய ரஹஸ்யமான விரதம். ஜனார்த்தனரே! அந்த யுதிஷ்டிரரால் (அவ்விதம்) சொல்லப்பட்டவனாகிறேன். கோவிந்தரே! கீர்த்திசாலியான இந்த அரசரால் என்னை நோக்கி கம்பீரமான அர்த்தத்தையுடைய எந்த விஷயம் உமக்கு முன்னிலையில் உரைக்கப்பட்டதோ அதை நான் இப்பொழுது பொறுக்கச் சக்தியற்றவனாயிருக்கிறேன். ஆதலால், தர்மத்தில் ஸஞ்சரிப்பவரான இந்த யுதிஷ்டிரராஜரை வதஞ்செய்யப்போகிறேன் புருஷ சிரேஷ்டரான இவரைக் கொன்று பிரதிஜ்ஞையைப் பரிபாலிக்கப் போகிறேன். யதுநந்தனரே! இதற்காக என்னுல் கத்தி எடுக்கப்பட்டது. ஜனார்த்தனரே! அப்படிப்பட்ட நான் யுதிஷ்டிரரைக் கொன்று ஸத்தியத்தின் விஷயத்தில் கடனளியாகாதிருத்தலை அடைந்து சோகத்தை விட்டு மனக் கொதிப்பைப் போக்கிக்கொண்டவனாகப்போகிறேன். ஐயா! இந்தக் காரியம் (இவ்விதம்) நேர்ந்திருக்கும் தருணத்தில் நீர் எதைத் தக்கதென்று எண்ணுகிறீர்? நீர் இந்த உலகத்தினுடைய உற்பத்தி நாசங்கள் அனைத்தையும் அறிகிறீர். உம்மிடத்தினின்றே தர்மாதர்மங்கள் உண்டாயினவென்று சிறந்ததான வேதம் கூறுகிறது. 'நீர் என்னை நோக்கிச் சொல்வதை நான் அப்படியே செய்வேன்' என்று சொன்னுன்.

கோவிந்தர், பார்த்தனைப் பார்த்து, 'நீ நிந்திக்கத் தக்கவன்; நிந்திக்கத் தக்கவன், என்றே சொல்லிவிட்டு மறுபடியும் சொல்லலானர், 'பார்த்த! புருஷசிரேஷ்ட! அகாலத்தில் கோபத்தை அடைந்தமையால், நீ பெரியோர்களை உபாசித்ததில்லை என்று இப்பொழுது நான் அறிகிறேன். தனஞ்சய! தர்மத்தைக் கண்டு பயந்தவனும் அபண்டிதனுமான நீ இப்பொழுது பாண்டவ சிரேஷ்டரான யுதிஷ்டிரர் விஷயத்தில் செய்ய முயன்றதுபோலத் தர்மங்களுடைய பிரிவுகளை அறிந்தவர்கள் செய்யமாட்டார்களன்றோ? பார்த்த! எவன் அகார்யங்களை செய்தல் அவ்வாறே காரியங்களைச் செய்யாமை இவற்றினுடைய ஸம்பந்தத்தை

அறிகிறாயில்லையோ அவன் மனிதர்களுள் அதமன். தர்மத்தை அனுஸரித்து நன்றாக (அதில்) நிலைபெற்றவர்களும் தர்மத்தினுடைய சுருக்கத்தையும் விரிவையும் அறிந்தவர்களுமான வித்வான்களுடைய நிச்சயத்தை நீ அறியவில்லை. பார்த்த! கார்யாகார்யங்களை நிச்சயிக்கவேண்டிய விஷயத்தில் (ஸந்தேகத்துக்கு உடன்பட்டு) நிச்சயத்தை அறியாமலிருக்கிற மனிதன், நீ மதிமயக்கத்தை அடைந்திருப்பதுபோலவே தன்வசமில்லாதவனாகிப் புத்தி மயக்கத்தை அடைகிறான். கார்யமோ அகார்யமோ இவைகளை எவ்விதத்தினாலும் எளிதில் அறிவது இயலாது. எல்லாம் சாஸ்திரத்தினால் அறியப்படுகிறது. அதனையோ நீ தெரிந்துகொள்ளவில்லை. தர்மங்களை அறிந்தவனான நீ அஜ்ஞானத்தினால் இப்பொழுது ஸத்யத்தைக் காப்பாற்றுகிறாய். பார்த்த! தார்மிகனான நீ பிராணிகளுடைய வதத்தை அறிகிறாயில்லை. அப்பா! பிராணிகளுடைய வதத்தினால் தர்மமானது வீணாகிவிடுகிறதென்பது என்னுடைய அபிப்பிராயம். பொய்யானது சொல்லத்தக்கதாகலாம். ஒருபொழுதும் ஹிம்ஸை செய்யத்தக்கதன்று. மனிதர்களில் சிறந்தவனே! அப்படிப்பட்ட நீ அரசரும் தர்மங்களை அறிந்தவருமான ஜ்யேஷ்ட பிராதாவை சாமான்யனான வேறு ஒருமனிதன்போல எவ்வாறு கொல்லலாம்? (பகைவரின்) கௌரவத்தை நாசஞ்செய்பவனே! யுத்தஞ்செய்யாதவனும் குருவாக இருப்பவனும் அவ்வாறே சத்துருவாக இராதவனும் புறங்காட்டி ஓடுகிறவனும் சரணமடைகின்றவனும் கைகளைக் குவித்துக் கீழ்ப்படிந்தவனும், அவ்வாறே அஜாக்கிரதையாயிருப்பவனுமான மனிதனுடைய வதமானது ஸாதுக்களால் புகழப்படுகிறதில்லை. அவை அனைத்தும் உன்னுடைய குருவான யுதிஷ்டிரரிடத்தில் இருக்கின்றன. பார்த்த! முற்காலத்தில் இந்த விரதத்தை நீ குழந்தைபோலச் செய்தாய். அதனால் (உண்டான) மூர்க்கத்தன்மையினாலேயே அதர்மத்துடன் சேர்ந்த இந்தக் காரியத்தைச் செய்ய முயல்கிறாய். பார்த்த! ஸூக்ஷ்மமானதும் மீறக்கூடாததுமான தர்மங்களுடைய கதியை நன்றாகத் தெரிந்துகொள்ளாமல் யாது காரணத்தினால் நீ உன்னுடைய குருவைக் கொல்ல விருப்பமுள்ளவனாக எதிர்த்து ஓடுகிறாய்? பாண்டவ! இந்தத் தர்மரஹஸ்யத்தை உனக்குச்சொல்லுகிறேன். பரதர்களில் சிறந்தவனே! எதனை உனக்குப் பீஷ்மராவது, அரசரான யுதிஷ்டிரராவது, க்ஷத்தாவான விதுரராவது, புகழ்பெற்றவளான காந்தாரியாவது, குந்தியாவது, கீர்த்திமதியான த்ரௌபதியாவது உரைப்பார்களோ அதனை உனக்கு உரைக்கப்

போகிறேன். தனஞ்சய! இதனை உண்மையாக நீ தெரிந்துகொள். ஸத்யத்தை உரைப்பது நலம். ஸத்யத்தைவிட மேலானது இல்லை. அந்த ஸத்தியமானது உள்ளபடி அறியப்படுவது மிக்க கஷ்டமென்பது என்னுடைய அபிப்பிராயம். எந்த இடத்தில் பொய் மெய்யின் பயனைத் தருமோ, மெய் பொய்யின் பயனைத் தருமோ அந்த இடத்தில் மெய்யானது சொல்லத்தகாததாக இருக்கும்; பொய்யானது சொல்லத் தக்கதாக இருக்கும். விவாககாலத்திலும், மாதைச்சேருங் காலத்திலும், பிராணுபத்து நேர்ந்த ஸமயத்திலும், எல்லாச் சொத்துக்களும் கொள்ளை போகும் தருணத்திலும், பிராம்மணனுக்கு உபகாரஞ்செய்ய வேண்டிய விஷயத்திலும் பொய் சொல்லலாம். இந்த ஐந்துபொய்களும் பாதகத்துக்குக் காரணமாகாவென்று(பெரியோர்கள்) சொல்லுகிருர்கள். எல்லாப் பொருள்களும் களவுபோகுந் தருணத்தில் பொய் சொல்லத்தக்கதாக இருக்கும். அச்சமயத்தில் பொய் உண்மையாகும் ஸத்யமும் பொய்யாகும் எவனால் ஸத்யமானது நிச்சயிக்கப்படவில்லையோ, அப்படிப்பட்ட அறிவில்லாதவன் நாசஞ்செய்யப்படுகிருன். (மனிதன்) மெய்யையும் பொய்யையும் நன்ருக நிச்சயித்த பிறகே தர்மங்களை அறிந்தவனுகிருன். மிக்க உக்கிரனை புருஷன்கூட அறிவுள்ளவனுக இருப்பானுகில், கண்ணில்லாத ஒரு பிராணியை வதம் செய்ததினுல் பலாகனென்பவன் அடைந்தது போல மிக்க அதிகமான புண்யத்தை அடைவான். என்ன ஆச்சர்யம்! பண்டிதனல்லாத ஒரு மூடன் தர்மத்தில் விருப்பமுள்ளவனுயிருந்தும் நதிகளில் கௌசிகன் அடைந்தது போல் மிக்க அதிகமான பாவத்தை அடைவான்' என்று கூறினர்.

அர்ஜுனன், 'பகவானே! இதனை நான் அறியும்படி, பலாகனுக்கும் கண்ணில்லாத பிராணிக்கும் உள்ள ஸம்பந்தத்தையும், நதிகளுக்கும் கௌசிகனுக்கும் உள்ள ஸம்பந்தத்தையும் உரைப்பீராக' என்று வினவ, வாஸுதேவர், 'பாரத! பலாகனென்கிற ஒரு மிருகவேட்டை ஆடுகிறவன் இருந்தான். அவன் பிள்ளைகளையும் பெண்களையும் மனைவியையும் ரக்ஷிப்பதற்காக மிருகங்களைக் கொன்று கொண்டிருந்தான். மனப்பூர்வமாக (அவைகளைக்) கொல்லவில்லை. தன்னுடைய தர்மத்தில் நிலை தவராதவனுன அந்தப் பலாகன் அஸூயை இல்லாவனுக (க்கொண்டுவந்த மிருகங்களின் மாம்சங்களைத்) தினந்தோறும் நன்ருகப் பகிர்ந்து வயது முதிர்ந்தவர்களான தாய் தந்தையர்களையும் தன்னை அடுத்திருக்கின்ற மற்றவர்களையும் போஷித்து வந்தான். அவன் ஒரு சமயத்தில் மிருகங்களை அடைய விரும்பியும் ஓரிடத்தி

லாவது மிருகத்தை அடையவில்லை. பிறகு, அவன் பெரியதும் மூக்கையே கண்ணாகக் கொண்டதுமான ஒரு துஷ்டமிருகத்தைக் கண்டான். முன்பு பார்த்திராததானாலும் அந்தப் பிராணியானது அவனால் அப்பொழுது கொல்லப்பட்டது. பொட்டையான அந்தப் பிராணியானது கொல்லப்படவே, ஆகாயத்தினின்று பூமாரியானது விழுந்தது. பிறகு, மிருகவேடனை அழைத்துக்கொண்டு போவதற்காக அப்ஸர ஸ்திரீகளுடைய கானங்களாலும் நான்குவித வாத்திய கோஷங்களாலும் ஒலிக்கின்ற மனோஹரமான விமானமானது ஸ்வர்க்கத்தினின்று புறப்பட்டு வந்தது. அர்ஜுன! அந்தப் பிராணியானது எல்லாப் பிராணிகளும் நாசமடைவதற்காகத் தவம் புரிந்து வரத்தைப் பெற்றது. பிரம்மதேவரால் அது குருடாகச் செய்யப்பட்டது. எல்லாப் பிராணிகளையும் அழிப்பதில் நிச்சயமுள்ள அந்தப் பிராணியைக் கொன்று பலாகன் ஸ்வர்க்கலோகத்தை அடைந்தான். இவ்வாறு, தர்மமானது எளிதில் அறியமுடியாதது. தவஞ் செய்பவர்களுள் சிறந்தவனும் அனேக சாஸ்திரங்களைக் கற்றறிந்தவனுமான [1] கௌசிகன் என்கிற ஒரு பிராம்மணன் இருந்தான். அவன் நதிகள் சேருமிடத்தில் கிராமத்துக்குச் சிறிது தூரத்தில் வஸித்து வந்தான். "நான் எப்பொழுதும் மெய்யே சொல்லவேண்டும்" என்று அவன் விரதங் கொண்டிருந்தான். தனஞ்சய! அப்பொழுது அவன் ஸத்தியவாதி என்று பிரசித்திபெற்றிருந்தான். பிறகு, திருடர்களிடமிருந்து பயந்து அப்பொழுது சிலர் அந்த வனத்தில் வந்து புகுந்தார்கள். திருடர்கள் கோபங்கொண்டு அவ்விடத்திலும் முயற்சியோடு அவர்களைத் தேடினார்கள். பிறகு, அந்தத் திருடர்கள், ஸத்யவாதியான கௌசிகனை வந்தடைந்து, 'பகவானே! ஜனங்கள் எந்த வழியினாலே சென்றார்கள்? எங்களால் வினவப்பட்ட நீர் ஸத்யமாகச் சொல்லும். அதனை நீர் அறிவீராகில் எங்களுக்குச் சொல்லும்' என்று வினவினார்கள். ஸத்யத்தினுடைய வகைகளை அறியாதவனான அந்தக் கௌசிகன் அந்தத் திருடர்களுக்கு மெய்யைச் சொல்லிவிட்டான். அந்தக் கௌசிகன், திருடர்களே! ஜனங்கள் அனேக மரங்களாலும் கொடிகளாலும் புதர்களாலும் அடர்ந்திருக்கின்ற இந்த வனத்தை அடைந்

---

[1] சாந்தி பர்வம் 109 வது அத்தியாயம் பார்க்க. அங்கே, கௌசிகன் கதை வேறாக இருக்கிறது. அங்கு, 'கங்கைக் கரையிலுள்ள கோட்டானைப் போலக் கொலை செய்கிறவனும் மிகப் பெரிய புண்யத்தையடைவான்' என்று உள்ளது. 'கங்கைக் கரையில் ஒரு கோட்டான் ஸர்ப்பங்களுடைய அனேக முட்டைகளை நாசஞ் செய்தது' என்றும், அதனால் அநேக ஸர்ப்பங்கள் உண்டாகி உலகத்திற்குத் தீங்கு விளைவிக்காமற்போனதனால் அக்கொலை நன்மையாயிற்று' என்றும் பழைய உரை ஒரு கதை கூறுகிறது.

திருக்கிறார்கள்' என்று அவர்களைப் பற்றித் திருடர்களிடம் உண்மையை வெளிப்படுத்தினான். பிறகு குரூரர்களான அந்தத் திருடர்கள் அந்த ஜனங்களைக் கண்டு கொன்றுவிட்டார்களெனக் கேள்வி. தர்ம ஸூக்ஷ்மங்களில் உண்மையை அறியாதவனான கௌசிகன் பிறகு பெரிய அதர்மமான கெட்ட வாக்கின் தோஷத்தினால் மிகவும் கஷ்டமான நரகத்தை அடைந்தான். புராதன சாஸ்திரங்களை அறிந்தும் தர்மங்களை நன்றாகத் தெரிந்துகொள்ளாதவனும் முதியவர்களிடத்து ஸந்தேகங்களைக் கேளாதவனுமான மூடன் குருடன் குழியில் விழுவதுபோல் விழுகிறான். அதில் உனக்குக் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க லக்ஷணம் ஒன்றே ஆகும். முழுதும் தெரிந்து அநுஷ்டிப்பது அஸாத்யமென்று இதில் வ்யவஸ்தை ஏற்பட்டுள்ளது. முக்கியர்களான அநேக ஜனங்கள் ஸத்யத்தைத் தர்மமென்று சொல்லுகிறார்கள். பார்த்த! இதைப் பற்றி நான் அஸூயைப்படவில்லை. இது எல்லாவிடத்திலும் விதிக்கப்படவில்லை. மற்ற அநேக ஜனங்கள் வேதத்தை ஓதி உணரவேண்டுமென்று கூறுகின்றார்கள். நான் இதைப் பற்றியும் அஸூயைப்படவில்லை. அதில் எல்லாம் விதிக்கப்பட்டிருக்கின்றன. எது அஹிம்ஸையோடு கூடினதோ அது தர்மமென்பது நிச்சயம். ஹிம்ஸை செய்யப்பட்டவர்களுடைய ஹிம்ஸையை நிவர்த்திப்பதின் பொருட்டுத் தர்மசாஸ்திரம் செய்யப்பட்டிருக்கிறது. தரிக்கிற சக்தியுள்ளதாயிருப்பதனால் தர்மம் என்று சொல்லுகிறார்கள். தர்மம் பிரஜைகளைத் தரிக்கிறது. பிராணிகளுடைய அபிவிருத்தியின் பொருட்டுத் தர்மசாஸ்திரம் செய்யப்பட்டிருக்கிறது. அது (பிராணிகளின்) உற்பத்தியுடனும் விருத்தியுடனும் கூடியிருத்தலாலேயே தர்மமென்பது நிச்சயம். அநீதியினால் ஜயத்தை அடைய எண்ணங்கொண்டு தர்மத்தை வினவுகிற மனிதர்களின் விஷயத்தில் சொல்லாமலிருத்தலால் விடுதல் உண்டாகுமாயில் எவ்விதத்தினாலும் சொல்லக் கூடாது. அவசியம் சொல்லத்தக்க விஷயத்தில் சொல்லாமலிருப்பதால் ஸந்தேகத்தையும் பாராட்டுவார்கள். அநியாயமாக ஒருவனுடையதைக் கவர எண்ணித் தர்மத்தை வினவுகிறவர்கள் விஷயத்தில் மெய் சொல்வதைவிடப் பொய் சொல்வது நலமாகும் என்பது திண்ணம். பிராணபாய ஸமயத்திலும் விவாகத்திலும் எல்லா ஜாதிக்கும் மஹாபயம் நேர்ந்திருக்கும் ஸமயத்திலும் எல்லாப் பொருள்களுக்கும் அழிவு நேர்ந்த ஸமயத்திலும் பொய்யானது சொல்லத் தக்கதாகும். அந்த விஷயங்களில் புத்திமான்கள் பொய் சொல்லுதலை அதர்மமாக எண்ணுகிறார்களில்லை. ஸமர்த்தன்,

எது பொய்யாகாதோ அதனை எல்லாவிதத்திலும் சொல்ல வேண்டும். திருடர்களோடு நேர்ந்திருக்கின்ற ஸம்பந்தமானது சபதத்திலுங்கூட விடப்படவேண்டும். அந்தவிஷயத்தில் மெய் சொல்வதைவிடப் பொய்சொல்லியாவது விலக்குதல் நலமென்று (பெரியோர்களால்) ஆராய்ந்து நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஸத்தியத்துக்கு உடன்பட்டு எவ்விதத்திலும் திருடர்களுக்குப் பொருளைக் கொடுத்தலாகாது. பாபிகளுக்குப் பொருள் கொடுக்கப் படுமாகில், அது கொடுத்தவனையும் பீடிக்கும். ஆதலால், ஒருவன் தர்மகார்யத்தின் பொருட்டுப் பொய் சொல்லுதலால் பொய்யனாகான். பார்த்த! முறைப்படி (ஸத்தியத்தினுடைய) லக்ஷணம் உனக்கு என்னால் உரைக்கப்பட்டது. இதனை அறிந்து யுதிஷ்டிரர் கொல்லப்படத் தக்கவரானால் சொல்' என்று கூறினர்.

அர்ஜுனன், 'பேரறிவாளரும் மிக்க புகழுள்ளவரும் எங்கள் க்ஷேமத்தில் விருப்பமுள்ளவரும் சொல்வதுபோலவே, எங்களுக்கு நீர் வார்த்தையைச் சொன்னீர். கோவிந்தரே! நீர் எமக்குத் தாய்க்கு ஒப்பானவர்; நீர் தந்தைக்கும் ஒப்பானவர்; நீர் உத்தமமான கதி; நீரே எவ்விதத்திலும் அடையத்தக்க பொருள். உமக்கு மூவுலகங்களிலும் ஓரிடத்திலாவது தெரியாதது இல்லை. ஆதலால் நீர் உத்தமமான தர்மம் அனைத்தையும் உள்ளபடி அறிகிறீர். தர்மராஜரும் பாண்டுபுத்திரருமான யுதிஷ்டிரரைக் கொல்லத்தகாதவரென்று எண்ணுகிறேன். அதர்மத்துடன்கூடின இந்தக் காரியத்தில் வதம் செய்யாமல் பிரதிஜ்ஞையை ரக்ஷித்துக்கொள்வதற்குரிய காரியத்தை உரைப்பீராக. இந்த விஷயத்திலேயே சொல்ல வேண்டுமென்று விரும்பப்பட்ட இந்த வேறோர் உண்மையைச் சொல்லும். தாசார்ஹரே! என்னுடைய விரதத்தை அறிந்திருக்கிறீர். கேசவரே! மனிதர்களுள் எவனொருவன் என்னைப் பார்த்து, 'பார்த்த! வேறு ஒருவனுக்குக் காண்டீவத்தை நீ கொடுத்துவிடு' என்று சொல்லுவனோ, எவன் என்னைவிட அஸ்திரத்தில் வீர்யத்தினாலாவது அதிகரித்தவனோ அவனை, பீமன், 'தூபரக' என்று தன்னை அழைத்தவனைக் கொல்லுவதுபோல நான் பலாத்காரமாகக் கொல்வேன். கேசவரே! ஆதலால், ராஜாவான யுதிஷ்டிரர் உமக்கு எதிரில் என்னைப் பார்த்து 'விருஷ்ணி வீரரிடத்தில் வில்லைக் கொடுத்துவிடு' என்று அடிக்கடி சொன்னாரன்றோ? அவரை நான் கொல்வேனேயாகில் நிச்சயமாக அரசருடைய வதத்தை நினைந்து, வீர்யத்தை இழந்தவனும் மனநிலைமையை இழந்தவனுமான நான் பாவத்தினால் விடுபட்டவனானாலும் ஜீவலோகத்தில் சிறிதுகாலங்கூட இருக்க

மாட்டேன். தார்மிகர்களுள் சிறந்தவரே! மாதவரே! எவ்வாறு என்னுடைய பிரதிஜ்ஞையானது உலகத்திலுள்ள ஜனங்களுடைய புத்தியில் ஸத்தியமாகத் தோன்றுமோ, எவ்வாறு யுதிஷ்டிரரும் நானும் உயிரோடிருப்போமோ, அவ்வாறான புத்தியைத் தருவதற்கு நீர் தகுந்தவராக இருக்கிறீர்' என்று பிரார்த்தித்தான்.

வாஸுதேவர், 'வேந்தரான யுதிஷ்டிரர் யுத்தத்தில் கர்ணனால் கூர்மையுள்ள பாணங்களுடைய ஸங்கங்களால் விசேஷமாக அடிக்கப்பட்டவராகவும் துன்பமுற்றவராகவும் களைத்தவராகவும் இருக்கிறார். வீர! இவர் எப்பொழுதும் போர்புரிந்தும் ஸூத புத்திரனால் அம்புகளால் அதிகமாக அடிக்கப்பட்டும் இருக்கிறார். ஆதலால், நீ, துக்கத்தையுடைய இவரால் கோபத்துடன் தகாத தான இந்த வசனத்தை உரைக்கப்பட்டாய். 'கோபத்தை யடையும்படி செய்யப்படாவிட்டால் இவன் யுத்தத்தில் கர்ணனைக் கொல்லமாட்டான்' என்று அவர் இவ்வண்ணம் உரைத்தார். பார்த்த! பாண்டுநந்தனரான இந்த யுதிஷ்டிரர் அந்தப் பாவியான கர்ணன் உலகத்தில் மற்றவர்களால் ஸஹிக்கத் தகாதவனென்பதையும் அறிந்திருக்கிறார். ஆதலால், அதிக கோப முள்ளவரான அவரால் நீ எனக்கு நேரில் கடுமையான வார்த்தை களை உரைக்கப்பட்டாய். எப்பொழுதும் விடாமுயற்சியுள்ளவனும் (பகைவர்களால்) எப்பொழுதும் ஸஹிக்கமுடியாதவனுமான கர்ணன் விஷயத்தில், 'இப்பொழுது யுத்தரங்கத்தில் யுத்தரூபமான சூதாட்டமானது தொடங்கப்பட்டிருக்கிறது. அவன் கொல்லப் பட்டால் கௌரவர்கள் ஜயிக்கப்பட்டவர்களாவார்கள்' என்று அரசரான தர்மபுத்திரருக்கு எண்ணமிருக்கிறது. அர்ஜுன! ஆதலால், தர்மபுத்திரர் வதத்துக்கு உரியவரல்லர். உன்னுடைய பிரதிஜ்ஞையானது பாதுகாக்கத்தக்கது. இவர் உயிரோடிருந்து கொண்டே எதனால் மரித்தவராவாரோ அப்படிப்பட்டதும் உனக்குத் தகுந்ததுமான ஒரு விஷயத்தை என்னிடமிருந்து இப்பொழுது நீ தெரிந்துகொள். கௌரவத்துக்குத் தகுந்தவனை ஒரு மனிதன் எப்பொழுது கௌரவத்தைப் பெறுகிறானோ அப்பொழுதுதான் அவன் ஜீவலோகத்தில் பிழைத்திருப்பவ னாகிறான்; எப்பொழுது பெரிய அவமானத்தை அடைகிறானோ அப்பொழுது அவன் பிழைத்திருந்தாலும் மரித்தவன் என்றே சொல்லப்படுகிறான். இந்த அரசர் எப்பொழுதுமே உன்னாலும், பீமனாலும், அவ்வாறே நகுல ஸஹதேவர்களாலும், உலகத்தி லுள்ள, முதியோர்களாலும், சூரர்களாலும் நன்கு மதிக்கப்பட் டவர். இவருக்கு அவமானத்தைச் சிறிது வெளிப்படுத்துவாயாக. பார்த்த! பூஜ்யரான யுதிஷ்டிரரை 'நீ' என்றுசொல். பாரத!

குருவானவர், 'நீ' என்று சொல்லப்பட்டாலே கொல்லப்பட்டவராகிருர். குந்திபுத்திர! தர்மராஜனை யுதிஷ்டிரரிடத்தில் இவ்வாறு நடந்துகொள். குருஸ்ரேஷ்ட! அதர்மத்துடன் கூடின இந்தக் காரியத்தைச் செய். சுருதிகளுள் உத்தமமான இந்த சுருதியானது அதர்வாவினுலும் அங்கிரஸினுலும் கண்டறியப்பட்டிருக்கிறதன்ருே? மேன்மையில் விருப்பமுள்ள மனிதர்கள் இதனை எப்பொழுதும் ஆலோசியாமலே அனுஷ்டிக்க வேண்டும். பிரபுவாகவும் குருவாகவும் இருப்பவர், 'நீ' என்று சொல்லப்படுவாராகில் அது அவருக்கு ஆயுதங்கள் விழாமலே நேர்ந்த வதமாகும். தர்மங்களை அறிந்தவனுன நீ தர்மராஜர் விஷயத்தில் நான் சொல்லியதைச் சொல்வாயாக. பாண்டவ! இந்தத் தர்மராஜர் உன்னிடத்திலிருந்து தகாததான அவமானத்தை நன்ருயடைந்தவுடன், இவருடைய சரணங்களில் அபிவாதனஞ் செய்து, பிறகு, நன்மையை விளைவிக்கக் கூடியதும் ஸமாதானப் பேச்சுடன் கூடியதும் ஹிதமாயிருப்பதுமான சிறந்த வசனத்தைச் சொல். தர்ம மார்க்கத்தை அனுசரித்தவரும் கற்றறிந்தவரும் அரசரும் ப்ராதாவுமான யுதிஷ்டிரர் ஒருகாலும் உன் விஷயத்தில் கோபத்தைப் பாராட்டமாட்டார். பார்த்த! நீ பாவத்தை விளைவிக்கின்ற பொய்யினின்றும் ப்ராதாவின் வதத்தினின்றும் விடுபட்டவனுகிப் பிறகு தைரியத்துடன் கர்ணனை நாசஞ் செய்வாயாக' என்று கூறினுர்.

எழுபத்துமூன்ருவது அத்தியாயம்

(யுதிஷ்டிரரை நிந்தித்ததற்காகத் தற்கொலை செய்துகொள்ள முயன்ற அர்ஜுனனை மாதவர் தடுத்துத் தற்புகழ்ச்சி செய்யச் சொல்ல, அவன் அங்ஙனமே செய்து பின்பு பொறுக்கும்படி யுதிஷ்டிரரை வேண்டினது)

ஜனுர்த்தனர் இவ்வாறு சொல்லக் கேட்ட குந்தி புத்திரனுன அர்ஜுனன், பிறகு, அந்த நண்பருடைய வசனத்தைப் புகழ்ந்து, அதன் பிறகு, தர்மராஜரைப் பார்த்து இதற்கு முன் சொல்லப் படாத குரூரமான வசனத்தைப் பலாத்காரமாகச் சொல்லத் தொடங்கினுன். 'அரசனே! இப்பொழுது நீ பாபத்தைச் சொல்லாதே. நீ போர்க்களத்திலிருந்து ஒரு க்ரோச தூரம் விலகி நிற்கிருய். எந்தப் பீமன் எல்லா உலகங்களிலுமுள்ள வீரர்களோடும் யுத்தம் செய்கிருனே அவனல்லனே என்னை நிந்திப்பதற்குத் தகுந்தவன்! வீரனுன பீமன் சமயத்தில் பகைவர்களை மிக்க துன்பமடையும்படி செய்து அரசர்களுள் சிறந்த வீரர்

களையும் கொன்று பிரதானர்களான ரதிகர்களையும் முக்கிய மான யானைகளையும் யுத்தத்தில் சிறந்த வீரர்களையும் சூரர்களை யும் கொன்றான். பீமன், வேறு ஒருவனாலும் செய்யமுடியாதென்னும்படி மிகவும் செயற்கரிய காரியத்தைச் செய்கிறான், அவ்வாறே, ரதத்தினின்று துள்ளிக் குதித்துக் கதாயுதத்தை உருவிக்கொண்டு யுத்தத்தில் யானைகளைக் கொல்லுகிறான். எவன் ஆயிரத்துக்கு மேற்பட்ட யானைகளைக் கொன்று பெரிய ஸிம்ம நாதத்தை வெளியிட்டுக்கொண்டு காம்போஜ தேசத்திலும் வனாயு தேசத்திலும் மலைகளிலும் தோன்றினவைகளும் செந்நாய்ப்போலப் பிரகாசிப்பவைகளுமான குதிரைகளையும் மஹாரதர்களையும் மலை போன்ற இரண்டு தந்தமுள்ள யானைகளையும் கொல்லத் தக்கவையான குஞ்சரங்களையும் கொன்று களைப்படையானோ அப்படிப் பட்ட பீமஸேனன் தார்த்தராஷ்டிரர்களுள் மூழ்கிவிட்டான். பகைவர்களை அடக்குகிறவனான அந்தப் பீமன் என்னை நிந்திப்ப தற்குத் தகுந்தவன். இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரமமுள்ள பீமன் சிறந்தகத்தியினால் மனிதர்களையும் குதிரைகளையும் யானை களையும் கொல்லுகிறான்; அவ்வாறே, சக்கரங்களாலும் வில்லினா லும் பகைவரைக் கொல்லுகிறான்; இரு கால்களாலும் பகைவர் களைத் துகைத்து மீண்டும் இரு கைகளாலும் கொல்லுகிறான். மஹா பலசாலியும் குபேரனுக்கும் அந்தகனுக்கும் ஒப்பானவனும் பகைவர்களுடைய கீர்த்திகளை வலியக் கவர்கின்றவனுமான அந்தப் பீமஸேனன் (என்னை) நிந்திக்கத் தகுதியுள்ளவன். எப்பொழுதும் ஸுஹ்ருத்துக்களால் காக்கப்படுகின்ற நீ நிந்திப்பதற்குத் தகுதி யுள்ளவனில்லை. எவன் பெரிய மலைகளுக்கும் மேகங்களுக்கும் ஒப்பான களிங்கர்களையும் வங்கர்களையும் அங்கர்களையும் நிஷாதர் களையும் மாகதர்களையும் பற்பல சத்துருக்களின் கூட்டங்களையும் எப்பொழுதும் கொல்லுகிறானோ அவனல்லவோ நிரபராதியான என்னைப் பற்றிப் பேசுவதற்குத் தகுதியுள்ளவன்? மஹாபலசாலி யான எந்தப் பீமன் யுத்த சமயத்தில் (குதிரைகளுடன்) கூடின ரதத்தில் ஏறிக்கொண்டு வில்லை உதறுகின்றவனாகவும் பாணங்க ளால் நிறைந்த கைப்பிடியுள்ளவனாகவும் பகைவர்கள் மீது மேக மானது நீர்த் தாரைகளைப் பொழிவது போல அம்புத் திரள்களைத் தொடுப்பனோ, பகைவர்க் கூட்டங்களை அழிப்பவனான எந்தப் பீமஸேனன் எண்ணூறு யானைகளை மத்தகத்திரள்களும் துதிக்கை முனைகளும் சிதற அடிக்கப்பட்டவைகளாகக் காண்பித்தானோ பகைவர்களை அடக்குகிறவனான அந்தப் பீமன் என்னை நிந்திப்ப தற்குத் தகுதியுள்ளவன். அரசனே! எந்தப் பீமனால் இப்

பொழுது யுத்தத்தில் கூட்டங் கூட்டமாக ரதங்களும் யானைகளும் குதிரைகளும் மிக்க பலசாலிகளான அனேக அரசர்களும் கொல்லப்பட்டார்களோ, பகைவர்களை அடக்குகிறவனான அந்தப் பீமன் என்னை நிந்திப்பதற்குத் தகுதியுள்ளவன். பலசாலிகளான திருதராஷ்டிர புத்திரர்களும் மஹாபலசாலிகளான வீரர்களும் எவனால் பெரும்பான்மையாகக் கொல்லப்பட்டார்களோ சூரனும் யுத்தத்தில் எதிர்த்துத் தடுக்கமுடியாத வீர்யமுள்ளவனும் பகைவர்களைச் சிக்ஷிப்பவனுமான அந்தப் பீமன் என்னை நிந்திப்பதற்குத் தக்கவன். உக்கிரமான ரூபமுள்ள துர்யோதனனுடைய அந்தச் சேனையை யுத்தத்தில் நன்றாகத் தவிக்கச்செய்பவனும் வீரனும் பகைவர்களால் தாங்கமுடியாத ஆண்மையுள்ளவனுமான எவன் ஒருவனாகவே இருந்துகொண்டே ஸஹிக்கிறானோ அந்தப் பீமனால் நான் நிந்திக்கப்படத்தக்கவனாக இருக்கிறேன். உன்னால் ஒருபொழுதும் சொல்லப்படத்தக்கவனல்லேன். எந்த எந்த யுத்தத்தில் மஹாரதர்கள் உன்னுடைய படையை இப்பொழுது இஷ்டப்படி பிளக்கிறார்களோ அந்த அந்த யுத்தத்தில் மஹாத்மாவான பீமன் சத்ருக்களுடைய கூட்டங்களைத் திடமாக அடித்தான். அந்தப் பீமனால் நான் கொல்லப்படத்தக்கவனாக இருக்கிறேன். நான் உன்னால் ஒருபொழுதும் சொல்லப்படத்தக்கவனல்லன். குந்திபுத்ர! இந்த ஸமயத்தில் குரூரமாகச் சொல்லாதே; சொல்லாதே. நீ எல்லா உலகத்தாராலும் இகழப்படத்தக்கவனாவது போல எம்மைப்போன்றவன் உன்னால் நிந்திக்கப்படத்தக்கவனாகான். மன்னவ! இவ்வாறு என்னைச் சொல்லுகின்ற உன்னுடைய நாவானது இப்பொழுது ஏன் நூறு துணுக்காகச் சிதறிப் போகாமலிருக்கிறது? ஆ! ஆ! நீ இப்பொழுது இங்கு இஷ்டப்படி சொல்லிய இந்த வார்த்தை மிக்க கொடுமையானது. உத்தமர்களான க்ஷத்திரியர்களுக்கு உரியதாகப் பெரும்பான்மையாகச் சொல்லப்படும் பலமானது உன்னால் கொள்ளப்படவில்லை. பாரத! நீ வலிமையற்றவன்; கொடியன். நான் எப்படிப்பட்ட ஸ்வபாவமுள்ளவனென்பதை நீயே அறிகிறாய். வேந்தே! நகுலனால் யுத்தத்தில் எதிர்க்கப்பட்டு யானைகளாலும் குதிரைவீரர்களாலும் போர்புரிகின்ற வீரர்கள் விரைவாகக் கொல்லப்பட்டார்கள். யுத்தத்தில் பிராணனில் ஆசையை விட்டுப் போர்புரிவதில் விருப்பமுள்ளவனும் பகைவர்களை அடக்குகிறவனுமான அந்த நகுலன் என்னை நிந்திப்பதற்குத் தகுந்தவன். பகைப்படையை நொறுக்கிக்கொண்டு போர் புரிகின்ற ஸஹதேவனால் எவராலும் செய்யமுடியாத காரியம் செய்யப்பட்டது. இவ்விடத்தில் வந்த பலசாலியான அந்த ஸஹதேவன் ஒன்றும் சொல்லவில்லை. அவனுக்கும்

உனக்குமுள்ள வேறுபாட்டைப் பார். த்ருஷ்டத்யுமனன், ஸாத்யகி, த்ரௌபதிபுத்திரர்கள், யுதாமன்யு, உத்தமௌஜஸ், சிகண்டி இவர்கள் இப்பொழுது யுத்தத்தில் நன்ருகப் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் என்னை நிந்திப்பதற்குத் தகுந்தவர்கள். நீ தகுதியுள்ளவனல்லை. உன் மூலமாகவே இந்த வைரம் நம்மால் அடையப்பட்டது. அவ்வாறே, அதிகோரமான துயரமும் அடையப்பட்டது. சூதாட்டத்தில் அஜாக்ரதையுள்ள உன்ருல் அடிக்கடி இது செய்யப்பட்டது. அவ்வாறிருக்க, எந்தக் காரணத்திருல் இந்தத் தருணத்தில் நீ நிந்திக்கிருய்? அரசனே! நீயே எப்பொழுதும் அஜாக்ரதையுள்ளவன்; நீயே மூடன்; பரத குலத்தில் பிறந்தவர்களுள் துஷ்டன். உன்னை அடைந்து இந்த ராஜ்யம் போய்விட்டது. பாண்டவர்களும் மஹத்தான அடிமைத் தொழிலை அடைந்தார்கள். வீர! உன்ருலேயே எங்களுக்கு வனவாஸத் துக்கமானது உண்டுபண்ணப்பட்டது; ராஜ்யநாசமும் கோரமான அபிமன்யுவின் வதமும் உண்டுபண்ணப்பட்டன. உன்னை இவ்வாறு மிக்க கொடுந்தன்மையுள்ளவனென்று அறிந்திருந்தும் யாதுகாரணம் பற்றி இப்பொழுது என்னை நிந்திக்கிருய்? அரசனே! உனக்கு லஜ்ஜை இருக்குமாகில் வெட்கம் அடைவாயாக. நன்றி மறந்தவனுன நீ பேசாமலிருந்துகொண்டு எல்லாவற்றையும் பார். பீமன் நித்யம் யுத்தம் செய்கிருன்; நித்யம் அடிக்கடி (பகைவர்களுடைய) கர்வத்தைப் பிளக்கிருன். வேந்தனே! யுத்தத்தில் தனக்குச் சக்தியில்லாத மனிதன் எப்பொழுதும் பொறுமையையே பாராட்ட வேண்டும். பிராம்மணோத்தமர்களுக்கு வாக்கில் பலமென்றும், க்ஷத்திரியர்களுக்குக் கைகளில் பலமென்றும், பிராம்மணர்கள் சொல்லுகின்ருர்கள். பாரத! நீ வாக்கில் பலமுள்ளவனுக இருக்கிருய்; நிஷ்டூரனுகவுமிருக்கிருய். நான் எப்படிப்பட்டவனென்பதை நீயே அறிந்திருக்கிருய். நான் மனைவிகளாலும் புத்திரர்களாலும் உயிரினுலும் தேகத்தினுலும் எப்பொழுதும் உனக்கு இஷ்டத்தைச் செய்வதற்கு முயன்றுகொண்டிருக்கிறேன். இவ்வாறு இருக்கிற என்னை ஊசிகள் போன்ற சொற்களால் துன்பஞ் செய்கிருய். உன்ருல் நாங்கள் ஒரு சுகத்தையும் அறிந்தோமில்லை. த்ரௌபதியின் படுக்கையிலிருக்கிற நீ என்னை அவமதியாதே. உன் நிமித்தமாக மஹாரதர்களைக் கொல்லுகிறேன். அஜாக்ரதையுள்ள நீ எல்லோரிடத்திலும் அதிக சந்தேகமுள்ளவனுக இருக்கிருய். உன்ருல் சுகத்தைச் சிறிதும் நான் அறியவில்லை. நரதேவ! உனக்குப் பிரியத்தின் பொருட்டே ஸத்தியஸந்தரான பீஷ்மர் யுத்தத்தில் தாமே தம் வதோபாயத்தைச் சொன்னுர். யுத்தத்தில் உனக்

காகவே என்னால் நாற்புறத்திலும் காக்கப்பட்ட சிகண்டியினால் பீஷ்மர் கொல்லப்பட்டார். எப்பொழுதும் உபகாரியாயிருந்த துரோணர் ரதத்தினின்று பற்றி இழுக்கப்பட்டு த்ருஷ்டத்யும்னனால் கொல்லப்பட்டார். பரிவாரங்களுடன் கூடினவரும் மஹாத்மாவுமான அந்தத் துரோண புத்திரரும் தடுக்கப்பட்டார். அவ்வாறிருந்தும், நீ க்ரூரன்போற் பேசுகிறாய். அரசனே! உனக்கு நானே பிரியத்தைச் செய்யாதவனாகிறேனாதலால் உனக்குப் பிரியத்தைச் செய்வது கடினம். என்னைத் தவிர வேறு எந்த மனிதன் அப்பிரியத்தைச செய்ய ஆரம்பிப்பானோ அந்த மனிதன் ஸ்வர்க்கத்திலும் இந்தப் பூமியிலும் (என்னால்) விடப்படமாட்டான். நீ சூதாடும் காய்களில் மிக்க பற்றுதலுள்ளவன் ஆகிவிட்டமையால் ராஜ்யவிஷயத்தில் நான் மகிழ்வதில்லை. உன்னாலேயே உண்டு பண்ணப்பட்டதும் பாபமானதும் இழிகுணங்களால் அடையப்படுவதுமான வியசனத்தை யுத்தத்தில் எங்களால் தாண்டவிரும்புகிறாய். சூதுக்காய்களில் தர்ம விரோதமான பல தோஷங்கள் உண்டென்று ஸஹதேவன் சொல்லியவற்றை நீ செவிகொடுத்து கேட்டிருக்கிறாய். இழிந்தவர்களால் பற்றப்பட்ட அந்தச் சூது காய்களை விடுவதற்கு நீ விரும்பாமையால் கோரமான நரகத்தில் உன்னால் எல்லோரும் தள்ளப்பட்டோம். அரசனே! நீ சூதாடினாய். உன்னாலேயே ராஜ்யத்தை இழந்தோம். நமக்கு வியசனம் உன்னால் உண்டாகியது. நீ கடுஞ் சொற்களாகிற கொறடாக்களால் எம்மைத் துன்பத்தையடையச் செய்யாதே. அரசனே! அல்பபுத்தியினால் மறுபடியும் என்னைக் கோபிக்கச் செய்கிறாய்' என்றான்.

ஸ்திரமான பிரதிஜ்ஞையுள்ள ஸவ்யஸாசி, க்ரூரமான இந்தச் சொற்களை யுதிஷ்டிரரைக் கேட்கச்செய்து பெருமூச்சை விட்டுக் கொண்டு அவரை நோக்கி அனிஷ்டத்தைச் சொல்லி, அதன்பிறகு, உறையிலிருந்து கத்தியை மேலே உருவினான். வாஸுதேவர், அந்த அர்ஜுனனைப் பார்த்து. '(அர்ஜுன!) இதென்ன? மறுபடியும் நீ ஆகாயம் போன்ற நிறமுள்ள கத்தியை உறையிலிருந்து உருவுகிறாய்? மித்திர! உண்மையான மறுமொழியைச் சொல். உன்னுடைய காரியஸித்தியின் பொருட்டு மீண்டும் ஒருவசனத்தை உரைக்கப் போகிறேன்' என்று சொன்னார். புருஷோத்தமரால் இவ்விதமாகக் கேட்கப்பட்ட பார்த்தன் மிக்க துயரமுற்றவனாக அவரைப் பார்த்து, 'மாதவரே! நான் குருவைப் பார்த்துக் கடுஞ் சொற்களை உரைத்தமையால் இந்த என் சரீரத்தை நாசஞ் செய்யப்போகிறேன்' என்று சொன்னான். தார்மிகர்களுள் சிறந்தவனான ஜனார்த்தனர் பார்த்தனுடைய இந்த வசனத்தைக்

கேட்டு, 'பார்த்த! உன்னுடைய குணங்களை இப்பொழுது விசேஷமாகச் சொல். அப்படிச் செய்வதனால் நீ உருவமழிக்கப் பட்டவன் ஆவாயென்பது நிச்சயம்' என்று சொன்னார். கோவிந்தருடைய அவ்வாறான வசனத்தைக் கேட்டுப் பிறகு அர்ஜுனன் வில்லைக் கையில் எடுத்துத் தார்மிகர்களுள் சிறந்தவரான யுதிஷ்டிரரை நோக்கி, 'அரசரே! என்னால் சொல்லப்படப் போகிற கெட்ட வார்த்தையைக் கேளும்' என்று கூறலானான்.

'நரதேவரே! பினாகத்தை வில்லாகக்கொண்ட மஹாதேவரைத் தவிர என்னையொத்த வேறு ஒரு வில்லாளி இல்லை. நானோ அந்த மஹாத்மாவினால் அனுமதி கொடுக்கப்பட்டால் க்ஷணத்திற்குள் சராசரங்களுடன்கூடின உலகத்தை நாசஞ்செய்வேன். ராஜரே! என்னாலல்லவோ திக்பாலகர்களையும் திசைகளையும் ஜயித்து எல்லாம் உமக்கு வசப்படுத்தப்பட்டன. என்னுடைய பராக்ரமத்தினால் அந்த ராஜஸூயயாகமானது நிறைந்த தக்ஷிணைகளுள்ளதாக நிறைவேற்றப்பட்டது. உமக்குத் திவ்யமான ஸபையும் ஏற்படுத்திவைக்கப்பட்டது. இந்த இரண்டு கைகளோ பாணங்களால் எல்லாப்பக்கத்திலும் கீறப்பட்டிருக்கின்றன. இடக்கையில் நாணேற்றப்பட்டதும் பாணங்களுடன் கூடியதுமான வில்லும் இருக்கிறது. என்னுடைய பாதங்களும் லக்ஷணத்தினால் சிறந்தவைகள். யுத்தத்தை அடைந்திருக்கின்ற என்போன்றவனை (சத்துருக்கள்) ஜயிக்கமாட்டார்கள்; (என்னால்) வடநாட்டு வீரர்கள் கொல்லப்பட்டார்கள்; மேல்நாட்டு வீரர்களும் அழிக்கப்பட்டார்கள்; கீழ்நாட்டு வீரர்களும் துரத்தப்பட்டார்கள்; தென்னாட்டு வீரர்களும் நாசஞ்செய்யப்பட்டார்கள். ஸம்சப்தகர்களில் சிறுபான்மையரே மிகுந்திருக்கின்றனர். என்னால் உலக முழுவதிலும் பாதி கொல்லப்பட்டுவிட்டது. பகைவர்களுடைய படையானது என்னால் கொல்லப்பட்டு அறுக்கப்பட்டிருக்கின்ற அவயவங்களோடு பூமியில் துடித்துக்கொண்டு படுத்திருக்கிறது. அஸ்திரங்களை அறியாதவர்களை அஸ்திரங்களால் கொல்லுகிறதே இல்லை. அதனால், உலகங்களைச் சாம்பலாகச் செய்யவில்லை. மாதவரே! இப்பொழுது இந்த அரசரான யுதிஷ்டிரர் மிக்க ஸுகியாக இருக்கட்டும். ஜயத்தைத் தரக்கூடிய பயங்கரமான ரதத்தின்மீதேறி ஸூதபுத்திரனைக் கொல்வதற்குச் சீக்கிரம் செல்லுகிறேன். யுத்தத்தில் கர்ணனைப் பாணங்களால் நாசஞ் செய்யப்போகிறேன்' என்றான். பார்த்தன், தார்மிகர்களுள் சிறந்தவரான யுதிஷ்டிரரைக்குறித்து இவ்வாறு உரைத்துவிட்டு மறுபடியும், 'என்னாலேயாவது அந்தக் கர்ணனாலாவது ஸூதனுடைய மாதாவோ குந்தியோ இப்பொழுது புத்திரனில்லாதவளாகப் போகி

ருள். நான் ஸத்தியமாகச் சொல்லுகிறேன். இப்பொழுது யுத்தத்தில் கர்ணனைப் பாணங்களால் கொல்லாமல் நான் கவசத்தைக் கழற்றப்போகிறதில்லை' என்று கூறினன்.

ப்ருதா புத்திரனை அந்தக் கிரீடியானவன், தார்மிகர்களுள் சிறந்தவரான யுதிஷ்டிரரைக் குறித்து மறுபடியும் இவ்வாறு சொல்லிவிட்டு, சஸ்திரங்களைக் கழற்றிவைத்து வில்லைக் கீழே வைத்து விரைவாக உறையில் கத்தியைப் போட்டுவிட்டு வெட்கத்தினால் தலை குனிந்தவனாக இரு கைகளையும் குவித்துக்கொண்டு யுதிஷ்டிரரை நோக்கி, 'அரசரே! கருணைபுரிவீராக. என்னால் எது சொல்லப்பட்டதோ அதனைப் பொறுத்துக்கொள்ளும். அதனை நீர் ஸமயத்தில் அறிவீர். உமக்கு வந்தனம்' என்று கூறினான். பிறகு, ஜ்வலிக்கின்ற தேஜஸையுடையவனும் ப்ருதா புத்திரனுமான கிரீடி எழுந்திருந்து இரு கால்களையும் பிடித்துக் கொண்டு பகைவர்களைத் தாங்குகிறவரான அரசரை மனத் தெளிவை அடையச்செய்து நின்றுகொண்டு, பரிதபிக்கின்ற அவரைப் பார்த்து (பின்வருமாறு) கூறலானான். 'யுத்தத்தினின்று பீமனை விடுவிப்பதற்காகவும், எல்லா விதத்தினாலும் ஸூத புத்திரனைக் கொல்வதற்காகவும் இதோ நான் செல்லுகிறேன். மன்னரே! உமக்குப் பிரியத்தைச் செய்வதின்பொருட்டே என்னுடைய உயிர் இருக்கிறதன்றோ? உண்மையாகச் சொல்லுகிறேன். அதனைத் தெரிந்துகொள்ளும். இது வெகுகாலம் கழித்து வரப் போகிறதன்று. அதிக சீக்கிரத்தில் இது நேரப்போகிறது. இதோ அவன் நேரில் வருகிறான். இவனை எதிர்த்துச் செல்லுகிறேன். அரசரே! என்னால் கர்ணனாவது கர்ணனால் நானாவது கொல்லப் பட்டு, ராதையோ குந்தியோ இன்று புத்திரனில்லாதவர்களாகப் போகிறார்கள். அப்படிப்பட்ட இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளும்' என்று சொன்னான்.

எழுபத்துநான்காவது அத்தியாயம்

(அர்ஜுனன் செய்த அவமானத்தினால் கானகம் செல்லக் கருதிய யுதிஷ்டிரரைக் கிருஷ்ணன் ஸமாதானஞ் செய்தது)

பாண்டு புத்திரரான தர்மராஜர், ப்ராதாவான பல்குனனுடைய இந்தக் கொடிய வாக்கியத்தைக் கேட்டு அந்தப் படுக்கையிலிருந்து எழுந்திருந்து துக்கத்தினால் கவரப்பட்ட மனத்தையுடையவராகிப் பார்த்தனைப் பார்த்துப் பிறகு கூறலானார். பார்த்த! மிக்க கொடிய துயரமானது உங்களால் அடையப்பட்டமையால்

என்னால் நல்ல காரியம் செய்யப்படவில்லை. வீர! ஆதலால், குலத்துக்கு முடிவைச் செய்பவனும் அதமனும் பாபியும் பாவத்தினால் கெடுக்கப்பட்டவனும் விசேஷமாக மூட புத்தியுள்ளவனும் சோம்பேறியும் பயப்படுகிறவனும் பெரியோர்களை அவமதிப்பவனும் க்ரூரனுமான என்னுடைய இந்தத் தலையை இப்பொழுது வெட்டு. கொடியனான என்னை நெடுங்காலமாக அனுசரித்து உனக்கு என்ன (நன்மை) உண்டாயிற்று? பாவியான நான் இப்பொழுதே காட்டுக்குப் போகிறேன். நீ என்னை விட்டுச் சுகமாயிரு. மஹாத்மாவான பீமஸேனன் தகுந்த அரசன். சக்தியற்றவனான எனக்கு ராஜ்ய காரியம் எதற்காக? கோபத்துடன் கூடின உன்னுடைய கடுமையான இந்தச் சொற்களைப் பொறுப்பதற்கு நான் சக்தியற்றவன். வீர! பீமன் அரசனாக இருக்கட்டும். அவமதிக்கப்பட்ட என்னுடைய உயிர்வாழ்க்கையால் இப்பொழுது காரியமில்லை' என்றார். யுதிஷ்டிரர் இவ்வாறு சொல்லிவிட்டுக் கோபத்துடன் அந்தப் படுக்கையை விட்டு உடனே எழுந்திருந்து பிறகு வனத்துக்குச் செல்வதற்கு விருப்பமுள்ளவரானார். அவரை வாஸுதேவர் வணங்கிக் கூறலானார்.

'அரசரே! ஸத்தியஸந்தனும் காண்டீவத்தை வில்லாகக் கொண்டவனுமான அர்ஜுனனுடைய காண்டீவத்தைப்பற்றின பிரஸித்தமான பிரதிஜ்ஞை எவ்விதமென்பது உமக்குத் தெரியாதா? 'நீ இந்தக் காண்டீவத்தை வேறு ஒருவனிடம் கொடு' என்று இவனைச் சொல்லுகிற மனிதன் உலகில் இவனுக்குக் கொல்லத்தக்கவனாகிறான். உம்மால் இவன் இவ்விதமான வசனத்தை உரைக்கப்பட்டான். அரசரே! ஆதலால், ஸத்தியமான அந்தப் பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுகிறவனான பார்த்தனால் என்னுடைய அபிப்பிராயப்படி உமக்கு இந்த அவமானமானது செய்யப்பட்டது. குருக்களுக்கு அவமானமானது வதமென்று சொல்லப்படுகிறது. வேந்தரே! மிக்க புஜபலமுள்ளவரே! ஆதலால், ஸத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக, நானும் பார்த்தனும் (ஆகிய நாங்கள்) இருவரும் செய்த இந்த அவமானத்தைப் பொறுத்துக்கொள்ளும். மஹாராஜரே! நாங்கள் இருவரும் உம்மைச் சரணமடைந்தோம். ராஜரே! வணங்கி வேண்டுகின்ற என்னுடைய (அக்ரமத்தைப்) பொறுப்பீராக. இப்பொழுது பாபியான ராதேயனுடைய ரத்தத்தைப் பூமியானது பானஞ் செய்யப்போகிறது. உம்மிடத்தில் ஸத்யமாகப் பிரதிஜ்ஞை செய்கிறேன். இப்பொழுது ஸூதபுத்திரனைக் கொல்லப்பட்டவனாக அறிந்துகொள்ளும். எவனுடைய வதத்தை நீர் விரும்புகிறீரோ அவனுடைய உயிர் இப்பொழுது போனதே' என்று கூறினார்.

இவ்விதமான மாதவருடைய வசனத்தைக் கேட்டுத் தர்மராஜரான யுதிஷ்டிரர், அப்பொழுது, வணங்கியிருக்கிற ஹ்ருஷீகேசரைப் பரபரப்புடன் எடுத்து நிறுத்தி, கைகூப்பிக்கொண்டிருக்கிற அவரைப் பார்த்து மேலே சொல்வதற்கேற்ற பின்வருமாறான வாக்கியத்தை உரைக்கலானார். 'நீர் சொல்லியது சொன்னபடியே ஆகும். என்னிடத்தில் இந்த அக்ரமமானது இருக்கிறது. கோவிந்தரே! மாதவரே! நான் ஸமாதானம் செய்யப்பட்டேன்; (ஆபத்தினின்று) கரை ஏறும்படியும் செய்யப்பட்டேன். அச்சுதரே! உம்மால் கோரமான வ்யஸனத்தினின்று நாம் இப்பொழுது விடுவிக்கப்பட்டோம். அறியாமையினால் மதி மயக்கமுற்ற நாங்களிருவரும் இப்பொழுது உம்மை ஓடமாகக் கொண்டு கோரமான துயர்க்கடலினின்று கரை ஏறினோம். அச்சுதரே! உம்முடைய புத்தியாகிற ஓடத்தை அடைந்து, நாங்கள் மந்திரிகளோடு துக்கமாகிற ஸமுத்திரத்தினின்று நன்கு கரை ஏறினோம்; உம்மால் நாதனுள்ளவர்களானோம்' என்று கூறினார்.

எழுபத்தைந்தாவது அத்தியாயம்

(அர்ஜுனன் யுதிஷ்டிரரை மனத்தெளிவடையச்செய்து கர்ணன் வதத்தைப் பிரதிஜ்ஞைசெய்தது)

பார்த்தன், கேசவருடைய வசனத்தினால் யுதிஷ்டிரரைப் பார்த்து இவ்வாறு மறுமொழி சொல்லிவிட்டு, ஒரு பாதகத்தைச் செய்தவன்போலத் துயரமுற்றவனானான். பிறகு வாஸுதேவர், சிரித்துக்கொண்டு பாண்டவனைப் பார்த்து, 'பார்த்த! தர்மத்தில் நிலைபெற்றவரும் தர்மராஜனிடத்தினின்று தோன்றியவருமான யுதிஷ்டிரரை நீ கூரிய முனையுள்ள கத்தியினால் கொன்றிருப்பாயாகில் இது எப்படி ஆகுமோ? நீ அரசரைப் பார்த்து 'நீ' என்று சொல்லிவிட்டுப் பிறகு இவ்வாறு மதிமயக்கத்தை அடைந்துவிட்டாயே? பார்த்த! அரசரைக் கொன்றுவிட்டு மேல் என்ன செய்வாய்? தர்மமானது இவ்விதம் அறிதற்கரிதாயிருக்கிறது. அறிவீனர்களால் அறியவே முடியாது. நீ தர்மத்தினிடத்தில் பயந்தவனாயிருப்பதினால் மூத்த தமையனுடைய வதத்தினால் கோர ரூபமுள்ளதும் பேரிருள்மயமாயிருப்பதுமான நரகத்தை நிச்சயமாக அடைவாய். நீ தர்மவான்களுள் சிறந்தவரும் தர்மத்தில் நிலைபெற்றவரும் கௌரவர்களுள் சிறந்தவருமான அரசரைக் கருணைபுரியும்படி செய்துகொள்வாயாக. இவர் விஷயத்தில் இது

செய்வது எனக்குச் சம்மதம். அரசரைப் பக்தியினால் அருள்புரியச் செய்து அவர் பிரீதியுள்ளவரானவுடன், ஸூதபுத்திரனுடைய தேரைக் குறித்து யுத்தம் செய்வதற்காக விரைந்து செல்வோம். (பகைவர்களுடைய) மானத்தை அழிப்பவனே! நீ இப்பொழுது யுத்தத்தில் கூர்மையுள்ள அம்புகளால் கர்ணனைக் கொன்று தர்ம புத்திரருக்கு அதிகப் பிரீதியை உண்டுபண்ணுவாயாக. மிக்க புஜபலமுள்ளவனே! இதுதான் இந்த ஸமயத்துக்கு ஏற்ற தென்பது என்னுடைய எண்ணம். இவ்வாறு செய்யப்பட்டால் உன்னுடைய காரியம் நிறைவேற்றப்பட்டதாகும்' என்று சொன்னார்.

மஹாராஜரே! பிறகு, அர்ஜுனன் வெட்கினவனாகித் தர்ம ராஜருடைய சரணங்களை அடைந்து தலைவணங்கினான். அவன், 'அரசரே! தர்மத்தினின்று பயந்தவனான நான் சொல்லியதை நீர் பொறுத்துக்கொள்ளும்; கிருபை செய்யும்' என்று பரதச்ரேஷ்டரான தர்மநந்தனரைப் பார்த்து அடிக்கடி வேண்டினான். தர்மத்தினால் விளங்குபவரும் அரசரும் பூமிக்கு நாதருமான யுதிஷ்டிரர், சரணங்களில் விழுந்து அழுகின்றவனும் பகைவர்களை நாசஞ் செய்பவனும் பரதர்களுள் சிறந்தவனும் ப்ராதாவுமான தனஞ் சயனைப் பார்த்து எடுத்து நிறுத்தி அன்புடன் நன்றாகத் தழுவிக் கொண்டு உரக்க அழுதார். மஹாராஜரே! மிக்க ஒளி பொருந் தியவர்களான ப்ராதாக்கள் இருவரும் நெடுநேரம் அழுது சுத்தியைச் செய்துகொண்டவர்களும் பிரீதியையுடையவர்களு மானார்கள். பிறகு, பாண்டு புத்திரரான தர்மராஜர், அந்த அர்ஜுனனை அன்புடன் தழுவிக்கொண்டு உச்சிமோந்து அதிகப் பிரீதியுள்ளவராகவும் அடிக்கடி ஆச்சரியத்தை அடைந்தவராகவும் மஹாவில்லாளியான அந்தத் தனஞ்சயனைப் பார்த்து, 'மிக்க தோள்வலியமைந்தவனே! மகிமை தங்கிய வில்லையுடையவனே! எல்லாச் சேனைகளும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது யுத்தத் தில் முயல்கின்ற என்னுடைய கவசமும் த்வஜமும் வில்லும் சக்தியும் குதிரைகளும் பாணங்களும் கர்ணனால் பாணங்களால் அறுக்கப்பட்டன. பல்குன! அப்படிப்பட்ட நான் யுத்தத்தில் அந்தக் கர்ணனுடைய செய்கையைப் பார்த்துத் துக்கத்தினால் விசேஷமாக வாடுகிறேன். என்னுடைய உயிரில் எனக்கு விருப்ப மில்லை. யுத்தத்தில் அந்த வீரனை நீ இப்பொழுது கொல்லாமற் போவாயாகில் பிராணனை விடவே போகிறேன். எனக்குப் பிழைத்திருப்பதினால் யாது பயன்?' என்று சொன்னார். பரதரிற் சிறந்தவரே! இவ்வாறு சொல்லப்பட்ட விஜயன், 'அரசரே! பூமிக்கு நாதரே! நரச்ரேஷ்டரே! ஸத்தியத்தின்மீதும் அவ்வாறே உம்முடைய பாதத்தின்மீதும் பீம நகுல ஸஹதேவர்கள்மீதும்

ஆணையிடுகிறேன். அரசரே! புருஷ ஸ்ரேஷ்டரே! நான் இப்பொழுது மந்திரிகளுடன் கூடின இந்தக் கர்ணனை யுத்தத்தில் கொல்வேன். அல்லது, நானாவது கொல்லப்பட்டுப் பூமியில் விழுவேன். உண்மையாக ஆயுதத்தைத் தொட்டுச் சபதம் செய்கிறேன்' என்று மறுமொழி உரைத்தான். அர்ஜுனன், அரசரைப் பார்த்து இவ்விதமான வசனத்தை உரைத்துவிட்டு மாதவரைப் பார்த்து, 'கேசவரே! இப்பொழுது கர்ணனை யுத்தத்தில் கொல்லப்போகிறேன்; ஸம்சயமில்லை. உமக்கு மங்களம். நீர் அந்தத் துராத்மாவான கர்ணனுடைய வதத்தைத் தியானம் செய்யும்' என்று சொன்னார். ராஜஸ்ரேஷ்டரே! இவ்வண்ணம் உரைக்கப்பட்ட கேசவர், பார்த்தனைப் பார்த்து, 'பரதர்களுள் சிறந்தவனே! நீ என்னை நோக்கிச் சொல்லுகிற விஷயத்துக்குரிய முயற்சியைச் செய்வதற்குச் சக்தியுள்ளவனாக இருக்கிறாய். மஹாரதரிற் சிறந்தவனே! 'நீ யுத்தத்தில் கர்ணனை எப்படிக் கொல்லப்போகிறாய்' என்கிற இந்த எண்ணமானது எனக்கு நித்தியமாகவே இருக்கிறது' என்று கூறினார். அரசரே! பிறகு, இவ்வாறு சொல்லக் கேட்ட பார்த்தன், 'புரளவிடப்பட்டவைகளும் ஸாரதிகளால் பழக்கப்பட்டிருப்பவைகளுமான குதிரைகளை உத்தமமான ரதத்தில் மறுபடியும் பூட்டக்கடவீர். இரண்டு ரதிகர்களுக்கும் நடக்கும் யுத்தத்தில் (அவன்) கொல்லப்படுவான். தேரில் இருக்கவேண்டிய எல்லா உபகரணங்களோடும் என்னுடைய தேரானது விரைவாகச் செல்லவேண்டும்' என்கிற வசனத்தைக் கூறினான். மஹாராஜரே! மஹாத்மாவான பல்குனன் இவ்வாறு சொல்லக்கேட்ட கேசவர், தாருகனைப் பார்த்து, 'பரதர்களுள் சிறந்தவனும் எல்லா வில்லாளிகளுள்ளும் மேன்மைபெற்றவனுமான அர்ஜுனன் சொல்லியவற்றையெல்லாம் செய்வாயாக' என்று கட்டளையிட்டனர். ராஜஸ்ரேஷ்டரே! பிறகு மாதவரால் கட்டளையிடப்பெற்ற தாருகன் சத்துருக்களைத் தவிக்கச்செய்கின்றதும் புலித்தோலால் மூடப்பட்டதுமான ரதத்தில் (குதிரைகளைப்) பூட்டினான்; ஸித்தமாயிருப்பதாகவும் மஹாத்மாவான பாண்டவனிடத்தில் சொன்னான். யுத்தத்தினுடைய முடிவைச் செய்கின்ற பத்மநாபர் மஹாத்மாவான தாருகனால் பூட்டி ஓட்டப்பட்டு அருகில் வந்திருக்கிற தேரைப் பார்த்து, சிறந்த புத்தியுள்ளவரான அவர், மீண்டும் தர்மநந்தனரை நோக்கிச் சொல்லலானார்.

'யுதிஷ்டிரரே! நீர் இப்பொழுது இந்தப் பீபத்ஸுவை ஸமாதானம் செய்து, துராத்மாவான கர்ணனுடைய வதத்துக்கு

அனுமதி கொடுக்கக்கடவீர். பாண்டுநந்தனரே! நாங்களிருவரும், மஹாயுத்தத்தில் நீர் கர்ணனுடைய பாணங்களால் பீடிக்கப்பட்டிருக்கிறீரென்பதைக் கேட்டு உம்முடைய விருத்தாந்தத்தை அறிவதற்காக இவ்விடம் வந்தோம். அரசரே! பாக்கியத்தினால் துன்பமற்றவராயிருக்கிறீர். பாக்கியத்தினால் சத்துரு வசத்தை அடையாமலிருக்கிறீர். பீபத்ஸுவை ஸமாதானம் செய்யும். தோஷமற்றவரே! ஜயத்தை அனுக்ரஹம் செய்யும்' என்று சொன்னார். யுதிஷ்டிரர், 'பார்த்த! பீபத்ஸுவே! இங்கே வா; இங்கே வா. பாண்டவ! என்னை ஆலிங்கனஞ் செய்துகொள். நான் உன்னால் சொல்லத்தக்க [1] ஹிதமான வசனத்தை உரைக்கப் பட்டேன். அதனை நான் பொறுத்துக்கொண்டேன். நான் உனக்கு அனுமதி கொடுக்கிறேன். தனஞ்சய! கர்ணனைக் கொல். பார்த்த! நான் சொல்லிய கடுஞ்சொற்களால் கோபங்கொள்ளாதே' என்றார். அரசரே! பெரியவரே! பிறகு தனஞ்சயன், முடியினால் வணங்கி, அப்பொழுது தமையனுருடைய இரு சரணங்களையும் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டான். பிறகு யுதிஷ்டிரராஜர் அவனைத் தூக்கி நிறுத்தி இறுகத் தழுவிக்கொண்டு உச்சிமோந்து அவனைப் பார்த்து மறுபடியும் இந்த வசனத்தை உரைக்கலானார். 'தனஞ்சய! மிக்க புஜபலமுள்ளவனே! நான் உன்னால் நன்கு கௌரவிக்கப்பட்டேன். சாசுவதமான மஹிமையையும் விஜயத்தையும் மீண்டும் அடைவாயாக' என்றார்.

அர்ஜுனன், 'நான், பாவச்செய்கையைச் செய்பவனும் பலத்தினால் கர்வங்கொண்டவனுமான ராதாபுத்திரனை இப்பொழுது யுத்தத்தில் எதிர்த்து அவனைப் பரிவாரங்களுடன் அம்புகளால் நாசத்தை அடைவிக்கப்போகிறேன். திடமான வில்லை வளைத்து அம்புகளால் உம்மைப் பீடித்ததாகிய அச்செய்கையின் கொடிய பலனைக் கர்ணன் இப்பொழுது அடையப்போகிறான். பூமிக்கு நாதரே! கர்ணனைக் கொன்று இப்பொழுது நான் உம்மை வந்து அணுகப்போகிறேன். யுத்தத்தினால் உம்மை ஆராதிக்கிறேன். இவ்வண்ணம் செய்வது ஸத்தியமென்று உமக்குச் சொல்லுகிறேன். அரசரே! கர்ணனைக் கொல்லாமல் யுத்தத்தினின்று இப்பொழுது நான் திரும்பப்போகிறதில்லை. இது ஸத்தியமென்று உம்முடைய இரு சரணங்களையும் தொடுகிறேன்' என்று கூறினான். இவ்வாறு சொல்லுகின்ற கிரீடியைப் பார்த்து அப்பொழுது நல்ல மனமுள்ள யுதிஷ்டிரர், 'தேவதைகள் உனக்கு அக்ஷயமான கீர்த்தியையும்

---

[1] வேறு பாடம்.

வாழ்நாளையும் மனோரத ஸித்தியையும் எப்பொழுதும் ஜயத்தையும் வீரியத்தையும் சத்துரு நாசத்தையும் பெருக்கத்தையும் கொடுக்கட்டும்; செல். நான் விரும்புவது உனக்கு அப்படியே உண்டாகட்டும்; விரைவாகச் செல். இந்திரன் விருத்திரனைக் கொன்றதுபோல் உன்னுடைய அபிவிருத்தியின்பொருட்டு யுத்தத்தில் கர்ணனைக் கொல்வாயாக' என்று மிக்க பெரிதான வசனத்தைக் கூறினர்.

எழுபத்தாறுவது அத்தியாயம்

(கர்ணனோடு போர் புரிய விரும்பின அர்ஜுனனுக்குச் சுப நிமித்தங்கள் தோன்றினதும், ஸ்ரீ வாஸுதேவர் அர்ஜுனனை மிக உத்ஸாஹப் படுத்தியதும்)

அர்ஜுனன், தர்மராஜரை மனத் தெளிவடையச் செய்து மிக்க ஸந்தோஷமுள்ள சித்தத்துடன் எல்லாத் தேவதைகளையும் நன்றாகப் பூஜித்துப் பிராம்மணர்களை ஸ்வஸ்திவசனங்களைச் சொல்லும்படி செய்து மிக்க மங்களகரமானதும் க்ஷேமத்துக்கு ஸாதனமாயிருப்பதும் உத்தமமுமான ரதத்தின்மீது ஏறினன். அரசரும் பேரறிவாளரும் தர்மத்தினல் பிரகாசிப்பவருமான யுதிஷ்டிரர் (யுத்த) ஸந்நத்தமான கர்ணனுடைய ரதத்தைக் குறித்து (எதிர்க்கப்போகிறவனான) அந்த அர்ஜுனனுக்கு உத்தமமான ஆசீர்வாதங்களைச் செய்தார். பாரதரே! வருகின்ற அந்த மகாவில்லாளியைக் கண்டு (எல்லாப்) பிராணிகளும் மஹாத்மாவான பாண்டவனால் கர்ணனைக் கொல்லப்பட்டவனாக எண்ணின. அரசரே! எல்லாத் திக்குக்களும் நாற்புறங்களிலும் மாசற்றவையாயின. ஜனநாதரே! [1] சாஷங்களும் சதபத்ரங்களும் க்ரௌஞ்சங்களும் அப்பொழுது பாண்டுநந்தனனை வலமாகச் சுற்றி வந்தன. மன்னரே! [2] மங்களகரமான, 'பும்' என்கிற பெயருள்ள அனேக பக்ஷிகள் யுத்த விஷயத்தில் அர்ஜுனனை விரையச் செய்துகொண்டு மிக்க ஸந்தோஷமுள்ளவைகளாகச் சப்தித்தன. ராஜரே! பயங்கரமான [3] கங்கங்களும் கிருத்ரங்களும் ஸ்யேனங்களும் கொக்குகளும் காக்கைகளும் (மாம்ஸங்களை) பக்ஷிப்பதற்காக அவனுக்கு முன் சென்றன. முக்கியமான நிமித்தங்கள், பகைவர் படைகளின் அழிவையும் அவ்வாறே கர்ணனுடைய வதத்தையும் அர்ஜுனனுக்குத் தெரிவித்தன. பிறகு, (யுத்தத்துக்கு) புறப்பட்டவனான பார்த்தனுக்கு அதிகமான வேர்வை உண்டாயிற்று.

---

[1] பறவைகளின் வகை. [2] ஒருசொல் விடப்பட்டது.
[3] கழுகின் வகைகள்.

'இது எவ்விதமாகும்' என்று பெருங்கவலையும் உண்டாயிற்று. பிறகு, ஸவ்யஸாசியைத் துக்கமுற்றவனாக அறிந்து தேஜஸ்வியும் மது என்கிற அஸுரனைக் கொன்றவருமான அச்சுதர் வானரத்வஜனான அவனை நன்றாகத் தூண்டினார். பிறகு மதுஸூதனர், அப்பொழுது கவலையினால் கவரப்பட்டவனும் அவ்வாறு வருகின்றவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான பார்த்தனைப் பார்த்துக் கூறலானார்.

'காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனே! யுத்தத்தில் உன்னால் வில்லினால் ஜயிக்கப்பட்டவர்களை ஜயிப்பவன் உன்னைத் தவிர வேறு மனிதன் இவ்வுலகில் இல்லை. இந்திரன் போன்ற பராக்கிரமமுள்ளவர்களான இந்த அனேக சூரர்கள் யுத்தத்தில் சூரனான உன்னை எதிர்த்து உத்தம கதியை அடைந்துவிட்டார்கள். ஐயா! உன்னைப் போல சாமர்த்தியமுள்ளவனல்லாத எந்த மனிதன் தான் துரோணரையும் பீஷ்மரையும் பகதத்தனையும் அவந்தி தேசத்தரசர்களான விந்தாநுவிந்தர்களையும் காம்போஜ தேசாதிபதியான ஸுதக்ஷிணனையும் சுருதாயுவையும் அசுருதாயுவையும் மஹாரதனான சதாயுவையும் எதிர்த்து க்ஷேமமுள்ளவனாவான்? அர்ஜுன! உன்னிடத்தில் திவ்யாஸ்திரங்களும் லாகவமும் பலமும் யுத்தங்களில் மதிமயக்கமின்மையும் விஞ்ஞானத்தினுடைய நேர்மையும் லக்ஷ்யத்தை அடிக்கிற சக்தியும் லக்ஷ்யங்களில் தவறாமல் அம்புகளைத் தாக்கும்படி செய்கிற சக்தியும் தகுந்த ஸன்னாஹமும் இருக்கின்றன. பார்த்த! நீ தேவர்களையும் கந்தர்வர்களையும் எல்லா அரக்கர்களையும் கொல்லுவாய். யுத்தத்தில் உனக்கு ஸமமாகப் போர் புரிகின்ற மனிதன் பூமியில் இல்லை. யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களான எந்தச் சில க்ஷத்திரியர்கள் விற்பிடிக்கின்றார்களோ அவர்களுள் உனக்கு ஸமமாக இருப்பவனை நான் காணவுமில்லை; கேட்கவுமில்லை. பார்த்த! பிரம்மாவினால் பிரஜைகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. எதனால் நீ யுத்தம் செய்கிறாயோ அந்தக் காண்டீவம் என்கிற பெரிய வில்லும் அவராலேயே படைக்கப்பட்டது. ஆதலால், உனக்கு நிகரானவன் இல்லை. பாண்டவ! உனக்கு ஹிதமான வசனத்தை நான் அவசியம் சொல்லவேண்டும். மிக்க புஜபலமுள்ளவனே! யுத்தத்தில் பிரகாசிக்கின்றவனான கர்ணனை அவமதியாதே. கர்ணனே பலசாலி; கொழுத்தவன்; அஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவன்; மஹாரதன்; ஸமர்த்தன்; ஆச்சரியகரமாக யுத்தஞ் செய்பவன்; தேசகாலங்களை அறிந்தவன். பாண்டவ! இப்பொழுது பல வார்த்தையினால் யாது பயன்? சுருக்கமாகக் கேள். மகாரதனான கர்ணனை

உனக்கு ஸமானனாகவாவது உன்னைக் காட்டிலும் சிறந்தவனாக வாவது நினைக்கிறேன். மஹாயுத்தத்தில் அதிகமான முயற்சியைச் செய்து உன்னால் கர்ணன் கொல்லப்படத் தக்கவன். கர்ணன் தேஜஸினால் நெருப்புக்கு ஒப்பானவன்; வேகத்தினால் வாயுவுக்கு ஸமானன்; கோபத்தினால் யமனுக்கு நிகரானவன்; ஸிம்மம் போன்ற தேகபலமுள்ளவன்; பலசாலி; எட்டு [1] ரத்னி உயர முள்ளவன்; நீண்ட கைகளையுடையவன்; அகன்ற மார்பை யுடையவன்; எவ்விதத்தினாலும் ஜயிக்கமுடியாதவன்; (நான் என்கிற) அபிமானமுள்ளவன்; சூரன்; சிறந்தவீரன்; பார்க்க இனியவன்; யுத்தவீரர்களுக்குரிய எல்லாக் குணங்களும் பொருந் தியவன்; மித்திரர்களுக்கு அபயம் கொடுப்பவன்; எப்பொழுதும் பாண்டவர்களைப் பகைப்பவன்; திருதராஷ்டிர புத்திரர்களுக்கு நன்மையைச் செய்வதில் பற்றுதலுள்ளவன். உன்னைத் தவிர இந்திரனுடன்கூடின எல்லாத் தேவர்களாலும் ராதேயன் கொல்லப்படக்கூடியவனல்லனென்பது என்னுடைய எண்ணம். ஆதலால், இப்பொழுது ஸூதபுத்திரனை நாசஞ்செய். முயற்சி யுள்ள தேவர்களாலும் மாம்ஸமும் ரத்தமும் மிகுந்திருப்பவர்களும் யுத்தஞ் செய்வதில் விருப்பமுற்றவர்களுமான எல்லா வீரர் களாலும் அந்த ரதிகன் ஜயிக்கப்படமுடியாதவன். கெட்ட எண்ணமுடையவனும், பாவமான நடையுள்ளவனும், க்ரூரனும், பாண்டவர்களிடத்தில் எப்பொழுதும் கெட்ட எண்ணமுடைய வனும், பாண்டவர்களோடு விரோதத்தைப் பாராட்டுவதில் தன் பிரயோஜனத்தை விட்டவனுமான கர்ணனை இப்பொழுது கொன்று நிச்சயமான காரியஸித்தியை உடையவனாகிவிடு. ரதிகர்களுள் சிறந்தவனும் தன்னை ஜயிக்கக்கூடிய எதிர் வீரனற்ற வனுமான அந்த ஸூதபுத்திரனை இப்பொழுது காலனுக்கு வசப் பட்டவனாகச் செய்வாயாக. ரதிகர்களுள் சிறந்தவனான அந்த ஸூதபுத்திரனைக் கொன்று தர்மராஜருக்குப் பிரீதியை உண்டு பண்ணு. பார்த்த! தேவாஸுரர்களாலும் தடுக்க முடியாததான உன்னுடைய வீரியத்தை உள்ளபடி நான் அறிவேன். துராத்மா வான இந்த ஸூதபுத்திரன் கொழுப்பினால் எப்பொழுதும் பாண்டு புத்திரர்களை அவமதிக்கிறானன்றோ? தனஞ்சய! பாபியான துர்யோதனன் எவனால் தன்னை வீரனாக எண்ணுகிறானோ பாவங் களுக்கு மூலமான அந்த ஸூதபுத்திரனை இப்பொழுது வதஞ் செய்வாயாக. தனஞ்சய! கத்தியாகிற நாவையுடையதும், வில்லா கிற வாயையுடையதும் அம்புகளாகிற கோரப்பற்களையுடையதும்,

[1] ரத்னி என்பது இருபத்தோரங்குல நீளம்.

வேகமுள்ளதும் கொழுப்புள்ளதுமான கர்ணனென்கிற ஆண்புலியைக் கொல். நீ வீர்யத்தோடும் பலத்தோடும் விளங்கும்படி வேண்டுகிறேன். சிங்கமானது யானையைக் கொல்வதுபோல யுத்தத்தில் சூரனான கர்ணனை நாசஞ்செய். பார்த்த! எவனுடைய வீர்யத்தினால் தார்த்தராஷ்டிரன் உன்னுடைய வீர்யத்தை அவமதிக்கிறானோ அந்தச் சூரியகுமாரனான கர்ணனை யுத்தத்தில் இப்பொழுது அழிப்பாயாக' என்று கூறினார்.

எழுபத்தேழாவது அத்தியாயம்

(வாஸுதேவர் பீஷ்மர் முதலியோரின் மரணத்துக்கும் துரியோதனனுடைய அநீதிகளுக்கும் கர்ணனே காரணமென்பதைக்கூறி அவனை அவசியம் கொல்லும்படி அர்ஜுனனை வற்புறுத்தியது)

பாரதரே! பிறகு, அளவிடமுடியாத பெருமையையுடைய கேசவர், கர்ணனைக்கொல்வதில் திடமான நிச்சயத்தோடுவருகின்ற அர்ஜுனனைப் பார்த்து, மீண்டும், "ராஜனே! மனிதர்களுக்கும் யானைகளுக்கும் குதிரைகளுக்கும் அதிகோரமான விநாசமானது தினந்தோறும் நடந்துவருகின்றது. (இவ்வாறான இந்த யுத்தம்) இன்றைக்குப் பதினேழாவது நாள். உன்னைச் சேர்ந்தவர்களுடைய படையானது பெரிதாயிருந்து பகைவர்களோடு அன்யோன்யம் சண்டைசெய்து சிறிது மிகுதியுள்ளதாக இருக்கிறது. பார்த்த! கௌரவர்கள் மிகுதியான யானைகளுடனும் குதிரைகளுடனும் கூடியவர்களாயிருந்து யுத்தமுனையில் சத்ருவான உன்னை எதிர்த்து நாசமடைந்தார்கள். இந்த அரசர்களும் ஸ்ருஞ்சயர்களும் பாண்டவர்களும் (பகைவர்களால் எவ்விதத்தினாலும்) அவமதிக்கமுடியாத உன்னைப் பின்பற்றிவந்து (சத்துரு வதத்தில்) நிலைபெற்றிருக்கிறார்கள். உன்னால் காக்கப்பட்டவர்களும் பகைவர்களை நாசஞ்செய்பவர்களுமான பாஞ்சாலர்களாலும், பாண்டவர்களாலும், மாத்ஸ்யர்களாலும், காரூசர்களாலும், சைத்யர்களாலும், மாகதர்களாலும், பாரிஜாதர்களாலும், கேரளர்களுடன் கூடின தென்னாட்டு வீரர்களாலும் சத்துருக்கூட்டங்களுக்கு நாசமானது உண்டுபண்ணப்பட்டது. [1] அப்பா! வெண்மையான குதிரைகளையுடையவனும் வானரக்கொடியையுடையவனுமான பாண்டவனைத் தவிர வேறு எந்த மனிதன் யுத்தத்தில் கௌரவர்களை ஜயிக்கச்

---

[1] 'ரணே', 'யுத்தே' என்னும் சொற்கள் விடப்பட்டன.

சக்தியுள்ளவன்? நீயோ தேவர்களுடனும் அசுரர்களுடனும் மனிதர்களுடனும் சேர்ந்த மூவுலகங்களையும் [1] யுத்தத்தில் ஜயிக்கச் சக்தியுள்ளவன். அவ்வாறிருக்க, கௌரவ சேனையை ஜயிக்கச் சக்தியுள்ளவனென்பதில் ஸந்தேகமென்ன? புருஷசிரேஷ்டனே! இந்திரனுக்கு ஒப்பானவனுயிருந்தாலும் உன்னைத் தவிர வேறு எந்த மனிதன் அரசனுன பகதத்தனை ஜயிக்கச் சக்தியுள்ளவன்? பார்த்த! தோஷமற்றவனே! அவ்வாறே, உன்னால் காக்கப்பட்டிருக்கிற இந்தப் பெரும்படையை எல்லா அரசர்களும் கண்களால் பார்ப்பதற்கும் சக்தியுள்ளவர்களாகவில்லை. பார்த்த! அவ்வாறே, உன்னால் எப்பொழுதும் யுத்தத்தில் ரக்ஷிக்கப்பட்டிருக்கிற த்ருஷ்டத்யும்னனாலும் சிகண்டியினாலும் (முறையே) துரோணரும் பீஷ்மரும் கொல்லப்பட்டார்கள். பார்த்த! இந்திரனுக்கு ஒப்பான பராக்ரமமுள்ளவர்களும் பரதர்களுள் மஹாரதர்களுமான பீஷ்மரையும் துரோணரையும் யுத்தரங்கத்தில் யுத்தத்தினால் ஜயிப்பதற்கு எவன் சக்தியுள்ளவன்? புருஷசிரேஷ்டனே! வீரர்களும் அஸ்திரங்களில் தேர்ச்சியுடையவர்களும் யுத்தத்தில் எல்லோரையும் திரும்பி வராமல் இருக்கும்படி செய்கின்றவர்களும், அக்ஷௌஹிணீ சேனைக்குத் தலைவர்களாயிருப்பவர்களும் கொடுந்தன்மையுள்ளவர்களும் ஒன்று சேர்ந்திருப்பவர்களும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களுமான சந்தனு புத்திரரான பீஷ்மரையும் துரோணரையும் கர்ணனையும் கிருபரையும் துரோண புத்திரரையும் ஸோமதத்த குமாரனையும் க்ருதவர்மாவையும் ஸிந்துராஜனுன ஜயத்ரதனையும் மத்ரராஜனுன சல்யனையும் அரசனுன துரியோதனனையும் உன்னைத் தவிர வேறு எந்த மனிதன் இவ்வுலகத்தில் ஜயிக்க வல்லமையுள்ளவன்? குதிரைகளும் ரதங்களும் யானைகளும் நன்கு பிளக்கப்பட்டு, அநேகம் படை வரிசைகள் அழிந்தன. பற்பல நாடுகளிலிருந்து வந்த பொறுமையுள்ளவர்களும் உக்கிரமானவர்களுமான க்ஷத்திரியர்களுடைய வரிசைகள் அழிந்தன. பாரத! தாசமீயர்கள் வஸாதிகள் இவர்களின் கூட்டங்கள் நாசமடைந்தன. பாரத! கீழ் நாட்டு வீரர்கள வாடதானர்கள் கர்விகளான போஜர்கள் மற்றும் எல்லா அரசர்கள் இவர்களின் கொழுப்புள்ள குதிரைகளுடனும் யானைகளுடன் கூடின சேனையானது உன்னையும் பீமனையும் எதிர்த்து நாசமடைந்தது. சத்துருக்களைத் தவிக்கச் செய்பவனே! துரியோதனன் நிமித்தமாகக் கௌரவர்களுடன் (கூடினவர்களும்) மிக்க கோபங்கொண்டவர்களும் பரபரப்புள்ளவர்களும் யுத்தத்தில் ஸாமர்த்தியமுள்ளவர்களும் பலசாலிகளும் தண்டங்

[1] 'ஸமரே,' என்னும் சொல் விடப்பட்டது.

கஜேக் கையில் கொண்டவர்களும் உக்கிரர்களும் பயங்கரமான செய்கையையுடையவர்களுமான இந்தத் துஷாரர்களும் யவனர்களும் கசர்களும் தார்வாபிஸாரர்களும் தரதர்களும் சகர்களும் மாடரர்களும் தங்கணர்களும் ஆந்திரகர்களும் குளிந்தர்களும் உக்கிரமான விக்கிரமமுள்ள கிராதர்களும் மிலேச்சர்களும் மலை நாட்டார்களும் கடற்கரையினருகிலிருக்கிற தேசவாசிகளும் உன்னைத் தவிர வேறு ஒருவனாலும் யுத்தத்தில் ஜயிக்கப்படத் தகாதவர்கள். அடங்காததும் அணிவகுக்கப்பட்டிருக்கிறதும் பெரிதுமான துரியோதனனுடைய படையைக் கண்டு நீ (உன் சேனைக்கு) ரக்ஷகனாகாமற் போவாயாகில் எந்த மனிதன் (கௌரவ சேனையை) எதிர்த்துச் செல்வான்? விபுவே! உன்னால் காக்கப் பட்டிருக்கின்றவர்களும் கோபங்கொண்டவர்களுமான பாண்டவ வீரர்களால் ஸமுத்திரம்போலக் கொந்தளிக்கின்றதும் புழுதியினால் நன்றாக மூடப்பட்டிருக்கின்றதுமான அந்தக் கௌரவ சேனை பிளந்து நாசம் பண்ணப்பட்டது. மஹாபலசாலியும் மகத தேசாதிபதியுமான ஜயத்ஸேனன் யுத்தத்தில் அபிமன்யுவினால் கொல்லப் பட்டான். இன்றோடு ஏழு நாள்கள் சென்றன. பிறகு, பீமன், அந்த அரசனுடைய சேனையிலுள்ள பயங்கரமான செய்கைகளுடன் கூடின பதினாயிரம் யானைகளைக் கதாயுதத்தினால் கொன்றான். அவ்வாறே, நூற்றுக் கணக்கான மற்ற யானைகளும் ரதங்களும் பலத்தினால் அடிக்கப்பட்டன. பாண்டவ! பார்த்த! ஆதலால், இவ்வாறு மஹாபயங்கரமாக நடந்துவருகிற யுத்தத்தில் பீமஸேனனையும் உன்னையும் அணுகிக் கௌரவர்கள் குதிரைகளோடும் ரதங்களோடும் யானைகளோடும் கூடினவர்களாக இவ்விடத்தினின்றும் ம்ருத்யுலோகத்தை அடைந்தார்கள். குந்தீ புத்திர! ஐயா! பாண்டவர்களால் அந்தப் படைமுகமானது அவ்வாறு நாசஞ்செய்யப்படவே, பீஷ்மர் உக்கிரமான சரமாரிகளைப் பிரயோகித்தார். உத்தமமான அஸ்திரங்களை அறிந்தவரான அந்தப் பீஷ்மர் சேதி தேசத்து வீரர்களையும், காசிதேசத்து வீரர்களையும், பாஞ்சாலர்களையும், கரூசர்களையும், மச்சதேசத்தார்களையும், கேகயர்களையும், அம்புகளால் மூடி நாசஞ் செய்தார். அவருடைய வில்லினின்று விடுபட்டவைகளும் பிறருடைய தேகங்களைப் பிளக்கின்றவைகளும் ஸ்வர்ணமயமான கட்டுக்களுடன் கூடியவைகளும் நேராகச் செல்பவைகளுமான பாணங்களால் ஆகாசமானது நிறைக்கப்பட்டதாயிற்று. அவர், ஒவ்வொரு கைக் குத்தினாலேயே, ஒன்று சேர்ந்திருப்பவர்களும் மிக்க பலசாலிகளுமான லக்ஷம் மனிதர்களையும் யானைகளையும் கொன்று ஆயிரம்

ரதங்களையும் அழித்தனர். அந்தப் பீஷ்மர் குற்றமுள்ள ஒன்பது கதிகளை விட்டு யுத்தத்தில் பாணங்களைப் பிரயோகித்தார். அந்த அம்புகள் பத்தாவது கதியுடன் சென்று குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் கொன்றன. உன்னுடைய படையைப் பத்துநாள் அழித்த பீஷ்மரால், ரதங்களுடைய நடுவிடங்கள் சூன்யமாக்கப்பட்டன; யானைகளும் குதிரைகளும் கொல்லப்பட்டன. அரசனே! பீஷ்மர், தெப்பமில்லாதவனாக முழுகுகின்ற மந்தனான துரியோதனனைக் கரையேற்றி விட விரும்பி, பத்தாவது நாள் வந்தவுடனே, கோரமான பராக்கிரமத்தை வெளியிட்டு யுத்தத்தில் ருத்திரருக்கும் விஷ்ணுவுக்கும் ஸமமான தமது ரூபத்தைக் காண்பித்துக்கொண்டு பாண்டவர்களுடைய படைகளில் பிரவேசித்து அரசர்களையும் சைத்தியர்களையும் பாஞ்சாலர்களையும் கேகயர்களையும் வதஞ் செய்துகொண்டு ரதங்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் நெருங்கியிருக்கிற பாண்டவ சேனையை நாசஞ்செய்தார். வெப்புகின்ற சூரியன்போல அவ்வாறு யுத்தத்தில் ஸஞ்சரிக்கின்றவரும் யுத்தத்தில் ஜயத்தினால் பிரகாசிக்கின்றவருமான அந்தப் பீஷ்மரை உத்தமமான ஆயுதங்களைக் கையில் கொண்டவர்களான ஆயிரம்கோடிக்கணக்கான காலாட்களும் ஸ்ருஞ்ஜயர்களும் அவ்வாறே மற்ற அரசர்களும் பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களானார்கள். பீஷ்மர் அதிகமான எல்லா முயற்சியுடனும் பாண்டவர்களை எதிர்த்துச் சென்றார். அந்தப் பீஷ்மரோ யுத்தத்தில் ஒருவராகவே இருந்துகொண்டு பாண்டவர்களையும் ஸ்ருஞ்ஜயர்களையும் ஓடும்படி செய்து யுத்தத்தில் நிகரில்லாத வீரத்தன்மையை அடைந்தார். பெரிதான விரதத்தை உடையவரும் புருஷசிரேஷ்டருமான அந்தப் பீஷ்மரைச் சிகண்டி உன்னால் காக்கப்பட்டவனாக எதிர்த்துப் படிந்த கணுக்களுடன் கூடின அம்புகளால் வதஞ்செய்தான். பிதாமஹரான அப்படிப்பட்ட இந்தப் பீஷ்மர், இந்திரனை எதிர்த்து விருத்ரன் விழுந்தது போலப் புருஷசிரேஷ்டனான உன்னை எதிர்த்து விழுந்து சரதல்பத்தில் படுத்திருக்கிறார். மஹாரதரும் அந்தகனுக்கு ஒப்பானவரும் உக்ரரூபியுமான துரோணர் பகைவர் படையை ஐந்து நாள் அழித்து உடைக்க முடியாத வ்யூஹத்தை ஏற்படுத்தி மஹாரதர்களைக் கீழே வீழ்த்தி யுத்தத்தில் ஜயத்ரதனைக் காப்பாற்றி [1] ராத்ரி யுத்தத்தில் பிரஜைகளை எதிர்த்தார். வீரரும் பிரதாபசாலியுமான அந்தப் பாரத்வாஜர் யுத்த வீரர்களை அம்புகளால் எரித்து த்ருஷ்டத்யும்னனை எதிர்த்து உத்தமமான கதியை அடைந்தார். நீ

---

[1] இப்பட்டித்தலால் 'உக்ர:' என்னும் சொல் விடப்பட்டது.

யுத்தத்தில் கர்ணன் முதலான ரதிகர்களை இப்பொழுது தடுக்காமற் போயிருப்பாயாகில் துரோணர் யுத்தத்தில் நாசமடைந்திருக்கவே மாட்டார். உன்னாலன்றோ தார்த்தராஷ்டிரனுடைய சேனை முழுவதும் தடுக்கப்பட்டது. தனஞ்சய! அதனால், துரோணர் யுத்தத்தில் பார்ஷதனால் கொல்லப்பட்டார். பார்த்த! ஜயத்ரதனுடைய வதத்தைப் பற்றி உன்னால் செய்யப்பட்டதுபோன்ற காரியத்தை உன்னைத் தவிர மனிதனென்று சொல்பவன் எவன் யுத்தத்தில் செய்யச் சக்தியுள்ளவன்? உன்னால் அதிக பலமுள்ள அஸ்திர தேஜஸினால் பெருஞ் சேனையைத் தடுத்துச் சூரர்களான அரசர்களையும் கொன்று அரசனான ஸைந்தவன் கொல்லப்பட்டான். அரசர்கள் ஸிந்துராஜனுடைய வதத்தை ஆச்சரியம் என்று எண்ணுகிறார்கள். அந்தச் செய்கை உன்னிடத்தினின்று (உண்டாயிற்றென்பது) ஆச்சரியமன்று. பார்த்த! நீ மஹாரதனன்றோ? பாரத! க்ஷத்திரிய ஜாதியானது யுத்தத்தில் உன்னை எதிர்த்து ஒரே நாளில் நாசமடையுமானால் அது தகுந்ததென்று நான் எண்ணுவேன். இவ்வாறு என்னுடைய எண்ணம். பார்த்த! கோரமான அப்படிப்பட்ட இந்தத் துரியோதனனுடைய சேனையானது, யுத்தத்தில் பெரும்பான்மையாக எல்லாச் சிறந்த பொருளும் நாசஞ் செய்யப்பட்டதாயிற்று. அவ்வாறே, பீஷ்மத்ரோணர்கள் கொல்லப்பட்டார்கள். சிதற அடிக்கப்பட்ட சிறந்த யுத்த வீரர்களால் நிறைந்ததும் குதிரைகளும் தேர்களும் யானைகளும் அழிக்கப்பட்டதுமான பாரத சேனையானது சூரியனாலும் சந்திரனாலும் நக்ஷத்திரங்களாலும் விடுபட்டிருக்கின்ற ஆகாயம் போல விளங்குகிறது. பார்த்த! பயங்கரமான விக்கிரமமுள்ளவனே! இந்தச் சேனையானது தேவராஜனுடைய பராக்கிரமங்களால் பெரிதான அசுரர் படை அழிக்கப்பட்டதுபோல யுத்தத்தில் அழிக்கப்பட்டதன்றோ? அந்தக் கௌரவ வீரர்களுள் மாண்டவர்கள் போக மிகுந்திருப்பவர்கள் த்ரோணபுத்திரர், க்ருதவர்மா, கர்ணன், சல்யன், கிருபர் ஆகிய ஐந்து மஹாரதர்களே. புருஷர்களுள் சிறந்தவனே! அந்த ஐந்து மஹாரதர்களையும் நீ இப்பொழுது கொன்று பகைவர்கள் அழியப்பெற்றவனாகத் தீவுகளுடனும் பட்டணங்களுடனும் கூடின பூமியை அரசருக்களிப்பாயாக. ஆகாயம், ஜலம், பாதாளம், பர்வதங்கள், பெருங்காடுகள் இவைகளுடன் கூடின பூமியை இப்பொழுது அளவுகடந்த வீரியமுள்ளவரான யுதிஷ்டிரருக்குக் கொடு. முற்காலத்தில் தைத்யர்களையும் தானவர்களையும் விஷ்ணு கொன்றதுபோலக் (கௌரவர்

களைக்) கொன்று, அவர் இந்திரனுக்குப் பூமியை அளித்ததுபோல் இந்தப் பூமியை அரசரான யுதிஷ்டிரருக்குக் கொடுப்பாயாக. விஷ்ணுவினால் அஸுரர்கள் கொல்லப்பட்ட காலத்தில் தேவதைகள் ஸந்தோஷமடைந்ததுபோல உன்னால் பகைவர்கள் கொல்லப்பட்டிருக்குந் தருணத்தில் பாஞ்சாலர்கள் இப்பொழுது ஸந்தோஷத்தை அடையட்டும். செந்தாமரை மலர்போன்ற கண்களையுடையாய்! மனிதர்களுள் சிறந்தவரும் ஆசார்யருமான த்ரோணரைக் கௌரவிக்கின்ற உனக்கு அச்வத்தாமாவினிடத்திலும் ஆசார்யர் என்கிற கௌரவத்தினால் க்ருபரிடத்திலும் கருணையிருந்தாலும், மிக்க மரியாதைக்குரியவர்களான உன் பந்துக்களையும் உன் தாய்வழி உறவினர்களையும் பூஜிக்கின்ற நீ க்ருதவர்மாவை எதிர்த்து யமனுடைய வீட்டுக்கு அனுப்பாமலிருந்தாலும், மாதாவுக்கு ஸஹோதரனும் மத்ரராஜனுமான சல்யனை எதிர்த்து நீ தயையுள்ளவனாகிக் கொல்ல விருப்பமற்றவனாயிருந்தாலும், உன்னுடைய இந்தக் கார்யங்களில் ஒரு கார்யமும் நல்ல காரியமாக இல்லை. நாமும் அனுமதி கொடுக்கிறோம். இந்தக் கார்யங்களில் ஒரு தோஷமும் இல்லை. புருஷர்களுள் சிறந்தவனே! பார்த்த! பாண்டவர்களைப் பற்றிப் பாப புத்தியுள்ளவனும் மிக்க அற்பனுமான இந்தக் கர்ணனைக் கூர்மையுள்ள பாணங்களால் இப்பொழுது வதஞ்செய். தோஷமற்றவனே! துர்யோதனன் இரவில் புத்திரர்களுடன் இருப்பவளான உன் தாயாரை (அரக்கு மாளிகையில்) எரிக்கும் விஷயத்திலும், சூதாட்டத்திலும் உங்கள் விஷயத்தில் பிரவிர்த்தித்தது (முதலிய) அந்த எல்லாக் கார்யங்களுக்கும் துராத்மாவான கர்ணனே காரணமென்பது நிச்சயம். பாரத! துராத்மாவான கர்ணன் மிக்க கெட்ட புத்தியுள்ளவனான துர்யோதனனை ஊக்கமூட்டுகிறான். யுத்தத்தில் பெருமை பேசிக் கொள்ளுகிறான். அவனை இப்பொழுது கொல். அர்ஜுன! திருதராஷ்டிரனுடைய புத்திரனான துரியோதனன் உங்கள் விஷயத்தில் செய்த கொடிய செய்கைகளெல்லாவற்றுக்கும் இப்பொழுது துர்ப்புத்தியுள்ளவனான கர்ணனே மூலம். துர்யோதனன் எப்பொழுதும் கர்ணனை ரக்ஷகனாக நினைக்கிறானன்றோ? அதனால், என்னைக்கூடப் பராக்கிரமத்தினால் அடக்குவதற்கு விருப்பமுள்ளவனாயிருக்கிறான். கர்ணன் எல்லாப் பாண்டவர்களையும் யுத்தத்தில் பாணங்களால் நாசஞ்செய்யப்போகிறானென்று அரசர்களும் துரியோதனனுமாகிய இருவகையாருக்கும் எண்ணம் உறுதியாக இருக்கிறது. குந்திபுத்திர! துர்யோதனன் உன்னுடைய பலத்தை அறிந்தவனாயிருந்தும் கர்ணனைத்

துணையாகக்கொண்டு உன்னோடு சண்டைசெய்ய விரும்புகிறான். கர்ணன், 'மஹாயுத்தத்தில் ஒன்றுசேர்ந்திருக்கின்ற பார்த்தர்களையும் தாசார்ஹனான வாஸுதேவனையும் நான் ஜயிப்பேன்' என்று நித்தியம் பிதற்றுகிறான். பல்குன! கர்ணன் யுத்தத்தில் துள்ளுகிறான். அவனை இப்பொழுது வதஞ்செய். சிறந்த பிரதாபசாலியான துரியோதனன் கர்ணனை ஆதாரமாகக் கொண்டு உங்களிடங்களில் பாவமான செய்கையை ஸபையில் முன்பு நித்தியம் செய்துவந்தான். மேலும், தார்த்தராஷ்டிரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே மஹாரதர்களான ஆறு சூரர்களால் சூழப்பட்டவனும் சூரனும் பகைவர்களால் ஜயிக்கக்கூடாதவனும் பெரிய அம்புகளால் வீரர்களான துரோணர், அசுவத்தாமா, கிருபர் இவர்களை நடுங்கச்செய்கிறவனும் சேனைகளை அழிக்கின்றவனும் மஹாரதர்களை நன்றாக அடிக்கின்றவனும் மனிதர்களையும் குதிரைகளையும் யானைகளையும் யமனுடைய வீட்டுக்கு அனுப்புகிறவனும் பாணங்களால் பகைவர்களுடைய படையை எதிர்த்துக் கொண்டு வருகின்றவனும் ஸுபத்ராபுத்திரனுமான அபிமன்யுவைக் கண்டு யுத்தத்தில் பயந்து, யானைகள் வீரர்களை இழந்தவைகளாகவும் மஹாரதர்கள் ரதங்களை இழந்தவர்களாகவும் திசைகளில் ஓடினார்கள். குதிரைகளை உயிரை இழந்தவைகளாகவும் காலாட்களை ஆயுதங்களையும் உயிரையும் இழந்தவர்களாகவும் செய்கின்றவனும் காளையின் திமில்போன்ற தோளையுடையவனும் கௌரவர்களுக்கும் விருஷ்ணிகளுக்கும் கீர்த்தியை உண்டுபண்ணுகின்றவனும் ஸுபத்ராதேவியின் புதல்வனுமான அபிமன்யுவின் விஷயத்தில் செய்தது என்னுடைய அவயவங்களை எரிக்கிறது. மித்திர! உன்னிடத்தில் ஸத்யமாகச் சபதம் செய்கிறேன். மிகக் கொடிய மனமுள்ள பிரபுவான கர்ணன் அப்பொழுது இருந்திருப்பானாகில் கொல்லப்பட்டிருப்பான். யுத்தத்தில் அபிமன்யுவினுடைய முன்னிலையில் கர்ணன் நிற்கச் சக்தியற்றவனன்றோ? கர்ணன் ஸுபத்ராபுத்திரனுடைய பாணங்களால் பிளக்கப்பட்டும் பிரஜ்ஞையற்றும் ரக்தத்தினால் நனைக்கப்பட்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் கோபத்தினால் நன்றாக ஜ்வலித்துக்கொண்டும் பாணங்களால் பீடிக்கப்பட்டும் திரும்பி ஓடுபவனானான். பாரத! அந்தக் கர்ணன் யுத்தத்தில் ஆயுதவீழ்ச்சிகளால் உண்டுபண்ணப்பட்ட [1] களைப்பையுடையவனாகவும் உத்ஸாஹத்தை இழந்தவனாகவும் ஓடுவதில் ஊக்கமுள்ளவனாகவும் தைரியத்தை இழந்து மனத்தளர்ச்சி உடையவனாகவும் நின்றான். பார்த்த! அந்தக் கர்ணன் அபிமன்யுவினுடைய மஹாயுத்தத்தில் துர்யோதனனைப் போர்க்

---

[1] வேறு பாடம்

களத்தில் கண்டு அடிக்கடி வெட்கமடைந்தவனாகி அந்த யுத்த களத்தினின்றும் விலகிச் செல்லவில்லை. அவன் துரோணரைக் கண்டு அபிமன்யுவினுடைய வதோபாயத்தை வினவினான். துரோணருடைய கொடிய வசனத்தைக் கேட்டு, பிறகு, வில்லை அறுத்தான். பிறகு, அந்தக் கர்ணனால் அபிமன்யுவின் ஆயுதம் அறுக்கப்பட்டதைக் கண்டு, ஐந்து மஹாரதர்களும், வஞ்சனையில் பண்டிதனும் கெட்ட எண்ணமுள்ளவனும் உரத்த அட்டஹாஸத்துடன் கூடியவனுமான அந்தக் கர்ணனும், அரசனான துரியோதனனும் அவனைச் சரமாரிகளால் (பரலோகத்துக்கு) அனுப்பினார்கள். கர்ணன், ஸபையில் பாண்டவர்களும் கௌரவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே (அவர்களுக்கு) முன்னிலையில் திரௌபதியைப் பார்த்து, 'கிருஷ்ணையே! பாண்டவர்கள் நசித்து விட்டார்கள்; சாசுவதமான நரகத்தை அடைந்துவிட்டார்கள். பருத்த நிதம்பங்களை யுடையவளே! மெதுவாகப் பேசுகிறவளே! வேறு பர்த்தாவை வரித்துக்கொள். தாஸியாயிருக்கிற இப்படிப் பட்ட நீ திருதராஷ்டிரருடைய அரண்மனையில் பிரவேசிப்பாயாக. இமைமயிர்கள் கோணலாயிருக்கும் கண்களையுடையவளே! உனக்குப் பதிகள் இல்லை. கிருஷ்ணையே! எவ்விதத்தினாலும் பாண்டவர்கள் உனக்கு (நாதர்கள்) ஆகப்போகிறதில்லை. பாஞ்சாலி! நீ அடிமையின் மனைவி. மங்களகரியே! நீ ஸ்வயமே அடிமையாயிருக்கிறாய். இப்பொழுது துரியோதனராஜன் பூமியில் அரசனாக எண்ணப்பட்டான். எல்லா அரசர்களும் இவனுடைய யோகக்ஷேமத்தைப் பார்க்கின்றார்கள். கல்யாணி! இப்பொழுது பார். பாண்டவர்கள், தார்த்தராஷ்டிரனுடைய தேஜஸினால், ஸமமாக உட்கார்ந்துகொண்டு ஒருவரை ஒருவர் பார்க்கின்றார்கள். (ஆதலால்) இவர்கள் எள்ளுப்பதர்களே என்பது வெளிப்படை; நரகத்திலும் அமிழ்த்தப்பட்டுவிட்டார்கள். வேலைக்காரர்கள்போலக் கௌரவராஜனை ஸ்தோத்திரம் செய்யப் போகிறார்கள்' என்று குரூரமான வசனத்தை உரைத்தான். தனஞ்சய! பாபத்தில் மனமுள்ளவனும் அவ்வாறே அதிக கெட்ட புத்தியையுடையவனும் பாவியுமான கர்ணன் நீ பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பாவமான வசனத்தை உரைத்தான். 'பொன்னால் சித்திரிக்கப்பட்டவைகளும் சாணைக்கல்லில் தீட்டப் பட்டவைகளுமான அம்புகள் இந்தக் கர்ணனுடைய உயிரை நாசஞ்செய்துகொண்டு இந்தப் பாவியினுடைய அந்த வாக்கியத்தைத் தணிக்கப்போகின்றன. யுத்தத்தில் இப்பொழுது உன்னால் விழுங்கப்பட்டிருக்கிற கர்ணனை, ஸ்வர்க்கத்தினின்று கீழே

இறங்குவதில் முயற்சியுள்ளவனாக ஸ்வர்க்கவாயிலை அடைந்திருக்கிற ஒருவனைப்போலக் கௌரவர்கள் பார்க்கட்டும் கௌரவ யுத்த வீரர்கள் இப்பொழுது உன்னுடைய வீரியத்தை யுத்தத்தில் பார்க்கட்டும். பார்த்த ! ஸூதபுத்திரன் கொல்லப்பட்ட பிறகு, உன்னை மஹாரதனாக அறியட்டும். ஐயா ! இப்பொழுது [1] காகங்களுடைய கூட்டங்களும் [2] வாயஸங்களும் கழுகுகளும் நரிகளும் ஸூதபுத்திரனுடைய அவயவங்களை இழுக்கட்டும். இப்பொழுது உன்னால் யுத்தத்தில் அடித்துத்தள்ளப்பட்டவனும் கொல்லப்பட்டவனுமான கர்ணன் கௌரவர்களுக்குச் சோகத்தையும் பாண்டவர்களுக்கு ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணட்டும். விருத்திரனுடைய வதமானபிறகு, எல்லாத் தேவர்களும் இந்திரனைப் புகழ்ந்தது போல இப்பொழுது பாண்டவர்களோடு சேர்ந்து பாஞ்சாலர்கள் உன்னைப் [3] புகழட்டும். பார்த்த ! இப்பொழுது கர்ணனை யுத்தத்தில் கொன்று உத்தமமான கீர்த்தியைப் பெற்றுச் சோகத்தையும் ஜ்வரத்தையும் விட்டவனும் பந்துக்களால் புகழப்பட்டவனும் ஆகக்கடவாய். பிரபுவான விஷ்ணு நரஸிம்ம சரீரத்தை எடுத்துத் திதிபுத்திரனும் மஹாஸுரனுமான ஹிரண்யகசிபுவைக் கொன்றதுபோல, நீயும் கோரமான மஹாசரீரத்தை எடுத்து யுத்தத்தில் ராதாபுத்திரனைக் கொல். மிக்க தோள்வலி யமைந்தவனே ! உன்னைச் சேர்ந்தவர்களைப் பயத்தினின்று காப்பாயாக. ‘ஆ ! ஆ !’ என்று அலறுபவனும் எளிமையுற்றவனும் வியஸனமுற்றவனும் உன்னுடைய அம்புகளால் பீடிக்கப்பட்டவனும் பூமியில் விழுகின்றவனுமான கர்ணனை அரசர்கள் [4] பார்க்கட்டும். தன்னுடைய ரத்தத்தில் மூழ்கினவனும் பூமியில் விழுந்து கிடப்பவனும் புரட்டி அடித்துத் தள்ளப்பட்ட ஆயுதங்களையுடையவனுமான கர்ணனை இப்பொழுது பந்துக்கள் பார்க்கட்டும். இப்பொழுது காண்டீவத்தினால் பிரயோகிக்கப்படும் பாணங்களால் (அடிக்கப்பட்டு) [5] பெரிதான அந்தக் கவசமானது ஆகாயத்தினின்று சந்திரன் சிதறுவதுபோல் ரதத்தின் மத்தியில் சிதறட்டும். மஹாவேகமுள்ளவைகளாக வந்துவிழுகின்ற அந்தக்கர்ணனுடைய பாணங்கள் இப்பொழுது உன்னுடைய பாணங்களால் விரைவாக முனை அறுக்கப்பட்டவைகளாகப் பூமியில் சிதறட்டும். பரதர்களுள் சிறந்தவனே ! உன்னால் இப்பொழுது அந்தக் கர்ணனுடைய விக்ரமமானது நாசஞ்செய்யப்பட்டபிறகு, எல்லா அரசர்களும், திரும்பி ஓடுகின்றவர்களும் உயிரையிழந்தவர்களுமாக ஆகட்டும்.

---

[1], [2] காகத்தின் வகைகள். [3] வேறு பாடம்.

[4] ‘கர்ணம்’ என்னும் சொல் இரட்டித்தலால் விடப்பட்டது.

[5] வேறு பாடம்.

கர்ணன் அவ்வாறு காலஞ்சென்றபிறகு, எல்லா உலகங்களிலுமுள்ள வில்லாளிகளுள்ளும் அந்தக் கர்ணனைச் சிறந்தவனென்று எண்ணுகின்ற கௌரவர்களும் திசைகளை நோக்கிச் செல்லட்டும். திருதராஷ்டிரகுமாரனான அந்தத் துரியோதனனும் இப்பொழுது பயத்தினால் பெரும்படையை இழந்து பயத்தினால் மனநிலை தவறினவனாகித் தன் வீட்டை நோக்கி ஓடட்டும். அவ்வாறே, ஜனங்களுக்கு நாதனும் பூமிக்கு நாதனுமான திருதராஷ்டிரன், கர்ணன் நாசஞ்செய்யப்பட்டதைக் கேட்டு இப்பொழுது க்ஷணத்தில் ப்ரஜ்ஞையை இழந்து பூமியில் விழட்டும். பார்த்த! எல்லா யுத்த வீரர்களும் இப்பொழுது உன்னுடைய பராக்கிரமத்தை அறியட்டும். பாரத! பரதர்களுள் சிறந்தவனே! ஸபையின் மத்தியில் உன் விஷயத்தில் துரியோதனன் உரைத்த கடுஞ்சொற்களையும் கெட்ட எண்ணமுள்ள அவன் உன் விஷயத்தில் செய்த வேறு பாவச்செயல்களையும் உன்னுடைய சரங்கள் இப்பொழுது நாசஞ்செய்யட்டும். பகைவர்களைத் தவிக்கச்செய்பவனே! கர்ஜிக்கின்றவனும் அளவற்ற ஆண்மையுள்ளவனுமான சிறந்த சத்துருவை யுத்தத்தில் கொன்று கிருஷ்ணையினுடைய கிலேசத்தைத் தணி. புருஷர்களுள் சிறந்தவனே! இப்பொழுது எல்லாப் பக்கத்திலும் உன்னுடைய பாணங்களால் அடிக்கப்பட்ட கர்ணன் உன்னை எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவனாக எண்ணட்டும். பார்த்த! இப்பொழுது கர்ணன் யுத்தத்தில் காண்டீவத்தினின்று வெளிப்பட்டவைகளும் மேனியில் பாய்ந்திருப்பவைகளுமான பாணங்களை முள்ளம்பன்றியானது முட்களைத் தரிப்பதுபோல ஏற்றுக்கொள்ளட்டும். வீர! ஒருவனாக எல்லாப் பாஞ்சாலர்களையும் தினந்தோறும் நாசஞ்செய்துகொண்டு பாஞ்சால ரதிகர்களுடைய கூட்டத்தில் காலன்போல ஸஞ்சரிக்கிற கர்ணனை அடைந்து மஹாரதர்கள் எவ்வாறு ஓடுவார்கள்? சினேகிதர்களிடத்து மிக்க அன்புள்ளவனே! எப்பொழுதும் ஸந்தோஷமுள்ளவர்களும் பகைவர்களை அடக்கும் திறமையுள்ளவர்களுமான பாஞ்சாலர்கள் கர்ணனிடத்தினின்று பயந்து திரும்பாமலிருப்பார்களாகில், அவர்கள் யுத்தத்தில் அவ்வாறாக அஸ்திரங்களால் ஜ்வலிக்கின்றவரும் எல்லா வில்லாளிகளுள்ளும் சூரராயிருப்பவரும் (சத்துருக்களை) எரிக்கின்றவரும் (வீரியத்தினால்) மிக்க மேன்மைபெற்றவரும் (ஒருவராலும்) அவமதிக்கத் தகாதவரும் சத்துருவுமான அந்தத் துரோணரைக்கூட மித்திரகாரியத்துக்காக எதிர்த்து விரைவாகப் போர்புரிந்து ஜயிப்பதற்குச் சக்தியுள்ளவர்களாவார்கள். நெருப்பானது விட்டிற்பூச்சிகளுடைய உயிரை வாங்குவதுபோலச்

சூரனான கர்ணன், எதிர்த்துவருகின்றவர்களும் பலசாலிகளுமான அந்தப் பாஞ்சாலர்களுடைய உயிர்களை அம்புகளால் வாங்கினான். இதோ பாஞ்சாலர்கள் ஓடுகிறார்கள்; நிச்சயமாகப் போர்வீரர்களால் துரத்தியடிக்கப்படுகின்றார்கள். பரதர்களில் சிறந்தவனே! கர்ணனால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறவர்களைப் பார்; பார். மிக்க பாகுபலமுள்ளவனே! நன்றாக விருத்தியடைகின்றவர்களும் மித்திரனுக்காக உயிரை விடுகின்றவர்களுமான அந்தச் சூரர்களை நெருப்புக்கொப்பான கர்ணனுடைய அஸ்திரத்தினின்று மீட்சியடையச்செய். எவனை அடுத்துப் பெரிய சேனையானது தன் ஆற்றலால் விளங்குகிறதோ அந்தக் கர்ணனால் ரிஷிச்ரேஷ்டரான பார்க்கவராமரிடத்தினின்று அப்பொழுது அடையப்பட்டதும் எல்லாச் சேனைகளையும் தவிக்கச்செய்கின்றதும் கோரரூபமுள்ளதும் பயங்கரமானதுமான அஸ்திரத்தினுடைய கொடிய உருவமானது வெளிப்படுத்தப்படுகின்றது. பிரபுவே! யுத்தத்தில் கர்ணனுடைய வில்லினின்று விடுபடுகின்ற இந்தப் பாணங்கள் ஒளியினால் சத்துரு ஜனங்களை நாசஞ்செய்துகொண்டு ஸஞ்சரிக்கின்றன. ஐயா! மஹாத்மாக்களாலும் எவ்விதத்தினாலும் தடுக்க முடியாததான கர்ணனுடைய அஸ்திரத்தை யுத்தத்தில் அடைந்து இந்தப் பாஞ்சாலர்கள் சுழலுகின்றார்கள்; வேகமாக ஓடவும் ஓடுகின்றார்கள். கர்ணனை ஜயித்தவனும் உறுதியான கோபமுள்ளவனுமான இந்தப் பீமன் நான்கு பக்கத்திலும் ஸ்ருஞ்சயர்களால் சூழப்பட்டவனாகக் கூர்மையுள்ள பாணங்களால் பீடிக்கப்படுகிறான். பாரத! ம்ருத்யுவான கர்ணன் உபேக்ஷை பண்ணப்படுவானாகில், ரோகமானது தேகத்தை அழிப்பதுபோலப் பாஞ்சாலர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் பாண்டவர்களையும் எரிப்பான். யுதிஷ்டிரருடைய சேனையில் ராதேயனை எதிர்த்து க்ஷேமமுள்ளவனாக வீட்டுக்குத் திரும்பிவரக்கூடிய யுத்தவீரன் உன்னைத் தவிர வேறு ஒருவனையும் நான் காணவில்லை. பரதர்களுள் சிறந்தவனே! பார்த்த! அப்படிப்பட்ட கர்ணனைக் கூர்மையுள்ள பாணங்களால் நீ இப்பொழுது கொன்று, (உன்னால்) செய்யப்பட்ட பிரதிஜ்ஞையை நிறைவேற்றிக் கீர்த்தியை அடைவாயாக. நீ அல்லவோ அரசர்களுடன் கர்ணனை யுத்தத்தில் ஜயிக்கச் சக்தியுள்ளவன்? யுத்தஞ் செய்பவர்களுள் சிறந்தவனே! வேறு ஒருவனும் யுத்தத்தில் ஜயிக்கச் சக்தியுள்ளவனாகான். இது ஸத்யமென்று உனக்குச் சொல்லுகிறேன். பார்த்த! நரோத்தம! இந்தப் பெரிய கார்யத்தைச் செய்து மஹாரதனான கர்ணனைக் கொன்று

இருதார்த்தனாகவும், கருதிய பயனை அடைந்தவனாகவும், ஸுகி யாகவும் இருப்பாயாக' என்று சொன்னார்.

எழுபத்தெட்டாவது அத்தியாயம்

(அர்ஜுனன் கிருஷ்ணனிடம் கர்ணனுடைய வதத்திற்குப்பின் நேரக் கூடியவற்றைக் கூறி அவனுடைய வதத்தைப் பிரதிஜ்ஞை செய்தது).

பாரதரே! அந்த அர்ஜுனன் கேசவருடைய வசனத்தைக் கேட்டு க்ஷணத்துக்குள் சோகம் நீங்கி மிக்க மனக்களிப்புள்ளவனானன். பிறகு, நாண்கயிற்றைத் துடைத்து விரைவாகக் காண்டீவமென்கிற வில்லை உதறிக் கர்ணனுடைய நாசத்தின் பொருட்டுக் கையில் தரித்துக் கேசவரைப் பார்த்து உரைக்கலானன்; 'கோவிந்தரே! சென்றதையும் நிகழ்வதையும் வருவதையும் படைப்பவரான பகவான் பிரஸன்னராய் இருக்கப்பெற்ற எனக்கு நாதரான உம்மால் ஜயம் நிச்சயமே. மாதவரே! உம்மைத் துணையாகக் கொண்ட நான் ஒன்று சேர்ந்திருக்கின்ற மூவுலகங்களையும் பரலோகத்தை அடைவிப்பேன். மஹாயுத்தத்தில் கர்ணனைக் கொல்வதில் யாது ஸம்சயம்? ஜனார்த்தனரே! பாஞ்சாலர்களுடைய சேனை ஓடுவதைப் பார்க்கிறேன். கர்ணன் யுத்தத்தில் பயமற்றவன் போல் ஸஞ்சரிப்பதையும் பார்க்கிறேன். விருஷ்ணி குலத்தில் உதித்தவரே! இந்திரனால் பெரிய வஜ்ராயுதம் விடப்பட்டது போல நான்கு பக்கத்திலும் ஜ்வலிக்கின்ற பார்க்கவாஸ்திரமானது கர்ணனால் விடப்பட்டதையும் பார்க்கிறேன்.' வாஸுதேவரே! இந்தக் கர்ணனுடன் யுத்தத்தில் என்னால் செய்யப்படுவதையன்றோ பூமியுள்ள வரையில் எல்லாப் பிராணிகளும் சொல்லப் போகின்றன. மாதவரே! இப்பொழுது காண்டீவத்தினின்று விடப்படுகின்றவைகளும் பகைவரைக் கொல்லுகின்றவைகளும் என்னுடைய கையினால் பிரயோகிக்கப்படுகின்றவைகளுமான என்னுடைய விகர்ணமென்னும் அம்புகள் கர்ணனை ம்ருத்யுவையடையும்படி செய்யப்போகின்றன. அரசனான திருதராஷ்டிரன் எந்தப் புத்தியினால் ராஜ்யத்துக்குத் தகாதவனான துரியோதனனை ராஜ்யத்தில் அபிஷேகஞ் செய்வித்தானே அந்தத் தனது புத்தியை இப்பொழுது இகழ்ந்துகொள்ளப் போகிறான். மஹா பாகுபலமுள்ளவரே! திருதராஷ்டிரன் இப்பொழுது அரசாட்சியினின்றும், ஸுகத்தினின்றும், ஐசுவரியத்தினின்றும், ராஜ்யத்தினின்றும், பட்டணத்தினின்றும், அவ்வாறே புத்திரர்களிடத்தினின்றும்

விடுபடப் போகிறான். கோவிந்தரே! எவன் நற்குணமுள்ளவனை விட்டுக் குணமில்லாதவனைத் தலைவனாகச் செய்கிறானோ அவன் சீக்கிரமாக நாசம் வரும்போது நெடுங்காலம் துக்கிக்கிறான். பகைவர்களுடைய கர்வத்தை அழிப்பவரே! ஜனார்த்தனரே! புஷ்பத்தைக் கண்டு பழத்தில் பேராவலுள்ள மூடனான ஒரு மனிதன் பெரிய மாந்தோப்பை வெட்டிப் பலாச விருக்ஷங்களைத் தண்ணீரில் வார்த்து வளர்ப்பதில் புத்தியைச் செலுத்திப் பின்பு பழத்தைக் கைக் கண்டு எவ்வாறு துக்கப்படுவானோ அவ்வாறே புஷ்பத்தைக் கண்டு பேராவலுற்ற திருதராஷ்டிரனுக்கு இந்தப் பலத்தைக் கண்டு அதிகமான துக்கம் உண்டாகப்போகிறது. ஸூதபுத்திரன் கொல்லப்பட்டால், பிரபுவான திருதராஷ்டிரன் இப்பொழுது ஆசையை இழந்தவனாவான். இப்பொழுது கர்ணன் கொல்லப்படுவானாகில் துரியோதனன் ராஜ்யத்தினின்றும், தன் உயிரினின்றும் ஆசையை இழந்தவனாவான். ஸத்தியமாக உமக்குச் சொல்லுகிறேன். இப்பொழுது என்னால் பாணங்களால் கர்ணன் துண்டு துண்டாகச் செய்யப்பட்டதைக் கண்டு ஜனேச்வரனான திருதராஷ்டிரன் ஸமாதானத்தைப் பற்றிய உம்முடைய வாக்கியங்களை நினைக்கட்டும். கேசவரே! இப்பொழுது அந்தச் சகுனி அம்புகளைச் சூதாட்டமாகவும் காண்டீவத்தைப் பாச்சிகையாகவும் என் ரதத்தைக் காய்களை வைக்கும் பலகையாகவும் அறியட்டும். கோவிந்தரே! இப்பொழுது நான் கூர்மையுள்ள பாணங்களால் கர்ணனைக் கொன்று குந்தியின் புதல்வரான யுதிஷ்டிரராஜருடைய நிடமான தூக்கமில்லாமையைப் போக்கப் போகிறேன். இப்பொழுது அரசரான குந்திபுத்திரர் என்னால் ஸூதபுத்திரன் கொல்லப்பட்டவுடனே, மிக்க மனக்களிப்புற்றவராகவும் பிரீதியுள்ளவராகவும் நெடுங்காலம் சுகத்தை அடையப்போகிறார். கேசவரே! இப்பொழுது கர்ணனை உயிரினின்று நழுவும்படி செய்யக்கூடியதும் (பகைவர்களால்) திருப்பியடிக்க முடியாததும் ஒப்பற்றதுமான ஓர் அம்பை இந்த யுத்தத்தில் பிரயோகிக்கப் போகிறேன். மதுஸூதனரே! என்னைக் கொல்லும் விஷயத்தில் 'பல்குனனை நான் கொல்லும் வரையில் என் இருகால்களையும் கழுவுவதில்லை' என்று விரதம் பூண்டவனும் துராத்மாவும் பாவியுமான கர்ணனுடைய விரதத்தைப் பொய்யாகச் செய்து படிந்த கணுக்களுள்ள பாணங்களால் அவனுடைய சரீரத்தை ரதத்தினின்று கீழே தள்ளப்போகிறேன். எவன் பூமியில் வேறு ஒரு மனிதனை யுத்தத்தில் ஸமர்த்தனென்று ஒப்புக் கொள்ளுகிறதில்லையோ அந்தக் கர்ணனுடைய இரத்தத்தை

இப்பொழுது பூமி குடிக்கப்போகிறது. ஸூதபுத்திரனான கர்ணன் தன் குணங்களைப் புகழ்ந்துகொண்டு திருதராஷ்டிரனுடைய ஸம்ம தத்தின் மேல் (த்ரௌபதியை நோக்கி), 'கிருஷ்ணையே! நீ கணவர் களை இழந்தவளாயிருக்கிறாய்' என்று சொல்லிய வசனத்தை என் னுடைய கூர்மையுள்ள பாணங்கள் பொய்யாகச் செய்யப் போகின்றன. (என்னுடைய பாணங்கள்) கோபங்கொண்ட ஸர்ப்பங்கள் போல அந்தக் கர்ணனுடைய உதிரத்தைக் குடிக்கப் போகின்றன. கைத்தேர்ச்சியுள்ள என்னால் விடப்பட்டவை களும் மின்னலொளி போன்ற ஒளி பொருந்தியவைகளும் காண்டீ வத்தினின்று விடப்பட்டவைகளுமான நாராசங்கள் கர்ணனுக்கு உத்தமமான கதியைக் கொடுக்கப்போகின்றன. ராதேயன் பாண்டவர்களை நிந்தித்துக்கொண்டு பாஞ்சாலியைப்பற்றிச் சபை யின் நடுவில் சொல்லிய கடுஞ் சொற்களை (நினைத்து) இப்பொழுது தாபத்தை அடைவான். 'கிருஷ்ணையே! இந்தப் பாண்டவர்கள் எள்ளுப்பதர்கள்; வீரியமில்லாதவர்கள்; ஆண்மையை இழந்தவர் கள்' என்றும் 'நான் உங்களைப் பாண்டவர்களிடத்திலிருந்து உண் டான பயத்தினின்று காக்கப்போகிறேன்' என்றும் சொன்னான். 'பாரத! நான் இப்பொழுது புத்திரர்களுடன் கூடின பாண்டவர் களனைவர்களையும் கொல்லப்போகிறேன்' என்று அவன் சொல்லிய வசனத்தை என்னுடைய கூரிய பாணங்கள் ஸூரிய புத்திரனும் ஸூதபுத்திரனும் துராத்மாவுமான அவனைக் கொன்று பொய்யாகச் செய்யப்போகின்றன. மதுஸூதனரே! எவனுடைய வீரியத்தை ஆதாரமாகக்கொண்டு துரியோதனன் (அகங்காரத் தினால்) மிகுந்த மனத்தை உடையவனாயிருக்கிறானோ அந்தக் கர்ணனை இப்பொழுது நான் யுத்தத்தில் கொல்லப் போகிறேன். கர்ணன் இப்பொழுது கொல்லப்படுவானாகில் அரசனுடன் கூடின தார்த்தராஷ்டிரர்கள் ஸிம்மத்தைக் கண்ட மிருகங்கள் பயப்படுவது போலப் பயந்து திசைகளை நோக்கி ஓடிவிடுவார்கள். இப்பொழுது புத்திரர்களோடும் நண்பர்களோடும் கர்ணன் என்னால் யுத்தத்தில் கொல்லப்பட்டால் துரியோதன ராஜன் பூமியைப் பார்க்கமாட்டான். அதிகப் பொறாமையுள்ளவனான துரியோ தனன், இப்பொழுது, கர்ணன் கொல்லப்பட்டதைக்கண்டு என்னை யுத்தத்தில் எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவனாக எண்ணட்டும். துரியோதனன் புத்திரர்களோடும் பௌத்திரர்களோடும் மந்திரி களோடும் ஸுஹ்ருத்துக்களோடும்கூட மனோரதங்களை இழந்த வனும் பிதாவினுடைய ராஜ்யத்தில் ஆசையற்றவனும் ஆதார மில்லாதவனுமாவான். இப்பொழுது அரசரான தர்மபுத்திரர்

பகைவர்கள் கொல்லப்பெற்றவராவார்... இப்பொழுது ஸூரியோதனன் விளங்குகின்ற செல்வத்தையும் ராஜ்யத்தையுமிழக்கப்போகிறான். மாதவரே! விகர்த்தன குமாரனான கர்ணனும் பீஷ்மரும் துரோணரும் யுத்தத்தில் கொல்லப்பட்ட பிறகு எந்தச் சேனையானது பிரவேசித்து (அரசனை) [1] விடுவிக்குமோ அந்தச் சேனையானது பயமடைந்து விட்டது. தர்மராஜனுடைய புதல்வரான யுதிஷ்டிரரை நண்பர்களும் முன் அறியப்பட்டவர்களான பிராம்மணர் வரான யுதிஷ்களும் இன்றுமுதல் அரசராக எண்ணி ஆனந்தமடையட்டும். இன்று சூரியகுமாரனான கர்ணன் என்னால் கொல்லப்பட்டானென்பதைக் கேட்டுப் படகவாத்திய முழக்கத்தோடு தேவதாஸ்தான பூஜையை (ஜனங்கள்) செய்யட்டும். கோவிந்தரே! மிக்க புஜபலமுள்ளவரே! இப்பொழுது கர்ணன் கொல்லப்பட்டால் ஜனங்கள் நெடுநாளாகச் செய்ய உத்தேசித்திருக்கிற தேவதைகளுடைய ஆராதனத்தை விதிப்படி செய்யட்டும். ஹ்ருஷீகேசரே! இப்பொழுது இந்த மனோரதமானது நிறைவேறினவுடன், மாதாவான குந்திதேவியும் திரௌபதியும் விரைவுடன் ஒருவரையொருவர் கட்டிக்கொள்ளட்டும். மாதவரே! இப்பொழுது கர்ணன் கொல்லப்படுவானாகில் குளிர்ந்த கண்ணால் நீர் பாரும்; பாண்டவர்களுள் மூத்தவரான யுதிஷ்டிரரும், பூஜ்யனான விருகோதரனும் பார்க்கட்டும். நான் பெரியோர்களை அபிவாதனஞ் செய்து இளையவர்களால் அபிவாதனஞ்செய்யப்பெற்று இரு கைகளாலும் ஆலிங்கனம் செய்து பெரிய கீர்த்தியை அடையப்போகிறேன். வாஸுதேவரே! இப்பொழுது கர்ணன் கொல்லப்பட்டவுடன், தேவர்கள் அர்ஜுனனைப் புகழ்ந்துகொண்டு ஸ்வர்க்கத்தையடையட்டும். தவத்தையே பொருளாகக்கொண்ட மஹரிஷிகளும் ஒன்று சேர்ந்து ஸந்தோஷமுள்ளவர்களாகச் செல்லட்டும். கிருஷ்ணரே! இரண்டு ரதிகர்களுக்கு நேர்ந்த த்வைரதமென்னும் சண்டையில் ஸவ்யஸாசியான என்னால் கொல்லப்பட்ட கர்ணனைப் பார்த்து இப்பொழுது மூவுலகங்களும் என்னுடைய ஆண்மையை அறியட்டும். மாதவரே! இன்று நான் வில்லாளிகளுக்கும் ரதத்துக்கும் பாணங்களுக்கும் காண்டீவமென்கிற வில்லுக்கும் கடனைத் தீர்த்தவனாகப் போகிறேன். வாஸுதேவரே! இந்திரன் சம்பரனைக் கொன்றதுபோல யுத்தத்தில் கர்ணனைக் கொன்று பதின்மூன்று வருஷகாலமாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற பெருந்துக்கத்தை விலக்கப்போகிறேன். இன்று யுத்தத்தில் கர்ணன் கொல்லப்பட்டால், யுத்தத்தில் மித்திர காரியத்தில் விருப்பமுற்ற

---

[1] வேறு பாடம்,

மஹாரதர்களான ஸோமகர்கள் மேற்கொண்ட நற்காரியம் நிறைவேறினவர்களாக ஸந்தோஷமடையட்டும். மாதவரே! இப்பொழுது ஸாத்யகிக்குப் பிரீதியுண்டாக்கும் விதத்தை நான் அறிவேன். நான் யுத்தத்தில் கர்ணனையும் வெற்றியினால் மேம்பட்டவர்களான அவனுடைய புத்திரர்களையும் கொன்று பீமனுக்கும் ஸாத்யகிக்கும் நகுல ஸஹதேவர்களுக்கும் வீரனான த்ருஷ்டத்யும்னனுக்கும் சிகண்டிக்கும் பிரீதியைச் செய்யப்போகிறேன். விருஷ்ணி குலத்தில் உதித்தவரே! ஏகாந்தத்தில் தர்மராஜருக்கு (கர்ணவத) சபதத்தைப் பிரதிஞ்ஞை செய்தபடி, கர்ணனை மஹாயுத்தத்தில் கொன்று இப்பொழுது கடனாளியாகாமலிருக்கும் தன்மையை அடையப்போகிறேன். கோபமுள்ளவனும் கௌரவர்களோடு யுத்தஞ் செய்கின்றவனும் ஸூதபுத்திரனைக் கொல்லுகின்றவனுமான தனஞ்சயனை யுத்தத்தில் (எல்லோரும்) இன்று பார்க்கட்டும். நான் இப்பொழுது சத்துருக்களில் சிறந்தவனான ஸூத புத்திரனைக் கொல்லுகிறேனென்று மறுபடியும் தற்புகழ்ச்சியை உமக்கு முன்னிலையில் சொல்வேன். உலகத்தில் தனுர்வேதத்தில் எனக்கு நிகரானவன் எவன் இருக்கிறான்? பராக்கிரமத்திலாவது எனக்கு எவன் நிகராவன்? பொறுமையில் எனக்கு ஸமனான மனிதன் வேறு எவன் இருக்கிறான்? கருணையில் எனக்கு ஒப்பான மனிதன் வேறு எவன் இருக்கிறான்? சிறந்த வில்லை உடையவனான நான் என்னுடைய தோள் வலிமையினால் தேவர்களையும் அஸுரர்களையும், ஒன்று சேர்ந்திருக்கின்ற எல்லாப் பிராணிகளையும் அவமானமடையும்படி செய்வேன். சிறந்த வீரர்களுடைய வல்லமையைக் காட்டிலும் என்னுடைய வல்லமையே மேலானதென்று தெரிந்துகொள்ளும். அப்படிப்பட்ட நான் ஒருவனாகவே எல்லாக் கௌரவர்களையும் பாஹ்லீகர்களையும் விரைவாக எதிர்த்து, பனிக்காலம் கழிந்த பிறகு உலர்ந்த காட்டை அடைந்த நெருப்பு எரிப்பது போலக் காண்டீவத்தினால் (விடப்படும்) பாணங்களுடைய ஜ்வாலையினால் பலாத்காரமாக விரைவில் எரிப்பேன். என்னுடைய இந்த இரு கைகளும் அம்புகளால் கீறப்பட்டிருக்கின்றன. வில்லும் யுத்தத்தில் பாணங்களுடன் கூடியதாகவும் வளைக்கப்பட்டதாகவும் இருக்கிறது. இந்த இரு கால்களும் ரத ரேகைகளுடனும் த்வஜரேகைகளுடனும் கூடியவைகளாக இருக்கின்றன. யுத்தத்தை அடைந்திருக்கின்ற என்னைப் போன்றவனை (வீரர்கள்) [1] ஜயிக்கமாட்டார்கள்' என்றான்" என்று (ஸஞ்சயன்) கூறினான்.

---

[1] வேறு பாடம்.

எழுபத்தோன்பதாவது அத்தியாயம்

(த்வந்துவ யுத்தம்)

திருதராஷ்டிரன், "அப்பா! பாண்டவர்களுக்கும் ஸ்ருஞ்சயர்களுக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் நிலை காணமுடியாததும் மஹா பயங்கரமுமான எதிர்ப்பு ஏற்பட்டுத் தனஞ்சயனும் கர்ணனோடு யுத்தத்துக்காகச் சென்ற பிறகு, அந்த யுத்தகளத்தில் அந்த யுத்தம் எவ்வாறு நடந்தது?" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான்.

'பெரிய த்வஜங்களுள்ளவையும் நன்கு எதிர்த்தவையும் பேரிகளுடைய சப்தங்களால் அதிக ஒலியுள்ளவையும் ரண களத்தில் நிறைந்திருக்கின்றவையுமான அவர்களுடைய சேனைகள் மழைக் காலத்தில் காற்றினால் தள்ளப்பட்ட மேகங்கள் போலக் கர்ஜித்தன. பெரிய யானைகளாகிற மேகங்களால் சூழப்பட்டதும் அஸ்திரங்களாகிற ஜலத்தோடு கூடியதும் நான்குவித வாத்தியங்களுடைய சப்தங்களுடனும் சக்கரங்களுடைய நுனியினின்று உண்டாகிற சத்தத்துடனும் தலத்வனியுடனும் கூடியதும் தங்கத்தினால் சித்திரிக்கப்பட்டிருக்கிற ஆயுதங்களாகிற மின்னல்களுடன் கூடியதும், அம்புகளும், கத்திகளும், நாராசங்களும் மஹாஸ்திரங்களுமாகிற தாரைகளுடன் கூடியதும், பயங்கரமான வேகமுள்ளதும் இரத்த வெள்ளத்தைப் பெருகச் செய்கின்றதும், கத்திகளால் நிரம்பியதும், க்ஷத்திரியர்களுடைய உயிரை நாசஞ் செய்வதும், காலந்தவறி உண்டானதும் குரூரமாயிருக்கின்றதுமான அந்தக் கெடுதலான மழையானது ஜனங்களுக்குக் கலக்கத்தை உண்டு பண்ணுகிறதாகியது. அநேக ரதிகர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ரதிகனைச் சூழ்ந்துகொண்டு (அவனுக்கு) மரணத்தை உண்டுபண்ணினார்கள். அவ்வாறே, ஒரு ரதிகன் ஒரு ரதிகனையும் சிறந்த அநேக ரதிகர்களையும் நாசஞ் செய்தான். ஒரு ரதிகன் ஸாரதியோடும் குதிரைகளோடும் கூடின ஒரு ரதிகனை யமனுக்கு வசப்பட்டவனாகச் செய்தான். ஒருவன் ஒரு யானையினால் அனேக ரதிகர்களையும் குதிரைகளையும் ம்ருத்யுவின் வசத்தை அடையச் செய்தான். அவ்வாறே, பார்த்தன் ஸாரதிகளோடும் குதிரைகளோடும் கூடின தேர்களையும் யானைகளையும் எல்லாச் சத்துருக்களையும் குதிரைக்காரர்களுடன் கூடின குதிரைகளையும் காலாட்களுடைய கூட்டங்களையும் பாண ஸமூகங்களால் ம்ருத்யுவுக்கு வசப்படும்படி செய்தான். கிருபரும் சிகண்டியும் யுத்தத்துக்காக எதிர்த்தார்கள். ஸாத்யகியானவன் துரியோதனனை எதிர்த்தான். ச்ருதச்ரவஸ் த்ரோண புத்திரரோடு எதிர்த்தான். யுதாமன்யு சித்திரஸேன

ஞேடு எதிர்த்தான். ரதிகனும் ஸ்ருஞ்சயனுமான உத்தமௌஜஸ் கர்ணனுடைய புத்திரனை ஸுஷேணனை எதிர்த்தான். ஸஹதேவன் சூதாடியும் காந்தார தேசாதிபதியுமான சகுனியை ஒரு சிங்கமானது பெரிய காளையை எதிர்ப்பதுபோல் எதிர்த்தான். யௌவனமுள்ள நகுல புத்திரனை சதானீகன், யௌவனமுள்ள கர்ணபுத்திரனை விருஷஸேனனைப் பாணஸமூகங்களால் அடித்தான். சூரனைகர்ணபுத்திரனும் பாஞ்சாலீபுத்திரனை சதாநீகனை அனேக பாணவர்ஷங்களால் அடித்தான். ரதிகர்களுள் சிறந்தவனும் ஆச்சரியகரமாக யுத்தஞ் செய்பவனும் மாத்ரீபுத்திரனுமான நகுலன் கிருதவர்மாவை எதிர்த்தான். பாஞ்சாலர்களுக்குத் தலைவனும் ஸேனாபதியுமான த்ருஷ்டத்யும்னன் சேனைகளுடன் கூடின கர்ணனை எதிர்த்தான். பாரதரே! துச்சாஸனன், பரத குலத்தி லுதித்தவனும் வாயைத்திறந்திருக்கும் யமன் போல் விளங்குபவனும் க்ரூரனும் யுத்தத்தில் பயங்கரனும் சஸ்திர தாரிகளுள் சிறந்தவனும் ஸஹிக்கத்தகாத வேகமுள்ளவனுமான அந்தப் பீமனை எதிர்த்தான். அவ்வாறே, வீரனை உத்தமௌஜஸ் அந்த யுத்தத்தில் பலாத்காரமாகக் கர்ணபுத்திரனைக் கொன்றான்; அவனுடைய தலையையும் அறுத்தான். அவனுடைய முடியானது ஒலியினால் பூமியையும் ஆகாயத்தையும் எதிரொலியிடும்படி செய்து கொண்டு பூமியில் விழுந்தது. பூமியில் விழுந்த ஸுஷேணனுடைய தலையைக் கண்டு கர்ணன் அப்பொழுது துக்கமுற்றவனாகிப் பிறகு கோபத்தினால் அந்த உத்தமௌஜஸினுடைய குதிரைகளையும் தேரையும் கொடியையும் நல்ல நுனியுள்ளவைகளும் கூர்மையுள்ளவைகளுமான பாணங்களால் அறுத்தான், அந்த உத்தமௌஜஸ் கூர்மையுள்ள அம்புகளாலும் பிரகாசிக்கின்ற கத்தியினாலும் கிருபரை அடித்து (அவருடைய) பின்பக்கத்தை ரக்ஷிக்கின்ற வீரர்களையும் கொன்று, பிறகு, சிகண்டியினுடைய ரதத்தின் மீதேறினான். ரதத்திலிருக்கிற சிகண்டியானவன், கிருபர் ரதத்தை இழந்ததைக்கண்டு அவரை அம்புகளால் அடிக்க விரும்பவில்லை. துரோணபுத்திரர் கிருபருடைய அந்தத் தேரைச் சூழ்ந்துகொண்டு சேற்றில் ஆழ்ந்த பசுவைப்போலக் கரையேற்றினார். பொற்கவச மணிந்தவனும் வாயுவுக்குப் புத்திரனுமான பீமன் கோடைக் காலத்தில் உச்சியை அடைந்திருக்கின்ற சூரியன் போல (பிரகாசித்துக்கொண்டு) கூர்மையுள்ள அம்புகளால் உம்முடைய குமாரர்களுடைய படையை அதிகமாகத் தவிக்கச் செய்தான்.

எண்பதாவது அத்தியாயம்

(பீமஸேனனுக்கும் விசோகனுக்கும் ஸம்வாதம்)

பிறகு, கைகலந்த யுத்தத்தில், அனேக சத்துருக்களால் சூழப்பட்ட ஒருவனான பீமன், மஹாயுத்தத்தில் ஸாரதியைப்பார்த்து, 'ஸாரதியே! இப்பொழுது நீ தார்த்தராஷ்டிரர்களுடைய சேனையைக் குறித்து (குதிரைகளை) நடத்து. வேகத்தோடு குதிரைகளுடன் செல். இந்தத் தார்த்தராஷ்டிரர்களை யமனிடத்தில் அனுப்புகிறேன்' என்று சொன்னான். பீமஸேனனால் இவ்வாறு தூண்டப்பட்ட அந்த ஸாரதி, கடிய வேகத்துடன், பீமன் அந்தச் சேனையை எதிர்க்க விரும்பின இடத்தில் உம்முடைய புத்திரர்களுடைய சேனையைக் குறித்து விரைவாகச் சென்றான். பிறகு, மற்றக் கௌரவர்கள் யானைகளோடும் ரதங்களோடும் குதிரைகளோடும் காலாட்களோடும் நான்கு பக்கத்திலும் அவனை எதிர்த்தார்கள். அவர்கள், மிக்க வேகமுள்ள பீமனுடைய சிறந்த குதிரையைப் பாணஸமூகங்களால் நாற்புறங்களிலும் அடித்தார்கள். பிறகு, மிக்கவலிமை யமைந்த பீமன், வருகின்ற அம்புகளை ஸ்வர்ணமயமான கட்டுக்களுள்ள பாணங்களால் வெட்டினான். பொற்புங்கமுள்ள அந்தப் பாணங்கள் பீமனுடைய பாணங்களால் இரண்டாகவும் மூன்றாகவும் அறுக்கப்பட்டுக் கீழே விழுந்தன. அரசரே! பிறகு, சிறந்த அரசர்களுடைய மத்தியில் பீமனால் கொல்லப்படுகிற யானைகள் ரதிகர்கள் யௌவனமுள்ள குதிரைகள் இவற்றின் கோரமும் மிக்க பெரிதுமான சப்தமானது அப்பொழுது வஜ்ரத்தினால் பிளக்கப்பட்ட மலைகளுடைய சப்தம் போலத் தோன்றியது. பீமனுடைய சிறந்த பாணங்களால் பிளக்கப்பட்டு வதம் செய்யப்படுகின்ற அந்தச் சிறந்த அரசர்கள், பறவைகள் மலர்களுக்காக மரத்தை நோக்கி வருவதுபோல யுத்தத்தில் எல்லாப் பக்கத்திலும் பீமனை நோக்கி எதிர்த்து வந்தார்கள். உம்முடைய சேனையானது எதிர்த்துச்செல்லுங்காலத்தில் முடிவற்ற வேகமுள்ளவனான அந்தப் பீமன், பிரளயகாலத்தில் காலதண்டத்தைக் கையிற் கொண்டவனும் நாசஞ்செய்பவனும் எரிக்க எண்ணங்கொண்டவனும் பிராணிகளை அழிப்பவனுமான காலன் போல வேகத்தை வெளிப்படுத்தினான். ஊழிக்காலத்தில் பிரஜைகளைக் கவர்கின்றவனும் வாயைத்திறந்துகொண்டு வருகின்றவனுமான காலனுடைய (வேகத்தை) பிராணிகள் தாங்கமாட்டாதது போல யுத்தத்தில் அதிக வேகமுள்ளவனான அந்தப் பீமனுடைய அதிக வேகத்தைத் தாங்குவதற்கு உம்மைச் சேர்ந்தவர்கள் வல்லமையுள்ளவர்கள் ஆகவில்லை. பாரதரே!

பிறகு, யுத்தத்தில் மஹாத்மாவான பீமனால் நன்றாக எரிக்கப் படுகின்ற பாரத சேனையானது, அவனால் துரத்தியடிக்கப்பட்ட தாகவும் பயந்ததாகவும், பெரிய காற்றினால் மேகங்களுடைய கூட்டங்கள் சிதற அடிக்கப்படுவதுபோலத் திசைகளில் சிதற அடிக்கப்பட்டது. பிறகு, சிறந்த புத்தியுள்ளவனும் மிக்க வலிமை யுள்ளவனுமான அந்தப் பீமஸேனன், மறுபடியுமே ஸந்தோஷ முள்ளவனாக ஸாரதியைப் பார்த்து, 'ஸூத! ஒன்று சேர்ந்து வருகின்ற தேர்களையும் கொடிகளையும் நம்மைச் சேர்ந்தவைகளா, பிறருடையவைகளா என்று தெரிந்துகொள். யுத்தம் செய்கின்ற வனை நான் ஒன்றையும் அறியவில்லை. அஜாக்கிரதையுள்ளவனை நான் என்னுடைய சேனையை (ஆயுதங்களால்) மூடாமலிருக்க வேண்டும். சோகத்தை விட்டவர்களான சத்துருக்களை நான்கு பக்கத்திலும் பார்த்துப் பெரிய கோபமானது மறுபடியும் அதிக மாக என்னை வந்தடைகிறது. அரசரான யுதிஷ்டிரர் துன்பத்தை அடைந்திருக்கிறார். அர்ஜுனன் வராமையால் அனேக துக்கங்களை நினைக்கிறேன். தர்மராஜர் பகைவர்களுடைய மத்தியில் என்னை விட்டுவிட்டுச் சென்றதினாலுண்டான இந்தத் துக்கத்தைத் தரிக்கிறேன். இவர் உயிரோடிருக்கிறாரோ, இல்லையோ; நான் அறியேன் அர்ஜுனனையும் நான் அறியேன். அதனால், எனக்கு இப்பொழுது அதிக துக்கம் உண்டாகிறது. அதிகப் பிரஸித்தி பெற்ற அப்படிப்பட்ட நான் அதிக பலமுள்ள பகைவர் படையை நாசஞ் செய்வேன். யுத்தத்தின் மத்தியில் ஒன்று கூடியிருக்கின்ற இந்தச் சேனையைக் கொன்று இப்பொழுது உன்னுடன் பிரீதி யடைந்தவனாகப் போகிறேன். ஸூத! என் தேரிலுள்ள எல்லா அம்புப் பெட்டிகளையும் பாணங்களையும் பார்த்துப் பாணங்களுள் அதிகமாயிருப்பவற்றின் வகை என்னவென்பதையும் தொகை என்னவென்பதையும் நன்கு அறிந்து சொல்வாயாக. ஸாரதியே! பாணங்கள் எத்தனை ஆயிரங்களிருக்கின்றன? எத்தனை நூறாக விருக்கின்றன? இதனை விரைவாக எனக்குச்சொல்' என்று சொன்னான்.

விசோகன், 'வீரரே! இப்பொழுது உமக்குக் காரியஸித்தியைத் தரக்கூடிய எல்லாவற்றையும் அறிந்து இவ்வண்ணம் கூறுவேன். கேகயர்கள், காம்போஜர்கள், ஸௌராஷ்டிரர்கள், பாஹ்லீகர்கள், மிலேச்சர்கள், ஸுஹ்மர்கள், பரதங்கணர்கள், மத்ரர்கள், வங்கர் கள், மகதர்கள், குளிந்தர்கள், ஆனர்த்தகர்கள், ஆவர்த்தகர்கள், மலைநாட்டு வீரர்கள் ஆகிய இவர்களெல்லாரும் சிறந்த ஆயுதங் களைத் தரித்து உம்மை நாற்பக்கங்களிலும் சூழ்ந்து சூழ்ந்து பிறகு

ஸிம்மநாதஞ் செய்தார்கள். வீரரே! உம்முடைய இந்தத் தேரில் கூர்மையுள்ளவைகளும் நன்கு துவைந்தவைகளுமான பன்னீராயிரம் பல்லங்கள் இருக்கின்றன; அறுபதினாயிரம் பாணங்களிருக்கின்றன; அவ்வாறே, பதினாயிரக்கணக்கான க்ஷுரங்களும் பல்லங்களுமிருக்கின்றன. வீரரே! குந்திபுத்திரரே! இரண்டாயிரம் நாராசங்களும் மூவாயிரம் ப்ரதரங்களும் இருக்கின்றன. பாண்டு நந்தனரே! ஆறு எருதுகள் பூட்டிய வண்டிகள் சுமக்க முடியாத அவ்வளவு ஆயுதங்கள் மிகுந்திருக்கின்றன. கற்றறிந்தவரே! ஆயிரக்கணக்காக இவைகளைப் பிரயோகம் செய்யும் உமக்குக் கதாயுத பலமும் கத்தியின் பலமும் கை வன்மையுமிருக்கின்றன. ஈட்டிகளும் உலக்கைகளும் சக்திகளும் எறிவளையங்களும் இருக்கின்றன. ஆயுதங்கள் குறைபடுமென்று நீர் பயப்படவேண்டாம்' என்று கூறினான். பீமஸேனன், 'விசோக! யுத்தத்தில் பீமஸேனன் பகைவரை விடாதவன்; ஒருவனாகவே யுத்தத்தில் பகைவர்களை ஜயித்தான்' என்று எல்லா உலகத்திலும் பிராணிகள் என்னுடைய பிரதிஜ்ஞையை நிச்சயமாக இன்றைக்கே நிறைவேறினதாகச் சொல்லட்டும். விரும்பப்பட்ட விஷயங்களுள் இது ஒன்றே (எனக்கு) ஸித்திக்கட்டும். தேவர்கள் என்னுடைய இந்த விருப்பத்தைப் பூர்ணமாக நிறைவேற்றட்டும். ஸூத! இப்பொழுது என் கையிலிருப்பவைகளும் எல்லா அரசர்களையும் கொல்லுகின்றவைகளும் அதிகவேகமுள்ளவைகளுமான பாணங்களால் மூடப்பட்டதும் கோரரூபமுள்ளதுமான யுத்தமானது சூரியனை மறைப்பதும் ம்ருத்யுவினுலகத்திற்கொப்பானதும் ஆகப்போகிறது. 'ஸூத! யுத்தத்தில் பீமஸேனன் மூழ்கிப்போய் விட்டான்; அல்லது ஒருவனாக இருந்துகொண்டு யுத்தத்தில் கௌரவர்களை வென்றான்' என இந்த விருத்தாந்தமானது அரசர்களுள் பாலர்வரையில் தெரிந்ததாகப் போகின்றது. எல்லாக் கௌரவர்களும் யுத்தத்தில் விழட்டும். ஜனங்கள் சிறு குழந்தைகள் வரையில் என்னைப் புகழட்டும். நானொருவனாகவே அவர்களனைவர்களையும் கீழே தள்ளப்போகிறேன். அவர்களனைவர்களுமாவது என்னைக் கொல்லட்டும். உத்தமமான செய்கையை விரும்புகிற தேவர்கள் என்னுடைய இந்த விருப்பத்தை ஸபலமாகச் செய்யட்டும். கேசவரை ஸாரதியாகக்கொண்ட ரதிகன் யஜ்ஞத்தில் அழைக்கப்பட்டிருக்கும் இந்திரனைப்போல விரைவாக இங்கு வருகிறான். பிளக்கப்படுகின்ற இந்தப் பாரதசேனையைப் பார். இந்த அரசர்கள் யாதுகாரணத்தினால் ஓடுகிறார்கள்? சிறந்தபுத்தியுள்ளவனும் புருஷர்களுள் உத்தமனுமாகிய ஸவ்யஸாசி இந்தச் சேனையை

விரைவாகப் பாணங்களினால் வ்யக்தமாக மூடுகின்றான். விசோக! யுத்தத்தில், த்வஜங்களையும் ஓடுகின்ற யானைகளையும் குதிரைகளையும் காலாட் கூட்டங்களையும் பார். ஸாரதியே! பாணங்களாலும் சக்திகளாலும் அடிக்கப்பட்டுச் சிதறிப் போயிருக்கின்ற தேர்களையும் இந்த ரதிகர்களையும் பார். வஜ்ராயுதத்திற்கு ஸமமான வேகமுள்ளவைகளும் ஸ்வர்ணமயமான இறகுக் கற்றைகளால் அடர்ந்தவைகளுமான தனஞ்சயனுடைய பாணங்களால் கவரப்பட்டிருக்கின்றதும் அதிகமாகப் பீடிக்கப்படுகின்றதுமான இந்தக் கௌரவ சேனையானது அடிக்கடி நான்கு பக்கத்திலும் நிறைக்கப் படுகின்றது. இந்த ரதங்களும் குதிரைகளும் யானைகளும் காலாட்களுடைய கூட்டங்களை அதிகமாகத் துவைத்துக்கொண்டு ஓடுகின்றன. எல்லாக் கௌரவர்களும் மிக்க மயக்கங்கொண்டவர்களாக, தீ யெரிவதைக்கண்டு பயந்த யானைகளைப்போல ஓடுகின்றார்கள், விசோக! யுத்தத்தில் 'ஹா! ஹா!' என்று அலறும் பெரிய யானைகள் பேரொலிகளை வெளியிடுகின்றன' என்று கூறினான்.

விசோகன், பீமஸேனரே! இச்சமயத்தில் காண்டீவத்தினுடைய அதிகோரமான இந்த த்வனியை நீர் கேட்கவில்லையா? கோபங் கொண்டிருக்கின்ற பார்த்தனால் இழுக்கப்பட்ட நாண் கயிற்றின் ஒலியினால் உம்முடைய இந்த இருகாதுகளும் செவிடாகாமலிருக்கின்றனவா? பாண்டுநந்தனரே! உம்முடைய எல்லா விருப்பங்களும் நிறைவேறிவிட்டன. யானைப்படையில் இதோ வானரம் காணப்படுகிறது. கறுத்த மேகத்தில் மின்னல் பிரகாசிப்பது போல் பிரகாசிக்கின்ற நாண்கயிற்றைப் பாரும். இந்த வானரமானது தனஞ்சயனுடைய த்வஜத்தின் நுனியிலேறி யுத்தத்தில் பகைவர்களின் கூட்டங்களைப் பயம் அடையச்செய்து கொண்டு நான்கு பக்கத்திலும் பார்க்கின்றது. நேரில் பார்த்து நானே இதனிடத்தினின்று பயமடைகிறேன். விசித்திரமான இந்தத் தனஞ்சயனுடைய கிரீடமானது அதிகமாகப் பிரகாசிக்கின்றது. கிரீடத்திலிருக்கும் சிறந்த இந்த ரத்தினமும் சூரியனுடைய காந்திபோன்ற காந்தியையுடையதாக விளங்குகின்றது. பயங்கரமானதும் வெண்ணிறமுள்ள மேகம்போலப் பிரகாசிக்கின்றதும் நல்ல ஒலியுள்ளதுமான தேவதத்தமென்னும் சங்கத்தைப் பக்கத்தில் பாரும். வீரரே! கடிவாளங்களைக் கையிற்பிடித்தவரும் பகைவருடைய படைகளில் நுழைகிறவருமான ஜனார்த்தனருடைய சூரியனுடைய ஒளிபோன்ற ஒளியுடையதும் நடுவில் வஜ்ரமிழைத்ததும் முனையில் கத்திகளோடு கூடியதும் அவருடைய பக்கத்தி

விருப்பதும் அவருடைய கீர்த்தியை விருத்தி செய்வதும் யாதவர்களால் எப்பொழுதும் பூஜிக்கப்படுவதுமான சக்கரத்தைப் பாரும். ஸரளவிருக்ஷங்களுக்கொப்பான பெரிய யானைகளுடைய துதிக்கைகள் க்ஷுரங்களால் அறுக்கப்பட்டு இதோ விழுகின்றன. அந்தக் கிரீடியினால் மறுபடியும் அம்புகளால் அறுக்கப்பட்ட யானைகள் மாவுத்தர்களோடு கூடியவைகளாக வஜ்ரங்களால் அடிக்கப்பட்டிருக்கிற மலைகள்போலக் கீழேவிழுந்தன. குந்திநந்தனரே! அவ்வாறே, மிக்க சிறப்புற்றதும் சந்திரனுடைய வர்ணம்போன்ற வர்ணமுடையதுமான அந்த வாஸுதேவருடைய பாஞ்சஜன்யத்தையும் பாரும். மார்பில் மிக ஜ்வலிக்கின்ற கௌஸ்துப ரத்தினத்தையும் விஜயத்தைக் கொடுக்கக்கூடிய வனமாலையையும் பாரும். ரதிகர்களுள் சிறந்தவனும் சிறந்த ரதத்தையுடையவனுமான பார்த்தன், இந்தச் சத்துருக்களின் சேனையை நிச்சயமாகத் துரத்திக்கொண்டு, வெண்ணிறமுள்ள மேகம்போன்ற நிறமுள்ளவைகளும் வாஸுதேவரால் ஓட்டப்பட்டவைகளுமான சிறந்த குதிரைகளோடு வருகிறான். பாணங்களால் பிளக்கப்பட்ட ரதங்களையும் குதிரைகளையும் காலாட்களுடைய கூட்டங்களையும் பாரும். தேவராஜனுடைய காந்திபோன்ற காந்தியையுடையவனான உம்முடைய இளைய ஸகோதரனாலே இந்தச் சேனைகள் கருடனுடைய காற்றினால் பெரிய காடுகள் விழுவதுபோலக் கீழே விழுகின்றன. யுத்தத்தில் கிரீடியினால் பெரிய அம்புகளால் குதிரைகளோடும் ஸாரதிகளோடும் சேர்ந்து நாசஞ் செய்யப்பட்ட இந்த நானூறு தேர்களையும் எழுநூறு யானைகளையும் அனேகர்களான காலாட்களையும் குதிரை வீரர்களையும் [1] பாரும். பலவானான இந்த அர்ஜுனன் சித்திரமான கிரகம்போலக் கௌரவர்களை நாசஞ் செய்துகொண்டு உம்முடைய பக்கத்தை நோக்கி எதிரில் வருகிறான். விருப்பங்கள் நிறைவேறப் பெற்றவராகிறீர். உம்முடைய பகைவர்கள் மாண்டார்கள். உம்முடைய பலமும் நீண்ட ஆயுளும் விருத்தி அடையட்டும்' என்றான். பீமஸேனன், 'ஸாரதியே! நீ பிரியத்தைச் சொன்னதனால் மிக்க மனக்களிப்புற்ற நான் உனக்குச் சிறந்த பதினான்கு கிராமங்களைக் கொடுக்கிறேன். விசோக! நீ எனக்கு அர்ஜுனனைத் தெரிவித்ததால் உனக்கு நூறு தாஸிகளையும் இருபது ரதங்களையும் 'கொடுக்கிறேன்' என்று சொன்னான்.

---

[1] 'ரதாந்' என்பது விடப்பட்டது.

எண்பத்தோராவது அத்தியாயம்

(பார்த்தனுடைய பராக்கிரமமும், துரியோதனனால் ஏவப்பட்ட சகுனியைப் பீமன் தோல்வி அடையச் செய்ததும்.)

யுத்தத்தில் ரதங்களுடைய சப்தத்தையும் ஸிம்மநாதத்தையுங் கேட்டு, அர்ஜுனன் கோவிந்தரைப் பார்த்து, 'குதிரைகளைச் சீக்கிரமாக நடத்தும்' என்று சொன்னான். கோவிந்தர், அர்ஜுனனுடைய வார்த்தையைக் கேட்டு, அவனைப் பார்த்து, 'பீமனிருக்குமிடத்திற்கு இதோ நான் அதிசீக்கிரமாகச் செல்லுகிறேன்' என்று சொன்னார். சொல்லுகின்ற அந்த அர்ஜுனனை, பனியையும் சங்கத்தையும் போன்ற நிறமுள்ளவைகளும் பொன்னாலும் முத்துக்களாலும் மணிகளாலும் செய்யப்பட்ட கவசம் பூண்டவைகளுமான குதிரைகள், ஜம்பனைக் கொல்ல எண்ணங்கொண்டு வஜ்ராயுதத்தைக் கையில் பிடித்த இந்திரனை அக்காலத்தில் குதிரைகள் அந்த யுத்தத்தில் தாங்கியதுபோலத் தாங்கின, கோபங்கொண்டவர்களும் ரதங்களுடனும், குதிரைகளுடனும். யானைகளுடனும், காலாட்கூட்டங்களுடனும் கூடியவர்களுமான புருஷஸ்ரேஷ்டர்கள் பாணங்களுடைய ஒளிகளினாலும், சக்கரங்களுடைய ஓரங்களிலுண்டாகின்ற சப்தங்களினாலும், குளப்படிச் சத்தங்களினாலும் பூமியையும் திசைகளையும் நன்றாக ஒலியடையும்படி செய்துகொண்டு ஜயத்தைக் கருதி எதிர்த்துச் சென்றார்கள். பெரியவரே! அவர்களுக்கும் பார்த்தனுக்கும் தேகங்களையும் உயிரையும் பாவத்தையும் நாசஞ் செய்கின்ற நல்ல யுத்தமானது (முற்காலத்தில்) மூவுலகங்களின் நிமித்தமாக ஜயசீலர்களுள் உத்தமரும் விளையாடுகின்றவருமான விஷ்ணுவுக்கு அஸுரர்களோடு யுத்தம் நேர்ந்தது போல நேர்ந்தது. கிரீடதாரியான அர்ஜுனன் ஒருவனாக இருந்துகொண்டே அவர்களால் பிரயோகிக்கப்பட்ட பற்பலவிதமான அந்த ஆயுதத்தைத் துண்டாக்கி க்ஷுரங்களாலும், அர்த்தசந்த்ர பாணங்களாலும், கூர்மையுள்ள பல்லங்களாலும் அவர்களுடைய தலைகளையும் கைகளையும் குடைகளையும் சாமரங்களையும் கொடிகளையும் குதிரைகளையும் ரதங்களையும் காலாட்களுடைய கூட்டங்களையும் யானைகளையும் பலவாறாகத் துண்டாக்கினான். பலவாறு அறுக்கப்பட்ட அவைகள் காற்றினால் முறித்துத் தள்ளப்பட்ட காடுகள் போலப் பூமியில் விழுந்தன. பொன்விரிப்புக்களால் மூடப்பட்டவைகளும் கொடித் துணிகளுடனும் கொடிகளுடனும் யுத்த வீரர்களுடனும் கூடினவையாகச் செய்யப்பட்டவைகளும் பொற்புங்கங்

களுள்ள பாணங்களால் நிறைக்கப்பட்டிருப்பவைகளுமான பெரிய யானைகள் எரிகின்ற மலைகள்போல விளங்கின. தனஞ்சயன் இந்திரனுடைய வஜ்ராயுதத்துக்குச் சமமான உத்தம பாணங்களால் யானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் பிளந்து கர்ணனைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணத்தினால் முற்காலத்தில் இந்திரன் பலன் என்னும் அஸுரனை வதஞ்செய்வதற்காகச் சென்றதுபோல விரைவாகச் சென்றான். பிறகு, புருஷச்ரேஷ்டனும் பகைவர்களை அடக்குகிறவனும் மஹாபாகுபலமுள்ளவனுமான அந்த அர்ஜுனன், மகரமானது ஸமுத்திரத்தில் பிரவேசிப்பதுபோல் ஸைன்யத்தில் பிரவேசித்தான். அரசரே! ரதங்களோடும் காலாட்களோடும் கூடியவர்களும் யானைகளாலும் குதிரைகளாலும் குதிரை வீரர்களாலும் அதிகரித்தவர்களுமான உம்மைச் சேர்ந்த வீரர்கள் ஸந்தோஷமுள்ளவர்களாக அந்தப் பாண்டவனை விரைவாக எதிர்த்து அருகில் வந்தார்கள். பார்த்தனைக் குறித்து வருகின்ற அவர்களுடைய மிக்க பெரிதான சப்தமானது கலக்கப்பட்ட ஸமுத்திரத்தினுடைய ஜலத்தினது ஒலிபோலத் தோன்றியது. அந்த மஹாரதர்களோ யுத்தத்தில் பிராண பயத்தை விட்டு, அந்தப் புருஷச்ரேஷ்டனைப் புலிகள்போல் எதிர்த்துவந்தனர். அந்த இடத்தில் சரமாரிகளைப் பொழிந்துகொண்டு வருகின்ற அந்தக் கௌரவ வீரர்களுடைய படையை, அர்ஜுனன், பெருங்காற்று மேகங்களைச் சிதறச்செய்வதுபோலச் சிதறச்செய்தான். (பகைவர்களை) நன்றாக அடிப்பவர்களும் சிறந்த வில்லாளிகளுமான அந்த வீரர்கள் ஒன்றுசேர்ந்து ரதஸமூகங்களோடு கூடி, அர்ஜுனனை எதிர்த்துக் கூர்மையுள்ள பாணங்களால் அடித்தார்கள். பிறகு, அர்ஜுனன் ஆயிரக்கணக்கான தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் பாணங்களால் யமனுடைய வீட்டுக்கு அனுப்பினான். யுத்தத்தில் பார்த்தனுடைய வில்லினின்று விடுபடுகின்ற பாணங்களால் கொல்லப்படுகின்ற அந்த மஹாரதர்கள் பயமுண்டாகவே ஆங்காங்குப் பதுங்கினார்கள். அர்ஜுனன் அவர்களுள் முயற்சியுள்ளவர்களும் மஹாரதர்களுமான நானூறு வீரர்களைக் கூர்மையுள்ள பாணங்களால் யமனுடைய வீட்டை அடையச்செய்தான். யுத்தத்தில் பற்பல அடையாளங்களுள்ள கூர்மையான பாணங்களால் பீடிக்கப்படுகின்ற அந்த வீரர்கள் அர்ஜுனனை விட்டுவிட்டுப் பத்துத் திசைகளிலும் ஓடினார்கள். ஸேனுமுகத்தில் ஓடுகின்ற அந்த வீரர்களுடைய பெரிய சப்தமானது மலையை அடைந்து சிதறுகின்ற மேகஸமூகத்தினுடைய சப்தம்போலத் தோன்றியது. உமக்கு மங்களம். ஐயா! குந்திபுத்திரனை

அர்ஜுனன் அந்தச் சேனையைப் பாணங்களால் நன்றாக அடித்துத் துரத்தி ஸூதபுத்திரனுடைய படைக்கு எதிராகச் சென்றான். பகைவர்களை எதிர்த்துச் செல்லுகின்ற அந்த அர்ஜுனனுடைய பெரிய சப்தமானது முற்காலத்தில் ஸர்ப்பங்களுக்காகப் பறந்து வருகின்ற கருடனுடைய சப்தம்போல் உண்டாயிற்று. அர்ஜுனனைப் பார்ப்பதில் மிகுந்த ஆவலுள்ளவனும் மஹா பலசாலியுமான பீமஸேனன் அந்தச் சப்தத்தைக் கேட்டு அதிகப் பிரீதியுள்ளவனானான். மஹாராஜரே! பிரதாபசாலியான பீமஸேனன் அர்ஜுனன் வருகின்றதைக் கேட்ட மாத்திரத்தி லேயே உயிரில் பற்றைவிட்டு உமது சேனையை அடித்தான். வாயுவினுடைய வீரியத்துக்கு ஒப்பான வீரியமுள்ளவனும் வேகத் தில் வாயுவுக்குச் சமமாக இருப்பவனும் சிறந்த பிரதாபமுள்ளவ னும் வாயுவுக்குப் புத்திரனுமான பீமன் வாயுவைப்போல் ஸஞ்ச ரித்தான். ராஜச்ரேஷ்டரே! ஜனநாதரே! மஹாராஜரே! அவனால் துன்புறுத்தப்படுகின்ற உம்முடைய சேனையானது ஸமுத்திரத்தில் உடைபட்ட மரக்கலம்போலக் கீழே அழுந்தியது. பீமன் கைத்தேர்ச்சியைக் காண்பித்துக்கொண்டு அப்பொழுது அந்தச் சேனையை யமனுடைய வீட்டுக்கு அனுப்பப்போகிறவனாக உக்கிரமான பாணங்களால் அறுத்தான். பாரதரே! அந்த யுத்தத்தில் யுத்தவீரர்கள் யுகம் முடியுங்காலத்தில் காலனுடைய பலம்போன்ற அதிமானுஷமான பீமனுடைய பலத்தைக் கண்டு விசேஷமாகப் பயமடைந்தார்கள். பாரதரே! பீமஸேனனால் அவ்வாறு பயங்கரமான பலமுள்ள வீரர்கள் அடிக்கப்பட்டது கண்டு அரசனான துரியோதனன் இந்த வசனத்தை உரைக்க லானான்: பரதர்களுள் சிறந்தவரே! துரியோதனன் யுத்தத்தில் மஹாவில்லாளிகளான எல்லாச் சேனைத்தலைவர்களையும் யுத்தவீரர் களையும் நோக்கி, 'பீமனைக் கொல்லுங்கள். அவன் கொல்லப்பட் டால் பாண்டவ சேனை முழுவதும் கொல்லப்பட்டதென்று எண்ணுகிறேன்' என்று கட்டளையிட்டான். அரசர்கள் உமது புத்திரனுடைய அந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு பீமனைச் சரமாரிகளால் நாற்புறத்திலும் நன்றாக மூடினார்கள். ராஜேந் திரரே! வேந்தரே! அனேக யானைகளும் ஜயத்தில் விருப்பமுள்ள மனிதர்களும் ரதத்திலிருப்பவர்களும் விருகோதரனைச் சூழ்ந்து கொண்டார்கள் மன்னரே! நாற்புறங்களிலும் அந்தச் சூரர் களால் சூழப்பட்டவனும் பரதவம்சத்தில் உதித்தவர்களுள் சிறந்த வனுமான அந்தச் சூரன் நக்ஷத்திரங்களால் சூழப்பட்ட சந்திரன் போல விளங்கினான். மஹாராஜரே! வட்டமான ரேகையுடன் கூடின பூர்ணசந்திரன் விளங்குவதுபோல யுத்தத்தில் பார்க்க

இனிமையான அந்தப் புருஷஸ்ரேஷ்டன், யுத்தத்தில் விஜயனோடு வேற்றுமையில்லாதவனாகவே விளங்கினான். கோபத்தினால் சிவந்த கண்களையுடையவர்களும் சூரர்களுமான அந்த அரசர்கள் அனைவரும் விருகோதரனைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்களாக அவன்மீது சரமாரியைப் பொழிந்தார்கள். பீமன் படிந்த கணுக்களுள்ள பாணங்களால் அந்தப் பெருஞ்சேனையைப் பிளந்து ஒரு மீனானது ஜலத்தில் வலையினின்று வெளிப்படுவது போல யுத்தத்தினின்று வெளிப்பட்டான். பாரதரே! பீமன், திரும்பாதவைகளான பதினாயிரம் யானைகளையும் இரண்டு லக்ஷத்திருநூறு மனிதர்களையும் ஐயாயிரம் குதிரைகளையும் நூறு ரதிகர்களையும் கொன்று, இரத்தவெள்ளத்துடன் கூடின நதியைப் பெருகியோடச் செய்தான். புருஷஸ்ரேஷ்டனான பீமன் இரத்தமாகிற ஜலத்துடன் கூடியதும் ரதங்களாகிற சுழல்களுள்ளதும் யானைகளாகிற பெருமீன்களால் நாற்பக்கத்திலும் சூழப்பட்டதும் மனிதர்களாகிற மீன்களையும் குதிரைகளாகிற முதலைகளையுமுடையதும் மயிர்களாகிற பாசிகளும் புல்தரைகளுமுள்ளதும் அறுக்கப்பட்ட கைகளாகிற சிறந்த ஸர்ப்பங்களுடன் கூடியதும் அனேக ரத்னங்களைக் கவர்ந்துகொண்டு போகின்றதும் தொடைகளாகிற முதலைகளையுடையதும் மாம்ஸங்களாகிற சேற்றையுடையதும் தலைகளாகிற கற்களால் நன்றாகச் சூழப்பட்டதும் விற்களாகிற நாணல்களையுடையதும் அம்புகளாகிற [1]தெப்பங்களை உடையதும் கதாயுதங்களும் பரிகங்களும் கொடிகளுமுள்ளதும் குடைகளாகிற அன்னப்பறவைகளையுடையதும் த்வஜங்களுடன் கூடியதும் உத்தமமான தலைப்பாகைகளாகிற நுரைகளுள்ளதும் ஆரங்களாகிற தாமரை மலர்களுக்கு உத்பத்திஸ்தானமாயிருப்பதும் பூமியிலுண்டான புழுதிகளாகிற அலைகளுடைய வரிசைகளையுடையதும் சிறந்த வீரர்களுடைய செய்கைகளுடன் கூடியதும் யுத்தத்தில் மிக்க பயமுள்ளவர்களால் தாண்டமுடியாததும் யுத்தவீரர்களாகிற முதலைகளையுடையதும் யுத்தபூமியில் யமனுடைய வாஸஸ்தானத்தைக் குறித்துச்செல்லுவதும் வைதரணிபோல் உக்கிரமாயிருப்பதும் மனோதைரியமற்றவர்களால் எவ்விதத்தினாலும் தாண்டமுடியாததும் அவ்வாறு கோரமாயிருப்பதும் தாண்டமுடியாததும் பயப்படுகிறவர்களுக்குப் பயத்தை விருத்திபண்ணுகின்றதுமான ஒரு நதியைக் கணப்பொழுதில் பெருகச் செய்தான். ரதிகர்களுள் சிறந்தவனான பாண்டுநந்தனன் சென்ற சென்ற

---

[1] வேறு பாடம்,

இடங்களிலெல்லாம் லக்ஷக்கணக்காக யுத்த வீரர்கள் எதிர்த்து வந்தார்கள். மஹாராஜரே! யுத்தத்தில் பீமஸேனனால் இவ்வாறு செய்யப்பட்ட செய்கையைக் கண்டு துரியோதனன் சகுனியைப் பார்த்து, 'மாமா!' யுத்தத்தில் மஹாபலசாலியான பீமஸேனனைக் கொல். இவன் ஜயிக்கப்பட்டால் பாண்டவர்களுடைய பெரும் படையானது ஜயிக்கப்பட்டதென்றே எண்ணுகிறேன்' என்றான். மஹாராஜரே! பிறகு, சிறந்த பிரதாபமுள்ள சகுனி பெரும் போருக்கு ஸன்னத்தனாகிப் பிராதாக்களால் சூழப்பட்டுச் சென்றான். வீரனான அந்தச் சகுனி யுத்தத்தில் பயங்கரமான பராக்கிரமமுள்ள அந்தப் பீமனை எதிர்த்துக் கரையானது ஸமுத்திரத்தைத் தடுப்பது போலத் தடுத்தான். கூர்மையுள்ள அம்புகளால் தடுக்கப்படுகின்ற பீமன் அந்தச் சகுனியை நோக்கித் திரும்பினான். ராஜசிரேஷ்டரே! சகுனி அந்தப் பீமனுடைய இடவிலாப் பக்கத்திலும் நடுமார்பிலும் தங்கக்கட்டுள்ளவைகளும் சாணையில் தீட்டப்பட்டவைகளுமான நாராசங்களைப் பிரயோகித்தான். கோரரூபமுள்ளவைகளும் கழுகிறகுகள் பூண்டவைகளுமான அந்த அம்புகள் மஹாத்மாவான பாண்டவனுடைய கவசத்தை உடைத்து அழுந்தின. பாரதரே! யுத்தத்தில் நன்றாக அடிக்கப் பட்ட அந்தப் பீமன் ரோஷத்தினால் ஸௌபலனைக் குறித்துப் பொன்னால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அம்பைப் பிரயோகித்தான். அரசரே! நல்ல கைப் பழக்கமுள்ளவனும் மஹா பலசாலியும் பகைவர்களைத் தவிக்கச் செய்பவனுமான சகுனி, வருகின்ற அந்தக் கோரமான பாணத்தை ஏழாகத் துண்டாக்கினான். ஜனங்களுக்கு நாதரே! அது பூமியில் விழுந்தவுடன், பீமன் கோபங்கொண்டு சிரித்துக்கொண்டே ஒரு பல்லத்தினால் சகுனியினுடைய வில்லை வெட்டினான். அரசரே! பிராதபசாலியான சகுனி அறுக்கப்பட்ட அந்த வில்லை எறிந்துவிட்டு வேகத்துடன் வேறு வில்லையும் பதினாறு பாணங்களையும் எடுத்துப் படிந்த கணுக்களுள்ள அந்தப் பல்லங்களுள் இரண்டு பல்லங்களால் அவனுடைய ஸாரதியையும் ஏழு பல்லங்களால் பீமனையும் அடித்து ஒரு பல்லத்தினால் த்வஜத்தையும் இரண்டு பல்லங்களால் குடையையும் நான்கு பல்லங்களால் நான்கு குதிரைகளையும் அடித்தான். மஹாராஜரே! பிறகு, பிரதாபசாலியான பீமஸேனன் கோபங்கொண்டு யுத்தத்தில் பொற் பிடியுள்ள உருக்கினாலாகிய சக்தியைப் பிரயோகித்தான். பீமனுடைய கையினால் எறியப்பட்டதும் ஸர்ப்பத்தினுடைய நாவைப்போல் அசைவதுமான அந்தச் சக்தியானது யுத்தத்தில் மஹா பலசாலியான சகுனியின் மீது விரைவாக விழுந்தது.

ஜனநாதரே! பிறகு, அதிக கோபங்கொண்ட சகுனி பொன்னலங்காரமுள்ள அந்தச் சக்தியைப் பிடித்து அதனையே பீமஸேனன் மீது எறிந்தான். அந்தச் சக்தியாயுதமானது மஹாத்மாவான பாண்டவனுடைய இடக்கையைப் பிளந்துகொண்டு ஆகாயத்தினின்று நழுவின மின்னல்போல் அப்பொழுது பூமியில் விழுந்தது. மஹாராஜரே! பிறகு, கௌரவர்கள் நான்கு பக்கத்திலும் பெருங்கூச்சலிட்டனர். பீமனோ பலசாலிகளுடைய அந்த ஸிம்மநாதத்தைப் பொறுக்கவில்லை. ராஜேந்திரரே! மஹா பலசாலியான பீமன் விரைவுடன் வேறு வில்லை எடுத்து நாணேற்றி, ஸிம்மநாதத்தை வெளியிட்டு யுத்தத்தில் சகுனியுடைய சேனையை ஒரு முகூர்த்தத்துக்குள்ளாக அம்புகளால் மூடினான். அரசரே! மகா பலசாலியான பீமன் விரைபவனாகி அந்தச் சகுனியினுடைய நான்கு குதிரைகளையும் ஸாரதியையுங் கொன்று, ஒரு பல்லத்தினால் த்வஜத்தையும் அறுத்தான். புருஷச்ரேஷ்டனான சகுனி சினத்தினால் கண்கள் சிவந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு குதிரைகள் கொல்லப்பட்ட தேரை விட்டு, வில்லை விரைவாக நாணேற்றி செய்துகொண்டு (பூமியில்) நின்றான். அரசரே! சகுனி நான்கு பக்கத்திலும் அம்புகளால் பலவாறு பீமனை அடித்தான். பிரதாபசாலியான பீமஸேனன் அதிக கோபங்கொண்டவனாகித் திருப்பி அடித்து, அவனுடைய வில்லையும் துண்டாக்கிக் கூர்மையுள்ள அம்புகளால் அடித்தான். பலசாலியான சத்துருவினால் அதிகமாக அடிக்கப்பட்டவனும் பகைவர்களை நாசஞ் செய்பவனுமான காந்தார ராஜன் அப்பொழுது குற்றுயிருள்ளவனாகிக் கீழே விழுந்தான். அரசரே! பிறகு, சகுனி தளர்ச்சியுற்றவனாயிருக்கிறான் என்பதை அறிந்து உம்முடைய புத்திரன் யுத்தத்தில் பீமஸேனன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, அவனை ரதத்துடன் வேறிடத்திற்கு கொண்டுபோனான். பிரபுவே! துன்பமுற்று மெய்ம்மறந்திருக்கிற சகுனியைக் கண்டு பீமஸேனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் நடுக்கமுற்ற கௌரவர்கள் புறங்காட்டுபவர்களாகித் திசைகளை நோக்கி ஓடினார்கள். அரசரே! சகுனியானவன் சிறந்த வில்லாளியான பீமஸேனனால் ஜயிக்கப்படவே, உம்முடைய புத்திரனான துரியோதனன் அதிக பயத்தினால் மூடப்பட்டு, மாதுலனைப்பற்றி அதிக கவலையுள்ளவனாக வேகமுள்ள குதிரைகளோடு விலகிச் சென்றான். பாரதரே! திரும்பின அரசனைக் கண்டு சேனைகள் த்வந்த்வ யுத்தங்களை விட்டு, நான்கு பக்கத்திலும் ஓடிவிட்டன. புறங்காட்டி ஓடுகின்ற அந்த எல்லாக் கௌரவர்களையும் கண்டு பீமன் நூற்றுக் கணக்கான அனேக பாணங்

கனை இறைத்துக்கொண்டு வேகத்துடன் எதிர்த்துவந்தான். அரசரே! யுத்தத்தில் பீமனால் பீடிக்கப்படுகின்றவர்களும் புறங் காட்டி ஓடுகின்றவர்களுமான அந்தக் கௌரவர்கள் கர்ணனை அடைந்து நான்கு பக்கத்திலும் நின்றார்கள். மஹாவீரியமுள்ளவனும் மஹாபலசாலியுமான அந்தக் கர்ணன் (ஆபத்தாகிற கடலில் அமிழ்கின்ற) அவர்களுக்கு ஒரு திட்டானான். [1] அரசரே! புருஷ ச்ரேஷ்டரே! கெட்ட காலத்தில் உடைபட்ட கப்பல்களையுடைய மாலுமிகள் ஒரு திட்டையடைந்து ஸுகம் பெறுவதுபோல உம்மைச் சேர்ந்தவர்கள் கர்ணனை அடைந்து ஸுகத்தை அடைந்தார்கள். அரசரே! அவர்கள் மனத்தில் ஸமாதானத்தை அடைந்து நிலைபெற்று நின்று, பரஸ்பரம் ஸந்தோஷத்தை அடைந்து, மரணம்வரையில் திரும்புவதில்லை என்று எண்ணி யுத்தத்துக்காக ஒன்றுசேர்ந்தார்கள்" என்றான்.

எண்பத்திரண்டாவது அத்தியாயம்

(கர்ணனுடைய பராக்ரமத்தை வர்ணித்தது)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! பீமஸேனனால் யுத்தத்தில் ஸைன்யங்கள் முறிய அடிக்கப்பட்ட பிறகு, துரியோதனனாவது சகுனியாவது ஜயசீலர்களுள் சிறந்தவனான கர்ணனாவது என்னைச் சார்ந்த யுத்தவீரர்களாவது கிருபராவது கிருதவர்மாவாவது துரோணபுத்திரராவது துச்சாஸனனாவது யுத்தத்தில் யாது கூறினர்? பீமன் ஒருவனாகவே யுத்தத்தில் என்னைச் சேர்ந்த எல்லா வீரர்களோடும் போர் புரிந்தமையால் நான் பாண்டு புத்திரனான பீமஸேனனுடைய பராக்கிரமத்தை மிக்க ஆச்சரியகரமென்று எண்ணுகிறேன். ராதேயன் யுத்தவீரர்கள் விஷயத்தில் பிரதிஜ்ஞை செய்தபடி (காரியங்களைச்) செய்தானா? ஸஞ்சய! பகைவர்களை அழிப்பவனான கர்ணன் எல்லாக் கௌரவர்களுக்கும் சுகத்தைக் கொடுப்பவன்; கவசம் போன்றவன்; ஆதாரமாக இருப்பவன்; உயிரோடிருக்கும் விருப்பத்துக்குக் காரணமாயிருப்பவன்; அளவுகடந்த வல்லமை பொருந்திய பீமஸேனனால் அந்தத் தன் சேனை நாசம் செய்யப்பட்டதைக்கண்டு விற்பிடித்தவர்களுள் மிகச் சிறந்தவனான கர்ணன் யுத்தத்தில் யாது செய்தான்? ஜயிக்க முடியாதவர்களான என்னுடைய புத்திரர்களாவது மஹாரதர்களான அரசர்களாவது யாது செய்தனர்? ஸஞ்சய! இவை

---

[1] ஒரு சொல் விடப்பட்டது.

அனைத்தையும் எனக்கு உரைப்பாயாக. நீ ஸமர்த்தனாயிருக்கிறாய்'' என்று வினவ, ஸஞ்சயன் சொல்லானான்.

"மஹாராஜரே! பிற்பகலில், பிரதாபசாலியான ஸூத புத்திரன், பீமஸேனன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே எல்லா ஸோமகர்களையும் கொன்றான். பீமனும் அதிக பலமுள்ள கௌரவ சேனையை நாசஞ்செய்தான். புத்திசாலியான பீமஸேனனால் சேனை துரத்தப்படுகின்றதைக் கண்டு, கர்ணன் ஸாரதியைப் பார்த்து, ''என்னைப் பாஞ்சாலர்களிடம் போகச் செய்' என்று கூறினான். பிறகு, மஹாபலசாலியும் மத்ரராஜனுமான சல்யன் மஹாவேகமுள்ள வெண்மையான குதிரைகளைச் சைத்யர்களைக் குறித்தும் பாஞ்சாலர்களைக் குறித்தும் கரூசர்களைக் குறித்தும் நடத்தினான். பகைவர்களுடைய படையை அழிப்பவனான சல்யன் பெரிய சேனையில் நுழைந்து எங்கே எங்கே அந்த ரதங்கள் இருக்கின்றனவோ அங்கே அங்கே குதிரைகளை ஸந்தோஷத்துடன் நடத்தினான். பிரஜைகளுக்கு நாதரே! மேகம்போன்றதும் புலித்தோலால் நாற்புறங்களிலும் மூடப்பட்டதுமான அந்த ரதத்தைக் கண்டு பாண்டவர்களும் பாஞ்சாலர்களும் பயந்தார்கள். பிறகு, மஹாயுத்தத்தில் மேகத்தினது இடிமுழக்கம் போன்றதும் பிளக்கப்படுகின்ற மலையினது சப்தம் போன்றதுமான ரதத்தினுடைய சப்தமானது தோன்றியது. பிறகு, கர்ணன் கூர்மையுள்ளவைகளும் காதுவரையில் இழுத்துவிடப்பட்டவைகளுமான அனேக அம்புகளால் நூறுநூறாகவும் ஆயிரமாயிரமாகவும் பாண்டவ சேனையைக் கொன்றான். அவ்வாறு யுத்தத்தில் காரியத்தைச் செய்கின்றவனும் (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவனுமான அந்தக் கர்ணனைப் பெரிய வில்லையுடையவர்களான பாண்டவர்களைச் சேர்ந்த மஹாரதர்கள் சூழ்ந்துகொண்டார்கள். சிகண்டியும் பீமனும் பார்ஷதனான த்ருஷ்டத்யும்னனும் நகுலனும் ஸஹதேவனும் த்ரௌபதீ புத்திரர்களும் ஸாத்யகியும் சரமாரிகளால் கொல்ல எண்ணங்கொண்டவர்களாக அந்தக் கர்ணனைச் சூழ்ந்துகொண்டார்கள். யுத்தத்தில் சூரனும் நரசிரேஷ்டனுமான ஸாத்யகியோ, அப்பொழுது கூர்மையுள்ள இருபது பாணங்களால் கர்ணனைத் தோள் பூட்டில் அடித்தான். யுத்தத்தில் கர்ணனைச் சிகண்டி இருபத்தைந்து பாணங்களாலும் த்ருஷ்டத்யும்னன் ஏழு பாணங்களாலும் த்ரௌபதீ புத்திரர்கள் அறுபத்துநான்கு பாணங்களாலும் ஸஹதேவன் ஏழுபாணங்களாலும் நகுலன் நூறு பாணங்களாலும் அடித்தார்கள். மஹாபலசாலியான பீமஸேனனோ யுத்தத்தில் கோபங்கொண்டவனாகப் படிந்த கணுக்களுள்ள

தொண்ணூறு பாணங்களால் ராதேயனைத் தோள் பூட்டிலடித்தான். பிறகு, மிக்க பலமுள்ளவனான கர்ணன் அட்டஹாசஞ்செய்து உத்தமமான வில்லை நாணொலி எழுப்பிக் கூர்மையுள்ள பாணங்களை உறுதியாக இழுத்துவிட்டான். அவர்களை ஐவைந்து பாணங்களால் திருப்பியடித்தான். பரதர்களிற் சிறந்தவரே! ராதேயன் ஸாத்யகியினுடைய வில்லையும் கொடியையும் அறுத்து அவனையும் நடுமார்பில் ஒன்பது பாணங்களால் அடித்து, பிறகு, கோபங்கொண்டு முப்பது பாணங்களால் பீமஸேனனையும் அடித்தான். பெரியவரே! சத்துருக்களைத் தவிக்கச் செய்கிறவனான கர்ணன் ஒரு பல்லத்தினால் ஸஹதேவனுடைய கொடியைத் துண்டாக்கினான். ஸாரதியையும் மூன்று பாணங்களால் கொன்றான். பரதர்களுள் சிறந்தவரே! அவன் கண்களின் இமைகொட்டும் நேரத்துக்குள் த்ரௌபதி புத்திரர்களையும் ரதங்களையும் இழந்தவர்களாகச் செய்தான். அது ஆச்சரியமாயிருந்தது. கணுக்கள் உட்படிந்துள்ள அம்புகளால் அவர்கள் அனைவர்களையும் புறங்காட்டினவர்களாகச் செய்து சூரர்களான பாஞ்சாலர்களையும் மஹாரதர்களான சைத்யர்களையும் அடித்தான். பிரஜாநாதரே! யுத்தத்தில் வதஞ் செய்யப்படுகின்ற அந்தச் சைத்யர்களும் மாத்ஸ்யர்களும் கர்ணன் ஒருவனையே எதிர்த்து விரைவாக வந்து அம்புத்திரள்களை எய்தார்கள். மஹாரதனான ஸூதபுத்திரன் அவர்களைக் கூர்மையுள்ள அம்புகளால் கொன்றான். அரசரே! யுத்தத்தில் வதஞ்செய்யப்படுகின்ற அந்தச் சைத்யர்களும் மாத்ஸ்யர்களும் ஸிம்மத்தினிடம் பயந்த மிருகங்கள் போலப் பயந்து யுத்தத்தில் ஓடினார்கள். பாரதரே! பிரதாபசாலியான ஸூதபுத்திரன் ஒருவனாகவே யுத்தத்தில் சூரர்களைக் கொன்றதாகிய மிக்க ஆச்சரியகரமான இந்தச் செய்கையை நான் கண்டேன். மஹாராஜரே! அதிகமாக முயல்கின்றவர்களும் வல்லமையுடன் போர் புரிகின்றவர்களும் வில்லாளிகளுமான பாண்டவ வீரர்களை யுத்தத்தில் பாணங்களால் தடுத்தான். பாரதரே! அந்த யுத்தத்தில் மஹாத்மாவான கர்ணனுடைய லாகவத்தினால் எல்லாத் தேவதைகளும் ஸித்தர்களும் சாரணர்களுடன் ஸந்தோஷமடைந்தார்கள். துரியோதனனைச் சேர்ந்த மஹா வில்லாளிகள், சிறந்த ரதிகர்களுள் சிறந்தவனும் வில்லாளிகளுள் உத்தமனும் புருஷஶ்ரேஷ்டனுமான கர்ணனைப் பூஜித்தார்கள். மஹாராஜரே! பிறகு கர்ணன் வெயிற்காலத்தில் நெருப்பானது எரிப்பது போலப் பகைவர்களுடைய படையை எரித்தான். கர்ணனால் வதஞ் செய்யப்படுகின்ற அந்தப் பாண்டவ ஸேனாவீரர்கள் மஹாரதனான

கர்ணனைக் கண்டு யுத்தத்தில் பயந்து ஆங்காங்கு ஓடினார்கள். அந்த மஹாயுத்தத்தில் கர்ணனுடைய சிறந்த வில்லினின்று விடு பட்ட கூர்மையுள்ள அம்புகளால் வதஞ் செய்யப்படுகின்ற பாஞ் சாலர்களுடைய பெரிய அழுகை ஒலியானது தோன்றியது. பாண்டவர்களுடைய பெரும் படையானது அந்தச் சப்தத்தினால் மிக்க பயமடைந்தது. பகைவர்கள் அந்தச் சமயத்தில் கர்ணன் ஒருவனையே யுத்தத்தில் போர் வீரனென்று எண்ணினார்கள். பகை வர்களை அழிப்பவனான கர்ணன் மீண்டும் அந்த யுத்தத்தில் ஆச்சரியகரமான செய்கையைச் செய்தான். பாண்டவர்கள் யாவரும் இவனைப் பார்ப்பதற்குஞ் சக்தியற்றவர்களானார்கள். ஜலப் பிரவாகமானது சிறந்த மலையை அணுகிப் பிளக்கப்படுவதுபோல் அந்தப் பாண்டவ சேனையானது கர்ணனை அடைந்து பிளக்கப் பட்டது. அரசரே ! மிக்க புஜபலமுள்ள கர்ணனும் யுத்தத்தில் புகை தணிந்த தீப்போல ஜ்வலித்துக்கொண்டும் பாண்டவர்களு டைய பெரும்படையை எரித்துக்கொண்டும் நின்றான். மஹா ராஜரே ! வீரனான கர்ணன் வீரர்களுடைய தலைகளையும் குண்ட லங்களுடன் கூடின காதுகளையும் கைகளையும் அம்புகளால் விரை வாக அறுத்தான். வேந்தரே ! யுத்தவீர விரதத்தை அனுஷ்டிக் கின்ற கர்ணன் யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட பிடிகளை யுடைய கத்திகளையும் த்வஜங்களையும் சக்திகளையும் குதிரைகளையும் யானைகளையும் பற்பல ரதங்களையும் கொடிகளையும் விசிறிகளையும் அச்சுக்களையும் நுகத்தடிகளையும் பற்பல சக்கரங்களையும் பலவாறு துண்டாக்கினான். பாரதரே ! அந்த யுத்தத்தில் கர்ணனால் கொல்லப்பட்ட யானைகளாலும் குதிரைகளாலும் நெருங்கமுடியா மலிருக்கின்ற போர்க்களமானது மாம்சங்களாலும் இரத்தங்களா லும் சேறுள்ளதாயிற்று. நாசஞ் செய்யப்பட்ட குதிரைகளாலும் காலாட்களாலும் ரதங்களாலும் யானைகளாலும் மேடுபள்ளமா மாகவும் ஸமமாகவுமிருக்கின்ற (யுத்தரங்கத்தில்) ஒன்றுமே அறியப்படவில்லை. கோரமான பாணாந்தகாரமும் கர்ணனுடைய அஸ்திரமும் மிகுதியடையவே, தன்னைச் சேர்ந்த யுத்தவீரர்களா வது, பிறரைச் சேர்ந்த யுத்த வீரர்களாவது பரஸ்பரம் அறியப்பட வில்லை. மஹாராஜரே ! கர்ணனுடைய வில்லினின்று விடுபட்ட வைகளும் ஸ்வர்ண பூஷணங்களுடன் கூடியவைகளுமான பாணங் களால் பாண்டவர்களுடைய மஹாரதர்கள் நன்றாக மூடப்பட் டார்கள். மஹாராஜரே ! முயல்கின்றவர்களும் பாண்டவர்களைச் சேர்ந்தவர்களுமான அந்த மஹாரதர்கள் யுத்தத்தில் ராதேயனால்

அடிக்கடி முறியடிக்கப்பட்டார்கள். காட்டில் கோபங்கொண்ட சிங்கம் மிருகக் கூட்டங்களைத் துரத்துவதுபோலப் பகைவர்களான சிறந்த பாஞ்சால ரதிகர்களைத் துரத்தினான். சிறந்த பெரும்புகழை யுடையவனான கர்ணனே யுத்தத்தில் போர்வீரர்களைப் பயமடையச் செய்துகொண்டு ஓநாயானது பசுக்களுடைய கூட்டங்களைத் துரத்துவதுபோல் அந்தச் சேனையைத் துரத்தினான். புறங்காட்டி ஓடுகின்ற பாண்டவசேனையைக் கண்டு மஹாவில்லாளிகளான கௌரவர்கள் பயங்கரமான ஒலிகளை வெளியிட்டுகொண்டு அவ்விடத்தில் வந்தார்கள். ராஜஸ்ரேஷ்டரே! துர்யோதனனே அதிக ஸந்தோஷத்துடனும் அதிக உத்ஸாஹத்துடனும் நான்கு பக்கத்திலும் பற்பல வாத்தியங்களை முழங்கச்செய்தான். அந்த யுத்தத்தில் முறியடிக்கப்பட்டவர்களும் பெரிய வில்லையுடையவர்களும் புருஷஸ்ரேஷ்டர்களும் சூரர்களுமான பாஞ்சாலர்கள் அப்பொழுது மரணம்வரையில் திரும்புவதில்லை என்று எண்ணி (யுத்தத்திற்குத்) திரும்பினார்கள். மஹாராஜரே! பகைவர்களைத் தவிக்கச்செய்கிறவனும் புருஷஸ்ரேஷ்டனுமான ராதேயன் யுத்தத்தில் திரும்பிவந்திருக்கின்றவர்களான அந்தச் சூரர்களைப் பலவாறாக நாசஞ்செய்தான். பரதகுலத்தில் உதித்தவரே! அந்த யுத்தத்தில் கர்ணனால் கோபத்துடன் பாணங்களால் இருபது பாஞ்சாலரதிகர்களும் நூற்றுக்கணக்குக்கு மேலான சைத்யர்களும் கொல்லப்பட்டார்கள். பாரதரே! பகைவர்களை வாட்டுகின்றவனும் காலன், அந்தகன் இவர்களுடைய சரீரம்போன்ற சரீரத்தை யுடையவனும் சூரனுமான ஸூதபுத்திரன் தேர்களின் நடுவிடங்களையும் குதிரைகளுடைய முதுகுகளையும் சூன்யமாகவும் யானைகளின் பிடர்களை மனிதர்களில்லாதவைகளாகவும் காலாட்களை ஓடுகின்றவர்களாகவும் செய்து, நடுப்பகலில் சூரியன்போலப் பார்க்கமுடியாதவனாகப் பிரகாசித்தான். மஹாராஜரே! மஹாவில்லாளியும் பகைவர் கூட்டங்களை அழிப்பவனுமான கர்ணன் இவ்வாறு மனிதர்களையும் குதிரைகளையும் ரதிகர்களையும் யானைகளையும் கொன்று நின்றான். மஹாபலசாலியான காலன் பூதகணங்களைக் கொன்று நிற்பதுபோல மஹாரதனான அந்தக் கர்ணன் ஒருவனாகவே ஸோமகர்களைக் கொன்று நின்றான். கொல்லப்படுகின்றவர்களாக இருந்தும் பாஞ்சாலர்கள் யுத்தமுனையில் கர்ணனை விட்டு விலகாமலிருந்தமையால் அவர்களுடைய ஆச்சரியகரமான வல்லமையை அந்த யுத்தத்தில் கண்டோம். அரசனும் துச்சாஸனனும், அவ்வாறே சரத்வானுடைய குமாரரான கிருபரும், அச்வத்தாமாவும், கிருதவர்மாவும், மஹா

பலசாலியான சகுனியும் நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் பாண்டவ ஸேனையைக் கொன்றார்கள். ராஜேந்திரரே! உண்மையான பராக்கிரமமுள்ளவர்களும் ஸஹோதரர்களுமான கர்ண புத்திரர்கள் இருவரும் கோபமுள்ளவர்களாகப் பாண்டவர்களுடைய படையை இங்கும் அங்குமாகக் கொன்றார்கள். அச்சமயத்தில் க்ரூரமானதும் பெரிய துன்பத்தை உண்டுபண்ணுகின்றதுமான பெரிய யுத்தம் நடந்தது. அவ்வாறே, சூரர்களான பாண்டவர்களும் த்ருஷ்டத்யும்னனும் சிகண்டியும் மிக்க கோபங்கொண்டவர்களான த்ரௌபதீ புத்திரர்களும் உங்களுடைய ஸேனையை எதிர்த்து நாசஞ் செய்தார்கள். இவ்வாறு, பாண்டவர்களுடைய படைக்கு ஆங்காங்கு இந்த நாசமுண்டாயிற்று. மகாபலசாலியான பீமனை அணுகி உம்மைச் சேர்ந்தவர்களுக்கும் யுத்தத்தில் நாசமுண்டாயிற்று.

எண்பத்துமூன்றாவது அத்தியாயம்

(அர்ஜுனன் விருப்பப்படி மாதவர் தேரைக் கர்ணனருகிற் செலுத்தியதும் சல்யன் கர்ணனை உத்ஸாகப்படுத்தியதும், கர்ணன் அர்ஜுனனைப் புகழ்ந்து அவனைக் கொல்வதாகச் சபதம் உரைத்ததும் ஸங்குல யுத்தமும்.)

சத்துருவீரர்களைக் கொல்லுகின்றவனும் பீபத்ஸு என்கிற பெயர் பெற்றவனும் புருஷசிரேஷ்டனுமான பல்குனன், தனித்தனியாகக் கௌரவர்களுடைய ஸேனையைக் கொன்று, மகாயுத்தத்தில் ஸூத புத்திரனுடைய பரபரப்பைக் கண்டு, ரத்தத்தையே ஜலமாகக் கொண்டதும், [1]மாம்ஸங்களாலும் ஊனீராலும் எலும்புகளாலும் சேறுள்ளதும், மனுஷ்யர்களுடைய தலைகளாகிற கற்களுள்ளதும், யானைகளாலும் குதிரைகளாலும் அமைந்த கரையுடன் கூடியதும், நன்றாகச் சிதறியிருக்கின்ற சூரர்களுடைய எலும்புக் கூட்டத்தினால் வியாபிக்கப்பட்டதும், காக்கைகளாலும் கழுகுகளாலும் எதிரொலியுள்ளதாகச் செய்யப்பட்டதும், குடைகளாகிற அன்னங்களோடும் தெப்பத்தோடுங்கூடியதும், வீரர்களாகிற மரங்களை அடித்துக்கொண்டு போகின்றதும், ஹாரங்களாகிற தாமரை மடுக்களையுடையதும், சிறந்த தலைப்பாகைகளாகிற நுரைகளுள்ளதும், விற்களும் பாணங்களும் த்வஜங்களுமுள்ளதும், மனிதர்களுடைய சிறிய மண்டையோடுகளுடன்

---

[1] இரண்டு சொற்கள் விடப்பட்டன.

கூடியதும், கேடகங்களும் கவசங்களுமாகிற சுழலோடு கூடியதும், ரதங்களாகிற தெப்பங்களால் நிரம்பியதும், ஜயத்தில் விருப்பமுற்றவர்களால் ஸுலபமாகத் தாண்டக்கூடியதும், பயந்தவர்களால் எவ்விதத்திலும் தாண்டமுடியாததுமான ஒரு நதியை உண்டுபண்ணி வாஸுதேவரைப் பார்த்து, இந்த வாக்கியத்தை உரைக்கலானான். 'கிருஷ்ணா! யுத்தரங்கத்தில் ஸூத புத்திரனுடைய கொடியானது இதோ காணப்படுகிறது. பீமஸேனன் முதலான இந்த வீரர்களும் மஹாரதனோடு போர் புரிகிறார்கள். ஜனார்த்தனரே! இதோ பாஞ்சாலர்கள் கர்ணனிடம் பயந்து ஓடுகின்றார்கள். இதோ துர்யோதனராஜன் வெண்மையான குடைபிடிக்கப்பட்டவனாகக் கர்ணனால் முறிய அடிக்கப்பட்ட பாஞ்சாலர்களை ஓடும்படி செய்துகொண்டு அதிகமாகப் பிரகாசிக்கிறான். ஸூதபுத்திரனால் ரக்ஷிக்கப்படுகின்ற கிருபரும் கிருதவர்மாவும் மஹாரதரான அச்வத்தாமாவும் அரசனைக் காப்பாற்றுகிறார்கள். நம்மால் கொல்லப்படாமற்போனால் அவர்கள் ஸோமகர்களுடன் போர்புரிவார்கள். மாதவரே! கடிவாளம் பிடிப்பதில் ஸமர்த்தனும் தேர்நடுவிலிருப்பவனுமான இந்தச் சல்யன் கர்ணனுடைய தேரினை நடத்திக்கொண்டு மிக விளங்குகிறான். அந்த இடத்தில் செல்லவேண்டுமென்கிற புத்தி எனக்கு உண்டாயிருக்கிறது. அந்த இடத்திற்கு என்னுடைய தேரினை நடத்தும். யுத்தத்தில் கர்ணனைக் கொல்லாமல் எவ்விதத்திலும் நான் திரும்பமாட்டேன். ஜனார்த்தனரே! கர்ணன், நாம் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, யுத்தத்தில் பார்த்தர்களையும் மஹாரதர்களான ஸ்ருஞ்சயர்களையும் யுத்தகளத்தில் மிச்சமில்லாமல் நாசமடையச் செய்யவேண்டாம்' என்று கூறினான்.

பிறகு, கேசவர், ஸவ்யஸாசியுடன், துவந்துவ யுத்தஞ் செய்வதில் (விருப்பமுள்ளவனும்) மகிமை தங்கிய வில்லைக் கையிற் கொண்டவனுமான கர்ணனை லக்ஷ்யம் வைத்து உம்முடைய சேனையைக் குறித்து வேகத்துடன் விரைவாகச் சென்றார். அரசரே! மகாயுத்தத்தில் அந்தக் கேசவர் எல்லா இடங்களிலுமிருக்கின்ற பாண்டவ ஸைன்யங்களைச் சீக்கிரமாக யுத்தத்தில் மனத்தேறுதல் அடையும்படி செய்வதற்காக ரதத்தோடு விரைவாகச் சென்றார். பெரியவரே! பிறகு, இந்திரனுடைய அஸ்திரமானது பர்வதங்களில் விழுந்தால் உண்டாகும் சப்தம்போல அந்தப் பாண்டவனுடைய தேரொலியானது தோன்றியது. ஸத்யமான பராக்ரமமுள்ளவனும் அளவிடமுடியாத பலமுள்ளவனுமான பாண்டவன் உம்முடைய சேனையை வெல்லக் கருதிப் பெரிதான தேரொலியுடன் எதிர்த்துச் சென்றான். அவ்வாறு வருகின்றவனும் வெண்

மையான குதிரைகளையுடையவனும் வாஸுதேவரை ஸாரதியாகக் கொண்டவனுமான அந்த அர்ஜுனனைப் பார்த்தும், மகாத்மா வானவனுடைய கொடியையுங்கண்டும், மத்ரராஜன் கர்ணனைப் பார்த்து, 'கர்ண ! யுத்தத்தில் எவனைப் பற்றி நீ கேட்கிருயோ வெண்மையான குதிரைகளையுடையவனும் கிருஷ்ணனை ஸாரதி யாகக் கொண்டவனுமான அந்த ரதிகன் இதோ பகைவர்களை அடித்துக்கொண்டு வருகிருன். இதோ குந்தீ புத்திரன் காண்டீவ மென்கிற வில்லைப் பிடித்துக்கொண்டு நிற்கின்றனன். அவனை இப்பொழுது கொல்வாயாகில் அது நமக்கு நன்மையாகும். கர்ண ! சந்திர ப்ரதிமைகளையும் நக்ஷத்திர ப்ரதிமைகளையும் அடையாள மாகக் கொண்டதும் கொடிகளோடும் கிண்கிணிகளோடும் கூடியது மான அர்ஜுனனுடைய வில்லிலுள்ள இந்த நாண்கயிருனது ஆகாயத்தில் மின்னல் போல் இதோ பிரகாசிக்கிறது; பார், இதோ பார்த்தனுடைய கொடி நுனியில் நாற்புறங்களையும் பார்க் கின்றதும் பார்க்கிறவர்களுக்குப் பயத்தை விருத்திபண்ணுகின்ற தும் பயங்கரமுமான வானரம் காணப்படுகின்றது. பிரபுவே ! பாண்டவனுடைய ரதத்தில் குதிரைகளை ஓட்டுகின்ற வாஸு தேவருடைய சக்கரமும் கதையும் சங்கமும் சார்ங்கமென்கிற வில்லும் இதோ காணப்படுகின்றன. ஸவ்யஸாசியினுல் இழுத்து விடப்படுகிற காண்டீவம் இதோ ஒலிக்கிறது. கைத்தேர்ச்சியுள்ள அர்ஜுனனுல் பிரயோகிக்கப்பட்ட கூர்மையுள்ள இந்தப் பாணங் கள் பகைவர்களை நாசஞ்செய்கின்றன. (யுத்தத்தை விட்டு) ஓடாத வர்களான மன்னர்களுடைய அகன்றும் நீண்டும் சிவந்துமிருக் கின்ற கண்களுள்ளவைகளும் பூர்ண சந்திரனுக்கொப்பான முகங் களுள்ளவைகளுமான தலைகளால் இந்தப் பூமியானது பரப்பப்படு கிறது. பரிகங்கள் போன்றவைகளும் சந்தனத்தினுல் பூசப்பட்ட வைகளும் திமிருள்ளவைகளுமான ரண சூரர்களுடைய கைகள் ஆயுதங்களுடனே இதோ தள்ளப்படுகின்றன. குதிரை வீரர் களோடு தள்ளப்பட்டவைகளும் தள்ளப்படுகின்றவைகளுமான குதிரைகள் நுனி நாக்குக்களும் கண்களும் தெறித்துப்போனவை களாக நாசமடைந்து பூமியில் படுக்கின்றன. மலைச் சிகரங்கள் போன்றவைகளும் இமயமலையில் உண்டானவைகளுமான யானை கள் பார்த்தனுல் மத்தகங்கள் நன்ருக வெட்டப்பட்டு இதோ மலை போல் விழுகின்றன. கொல்லப்பட்ட இந்த அரசர்கள் கந்தர்வ நகரம்போன்ற ரதங்களினின்று புண்யத்தின் முடிவில் ஸ்வர்க்க வாஸிகள் விமானத்திலிருந்து விழுவதுபோல விழுகின்ருர்கள். ஸிம்மத்தினுல் ஆயிரக் கணக்கான பற்பல மிருகக்கூட்டம் நாசஞ்

செய்யப்படுவது போலக் கிரீடியினால் அதிகமாகத் துன்பத்துக்கு உடன்படுத்தப்பட்டிருக்கின்ற ஸைன்யத்தைப் பார். கர்ண! சிறந்த ரதிகர்களைக் கொன்றுகொண்டு உன்னை எதிர்க்க விரும்பி அர்ஜுனன் வருகிறான். ராதேய! [1] அந்த அர்ஜுனனைக் குறித்து நீ தடையின்றிச் செல்வாயாக. அனேக சத்துருக்களைக் கொல்லுகின்ற அர்ஜுனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் நான்கு பக்கத்திலும் இந்தத் தார்த்தராஷ்டிர சேனையானது விரைவாகப் பிளக்கப்படுகிறது. இந்தத் தனஞ்சயனுடைய தேகமானது மிக்க பரபரப்பை அடைந்திருப்பதனால் இவன் உன் நிமித்தமாக எல்லாச் சேனைகளையும் விட்டு விரைவுபடுகிறானென்று நான் நினைக்கிறேன். விருகோதரன் பீடிக்கப்படுந் தருணத்தில் கோபத்தினால் ஜ்வலிக்கின்ற பார்த்தன் உன்னை விட்டு வேறு எவனோடும் எதிர்த்துப் போர்புரிய எண்ணங்கொண்டு நிற்கமாட்டான். நிகரற்ற தேராளியும் பகைவர்களைத் தவிக்கச் செய்பவனுமான பார்த்தன், தர்மராஜர் தேரிணையிழந்து மிக அடித்துக் காயப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டும், சிகண்டியும் ஸாத்யகியும் பார்ஷதனான த்ருஷ்டத்யும்னனும் த்ரௌபதீகுமாரர்களும் யுதாமன்யுவும் உத்தமௌஜஸும் நகுல ஸஹதேவர்களும் உனக்கு வசப்பட்டிருப்பதைக் கண்டும், குரோதத்தினால் கண்கள் சிவந்து, கோபமுண்டு எல்லா அரசர்களையும் கொல்லவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனாகி விரைவாக உன்னை எதிர்த்து வருகிறான். அவன் சேனைகளைவிட்டுவிட்டு ஸம்சயமில்லாமல் நம்மைக் குறித்தே விரைந்து எதிரில் வருகிறான். கர்ண! நீ இவனை எதிர்த்துச் செல். (இவ்விஷயத்தில்) வேறு வில்லாளி இல்லையன்றோ? கடலைக் கரை தடுப்பதுபோல யுத்தத்தில் கோபமுள்ள அர்ஜுனனைத் தடுக்கக்கூடிய வில்லாளி உன்னைத் தவிர வேறு ஒருவனை இவ்வுலகத்தில் நான் காணவில்லை. இவனுக்குப் பக்கங்களிலும் பின்புறத்திலும் காவலை நான் காணவில்லை. இவன் ஒருவனாகவே உன்னை எதிர்த்து வருகிறான். நீ பயன் பெறுதலைப் பார். பகைவரைத் தவிக்கச்செய்கின்றவர்களான இந்தக் கிருஷ்ணார்ஜுனர்களை யுத்தத்தில் எதிர்த்துப் போர் புரிவதற்கு நீயல்லவோ வல்லமை பொருந்தியவன்? ராதாபுத்திர! பொறுப்பு உன்னுடையதே. தனஞ்சயனை எதிர்த்து முயற்சி செய். நீ பீஷ்மரோடும் துரோணரோடும் அச்வத்தாமாவோடும் கிருபரோடும் ஸமானனாயிருக்கிறாயன்றோ? வருகின்ற

[1] 'பாரத' என்னும் சொல் விடப்பட்டது.

ஸவ்யஸாசியை மஹாயுத்தத்தில் தடுப்பாயாக. கர்ண! ஸர்ப்பம் போல (நாக்கினால் உதடுகளை) நக்கிக்கொள்ளுகிறவனும் காளை போலக் கர்ஜிக்கின்றவனும் வனத்திலிருக்கின்ற புலி போன்றவனுமான தனஞ்சயனை வதஞ்செய்வாயாக. மிக்க பலசாலிகளும் துரியோதனனைச் சேர்ந்தவர்களுமான இந்த அரசர்கள் அர்ஜுனனிடம் பயந்து நடுக்கமுற்றவர்களாகவும் யுத்தத்தில் விருப்பமில்லாதவர்களாகவும் யுத்தத்தினின்று ஓடுகிறார்கள். ஸூதநந்தன! ஓடுகின்ற அந்த வீரர்களுடைய பயத்தைப் போக்கக்கூடிய மனிதன் யுத்தத்தில் உன்னைத் தவிர வேறு ஒருவனுமில்லை. புருஷச்ரேஷ்டனே! இந்தக் கௌரவர்களனைவரும் யுத்தத்தில் திட்டைப் போலிருக்கிற உன்னை அடைந்து உன்னிடத்தினின்று காவலை விரும்பினவர்களாக நிற்கின்றார்கள். ராதேய! எவ்விதத்திலும் வெல்லமுடியாதவர்களான வைதேகர்களும் அம்பஷ்டர்களும் காம்போஜர்களும் நக்னஜித்துக்களும் காந்தாரர்களும் எந்தத் தைரியத்தினால் யுத்தத்தில் உன்னால் ஜயிக்கப்பட்டார்களோ அந்தத் தைரியத்தை உண்டுபண்ணிக்கொள். பிறகு, பாண்டவனை எதிர்த்துச் செல். மிக்க புஜபலமுள்ளவனே! பேராண்மையில் நிலை பெற்றவனாக இருந்து, கிரீடியினால் மகிழ்விக்கப்படுகின்றவரும் விருஷ்ணி குலத்தில் உதித்தவருமான வாஸுதேவரையும் எதிர்த்துச் செல்' என்றான். கர்ணன், 'சல்ய! உன் நிலைமையில் நிற்கிறாய். இப்பொழுதுதான் நீ என் மனத்துக்கு உகப்பாக இருப்பவன். மிக்க புஜபலமுள்ளவனே! அவ்வாறே, தனஞ்சயனிடத்தில் பயப்படாதவனாகவும் தோற்றுகிறாய். சிக்ஷை பெற்றிருக்கின்ற என்னுடைய இரண்டு கைகளின் பலத்தையும் இப்பொழுது பார். என்னுடைய பயிற்சி வன்மையையும் பார். ஆண்மையிற் சிறந்தவனே! நான் ஒருவனாகவே இப்பொழுது பாண்டவர்களுடைய பெரும்படையைக் கொல்வேன்; பிறகு, கிருஷ்ணார்ஜுனர்களையும் கொல்வேன். உண்மையை உன்னிடத்தில் உரைக்கிறேன். அந்த இரண்டு வீரர்களையும் யுத்தத்தில் கொல்லாமல் எவ்விதத்திலும் நான் திரும்பப்போகிறதில்லை. அவர்களாலாவது அடிக்கப்பட்டு நான் படுப்பேன். யுத்தத்தில் ஜயமானது நிலையற்றதன்றோ? நான் இப்பொழுது (அவர்களைக்) கொன்றோ அல்லது (அவர்களால்) நான் கொல்லப்பட்டோ கிருதார்த்தனாகப் போகிறேன்' என்று கூறினான். சல்யன், 'கர்ண! மஹாரதர்கள், ரதிகர்களுள் சிறந்த வீரனான இந்த அர்ஜுனனை ஏகாங்கியாயிருந்தாலே ஜயிக்க முடியாதவனென்று சொல்லுகிறார்கள். கிருஷ்ணனால் நாற்புறத்திலும் காக்கப்பட்டிருக்கிற இந்த

அர்ஜுனனை ஜயிக்க எவன் இவ்வுலகத்தில் ஸாமர்த்திய முள்ளவன்?' என்று சொன்னான்.

கர்ணன், 'இப்படிப்பட்ட உத்தம ரதிகன் உலகத்தில் ஒரு பொழுதும் இருந்ததில்லை. நாம் முழுதும் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட இந்தப் பார்த்தனை எதிர்த்துப் போர் புரியப் போகிறேன். பெரும் போரில் எனது ஆண்மையைப் பார். கௌரவ ராஜகுமாரனை இந்தத் தேர் வீரன் வெண்மையான குதிரைகளோடு யுத்த பூமியில் ஸஞ்சரிக்கிறான். இப்பொழுது, அவனாவது என்னைக் கஷ்டத்தை அடைவிக்கப்போகிறான். கர்ணனாவது அவனுக்கு நாசத்தை உண்டுபண்ணுவதில் இந்தச் சமயத்தில் ஸமர்த்தனாவான். ராஜகுமாரனை இந்த அர்ஜுனனுடைய இரண்டு கைகளும் வேர்வையில்லாதவைகளும் நடுக்கமற்றவைகளும் தழும்புள்ளவைகளும் பெரியவைகளுமாயிருக்கின்றன. திடமான ஆயுதங்களை உடையவனும் முயற்சியுள்ளவனும் கைச்சுறுசுறுப்புள்ளவனுமான ஒரு யுத்தவீரன் அர்ஜுனனுக்கு ஸமானனாக (உலகத்தில்) இல்லை. இவன் கழுகிறகுகள் பூண்ட அனேக பாணங்களையும் எடுக்கிறான்; அவைகளை ஒரு பாணம் போல விரைவாக நாண்கயிற்றிற் பூட்டி எய்கிறான் அவைகள் ஒரு குரோச தூரம் சென்றும் வீணாகாமல் (லக்ஷ்யத்தில்) தாக்குகின்றன. பூமியில் எந்த யுத்தவீரன் இவனுக்கு நிகராயிருக்கிறான்? கிருஷ்ணனைத் துணையாகக் கொண்டவனும் பராக்கிரமமுள்ளவனும் அதிரதனுமான அர்ஜுனன் காண்டவ வனத்தில் அக்னியை மகிழ்வித்தான். அப்பொழுது மஹாத்மாவான கிருஷ்ணன் சக்கரத்தைப் பெற்றான். இடக்கையினாலும் அம்புகளைத் தொடுக்கின்றவனும் நீண்ட கைகளை உடையவனும் உதாரமனமுள்ளவனும் பாண்டுவின் புதல்வனுமான அர்ஜுனன் அக்னியினிடத்தினின்று காண்டீவமென்கிற வில்லையும் வெண்மையான குதிரைகள் கட்டிய நல்ல சத்தமுள்ள உக்கிரமான ரதத்தையும் திவ்ய ரூபமுள்ள அம்பறாத்தூணிகளையும் தெய்வத்தன்மைவாய்ந்த சஸ்திரங்களையும் பெற்றான்; இந்திர லோகத்தில் கணக்கிட முடியாதவர்களான தைத்யர்களையும் எல்லாக் காலகேயர்களையும் கொன்றான்; அந்தத் தேவலோகத்தில் தேவதத்தமென்கிற சங்கத்தையும் பெற்றான். அந்த அர்ஜுனனைவிட மேலான மனிதன் பூமியில் எவன் இருக்கிறான்? சல்ய! மஹானுபாவனும், மஹாதேவரை அஸ்திரங்களாலும் நேரில் செய்த நல்ல யுத்தத்தினாலும் ஸந்தோஷிக்கச் செய்தவனும், அவரிடத்தினின்று மூவுலகங்களையும் கொல்லும் திறமையுள்ளதும் மிக்க கோரமாயிருப்பதுமான பாசுபத மஹாஸ்திரத்தைப் பெற்றவனும், யுத்தத்தில்

லோகபாலர்களால் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தும் எண்ணுதற்கரியவையான மஹாஸ்திரங்களைக் கொடுக்கப் பெற்றவனும், புருஷச்ரேஷ்டனும், காலகேயர்களுடன் ஒன்று சேர்ந்த அஸுரர்களை அஸ்திரங்களால் யுத்தத்தில் விரைவாகக் கொன்றவனும், அவ்வாறே விராடனுடைய நகரத்தில் சேர்ந்திருக்கின்ற நம்மனைவரையும் ஒரே தேரினால் வென்று யுத்த மத்தியில் அந்தப் பசுக்கூட்டத்தைத் திருப்பி மஹாரதர்களுடைய ஆடைகளையும் உரிந்தவனும், வீரியத்துடனும் குணங்களுடனும் கூடியவனும், கிருஷ்ணனை ஸஹாயனுகக் கொண்டவனும், அரசர்களுள் சிறந்தவனுமான அர்ஜுனனை யுத்தத்திற்கு அழைப்பதான இதனை எல்லா உலகங்களிலும் மிக்க ஸாஹஸம் என்று நினைக்கிறேன். மஹாத்மாவும் சங்கத்தையும் சக்கரத்தையும் கத்தியையும் கையில் கொண்டவரும் எங்கும் வியாபித்தவரும் ஜயசீலரும் வசுதேவருடைய புத்திரனும் சேர்ந்திருக்கின்ற எல்லா உலகங்களாலும் பதினாயிரம் வர்ஷங்களால்கூடச் சொல்லமுடியாத குணங்களுள்ளவரும் முடிவற்ற வீரியமுள்ளவரும் நிகரில்லாதவரும் நாராயணருமான கேசவரால் காக்கப்பட்டிருக்கின்றான். ஒரு ரதத்தில் சேர்ந்திருப்பவர்களான கிருஷ்ணார்ஜுனர்களைப் பார்த்தும் எனக்குப் பயமும் நடுக்கமும் உண்டாகவில்லை. இந்த அர்ஜுனன் வில் வித்தையில் ராஜகுமாரர்களை மீறினவன். கேசவரும் சக்கராயுதத்தில் மற்றவர்களை மீறினவர். இமயமலையும் தன்னிருப்பிடத்தை விட்டு அசைவுறும்; வசுதேவநந்தனராகவும் இப்படிப்பட்ட பாண்டு நந்தனனுகவும் இருக்கிற கிருஷ்ணார்ஜுனர்கள் அசையமாட்டார்கள். இவ்விருவர்களும் சூரர்கள்; பலசாலிகள்; திடமான ஆயுதங்களையுடையவர்கள்; மஹாரதர்கள்; நல்ல தேகமுள்ளவர்கள். சேர்ந்திருக்கின்றவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான இவ்விரு வீரர்களும் இருப்பிடத்தினின்று நழுவின தேவ குமாரர்கள் போல இருக்கின்றார்கள். இவர்கள் அக்னி ஸூரியர்களோ! இந்திர பிருகஸ்பதிகளோ! யமாந்தகர்களோ! சந்திரஸூரியர்களோ! பகனுடைய அம்சபூதர்களான மித்திராவருணர்களோ! அசுவினீதேவர்களோ! மருத்கணங்களோ! சேர்ந்திருக்கின்ற வஸுக்களோ! வீரர்கள் தனித்தனியாகவாவது சேர்ந்தாவது யுத்தத்தினால் அச்சுதரையும் அர்ஜுனனையும் பலாத்காரமாக ஜயிப்பதற்குச் சக்தியுள்ளவர்களாகார்கள். சல்ய! அப்படிப்பட்ட இந்த அர்ஜுனனையும் வாசுதேவரையும் என்னைத் தவிர வேறு எவன் எதிர்ப்பான்? எல்லா விருஷ்ணி வீரர்களுடைய ஐசுவரியமும் வாசுதேவரிடத்தில் நிலைபெற்றிருக்கின்றது. எல்லாப் பாண்டு புத்திரர்

சனுடைய ஜயமும் பார்த்தனிடத்தில் நிலைபெற்றிருக்கிறது. புருஷ ச்ரேஷ்டர்களான அவ்விருவரும் ஒரு ரதத்திலிருந்துகொண்டு என்னை ஒருவனை எதிர்த்து யுத்தம் செய்யப்போகின்றார்கள். சல்ய! என்னுடைய பிறப்பானது மேன்மை பெற்றது. ஸந்தோஷிக்கிறேன். தாமதத்திற்கு இது ஸமயமன்று. என்னுடைய இந்த ரதத்தை விரைவாக நடத்து. இவ்விருவர்களையும் இவ்விதம் எதிர்த்துச் செல்லுகிறேன். இந்த முகூர்த்தத்தில் கொல்லப்பட்ட கிருஷ்ணார்ஜுனர்களையாவது அல்லது அந்த இரண்டு சத்துருக்களாலே யுத்தத்தில் கொல்லப்பட்ட என்னையாவது பார்' என்று கூறினான்.

இவ்வாறு சொல்லுகின்ற மஹாரதனை ஸூத புத்திரன் விரைவாகப் பாண்டவனை எதிர்த்துச்சென்றான். குரு வீரர்களுள் சிறந்த மஹாரதர்களான கிருபர், போஜனை கிருதவர்மா, இளைய ஸஹோதரர்களுடன் கூடின காந்தாராதிபதியான சகுனி, குருவான துரோணருடைய குமாரர், உம்முடைய குமாரர்கள், அவ்வாறே காலாட்களுடைய கூட்டங்கள், யானை வீரர்கள் ஆகிய இவர்களுக்கு எதிரில் வந்து, உம்முடைய புத்திரனை துரியோதனன், அப்பொழுது அவர்களைப் புகழ்ந்து 'க்ருஷ்ணார்ஜுனரிருவர்களையும் தகையுங்கள்; எதிர்த்துச் செல்லுங்கள்; எல்லாவிதத்தாலும் விரைவாகக் களைப்படையச் செய்யுங்கள். உங்களால் நன்றாகக் காயப்படுத்தப்பட்ட இருவர்களையும் என்னுடைய சேனாபதி எளிதிற் கொல்லும்படி செய்யுங்கள்' என்று ஸமீபத்தில் வந்து உரைத்தான். சிறந்த வீரியமுடையவர்களான அவர்கள், 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு, விரைவுள்ளவர்களாகவும் அர்ஜுனனைக் கொல்லவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்களாகவும் அவனை நோக்கி நன்றாக எதிர்த்துச் சென்றார்கள். கர்ணனுடைய கட்டளையை அனுஷ்டிக்கின்ற மஹாரதர்கள் அந்த அர்ஜுனனை யுத்தத்தில் அம்புகளாலடித்தார்கள். அதிக ஜலத்தையுடைய மஹா ஸமுத்திரமானது நதிகளையும் நதங்களையும் குடிப்பது போல அர்ஜுனன் யுத்தத்தில் அவர்களைக் குடித்துவிட்டான். அவன் உத்தமமான பாணங்களைத் தொடுக்கின்றவனாகவாவது அப்படியே விடுக்கின்றவனாகவாவது பகைவர்களால் காணப்படவில்லை. தனஞ்சயனால் பிரயோகிக்கப்படும் அம்புகளாலே பிளக்கப்பட்ட மனிதர்களும் குதிரைகளும் யானைகளும் உயிரை இழந்து விழுந்தனர். கிரணங்கள் போன்ற பாணங்களையுடையவனும் அழகிய மண்டலம் போன்ற காண்டீவத்தையுடையவனும் யுகத்தின் முடிவுக்காலத்திலுள்ள ஸூரியனுக்கு ஒப்பான தேஜஸுள்ள

வனுமான விஜயனை, கண்ணுள்ள ஜனங்கள் எவ்வாறு ஸூர்யனைப் பார்க்கச் சக்தியற்றவர்களோ அவ்வாறு கௌரவர்கள் ஏறிட்டுப் பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களானார்கள். பார்த்தன் மகாரதர்களால் நன்றாகப் பிரயோகிக்கப்பட்ட உத்தமமான பாணங்களை உரக்கச் சிரித்துக்கொண்டு பாண ஸமூகங்களினால் துண்டாக்கினான். காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனன் மீண்டும் வில்லை வட்டமாக வளைத்து இழுத்துவிடப்பட்ட அம்புகளால் அந்த அம்புத்திரள்களை நாசஞ் செய்தான். அரசர்களுட் சிறந்தவரே! ஆனி ஆடி மாதங்களுடைய மத்தியத்தை அடைந்தவனும் உக்கிரமான கிரணங்களுள்ளவனுமான ஸூர்யன் நீர்ப்பெருக்கை நாசஞ் செய்வதுபோல் அர்ஜுனன் பாண ஸமூஹங்களை [1] நாசஞ் செய்து உம்முடைய சேனையை எரித்தான். கிருபரும் அவ்வாறே போஜனும் உம்முடைய புத்திரனும் மஹாரதரான துரோண புத்திரரும் பாணங்களைப் பிரயோகித்துக் கொண்டு அந்த அர்ஜுனனை எதிர்த்து ஓடிவந்தார்கள். மேகங்கள் மலையின் மீது நீர்த்தாரைகளைப் பெய்வது போலப் பாணங்களை இறைத்தார்கள். அந்தப் பாண்டவன் (தன்னைக்) கொல்ல எண்ணங் கொண்டவர்களும் ஸமர்த்தர்களும் மகாபலசாலிகளுமான அந்தக் கௌரவ வீரர்களாலே முயற்சியுடன் பிரயோகிக்கப் பட்ட அந்த உத்தமமான பாணங்களை விரைவுடன் அம்புகளால் வெட்டி அந்தச் சத்துருக்களை மும்மூன்று பாணங்களால் பிளந்தான். வட்டமான காண்டீவமாகிற பூர்ண மண்டலத்துடன் கூடியவனும் பகைவர்களை வாட்டுகின்றவனுமான அந்த அர்ஜுனனாகிற ஸூர்யன், அம்புகளாகிற உக்கிரமான கிரணங்களுடன் கூடியவனாக, ஆனி ஆடி மாதங்களுடைய மத்தியத்தை அடைந்தவனும் அவ்வாறே நாற்புறத்திலுமுள்ள வட்டமான ரேகையுடன் கூடினவனுமான ஸூர்யன் போல் விளங்கினான். பிறகு, துரோணபுத்திரர் சிறந்த பத்துப் பாணங்களால் தனஞ்சயனையும் மூன்று பாணங்களால் அச்சுதரையும் நான்கு பாணங்களால் நான்கு குதிரைகளையும் பிளந்தார்; பிறகு, வானரத்தின் மீதும் அம்புகளையும் சிறந்த நாராசங்களையும் இறைத்தார். பிறகு, தனஞ்சயன் நன்றாகப் பிரகாசிக்கின்ற அந்தத் துரோண புத்திரருடைய வில்லையும் ஸாரதியினுடைய தலையையும் மூன்று பாணங்களால் அறுத்தான். நான்கு பாணங்களால் நான்கு குதிரைகளையும் மூன்று பாணங்களால் கொடியையும் துரோண புத்திரருடைய ரதத்திலிருந்து தள்ளினான். குணங்கள் நிரம்பியவரான

---

[1] 'கிரஸ்ய' என்பது மூலம்; 'வாரியிறைத்து' என்றும் கொள்ளலாம்

அந்தத் துரோண புத்திரர், கோபத்தால் நிறைந்தவராகி, அளவில்லாத வஜ்ரங்களாலும் பொன்னாலும் அலங்கரிக்கப்பட்டதும் தக்ஷகனுடைய உடல் போலப் பிரகாசிக்கின்றதுமான வேறு வில்லை அந்த அர்ஜுனனைக் கொல்லுவதற்காகச் சிறந்த பெரிய ஸர்ப்பத்தைப் போலக் கையிலெடுத்தார். அவர் தம் ஆயுதத்தைப் பூமியில் எறிந்துவிட்டு வில்லை நாணேற்றி ஜயிக்கப்படாதவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான அவ்விருவர்களையும் நன்கு மதித்துக்கொண்டு உத்தமமான பாணங்களால் ஸமீபத்திலிருந்து அடித்தார். மஹாரதர்களும் யுத்த முனையில் நிற்பவர்களுமான கிருபரும் உம்முடைய குமாரனும் கிருதவர்மாவும் அந்தக் கௌரவ வீரர்களும் யுத்தத்தில் பாண்டவச்ரேஷ்டனை அனேக பாணங்களால் (அடித்துக்கொண்டு) ஸூர்யனை மேகங்கள் சூழ்வதுபோலச் சூழ்ந்தார்கள். ஆயிரம் கைகளையுடைய கார்த்தவீர்யார்ஜுனனுக்கு ஒப்பான பராக்கிரமமுள்ள பார்த்தன் கிருபருடைய அம்புகளுடன் கூடின வில்லையும், குதிரைகளையும், த்வஜங்களையும், ஸாரதியையும், முற்காலத்தில் வஜ்ரபாணியான இந்திரன் பலியை அடித்ததுபோலப் பாணங்களாலடித்தான். பார்த்தனுடைய பாணங்களால் ஆயுதங்கள் (அடித்துத்) தள்ளப்பட்ட அந்தக் கிருபர், மகாயுத்தத்தில் த்வஜம் நாசஞ்செய்யப்பட்ட பிறகு, கிரீடியினால் முன்பு பீஷ்மர் கட்டப்பட்டது போல ஆயிரம் பாணங்களால் கட்டப்பட்டார். அர்ஜுனன், கர்ஜிக்கின்ற உமது குமாரனுடைய த்வஜத்தை அம்புகளால் துண்டாக்கினான்; வில்லையும் அறுத்தான்; க்ருதவர்மாவினுடைய மங்களகரமான குதிரைகளையும் கொன்றான்; 'கொடியையும் துண்டாக்கினான். அந்த அர்ஜுனன் விரைவுடன் உமது குமாரனுடைய குதிரைகளையும் ஸாரதிகளையும் வீரர்களையும் கொடிகளையும் யானை வீரர்களையும் குதிரை வீரர்களையும் தேராளிகளையும் அழித்தான். பிறகு, நான்கு பக்கங்களிலும் சிதறியிருக்கின்ற மிக்க பெரிதான உம்முடைய சேனை ஸூர்யனுடைய தேஜஸினால் துன்புறுத்தப்படுவது போல அர்ஜுனனுடைய பிரதாபத்தினால் மிகவும் துன்புறுத்தப்பட்டது. பிறகு, கேசவர் துன்பமுற்றிருக்கிற சத்துருக்களை அர்ஜுனனுடைய ரதத்தினால் விரைவாக வலமாகச் சுற்றிவந்தார். பிறகு, யுத்தஞ்செய்ய விருப்பமுள்ளவர்களான மற்ற வீரர்கள் விருத்திரனைக் கொன்ற இந்திரனைப் போல் விரைவுடன் செல்லுகின்ற தனஞ்சயனை நல்ல குதிரைகள் பூட்டப்பட்டவைகளும் மறுபடியும் த்வஜங்கள் தூக்கி நிறுத்தப்பட்டவைகளுமான தேர்களோடு பின் தொடர்ந்து ஓடினார்கள். பிறகு, மஹாரதர்களான சிகண்டியும்

சைனேயனும் நகுல ஸஹதேவர்களும் தனஞ்சயனைப் பின் தொடர்ந்து செல்லுகின்ற பகைவர்களை எதிர்த்து ஓடித் தடுத்துக் கூர்மையுள்ள பாணங்களால் பிளந்து மிக்க பயங்கரமாகக் கர்ஜித்தார்கள். பிறகு, கோபங்கொண்டவர்களும் ஜயத்திலும் ஸ்வர்க்கத்தை அடைவதிலும் விருப்பமுள்ளவர்களுமான கௌரவர்கள், அசுரர்கள் தேவராஜனை ஹிம்ஸித்தது போல நேராகச் செல்லுகின்றவைகளும் நன்கு தீட்டப்பட்டவைகளுமான பாணங்களால் ஸ்ருஞ்சயர்களோடு பரஸ்பரம் அடித்துக்கொண்டார்கள். பகைவர்களைத் தவிக்கச் செய்பவரே! யானைகளும் குதிரைகளும் விழுந்தன. ரதிகர்களும் விழுந்தார்கள். அவ்வாறே, வீரர்கள் அனைவர்களும் நன்றாக விடப்படும் பாணங்களால் தனித்தனியாக ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள். அரசரே! மஹா பலசாலிகளான சிறந்த யுத்த வீரர்களால் மஹாயுத்தத்தில் பரஸ்பரம் (எய்யப்படுகின்ற) பாணங்களால் இருளானது உண்டு பண்ணப்பட்டிருக்கும் தருணத்தில், நான்கு திக்குக்களும் திக்கோணங்களும் சூரியனுடைய ஒளியும் இருளால் மூடப்பட்டனவாயின.

எண்பத்துநான்காவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

அரசரே! பாரதரே! மிக்க சிறப்புற்றவைகளான கௌரவர்களுடைய சேனைகளால் எதிர்க்கப்பட்டவனும் மூழ்குகின்றவனைப் போலிருப்பவனும் குந்தீபுத்திரனுமான பீமனை மேலே தூக்கிவிடக் கருதிய தனஞ்சயன், கர்ணனுடைய சேனையை அம்புகளால் அதிகமாக அடித்துச் சத்துரு வீரர்களை யமலோகத்துக்கு அனுப்பினான். பிறகு, இந்த அர்ஜுனனுடைய சரக்கூட்டங்கள் துண்டுதுண்டாக ஆகாயத்தை அடைந்து காணப்பட்டன. அவ்வாறே, மற்றப் பாண்டவ வீரர்களும் உம்முடைய சேனையைக் கொன்றார்கள். மஹாபாகுபலமுள்ள அந்தத் தனஞ்சயன் பறவைக் கூட்டங்கள் ஸஞ்சரிக்கின்ற ஆகாயத்தைப் பாணங்களால் நிரப்பிக்கொண்டு கௌரவர்களுக்கு யமனானான். பிறகு, அவன் பல்லங்களாலும் க்ஷுரப்ரங்களாலும் பளபளப்பான நாராசங்களாலும் சரீரங்களை வெட்டினான்; தலைகளையும் அறுத்தான். சரீரங்கள் வெட்டப்பட்டவர்களும் கவசங்களை இழந்தவர்களும் தலைகளை இழந்தவர்களும் நான்கு பக்கத்திலும் தள்ளப்பட்டவர்

களும் விழுகின்றவர்களுமான யுத்தவீரர்களால் (யுத்தபூமியானது) நன்றாக மூடப்பட்டது. தனஞ்சயனுடைய அம்புகளால் அடிக்கப்பட்ட தேர்களாலும், குதிரைகளாலும், ரதிகர்களாலும், யானைகளாலும் நன்றாக வெட்டப்பட்டவர்களும் பிளக்கப்பட்டவர்களும் அழிக்கப்பட்டவர்களும் அங்கங்களையும் அங்கங்களுடைய அவயவங்களையும் இழந்தவர்களும் உயிர் துறந்தவர்களும் உயிருடன் கூடியவர்களுமான மனிதர்களாலும் பூமியானது பரப்பப்பட்டதாயிற்று. மன்னரே! ரணபூமியானது வைதரணீ நதிபோல் எவ்விதத்திலும் நாடமுடியாததும் அதிகமாக மேடுபள்ளமுள்ளதும் கோர ரூபத்துடன் கூடியதும் மிகவும் பார்க்க முடியாததும் ஆயிற்று. பூமியானது ஏர்க்கால்களாலும், சக்கரங்களாலும், அச்சுக்களாலும், பல்லங்களாலும், குதிரைகளை இழந்தவைகளும் குதிரைகளுடன் கூடியவைகளும் ஸாரதிகளுடன் கூடினவைகளும் ஸாரதிகள் கொல்லப்பட்டவைகளுமான யுத்த வீரர்களுடைய தேர்களாலும் பரப்பப்பட்டதாகியது. பொற் கவசங்களணிந்தவர்களும் ஸன்னாகமுள்ளவர்களும் பொன் மாலையைத் தரித்தவர்களுமான போர் வீரர்களால் வீற்றிருக்கப்பட்டவைகளும் கவசம் பூட்டப்பெற்றவைகளும் எப்பொழுதும் மதப்பெருக்குள்ளவைகளும் பத்ரமென்கிற வகுப்பைச் சார்ந்தவைகளுமான யானைகள் க்ரூரர்களான யானைவீரர்களால் தூண்டப்பட்டவைகளாகக் கோபத்துடன் அர்ஜுனனை எதிர்த்துச் சென்றன. கிரீடியினால் அடிக்கப்பட்ட நானூறு சிறந்த தேர்கள், தள்ளப்பட்டவைகளும் பிராணிகளுடன் கூடியவைகளுமான பெரியமலையின் சிகரங்கள் போல் விழுந்தன. தனஞ்சயனுடைய பாணங்களால் தள்ளப்பட்ட சிறந்த யானைகளால் பூமியானது மூடப்பட்டது. அவனுடைய ரதமானது, நான்கு பக்கங்களிலும் மேகங்கள்போல் விளங்குகின்றவைகளும் மதஜலத்தைப் பொழிகின்றவைகளுமான யானைகளை ஸூர்யன் மேகங்களைப் பிளப்பதுபோல் எதிர்த்துத் தாக்கியது. பல்குனனால் கொல்லப்பட்ட யானைகளாலும் மனிதர்களாலும் குதிரைகளாலும் பலவாறாக உடைக்கப்பட்ட ரதங்களாலும் சஸ்திரங்களையும் யந்திரங்களையும் கவசங்களையும் இழந்து உயிர்துறந்திருக்கின்ற யுத்தவீரர்களாலும் அறுத்துத் தள்ளப்பட்ட ஆயுதங்களாலும் வழியானது மூடப்பட்டதாயிற்று. நாணொலியுள்ளதாகச் செய்யப்பட்ட காண்டீவமானது கர்ஜிக்கின்ற மேகம் பேரிடி முழக்கத்தை உண்டுபண்ணுவதுபோலப் பயங்கரமான சத்தத்தை உண்டுபண்ணியது. பிறகு, தனஞ்

சயனுடைய அம்புகளால் அடிக்கப்பட்ட சேனையானது ஸமுத்திரத்தில் பெருங்காற்றினால் நாற்புறங்களிலும் அடிக்கப்பட்ட பெருங்கப்பல்போலப் பிளக்கப்பட்டது. காண்டீவத்தினால் பிரயோகிக்கப்பட்டவைகளும் பற்பல ரூபங்களுள்ளவைகளும் உயிரை வாங்குகின்றவைகளும் கொள்ளிக்கட்டை தூமகேது வஜ்ராயுதம் இவைகள் போன்றவைகளுமான பாணங்கள் உமது படையை எரித்தன. பெரிய மலையின்மீதுள்ள மூங்கிற்காடானது இரவில் எரிந்தாற்போல உம்முடைய பெருஞ்சேனையானது பாணங்களால் பீடிக்கப்பட்டு அதிகமாகத் துடித்தது. கிரீடியினால் மிக அடிக்கப்பட்டதும் பெரும்பாலும் நாசஞ்செய்யப்பட்டதும் பாணங்களால் கொல்லப்பட்டும் சின்னபின்னம் செய்யப்பட்டுமிருப்பதுமான உம்முடைய அந்தச் சேனையானது, நான்கு திக்குக்களிலும் ஓடியது. ஸவ்யஸாசியினால் நன்றாக எரிக்கப்பட்ட கௌரவர்கள் [1] பெருங்காட்டில் காட்டுத்தீயினால் பயமுறுத்தப்பட்ட மிருகங்களுடைய கூட்டங்கள்போலச் சுழன்றார்கள். அதிக பயத்தை அடைந்திருக்கின்ற கௌரவர்களுடைய படையானது மிக்க தோள்வலியமைந்த பீமஸேனனை யுத்தத்தில் விட்டு விட்டு முழுதும் புறங்காட்டி ஓடியது. பிறகு, கௌரவர்கள் தோல்வியடைவிக்கப்பட்ட தருணத்தில் ஜயிக்கப்படாதவனான அந்தப் பீபத்ஸு பீமஸேனனை அடைந்து ஒரு முகூர்த்தம் எதிரிலிருந்தான். பாரதரே! பல்குனி நக்ஷத்திரத்திலுதித்தவனான தனஞ்சயன் பீமஸேனனோடு சேர்ந்து ஆலோசனைசெய்து அவனிடத்தில் யுதிஷ்டிரர் சல்யங்கள் நீங்கினவராகவும் துன்பமற்றவராகவும் இருக்கிறாரென்பதைச்சொல்லி அவனாலே அனுமதிகொடுக்கப்பட்டவனாகி, பிறகு, ரதத்தின் ஒலியினால் பூமியையும் ஆகாயத்தையும் ஒலியிடும்படி செய்து கொண்டு, அவ்விடத்தினின்று புறப்பட்டுச் சென்றான்.

பிறகு, பகைவர்களை வாட்டுகிறவனான தனஞ்சயன், துச்சாஸனனுக்கு இளையவர்களும் வீரர்களுமான உம்முடைய குமாரர்கள் பதின்மர்களால் சூழப்பட்டான். பாரதரே! நாணேற்றப்பட்ட விற்களையுடையவர்களும் நர்த்தனம் செய்கின்றவர்கள் போன்றவர்களுமான அந்த வீரர்கள், கொள்ளிகளால் யானையைத் துன்புறுத்துவதுபோல அவனைப் பாணங்களால் துன்புறுத்தினார்கள். மதுஸூதனர் ரதத்தினால் அவர்களை இடமாகச் சுற்றிச் சென்றார். ஏனெனில், அவர், அவர்கள் கிரீடியினால் உடனே யமனிடம் அனுப்பப்பட்டுவிடுவார்களென்றே

---

[1] வேறு பாடம்

எண்ணினர். அவ்வாறு திரும்பிப்போகின்றவன்போலிருக்கின்ற அர்ஜுனனைப் பார்த்து [1] வேறு சில மூடர்கள் உரக்கக் கர்ஜித்தார்கள். பார்த்தன், அடிக்கடி கர்ஜிக்கின்ற அந்த வீரர்களுடைய கொடிகளையும் குதிரைகளையும் விற்களையும் ஸாரதிகளையும் நாராசங்களாலும் பிறைக் கணைகளாலும் விரைவாக அறுத்தான். பிறகு, வேறு பத்துப் பல்லங்களால் அவர்களுடைய தலைகளைத் தள்ளினன். கோபத்தினால் சிவந்த கண்களையுடையவைகளும் நன்றாகக் கடிக்கப்பட்டிருக்கிற உதடுகளையுடையவைகளும் பூமியில் விழுந்திருப்பவைகளுமான அவர்களுடைய முகங்கள் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களுடைய கூட்டங்கள்போல் விளங்கின. பகைவர்களைக் கொல்லுகிறவனான அர்ஜுனன், பொன்னாலாகிய தோள்வளைகளை அணிந்தவர்களான அந்தப் பத்துக் கௌரவ வீரர்களையும் பொற்புங்கமுள்ளவைகளும் மிக்க வேகமுள்ளவைகளுமான பத்துப் பாணங்களால் அடித்துவிட்டு வேறிடம் சென்றான்.

---

1 'ததோऽந்யே ப்ராணத்ருஹ உக்ராஃ' என்பது மூலம். 'தசஶூ ப்ராந்த்ருவந்து ஸூராஃ' என்பது நீலகண்ட வியாக்யான புஸ்தக பாடம்.

'திருதராஷ்டிர குமாரர்களில் பதின்மரை அர்ஜுனன் கொன்றான்' என்று பொருள் தரும்படியான நீலகண்ட வியாக்யானபாடமும் அதனைப் பின்பற்றிய இரண்டு இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்களும் பொருந்தாமே மேற்கொள்க. நேரான பாடங்கொண்ட T. R. கிருஷ்ணசார்யரவர்களும் அர்ஜுனன் அந்தப் பதின்மரைக் கொன்றதாகவே நிச்சயித்துக் குறிப்பு எழுதியிருக்கிறார்கள். இங்ஙனம் கொள்ளுதல், முன்பின் கதைத் தொடர்ச்சிக்கு விரோதமாகும். அர்ஜுனன் அப்படிக் கொன்றிருந்தால், பல தீங்குகள் விளையலாகும். அது யுத்த முறையும் அன்று. ஸர்வஜ்ஞனான வாஸுதேவன் தேரினை அவர்களுக்கு இடமாகச் செலுத்தியது இவற்றைத் திருவுளத்திற்கொண்டே போலும். மேலும், பொற்புங்கமுள்ள பத்துப் பாணங்களால் அவர்களையே திரும்பவும் அடித்தான்' என்றால், தலையற்ற முண்டங்களை அடித்தான்' என்ற பொருள் தந்து, சுத்த வீரனான அர்ஜுனனுடைய பெருமைக்கு ஒரு பெருங் குறை தோன்ற நிற்கும். இங்கே. சுலோகங்களிலுள்ள சொல்லமைப்பும் ஆராயத் தக்கது.

திருதராஷ்டிர குமாரர்களில் பதின்மரை அர்ஜுனன் கொன்றதாகப் பொருள் தரும் பாடமே கொள்வர் சிலர். அவர், ' ஸ்ரீ மகாபாரதத்தில் எளிதிற் பொருள் செய்ய முடியாத பல விஷயங்கள் உள்ளன. எழுவகைப் பேதங்கள் முதலிய முறைகளைக்கொண்டு அவற்றிற்கு அர்த்த நிச்சயம் செய்யவேண்டும். எழுவகைப் பேதங்களாவன:- (1) வ்யத்யாஸம் (2) ப்ராதிலோம்யம் (3) கோமூத்ரீ (4) ப்ரஹஸம் (5) உக்ஷணம்

எண்பத்தைந்தாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

மஹாவேகமுள்ள குதிரைகளுடன் வருகின்ற அந்தச் சிறந்த வானரத்வஜனை வீரர்களான தொண்ணூறு கௌரவ ரதிகர்கள் யுத்தத்திற்காக எதிர்த்துச் சென்றார்கள். புருஷச்ரேஷ்டர்களான ஸம்சப்தகர்கள் பரலோக ஸாதகமான கோரமான சபதத்தைச் செய்துகொண்டு, புருஷச்ரேஷ்டனை அர்ஜுனனை யுத்தத்தில் சூழ்ந்து கொண்டார்கள். வாசுதேவர், மகாவேகமுள்ளவை களும் ஸ்வர்ணமயமான பூஷணங்களுடன் கூடியவைகளும், முத்து மயமான மேல் விரிப்புக்களால் மூடப்பட்டவைகளுமான வெண்மையான குதிரைகளைக் கர்ணனுடைய ரதத்தை நோக்கிச் செலுத்தினர். கர்ணனுடைய ரதத்தை நோக்கிச் செல்பவனும் பகைவர்களை நாசஞ் செய்பவனுமான அந்தத் தனஞ்சயனைப் பார்த்து ஸம்சப்தகர்களுடைய கூட்டங்கள் சரமாரிகளால் எதிர்த்து அடித்துக்கொண்டு சென்றன. அர்ஜுனன் விரைபவர் களும் ஸாரதிகளுடனும் விற்களுடனும் த்வஜங்களுடனும் கூடின வர்களுமான அந்தத் தொண்ணூறு ஸம்சப்தக வீரர்களையும் கூர்மை யுள்ள பாணங்களால் மிச்சமின்றிக் கொன்றான். கிரீடியினால் பற்பல உருவமுள்ள பாணங்களால் அடிக்கப்பட்ட அந்த ஸம்சப்தகர்கள், புண்ணியஞ் செய்தவர்கள் புண்ணியம் குறைந்த வுடன் ஸ்வர்க்கத்தினின்றும் விமானங்களிலிருந்து விழுவது போல் விழுந்தார்கள். பிறகு, தேர்களையும் யானைகளையும் குதிரைகளையு முடைய கௌரவர்கள் பயமற்றவர்களாகிக் கௌரவர்களுள் மிகச் சிறந்தவனும் பாதச்ரேஷ்டனுமான பல்குனனை எதிர்த் தார்கள். முயற்சியுள்ள மனிதர்களுடனும் குதிரைகளுடனும் கூடியதும் பலத்தினால் அதிகரித்த சிறந்த யானைகளுள்ளதுமான உமது புத்திரர்களுடைய அந்தப் பெருபடையானது தனஞ்சயனை

---

(6) ஸூதரம் (7) ஸாது என்பன. அவைகளுள், வ்யத்யாஸம், 'தேச வ்யத்யாஸம், காலவ்யத்யாஸம் 'புருஷவ்யத்யாஸம்' என மூன்று வகைப் படும். தேசவ்யத்யாஸமாவது ஓரிடத்தில் நடந்ததை மற்றோரிடத்தில் நடந்த தாகச் சொல்வது; காலவ்யத்யாஸமாவது ஒரு காலத்தில் நடந்ததை வேறொரு காலத்தில் நடந்ததாகச் சொல்வது; புருஷவ்யத்யாஸமாவது ஒரு மனிதன் செய்ததை மற்றொரு மனிதன் செய்ததாகச் சொல்வது. இந்த வேறுபாடு பற்றிப் பீமஸேனன்செய்ததை அர்ஜுனன் செய்ததாக ஏதோ ஒரு காரணத்தால் சொல்லப்பட்டிருக்க வேண்டும், என்று சமாதானம் கூறுவர். இது மாத்வ ஸம்பிரதாயக் கொள்கை.

நன்றாகத் தடுத்தது. மகாவில்லாளிகளான கௌரவர்கள் குருநந்தனனான அர்ஜுனனைச் சக்திகளாலும் ரிஷ்டிகளாலும் தோமரங்களாலும் ஈட்டிகளாலும் கதைகளாலும் கத்திகளாலும் பாணங்களாலும் நன்றாக மூடினார்கள். பாண்டவன் ஆகாயத்தில் நாற்புறத்திலும் பரப்பப்பட்டிருக்கிற அந்த அம்பு மழையை ஸூரியன் கிரணங்களால் இருளை நாசஞ்செய்வது போலப் பாணங்களால் நாசஞ் செய்தான். பிறகு, மிலேச்சர்கள் மதங்கொண்ட ஆயிரத்துமுன்னூறு யானைகளுடன்கூட நின்றுகொண்டு உமது புத்திரனுடைய கட்டளையினால் பார்த்தனை விலாப்புறத்தில் அடித்தார்கள். ரதத்திலிருக்கிற பார்த்தனைக் கர்ணிகளாலும் நாளீகங்களாலும் நாராசங்களாலும் தோமரங்களாலும் ஈட்டிகளாலும் சக்திகளாலும் கப்பணங்களாலும் பிண்டிபாலங்களாலும் ஹிம்ஸித்தார்கள். பிரபுவான பல்குனன், யானையின்மீதிருப்பவர்களால் பிரயோகிக்கப்பட்டதும் ஒப்பற்றதுமான அந்த ஆயுத மழையைக் கூர்மையுள்ள பல்லங்களாலும் அர்த்தசந்திரபாணங்களாலும் வெட்டியபிறகு, கொடித்துணிகளுடனும் த்வஜங்களுடனும் மாவுத்தர்களுடனும் கூடின அந்த எல்லா யானைகளையும் பற்பல அடையாளங்களுள்ள உத்தமமான பாணங்களால் (இந்திரன்) வஜ்ராயுதத்தினால் மலைகளைப் பிளப்பது போலப் பிளந்தான். அந்தப் பொன்மாலைகளை அணிந்த பெரிய யானைகள் ஸ்வர்ணமயமான கட்டுக்களுள்ள பாணங்களால் அடிக்கப்பட்டுத் துன்பமடைந்து அக்னியின் ஜ்வாலைகளுடன் கூடின மலைகளைப்போல விழுந்தன. அரசரே! பிறகு, பெரிதான காண்டீவத்தின் ஒலியும் சத்தமிடுகின்ற மனிதர்கள் மெதுவாகக் கூச்சலிடுகின்ற யானைகள் குதிரைகள் இவற்றின் ஒலியும் தோன்றின. மன்னரே! அடிக்கப்பட்ட அந்த யானைகளும் நான்கு பக்கத்திலும் ஓடின. குதிரைகளும் ஸாரதிகள் கொல்லப்பட்டவைகளாகப் பத்துத் திக்குக்களிலும் ஓடின. மஹாராஜரே! ரதிகர்களாலும் அவ்வாறே குதிரைகளாலும் விடுபட்டிருக்கின்ற ரதங்கள் கந்தர்வ நகரங்கள்போல ஆயிரம் ஆயிரமாகக் காணப்பட்டன. மஹாராஜரே! இங்குமங்கும் ஓடுகின்ற குதிரை வீரர்கள் பார்த்தனுடைய அம்புகளால் கொல்லப்பட்டவர்களாக அந்த அந்த இடத்திலேயே காணப்பட்டார்கள். பார்த்தன் ஒருவனாகவே இருந்துகொண்டு யுத்தத்தில் யானைவீரர்களையும் யானைகளையும் ஜயித்ததினால் அந்த க்ஷணத்தில் பாண்டவனுடைய கைகளின் பலம் காணப்பட்டது. அரசரே! அந்த மனிதர்களும் யானைகளும் ரதிகர்களும் ஒன்றுசேராமலே யுத்தத்தை உத்தேசித்துத் திரும்பினவர்களாகக் கர்ஜித்துக்கொண்டு அர்ஜுனனை எதிர்த்தார்கள்.

பரதர்களுள் சிறந்தவரே! மன்னரே! பிறகு, மூன்று அங்கங்களுடன்கூடின பெரும்படையினால் சூழப்பட்டிருக்கிற கிரீடியைக் கண்டு பயங்கரனான பீமஸேனன் கொல்லப்பட்டவர்கள்போக மிகுந்திருக்கிற சிலரான உம்மைச் சேர்ந்த தேராளிகளை விட்டு விட்டுத் தனஞ்சயனுடைய ரதத்தைக் குறித்து வேகத்துடன் சென்றான். அப்பொழுது, பிராதாவான அர்ஜுனனைக்குறித்து வருகின்ற பீமனைக் கண்டு, பெரும்பான்மையாகக் கொல்லப் பட்டதும் துன்பமுற்றதுமான அச்சேனையானது அங்கிருந்து ஓடியது. மஹாபலசாலியான பீமன் களைப்படையாமல் மஹா யுத்தத்தில் கதையைக் கையில்கொண்டு, அர்ஜுனனால் கொல்லப் பட்டதுபோக மிகுந்திருக்கின்ற குதிரைகளைக் கொன்றான். பாரதரே! கௌரவர்கள் அப்பொழுது கதையைக் கையில் கொண்ட பீமனைக் கண்டு, காலதண்டத்தைக் கையிற்கொண்டு வந்திருக்கின்ற அந்தகனென்றே எண்ணினார்கள். பீமன் கால ராத்திரி போல அதிக உக்கிரமாயிருக்கிறதும் மனிதர்களையும் யானைகளையும் குதிரைகளையும் புஜிக்கின்றதும் கோட்டைமதில் களையும் உப்பரிகைகளையும் நகரவாயில்களையும் அவைகளைச்சார்ந்த வாயில்களையும் பிளக்கின்றதும் அதிக பயங்கரமாயிருக்கின்றது மான கதாயுதத்தைக் குதிரைகளை நாசஞ்செய்வதற்காக விரைவுடன் பிரயோகித்தான். ஐயா! அந்தக் கதையானது அனேக குதிரைகளையும் குதிரையின்மீதேறியிருக்கின்ற வீரர்களையும் கொன்றது. பாண்டவன் வெண்கலமயமாயும் உருக்குமயமாயுமிருக்கின்ற கவசங்களையணிந்த மனிதர்களையும் குதிரைகளையும் கதையினால் நாசஞ்செய்தான். கொல்லப்பட்ட அவைகள் வீரிட்டுக்கொண்டு விழுந்தன. இரத்தத்தினால் நனைக்கப்பட்டவைகளும் தலைகளும் எலும்புகளும் கால்களும் ஒடிக்கப்பட்டவைகளுமான குதிரைகள், புலால் தின்னும் ஜந்துக்களுடைய கூட்டத்துக்கு ஆகாரமாக, பற்களால் பூமியைக் கௌவிக்கொண்டு படுத்தன. இரத்தத்தினாலும் மாம்ஸத்தினாலும் ஊனீராலும் த்ருப்தியை அடைந்த கதையானது எலும்புகளைக்கூடப் பக்ஷிக்கின்றதாகக் காலராத்திரிபோலப் பார்க்கமுடியாததாயிருந்தது. மிக்க கோபங் கொண்ட பீமன் பதினாயிரம் குதிரைகளையும் அனேக காலாட்களையும் கொன்று கதாபாணியாக அங்குமிங்கும் எதிர்த்து ஓடினான். பாரதரே! பிறகு, உம்மைச் சேர்ந்தவர்கள் கதையைக் கையிற்கொண்ட பீமனைக்கண்டு காலதண்டத்தைக் கையிற் கொண்டிருக்கிற யமன் என்று எண்ணினார்கள். மதங் கொண்டிருக்கிற யானைபோல மிக்க கோபங்கொண்ட அந்தப்

பாண்டுநந்தனன் முதலியானது கடலில் பிரவேசிப்பது போல யானைப்படையில் பிரவேசித்தான். அதிகக் கோபங்கொண்ட பீமன் யானைப் படையில் நுழைந்து பெரிதான கதையைக் கையிலெடுத்து ஒரு க்ஷணத்தில் அந்த யானைப்படையை யமனுடைய வாஸஸ்தானத்தை அடையச் செய்தான். கவசங்களுடனும் மேலே ஏறியிருக்கிற வீரர்களுடனும் கொடிகளுடனும் விழுகின்ற மதயானைகளைச் சிறகுகளுள்ள மலைகளைப் போலக் கண்டோம். மஹாபலசாலியான பீமஸேனனே அந்த யானைப் படையைக் கொன்று மீண்டும் தனது தேரில் ஏறி அர்ஜுனனுக்குப் பின் புறத்தில் சென்றான். மஹாராஜரே! பிறகு, பெரும்பான்மையாக ஆயுதங்களால் சூழப்பட்ட உம்முடைய சேனையானது அப்பொழுது உத்ஸாகத்தை இழந்ததும் புறங்காட்டி ஓடுவதில் நோக்கங் கொண்டதும் ஆயிற்று. அர்ஜுனன், தாமதிப்பதாகவும் தைரியத்தை இழந்ததாகவும் நிற்கின்ற அந்தச் சேனையைக் கண்டு பாணங்களாலும் சஸ்திர மழைகளாலும் மூடினான். யுத்தத்தில் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனால் பாணஸமூகங்களால் நிறைக்கப்பட்ட மனிதர்களும் குதிரைகளும் ரதங்களும் யானைகளும் கேஸரங்களோடு கூடிய கடம்ப மலர்கள் போல் விளங்கின. அரசரே! பிறகு, மனிதர்கள் குதிரைகள் யானைகள் இவர்களின் பிராணனைக் கவர்கின்ற கிரீடியினுடைய பாணங்களைக் கண்டு கௌரவர்கள் பெரிதான துன்பக் கூக்குரலை வெளியிட்டார்கள். அப்பொழுது, உம்முடைய சேனையானது கூக்குரலுள்ளதும் மிக்க பயமுற்றதும் ஒன்றின்மீதொன்று பதுங்குகின்றதுமாகக் கொள்ளிவட்டம் போலச் சுழன்றது. பிறகு, கௌரவர்களுடைய மிக்க பெரிய சேனையானது அர்ஜுனனுடைய பாணங்களால் அழிக்கப்பட்டது. அந்த யுத்தத்தில் பிளக்கப்படாத ரதமாவது குதிரை வீரனாவது குதிரையாவது யானையாவது இல்லை. அரசரே! பாணங்களால் உடைக்கப்பட்ட கவசங்களுள்ள அந்தச் சேனையானது நான்கு பக்கத்திலும் எரிகின்றது போன்றதும் தன் ரத்தத்தினால் நனைக்கப்பட்டதும் அச்சந் தருவதும் நாசமடைந்ததும் ஆயிற்று. பெரும்பான்மையாகக் கொல்லப்பட்டதும் கூர்மையுள்ள பாணங்களால் நாற்புறங்களிலும் அடிக்கப்பட்டதுமான அந்தப் படையானது பகைவர்களைத் தவிக்கச் செய்கிறவனான பல்குனனை எதிர்த்து யுத்தத்தை விடவில்லை. பரதர்களுள் சிறந்தவரே! கொல்லப்படுகின்றவர்களாயிருந்தும், கௌரவர்கள் பார்த்தனை விட்டு விலகாமலிருந்ததாகிய அவர்களுடைய பராக்கிரமத்தை அந்த யுத்தத்தில் ஆச்சரியமாகக் கண்டோம். கௌரவர்கள் அனைவரும் அந்த ஸவ்யஸாசியினுடைய அந்தப் பராக்கிரமத்தைக் கண்டு கர்ணனுடைய உயிர் வாழ்வில்

ஆசையற்றவர்களானார்கள். காண்டீவத்தை வில்லாகக்கொண்ட பார்த்தனால் ஜயிக்கப்பட்ட கௌரவர்கள் யுத்தத்தில் பார்த்தனுடைய பாணங்களுடைய தாக்குதலைப் பொறுக்கமுடியாதென்று எண்ணித் திரும்பிவிட்டார்கள். அம்புகளால் வதஞ்செய்யப்படுகின்ற அந்தக் கௌரவர்கள் யுத்தத்தில் பார்த்தனைவிட்டுப் பயந்து திசைகளில் ஓடினார்கள்; கர்ணனையும் அழைத்தார்கள். பார்த்தன் பாண்டவ சேனையையும் யுதிஷ்டிரராஜரையும் ஸந்தோஷமடையச் செய்துகொண்டு அனேக அம்புகளை இறைத்து அவர்களைத் துரத்தினான். மஹாராஜரே! உம்முடைய புத்திரர்கள் கர்ணனுடைய ரதத்தைக் குறித்துச் சென்றார்கள். ஆழ்ந்த யுத்தக் கடலில் மூழ்குகின்ற அவர்களுக்குக் கர்ணன் அப்பொழுது ஒரு திட்டானான். மஹாராஜரே! கௌரவர்களோ, காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் விஷமில்லாத ஸர்ப்பங்கள் போல (=வீரியமற்றவர்களாக) கர்ணனுடைய அருகிலேயே பதுங்கினார்கள். மன்னவரே! எல்லாப் பிராணிகளும் மிருத்யுவினிடத்திலிருந்து நடுங்கி உலகங்களுக்கு முக்கிய கதியான தர்மத்தை அடுப்பதுபோல, உம்முடைய புத்திரர்கள் மஹாத்மாவான பாண்டவனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் சிறந்த வில்லாளியான கர்ணனை அடுத்துப் பதுங்கினார்கள். கர்ணன், மனத்தில் பயமடைந்தவர்களும் இரத்தத்தினால் நான்கு பக்கத்திலும் நனைக்கப்பட்டவர்களும் ஆபத்தில் அகப்பட்டவர்களும் அம்புகளால் பீடிக்கப்பட்டவர்களும் அவர்களை, 'பயப்படவேண்டாம்' என்று சொன்னான். பார்த்தனால் வலிமையினால் நன்றாக முறியடிக்கப்பட்ட உம்முடைய சேனையைக் கண்டு கர்ணன் பகைவர்களைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணத்தினால் வில்லை நாணொலி செய்துகொண்டு நின்றான். சஸ்திரதாரிகளுள் சிறந்தவனான கர்ணன் வேகமாக ஓடுகின்ற அந்தக் கௌரவர்களைக்கண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டு நன்றாயாலோசித்துப் பார்த்தனைக் கொல்லும் விஷயத்தில் மனத்தைச் செலுத்தினான். பிறகு, அதிரத புத்திரனான கர்ணன் மிக்க பெரிதான வில்லை நாணொலியிடும்படி செய்துகொண்டு, ஸவ்யஸாசி பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே, மீண்டும் பாஞ்சாலர்களைக் குறித்து ஓடினான். பிறகு, இரத்தம் போன்ற கண்களையுடையவர்களான அரசர்கள் பெரிய மேகங்கள் மலையை மூடுவதுபோல் ஒரு க்ஷணத்தில் பாணங்களுடைய கூட்டங்களால் மூடினார்கள். பெரியவரே! பிறகு, கர்ணனால் விடப்பட்ட ஆயிரக்கணக்கான பாணங்கள்,

ஸூரியன் இருளைக் கவர்வதுபோலப் பாஞ்சாலர்களுடைய உயிர்களைக் கவர்ந்தன. மஹாபுத்தியுள்ளவரே! மித்திரன் விஷயத்தில் பேரன்புள்ள ஸூத புத்திரனுக்கும் அவனால் மித்திரனுக்காகக் கொல்லப்படுகின்ற பாஞ்சாலர்களுக்கும் அப்பொழுது பெரும் போர் நடந்தது.

எண்பத்தாறுவது அத்தியாயம்

(ஸங்குலயுத்தமும் பீமனுக்கும் துச்சாஸனனுக்கும் எதிர்ப்பும் ஸம்வாதமும்)

அரசரே! பிறகு, வெள்ளைக் குதிரை கட்டிய தேரையுடைய அர்ஜுனனால் கௌரவர்கள் துரத்தப்பட்டிருக்கும் ஸமயத்தில் ஸூதபுத்திரனான கர்ணன் பாஞ்சாலபுத்திரர்களை, காற்று மேகக் கூட்டங்களை நாசம்செய்வதுபோல, பெரிய அம்புகளால் நாசஞ் செய்தான். கர்ணன் ஜனமேஜயனுடைய ரதத்தினின்று ஸூதனை அஞ்சலிகங்களால் விழும்படிசெய்து குதிரைகளையும் கொன்றான்; சதானீகனையும் ஸுதஸோமனையும் பல்லங்களால் அடித்து இரண்டு விற்களையும் வெட்டினான். ஸூதபுத்திரன் பிறகு யுத்தத்தில் த்ருஷ்டத்யும்னனை ஆறுபாணங்களால் பிளந்து அவனுடைய திறமையுள்ள குதிரைகளையும் கொன்றான்; ஸாத்யகியினுடைய குதிரைகளையும் கொன்று கேகய ராஜனுடைய புத்திரனான விசோகனையும் கொன்றான். கேகய ராஜகுமாரனும் ஸேனாபதியுமான மித்ரவர்மா, தன் புத்திரன் கொல்லப்படவே, அந்தக் கர்ணனை எதிர்த்து ஓடினான்; அதிக உக்கிரமான வேகமுள்ள அம்புகளால் அதிகமாக நடுங்கச்செய்துகொண்டு கர்ணனுடைய புதல்வனான [1] ப்ரஸேனனையும் அடித்தான். கர்ணன் அட்டஹாஸம் செய்து மூன்று அர்த்தசந்திரபாணங்களால் மித்ரவர்மாவினுடைய இரு கைகளையும் தலையையும் அறுத்தான். அவன், கோடாலிகளால் வெட்டி முறிக்கப்பட்ட ஸாலவிருக்ஷம் போல, உயிர் துறந்து தேரினின்று பூமியில் விழுந்தான். கர்ணனுடைய குமாரனான [2] ப்ரஸேனன் குதிரைகள் கொல்லப்பட்ட ஸாத்யகியை விரைவாகச் செல்லுகின்ற கூர்மையுள்ள அம்புகளால் நன்றாக மூடி நர்த்தனஞ்செய்கிறவன்போல (த்தோற்றி), ஸாத்யகியினுடைய பாணங்களால் நேரில் அடிக்கப்பட்டு விழுந்தான். புத்திரன் கொல்லப்பட்டவுடன், குரோதத்தினால் மூடப்பட்ட மனத்தையுடையவனான கர்ணன், சினிகளுள் மிகச்

1, 2 வேறுபாடம்; 'ஸுதேவன்' என்பதும் 'ஸுஷேணன்' என்பதும் கிருஷ்ணாசார்யர் பாடம்.

சிறந்தவனான ஸாத்யகியைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணங் கொண்டு, 'ஸாத்யகியே! நீ மாண்டாய்' என்று உரக்கச் சொல்லிக் கொண்டு பகைவர்களால் தாங்கமுடியாத பாணத்தைப் பிரயோகித்தான். சிகண்டியானவன், அந்தக் கர்ணனுடைய அந்தப் பாணத்தை மூன்று பாணங்களால் துண்டாக்கி மூன்று பாணங்களால் கர்ணனையும் துன்பமடையச்செய்தான். [1] கர்ணன் சிகண்டியினுடைய வில்லையும் கொடியையும் வெட்டி இரண்டு க்ஷுரங்களால் அவனையும் பீடித்தான். உக்கிரனும் மஹாத்மாவுமான அந்தக் கர்ணன் சிகண்டியை ஆறு பாணங்களால் அடித்துத் திருஷ்டத்யும்னனுடைய புத்திரனது தலையையும் அறுத்தான்; பிறகு, நன்றாகத் தீட்டப்பட்ட க்ஷுரத்தினால் ஸுஜாத ஸோமனையும் பிளந்தான். பிறகு, அந்த யுத்தத்தில் கைகலந்த சண்டை நடந்து த்ருஷ்டத்யும்னனுடைய புத்திரனும் கொல்லப்பட்டவுடன், மாதவர், அர்ஜுனனைப் பார்த்து, 'பார்த்த! ராஜஸிம்மமே! நமது சேனையானது பாஞ்சாலவீரர்களில்லாததாகச் செய்யப்படுகிறது. செல்; கர்ணனைக்கொல்' என்று கூறினார். பிறகு, புருஷச்ரேஷ்டனும் நல்ல கைகளையுடையவனுமான அர்ஜுனன் பயங்கரமான யுத்தத்தில் ரதயூதபதியினால் எதிர்த்துத் தாக்கப்பட்டிருக்கிற அவர்களைக் காக்க விரும்பினவனாக உரக்கச் சிரித்துக்கொண்டு விரைவாகக் கர்ணனுடைய ரதத்தைக் குறித்துத் தன் ரதத்தோடு சென்றான். பாரதரே! பிறகு, எவ்விதத்தினாலும் நடுக்கமடையச் செய்ய முடியாதவர்களான வேறு பாஞ்சால ரதிகர்களுடைய கூட்டங்கள் சேர்ந்தன. விற்பிடித்த வீரர்களுள் சிறந்தவர்களான உத்தம ரதிகர்கள் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் போலப் பிரகாசித்துக்கொண்டு எதிர்த்து நின்றார்கள். பிறகு, அர்ஜுனன், காண்டீவத்தை உக்கிரமாக முழங்கும்படி நாணொலிசெய்து நாண் கயிற்றைக் கையுறையில் நன்றாக மோதும்படிசெய்து பாணங்களால் இருளை உடனே உண்டுபண்ணி யானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் த்வஜங்களையும் நாசஞ்செய்தான் கிரீடியானவன் நாணேற்றப்பட்டு வட்டவடிவுள்ள காண்டீவத்தோடு விருத்தியடைகின்றவனாகப் பயங்கரமான முகூர்த்தத்தில் (சத்துருக்களை) எதிர்த்துச் சென்றபொழுது, எதிரொலியானது ஆகாயத்தில் பரவிற்று; பறவைகள் மலைக்குகைகளை நோக்கி விரைந்து சென்றன. அவனை நிகரற்ற வீரனான பீமஸேனன் பின்புறத்தில் பாதுகாத்துக்கொண்டு ரதத்தோடு பின்தொடர்ந்தான். பகைவர்களோடு போர் புரிவதில் விருப்பமுள்ளவர்களான அந்த ராஜ

---

1 'ஸுஜாதன்' என்பது மூலம் 'நற்பிறப்புள்ளவன்' என்பது பொருள்.

புத்திரர்களிருவரும் கர்ணனைக் குறித்து விரைவாகத் தேரில் சென்றார்கள். அந்தச் சமயத்தில் அதிக மகிமை பொருந்திய ஸூத புத்திரன் ஸோமகர்களை நாசஞ் செய்துகொண்டு யுத்தம் செய்தான். ரதிகர்களையும் குதிரைகளையும் யானைக் கூட்டங்களையும் கொன்று பாணங்களால் திசைகளையும் மூடினான். உத்தமௌஜஸும் ஜனமேஜயனும் கோபங்கொண்டவர்களான யுதாமன்யுவும் சிகண்டியும் ஒன்று சேர்ந்து பார்ஷதனான திருஷ்டத்யும்னனோடு கூட ஸிம்மநாதஞ் செய்பவர்களாகி அம்புகளால் கர்ணனைப் பிளந்தார்கள். ஒன்று சேர்ந்தவர்களும் விகர்த்தன குமாரனான கர்ணனைக் குறித்து எதிர்த்துச் செல்லுகின்றவர்களுமான அந்த ஐந்து பாஞ்சால ரதிகர்களும், இந்திரிய விஷயங்கள் ஜிதேந்திரியனைத் தைரியத்தினின்றும் நழுவச் செய்யமாட்டாததுபோலக் கர்ணனை அந்த ரதத்தினின்று நழுவச் செய்வதற்குச் சக்தியுள்ளவர்களாகவில்லை. கர்ணன் அவர்களுடைய விற்களையும் த்வஜங்களையும் குதிரைகளையும் ஸாரதிகளையும் கொடிகளையும் பாணங்களால் விரைவாக அறுத்து அந்தப் பாஞ்சாலர்களை அம்புகளால் எதிரில் அடித்தான்; பிறகு ஸிம்மம்போல் உரக்கக் கர்ஜித்தான். '(பாணங்களை) பிரயோகிக்கின்றவனும் அவர்களை எதிர்த்து அடிக்கின்றவனும் நாண்கயிற்றையும் பாணங்களையும் கையில்கொண்டவனுமான அந்தக் கர்ணனுடைய வில்லின் சத்தத்தினால் மலைகளுடனும் மரங்களுடனும் கூடின பூமியானது அதிகமாகச் சிதறினதாகவே ஆகும்' என எண்ணி ஜனசமூகமானது துயரமடைந்தது. நன்றாக நாணேற்றப்பட்டதும் இந்திர தனுசுக்கு ஒப்பானதுமான வில்லினால் பாணங்களைப் பிரயோகிக்கின்ற அந்தக் கர்ணன் ஜ்வலிக்கின்ற கிரண ஸமூகங்களையும் சுற்றியிருக்கிற வட்டமான ரேகையையும் உடைய சூரியன்போல் யுத்தத்தில் விளங்கினான். கர்ணன் சிகண்டியைப் பன்னிரண்டு பாணங்களாலும் உத்தமௌஜஸைக் கூர்மையுள்ள ஆறு பாணங்களாலும் யுதாமன்யுவை மூன்று பாணங்களாலும் ஸோமகனையும் பார்ஷதனுடைய புத்திரனையும் மும்மூன்று பாணங்களாலும் அடித்தான். பெரியவரே! மனத்தை அடக்கினவனால் இந்திரியங்களின் விருப்பங்கள் வெல்லப்படுவது போல மஹாயுத்தத்தில் ஸூத புத்திரனால் தோல்வியடைவிக்கப்பட்ட அந்த ஐந்து மஹாரதர்களும் உத்ஸாகத்தை இழந்தவர்களாகப் பகைவரை மகிழ்விப்பவராயினர். கப்பல் உடைந்து கடலில் மூழ்குகின்ற வியாபாரிகளை ஓடங்களால் ஸமுத்திரத்திலின்று கரையேற்றி விடுவதுபோலக் கர்ணனாகிற ஸமுத்திரத்தில் முழுகுகின்ற அந்தத் தம்முடைய மாதுலர்களை திரௌபதிபுத்திரர்கள் நன்றாகச் செய்யப்பட்டிருக்கின்ற ரதங்

களால் மேலே தூக்கிவிட்டார்கள். பிறகு, சினிகளுள் உத்தமனான ஸாத்யகி கூரிய அம்புகளால் கர்ணனால் பிரயோகிக்கப்பட்ட அனேக அம்புகளை அறுத்து உருக்குமயமான கூரிய பாணங்களால் கர்ணனையும் பிளந்து உம்முடைய ஜ்யேஷ்ட குமாரனையும் எட்டுப் பாணங்களால் அடித்தான். பிறகு, கிருபரும் போஜனும் அவ்வாறே உம்முடைய குமாரனும் கர்ணனும் கூர்மையுள்ள அம்புகளால் (ஸாத்யகியை) அடித்தார்கள். யாதவர்களுள் சிறந்தவனான அந்த ஸாத்யகி திக்குப்பாலர்களோடு அஸுரராஜன் போர் புரிந்ததுபோல அந்த நான்கு வீரர்களோடும் போர் புரிந்தான். இடி விழுதலின் ஒளி போன்ற ஒளி பொருந்திய அந்த ஸாத்யகி நன்றாக நாணேற்றப்பட்டதும் சப்திக்கின்றதும் மிக்க ஒலியுள்ளதுமான வில்லினால் சரத்காலத்தில் ஆகாயத்தின் உச்சியை அடைந்திருக்கின்ற சூரியன் போல எவ்விதத்தினாலும் ஜயிக்க முடியாதவனானான். நன்கு கவசம் பூண்டவர்களும் பகைவர்களை வாட்டுபவர்களுமான பாஞ்சால மஹாரதர்கள், யுத்தத்தில் ஒன்று சேர்ந்து மீண்டும் ரதங்களில் வீற்றிருந்து, தேவகணங்கள் சத்துருக்களால் ஆபத்து விளையக்கூடிய யுத்தத்தில் இந்திரனைக் காத்ததுபோல ஸாத்யகியைக் காத்தார்கள். பிறகு, அதிக பயங்கரமானதும் ரதங்களையும் குதிரைகளையும் யானைகளையும் நாசம் செய்கிறதுமான (அந்த) யுத்தமானது, முற்காலத்தில் தேவர்களுக்கு அஸுரர்களோடு உண்டானதுபோல உம்முடைய சத்துருக்களுக்கு உம்முடைய படைவீரர்களோடு உண்டாயிற்று. நானாவித சஸ்திரங்களால் சூழப்பட்டிருக்கின்ற ரதங்களும் யானைகளும் குதிரைகளும் காலாட்களும் சுழன்றன; ஒன்றினால் ஒன்று அடிக்கப்பட்டுத் தடுமாற்றமுற்றன; விசேஷமாகச் சத்தமிட்டன; துன்பத்தையடைந்தன; அப்படியே உயிர்துறந்து கீழே விழுந்தன. அரசனுடைய இளைய ஸஹோதரனான உம்முடைய புத்திரன் பயமில்லாதவனாகப் பாணங்களை இறைத்துக்கொண்டு அவ்வித நிலைமையை அடைந்திருக்கின்ற பீமனை எதிர்த்தான். விருகோதரன் விரைவுடன் பெரிதான [1] ருருவை ஸிம்மம் எதிர்ப்பது போல அவனை எதிர்த்து வந்தான். பிறகு, உயிரைப் பந்தயம் வைத்துப் போர்ச் சூதாடுகின்ற அவ்விருவர்களுக்கும் ஒருவர்மேல் ஒருவர் கோபங்கொண்டவர்களும் அதிகப் பரபரப்புள்ளவர்களுமான சம்பரன் இந்திரன் இவ்விருவர்களுக்கும் யுத்தம் நடந்தது போல மிக்க பயங்கரமான யுத்தம் நடந்தது. பெண் யானைக்கு அருகில் மதங்கொண்ட இரண்டு பெரிய யானைகள் ஒன்றோடொன்று அடித்துக் கொள்வது போலக் கைகளால் திடமாக

---

[1] ஒரு வகைமான்

அடித்துப் பீடிக்கின்ற அவ்விருவர்களும் சரீரத்துக்குத் துன்பத்தை உண்டுபண்ணுகின்றவைகளும் நன்ருகத் தீட்டப்பட்டவைகளு மான அம்புகளால் அதிகமாக ஒருவரையொருவர் அடித்தார்கள். அப்பொழுது, ஸாரதிகளுடன் கூடின சூரர்களான அவர்கள் இருவர்களும் ஒரே ஸமயத்தில் ஒருவரையொருவர் பார்த்து, பீமன் 'ஸாரதியே! துச்சாஸனன் பக்கத்தில் போ' என்றும், துச்சா ஸனன், 'விருகோதரனை நோக்கிச் செல்' என்றும் கூறினார்கள். பற்பல ஆயுதங்களுடனும், குடைகளுடனும், கொடித் துணிகளுட னும் கூடியவைகளும் த்வஜத்துடன் கூடியவைகளுமான அவர்களு டைய அந்த இரண்டு ரதங்களும் ஸாரதிகளால் விரைவாக ஓட்டப் பட்டவைகளாக முற்காலத்தில் ஸ்வர்க்கத்தில் இந்திரன், பலன் இவ்விருவர்களுடைய ரதங்களும் யுத்தத்தில் நெருங்கியதுபோல விரைவாக நன்ருக நெருங்கி எதிர்த்தன. பீமன் (துச்சா ஸனனைப் பார்த்து), 'துச்சாஸன! பாக்கியத்தால் இப்பொழுது காணப்பட்டவனுகிருய். வட்டியுடன் முதலைக் கணப்பொழுதில் கொடுக்கிறேன். த்ரௌபதியைத் தொட்டதினுல் ஸபையில் உன் விஷயத்தில் என்னுல் எந்த விஷயம் வெகுகாலத்திற்கு முந்தி உரைக்கப்பட்டதோ, அதனை என்னிடத்தினின்று பெற்றுக்கொள்' என்ருன். பிறகு, இவ்வாறு உரைக்கக் கேட்டவனும் மஹாபல சாலியும் வீரனுமான அந்தத் துச்சாஸனன், (பீமனைப் பார்த்து), 'பீமஸேன! நான் எல்லாவற்றையும் நினைத்துக்கொண்டே இருக்கும்பொழுதே மறந்துபோகிறேன். நான் உரைப்பதைக் கேள். அரக்கு மாளிகையில் நெடுங்காலம் இராப்பகலாக அனு பவிக்கப்பட்ட துன்பத்துக்கு நானே காரணமென்று நினைக் கிறேன். மேலும், நம்பிக்கை இல்லாதவர்களும், வேட்டையாடு கின்றவர்களும், எல்லாவிடத்திலும் அவமதிக்கப்பட்டவர்களும், இரவும் பகலும் மகாபயத்தை நினைக்கின்றவர்களும், அவ்வாறே, போகங்களினின்றும் ஸுகத்தினின்றும் விடுபட்டவர்களுமாக வசித் தீர்கள். காடுகளிலும் மலைச் சந்துகளிலும் ஸஞ்சரித்துப் பாஞ் சாலராஜனுடைய பட்டணத்தில் நுழைந்தீர்கள். உங்களுள் பல்குனன் கிருஷ்ணையினுல் வரிக்கப்பட்டமையால், நீங்கள் ஒரு மாயையை அடைந்திருந்தீர்கள். மாதாவினுடைய செய்கைக்குத் தக்கபடி பாபிகளான உங்களனைவர்களாலும் ஒன்று சேர்ந்து அப்பொழுது அப்படிப்பட்ட கெட்ட காரியம் செய்யப்பட்டது. ஒருவரிடத்தினின்று ஒருவர் வெட்கமடையாதவர்களான உங்கள் ஐவர்களாலும் அந்தப் பாஞ்சாலி ஒருத்தி வரிக்கப்பட்டாள்;

மனைவியாகவும் அடையப்பட்டாள். ஸுபலனுடைய குமாரனான சகுனியினால் ஸபையில் திரௌபதியுடன் நீங்கள் அடிமையாக்கப் பட்டதை நினைக்கிறேன்' என்று கூறினான். உமது புத்திரனால் இவ்வாறு சொல்லப்பட்ட பாண்டுவின் புதல்வனான விருகோதரனே கோபத்துக்கு வசப்பட்டவனாகி உமது குமாரனுடைய வில்லையும் கொடியையும் இரண்டு க்ஷுரங்களால் வெட்டினான்; இவனுடைய நெற்றியையும் ஒரு பாணத்தினால் பிளந்தான்; ஸாரதியினுடைய தலையையும் உடலினின்றும் கவர்ந்தான். அந்த ராஜ குமாரன் வேறு வில்லை எடுத்து விருகோதரனைப் பன்னிரண்டு பாணங்களால் பிளந்து தானே குதிரைகளை நடத்திக் கொண்டு நேராகச் செல்லும் அம்புகளை அவன் மீது மறுபடியும் பொழிந்தான்.

எண்பத்தேழாவது அத்தியாயம்

(பீமன் அரசர்களுக்கெதிரில் துச்சாஸனனுடைய ரத்தத்தைப் பானம் பண்ணியது)

ராஜ புத்திரனும் உக்கிரனுமான துச்சாஸனனால் வஞ்சனையினால் பிடிக்கப்பட்ட அந்தப் பீமஸேனன், நன்றாகப் போர் புரிந்தான். ராஜபுத்திரனும் கௌரவர்களுள் வீரனும் வலிமைமிக்கவனுமான துச்சாஸனன், ஜம்பாஸுரன் உதாரமான வீரியமுள்ள இந்திரனை எதிர்த்துப் போர் புரிந்ததுபோலப் பீமஸேனனை எதிர்த்துப் போர் புரிந்தமையால், அந்த யுத்தத்தில் (ஒருவராலும்) செய்யமுடியாத காரியத்தைச் செய்தான். அவன் யுத்தத்தில் இரண்டு பாணங்களால் பீமஸேனனுடைய வில்லையும் அறுத்து ஸாரதியையும் அடித்தான்; பிறகு, சிறந்த மூப்பது பாணங்களால் சிறந்த காட்டானையை அடிப்பதுபோலப் பீமஸேனனை அடித்தான். அந்தப் பீமனோ, அப்பொழுது பெருங் காரியத்தை முடிக்கவல்ல ஒரு வில்லையெடுத்துக் கடியவேகமுள்ள சிறந்த யானையை ஈட்டிகளால் குத்துவதுபோல ஐம்பது பாணங்களால் ராஜபுத்திரனை நடுமார்பில் அடித்தான். அரசரே! பிறகு, பலவானான துச்சாஸனன், யுத்தத்தில் இந்தப் பீமனுடைய நான்கு குதிரைகளையும் கொன்று, மறுபடியுமே தேரின் ஏர்க்காலை வெட்டியெறிந்து, பீமஸேனனை ரதத்தை இழந்தவனாகச்செய்தான். மஹாத்மாவான விருகோதரன் பிறகு தேரினின்று இறங்கிப் பூமியில்

நின்றுகொண்டு கதையினால் அவனுடைய குதிரைகளை யமனுடைய வீட்டுக்கு அனுப்பி, அந்த ராஜபுத்திரனுடைய தேரினையும் நன்றாகப் பற்றி இழுத்தான். துச்சாஸனன் அந்த ரதத்தினின்று துள்ளிக்குதித்துக் கொடிய வேகமுள்ள ஒரு தோமரத்தைப் பிரயோகித்தான். அளவிடமுடியாத சக்தியுள்ள அந்தப் பீமஸேனன், அந்தத் தோமரத்தினால் மார்பிலடிக்கப்பட்டு அந்தத் துச்சாஸனனைக் குறித்து அளத்தற்கரிய ஆற்றலமைந்த கதையைப் பிரயோகித்தான். பிறகு, பீமஸேனன், உண்டுபண்ணப்பட்ட எல்லாத் துக்கங்களையும் கோபத்தினால் நினைத்தான். அந்த ராஜ புத்திரனும் அவ்வாறு உக்கிரமான பீமனுடைய பிரதிஜ்ஞையை நினைத்துநினைத்து வியஸனமடைந்தான். புருஷர்களுள் மிகச் சிறந்தவனும் சிறந்த பலமுள்ளவனுமான அந்த விருகோதரன் பதின் மூன்று வருஷகாலமாக நன்றாகச் சிந்திக்கப்பட்டிருக்கிற ரோஷத்தை அதிக வேகத்தினால் வெளியிட்டு வஜ்ராயுதத்துக்கும் இடிக்கும் ஸமமான வேகத்துடன் கூடின கதாயுதத்தை எடுத்து ரோஷத்தினால் பூமியிலடித்து, பிறகு, (ராஜபுத்திரனை) நன்றாக அடித்தான் துச்சாஸனன் அதிகமாக அடிக்கப்பட்டும் பிளக்கப் பட்டுமிருக்கிற சரீரத்துடன் பூமியில் விழுந்தான். ரணகளத்தில் ராஜபுத்திரனைக் கழுத்தில் மிதித்துக்கொண்டு சிவந்த கண்களை யுடையவனும்மிகுந்த வேகமுள்ளவனுமான பீமன் உமது புத்திரனை அந்தத் துச்சாஸனனைப்பார்த்து, 'நீ எம்மை அவமதித்துவிட்டு எதைத் தேடிக்கொண்டு மறுபடியும் இங்குவந்தாய்? அதனைச் சொல். அதிகமாக ஜ்வலிக்கின்றதும் நெடுநாளாகத் தேடப்பட்டு உள்ளதும் மிகவும் பிரகாசிக்கின்றதுமான என்னுடைய அப்படிப் பட்ட ரோஷத்தை அதிகமாக விளங்கும்படி செய்துகொண்டு, உன்னுடைய மார்பாகிற பாத்திரத்தினின்று (ரத்தமாகிற) சாராயத்தைக் குடிக்கப்போகிறேன்', என்று சொன்னான். பிறகு, அவன் துச்சாஸனனைக் கழுத்தில் மிதித்துக்கொண்டு குரூரமான காரியத்தைச் செய்ய ஆரம்பித்தான். சிறந்த வேகமுள்ள அந்தத் துச்சாஸனன் பலத்தினால் அவனை விலக்கித் தள்ளிவிட்டு விரைவாக ஓடினான். பீமன் உம்முடைய புத்ரனான துச்சாஸனனிடத்தி லுள்ள பகைமையைக் காட்டிக்கொண்டு அவனைத் தொடர்ந்து ஓடினான். பலவானான பீமன் காட்டில் ஸிம்மக்குட்டியானது ஒரு மானை அடிக்கடி துரத்துவதுபோல மஹாபலசாலியான துச்சா ஸனனை விரைவாகத் துரத்திச் சிறந்த முயற்சியினால் அவனைப் பிடித்து அவனை மேலே தூக்கித் தூக்கி எறிந்து அப்பொழுது பூமியில் விரைவாகத் தேய்த்தான். பிறகு, வீரனான பீமன் பளபளப்பான கத்தியை உறையினின்று வெளியில் உருவினான். பிறகு,

விருகோதரன் அந்தத் துச்சாஸனனைக் கீழே தள்ளி திசைகளை ஒலியிடும்படி செய்துகொண்டு ஸந்தோஷத்தினால் கர்ஜித்தான். அஜமீடனுடைய வம்சத்தில் உதித்தவரே! அந்த நாதத்தினால் பக்கத்திலிருந்தவர்கள் அனைவர்களும் மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தார்கள். அரசரே! மகாபாகுபலமுள்ளவனும் நினைக்கத் தகாத செய்கைகளையுடையவனுமான பீமஸேனன், அந்த ரண களத்தில் துச்சாஸனனைப் பார்த்து, தேவியினுடைய தலைமயிரைப் பிடித்ததையும் ரஜஸ்வலையாயிருந்த அந்தத் தேவியின் துகிலுரிந்ததையும் நினைத்து, குற்றமற்றவளும் பர்த்தாக்களால் அனாதரிக்கப் பட்டவளுமான அந்தத் திரௌபதிக்குக் கொடுக்கப்பட்ட துக்கங் களையும் நன்றாக நினைத்து, நெய்யினால் ஹோமம் செய்யப்பட்ட அக்னிபோலக் கோபத்தினால் ஜ்வலித்தான். அப்பொழுது, அவன் கர்ணனையும் துரியோதனனையும் கிருபரையும் அஸ்வத்தாமாவை யும் கிருதவர்மாவையும் பார்த்து, 'ஓ! போர்வீரர்களே! இப் பொழுது பாவியான துச்சாஸனனைக் கொல்லுகிறேன். இப் பொழுது எல்லாரும் ரக்ஷியுங்கள்' என்றான். 'துரோணபுத்திரர் கிருதவர்மா இவர்களையும் கொல்லுகிறேன்' என்றும் கூறினான். அதிக பலமும் வேகமுமுள்ள விருகோதரன் இவ்வாறு சொல்லி விட்டு (துச்சாஸனனைக்) கொல்லவேண்டுமென்கிற எண்ண முள்ளவனாக விரைவாக அவனை எதிர்த்து ஓடினான். நிகரற்ற வீரனான விருகோதரன் ஸிம்மமானது பெரிய யானையைப் பாய்ந்து பிடிப்பது போல் யுத்தத்தில் அதிகமாகப் பாய்ந்து துரியோதன னுக்கும் கர்ணனுக்கும் எதிரில் துச்சாஸனனைப் பிடித்து, தீட்டப்பட்டதும் கூரிய நுனியை உடையதுமான கத்தியை மேலே எடுத்து, நடுங்குகின்ற துச்சாஸனனைக் கழுத்தில் காலால் மிதித்துக்கொண்டு, 'கெட்ட எண்ணமுள்ளவனே! ஸந்தோஷமுள்ளவனாகக் கர்ணனுடனும் துரியோதனனுடனும் சேர்ந்து (பாஞ்சாலியைப் பார்த்து) 'பசு' என்று எந்த வார்த் தையைச் சொன்னாயோ அதனையும் ராஜஸூய யாகத்தினுடைய அவப்ருதத்தில் பரிசுத்தமான திரௌபதியினுடைய கூந்தல்கள் எந்தக் கையினால் பற்றி இழுக்கப்பட்டனவோ அதனையும் சொல். பீமஸேனன் உன்னை வினவுகிறான்' என்று கூறினான். துச்சா ஸனன், மிக்க பயங்கரமான அந்தப் பீமனுடைய வசனத்தைக் கேட்டு அவனைப் பார்த்து அப்பொழுது கௌரவர்களும் ஸோமகர் களும் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதே கர்வத்தினால் பயங்கர மாக ஜ்வலித்துக்கொண்டு கண்களைப் புரட்டி விழித்து அவ்வாறு கோபத்துடன் பீமனை நோக்கி, 'யானையின் துதிக்கைக்கு

ஒப்பானதும் பருத்த கொங்கைகளை மர்த்திக்கின்றதும் ஆயிரம் பசுக்களைக் கொடுத்ததும் க்ஷத்திரியர்களுக்கு நாசத்தை உண்டு பண்ணுகிறதுமான கை இதுதான். பீம! கௌரவர்களுள் தலைவர்களும் நீங்களும் ஸபையின்கண் வீற்றிருந்து பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே என்னுடைய இந்தக் கையினால்தான் திரௌபதியினுடைய கூந்தல்கள் பற்றி இழுக்கப்பட்டன' என்று இவ்விதமான வசனத்தை யுத்தத்தில் உரைத்தான். இவ்வாறு சொல்லுகின்ற ராஜபுத்திரனுடைய வசனத்தைக் கேட்டு, அந்தப் பீமன், யுத்தத்தில் அவனுடைய மார்பை நன்றாக மிதித்துப் பலத்தினால் இரு கைகளாலும் அவனைத் தூக்கிக்கொண்டு எல்லாப் போர் வீரர்களையும் பார்த்து உரக்க ஸிம்மநாதஞ் செய்துகொண்டு, 'இவன் இப்பொழுது இரு கைகளையும் இழந்தவனாகப் போகிறான். பலமுள்ளவன் ரக்ஷிக்கட்டும்' என்று சொன்னான். இவ்வாறு, கோபமுள்ளவனும் மஹாபலசாலியும் மஹாத்மாவுமான பீமஸேனன், பலத்தினால் யுத்தவீரர்களை அவமதித்து, உயிரை இழக்கப்போகிற துச்சாஸனனுடைய கையைக் கையினால் ஒடித்தான். அந்தப் பீமன் வீரர்களுடைய மத்தியில் வஜ்ராயுதத்துக்கும் இடிக்கும் ஒப்பான அந்தக் கையினால் துச்சாஸனனைக் கொன்றான். பீமன், துடிக்கின்ற துச்சாஸனனைக் கழுத்தில் மிதித்துக்கொண்டு அப்பொழுது காலனுக்கும் அந்தகனுக்கும் ஸமமானதும் மிக்க பயங்கரமாயிருப்பதும் சிறந்ததுமான உருவத்தைத் தரித்து, மஹாரதனும் சத்துருக்களை அடக்கி ஆள்பவனும் பூமியில் விழுந்திருப்பவனுமான அந்தத் துச்சாஸனனுடைய மார்பைப் பிளந்து, ஈரலை எடுத்துப் பிறகு சிறிது உஷ்ணமாக இருக்கிற அவனுடைய ரத்தத்தைச் சுவைத்துச் சுவைத்து நாற்புறமும் பார்த்துக்கொண்டே பானம்செய்தான். கோபமுள்ளவனும் மிக்க ஸந்தோஷமுள்ளவனுமான பீமன், 'இப்பொழுது இந்தச் சத்ருவின் இரத்தத்தினுடைய சுவையானது தாய்ப்பால், அமிருதம், தேன், ரஸம், மதுபானம், யவகபானம், பால், தயிர், சிறந்தமோர், மனோஹரமான கருப்பஞ்சாறு இவைகள் எல்லாவற்றையும்விட அதிக ருசியுள்ளதென்பது என்னுடைய எண்ணம்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லுகின்றவனும் மறுபடியும் எழுந்திருந்தவனும் தோள்களைத் தட்டிக்கொண்டு கூத்தாடுகின்றவனும் மிக்க மனக்களிப்புற்றவனுமான பீமஸேனனை எவர்கள் அப்பொழுது பார்த்தார்களோ அவர்களும் மிக்க துன்பமுற்றுக் கீழே விழுந்தார்கள். எந்த மனிதர்கள் விழவில்லையோ அவர்களின் கைகளிலிருந்து சஸ்திரம் கீழே விழுந்தது. அந்த

ரணகளத்தில் அப்பொழுது மனிதர்கள் பயத்தினால் விகாரமான குரலுடன் அலறினார்கள். கண்களை மூடிக்கொண்டு மூர்ச்சையையும் அடைந்தார்கள். அந்த யுத்தகளத்தில் துச்சாஸனனுடைய ரத்தத்தைப் பானம்பண்ணுகிற பீமனை அணுகிப் பார்த்தவர்களனைவரும் 'இவன் மனுஷ்யனல்லன்' என்று சொல்லிக்கொண்டு பயத்தினால் மூடப்பட்டவர்களாக ஓடினார்கள்.

எண்பத்தெட்டாவது அத்தியாயம்

(பீமன் தன்னை எதிர்த்த துச்சாஸனன் தம்பியரையும் கொன்றதும், கர்ணன் அச்சமடையச் சல்யன் தேற்றியதும், ஸங்குல யுத்தமும்)

பாரதரே! அந்த விருகோதரன் அந்தத் துச்சாஸனனுடைய உதிரத்தைப் பானம்பண்ணி அவனுடைய இருகால்களையும் பிடித்துக் கூத்தாடிக்கொண்டு பின்வருமாறான வசனத்தை உரக்கச் சொல்லலானான்: 'இதோ உன்னுடைய இரத்தத்தை ராக்ஷஸன்போல நன்கு உறிஞ்சப்போகிறேன். நீ மிக்க கோபங் கொண்டு மீண்டும், 'பசு, பசு' என்று இப்பொழுது சொல். எவர்கள் அப்பொழுது எங்களை நோக்கி, 'பசு, பசு' என்று சொல்லிக் கொண்டு கூத்தாடினார்களோ அவர்களைக் குறித்து நாம் மறுபடியும் 'பசு, பசு' என்று சொல்லிக்கொண்டு எதிர்க் கூத்தாடுகிறோம். புத்திரர்களுடன் கூடின திருதராஷ்டிரனுடைய தீமையினால் பிரமாணகோடியில் படுத்திருக்கும் ஸமயத்தில் காலகூட விஷத்தைப் புஜித்தது, கொடிய பாம்புகளால் கடிபட்டது, அரக்கு மாளிகையில் எரிக்கப்பட்டது, சூதாட்டத்தினால் அனேக தோஷங்களை அனுபவித்தது, காற்றிலும் நெருப்பிலும் பர்ண சாலைகளிலும் அரண்யத்தில் வசித்தது, யுத்தத்தில் அம்புகளையும் அஸ்திரங்களையும் தரித்தது ஆகிய இவ்விதமான துக்கங்களையே நாங்கள் எப்பொழுதும் அறிகிறோம். ஒரு ஸமயத்திலாவது ஸுகங்களை நாங்கள் அறியோம்' என்று கூறினான். மஹாராஜரே! விருகோதரன் இப்படிப்பட்ட வசனத்தை உரக்கச் சொல்லி, ஜயத்தை அடைந்து, மறுபடியுமே உமது சேனையை எதிர்த்து ஓடினான். பிறகு, மஹாபலசாலியும் கதையைக் கையில் பிடித்தவனுமான பீமன் இரத்தத்தினால் கைகள் நனைந்தவனாக முடிவுக் காலத்தில் காலன்போல உமது புத்திரனுடைய சேனையை விசேஷமாகப் பயமடையச் செய்துகொண்டு உமது சேனையைக் குறித்து இங்குமங்குமாக ஓடினான். பாரதரே! பிறகு

கோபத்தினால் பிரகாசிக்கின்ற அவன் யுத்தமத்தியில் துச்சாஸனனுடைய இரத்தத்தைக் குடித்ததனால் மிக்க கோரமான கௌரவர்களுடைய யுத்தகளமானது ஒரு க்ஷணத்திற்குள் சூன்யமாயிற்று. அரசரே! பலத்தினால் மேலான ஸிம்மமானது புள்ளிமானைக் கொல்வது போல, மதத்தினால் மிக்கவனான அந்தப் பீமன், யுத்தத்தில் மஹா பலசாலியான துச்சாஸனனைக் கொன்று விருப்பம் நிறைவேறியவனானான். மகாராஜரே! பகைவர்களைத் தவிக்கச் செய்பவனும் இரத்தத்தினால் நனைந்தவனுமான பீமஸேனன் பூத்த பலாச விருக்ஷம் போல் இரத்தத்தினால் மிக்க சிவப்பாக விளங்கினான். அரசரே! குருதியினால் நனைக்கப்பட்டவனும் கோரமான வேஷத்துடன் கூடியவனும் குரோதமுள்ளவனுமான பீமன், (துச்சாஸனனைப் பார்த்து), 'பாபபுத்தியுள்ளவனே! கொலைகார! இப்பொழுது சொல். கீழே விழுந்திருக்கிறாய். துச்சாஸனன் விஷயத்தில் எவ்விதமான பிரதிஜ்ஞை எம்மால் செய்யப்பட்டதோ அது முழுதுமே பாண்டவர்களாகிய எம்மால் அடையப்பட்டது. இந்த இடத்திலேயே யஜ்ஞபசுவான துரியோதனனைக் கொன்று இரண்டாவதான மற்றொரு பிரதிஜ்ஞையையும் அடையப் போகிறேன். நான் கௌரவர்களுக்கு முன்னிலையில் இவனுடைய தலையை நொறுக்கி மீண்டும் சாந்தியை அடையப்போகிறேன். பதிகளை இழந்திருந்த அந்தப் பாஞ்சாலியானவள் பதிகளை அடைந்தவளானாள். பதிகளுள்ளவர்களாயிருந்த கௌரவ ஸ்திரீகள் பதிகளை இழந்தவர்களானார்கள். உலகத்திலுள்ள பற்பல விதமான ஆச்சரியத்தைப் பாருங்கள். எவர்கள், எள்ளாக இருந்தார்களோ அவர்கள் பதரானார்கள். ஜயஸித்தியைப் பெற்றவர்களான அந்தச் சத்துருக்களே நாசத்தை அடைந்தார்களானால் ஜீவலோகத்தில் மிக்க ஆச்சரியமான விஷயம் எது இருக்கிறது?' என்று கூறினான். மிக்க மனக்களிப்புற்றவனும் உதிரத்தினால் நனைந்த முகமுள்ளவனும் அதிக பலசாலியும் மஹாத்மாவுமான பீமன் இவ்வளவு மாத்திரம் வார்த்தை சொல்லிவிட்டு உரக்க ஸிம்மநாதஞ் செய்தான்; விருத்திரனைக் கொன்று ஆயிரங்கண்ணனை இந்திரன் கூத்தாடியதுபோலக் கூத்தாடினான். கூத்தாடுகிறவனும் மிக்க வீரியமுள்ளவனுமான பீமனைப் பிரஜைகளுடைய முடிவுக்காலத்தில் (ஸம்ஹரிக்கின்ற) காலனைப்போலக் கண்டு கர்ணனை மஹாபயம் வந்தடைந்தது. உமது குமாரர்கள் ஜயத்தில் ஆசையற்றவர்களானார்கள். அரசரே! துச்சாஸனன் கொல்லப்பட்டவுடன், மஹாரதர்களும் வீரர்களும் மஹாபலசாலிகளும் மஹா வீரியமுள்ளவர்களுமான அந்த உம்முடைய குமாரர்கள்

மிக்க கோபமாகிற விஷத்தைத் தரித்தவர்களாகப் பீமனை அம்பு களால் நன்றாக மூடினார்கள். நிஷங்கீ, கவசீ, கட்கி, தண்டதாரன், தனுர்த்தரன், அலம்பு, ஜலஸந்தன், வாதவேகன், ஸுவர்ச்சஸ் இவர்கள் ஒன்றுகூடினவர்களாகவும் ப்ராதாவினுடைய துயரத் தினால் பீடிக்கப்பட்டவர்களாகவும் மிக்க புஜபலமுள்ள பீமஸேனனை விரைவாகப் பீடித்தார்கள். நான்கு பக்கத்திலும் அந்த மஹாரதர்களால் அம்புகளால் பீடிக்கப்படுகின்ற அந்தப் பீமன் கோபத்தினால் கண்கள் நன்கு சிவந்து கோபத்துடன்கூடின காலன்போல விளங்கினான். அரசரே! பிறகு, பகைவர்களைத் தவிக்கச்செய்கிறவர்களும் துச்சாஸனனுடைய இளைய ஸஹோதரர் களுமான உம்முடைய ஒன்பது குமாரர்களால் விருகோதரன் சூழப்பட்டான். பாரதரே! பிருதாபுத்திரனான பீமன் ஸ்வர்ண மயமான தோள்வளைகளுடன் கூடின அந்த ஒன்பது வீரர்களையும் பொற்புங்கமுள்ளவைகளும் மிக்க வேகமுள்ளவைகளுமான ஒன்பது பல்லங்களால் யமலோகத்துக்கு அனுப்பினான். உமது புத்திரர்கள் கொல்லப்பட்டவுடன், பீமனிடத்தினின்று உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்ட அந்தச் சேனையானது ஸூதபுத்திரன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ஓடிவிட்டது. மஹாராஜரே! பிறகு, பிரஜைகளிடத்தில் யமனுடைய பராக்கிரமத்தைப் போன்ற பீமனுடைய பராக்கிரமத்தைக்கண்டு கர்ணனைப் பெரும் பயம் வந்தடைந்தது. அவனுடைய வடிவத்தையும் மனோபாவத் தையும் அறிந்தவனும் யுத்தத்தில் வல்லமை பொருந்தியவனுமான சல்யன் அப்பொழுது கர்ணனைப் பார்த்து ஸமயோசிதமாகவும் ஹிதமாகவுமிருக்கிற வசனத்தை உரைத்தான்.

'ராதாநந்தன! நீ வியஸனமடையாதே. இம்மாதிரி இருப்பது உன்னிடத்தில் பொருந்தாது. இந்த அரசர்கள் பீமஸேனனிடத்தி லிருந்து உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாக ஓடுகின் றார்கள். துரியோதனனும் ப்ராதாவினது துயரத்தினால் பீடிக்கப் பட்டு மதிமயங்கியிருக்கிறான். மஹாபலசாலியான பீமனால் துச்சாஸனனுடைய உதிரமானது குடிக்கப்படுங்கால், துரியோ தனன் மனநிலை தவறினவனாகவும் சோகத்தினால் விரைந்து அறிவு போக்கப்பட்டவனாகவும் இருக்கிறான். கர்ண! கிருபரைத் தலைவராக உடையவர்களும் கொல்லப்பட்டவர்கள் போக மிகுந் திருக்கின்றவர்களும் மஹாரதர்களுமான இந்த (த்துரியோதன னுடைய) ஸஹோதரர்கள் நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டு உன்னையே உபாஸிக்கின்றார்கள். அஸ்திரங்களில் நல்ல தேர்ச்சி யுடையவர்களும் தனஞ்சயனை முதன்மையாகக் கொண்டவர்

களும் சூரர்களுமான பாண்டவர்கள் யுத்தத்தின் பொருட்டு உன்னையே எதிர்பார்த்துக்கொண்டு அணுகி விட்டார்கள். புருஷஸ்ரேஷ்டனே! சிறந்த ஆண்மையில் நிலை பெற்றவனான அப்படிப்பட்ட நீ க்ஷத்திரிய தர்மத்தை முன்னிட்டுத் தனஞ்சயனை எதிர்த்துச் செல். தார்த்தராஷ்டிரனால் எல்லாப் பாரமும் உன்னிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதன்றோ? மஹா பாஹுபலமுள்ளவனே! சக்திக்கும் பலத்துக்கும் தக்கபடி அந்தப் பாரத்தைச் சுமப்பாயாக ஜயித்தால் பெரிதான கீர்த்தி உண்டாகிறது. அபஜயமுண்டாகுமானால் ஸ்வர்க்கம் நிச்சயம். ராதாபுத்திர! நீ மதிமயக்கத்தை அடையவே, உன்னுடைய குமாரனான விருஷஸேனன் மிக்க கோபங்கொண்டு பாண்டவர்களை எதிர்த்து ஓடுகிறான்' என்று சொன்னான். கர்ணன், அளவுகடந்த தேஜஸுள்ள சல்யனுடைய இந்த வார்த்தையைக் கேட்டு, மனத்தில் போருக்காக உறுதி கொண்டவர்களின் தன்மையை அடைந்து (யுத்தத்திற்காக) நின்றான். பிறகு, கோபமுள்ளவனான விருஷஸேனன், எதிர்த்து வருகின்றவனும் சத்துருக்களை ஸஹிப்பவனும் அம்புகளை இறைக்கின்றவனும் [1] கோர ரூபத்துடன் வாயைத் திறந்துகொண்டு வருகின்ற யமன் போன்றவனுமான பீமனை எதிர்த்துச் சென்றான். நகுலன், யுத்தத்தில் நல்ல உத்ஸாஹமுள்ளவனும் சிறந்த வீரனும் சத்துருவுமான அந்தக் கர்ணபுத்திரனைத் தூரத்திலிருந்தே அம்புகளால் மிகத் துன்புறுத்திக்கொண்டு, ஜயசீலனான இந்திரன் கொல்ல எண்ணங்கொண்டு ஜம்பனை எதிர்த்தது போல எதிர்த்து விரைவாகச் சென்றான். பிறகு, நகுலன் தைரியத்துடன் ஒரு க்ஷுரத்தினால் கர்ணபுத்திரனுடைய ஸ்படிகத்தினாலும் ஸ்வர்ணத்தினாலும் சித்திர வேலை செய்யப்பட்ட த்வஜத்தையும் வெட்டி ஸ்வர்ணத்தினால் விசித்திரமாகக் கட்டப்பட்டதும் ஆச்சரியகரமாயிருப்பதுமான வில்லையும் ஒரு பல்லத்தால் துண்டாக்கினான். பிறகு, அந்தக் கர்ணபுத்திரன் சீக்கிரமாக வேறு வில்லை எடுத்துக்கொண்டு பாண்டவனை எதிர்த்தடித்தான். அப்பொழுது, கர்ணபுத்திரன் அஸ்திரவித்தையில் நல்ல தேர்ச்சியுள்ள அந்த நகுலன் மீது திவ்யாஸ்திரங்களைப் பொழிந்தான். பிறகு, கோபங்கொண்ட நகுலன் பெரிய கொள்ளிகள் போன்ற பாணங்களால் கர்ணபுத்திரனை ஹிம்ஸித்தான். அரசரே! அந்தக் கர்ணபுத்திரன் நகுலனுடைய எல்லா அஸ்திரங்களையும் உத்தமமான அஸ்திரங்களால் தடுத்தான். பரதர்களுள் சிறந்த வீரரே! அப்பொழுது, கர்ணபுத்திரனுக்கும் பாண்டவனுக்கும்

[1] ஒரு சொல் விடப்பட்டது.

அதிகோரமான யுத்தம் நேர்ந்தது. வீரனான கர்ணபுத்திரன், யுத்தரங்கத்தில், வனாயுதேசத்தில் தோன்றியவைகளும் ஸுகுமார மாயிருக்கின்றவைகளும் அதிக வெண்ணிறமுள்ளவைகளும் ஸுவர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டவைகளும் ஆச்சரியகரமாக இருப்பவைகளுமான நகுலனுடைய குதிரைகளைக் கொன்றான். பிறகு, நகுலன் குதிரைகள் கொல்லப்பட்ட ரதத்தினின்று இறங்கி மயில் பிரதிமைகளால் சித்திரிக்கப்பட்ட அழகிய கேடகத்தையும் ஆகாயத்துக்கு ஒப்பான கத்தியையும் கையில் எடுத்துக்கொண்டு பிரகாசிக்கின்றவனாகப் பக்ஷிபோல ஸஞ்சரித்தான். பிறகு, சுறுசுறுப்பாகக் காரியங்களைச் செய்யுந்தன்மையுள்ள நகுலன் கர்ணபுத்திரனைச் சார்ந்த இரண்டாயிரம் வீரர்களை யமனுடைய வீட்டுக்கு அனுப்பினான். அவர்கள் கத்தியினால் வெட்டப்பட்டவர்களாக அசுவமேதத்தில் [1] சமிதாவினால் கொல்லப்படுகிற பசுக்கள் போலக் கீழே விழுந்தார்கள். வெற்றியை விரும்பிய நகுலன் ஒருவனால் துரத்தப்பட்டவர்களும் [2] சிறந்த சந்தனம் பூசின அங்கங்களை உடையவர்களும் யுத்தத்தில் ஸமர்த்தர்களும் பற்பல தேசங்களில் தோன்றினவர்களும் (நமக்கு) ஸுஹ்ருத்துக்களும் ஸத்தியஸந்தர்களுமான வீரர்கள் ஆங்காங்கு ஜயிக்கப்பட்டார்கள். பூமியில் ஸஞ்சரிக்கின்ற நகுலனை ரதிகர்களுடைய கூட்டங்கள் நாற்புறத்திலும் பாணங்களால் எதிர்த்து அடித்தன. அம்புகளால் துன்புறுத்தப்படுகின்ற அந்த நகுலன் யுத்தத்தில் பகைவர்களைக் கொன்றுகொண்டு ஸஞ்சரித்தான். யுத்தத்தில் ஸஞ்சரிப்பவனும் மனிதர்களையும் குதிரைகளையும் யானைகளையும் ரத வீரர்களையும் கொல்லுகின்றவனுமான அந்த நகுலனைக் கர்ணபுத்திரனும் பதினெட்டுப் பாணங்களால் அடித்தான். அடிக்கப்பட்ட அந்த வீரன் கோபங்கொண்டான். பிறகு, பாண்டு நந்தனன், நரவீரனான கர்ணபுத்திரனைக் கொல்ல எண்ணங்கொண்டவனாக யுத்தத்தில் எதிர்த்து ஓடினான். ஸூதபுத்திரன், மகாயுத்தத்தில் ஆயிரம் பாரம் நிறையுள்ள அந்த நகுலனுடைய கவசத்தைப் பாணங்களால் உடைத்தான். பிறகு, சத்துருவேகத்தை ஸஹிக்கிறவனான கர்ணபுத்திரன், வெண்கலமாயிருப்பதும் நன்றாகத் தீட்டப்பட்டதும் நன்கு துவைந்ததும் பெரிதான பாரத்தை ஸஹிக்கின்றதும் பகைவர்களுடைய சரீரத்தைக் கவர்கின்றதும் அதிக கோரமானதும் ஸர்ப்பம்போன்றதும் உறையினின்று வெளியில் உருவப்பட்டதும் வீசப்படுகின்றதுமான அந்த

1 யாகபசுவைக் கொல்லுகிறவன்; உத்தியோகபர்வம் 468-ஆம் பக்கம் குறிப்பிலும், ஸௌப்திகபர்வம், 32-ஆம் பக்கம் குறிப்பிலும் காண்க.

2 வேறுபாடம்

நகுலனுடைய சிறந்த கத்தியைத் தீட்டப்பட்ட நல்ல நுனியுள்ள ஆறு பாணங்களால் விரைவாக அறுத்தான். மறுபடியும், கூர்மையுள்ள பாணங்களால் பார்த்தனை நடுமார்பில் விரைவாக அதிகமாக அடித்தான். அவன் பீமஸேனனுடைய ரதத்தையும் நாடி மிக்க கோரமான சரமாரியையும் பொழிந்தான். பிறகு, நகுலன் வில்லும் கத்தியும் அறுக்கப்பட்டவனும், ரதத்தை இழந்தவனும், பகைவர்களால் பீடிக்கப்பட்டவனும், கர்ணபுத்திரனுடைய அஸ்திரங்களில் மூழ்கினவனுமாயிருப்பதை அறிந்து, உத்தம புருஷர்களால் ஏவப்பட்டவர்களும் ஸாத்யகியை ஆறுமவனாகக் கொண்டவர்களுமான சிறந்த ஐந்து துருபத ராஜகுமாரர்களும் சத்துருக்களுடைய வேகத்தை ஸஹிக்கிறவர்களான ஐந்து த்ரௌபதீபுத்திரர்களும், காற்றினால் அசைக்கப்பட்ட கொடித்துணிகளையுடையவர்களும் மனக்களிப்புள்ளவர்களும் துள்ளுகின்ற குதிரைகளுடன் கூடியவர்களுமாகி, உம்மைச் சேர்ந்த யானைகளையும் ரதங்களையும் மனிதர்களையும் குதிரைகளையும் நாசஞ்செய்துகொண்டு, ஆயுதங்களுடன் கூடினவர்களும் மகிமையுடையவர்களுமான பதினொரு ருத்திரர்கள்போல ரதங்களோடு சீக்கிரமாகச் சென்றார்கள். பிறகு, உம்முடைய ரதிகர்களுள் சிறந்தவர்களான கிருபர், கிருதவர்மா, அச்வத்தாமா, துரியோதனன், சகுனி, சுகன், விருகன், க்ராதன், தேவாவ்ருதன் இவர்கள் விரைவுள்ளவர்களாக, யானைபோலவும் மேகம்போலவும் கர்ஜிக்கின்ற ரதங்களோடும் விற்களோடும் அவர்களை எதிர்த்துச் சென்றார்கள். பிறகு, உம்மைச் சேர்ந்த ரதிகச்ரேஷ்டர்கள் அந்தப் பதினொரு வீரர்களையும் வஜ்ராயுதம்போன்ற பாணங்களால் அடித்துக்கொண்டு தடுத்தார்கள். குணிந்தர்கள் புதிய மேகத்துக்கு ஸமமான நிறமுள்ளவைகளும், மலைகளின் சிகரங்களுக்கு ஒப்பானவைகளும், பயங்கரமான வேகமுள்ளவைகளுமான யானைகளால் அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள்.

எண்பத்தொன்பதாவது அத்தியாயம்

(ஸங்குல யுத்தம்)

நன்கு பழக்கப்பட்டவைகளும், இமயமலையில் தோன்றியவைகளும், மிக்க மதங்கொண்டவைகளும், யுத்தம்பண்ணுவதில் விருப்பமுற்ற ஸமர்த்தர்களால் ஏறப்பட்டிருப்பவைகளும், பொன் விரிப்புக்கள் மேலே விரிக்கப்பட்டிருப்பவைகளுமான யானைகள், ஆகாயத்தில் மின்னலுடன் கூடின மேகங்கள் விளங்குவதுபோல விளங்கின. குணிந்தனுடைய புத்திரன், பெரியவையும் உருக்கினால்

செய்தவையுமான பத்துப்பாணங்களால் குதிரைகளோடும் ஸாரதி யுடனும் கூடின இருபரை அதிகமாகத் துன்பமடையும்படி செய்தான். பிறகு, அவன் இருபருடைய பாணங்களால் அடிக்கப் பட்டு யானையோடு கூடவே பூமியில் விழுந்தான். குணிந்த புத்திர னுடைய இளைய ஸஹோதரனே சூரியனுடைய கிரணங்கள் போன்றவைகளும், உருக்குமயமாயிருப்பவைகளுமான தோமரங் களால் போஜனை கிருதவர்மாவினுடைய குதிரைகளைக் கொன்றான். பிறகு கிருதவர்மாவினுடைய குதிரைகள் கொல்லப் பட்டு க்ஷணத்தில் விழுந்தன. பிறகு, எல்லா ஆயுதங்களுமுள்ள போர்வீரர்களோடும் கொடிகளோடுங்கூடின வேறு மூன்று பெரிய யானைகள் த்ரோணபுத்திரரால் அடிக்கப்பட்டவைகளாகப் பிரஜ் ஞையை இழந்து உயிர் துறந்து, வஜ்ரத்தினால் பிளக்கப்பட்ட பெரு மலைகள்போலப் பூமியில் விழுந்தன. குணிந்த ராஜனுடைய இளைய ஸஹோதரனை அடுத்துப் பிறந்திருப்பவன் உமதுடைய புத்திரனைச் சிறந்த பாணங்களால் நடுமார்பில் அடித்தான். உமது குமாரன் கூர்மையுள்ள பாணங்களால் அவனுடைய சரீரத்தை யும் அந்த யானையையும் அடித்தான். அந்தச் சிறந்த யானையானது மாரிக்காலத்தில் மஹேந்திரனுடைய வஜ்ரத்தினால் அடிக்கப்பட்ட தாதுபர்வதமானது ஜலத்தைக் கக்குவதுபோல நாற்புறங்களிலும் ரத்தத்தை மிகுதியாகப் பெருக்கிக்கொண்டு ராஜபுத்திரனுடன் விழுந்தது. புத்திரனால் ஏவப்பட்ட வேறொரு யானையானது, ஸாரதியோடும் குதிரைகளோடும் ரதத்துடனும்கூடின க்ராதனை மிகவும் அடித்தது. பிறகு, அது, க்ராதனுடைய பாணங்களால் எதிர்த்தடிக்கப்பட்டுத் தன் மீதுள்ள வீரனோடு வஜ்ராயுதத்தினால் அடிக்கப்பட்ட மலைபோல் விழுந்தது. பிறரால் வெல்லமுடியாத வீரனை க்ராதராஜன், யானையின் மீதிருக்கின்ற மலைநாட்டில் தோன்றின வீரனால் அம்புகளால் அடிக்கப்பட்டவனாக, குதிரை களோடும் ஸாரதியோடும் விற்களோடும் கொடிகளோடும், பெருங்காற்றினால் முறிக்கப்பட்ட பெரிய மரம்போலக் கீழே விழுந்தான். விருகன், யானையின்மீதிருக்கின்றவனும், சிறந்த மலையில் வஸிக்கின்றவனுமான வீரனைப் பன்னிரண்டு பாணங்க ளால் நன்றாகப் பிளந்தான். பிறகு, மஹாகஜமானது குதிரை களுடனும் ரதத்துடனுங்கூடின விருகனை நான்கு கால்களாலும் விரைவாகத் தாக்கியது. சிறந்த யானையினால் தாக்கப்பட்ட வனும் வீரியமுள்ளவனுமான அந்த விருகன் பன்னிரண்டு பாணங்களால் அதனைப் பிளந்தான். விருகனால் பாணங் களால் அடிக்கப்பட்ட அந்த யானையானது பப்ருவி னுடைய குமாரனோடு பூமியில் விழுந்தது. அப்பொழுது,

குணிந்தராஜனுடைய வேறு ஒரு குமாரன் போர்புரிந்தான். அந்தச் சூரனும் ஸுபலனுடைய குமாரனுன சகுனியினுல் பாணங்களால் விரைவாக அடிக்கப்பட்டுக் கீழே விழுந்தான். குணிந்தபுத்திரன் கொம்புகளாலும் வாலினுலும் பின் சரீரத்தினுலும் எதிரிகளை வீழ்த்துகின்ற யானையினுல் சகுனியினுடைய குதிரைகளை யுத்தத்தில் யமனுடைய வீட்டுக்கு அனுப்பினுன்; ரதத்தையும் கலகலக்கச்செய்து ஸிம்மநாதம் செய்தான். பிறகு, கர்ஜிக்கின்ற அவனுடைய தலையைக் காந்தாராதிபதியான சகுனி அறுத்தான். பிறகு, அந்தக் குணிந்தர்கள் சென்றுவிடவே, உம்மைச்சேர்ந்த அந்த மகாரதர்கள் மிக்க மனக் களிப்புள்ளவர்களாக ஸமுத்திரத்தினின்று உண்டான சிறந்த சங்கங்களை ஊதினுர்கள்; விற்களைக் கையில்கொண்டவர்களாக எதிர்த்தும் சென்றுர்கள். கௌரவர்களுக்குப் பாண்டவர்களோடும் ஸ்ருஞ்சயர்களோடும் பாணங்களாலும் கத்திகளாலும் சக்திகளாலும் ரிஷ்டிகளாலும் கதைகளாலும் கோடரிகளாலும் மனிதர்கள் குதிரைகள் யானைகள் இவற்றின் உயிரை வாங்குகின்றதும் மிக்க ஸங்குலமானதும் அதிக பயங்கரமாயிருப்பதுமான அப்படிப்பட்ட யுத்தமானது திரும்பவும் நடந்தது. பிறகு, ரதங்களும் குதிரைகளும் யானைகளும் காலாட்களும் ஒன்றினுல் ஒன்று அடிக்கப்பட்டுத் திக்குக்களினின்று உண்டான உக்கிரமான காற்றுக்களால் மின்னலுடன் கூடின மேகங்கள்போலப் பூமியில் விழுந்தார்கள். பிறகு, சதானீகனுல் அடிக்கப்பட்ட பெரிய யானைகளும் குதிரைகளும் ரதங்களும் உம்முடைய காலாட்களுடைய கூட்டங்களும் கருடனுடைய காற்றினுல் நன்றுக அடிக்கப்பட்ட ஸர்ப்பங்கள்போலப் பரவசமாகப் பூமியை அடைந்து பொடி செய்யப்பட்டன. பிறகு, அந்த விந்தனுடைய குமாரன் சிரித்துக்கொண்டு நகுலகுமாரனைக் கூர்மையுள்ள அனேக பாணங்களால் அடித்தான். பிறகு, நகுலகுமாரன் கோபத்தினுல் தாமரை மலர்போன்ற முகத்துடன் கூடின விந்தபுத்திரனுடைய தலையை க்ஷுரத்தினுல் அறுத்தான். பிறகு, கர்ணபுத்திரன் சதானீகனை உருக்குமயமான மூன்று பாணங்களாலும் அர்ஜுனனை மூன்று பாணங்களாலும் பீமனையும் நகுலனையும் மூன்று பாணங்களாலும் ஏழு பாணங்களாலும் ஜனுர்த்தனரைப் பன்னிரண்டு பாணங்களாலும் அடித்தான். மனித இயற்கைக்கு மேற்பட்ட செய்கையுள்ள கர்ணபுத்திரனுடைய அந்தச் செய்கையைக் கண்டு கௌரவர்கள் களிப்படைந்து (அவனைப்) புகழ்ந்தார்கள். தனஞ்சயனுடைய பராக்கிரமத்தை அறிந்தவர்கள், 'இவன் அக்னியில் ஹோமம் செய்யப்பட்டவன்' என்றே எண்ணினுர்கள்.

தொண்ணூருவது அத்தியாயம்

(அர்ஜுனன் கர்ணபுத்திரனை விருஷஸேனனைக் கொன்றது)

பிறகு, சத்துருவீரர்களை அழிப்பவனும் புருஷஸ்ரேஷ்டனும் ஸூதபுத்திரனுக்கு எதிரிலிருந்தவனுமான அந்தக் கிரீடியானவன், அப்பொழுது மாத்ரியின் புத்திரனை நகுலன் குதிரைகளை இழந்திருப்பதைக்கண்டு, ஜனங்களுடைய மத்தியில் அதிகமாக அடித்துக் காயம் பண்ணப்பட்ட கிருஷ்ணனையும் நன்ருகப் பார்த்து, யுத்தத்தில் விருஷஸேனனை நன்ருக எதிர்த்தான். பெரும் போரில் தன்னைநோக்கி வருகின்றவனும் புருஷஸ்ரேஷ்டனும் உக்கிரனும் ஆயிரம் பாணங்களைத் தரித்தவனும் மஹாரதனுமான அந்தக் கிரீடியை முற்காலத்தில் நமுசி மகேந்திரனை எதிர்த்தது போலக் கர்ணபுத்திரன் எதிர்த்தான். சூரர்களும் ரதிகர்களுள் மேன்மை பெற்றவர்களுமான அந்த மஹாரதர்கள் இருவரும் அந்த யுத்தத்தில் பரஸ்பரம் நேரில் நின்று அதிகமான பரபரப்புள்ளவர்களாக அப்பொழுது அநேக அம்புக் கூட்டங்களைப் பிரயோகித்தார்கள். பிறகு, மஹானுபாவனை கர்ணபுத்திரன், யுத்தத்தில் விரைவாகப் பார்த்தனைக் கூர்மையுள்ள ஓரம்பினுல் அடித்து, வீரனை அந்த நமுசி இந்திரனை அடித்துக் கர்ஜித்தது போல உரக்கக் கர்ஜித்தான். மறுபடியும், அந்த விருஷஸேனன், உக்கிரமான பாணங்களால் இடக்கைத் தோள்பட்டையில் அடித்தான்; அவ்வாறே, கிருஷ்ணனை ஒன்பது பாணங்களால் அடித்து, மறுபடியும் பார்த்தனைப் பத்துப் பாணங்களால் அடித்தான். அர்ஜுனன், கர்ணபுத்திரனை விருஷஸேனனுல் விடப்பட்ட அப்படிப்பட்ட அம்புகளால் முதலில் அடிக்கப்பட்டமையால் சிறிது கோபமூட்டப்பட்டுப் பிறகு அவனைக் கொல்வதின் பொருட்டு மனத்தைச் செலுத்தினுன். பிறகு, மஹாபலசாலியான கிரீடியானவன், யுத்தத்தில் கர்ணபுத்திரனைக் கொல்லும் விஷயத்தில் நிச்சயமுள்ளவனுக, யுத்த முனையில் கோபத்தினுல் புருவத்தை முக்கோண வடிவமாக நெற்றியில் ஏறச்செய்து, பாணங்களை விரைவாகப் பிரயோகித்தான். யமனுக்குச் சத்துருவான ருத்திரரை அடித்த அர்ஜுனன், அப்பொழுது சிறிது சிவந்த கண்களையுடையவனுகவும் உரக்கச் சிரிக்கின்றவனுவும் கர்ணனையும் துரியோதனனையும் துரோணபுத்திரரையும் முதன்மையாகக் கொண்ட எல்லாக் கௌரவ வீரர்களையும் நோக்கி, 'கர்ண!. இப்பொழுது நீ பார்த்துக் கொண்டிருக்கையிலேயே யுத்தத்தில் கூர்மையுள்ள அம்புகளால் யுத்தத்தில் உக்கிரனை அந்த விருஷஸேனனைப் பரலோகத்தை அடைவிக்கப்போகிறேன்.

ஸஹாயமில்லாதவனும் என்னை விட்டுப் பிரிந்தவனும் சிறந்த பலமுள்ளவனும் என்னுடைய குமாரனுமான அந்த அபிமன்யு உங்கள் அனைவர்களாலும் கொல்லப்பட்டானென்று ஜனங்கள் ஒரு குறைவைச் சொல்லுகிறார்களன்றோ? ஆகையினால், நான் உங்களுக்கு முன்னிலையில் கொல்லப்போகிறேன். ரதங்களில் இருப்பவர்களே! இந்தக் கர்ண புத்திரனைக் காப்பாற்றுங்கள். நான் உக்கிரனான (இந்த)விருஷஸேனனைக் கொல்லப்போகிறேன். (கர்ண!) அர்ஜுனனென்கிற நான் யுத்த மத்தியில் மிக்க மதி மயக்கமடைந்தவனான உன்னையும் பிறகு கொல்லப்போகிறேன். துரியோதனனை அடுத்திருப்பதினால் கொழுப்புள்ளவனும் கலகத்துக்குக் காரணமானவனுமான அப்படிப்பட்ட உன்னை இப்பொழுது நான் யுத்தத்தில் வலிந்து கொல்லப்போகிறேன். எவனுடைய அநீதியினால் இந்தப் பெரிதான அழிவு உண்டாயிற்றோ, அந்தப் புருஷாதமனான இந்தத் துரியோதனனை யுத்தத்தில் பீமஸேனன் கொல்லப்போகிறான்' என்று சொன்னான். மஹா பலசாலியான அந்த அர்ஜுனன், இவ்வண்ணம் சொல்லிவிட்டு, வில்லைத் துடைத்து யுத்தகளத்தில் கர்ண புத்திரனான விருஷஸேனனை லட்சியம் வைத்து, அவனைக் கொல்வதின்பொருட்டு, யுத்தத்தில் நல்ல கூரிய பாணங்களைப் பிரயோகித்தான். கிரீடியானவன் உரக்கச் சிரித்துக்கொண்டு பயமற்றவனாகப் பத்துப் பாணங்களால் அவனை மர்மஸ்தானங்களில் அடித்துக் கூர்மையுள்ள நான்கு க்ஷுரங்களால் அவனுடைய வில்லையும் இரண்டு கைகளையும் தலையையும் அறுத்தான். பார்த்தனுடைய பாணங்களால் அடிக்கப்பட்டவனும், கைகளையும் தலையையும இழந்தவனுமான அந்த விருஷஸேனன் நன்றாகப் பூத்திருந்த மிகப பெரிய ஒரு ஸாலவிருக்ஷமானது இடியினால் தாக்கப்பட்டு அறுந்து முறிந்து கீழே விழுவதுபோல ரதத்தினின்று பூமியில் விழுந்தான். சுறுசுறுப்பாகக் காரியங்களைச் செய்பவனான கர்ணன் தன் புத்திரன் பார்த்தனுடைய பாணங்களால் அடிக்கப்பட்டு விழுகிறதைக் கண்டு, புத்திர வதத்தினால் அதிக தாபத்தை அடைந்து, கோபத்தினால் ரதத்தோடு கிரீடியினுடைய ரதத்தை விரைவாக அடுத்தான். [1]

அதிகப் பாட அத்தியாயம்.

[1] கரை புரளுகின்ற கடல்போல வருகின்றவனும், கர்ஜிக்கின்றவனும், மிக்க பெரிய சரீரத்தையுடையவனும், தேவர்களாலும் தடுக்கமுடியாதவனுமான அந்தக் கர்ணனைப் பார்த்துப் புருஷோத்தமரான தாசார்ஹர் உரக்கச் சிரித்துக்கொண்டு அர்ஜுனனைப் பார்த்துக் கூறலானார்.

தொண்ணூற்றோராவது அத்தியாயம்

(கர்ணனும் அர்ஜுனனும் எதிர்த்ததும், ஆகாயத்தில் போர் காணவந்த தேவாசுரர்கள் முறையே அர்ஜுன கர்ணர்களின் கட்சிகளைச் சார்ந்து இரண்டாகப் பிரிந்ததும்.)

விருஷஸேனன் கொல்லப்பட்டதைப் பார்த்துக் கோபத்துடனும் பொறுமையுடனுங் கூடின கர்ணன், புத்திர சோகத்தினால் இரண்டு கண்களிலிருந்தும் நீரை மிகச் சொரிந்தான். தேஜஸ்வியான கர்ணன், கோபத்தினால் சிவந்த கண்களுடன், யுத்தத்தின்பொருட்டுத் தனஞ்சயனை அழைத்துக்கொண்டு ரதத்தோடு அவனுக்கு எதிராகச் சென்றான். சூரியனுக்கு ஒப்பானவைகளும், புலித் தோலால் மூடப்பட்டவைகளும், நெருங்கியிருக்கின்றவைகளுமான அந்த இரண்டு ரதங்களையும் அந்த யுத்தரங்கத்தில் உதித்து வருகின்ற இரண்டு சூரியர்களைப்போலக் கண்டார்கள். வெண்மையான குதிரைகளையுடையவர்களும், [ரதத்தில்] வீற்றிருப்பவர்களும், பகைவர்களை அழிப்பவர்களும், மகாத்மாக்களுமான புருஷச்ரேஷ்டர்கள் ஆகாயத்தில் சந்திர சூரியர்கள்போல விளங்கினார்கள். [1] பெரியவரே! மூவுலகங்களையும் ஜயிப்பதற்காக முயற்சி

'தனஞ்சய! நீ உறுதியாக இரு. எந்த ரதத்தோடு நீ போர் புரிய வேண்டுமோ, வெண்மையான குதிரைகளையுடையதும் சல்யனைச் சாரதியாகக் கொண்டதுமான அந்த ரதமானது இதோ வருகிறது. பாண்டவ! பற்பல கொடிகளால் வியாபிக்கப்பட்டதும், கிண்கிணிகளுடைய சமூகத்துடனும் மாலைகளுடனும் கூடியதும், வெண்மையான குதிரைகளால் ஆகாயத்தில் தாங்கப்படுகிற விமானம்போலிருக்கின்றதும், வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்டதும், ராதாபுத்திரனோடு கூடியதும், சன்னத்தமுடனிருப்பதுமான இந்தக் கர்ணனுடைய ரதத்தைப் பார். இந்திரவிற்போல பிரகாசிக்கின்றதும், ஆகாயத்தைக் கீறுகின்றதுபோலிருக்கின்றதுமான மகாத்மாவான கர்ணனுடைய யானைக்கச்சைக் கொடியையும் பார். நீர்த்தாரைகளைப் பொழிகின்ற மேகம்போலச் சரதாரைகளைப் பொழிந்துகொண்டுவருகின்றவனும், தார்த்தராஷ்டிரனுக்குப் பிரியத்தை விரும்புகின்றவனுமான கர்ணனைப் பார். இதோ மத்ரதேசாதிபதியான சல்யராஜன் ரதத்தின் முகப்பில் இருந்துகொண்டு அளவில்லாத பராக்கிரமமுள்ள இந்தக் கர்ணனுடைய குதிரைகளை நடத்துகிறான். பாண்டவ! நாற்புறங்களிலும் தோன்றியிருக்கின்ற துந்துபிகளுடைய பேரொலியையும், பயங்கரமான சங்கவாத்தியத்தின் ஓசையையும், பற்பல சிம்மநாதங்களையும் கேள். அளவில் அடங்காத தேஜசுள்ள கர்ணனால் அடிக்கடி அசையும்படி செய்யப்

---

[1] அதிகப் பாடமான அரை சுலோகம் விடப்பட்டது.

யுள்ள இந்திரனையும் பலியையும்போல (யுத்த) ஸன்னத்தர்களான அவ்விருவர்களையும் கண்டு எல்லாச் சேனைகளும் ஆச்சரியத்தை அடைந்தன. எல்லா க்ஷத்திரியர்களும் தேர் ஒலிகளாலும் நாணொலிகளாலும் தலத் துவனிகளாலும் அவ்வாறே பாணங்களுடைய சப்தங்களாலும் சங்கநாதங்களாலும் (திசைகளை) எதிரொலியிடும்படி செய்துகொண்டு அந்த இரண்டு இரதங்களையும் எதிர்த்து ஓடினார்கள். கர்ணனுடைய யானைக்கச்சைக் கொடியையும் கிரீடியினுடைய வானரக் கொடியையும் கண்டு வீரர்களுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. பாரதரே! (யுத்தத்திற்காக) எதிர்த்திருக்கின்ற அந்த இரண்டு இரதங்களையும் கண்டு அரசர்கள் சிம்மநாதங்களின் சப்தங்களையும் 'நல்லது, நல்லது' என்கிற மிகுதியான சொற்களையும் வெளியிட்டார்கள். அந்த யுத்தரங்கத்தில் ஆயிரக் கணக்காயிருந்த யுத்த வீரர்கள் அவ்விருவர்களுடைய த்வந்துவ யுத்தத்தையும் கேட்டுக் கைச்சத்தங்களையும் அவ்வாறே பெரிய பாணங்களின் சத்தத்தையும் உண்டுபண்ணினார்கள். கௌரவர்கள் அந்த யுத்தத்தில் நான்கு பக்கத்திலும் வாத்தியங்களை முழக்கினார்கள். ராதேயனுக்கு நாற்புறத்திலும் லட்சக் கணக்காகச் சங்கங்களை முழக்கினார்கள். அவ்வாறே, பாண்டவர்களெல்லோரும் தனஞ்சயனை சந்தோஷிக்கச் செய்துகொண்டு

படுகின்ற தனுசினுடையதும், பெரிய சப்தங்களை மறைப்பதுமான சப்தத்தைக் கேள். பெரிய காட்டில் கோபங்கொண்ட சிம்மத்தைக் கண்டு மிருகங்கள் சிதறி ஓடுவதுபோலச் சைனியத்துடன்கூடின மகாரதர்களான இந்தப் பாஞ்சாலர்கள் பிளக்கப்பட்டு ஓடுகின்றார்கள். குந்தீபுத்திர! எல்லா முயற்சியுடனும் சூதபுத்திரனை நீ கொல்லவேண்டும். கர்ணனுடைய பாணங்களை வேறொரு மனிதன் சகிப்பதற்குச் சக்தியுள்ளவனல்லன். நீயோ, யுத்தத்தில் தேவர்களுடனும் அசுரர்களுடனும் கந்தர்வர்களுடனும்கூடினவையும் ஜங்கம ஸ்தாவரங்களுடன் கூடியவையுமான மூவுலகங்களையும் ஜயிப்பதற்குச் சக்தியுள்ளவன். நான் அவ்விதமாகவே அறிந்திருக்கிறேன். பயங்கரரும் உக்ர சுரூபியும் மகாத்மாவும் மூன்று கண்களையுடையவரும் (தாரித்திரியத்தை) நாசம் செய்பவரும் ஜடையுள்ளவருமான ஈசுவரரைப் பார்ப்பதற்கே பிராணிகள் சக்தியுள்ளவைகளல்ல அவ்வாறிருக்க, பிரபுவை எதிர்த்துப் போர் புரிவதற்குச் சக்தியுள்ளவர்களாகார் என்பதில் யாது சந்தேகம்? எல்லாப் பிராணிகளுக்கும் மங்களகரமாயிருப்பவரும் மங்களரும் சாசுவதருமான ஸாக்ஷாத் மகாதேவர் யுத்தத்தில் உன்னால் ஆராதிக்கப்பட்டார். தேவர்களும் உனக்கு வரத்தைக் கொடுத்தார்கள். பார்த்த! மகா பாகுபலமுள்ளவனே! தேவதேவரான அந்தச் சூலபாணியினுடைய அனுக்கிரஹத்தினாலே, இந்திரன் நமுசியைக் கொன்றதுபோலக் கர்ணனைக் கொல்வாயாக. பார்த்த!

தூரியங்கள் சங்கங்கள் இவற்றின் கோஷத்தினால் எல்லாத் திசைகளையும் அதிகமாகச் சத்தமிடும்படி செய்தார்கள். கர்ணார்ஜுனர்களுடைய யுத்தத்தில் ஸிம்மநாதங்களாலும் கைகளைக் கொட்டும் த்வனிகளாலும் உரத்த வீர வாதங்களாலும் சூரர்களுடைய தோள் தட்டும் ஒலிகளாலும் நான்கு பக்கங்களும் நெருங்கினவாயின. அரசரே! புருஷச்ரேஷ்டர்களும் ரதங்களிலிருப்பவர்களும் ரதிகர்களுள் சிறந்தவர்களும் பெரிய விற்களைப் பிடித்தவர்களும் பாணங்களோடும சக்திகளோடும் துவஜங்களோடும் கூடியவர்களும் கவசத்தை அணிந்தவர்களும் கத்தி கட்டிக்கொண்டவர்களும் வெள்ளைக் குதிரைகளையுடையவர்களும் சங்கங்களால் பிரகாசிக்கின்றவர்களும் சிறந்த அம்பறாத் தூணிகளையுடையவர்களும் நல்ல காக்ஷியுள்ளவர்களும் சிவந்த சந்தனத்தினால் பூசப்பட்ட மேனியையுடையவர்களும் மதங் கொண்ட இரண்டு காளைகள் போன்றவர்களும் மின்னல்போன்ற

எப்பொழுதும் உனக்கு நன்மை உண்டாகுக. யுத்தத்தில் ஜயம் அடைவாயாக' என்று கூறினர். அர்ஜுனன், 'மாதவரே! மதுவென்கிற அசுரனை அழித்தவரே! எல்லா உலகங்களுக்கும் குருவான நீர் சந்தோஷமுள்ளவராயிருந்தால் எனக்கு ஜயம் நிச்சயமே; இதில் ஸம்ஸயமில்லை. ஹ்ருஷீகேசரே! மகாரதரே! என் தேரில் பூட்டியிருக்கிற குதிரைகளை ஓட்டும். பல்குனன் யுத்தத்தில் கர்ணனைக் கொல்லாமல் திரும்பமாட்டான். கோவிந்தரே! என்னுடைய பாணங்களாலே துண்டுதுண்டாகச் செய்யப்பட்டு உயிரை இழந்திருக்கின்ற கர்ணனை இப்பொழுது பாரும்; அல்லது. கர்ணனால் அம்புகளால் கொல்லப்பட்ட என்னையாவது பார்ப்பீர்; எந்த யுத்தத்தைப் பூமியுள்ளவரையில் ஜனங்கள் சொல்லப்போகிறார்களோ, மூவுலகங்களையும் மோகிக்கச் செய்கின்ற கோரமான அந்த யுத்தமானது இதோ வந்துவிட்டது' என்று சொன்னான்; பார்த்தன், இகழத்தகாத காரியங்களைச் செய்கிற கிருஷ்ணனைப் பார்த்து, அப்பொழுது இவ்வண்ணம் சொல்லிக்கொண்டு, ஒரு யானையைப் பகையானை எதிர்ப்பதுபோல ரதத்தோடு விரைவாகக் (கர்ணனை) எதிர்த்துச் சென்றான். பகைவர்களை அடக்குகிறவரே! தேஜஸ்வியான பார்த்தன், மீண்டும் கிருஷ்ணனைப் பார்த்து, 'ஹ்ருஷீகேசரே! குதிரைகளை ஒட்டும். இந்தச் சமயம் சென்று போகிறது' என்றான். அப்பொழுது மகாத்மாவான அந்தப் பாண்டவனால் இவ்வாறு உரைக்கப்பட்ட அந்த வாசுதேவர், அப்பொழுது பாண்டவனை, 'ஜய' என்று சொல்லி வாழ்த்தி, மனோவேகமுள்ள குதிரைகளை ஒட்டினார். பாண்டுபுத்திரனுடைய மனோவேகமுள்ள அந்த ரதமானது ஒரு க்ஷணத்தினுள் கர்ணனுடைய ரதத்தின் முன்னிலையை அடைந்தது.

விற்களையும் துவஜங்களையுமுடையவர்களும் மிகுதியான ஆயுதங்களால் சண்டையிடுகின்றவர்களும் சாமரங்களுடனும் விசிறிகளுடனும் கூடியவர்களும் வெள்ளைக் குடைகளால் பிரகாசிப்பவர்களும் கிருஷ்ணனாலும் சல்யனாலும் (நடத்தப்பட்ட) ரதங்களுடன் கூடியவர்களும் ஒத்த உருவத்தையுடையவர்களும் மகாரதர்களும [1] சிம்மத்தின் தோள்போன்ற தோள்களையுடையவர்களும் நீண்ட கைகளையுடையவர்களும் சிவந்த கண்களையுடையவர்களும் ஸ்வர்ண மாலையை அணிந்தவர்களும் அகன்ற மார்பை உடையவர்களும் மகாபலசாலிகளும் ஒருவரையொருவர் கொல்வதில் விருப்பமுள்ளவர்களும் ஒருவரையொருவர் வெல்வதில் விருப்பமுற்றவர்களும் பசுக் கொட்டிலில் இரண்டு காளைகள் போல ஒருவரை ஒருவர் எதிர்த்து ஓடுகின்றவர்களும் மதப் பெருக்குள்ள யானைகள்போன்றவர்களும் மிக்க கோபங்கொண்ட இரண்டு மலைகள்போன்றவர்களும் சர்ப்பத்தின் குட்டிகள்போல் பிரகாசிப்பவர்களும் யமனுக்கும் காலனுக்கும் அந்தகனுக்கும் ஒப்பானவர்களும் கோபங்கொண்ட இந்திரனும் விருத்திரனும் போன்றவர்களும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் சமமான ஒளி பொருந்தியவர்களும் யுகத்தை முடிப்பதற்காகத் தோன்றிய கோபமுள்ள இரண்டு மகா கிரகங்கள்போல் இருப்பவர்களும் தேவகுமாரர்களுகம் தேவர்களுக்கொப்பானவர்களும் ரூபத்தினால் தேவர்களுக்கு சமானமாயிருப்பவர்களும் தற்செயலாக வந்திருக்கிற சூரியனும் சந்திரனும் போன்றவர்களும் சிறந்த தேகபலமுள்ளவர்களும் யுத்தத்தில் கர்வங்கொண்டவர்களும் யுத்தத்தில் பற்பல சஸ்திரங்களை ஏந்தியவர்களும் பாய்கினற புலிகள் போன்றவர்களும் புருஷஶ்ரேஷ்டர்களுமான அவ்விருவர்களையுங் கண்டு உம்மைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமான சந்தோஷமுண்டாயிற்று. ஒன்றுசேர்ந்திருக்கின்ற புருஷஶ்ரேஷ்டர்களான கர்ண தனஞ்சயர்களைக்கண்டு எல்லாப் பிராணிகளுக்கும் வெற்றியில் ஸம்சயமுண்டாயிற்று. இருவர்களும் உத்தமமான ஆயுதங்களைத் தரித்தவர்கள். இருவர்களும் யுத்தத்தில் தகுந்த உழைப்புள்ளவர்கள். இருவர்களும் கைகளின் சத்தத்தினால் ஆகாயத்தை ஒலியிடும்படி செய்பவர்கள. இருவர்களும் பௌருஷத்தினாலும் பலத்தினாலும் பிரசித்தமான செய்கையையுடையவர்கள். இருவர்களும் யுத்தத்தில் சம்பரனுக்கும் தேவராஜனுக்கும் ஒப்பானவர்கள். இருவர்களும் கார்த்தவீரியார்ஜுனனுக்கு ஸமானர்கள். இருவர்களும் தசரதகுமாரரான ராமருக்கு ஸமானர்கள். இருவர்களும் விஷ்ணுவின் வீரியத்துக்கு ஸமமான வீரியமுள்ளவர்கள். இருவர்களும் யுத்தத்தில் ருத்திரருக்கு ஸமானர்கள்.

---

[1] இது மூலத்தில் இரண்டு முறை வருகிறது.

அரசரே! இருவர்களும் வெள்ளைக் குதிரைகளையுடையவர்கள்; சிறந்த ரதங்களால் ஸஞ்சரிப்பவர்கள். சல்யன் கிருஷ்ணன் இருவரும் மிகச் சிறந்த ஸாரதிகள். மகாராஜரே! பிறகு, பிரகாசிக்கின்ற அந்த இரண்டு மகாரதர்களையும் கண்டு ஸித்த சாரணர்களின் கூட்டங்களுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. பரதர்களில் சிறந்தவரே! பிறகு, கௌரவர்கள் மகாத்மாவும் யுத்தத்தில் பிரகாசிப்பவருமான கர்ணனை விரைவாகச் சேனையுடன் சூழ்ந்து கொண்டார்கள். அவ்வாறே, உத்ஸாகமுள்ளவர்களான திருஷ்டத்யும்னனை முதன்மையாகக்கொண்ட பாண்டவர்களும் நகுல சகதேவர்களும் சேகிதானனும் மிக்க சந்தோஷமுள்ளவர்களான பிரபத்ரகர்களும் பற்பல தேசத்தில் தோன்றியவர்களும் சூரர்களும் நன்னடையுள்ளவர்களும் யுத்தத்தில் களிப்பவர்களுமான (மற்றுமுள்ள) வீரர்களனைவரும் ஒன்றுசேர்ந்தவர்களாகவும் உத்ஸாகமுள்ளவர்களாகவும் தனஞ்சயனைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்கள் காலாட்களோடும் குதிரைகளோடும் ரதங்களோடும் யானைகளோடும் கூடியவர்களும் சத்துருக்களைக் கொல்லுகின்றவர்களும் (அர்ஜுனனைப்) பாதுகாக்க எண்ணங்கொண்டவர்களும் அவனுடைய விஜயத்திலும் கர்ணனுடைய வதத்திலும் நோக்கமுள்ளவர்களுமாயிருந்தார்கள். அவ்வாறே, துரியோதனனைத் தலைமையாகக்கொண்ட உம்மைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் முயற்சியுடையவர்களும் சேனையை அடிப்பவர்களுமாயிருந்துகொண்டு கர்ணனை யுத்தத்தில் பாதுகாத்தார்கள். மன்னரே! கர்ணன் யுத்தத்தில் உம்மைச் சேர்ந்தவர்களுக்குப் பந்தயப் பொருளானான். அவ்வாறே, பாண்டவர்களைச் சேர்ந்தவர்களுக்குப் பார்த்தன் அப்பொழுது பந்தயப் பொருளானான். அவ்விருவர்களுக்கும் அந்தப் போர்ச் சூதில் ஸப்யர்களும் பார்ப்பவர்களும் ஏற்பட்டார்கள். அந்தப் போர்ச் சூதில் சூதாடுகின்ற இவர்களுக்கு வெற்றி தோல்விகள் நிச்சயமாக இருந்தன. யுத்த முனையிலிருக்கின்ற நம்மவர்களுக்கும் பாண்டவ வீரர்களுக்கும் வெற்றிக்கோ தோல்விக்கோ அந்தக் கர்ணார்ஜுனர்களால் (போர்ச்) சூது ஆரம்பிக்கப்பட்டது. மகாராஜரே! யுத்தத்தில் புகழ்பெற்றவர்களான அவ்விருவர்களும் ஒருவர் மற்றொருவரைக் குறித்துக் கோபமுள்ளவர்களாகவும் ஒருவரையொருவர் வதஞ்செய்வதில் விருப்பமுள்ளவர்களாகவும் யுத்தத்தில் நின்றார்கள். பிரபுவே! இந்திர விருத்திரர்கள்போல அடிப்பதில் விருப்பமுற்றவர்களான அவ்விருவரும் இரண்டு கிரகங்கள் போலப் பயங்கரமான ரூபத்தைத் தரித்தவர்களாயிருந்தார்கள். பரதர்களுள் சிறந்தவரே! கர்ணனுக்கும் அஜர்ஜுனனுக்குமுள்ள

தாரதம்ய விஷயத்தில் விவாதமானது ஆகாயத்தில் உண்டா யிற்று. பூதங்களுக்குள் ஒன்றோடொன்று கலகங்கள் உண்டாயின பெரியவரே! எல்லாப் பிராணிகளும் இரண்டாக வேறுபட்டு வெவ்வேறான வகுப்பை அடைந்தன. கர்ணார்ஜுனர்கள் எதிர்த் திருக்குங்கால், தேவர்களும் தானவர்களும கந்தர்வர்களும் பிசா சங்களும் உரகர்களும் ராக்ஷஸர்களும்(பரஸ்பரம்)விரோத கக்ஷியை அடைந்தனர். வேந்தரே! இந்த யுத்தத்தில் நக்ஷத்திரங்களுடன் கூடிய ஆகாயமானது கர்ணனுடைய பக்ஷத்திலிருந்தது. பார்த் தனுக்கு [1] மாதாவான விசாலமான பூமியானது புத்திரனுக்கு ஜயத்தை விரும்பிற்று. நரஶ்ரேஷ்டரே! சமுத்திரங்களும் மலை களும் நதிகளும் நிலத்திலுண்டானவைகளும் நீரிலுண்டானவை களும் கிரீடியை அடைந்தன. பகைவர்களைத் தவிக்கச்செய்ப வரே! அசுரர்களும் ராக்ஷஸர்களும் குஹ்யகர்களும் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற பக்ஷிகளும் கர்ணனிருக்குமிடம் சேர்ந்தன. ரத்தி னங்களும் எல்லா நிதிகளும் ஆக்யானங்களை ஐந்தாமவையாகக் கொண்ட வேதங்களும் உபவேதங்களும் உபநிஷத்துக்களும கிரீடியை அடுத்தன. வாசுகியும், சித்திரஸேனனும், தக்ஷகனும் உபதக்ஷகனும், பூமியிலும ஆகாயத்திலும் ஜலத்திலும் ஸஞ்சரிப் பவர்களும் வம்சத்துடன்கூடினவர்களுமான கத்ருபுத்திரர்களும், விஷமுள்ளவைகளும் நல்ல வேகமுள்ளவைகளுமான மகாநாகங் களும் அர்ஜுனனை அடைந்தனர். ஐராவதத்தினுடைய வம்சத் தில் தோன்றிய யானைகளும் காமதேனுவினிடத்தினின்று உண்டான பசுக்களும் விசாலா நகரியில் உண்டான ஸர்ப்பங் களும் அர்ஜுனனுடைய பக்கத்தை அடைந்தன. பாபிகளான ஸர்ப்பங்கள் கர்ணனுடைய கட்சியில் நின்றன. அரசரே! செந் நாய்கள், துஷ்டமிருகங்கள், மங்களகரமான மிருக பட்சிகள், மங்களகரமான பசுக்கள், அவ்வாறே சிம்மங்கள், புலிகள் எல்லாம் பார்த்தனுடைய வெற்றியில் பற்றுதலுடன் அவனை யடைந்தன. வசுக்களும், மருத்துக்களும் ஸாத்யர்களும் ருத்திரகணங்களும் அசுவினீ தேவதைகளும், அக்கினியும், ருத்திரரும், சோமனும், ஸர்ப்பங்களும், பத்துத் திசைகளும், நாய்களும், நரிகளும், பட்சி களும் கர்ணனை அடைந்தனர். மகேந்திரனோடுகூடின வசுக்களும் அக்கினியுடன் கூடின மருத்துக்களும் தனஞ்சயன் பக்கத்தில் நின்றார்கள். ஆதித்ய வர்க்கங்கள் கர்ணனைச் சார்ந்து நின்றன. பகைவர்களைத் தவிக்கச் செய்பவரே! பரதர்களில் சிறந்தவரே! பிதிர்க்களுடனும் ரிஷிகளுடனும் கூடின தேவதை களும், தும்புருவைத் தலைவராகக்கொண்ட எல்லாக் கந்தர்வர்

---

[1] 'தாய்போல' என்பது வேறு பாடம்.

களும், யமனும், குபேரனும், வருணனும், அர்ஜுனனிருக்கும் பக்கத்தில் [ஒன்று சேர்ந்தார்கள்.] தேவரிஷிகள் பிரம்மரிஷிகள் இவர்களின் கூட்டங்களும் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றவர் அனைவரும் முனிவர் கூட்டங்களும் ப்ராலேயர்களும் மங்களகரமான அப்ஸரஸுகளுடைய கூட்டங்களும் சுத்தர்களான அப்ஸர ஸ்திரீகளும் தேவதூதர்களும் குஹ்யகர்களும் விரும்பத்தக்க புண்ய கந்தங்களும் கிரீடியை அடைந்தனர். மனத்திற்கு அருவருப்பை உண்டுபண்ணத்தக்க கந்தங்களனைத்தும் கர்ணனை யடைந்தன. நாசமடையப்போகிறவர்களுக்கு விபரீதமான அனிஷ்டங்கள் உண்டாகின்றன. மரண காலமானது அருகில் வந்திருக்கும் சமயத்தில் விபரீத சுபாவத்தை அடைந்திருக்கின்ற மனிதனை முடிவுக்காலத்தில் எவைகள் விரைவாக அடைகின்றனவோ அப்படிப்பட்ட குறிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து ஸூதபுத்திரனை கர்ணனிடத்தில் பிரவேசித்தன. அரசர்களுட் சிறந்தவரே! புருஷஸ்ரேஷ்டரே! அவ்வாறே பலம், ஒளி, ஸித்தி, மிக்க மனக்கிளர்ச்சி, சத்தியம், விக்ரமம், மனக்களிப்பு, ஜயம், ஆனந்தம் இப்படிப்பட்ட நல்ல நிமித்தங்கள் அந்த யுத்த சமுத்திரத்தில் போர்க்களத்தில் அர்ஜுனனை அடைந்தன. பிராமணர்களுடன் ரிஷிகள் கிரீடியை அடைந்தார்கள். மகாராஜரே! பிறகு, தேவ கணங்களுடனும் சாரணர்களுடனும் கூடின ஸித்தர்கள் இரண்டாகப் பிரிந்து புருஷஸ்ரேஷ்டர்களான கர்ணார்ஜுனர்களை அடுத்தார்கள். மகாராஜரே! தேவர்களும் கந்தர்வர்களும் ராக்ஷஸர்களும் ஆகாயத்தில் நான்கு பக்கத்திலும் விசித்திரமான நல்ல குணமுள்ள விமானங்களில் ஏறிக்கொண்டு கர்ணார்ஜுனர்களுடைய துவந்துவ யுத்தத்தைக் குறித்து வந்தார்கள். பாரதரே! அப்பொழுது, இவ்விதமாக எல்லாப் பிராணிகளும் இரண்டாகப் பிரிந்து ராதேயனுக்கும் அர்ஜுனனுக்கும் ஜயத்தை விரும்பிக் கொண்டிருக்கையில், ஆகாயமானது பதினாயிரம் விமானங்களால் நெருங்கியதாயிற்று. செந்நாய்களாலும் புலிகளாலும் யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களின் வரிசைகளாலும் மேகங்களாலும் வாயுவினாலும் வஹிக்கப்படுகின்ற மற்ற அறிவுள்ளவர்களும் கர்ணார்ஜுனர்களுடைய தவந்துவ யுத்தத்தைப் பார்க்க எண்ணங்கொண்டு வந்தார்கள். மகாராஜரே! தேவர்களும் அஸுரர்களும், கந்தர்வர்களும், நாகர்களும், யக்ஷர்களும், மஹரிஷிகளும், தேவகணங்களும், ஸ்வதாபோஜனம் பண்ணுகின்ற பிதிர்க்களும், பற்பல ரூபமுள்ள வஸ்திரங்களால் பிரகாசிக்கின்றவர்களும் தவத்தினாலும் வித்தையினாலும் ஓஷதிகளாலும் ஸித்திபெற்றவர்களுமான மஹான்களும் ஆகாயத்தில் விவாதப்

பட்டுக்கொண்டு நின்றார்கள். பிரம்மதேவர், பிரம்மரிஷிகளோடும் ஸ்ருஷ்டிகர்த்தர்களோடும் சேர்ந்து ஆகாயத்தில் தேஜோமயமான திவ்ய விமானத்தின்மீதேறி வந்து நின்றார். மகாபுத்தியுள்ளவரே! பிறகு, யுத்தரங்கத்தில் அப்பொழுது கர்ணனுக்கும் பாண்டவனுக்கும் நடக்கின்ற அந்த த்வந்த்வ யுத்தத்தைப் பார்க்க பிரஜாதிபதியானவர் விரைவாக வந்தார். அவ்விருவர்களுடைய மகாபலத்தையும் பார்த்துப் பிரஜைகளுக்கெல்லாம் நாதரான ஈசுவரருக்கும் 'கர்ணன் ஜயித்து இந்தப் பூமி முழுமையையும் அடைவனோ, அல்லது, அர்ஜுனன்தான் இதனை அடைவனோ' என்று ஸம்சயம் உண்டாயிற்று.

தொண்ணூற்றிரண்டாவது அத்தியாயம்.

(பிரஜாதிபதி இருவருக்கும் ஸமமான வெற்றியை விரும்பியதும், இந்திரன் அர்ஜுனனுக்கே வெற்றியை விரும்பினதும், பிரம்ம ருத்ரர்கள் அங்ஙனமே அங்கீகரிக்கப் பூமாரி பெய்ததும்.)

அரசரே! பிரஜாதிபதியோ, வந்திருக்கின்ற அந்தத் தேவர்களின வகுப்பைக் கண்டு, பிறகு, ஸ்வயம்பு பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே உரைக்கலானார். 'இருவரும அதிரதர்கள்; சூரர்கள்; இருவரும உறுதியான பராக்கிரமமுடையவர்கள; இருவரும் ஒத்த செய்கையையுடையவர்கள்; இந்திரனுக்கும விஷ்ணுவுக்கும் ஒப்பானவர்கள். கர்ணார்ஜுனர்களுககு எதிர்ப்பு நேரும்பொழுது விருத்திரனுக்கும இந்திரனுக்கும் நடந்ததுபோல மகாகோரமான பெரும்போர் நடக்கப்போகிறது. ஆ! ஆ! கஷ்டம்!' என்றார். பிரஜாதிபதியானவர் இவ்வாறு சொல்லிவிட்டு, பிறகு, ஸ்வயம்புவைப் பார்த்து, 'புருஷஸ்ரேஷ்டர்களான கர்ணன் அர்ஜுனன் இருவருக்கும் விஜயம ஸமமாயிருக்கட்டும, கர்ணார்ஜுனர்களுடைய விவாதத்தினால் எல்லா உலகமும நசியாமலிருக்கட்டும. ஸ்வயம்புவே! இவவிருவர்களுக்கும விஜயமானது ஸமமாக இருக்கட்டும. அந்த வாக்கியத்தைச் சொல்லும்' என்று சொன்னார். மகாராஜரே! இவ்வாறு சொல்லக் கேட்டவரும் ஷாட்குணய பரிபூர்ணருமான மகா பிரும்மாவோ அவ்விருவருக்கும ஜயமானது நிச்சயிககப்படாமலிருக்கவே, பிரஜாதிபதியைப் பார்த்து, 'இவர்கள இருவரும் ஸமர்த்தர்கள்; இருவரும் அதிக பலத்தினால் மேம்பட்டவர்கள. மூவுலகங்களுக்கும் பயங்கரமான யுத்தம இவர்களுக்கு உண்டாகப்போகிறது' என்று இவ்வாறு கூறினார். பிறகு, அந்தச் சமயத்தில், ஆயிரம் கண்களையுடைய

இந்திரன், பிரஜாதிபதியைப் பார்த்து, 'பார்த்தன் நல்ல மனமுள்ளவன்; சிறந்த பலமுடையவன்; சூரன்; வித்தையில் தேர்ச்சி அடைந்தவன்; தவத்தைத் தனமாகக் கொண்டவன்; மகா தேஜஸையுடையவன்; தனுர்வேதத்தை முழுமையும் கற்றுணர்ந்திருக்கிறான். எவனிடத்தினின்று இந்தத் தேவகாரியம் ஸம்பவித்திருக்கிறதோ [அப்படிப்பட்ட] பார்த்தன் எல்லாக் குணங்களையுமுடையவன். பாண்டவர்கள் வனவாஸ முதலியவைகளால் நித்தியம் அதிகமாகத் துன்பப்படுத்தப்படுகிறார்கள். புருஷஶ்ரேஷ்டனான அர்ஜுனன் தவமுள்ளவன்; போதுமான திறமையுள்ளவன்; மிக்க மகிமையினால் தெய்வத்தைக்கூட ஆலோசியாமல் மீறுவான். மீறினால், நிச்சயமாக உலகங்களுக்கு நாசமுண்டாகும். கோபமுள்ளவர்களான கிருஷ்ணார்ஜுனர்களுக்கு ஓரிடத்தில் இருப்பை நான் காணவில்லை. இவர்கள் உலகத்தைப் படைப்பவர்கள்; அதனால் புருஷோத்தமர்கள். இவர்கள் நரநாராயணர்கள், புராதனர்கள்; ரிஷிகளுள் சிறந்தவர்கள; [ஒருவருடைய] கட்டளைக்கும் உட்பட்டவர்களல்லர்; உலகத்தை யடக்கி ஆளபவர்கள்; புருஷர்களுள் சிறந்தவர்கள். இவ்விருவர்களுக்கும் ஒப்பானான ஒருவன் தேவர்களிலாவது மனிதர்களிலாவது இல்லை. தேவர்களோடும் ரிஷிகளோடும சாரணர்களோடும் மூவுலகங்களும எல்லாத் தேவகணங்களும எல்லா பூதங்களும் [இவர்களை] அனுசரிக்கத்தக்கவைகள். இவ்விருவருடைய பிரபாவத்தினாலும் உலகமனைத்தும் இருக்கிறது. புருஷஶ்ரேஷ்டனும சூரிய குமாரனும் சூரனுமான கர்ணன் இஷ்டப்படி புண்ணிய உலகங்களை யடையட்டும். கிருஷ்ணார்ஜுனர்களுக்கு விஜயம் உண்டாகட்டும். கர்ணன் வசுக்களுடன் சாலோக்யத்தையும் தேவதைகளுடைய வாசஸ்தானமான ஸ்வர்க்கத்தையும் அடையட்டும்; துரோணருடனும் பீஷ்மருடனும் சுவர்க்கலோகத்தில் பூஜிக்கப்படட்டும். பிதாமஹரே! பார்த்தன் வனத்தில் நெடுங்காலமாகக் கிலேசத்தை அடைவிக்கப்பட்டானன்றோ? ஆதலால், தவத்தினால் மேன்மைபெற்ற இந்த அர்ஜுனன் யுத்தத்தில் ஜயத்தையடையட்டும். பகவானான உம்மால், 'கிருஷ்ணார்ஜுனர்களுக்கு ஜயம் நிச்சயம்' என்று முந்தியே சொல்லப்பட்டுவிட்டது. பிரபுவே! அது அப்படியே ஆகட்டும். உமக்கு வந்தனம். பிதாமஹரே! சொல்லும்' என்று வேண்டினான். அந்த இந்திரனுடைய வார்த்தையைக் கேட்டுப் பகவானான பிரபுவானவர் அந்தக் கர்ணன் கிரீடி இருவருக்கும் ஜயத்தை சமமாகச் சொல்லவில்லை. பிதாமஹர் மௌனமாக இருக்கவே, அந்த மௌனத்தினால், 'பாண்டவனுக்கு விஜயமும் கர்ணனுக்கு வதமும் உண்

டாகும்' என்று இந்திரன் ஆசையை அடைந்தான். பிறகு, பிரும்மதேவரும் ஈசுவரரும் உலகங்களுக்கு நாதனான இந்திரனைப் பார்த்து, 'மகாத்துமாவான பாண்டவனுக்கே விஜயம் நிச்சயமாக உண்டாகட்டும். பார்த்தன் மனோதைரியமுள்ளவன்; சூரன்; வித்தையில் தேர்ச்சியடைந்தவன்; தவத்தைத் தனமாகக் கொண்டவன்; அவன் ஜயம்பெறுக. மிக்க தேஜஸுள்ள அர்ஜுனன் தனுர்வேதம் முழுமையையும் கற்றுணர்ந்திருக்கின்றான். தெய்வத்தைக்கூட ஆலோசியாமல் மகிமையினால் தாண்டிச் செல்வான். அவ்வாறு கடந்து செல்வானானால், உலகங்களுக்கு அழிவு நிச்சயமாக உண்டாகும். குரோதமுள்ளவர்களான கிருஷ்ணார்ஜுனர்களுக்கு ஓரிடத்தில் இருப்பை நாம் அறியோம். புருஷஸ்ரேஷ்டர்களான இவ்விருவர்களும் உலகத்தைப் படைத்து நிலைநிறுத்தினவர்கள். பகைவர்களைத் தவிக்கச் செய்கிறவனும் சூரியபுத்திரனும் சூரனுமான இந்தக் கர்ணன் வேண்டியபடி புண்ணிய உலகங்களை அடையட்டும். நரசுரூபியான அர்ஜுனனிடத்தில் நிச்சயமாக ஜயம் உண்டாகட்டும்' என்று கூறினார்கள். தேவதேவர்களால் அவ்வாறு சொல்லப்பட்டவுடனே, ஆயிரம் கண்களையுடைய இந்திரன், பிரும்மருத்திரர்களுடைய கட்டளையினால் எல்லாப் பிராணிகளையும் அழைத்து, 'மஹிமை பொருந்திய பிரும்மதேவராலும், ஈசானராலும் உரைக்கப்பட்ட உலகங்களுக்கு இதமான விஷயத்தை நீங்கள் கேட்டீர்களா? அஃது அப்படியே ஆகப்போகிறது. உங்களுடைய ரோகமானது விலகட்டும். துக்கத்தை விலக்கியவர்களாக மங்களத்தையடைவீர்களாக' என்று கூறினான். பெரியவரே! அரசரே! இவ்விதமான இந்திரனுடைய வசனத்தைக் கேட்டு எல்லாப் பிராணிகளும் அப்பொழுது ஆச்சரியமடைந்தன; புகழவும் புகழ்ந்தன. அப்பொழுது புருஷஸ்ரேஷ்டர்களான அவ்விருவர்களுக்கும் ஜயத்தை சமமாகச் சொன்னார்களில்லை. தேவர்கள் சந்தோஷமுள்ளவர்களாக நல்ல வாசனை பொருந்திய பூமாரிகளைப் பொழிந்தார்கள். பற்பல விதமான தேவ தூரியங்களையும் வாசித்தார்கள். புருஷஸ்ரேஷ்டர்களான அவ்விரண்டு வீரர்களுடைய நிகரற்ற த்வந்துவ யுத்தத்தையும் பார்க்க எண்ணங்கொண்டவர்கள் ஆச்சரியத்தினால் நன்றாக மலர்ந்த கண்களையுடையவர்களாக வேறு செய்கைகளை அறியவில்லை.

தொண்ணூற்றுமூன்ருவது அத்தியாயம்.

(சல்யனுக்கும் கர்ணனுக்கும் ஸல்லாபமும், கிருஷ்ணனுக்கும் அர்ஜுன னுக்கும் ஸல்லாபமும், அர்ஜுனன் கிருஷ்ணனுக்குத் தனது வல்லமையைக் கூறியதும்.)

பரத வம்சத்தில் உதித்தவரே! வெண்மையான குதிரைக ளுடன் கூடினவையும், தேவ சம்பந்தம் பெற்றவையும், (யுத்தத் துக்குத்) தக்கவையும், பேரொலியுள்ளவையுமான இரண்டு ரதங் களின்மீதும் இருக்கின்ற லோகவீரர்களான வாசுதேவார்ஜு னர்களும், கர்ணசல்யர்களும் தனித்தனி சங்கங்களை ஊதினர்கள். அந்யோந்யம் ஸ்பர்த்தையுள்ளவர்களான அவ்விருவருக்கும் உக்கிரமாயிருப்பதும் பயப்படுகிறவர்களுக்குப் பயத்தை உண்டு பண்ணுகிறதுமான யுத்தமானது முற்காலத்தில் இந்திரனுக்கும் சம்பரனுக்கும் நடந்ததுபோல நடந்தது. அவ்விருவருடைய ரதத்திலுமிருக்கின்ற மாசற்ற இரண்டு துவஜங்களும் உலகம் நாசமடையுங் காலத்தில் ஆகாயத்தில் உதித்த ராகு கேதுக்கள் போல விளங்கின. ஸர்ப்பம் போன்றதும் உயர்ந்த ரத்தினங்க ளால் இழைக்கப்பட்டதும், திடமானதும், இந்திரனுடைய விற் போல் பிரகாசிக்கின்றதுமான கர்ணனுடைய யானைகட்டும் கச் சைக் கொடியானது விளங்குகின்றது. பார்த்தனுடைய சிறந்த வானரமானது வாயைத் திறந்திருக்கும் அந்தகன்போல கோரப் பற்களால் [பார்ப்பவர்களைப்] பயமடையும்படி செய்துகொண்டு ஒளிகளால் சூரியன்போலப் பார்க்க முடியாததாக இருக்கிறது. காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனுடைய துவஜ மாகிய வானரமானது யுத்தத்தில் விருப்பமுற்றதாகத் தன் இருப்பிடத்தை விட்டு வேகத்துடன் கர்ணனுடைய த்வஜத்தை நாடிவிட்டது. அது மகாவேகத்துடன் கூடியதாக உயரக் கிளம்பிக் கருடன் ஸர்ப்பத்தை அடிப்பதுபோல நகங்களாலும் பற்களாலும் (கர்ணனுடைய) கச்சைக் கொடியை எதிர்த்தடித் தது; பிறகு, கிண்கிணிகளை ஆபரணங்களாகக்கொண்டதும் கால பாசத்துக்கு ஒப்பானதுமான அந்த யானைகட்டும் கச்சையானது மிக்க கோபமுள்ளதாக அப்பொழுது அந்தக் குரங்கை எதிர்த் துச் சென்றது. அப்பொழுது, அவ்விருவர்களுக்கும் மிக்க கோரமான துவந்துவ யுத்தமாகிற சூதாட்டமானது ஏற்பட்ட வுடன், முந்தியதும் மிகவும் முந்தியதுமான துவஜங்களிரண்டும் யுத்தம் செய்தன. குதிரைகள் ஒன்றோடொன்று போட்டியுடன் குதிரைகளை நோக்கிக் கனைத்தன. செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய கண்ணபிரான் சல்யனைக் கண்களாகிற பாணங் களால் அடித்தார். அப்படியே, சல்யனும் கண்ணபிரானை

எதிர்த்து நன்றாகப் பார்த்தான். அந்த யுத்தத்தில் வாசுதேவர் சல்யனைக் கண்களாகிற பாணங்களால் ஜயித்தார். குந்திபுத்திர னான தனஞ்சயனும் கர்ணனைக் கண்ணால் ஜயித்தான். பிறகு, சூதபுத்திரன் சல்யனை அழைத்துப் புன்சிரிப்புடன், 'சல்ய! இப்பொழுது இந்த யுத்தத்தில் பார்த்தன் என்னை ஒரு சமயம் கொல்வானாகில் யுத்தத்தில் நீ என்ன செய்வாய்? உண்மை யைச் சொல்' என்று வினவினான். சல்யன் 'கர்ண! ச்வேத வாகனன் யுத்தத்தில் உன்னை இப்பொழுது கொல்வானாகில், மாதவன் பாண்டவன் இருவரையும நான் ஒரு ரதத்தின் உதவி யினாலேயே கொல்வேன்' என்று மொழிந்தான். அர்ஜுனன் கோவிந்தரைப் பார்த்து இவ்விதமாகவே வினவினான். கேசவர், உரக்கச் சிரித்துக்கொண்டு அந்தப் பார்த்தனைப் பார்த்துச் சிறந்த இந்த வசனத்தை உரைத்தார். 'தனஞ்சய! சூரியன் தான் இருக்கும் இடத்தினின்று விழுந்தாலும் விழுவான்; பூமி யானது பலவாறாகச் சிதறினாலும் சிதறும்; அக்கினியானது குளிர்ச்சியை அடைந்தாலும் அடையும்; கர்ணன் உன்னை [ஒரு காலும்] கொல்லான். இது எவ்விதத்தினாலாவது சம்பவிக்கு மாகில் உலகத்துக்கு மாறுட்டம் நேரிடும். கர்ணனையும் சல்யனை யும் யுத்தத்தில் நான் கைகளாலேயே அவ்வாறு கொன்றுவிடு வேன்' என்றார். இவ்வாறான வாசுதேவருடைய வார்த்தையைக் கேட்டு வானரக்கொடியோனான அர்ஜுனன், உரக்கச் சிரித்துக் கொண்டு தக்கபடி காரியங்களைச் செய்பவரான வாசுதேவரைப் பார்த்து இவ்வாறு மறுமொழி கூறலானான்.

'ஜனார்த்தனரே! கர்ணனும் சல்யனும் எனக்கே போதாத வர்கள். கோவிந்தரே! கொடித் துணிகளுடனும் துவஜத்துட னும் சல்யனுடனும் ரதத்துடனும் குதிரைகளுடனும் குடையுட னும் கவசத்துடனும் சக்திகளுடனும் பாணங்களுடனும் வில்லு டனும் இப்பொழுது யுத்தத்தில் பாணங்களால் கர்ணன் பல வாறு அறுக்கப்பட்டதைப் பார்க்கப்போகிறீர். இரதத்துடனும் குதிரைகளுடனும் சக்திகளுடனும் கவசத்துடனும் ஆயுதங்களு டனும் இப்பொழுதே நன்றாக நொறுக்கப்பட்ட கர்ணனை, அரண் யத்தில் யானையினால் நொறுக்கப்பட்ட மரத்தைப்போல இப் பொழுது பாரும். மாதவரே! இப்பொழுது கர்ணனுடைய மனைவி களுக்கு விதவைத்தன்மையானது வந்துவிட்டது. அந்த ஸ்திரீ களால் நிச்சயமாக சொப்பனங்களில் அனிஷ்டங்கள் காணப் பட்டுவிட்டன. கர்ணனுடைய ஸ்திரீகளை இப்பொழுதே விதவை களாகப் பார்க்கப்போகிறீர். இது நிச்சயம். மூடனும் நீண்ட ஆலோசனையில்லாதவனும் நம்மை அவ்விதமாகப் பரிஹஸிக்

கின்றவனும் அடிக்கடி அவமதிப்பவனுமான இந்தக் கர்ணன் சபையையடைந்த கிருஷ்ணையைக்கண்டு முந்திச்செய்த (செய்கையாலுண்டான) கோபமானது எனக்குத் தணியவில்லை. கோவிந்தரே! மதயானையினால் ஒடித்துத் தள்ளப்பட்டிருக்கிற பூத்த மரத்தைப் போல் என்னால் நன்றாக த்வம்சம் செய்யப்பட்ட கர்ணனை இப்பொழுது பார்க்கப்போகிறீர். மதுஸூதனரே! இப்பொழுது, மதுரமான அந்த வாக்குகளைக் கேட்கப்போகிறீர். விருஷ்ணி வம்சத்தில் உதித்தவரே! பாக்கியத்தினால் விளங்குகிறீர். கர்ணன் இவ்விதமாகத் தள்ளப்பட்டபிறகு, நீர் சந்தோஷமுள்ளவராக அபிமன்யுவின் தாயான சுபத்திரையை இப்பொழுது சமாதானம் செய்யப்போகிறீர். ஜனார்த்தனரே! மிக்க மனக்களிப்புள்ளவராகப் பிதாவினுடைய சகோதரியாகிய குந்தியையும் தேற்றப்போகிறீர். மாதவரே! இப்பொழுது, கண்ணீருள்ள முகத்துடன் கூடின திரௌபதியையும் பாண்டுநந்தனரான தர்மராஜரையும் அம்ருதம்போன்ற வாக்குகளால் சமாதானஞ் செய்யப்போகிறீர்' என்று கூறினான்.

தொண்ணூற்றுநான்காவது அத்தியாயம்.

(கர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தத்தொடக்கமும், அஸ்வத்தாமா துரியோதனனுக்கு ஹிதம் உரைத்ததும், அவன் அதை அலட்சியம் செய்து யுத்தத்திற்காகச் சேனையை ஏவியதும்.)

தேவர்களாலும் நாகர்களாலும் அஸுரர்களாலும் ஸித்தர்களாலும் யக்ஷர்களாலும், கந்தர்வர்கள் ராக்ஷஸர்கள் அப்ஸரஸுகள் இவர்களுடைய கூட்டங்களாலும் பிரம்மரிஷிகளாலும் ராஜரிஷிகளாலும் கருடனாலும் அடையப்பட்ட ஆகாயமானது, ஆச்சரியப்படத்தக்க உருவமுள்ளதாக விளங்கியது. மனத்துக்கு இனிமையான சப்தங்களாலும் பலவகை வாத்தியங்களாலும் கானங்களாலும் ஸ்தோத்திரங்களாலும் நடனங்களாலும் நகைப்புக்களாலும் அதிகமாகச் சத்தமுள்ளதாகச் செய்யப்பட்டதும் ஆச்சரியகரமான ரூபத்துடன் கூடியதுமான அந்த ஆகாயத்தை எல்லா மனிதர்களும் ஆகாயத்தில் இருப்பவர்களும் கண்டார்கள். பிறகு, கௌரவ வீரர்களும் பாண்டவ வீரர்களும் அதிக ஸந்தோஷத்தோடு கூடியவர்களாக நான்கு வித வாத்தியகோஷங்களாலும் சங்கங்களுடைய சப்தங்களாலும் ஸிம்மநாதங்களாலும் பூமியையும் திக்குகளையும் அதிகமாக ஒலியிடும்படி செய்துகொண்டு சத்தத்தினாலேயே எல்லாச் சத்துருக்களையும் கொன்றார்கள். மனிதர்களாலும் குதிரைகளா

லும் யானைகளாலும் ரதங்களாலும் நெருக்கமுள்ளதும், பாணங்களும் கத்திகளும் சக்திகளும் ரிஷ்டிகளும் விழுவதினால் சகிக்க முடியாததும், தைரியசாலிகளால் அடையப்பட்டதும், கொல்லப்பட்ட (பிராணிகளுடைய) தேகங்களால் வியாபிக்கப்பட்டதுமான யுத்தரங்கமானது அப்பொழுது ரத்தமயமாக நான்கு பக்கத்திலும் பிரகாசித்தது. தேவர்களுக்கு அஸுரர்களோடு யுத்தம் நடந்ததுபோலப் பாண்டவர்களுக்குக் கௌரவர்களோடு யுத்தம் நடந்தது. நெருங்கிய மிக்க பயங்கரமான யுத்தம் அவ்வாறாக நடக்கவே, நன்றாகக் கவசம்பூண்டவர்களான தனஞ்சயனும் கர்ணனும் கூர்மையுள்ள நேராகச் செல்லுகின்ற பாணங்களால் திசைகளையும் ஒருவர் மற்றொருவருடைய சேனையையும் மறைத்துக்கொண்டார்கள். பிறகு, பாணங்களால் இருளானது உண்டுபண்ணப்பட்டிருக்கவே, உம்மைச் சேர்ந்தவர்களும் பிறர்களும் ஒன்றையும் காணவில்லை; பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகச் சிறந்த ரதிகர்களான கர்ணார்ஜுனர்களை அடுத்தார்கள். பிறகு, நான்கு பக்கத்திலும் ஆச்சரியமே தோன்றியது. பிறகு, அவ்விருவர்களும் கீழ்த்திசையினின்றும் மேற்றிசையினின்றும் வருகின்ற இரண்டு காற்றுக்கள்போலப் பரஸ்பரம் அஸ்திரத்தினால் அஸ்திரத்தை விலக்கிக்கொண்டு, பரவியிருக்கின்ற நெருங்கின இருளில் உதித்த சூரிய சந்திரர்கள்போல மிக விளங்கினார்கள். (யுத்தத்தை விட்டு) விலகிப் போகக்கூடாதென்று கட்டளையிடப்பட்டவர்களான சத்துரு வீரர்களும், அவ்வாறே உம்மைச் சார்ந்தவர்களும் (முற்காலத்தில்) சம்பரனையும் இந்திரனையும் சூழ்ந்துகொண்டு தேவாசுரர்கள் நின்றதுபோல அந்த மகாரதர்கள் இருவரையும் நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டு நின்றார்கள். மிருதங்கங்கள், பேரிகைகள், பணவங்கள், ஆனகங்கள் இவைகளுடைய சத்தங்களாலும் வாகனங்கள் சங்கங்கள் இவற்றின் சத்தங்களாலும் ஒலியுள்ளதாகச் செய்யப்பட்ட அந்த யுத்தரங்கத்தில் (சத்துருக்களால்) பொறுக்க முடியாதவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான அவ்விரு வீரர்களும் சூரிய சந்திரர்கள் போல சிம்மநாதங்களோடு விளங்கினார்கள். பெரிய தனுர்மண்டலத்தின் மத்தியை அடைந்தவர்களும் நல்ல காந்தியை உடையவர்களும் கிரணங்கள்போன்ற ஆயிரம் பாணங்களை உடையவர்களுமான அவ்விருவர்களும் யுத்தத்தில் ஜங்கம ஸ்தாவரங்களுடன் கூடின உலகத்தைக் கொளுத்த எண்ணங்கொண்டு யுகாந்தகாலத்தில் உதித்த இரண்டு சூரியர்களைபோல எவ்விதத்தினாலும் சகிக்க முடியாதவர்களாக விளங்கினார்கள். இருவர்களும் ஜயிக்கத்தகாதவர்கள்; இருவர்களும

பகைவர்களுக்கு யமன்போன்றவர்கள்; ஒருவரையொருவர் கொல்வதில் விருப்பமுள்ளவர்களும் சமர்த்தர்களுமான பாண்டவன் கர்ணன் இருவரும் மகாயுத்தத்தில் பயமற்றவர்களாக மகேந்திரனும் ஜம்பனும்போல எதிர்த்தார்கள். அரசரே! பிறகு, பெரிய வில்லைத் தரித்தவர்களும் மகாரதர்களுமான அவ்விருவர்களும் மஹாஸ்திரங்களைப் பிரயோகித்துக்கொண்டு பயங்கரமான பாணங்களால் அளவில்லாத மனிதர்களையும் குதிரைகளையும் யானைகளையும் கொன்றார்கள்; பரஸ்பரம் அடித்துக்கொண்டார்கள். பிறகு, புருஷஸ்ரேஷ்டர்களான கர்ணார்ஜுனர்களால் அடிக்கப்பட்ட கௌரவ பாண்டவர்களைச் சார்ந்த வீரர்கள், யானைகளோடும் காலாட்களோடும் குதிரைகளோடும் இரதங்களோடும், வனத்தில் வசிக்கும் பிராணிகள் சிம்மத்தினால் இம்சிக்கப்பட்டு ஓடுவதுபோலத் திக்குகளில் ஓடினார்கள். பிறகு, மகாயுத்தத்தில் துரியோதனன், கிருதவர்மா, சகுனி, கிருபர், குருபுத்திரரான அசுவத்தாமா இந்த ஐந்து மஹாரதர்களும், தனஞ்சயனையும் அச்சுதரையும் சரீரத்துக்குத் துன்பத்தை உண்டுபண்ணுகிற பாணங்களால் அடித்தார்கள். தனஞ்சயன், பகைவர்களையும் அவர்களுடைய விற்களையும் அம்புத் தூணிகளையும் துவஜங்களையும் குதிரைகளையும் ரதங்களையும் ஸாரதிகளையும் நான்கு பக்கத்திலும் அம்புகளால் ஒரே சமயத்தில் விரைவாக மிக அடித்து சூதபுத்திரனை கர்ணனையும் உத்தமமான பன்னிரண்டு பாணங்களால் அடித்தான். பிறகு, படையை ஏந்தியவர்களான நூறு ரதிகர்கள் விரைவுடன் அர்ஜுனனை எதிர்த்து ஓடிவந்தார்கள். நூறு யானைகளும் எதிர்த்து ஓடிவந்தன. குதிரை வீரர்களான சகர்களும் துஷாரர்களும் யவனர்களும் கொல்லவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு காம்போஜ தேசத்தில் தோன்றின சிறந்த குதிரைகளுடன் எதிர்த்தார்கள். தனஞ்சயன் சிறந்த ஆயுதங்களையுடைய வீரர்களைக் கையிலிருக்கிற அம்புகளோடு க்ஷுரங்களால் அறுத்தான். அவர்களுடைய தலைகள் பூமியில் விழுந்தன. குதிரைகளையும யானைகளையும் போர் புரிகின்ற ரதிகர்களையும் சத்துருக்களுடைய கூட்டங்களையும் யுத்த பூமியில் நாசஞ் செய்தான். பிறகு, ஆகாயத்தில், 'நல்லது, நல்லது' என்கிற வாக்குகளுடன் தேவர்களுடைய தூரியவாத்திய கோஷங்கள் மகிழ்ச்சியுள்ளவர்களால் வெளியிடப்பட்டன. நல்ல ரூபத்துடனும் வாஸனையுடனும் கூடியவையும் மங்களகரமாயிருப்பவையுமான உத்தமமான பூமாரிகளும் காற்றினால் அலைக்கப்பட்டு (க் கீழே) விழுந்தன. அப்பொழுது, தேவர்களையும் மனிதர்களையும் சாக்ஷிகளாகவுடைய ஆச்

சரியகரமான அந்த யுத்தத்தைக் கண்டு பிராணிகள் ஆச்சரியத்தை அடைந்தன. ஒரே நிச்சயமுள்ளவர்களான உம்முடைய புத்திரனும சூதபுத்திரனும் துன்பத்தையாவது ஆச்சரியத்தை யாவது அடையவில்லை

பிறகு, துரோணபுத்திரர், உமது புத்திரனுடைய கையைத் தம் கையினால் உறுதியாகப் பிடித்து சமதானப்படுத்திக் கொண்டு, 'துரியோதன! கிருபை பண்ணு. தணிந்துவிடு. பாண்டவர்களோடு விரோதம வேண்டாம. யுத்தம நிந்திக்கத் தக்கது. மஹாஸ்திரங்களை அறிந்தவரும பிருமமதேவருக்கு ஒப்பானவருமான குருவும் அவ்வாறே பீஷ்மர் முதலான மகாரதர்களும மாண்டார்கள். நானும எனனுடைய மாதுலரான கிருபரும் கொல்லப்படத் தகாதவர்கள். பாண்டவர்களோடு சேர்ந்து நெடுங்காலம் ராஜ்ஜியத்தை ஆளுவாயாக. தனஞ்சயன் என்னால் தடுக்கப்பட்டானாகில் நிறபான. ஜனார்த்தனரும விரோதத்தை விருபபவில்லை. யுதிஷ்டிரர் எப்பொழுதும பிராணிகளுடைய ஹிதத்தில் பறறுதலுள்ளவர். பீமஸேனன் அவருககு வசப்பட்டவன. நகுல ஸஹதேவர்களும அவ்வாறே. உன்னால் பார்த்தர்களோடு சமாதானமானது செய்யப்படுமேயாகில், உன னுடைய இச்சையினால் பிரஜைகள மஙகளத்தை அடைவனவாம. மிகுந்திருக்கிற அரசர்கள நகரங்களைநோக்கிச் செல்லட்டும். போர் வீரர்கள பகைமை நீஙகியவர்கள ஆகட்டும. அரசனே! என்னுடைய வசனத்தைக் கேளாமறபோனால் நீ மன வருத்தத்தை அடைந்து நிச்சயமாகவே பகைவர்களால் யுத்தத்தில் கொல்லப்படுவாய். கருணையுளளவரான தர்மராஜர் வேண்டப்பட்டால், பிராயம முதிர்ந்த பிதாவான திருதராஷ்டிரரையும கீர்த்தியுளளவளான காந்தாரியையும பார்த்துச் சாந்தியை அடைவார். பிரபுவான தர்மநந்தனா உசிதபபடி ராஜ்யத்தையும உனக்குக் கொடுகக ஸமமதிப்பார். கறறறிந்தவரும நல்ல புத்தியுள்ளவரும் வீரரும் எல்லாச் சாஸ்திரார்த்தங்களுடைய தத்துவத்தையும அறிந்தவரும தர்மாத்மாவுமான யுதிஷ்டிரர் வைரத்தைப் பாராட்டமாட்டார். அவர் பந்துவினிடத்தில் மீறிச் செல்வதிலலை. சண்டையில் எண்ணஙகொளளாதவளான திரௌபதியும தன பந்துஜனஙகள் விஷயத்தில ஆனந்தமடைவாள். புருஷஸ்ரேஷடர்களும பாண்டு நந்தனாகளுமான பீமார்ஜுனர்களும் மாதரீபுத்திரர்களான நகுல ஸஹதேவர்களும, வாஸுதேவர், புத்திசாலியான யுதிஷ்டிரர் ஆகிய இவ் விருவருடைய வசனத்தினது கௌரவத்தினாலும் [அவர்களு

டைய] அபிப்பிராயத்தில் நிற்பார்கள். துரியோதன! [உனது] ஆன்மாவைக் காத்துக் கொள். எல்லாவற்றிற்கும் ஆன்மா பாத்திரமன்றோ? உயிரோடிருப்பதில் முயற்சி செய். உயிரோடிருப்பவன் மங்களங்களைப் பார்க்கிறான். நீ உயிரோடு இருப்பாயாகில் ராஜ்யமும் ஸம்பத்தும் மங்களமும் கிடைக்கும். குரு வம்சத்திலுதித்தவனே! மரித்தவனுக்கு ராஜ்யமில்லை; சுகம் ஏது? பாரத! சென்றதும் செல்லுகின்றதுமான இந்த உலக நடையைப் பார். நீ பாண்டவர்களோடு பகைமை நீங்குவாயாக. குலத்தினது மிச்சத்தைப் பாதுகாப்பாயாக. குருவம்சத்திலுதித்தவனே! நான் அஹிதமான வசனத்தைச் சொல்லக்கூடிய காலம் சம்பவிக்க வேண்டாம். மிக்க புஜபலமுள்ளவனே! விருப்பத்தைச் சொல்லுகிறேன்; என்னுடைய வசனத்தை அவமதிக்காதே. இது அதிக தர்மத்துடன் கூடியது. அரசனுக்கும் குலத்திற்கும் இஃதன்றோ அதிகமான க்ஷேமத்தை உண்டுபண்ணக் கூடியது? காந்தாரீபுத்திர! குலத்துக்கு சுகத்தை உண்டு பண்ணுகிறவரான அந்தத் தர்மநந்தனரைக் குரு வம்சத்தின் விருத்தியின் பொருட்டு அடைவாயாக. புருஷர்களுள் சிறந்தவனே! கர்ணனும், வழியை விட்டு விலகாதவனும் வருங்காலத்து நன்மையுடன் கூடினவனுமான அர்ஜுனனை யுத்தத்தில் ஜயிக்கமாட்டானென்பது என்னுடைய நிச்சயமான எண்ணம். நரஶ்ரேஷ்டனே! மங்களகரமான என்னுடைய இந்த வசனமானது உனக்கு இனியதாகட்டும். ராஜேந்திரனே! நீ இதற்கு வேறுவிதமாக நடப்பாயாகில் மிக்க பெரிதான விநாசம் ஸம்பவிக்கும். இந்திரனும் யமனும் வருணனும் ஸ்ரீமானான குபேரனும் செய்யமுடியாததும் கிரீடி ஒருவனால் செய்யப்பட்டதுமான இந்தக் காரியத்தை உலகத்துடன்கூட நீ பார்த்திருக்கிறாய். தன்னிடத்திலுள்ள குணங்களாலே இந்தக் கர்ணனைக் காட்டிலும் மேன்மை பெற்றவனான தனஞ்சயன் என்னுடைய வசனம் அனைத்தையும் மீறி நடக்கமாட்டான். ராஜேந்திர! எப்பொழுதும் அவன் உன்னை அனுசரித்தே நடப்பான். கிருபை செய். நீ சாந்தியை அடைவாயாக. எனக்கு எப்பொழுதும் உன்னிடத்தில் அபிமானம் அதிகம். அதனாலும் அதிகமான நேசத்தினாலும் உன்னை நோக்கிச் சொல்லுகிறேன். கர்ணனை யுத்தத்தினின்று தடுக்கப்போகிறேன். கர்ணனிடத்தில் எனக்கு அதிகமான அன்பு இருக்கிறதன்றோ? கற்றறிந்தவர்கள் சினேகம் இயற்கையாக உண்டாகக் கூடியதென்றும் அவ்வாறே நல்வார்த்தையினால் தேடத்தக்கதென்றும் தனத்தினால் தேடத்தக்கதென்றும் பிரதாபத்தினால் நேரக்கூடியதென்றும் நான்கு

விதமாகச் சொல்லுகின்றார்கள். அவையனைத்தும் உனக்குப் பாண்டவர்களிடத்தில் இருக்கின்றன. வீரனே ! பிரபுவே ! உன்னுடைய அந்தப் பந்துக்கள் சமாதானத்தினால் மீண்டும் இதத்தை அடைவார்கள். நீ மனமகிழ்ந்து [பாண்டவர்களோடு] நேசத்தை அடைந்தால், உன்னால் உலகத்துக்கு ஒப்பற்றதான நன்மையானது செய்யப்பட்டதாகும் ' என்றார். கிருபர் இவ்வண்ணமாக நன்மையான இந்த வசனத்தை உரைக்கக் கேட்ட துரியோதனன், ஆலோசித்துப் பெருமூச்சுவிட்டு மனவருத்தம் அடைந்தவனாக உரைக்கலானான்.

' மித்திரரே ! நீர் சொல்லியது உண்மையே. விஞ்ஞாபனம் செய்கின்ற என்னுடைய வசனத்தையும் கேளும். துஷ்ட புத்தியுள்ள இந்தப் பீமன் புலிபோலப் பலாத்காரத்தால் துச்சாஸனனைக் கொன்று அட்டஹாஸஞ் செய்து பல வார்த்தையைச் சொன்னான். அது என் உள்ளத்திலிருக்கிறது. அது உமக்குந் தெரியாததன்று. சாந்தி உமக்கு எதனால் உண்டாகும் ? உக்கிரமான காற்றானது மேருவென்கிற பெரிய மலையை அடிக்கச் சக்தியுள்ளதாகாததுபோல அர்ஜுனன் யுத்தத்தில் கர்ணனை அடிக்கச் சக்தியுள்ளவனாகான். குந்திபுத்திரர்களும் என்னிடத்தில் பலாத்காரமாகப் பலவாறான விரோதத்தை நினைத்து சமாதானத்தை அடையமாட்டார்கள். குரு புத்திரரே ! வீரரே ! கர்ணனை, ' யுத்தத்தினின்று ஒழிந்து விடு ' என்று சொல்வதற்கும் நீர் தகுந்தவரல்லீர். இப்பொழுது, பல்குனன் அதிக சிரமத்துடன் கூடியவனாயிருக்கிறான். இந்தக் கர்ணன் அர்ஜுனனைப் பலாத்காரமாகக் கொல்லப்போகிறான். பூமி புரண்டாலும் புரளும்; மகரங்களுக்கு இருப்பிடமான சமுத்திரமானது வறட்சியடைந்தாலும் அடையும்; பெரிய மலைகள் மகாசமுத்திரத்தில் மிதந்தாலும் மிதக்கும்; அர்ஜுனன் கர்ணனை யுத்தத்தில் (ஒருகாலும்) ஜயிக்கமாட்டான். ஜலம், பூமி, ஆகாயம், காற்று, அதி உக்கிரமான காந்தியுள்ள அக்கினி இவைகளுக்கு எங்கும் இல்லாமை உண்டானாலும் உண்டாகும்; அர்ஜுனன் யுத்தத்தில் கர்ணனை ஜயிக்கமாட்டான் ' என்று கூறினான். உம்முடைய குமாரன், அந்தக் குருபுத்திரரைப் பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டு, அடிக்கடி அவரைச் சமாதானஞ் செய்து, பிறகு, தன் படைவீரர்களைப் பார்த்து, ' விரைவாகக் கொல்லுங்கள்; இந்தச் சத்துருக்களைக் குறித்து எதிர்த்து ஓடுங்கள்; குறைவற்ற பலமுள்ளவர்களான நீங்கள் ஏன் பேசாமலிருக்கிறீர்கள் ?' என்றான்.

தொண்ணூற்றைந்தாவது அத்தியாயம்.

(பீமன், போரில் கர்ணன் அர்ஜுனனை ஒத்திருத்தலைப் பொறுமல் கோபத்துடன் அர்ஜுனனைப் போருக்கு உத்ஸாகப்படுத்தியது.)

அரசரே! புத்திரர்களுடன்கூடி நீர் செய்த துராலோசனையினால் ஏற்பட்ட யுத்தத்தில் சங்கங்கள் பேரிகள் இவைகளுடைய முழக்கமானது நிரம்பியிருக்கும்போது, வெண்மையான குதிரைகளை உடையவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான அந்தச் சூரிய புத்திரனான கர்ணனும் அர்ஜுனனும் எதிர்த்தார்கள். நெருப்பைக் கக்குகின்ற சர்ப்பங்கள்போல முகங்களால் பெருமூச்சை விடுகின்றவர்களும் கீர்த்திசாலிகளுமான அவ்விரு வீரர்களும நெய்யினால் ஹோமஞ் செய்யப்பட்ட இரண்டு அக்கினிகள்போல யுத்தத்தில் அப்பொழுது ஜ்வலித்தார்கள். இமயமலையில் தோன்றியவைகளும் மதப் பெருக்குள்ளவைகளும மிக நீண்ட தந்தங்களுள்ளவைகளுமான இரண்டு யானைகள் ஒரு பெண் யானையின் நிமித்தமாகச் சண்டை செய்வதுபோல, உக்கிரமான வீரியமுள்ளவர்களும வீரர்களுமான தனஞ்சயனும் கர்ணனும் நன்கு எதிர்த்தார்கள். பெரிய மேகத்தோடு பெரிய மேகம் எதிர்ப்பதுபோலவும தற்செயலாக மலையோடு மலை எதிர்ப்பது போலவும வில், நாண்கயிறு, தலம், தேருருளை முனை இவைகளின சத்தத்துடன கூடிய அவ்விரு வீரர்களும் அம்பு மழையைப் பொழிந்துகொண்டு எதிர்த்தார்கள். ஸர்ப்பங்கள்போன்ற பாணங்களுடனும் அஸ்திரங்களுடனும் சக்திகளுடனும ரிஷ்டிகளுடனும கதாயுதங்களுடனும கத்திகளுடனும் கூடியவர்களும் கோபமாகிற காற்றினால் அலைக்கப்பட்ட அலைகள்போன்ற மாலைகளை உடையவர்களுமான அந்த இரு வீரர்களும் இரண்டு மலைகள போலவும், சதுர்யுகங்களின முடிவில் இரண்டு சமுத்திரங்கள் போலவும விரைவாக எதிர்த்தார்கள். முனை நன்றாக வளர்ந்திருக்கின்ற மரங்களுடனும கொடிகளுடனும் ஓஷதிகளுடனும் கூடியவைகளும, பெருகியிருக்கின்ற பலவிதமான அருவிப் பெருக்குடன கூடியவைகளும், அசைகின்றவைகளுமான இரண்டு மலைகள் மிக்க ஜலத்தினால் மோதுவதுபோல மஹாஸ்திரங்களால் அவ்விரு வீரர்களும பரஸ்பரம் அடித்துக்கொண்டார்கள். அம்புகளால் விசேஷமாக உடல் பிளக்கப்பட்ட குதிரைகளும ஸாரதிகளுமுள்ளவர்களும் பொறுத்தற்கு மிக அரிய அஸ்திரங்களால் எல்லாப் பக்கத்திலும் உடல் பிளக்கப்பட்டவர்களுமான அவ்விரண்டு ரதிகர்களுக்கும் முற்காலத்தில் இந்திரன் விரோசனன இவ்விருவர்களுக்கும் யுத்தம் நடந்தது போலப் பெரும் போர் நடந்தது. அதிகமான தாமரைமலர்களும்

கருநெய்தல்களும் மீன்களும் ஆமைகளும் நிரம்பியவைகளும் பக்ஷிகளுடைய கூட்டங்களால் ஒலியுள்ளவைகளாகச் செய்யப்பட்டவைகளுமான, அதிக சமீபத்திலிருக்கின்ற இரண்டு பெரிய மடுக்கள் காற்றினால் உயர எழுப்பப்பட்டு நெருங்குவதுபோல துவஜத்துடன் கூடின அந்த இரண்டு தேர்களும் நெருங்கின. மகேந்திரனுடைய பராக்கிரமம்போன்ற பராக்கிரமமுள்ளவர்களும் மகேந்திரனுக்கு ஒப்பானவர்களும மகாரதர்களுமான இருவரும், மகேந்திரன் விருத்திரன் இருவரும்போல மகேந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கு ஒப்பான பாணங்களால் அடித்துக் கொண்டார்கள். அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் யுத்தம் நேர்ந்திருக்கும் சமயத்தில், யானைகளையும் காலாட்களையும் குதிரைகளையும ரதங்களையுமுடையவைகளும், விசித்திரமான கவசங்களையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் ஆயுதங்களையு முடையவைகளுமான இரண்டு சேனைகளும் நடுக்கமுற்றன; ஆச்சரியத்தினால் உரக்க ஸிம்மநாதஞ் செய்தன; பூமியும் ஆகாயமும் நடுங்கின. மதங்கொண்ட ஒரு யானையானது மற்றொரு யானையை எதிர்ப்பதுபோலக் கர்ணன் கொல்லவேண்டுமென்கிற எண்ணத்தினால் அர்ஜுனனை எதிர்த்து வந்தபொழுது ஸிம்மநாதத்துடன் கூடியவர்களும் சந்தோஷமுள்ளவர்களுமான பார்க்க விருப்பமுள்ளவர்களால் வஸ்திரங்களைப் பிடித்திருக்கின்ற விரல்களுடன் கூடின கைகள் உயரத் தூக்கப்பட்டன. அச்சமயத்தில், ஸோமகர்கள், பார்த்தனைப் பார்த்து, 'அர்ஜுன! விரைவு பாராட்டுவாயாக. செல். கர்ணனைப் பிள. இவனுடைய தலையையும் திருதராஷ்டிர குமாரனை துரியோதனனுக்கு ராஜ்யத்திலிருக்கும் ச்ரத்தையையும் வெட்டுவாயாக. தாமதம் வேண்டாம்' என்று உரக்கக் கூச்சலிட்டார்கள். அவ்வாறே, அந்தச் சேனையிலிருந்த நம்மைச் சேர்ந்த அனேக யுத்த வீரர்கள், கர்ணனைப் பார்த்து, 'கர்ண! செல்; செல்; அர்ஜுனனைக் கொல்வாயாக. பிறகு, பார்த்தர்கள் மிக்க தைன்யமுற்றவர்களாக விளம்பமின்றி மறுபடியும் கானகம் செல்லட்டும்' என்று கூறினார்கள்.

பிறகு, கர்ணன் முதலில் பத்துப் பாணங்களால் அர்ஜுனனை விரைவாக அடித்தான். பிறகு கிரீடியானவன் நன்றாகப் பிரயோகிக்கப்பட்ட பதினெட்டுப் பாணங்களால் அப்பொழுது அந்தக் கர்ணனையும் அடித்தான். மறுபடியும், கர்ணன் விரைவுடன் அந்தப் பார்த்தனைத் தாழைமடல் போன்ற பத்துப் பாணங்களால் அடித்தான். பார்த்தனும் அந்தக் கர்ணனைத் தீட்டப்பட்ட நுனியுள்ளவையும் கூரிய வாயுள்ளவையுமான பத்துப் பாணங்களால் கச்சையின் நடுவில் அடித்தான். பார

தரே! பிறகு, கர்ணன், கோரமான யுத்தத்தில் வரம்பு கடந்து (யுத்த வீரர்களை) நொறுக்கிக்கொண்டு முனை கூரிய ஒன்பது பாணங்களால் மதங்கொண்ட யானையைக் கச்சை கட்டுமிடத் அடிப்பதுபோலப் பார்த்தனை அடித்தான். பிறகு, சுறுசுறுப் புடன் காரியங்களைச் செய்பவனும் மகாபலசாலியுமான சூதபுத் திரன் யுத்தத்தில் வேறு இரண்டு க்ஷுரங்களால் நமுசியானவன் மகேந்திரனை அடித்ததுபோல விரைவுடன் பலாத்காரமாக தில் அடித்தான். பாண்டவன் அந்தக் கர்ணனை உருக்குமயமான முனையுள்ளவைகளும் காதுவரையில் இழுத்து விடப்பட்டவை களுமான ஐந்து பாணங்களால் அடித்தான். அந்தப் பார்த்த னுடைய பாணங்கள் கால தூதர்கள் போல அப்பொழுது அவ னுடைய இரத்தத்தைப் பானஞ் செய்தன. பாரதரே! கர்ண னும், வாசுதேவரையும் பார்த்தனையும் வத்ஸ தந்தங்களால் நிரப்பினான். அந்த சூதபுத்திரனும் அர்ஜுனனுமாகிய இருவர் களும் பிரயோகிக்கப்படும் அம்புகளால் பரஸ்பரம் அடித்துக் கொண்டார்கள். அதிக ரோஷமுள்ளவர்களான அவ்விருவர் களும் பரஸ்பரம் துன்பம் விளைவிக்கக்கூடிய சமயத்தை நோக்கிக் கொண்டு அதிபயங்கரமாக எதிர்த்தார்கள். பிறகு, தேவ ராஜ குமாரனான அர்ஜுனன், பகைவர்களைத் தவிக்கச்செய்கிற ஆக்னேயாஸ்திரத்தைக் கர்ணன்மீது பிரயோகித்தான். யுத்த முனையில் தனஞ்சயனிடத்தினின்று வெளிப்பட்ட அந்த உத்த மாஸ்திரமானது அப்பொழுது நன்றாக ஜ்வலித்தது. பிரதாப சாலியான அந்தக் கர்ணன, ஆக்னேயாஸ்திரம் எடுக்கப்பட்ட தைக் கண்டு யுத்தத்தில் அதைத் தணிப்பதற்காக, வாருணாஸ் திரத்தைப் பிரயோகித்து அதனால் நெருப்பை அவித்தான். பலசாலியான கர்ணன் பர்ஜன்யாஸ்திரத்தினால் எல்லாத் திசை களையும இருளால் மூடப்பட்டவைகளாகச் செய்தான். பிறகு, நன்றாகப் பிரயோகிக்கப்பட்ட வாயவ்யாஸ்திரத்தினால் (அர்ஜு னன்) அந்த மேக சமூகங்களை விலக்கித் தள்ளினான். பிறகு, சத்துருக்களைத் தவிக்கச் செய்பவனும் சத்துருக்களுடைய கூட் டத்தை நன்றாக நாசஞ்செய்யுந் தன்மையுள்ளவனுமான அந்தத் தனஞ்சயன் அதிக கோபமுள்ளவனாகிக் காண்டீவத்தினது நாண்கயிற்றை உருவிக்கொண்டு தேவராஜனுக்குப் பிரியமான வஜ்ராஸ்திரத்தை வெளியிட்டான். காண்டீவத்தினிடமிருந்து மிக்க கூர்மையுள்ளவைகளான நாராசங்களும் நாளீகங்களும் வராஹகர்ணங்களும் தோன்றின. கோரமாயிருப்பவைகளும் வஜ்ராயுதத்துக்கு ஒப்பான வேகமுள்ளவைகளுமான ஆயிரக் கணக்கான அந்த ஆயுதங்கள் நான்கு பக்கத்திலும் சென்றன.

பகலின் முடிவில் பக்ஷிகளுடைய கூட்டங்கள் கீழ்நோக்குகின்ற வைகளாகி இரவில் விரைவாக மரத்தை அடைவதுபோலப் பார்த்தனுடைய பாணங்கள் கர்ணனுடைய ரதத்தில் பாய்ந் தன. அவைகளைச் சூதபுத்திரனான கர்ணன் பாணங்களால் ஏற்றுக்கொண்டான். யுத்த பூமியில், அவ்வாறு தன்னுடைய பாண சமூகங்கள் தள்ளப்பட்டதைப் பொறுத த்னஞ்சயன்மீது கர்ணன் கோபத்தினால் கவரப்பட்ட மனத்தையுடையவனும் யமனுக்கு ஒப்பான செய்கையை யுடையவனுமானான். சூரியன் உதித்தவுடன் க்ஷணத்தில் நட்சத்திரங்களுடைய ஒளியை நாசம் செய்வதுபோலக் கர்ணன் போர் புரிகின்ற அந்தப் பார்த்தனு டைய எல்லாப் பாண சமூகங்களையும் நாசஞ்செய்தான். பிறகு, மிகப் பெரிய சண்டையில் ரோஷத்தினால் நன்றாக ஜ்வலிக்கின்ற வனும் கம்பீர சுபாவமுள்ளவனுமான அந்தப் பீமன், கோப முள்ளவனாகிக் கையைத் தன் கையினால் பிசைந்துகொண்டு ரோஷத்தினால் பொறுக்காதவனாகப் பார்த்தனைப் பார்த்துப் பின்வருமாறு வாக்கியத்தை உரைக்கலானான். 'கிரீடியே! சூத புத்திரன் உன்னை முனைகூரிய தாழைமடல் போன்ற பாணங்க ளால் எவ்வாறு அடிக்கலாம்? நீ காண்டவ வனத்தில் அக்னி யின் பொருட்டு வாய் நிறைந்த ஆகாரத்தைக் கொடுத்து (அதி லுள்ள) பிராணிகளை ஜயித்த அந்தத் தைரியத்தினால் சூதபுத் திரனைக் கொல். அல்லது, நான் கதையினால் இவனை நொறுக்கி விடுகிறேன் காலத்தினால் பக்குவமானவனும் மிக்க குரூரமான சொற்களையே உரைப்பவனுமான இந்தக் கர்ணன் பார்த்தனை எதிர்த்து உயிருடன் (மீண்டு) செல்லான்' என்றான்.

தொண்ணூற்றுருவது அத்தியாயம்.

(கர்ணன் போரில் மிஞ்சக் கிருஷ்ணன் அர்ஜுனனை உத்ஸாகப்படுத்திய யதும், அர்ஜுனன் தன் திறமையைக் காட்டியதும்)

பிறகு, சக்ரபாணியான ஸ்ரீ வாசுதேவரும், திருப்பியடிக்கப் படுகின்ற அம்புகளைக் கண்டு, பார்த்தனை நோக்கி, 'கிரீடியே! இப்பொழுது நீ பார்த்துக்கொண்டிருக்கையிலேயே கர்ணன் உன்னுடைய அஸ்திரங்களை அஸ்திரகணங்களால் கவர்ந்து விட்டான். ஒன்று சேர்ந்தவர்களும் கர்ஜிக்கின்றவர்களுமான கௌரவர்களை நீ கண்டு (செய்யவேண்டியதை) அறிந்திருக் கிறாய். ஏன் மதிமயக்கமுற்றிருக்கிறாய்? எல்லாக் கௌரவர் களும், கர்ணனை முன்னிட்டுக்கொண்டு, உன்னுடைய அஸ்தி ரத்தை அஸ்திரங்களால் நாசஞ் செய்யப்படுகின்றதாக அறிகிறார்கள். கிரீடியே! பார்த்த! எந்தத் தைரியத்தினால் அப்

படிப்பட்ட யுத்தத்தில் [1] நீ தாமஸனையும், அதிகோர ரூபிகளான தாமஸர்களையும் கொழுப்பினால் அதிக கர்வங்கொண்டவனும் வீரியமுள்ளவனுமான தம்போத்பவன என்கிற அசுரனையும் யுத்தகளத்தில் கொன்றாயோ, யுத்தத்தில் அஸ்திரத்தைப் பிரயோகிப்பதில் சமர்த்தனான நீ அந்தத் தைரியத்தினால் இப்பொழுது கர்ணனைக் கொல்வாயாக. கத்திகளை ஓரத்திலுடைய தும் என்னால் கொடுக்கப்பட்டதுமான இந்த சுதர்சனத்தினால் இப்பொழுது இந்தச் சத்துருவான கர்ணனுடைய தலையை, சத்துருவான நமுசியினுடைய தலையை வஜ்ரத்தினால் இந்திரன் அறுத்ததுபோல் விரைவாக அறுப்பாயாக. வீர! வேடவேஷம் பூண்ட மகாத்துமாவான சிவபகவான் உன்னால் எந்தத் தைரி யத்தினால் மகிழ்விக்கப்பட்டாரோ, அப்படிப்பட்ட நீ மீண்டும் அந்த தைரியத்தைக் கொண்டு, கர்ணனை அவனைச் சேர்ந்தவர் களுடன்நாசஞ் செய்வாயாக. பிறகு, பட்டணங்களோடும் கிராமங் களோடும் கூடியதும், ஐசுவரியத்தினால் நிறைந்ததும், பகைவர் கூட்டங்கள் கொல்லப்பட்டதுமான கடல் சூழ்ந்த பூமியை நீ அரசருக்குக் கொடு. பார்த்த! ஒப்பற்ற கீர்த்தியையும் நீ அடை வாயாக. பரதர்களுள் சிறந்த வீர! வீரர்களனைவரும் கர்ணனை முன்னிட்டுக்கொண்டு சிறந்த உன்னுடைய அஸ்திரத்தை முறிய அடித்துக் கர்ஜிக்கின்றார்கள். நல்ல முயற்சியைச் செய். யுத் தத்தில் சிறந்த உத்ஸாகமுள்ளவனான கர்ணனையும் [பலத்தி னால்] குறைவடையும்படி செய்யப்படுகிறவனான உன்னையும் பார்த்து, இந்த ஸ்ருஞ்சயர்களும் ஸோமகர்களும் இதோ ஓடு கிறார்கள்' என்று சொன்னார். பீமனாலும் ஜனார்த்தனராலும் நன்றாகத் தூண்டப்பட்ட அர்ஜுனன், அப்பொழுது தன்னை நினைத்து எல்லாவற்றையும் அறிந்து அவ்விடத்திற்கு வந்த தின் பிரயோஜனத்தையும் உணர்ந்து, கேசவரை நோக்கி இவ் வண்ணம் உரைக்கலானான். 'உலகம் க்ஷேமமடைவதற்காகவும கர்ணனைக் கொல்வதற்காகவும் இதோ நான் உக்கிரமான மகாஸ்திரத்தைப் பிரயோகிக்கிறேன. அதற்கு நீரும் தேவர்க ளும் பிரும்மதேவர்கள் சிவபெருமானும பிரும்மஞானிள் அனை வர்களும் எனக்கு அனுமதியளிக்கவேண்டும' என்றான். அளவை மீறிய வல்லமையுடையவனும் இடக்கையினாலும் அம்புகளைப் பிரயோகிக்குந் தன்மையுள்ளவனுமான அந்தப் பாண்டவன், இவ்வாறு சொல்லிவிட்டு, பிரும்மதேவருக்கு நமஸ்காரஞ் செய்து மனத்தினால் தியானித்து, வெளியிடத் தக்க தும் ஸர்வோத்துமமானதும் சகிக்க முடியாததுமான பிரும்

[1] இரட்டித்தலால் ஒருசொல் விட்டப்பட்டது.

மாஸ்திரத்தை வெளியிட்டான். பிறகு, அதிக தேஜஸுள்ள அர்ஜுனன் காண்டீவத்தினால் விடப்பட்டவைகளும் ஸர்ப்பங்கள் போல உக்கிரமானவைகளும் சூரியனுடைய கிரணங்களுக்கு ஒப்பானவைகளும் ஜ்வலிக்கின்றவைகளுமான அம்புகளால் திசைகளையும் எல்லாத் திக்கோணங்களையும் நன்றாக மூடினான். பரதர்களுள் சிறந்த அர்ஜுனனால் நூறுநூறாக விடப்பட்டவைகளும் பயங்கரமான வாயுள்ளவைகளும் மிக்க கூர்மையுள்ளவைகளும் யுகம் முடியுங்காலத்தில் [பிரகாசிக்கின்ற] சூரியனுடைய கிரணங்கள்போலப் பிரகாசிக்கின்றவைகளுமான பாணங்கள் க்ஷணத்திற்குள் கர்ணனுடைய தேரினை நன்றாக மூடிவிட்டன. அப்பொழுது யுத்த மத்தியில் கர்ணனால் வேகத்துடன் ஆயிரமாயிரமாக விடப்பட்ட அந்தப் பாணக் கூட்டங்கள் குறைவற்றவைகளாக பர்ஜன்யனால் விடப்பட்ட நீர்த்தாரைகள்போலப் பாண்டவனை எதிர்த்து வந்து தாக்கின. பிறகு, நிகரில்லாத பிரபாவமுள்ளவனும் பயங்கரமான பலத்துடன் கூடியவனுமான அந்தக் கர்ணன், கிருஷ்ணனையும் கிரீடியையும் விருகோதரனையும் மும்மூன்று பாணங்களால் அடித்து உரத்த நாதத்தோடு கோரமாகச் சப்தித்தான். பிறகு, பாணங்களால் அடிக்கப்பட்ட குந்தீ புத்திரனான அந்தக் கிரீடியானவன், பீமனையும் அவ்வாறே ஜனார்த்தனரையும் பார்த்து, மறுபடியுமே பொறாதவனாக, ஒரே சமயத்தில் பதினெட்டுப் பாணங்களை வில்லினின்று பொழிந்தான். அந்த அர்ஜுனன், கொடியை ஒரு பாணத்தினாலும், சல்யனை நான்கு பாணங்களாலும், கர்ணனை மூன்று பாணங்களாலும் அடித்துப் பிறகு நன்றாக விடப்பட்ட பத்துப் பாணங்களால் பொற் கவசத்தை அணிந்திருக்கிற [1] சேனாபதியையும் அடித்தான். அந்த ராஜகுமாரன் தலையை இழந்தவனாகவும் கைகளை இழந்தவனாகவும், குதிரைகள் சாரதி வில் கொடி இவைகளை இழந்தவனாகவும், கோடாலிகளால் வெட்டப்பட்ட சால விருக்ஷம்போல், நன்றாக அடிக்கப்பட்டுத் தேரிலிருந்து கீழே விழுந்தான். கிரீடி மறுபடியும் கர்ணனை மூன்று பாணங்களாலும் எட்டுப் பாணங்களாலும இரண்டு பாணங்களாலும் நான்கு பாணங்களாலும் பத்துப் பாணங்களாலும் அடித்து நானூறு யானைகளைச் சாய்த்து ரதிகர்களையும் எட்டு ரதங்களையும் ஆயிரங் குதிரைகளையும் மறுபடியும் எண்ணாயிரம் குதிரை வீரர்களையும் வீரர்களான காலாட்களையும் கொன்றான். முக்கியர்களும் சூரர்களுள் சிறந்தவர்களும் உத்தமமான பாணங்களால் அதிகமாக

[1] 'ஸேனாபதி' என்பது மூலம்; 'சபாபதி' என்பது வேறு பாடம்.

அடிக்கப்படுகின்றவர்களும் பகைவர்களைக் கொல்லுகின்றவர்களுமான கர்ணனையும் பார்த்தனையும் கண்டு, சிறந்தவர்களான எல்லா வீரர்களும் குதிரைகளை இழுத்து நிறுத்திக்கொண்டு அங்கே நின்றார்கள். பிறகு கர்ணன் பாணங்களால் காண்டீவத்திலுள்ள நாண்கயிற்றை ஒலியுண்டாகும்படி அறுத்து அர்ஜுனனை நன்றாக மூடினான். சூதபுத்திரன் இந்த க்ஷணத்தில் அவனை நூறு க்ஷுத்ரகங்களால் நிரப்பினான்; சட்டை உரித்த பாம்புக்கு ஒப்பானவைகளும் கூர்மையுள்ளவைகளும் எண்ணெயிட்டு நன்கு தீட்டப்பட்டவைகளும் பட்சிகளின் இறகுகளால் வேகமுள்ளவைகளுமான அறுபது பாணங்களால் வாசுதேவரையும் பிளந்தான். அச் சமயத்தில், ஸோமகர்களும் விரைவுடன் ஓடினார்கள். பிறகு, சுறுசுறுப்பாகக் காரியங்களைச் செய்பவனும் பெரிய வில்லை உடையவனுமான கிரீடி மிக்க திடமானதும் தன் கையினால் இழுக்கப்படுவதைப் பொறுக்கக்கூடியதும் புதிதுமான நாண்கயிற்றை எடுத்து ஒரு நிமிஷத்திற்குள்ளாகக் காண்டீவத்தில் பூட்டினான். சூத புத்திரனான கர்ணன் யுத்தத்தில் பகைவர்களைக் கொல்லுகிறவனான அந்தப் பார்த்தனுடைய நாண்கயிறு அற்றதையும் லாகவத்தினால் வேறு நாண்கயிறு பூட்டினதையும் அறியவேயில்லை. அரசரே! அஃது ஆச்சரியமாக இருந்தது. கர்ணனுடைய பாணங்களால் காயப்படுத்தப்பட்ட அங்கங்களையுடையவனும் மிக்க ரோஷமுள்ளவனுமான பார்த்தனும், அந்த நாண்கயிற்றை விரைவாகப் பூட்டிக் கர்ணனுடைய வில்லிலிருக்கின்ற நாண்கயிற்றை அறுத்து யுத்தத்தில் உம்மைச் சேர்ந்த யுத்த வீரர்களை எதிர்த்தான். பார்த்தனுடைய அஸ்திரத்தினால் இருள் உண்டு பண்ணப்பட்டபொழுது, ஆகாயத்தில் பக்ஷிகளுடைய கூட்டமானது ஸஞ்சாரஞ் செய்யவே இல்லை. பார்த்தன் அட்டகாசம் செய்துகொண்டு ஒரு நிமிஷத்திற்குள் பத்துப் பாணங்களால் சல்யனைக் கவசத்தில் நன்றாக அடித்தான். பிறகு பார்த்தன், கர்ணனைப் பன்னிரண்டு பாணங்களால் அடித்து மறுபடியும் ஏழு பாணங்களால் அடித்தான். பார்த்தனுடைய வில்லினின்று வேகத்துடன் பிரயோகிக்கப்பட்டவைகளும் உக்கிரமான வேகமுள்ளவைகளுமான பாணங்களால் திடமாக அடிக்கப்பட்டவனும் விசேஷமாகப் பிளக்கப்பட்ட சரீரத்தையுடையவனும் ரத்தத்தினால் நனைக்கப்பட்ட அங்கங்களை உடையவனுமான அந்தக் கர்ணன், முடிவுக்காலத்தில் ருத்திரர்போல விளங்கினான். பிறகு, கர்ணன் மூன்று பாணங்களால் தேவராஜனுக்கு ஒப்பான தனஞ்சயனைப் பிளந்தான். கொல்ல எண்ணங்கொண்

டவனுன கர்ணன், அச்சுதர்மீது நெருப்புப் போன்றவைகளும் ஸர்ப்பம்போன்றவைகளுமான ஐந்து அம்புகளைப் பிரவேசிக்கச் செய்தான். அரசரே! நல்ல புங்கங்களுள்ளவைகளான அந்தப் பாணங்கள், பொன்னுல் விசித்திரமாயிருக்கிற புருஷோத்தமரான ஸ்ரீ வாசுதேவருடைய கவசத்தைப் பிளந்து பிறகு கீழே விழுந்து வேகத்துடன் பூமியில் பிரவேசித்தன. அவைகள் ஸ்நானஞ் செய்து கர்ணனிடம் வந்து சேர்ந்தன. பிறகு, தனஞ்சயன் அந்த ஐந்து பாணங்களையும் நன்ருகப் பிரயோகிக்கப்பட்ட பத்துப் பல்லங்களால் ஒவ்வொன்றையும் மும்மூன்ருகத் துண்டாக்கினுன். அவைகள் கருடனுடைய மூக்கினுல் துண்டாக்கப்பட்ட ஸர்ப்பங்கள் போலப் பூமியில் விழுந்தன. பிறகு, அர்ஜுனன், குரோதத்தினுல், உலர்ந்த காட்டை எரிக்கிற அக்கினி போல மிக ஜ்வலித்தான். அளவுபடாத தைரியமுள்ள அந்த அர்ஜுனன் காதுவரையில் இழுத்து விடப்பட்டவைகளும் சரீரங்களுக்கு நாசத்தை உண்டுபண்ணுகின்றவைகளும் ஜ்வலிக்கின்றவைகளுமான பாணங்களால் கர்ணனை மர்மஸ்தானங்களில் அடித்தான். அவன் துக்கத்தினுல் நிலைதவறினுன்; தைரியத்தினுல் மாத்திரம் நின்ருன். பிறகு, மகாத்மாவான அர்ஜுனன் சூதபுத்திரனுடைய தேகத்தைத் தேடுகிறவன் போல் அம்புகளை வெளிப்படுத்தினுன். தங்கத்தினுல் விசித்திரமான கட்டுக்களுடன் கூடியவைகளும் பெரியவைகளுமான அந்த அம்புகள் நூறுநூருகப் பூமியில் விழுந்தன. அரசரே! பிறகு, தனஞ்சயன் கோபித்துக்கொள்ளவே, பாண சமூகங்களால் திக்கோணங்களும் திக்குகளும் சூரியனுடைய ஒளிகளும் கர்ணனுடைய இரதமும் குளிர்ந்த பனியினுல் மூடப்பட்ட மலைபோலப் பார்க்கத்தகாதனவாயின. பார்த்தனுடைய கையினுல் நன்ருக விடப்பட்ட பெரிய அம்புகளால் அடிக்கப்படுகின்ற சக்கரரக்ஷகர்களுடன் கூடின கர்ணனுடைய பின்புறத்தைக் காக்கின்றவர்களும் முந்திச் செல்லுகின்றவர்களும் பயந்து ஓடினுர்கள். பிறகு, பரதர்களுள் சிறந்த வீரனும் மகானுபாவனும் யுத்தத்தில் (பகைவர்களைக்) கொல்லுகின்றவனுமான அர்ஜுனன், துரியோதனனுல் தூண்டப்பட்டவர்களும் மிக்க பெருமை வாய்ந்தவர்களும் இரதங்களை உடையவர்களும் ஸாரமாயிருப்பவர்களுமான வீரர்களை விசேஷித்து நாசஞ் செய்தான். ராஜரே! காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனும் கௌரவர்களுள் சிறந்தவனும் நிகரற்ற வீரனுமான அர்ஜுனன், இரண்டாயிரம் சிறந்த கௌரவ வீரர்கள் எல்லோரையுமே இரதங்களோடும் ஸாரதிகளோடும் க்ஷணத்திற்குள் நாசத்தையடையச்செய்தான்.

பிறகு, உம்முடைய குமாரர்களும் மிகுதியிருக்கிற கௌரவர்களும் கர்ணனை விட்டுவிட்டு ஓடினார்கள். இவர்களைச் சிதறி ஓடும்படி செய்து, பாணங்களால் காயப்படுத்தப்பட்டவர்களும் புலம்புகின்றவர்களுமான உமது புத்திரர்களை நன்றாக நொறுக்கினான். எல்லாக் கௌரவர்களும் பார்த்தனுடைய பாணங்களால் விசேஷித்து அடிக்கப்பட்டும் மிக்க பரிதாபத்தை அடைவிக்கப்பட்டும் நாசமடைந்தார்கள். பிறகு, சிறந்த வீரர்கள் கர்ணனுடைய இரதத்தைத் தொடர்ந்து செல்லும் விஷயத்தில் துரியோதனனால் மறுபடியும் தூண்டப்பட்டார்கள். 'ஓ! க்ஷத்திரியர்களே! நீங்களனைவரும் சூரர்களுக்குள் சிறந்தவர்கள். க்ஷத்திரிய தர்மத்தில் நிலைபெற்றவர்கள். சமீபத்திலிருக்கும் கர்ணனை விட்டுவிட்டு ஓடுவதென்பது உங்களுக்குத் தகுந்ததன்று' என்றான். உம்முடைய புத்திரனால் அவ்வாறு சொல்லப்பட்டும், பயத்தினால் நிறம் மாறியிருக்கின்ற அந்தக் கௌரவ வீரர்கள் நிற்கவேயில்லை. பிறகு, எல்லாரும் திசைகளைச் சூன்யமாகப் பார்த்துத் திக்கோணங்களையும் திக்குகளையும் நோக்கி ஓடினார்கள். பாரதரே! பார்த்தனுடைய பாணங்களால் நன்கு வாட்டப்பட்டவனும் பயத்தினால் பிளக்கப்பட்டவனும் கௌரவர்களால் கைவிடப்பட்டவனுமான கர்ணன் அந்த யுத்தத்தில் மனவருத்தத்தை அடையவில்லை. பகைவனான அர்ஜுனனை எதிர்த்தே சென்றான்.

தொண்ணூற்றேழாவது அத்தியாயம்

(கர்ணன் நாகாஸ்திரம் எய்ததும், கிருஷ்ணன் தேரை அழுத்த நாகாஸ்திரம் அர்ஜுனனது கிரீடத்தைக் கவர்ந்ததும், தேருருளை பூமியில் அழுந்தக் கர்ணன் ஒரு முகூர்த்தம் போரை நிறுத்த வேண்டினதும்.)

நரேந்திரரே! எய்த அம்புகள் விழக்கூடிய தூரத்தில் நின்ற கௌரவர்கள் அங்கிருந்தும் விலகிச் சென்றார்கள். மின்னல்போலப் பிரகாசிப்பதும் நன்றாக விருத்தியடைந்ததுமான தனஞ்சயனுடைய அஸ்திரத்தை நான்கு பக்கத்திலும் கண்டார்கள். பிறகு, மகாயுத்தத்தில் கோபங்கொண்ட பார்த்தனால் கர்ணனுடைய வதத்தின் பொருட்டு விடப்பட்டதும் ஆகாயத்தை அடைந்ததும் அதிக கோரமானதுமான பார்த்தனுடைய அந்தப் பாணத்தை சூதபுத்திரன் பாணங்களால் விழுங்கினான். விருத்தியடைகின்றதும் கௌரவர்களை எரிக்கின்றதுமான அந்த அஸ்திரத்தைத் தங்கக்கட்டுக்களுள்ள பாணங்களால் அடித்தான். கர்ணனோ, திடமான நாண்கயிற்றுடன் கூடினதும் பயனற்றதாகாததுமான வில்லை நாணேலி

யிடும்படி செய்து பாண சமூகங்களைப் பிரயோகித்தான். அவன் பரசுராமரிடத்தினின்று அடையப்பட்டதும் மகாமகிமை பொருந்தியதும் பகைவர்களை நாசஞ் செய்கின்றதுமான அதர்வண வேதோக்தமான அஸ்திரத்தினால் எரிக்கின்ற அந்த அர்ஜுனனுடைய அஸ்திரத்தை நாசஞ் செய்தான்; அர்ஜுனனையும் கூர்மையுள்ள பாணங்களால் அடித்தான். அரசரே! பிறகு, அந்த சமயத்தில் பரஸ்பரம் பாணங்களால் அடிப்பவர்களான அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் யுத்தத்தில் தந்தங்களால் ஒன்றோடொன்று முட்டுகின்ற இரண்டு யானைகளுக்கு நேர்வது போல மிக்க பெரிதான சண்டை நேர்ந்தது. மன்னரே! பிறகு, கர்ணனும் பார்த்தனும் சரமாரியினுடைய கூட்டங்களால் ஆகாயத்தை இடைவெளியற்றதாகச் செய்தபொழுது, ரணரங்கமானது அஸ்திரங்களுடைய கூட்டத்தினால் நன்றாக மூடப்பட்டதும் நெருங்கியதுமாயிற்று. பிறகு, எல்லாக் கௌரவர்களும் சோமகர்களும் பாணமயமான பெரிய வலையைக் கண்டார்கள். அவர்கள் அப்பொழுது நெருங்கிய பாணாந்தகாரத்தில் வேறு ஒரு பிராணியையும் காணவில்லை. வேந்தரே! எப்பொழுதும் அம்புகளைத் தொடுக்கின்றவர்களும் அநேக பாணங்களை நன்றாக விடுகின்றவர்களுமான அந்த வில்லாளிகள் இருவரும் யுத்தத்தில் பற்பல திவ்யாஸ்திரங்களால் விசித்திரமான வழிகளைக் காண்பித்தார்கள். யுத்த மத்தியில் இவ்வாறு போர் புரிகின்றவர்களான அவ்விருவருள், சூதபுத்திரன் ஒரு சமயத்தில் (அர்ஜுனனைவிட) அதிகரித்தவனானான்; பிருதா புத்திரனான கிரீடி ஒரு சமயத்தில் வீரியத்தினாலும் அஸ்திரங்களாலும் மாயா பலத்தினாலும் ஆண்மையினாலும் மேலாக இருந்தான். யுத்தத்தில் ஒருவர்க்கொருவர் சமயத்தை எதிர்பார்க்கின்றவர்களான அவ்விருவருடைய கோரமானதும் பிறர்களால் சகிக்கமுடியாததுமான அந்த யுத்தத்தைக் கண்டு எல்லா யுத்த வீரர்களும் ஆச்சரியத்தை அடைந்தார்கள். அரசரே! பிறகு, ஆகாயத்திலுள்ள பிராணிகள் அந்தக் கர்ணனையும் பார்த்தனையும் புகழ்ந்தார்கள். ஆகாயத்தில் எல்லா இடத்திலும், 'ஓ! கர்ண! நல்லது; ஓ! அர்ஜுன! நல்லது' என்கிற வாக்கானது கேட்கப்பட்டது. அரசரே! அப்பொழுது அந்த யுத்தத்தில் ரதங்களும் குதிரைகளும் யானைகளும் மிதித்தலால் பூமியானது பிளக்கப்படவே, அதிலிருந்து காண்டவ வனம் கொளுத்தப்பட்ட தருணத்தில் விடுபட்டு அப்பொழுது கோபத்தினால் பூமியில் நுழைந்ததும் அர்ஜுனனால் உண்டுபண்ணப்பட்ட வைரத்துடன் கூடியதாகப் பாதாளப் பிரதேசத்தில் படுத்திருந்ததுமான

அந்த அசுவஸேனனென்கிற நாகமானது கர்ணார்ஜுனர்களுடைய யுத்தத்தைக் கண்டு, பிறகு, வேகத்துடனும் மேல்நோக்கிய கதியுடனும் மேலே வந்து, 'துராத்மாவான இந்தப் பார்த்தனிடத்தில் உண்டாயிருக்கின்ற வைரத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு இஃதன்றோ சமயம்?' என்று நன்றாக எண்ணி அம்பு வடிவமாகிக் கர்ணனுடைய தூணியில் நுழைந்தது. பிறகு, யுத்தகளமானது அப்பொழுது அஸ்திரங்களுடைய கூட்டங்களால் நெருங்கியதும் அவற்றின் கிரண சமூகங்கள் பரவினதுமாயிற்று. அப்பொழுது, அந்தக் கர்ணன் பார்த்தன் இருவரும் அம்புத் திரள்களுடைய மழைகளால் ஆகாயத்தை இடைவெளியற்றதாகச் செய்தார்கள். பெரிய பாண சமூகமயமாயிருக்கின்ற அந்த யுத்தத்தைக் கண்டு எல்லாக் கௌரவர்களும் சோமகர்களும் பயந்தார்கள். நெருங்கின பாணாந்தகாரத்தில் ஸஞ்சரிக்கின்ற வேறு ஒரு வஸ்துவையும் காணவில்லை. பிறகு, புருஷஶ்ரேஷ்டர்களும் எல்லா உலகங்களுள்ளும் சிறந்த வில்லாளிகளும் யுத்தத்தில் உயிரை இழக்கத் துணிந்தவர்களுமான அந்த வீரர்கள் இருவரும் யுத்தம்செய்து களைப்புற்றார்கள். இருவர்களும், உயரக் கிளம்பிப் பார்க்கின்றவர்களாகவும், சந்தன ஜலத்தினால் நனைக்கப்பட்டவர்களாகவும், சாமரங்களுடன் கூடியவைகளும் தேவலோகத்தில் தோன்றியவைகளும் ஆகாயத்தில் நிற்கின்றவைகளுமான அப்ஸரசுகளுடைய கூட்டங்களால் (வீசப்பட்டவர்களாகவும்), இந்திரன் சூரியன் இவர்களுடைய தாமரை மலர் போன்ற இரு கைகளாலும் துடைக்கப்பட்ட முகங்களுள்ளவர்களாகவும் இருந்துகொண்டு போர் புரிந்தார்கள். பிறகு, பார்த்தனால் அம்புகளால் அதிகமாகத் தவிக்கச் செய்யப்பட்டவனான கர்ணன் பார்த்தனை மீறுதபொழுது பாணங்களால் விசேஷமாகக் காயப்படுத்தப்பட்ட அங்கங்களையுடைய வீரனான அவன் தனியே படுத்திருக்கிற அதனை [=நாகாஸ்திரத்தை] மனத்தில் நினைத்தான். பிறகு, கர்ணன் சத்துருக்களை நாசஞ்செய்கின்றதும் நன்றாகச் சேர்த்து வைக்கப்பட்டதும் ஸர்ப்ப முகம்போன்ற முகமுள்ளதும் ஜ்வலிக்கின்றதும் பயங்கரமாயிருப்பதும் நன்றாகப் படிந்த கணுக்களுள்ளதும் உக்ரமாயிருப்பதும் தீட்டப்பட்டதும் பார்த்தனைக் கொல்வதற்கென்றே பலநாளாகக் காப்பாற்றப்பட்டதும் எப்பொழுதும் பூஜிக்கப்பட்டதும் சந்தனப் பொடியில் படுக்கவைக்கப்பட்டுள்ளதும் சுவர்ணமயமான அம்புத் தூணியில் படுத்திருப்பதும் மிக்க தேஜசுள்ளதும் உக்கிரமான வேகமுள்ளதும் ஐராவதத்தின் வம்சத்தில் தோன்றியதும் நன்றாக ஜ்வலிக்கின்றதுமான ஓர் அம்பை யுத்தத்தில் ஸவ்யஸாசியினு

டைய தலையை அபஹரிக்க எண்ணங்கொண்டவனாகக் காது வரையில் இழுத்தான். பிறகு, திக்குகளும் ஆகாயமும் மிக ஜ்வலித்தன. நூற்றுக்கணக்காகக் கோரமான குறைக்கொள்ளி களும் விழுந்தன. அந்த நாகாஸ்திரமானது வில்லில் பூட்டப் பட்டவுடனே, இந்திரனுடன்கூடின லோகபாலர்கள் ஹாஹா காரம் செய்தார்கள். அந்த சூதபுத்திரன் அந்த நாகாஸ்திரத் தைக் கோபத்தினால் [1] கடைக்கண் பக்கத்தை (க் குறிவைத்துப்) பூட்டினான். சிறந்த அந்தப் பாணமானது, யுத்தத்தில் கடைக் கண்பக்கத்தில் மிக்க நோக்கமுள்ளதாயிருத்தலைக் கர்ணன் அறிய வில்லை. அந்த நாகம் யோக பலத்தினால் பாணத்தில் பிரவே சித்ததையும் அறியவில்லை. ஆயிரம் கண்களையுடையவனான இந்திரன், பாணத்தில் பிரவேசித்திருக்கிற ஸர்ப்பத்தைக் கண்டு 'என் பிள்ளை மாண்டான்' என்று எண்ணித் தளர்ச்சியடைந்த அங்கங்களையுடையவனானான். தாமரை மலரில் தோன்றியவரும் சிறந்த மனோபாவத்துடன் கூடியவரும் மனத்தை அடக்கியவரு மான பிரும்மதேவர், தேவராஜனைப் பார்த்து, 'நீ மனவருத்தம் அடையாதே; விஜயனுக்கே ஜயலக்ஷ்மி' என்றார். பிறகு மகாத்மாவான சல்யன், பாணத்தைப் பூட்டினவனும் உக்கிர சுரூபமுள்ளவனுமான அந்தக் கர்ணனைப் பார்த்து, 'கர்ண! [அர்ஜுனனுடைய] கழுத்தை லட்சியம் வைத்து உன்னால் இந்தப் பாணம் பூட்டப்படவில்லை. பகைவனைக் கொல்லக்கூடிய பாணத்தை நன்கு பார்த்துப் பூட்டுவாயாக' என்று கூறினான். பிறகு, மனவுறுதியுள்ள சூதபுத்திரன், குரோதத்தினால் கண் கள் மிகச் சிவந்து, மத்திர ராஜனைப் பார்த்து, 'சல்ய! கர்ணன் இரண்டு தடவை பாணத்தைக் குறிபார்த்துப் பூட்டான். என் னைப்போன்றவர்கள் கபட யுத்தம் செய்யமாட்டார்கள்' என் றான். பலவானான கர்ணன், இவ்விதமாக இந்த வார்த்தை யைச் சொல்லிவிட்டு, அநேக வருஷ காலமாகப் பூஜிக்கப்பட்ட அந்தப் பாணத்தைப் பிரயத்தனத்துடன் பிரயோகித்தான். 'அடே! பல்குன! நீ மாண்டாய்' என்று வைதுகொண்டு கடுமையான வசனத்தையும் உரக்கச் சொன்னான். கர்ணனு டைய கையினால் பிரயோகிக்கப்பட்டதும், நெருப்புக்கும் சூரிய னுக்கும் ஒப்பானதும், மிக்க கோரமானதும், நாண்கயிற்றினின் றும் விடுபட்டதும், கர்ணனுடைய வில்லினின்றும் விடுபட்டது மான அந்தப் பாணமானது ஆகாயத்தையடைந்து அந்தரிக்ஷத் தில் ஜ்வலித்தது. விருஷ்ணி குலத்தில் சிறந்த வீரரான ஸ்ரீ வாஸுதேவர், [அவ்வாறு] வருகின்றதும் ஜ்வலிக்கின்றதும்

---

[1] 'அபாங்கதேசே' என்பதும், அவாங்முகம்' என்பதும் மூலம்.

ஆகாயத்தை அடைந்திருக்கின்றதுமான அந்தப் பாணத்தைக் கண்டு உடனே ரதத்தினுடைய சக்கரத்தை அழுத்தி ஐந்து அங்குலம் (பூமியில்) புதையும்படி செய்தார். பிறகு, மதுசூதனரைப் பூஜிப்பதற்காக அந்தரிக்ஷத்தில் மிக்க பெரிதான சத்தமுண்டாயிற்று. மதுசூதனருடைய பிரயத்தினத்தினால் அந்த ரதமானது அவ்வாறு பூமியில் அமிழ்த்தப்பட்டவுடனே தேவ வாக்குகளும் திவ்ய புஷ்பங்களும் சிம்மநாதங்களும் தோன்றின. பிறகு, அழகிய மொட்டுக்களுடனும் புஷ்பங்களுடனும் கூடிய மரங்களடர்ந்த மலையின் சிகரத்தை உத்தமமான இந்திரனுடைய வஜ்ஜிராயுதம் அபகரிப்பதுபோல, அந்த நாகாஸ்திரமானது, அநேக ரத்தினங்களால் சித்திரிக்கப்பட்ட கிரீடத்தை அர்ஜுனனுடைய தலையினின்று பலாத்காரமாக அபகரித்தது. பிறகு, சிறந்த வேகமுள்ள அந்த நாகாஸ்திரமானது பொன்னால் சித்திரவேலை செய்யப்பட்டுள்ள கிரீடத்தைப் பார்த்தனுடைய முடியினின்று அபகரித்தது. பொன்னாலிழைக்கப்பட்ட அந்தக் கிரீடமானது நன்றாக ஜ்வலித்துக்கொண்டு பூமியில் மிகவும் பயங்கரமாக விழுந்தது. பிறகு, சூதபுத்திரனான கர்ணன், அர்ஜுனனுடைய தலைக்கு அலங்காரமாயிருந்ததும், சுவர்ணத்தினாலும் முத்துக்களாலும் மணிகளாலும் வஜ்ரங்களாலும் சித்திரவேலை செய்யப்பட்டதும், பூமியிலும் ஆகாயத்திலும் சுவர்க்கத்திலும் ஜலத்திலும் பிரசித்திபெற்றதும், சூரியன், சந்திரன், அக்கினி, ஜ்யோதிமண்டலங்கள் இவைகளுடைய காந்திபோன்ற காந்தியையுடையதுமான கிரீடத்தை எப்பொழுதும் இயற்கையான சிறந்த கோபத்தோடுகூடிய பாணத்தினால் அர்ஜுனனுடைய தலையினின்றும் கவர்ந்தான். பொன்னாலும் முத்துக்களாலும் மணிகளாலும் வஜ்ரங்களாலும் அலங்கரிக்கப்பட்ட எந்தக் கிரீடமானது, தவத்தினால் [பிரஸன்னரான] சுயம்புவான பிரம்மதேவரால் இந்திரனுக்காகப் பிரயத்தினத்தினால் தம்மாலேயே செய்யப்பட்டதோ, மிக்க விலைமதிக்கத்தக்க ரூபத்துடன் கூடியதும் பகைவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறதுமான எந்தக் கிரீடத்தைத் தேவராஜன் தேவ சத்துருக்களான அஸுரர்களை நாசஞ்செய்த அர்ஜுனனுக்கு சந்தோஷத்தோடு தானே கொடுத்தானோ, தேவதைகளுள் சிறந்தவர்களும் பிநாகம், பாசம், அசனி, தண்டம் இவைகளை முறையே தரித்தவர்களுமான ருத்திராலும வருணனாலும் இந்திரனாலும் நிதிகளை ரக்ஷிக்கிற குபேரனாலும் எந்தக் கிரீடமானது பீடிப்பதற்கும் சாத்தியமாகாததோ அந்தக் கிரீடத்தைக் கர்ணன் நாகாஸ்திரத்தினால் பலாத்காரமாக அபஹரித்தான். உத்தமமான அம்

பிஞல் அதிகமாக அடிக்கப்பட்டதும், விஷமுள்ள நாகத்திஞல் நன்ருக ஜ்வலிக்கின்றதும், மிக்க ஜ்வாலையுடன் கூடியதும் அழகியதுமான பார்த்தனுடைய உத்தமமான கிரீடமானது ஜ்வலிக்கின்ற சூரியன் அஸ்தகிரியினின்று விழுவதுபோல் விழுந்தது. உலகங்களில் அந்தச் சப்தத்தைக் கேட்ட ஜனங்கள், 'காற்றிஞல் பூமி, ஆகாயம், சுவர்க்கம், ஜலம் இவைகள் பலாத்காரமாகப் புரட்டப்பட்டன; அல்லது சுழலும்படி செய்யப்பட்டன' என்று நிச்சயித்தார்கள். திசைகளும் கலங்கின. கரிய நிறமுள்ளவனும் யௌவனமுள்ளவனுமான அந்தப் பார்த்தன் கிரீடமில்லாமல் மூன்று சிகரங்களுடன் மலை விளங்குவது போல் விளங்கிஞன். [1] பிறகு, அர்ஜுனன் மனவருத்தமடையாதவஞக அப்பொழுது வெள்ளை வஸ்திரத்திஞல் தன் தலை மயிர்களை நன்ருகத் தூக்கிக் கட்டிக்கொண்டு, சம்பூர்ணமான கலைகளுடன்கூடச் சிகரத்தை அடைந்திருக்கிற சந்திரஞல் உதய பர்வதம் பிரகாசிப்பதுபோல் பிரகாசித்தான். ராதேயனுடைய கையிஞல் பிரயோகிக்கப்பட்டதும் நெருப்புக்கும் சூரியனுக்கும் ஒப்பான காந்தியுள்ளதும் மகிமை பொருந்தியதும் அர்ஜுனஞல் உண்டு

---

[1] இந்த கூ௯-வது அத்தியாயத்தில் ச௦-வது சுலோகம் தொடங்கி ச௪-வது சுலோகம் வரையிலுள்ள நான்கு சுலோகங்களின் ஸ்தானத்தில் சில புஸ்தகத்தில் வேறு கக சுலோகங்களிருக்கின்றன. அவற்றின் பொருள் :—

கறுத்த நிறமுள்ளவனும் யௌவனமுள்ளவனும் உயர்ந்த சிகரத்துடன்கூடின நீல பர்வதம் போன்றவனுமான அந்தப் பார்த்தன், கிரீடமின்றி விளங்கிஞன். பிறகு, அவன் அப்பொழுது மனவருத்தமடையாதவஞக வெள்ளை வஸ்திரத்திஞல் தன் தலை மயிர்களை நன்ருகத் தூக்கிக் கட்டிக்கொண்டு சிகரத்தை அடைந்திருக்கின்ற சூரியனுடைய கிரணத்திஞல் உதய பர்வதம்போல நன்ருக விளங்கிஞன். [வாயிஞல் அசுவஸேனன் என்கிற புத்திரனைக் கௌவிக்கொண்டு, துள்ளிக் குதித்துக் காண்டவ வனதகனத்திலிருந்து அதை ரக்ஷித்ததிஞல்] மங்களகரமான முகத்துடன் கூடினதும் (தன்ஞல்) உண்டுபண்ணப்பட்டு பாண ரூபத்தை அடைந்திருப்பதுமான புத்திர வடிவமாயிருப்பதும் சூரிய புத்திரஞல் பிரயோகிக்கப்பட்டதுமான பெண்ணுகமானது, நன்ருக வெளிப்பட்டிருக்கின்ற தேஜஸிஞலும் பலத்திஞலும் மிகப் பிரகாசிப்பவனும் * குதிரைகளின் கடிவாளத்துக்கு நேரான இடத்தை அடைந்திருக்கிற தலையுடன் கூடினவனுமான அர்ஜுனனைக் கண்டு அதிதியின் புத்திரஞன இந்திரனுக்குப் பூஷணமாக இருந்ததும் நன்ருக ஏற்படுத்தப்பட்டதும் சூரிய கிரணங்கள் போன்ற கிரணங்களால் உலகத்தை நிரப்பும் தன்மையுள்ளதுமான அர்ஜுனனுடைய மகுடத்

---

* கழுத்திருந்த உயரத்தில் தலை வந்ததென்பது.

பண்ணப்பட்ட வைரத்துடன் கூடியதுமான அந்த மகா ஸர்ப்ப மானது, அர்ஜுனனுடைய கிரீடத்தை அபகரித்துக்கொண்டு மேலே கிளம்பியது. ஆகாயத்தில் கிளம்புகின்ற அந்த ஸர்ப் பத்தைக்கண்டு, புருஷஸ்ரேஷ்டரான ஸ்ரீ வாசுதேவர், பார்த்தனை நோக்கி, 'பாண்டு நந்தன! உன்னைக் கொல்வதற்காகப் பிரயோ கிக்கப்பட்டதும் உக்ரமாயிருக்கின்றதுமான மகா ஸர்ப்பத்தைப் பார்; பார்' என்று சொன்னர். மதுசூதனரால் இவ்வண்ணம் உரைக்கப்பட்ட அர்ஜுனன், அவரைப் பார்த்து, 'கருடனு டைய வாயில் விழாமல் என்னை நாசம் செய்வதின்பொருட்டு இப்பொழுது வருகின்ற இந்த ஸர்ப்பமானது யாது?' என்று உக்கிரமான வாக்கினுல் வினவினுன். வாசுதேவர், 'விற்பிடித் துக் காண்டவ வனத்தில் அக்னியைத் திருப்தியடையும்படி செய்த உன்னுல் [கொல்லாமல் விடப்பட்டு] ஆகாயத்தையடைந் திருந்ததும் தாயினுல் ரக்ஷிக்கப்பட்ட தேகத்துடன் கூடியதும் ஒரே உருவம் என்றெண்ணித் தன்னுடைய தாயானது கொல் லப்பட்டதுமான அந்த நாகமானது அந்த வைரத்தை நினைத் துக்கொண்டு தன் விநாசத்தின்பொருட்டு நிச்சயமாக உன்னை எதிர்க்கிறது, பகைவர்களைப் பொறுக்கிறவனே! ஆகாயத்தி னின்று நழுவி விழுகின்றதும் மிக ஜ்வலிக்கின்றதுமான எரி நக்ஷத்திரம்போல் எதிரில் வருகின்ற இந்த ஸர்ப்பத்தைப் பார்'

தைக் கவர்ந்தது. அந்த ஸர்ப்பத்தைய் பாணப் பிரயோகத்தினுல் அடித்த வனை அர்ஜுனன் அதனை அடையாமையால் மிருத்யுவினுடைய வசத்தை அடையவில்லை. பிறகு, கர்ணனுடைய கையினின்று விடுபட்டதும் நெருப் புக்கும் சூரியனுக்கும் ஒப்பானதும் மிகச் சிறந்ததும் அர்ஜுனனேடு வைர முள்ளதும் பெரும் பாம்புமான அந்தப் பாணமானது, கிரீடத்தைப் பேர்த்துக்கொண்டு (அர்ஜுனனைத்) தாண்டிச் சென்றுவிட்டது. சுவர் ணத்தினுல் சித்திரிக்கப்பட்ட அர்ஜுனனுடைய அந்தக் கிரீடத்தை இழுத் துக்கொண்டு வந்து அதனையும் எரித்துவிட்டு மறுபடியும் அம்புத் தூணியை நோக்கிச் செல்வதற்கு விரும்பியது. அதனைக் கர்ணன் பார்த்தான். அந்த ஸர்ப்பமும் கர்ணனைப் பார்த்துக் கூறியது. 'கர்ண! என்னுல் அர்ஜுன னுடைய தலையானது அபகரிக்கப்படாமையால் நான் உன்னுல் நன்ருகக் குறிவைத்து விடப்படவில்லை. நீ யுத்தத்தில் நன்ருகப் பார்த்து, என்னை விரைவாகப் பிரயோகம் செய். உனக்கும் எனக்கும் சத்துருவாயிருக்கின்ற அர்ஜுனனைக் கொல்லுவேன்' என்றது. யுத்தத்தில் இவ்வாறு சொல்லிய தைக் கேட்ட அந்த சூதபுத்திரனுன கர்ணன், அந்த ஸர்ப்பத்தைப் பார்த்து, 'உக்ரரூபத்துடன் கூடிய நீ யார்?' என்று வினவினுன். நாகமானது, 'கர்ண! பார்த்தனுல் என் தாய் கொல்லப்பட்டபடியால் வைரமுண்டுபண்ணப்பட்டவ னென்றும் தீங்கிழைக்கப்பட்டவனென்றும் என்னை அறிவாயாக. வஜ்ரத்

என்று சொன்னார். பிறகு, அந்த ஜிஷ்ணுவானவன், ரோஷத்தி னால் திரும்பிக் குறுக்காக மேலே கிளம்பி வருகின்ற நாகத்தைக் கூருள்ளவையும் நல்ல முனையுள்ளவையுமான ஆறு பாணங்க ளால் அறுத்தான். அந்த நாகமானது உடலறுக்கப்பட்டதாகப் பூமியில் விழுந்தது. அரசரே! பிறகு, அந்த சர்ப்பமானது கிரீடி யினால் நாசஞ் செய்யப்பட்டவுடன், ஸர்வ வியாபியும் புருஷோத் தமருமான ஸ்ரீ வாசுதேவர், அமிழ்ந்த ரதத்தை அந்தப் பூதலத் தினின்று தாமே இரு கைகளாலும் மீண்டும் விரைவாக மேலே தூக்கினார். அந்த முகூர்த்தத்தில், புருஷர்களுள் சிறந்த வீர னான கர்ணன், குறுக்காகப் பார்த்துக்கொண்டு சாணைக் கல்லில் தீட்டப்பட்டவைகளும் மயில் இறகுகளை இறகுகளாகவுடையவை களுமான பத்துப் பாணங்களால் தனஞ்சயனை அடித்தான். பிறகு, அர்ஜுனன், (கர்ணன்மீது) நன்றாக இழுத்துவிடப்பட்ட வைகளும் கூருள்ளவைகளுமான பன்னிரண்டு வராஹகர்ணங் களைப் பிரயோகித்து ஸர்ப்பத்திற்குச் சமமான வேகமுள்ள நாரா சத்தைக் காதுவரையில் இழுத்துப் பிரயோகித்தான். நன்றாகப்

தைத் தரிக்கின்ற இந்திரனே நேரில் இவனுக்கு ரக்ஷகனாக ஏற்பட்டா லும் இவன் யமனுடைய வீடு செல்வான்' என்று மறுமொழி கூறியது. கர்ணன், 'ஓ! நாகமே! கர்ணன் இப்பொழுது யுத்தத்தில் பிறனுடைய பலத்தை ஆதாரமாகக்கொண்டு ஜயத்தை அடைய விரும்பமாட்டான். ஓ! நாகமே! நூறு அர்ஜுனனை நான் கொல்வதாயிருந்தாலும் இரண்டு தடவை ஒரு பாணத்தை ஸந்தானம் செய்யமாட்டேன்' என்றான். உத்த மனும் சூரிய புத்திரனுமான கர்ணன், அப்பொழுது யுத்த மத்தியில் மறுபடி யும் அந்த நாகத்தைப் பார்த்து, 'நான் வேறு கொடிய அஸ்திரப் பிரயோ கத்தினாலும் உத்தமமான முயற்சியினாலும் கோபத்தினாலும் பார்த்தனைக் கொல்வேன். நீ நல்ல சுகியாகச் செல்வாயாக' என்று கூறினான். யுத்தத் தில் கர்ணனால் இவ்வாறு கூறப்பட்ட நாகராஜாவானது, ரோஷத்தினால் அந்தக் கர்ணனுடைய வாக்கியத்தைப் பொறுக்கவில்லை. அரசரே! அந்தக் கொடிய நாகமானது (பார்த்தனைக்) கொல்லக் கருதித் தன் சொந்த உரு வத்தை எடுத்துக்கொண்டு தானே பார்த்தனைக் கொல்வதின்பொருட்டுச் சென்றது. பிறகு, வாசுதேவர், யுத்தத்தில் பார்த்தனைப் பார்த்து, 'அர் ஜுனா! வைரத்துடன் கூடின இந்த மகா ஸர்ப்பத்தை நீ கொல்' என்று கூறினார். மதுசூதனரால் இவ்வாறு சொல்லப்பட்டவனும் பகைவர்களு டைய வீரியங்களைத் தாங்குகின்றவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட வனுமான அந்த அர்ஜுனன், 'இப்பொழுது என் பக்கத்தைநோக்கி வரு கின்ற இந்த ஸர்ப்பமானது யாது? இது கருடனுடைய வாயைத் தானா கவே அடையப்போகிறது' என்றான்.

பிரயோகிக்கப்பட்ட அந்த உத்தமமான பாணமானது கர்ணனுடைய விசித்திரமான கவசத்தைப் பிளந்து பிராணவாயுக்களை ஓட்டுகின்றதுபோல ரத்தத்தைக் குடித்து ரத்தத்தினால் பூசப்பட்ட இறகுகளுடன் கூடியதாகப் பூமியில் பிரவேசித்தது. பிறகு, சுறுசுறுப்பாகக் காரியங்களைச் செய்பவனான கர்ணன், தடியினால் அடிக்கப்பட்ட பெரிய ஸர்ப்பம்போல அம்பு வீழ்ந்ததினால் கோபம் மூட்டப்பட்டவனாகி அப்பொழுது அதிக விஷமுள்ள ஸர்ப்பமானது கொடிய விஷத்தைக் கக்குவதுபோலக் கொடிய பாணங்களைப் பிரயோகித்தான். அவன், ஜனார்த்தனரைப் பன்னிரண்டு பாணங்களாலும், அவ்வாறே அர்ஜுனனை, புதிய தொண்ணூறு பாணங்களாலும் பிளந்து மறுபடியும் கோரமான பாணத்தினால் பாண்டவனைப் பிளந்து சிம்மநாதஞ் செய்து உரக்கச் சிரித்தான். இந்திரனுக்கு ஒப்பான விக்கிரமமுள்ள அர்ஜுனன், இந்தக் கர்ணனுடைய அந்த சந்தோஷத்தைப் பொறுக்கவில்லை. மர்மஸ்தானங்களைப் பிளக்கிறவனான அர்ஜுனன், பிறகு, இந்தக் கர்ணனுடைய மர்மங்களை, இந்திரன் யுத்தத்தில் பராக்கிரமத்தினால் பலனை அடித்ததுபோல நூற்றுக்கு மேற்பட்ட அம்புகளால் அடித்தான். பிறகு, அர்ஜுனன், யமனுடைய தண்டத்துக்கு ஒப்பான தொண்ணூறு பாணங்களை அப்பொழுது கர்ணன்மீது பிரயோகித்தான். அந்தப் பாணங்களால் அடிக்கப்பட்ட சரீரத்துடன்கூடின அந்தக் கர்ணன், வஜ்ரத்தினால் பிளக்கப்பட்ட மலைபோலத் துன்பமடைந்தான். உத்தமமான மணிகளாலும் உத்தமமான வஜ்ரங்களாலும் பொன்னாலும் அலங்கரிக்கப்பட்ட அந்தக் கர்ணனுடைய சிரோபூஷணமான கிரீடமானது, தனஞ்சயனால் பிரயோகிக்கப்பட்ட பாணங்களால் அடிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தது; உத்தமமான குண்டலங்களும் விழுந்தன. அதிக விலையுள்ளதும் சிறந்த சிற்பிகளால் பிரயத்தினத்தினால் செய்யப்பட்டதும் காந்தியுள்ளதும் நெடுங்காலமாக இருக்கின்றதுமான கர்ணனுடைய கவசத்தைப் பாண்டவன் நொடிக்குள் பாணங்களால் பலவாறாக உடைத்தான். அந்த அர்ஜுனனுடைய பாணங்களால் குண்டலங்கள் அறுக்கப்பட்டவனும் தேகத்தில் அதிகமாகக் காயப்படுத்தப்பட்டவனுமான அந்தக் கர்ணன் அப்பொழுது இரத்தத்தினால் சிவந்த அங்கங்களையும் காதுகளையுமுடையவனாகி ஆகாயத்தில் அங்காரகனுடன் கூடின திருவோணம்போல விளங்கினான். பிறகு, அர்ஜுனன், கோபங்கொண்டு, கவசத்தை இழந்தவனான அந்தக் கர்ணனைக் கூர்மையுள்ள நான்கு சிறந்த பாணங்களால் பிளந்தான். பகைவனால் மிக அடிக்கப்பட்ட அந்தக் கர்ணன், ரோகியானவன் பித்தத்தினாலும் கபத்தினாலும் வாதத்தி

னாலும் ஜ்வரத்தினாலும் எவ்வாறு துன்பமடைவனோ அவ்வாறு துன்பமடைந்தான். அர்ஜுனன், விரைவுடன் பெரிதான தனூர் மண்டலத்தினின்று வெளிப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளும் சிறந்த பயிற்சியினாலும் பிரயத்தினத்தினாலும் பலத்தினாலும் பிரயோகிக்கப்பட்டவைகளுமான அநேகம் சிறந்த பாணங்களால் கர்ணனை அடித்து மர்மஸ்தானங்களைப் பிளந்தான். பார்த்தனால் கடிய வேகமுள்ளவையும் கூரிய நுனியுள்ளவையும் பற்பல விதமாய் இருப்பவையுமான பாணங்களால் இடமாக அடிக்கப்பட்ட கர்ணன், கைரிக தாதுக்களால் சிவந்ததும் தாழ்வரைகளில் சிவந்த ஜலத்தைப் பெருக்குகின்றதுமான மலைபோல் விளங்கினான். பிறகு, அர்ஜுனன் நேராகப் போகின்றவைகளும் புதியவைகளும் பொற் புங்கமுள்ளவைகளும் மிக்க இடமானவைகளும் உருக்கு மயமானவைகளும் யமனுடைய அக்னிமயமான தண்டம் போன்றவைகளுமான பாணங்களால் அக்னியினுடைய குமாரரான ஸுப்ரம்மண்யர் கிரௌஞ்ச பர்வதத்தைப் பிளந்ததுபோலக் கர்ணனை நடுமார்பில் பிளந்தான். பிரபுவே! பிறகு, நன்றாக அடிக்கப்பட்ட சூத புத்திரன், அம்புத்தூணியையும் இந்திர வில்லுக்கு ஒப்பான அந்த வில்லையும் எறிந்துவிட்டுப் பிறகு, தடுமாற்றமுற்றவனாகிக் கைப்பிடி தளர்ந்து ரதத்திலிருந்தபடியே மூர்ச்சையடைந்தான். உத்தமனும் ஆண்மை விரதத்தில் நிலைபெற்றவனுமான அர்ஜுனன், வியசனத்தில் [அகப்பட்டிருக்கிற] அந்தக் கர்ணனை அப்பொழுது கொல்வதற்கு விரும்பவில்லை. பிறகு, உபேந்திரரான ஸ்ரீ வாசுதேவர், அர்ஜுனனைப் பார்த்து, 'பாண்டவ! ஏன் அஜாக்ரதையுடன் இருக்கிறாய்?' என்று மிக்க பரபரப்புடன் [பின்வருமாறு] கூறலானார். 'எப்பொழுதுமே கற்றறிந்தவர்கள், பகைவர்கள் பலஹீனர்களாக இருந்தாலும் அவர்களுடைய [சமயத்தை] க்ஷணநேரங்கூட எதிர்பார்க்கமாட்டார்கள். விசேஷித்துப் பண்டிதன் வியசன காலங்களில் பகைவர்களைக் கொன்று தர்மத்தையும் கீர்த்தியையும் அடைகிறான். ஆதலால், நிகரற்ற வீரனும், எப்பொழுதும் உனக்கு விரோதியுமான கர்ணனைச் சீக்கிரமாக நாசஞ் செய்வதற்கு விரைவுபடுவாயாக. சமர்த்தனான சூதபுத்திரன் உன்னை எதிர்த்துவருவான். இந்திரன் நமுசியைக் கொன்றதுபோல இவனைப் பிளந்துவிடு' என்றார். பிறகு, எல்லாக் கௌரவர்களுள்ளும் உத்தமனான அர்ஜுனன், 'அது அவ்விதமே' என்று ஜனார்த்தனரை விரைவாகப் பூஜித்து, முற்காலத்தில் சம்பரனைக் கொன்றவனான இந்திரன் பலியை அடித்ததுபோல உத்தமமான பாணங்களால் கர்ணனை அடித்தான். பாரதரே! கிரீடியானவன் குதிரைகளோடும் ரதத்தோடுங்கூடிய கர்ணனை

வத்ஸ தந்தங்களால் நன்ருக நிரப்பினன். பொற்கட்டுக்களுள்ள பாணங்களால் முழு முயற்சியினுலும் திசைகளையும் மூடினன். வத்ஸ தந்தங்களால் நன்ருக நிறைக்கப்பட்டவனும் அகன்று பருத்த மார்பையுடையவனுமான அந்தக் கர்ணன், நன்ருகப் பூத்திருக்கிற அசோகுடனும் பலாசுடனும் முள்ளிலவுடனுங் கூடியதும் சந்தனக் காட்டுடன் சேர்ந்ததுமான மலைபோல விளங்கினன். அரசரே! கர்ணன், யுத்தத்தில் சரீரத்தில் போடப்பட்ட அநேக பாணங்களால், மரங்களால் நாற்பக்கத்திலும் நிறைக்கப் பட்ட தாழ்வரைகளுடனும் குகைகளுடனும் கூடியதும் பிரகாச மான கர்ணிகார மரங்களுடன் கூடியதுமான சிறந்த மலைபோல விளங்கினன். அம்புக் கூட்டங்களைப் பலவாறு பிரயோகிக்கின்ற வனும் அம்புக் கூட்டங்களாகிற கிரணங்களுடன் கூடியவனு மான அந்தக் கர்ணன், சிவந்த நிறமுள்ளவனும் சிவந்த கிரண மண்டலத்துடன் கூடியவனும் அஸ்தமிக்கப்போகிறவனுமான சூரியன்போல விளங்கினன். கர்ணனுடைய கைகளினிடையி னின்று விடப்பட்டவைகளும் மகா ஸர்ப்பங்கள் போலப் பிரகா சிப்பவைகளுமான பாணங்களை, அர்ஜுனனுடைய கைகளி னின்று விடுபட்டவைகளும் முனை கூரியவைகளுமான பாணங் கள் திசைகளை அடைந்து நாசஞ் செய்தன. பிறகு, அந்தக் கர்ணன், தைரியத்தை அடைந்து, கோபங்கொண்ட ஸர்ப்பங்க ளுக்கு ஒப்பான பாணங்களைப் பிரயோகிக்கின்றவனுகப் பத்துப் பாணங்களால் அர்ஜுனனையும், கோபித்துக்கொண்ட சர்ப்பங் களுக்கு ஒப்பான ஆறு பாணங்களால் கிருஷ்ணனையும் அடித் தான். பிறகு, மிக்க புத்திசாலியான கிரீடியானவன், உக்கிரமான பேரொலியுள்ளதும் ஸர்ப்பத்தினுடைய விஷாக்னிக்கு ஒப்பான தும் உருக்குமயமானதும் பயங்கரமான மகாஸ்திரங்களால் சூழப் பட்டதுமான மகிமை பொருந்திய பாணத்தை மகா யுத்தத்தில் பிரயோகிப்பதற்கு எண்ணங்கொண்டவனுனன். அரசரே! கர்ண னுக்கு அந்த வதகாலமானது நெருங்கிவரவே, காலமானது கண்ணுக்குப் புலப்படாத ரூபத்துடன் கூடியதாகப் பிராம்மண சாபத்தினுல் (ஸம்பவிக்கக்கூடிய அனர்த்தத்தை எடுத்துக்) காட்டிக்கொண்டும் கர்ணனுடைய வதத்தைச் சொல்லிக்கொண் டும் 'பூமியானது சக்கரத்தை உட்கொள்ளுகிறது' என்று சொல்லிற்று. நரவீரரே! அந்த வதகாலம் வந்தவுடனே, மகாத் மாவான பரசுராமர் இவனுக்கு எந்த அஸ்திரத்தைக் கொடுத் திருந்தாரோ அந்தக் கோரமான அஸ்திரமும் தோன்றவில்லை. பூமியும் இவனுடைய இடப் பக்கத்துச் சக்கரத்தை உட்கொண் டது. நரேந்திரரே! பிறகு, பிராம்மணசிரேஷ்டருடைய சாபத் தினுல் அப்பொழுது ரதமானது சுழன்றது. பிராம்மணேத்தம

ருடைய சாபத்தினால் அஸ்திரமும் முழுதும் தோன்றாமற்போன தும் நேர்ந்திருக்கின்ற வதத்தைக் கூறியது. பிறகு, அவனு டைய சக்கரமானது பூமியில் அமிழ்ந்துவிட்டது. யுத்தத்தில் அந்தச் சூதபுத்திரன், அதிக வளர்ச்சியுள்ளதும் மேடையுள் ளதும் நன்றாகப் பூத்திருக்கின்றதுமான தெருவிலிருக்கிற பெரும் மரமானது பூமியில் அமிழ்ந்தாற்போல மனக் கலக்கமடைந்தான். ரதமானது அமிழவே, பிராம்மண சாபத்தினால் மயங்கின கர் ணன், அந்த நாகாஸ்திரம் வீணானதையும் அந்த வியசனங்களை யும் பொறாமல், இரு கைகளையும் உதறிக்கொண்டும் தர்மத்தை நிந்தித்தான். 'தர்மத்தைப் பிரதானமாகக் கொண்டவனைத் தர்மம் எப்பொழுதுமே காக்கிறதென்றன்றோ தர்மத்தையறிந்த வர்கள் சொல்லுகிறார்கள்? நாம் தர்மத்தில் நித்தியம் பிரயத் தனமுள்ளவர்களாகவே இருக்கிறோம். சக்திக்குத் தக்கபடியும் சாஸ்திரத்துக்குத் தக்கபடியும் தர்மத்தை அனுஷ்டிப்பதற்கும் முயலுகிறோம். அந்தத் தர்மமும் பக்தர்களை ஹிம்சிக்கின்றது; காப்பாற்றுகிறதில்லை. தர்மம் எப்பொழுதும் பாதுகாக்கிற தில்லையென்று எண்ணுகிறேன்' என்று நிந்தித்தான். இவ் வண்ணம் கூறுகின்றவனும், மிக்க தடுமாற்றமுற்ற குதிரைக ளுடனும் சாரதியுடனும் கூடியவனும், அர்ஜுனனுடைய பாணங் கள் விழுவதினால் நிலைதவறும்படி செய்யப்பட்டவனும், மர்ம ஸ்தானங்களில் அடிபட்டுத் தளர்ச்சியுற்றவனுமான அந்தக் கர்ணன் அடிக்கடி தர்மத்தை நிந்தித்தான். பிறகு, யுத்தத்தில் அவன் மிக்க பயங்கரமான மூன்று பாணங்களால் கிருஷ்ணனைக் கையிலடித்தான்; அவ்வாறே, பார்த்தனை ஏழு பாணங்களால் அடித்தான். பிறகு, அர்ஜுனன், தீவிர வேகமுள்ளவைகளும் நேராகச் செல்லுகின்றவைகளும், இந்திரனுடைய வஜ்ராயுதத் துக்கு ஒப்பானவைகளும், கோரமானவைகளும், அக்னிபோன்ற வைகளுமான பதினேழு பாணங்களைப் பிரயோகித்தான். பயங்கர மான வேகமுள்ள அந்தப் பாணங்கள் (அவனைப்) பிளந்து பூமி யில் விழுந்தன. பிறகு, மனநடுக்கமுற்ற கர்ணன், வல்லமையி னால் [அஸ்திர விஷயமான] செய்கையை வெளியில் காட்டலா னான். பிறகு, அந்தக்கர்ணன், பலத்தினால் பதறாமல் சாவதானத் துடன் பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். பிறகு, அர்ஜு னனும் அந்தப் பிரும்மாஸ்திரத்தைக் கண்டு ஐந்திராஸ்திரத்தை அபிமந்திரணம் செய்தான். பகைவர்களைத் தவிக்கச் செய்பவ னான அந்த அர்ஜுனன், காண்டீவத்தையும் நாண்கயிற்றையும் பாணங்களையும் அபிமந்திரணம் செய்து, இந்திரன் மழையைப் பொழிவதுபோலச் சரமாரிகளைப் பொழிந்தான். பிறகு, தேஜோ மயமாகவும் மிக்க வீரியமுள்ளவைகளாகவுமிருக்கின்ற பாணங்

கள் பார்த்தனுடைய ரதத்தினின்று வெளிப்பட்டுக் கர்ணனுடைய ரதத்துக்குச் சமீபத்தில் தோன்றின. மகாரதனான அந்தக் கர்ணன் [எதிர் அஸ்திரத்தைப்] பிரயோகித்து அவனுடைய அஸ்திரத்தைக் கவர்ந்தான். பிறகு, வ்ருஷ்ணி வீரரான ஸ்ரீ வாசுதேவர், அந்த அஸ்திரமானது நாசஞ்செய்யப்படவே, [அர்ஜுனனைப் பார்த்து] 'பார்த்த! வேறு அஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணு. ராதேயன் பாணங்களை விழுங்குகிறான்' என்று மொழிந்தார். பிறகு, அர்ஜுனன் கர்ணனைப் பாணங்களால் மூடி மிக்க கடுமையான பிரும்மாஸ்திரத்தை மந்திரித்து (வில்லில்) பூட்டிப் பிரயோகிக்கலானான். பிறகு, கர்ணன் நன்றாகத் தீட்டப்பட்ட கூர்மையுள்ள பாணங்களால் [பார்த்தனுடைய] நாண்கயிற்றை அறுத்தான். கர்ணன், (அர்ஜுனன் பூட்டிய) இரண்டாவது நாண்கயிற்றையும், மூன்றாவதையும், நான்காவதையும், அவ்வாறே ஐந்தாவதையும், ஆறாவதையும், ஏழாவதையும், எட்டாவதையும், ஒன்பதாவதையும், பத்தாவதையும், அவ்வாறே பதினோராவதையும் அறுத்தான். நூறு தடவை அம்பு தொடுத்து அர்ஜுனனுடைய நாண்கயிற்றை அறுத்த அந்தக் கர்ணன், அர்ஜுனன் நூறு நாண்கயிறுகளைப் பூட்டியதையும் அறியவில்லை. பிறகு, பாண்டுநந்தனன் வேறு ஒரு நாண்கயிற்றை வில்லில் பூட்டி அபிமந்திரணம் செய்து ஜ்வலிக்கின்ற ஸர்ப்பங்கள் போன்ற பாணங்களைக் கர்ணன்மீது இறைத்தான். கர்ணன், அந்த அர்ஜுனனுடைய நாண்கயிறு அறுந்ததையும், அவன் கவனத்துடன் வேறு நாண்கயிற்றைப் பூட்டியதையும் அவனுடைய சுறுசுறுப்பினால் அறியவில்லை. அது ஆச்சரியமாயிருந்தது. கர்ணன், தன் வீரியத்தை அதிகமாகக் காண்பித்துக்கொண்டு ஸவ்யஸாசியினுடைய அஸ்திரங்களை அஸ்திரங்களால் தடுத்து நாசஞ்செய்து கொண்டு அவனைவிட அதிகமான காரியத்தைச் செய்தான். பிறகு, கர்ணன், தன்னுடைய அஸ்திரங்களால் அர்ஜுனன் பீடிக்கப்பட்டதைக் கண்டு அவனைப் பார்த்து, 'அப்யாஸம் செய்; அஸ்திரத்தை நன்றாகக் கற்றறிந்துகொள்; போ' என்று மொழிந்தான். பிறகு, பகைவரை வாட்டுபவனான கர்ணன், நெருப்புக்கு ஒப்பானதும், கோரமாயிருப்பதும், சர்ப்பங்களுடைய விஷத்துக்கு ஒப்பானதும், உருக்குமயமானதும், தேவ சம்பந்தமுள்ளதுமான ஒரு பாணத்தில் ரௌத்ராஸ்திரத்தை அபிமந்திரணம் பண்ணி நன்றாக ஸந்தானம் செய்து கிரீடியின்மீது பிரயோகிக்க எண்ணங்கொண்டவனானான். அரசரே! பிறகு, பூமியானது ராதேயனுடைய தேருருளையை அப்பொழுது கவர்ந்துகொண்டது. பிறகு, அந்த ராதேயன், தேரினின்று விரைவாகக் கீழே

இறங்கி நல்ல முயற்சியுடன் சக்கரத்தை இரு கைகளாலும் பிடித்து நன்றாக மேலே தூக்குவதற்கு விருப்பங்கொண்டான்; சக்கரத்தை விழுங்கின பூமியானது, ஏழு தீவுகளுடனும் பர்வதங்களுடனும் காடுகளுடனுங்கூடக் கர்ணனால் நான்கு அங்குலம் உயரத் தூக்கப்பட்டது. [பூமியினால்] சக்கரம் விழுங்கப்பட்ட ராதேயனே குரோதத்தினால் கண்ணீரைச் சொரிந்தான். அர்ஜுனனைப் பார்த்துப் பரபரப்புடன் இந்த வசனத்தை உரைக்கலானான்.

'ஓ! ஓ! பார்த்த! பெரிய வில்லையுடையவனே! ஒரு முகூர்த்த காலம் பொறுத்திரு. அமிழ்ந்துபோயிருக்கிற இந்தச் சக்கரத்தைப் பூமியிலிருந்து உயரத் தூக்குகிறேன். பார்த்த! தெய்வ வசனத்தினால் என்னுடைய இந்த ரதத்தினது இடச் சக்கரம் பூமியில் புதைந்திருப்பதைக் கண்டு அற்ப மனிதன் கொள்ளுகிற எண்ணத்தை விட்டுவிடு. அற்ப மனிதர்களால் செல்லப்பட்ட வழியை அடைவதற்கு நீ தகுதியுள்ளவனல்லை. குந்தீபுத்திர! நீ பிரசித்திபெற்றவன். யுத்த காரியங்களில் (எல்லா வீரர்களையுங் காட்டிலும்) சிறந்தவன். பாண்டவ! (எவ்விதத்திலும்) மிக்க சிறப்புற்ற காரியத்தையே நீ செய்வதற்குத் தகுதியுள்ளவன். அர்ஜுன! நல்ல விரதத்தில் நிலைபெற்றவர்களான சூரர்கள். தலைமயிர் அவிழ்ந்திருக்கிறவன் மீதும், புறங்காட்டி ஓடினவன்மீதும், பிராம்மணன்மீதும், கைகளைக் குவித்தவன் மீதும், சரணமடைந்தவன்மீதும், ஆயுதத்தைக் கீழே வைத்தவன்மீதும், யாசிப்பவன்மீதும், பாணங்களை இழந்திருப்பவன் மீதும், கவசம் நழுவினவன்மீதும், நழுவியும் ஒடிந்துமிருக்கிற ஆயுதங்களையுடையவன்மீதும் சஸ்திரங்களைப் பிரயோகிக்கமாட்டார்கள். பாண்டவ! நீயோ உலகத்தில் சிறந்த சூரன்; நன்னடையுள்ளவன்; யுத்த தர்மங்களை அறிந்தவன்; ஆதலால், ஒரு முகூர்த்த காலம் பொறுத்துக்கொள். நீ திவ்யாஸ்திரங்களையறிந்தவன்; அளவிட முடியாத பலமுடையவன்; யுத்தத்தில் கார்த்தவீரியார்ஜுனனுக்கு ஒப்பானவன். நீண்ட கைகளுள்ளவனே! அமிழ்ந்திருக்கின்ற இந்தச் சக்கரத்தை உயரத் தூக்குகிற வரையில் பொறுத்துக்கொள். இரதத்திலிருக்கிற நீ, இரதமில்லாமல் பூமியிலிருக்கிற என்னைக் கொல்வது தகுதியன்று. பாண்டு நந்தன! வாசுதேவரிடத்தினின்றாவது உன்னிடத்தினின்றாவது நான் பயப்படவில்லை. நீ க்ஷத்திரிய புத்திரனன்றோ? மகா குலத்தை விருத்திபண்ணுகிறவனன்றோ? பாண்டவ! ஆதலால், இந்நிலைமையிலிருக்கும் நான் உன்னை நோக்கி (இந்த வசனத்தைச்) சொல்லுகிறேன். ஒரு முகூர்த்த காலம் பொறுத்துக்கொள்' என்று கூறினான்.

தொண்ணூறெட்டாவது அத்தியாயம்

(அறங்கூறிய கர்ணனது தீச்செயல்களை மாதவர் அர்ஜுனனுக்கு அறிவுறுத்தியதும், கர்ணனடிகளால் அர்ஜுனன் சிறிது களைக்கக் கர்ணன் இறங்கித் தேருருளையைத் தூக்கியதும், மாதவர் ஏவலால் அர்ஜுனன் கர்ணனது தலையை அறுத்ததும்.)

பிறகு, மகாத்மாவான வாசுதேவர், [ராதேயனைப் பார்த்து], 'ஏ! ராதாபுத்திர! பாக்கியத்தினாலே இப்பொழுது தர்மத்தை நினைக்கிறாய். எப்பொழுதுமே பாண்டவர்கள் தர்மத்தில் கட்டுப் பட்டவர்கள். ஆதலால், இவர்களுக்கு அந்தத் தர்மம் விருத்தியைக் கொடுக்கிறது. [இவர்களுக்கு] விரோதிகளான அந்தக் கௌரவர்கள் தர்மத்தை விட்டு விலகினவர்கள். அக்காரணத்தினால், கௌரவர்கள் விநாசத்தை அடைந்தார்கள். நீசர்கள், பெரும்பான்மையாக வியசனத்தில் மூழ்கித் தெய்வத்தை நிந்திக்கின்றார்கள்; தங்களுடைய பாவத்தை நிந்திக்கிறதில்லை. கர்ண! நீயும் துரியோதனனும் துச்சாஸனனும் சுபலனுடைய குமாரனான சகுனியும் சேர்ந்து, ஒற்றை ஆடையை உடுத்தியிருந்த திரௌபதியைச் சபையின்கண் [பலாத்காரமாகக்] கொண்டுவந்தீர்களே, அப்பொழுது, உனக்குத் தர்மமானது யாது காரணத்தினால் ருசிக்கவில்லை? எப்பொழுது சூதாட்டத்தை அறியாதவரான யுதிஷ்டிர ராஜரை சபையில் அழைத்து வந்து அவரைத் தோல்வியடையச் செய்தீர்களோ, அப்பொழுது உனக்குத் தர்மம் எங்கே சென்றிருந்தது? கர்ண! வனவாஸம் தீர்ந்து பதின்மூன்றாவது வருஷமும் சென்ற பின்னும், ராஜ்ஜியத்தை நீ கொடுக்க மறுத்தபொழுது உனக்குத் தர்மம் எங்கே போய்விட்டது? அரசனான துரியோதனன் உன்னுடைய சம்மதத்தின் மேல் பீமசேனனை ஸர்ப்பங்களாலும் விஷங்கலந்த போஜனங்களாலும் கொல்ல முயன்றானன்றோ; அப்பொழுது உனக்குத் தர்மம் எங்கே போய்விட்டது? வாரணாவதத்தில் அரக்கு மாளிகையில் தூங்கிக்கொண்டிருந்தபொழுது பார்த்தர்களை நீங்கள் கொல்வதற்கு எண்ணங்கொண்டீர்களே; அப்பொழுது உனக்குத் தர்மம் எங்கே போய்விட்டது? கர்ண! ரஜஸ்வலையும் துச்சாஸனனுடைய வசத்தில் இருப்பவளுமான கிருஷ்ணையைப் பார்த்து சபையில் உரக்கச் சிரித்தாயன்றோ, அப்பொழுது உன்னுடைய தர்மமானது எங்கே சென்றது? ராதாநந்தன! முற்காலத்தில் அயோக்யர்களால் பீடிக்கப்பட்டவளும் குற்றமற்றவளுமான திரௌபதியை நீயும் பக்கத்தில் நின்று பார்த்தாயே, அப்பொழுது உன்னுடைய தர்மம் எங்கே சென்றுவிட்டது? ராதேய! யானைபோலச் செல்பவளான கிருஷ்ணையைப் பார்த்து, 'கிருஷ்ணையே! பாண்டவர்கள் நாசமடைந்துவிட்டார்கள்; சாசு

வதமான நரகத்தை அடைந்தார்கள். வேறு பர்த்தாவை வரித்துக்கொள்' என்று நீ சொல்லிக்கொண்டு பக்கத்திலிருந்து பார்த்தாயே, அப்பொழுது உன்னுடைய தர்மமானது எங்கே சென்றுவிட்டது? கர்ண! எப்பொழுது நீ ராஜ்யத்தில் பேராசையுள்ளவனுகச் சகுனியை அடுத்துப் பாண்டவர்களைச் சூதாடுவதற்காக மீண்டும் அழைத்தாயோ, அப்பொழுது உனக்குத் தர்மம் எங்கே போய்விட்டது? அநேக மகாரதர்கள் யுத்தத்தில் பாலனுன அபிமன்யுவைச் சூழ்ந்துகொண்டு ரணகளத்தில் கொன்றூர்களே, அப்பொழுது உன்னுடைய தர்மம் எங்கே போயிற்று? இந்தத் தர்மமானது அந்த விஷயங்களில் இல்லாமற் போமாகில் எல்லா விதத்திஞலும் வீணே வாய் வறட்சியை உண்டுபண்ணுகிற பேச்சிஞல் என்ன பயன்? ஸூத! இப்பொழுது, இந்த யுத்தரங்கத்தில் தர்மத்தை விட்டு விலகாத காரியங்களையே செய். அப்படியிருந்தாலும், உயிரோடு நீ விடுபடமாட்டாய். நளன் புஷ்கரஞல் பாச்சிகைகளால் ஜயிக்கப்பட்டான்; மீண்டும் வீரியத்திஞல் கீர்த்தியையும் ராஜ்யத்தையும் அடைந்தான். அவ்வாறே, பேராசை இல்லாதவர்களான பாண்டவர்கள் எல்லாருடனும் ஒன்றுசேர்ந்தவர்களாகிக் கைவன்மையிஞல் (ராஜ்யத்தை அடைய வந்துவிட்டார்கள். அவர்கள் சோமகர்களோடு கூடி, யுத்தத்தில் அதிக விருத்தி அடைந்திருக்கின்ற பகைவர்களைக் கொன்று, ராஜ்ஜியத்தை அடையப் போகிறூர்கள். எப்பொழுதும் தர்மத்திஞல் நான்கு பக்கத்திலும் பாதுகாக்கப்பட்டிருக்கிற புருஷசிரேஷ்டர்களான பாண்டவர்களால் தார்த்தராஷ்டிரர்கள் அவ்வாறு விநாசத்தை யடைந்தார்கள்' என்று கூறிஞர்.

பாரதரே! வாசுதேவரால் அப்பொழுது இவ்வாறு சொல்லப்பட்ட கர்ணன், வெட்கத்திஞல் தலைகுனிந்தவஞகி யாதொரு மறுமொழியையும் உரைக்கவில்லை. பாரதரே! மிக்க வேகமுள்ள பராக்கிரமத்துடன் கூடின கர்ணன், கோபத்திஞல் உதடுகள் நன்கு துடிக்க, வில்லைக் கையில் எடுத்துப் பார்த்தனை எதிர்த்துப் போர் புரிந்தான். பிறகு, வாசுதேவர், புருஷசிரேஷ்டனுன பல்குனனைப் பார்த்து, 'மகாபலமுள்ளவனே! திவ்யாஸ்திரத்திஞலேயே பிளந்து (இவனைத்) தள்ளுவாயாக' என்று கூறிஞர். வாசுதேவரால் இவ்வாறு உரைக்கப்பட்ட அர்ஜுனனே அப்பொழுது கோபத்தை அடைந்தான். அவன் அதனை நினைத்துக் கோரமான கோபத்தை அடைந்தான். அரசரே! க்ரோதமுள்ளவனுன அந்த அர்ஜுனனுடைய எல்லா இந்திரியங்களினின்றும் அப்பொழுது அக்னி ஜ்வாலைகள் வெளிப்பட்டன. அது ஆச்சரியமாயிருந்தது. பிறகு, கர்ணன் அதைக் கண்டு பிரும்

மாஸ்திரத்தினால் தனஞ்சயனை எதிர்த்துப் (பாணங்களைப்) பொழிந்தான்; ரதத்தைத் தூக்குவதில் மறுபடியும் முயற்சியைச் செய்தான். பார்த்தன் அவன்மீது பிரும்மாஸ்திரத்தினாலேயே உண்டுபண்ணப்பட்ட சரமாரிகளைப் பொழிந்தான். பாண்டவன் அந்தக் கர்ணனுடைய அஸ்திரத்தை அஸ்திரத்தினாலே தடுத்து அவனையும் நன்றாக அடித்தான். பிறகு, குந்தீபுத்திரன் அக்கினிக்குப் பிரியமான வேறு அஸ்திரத்தை எடுத்துக் கர்ணனைக் குறித்துப் பிரயோகித்தான். அது தேஜஸினால் நன்றாக ஜ்வலித்தது. பிறகு, கர்ணன் வாருணாஸ்திரத்தினால் நெருப்பைத் தணித்தான்; மேகங்களால் எல்லாத் திசைகளையும் இருளடர்ந்ததாகச் செய்தான். பாண்டுநந்தனனும் சிறந்த வீரியமுள்ளவனுமான அர்ஜுனன், பரபரப்பில்லாதவனாக, ராதேயன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, வாயவ்யாஸ்திரத்தினால் [அந்த வாருணாஸ்திரத்தினால் உண்டான] மேகங்களை அப்பொழுது விலக்கித் தள்ளினான். பிறகு, சூதபுத்திரன் பாண்டுபுத்திரனைக் கொல்லும் எண்ணத்தினாலே அக்கினிபோல் ஜ்வலிக்கின்ற மகாகோரமான ஒரு பாணத்தை எடுத்தான். அரசரே! பிறகு, பூஜிக்கப்பட்ட வில்லில் அந்தப் பாணமானது சேர்க்கப்படும்போது மலைகளுடனும் சிறு காடுகளுடனும் கூடின பூமியானது நடுக்கமுற்றது. பாரதரே! பரற்கற்களுடன் கூடின காற்று வீசியது. திசைகளும் புழுதியினால் மூடப்பட்டன. ஆகாயத்தில் தேவர்களுடைய 'ஆ! ஆ!' என்னும் ஒலியும் தோன்றியது. பெரியவரே! சூதபுத்திரனால் ஸந்தானம் செய்யப்பட்ட அந்தப் பாணத்தைக் கண்டு பாண்டவர்கள் மனத்தளர்ச்சியடைந்தவர்களாகி அதிக வியஸனத்தை அடைந்தார்கள். கர்ணனுடைய கையினால் நன்றாக விடப்பட்டதும் இந்திரனுடைய வஜ்ராயுதத்துக்கு ஒப்பான தேஜஸுள்ளதும் கூரிய முனையுள்ளதுமான அந்தப் பாணமானது தனஞ்சயனுடைய மார்பையடைந்து புற்றில் சிறந்த ஸர்ப்பம் நுழைவதுபோல நுழைந்துவிட்டது. மகாபலசாலியும் பகைவர்களைத் துகைப்பவனுமான பீபத்ஸுவானவன், யுத்தத்தில் நன்றாக யடிக்கப்பட்டு நிலைதப்பிச் சுழன்று கையிலிருந்த காண்டீவத்தை நழுவவிட்டு, பூகம்பம் உண்டாகும் தருணத்தில் மலை அசைவதுபோல அசைந்தான். மகாரதனான கர்ணன் அந்த சமயத்தைப் பெற்றுப் பூமியில் அழுந்தியிருக்கிற சக்கரத்தைத் தூக்கிவிடக் கருதி ரதத்தினின்று கீழே குதித்து இரு கைகளாலும் (சக்கரத்தை) நன்றாகப் பிடித்துத் தூக்கியும் மகாபலசாலியாயிருந்தும் தெய்வ வசத்தினால் முடியவில்லை. பிறகு, கிரீடதாரியான அர்ஜுனன்,

பிரஜ்ஞையை அடைந்து, யமதண்டத்துக்கு ஒப்பான அஞ்ஜலிகம் என்கிற சிறந்த பாணத்தை எடுத்தான். பிறகு, மகாத்மாவான வாசுதேவரும், பார்த்தனைப் பார்த்து, 'கர்ணன் ரதத்தில் ஏறுகிறதற்குள்ளேயே சத்துருவான இந்தக் கர்ணனுடைய தலையைப் பாணத்தால் பிள' என மொழிந்தார். அந்த அர்ஜுனன், பிரபுவான ஸ்ரீவாசுதேவருடைய அந்த வசனத்தை 'அப்படியே ஆகட்டும்' என்று நன்றாகப் புகழ்ந்து, பிறகு, மிக ஜ்வலிக்கின்ற ஓரம்பை எடுத்து, ரத சக்கரமானது அமிழ்ந்திருக்கவே, மகா ரதத்தில் நிர்மலனான சூரியன்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற கச்சைக் கொடியை அடித்தான். கிரீடியானவன் பொன்னாலும் முத்துக்களாலும் மணிகளாலும் வஜ்ரங்களாலும் இழைக்கப்பட்டதும், சிற்ப வித்தையில் சிறந்த சிற்பியின் முயற்சியினால் உண்டுபண்ணப்பட்டதும், அழகிய உருவமுள்ளதும், தங்கத்தினால் சித்திரிக்கப்பட்டதும், உமது சைனியத்தினுடைய ஜயத்துக்கு எப்பொழுதும் ஆதாரமாயிருந்ததும், பகைவர்களைப் பயமடையும்படி செய்வதும், புகழத்தக்க உருவமுள்ளதும், உலகத்தில் பிரசித்திபெற்றதும், காந்தியினால் அக்கினிக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஒப்பானதும், மகாரதனும் சூரியபுத்திரனுமான கர்ணனுடைய காந்தியினால் ஜ்வலிக்கின்றதுமான சிறந்த யானை கட்டும் கச்சை வடிவமுள்ள அந்த உத்தமமான கொடியை, நன்றாகத் தீட்டப்பட்டதும், சுவர்ணக் கட்டுக்களுள்ளதும், ஹோமஞ் செய்யப்பட்ட அக்கினிபோல ஜ்வலிக்கின்றதுமான ஒரு க்ஷுரப்ரத்தினால் நாசஞ் செய்தான். அந்த துவஜத்துடன் கூடவே கௌரவர்களுடைய கீர்த்தியும் கர்வமும் விருப்பமான எல்லாக் காரியங்களும் மனமும் விழுந்தன. பெரிதான 'ஆ! ஆ!' என்கிற சத்தமும் தோன்றியது. பரதகுலத்தில் உதித்தவரே! சுறுசுறுப்புடன் காரியங்களைச் செய்பவனான குரு வீரனால் யுத்தத்தில் அறுத்துத் தள்ளப்பட்ட துவஜத்தைக் கண்டு உம்மைச் சார்ந்தவர்கள் அனைவரும் அப்பொழுது சூதபுத்திரனான கர்ணனுடைய ஜயத்தைப்பற்றி ஆசையை இழந்தார்கள். பிறகு, பார்த்தன் கர்ணனுடைய வதத்தின்பொருட்டு விரைவுள்ளவனாகி மகேந்திரனுடைய வஜ்ராயுதத்துக்கும் அக்கினியினுடைய தண்டத்துக்கும் ஒப்பானதும், சூரியனுடைய உத்தமமான கிரணம்போன்றதும், மர்மங்களைப் பிளக்கின்றதும், ரத்தத்தினாலும் மாம்சத்தினாலும் பூசப்பட்டதும், அக்கினிக்கும் சூரியனுக்கும் ஒப்பானதும், பூஜிக்கத்தக்கதும், மனிதர்கள் குதிரைகள் யானைகள் இவர்களின் உயிரை வாங்குகின்றதும், மூன்று அரத்னி அளவுள்ள

தும், ஆறு சிறகுகளுள்ளதும், விரைவாகச் செல்லுந் திறமையுள்ளதும், உக்கிரமான வேகத்துடன் கூடியதும், இந்திரனுடைய வஜ்ராயுதம் போன்ற வீரியமுள்ளதும், அதிகோரமாகப் பரவுகின்ற காலாக்கினி போன்றதும், பிநாகத்துக்கும் விஷ்ணுசக்கரத்திற்கும் ஒப்பானதும், பிராணிகளுக்கெல்லாம் பயத்தை உண்டுபண்ணுகின்றதும், அழிப்பதுமான அஞ்சலிகம் என்கிற ஒரு பாணத்தை அம்பறாத் தூணியிலிருந்து எடுத்தான். எது தேவ சமூகங்களாலும் தடுக்கமுடியாததோ, எது எப்பொழுதும் பூஜிக்கப்பட்டதோ, மகா பலமுள்ள எந்த மகா பாணமானது தேவர்களையும் அசுரர்களையும் ஜயிக்குமோ, அப்படிப்பட்ட பாணத்தைப் பார்த்தன் மகிழ்ச்சியோடு எடுத்தான். துடைக்கப்பட்டிருக்கிற அந்த அம்பைப் பார்த்துச் சராசரங்களுடன் கூடின உலகமனைத்தும் நடுக்கமுற்றது. எடுக்கப்பட்ட பெரிய போருக்கு ஏற்றதான பாணத்தைக் கண்டு, ரிஷிகள் உலகமனைத்தும் சௌக்கியத்தை அடையவேண்டி க்ஷேமகாரியத்தைச் செய்தார்கள். பிறகு, காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனன், எண்ணமுடியாத மகிமையுடன் கூடின அந்தப்பாணத்தை வில்லில் பூட்டினான். சிறந்த மகாஸ்திரத்தோடு சேர்த்துக் காண்டீவம் என்கிற வில்லை விரைவாக இழுத்து, 'மகிமை பொருந்திய அஸ்திரமந்திரத்தினால் ஜபிக்கப்பட்டிருக்கின்ற மகிமை தங்கிய இந்தப் பாணமானது, சத்துருவினுடைய சரீரத்தையும் உயிரையும் வாங்கும் தன்மையுள்ளது. என்னால் தவம் செய்யப்பட்டிருக்குமானாலும், குருக்களும் சந்தோஷமடையும்படி செய்யப்பட்டிருப்பார்களானாலும், நல்ல ஆஹுதிகளுடன் ஹோமம் செய்யப்பட்டிருக்குமானாலும், சாஸ்திரங்கள் கற்கப்பட்டிருக்குமானாலும், இந்த சத்தியத்தினால் நன்றாகப் பூட்டப்பட்டிருக்கின்ற இந்தப் பாணமானது மிக்க பலமுள்ள என் சத்துருவான கர்ணனைக் கொல்லட்டும்' என்று சொன்னான். தனஞ்சயன் இவ்வாறு சொல்லிக்கொண்டே கர்ணனுடைய வதத்தின்பொருட்டுக் கோரமான அந்தப் பாணத்தைப் பிரயோகித்தான். கர்ணனைக் கொல்ல எண்ணங் கொண்டவனும், சூரிய சந்திரர்களுக்கு ஒப்பான பிரபாவமுள்ளவனும், மனத்தை வசப்படுத்தினவனும், சுறுசுறுப்புடன் காரியங்களைச் செய்பவனும், பாண்டுநந்தனனுமான கிரீடியானவன், அதிக சந்தோஷமுள்ளவனாக, 'அதர்வாங்கிரஸ் மந்திரத்தினால் உச்சாடனம் செய்யப்பட்ட [1] க்ருத்யையானது எவ்வாறு சத்துருவைக் கொல்லுமோ அவ்வாறு நீ என்னுடைய சத்துருவைக் கொல்' என்று சொல்லிக்கொண்டு

---

[1] ஏவப்பட்ட பூதம்.

தேவர்களுக்கு ஜயகாரணமான மகிமை பொருந்திய அந்தப் பாணத்தைப் பிரயோகித்தான். பிறகு, பலசாலியான அர்ஜுன னுல் விடப்பட்ட அந்த மகா பாணமானது, ஆகாயத்தையும் திசைகளையும் நன்றாக ஜ்வலிக்கச் செய்தது. அரசரே! பிறகு, மகாத்மாவான அர்ஜுனன் காண்டீவத்தினின்று விடுபட்டிருக் கிற அந்தப் பாணத்தினுல் அநேக சைன்யங்களை மிகுதியாக மயங்கச் செய்து சூதபுத்திரனை அந்தக் கர்ணனுடைய அந்தச் சிறந்த தலையை அறுத்தான். மன்னரே! பிறகு மகேந்திரனு டைய குமாரனை பார்த்தன், அப்பொழுது மகாஸ்திரத்தினுல் அபிமந்திரணம் செய்யப்பட்ட அஞ்சலிகமென்கிற சிறந்த பாணத் தினுல் பிற்பகலில் கர்ணனுடைய தலையை அறுத்தான். அஞ் சலிகத்தினுல் அறுக்கப்பட்ட தலையானது விரைவாகக் கீழே விழுந்தது. பிறகு, உடலும் பூமியில் விழுந்தது. உதித்திருக் கின்ற சூரியனுக்கு சமமான தேஜசுள்ளதும சரத்காலத்தில் ஆகாயத்தின் உச்சியை அடைந்திருக்கின்ற சூரியன்போன்றது மான அந்தக் கர்ணனுடைய முடியானது, அஸ்தகிரியினின்று சிவந்த மண்டலத்துடன் கூடின சூரியன் விழுவதுபோல் சேனு முகத்தில் பூமியில் விழுந்தது. பிறகு, இவனுடைய தலையானது எப்பொழுதும் சுகமாக வளர்க்கப்பட்டதும் நல்ல அழகுள்ளதும் மிக்க சுகத்துடன் சேர்ந்திருக்கின்ற நல்ல வாசனை பொருந்தி யதுமான (அவனுடைய) தேகத்தை, மிக்க செல்வம் நிறைந்த வீட்டை அதில் வசிக்கும் பிரபு விடுவதுபோல அதிகப் பிரயாசத் தினுல் விட்டது. பாணங்களால் விசேஷமாகப் பிளக்கப்பட்ட தும் உயிரை இழந்ததும் வளர்ந்திருக்கின்றதும் ரத்தம் பெருகும் காயங்களுள்ளதும் நல்ல காந்தியுடன் கூடியதுமான கர்ணனு டைய அந்தச் சரீரமானது, வஜ்ரத்தினுல் பிளக்கப்பட்டவுடன் கைகரிக தாது ரசத்துடன் சேர்ந்த அருவிப் பெருக்குடன்கூடிய மலையினுடைய பெரிய சிகரம் விழுவதுபோல விழுந்தது. கீழே தள்ளப்பட்டிருக்கின்ற கர்ணனுடைய தேகத்தினின்று ஒரு தேஜஸானது ஆகாயத்தை (ப் பிரகாசத்தினுல்) வியாபித்துக் கொண்டு சூரியனை அடைந்தது. கர்ணன் கொல்லப்பட்டவுடனே அந்த ஆச்சரியத்தை எல்லா யுத்த வீரர்களும் பார்த்தார்கள். பிறகு, பல்குனனுல் கர்ணன் சாய்க்கப்பட்டதைக் கண்டு, பாண் டவர்கள் சங்கங்களை உரக்க ஊதினுர்கள். அவ்வாறே, கேசவரும் தனஞ்சயனும் மகிழ்ச்சியடைந்தவர்களான நகுல ஸஹதேவர் களும் சங்கங்களை முழக்கினுர்கள். கொல்லப்பட்டுப் படுத்திருக் கின்ற கர்ணனைக் கண்டு சேமகர்கள் சைன்யங்களுடன் சிம்ம நாதங்களைச் செய்தார்கள்; மிக்க மகிழ்ச்சியுள்ளவர்களாகத் தூரி

யங்களை அடித்தார்கள்; வஸ்திரங்களையும் கைகளையும் வீசினார்கள். அரசரே! யுத்த வீரர்கள் அதிக சந்தோஷமுள்ளவர்களாகப் பார்த்தனை விருத்தியடையச் செய்ய வந்தார்கள். பெருங்காற்றினால் புரட்டித் தள்ளப்பட்ட மலைபோலவும் யஜ்ஞத்தினுடைய முடிவில் அவிந்த அக்கினிபோலவும், விபத்துக்கு ஆள்பட்டு, அர்ஜுனனுடைய பாணங்களால் ரதத்தினின்று அறுத்துப் பூமியில் தள்ளப்பட்டிருக்கிற கர்ணனைக் கண்டு, சேனைகளுடன் கூடின மற்ற வீரர்கள் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு கூத்தாடினார்கள். சத்தமிட்டுக்கொண்டு (அர்ஜுனனைப் பற்றிப்) பேசினார்கள். வேந்தரே! அறுத்துத் தள்ளப்பட்ட சூரியபுத்திரனான அந்தக் கர்ணனுடைய முகமானது காம்பில்லாத தாமரை மலர்போலவும், தலையானது அஸ்தமனத்தை அடைந்திருக்கின்ற சூரியனுடைய மண்டலம் போலவும் விளங்கின. அம்புகளால் நாற்புறத்திலும் நிறைக்கப்பட்ட எல்லா அங்கங்களுடனுங் கூடியதும் ரத்த வெள்ளத்தினால் நான்கு பக்கத்திலும் நனைக்கப்பட்டதுமான கர்ணனுடைய தேகமானது, சூரியன் தன்னுடைய கிரணங்களால் விளங்குவதுபோல விளங்கியது. கர்ணனாகிற சூரியன், பிரகாசிக்கின்ற பாணங்களாகிற கிரணங்களால் பகைவர்களுடைய சேனையை நன்றாகத் தவிக்கச் செய்து பலசாலியான அர்ஜுனனாகிற காலத்தினால் அஸ்தமனத்தை அடையும்படி செய்யப்பட்டான். அஸ்தமனத்தை அடைகின்ற ஆதித்தியன் ஒளியை எடுத்துக்கொண்டே போவதுபோல, அந்தப் பாணமானது கர்ணனுடைய உயிரை வாங்கிக்கொண்டே சென்றது. ஐயா! கடைசியான தினத்துடன் கூடின கர்ணனுடைய உயர்ந்த சரீரத்திலுள்ள தலையானது, பகலுடைய கடைசிப் பாகத்தில், அஞ்சலிகத்தினால் அறுக்கப்பட்டு யுத்தத்தில் வீழ்ந்தது. சேனைகளுள் மேல் மேல் இதர ஜனங்களைக் கொன்று, அந்தப் பாணமானது, உயர்ந்த சரீரத்துடன் கூடின கர்ணனுடைய தலையை விரைவாகக் கவர்ந்தது. சூரனும் பூமியில் விழுந்தவனும் அம்புகளால் நான்கு பக்கத்திலும் நிறைக்கப்பட்டவனும் ரத்தத்தினால் பூசப்பட்ட மேனியையுடையவனும் பூமியில் படுத்திருப்பவனுமான கர்ணனைக் கண்ட மத்திர ராஜன், பிறகு, துவஜம் அறுக்கப்பட்ட ரத்தத்தோடு சென்றான். கர்ணன் கொல்லப்படவே, பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களும் யுத்தத்தில் நன்றாக அடிக்கப்பட்டவர்களுமான கௌரவர்கள், சரீரத்தினோடு ஜ்வலிக்கின்ற பெரிதான அர்ஜுனனுடைய துவஜத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டு யுத்தத்தை விட்டு ஓடினார்கள். பரதர்களுள் அசிறந்தவரே! வனுடைய தலையானது, தற்செயலாக

விழுந்திருக்கின்ற சூரியனுடைய மண்டலம்போலப் பூமியை விளங்கச் செய்தது. போரில் மிக அடிக்கப்பட்டதனால் தீர்க்க நித்திரையை அடைந்தவனும், உதடுகளைக் கடித்திருப்பவனும், ரத்தத்தினால் நிரம்பியவையும் பயமுற்றவையுமான கண்களை உடையவனும், சிறந்த ரதத்தின் பின்பக்கத்தில் புரண்டு கிடப்பவனுமான அந்த ராதேயனைப் பார்த்து சூரியன் ஒரு முகூர்த்த காலம் கிரணங்கள் குறைந்தவனாயிருந்தான். தூரிய வாத்தியங்கள் ஒலிக்கப் பெறுததும் முக்கியர்களான யுத்த வீரர்கள் கொல்லப்பட்டதும் கர்வமடங்கினதும் சூரியபுத்திரனால் விடுபட்டதுமான கௌரவ சைன்னியமானது, சந்திரனை இழந்த ஜ்யோதிர் கிரகங்களுடைய கூட்டம் [விளங்காதது] போல விளங்கவில்லை. ஆயிரம் கண்களையுடைய இந்திரனுக்கு சமமான செய்கையை உடையவனான கர்ணனுடைய ஆயிரம் இதழ்களுள்ள தாமரை மலருக்கு ஒப்பான முகத்துடன் கூடியதும் மங்களகரமாயிருப்பதுமான தலையானது பகலின் முடிவில் சூரியன் கீழே விழுவது போலப் பூமியில் விழுந்தது. அகன்ற மார்பையுடையவனும், தாமரை மலர்போன்ற முகத்துடன் கூடியவனும், புடம்போட்ட தங்கம்போலப் பிரகாசிப்பவனும், பார்த்தனுடைய பாணங்களால் நாற்பக்கத்திலும் தபிக்கச் செய்யப்பட்டவனும், பூமியில் விழுந்தவனும், புழுதியினால் மூடப்பட்டவனும், அழுக்கடைந்து இருப்பவனும், புத்திரனுமான கர்ணனைச் சூரியன் அடிக்கடி பார்த்து, க்ஷீணித்திருக்கின்ற கிரணங்களுடன் கூடியவனாக மெள்ள மெள்ளத் தனனிருப்பிடம் சென்றான்.

தொண்ணூற்றேன்பதாவது அத்தியாயம்

(கர்ண வதத்தினால் துரியோதனன் துக்கிக்கச் சல்யன் தேற்றியதும், போர்க்கள் வர்ணனையும், தேவர் முதலியோர் திரும்பிச் சென்றதும்.)

சூரனும், பூமியில் விழுந்தவனும், பாணங்களால் நாற்புறங்களிலும நிறைக்கப்பட்டவனும், ரத்தத்தினால் பூசப்பட்ட மேனியை உடையவனும், தறசெயலாகப் பூமியை அடைந்திருக்கின்ற சூரியனைப்போல் இருப்பவனுமான கர்ணனைப் பார்க்க எண்ணங்கொண்டவர்கள் நன்றாகச் சூழ்ந்துகொண்டு நின்றார்கள். ராஜனே! யுத்தரங்கத்தில் அர்ஜுனன் முதலானவர்கள் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார்கள். பயப்படுகிறவர்கள் பயந்தார்கள். பகைவர்கள் துயரமுற்றார்கள். பார்ப்பவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். அவ்வாறே, உம்மைச் சேர்ந்த சிலர் சோகத்தை அடைந்தார்கள். சேனையானது, வந்தவாறே,

இஷ்டப்படி சென்றுவிட்டது. நன்றாக் அடிக்கப்பட்ட கவசத்தை யும் ஆபரணங்களையும் ஆயுதங்களையும் வஸ்திரங்களையுமுடைய வனும், தனஞ்சயனால் அழிக்கப்பட்டவனும், மகாரதனுமான கர்ணனைப் பார்த்து, கௌரவர்கள், சிம்மத்தினால் விருஷபம் கொல்லப்பட்ட பசுக்கூட்டம்போல் ஓடினார்கள். அர்ஜுனனோடு அதிகமாய் யுத்தம் செய்து சிம்மத்தினால் கொல்லப்பட்ட யானை போல் (அர்ஜுனனால்) கொல்லப்பட்டு யுத்தக்களத்தில் படுத் திருக்கிற கர்ணனைக் கண்டு, சல்யன், துவஜம் அறுக்கப்பட்ட ரதத்தோடு சென்றான். சூரிய குமாரனான கர்ணன் கொல்லப் பட்டவுடனே, சல்யனுடன் கூடின கௌரவர்கள், கீர்த்தியினால் ஜ்வலிக்கின்ற பெரிதான அர்ஜுனனுடைய கொடியை அடிக்கடி பார்த்துக்கொண்டே பார்த்தனிடமிருந்து உண்டான பயத் தினால் விரைவாக ஓடினார்கள். சல்யனோ, கர்ணார்ஜுனர்களு டைய யுத்தத்தில் நொறுக்கப்பட்ட துவஜங்களுடன் கூடின சேனைகளைக் கண்டு, ஸ்ருஞ்சயர்களாலும் சோமகர்களாலும் பரிஹ ஸிக்கப்பட்டவனாக அந்த ரதத்துடனே சீக்கிரமாகச் சென்றான். பீமனோ, தள்ளப்பட்ட தேர்களுடனும் குதிரைகளுடனும் யானை களுடனும் கூடியதும், கொல்லப்பட்ட சூதபுத்திரனோடு கூடியது மான சேனையைப் பார்த்து, அப்பொழுது பயங்கரமான ஸ்வரத் தினால் ஆகாயத்தையும் பூமியையும் நடுங்கும்படி செய்து கொண்டு உரக்கக் கர்ஜித்தான். கர்ணன் கொல்லப்பட்டவுடன், பீமன் கைகளைத் தோள்களில் தட்டிக்கொண்டு கூத்தாடினான்; தார்த்தராஷ்டிரர்களைப் பயப்படும்படி செய்துகொண்டு துள்ளி னான். அரசரே! எல்லா ஸ்ருஞ்சயர்களும் சோமகர்களும் அப் பொழுது சங்கங்களை ஊதினார்கள். (ஒருவரையொருவர்) கட்டிக் கொண்டார்கள். சூதபுத்திரன் கொல்லப்படவே, அப்பொழுது க்ஷத்திரியர்கள் பரஸ்பரம் அதிக சந்தோஷத்தை அடைந்தார் கள். துரியோதனன் கண்ணீரால் நிறைந்த நேத்திரங்களோடு கூடியவனும், தைன்யமுற்றவனும், அடிக்கடி பெருமூச்சு விடு கிறவனும் மிக்க துன்பத்தை அடைந்தவனுமானான். அரசரே! மத்திர ராஜனும் விசேஷமாக மனமயக்கமடைந்து அந்த அர் ஜுனனால் துவஜம் அறுக்கப்பட்ட ரதத்தோடு வேகத்துடன் துரியோதனனை அடுத்து அவனைப் பார்த்து அதிகத் துக்கத்தி னால் விரைவாகப் பின்வருமாறு கூறலானான்.

'ஒருவரை ஒருவர் அணுகிக் கொல்லப்பட்டுப் படுத்திருக் கின்றவர்களும் மலையின் சிகரங்களுக்கு ஒப்பானவர்களுமான மனிதர்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் நிறைந்ததும், யானைகளும் குதிரைகளும் மிகச் சிறந்த ரதிகர்களும் சிதறினது

மான உனது சேனையானது யமனுடைய ராஜ்ஜியத்துக்குச் சமான மாக இருக்கிறது. பாரத! கர்ணார்ஜுனர்களுக்குள் நடந்தது போன்ற யுத்தம் (இதற்குமுன்) நடந்ததில்லை. சேர்ந்திருக்கின்ற கிருஷ்ணார்ஜுனர்களும் உன்னுடைய மற்ற எல்லாச் சத்துருக்களும் கர்ணனால் கவரப்பட்டார்கள். தெய்வமன்றோ ஸ்வதந்தரமாய் இருந்துகொண்டு பிரவர்த்திக்கின்றது! பாண்டவர்களை ரக்ஷிக்கின்றது! நம்மைக் கொல்லுகின்றது! உன்னுடைய காரிய ஸித்தியாகிற பிரயோஜனத்தைத் தேடுகின்ற எல்லா வீரர்களும் பலாத்காரமாகப் பகைவர்களால் கொல்லப்பட்டார்கள். குபேரனுக்கும் யமனுக்கும் இந்திரனுக்கும் வருணனுக்கும் சமமான பிரபாவமுள்ளவர்களும் வீரியத்தோடும் சௌரியத்தோடும் பராக்ரமத்தோடும் அப்படிப்பட்ட குற்றமற்ற குணகணங்களோடும் கூடியவர்களும் பெரும்பாலும் பிறரால் கொல்லப்பட முடியாதவர்களும் உன்னுடைய கார்யஸித்தியிலேயே விருப்பமுள்ளவர்களுமான அரசர்கள், யுத்தத்தில் பாண்டவர்களைச் சேர்ந்தவர்களால் கொல்லப்பட்டார்கள். பாரத! ஆதலால், நீ துயரமடைய வேண்டாம். இது தெய்வ ஸங்கல்பம். காரியஸித்தியானது, மாறி மாறி உண்டாகிறது; (ஒருவனுக்கே) நிச்சயமாக உண்டாகாது' என்று கூறினான். மத்திரநாதனுடைய இந்த வசனத்தைக் கேட்டும் தன்னுடைய தீச்செயலை மனத்தினால் நினைத்தும், துரியோதனன் கண்ணீரால் நிறைந்த கண்களை உடையவனாகவும் அடிக்கடி பெருமூச்சு விடுபவனாகவும் மிக்க வருத்தமடைந்தான். [1] அரசரே! அதனை நினைத்ததனால் பேசாமலிருப்பவனும்

---

[1] அதிகப் பாடம்.

திருதராஷ்டிரன் "அந்தப் பயங்கரமான தினத்தில் கர்ணார்ஜுனர்களுக்கு நடந்த யுத்தத்தில் எரிக்கப்பட்டதும் (யுத்தத்தை விட்டு) ஓடினதும் பாணங்களால் அதிகமாகப் பீடிக்கப்பட்டதுமான கௌரவர்கள் ஸ்ருஞ்சயர்கள் இவர்களின் படையினுடைய உருவமானது எவ்விதமாக இருந்தது?" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான்.

"அரசரே! யுத்தத்தில் மனுஷ்யர்களுக்கும் யானைகளுக்கும் குதிரைகளுக்கும் கோரமான பெரிய நாசமானது ஏற்பட்ட விதத்தை நீர் கவனத்துடன் கேளும். மன்னரே! கர்ணன் கொல்லப்பட்டவுடன், பார்த்தன் ஸிம்மநாதத்தைச் செய்தபொழுதே உம்முடைய புத்திரர்களைப் பெரும் பயம் வந்தடைந்தது. கர்ணன் கொல்லப்பட்டிருக்கையில், ஒரு சமயத்திலாவது உம்முடைய யுத்த வீரர்களுக்கு, சைன்னியங்களை ஒன்று சேர்ப்பதற்காவது பராக்கிரமத்தை விரைவாக வெளிப்படுத்தற்காவது புத்தி உண்டாகவில்லை. ஆழ்ந்ததும் கரை இல்லாததும் தெப்பமில்லாததுமான கடலில் கப்பல் உடைந்திருக்கையில் வியாபாரிகளுக்குத் தீவுபோல ஆதாரமான கர்ணன்

பலஹீனனும் மிக்க துன்பமுற்றவனுமான துரியோதனனைப் பார்த்து, [1] ஆர்த்தாயனியானவன் தீனமாக உரைக்கலானான். 'வீர! கொல்லப்பட்டிருக்கின்ற உக்கிரமான மனிதர்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் நன்கு நிறைந்திருக்கின்ற இந்த யுத்த பூமியைப் பார். ஒரு தடவை முயன்றவைகளும் அம்புகளால் பிளக்கப்பட்ட மேனியை உடையவைகளும் மலைகள் போலப் பிரகாசிப்பவைகளும் கீழே விழுந்திருப்பவைகளும் அதிகமாகத் துடிக்கின்றவைகளும் உயிரை இழந்தவைகளும் அதிகமாக அழிக்கப்பட்ட கவசங்களும் ஆயுதங்களுமுள்ள எல்லாப் போர் வீரர்களுடனுங் கூடியவைகளும் வஜ்ஜிரத்தினால் தள்ளப்பட்டவைகளும் கற்கள் மிருகங்கள் மரங்கள் இவைகளுடைய கூட்டங்களை உடையவைகளுமான பர்வத சமூகங்கள் போன்றவைகளும் நன்றாக அடிக்கப்பட்டிருக்கிற மணிகளுடனும் மாவெட்டிகளுடனும் தோமரங்களுடனும் துவஜங்களுடனும் கூடியவைகளும் பொன்மயமான மேல் விரிப்புக்களுடன் கூடியவைகளும் ரத்த வெள்ளத்தில் மிதக்கின்றவைகளுமான யானைகளாலும், பாணங்களாலும், விலக்கித் தள்ளப்பட்டவைகளும் விழுந்தவைகளும் கத்துகின்றவைகளும் தைன்யமுற்றவைகளும் ரத்தத்தைக் கக்குகின்றவைகளும் பரிதாபப் படக்கூடிய நிலைமையில் இருப்பவைகளும் பயமடைந்தவைகளும் புரண்டிருக்கிற விழிகளை உடையவைகளும் விழுந்திருக்கின்றவைகளுமான குதிரைகளாலும், யுத்த பூமியானது துக்கிக்கப்படத்தக்க நிலைமையை அடைந்ததாயிற்று. ரதங்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் விலக்கித் தள்ளப்பட்டவைகளும் அவ்விதமாக

கிரீடியினால் கொல்லப்பட்டவுடனே, [ஆபத் ஸமுத்திரத்தில் அமிழ்கின்ற கௌரவர்கள்] கரையை விரும்பினார்கள். அரசரே! சூதபுத்திரன் கொல்லப்பட்டவுடன், சிம்மத்தினால் பீடிக்கப்பட்ட மிருகங்கள்போலச் சஸ்திரங்களால் அதிகமாகக் காயப்படுத்தப்பட்டவர்களும் மிக்க பயங்கொண்டவர்களும் நாதனில்லாதவர்களுமான கௌரவ சேனாவீரர்கள் நாதனை விரும்பினார்கள். சாயங்காலத்தில் ஸவ்யஸாசியினால் ஜயிக்கப்பட்ட [நாங்கள்] கொம்பு ஒடிந்த விருஷபங்கள்போலவும் விஷப்பல்லு உடைந்த ஸர்ப்பங்கள்போலவும் சென்றோம். மன்னரே! சூதபுத்திரன் கொல்லப்பட்டவுடனே, உம்முடைய புத்திரர்கள், சிறந்தவீரர்கள் கொல்லப்பட்டவர்களும், பெரும்பாலும் அழிக்கப்பட்டவர்களும் கூரிய பாணங்களால் அறுக்கப்பட்டவர்களுமாகிப் பயத்தினால் ஓடினார்கள். விசேஷமாக நழுவியிருக்கின்ற யந்திரங்களுடனும் கவசங்களுடனும் கூடியவர்களும் பயத்தினால் ஓடுகின்றவர்களும் மன உறுதியை இழந்தவர்களும் ஒருவரை ஒருவர் அடிக்கின்றவர்களும் பார்க்கின்றவர்களும்

---

[1] சல்யன்; கர்ணபர்வம் 98-ஆம் பக்கம் குறிப்பிற் பார்க்க.

அடித்துத் துவைக்கப்பட்டவைகளும் குற்றுயிராயிருப்பவை களும் உயிரை இழந்தவைகளுமான யானை குதிரைக் கூட்டங்க ளால் பூமியானது மகா வைதரணிபோல் விளங்கியது. அறுக் கப்பட்டிருக்கிற துதிக்கைகளின் பின்பாகத்துடனும் சரீரத்துட னும் கூடியவைகளும் அதிக நடுக்கமுற்றவைகளும் பூமியில் விழுந்திருப்பவைகளுமான யானைகளோடும், எதிரில் நிற்கின்ற பகைவர்களால் கொல்லப்பட்டவர்களும் கவசங்களும் ஆபரணங் களும் ஆடைகளும் ஆயுதங்களும் சிதறினவர்களுமான 'சிறந்த ரதிகர்களோடும், சிறந்த யானை வீரர்களோடும், குதிரை வீரர் களோடும், காலட்களோடும் கூடின பூமியானது, தணிந்திருக்கிற அக்கினிகளுடன் கூடியதுபோல் இருந்தது. பாணங்களால் அடிக்கப்பட்டவர்களும் மகா பலசாலிகளும் ரோஷத்தோடு பார்க்கின்றவர்களும் நாற்புறங்களிலும் விழுந்திருப்பவர்களும் முழுதும் பிரஜ்ஞையை இழந்தவர்களும் மீண்டும் தேறுதலடை கின்றவர்களுமான யுத்த வீரர்களால் பூமியானது, குடத்தில் அடங்கியிருக்கிற அக்கினிகளால் விளங்குவதுபோல விளங்கி யது. நழுவி விழுந்திருக்கின்றவைகளும் மிக்க ஒளி பொருந்திய வைகளுமான ரத்தினங்களால் பூமியானது, இரவில் (நன்றாகப்) பிரகாசிக்கின்ற ஜ்யோதிர் மண்டலங்களால் ஆகாயம் விளங்கு வதுபோல விளங்கியது. கர்ணார்ஜுனர்களுடைய கைகளால்

பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களும் 'என்னையே பீபத்சு நிச்சயமாக எதிர்த்து வருகிறான்; விருகோதரன் என்னையே எதிர்த்து வருகிறான்' என்று எண் ணிக் கொண்டவர்களுமாக விழுந்தார்கள்; பரபரப்பினால் வாட்டமடைந்தார் கள். சில மகாரதர்கள் குதிரைகளின்மீதும் சில மாகாரதர்கள் யானைகளின் மீதும் சிலர் தேர்களின்மீதும் ஏறிக்கொண்டு வேகமுள்ளவர்களாகப் பயத்தி னால் காலாட்களைவிட்டு ஓடினார்கள். ஓடுகின்றவையும் பயத்தினால் பீடிக்கப் பட்டவையுமான யானைகளால் ரதங்கள் பொடி பண்ணப்பட்டன. மகாரதர்க ளால் குதிரை வீரர்களும் குதிரைக் கூட்டங்களால் காலாட்களின் கூட்டங் களும் பொடி செய்யப்பட்டன. அரசரே! சூத புத்திரன் கொல்லப்பட்ட வுடனே, உம்முடைய யுத்த வீரர்கள் ஸர்ப்பங்களாலும் திருடர்களாலும் நிறைந்த காட்டில் கூட்டத்தை விட்டுப் பிரிந்த வர்த்தகர்கள்போல் ஆனார் கள். வீரர்கள் கொல்லப்பட்ட யானைகள்போலவும் கை அறுபட்ட மனி தர்கள் போலவும் எல்லா வீரர்களும் உலகத்தைப் பார்த்த மயமாகப் பார்க் கின்றவர்களாகப் பயத்தினால் பீடிக்கப்பட்டார்கள். பீமஸேனனிடத்தி லிருந்து உண்டான பயத்தினால் பீடிக்கப்பட்டு ஓடுகின்ற எல்லா ஸைனிகர் களையும் கண்டு, பிறகு, துரியோதனன் தன்னுடைய சாரதியைப் பார்த்து, 'ஆ ஆ!' என்று கூறி இந்த வசனத்தை உரைக்கலானான். 'கையில் விற்பிடித்து நிற்கின்ற என்னைப் பார்த்தன் மிஞ்சமாட்டான். எல்லாப்

விடப்பட்ட பாணங்கள் யானைகளையும் மனுஷ்ய தேகங்களையும் பிளந்து பிராண வாயுக்களை விரைவாக ஓட்டி மகா ஸர்ப்பங்கள் புற்றில் நுழைவதுபோல நேரில் சாய்ந்து பூமியில் பிரவேசித்தன. தனஞ்சயன் கர்ணன் இவர்களின் யுத்த மார்க்கத்தில் பூமியானது, கொல்லப்பட்டிருக்கின்ற மனிதர்களாலும் யுத்தத்தில் பாணங்களால் பிளக்கப்பட்டவைகளும் ரத்தத்தினுல் நன்ருகப் பூசப்பட்டவைகளுமான மரித்த யானைகளாலும் நடக்க முடியாததும் உட்செல்லுதற்கு அரியதும் ஆகியது. பெரிய பாணங்களால் நாசஞ் செய்யப்பட்டவையும், நன்ருக ஏற்படுத்தப்பட்டவையும், யானைகளையும் போர் வீரர்களையும் குதிரைகளையும் சிறந்த ஆயுதங்களையும் துவஜங்களையுமுடையவையும், பூட்டாம் வார்கள் சிதறினவையும், கட்டுக்கள் மிகச் சிதறினவையும், சக்கரங்களும் அச்சுக்களும் நுகங்களும் த்ரிவேணுக்களும் அறுக்கப்பட்டவையும், பூட்டாம் வார்களை இழந்தவையும், துயரத்தை உண்டுபண்ணுகின்றவையும், மாருகத் திருப்பப்பட்டிருக்கிற ஏர்க்கால்களுடன் கூடியவையும், விசேஷமாக ரதகுப்திகள் ஒடிந்தவையும், ரத்தினங்களாலும் கனகத்தினுலும் அலங்கரிக்கப்பட்டவையுமான ரதங்களாலும் தேருறுப்புக்களாலும் மூடப்பட்டிருக்கிற பூமியானது, சரத்காலத்திய மேகங்களால் ஆகாயம் விளங்குவதுபோல விளங்கியது. வேகமுள்ள குதிரைகளால் நன்ருக இழுக்கப்படுகின்றவையும் தேராளிகள் கொல்லப்பட்டவையும் நன்கு அமைக்கப்பட்டவையும் சிறந்த ரதங்கள் மனிதர்

படைகளுக்கும் பின்பக்கத்தில் குதிரைகளை மெள்ள ஓட்டு. யுத்தஞ்செய்கின்ற கௌந்தேயனைக் கொல்லப்போகிறேன். ஸம்சயமில்லை. பெருங்கடலானது கரையைக் கடந்து செல்லமாட்டாததுபோல அர்ஜுனன் என்னை மீறிப்போவதற்கு வல்லமையுள்ளவனுகான். இப்பொழுது, கோவிந்தனுடன்கூடின அர்ஜுனனையும் கர்வியான விருகோதரனையும் அவ்வாறே மிகுதியிருக்கிற மற்றச் சத்துருக்களையும் கொல்லப்போகிறேன். கர்ணன் விஷயத்தில் கடனுளியாகாமையை அடையப்போகிறேன்' என்ருன். சூரர்களுக்கும் மேன்மக்களுக்கும் தகுந்த குருராஜனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, சாரதியானவன் சுவர்ணமயமான கடிவாளம் பூண்ட குதிரைகளை மெதுவாக நடத்தினுன். பெரியவரே! ரதங்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் விடப்பட்டிருக்கின்ற உம்மைச் சேர்ந்த இருபத்தையாயிரம் காலாட்கள் யுத்தத்தின்பொருட்டு சன்னத்தர்களாகவே நின்ருர்கள். அவர்களை மிக்க கோபமுள்ள பீமஸேனனும் பார்ஷதனுன திருஷ்டத்யும்னனும் சதுரங்கசேனையோடு சூழ்ந்துகொண்டு பாணங்களால் கொன்ருர்கள். அவர்கள் பார்ஷதனுடன்கூடின பீமசேனனை யுத்தத்தில் எதிர்த்துப் போர் புரிந்தார்கள். மற்றவர்கள் அந்த யுத்தத்தில் பார்த்தன் திருஷ்டத்யும்னன்

களின்மீதும் யானைகளின்மீதும் ரதங்களின்மீதும் குதிரை வீரர்கள்மீதும் விரைவாகச் சென்றுகொண்டு பலாவருகச் சுழன்றன. பொன்மயமான பின்புறமுள்ளவைகளும், கோடாலி களுடனும் ஆயுதங்களுடனும் கூடினவைகளும், கூர்மையுள்ள வைகளுமான சூலங்களும் முத்கரங்களுடன்கூடின உலக்கை களும் சித்திரமான கத்திகளும் [1]பளபளப்பான உறைகளும் தங்கப் பட்டத்தால் கட்டப்பட்ட யானைகளும் பொன்னால் அலங்கரிக்கப் பட்ட விற்களும் சுவர்ணத்தினால் சித்திரிக்கப்பட்ட கட்டுக்களு டன்கூடின பாணங்களும் துவைக்கப்பட்ட ரிஷ்டிகளும் தங்கத் தினால் அதிகம் பிரகாசிக்கின்ற ஈட்டிகளும் தடிகளும் வெண்ணிற முள்ள சாமரங்களும் சங்கங்களும் அறுக்கப்பட்டும் இறைக்கப் பட்டுமிருப்பனவும் காந்தியையிழந்தனவுமான மாலைகளும் கம்பள விரிப்புக்களும் கொடிகளும் கொடித் துணிகளும் தலைப்பாகை களும் கிரீடங்களின் வரிசைகளும் வெண்மை நிறமுள்ள மகுடங்க ளும் நான்குபக்கத்திலும் சிதறிக்கிடக்கின்ற சாமரங்களும் சிறந்த ஆபரணங்களும் முக்கியமான பதக்கங்களும் ஹாரங்களும் தலை அணிகளும் சிறந்த தோள்வளைகளும் பொற்கொடிகளுடன் கூடின பொன்மயமான கண்டாபரணங்களும் வைரத்துடனும் பொன்னு டனும் சேர்ந்திருக்கிற உத்தமமான மணிகளும் பற்பலவித மங்களகரமான ரத்தினங்களும் சுகத்திற்கேற்ற (வீரர்களுடைய) சரீரங்களும் சந்திரனுக்கொப்பான முகத்துடன் கூடின தலை

இவர்களுடைய பெயர்களை எடுத்துரைத்தார்கள். அப்பொழுது பீமன் எதிரில் நிற்கின்ற அந்த வீரர்களோடு யுத்தத்தில் கோபங்கொண்டான். அவன் ரதத்தினின்று விரைவாகக் கீழே இறங்கிக் கதாயுதத்தைக் கையிற் கொண்டு யுத்தம் செய்தான். புஜபலத்தை ஆதாரமாகக்கொண்டவனும் தர்மத்தில் பற்றுதலுள்ளவனும் குந்தியின் புதல்வனுமான விருகோதரன் ரதத்திலிருந்துகொண்டு பூமியில் இருக்கிற அந்த வீரர்களை எதிர்த்துப் போர் புரியவில்லை. தங்கத்தினால் நான்கு பக்கத்திலும் மூடப்பட்ட பெரிதான கதையை எடுத்துக்கொண்டு தண்டத்தைக் கையிற்கொண்ட யமன்போல் உம்மைச் சேர்ந்தவர்களனைவரையும் கொன்றான். காலாட்கள்கூடத் தங்க ளுக்குப் பிரியமான உயிரில் பற்றைவிட்டு, நெருப்பை நோக்கி விட்டில்கள் ஓடுவதுபோல, யுத்தத்தில் பீமனை எதிர்த்து ஓடினார்கள். கோபமுள்ளவர் களும் யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களுமான அந்தப் பதாதிகள் யமனைக் கண்டு பிராணிவர்க்கங்கள் நாசமடைவதுபோலப் பீமசேனனை எதிர்த்து உடனே நசித்தார்கள். மகா பலசாலியான பீமன் கதையைக் கையில் ஏந்தி கழுகுபோல் ஸஞ்சரித்துக்கொண்டு உம்மைச் சேர்ந்த இருபத் தையாயிரம் போர் வீரர்களை நொறுக்கினான். ஸத்தியபராக்கிரமமுள்ள

---

[1] இது இரண்டு முறை வருகிறது.

களும் விளங்கின. மனத்துக்கு இன்பமான வீரர்களுடைய தேகங்களையும் போகங்களையும் [சத்ரம், சாமரம், கிரீடம் முதலான] விருதுகளையும் சுகங்களையும் விட்டு மகிமைபொருந்திய சுயதர்மத்தில் நிலைபெற்றுக் கொல்லப்பட்டுக் கீர்த்தியினால் சிறந்த உலகங்களை அடைந்தார்கள். துரியோதன! திரும்பு. அரசனே! கௌரவத்தை அழிப்பவனே! போர் வீரர்கள் பாசறைகளை நோக்கிச் செல்லட்டும். நீயும் செல். பிரபுவே! இதோ சூரியனும் மேற்றிசையில் இறங்குகிறான். நரேந்திரனே! இந்தக் காரியத்திலோ நீயே காரணமாக இருக்கிறாய்' என்றான். அரசரே! சல்யன் இவ்வளவுமட்டிலும் சொல்லித் துரியோதனனையும் திரும்பும்படி செய்து ஓய்ந்தான். யுத்தத்தில் மிக்க பற்றுள்ள புத்தியையுடையவனும், 'ஆ! கர்ண!, ஆ! கர்ண!' என்று புலம்புகின்றவனுமான அந்தத் துரியோதனனைத் துரோண புத்திரரை முதன்மையாகக்கொண்ட அரசர்கள் எல்லோரும் தேறுதல் அடையும்படி செய்தபிறகு, திவ்யமாக இருப்பதும் யசஸினால் ஜ்வலிக்கின்றதுமான அர்ஜுனனுடைய ரதத்தையும் த்வஜத்தையும் பார்த்துக்கொண்டே [தத்தம் இருப்பிடம்] சென்றார்கள். ராஜரே! மிகப் பிரகாசிக்கின்ற பயங்கரமான முகூர்த்தத்தில், மனிதர்கள், குதிரைகள், யானைகள் இவர்களின் சரீரங்களிலிருந்து உண்டான சிவந்த ரத்தத்தினால் நனைக்கப்பட்டிருப்பதும், சிவந்த வஸ்திரங்களாலும் மாலைகளாலும் சுவர்ணங்களுடைய சம்பந்தத்தினாலும் பிரகாசிக்கின்றவளும் எல்லோருக்கும்

வனும் மகா பலசாலியுமான பீமன், அந்தக் காலாட்களுடைய படையைக் கொன்று திருஷ்டத்யும்னனை முன்னிட்டுக்கொண்டு அந்த யுத்தத்தில் நின்றான். சிறந்த வீரியமுள்ளவனான தனஞ்சயன் தேர்ப்படையை எதிர்த்தான். மாத்ரீபுத்திரர்களும் மகாரதனான ஸாத்யகியும் சந்தோஷமுள்ளவர்களாகத் துரியோதனனுடைய படையைக் கொன்றுகொண்டு வேகத்தோடு சகுனியை எதிர்த்தார்கள். அவர்கள் கூர்மையுள்ள அம்புகளால் அவனுடைய அனேக குதிரை வீரர்களைக் கொன்று விரைவாகப் பகைவர்களை நன்றாக எதிர்த்து ஓடினார்கள். அந்தச் சமயத்தில் பெரும் போர் நடந்தது. பிரபுவே! தனஞ்சயனும், மூவுலகங்களிலும் பிரசித்தி பெற்ற காண்டீவமென்கிற வில்லை அசையும்படி செய்துகொண்டு, உம்முடைய தேர்ப்படையை எதிர்த்தான். கிருஷ்ணனை சாரதியாக உடையதும் வெள்ளைக் குதிரைகளுடன் கூடியதும் வருகின்றதுமான ரதத்தையும் யுத்தம் செய்கிற வீரனான அர்ஜுனனையும் கண்டு உம்மைச் சேர்ந்தவர்கள் பயத்தினால் விரைவாக ஓடினார்கள். ரதங்களை இழந்தவர்களும் அம்புகளால் பீடிக்கப்பட்ட இருபத்தையாயிரம் காலாட்களும் மரணமடைந்தார்கள். புருஷசிரேஷ்டனும் பாஞ்சாலர்களுள் மகாரதனும் பெரிய மனமுள்ளவனும் பெரிய வில்லைத் தரித்தவனும் தேஜஸ்வியும் பகைவர்களுடைய

இனியவளுமான யுவதியைப்போலிருப்பதும், ரத்தத்தினால் நன்றாக மூடப்பட்ட உருவமுள்ளதுமான யுத்த பூமியைக் கண்டு, பாச்சிகைக் காய்களால் [வென்று] நாட்டைவிட்டு ஓட்டப்பட்ட அரசர்கள்போலக் கௌரவர்கள் நிற்கவேயில்லை. மன்னரே! அவர்கள் கர்ணனுடைய வதத்தினால் மிக்க துன்பமடைந்தவர்களாகவும் 'ஆ! கர்ண, ஆ! கர்ண!' என்று சொல்பவர்களாகவும் சிவந்த சூரியனைப் பார்த்துக்கொண்டு சேனைகள் தங்கியிருக்கும் இடங்களை நோக்கி விரைவாகச் சென்றார்கள். காண்டீவத்தினின்று விடப்பட்டவைகளும் தங்கமயமான கட்டுக்களுள்ளவைகளும் சாணைக் கல்லில் தீட்டப்பட்டவைகளும் ரத்தத்தினால் பூசப்பட்ட இறகுகளுள்ளவைகளுமான அம்புகளால் நிறைக்கப்பட்ட அங்கங்களுடன் கூடின கர்ணன், கொல்லப்பட்டும், பிரகாசிக்கின்ற கிரணங்களையுடைய சூரியன்போல விளங்கினான். அந்தத் தேவசிரேஷ்டர்களும், 'புத்திரனிடத்தில் தயையுள்ள

கூட்டத்தைத் தவிக்கச் செய்பவனும், பாஞ்சால ராஜனுடைய புதல்வனுமான திருஷ்டத்யும்னன், அவர்களைக் கொன்று பீமஸேனனை முன்னிட்டுக்கொண்டு விளம்பமின்றி எதிரில் காணப்பட்டான். புறாவுக்குச் சமமான நிறமுள்ள குதிரைகளையுடையவனும், [1] கோவிதார மரத்தைக் கொடியாகக் கொண்டவனுமான திருஷ்டத்யும்னனை யுத்தத்தில் கண்டு உம்மைச் சேர்ந்தவர்கள் பயத்தினால் ஓடினார்கள். கீர்த்தியுள்ளவர்களும் சாத்யகியுடன் கூடியவர்களுமான மாத்ரீ புத்திரர்கள், சீக்கிரமாக அஸ்திரங்களை எய்கின்ற காந்தார ராஜனான சகுனியைக் காலதாமதமின்றி எதிர்ப்பவர்களாகக் காணப்பட்டார்கள். பெரியவரே! சேகிதானனும் சிகண்டியும் திரௌபதீ புத்திரர்களும் உம்முடைய மிக்க பெரிதான சேனையைக் கொன்று சங்கங்களை அவ்வாறு ஊதினார்கள். அவர்களனைவர்களும், புறங்காட்டி ஓடுகின்ற உம்மைச் சேர்ந்தவர்களைப் பார்த்து, கோபமுள்ள விருஷபங்களை எவ்வாறு விருஷபங்கள் ஜயித்துத் துரத்துமோ அவ்வாறு எதிர்த்துத் துரத்தினார்கள். அரசரே! பலமுள்ளவனும் இடக்கையாலும் அம்புகளைப் பிரயோகிப்பவனுமான பாண்டவன், உமது ஸைன்யத்தைச் சேர்ந்த அந்த மிச்சச் சேனையைக் கண்டு ஸன்னத்தனாக நின்றான்; குரோதத்தையும் அடைந்தான். வீரியசாலியான தனஞ்சயன் மூவுலகங்களிலும் பிரஸித்தி பெற்ற காண்டீவமென்கிற வில்லை அசைத்துக்கொண்டு ரதிகர்களுடைய படையை எதிர்த்தான்; பிறகு, அவர்களின்மீது பாண ஸமூகங்களை விரைவாக இறைத்தான். இருளால் மூடப் படவே, ஒன்றுமே காணப்படவில்லை. மகாராஜரே! உலகம் இருளால் மூடப்பட்டுப் பூமி முழுவதும் ஒரே புழுதி அடர்ந்திருக்கவே, உம்மைச் சேர்ந்த எல்லா யுத்த வீரர்களும் மிக்க பயத்

[1] காட்டாத்தி அல்லது குராமரம்.

வனை சூரிய பகவான் ரத்த ஜலத்தினால் நனைக்கப்பட்டிருக்கிற கர்ணனுடைய தேகத்தை ரத்தம்போலச் சிவந்த நிறமுள்ள [1] கராக்கிரகங்களால் தொட்டு ஸ்நானம் செய்வதற்காக அப்பொழுது மேற்கு சமுத்திரத்தை அடைந்தானோ' என்று எண்ணித் தத்தம் இருப்பிடத்தைக் குறித்துப் புறப்பட்டார்கள். ஆகாயத்திலும் பூமியிலும் இருந்த எல்லா ஜனசமூகமும், ஆச்சரியகரமானதும் பிராணிகளுக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறதுமான சிறந்த குரு வீரர்களான கர்ணார்ஜுனர்களுடைய யுத்தத்தைக் கண்டு, அதனையே நன்கு சிந்தித்துக்கொண்டு சுகமாகச் சென்றார்கள். கர்ணனுடைய பாணங்களால் நன்றாக நிறைக்கப்பட்டவர்களும் பகைவர்களைத் தவிக்கச் செய்பவர்களுமான கிருஷ்ணார்ஜுனர்கள் இருவரும், இருளை நாசமடையும்படி செய்துகொண்டு உதித்திருக்கின்றவர்களும் கிரண சமூகங்களுள்ளவர்களும் மாசற்றவர்களுமான சூரிய சந்திரர்கள் போல விளங்கினார்

தினால் ஓடினார்கள். ஜனநாதரே! சேனையானது நன்கு முறிய அடிக்கப்படவே, எதிரில் வருகின்ற சத்துருக்களை உம்முடைய புத்திரனை குருராஜன் நன்றாக எதிர்த்து அருகில் சென்றான். பரதர்களுள் சிறந்தவரே! பிறகு, துரியோதனன், முற்காலத்தில் பலியானவன் தேவர்களைச் சண்டைக்கு அழைத்ததுபோல் எல்லாப் பாண்டவர்களையும் போருக்கு அழைத்தான். பற்பல சஸ்திரங்களைத் தரித்தவர்களும் கோபமுள்ளவர்களும் அடிக்கடி வெருட்டுகின்றவர்களுமான அவர்கள் ஒன்று சேர்ந்து எதிரில் கர்ஜித்துக்கொண்டு அருகில் வேகமாக வந்தார்கள். பிறகு, கோபங்கொண்ட துரியோதனனும் பரபரப்பில்லாதவனாக யுத்தத்தில் கூரிய பாணங்களால் அவர்களை நூறு நூறாகவும் ஆயிரமாயிரமாகவும் கொன்றான். அந்தப் பாண்டவ வீரர்களுடைய சேனையானது நாற்புறங்களிலும் போர் புரிந்தது. அப்பொழுது, ஒருவனாக இருந்துகொண்டு, ஒன்று சேர்ந்திருக்கின்ற எல்லாப் பாண்டவர்களையும் யுத்தத்தில் எதிர்த்துச் சண்டை செய்ததாகிய ஆச்சரியகரமான உமது புத்திரனுடைய பௌருஷத்தைக் கண்டோம். பிறகு, மகாபலசாலியான அந்தத் துரியோதனன் தன் சேனை அதிக துக்கத்தையடைந்திருக்கிறதைக் கண்டான். ராஜேந்திரரே! பிறகு, புத்தி நிச்சயத்தை உடையவனான உம்முடைய புத்திரன், அந்த யுத்த வீரர்களை நிலைபெறச் செய்து சந்தோஷிக்கச் செய்துகொண்டு இந்த வசனத்தை உரைக்கலானான். 'பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாக நீங்கள் செல்லக்கூடிய இடத்தை நான் காணவில்லை. எங்கே சென்றாலும் பாண்டவர்களிடத்திலிருந்து உங்களுக்கு விடுதலை உண்டாகுமா? நீங்கள் ஓடுவதனால் யாது பயன்? இவர்களுடைய சேனையோ ஸ்வல்பமிருக்கிறது. கிருஷ்ணார்ஜுனர்கள்

---

[1] கிரணங்கள்; கைகள்.

கள். அந்த அம்புத் திரள்களை விலக்கிவிட்டு, மகாபலசாலி களும் நண்பர்களால் சூழப்பட்டவர்களும் நிகரற்ற பராக்கிரம முள்ளவர்களும் சுகிகளும் சுகத்தைக் கொடுப்பவர்களுமான அவ்விருவர்களும், சிந்திக்கத் தகாத மகிமையுடன் கூடிய விஷ்ணுவும் இந்திரனும் சபையில் விளங்குவதுபோல விளங் கினார்கள்; அப்பொழுது, மகாயுத்தத்தில் கர்ணனைக் கொன்று தேவர்களோடும் கந்தர்வர்களோடும் மனுஷ்யர்களோடும் சாரணர்களோடும் கூடின மஹரிஷிகளாலும் யக்ஷர்களாலும் மகோரகர்களாலும், 'உத்தமமான ஜயம் மேல்மேலும் உண்டா குக' என்று சொல்லிப் பூஜிக்கப்பட்டார்கள்; பிறகு, தக்கபடி அவர்களுக்குப் பிரதி மரியாதை செய்து, நிகரில்லாத செய்கை களால் புகழப்படுகின்றவர்களும் சுகிருத்துக்களால் சூழப்பட்ட வர்களுமாகிப் பலன் எனகிற அசுரனைக் கொன்று கேசவரும் தேவராஜனும் சந்தோஷித்ததுபோல சந்தோஷமடைந்தார்கள்.

நன்றாகக் காயம்பட்டிருக்கிறார்கள்; இப்பொழுது எல்லோரையும் கொல்லப் போகிறேன். ஜயம் நிச்சயமாகவன்றோ உண்டாகும்? சிதறினவர்களும் ஓடுகின்றவர்களும் பாபத்தைச் செய்கின்றவர்களுமான உங்களைப் பாண்டவர்கள் பின்தொடர்ந்து கொல்லப்போகிறார்கள். நமக்கு யுத்தத் தில் வதம் நன்மையைப் பயக்கக் கூடியதன்றோ? க்ஷத்திரிய தர்மத்தோடு யுத்தம் செய்கிறவர்களுக்கு யுத்தத்தில் நேருகின்ற மரணமானது சுககர மானது. மாண்டவன் துக்கத்தை அறிகிறதில்லை; மரித்தும், மோக்ஷத்தை அடைகிறான். வந்திருக்கிற க்ஷத்திரியர்களாகிய நீங்களெல்லோரும் கேளுங்கள். பிராணிகளுடைய உயிரை வாங்குகிற யமன் சூரனையும் பயப் படுகிறவனையும் கொல்லுகிறானாதலால், க்ஷத்திரிய விரதத்தை உடையவ னான என்னைப்போன்ற எந்த விவேகிதான் யுத்தம் செய்யமாட்டான்? சினமுள்ளவனும் பகைவனுமான பீமசேனனுடைய வசத்தை அடையப் போகிறீர்கள். பாட்டன்மார்களால் அனுஷ்டிக்கப்பட்டுவந்த தர்மத்தை நீங்கள் விடுவது தகுதியன்று. க்ஷத்திரியனுக்கு ஓடுவதைவிட அதிக பாப மான அதர்மம் இல்லை. யுத்தமென்னும் தர்மத்தைக் காட்டிலும் மிகச் சிறந் ததும் இல்லை. [இது] ஸ்வர்க்கத்திற்கு வழி. கௌரவர்களே! ஓ! யுத்த வீரர்களே! நீங்கள், தாமதமின்றிக் கொல்லப்பட்டு இந்த நிமிஷத்தி லேயே மேலான உலகங்களை அடையுங்கள்' என்று கூறினன். உம்முடைய புத்திரனாவன் இவ்வாறு சொல்லும்போது, அதிகமாகக் காயப்படுத்தப் பட்ட (உமது) போர் வீரர்கள் அந்த வாக்கியத்தைக் கவனியாமலே எல்லாத் திக்குக்களிலும் ஓடினார்கள். அதிகப் பயமடைந்தவனும், மிக்க மனமயக்க முற்றவனும், மத்திர ராஜனுமான சல்யன், உம்முடைய புத்திரனான துரியோதனனால் தடுத்துத் திருப்பப்படுகின்ற ஸைன்யத்தைக் கண்டு, அப் பொழுது அவனைப் பார்த்து இந்த வாக்கியத்தை உரைத்தான்.

நூறுவது அத்தியாயம்
(கிருஷ்ணார்ஜுனர்கள் யுதிஷ்டிரரிடம் சென்றது)

பாணங்களால் கவசம் அறுக்கப்பட்டவனும் இரத்தத்தினால் மார்பு நனைக்கப்பட்டவனுமான ராதேயனை உயிர்போயிருந்தும், காந்தியானது விடவேயில்லை. புடம்போடப்பட்ட தங்கத்துக்கு நிகரானவனும் பாலசூரியனுக்கு ஒப்பான காந்தியுள்ளவனுமான அந்தச் சூரனை எல்லாப் பிராணிகளும் உயிரோடிருப்பவனைப்போலவே எண்ணின. மகாராஜரே! யுத்தத்தில் கொல்லப்பட்டிருந்தும், அவனைக் கண்டு நான்கு பக்கத்திலுமுள்ள யுத்த வீரர்கள், சிம்மத்தைக் கண்டு மற்ற மிருகங்கள் நடுங்குவதுபோல நடுக்கமுற்றார்கள். புருஷசிரேஷ்டனான கர்ணன், கொல்லப்பட்டிருந்தும், பேசுகிறவன்போலக் காணப்பட்டான். உயிரை இழந்திருந்தும், மகாத்மாவான கர்ணனுக்கு ஒருவிதமான விகாரமும் உண்டாகவில்லை. அரசரே! அழகான வேஷத்தைத் தரித்ததும் அழகிய தலையும் கழுத்துமுள்ளதுமான அந்த சூதபுத்திரனுடைய முகமானது பூரணசந்திரனுக்கொப்பான காந்தியுடன் கூடியதாக இருந்தது. சிறந்த பொன் போன்றவனும ஜ்வலிக்கின்ற அக்கினி போன்றவனும் புருஷசிரேஷ்டனுமான அந்தக் கர்ணன், பார்த்தனுடைய பாணங்களாகிற ஜலத்தினால் தணிந்தான். ஜ்வலிக்கின்ற நெருப்பானது எவ்வாறு ஜலத்தையடைந்து தணியுமோ அவ்வாறு யுத்தத்தில் கர்ணனாகிற நெருப்பானது, பார்த்தனாகிற மேகத்தினால் தணிக்கப்பட்டது. அந்தக்கர்ணன் நல்ல யுத்தத்தினால் ஜ்வலிக்கின்ற கீர்த்தியைத் தனக்குப் பூமியில் தேடி வைத்துவிட்டுப் புத்திரர்களோடுகூடப் பார்த்தனுடைய தேஜஸினால் யுத்தத்தில் தணிந்தான் அரசரே! பற்பல ஆபரணங்களை அணிந்தவனும் புடம்போடப்பட்ட தங்கத்துக்கு ஒப்பான ஒளி பொருந்தினவனும்சூரியகுமாரனுமான கர்ணன், எல்லாப் பாண்டவர்களையும் பாஞ்சலர்களையும் அஸ்திர தேஜஸினால் நன்றாகத் தவிக்கச் செய்து சரமாரிகளைப் பொழிந்து பகைவர் சேனையைத் தபிக்கச் செய்து சிறந்த ஒளி பொருந்தியவனான சூரியன்போல விளங்கிக் கொண்டு, எல்லோரையும் வாட்டி, துளிர்த்த மரம்போலடித்து வீழ்த்தப்பட்டான். எவன், 'கொடுக்கக் கடவேன்' என்றே எப்பொழுதும் சாதுக்களுக்குக் கொடுத்தானோ, யாசிக்கப்பட்டால் 'இல்லை' என்று சொன்னதில்லையோ, அந்த ஸத்புருஷனான கர்ணன்[1] த்வைரத யுத்தத்தில் கொல்லப்பட்டான். மன்னரே! மகாத்மாவான எவனுடைய தனமானது முழுதும் ப்ராம்மண

---

[1] இரண்டு தேராளிகள் ஒருவரையொருவர் எதிர்ப்பது.

தீனமாக ஆயிற்றோ, எவனுக்குத் தன் உயிரும் பிராம்மண விஷ யத்தில் கொடுக்கத் தகாததாக இல்லையோ, கொடுப்பவர்களுள் பிரியனும் விரும்பினவற்றைக் கொடுப்பவனுமான அந்தக் கர்ணன், பார்த்தனுடைய அஸ்திரத்தினால் மிச்சமின்றி எரிக்கப் பட்டு உத்தமகதியையடைந்தான். எவனை ஆதாரமாகக்கொண் டு உம்முடைய புத்திரன் வைரத்தை உண்டுபண்ணினானோ அந்தக் கர்ணன், உமது புத்திரர்களுடைய ஜயத்திலிருந்த ஆசையை யும் சுகத்தையும் கவசத்தையும் பறித்துக்கொண்டு சுவர்க்கம் சென்றான். கர்ணன் கொல்லப்படவே, நதிகளும் பெருகி ஓட வில்லை. சூரியனும் கலங்கினவனாக அஸ்தமனத்தை அடைந் தான். வெண்ணிறமுள்ள கிரகமும் ஜ்வலிக்கின்ற சூரியனுடைய நிறம்போன்ற நிறமுடையதாயிற்று. யமனுடைய அந்தப புத்தி ரனும் வக்ரமாக உதித்தான். பிறகு, ஆகாயம் நடுங்கியது. பூமி யானது கர்ஜித்தது. குரூரமாகவும் கோரமாகவும் காற்றுக்கள் வீசின. திசைகள் ஜ்வலிக்கின்றவைகளும் புகையுள்ளவைகளு மாயின. மகாசமுத்திரங்கள் கர்ஜித்தன; கலங்கின. பெரியவரே! கானகங்களுடன்கூடப் பெரு மலைகளும் நடுங்கின. பூதகணங் களும் அதிகமாகத் துன்பமடைந்தன. பிரஜைகளுக்கு நாதரே! பிருஹஸ்பதியானவர் ரோஹிணி நட்சத்திரத்தைத் தடுத்துக் கொண்டு சந்திரனுக்கும் சூரியனுக்கும் சமமாயினர். கர்ணன் கொல்லப்பட்டவுடன், திசைகள் பிராணி ஸஞ்சாரம் அற்றவை யாயின. சந்திரனுடனும் சூரியனுடனுங் கூடின ஆகாயமும் பூமி யும் அசைவுற்றன. நெருப்புஜ்வாலைகளுடன் கூடின குறைக் கொள்ளியும் விழுந்தது. ராக்ஷஸர்கள் மிக்க சந்தோஷமுள்ள வர்களாக ஆனார்கள்; அர்ஜுனன், சந்திரனுடைய பிரகாசம் போன்ற பிரகாசமுள்ள முகத்துடன் கூடிய கர்ணனுடைய தலை யைப் பாணத்தால் அறுத்தபொழுது, ஆகாயத்தில் தேவர்க ளால் உண்டுபண்ணப்பட்ட 'ஆ! ஆ!' என்னும் சப்தமானது உடனே தோன்றியது. வேந்தரே! அர்ஜுனன், தேவர்களா லும் கந்தர்வர்களாலும் மனிதர்களாலும் பூஜிக்கப்பட்ட சத்துரு வான கர்ணனை யுத்தத்தில் வதஞ் செய்து முற்காலத்தில் விருத்திரனைக் கொன்று இந்திரன் விளங்கினதுபோலச் சிறந்த காந்தியினால் விளங்கினான். மகேந்திரனுடைய வீரியத்துக்கு ஒப்பான வீரியத்துடன் கூடியவர்களும் புருஷசிரேஷ்டர்களும் யாதவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறவர்களுமான அந்த கிருஷ்ணார்ஜுனர்கள் இருவரும் கொடித் துணிகளுடன் கூடியதும் பயங்கரமான சத்தத்துடன் கூடின கொடியுள்ளதும் சங்குபோலவும் ஸ்படிகம்போலவும்

பிரகாசிக்கின்றதும் மகேந்திரனுடைய வாகனத்துக்கு ஒப்பானதும் சுவர்ணத்தினுலும் முத்துக்களாலும் மணிகளாலும் வஜ்ஜிரங்களாலும பவளங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் ஒப்பற்ற வேகத்துடன் கூடியதுமான தேருடன், இரண்டு சூரியர்கள் போலவும் ஜ்வலிக்கின்ற இரண்டு அக்கினிகள்போலவும் சமமான சேர்க்கை பெற்றிருக்கின்ற விஷ்ணு மகேந்திரர்கள்போலவும் இருந்துகொண்டு யுத்தரங்கத்தில் பயமற்றவர்களாக விளங்கினுர்கள். பிறகு, வானரத்வஜனுன அந்த அர்ஜுனனும் கருடத்வஜரான ஸ்ரீ வாசுதேவரும், வில் நாண்கயிறு கையுறை சக்கரங்களின் நேமி இவைகளுடைய ஒலிகளால் சத்துருக்களை பலாத்காரமாக ஒளியை இழந்தவர்களாக்கி அவர்களைப் பாணசமூகங்களால் அழித்து அவர்களுடைய உள்ளங்களைத் தவிக்கச் செய்து மிக்க ஒலியுள்ள சிறந்த சங்கங்களை உரக்க ஊதினுர்கள். மனிதர்களுள் சிறந்தவர்களான கிருஷ்ணுர்ஜுனர்கள் பொன்னலங்காரங்களால் நிரம்பினவையும் பேரொலியுள்ளவையும் பனிபோல வெண்ணிறமுள்ளவையுமான சிறந்த இரண்டு சங்கங்களைக் கைகளால் பிடித்து மூவுலகங்களிலும் வெற்றியை வெளிப்படுத்திக்கொண்டு ஊதினுர்கள். பான்சஜன்யம், தேவதத்தம் என்கிற இரண்டு சங்கங்களுடைய ஒலியும், பூமியையும் ஆகாயத்தையும் திக்குக்களையும் நிரப்பிற்று. ராஜசிரேஷ்டரே! சூரர்களான மாதவர் அர்ஜுனன் இருவருடைய சங்கநாதத்தினுலும் கௌரவர்களனைவரும் விசேஷமாக நடுக்கமுற்றுர்கள். அவ்விருவரும் சங்கத்தினுடைய ஒலியினுல் காடுகளையும் மலைகளையும் நதிகளையும் குகைகளையும் எதிரொலியிடும்படி செய்துகொண்டும் உமது புத்திரனுடைய சேனையை மிக்க பயமடையும்படி செய்துகொண்டும் யுதிஷ்டிரரைச் சந்தோஷப்படுத்துவதற்காகச் சென்றுர்கள். பாரதரே! பிறகு ஊதப்படுகின்ற சங்கங்களின் ஒலியைக் கேட்டவுடனே, கௌரவர்கள் மத்திர தேசாதிபதியான சல்யனையும் பரதர்களுக்கு அரசனுன துரியோதனனையும் விட்டுவிட்டு வேகத்துடன் ஓடிவிட்டார்கள். பிறகு, மேகக் கூட்டம்போலச் சத்தமிடுகின்றவையும் சரத்காலத்தில் பகலின் நடுவை அடைந்திருக்கின்ற சூரியனுடைய காந்திபோன்ற காந்தியுள்ளவையுமான தனஞ்சயன் கர்ணன் இவர்களின் ரதங்களினுல் ஆச்சரியமடைந்தவர்களாகி, அப்பொழுது மகாயுத்தத்தில் அதிகமாக விளங்குகின்ற அர்ஜுனனைப் புகழ்ந்துகொண்டு சென்றுர்கள். உதித்திருக்கிற இரண்டு சூரியர்கள்போன்ற அந்தத் தனஞ்சயனையும் கேசவரையும் யுத்த வீரர்களுடைய கூட்டங்களோடும் ஜனங்கள் அதிகமாகக் கொண்டாடினுர்கள்.

நூற்றோராவது அத்தியாயம்

(அர்ஜுனன் யுதிஷ்டிரரை வணங்கியதும், அவர் கிருஷ்ணார்ஜுனர்களைப் புகழ்ந்ததும், யுதிஷ்டிரருக்கும் வாசுதேவருக்கும் ஸம்பாஷணையும்)

ஸூரிய குமாரனான கர்ணன் கொல்லப்பட்டவுடன், கௌரவர்கள் பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாக எல்லாத் திக்குகளையும் பார்த்துக்கொண்டு ஆயிரமாயிரமாக ஓடினார்கள். ஸ்ரீ ராமரால் ராவணன் கொல்லப்பட்டதைக் கண்டு ராக்ஷஸர்கள் பயந்தோடினதுபோல உம்மைச் சேர்ந்தவர்கள் பயத்தினால் பீடிக்கபபட்டவர்களாகத் திசைகளில் ஓடினார்கள். மன்னரே! பாரதரே! பிறகு, அதிகமாகப் பயந்திருக்கின்ற யுத்த வீரர்கள் உம்முடைய புத்திரனால் நாற்புறத்திலும் தடுக்கப்பட்டவர்களாகிப் பெருங் கூச்சலிட்டார்கள். பாரதரே! பிறகு, உமது புத்திரன், அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து, சல்யனுடைய சம்மதத்தின்மேல் யுத்தத்தை நிறுத்தினான். பாரதரே! க்ருதவர்மா, யுத்தத்தில் உம்மைச் சேர்ந்தவர்களால் விரைவாகச் சூழப்பட்டவனாக மிகுதியிருக்கின்ற நாராயணர்களோடு சேனை தங்கியிருக்கும் இடத்தை நோக்கியே விரைவாகச் சென்றான். பிறகு, சூரரான அசுவத்தாமா, பாண்டவர்களுடைய ஜயத்தைக் கண்டு அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டு பாசறையையே நோக்கிச் சென்றார். அரசரே! பாரதரே! சரத்வானுடைய குமாரரான கிருபர், பெரியதும் மேகம் போன்றதுமான யானைப் படையுடன் சேனை தங்கியிருக்கும் இடத்தைக் குறித்தே விரைவாகச் சென்றார். அரசரே! சகுனி, ஆயிரம் காந்தாரர்களால் சூழப்பட்டுச் சென்றான். சுசர்மாவும், பயத்தினால் பீடிக்கப்பட்டவனாகப் பார்த்துக்கொண்டே சென்றான். அந்தத் துரியோதனனும் எல்லாச் சொத்துக்களும் கவரப்பட்டவனாகவும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவனாகவும் ஞாதிகளுடைய (நாசத்தினால்) சோகத்தை அடைந்தவனாகவும் அடிக்கடி (அந்தக் கஷ்டங்களை) நினைத்துக்கொண்டு சென்றான். ரதிகர்களுள் உத்தமனான சல்யனோ, துவஜம் அறுக்கப்பட்ட ரதத்துடன் பத்துத் திக்குக்களையும் பார்த்துக்கொண்டு பாசறையைக் குறித்தே சென்றான். பிறகு, பரதகுலத்திற் பிறந்த வீரர்களுள் இன்னும் மற்ற அநேக மகாரதர்கள், பயந்தவர்களாகவும் பயத்தினால் மனம் தளர்ந்தவர்களாகவும் திசைகளில் ஓடினார்கள். கீழே தள்ளப்பட்டிருக்கிற கர்ணனைக் கண்டு, கௌரவர்களெல்லோரும் கண்ணீர் நிறைந்தவர்களாகவும் பயத்தினால் நடுக்கமுற்றவர்களாகவும் துடிக்கின்றவர்களாகவும் பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகவும் வேகமாக ஓடினார்கள். கௌரவர்களுள் உத்த

மரே! சில மகாரதர்கள் அர்ஜுனனைப் புகழ்ந்தார்கள். சிலர் கர்ணனைப் புகழ்ந்தார்கள். கௌரவர்கள் யுத்தத்தில் பயந்தவர்களாக வேகத்துடன் சென்றார்கள். அந்த மகாயுத்தத்தில் ஆயிரக்கணக்கான உம்மைச் சேர்ந்த யுத்த வீரர்களுள் மனத்தைச் செலுத்தின புருஷன் ஒருவனுமில்லை. மகாராஜரே! கர்ணன் கொல்லப்பட்டவுடன், கௌரவர்கள், உயிர்களிலும் ராஜ்ஜியங்களிலும் மனைவிகளிடங்களிலும் பொருள்களிலும் ஆசையை இழந்தவர்களானார்கள். பிரபுவே! துக்கத்தோடும் சோகத்தோடுங் கூடின உம்முடைய குமாரன், பெரிய முயற்சியினால் அவர்களை ஒன்று சேர்த்து அழைத்து தத்தம் இடங்களில் தங்கும்படி செய்வதற்கு மனத்தைச் செலுத்தினான். அரசரே! தீனர்களான மகாரதர்கள், அவனுடைய ஆஜ்ஞையைத் தலையினால் ஏற்றுக்கொண்டு, மனத்தில் துக்கமுள்ளவர்களாகப் பயத்துடன் வாஸஸ்தானங்களில் அமர்ந்தார்கள். அவர்கள், யுத்தத்தில் நடந்த சூதபுத்திரனுடைய கோரமான வதத்தையும் யுத்தத்தில் அர்ஜுனனுடைய ஜயத்தையும் அடிக்கடி நினைத்துக்கொண்டு அங்கு வசித்தார்கள். மகாவில்லாளிகளும் சத்துருக்களைத் தவிக்கச் செய்கின்றவர்களும் மகாரதர்களுமான எல்லாப் பாண்டவர்களும் சத்துருவை ஜயித்து மிக்க சந்தோஷமுள்ள மனமுடையவர்களாக வீற்றிருந்தார்கள். பிறகு, அவ்விடத்தில் சந்தோஷத்துடனிருக்கின்ற யுதிஷ்டிரரை எல்லாப் பாஞ்சாலர்களும் அடைந்து விதிப்படி விருத்தியடையும்படி செய்தார்கள். மகா கீர்த்திசாலியான அர்ஜுனனே, ரதத்தினின்று விரைவாக இறங்கி சந்தோஷமுள்ளவனாகத் தர்மராஜருடைய இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டான. மகாராஜரே! சிறந்த பிரதாபமுள்ள தர்மபுத்திரர், பரதசிரேஷ்டனான அவனைத் தூக்கி நிறுத்தி அவனைக் கட்டிக்கொண்டு உச்சி மோந்து தடவிக் கொடுத்தார். நகுலனும் ஸஹதேவனும் பாண்டு புத்திரனான விருகோதரனும் மகாராஜரை அபிவாதனம் பண்ணிப் பல்குனனைக் கட்டிக்கொண்டார்கள். சூதபுத்திரன் கொல்லப்பட்டவுடனே, திருஷ்டத்யும்னனும் சிகண்டியும் (மற்றப்) பாண்டவ ரதிகர்களும் அரசரை (மங்கள வசனங்களால்) விருத்தியடையச் செய்தார்கள். மகாராஜரே! பிறகு, சூதநந்தனன கொல்லப்பட்டவுடனே, வாசுதேவரும் ஸாத்வத குலத்தில் தோன்றின சாத்யகியும் அரசரை (உத்ஸாகத்தை) விருத்தியடையும்படிச் செய்தார்கள். வாசுதேவரும், குந்தி புத்திரரான யுதிஷ்டிரரைப்பார்த்து, நேசத்தினால் இந்த வசனத்தை உரைத்தார். 'அரசரே! ரதிகர்களுள் சிறந்த ரதிகனும் சூரிய

புத்திரனுமான கர்ணன் கொல்லப்பட்ட பிறகு, ராஜ சமூகங்களுடன் கூடின எல்லாக் கௌரவர்களும் இப்பொழுது கொல்லப் பட்டுவிட்டார்கள். இந்திரனுடன் கூடின மூவுலகங்களும் முழுமையும் போர் புரிந்தாலும் கர்ணன் ஜயிக்கப்படத் தகாதவன். அவ்வாறிருந்தும், உம்முடைய கோபத்தால் அழிக்கப்பட்டான்; என்றூர். இவ்வாறு சொல்லக்கேட்ட தர்மராஜர், ஜனார்த்தனரைப் பார்த்து, 'கோவிந்தரே! உம்முடைய அனுக்கிரகத்தினுல் மிக்க புகழுள்ளவனுன கர்ணன் கொல்லப்பட்டான்; பாண்டவர்களும் ஜயத்தை அடைந்தார்கள்; பகைவர்களும் நாசஞ்செய்யப் பட்டார்கள். நீர் யுத்தத்தில் எவனிடத்திலிருந்தும் உண்டாகிற பயத்தினின்று ரட்சிப்பதற்கு வல்லமையுள்ளவரன்றோ? நீர் இவ்வுலகத்திற்கு ரட்சகர்; எப்பொழுதுமே பாண்டவர்களுக்கு ரக்ஷகர். உம்மை அடுத்து இந்திரனும் தேவலோகத்தில் நித்தியமாக ஆனந்தத்தை அடைந்து கொண்டிருக்கிறுன். நீர் உலகத்திற்கு ரட்சகராயிருப்பதுபோலவே பாண்டு புத்திரர்களுக்கும் ரட்சகராயிருக்கிறீர். பிரபுவே! எவர்களுக்கு உம்மிடத்தில் பக்தி இருக்கிறதோ அவர்களுக்கு ஜயமுண்டாவது ஆச்சரியமன்று. கோவிந்தரே! ஜனார்த்தனரே! முற்காலத்தில், தேவர்கள், உம்மாலும் இந்திரனுலும் எவ்வாறு ரட்சகருள்ளவர்களானுர்களோ அவ்வாறே ரட்சகரான உம்மால் யுத்தத்தில் நாங்கள் ரக்ஷகருள்ளவர்களாகிறோம். மாதவரே! இன்று சுகமாகத் தூங்கப் போகிறேன். நான் இரவில் நித்திரையைப் பெறுவேன். உம்முடைய அனுக்கிரகத்தினுல் இன்று என்னுடைய பயம் போய் விட்டது. ஸம்சயமில்லை' என்று மறுமொழி உரைத்தார். யுதிஷ்டிரர் இவ்வாறு உரைக்கக் கேட்ட கேசவர், பாண்டவரைப் பார்த்து, 'அரசரே! சூரர்களான பீமசேனன் முதலான சகோதரர்களும் அவ்வாறே இந்திரனுடைய வீரியம்போன்ற வீரியமுள்ள பார்த்தனை முதன்மையாகக்கொண்ட சம்பந்திகளுமுள்ள உமக்குச் சந்தோஷமுண்டாவதற்குக் காரணமான இக்காரியத்தில் நாம் நிமித்த மாத்திரமே. எப்பொழுதுமே என்னிடத்தினின்று பிரியத்தையும் ஹிதத்தையும் அடைவதற்கு நீர் தகுதியுள்ளவர். நரசிரேஷ்டரே! நீர் இந்த வசனத்தினுல் என்னுடைய பிரீதிக்கு விஷயமாக இருக்கிறீரன்றோ?' என்று கூறினர். இவ்வாறு சொல்லக் கேட்ட அரசரும் புருஷசிரேஷ்டருமான தர்மராஜரோ, சுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளும் தந்தத்தின் நிறம்போன்ற நிறமுடையவைகளும் கறுத்த வால் உள்ளவைகளுமான குதிரைகள் பூட்டின தமது ரதத்தின்மேல்

ஏறிக்கொண்டு, தமது சேனையினால் சூழப்பட்டு, பலருடைய விருத்தாந்தங்களைப் பார்ப்பதற்காக யுத்தகளத்தைக் குறித்துச் சென்றார். வீரரே! அந்த மாதவர் பாண்டவர் இருவரும் பேசிக்கொண்டே சென்றார்கள். அந்த யுதிஷ்டிரர், காண்டீவத்தினால் விடப்பட்ட பாணங்களால் நாற்புறங்களிலும் நன்றாகப் பீடிக்கப்பட்டவனும் யுத்தரங்கத்தில் படுத்திருப்பவனும் புருஷசிரேஷ்டனுமான கர்ணனைக் கண்டார். யுதிஷ்டிர ராஜர், புத்திரனோடுகூடக் கொல்லப்பட்டிருக்கும் கர்ணனைக் கண்டு, புருஷசிரேஷ்டர்களான மாதவரும் அர்ஜுனனுமாகிய இருவரையும் புகழ்ந்தார். 'மதுசூதனரே! பூமி முழுமைக்கும் இப்பொழுது நான் அரசனானேன். கோவிந்தரே! பாக்கியத்தினாலே நீர் ஜயசீலராக இருக்கிறீர். சத்துருவானவன் பாக்கியத்தால் கீழே தள்ளப்பட்டான்' என்று கூறினார். வேந்தரே! கௌரவர்களுட் சிறந்தவரும் தர்மராஜருமான யுதிஷ்டிரர், இவ்வாறு ஜனார்த்தனரையும் அர்ஜுனனையும் பலபடப் புகழ்ந்தார். குருவமிசத்தைத் தாங்குபவரான யுதிஷ்டிரர், பார்த்தனுடைய அம்புகளால் புத்திரனோடுகூடக் கொல்லப்பட்டிருக்கிற கர்ணனைக் கண்டு, தம்மை மறுபடியும் பிறந்தவரைப்போல் எண்ணினார். மகாரதர்களான மன்னர்கள், குந்தீ புத்திரரும் குருசிரேஷ்டருமான யுதிஷ்டிரரை சந்தோஷத்துடன் வந்தடைந்து விருத்தியடையும்படி செய்தார்கள். அரசரே! உம்முடைய துராலோசனையினால் உண்டானதும் மிகப் பெரிதும் மயிர்க் கூச்சத்தை உண்டுபண்ணக் கூடியதுமான இந்த அழிவானது இவ்வாறு நேர்ந்துவிட்டது; நீர் துரதிருஷ்டத்தால் துயரப்படுகிறீர்!' என்று சொன்னான்.

பூமிக்குப் பதியும் இந்தக் குருகுலத்திலுதித்தவனும் அரசனுமான திருதராஷ்டிரன, இந்த அப்பிரியமான வார்த்தையைக் கேட்டு அசைவற்று உத்தமமான ஆஸனத்திலிருந்து பூமியில் விழுந்தான். அவ்வாறே சத்தியமான விரதத்தையுடையவளும் திவ்விய திருஷ்டியுள்ளவளுமான காந்தாரி தேவியும் கீழே விழுந்தாள். பிறகு, விதுரரும் ஸஞ்சயனுமாகிய இவ்விருவருமே, பூமியை ரட்சிக்கிற அரசனான அந்தத் திருதராஷ்டிரனைக் கலை தெளிவித்தார்கள். அவ்வாறே, கௌரவ ஸ்திரீகளும் காந்தாரியைக் கலை தெளிவித்தார்கள். அரசரே! பாரதரே! அவ்விருவர்களாலும் தேறுதலடையும்படி செய்யப்பட்ட அந்தத் திருதராஷ்டிர ராஜன் தெய்வத்தையும் வரக்கூடியதையும் சிறந்ததைவென்று நினைத்தான்; பேசாமலிருந்தான். ராஜசிரேஷ்டரே! மகாத்மாவான கர்ணன் கொல்லப்பட்டவுடன், ஸஞ்சயன் அரசனுக்கு இவ்வண்ணம் நடந்த விருத்தாந்தத்தை உரைத்து

மீண்டும் பாசறைசென்றான். அரசரே! அந்த ஸஞ்சயன், கொல்லப்பட்ட சகுனியையும் ஆயிரக்கணக்கான கௌரவ ஸைனிகர்களையும், அவ்வாறே ஸௌப்திகத்தில் துரோண புத்திரரால் கொல்லப்பட்ட குதிரைகளுடனும் மனிதர்களுடனும் யானைகளுடனும் கூடியதும கொல்லப்பட்டதுமான பாண்டவ சேனையையும், நாற்புறத்திலும் கொல்லப்பட்டிருக்கிற எல்லாப் போர் வீரர்களையும் யுத்தத்தில் கண்டு, சோகத்தினால் பீடிக்கப்பட்டவனாகவும் பயத்தினால் சோர்வை அடைந்தவனாகவும் அஸ்தினாபட்டணத்தைக் குறித்துச் சென்றான். பிரஜைகளுக்கு நாதரே! மிகுதியான இந்த யானைகளும் குதிரைகளும் கொல்லப்படவே, பற்பல தேசங்களில் தோன்றினவர்களும் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுமான பாண்டவ சேனா வீரர்களும் கௌரவ சேனா வீரர்களும் அற்று அந்தக் குருக்ஷேத்திரம் முழுதுமே சூன்யமாயிற்று. ஸஞ்சயன், துரியோதனனுடைய யுத்த விருத்தாந்தம் நடந்தது முழுமையையும் நடந்தபடியும் முறைப்படியும் சொன்னான்.

மகாத்மாவான தனஞ்சயனுக்கும் கர்ணனுக்கும் நடந்த இவ்விதமான மகா யுத்தத்தை எவன் படிப்பானோ, எவன் நாள்தோறும் கேட்பானோ அவன் நன்கு அனுஷ்டிக்கப்பட்ட யாகத்துக்குரிய பலனை அடைவான். ஷாட்குண்யங்களால் நிறைந்தவரும் சாசுவதமாக இருப்பவரும் வாயுவினாலும் சந்திரனாலும் சூரியனாலும் வகிக்கப்படுபவருமான விஷ்ணுவே யாகரூபமாக இருக்கிறார். ஆதலால், அசூயை இல்லாதவனாக இதனைப் படிப்பவனும் கேட்பவனுமான மனிதன் எல்லா உலகங்களையும் ஜயிப்பான்; சுகியும் ஆவான்" என்று கூறினான்.

பதினேழாவது நாள் யுத்தம் முடிந்தது

கர்ண பர்வம் முற்றிற்று

டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன்
(எஸ். ஆர். கே.)
தொகுப்பிலிருந்து ஒரு அன்பளிப்பு

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ், கும்பகோணம். 18—11—'52.

டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன்
(எஸ். ஆர். கே.)
தொகுப்பிலிருந்து ஒரு அன்பளிப்பு